TEXT FLY WITHIN THE BOOK ONLY

TEXT PROBLEM WITHIN THE BOOK ONLY

UNIVERSAL
LIBRARY
OU_208060
UNIVERSAL
LIBRARY

ஸ்ரீ :

பெருந்தொகை.


சென்னை யூனிவர்ஸிடி

தமிழ் - லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர்

இராமநாதபுரம்

மு. இராகவையங்கார்

தொகுத்தது.



செந்தமிழ்ப்பிரசுரம்—கூஉ.

மதுரைத்

தமிழ்ச்சங்கமுத்திராசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

யுஅ-வரு = 1935—1936.

விலை ரூபா 5.

ஸ்ரீ:

இப்புத்தகத்திலடங்கியவை.

1. உரிமையுரை ... ...

2. முகவுரை ... ... க—நி

3. பெருந்தொகையுள் எடுத்தாண்ட ...
நூல்களின் அட்டவணை. ... கூ—அ

4. பெருந்தொகை ... ... க—நிகநி

க. கடவுள் வாழ்த்தியல் ... க—கூ0

உ. அறனியல் ... ... கூ0—அக

ங. பொருளியல் ... ... அக—நிகநி

5. விசேடக்குறிப்பு ... ... நிகஎ—கூநிச

6. செய்யுள் முதற்குறிப்பகராதி ... I—XXVII

7. பொருட்குறிப்பகராதி ... ... 1—91

உரிமையுரை.

பண்பார் பெருந்தனமீ தென்னதென்றே பாராட்டிக்
கண்பார்த் துவந்தவென்றன் கன்னித் திருமகளவ்
விண்பா லடைந்துழலம் விட்டகலா வேதவல்லிப்
பெண்பாவைக் கேயுரிமை யாமிப் பெருந்தொகையே.

ஸ்ரீ:

முகவுரை.

தமிழ்மக்களால் விரும்பிப் பாதுகாக்கப்பட்டுவந்த பழைய இலக்கியங்களுள் ளே 'தொகைநூல்கள்' என்பன ஒரு பகுதியாம். அவை அகமும் புறமுமான திணைகள்பற்றிச் சான்றோர்பலரால் பலசந்தர்ப்பங்களையொட்டிப் பாடப்பட்ட செய்யுட்களின் திரட்டாகும். பண்டைச் சரித்திர விசேடங்களாலும் வனப்புமிகுதியாலும் அப்பாடல்களில் தமிழ்மக்கட்கிருந்த ஈடுபாடு மிக அதிகம். அதுபற்றிப் பின்னோரான புலவர்கள், அவை பாடப்பட்ட சந்தர்ப்பங்களும் திணை துறைகளும் விளங்கக் குறிப்புக்களிட்டு ஒரு கோவைப்படத் தொகுத்துதவினர். அங்ஙனம் தொகுத்திட்ட நூல்களுள் 'எட்டுத்தொகை' எனப் பிரபலமாக வழங்குவன.

"நற்றிணை நல்ல குறுந்தொகை பைங்குறுந்
தொற்றை பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தா ரேத்துங் கலியே யகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை"

இத்தொகைநூல்களிற் கண்ட பழைய புலவர்களின் தொகை 500-க்கு மேற்பட்டனவாம். சங்ககாலத்து வாழ்ந்த புலவர்பெருமக்களுள் சாத்தனார் கபிலர் பொன்ற ஒருசிலர் செய்தனவன்றி, ஏனையோர் நூல்களாக இயற்றியவை இன்னவென்பது தெரியவில்லை. ஆனால், அன்னோர்பாடிய தனிப்பாடல்களோ மிகப்பலவாகக் கிடைக்கின்றன. அவைமட்டில் நோக்குவார்க்கு அப்பெருமக்களது ஒப்புயர்வற்ற புலமை நன்குவிளங்கக்கூடியது. தாம் கொண்டிருந்த மதவிசுவாசங்களை உள்ளதுஉள்ளபடியே இயற்கை நயம்பெருக எடுத்துரைப்பதில் அவர்கட்கிருந்த தூய்மையும் ஊக்கமும் சுதந்தரமும் பின்னோர் பெற்றிருந்தவரல்லர். இத்தகைச் சிறப்பியல்புபற்றியே அத்தொகைச்செய்யுட்கள் தமிழ்மக்கள் நெஞ்சில் நன்குபதிந்து பன்னூறாண்டுகளாகச் சீரழிக்கப்பட்டு வரலாயின. இவ்வாறு நமக்குமுன் விளங்கிய நல்லிசைப்புலவர்

பாடல்களைப் பின்னோர்பொருட்டுத் தொகுத்துதவிய பண்டைப் பெருமக்களின் அருஞ்செயலை நாம் பெரிதும் பாராட்டல் தகும். நாட்டில் அங்கங்கே சிதறிவழங்கிய தனிப்பாக்களை முயன்று தொகுத்துக் குறிப்புக்களுடன் இன்னோர் நமக்களித்திலரேல், சங்ககாலத்துப்புலவர்களின் அருமைப்பெயர்களையேனும், பெருமைச்செய்திகளையேனும், முற்காலத்து நிலைமை நிகழ்ச்சிகளையேனும் நாம் சிறிதேனும் அறிய இடமுண்டோ? இவ்வாறே இடைக்காலத்தும் பிற்காலத்தும் வாழ்ந்த தமிழ்ப்பெருமக்களின் தனிப்பாசுரங்களும் எத்தனையோ வழங்கியிருத்தல்வேண்டும். அவையெல்லாம், அப்புலவர்பெயர் முதலியவற்றோடு பெரும்பாலும் மறைந்தொழிந்தன. இதன்காரணம், முன்னோர்போல அவற்றைப் பின்னோரும் சேமித்துத் தொகுத்துதவக் கவறியதேயாம். அதனால், சங்கத்தின் பிற்கால வழக்க ஒழுக்கங்களையும் அரசியல் முதலிய நிலைமைகளையும் நாம் அறிந்து மகிழ்தற்கு இடமில்லையாயிற்று. தமிழ்க்குப் பேருபகாரமான இவ்வரியசெயலை நமக்கு முன்னிருந்தோர் செய்துவிட்டது நம் கவக்குறைவேயாகும். இரண்டு மூன்று நூற்றாண்டுகட்குமுன் தமிழ்நாவலர்சரிதை என்ற பெயரால் தொகுக்கப்பட்ட சிறிய செய்யுட்டிரட்டொன்று இப்போது வெளிவந்துளது. இந்நூலினின்று, கூத்தர் கம்பர் முதலிய புலவர்பெருமக்களின் அரிய வரலாறுகள்சில நமக்குத் தெரியவருகின்றன. ஆயினும் பன்னூறாண்டுகட்குரிய தமிழ்ச்செய்திகளை அறிதற்கு இத்திரட்டுச் சிறிதும் போதியதன்று. இஃதன்றித் தனிப்பாடற்றிரட்டுப்போன்ற நூற்றொகுதிகளும் இவ்வகைபற்றி நம்காலத்து எழுந்தனவே. அவை, பின்னோரான புலவர்பாடல்களையே பெரிதுங் கொண்டனவாகவும், பழம்பாடல் பலவற்றைப் பிறழ்ந்த சரிதக்கூறுகளுடனும் பாடங்களுடனும் வெளியிடுவனவாகவும் அமைந்தன. அதனால், அறிஞர்களது ஆராய்ச்சிக்குரிய பிரமாணநூல்களென்று அவற்றைச் சொல்வதற்கில்லை. இங்ஙனமாக, மத்தியகாலம் பிற்காலங்களுக்கு உரியதாய், பழமையான குறிப்புக்களுடனும் பாடங்களுடனும் இயல்பெற அமைக்கப்பட்ட தனிச்செய்யுட்கோவை தக்கதோர் இதுவரை கிடைத்திலது என்றே சொல்லலாம். இக்குறையை ஓரளவில் நீக்குதற்கெழுந்ததே இத்தொகைநூலாகும்.

பண்டை இலக்கிய இலக்கண நூலுரைகளிற் பழகிவரும் அறிஞரெல்லாம், அவற்றில்மேற்கோளாகவும் பிறவாறுகவும் ஆளப் பட்டுள்ள பழஞ்செய்யுட்கள் பெரும்பாலவும் சொற்செறிவும் பொருட்பொலிவு முடையவாய் இன்பம்பயப்பன என்பதை நன்கறி வர். அவ்வாறு சிறந்துள்ளனவேனும் நூல்கற்போர் அப்பாடல்களை உதாரணவளவிற்கொண்டுநோக்கி நெகிழவிடுவதே நெடுங்கால வழக்கமாயுள்ளது. அப்பாடல்களெல்லாம் அதிகாரவடைவில் வைத்துத் தொகுக்கப்பெறின் அஃது ஒரு சிறந்த இலக்கியமாகி, முன்னோரின் அருமைபெருமைகளை நம்மவர் அறிந்து மகிழ்தற்கு இடமாகும் என்ற எண்ணம் பலவாண்டுகட்குமுன் எனக்குத் தோன்றியது. அதனால் தொல்காப்பியம் யாப்பருங்கலம் காரிகை வீரசோழியம் முதலிய இலக்கணநூல்களின் பழையஉரைகளினின் றும், முற்காலத்தவும் பிற்காலத்தவுமான இலக்கியவுரைகளினின் றும் கிடைத்த தனிப்பாக்களையெல்லாம் தொகுக்கலானேன்.

இம்மேற்கோட்பாடல்களுள் ஒருபகுதி இப்போது அச் சேறிய நூல்களிற் காணக்கூடியனவாயினும், உரைகாரர்காலத்து வழங்கி இப்போது பெயர்தெரியாத நூல்களினின்று உதாகரிக்கப் பட்ட செய்யுட்களும் அவற்றிற் பல உள. அவற்றுள்ளே வெளி வந்த நூற்பாடல்களை விடுத்து, இன்னநூலென்று தெரியாத உதாரணச்செய்யுட்களும், உரையாளர்களாற் பெயர்கூறி ஆளப் பட்டு இப்போது கிடைத்தற்கரியவாயுள்ள பாரதம் தகடூர்யாத் திரை முத்தொள்ளாயிரம் ஆசிரியமாலை முதலிய நூற்பாடல்களுமே இதனுட் கோக்கப்பட்டன. இவற்றோடு பற்பல புத்தகசாலைகளி லும் பிரசுரமுள்ள ஏட்டுப்பிரதிகளாலும், பத்திரிகைகளாலும் தெரியவந்த பழம்பாடல்களும் சேர்ந்தன. பரம்பரைப்புலவர்கள் மூலமாகவும் பிற தமிழ்மக்கள்மூலமாகவும் வாய்மொழியாகக் கிடைத்த தனிக்கவிகளும் பல. இவையன்றி, சிலா தாமிர சாச னங்களில் அரசர் பெரியோர் முதலியவரைப்பற்றியும் பற்பல அறச்செயல்பற்றியும் முன்னோர் அருமையாகப் பாடிப்பொறித்த செய்யுட்களையெல்லாம் கிடைத்தவளவில் திரட்டி இந்நூலுட் சேர்த்துளேன். இங்ஙனமாகத் தொகுத்த பாடல்களின் மொத்தத் தொகை 3500க்கு மேற்பட்டதாகும். இவற்றை—கடவுள்வாழ்த்து, அறவியல், பொருளியல், இன்பவியல், ஒழிபியல் என ஐந்தியல்க ளாக வகைப்படுத்தி இந்நூல் அமைக்கப்பெற்றது.

இங்ஙனம் பெற்ற இந்நூற்குப் பெருந்தொகை எனப் பெயர் தரலாயிற்று. அடியளவாற் குறுமையும் நெடுமையும் உடைமை நோக்கிக் குறுந்தொகை, நெடுந்தொகை (அகநானூறு) என முன்னோர் பெயர்வழங்கியவாறுபோல, எண்ணளவாற் பெருமையுடைய இந்நூற்கேற்ப ஏற்புடைய இப்பெயர் தரப்பட்டது. இந்நூலுள், கடவுள்வாழ்த்து அறவியல் பொருளியல்களின் தொகை 2214—ஆயினமையின், இதன் முதற்பெருகுதியாக அம்மூன்றியல்களும் இப்போது தனியே வெளியிடப்படுகின்றன. விசேடக்குறிப்பு, செய்யுண்முதற்குறிப்பகராதி, பொருட்குறிப்பகராதி, எடுத்தாண்ட நூலட்டவணை முதலியவும் இதனுடன் சேர்த்துள்ளேன். இவற்றுள், விசேடக்குறிப்பிலே, இன்றியமையாது விளக்கற்குரிய பொருள்களும் சரித்திரக்குறிப்புக்களுமே எழுதப்பட்டன. ஆனால், விஷயசூசிகை என்றபொருட்குறிப்பகராதியைச்சிறிது விரிவாகவே தந்துளேன். தமிழ்மொழியின் சொல், பொருள், சரித்திரம் முதலியனபற்றி ஆராய்ச்சிசெய்வார்க்கு இவ்வகராதி தக்கதோர் கருவியாகவேண்டுமென்பது என் விருப்பம்.

இங்ஙனம் தொகுக்கப்பட்ட பழஞ்செய்யுட்களிலே பொருள் செவ்வனே புலப்படாத இடங்களுமுண்டு. வேறு ஏட்டுப்பிரதிகளின் துணையின்றி வெளிவந்த அச்சுப்பிரதிகளினின்றே திரட்டப்பெற்றமையால், உள்ளவாறே அவை பதிப்பிக்கப்படலாயின. ஒருசெய்யுளே பலவுரைகளிலும் உதகரிக்கப்பட்டவிடத்து ஒப்புநோக்கிப் பாடபேதங்களும் உண்மையுருவமும் தெரியவந்தன. அத்தகைய பாடங்கள் கீழ்க்குறிப்பிலே, நூற்பெயரிடங்களைக் குறித்துவருமிடத்து, அவ்வப் பாட்டெண்களையொட்டிக் கோட்டப்பட்டுள்ளன. நூல் அச்சாகிவரும்போது கண்ட திருத்தங்களை விசேடக்குறிப்பில் விளக்கியிருக்கிறேன்.

இந்நூலின் இன்பவியல் ஒழிபியல்களை இரண்டாந்தொகுதியாக வெளியிடக்கருதியுளேன். அதன் பாடற்பெருகையை இப்போது வரையறுத்துக்கூறல் இயலாது. எனினும், உத்தேசமாக 1500 வரையாகலாம் என்று நினைக்கிறேன். தொகுக்கு முயற்சியைத் தொடர்ந்துநடத்துமிடத்து இதுபோலுந் தொகைநூல்கள்

பெருகிக்கொண்டே செல்லக்கூடியவை. அதனால், பதிப்புக்கள் தோறும் புதுத்தோற்றங்கொண்டு பலதொகுதிகளாக இவை விளங்கத் தடையில்லை. அவ்விளக்கம் தமிழ்மகட்கு ஓர் அலங்காரமுமாகும்.

இப்பெருந்தொகையை யான் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிடத்தொடங்கிப் பல ஆண்டுகளாயின. தொடங்கும்போது சில ஆண்டுகளில் இதனைத் தொடர்ந்துநடத்தி முடித்துவிடலாம் என்ற உறுதியே கொண்டிருந்தேன். இடையில் நேர்ந்த மனக்கிலேசத்தால் இதனை நெடுங்காலந் தாழ்க்கும்படிநேர்ந்ததற்குப் பெரிதும் வருந்துகின்றேன்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் இந்நூலைப் பதிப்பிக்க முன்வந்து செந்தமிழ்ப் பிரசுரங்களுள் ஒன்றாக இதனை வெளியிட்டது மிகவும் பாராட்டற்குரியது. இவர்களது .இடைவிடாத தூண்டுதலும் பொறுமையுமே இதனை நிறைவேற்றிவைத்தன எனலாம். இச்சங்கத்தார்க்கு என் மனமார்ந்த பெருநன்றி உரியதாகுக. இதன் பதிப்பை என் விருப்பம்போல அச்சிட்டுதவிய செந்தமிழ் உதவிப் பத்திராசிரியர் ஸ்ரீ. திரு. கி. இராமாநுஜ ஐயங்கார் அவர்கட்கு யான் பெரிதுங் கடப்பாடுடையேன். இந்நூலின் அருமையறிந்து இதனை விரைந்து முடிக்கவிரும்பி என்னை அடிக்கடி உசாவியும் தூண்டியும் வந்த அன்பர்கட்கெல்லாம், இதன் நிறைவேற்றம் எனக்குள்ளதினும் அதிக மகிழ்ச்சி விளைக்கக்கூடியது.

இந்நூலில் எத்தனையோ குற்றங் குறைகள் உள்ளன. அவை என்னொருவனையே பற்றியவையல்ல. நல்லறிஞர் அவற்றைப் பெரிதும் பாராட்டாது அமைத்துக்கொள்வார்களென்றே நம்புகின்றேன்.

முடிவாக, இப்பெருந்தொகையின் முதற்றொகுதியை அறிவிற் சிறியேனாகிய என்னைக்கொண்டு நிறைவேற்றியருளிய இறைவன் கருணைத்திறத்தை வியந்து வந்திக்கின்றேன்.

திருவல்லிக்கேணி
14—12—35.

இங்ஙனம்,
மு. இராகவையங்கார்.

ஸ்ரீ:

பெருந்தொகையுள் எடுத்தாண்ட *நூல்களின் அட்டவணை

அகநானூறு
அகப்பொருள்விளக்கம் (உரை.)
அகராதிநிகண்டு
அகலிகைவெண்பா - முகவுரை
அரிச்சந்திரபுராணம்
அஷ்டப்பிரபந்தம்
ஆசிரியமாலை
ஆத்திசூடிவெண்பா
இரகுவமிசம்
இராசராசசோழனுலா
இராமநாடகம்
இராமாநுஜாரியதிவ்யசரிதை
இருசமயவிளக்கம்
இரும்பல்காஞ்சி
இலக்கணக்கொத்து
இலக்கணவிளக்கம்
இளம்பூரணம்
இறையனார்களவியலுரை
ஈட்டியெழுபது
உபதேசகாண்டம்
உபதேசவெண்பா
உரிச்சொனிகண்டு
உவமானசங்கிரகம்
ஊசிமுறி
ஏகாம்பரநாதருலா
ஏரெழுபது
கணக்கதிகாரம்
கடம்பவனபுராணம்
கல்லாடம்
கலிங்கத்துப்பரணிப்பிரதிகள்
கலித்தொகை
கன்னூல்
காஞ்சிப்புராணம்
குண்டலகேசி
குமரகுருபரமுனிவர் பிரபந்தத்திரட்டு
குருகாமான்மியம்
குருபரம்பரை
குலோத்துங்கசோழன்-உலா, கோவை, - பின்னைத்தமிழ்
குழைக்காதர்திருப்பணிமாலை
குறுந்தொகை
கூர்மபுராணம்
கேயாகரநிகண்டு
கோங்குமண்டலசதகம்
கோயிலொழுகு
சங்கற்பநிராகரணம்
சதசோதிமாலை
சதபோதிராசன்குறவஞ்சி
சருவார்த்தசாரபூடணம்
சாதகசிந்தாமணி
சாந்திபுராணம்
சிங்கைப்பிரபந்தத்திரட்டு
சிதம்பரப்பாட்டியல்
சிதம்பரபுராணம்
சிலப்பதிகாரம்
சிலாசாஸனத்தொகுதிகள்
சிவஞானசித்தியார் உரைகள்
சிவஞானபோதம்
சிவஞானமுனிவர்பிரபந்தத்திரட்டு
சிவப்பிரகாசம்
சிவரகசியம்
சிறுபஞ்சமூலம்
சீவகசிந்தாமணி
சீவகசிந்தாமணிச்சுருக்கம்
சுந்தரபாண்டியம்
சூடாமணிநிகண்டு

* இந்நூல்களின் பாயிரங்கள், முகவுரைகள், பழைய உரைகள், குறிப்புக்கள் முதலியவற்றிற் கண்ட தனிப்பாடல்களைத் தேடித் தொகுத்தற்கே இவை ஆராயப்பட்டன என்க.

சூடாமணி உள்ளமுடையான்
சூளாமணி
சேக்குந்தர்பிரபந்தத்திரட்டு
செந்தமிழ்ப்பத்திரிகைத்தொகுதிகள்
சேதுநாடுந் தமிழும்
சேதுபுராணம்
சேயூர்முருகன்பிள்ளைத்தமிழ்
சேஞலவரையம்
சோழமண்டலசதகம்
சோழவமிசசரித்திரம்
சௌந்தரியலகரி
ஞானவாசிட்டம்
ஞானரிருதம்
தகடூர்யாத்திரை
தஞ்சைச்சரச்சுவதிமால் பிரதிகள்
தஞ்சைவாணன்கோவை
தட்சிணகைலாசபுராணம்
தண்டலையார்சதகம்
தண்டியலங்காரம்
தமிழ்நாவலர்சரிதை
தமிழ்ப்புலவர்சரித்திரம்
தனசிங்கமாலை
தனிப்பாடற்றிரட்டு
தாயுமானவர்பாடல்
திருக்கலம்பகம்
திருக்களர்ப்புராணம்
திருக்காளத்திநாதருலா
திருக்குறள் வட்டுப்பிரதிகள்
திருக்கைலாயஞானவுலா
திருச்சிற்றம்பலக்கோவையார்
திருச்செங்கோட்டுத்திருப்பணிமாலை
திருச்செந்தூர்ப்பிள்ளைத்தமிழ்
திருப்பதியம்
திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகம்
திருப்பாமாலை
திருப்பூவணநாதருலா
திருப்பெருந்துறைப்புராணம்
திருவாசகவேட்டுப்பிரதிகள்
திருவாப்புடையார்புராணம்
திருவாமாத்தூர்க்கலம்பகம்
திருவாரூர்ப்புராணம்
திருவாரூருலா
திருவாலவாயுடையார் புராணம்
திருவிளையாடற்புராணம்
திருவெள்ளூர்ப்புராணம்
திருவையாற்றுப்புராணம்
திவாகரம்
தினகரவெண்பா
தீபங்குடிப்பத்து
தேசிகப்பிரபந்தம்
தொல்காப்பிய உரைப்பிரதிகள்
நச்சினார்க்கினியம்
நந்தமண்டலசதகம்
நந்திக்கலம்பகம்
நம்பியகப்பொருளுரை
நன்னூல்சங்கரநமச்சிவாயருரை
நன்னூல் மயிலைநாதருரை
நாரதசரிதை
நாலடியாருரைப்பிரதிகள்
நாலாயிர திவ்யபிரபந்தம்
நீலகேசி
நுண்பொருண்மாலை
நைடதம்
பண்டாரசாத்திரங்கள்
பத்துப்பாட்டு
பரிப்பெருமாள் திருக்குறளுரை
பரிபாடல்
பரிமேலழகருரை
பல்காப்பியம்
பழனிப்புராணம்
பன்னிருபடலம்
பாகவதசாரம்
பாகவதம்
பாண்டிமண்டலசதகம்
பாவலர் சரித்திரதீபகம்
பிங்கலந்தை
பிரபோதசந்திரோதயம்
பிரமோத்தரகாண்டம்
பிரயோகவிவேகம்
புகழேந்தி
புரூரவசரிதை
புலவராற்றுப்படை
புலியூர்நாதி
புறத்திரட்டு
புறப்பொருள்வெண்பாமாலை
பூலோகவனப்புராணம்
பெரியபுராணம்
பெருங்கதை

பெருந்தேவனார்பாரதம்
பெரும்பொருள்விளக்கம்
மச்சபுராணம்
மணிமேகலை
மதுரைச்சங்கத்துப் புத்தகசாலைப் பிரதிகள்
மதுரைத் திருப்பணிமாலை
மயூரகிரிக்கோவை
மாயூரப்புராணம்
மிழலைச்சதகம்
முத்தொள்ளாயிரம்
மூப்பேட்டுச்செய்யுள்
மூவருலா
மெய்கண்டசாத்திரங்கள்
மெய்ஞ்ஞானதீபம்
மேருமந்தரபுராணம்
யதிந்திரப்பிரவணப்பிரபாவம்
யாப்பருங்கலக்காரிகையுரை
யாப்பருங்கலவிருத்தி
வச்சணந்திமாலை
வரதராசர்பாகவதம்
வலெயாபதி
விக்கிரமசோழனுலா
விஞ்சைக்கோவை
விநாயகபுராணம்
விம்பசாரகதை
விநோதரசமஞ்சரி
வீரசிங்காதனபுராணம்
வீரசோழியவுரை
வேதாளகதை
வேற்காட்டுப்புராணம்
வைராக்கியதீபம்
ஸ்ரீவசனபூஷணம்
Epigraphica Carnatica
Epigraphica Indica
Epigraphical Reports
Inscriptions of the Madras Presidency
Journal of South Indian Association
South Indian Inscriptions
Tamil and Sanscrit Inscriptions
Travancore Archaeological Series.
Triennial Catalogues of Manuscripts, Govt. Oriental Manuscripts Library, Madras.

ஸ்ரீ :

பெருந்தொகை.

முதலாவது

கடவுள் வாழ்த்தியல்.

முதற்கடவுள்.

1. பூமலி நீருறையுள் புள்ளோறு புட்கொடி
வாய்மையே வாழி படைக்கலம்—தாமம்
பிரம னிறைகண்ணன் பொன்றீக்கார் மேனி
கருமம் படைப்பழிப்புக் காப்பு.

கந்தழி

2. சார்பினுற் றோன்றுது தானருவா யெப்பொருட்குஞ்
சார்பெனின் றெஞ்ஞான்று மின்பந் தகைத்தரோ
வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த
தூய்மையதா மைதீர் சுடர்.

(பெருந்தேவபாணி வகை)

3. மணிவிளங்கு திருமார்பின் மாமலராள் வீற்றிருப்பப்
பணிதயங்கு நேமியும் பானிறத்த சுரிசங்கும்
இருசுடர்போ லிருகரத்தி லேந்தியமர் மாயோனும்
பங்கயத்தி லுறைவோனும் பாகதேசார் பசுங்கொடிசேர்
செந்தழறக ணுதலோனுந் தேருங்கா னீயென்பார்க்
கவரவர்த முள்ளத்து ளவ்வருவா யல்லாத
பிறவருவ நீயெண்ணிற் பிறவருவ நீயேயாய்
அளப்பரிய நான்மறையா லுணர்த்துதற் கரியோனே.!

(எட்டடித்தரவு)

எவ்வுயிர்க்கு முயிரேயா யியங்குதனின் றொழிலாகி
அவ்வுயிர்க்க ணடங்கியே யருளாது நிற்றலினுல்
வெவ்வினைசெப் தவையுழுத்து வெம்பிறவிக் கடலழுந்த
அவ்வினையை யகற்றுமவ னிற்பதுநின் னருளன்றே ;

---

(1) யாப். வி. 94. (2) தொல். பொரு. 88. நச். உரை ; திருமுரு. நச் உரை. (3) தொல். பொரு. செய். 146; பேரா...உரை; நச்...உரை.

பல்லுயிரும் படைப்பதுநின் [1]பண்பன்றே பகலிரவில்
வல்வினையின் வலைப்பட்டு வருத்தங்கூ ருயிர்த்தம்மை
நல்வினையே பயில்வித்து [2]நடுக்கஞ்செய் பகைநீக்கி
அல்லல்வா யுழந்தாம லகற்றுவது மருளன்றே ;

அழிப்பதுநின் றொழிலென்றே யறைந்தாலு முயிரெல்லாம்
ஒழித்தவற்றுள் ளுணர்வுகளே யொருவாம லுடனிறுத்திப்
பழிப்பின்றிப் பலகாலு மிபபரிசே பயிற்றுதலின்
அழிப்பதுவு மில்லையா லாங்கதுவு மருளன்றே.
(தரவின்பாகம்பற்றிய நான்கடித்தாழிசை)

வேள்வி பாற்றி விதிவழி யொழுகிய
தாழ்வி லந்தணர் தம்வினை யாயினை ;
வினையி னீங்கி விழுத்தவஞ் செய்யும்
மூனைவர் தமக்கு முத்தி யாயினை ; (ஈரடியிரண்டு)

இலனென [3]விகழ்ந்தோர்க் கில்லையு மாயினை ;
உளனென வுணர்ந்தோர்க் குளையு மாயினை ;
யருவரு வென்போர்க் கவையு மாயினை ;
பொருவற [4]விளங்கிய போத மாயினை ; (ஓரடி நான்கு)

பானிற வண்ணனீ ; பனிமதிக் கடவுணீ ;
தீனிற வுருவுநீ ; நிறமிகு கனலிநீ ;
அறுமுக வொருவனீ ; ஆனிழற் கடவுணீ ;
பெறுதிரு வுருவுநீ ; பெட்பன பிறவுநீ ; (இருசீரொட்டு)

மண்ணுநீ ; விண்ணுநீ ; மலையுநீ ; கடலுநீ ;
எண்ணுநீ ; எழுத்துநீ ; இரவுநீ ; பகலுநீ ;
பண்ணுநீ ; பாவுநீ ; பாட்டுநீ ; தொடருநீ ;
அண்ணனீ ; அமலனீ ; அருளுநீ ; பொருளுநீ ; (ஒருசீர் பதினாறு)
ஆங்க—(தனிச்சொல்)

இனையை யாகிய விறைவநின் னடியிணை
சென்னியின் வாங்கிப் பன்னூள் பரவுதும்
மலர்தலை யுலகின் மன்னுயிர்த் தெல்லாம்
நிலவிய பிறவியை நீத்தல் வேண்டி

---

[1] பண்பென்றே. [2] நடுக்கஞ்செய்பவை நீக்கி. [3] விகர்தோர்க், விதர்தோர்க். [4] விளங்கிப்.

முற்றிய பற்றெடு செற்ற நீக்கி
முனிமை யாக்கிய மூவா முத்தியை
மயலற வளித்தகின் மலரடி
அரிய [1]வென்னு யிரினிற் பெறவே. (சூரிதகம)

4. நல்லார் வணங்கப் படவான்பிறப் பாதி நான்கும்
இல்லா னுயிர்கட் கிடர்தீர்த்துயி ரின்ப மெய்துஞ்
சொல்லான் தருமச் சுடரோனெனுந் தொன்மையினுன்
எல்லா முணர்ந்தா னவனேயிறை யாக வேத்தி.

5. புகலிரும் பனிச்சோலைப் பொன்மலைபோற் பொலிந்திலங்கி
யகல்விசும்பிற் சுடர்மாட்டி யைம்பூத மகத்தடக்கி
மண்ணக மிருணீங்க மன்னுயிர் படைத்தக்கால்
அண்ணலேற் றெழிலூர்தி யருமறை முதல்வனுந்
தண்ணறுங் கமழ்துழாய்த் தாமரைக் கண்ணனும்
வண்ணம்வே றுடம்பொன்றுய் வானவில் லனையரே.

திருமால்.

6. என்றுந் திருமாற்கே யாளாவே னெம்பெருமான்
என்று மெனக்கே பிராளுவான்—என்றும்
பிறவாத பேராளன் பேரா யிரமும்
மறவாது வாழ்த்துகவென் வாய்.

7. வானவர்க டாழ்ந்து பணிகேட்ப மாறுய
தானவர்கள் சுற்றந் தடிந்தொழிந்த—மேன்மை
அரியே யனைத்துலகுங் காக்குங் கடவுள்
எரியே மறையோர்க் கிறை.

8. விரிகடல்சூழ் மேதினி நான்முகன்மீ காஞ்சி
சுரகதிபா யுச்சி தொடுத்த—அரிதிருத்தாள்
கூம்பாக வெப்பொருளுங் கொண்ட பெருநாவா
யாம்பொலிவிற் முயினதா லன்று.

9. வானுகி மண்ணுப் மறிகடலாய் மாருதமாய்த்
தேனுகிப் பாலாங் திருமாலே—ஆனபா

---

[1]வன்று. (4) யாப். வி. 94 (லேகேசி). (5) தொல். செய். 149 நச். (6) மியூசி. காட். II. 2. (7) கண்டி. 105 உதா. (8) ஷெ. 35 உதா. (9) ஷெ. 122 உதா.

வெண்ணெய் விழுங்க நிறையுமோ மேலொருநாள்
மண்ணை யுமிழ்ந்த வயிறு.

10. வண்டடைந்த கண்ணி வளராய்ச்சி வாணெடுங்கண்
சென்றடைந்த நோக்க மினிப்பெறுவ—தென்றுகொல்
கன்றெடுத் தோச்சிக் கனிவிளவின் காயுகுத்துக்
குன்றெடுத்து நின்ற நிலை.

(வினைநிரனிறை.)

11. இறுத்தொசித் தட்டுதைத் தேந்திப்போழ்ந் தாடிப்
பறித்தெறிந் தூர்ந்தணைந்து காத்தான்—செறுத்த
விடைகுருந்த மல்ல னுருள்மலமா கூத்துப்
படைவிளவு புட்பாம் பினம்.

12. உண்டோர்ந் துதைத்தழித் தூதிக்காத் தேற்றளந்து
கொண்டெடுத்து வாய்போழ்ந்து சென்றுக்கிக்—கண்டறுத்தான்
பேய்முலை புட்சகடஞ் சோகோடான் நீர்நிலம்
பூமலைமா தூதமிர்த நஞ்சு.

13. பேய்முலை வியன்ஞாலம் பூங்குருந்த மதவேழம்
வாய்மருப் பெழிலேறு வாட்கண்ணர் குரவைச்சீர்
உண்டானு மளந்தானு மொசித்தானுங் காத்தானுங்
கொண்டானுங் கொடுத்தானுங் கொடியுவணத் தானரோ.

(தேவபாணிவகை.)

14. உறைபதியி னுடனயனே யுந்தியாற் படைத்தோயும்
அறைகடல்சூழ் நிலமுதலா வனைத்துலகும் புரப்போயும்
திருநிறமே கரிபோகத் திருமேகம் பயந்தோயும்
ஒருநிறமே நிறமாக [1]வெள்ளெரியை யுயிர்த்தோயும்
[2]மறுவித்து மார்பென்ன மலர்மகளே வைதகோயும்
நிறத்தோடு நெஞ்சொத்த நிலமடந்தை கணவனுநீ; (இது தரவு).

பின்னமா யொன்றுகும் பெருமாயை யியற்றுவாய்
இன்னமா யின்தெளிய வெமக்கருளி யிமையவர்க்கும்
அன்னமாய் மூன்றெருகா லறம்பயந்த [3]வறனுநீ;

---

(10) முல்லைப்பாட்டு இறுதி. (11–13) யாப். வி 94. (14) தொல். செய். 146 நச், பேரா. [1] வெள்ளொள்ளியை. [2] மறுவகத்த. [3] வறிவனீ.

குறியாதும் பிழையாத [1]குலமறையை முதன்மயக்கி
வெறியாதி மலமோற்கு வெளிப்படுத்து வேறுபடுத்
தறியாத மறையெமக்கு மறிவித்த [2]வறிவனீ;

மாணுத[3] மதிகொடுத்து வானவரை மயக்கியுங்
கோணுக மதிவாங்கிக் கொடுத்தருளி யடியவர்க்குக்
காணுத மதிகாட்டுங் கருணைகூர் காட்சியைநீ; (மூன்றுந் தாழிசை.)

வானுநீ நிலனுநீ மதியுநீ விதியுநீ
தேனுநீ யமுதுநீ திருவுநீ யருவுநீ
அன்புநீ யருளுநீ யாதிநீ யந்தநீ
இன்பநீ துன்பநீ யின்மைநீ யுண்மைநீ; (ஒருசீர்ச் சின்னம்.)
எனவாங்கு; (தனிச்சொல்.)

நால்வகை யுருவிற் பால்வே றுகிய
கால[4] முதல்வநிற் பரவுது ஞாலத்து
[5]நல்லவை யல்லவை யெல்லா நினதது
செல்வ நோக்கி னெய்திய வல்லிதிற்
றுயரொடு தொல்வினை நீங்கிப்
பெயராச் சுற்றம் பெறுகம்யா மெனவே (சுரிதகம்).

விளக்கத்தரிப்பாட்டு.

(அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பா.)

15. கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் றொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் [6]வாலுளே
[7]யழல்விரி சுழல்செங்க ணரிமாவாய் மலைந்தானைத்
தாரோடு மூடிபிதிரத் தமனியப பொடிபொங்க
வார்புன லிழிதருதி யகலிட முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்! (தரவு)

மூரசதிர் வியன் மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்லர்
அடியோடு முடியிறுப்புண் [8]டயர்ந்தவ னிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததின் புகழாமோ;

---

[1] குறிமறைய. [2] அறவனீ. [3] மாணுக. [4] கோல. [5] நல்லவை நல்லவை; நல்லவை யாவை யெனு அது நினது—செல்வ நோக்கியெனெய்தினி வல்லிதிற். (15) யாப். வி. 83; யாப். கா. செய். 2 உரை; தொல். செய். 147 பேரா; நச. [6] வாலுளாய. [7] யழலவிர். [8] டயர்ந்தவர் நிலஞ் சேராப்.

கலியொலி வியனுலகங் கலந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணுதா ருடம்போடு மறம்பிதிர [1]வெதிர்கலங்கச்
சேணுய ரிருவிசும்பிற் [2]செகுத்ததுநின் சினமாமோ;

பமெணி [3]யினநிரைகள் பரந்துட னிரிந்தோடக்
கடுமூ ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
வெரிநொடு மருப்பொசிய [4]வீழ்ந்துதிறம வேருக
எருமலி பெருந்தொழுவி னிறுத்ததுநின் னிகலாமோ;
(இவை மூன்றுந் தாழிசை)

இலங்கொளி மரகத மெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅ னின்னிறம்;
விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய புரையு நின்னுடை; (பேரொண்)

கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை;
தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை;
ஒலியிய லுவண மோங்கிய கொடியினை;
வலிமிகு சகட மாற்றிய வடியினை; (அளவெண்)

போரவுணர்க் கடந்தோய் நீ; புணர்மருதம் பிளந்தோய் நீ
நீரகல மளந்தோய் நீ; நிழறிகழும் படையோய் நீ (இடையெண்)

ஊழி நீ; உலகு நீ; உருவு நீ; அருவு நீ;
ஆழி நீ; அருளு நீ; அறமு நீ; மறமு நீ; (சிற்றெண்)

எனவாங்கு (தனிச்சொல்)

அடுதிற லொருவனிற் பாவது மெங்கோன்
றெடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலபுடைக் கொடுவரிப்
புயலுறழ் [5]தடக்கைப் போர்வே லச்சுதன்
தொன்றுமுதிர் கடலுல கமுழுதுடன்
ஒன்றுபு திகிரி யுருட்டுவோ னெனவே. (சுரிதகம்)

(கலிப்பாவகை.)

16. அணிகிளர் சிறுபொறி யவிர்தித்தி மாநாகத் தெருத்தேறித்
துணிபிரும் பனிமுந்நீர்த் [6]தோட்டவிழ்ந்து மலர்ந்தனையே.
[7]ஆர்கலி யுயரக லெழில்வானத் தமரர்கண முடனுர்ப்ப

---

[1] வெதிர் கலக்கி. [2] சோர்த்தது நின். [3] பினநிரை. [4] வீழ்ந்துதிறல், வீழ்ந்துதிறம். [5] தடக்கைச்செவ்வே. (16) யாப். வி. 94. [6] தொட்டிழந்து, தொட்டுத்துயிலமர்ந்தனையே. [7] வார்புகல் கழன்மறவர்.

வார்புன லிகன்மிகல மறமல்லனே மாய்க்கலிற் பொங்கினே
முள்ளெயிற் றரிமருள்க ணுய்த்தியரொடு நிரைநடுங்க
வரைதிர ணிமிர்தடக் கையினனி மலையெடுத் தேந்தினே
காமரு தகைய கல்லியன் மார்பினே
கண்பொரு சுடரொளி நேமியை
பூமலி வினைபுனை தாரினே
பொன்புனை வினைபுனை யுடுக்கையை
அனையன
பலவுடன் புகழ்தகப் பயந்தோய்நின்
இணைபுணர் கழலடி பரவுதும்
துணைபுண ருவகையொடு மன்னுது மெனவே.

(ஆசிரிய மண்டில விருத்தம்).

17 நிலங்கா ரணமாக நீர்க்கங்கை யேற்றான்
நீண்டதா ளாலங்கோர் நீர்க்கங்கை யேற்றான்
சலங்கா ரணமாகச் சங்குவாய் வைத்தான்
தாயலா ளவியநஞ் சங்குவாய் வைத்தான்
துலங்காச்சீர்த் தானவரைத் துன்னத்தா னட்டான்
[1]துன்னுவார்க் கின்னமிர்தந் துன்னதா னட்டான்
இலங்கா புரத்தார்தங் கோமானை யெய்தான்
[2]லத்தாதார் நெஞ்சத்து ளெஞ்ஞான்று மெய்தான்.

(தேவபாணி).

18 மலர்மிசைத் திருவினை வலத்தினி லமைத்தவன்
மறிதிரைக் கடலினை மதித்திட வடைத்தவன்
இலகொளித் தடவரை கரத்தினி லெடுத்தவன்
இனநிரைத் தொகைகளை யிசைத்தலி னழைத்தவன்
முலையுணத் தருமவ ணலத்தினை முடித்தவன்
முடிகள்பத் துடையவ னுரத்தினை யறுத்தவன்
உலகனைத் தையுமொரு பதத்தினி லொடுக்கினன்
ஒளிமலர்க் கழறரு வதற்கினி யழைத்துமே.

அரியைப்பாடவேண்டுமென்னக் கூத்தர் பாடியது.

19. ஆரே யெனுமொன்று சொல்லத் தொடங்கினு மவ்விடத்தன்
பேரே வருமென்ன பேறுபெற் றேன்பெரு நான்மறையின்

---

(17) யாப்.வி. 77 உரை. [1]துன்னலார்க். [2]எய்தாதார். (18) சிலப். 6:35 உரை. (19) தமிழ்நா. 136.

வேரே மிதிலையின் மின்னுட னேவெய்ய கானடந்த
காரே கடல்கொளுந் தச்சிலை வாங்கிய காகுத்தனே.

கம்பர்பாட்டு.

20. நாராய ணைய நமவென்னு நன்னெஞ்சர்
பாராளும் பாதம் பணிந்தேத்தி மாறறியேன்
காராரு மேனிக் கருணை காமூர்த்திக்
காரா தனையென் னறியாமை யொன்றுமே.

திருமால் திருநாமப்பெருமை.

21. வான்சொல்லுமே புவிசொல்லுமே மறைசொல்லுமே நிறைசேடன்வாய்
தான்சொல்லுமே முனிவோர்பெருஞ் சபைசொல்லுமே சதிசொல்லுமே
தேன்சொல்லிபங் கிறைசொல்லுமே திசைசொல்லுமே திசையாமலே
நானசொல்லவு மெளிவந்தவா நாராயணு நாராயணு.

பாரதம்பாடிய பெருந்தேவனார்பாட்டு.

22. தேனுக்கு நீழற் றிருவேங் கடமென்றும்
வானுக்கு சோலை மலையென்றுந்—தானுக்கு
தென்னரங்க மென்றுந் திருவத்தி யூரென்றுஞ்
சொன்னவர்க்கு முண்டோ துயர்.

திருவரங்கத்துத் திருமால்.

23. நாவுண்டு நீயுண்டு நாமந் தரித்தோதப்
பாவுண்டு நெஞ்சே பயமுண்டோ—பூவுண்டு
வண்டுறங்கு சோலை மதிலரங்கத் தேயுலகை
யுண்டுறங்கு வாலெருவ னுண்டு.

திருவரங்கத்துச் சத்தாவரணம்.

24. மாடமாளிகை சூழ்திரு வீதியு மன்னர் சேர்திரு விக்ரமன் வீதியும்
ஆடன் மாமணிகளங்கன் வீதியு மாலி மாடமனைமர்ந்துறை வீதியும்
கூடல் வாழ்குல சேகரன் வீதியுங் குலவிராச மகேந்திரன் வீதியும்
தேடி தருமவருமாவின் வீதியுந் தென்னரங்கர் திருவா வரணமே.

திருவேங்கடத்துத் திருமால்.

25. கூனின்று போனவன் முனிமிர்ந் தோடக் குருடன்கொம்பிற்
றேனென்று காட்ட முடவன் குடங்கொண்டத் தேன்பிழியத்
தானின்ற வூமை தனக்கென்று கேட்கத் திருவ்வாம்
வானின்ற சோலை புடைசூழ் வடமலை மாயவரே.

---

(20) சில இராமாயணவேடுகளிற்கண்ட பாயிரசெய்யுள். (22) பாரத வெண்பா: செந்தமிழ் 3. 400. (23) நன்னூல், 338 மயிலைநாதருரை. (24) கோயி லொழுகு, தலைப்பு.

திருமுட்டத்துத் திருமால்.

26. முட்டத்துப் பன்றி முளரித் திருப்பதத்தைக்
கிட்டத்துப் பன்றிக் கிடந்தேனே—தொட்டு
மருங்கிலே சங்கெடுத்த மாலே யெனக்கு
வருங்கிலே சங்கெடுக்க வா.

திருக்கண்ணமங்கைத் திருமால்.

27. நீல மழைமுகிலோ நீலமணிக் குன்றமோ
கோல நிறைந்த குரைகடலோ—சோலையிளங்
காயா வனமோ கமழ்சீரா கண்ணமங்கை
மாயா வனதுவடி வம்.

சவரிப்பெருமாள்.

28. முன்போம் புலவற்கு மூதறிவாற் பாய்சுருட்டிப்
பின்போஞ் சவரிப பெருமாளே—யன்பாகப்
பேய்முலைப்பா லுண்டவனே பேதையே னின்னமொரு
தாய்முலைப்பா லுண்ணுமற் ரு.

கச்சித் திருமால்.

29. ஆடவர்க ளெவ்வா றகல்வரணி வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சாரமா—நீடியமால்
நின்ரு னிருந்தான் கிடந்தா னிதுவன்றே
மன்ரூர் [1]கலிக்கச்சி மாண்பு.

அத்திகிரி.

30. அன்றயனை யுந்தியி னளித்தபரன் மேவுவது மத்தி கிரியே
சென்றுகரி கவ்வுமுத லைக்கணிற மேவுவது மத்தி கிரியே
வென்றவன் வணக்குவது மேலில கெயிற்றரிய தான வரையே
தன்றொழின் முருக்குவது தானில கெயிற்றரிய தான வரையே.

திருமோகூர்த் திருமால்.

31. பொன்னனைவா ளரக்கனைமூற் றுவரைக் காவைப்
பொருகிலையைக் கோகடலைப் பொன்ன னீன்ற

(27, 28) தொண்டைமண். சத. மேற்கோள். (29) யாப். வி. 94; இது திருமழிசையாழ்வார்க்கு அடியாராகிய கணிகண்ணர்வாக்காகும். [1] முலிகச்சி, மதிற் கச்சி, பொழிற்கச்சி. (30) வீரசோ. யாப். 16 உரை. (31) கானமேகப்புலவர் பாடியது என்பர்.

நன்மகற்காய்ச் சுரர்க்காயை வருக்காய்க் காத
னபபினைக்காய்ச் சானகிக்காய் நடவைக் காக
மன்னுகிரால் வடிக்கணையால் வளையாற் புள்ளால்
வயங்குதோள் வலியால்வா னரங்க ளாலும்
மூன்னுடற்கீ றிச்சிரங்கொண் டமரில் வீழ்த்தி
முதலொடுங்கொண் டிறுத்தடைத்த மோகூ ரானே.

ஸ்ரீ வில்லிபுத்தூர்க் கோபுரம்.

32. இருக்கோது மந்தணர் சூழ்புது வாபுரி யெங்கள்பிரான்
மருக்கோதை வாழும் வடபெருங் கோயின் மணிவண்ணனூர்
திருக்கோ புரத்துக் கிசையம்பொன் மேருச் சிகரமென்றே
பருக்கோத லாமன்றி வேறுவ மானப் பணிப்பில்லையே.

தூறுகுடித் திருமாலைக் கூத்தர்பாடியது.

33. திக்குளெட்டுகையத் துக்கமுற் றதிதிக் கிட்டலற
மைக்கடற் குட்சாத மைக்கவட் டோற்கிட மாமதுர
ழிக்குமுர் றிக்கணைச் சற்றுவிட் டததெறித் திட்டமுத்தைக்
கொச்சுமொச் சிக்கக்கி விசுமச் சோலைக் குறுங்குடியே.

ஷே புகழேந்திபாடியது.

34. எட்டெழுத் தைக்கருத் திற்குறித் திட்டிதி தம்பரவும்
சிட்டர்சட் குதிருப் பொற்பதத் தைசிறக் கத்தருமல்
வட்டநெட் டைப்பணித் தற்பரித் [1]தற்கிடம் வாரிசப்பொ
குட்டினத் துக்குலந் தத்திமுத் தீனுங் குறுங்குடியே.

திருமாலிருஞ்சோலை.

35. ஆழ முடைமையினு லாழியா மந்தரத்து
வாழ நிமிர்தலான் மந்தரமாம்—வழுலகுந்
தந்தளிக்கும் வண்ணத்தாற் றுயாஞ்செந் தாமரைக்கட்
பைந்தெரியன் மாயோன் பதி.

சிவபிரான்.

36. மன்னிய நாண்மீன் மதிகனலி யென்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரும்
ஆதிரையா னுதிரையா னென்றென் [2]றயருமால்
ஊர்திரைநீர் வேலி யுலகு.

---

(32) ஸ்ரீவில்லிபுத்தூர்க் கீழைக்கோபுரத்துக்கண்டசாஸனப்பாட்டு. [1]மெத்தை யத். (35) வீரசோ அலங். 19உ மை. (36) முதலொள்ளாயிரக்காப்பு. [2]அயர்வறுசீ.

37. நிலனும் விசும்பா நிமிர்காணீர் தீயாம்
அலர்கதிராம் வான்மதியா மன்றி—மலர்கொன்றை
ஒண்ணறுந் தாரா [1]ரெருவணிய மானனுமாய்
எண்ணிறந்த வெப்பொருளு மாம்.

38. கறைமிடற்றர் கையிற் கபாலத்தர் வெள்ளைப்
பிறைமுடியர் பின்முழ் சடையர்—பொறிவிரவு
நாகத்தர் சூலத்தர் நன்னுதலா டானிருந்த
பாகத்த ரென்றே பரசு.

39. தலையினமர் கங்கைத் துகிலுடையான் றன்கைச
சிலையினமர் செங்கண்மால் பாகன்—நிலையினமா
தானவரைக் கொன்று விழக்கெடுத் தான்றனியே
வானவரெல் லாமதிக்க வந்து.

40. மாத ருமைவாய் மழலை மொழியாலோ
ஓது மறையி னெலியாலோ—யாதாலோ
கோல மிருதிறனுக் கொண்டான் றிருமிடற்றின்
ஆல மமிர்தான வாறு.

41. கொடியார் கொடியார் மதின்மூன்றுங் கொன்ற
படியார் பணைத்தடக்கை நால்வாய்க்—கடியார்
உரியா ருரியா ரெமையாள வோதற்
கரியார் கரியார் களம்.

42. கரவோடு நின்றார் கடிமனையிற் கையேற்
றிரவோடு நிற்பித்த தெம்மை—யரவோடு
மோட்டாமை பூண்ட முதல்வனை முன்வணங்க
மாட்டாமை பூண்ட மனம்.

(தாழிசைகொச்சகம்)

43. நீறணிந்த நிருமேனி நெருப்புருவங் நினைத்தபோற்
கூறணிந்த குங்குமங்கொண் டொருமூலைபோ குறிசெய்ய
வேறணிந்த [2]சுடரெறிப்ப வேனிலாற் கெரிவிழித்த
ஏறணிந்த வெல்கொடியோ வெவ்வுரோற் றவிர்ந்தனவே.

---

(37) தண்டி. 74 உரை; வீரசோ. அலங். 29 உரை: [1]ரெருவனுயிர்க்குயிராய். (38) வீரசோ. அலங். 10 உரை. (39) மேற். 19 உரை. (40) தண்டி. 63 உரை. (41) மேற். 93 உரை. (42) வீரசோ. அலங். 26உரை; தண்டி. 61 உரை; (43) தொல். செய். 149; பேரா; நச். உரை. [2]குவடெறிப்ப.

(தாவிலை கோச்சகம்)

44. பூணுக வெண்பணிந்தான் பூதத்தான் வேதத்தான்
கோணுகக் கச்சையான் கோடேந்து கொல்லேற்றான்
மாணுக வெண்ணூலான் வாணுதலாள் பாகங்கொண்
[1]டேணரும் பிச்சையா னுண்ணுத நஞ்சுண்டான்
வாணுறு தோய்ந்த [2]சடையான் மழுவலத்தான்
[3]யாணர்வஞ் செய்யு மிறை ;

எனவாங்குப் பாடி யிறைஞ்சுவோர்க் கெல்லாம்
வினைமாசு தீரும் விளக்காகுந் தோற்றத்
தனையோய் மறலிக்கு மச்சம் [4]பயந்த
புனைபூங் [5]கழற்கான்மேற் பூவொடுநீர் தூஉய்
மனைமாண்ட பாக முளப்பட வாழ்த்தி
எனைநாளு மேத்துநு மெந்தையே நின்னை
நினையா தொழிபற்க நெஞ்சு.

(கோச்சக வகை.)

45. கடாமும் குருதிபுங் கால்வீழ்த்த பச்சைப்
படாமும் புலித்தோலுஞ் சாத்தும் பரமன்
இடாமுண்ட நெற்றியா னெஞ்ஞான்றுங் கங்கை
விடாமுண்ட வார்சடையான் வெண்ணீ றணிந்தான்
மெய்யுறு நோயில்லே வேரோர் பிறப்பில்லே
ஐயுறு நெஞ்சில்லே [6]யாகாத தொன்றில்லே.

(பெருந்தேவபாணி வகை)

46. பலியுருவிற் கேலாத படைமழுவாள் வலனேந்திப
புலியுரிமேற் பைத்தலைநாழ் பூங்கச்சை யிரித்தமைத்துக்
கண்கவருந் திருமேனி வெண்ணூலின் கவின்பகைப்பத்
தண்கமழ்பூந் தாரிதழி தலைமலிந்து பிறைதபுங்க
மொழிவலத்தான் மயங்காதே முறுவலாற் ரேரலாதே
விழிவலத்தா னுருவழிந்தேதான் வேடங்கண் டுணர்வழியாக
கலிகெழு சுடற்நச்சித் தமழிளந் தேமாவின
ஒலிதளிரு [7]முலேச்சுவடு முடன்சிறப்ப யுலவுங்கால்; (வட்டடித்தாவு)

(44) தொல். செய். 149; போரா. நச் உரை. [1]ஊணுகும். [2]சடையான்வண் மாகத்தான். [3]யாமேரூர் வஞ். [4]பயக்கும்; [5]கழற்ரூண்மேற் பூவொடுநீர் தூவி. (45) தொல். செய். 149. ஷை. [6]யாவதொன் றில்லே. (46) தொல். செய். 146. போரா. நச். [7]முலேச்சுவட் டுடன் பிறப்ப.

நீறேறுந் திருமேனி நெடும்பகலே நிலவெறிக்க
ஏறேறிக் கடைதோறு மிடுபலிக்கு வருதிரால்
ஏறேறி யிடுபலிக்கு வரும்பொழுது மிடைபிரியாக்
கூறேறும் பசும்பாகங் கொள்ளுமோ கொள்ளாதோ ;

பல்லேற்ற பரிகலத்துப் பலியேற்றண் மேலிட்டு
வல்லேற்ற முலைமகளிர் மனமேற்ப வருதிரால்
வல்லேற்ற முலைமகளிர் மனமேற்ப நீர்வருங்காற்
கொல்லேற்றுக் கறுகிடலுங் கொள்ளுமோ கொள்ளாதோ;

நாணுக மடந்தையர்பாற் பலிக்கென்று நடந்தக்காற்
பூணுகந் தழீஇக்கொளினும் பொங்காது போலுமால்
பூணுகந் தழீஇக்கொளினும் புகைபுயிர்த்துப் பொங்காத
கோணுகம் யாந்தருபால் குடிக்குமோ குடியாதோ;
(நான்கடித்தாழிசை மூன்று)

[1]எரிகல னிமைக்கு மிடவயிற் றெறிக்கை
பரிகல னேந்தும் [2]பரிசிரந் ததுகொல்;
உமையவள் விலக்கவு மொலிகட னஞ்சம்
இமையவர் தம்மை [3]யிரந்துண் டதுகொல்; (ஈரடியிரண்டு)

இடையேழு பொழில்கட்கு மிறைப்பளவிற் [4]செல்லேறை
கடைதோறு மதுநிற்பக் கற்பித்த வாறெவன்கொல் ;
இரப்புநீர் வேட்டதுகேட் டிறையவரென் பட்டனரே;
பரப்புநீர்க் [5]கங்கையே படர்சடையிற் கரந்ததே ; (ஓரடி நான்கு)

பூண்டன வெண்பு; [6]புனைவது தும்பை ;
ஆண்டன பூதம்; அறைவது வேதம் ;
இசைப்பன [7]பல்பேய் ; எழுதிய தகு வீணை ;
அசைப்பன வேணி ; அதிர்வன பொற்கழல் ; (இருசீரெட்டு)

எனவாங்கு ; (தனிச்சொல்)

எல்லவிலை மகளிரிடுபழி நசைஇப
பல்கடை நிறுதருஉஞ் செல்வமிற் பரவுதும்
கொடியணி யேனம் பொடியணிந்து கிடப்ப
வடதிசை வாகை சூடித் தென்றிசை

[1]எரிவிலை தரிக்கு மிடவயிற் றெறிக்கை. [2]பரிசிரக். [3]யிரந்துகொண் டனை கொல். [4]கொல்லேலேற. [5]கங்கையையா, கங்கையையா. [6]புனைந்தது. [7]பல்வேய்.

வென்றி வாய்த்த வன்ருள் [1]வளவன்
இமிழிசை வேங்கடம் போலத் [2]தமிழ்த்து
நாவலொடு பெயரிய ஞாலங்
காவல் போற்றி வாழிய நெடிதே. (சூரிதகம்)

(சிறுதேவபாணி)

47. வண்ணமலர்ச் சரங்கோத்து மதனவேண் மிகவெய்யக்
கண்ணளவோர் புலனல்லாக் கனல்விழியா லெரித்தனையால்
எண்ணிறந்த தேவர்களு மிருடிகளு மெழுந்தோட
ஒண்ணுதலாள் பாகங்கொண் டொருதனியே யிருந்தனையே.

(கோச்சகவகை)

48. பிறையணிந்த சடைமுடியோன் பிஞ்ஞகன் பெம்மான்
கறையணிந்த கண்டத்தான் கையிலங்கு சூலத்
திறையணிந்த நெஞ்சினேர்க் கின்றும் பிறவி
இம்மைப் பிணியு மியலும் பகியொடு
தம்மைத் துறந்திடும் தாவில் புகழனதாம்.

49. கல்லாலந் [3]தண்ணிழற்கீழ்க் கல்வித் துறைபயந்த காமர்காட்சி
நல்லானே நல்லா ளொருபாக மாகிய ஞானத்தானே
எல்லாரு மேத்தத் தகுவானே யெஞ்ஞான்றும்
[4]சொல்லாதார்க் கெல்லாந் துயரல்ல தில்லைத் தொழுமின் கண்டீர்.

50. வண்டணி கொண்ட மதுமலர்க்கொன்றை யினமாலை
கொண்டணி செஞ்சடைக் கோட்டிளந் திங்கள்போலப்
பண்டணி யாகப் பலர்தொழுங் கங்கைநீர் வைத்தான்
உண்டணி கொண்டருஞ் சுண்பார்க [5]கமிழ்தாகுமே.

51. இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியி
னெதிர்ந்த தானையை யிலங்கு மாழியின் விலங்கியோள்

முடங்கு வாலுளை மடங்கன் மீமிசை
முனிந்து சென்றுடன் முரண்ட ராசனை முருக்கியோள்

---

[1]விடலை. [2]தமிழகத்தி. (47) சிலப். 6. 35 அடியார்க். (48) தொல். செய். 149 நச். (49) தொல். செய். 149 பேரா; நச்: [3]தன்னிழற்கீழ்க் [4]சொல்லா டார்க். (50) தொல். செப். 149 பேரா; நச். [5]கழிந்தாமே. (51) யாப். வி. 25.

வடங்கொள் மென்முலை நுடங்கு நுண்ணிடை
மடந்தை சுந்தரி வளங்கொள் பூமழை மகிழ்ந்தகோன்
தடங்கொ டாமரை யிடங்கொள் சேவடி
தலைக்கு வைப்பவர் தமக்கு வெந்துயர் தவிர்க்குமே.

52. ஒரு வான் யாறோடு சடாடவிப்
பெரு நாகமே பூணும் பெருமான்
அரு வாயிரு ளுபினு மன்பர்க்
குரு வாயிரு ளுள்ளதகி னுள்ளே.

(கொச்சகவகை)

53. மையணி கண்டனே வாளரா வம்
மெய்யனே மேயது வீடே.

54. எரியெள் ளுவன நிறத்தன் விரியிணர்க்
கொன்றையம் பைந்தா ரகலத்தன் பொன்ரு
யிலெரி யூட்டிய வில்லன் பயிலிருட்
காடமர்ந் தாடிய வாட னீடிப்
புறம்புதை தாழ்ந்த சடையன் குறங்கறைந்து
வெண்மணி யார்க்கும் விழவின னுண்ணூற்
சிறந்தை யிரட்டும் விரல னிரண்டுருவா
யீரணி பெற்றவெழிற் றகைய னேரும்
இளம்பிறை சேர்ந்த நுதலன் களங்கனி
மாறேர்க்கும் பண்பின் மறுமிடற்றன் றேறிச்
சூலம் பிடித்த சுடர்ப்படைக்
காலக் கடவுட் குயர்கமா வலனே.

(ஆசிரியத்துறைவகை)

55. பாடகஞ்சேர் காலொருபாற் பைம்பொற் கினைகழற்கா லொருபாற்
நீடு குழலொருபா னீண்ட சடையொருபால் [றோன்றும்
வீடிய மானி னதளொருபான் மேகலைசேர்ந்
தாடு தலிலொருபா லவ்வுருவ மாண்பெண்ணென் றறிவார் யாரே.

(52, 53) தொல். செய். 149. பேரா; நச். (54) தொல். புறத். 26, நச். (55) யாப். வி. 76; வீரசோ. யாப். 10.

(திரிபங்கி)

56. ஆதரந் தீரன்னே போலினி யாயம்பி காபதியே
மாதுபங் காவன்னி சேர்சடை யாய்வம்பு நீண்முடியாய்
ஏதமுய்ந் தாரின்னல் சூழ்வினை தீரெம் பிரானினியார்
ஓதமொன் றேயுன்னு வாரமுதே யும்பர் நாயகனே.

(மடக்கணிவகை)

57. வருமறை பலமுறை வசையறப் பணிந்தே
மதியொடு சடைமுடி மருவுமப் பணிந்தே
அருநட நவில்வது மழகுபெற் றமன்றே
அருளொடு கடவுவ தழகுபெற் றமன்றே
திருவடி மலரன நிகழொளிச் செம்பே
தெளிவுட னுறைவது திருவடிச் செம்பே
இருவினை களைபவ ரடைபதத் தனன்றே
இமையவர் புகலிறை யெனநினைத் தனன்றே.

சிவபிரான்சடை.

58. வாளரவின் செம்மணியும் வன்னிபிளவம் பாறிலையும்
நாளிளைய திங்க ணைகதிலவும்—நீளொளியால்
தேனுலவு பூங்கொன்றைத் தேவர்கோன் செஞ்சடைமேல்
வானிலவு விற்போல் வரும்.

சிவபிரானணியும்பாம்பு.

59. பத்திக் தகட்ட கறைமிடற்ற பைவிரியும்
துத்திக் கவைநாத் துளையெயிற்ற—மெய்த்தவத்தோர்
ஆகத்தா னம்பலத்தா னரா வமுதணங்கின்
பாகத்தான் சூடும் பணி.

---

(56) தண்டி 95 உரை; திரிபங்கியாவது, ஒருசெய்யுளாய்நின்றே ஒருபொருண் பயப்பதன்றி, அதுவே மூன்று செய்யுளாய்ப் பிரிந்து முடிந்து வெவ்வேறுபொருள் பயக்கத்தக்கதாகவும் பாடப்படுவது; இச்செய்யுள்—[1]ஆதரந்தீர், மாதுபங்கா, ஏதமுய்ந்தா, ரோதமொன்றே. [2]அன்னேபோ வினிபாய், வன்னிசேர் சடையாய், இன்னல்சூழ் வினைதீர், உன்னுவா ரமுதே. [3]அம்பிகா பதியே, வம்புநீண் முடியாய், எம்பிரா னினியார், உம்பர்நா யகனே—என்று மூன்று பிரிவாதல் காண்க. (57) தண்டி 93 உரை: (58) தண்டி. 81. (59) தண்டி. 88.

சிவபிரான் அணிந்த கொன்றை வண்டு.

60. சூழ்ந்து முரன்றணவி வாசந் துதைந்தாடித்
தாழ்ந்து மதுநுகர்ந்து தாதருந்தும்—[1]வீழ்ந்தபெரும்
பாசத்தார் நீங்காப் பரஞ்சுடரின் பைங்கொன்றை
வாசத்தார் நீங்காத வண்டு.

சிவபிரான் முடிப்பிறை.

61. இன்றுமையாண் மாசிலா வாண்முகங்கண் டேக்கற்றோ
அன்றி விடவரவை யஞ்சியோ—கொன்றை
உளராவா றோடு மொளிர்சடையீர் சென்னி
வளராவா றென்னே மதி.

சிவபிரானணியு மரவு.

62. காமருவு பொற்றொடியாங் காலிற் கழலாம்
பொருவில் புயவலய மாகும்—அரவரைமேல்
நாணு மரற்கு நகைமணிசேர் தாழ்குழையாம்
பூணும் புனைமாலை யாம்.

சிவபிரான் கூத்து.

63. பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சடையா ஞுடுமே
நீண்ட சடையா ஞுடு மென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணலே.

64. வரிகொளரவு மதியுஞ் சுழலக்
கரிகா லேந்தி யாடுமே
கரிகா லேந்தி யாடு மிறைவன்
புரிபுன் சடைமேற் புனலும் பிறழவே.

சிவபிரான் செயல்கள்; (நான்மை)

65. கூற்றுவனை வின்மதனை யரக்கர் கோவைக்
கூனிலவைக் குஞ்சரத்தை யிஞ்சி மூன்றை

ஏற்றுலகின் புறவுருவ மாளத் தோள்க
ளிறவெறிப்ப விமயப்பெண் வெருவ வேவக்

காற்றொழிலா னயனத்தால் விரலாற் கற்றைக்
கதிர்முடியாற் காதலத்தாற் கணையாற் பின்னும்

ஊற்றழிய வுதைத்தெரித்து நெரித்துச் சூடி
யுரித்தெரித்தா னவனெம்மை யுடைய கோவே.

---

(60) தண்டி. 28 உரை; [1]வீழ்ந்தெழுந்த. (61) மெ. 21. உரை. (62) மெ. 39 உரை. (63) தொல். செய். 149 பேரா. ந.ச; யாப். வி 87; வீரசோ. யாப். 17 உரை. (64) யாப். வி. 76. (65) காளமேகப்புலவர்வாக்கென்பர்.

66. கண்ணவனே யல்லது காணு செவியவனை
தெண்ணருஞ் சல்ல திசைகேளா—அண்ணல்
கழலடி யல்லது கைதொழா வஃதால்
அழலங்கை கொண்டான்மாட் டன்பு.

திரிபுரதகனம்.

67. பண்டு புரமெரித்த தீமேற் படர்ந்தின்றும்
அண்ட முகடு நெருப்பறா—தொண்டளிர்க்கை
வல்லி தழுவக் குழைந்த வடமேரு
வில்லி நுதன்மேல் விழி.

திருஞான சிவபிரான்.

68. காலபு மாலையுங் கைகூப்பிக் கைதொழுதா ன்
மேலை வினையெல்லாங் கீழவாம்—மேலைக்
கருமான்றோல் வெண்ணூற்றுக் கெம பிரானிர் வைத்தார்போ
பெருமானைச் சிற்றம் பலத்து.

69. தேங்காணன் முத்தலைக்குந் திருஞலப் பெருந்தகைக்
தேங்காரத் தூட்பொருளா மொண்சுடர்க்கு—நீங்கா
மருளா மருளா தரித்தரைக்கு மாற்றம்
பொருளாம் புனைமாலை யாம்.

70. வாய்த்த பொருள்விளைத்த தொன்றில்லை மாகவமே
[1]யார்த்த வறிவில்லை யம்பலத்துக்—கூத்தரடையான்
சிலஞ் சிறிதேபுஞ் சிந்தியன் சென்றிறைஞ்சுதன்
காலம் வறிதே கழித்து.

71. உள்ளங் குளிர வுரோ மஞ்சி லிர்த்துரைபுக்
தள்ளாவிழி நீரரும்பத் தான்மறந்தாள்—புள்ளலைக் துந்
தேந்தா மரையயல்சூழ் திருவாலத் திருநடஞ்செய்
பூந்தா மரைதொழுத பொன்

கச்சித் திருவேகம்பம்.

72. பூமகள்யார் போவானே யேவுவா னென்னுரைக்கும்
நாமம் பொருசார்திற் கென்னென்பார்—தாமழகின்
சேரென் பிறைசூடும் பெம்மா னுவந்துறையும்
சேர்வென் திருவேகம் பம்.

---

(66) பி. வி. 11 உரை; இது, சேரமான்பெருமாணாயனார் இயற்றியருளிய திருக்கைலாயஞானவுலாவில் பயின்றுள்ளமை காண்க. (67) தண்டி. 54 உரை. (68) வீரசோ. அலங். 31 உரை; தண்டி. 80 உரை. (69) தண்டி. 93 உரை. (70) மே. 44 உரை; [1]ஆர்த்த. (71) மே. 28 உரை. (72) மே. 95 உரை;

73. நலத்தகை பெறவிரு சரண மோதுநங்
குலத்தகை பணிகொளே காம்ப ரத்தனே
நலத்தகை மகளொரு பாக நண்ணுமேந்
குலத்தகை பணிகொளே காம்ப ரத்தனே.

(காளமேகப்புலவர் பாட்டு.)

74. முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் ரோது.

கச்சாலைச் சிவபிரான்.

75. நீல மணிமி..ற்ற னீண்ட சடைமுடியன்
நூலணிந்த மார்ப னுதல்விழியன்—தோலுடையன்
கைம்மான் மறியன் கனன்மழுவன் கச்சாலை
யெம்மா னிமையோர்க் கிறை.

76. சீலத்தான் ஞானத்தாற் றேற்றத்தாற் சென்றகன்ற
காலத்தா லாராத காதலான்—ஞாலத்தார்
இச்சிக்கச் சாலச் சிறந்தடி யேற்கினிதாங்
கசிக்கச் சாலைக் கனி.

திருநெறிக்காரைக்காட்டுச் சிவபிரான்.

77. வெறிவிரவு புன்சடைமேல் வெள்ளம் பரகதும்
விறல்விசய முகத்தும் வெள்ளம் பரக்கும்
கறைவிரவு நஞ்சுண்டு மண்டங் கறுக்கும்
கழலடைந்தார் தீவினையைக் கண்டங் கறுக்கும்
பொறிவிரவு பூண்முலையாள் போகத்த ஞதும்
பொதுநீக்கித் தன்னபடைந்தார் போகத்த ஞதும்
நெறிவிரவு காஞ்சி நெறிக்காரைக் காட்டான்
நிழலடைந்தார் சம்மை நெறிக்காரைக் காட்டான்.

திருச்சாய்க்காட்டுச் சிவபிரான்.

78. பணிமின்கள் பாதம் பகர்மின்க ளும்மங்கள் பாரகத்தீர்
தணிமின்கள் சிற்றந் தவிர்மின்கள் பொய்ம்மை தவம்புகுமின்
கணிமின்க ளின்ற கினிவரு மாதர்தங் கையிசைத்த
மணிமின்கள் போலெமனீர் வான்சேர்ப் சாய்க்காட்டு வள்ளலுக்கே.

(73) கண்டி. 94 உரை. (75) கண்டி. 28 உரை. (76) கூடி 95 உரை. (77) யாப். வி. 77. (78) திருச்சாய்க்காடபள்ளிக் குன்றின் குடைவரையிற் பொறிக்கபபட்ட சாஸனப்பாடல்களுள் ஒன்று (ஸெந். I. 400).

இறையனார் பொய்யாமொழிப்புலவர்முன்பு சிராமலையைப் பாடிய வெண்பா.

79. கோட்டாற் கொழும்பிரசங் குத்தி யதனடியே
பாட்டாற் பணைக்கை [1]புகமடித்துக்—காட்டானை
தேனீ ருருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை.

(பொய்யாமொழியார் பாட்டு.)

80. அங்கம் புலியத ளாடையைச் சாத்தி யரவமுடன்
பங்கம் புலிவைத்த பண்பர்க் கிடம்பிணை வாளெயிற்று
வெங்கட் புலியைவிட் டியானையைத் தேடி விதம்விதமாய்ச்
சிங்க மிருந்து தனித்தனி நோக்குஞ் சிராமலையே.

திருநெய்த்தானத்துச் சிவபிரானை ஒட்டக்கூத்தர் பாடியது.

81. விக்கா வுக்கா வித்தா விப்போய்
விட்டா னட்டார் சுட்டுர் புக்கார்
இக்கா யத்தா சைப்பா டுற்றே
யிற்றே டிப்போய் வைப்பீர் நிற்பீர்
அக்கா டப்பேய் தொக்கா டச்சூ
ழப்பா டத்தீ வெப்பா டப்பூ
ணைக்கா டக்கா னத்தா டப்போம்
நெய்த்தா னத்தா னைச்சே வித்தே.

வடி புகழேந்திப்புலவர் பாடியது.

82. தற்கோ லிப்பூ சற்பா சத்தே
தப்பா மற்சா கைக்கே நிற்பீர்
மூற்கோ லிக்கோ [2]லிப்பூ சித்தே
மூட்டா [3]மற்சே வித்தே நிற்பீர்
வற்ரு நெட்டோ [4]டைப்பா ரச்சேன்
மைப்பூ கத்தே றித்தா விப்போய்
நெற்ரு ஞற்ரு லைப்பா கிற்சேர்
நெய்த்தா னத்தா னைச்சே வித்தே.

---

(79) தமிழ்நா–4: [1]புகமடக்குங். (80) வடி 71. தொண்டை. சத. (81, 82) தொண்டை. சத [2]லிப்பா வித்தே. [3]மற்பூ சித்தே [4]டைப்பா ரைச்சேன்.

திருவெண்காட்டுச் சிவபிரான். (முதற்சவலை.)

83. சங்குமுள பறையுமுள தாகல்ல கவரியுள
எங்குமுள தூரவுகிண றெறியுமறி கொடியுமுள?
பொங்குபுனல் வந்தலைப்பப் புள்ளினங்க ளார்ப்பப்
பொருகயலோ டினவாளை புறக்கணித்து நோக்கத்
தெங்குபழம் வீழ்ந்தொழுகுங் காவிரியின்றென்பாற்
றிருவெண்காட்டையவெனிற் றீவினைகள் போமே.

தேவூர்ச்சிவபிரான்.

84. அரிசி விளைத்தன் றமுதளிக்குந் தேவைப்
புரிசிறக்கு மீசரிரு பொற்றுள்—தரிசித்தோர்
வேண்டும் வரமனைத்தும் மேவுவார் பார்மீதில்
மீண்டுபிற வார்பெறுவார் வீடு.

திருவாமாத்தூர்ச் சிவபிரான்.
(ஓரட்டையர் ஆறுவிலகப் பாடியது.)

85. ஆற்குழை யோவர வோவாயர் பாடி யருமனையோ
பாற்கட லோதம்ப மோதங்கு மாவம் பலபலவா
மாற்கமு மாகினின் முர்மாதை நாதர் வலங்கொள்பம்பை
மேற்கரை கோயில்கொண் டார்புரஞ் சீறிய வெங்கணைக்கே.

சிவதலத்தோகை.

86. சுணைட் டிரண்டு மலைகாட்டி லொன்று கொங் கேழுவையை
வாணைட்டி சேழ்நடு காட்டெழு மூன்றொன்றைந் தாம்வடக்கிற்
சோணைட் டொருநூற்றுத் தொண்ணூறென் றோர்வர் துளுவத்தொன்று
நாணைட் டியதொண்டை நன்னைட்டி லாறைந் திருநகரே.

பாண்டிநாட்டுச் சிவதலத்தோகை.

87. கூடல் புனவாயில் குற்றுல மாப்பனூர்
ஏடகநெல் வேலி யிராமேச—மாடானை
தென்பாங்குன் றஞ்சுழிய றென்றிருப்புத் தூர்காளை
வன்கொடுங்குன் றம்பூ வணம்.

அட்டவீரட்டம்.

88. பூமன் றிருக்கண்டி யந்தகன் கோவல் புரமதிகை
மாமன் பறியல் சயந்தான் விற்குடி மாவழுஞர்

---

(83) வீரசோ. யாப். 24. (84) சோழமண். சத. 53. (85) தமிழ் நா. 111. (86) தொண்டைமண். சத. 2. (87) காளமேகம்வாக்கென்பர்.

காமன் வெறுக்கை நமன்கட வூரிந்தக் காஞ்சிக்குள்
தேமன்னு கொன்றைச் சடையான் பொருதிட்ட சேவகமே.

சத்தவிடங்கத்தலம்.

89. சீரார் திருவாரூர் தென்னுகை நள்ளாறு
காரார் மறைக்காடு காழியல்—பேரான
ஒத்தகிரு வாய்மூ ருவந்தகிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்.

விநாயகர்.

90. தன்றே ணென்றி ணென்றுகைம் மிகூஉங்
களிறுவளர் பெருங்கா டாயினும்
ஒளிபெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே.

91. எண்ணிய வெண்ணியாங் கெய்துப கண்ணுதற்
பவள மால்வரை பயந்த
கவள யானையின் கழல்பணி வோரே.

92. மதிபாய் சடைமுடித்து மாசுணப்பைம் பூட்டிச்
சதிபாய் குறுந்தாட்டுத் தான—நதிபாய்
இருகவுட்டு மூக்கட்டு கால்வாய்த்தெ றுள்ளம்
உருகவிட்டு நின்ற வொளி.

93. மானமருங் கண்ணுண் மணிவயிற்றில் வந்துதித்தான்
தானவரை யென்றுந் தலையழித்தான்—ஆனமுகன்
ஓட்டினுன் வெங்கலியை யுள்ளத் தினிதமர்ந்து
வீட்டினு னம்மேல் வினை.

94. தேனக் கலர்கொன்றை பொன்னுகைச் செஞ்சடையிய
கூனற் பவளக் கொடியாகத்—தானம்
மழையாகக் கோடு மதியாகத் தோன்றும்
புழையார் தடக்கைப் பொருப்பு.

---

(90) தொல். செய். 52 இளம்பூ: (நூறு முத்தொள்ளாயிரக்காபபென்று புறத்திரட்டால் அறியப்படுகின்றது). (91, 92.) தொல்காப்பியம், தமிழ்நாவலர் சரிதை, உரிச்சொனிகண்டு முதலிய நூல்களின் தொடக்கத்துக் காணப்படு கின்றன. (93) தண்டி. 39 உரை. (94) வீரசோ. அலங். 19 உரை. தண்டி. 35 உரை.

(விநாயகர்க்கும் மலைக்குஞ் சிலேடை.)

95. அம்பொற் பணைமுகத்துத் திண்கோட் டணிநாகம்
வம்புற்ற வோடை மலர்ந்திலங்க—உம்பர்
நவம்புரியும் வானதியு நாண்மதியு நண்ணத்
தவம்புரிவார்க் கின்பந் தரும்.

96. திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரு மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

97. கடந்தாட் கொத்த தமனியச் சிலம்பு
படந்தாழ் கச்சைப் பாம்பொடு [1]மினிர
[2]வெஞ்சூ டிருத்தாதை வியந்துகைத் துடிகொட்ட
நின்றாடு மழகனிற்றை [3]நினைவாரோ வினையிலரே.

முருகக்கடவுள்.

98. நீல நெடுங்கண்ணு நெற்றி நிழனுறிக்
காலை யிருள்சீக்குங் காய்கதிர்போற்—[4]கோல
மணித்தோகை மேற்றோன்றி மாக்கடற்சூர் வென்றோன்
அணிச்சே வடியெம் மரண்.

99. முருகவேள் சூர்மா முதற்றடிந்தான் வள்ளி
புரிகுழன்மேன் மாலை புனைந்தான்—சரணளித்து
மேலாய வானோர் வியன்சேனை தாங்கினான்
வேலா னிடைகிழித்தான் வெற்பு.

(அம்போதரங்கவோருபோது).

100. செஞ்சுடர் வடமேரு விருமருங்குந் திரிகின்ற
வெஞ்சுடரு மதியமும்போல் வேலொடுசே டகஞ்சூழல
மாயிரு மணிப்பீலி மணியெருத்திற் றோன்றுங்கால்
சேயொளி கடற்பிறந்த செந்தீயிற் சிறந்தெறிப்ப
மறுவருந்தம் மனத்துவகைக் [5]கலுழ்ச்சியான் வளர்த்தெடுத்த
அறுவருந்த [6]மூலசார் தகடருந்தூ றமுதாட்ட

---

(95) தண்டி. 75 உரை. (96) மியூ. காட். 2, பக். 545, (1916). (97) தொல்; செய். 149 போரா; நச்: [1]தழீஇ. [2]வென்றுதிருந்தாதை. [3]நினைவாரே. (98) இரும் பல்காஞ்சி (புறத்திரட்டு மேற்கோள்); [4]சோலை. (99) தண்டி. 38 உரை. (100) தொல். செய். 152. போரா; நச். [5]தழைச்சியான். [6]மூலசார்தாங்கசல்லிசும்பு சிலதுவற்ற.

ஊருருவத் தெயின்மூன்று மொருங்கவித்தோன் வியப்பெய்த
ஈருருவத் தொருபெருஞ்சூர் மருங்கறுத்த விகல்வெய்யோய்!

[1]ஆங்க,

வினையொழி காலத்து வெவ்வெயிற் கோலத்
தினைவருந் தத்த மறம்புரிந் தாங்கு
மூனைடு கொற்றத்து மூன்ஞன் குருவிற்
கனைகடல் சுட்டன கண்;

தேவரு மக்களுஞ் சீற்றத்தா னஞ்சாமைக்
காவல் புரியுங் கதிர்மதி போலும்
மூவிரு தோன்றன் முகம்;

மடமகள் வள்ளி மணிக்கம் பலம்போல்
இடையிடை சுற்றுத லின்றுந் தவிரா
தொடையமை தார்க்கடம்பன் றோள்;

அவ்வழி,

அடியிணை [2]சேரா வவுணரை நுங்கிப்
பொடிபொடி யாகிப் பொருப்பொடு மாய
இடியுமிழ் வானத் திடைகின்று கூஉங்
கொடியணி கோழிக் குரல்;

விழுச்சே ரமரர் விசும்பிடைத் தோன்றிப்
பழிச்சிநின் ரூர்த்தார் பலர்;

உருசெழு முருகிய முருமென வதிர்தொறும்
[3]அருகெழு சிறகொடு மணவரு மணிமயில்;

[4]பெருகள வருமறை பெறுகெடு மொழியொடு
பொருகள வழியிசை புகல்வன [5]சிறுகுரல்;

சிவந்தன திசை சிலம்பின மலை
சிவந்தன தலை நிரம்பின குறை;

ஆர்த்தன மறை ஆடினர் பலர்
போர்த்தன துகள், [6]பொழிந்தனர் மலர்;

ஆங்கனந் தோன்றிய வடுபோர் வென்றியின்
வீங்கிருந் தொடித்தோள் விடலை நினக்கே
யாமறி யளவையிற் றமிழ்புனைந் [7]தேத்துகம்
[8]நின்னீ தக்க தாயினு நின்னெதிர்
நானில மாதல் வேண்டும் யாணர்த்

---

[1]ஆங்கு. [2]சேராதவுணர் தூடங்கிப். [3]எரிசிறகொடுமிகை தபவரு மணிமயில், [4]பெருகிய. [5]சிலகுறள். [6]பொழிந்தன. [7]தேத்துதல். [8]நனிதக்க,

கடம்புங் களிமயிற் பீலியுந் தடஞ்சுனை
நீரொடு [1]நின்வயி னமர்ந்த
வாராப் புலமை வருகமா ரெமக்கே.

101. பூவார் பொய்கைப் பொற்போதிற்
றேவார் செங்கட் சேயாரீ
யாவா வென்னு தென்னேசூர்
மாவா னூனைக் கொன்றுயே.

கதிர்காமம்.

102. மணியுமிழ்ந்து மாமலைமேன் மேய்வனவு நாகம்
மடவா லார்கொய்ய மலர்வனவு நாகம்
பிணியவிழ்ந்து நன்னளாற் பூப்பனவும் வேங்கை
பிறங்கன்மாத் தொலைத்தவற்றான் றுய்ப்பனவும் வேங்கை
[2]இறைக்காசா னெம்மருளா மாலையு மாலை
யெமக்கினிதா யாமவனைச் சூட்டுவது மாலை
நிறைகாய்த்தி நெஞ்சஞ்சச் சுடுவதுவுங் காமம்
நிலங்காக்குஞ் சேவய்த னெடுநகருங் காமம்.

(கதிர்காமத்துவேலரீமுன் பாம்பை மயில் விடப் பாடியது.)

103. தாயரவை மூன்வருத்துஞ் சந்திரோ தயந்தனக்குன்
வாயரவை விட்டுவிட மாட்டாயோ—தீயரவைச்
சீறு மயிற்பெருமா டென்கதிர்கா மப்பெருமாள்
ஏறு மயிற்பெருமா ளே.

திருமால், முருகன், ஐயனார்.

104. பொற்றாணில் வந்தசுடர் பொய்கை பயந்த வண்ணல்
சிற்றுயன் மூன்வனிதை யாகி யளித்த செம்மல்
மற்றியார்கொ லென்னின் மலர்தூவி வணங்கி நாளுங்
கற்றூர் பரவுங் கருகாரி நகாரி காரி

சிவபிரான், திருமால், துர்க்கை.

105. கண்ணுதலோன் காப்பக் கடிநேமி யோன்காப்ப
எண்ணிருதோ ளேந்திழையா டான்காப்பப்—பண்ணியனூற்
சென்னியர்க் களிக்குந் தெய்வமீ
மன்னுக நாளுமிம் மண்மிசை யாரனை.

---

[1]நின்வயின் மார்த்த, நின்வயின் மார்நர். (101) யாப். வி. 94; (102) அடி 87. [2]இறைக்காச்சா. (103) தமிழ் நா. 145; (104) தண்டி. 95. (105) செர். தொ. 6. பக். 583.

திருமகள்.

106. நெய்யொடு [1]நிரியொக்கச்
[2]செய்யாளைச் சேர்வார்க்குப்
பொய்யாத வுள்ளமே
மெய்யாதல் வேண்டுமே.

கர்சி உமாதேவி.

107. தொல்லை மறைதேர் துணைவன்பால் யாண்டுவரை
எல்லை யிருநாழி நெற்கொண்டோர்—மெல்லியலாள்
ஓங்குலகில் வாழு முயிரனைத்து மூட்டுமால்
எங்கொலிதீர்க் [3]காஞ்சி யிடை.

பகவதி.

108. மலையு மலைபு மகிழ்ந்துறையும் வேயுங்
கலையுங் கலையுங் கடவுந்—தொலைவில்
அமரி யெமக்கரணு மென்னுமவர் முன்னிற்
குமரி குமரிமேற் கொண்டு.

109. அளவே வடிவொப்ப தன்றியே பச்சை
யிளவேய் நிறத்தாலு மேய்க்குந்—துளவேய்
கலைக்குமரி போர்துளக்குங் காரவுணர் வீரந்
தொலைக்குமரி யேறுகைப்பா டோள்.

(நீலவெளிவிருத்தம்.)

110. சேயரி நாட்டமுஞ் செவ்வாயு மல்குலுமோ—அம்மானுய்
ஆய்மலருந் தொண்டையு மாழியந் திண்டோளும்—அம்மானுய்
மாயிருந் தானை மயிடன் றலையின்மேல்—அம்மானுய்
பாயினை றடிப் பாவை பகவதிக்கே—அம்மானுய்.

(கலிப்பாவகை.)

111. மழைதுழைந்து புறப்பட்ட மதியமு ஞாயிறும் போல்
[4]உழைமுழங்கு வலம்புரியுந் திகிரியு மொளிசிறப்பப்

---

(106) தொல். செய். 149 பேரா. நச். [1]நி யொக்க. [2]செய்யாளைச். (107) வீரசோ. அலங். 31; தண்டி. 77 உரை. [3]கச்சிபிடம். (108) தண்டி. 93 உரை. (109) ஷெ. 30 (110) யாப். வி. 68. (111) தொல். செய். 149 பேரா; நச். [4]உழைவழங்கு.

[1]பச்சென்ன வானிட்ட வில்லேபோற் பசுந்துழாய்
கச்சென்னக் கன்ல்கின்ற கவின்முலைமேற் கவின்செய்ய
அம்மேகத் திடைப்பிறந்த நரையுருமே றதிசயிப்ப
மைம்மேனி மருங்கதிர [2]வரியேறு வால்புடைப்ப
விண்டோயு மணிநீல [3]வெற்பினிடை வேய் நிடைந்தாங்
கெண்டோளுங் மிடுநீழ லிளங்கிளிகள் களிகூரக்
கொதியாது கொதித்தெதிர்ந்த கோட்டெருமைத் தலையின்மிசை
மிதியாத சீறடி மிதித்தன போற்ரேன்றத்
தாங்கிய புகர்வாளுங் கேடகமுந் தனித்தனி
வாங்கிய கோளரவு மதியமும் போன்றிலங்க
மைதொடுத்த கடற்புறஞ்சூழ் மலையென்ன மணியல்குல்
கொய்துடுத்த பொற்றுகிலின் கொழுஞ்சோதி கொழுந்தோட்ட
நீனின்ற படிவத்தா னெடியோனே முதற்பயந்த
தாயென்று முதுமறை பரவினும்
யாயென் றல்ல தியாந்துணி யலமே.

(வண்ணகவோத்தாழிசைக் கலிப்பா.)

112. கல்லின்மே ஞறிய கனபவளக் கொடியேய்ப்பக்
கொல்சின மதவெருமைத் தலையொதுங்கி மற்றதன்
சில்குருதி சீறடிமேற் சிலம்போடு கழனனைப்ப
விளங்குபொன் னெடுவரைமேல் வெய்துறுமி யெழுந்தாங்குத்
துனங்காச்சிர்ப் படையோடுந் தொழிலோடும் பொலிந்தோடக்
களங்கொண்டு முடியுகைத்த கலமானேற் றூர்தியோய்! (தாவு)

பெருந்தகைமை பிறிதொழியப் பிடிக்கோடுங் களிறேபோல்
அருஞ்சமத்து நினக்குடைந்த வவுணரை நினைக்குங்காற்
கரும்புருவ நுதல்வியர்ப்பக் கச்சிஞல் விசித்தநின்
மருங்குல தளவெண்ணின் மாயமும் போலுமே ;

பேழ்வாய விறற்கூளி பின்ஞர்ப்ப முன்சென்று
வீழ்வாயா னீயெறிந்த வீரரை நினைக்குங்காற்
கேழ்கிள ரவிர்மூன்கைக் கிளியிருப்ப வெடுக்கில்லா
மாழைமை காணுங்கான் மம்மரும் போலுமே ;

வாளுற மூயர்விசும்பின் வாய்மடித்து விறற்சுட்டித்
தாள்சோர நினக்குடைந்த தானவரை நினைக்குங்காற

---

[1]வானிட்ட வில்லேபோற் பசுந்துழாய் பச்சென்னக்-காணின்று கனல்கின்ற கதிர்முலைமேற் கவின்செய்ய. [2]நகத்தரியே. [3]வெற்பிடை (112) யாப். வி. 84.

பூஎயார்ந் தெழிலெய்தப் பொறியணை புரையுங்கின்
தோளின தளவெண்ணிற் ரேற்ருரும் [1]போலுமே (தாழிசை)

எனவாங்கு ; (தனிச்சொல்)

கடிகமழ் பூங்குலைக் கலங்கிருந் தடுப்பிற்
காராராக் காந்தண்முகை வென்றன விரல் ;
விரலுற விரித்தமைத்து விசும்புதை வந்து
மூலையொடு முத்தொடு மாறின பந்து;
பந்தவிழ் பணிச்சென்னி கையற் றெரீஇய?
அசோகி னந்தளி ரணியியற்ற வணிகொண்டது நுதல் ;
நுதலிவர் கதுப்புக் குதவியபொன் களுவின மணி ;
மணிமகர முருவாக நிகரொத்தன முத்து;[2] (அராகம்)

அரியொண்க ணம்பிற் பிறழும் வரியல்குல்
வண்டிருப் பன்ன தகைத்து;
கூழை புறமுறத் தாழ்ந்தன வாழை
வருமுகி ழேய்க்கு மூலை; (பேரெண்)

பெருமட மான்பிணை வென்றது நோக்கு ;
சிறுமருங்குற் கொல்கின மூல்லைக் கொடி; (சிற்றெண்)

படுமணி படுமொருகை; பைங்கிளி யதுவொருகை;
வடிநுதி வேலொருகை; வாள்கொண்ட தகைத்தொருகை;
சேடகத்தாற் சேடொருகை; சிலைசேர்ந்த தொழிற்ரேருகை;
(இடையெண்)

கோடொருகை ; இயமொருகை ; (அளவெண்)

எனவாங்கு; (தனிச்சொல்)

இருபாற் பட்டகின் னிணையடி பாவுதும்
ஒருபாற் பட்டெமக் கருளுவோ யெனவே. (சுரிதகம்)

113. மூவிலை நெடுவே லாதி வானவன்
இடமருங் கொளிக்கு மிமயக் கிழவி
தனிக்கண் விளங்கு நுதற்பிறை மேலோர்
மிகைப்பிறை கதுப்பிற் சூடி வளைக்கையின்
வாள்பிடித் தாளி யேறித் தானவன்
மாளக் கடிம்போர் கடந்த குமரி

---

[1]போலாமே. [2]முத்துருகைக் கதிர்மின்னுக. வவிர்துகிலிடைப்பூங்கண்ணி னுக்கு? என்பது இதன் அடுத்த அடி. (113) ஆசிரியமாலை (புறத்திரட்டு).

மூவா மெல்லடித் திருநிழல்
வாழி காக்கவிம் மலர்தலை யுலகே.

கண்ணுடையம்மையருளால் அவித்த நெல்முளைப்பதைப்பற்றிய வெண்பா.

114. கண்ணுடைய தாய்மகிமை காசினியோ ரிவ்வளவென்
றெண்ணுடைய தாய்மதிக்க வேலாது—மண்ணுடைய
புன்மூலைக்க வெத்தனைநாட் போதுமுட னேயவித்த
நென்மூளைத்தல் சால நிசம்.

நாமகள்.

115. தவளத் தாமரைத் தாதார் கோயி
லவளைப் போற்றுது மருந்தமிழ் குறித்தே.

116. என்னே யுடையாள் கலைமடந்தை யெவ்வுயிர்க்கும்
அன்னே யுடைய வடித்தளிர்கள்—இன்னளிசூழ்
மென்மலர்க்கே தங்கு மெனவுரைப்பர் மெய்யிலா
வன்மனத்தே தங்குமோ வந்து.

117. இமயவர்கண் மோலி யிணைமலர்த்தாள் சூடச்
சமயந் தொறுநின்ற தையல்—சமய
மலைமடந்தை வாச மலர்மடந்தை யெண்ணெண்
கலைமடந்தை நாவலோர் கண்.

118. பொத்தகமு ஞானத்து முத்திரையும் பொற்பளிங்கும்
வைத்த கமண்டலமும் வன்னிகையும்—முத்து
வடங்கொண்ட பூண்முலையாள் வந்திதன் மனத்தே
யிடங்கொண்டா னீங்கிற் றிடர்.

(கம்பர்வாக்கு.)

119. ஆய கலைக ளறுபத்து நான்கினையும்
வெ வுணர்விக்கு மென்னம்மை—நூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

120. படிக நிறமும் பவளச் செவ்வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையுந்—துடியிடையும்
அல்லும் பகலு மனவாத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாமோ கவி.

---

(114) செந்தமிழ்த்தொகுதி ஈரு. பக். சுகூ. (116) தண்டி. காப்பு. (117) தண்டி. 19 உரை. (118) பாரதம் (மிபூ. காட். II, 502).

(காளமேகப்புலவர் பாட்டு.)

121. வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம் வைத்த தாய்.

சூரியபகவான்.

122. முன்னங் குடைபோன் முடிநா யகமணிபோன்
மன்னுந் திலகம்போல் வாளிரவி—பொன்னகலந்
தங்குங் கவுத்துவம்போ லுந்தித் தடமலர்போல்
அங்க ணுலகளந்தார்க் காம்.

123. மேகத்தான் வெற்பா னிமையான் விழுப்பனியான்
நாகத்தா னீமறைய நாட்கதிரே—யோகத்தாற்
காணுதார் நின்னை [1]நிலையாமை கட்டுரைப்பர்
நாணுத கண்ணினைனக்கு நல்கு.

(கோச்சகவொருபோது.)

124. தடங்கடற் பூத்த தாமரை மலராகி
அடங்காத முரற்சியா னருமறை வண்டிசைப்ப
ஆயிர வாராழி யவிரிதழின் வெளிப்பட்ட
[2]சேயித ழெனத்தோன்றுஞ் [3]செழும்பகலி னிரவகற்றிப்
[4]படுபனிப் பகைநீங்கப் பருவத்து மழையானே
நெடுநிலங் குளிர்கூர நீர்மைசா னிழலுறி
அண்டங்கள் பலபயந்த வயன்முதலா மிமையோரைக்
கொண்டங்கு வெளிப்படுத்த கொள்கையை யாகலின்
ஓங்குயர் [5]பருதியஞ் செல்வனின்
நீங்கா வுள்ள நீங்கன்மா ரெமக்கே.

(பெருந்தேவபாணிவகை.)

125. ஆயிரங் கதிராழி யொருபுறந்தோன் றுகலத்தான்
மாயிருந் திசைசூழ வருகின்ற வரவுணர்த்த
மனக்கமல மலரினையு மலர்த்துவான் முனைதல்

---

(122) தண்டி. 40 உரை. (123) தொல் புறத். 33. [1]யலையாமை (124) தொல். செய். 150 பேரா; நச். [2]சேயிழை. [3]செம்பகலி. [4]படுவகைப் பனிப் பகை நீங்கப் பருவத்து—விடுமழை மறுத்திடினு மென்மலரின் மதுமழையால். [5]பருதிச். (125) தொல். செய். 146 பேரா; நச்.

இனக்கமல முணர்த்துவபோன் றெவ்வாயும் வாய்திறப்பக்
[1]குடதிசையின் மறைவதூஉ மறையென்று கொள்ளாமைக்
[2]கடவுளர்த முறங்காத கண்மலரே காரிபோக
ஆரிருளும் புலப்படுப்பா னவனேயென் றுலகறியப்
[3]பாரகலத் திருள்பருகும் பருதியஞ் செல்வகேள்! (தரவு)

மண்டலத்தி னிடைநின்று வாங்குவார் வைப்பாராய்
விண்டலத்திற் கடவுளரை வெவ்வேறு வழிபடுவார்
ஒங்குலக [4]முழுதுபோர்த் திருவுருவி னொன்றுகி
ஆங்கவரை வேறுவே றளித்தியென் றறியாரால்;

மின்னுருவத் தாரகைநீ வெளிப்பட்ட விடியல்வாய்
மின்னுருவத் தொடுங்குதலா னெடுவிசும்பிற் காணுதார்
எம்மினுங் காலுவா யிடைக்கரந்து மாலுவாய்
அம்மீனே வெளிப்படுப்பாய் நீயேயென் றறியாரால்;

தவாமதியந் [5]தொறுநிறைந்த தண்கலைக டலைத்தேய்ந்
தவாமதிய நின்னெடுவந் தொன்றுகு [6]மென்றுணார்
தண்மதியி [7]னின்னொளிபுக் கிருளகற்றுத் தவற்றுற்கால்
அம்மதியம் படைத்தாயு நீயேயென்றறியாரால்; (தாழிசை)

நீராகி நிலம்படைத்தனை; நெருப்பாகி நீர்பயந்தனை;
[8]வளியிற் காற்றெழுவினை; ஒளிகாட்டி வெளிகாட்டினை;
(இருசீர்நான்கு)

கருவாயினை, விடாயினை, கதியாயினை, விதியாயினை,
உருவாயினை, அருவாயினை, ஒன்றுயினை, பலவாயினை; (ஒருசீரெட்டு)

எனவாங்கு; (தனிச்சொல்)

விரிதிரைப் பெருங்கட லமிழ்தத் தன்ன
ஒருமுதற் கடவுணிற் பரவுதுந் திருவொடு
சுற்றந் தழீஇக் குற்ற நீக்கித்
துன்பந் தொடரா வின்ப மெய்திக்
கூற்றுத்தலை பனிக்கு மாற்றல் சான்று
கழிபெருஞ் சிறப்பின் வழிவழி பெருகி
நன்றறி புலவர் நாப்பண்
வென்றியொடு விளங்கி மிகுகம்யா மெனவே.

---

[1]குடதிசைக்கண். [2]கடவுளரே தம்முறங்காக். [3]பாருலகத். [4]முழுது பொரத் திருவுருவி. [5]தொறுநிறையத் தண்கலை யக்கலைதேய்ந். [6]மென்றுணர் வார். [7]னொளிபுக்கண். [8]ஊழொழியிற்.

சந்திபகவான்.

(வள்ளிவாழ்த்து.)

126. பிறைகாணுங் காலைத்தன் பேருருவ மெல்லாங்
குறைகாணு தியாங்கண்டு கொண்டு—மறைகாணு
தேய்ந்து வளர்ந்து பிறந்திறந்து செல்லுமென்
றாய்ந்தது நன்மாயை யாம்.

(தேவபாணி.)

127. குரைகடன் மதிக்கு மதலையை குறுமுய லொளிக்கு மரணினை
யிரவிரு ளகற்று நிலவினை யிறையவன் முடித்த வணியினை
கரியவன் மனத்தி னுதிதனை கயிரவ மலர்த்து மவுணனை
பாவுநர் தமக்கு நினதிரு பதமலர் தபுக்க வினையையே.

நாற்றிசையதிபர்.

128. தெற்குக் குடக்கு வடக்குக் குணக்குமேல்
நிற்குந் திறத்துலகை நீடளிக்கும்—பொற்பினர்
ஈரொண் கலேயான் வருண னிரவியமன்
யாரும் புகழியல்பி னர்.

129. குடபால் வடபால் குணபாறென் பாலென்
றடைவே திசைநான் கவற்றுள்—இடையிரண்டு
நன்மைபுரி வோர்பயந்து நோக்குப வேனைய,
வன்மை புரிவோர்க்கே யாம்.

அருகக்கடவுள்.

130. மண்டித் தமொறும் வாழ்விழந்தேன் மாதயரப்
பண்டைப் பழவினைநோய் பற்றறுத்தேன்—பிண்டித்
திருமாலை முக்குடைக்கீழ்த் தேவாதி தேவர்
பெருமானை யானடைந்த பின்.

---

(126) தொல். புறத். 33. (127) லெப். 6. 37. (128) தண்டி. 106 உரை. (129) வே. 107 உரை. (130) மியூ. காட்.

(வெண்டாழிசைவகை.)

131. போதார் நறும்பிண்டிப் பொன்னூர் [1]மணியணையான்
தாதார் மலரடியைத் தணவாது வணங்குவார்
தீதார் வினைகெடுப்பார் [2]சிறந்து.

(வெண்கலிப்பாவகை.)

132. நாகிளம்பூம் பிண்டிக்கீழ் நான்முகனுய் வானிறைஞ்ச
மாகதஞ்சேர் வாய்மொழியான் [3]மாதவர்க்கு மல்லார்க்கும்
தீதகல வெடுத்துரைத்தான் சேவடிசென் றடைந்தார்க்கு
மாதுயரந் தீர்த லெளிது.

(கலிவெண்பாவகை.)

133. பண்கொண்ட வரிவண்டம் பொறிக்குயிலும் பயில்வாஞை
விண்கொண்ட வசோகின்கீழ் விழுமியோர் பெருமானைக்
கண்ணாலு மனத்தாலு மொழியாலும் பயில்வார்கள்
விண்ணாளும் வேந்தரா வார்.

134. அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிக ழுவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறப் பவரே.

135. போது சாந்தம் பொற்ப வேந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வோரே.

136. சேயஞ் சுமந்த மாசறு மணியணை
மேய வுரவோன் சேவடி
வாயின் வாழ்த்த வாணுல கெளிதே.

137. நலைக்கணம் வீய நன்னூ லாய்ந்து
சேட்டலர் விராய மோட்டார் பிண்டி
நன்னிழன் மேயோன் சேவடி
துன்னினர் துன்னலர் துகட்டிரும் [4]பிறப்பே.

138. உலகுடன் விளக்கு மொளிகிள ரவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு மூக்குடை

---

(131) யாப். வி. 66: [1]மணிபணிப்புணல். [2]சென்று. (132, 133) அடி 85 [3]வாசவர்க்கு. (134) அடி. 8. யாப்.கா. உறுப்.5; இலக். வி. 714. (135) அடி 63; யாப். கா. உறுப். 5. இலக். வி. 714. (136) அடி. 11. (137) அடி. 95. [4]பிறப்பதே. (138) அடி. 52; யாப். கா. இலக். வி.

மூக்குடை நீழற் பொற்புடை யாசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி யறிவனே
யறிவுசே ருள்ளமொ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்த ரென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே.

(சித்திரக்கா).

139. ஒருதிரட் பிண்டிப் பொன்னெயின் மூன்றின்
ஈரறம் பயந்த நான்முக வண்ணல்
மூவகை யுலகிற்கு மொருபெருங் கடவுள்
நால்வகை யோனியு ளிருவினை கடிந்து
மும்நெறி பயந்த செந்நெறி யொருவன்
நால்வகை யளவையு மிருவகைப் பண்பும்
ஒன்ற வுரைத்த மூக்குடைச் செல்வன்
ஈரடி பரவின ரென்ப
பேரா [1]நன்னெறி பெறுகிற் போரே.

(எழுகூற்றிருக்கை.)

140. ஒருபொருட் கிருதுணி புரைத்தனை யொருகால்
இருபிறப் பாளர்க்கு மூவமிழ் தாக்கி
ஈரறம் பயந்த வோரரு ளாழியை
இருமலர் நெடுங்க ணாரிவையர் தம்மொடு
மூவகை யுலகி னுல்வகைத் தேவரும்
மும்மையி னிறைஞ்சு மீரடி யொருவனை
இருவினை பிரித்து மூவெயின் முருக்கி
நாற்கதி தவிர்த்த வைங்கதித் தலைவ
நான்மறை யாள மும்மதிற் கிழவ
இருகுண மொருமையிற் றெரிவுறக் கிளந்த
இருசுடர் மருட்டு மூக்குடைச் செல்வ
நால்வகை வருணமு மமவகைக் குலனும்
மாறறி மாந்தர்க் கறிவுற வகுத்தனை
ஐங்கிற மும்மலர் முன்னுற வேந்தி
நாற்பெரும் படையொடு மும்முறை வலங்கொண்
டிருகையுங் கூப்பி யொருமையின் வணங்கி
அரசர் நெருக்குறூஉ மூரசுமுழங்கு முற்றத்

(139, 140) யாப். வி. 96. [1]நானெறி,

திருநிதிப் பிறங்கலொ டிமையவர் சொரிதலின்
முருகயர் வுயிர்க்கு மும்மலர் மாரியை
நால்வகை யனந்தமு நயந்தனை தேவரின்
ஐவகை விழவு மையற வெய்தினை
ஆறுபுரி நிலையுந் தேறினர்க் கியம்பினை
எழுநயம் விரித்த திருமறு மார்பினை
அறுபொரு ளறைந்தனை யெம்பத மருளினை
நான்குநின் முகமே மூன்றுநின் கண்ணே
இரண்டுநின் கவரி யொன்றுநின் னசோகே
ஒருதன்மையை யிருகிறத்தினை
மூக்குணத்தினை நால்வகையினை
ஐம்பதத்தினை யறுபிறவியை
ழகற்றிய மாதவத்தினை
அரிமருவிய மணியணையினை
வளர்கதிரொளி மண்டலத்தினை
அதனுல்,
மாகெழு நீழற் கேவலந் தோற்றிய·
ஆதியங் குரிசினிற் பரவுதும்
தீதறு சிவகதி சேர்கயா மெனவே.

(கூடசதுர்த்தம்.)

141. கருமால் வினைகள்கை யேறிச் செடிசெய்து காறடப்பே
யருமா நிரயத் தழுந்துதற் கஞ்சியஞ் சோதிவளர்
பெருமான் மதிதெறு முக்குடை நீழற் பிணியொழிக்குந்
திருமா றிருந்தடிக் காளா யொழிந்தகதன் சிந்தனையே.

142. செருவிளை வைவேற் றிகழொளி வேந்தர் திருமுடிமே
லுருவிளை யொண்பொ துறுநின பாதங் குறைவறியாக்
கருவிளை யாட்டுங் கவினுடை வாட்கட் கனிபுரைவாய்த
திருவிளை யாடுங் கனவரை யாகச் சினவரனே.

143. மூரன்று சென்று வட்டின
நிரந்த பிண்டி நீழலுள்
பரந்த சோதி நாதனெம்
அரந்தை தீர்க்கு மண்ணலே.

(141) யாப. வி. 96. (142, 143) ஷே. 95.

144. கயற்கருங்க ணங்கலார்
முயக்கநீங்கி மொய்ம்மலர்
புயற்புரிந்த புண்ணியர்க்
கியற்றுமின்க ளீரமே.

145. பொங்கு சாமரை தாம்வீசச்
சிங்க பீட மமர்ந்தவெங்
கொங்கு சேர்குளிர் பூம்பிண்டிச்
செங்க ணுனடி சேர்மினே.

146. போது விண்ட புண்ட ரீக
மாத சோடு வைக வேண்டின்
ஆதி நாத ராய்ந்த நூலின்
நீதி யோதி நன்மி னீடு.

147. வினையைத் தான்மிடைந் தோட்டிநீர்
அனகத் தானருள் காண்குறிற்
கனகத் தாமரைப் பூவிசைச்
சினனைச் சிந்திமின் செவ்வனே.

148. உலக மூன்று மொருங்குட னேத்துமாண்
டிலக மாய திறலறி வன்னடி
வழுவி னெஞ்சொடு வாலிதி னுற்றவும்
தொழுவ ரெல்வினை நீங்குக வென்றியான்.

149. ஆதி யானற வாழியி னுனலர்ச்
சோதி யான்சொரி பூமழை யான்வினைக்
காதி வென்ற பிரானவன் பாதமே
நீதியா னினை வாழிய நெஞ்சமே.

150. பொதுறு முக்குடைப் பொன்னெயி லொருவ.
தாதுறு தாமரை யடியினை பணிந்தார்
தாதுறு தாமரை யடியினை பணிந்தார்
நீதுறு நிலனை யிலரே.

151. தூங்குக் கனகச் சோதி வளாகத்
தங்கப் பெருமா லாதியை யாளும்
செங்கட் சினவேள் சேவடி சேர்வார்
தங்கட் கமருந் தண்கட வுலகே.

(144–147) யாப். வி 95. (148) மேற். 37. (149) மயி. 95. (150) மேற். 76. (151) மயி. 95.

152. முருகவிழ்தா மரைமலர்மேன் முடியிமையோர் புடைவரவே
வருகினஞ ருமறைநூல் வழிபிழையா மனமுடையார்
இருவினைபோய் விழமுறியா வெதிரியகா தியையெறியா
நிருமலரா யருவினராய் நிலவுவர்சோ தியினிடையே.

153. இந்திரர்க ளேத்துமடி யீண்டுயிர்க ளோம்புமடி
வெந்திறல் ஞாயிற்றெழில் வீவிலொளி வெல்லுமடி
மந்திரத்தி னேதுமடி மாதுயரந் தீர்க்குமடி
யந்தரத்தி னுயவிதழ்த் தாமரையி னங்கணடி.

154. கொடிகொடியொடு மிடைவனவுள குடைகுடையொடு குடைமிசை
கடிநறுமலர் சொரிவனவுள கடிமதிலுள கவரியுமுள [யுள
அடிவழிபடு மமரருமுள ருளகழி யொ டரியணையுள
இடிமுரசமு மதிர்வனவுள வினிதினிதவ ரதுதுறவுமே.

155. பிணியார் பிறவிக் கடலுட் பிறவா வகைநா மறியப்
பணியாய் மணியா ரணிமேற் படிவா யொரு மூவுலகுங்
கணியா துணருங் கவிஞர் கலைமா மடவாள் கணவா
அணியார் கமலத் தலரா சனனே யறவா ழியனே.

156. திருகிய புரிகுழ லரிவைய ரவொடு
திகழொளி யிமையவரும்
பெருகிய கரிகுல மருவிய படையொடு
பிரிதலி லரசவையும்
முருகுடை மலரொடு வழிபட முனிகளை
நனியக லாவருக ண
திருவடி முறைமுறை யடைபவ ரடைகுவ
ரமரொளி யமருலகே.

157. கரிமருவு கடிமதிலி னிலிகொடிக டிசைதடவு கடிமை யினதாய்த்
திருமருவு பெருவிழவொ டமரர்குழு வொழுகுதொழு செழுமை வழுவா
தருமரபி னரபதிக ளணிகிளரு மணிமகுட மூற மறுவிலாக்
குருமருவு விரிகமல சரணநனி பணிவர்மலி குருசி னகரே.

158. அழலணங்கு தாமரை யருளாழி புடையகோ னடிக்கீழ்ச் சேர்ந்து
நிழலணங்கு முருகுபிர்த்து நிரந்தலர்ந்து தோடேந்தி நிழற்றும் போலும்
நிழலணங்கு முருகுபிர்த்து நிரந்தலர்ந்து தோடேந்தி நிழற்று மாயிற்
றெழலணங்கு மன்புடையார் சூழொளியும் வீழ்கரியுஞ் சொல்லா வன் [றே.

(152) யாப. வி. 78; யாப். கா. (153) வெ. 89. (154-5) வெ. 94. (156-7) வெ. 95. (158) சிலப். 7. பக. 205.

159. கங்கணக்கைப் பைந்தார்க் கனைகழற்காற்
கருவரைபோ னீண்டமார்பிற் காமர்கோலம்
பொங்கிய சாமரை பொற்ப வேந்திப்
புடைநின் றியக்கர்கள் போற்றி வீசச்
சிங்கஞ் சுமந்துயர்ந்த வாசனத்தின்மேற்
சிவகதிக்கு வேந்தாகித் தேவ ரேத்த
அங்கம் பயந்த வறிவனுகிய வறப்படைமூன்
றுய்ந்தானடி யடைவா மன்றே.

160. படையொன்று மில்லை யணியில்லை சுற்ற
மதுவில்லை பற்று மினியொன்
றடைகின்ற தில்லை யமிழ்துண்ட தில்லை
யறிவொன்று மெண்ணி யறியார்
புடைநின்று நான்ற மணிமாலை போக
நிலவீசு மாக முறுநீள்
குடையொன்ற தொன்று மதன்மேல தொன்று
மூடையார்க்கி தென்ன குணனே.

161. சோதி மண்டலந் தோன்றுவ துளதேற்
சொரியு மாமலர்த் தூமழை யுளதேற்
காதி வென்றதொர் காட்சிபு முளதேற்
கவரி மாருதங் கால்வன வுளவேற்
பாத பங்கயஞ் சேர்ந்தரு முளரேற்
பரம கீதமும் பாடுந ருளரேல்
ஆதி மாதவர் தாமரு குளரேல்
அவரை யேதெரிந் தாட்படு மனனே.

162. கடுநாக மதனடக்கி நெடுநீர்ப் பொய்கைக்
கடிமலர் வேய்ந் துலகளவும் பரந்துகந்த
நெடுமாலை நறுமுடிமேல் வைத்தி யேனு
நின்னையே போனயக்க நின்ரு செல்லாம்
கொடுமாலை வினையரக்கர் குறும்பு சாயக்
குளிரிளம்பூம் பிண்டிக்கீ ழமர்ந்த கோமான்
தடுமாற்றந் தலைப்பிரிக்குஞ் சரண மல்லாற்
றலைக்கணியா ளென்றுரைத்த றகவோ வாழி.

163. கொங்கு தங்கு கோதை யோதி மாதரோடு கூடி நீடு மோடை நெற்றி
வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத நாத மென்று நின்று தாழ

(159) யாப்.வி. 95. (160) ஷை 77. (161) யாப். வி. 95. (162) ஷை.53.

அங்க பூர்வ மாதி யாய வாதி நூலி னீதி யோது மாதி யாய [னே.
செங்கண் மாலை மாலை[1] காலைசேர்நர் சேர்வர் சோதி சேர்ந்த சித்தி தா

164. அனவரத மமர ரரிவையரொ டணுகி யகனமரு முவகை
யதுவிதியி னவர வணிதிகழ வருவ ரொருபால்
கனவரையொ டிகலு மகலமொளி கலவ காகமல நிலவு
கனகமுடி கவினு கழலரசர் தழனி யொருபால்
தனவரத நளின சரணநனி பரவு தகவுடைய முனிக
தரணிதொழ வழுவி றருமநெறி மொழிவ ரொருபால்
சினவரன பெருமை தெரியினிலை யவன திருவிரவு கிளவி
தெளிரு மொழியளவு சிவபுரம தடைத றிடனே.

(நேரிசையொத்தாழிசைக் கலிப்பா.)

165. முத்தொடு மணிதயங்கு முக்குடைக்கீழ் முனிவனுய்
எத்திசையும் பல்லுயிர்க ளின்புற வினிதிருந்து
பத்துறு [2]காவதம் பகைபசி பிணிநீங்க
உத்தமர்க டொழுதேத்த [3]வொளிர்வரைபோற் செவ்வியோய்! (தரவு)

எள்ளனைத்து மிடரின்றி யெழின்மாண்ட பொன்னெயிலின்
உள்ளிருந்த வுன்னையே [4]யுறுதுணையென் றடைந்தோரை
வெள்ளில்சேர் வியன்காட்டு ளுறைகென்றல் விழுமிதோ ;

குணங்களின் வரம்பிகந்து கூடிய பன்னிரண்டு
கணங்களும்வந் தடியேத்தக் காதலித்துன் னடைந்தோரைப்
பிணம்பிறங்கு பெருங்காட்டு ளுறைகென்றல் பெருமையோ;

விடத்தகைய வினைநீக்கி வெள்வளைக்கைச் செந்துவர்வாய்
மடத்தகைய மயிலனையார் வணங்கநின் னடைந்தோரைத்
தடத்தகைய காடுறைக வென்பதுகின் தகுதியோ. (தாழிசை)

எனவாங்கு (தனிச்சொல்)

[5]எனைத்துணையை யாயினு மாகமற் றுன்கட்
டினைத்துணையுந் தீயவை யின்மையிற் சேர்தும்
வினைத்தொகையை வீட்டுக வென்று. (சுரிதகம்)

(அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பாவகை.)

166. அலைகடற் கதிர்முத்த மணிவயிர மலையணிந்து
மலையுறைமா சுமந்தேத்து மணியணைமேன் மகிழ்வெய்தி

---

(163)யாப். வி. 25; யாப். கா. உறுப். 13; இலக்.வி. [1]காலை மாலை சென்று. (164) ஷே. 94. (165) ஷே. 82. இலக். வி. 738 [2]திசையனைத்தும். [3]ஒளிவரை செலவினெய். [4]உயிர்த்துணையென் [5]அனைத்துணை. (166) யாப். வி. 83.

யோசனைசூழ் கிருஞகரு ளுலகொருமூன் றுடனேத்த
ஈசனையா மினிதமர்ந்தங் கிருடிகட்கு மிறையவர்க்கும்
அருளறமே யறமாக வயலார்கண் மயலாக
இருளறநன் கெடுத்தியம்பி யிருவினைகள் கடிந்திசினெப்! (தரவு)

துன்னுத வினைப்பகையைத் துணிசெய்யுந் துணிவினையாய்
இன்னுத பகைமுனைபோ லெரித்தடக்கு நினைப்பினுல்
இருளில்லா வுணர்வென்னு மிலங்கொளியா லெரித்தனையாய்
அருளெல்லா மடைந்தெங்க ணருளுவதுன் னருளாமோ ;

மதிபுரைமுக் குடைநீழன் மகிழ்வெய்தி யடைந்தோரைக்
கதிபொருதக் கதிர்வரைமேற் கதிர்பொருத முகம்வைத்துக்
கொன்முனைபோல் வினைநீங்கக் குளிர்நிழற்கண் மகிழ்ந்தனிர்போல்
நின்மினீ ரெனவுரைத்தல் நிருமலநின் பெருமையோ;

மனைதுறந்து வனம்புகுமின் மலமறுக்க லுறுவீரேல்
வினையறுக்க லுறுவார்க்கு விழுச்செல்வம் பழுதென்றிங்
கலகில்லாப் பெருஞ்செல்வத் தமராசர் புடைசூழ
உலகெல்லா முடன்றுறவா வுடைமையுநின் னுயர்வாமோ; (தாழிசை)

அரசரு மமரரு மடிநிழ லமர்தர
முரசதி ரிமிழிசை முரணிய மொழியினை; (அராகம்)

அணிகிள ரவிர்மதி யழகெழி லவிர்சுடர்
மணியொளி மலமறு கனலி நின்னிறம்;
மழையது மலியொலி மலிசட லலையொலி
முழையுறை யரியது முழக்க நின்மொழி; (பேரெண்)

வெலற்கரும் வினைப்பகை வேரொடும் வென்றனை;
சொலற்கரு மெய்ப்பொருண் முழுவதுஞ் சொல்லினை;
அருவினை வெல்பவர்க் கரும்புனை யாயினை;
ஒருவனை யாகி யுலகுட னுணர்ந்தனை; (இடையெண்)

உலகுட னுணர்ந்தனை; உயிர்முழு தோம்பினை;
நிலவுறழ் நிறத்தினை; நிழலிய லிபாக்கையை;
மாதவர் தாதையை; மலர்மிசை மகிழ்ந்தனை;
போதிவர் பிண்டியை; புலவருட் புலவனை; (சிற்றெண்)

எனவாங்கு; (தனிச்சொல்)

அருளுடை யொருவனிற் பரவுது மெங்கோன்
இருளறு நிகிரியொடு வலம்புரித் தடக்கை
ஒருவனை வேண்ட விருநிறம் பொதித்த

நந்தி மால்வரைச் சிலம்ப னந்தி
ஒற்றைச் செங்கோ லோச்சிக்
கொற்ற வெண்குடை நிழற்றுக வெனவே. (சுரிதகம்)

167. பிறப்பென்னும் பிணிநீங்கப் பிரிவரிய வினைக்கடலை
அறப்புணையே புணையாக மறுகரைபோய்க் கரையேறி
இறப்பிலநின் னருள்புரிந்தாங் கெமக்கெல்லா மருளினையாய்
மறவாழி யொளிமழுங்க மனையவர்க்கு மூனையவர்க்கும்
அறவாழி வலனுயரி யருணெறியே யருளியோய்! (தாவு)

அருளெல்லா மகத்தடக்கி யடிநிழலை யடைந்தோர்க்குப்
பொருளெல்லா நீவிளங்கப் புகரில்லா வகையினால்
இருளில்லா [1]வியன்ஞான மியம்புவதுன் னியலாமோ;
தீதில்லா நயமுதலாத் திருந்தியநல் லவ்வைகளாற்
கோதில்லா வரும்பொருளைக் குறைவின்றி யறைந்ததற்பின்
பேதில்லா [2]வியற்காட்சி யருளியதுன் பெருமையோ ;
துணையில்லாப் பிறப்பிடைக்கட் டுயரெல்லா முடனகலப்
புணையில்லா வுயிர்கட்குப் பொருளில்லா வருளினால்
இணையில்லா [3]வியலொழுக்க மிசைத்ததுநின் னிறைமையோ.
(தாழிசை)

அருள்புரி திருமொழி யமரரு மரசரு
மருள்வரு மனிதரு மகிழ்வுற வியம்பினை ; (அராகம்)

பூமலர் தூதைந்த பொழிலணி கொழுநிழற் றேமல ரசோகினை ;
தூமலர் விசும்பின் விஞ்சையர் பொழியு மாமலர் மாரியை; (பேரெண்)

காமரு கதிர்மதி மூகத்தினை;
சாமரை யிடையிடை மகிழ்ந்தனை ;
தாமரை மலர்புரை யடியினை ;
தாமரை மலர்மிசை யொதுங்கினை ; (இடையெண்)

அறிவனை; அதிசயனீ, அருளினை, பொருளினை;
உறுவனை; உயர்வினை; உலகினை; அலகினை; (சிற்றெண்)
எனவாங்கு; (தனிச்சொல்)

இனையை யாதலின் மூனைவருண் மூனைவ
னினையுங் கால நின்னடி யடைதும்
ஞானமுங் காட்சியு மொழுக்கமு நிறைந்து
தன்னிய தினைத் தகவோர்
மன்னிய பொருளது முடிகவெமக் கெனவே. (சுரிதகம்)

---

(167) டாப். லி. 83. [1]நன்ஞானம். [2]நற்காட்சி. [3]நல்லொழுக்கம்.

168. நலங்கிளர் திருமணியு நன்பொன்னுங் குயின்றழகார்
இலங்கெயிற் றழலரிமா னெருத்தஞ்சே ரணையின்மேல்
இருபுடையு மியக்கரச ரிணைக்கவரி யெடுத்தெறிய
விரிதாமந் துயல்வரூஉம் வெண்குடைமூன் றுடனிழற்ற
வண்டரற்ற நாற்காதம் வகைமாண வுயர்ந்தோங்கும்
தண்டளிர்ப்பூம் பிண்டிக்கீழ்த் தகைபெறவீற் றிருந்தனையே! (தரவு)

ஒல்லாத பிறப்புணர்த்து மொளிவட்டம் புடைசூழ
எல்லார்க்கு மெதிர்முகமா யின்பஞ்சேர் திருமுகத்துள்
வர்மலர மணிப்பொய்கை யெழிலாம்பற் பொகியவிழ
வுலர்களோ டுடன்முளைத்த வொளிவட்டத் தமர்ந்தன்றே;

கனவயிரங் குறடாகக் கனல்பைம்பொன் சூட்டாக
இனமணி யாரமா வியன்றிரு ளிரிந்தோட
அந்தரத் திருளுநின் னலர்கதி ரறவாழி
இந்திரனும் பணிந்தேத்த விருவிசும்பிற் றிகழ்ந்தன்றே ;

வாடாத மணமாலை வானவர்க ளுள்ளிட்டார்
நீடாது தொழுதேத்த நிறஞ்சேர்ந்த பெருங்கண்ணு
முகிழ்பரிதி முகநோக்கி முறுவலித் துண்ணெகிழ்ந்த
திகழ்தகைய குடைபுடைசூழ் திருந்துதிரு நிலைத்தன்றே. (தாழிசை)

மல்லல் வையம மடிதொழு தேத்த
அல்லல் நீத்தக் கறப்புணை யாயினை ;
ஒருதுணி வழிய வுயிர்க்கர ணுறுகி
இருதுணி வொருபொருட் கியல்வகை கூறினை ;
(நாற்சீர் ஈரடி யிரண்டம்போதாங்கம்)

வடலர் தாமரை யேந்து நின்னடி ;
வீடொடு கட்டினை விளக்கு நின்மொழி;
விருப்புறு தமனியம் விளக்கு நின்னிறம் ;
ஒருத்தல் கூறெ வுரும்று நின்புகழ் ;
(நாற்சீர் ஓரடி நான்கம்போதாங்கம்)

இந்திரற்கு மிந்திர னீ ; இணையில்லா விருக்கையை நீ ;
மந்திர மொழியினை நீ ; மாதவர்க்கு முதல்வனு நீ ;
அருமைசா லறத்தினை நீ ; ஆருயிரு மளித்தனை நீ ;
பெருமைசால் குணத்தினை நீ ; பிறர்க்கறியாத் திறத்தினை நீ,
(மூசீர் ஓரடி எட்டம்போதாங்கம்)

(168) யாப். வி. 83.

பரம னீ ; பகவ னீ ; பண்ணவ னீ ; புண்ணிய னீ ;
உரவ னீ ; குரவ னீ ; ஊழி நீ ; உலகு நீ ;
அருளு நீ ; அறமு நீ ; அன்பு நீ ; அணைவு நீ ;
பொருளு நீ ; பொருப்பு நீ ; பூதியு நீ ; புணையு நீ ;
(இருசீரோரடிப் பதினுறம்போதரங்கம்)
எனவாங்கு ; (தனிச்சொல்)
அருணெறி யொருவநிற் பாவுது மெங்கோன்
திருமிகு சிறப்பிற் பெருவகை யகலத்
தெண்மிகு தானைப் பண்ணமை நெடுந்தேர்
அண்ணல் யானைச் செங்கோல் விண்ணவன்
செருமுனை செருக்கறத் தொலைச்சி
ஒருதனி வெண்குடை யோங்குக வெனவே. (சுரிதகம்)

169. கடையில்லா வறிவோடு ஞானமுங் காட்சியும்
உடைமையா யுலகேத்த வொண்பொருள் தியல்புணர்ந்து
மறவாழி யிமையவரு மாதவரும் புடைசூழ
அறவாழி வலனுயரி யருணெறியே யருளியோய்! (தரவு)

வினையென்னும் வியன்பகைவை வேரோடு முடன்கீழ்ந்து
முனையவர்க டொழுதேத்த விருப்பதுநின் முறைமையோ;
பொருளாடல் புரியீரேற் புகர்தீரு மெனவருளி
மருளாஞ மணியணைமேன் மகிழ்வதுநின் மாதவமோ;
வேந்தர்க்கு முனைவர்க்கும் விலங்கிற்கு மருடிறவாத்
தோந்தீரத் துறந்தநின் துறவரசுந் துறவாமோ; (தாழிசை)

முழுவது முணர்பவர் முனைவருண் முனைவர்க
டொழுதெழு துதியொலி துதைமல ரடியினை; (அராகம்)

நிழன்மணி விளையொளி நிகர்க்கு நின்னிறம்;
எழின்மதி யிதுவென விகலு நின்முகம்; (பேரெண்)

கருவினை கடந்தோய்நீ; காலனை யடர்ந்தோய்நீ;
ஒருவினையு மில்லோய்நீ; உயர்கதிக்கு முனைவனீ; (இடையெண்)

அறவ னீ; அமல னீ; அருளு நீ; பொருளு நீ;
உறவு நீ; உயர்வு நீ; உலகு நீ; அலகு நீ; (சிற்றெண்)
எனவாங்கு; (தனிச்சொல்)
அருளுடை யொருவநின் னடியினை பாவுதும்
இருளுடை நாற்கதி யிடர்முழு தகலப்
பாடுதற் குரிய பல்புகழ்
வீடுபே றுலகங் கூடுக வெனவே. (சுரிதகம்)

(169) யாப். வி. 83.

(வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா.)

170. தெரிவில்லா வினைகெடுத்துத் தீவினையிற் றெரிந்தோங்கிச்
சரிவில்லா வின்பத்தாற் சங்காணு முழுதுலகுந்
தெரிந்தொன்றி யுணர்ந்தநின் றிப்பியஞா னந்தன்னால்
விரிந்தெங்குஞ் சென்றமையால் விண்ணுவுமாய் மண்ணின்மிசைத்
தோர்வுற்ற வாரிட நான்மையினுந் திரிவில்லாச்
சார்வுற்ற நான்மையினுஞ் சதுமுகனு யுயர்ந்தனையே! (தாவ)

இருத்தியு நூனெறிய நியல்வகை தன்னலும்
வருத்தாத கொள்கையான் மன்னுயிரைத் தலையளிப்போய்
தொடர்த்தமுக்கும் பிணியரசன் றொடர்ந்தோட ஞானத்தால்
அடர்ந்தமுக்க வென்றதுநின் னறமாகிக் காட்டுமோ;

ஏதிலா வுயிர்களெ யெவ்வகைக் கதியகத்தும்
காதலா லுழப்பிக்குங் காமனைக் கறுத்தவன்
வடிவுகெடச் சிந்தையா லெரித்தநூ உம் வல்வினையைப்
பொடிபட வென்றதுநின் பொறையுடைமை யாருமோ ;

எவ்வுயிர்க்கு மோரியல்பே யென்பவை தமக்கெல்லாம்
செவ்விய நெறிபயந்து சிறந்தோங்கு குணத்தையாய்க்
கொலைத்திறத்தாற் கூட்டுண்ணுங் கூற்றப்பே ராசனுங்க
ளலைத்தவனை வென்றதுநின் னருளாகிக் கிடக்குமோ ; (தாழிசை)

தாதுறு நனைசின தழலெழில்-சுழல்சுழல்
சைவகை முகைகரு தடமல ரசோகின ;
சீருறு கெழுதகு செழுமணி முழுதணி
செறியுள விலங்கர சணிபொனி னணையின ;
வாருறு கதிரெதிர் மரதக நிரைநிரை
வரிபுரி தெளிமதி வெருவரு குடையின;
போருறு தகையன புயலுளர் வியலொளி
புதுமது நறவின புனைமலர் மழையின ;
பொறிகிள ரமார்கள் புகலிட மெனமனும்
பொலிமலி கலிவெலும் பொருவறு மெயிலின;
வெறிகிள ருருவின விரைவினி னினிதெழ
எறிவரு தெரிதக வினிதுளர் கவரியை ;
விறலுள பிறவியை வெருவரு முறைதெறு
வியலொரி கதிரென மிடலுடை யொளியின ;

(170) யாப். வி. 84.

அறிவுள வமரர்க ளதிபதி யிவனென
இடனுடை யிடிபட வெழுவன விசையினை. (ஆசிரியம்.)
மன்னுயிர் காத்தலான் மறம்விட்ட வருளினை
டின்னுயி ருய்கென்ன வில்லறமு மியற்றினையே ;
புன்மைசா லறநீக்கிப் புலவர்க டொழுதேத்தத்
தொன்மைசால் குணத்தினுற் றுறவரசாய்த் தோற்றினையே.
(பேரொண்)

டீடுடைய விருக்கையைநின் பெருமையே பேசாதோ ;
வீடுடைய நெறிமையைநின் மேனியே விளக்காதோ;
ஒல்லாத வாய்மையைநின் னுறுபுகழே யுரையாதோ ;
கல்லாத வறிவுநின் கட்டுரையே காட்டாதோ ; (இடையெண்)

அறிவினு ளளவிலீ ; அன்பினு ளசைவிலீ ;
செறிவினுட் சிறந்தனீ ; செம்மையாற் செழுங்கதிர் நீ;
காட்சியாற் கடையிலீ ; கிணஞ்சூழ்ந்த கதிர்ப்பினை நீ;
மாட்சியான் மகிழ்வினீ; மணிவரைபோல் வடிவினை நீ; (சிற்றெண்)

வலம்புரி கலந்தொருபால் ; வால்வளை திமிர்ந்தொருபால் ;
நலந்தரு கொடியொருபால், நலம்புணர் குணமொருபால் ;
தீதறு திருவொருபால்; திகழொளி மணியொருபால்;
போதறு மலரொருபால்; புணர்கங்கை யாறொருபால்;
ஆடியி னொளியொருபால்; அழலெரி யதுவொருபால்;
மூடிய மூசொருபால்; முழங்குநீர்க் கடலொருபால்;
பொழிலொடு கயமொருபால்; பொருவறு கனிறொருபால்;
எழிலுடை யேறொருபால்; இணையரி மானொருபால்; (அளவெண்)

எனவாங்கு; (தனிச்சொல்)
இவைமுத லாகிய விலக்கணப் பொறிகிளர்
கவையில் காட்சி நல்லறத் தலைவநின்
தொல்குணந் தொடர்ந்துநின் றேத்துதும் பல்குணப்
பெருநெறி யருளியெம் பிறவிபைத் தெறுவதோர்
வரமிகத் தருகுவை யெனநனி
பரவுதும் பரமநின் னடியிணை பணிந்தே. (சுரிதகம்)

(வஞ்சிப்பா.)

171. மந்தா நிலம் [1]வந்தசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நாண்மலர்மிசை

---

(171) யாப். வி. 21, 32; யாப் சா. உறுப். 11. மேற்; இலக். வி. 715:
[1]மருங்கசைப்ப.

எனவாங்கு,

(னிதி லெதுங்கிய விறைவனே
மனமொழி மெய்களின் வணங்குது மகிழ்ந்தே.

172. தாளோங்கிய தண்பிண்டியின்
நாண்மலர்விரி தருநிழற்கீழ்ச்
சுடர்பொன்னெயி னகர்நடுவண்
அரியணைமிசை யினிதமர்ந்தனை
அதனால்,
பெருந்தகை யண்ணனிற் பரசுதும்
திருந்திய சிவகதி சேர்கயா மெனவே.

(குறளடி வஞ்சிப்பா.)

173. அங்கண்வானத் தமராசரும்
வெங்களியானை வேல்வேந்தரும்
வடிவார்கூந்தன் மங்கையரும்
கடிமலர்சிந்திக் கதழ்ந்திறைஞ்சச்
சிங்கஞ்சுமந்த மணியணைமிசைக்
கொங்கவிரசோகின் [1]கொழுநிழற்கீழ்ச்
செழுநீர்ப்பவளத் திரள்காம்பின்
முழுமதிபுரையு முக்குடைநீழல்
வெங்கண்விளைப்பகை விளிவெய்தப்
பொன்புனைநெடுமெழில் புடைவளர்ப்ப
அனந்தசதுட்டய மவையெய்த
[2]நனந்தலையுலகுட னளைவீங்க
மந்தமாருத மருங்கசைப்ப
[3]அந்தரநந்துபி நின்றியம்ப
இலங்குசாமரை யெழுந்தலமர
நலனகிளர்பூமழை நனிசொரிதர
நினைதிருந்து,
அருணெறி நடாத்திய வாதிதன்
திருவடி பரவுதஞ் சித்திபெறற் பொருட்டே.

174. பூந்தண்சினை மலர்மல்கிய பொழிற்பிண்டி
வேந்தன்புகழ் பரவாதவர் வினைவெல்லார்

---

(172) யாப். வி. 12. (173) செ. 13, 90; யாப் கா. உறுப். 9 மேற். இலக். வி. 716, 718 உரை; [1]குளிர்நிழற்கீழ். [2]நனந்தலையுலகுடை. [3]அந்தரதுந்துமி. (174) செ. 93; யாப். கா. உறுப். 14 மேற்.

அதனால்,

அறிவன தடியிணை பரவப்
பெறுகுவர் யாவரும் பிறவா நெறியே.

175. வினைத்திண்பகை விழச்செற்றவன்
வனப்பங்கய மலர்த்தாளிணை
நினைத்தன்பொடு தொழுதேத்தினர்
நாளும்,
[1]மயலா நாற்கதி மருவார்
பெயரா மேற்கதி பெறுகுவர் விரைந்தே.

176. வானோர்தொழ வண்டாமரைத்
தேனூர்மலர் மேல்வந்தருள்
ஆனுவருள் கூறிவினைக்
[2]கானூர்,
மலர்கொண் டேத்தி வணங்குநர்
பலர்புகழ் முத்தி பெறுகுவர் விரைந்தே.

177. கோழியுங் கூவின [3]குக்கில் குரல்காட்டிந்
தாழியு ணீலத் தடங்கணீர் போதுமினே
ஆழிசூழ் வையத் [4]தறிவ னடியேத்திக்
கூழை கூனையக் குடைந்துங் குளிர்புனல்
வாழியு மன்னுவா மென்றேறலோ ரெம்பாவாய்.

(சிந்தடி வஞ்சிப்பா.)

178. கொடிவாலன குருகிறத்தன குறுந்தாளன
வடிவாலெயிற் றழலுளையன வள்ளுகிரன
பிணையெருத்தி னிணையரிமா வினையேறிக்
துணையில்லாத் துறவுநெறிக் நிறைவனுகி
எயினடுவ ணினிதிருந் தெல்லோர்க்குமு
பயில்படுவினை [5]பத்திமையிற் செப்பியோன்
புணையெனத்
திருவுறு திருந்தடி திசைதொழ
[6]வெருவுறு நாற்கதி வீடுநனி யெளிதே.

---

(175) யாப். கா. செய். 1 மேற்; இலக். வி. 740 உரை. [1]மயலார். (176) இலக். வி. 740 உரை; [2]காணூ. (177) யாப். வி. 93; யாப்.கா. ஒழி. 8. மேற்: [3]குக்கிலனைழத்தன, குக்கில் குரலியம்பும். [4]தண்ணல். (178) வெ. 90: யாப். கா. செய். 14 மேற். [5]பத்தியலாற். [6]விரிவுறு.

உச்சநீதமலை.

179. துடித்தடித் திமிழ்தரு துளங்குவெள் ளருவிநீர்
தொடுத்தெடுத்த மாலைபோற் றொடர்ந்துதோன் றுந் தூய்மைசால்
அடுத்தடுத் துரைபுக வசைவில்சீ ருச்சந்தம்
மடுத்தடுத்து வைகலு மறத்தலின்றி வாழ்த்துவாம்.

தீபங்குடி.

[செயங்கொண்டாரை அபயன் 'உமதூர் யாது?' என்று கேட்டபோது சொன்னகவி.]

180. செய்யும் வினையு மிருளுண் பதுவுந்
தேனுந் நறவும மூனுங் களவும்
பொய்யுங் கொலையு மறமுந் தவிரப்
பொய்தீ ரறநூல் செய்தார் தமதூர்
கையும் முகமும் மிதழும் விழியுங்
காலுந் நிறமும் போலுங் கமலம்
கொய்யும் மடவார் கணிவா யதரங்
கோபங் கமழுந் தீபங் குடியே.

பழையாற்று மாதவன்.

181. ஏறுயர் கொடியி னிருவிசும் பதிரு மெறிமூ சதிர்கடற் றூனை
வீறுயர் மணிக்கால் வெண்குடை யோங்கு தண்டுறை யின்பழையாற்று
மாறடு படிவ [1]மதியுறுந் தருண மாதவ னேதமில் பாதம்
வீறடு [2]கதிக ளாழ்கதி வீழ விளங்கிய விழுத்துணை யாமே.

182. முழங்கு களியானை மூரிக் கடற்படை முறிதார் மன்னர்
வழங்கு மிடமெல்லாந் தன்புகழே போக்கிய வைவேல் விண்ணன்
செழுந்தண்பூம் பழசையுட் சிறந்துநா ளுஞ்செய
எழுந்த சேதிகத் தெரிருந்தவண் ணல்லடி
விழுந்தண்பூ மலர்களால் வியந்துநா ளுந்தொழத்
தொடர்ந்துநின் றவ்வினை துறந்துபோ மாலரோ.

சைநர்க்குச் சிறந்த மலைகள்.

183. பாங்குன் றெருவகம் பப்பாரம் பள்ளி
யருங்குன்றம் போர்த்தை யானை—பிருங்குன்றம்
என்றெட்டு வெற்பு மெடுத்தியம்ப வல்லார்க்குச்
சென்றெட்டுமோ பிறவித் தீங்கு.

---

(179) யாப்.வி. 95. (180) தமிழ். நா. 114. (181) யாப்.வி. 95. [1]மதியுறு நருண். [2]நெறிக. (182) ஷெ. 67. (183) திருவாலவாயுடையார் பு. குறிப்புரை. பக். 288.

புத்தபகவான்.

184. அரியேறு முன்னுயர்த்த வாதியான் வண்டின்
புரியேறும் போதி நிழற்கீழ்ப்—பெரியோன்
அடித்தா மரைமலரை யன்போடுஞ் சென்று
பிடித்தார் பிறவார் பெயர்ந்து.

185. வடிமலர்த்தார் நாகர் மணிக்கவரி வீச
முடிமலர்த்தேம் போதிமையோர் தன்னடிக்கீழ்ப் பெய்ய
இனிதிருந்து நல்லறஞ் சொல்லியா னெல்லாத்
துனியிருந்த துன்பந்தீர்ப் பான்.

(வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா.)

186 கிருமேவு பதுமஞ்சேர் திசைமுகனே முதலாக
உருமேவி யவதரித்த வுயிரனைத்து முயக்கொள்வான்
இவ்வுலகுங் கீழுலகு மிசைபுலகு மிருணீங்க
எவ்வுலகுந் தொழுதேத்த வெழுந்தசெழுஞ் சுடரென்ன
விலங்குகதி ரோரிரண்டும் விலங்கிவலங் கொண்டுலவ
அலங்குசினப் போதிநிழ லறமமர்ந்த பெரியோய்கீ! (தரவு)

மேருகிரி யிரண்டாகு மெனப்பணைத்த விருபுயங்கண்
மாரனிதை யாவேட்டு மன்னுபுர மறுத்தனையே;

வேண்டினர்க்கு வேண்டினவே யளிப்பனென மேலநாட்
பூண்டவரு ளாளனின் புகழ்புனிதாய்க் காட்டாதோ;

உலகுமிக மனந்தளர்வுற் றுயர்நெறியோர் நெறியழுங்கப்
புலவுநசைப் பெருஞ்சினத்துப் புலிக்குடம்பு கொடுத்தனையே;

பூதலத்து ளெவ்வுயிர்க்கும் பொதுவாய திருமேனி
மாதவனீ யென்பதற்கோர் மறுதலையாக் காட்டாதோ;

கழலடைந்த வுலகனைத்து மாயிரவாய்க் கடும்பார்த்தன்
அழலடைந்த பணத்திடையிட் டன்றுதுலை யேறினையே;

மருள்பாரா வதமொன்றே வாழ்விக்கக் கருதியதின்
அருள்பாரா வதவுயிர்க ளனைத்திற்கு மொன்றுமோ; (தாழிசை)

அருவினை நிலகெட வொருபெரு நரகிடை
எரிசுடர் மரைமல ரெனவிடு மடியினை;

அகலிட முழுவது மழல்கெட வமிழ்தமிழ்
முகில்புரி யிமிழிசை நிகர்தரு மொழியினை; (அராகம்)

(184) மணி. பதி. இறுதி. (185) யாப். வி. 61. (186) வீரசோ. யாப். 11. உரை.

அன்பென்கோ வொப்புரவென் கோவொருவ னயில்கொண்டு
முன்றிவிழித் தெறியப்பால் போந்தமுழுக் கருணையை ;

நாணென்கோ நாகமென்கோ நன்றியில்லான் பூணுங்
தீயினைப் பாய்பகடித்த சிறுதுயில்கொண் டருளினை ;
(ஈரடி இரண்டம்போதரங்கம்)

கைந்நாகத் தார்க்காழி கைக்கொண் டளித்தனையே;
பைந்நாகர் குலமுய்ய வாயமிழ்தம் பகர்ந்தனையே ;
இரந்தேற்ற படையரக்கர்க் கிழிகுருதி பொழிந்தனையே ;
பரந்தேற்ற மற்றவர்க்குப் படருநெறி மொழிந்தனையே ;
(ஓரடி நான்கம்போதரங்கம்)

னைவாங்கு, (தனிச்சொல்)

அருள்வீற் றிருந்த திருநிழற் போதி
முழுதுணர் முனிவநிற் பரவுதுந் தொழுதக
ஒருமன மெய்தி யிருவினைப் பிணிவிட்டு
முப்பகை கடந்து நால்வகைப் பொருளுணர்ந்
தோங்குநீ ருலகிடை யாவரும்
நீங்கா வின்பமொடு நீடுவாழ் கெனவே. (சுரிதகம்)

187. பூமகனே முதலாகப் புகுந்தமர ரெண்டிசையும்
தூமலரா லடிமலரைத் தொழுதிரந்து வினவியநாட்
காமமுங் கடுஞ்சினமுங் கழிப்பரிய மயக்கமுமாய்த்
தீமைசால் கட்டினுக்குத் திறற்கருவி யாய்க்கிடந்த
நாமஞ்சார் நமர்களுக்கு நயப்படுமா றினிதுரைத்துச்
சேமஞ்சார் நன்னெறிக்குச் செல்லுமா றருளினையே; (ஆறடித்தாயு)

தானமே முதலாகத் தசபார [1]நிறைத்தருளி
யூனமொன் றில்லாமை யொழிவின்றி யியற்றினையே;

எண்பத்தொன் பதுசித்தி யியல்பினு ளவைவென்று
பண்பொத்த நுண்பொருளைப் பாரறியப் பகர்ந்தனையே;

துப்பியன்ற குணத்தோடு தொழில்களால் வேறுபட
மூப்புதின்மே லிரண்டுகேலை முறைமையான் மொழிந்தனையே;
(இரண்டடி மூன்று தாழிசை.)

ஆதியு மிடையினு டிறுதியு மறிகுவ
தமரரு முனிவரு மரிதுநின் னிலைமையை;
நீதியல் கருடனை விடவர வொடுபகை
விதிமுறை கெடவறம் வெளியுற வருளினை;

(187) [1] சோ. யாப். 11 உரை. பிரசபத்தம்.

தீதியல் புலியது பசிகெடு வகைகின
திருவுரு வருளிய திறமலி பெருமையை;
போதியி னறமலி திருநிழ லதுநனி
பொலிவுற வடியவ ரிடர்கெட வருளினை; (நாலடி அராகம்)

திசைமுகன் மருவிய கமலந னிறமென
வசையறு முனிவொடு [1]மலியு நின்னடி;

உயர்வுறு பெருமையொ டயாறு மயர்வொடு
புரையறு நலனெடு [2]பொலியு நின்புகழ்;

(ஈரடியிரண்டாய்வந்த பேரெண்.)

கற்புடை மாரனைக் காய்சினந் தவிர்த்தனை;
பொற்புடை நாகர்தந் துயரம் போக்கினை;
நீலுரு வாகி மெய்ம்மையிற் படிந்தனை;
மாலுரு வாகி வான்குண மியற்றினை;

(ஓரடிநான்காய்வந்த சிற்றெண்)

எண்ணிறந்த குணத்தோய் நீஇ; [3]யாவர்க்கு மரியோய் நீஇ;
உண்ணிறைந்த வருளோய் நீஇ; உயர்பார [4]நிறைத்தோய் நீஇ;
மெய்ப்பொருளை யறிந்தோய் நீஇ; மெய்யறமிங் களித்தோய் நீஇ;
செப்பரிய தவத்தோய் நீஇ; [5]சேர்வார்க்குச் சார்வு நீஇ;

(மூச்சீரிஞல் வந்த இடையெண்)

நன்மை நீஇ; தின்மை நீஇ; நனவு நீஇ; கனவு நீஇ;
வன்மை நீஇ; மென்மை நீஇ; மதியு நீஇ; விதியு நீஇ;
இம்மை நீஇ; மறுமை நீஇ; இரவு நீஇ; பகலு நீஇ;
செம்மை நீஇ; கருமை நீஇ; சேர்வு நீஇ; சார்வு நீஇ;

(இருசீர் பதினெருய் வந்த அளவெண்)

எனவாங்கு (தனிச்சொல்)

[6]அனக நின்ற னடியினை பரவுதும்
வெல்படைத் தொண்டைமான் விறற்சே ஞபதி
சிங்களத் தரையன் வெண்குடை யதனெடு
பொங்குபுகழ் வில்லவன் புறக்கொடை கண்டு
பொலிதரு சேந்தன் பொன்பற்றி காவலன்
மலிதரு பார்மிசை மன்னுவோ னெனவே. (சுரிதகம்)

---

[1]மலிவுறு. [2]பொலிவுறு. [3]யாவர்க்கும் பெரியோய்நீஇ. [4]மூவரைத்தோய்நீஇ.
[5]சேர்ந்தவர்க்குச் சார்ந்தோய்நீஇ. [6]அலகிலா.

(அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா.)

188. மண்வாழும் பல்லுயிரும் வான்வாழு மிமையவரும்
கண்வாழு மாநாகர் கீளையனைத்துங் களிகூர
அந்தரதுந் துபியியங்க வமரர்க ணடமாட
இந்திரர்பூ மழைபொழிய விமையவர்சா மரையிரட்ட
மூத்தநெடுங் குடைநிழற்கீழ் மூரியர சரியணைமேல்
மெய்த்தவர்கள் போற்றிசைப்ப வீற்றிருந்த வொருபெரியோய்!
(தரவு)

எறும்புகடை யயன்மூதலா வெண்ணிறந்த வென்றுரைக்கப்
பிறந்திறந்த யோனிதொறும் பிரியாது சூழ்போகி
எவ்வுடம்பி லெவ்வுயிர்க்கும் யாதொன்று லிடரெய்தின்
அவ்வுடம்பி னுயிர்க்குயிரா யருள்பொழியுந் திருவுள்ளம் ;

அறங்கூறு மூலகனைத்துங் குளிர்வளர்க்கு மழைமுழக்கின்
திறங்கூற வரைகதிருஞ் செழுங்கமல நனிநாண
ஒருமைக்க ணீரொன்பா னுரைவிரிப்ப வுணர்பொருளால்
அருமைக்கண் மலிவின்றி யடைந்ததுநின் றிருவார்த்தை ;

இருட்பா வினைநீக்கி யெவ்வுயிர்க்குங் காவலென
அருட்பாரந் தனிசுமந்த வன்றுமுத லின்றளவும்
மதுவொன்று மலரடிக்கீழ் வந்தடைந்தோர் யாவர்க்கும்
பொதுவன்றி நினக்குரித்தோ புண்ணியநின் றிருமேனி ;
(இவை மூன்றுந் தாழிசை)

ஆருயிர்க ளனைத்தினையுங் காப்பதற்கே யருள்பூண்டாய்
ஒருயிர்க்கே யுடம்பளித்தா லொப்புரவிங் கென்னுகும்;

தாமநறுங் குழன்மழைக்கட் டளிரியலார் தம்முன்னர்க்
காமனையே [1]மூனைந்துலத்தாற் கண்ணுட்டம் யாதாங்கொல் ;
(பேரெண்)

போரார்க்க ரோரைவர்க் கறவமிழ்தம் பொழிந்தனையே ;
ஆரமிழ்த மணிநாகர் குலமுய்ய வருளினையே ;
வார்சிறைப்புள் ளரையற்கும் வாய்மைநெறி பகர்ந்தனையே ;
பார்மிசை யீரைந்தும் பாவின்றிப் பயிற்றினையே ; (சிற்றெண்)

அருளாழி நயந்தோய் நீ இ ;
அறவாழி பயந்தோய் நீ இ ;
மருளாழி துரந்தோய் நீ இ ;
மறையாழி புரந்தோய் நீ இ ;

---

(188) வீரசோ. யாப். 11 உரை. [1]மூனந்தொலத்தாற்.

மாதவரின் மாதவ னீஇ ;
வானவருள் வானவ னீஇ ;
போதனரிற் போதன னீஇ ;
புண்ணியருட் புண்ணிய னீஇ ; (இடையெண்)

ஆதி நீஇ ; அமல னீஇ ; அயனு நீஇ ; அரியு நீஇ ;
சோதி நீஇ ; நாத னீஇ ; தறைவ னீஇ ; இறைவ னீஇ;
அருளு நீஇ ; பொருளு நீஇ; அறிவ னீஇ; அனக னீஇ ;
தெருளு நீஇ ; திருவு நீஇ ; செறிவு நீஇ ; செம்ம னீஇ ;
(இடையெண்)

எனவாங்கு (தனிச்சொல்)

பவளச் செழுஞ்சுடர் மரகதப் பாசடைப்
பசும்பொன் மாச்சினை விசும்பகம் புதைக்கும்
போதியங் திருநிழற் புனிதநிற் பரவுதும்
மேதகு நந்தி புரிமன்னர் சுந்தரச்
சோழர் வண்மையும் வனப்பும்
திண்மையு மூலகிற் சிறந்துவாழ் கெனவே ; (சுரிதகம்)

189. ஆதியங் கடவுளை யருமறை யருகனை
[1]போதியங் கிழவனை பூமிசை யொதுங்கினை
சேதியஞ் செல்வனின் றிருவடி தொழுதனம் ;

காமனைக் கடிந்தனை காலனைக் காய்ந்தனை
தேமலர் மாரியை திருமறு மார்பினை
மாமலர் வண்ணனின் மலரடி வணங்குதும் ;

ஆருள் பயந்தனை யாழ்துயர் தவிர்த்தனை
ஏரகு ளாழிபை புலருடை யெருவனை
சீருண் மொழியையின் றிருவடி தொழுதனம்.

190. வாடாப போதி மரகதப் பாசடை
மாநிழ லமர்ந்தோ னெஞ்சம் யார்க்கும்
அருளின் றீர்ந்தே [2]னிறைத்துநனி ஞெகிழ்ந்து
மலரணு வெல்லி தென்ப வதனைக்
காவர் செல்வி மாரன் மகளிர்
நெடுமா மழைக்கண் விலங்கினிமிர்ந் தெடுத்த
வாளும் போழ்ந்திலை [3]வாயின்
யாதோ மற்றது [4]மெல்லிய வாறே.

---

(189) யாப். வி. 15. [1] போதியங் கிழவனை பூமிசை யொதுங்கிய' என்ற ஓரடி மிகுதியாகக் கண்டபாடலு மூண்டு (ஸ்டே. 52). (190) தொல். பொரு ளதி. 75, நச்; வீரசோ. பொருட் 19 உரை; [2]னுறைப்பனனி. [3]வாகலின். [4]மேவிய.

191. பாசடைப் போதிப் பேரருள் வாமன்
வரையா வீகை போல யாவிரும்
கொடைப்படு வீரக் கொடைவலம் படுமின்
முன்ன ரொருமுறைத் தன்னுழை யிரந்த
அன்பி லாக்கர்வேண் டளவும் பருக
என்புதொறுங் கழிப்பித்தன் மெய்திறந்து வாக்கிக்
குருதிக் கொழும்பதங் கொடுத்தது மன்றிக்
[1]கடுந்துயர்ப் பட்ட கள்ளப் புறவின்
மாய யாக்கை [2]சொல்லிய தாற்றன்
[3]உடம்பு நிறுத்துக் கொடுத்தது மன்றி.

192. புனிற்றுப் பசியுழந்த புலிப்பிணவு தனதது
மூலமறக் குழவி வாங்கி வாய்ப்படுத்
திரையெனக் கவர்ந்தது நோக்கி யாங்க
வேரிளங் குழவிமுன் சென்று [4]தானக்
கூருகிர் வயமான் புலவுவேட்டுத் தொடங்கிய
வாளெயிற்றுக் கொள்ளெயிற் றங்கிணன் கதுவப்
பாசிலைப் [5]போதி மேவிய பெருந்தகை
ஆருயிர் காவல் பூண்ட
பேரருட் புணர்ச்சிப் பெருமை தானே.

193. வேத முதல்வ வேதமி லகணித
தத்துவர் தலைவ முத்தி முதல்வ
வழுவா ஞானக் குழுவுடன் வந்து
துன்னுப் பாவ மன்னரை யவித்த
தரும நேமிப் [6]பரமனென வியந்து
துன்னின ராகி மின்னென மிளிர்ந்த
தகைமுடி சாய்த்துச் [7]சத்துவர் வணங்கு
வகைமுடி வல்வினை வாடுக வெனவே.

194. உலம்பினி வனத்து ளொண்குழைத் தேவி
வலம்படு மருங்குல் வடிம்பா யுறுமல்
ஆன்றோ னவ்வழித் தோன்றின னுதலின்
நன்றோ மேழ்நா ளின்னுயிர் வைத்தாள்.

---

(191) வீரசோ. பொருட் 19 உரை. [1]கருகிமிட். [2]சேலிய, கோலிய. [3]உடம் பறுத்து. (192) மணி. மை: [4]காணக். [5]போதிப்பேரருள் வாமன். (193) யாப். வி. 52: [6]பிரமனென. [7]சதுவர். (194) விம்பசாரகதை (மணி. பக். 367).

195. முன்ரூன் பெருமைக்க ணின்ரூன்முடி வெய்து காறும்
நன்றே நினைந்தான் [1]குணமேமொழிந் தான்ற னக்கென்
றென்ரூனு [2]முள்ளான் பிறர்க்கேயுறு திக்கு ழந்தான்
அன்றே யிறைவ னவன்ரூள்சர ணங்க ளன்றே.

196. அருணெறியாற் பாரமிதை யாறைந்து மூடனடக்கிப்
பொருண்முழுதும் போதியின்கீழ் முழுதுணர்ந்த முனிவான்றன்
அருண்மொழியா னல்வாய்மை யறிந்தவரே பிறப்பறுப்பார்
மருணெறியாம் பிறநூலு மயக்கறுக்கு மாறுளதோ.

197. கண்கொடுத்தான் றடிகொடுத்தான் கயப்புலிக்குத் தற்கொடுத்தான்
பெண்கொடுத்தா னுடம்பினையும் பிளந்திட்டுப் பிறர்க்கீந்தான்
மண்கொடுத்தான் மகக்கொடுத்தான் மன்னுந்தற் சேர்ந்தார்க்கு
விண்கொடுத்தா னவன்கொடுந்த விரித்துரைப்பன் கேளென்ரூள்.

198. எண்ணிகந்த காலங்க ளெம்பொருட்டான் மிகவுழன்
றெண்ணிகந்த வுலகங்க ளிருடீர வொருங்குணர்ந்
தெண்ணிகந்த தானமுஞ் சீலமு மிவையாக்கி
யெண்ணிகந்த குணத்தினு னெம்பெருமா னல்லனே.

199. தோடார் நிலங்கு மலர்கோதி வண்டு
வரிபாட நீடு துணர்சேர்
வாடாத போதி நெறிநீழன் மேய
வரதன் பயந்த வறநூல்
கோடாத சீல [3]வதமேவி வாய்மை
குணஞ்செ நாருந் முயல்வார்
வீடாத வின்ப நெறிசேர்வர் தன்ப
வினைசேர்த னுந்த மிலரே.

200. எண்டிசையு மாகி யிருளகல நூறி
யெழுதளிர்கள் சோதி முழுதுலகு நாறி
வண்டிசைகள் பாடி மதுமலர்கள் வேய்ந்து
மழைமருவு போதி யுழைநிழல்கொள் வாமன்
வெண்டிரையின் மீது விரிகதிர்க ணுண
வெறிதழல்கொண் மேனி யறிவனெழின் மேவு
புண்டரிக பாத நமசரண மாகு
மெனமுனிவர் நீங்கப் புணர்பிறவி காணுர்.

---

(195) வீரசோ. யாப். 3 உரை: (குண்டலகேசி, கடவுள்வாழ்த்து) [1]குண மொழிந்தான். [2]மில்லான். (196) சித்தாந்தத்தொகை. (197, 198.) நீலகேசி, சமயதிவாகாருரை. (199, 200) வீரசோ. யாப். 3, உரை; [3]விதமேவி.

201. அருந்தவர்கட் காதியா யைய நீக்கி
யவ்வியந்தீர்த் தவிரொளிசே ராக்கை யெய்தி
யிருந்திராட்கை யினமருப்பின் யானை யூர்தி
யிரைஞ்ஞூற் றெழினுட்டத் தினையோ னேத்த
வொருங்குலகி னுல்கற்றே ரோத முங்நீ
ரொளிவளர வறம்பகர்ந்த வுரவோன் பாதம்
கருங்கயற்கட் காரிகையார் காத லீக்கிக்
கைதொழுதாற் கையகலுங் கவ்வை தானே.

202. வீடுகொண்டகல்லறம்பகர்ந்துமன்பதைக்கெலாம்
விளங்குதிங்கணீர்மையான்விரிந்திலங்குமன்பிலேன்
மோடுகொண்டவெண்ணுரைக்கருங்கடற்கொழுஞ்சுடர்
மூளுதெழுந்தவித்தன்னலாப்முகிழ்ந்திலங்கு [1]சோதியான்
நாடுகின்றமூவகைப்பவங்கடந்துகுற்றமா
ன[2]வைந்தடங்கமூன்றறுத்தநாகுணன்மலர்த்துணர்ப்
பீடுகொண்டவார்தளிர்ப்பிறங்குபோதியானையம்
பிரானேநாஞ்மேத்துவார்பிறப்பிறபபிலார்களே.

203. பைங்கண்வாளெயிற்றினப்பகட்டெருத்தின்வள்ளுகிர்ப்
பரூஉத்திரட்குரூஉக்கொடாட்பாலுடைச்செவுடைச்
சிங்கவேறுநான்குதாங்கமீதுயர்ந்தசேயொளிச்
சித்திரந்துயிற்றிநாறுசெம்பொனனத்தின்மேற்
கொங்குநாறுபோதுசிந்திவாறுளோரிறைஞ்சிடக்
கோதிலாவறம்பகர்ந்தமர்ந்தகோன்குளிர்நிழற்
பொங்குதாதுகொப்புளித்துவண்டுபாடுதேமலர்ப்
போதியெம்பிரானடிக்கண்போற்றில்வீடதாகுமே.

204. கூரார் வேலுயுகிர் வாளெயிற்றுச் செங்கட்
கொலையுழுவை காப்பரியாற் கூர்ந்தவெங்கோப் நீங்க
ஓரா யிரங்கதிர்போல் வாள்விரிந்த மேனி
யுளம்விரும்பிச் சென்றுங் கியைந்தனோ யென்றுற்
காரார் திரைமூளைத்த செம்பவள மேவுங்
கடிமுகிழ்த் தண்சினைய காமருசும் போதி
வரார் முனிவரர்கள் வானவர்தங் கோவே
யென்தா யெகோவுன்னை யேத்தாதார் யாரே.

---

(201) யாப். வி. 53. (202-204) வீரசோ. யாப். 3. உரை. [1]போதியின். [2]வைந்தொடங்கொர்.

(உற்கிருதிச் சந்தம்.)

205. மணிபிலகு செறிதளிரொ டலரொளிய நிழலரசின் மருவி யறவோர்
பிணிவிரவு துயரமொடு பிறவிகெட வுரையருளும் பெரிய வருளோன்
துணியிலகு சுடருடைய வரசொடு பிரமர்தொழு தலைமை யவர்மா
வணியிலகு கமலமல ரனையவெழி லறிவனிணை யடிக டொழுவாம்.

(வெளிவிருத்தம்.)

206. மருளறுத்த பெரும்போதி மாதவரைக் கண்[1]டிலமால்
[2]என்செய்கோம் யாம்
அருளிருந்த திருமொழியா லறவழக்கங் கேட்[1]டிலமால்
[2]என்செய்கோம் யாம்
பொருளறியு மருந்தவத்துப் புரவலரைக் கண்[1]டிலமால்
[2]என்செய்கோம் யாம்.

(சக்காக்கவி.)

207. மாதவா போதி வாதா வருளமலா
பாதமே யோது சுரரைநீ—தீதகல
மாயா நெறியளிப்பாய் வாரண் பகலாச்சீர்த்
தாயா யலதிலரு டான்

208. வீரோவாய போதியை யுறுமளவும் வினைமடியான்
தளர்வின்றி யோடிய தாளிணை னல்லனே.

209. அணிதங்கு போதி வாமன்
பணிதங்கு பாத மல்லாற்
றுணிபொன் றிலாத தேவர்
மணிதங்கு பாத மேவார்.

210. போதி நீழற்
சோதி பாதங்
காத லானின்
றோத னன்றே.

மகாபோதி.

211. பொருந்து போதியில்
இருந்த மாதவர்
திருந்து சேவடி
மருந்து மாகுமே.

(205) வீரசோ. யாப். 33-உரை (206) ஷே. 15 உரை [1]டிலனால். [2]என்செய் கோயான். (207) ஷே. அலங். 3 9. (208) சீவகசி. சமய. (மணிமே பக். 368.) (209, 210) வீரசோ. யாப். 33-உரை. (211) ஷே. ஷே. 8-உரை.

212. விண்ணவர் நாயகன் வேண்டக்
கண்ணினி தளித்த காதற்
புண்ணிய னிருந்த போதி
நண்ணிட நோய்நலி யாவே.

துடிதபுரம்.

(உற்கிருஷ்டசந்தம்)

213 தொழுமடிய நிதயமல ரொருபொழுது பிரிவரிய
தூணவ ரெனலாம்
எழுமிரவி கிரணநிக ரிலகுதுகில் புனைசெய்தரு
ளிறைவ னிடமாம்
குழுவுமறை யவருமுனி வரருமரி பிரமரு
கவனு மெவரும்
தொழுதகைய விமையவரு மறமருவு தூதிசெய்தெழு
துடித புரமே.

மாஞலூர்.

214. வாளுடும் பரியாயு மரிண மாயும்
வண்கேழற் களிறாயு மெண்காற் புண்மான்
ரூஞயும் பணையெருமை யொருத்த லாயும்
தடக்கையிளங் களிறாயுஞ் சடங்க மாயும்
மீனாயு மூயலாயு மன்ன மாயு
மயிலாயும் பிறவாயும் வெல்லுஞ் சிங்க
மாஞயுங் கொலைகளவு கட்பொய் காமம்
வரைந்தவர்தா மூறைந்தபதி மாஞ வூரே.

215. மிக்கதனங் களாமரி மூன்றும் பெய்யும்
வெங்களிற்றை மிருகிந்தா மணியை மேனி
யொக்கவரிந் தொருகூற்றை யிரண்டு கண்ணை
யொளிதிகழுந் திருமுடியை யுடம்பி லூனை
எக்கிவிழுங் குருதிதனை யரசு தன்னை
யின்னுயிர்போற் றேவியையீன் றெடுத்த செல்வ
மக்களெவர் நிரந்தவர்க்கு மகிழ்ந்தே யீயும்
வானவர்தா மூறைந்தபதி மாஞ வூரே.

---

(212) வீரசோ. யாப். 3 உரை. (213) ஷே. ஷே. 83 உரை. (214) நீலகேசி. சமயதிவா. (மணிமே. பக். 60). (215) ஷே. ஷே. (மணிமே. பக். 125).

மன்மதன்.

216. கரும்பேதன் கைச்சிலையுங் காமர் கணையும்
அரும்பே சுரும்போ ணென்றூற்—பெரும்பேய்க்
கணத்தானைப் போர்வென்று காரிகையா ரோடும்
மணத்தான மேற்றுவித்தான் வந்து.

217. யானே யிரதம் பரியா ளிவையில்லே
தானு மனங்கன் றனுக்கரும்பு—தேனூர்
[1]மலரைந்தால் வென்று வடுப்படுத்தான் மாரன்
உலகங்கண் மூன்று மொருங்கு.

218. கலியெலா முதற்கணே கண்டு கொண்டுபெண்
கொலியினுங் கொடுந்தாழில் பூண்டி கோலவெஞ்
சிலையினுற் செழுஞ்சாஞ் சேர்த்த செல்வனே
மலையமா ருதத்தொடும் வந்து தோன்றுமே.

ஆன் வாழ்த்து.

219. நாகின நந்தி யினம்பொலியும் போத்தென
வாய்வா ளுழவர் வளஞ்சிறப்ப வாயர்
அகன்றூர் சுரைய கறந்தபால் சீர்சிறந்த
வான்பொருள் வட்டத் தயிராகு மத்தயிர்
மெல்லக் கடைவிடத்து நெய்தோன்று நெய்பயந்து
நல்லமு தன்ன வகோயாகு நல்ல
புனிதமு மெச்சிலு நீக்கித் துனியின்றி
யன்ன பெரும்பயத்த வாகலாற் றொன்மரபிற்
காரார் புறவிற் கலித்த புதர்மாந்தி
ஆவா ழியரோ நெடியது.

---

[1]கார்ப்பூதம்.

220. முன்னு ளிந்திரன்.....
காவ லழித்துச் சேவல்கொண் டெழுந்த
வேட்கை யமுத மீட்க வெழுவோன்
இங்ஙகர் காப்போர் யாமென நினைதலும்
நேரிய னெழுந்து நீவரு காறும்

---

(216) வீரசோ. அலங். 12 உரை; (217) ஷே. ஷெ. 31 உரை; தண்டி. 77 உரை; இலக். வி. 673. [1]மலரைந்தி னுல்வென் றடிப்படுத்தான். (218) யாப். வி. 94. (219) தொல். பொரு. 82 உரை. (220) சிலப். 6, 7—13 உரை.

தார்கெழு மார்ப தாங்கலென் கடனென
உவந்தனன் கேட்டுப் புகழ்ந்தவிப் பூதம்
நின்வழி யாகென நிறீஇப் பெயர்வுழிக்
கடுவிசை யவுணர் கணங்கொண் டுண்டிப்
பொருதுபோர் தொலைந்தன ராஇப் பெரிதழிந்
தாழ்ந்த நெஞ்சிற் சூழ்ந்தனர் நினைந்து
வஞ்ச மன்றிது வஞ்சத் தல்லது
வேற லரிதெனத் தேறினர் தேறி
வலைத்துத் தொடுத்த வல்வா யம்பின்
அயின்முகங் கான்ற வாரிருள் வெயிலோன்
இருகணும் புதையப் பாய்தலி னொருகணும்
நெஞ்சங் காணு நிற்ப நின்ற
வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதம்.

இரண்டாவது :

அறவியல்.

உறுதிப்பொருள்.

ஔவையார்பாட்டு.

221. சதலறந் தீவினைவிட் டூட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் [1]கருத்தொத்துற்—றுதாவு
பட்டதே யின்பம் பரனேநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

பெறுதற்கருமை.

[ஔவையார் முருகவேள் கேட்கப் பாடிய அகவல்.]

222. அரியது கேட்குந் தனிநெடு வேலோய்
மக்கள் யாக்கையிற் பிறத்தலு மரிதே
மக்கள் யாக்கையிற் பிறந்த காலையும்
மூகையுஞ் செவிடுங் கூனுங் குருடும்
பேடு நீக்கிப் பிறத்தலு மரிதே
பேடு நீக்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நற்குற லரிதே

(221, 222) தமிழ் நா. 30, 57. [1]கருத்தொருமித்.

ஞானமுங் கல்வியு நற்குறு மாயினும்
தானமுந் தவமுந் தரித்தலு மரிதே
தானமுந் தவமுந் தரித்தார்க் கல்லது
வானவர் நாடு வழிதிற வாதே.

223 வினைபல வலியி னுலே வேறுவே றியாக்கை யாகி
நனிபல பிறவி தம்முட் டொன்புறூஉம் பல்லுயிர்க்கு
மனிதரி னரிய தாகுந் தோன்றுத லரிதன் றுலும்
இனியவை நுகர வெய்துஞ் செல்வமு மன்ன தேயாம்.

224. உயர்குடி நனியுட் டோன்ற லூனமி லியாக்கை யாதல்
மயர்வறு கல்வி கேள்வித் தன்மையால் வல்ல ராதல்
பெரிதுணர் வறிவே யாதல் பேரறங் கோட லென்றுங்
கரிதிவை பெறுத லேடா பெற்றவர் மக்க ளென்பார்.

அறஞ்செயல்.

225. எளிதென விகழா தரிதென வுரையாது
நுமக்குநீர் நல்குதி ராயின் மனத்திடை
நினைப்பினும் பிறக்கு மொழியினும் வளரும்
தொழிற்படிற் சினைவிடூஉப் பயக்கு முணர்த்தின்
இவணு மும்பருந் துணையே யதனற்
றுறைதொறுந் துறைதொறு நோக்கி
யறமே நிறுத்துமி னறிந்திசி னோரே.

ஔவை பாட்டு.

226. ஐய மிடுமி னறநெறியைக் கைப்பிடிமின்
இவ்வள வேனுமன்ன மிட்டுண்மின்—தெய்வ
மொருவனே யென்று முணரவல் லீரேல்
அருவினைக ளோந்து மறும்.

தானந் தவரு சிலம் பூசலைகள்.

227. மிக்க மாதவம் வீட்டில கடைதலை விளக்கும்
தக்க தானங்க டணப்பரும் போகத்தைப் பிணிக்கும்
தொக்க சீலங்க ளியக்கமி றுறக்கத்தைப் பயக்கும்
சிதகென் பூசனை திகழொளிப் பிழம்பினைத் திருத்தும்.

(223, 224) வளையாபதி (புறத்.) (225) ஆசிரியமாலை (புறத்).
(227) யாப. வி. 88.

விலக்கியனவொழிதல்.

228. பொய்யன் மின்புறங் கூறன்மின் யாரையும்
வையன் மின்வடி வல்லன சொல்லிநீ
ரும்யன் மின்னுயிர் கொன்றுண்டு வாழுநாள்
செய்யன் மின்சிறி யாரொடு தீயன.

229. கள்ளன் மின்களை வாயின யாவையும்
கொள்ளன் மின்கொலை கூடி வருமறம்
எள்ளன் மின்னில ரென்றெண்ணி யாரையும்
நள்ளன் மின்பிறர் பெண்ணெடு நண்ணன்மின்.

230. சொல்ல லோம்புமின் சோநனி
செல்ல லோம்புமின் தீநெறி
கல்ல லோம்புமின் கைதவம்
மல்லன் ஞாலத்து மாந்தர்காள்.

231. சொல்லல் சொல்லல் தீயவை சொல்லல்—எஞ்ஞான்றும்
புல்லல் புல்லல் தீநெறி புல்லல்—எஞ்ஞான்றும்
கொல்லல் கொல்லல் செய்ந்நலங்கொல்லல்—எஞ்ஞான்றும்
நில்லல் நில்லல் நீசரைச் சாந்தங்—கெஞ்ஞான்றும்.

232. நன்மை மேவுவார் மேவுவார் பெரும்பொரு ணன்கும்
புன்மை மேவுவார் யாவரும் புகழொடு பொருந்தார்
தொன்மை மேவுவார் மேவுவார் தொடர்வரச் சுற்றம்
இன்மை மேவுவார் யாவரு மின்பமொன் றெய்தார்.

அறஞ்செய்தார்.

233. முழுத்ததரன் [1]முரசியம்ப முத்திலங்கு [2]நெடுங்குடைக்கீழ்ப்
பொழிந்தமதக் கருஞ்சுவட்டுப் பொறிமுகத்த களிறூர்ந்து
பெருநிலம் பொதுநீக்கிப் பெயராத பெருமையாற்
பொருகழற்கால் வயவேந்தர் போற்றிசைப்ப வீற்றிருப்பார்
மருள்சேர்ந்த நெறிநீக்கி வாய்மைசால் குணந்தாங்கி
அருள்சேர்ந்த வறம்புரிந்தா ரமர்ந்து.

(228, 229) வீரயாபதி (புறத்) (230) யாப். வி. 92. (231) மேரு. 68. (232) வீரசோ. யாப். 17. (233) யாப். வி. 85; [1]முழவியம்ப. [2]வெண்குடைக்கீழ்.

அறஞ்செய்யாதார்.

234 தாழ்ந்த வுணர்வினராய்த தாளுடைந்து தண்டேறித் தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதிக்கட் சுழல்வார் தாமும்
[1]மூழ்ந்த பிணிநலிய மூன்செய்த வினையென்றே முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலா தாரே.

கற்புடைமகளிர்.

235. நாடி முரு நனிபுகழ்ந் தேத்தலும்
நீடு றும்மழை பெய்கெனப் பெய்தலும்
கூடி லாற்றவர் நல்லது கூறுங்காற்
பாடல் சான்மிகு பத்தினிக் காவதே.

236. தார நல்லிதந் தாங்கித் தலைநின்மின்
ஊரு நாடு முவந்த வொருதலை
வீர வென்றி விறன்மிகு விண்ணவர்
சீரி னேத்திச் சிறப்பெதிர் கொள்பவே.

கற்பின்மகளிர்.

237. பள்ள முதுநீர்ப் பழகினு மீனினம்
வெள்ளம் புதியது காணின் விருப்புறூஉம்
கள்ளவிர் கோதையர் காமஞ்ஞ டாயினும்
உள்ளம் பிறிதா யுருகலுங் கொண்ணீ.

238. உண்டியுட் காப்புண் டுறுபொருட் காப்புண்டு
கண்ட விழுப்பொருட் கல்விக்குக் காப்புண்டு
பெண்டிரைக் காப்ப திலமென்று ஞாலத்துக்
கண்டு மொழிந்தனர் கற்றறிந் தோரே.

239. தளிப்பெயற் றண்டுளி தாமரை யின்மேல்
வளிபபெறு மாத்திரை நின்றற் றிருவன்
அளிப்பவற் காணுஞ் சிறுவரை யல்லாற்
றுளக்கிலர் நில்லார் துணைவளைக் கையார்.

240. எத்துணை யாற்று னிடுமண னீர்த்துளி
புற்பனி யுக்க மாத்திலை நுண்மயிர்

---

(234) யாப். வி. 94; யாப். கா. ஒழி. 7 மேற்; நன். 415, மயிலை, உரை
[1]மூழ்ந்து. (235-240) வினையாபதி (புறத்).

அத்தகை யும்பிற ரஞ்சொலி னுர்மனம்
புக்கன மென்று பொதியறைப் பட்டார்.

241. தலைமகனிற் றீர்ந்தொழுக நுன்பிறரிற் சேறல்
நிலைமையி றீப்பெண்டிர்ச் சார்தல்—கலனணிந்து
வேற்றூர் புகுதல் விழாக்காண்ட லேண்பெடுத்தல்
கோற்றொடியார் கோளழியு மாறு.

பிறர்மனை நயவாமை.

242. பெண்ணி னுகிய பேரூர் பூமியுள்
எண்ண மிக்கவ ரெண்ணினு மெண்ணிலார்
பின்னி நின்ற பெருவினை மேல்வரும்
என்ன தாயினு மேதில்பெண் ணீக்குமின்.

புதல்வரைப் பெறுதல்

243. பொறையிலா வறிவு போகப புணர்விலா விளமை மேவத்
துறையிலா வனச வாவி துகிலிலாக் கோலத் தாய்மை
நறையிலா மாலை கல்வி நலமிலாப் புலமை நன்னர்ச்
சிறையிலா நகரம் போலும் சேயிலாச் செல்வ மன்றே.

அன்புடையார்.

244. நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று [1]முனிவ செய்யார்
அன்பு வேண்டு பவர்.

245. சொல்லுப சொல்லப் பெறுபவே யாதொன்றுஞ்
சொல்லாத சொல்லப் பெறு.

246. எல்லாரு மெந்தமக்கே
நல்லறிவே யுளவென்பார்
நல்லார்க ணனிதெரியிற்
கல்லாரும் கற்றருமே
சொல்லாலே வெளிப்படுவர்
அதனால்,
மண்மிசை மாண்ட கற்பின்
விண்ணெழு வீடு விழைக்குமா லதுவே.

---

(241) தொல். பொரு. 154 நச். (242, 243) வாயாபதி (புறத்). (244) யாப். வி. 15, 66; வீரசோ யாப். 15 உரை; இலக். வி. 731 உரை; [1]முனிவு செய்யார், முனிவுசொல்லார். (245) யாப். வி. 53, 57; (246) மேரு. 15.

நாடைக்கம்.

247. ஆக்கப் படிக்கு மருந்தாவாய்ப் பெய்விக்கும்
போக்கப் படிக்கும் புலைநாகத் தும்ப்பிக்கும்
காக்கப் படுவன விந்திரிய மைந்நிலும்
நாக்கல்ல தில்லை நனிவெல்லு மாறே.

248. கல்லாதார் வாயிற் கடுஞ்சொல்லாங் காரரவு
நல்லாரைச் சென்று நனிகடிக்குஞ்—சொல்லாலோர்
மந்திரமு மில்லை மகிதலத்தே மற்றுமொரு
தந்திரமு மில்லையதன் சால்பு.

249. வெறியுறு கைழ்ச்சண்ணி வெகுத்தர் டட் காயிலும்
உறவுற [1]வருவன வரைப்பன வுரைப்பதற் கற்
செறிவுறு [2]தொழிலினர் சிறந்தவ ரிவர்கடங்
கறிவுறு தொழிலொன் றல்லாலை யொல்லு நிலின்
பிறபிற நிகழ்வன பின்.

250. கெட்டகழு தைக்குரல கெண்பார்குரில் கூபின்
கட்டவர்கள் பொண்மகிழ்வர் கண்பரனெஞ் டென்னோ
பட்டபொருள் சொல்லலுற வுண்டெனினும் யாரும்
வெவட்டென வரைத்தலை விடுத்திடுவி னென்றான்.

பொறியோர்.

251. நிற்பவே நிற்பவே நிற்பவே நிற்பவே
செங்நெறிக் கண்ணும் புகழ்க்கண்ணுஞ் சால்பினும்
மெய்ந்நெறிக் கண்ணுஞ்சூழ் வார்.

252. காதன் மதியங் களங்கமுடைத் தாலுலும்
பூதலத்தை யெல்லாம் பொலிவித்தும்—தீதிலில
குற்ற முடையா ரெனினுங் குவலயத்தின்
நற்றகையார் நல்லரென்றே நாடு.

253. பெரியோ ருழையும் பிழைநிறுத்துண் டாயின்
இருநிலத்தில் யாரு மறிதல்—தெரிவிக்கும்
தேக்குங் கடலுலகில் யாவர்க்குந் தெள்ளமுதம்
வாக்கு மதிமேன் மறு.

---

(247) வஜ்ராபதி (புறத்). (248) வீரசோ. அலங். 23. மேற். (249) யாப். வி. 67; யாப். கா. செய். 7 மேற்; இலக். வி. 731 மேற். [1]வரும்வழி. [2]தகையினர். (250) நீலகேசி. மேற். (251) நே. 51. (252) வீரசோ. அலங். 20 உரை. (253) நே. நே. 33 உரை; நன்னி. 83. மேற். இலக். வி. 678.

254. எண்ணும் பயன்றாக்கா தியார்க்கும் வரையாது
மண்ணுலகில் வாம னருள்வளர்க்குந்—தண்ணறுந்தேன்
பூக்களிக்குந் தாராய் புகழாளர்க் கெவ்வுயிருங்
காத்தளிக்கை யன்றே கடன்.

பெரியோர் சிறியோர் இயல்புகள்.

255. உலகினுட்,
பெருந்தகையார் பெருந்தகைமை [1]பிறழாவே பிறழினும்
அருந்தகைய [2]பிறவரைமே லெரிபோலச் சுடர்விடுமே
சிறுதகையார் சிறுதகைமை [3]சிறப்பென்றும் பிறழ்வின்றி
[4]உறுதகைய வுலகிற்கோ ரொப்பாகித் தோன்றுவே.

256. சொல்லாம லேபெரியர் சொல்லிச் சிறியர்செய்வர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே—நல்ல
குலமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடிற்
பலாமாவைப் பாதிரியைப் பார்.

257. பசுப்போல்வார் மூற்பட்டாற் பாற்பட்ட சான்றோர்
முசுப்போல முள்காந் திருப்பார்—பசுத்தான்
வெருளினு மெல்லாம் வெருளுமஃ தன்றி
மருளினு மெல்லா மருண்ம்.

258. எற்றே கொடிமுல்லை தன்னை வளர்த்தெடுத்த
மூற்றிழையாள் வாட முறுவலிக்கும்—[1]முற்றும்
முடியாப் பாவை முழங்குலகத் தென்றுங்
கொடியார்க்கு முண்டோ குணம்.

259. ஆலைப் பலாவாக்க லாமோ வருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ—நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ கருணையிலா
மூர்க்கரைச்சீ ராக்கலா மோ.

260. குரங்கனலில் வீழ்ந்துவெறி கொண்டுதேள் கொட்டக்
கரந்செறியப் பாம்பலவன் கவ்வ—விரைந்துபேய்

---

(254) வீரசோ. அலங். 20 உரை; தண்டி. 47; இலக். வி. 651. (255) யாப். வி. 94; வீரசோ. யாப். 13 உரை; யாப். கா. ஒழி 8 மேற் [1]பிற ழாரே. [2] வீறுவரைமே. [3] சிறப்பெனினும் [4]உறுதகைமை பிழைப்பினும் (ஏ.பா.) (256) ஒளவையாக்கென்பர். (257) நன். 95 மயிலைநாதருரை. (258) வீரசோ. அலங். 20 உரை; தண்டி. 47 உரை. [1]முற்ற (260) [2]காளமேகப்புலவர்பாக் கென்பர்

பற்றவே கள்ளுண்டு பச்சைமிள கைக்கடித்தால்
எத்தனைபார் சேட்டைக் கிடம்.

261. ஞானம் பெருமை நயங்கருணை புண்மையறி
மானம் பொறுமை வணக்கமுயர்—தானமுடன்
சற்குணமா சாரந் தகுங்கல்வி நீதிநெறி
நற்குணருக் கில்லையென்றே சொல்.

தத்துவப்பிரகாசர்பாட்டு.

262. குரங்குமாய் நண்டுகட்டித் தேருந்தங் கொட்டிக்
குடியாத மதுக்குடித்துப் பேயு மேறி
இரங்கவருங் காஞ்சொறியின் பொடியுந் தூவி
யிஞ்சிதின்று கொள்ளிபிடித் [1]தெழுந்தாற் போலத்
தருங்கருணை யில்லாத புல்லர் வாழ்விற்
றண்டிகையின் மீதேறிச் சம்பத் தேறிக்
கருங்கைமதக் களிறேறிக் கழுவி லேறிக்
காடேறி நாடேறித் திரிவார் கண்டீர்.

263. பாம்புகடித் தாலதுவு மீட்க வல்லோம்
பசாசறைந்தா னீறிட்டுப் பார்க்க வல்லோம்
வேம்புகசப் பறக்கறியு மாக்க வல்லோம்
விறல்வேழத் தகிகமதந் தணிக்க வல்லோம்
சாம்பொழுது திடமாகப் பேச வல்லோம்
தாணியின்மேற் கல்லாத தொன்று மில்லை
தீம்பரைநல் லவராக்கிக் [2]குணமுண் டாக்குந்
திறமறியா தேநின்று திகைக்கின் றோமே.

அறிவின்மை.

264. கல்லார்க் கினிய வுரைத்தலுங் கைக்கொண்டு
வில்லாளைக் கோலாற் புடைத்தலும்—நில்லஞ்
சிறியாரைக் கொண்டு புகலுமிம் மூன்றும்
அறியாமை யான்வருங் கேடு.

265. அந்தக னந்தகற் காறுசொலல் யாதொக்கும்
மூந்துசெய் குற்றங் கெடுப்பான் முழுவதும்
நன்கறி வில்லா னலுவதி யாதவற்
கின்புறு வீட்டி னெறிசொல்லு மாறே.

---

(261) அருணைசலக்கவிராயர்வாக்கென்பர் (தமிழ்ப் பு ல. ச. பக். 20) (262, 263) தமிழ்நா. 235, 236. [1]எழுந்தாற் போலத். [2]குணமுண் டாக்கத் திறமதறி யாமனின்று. (264) தஞ்சைச் சரச்சுவதிமாலிலுள்ள பிரதியொன் றிற் கன்னடபாடல். (265) வேதாரணியபதி (பழைத்.)

நல்குரவு.

266. பெண்டிர் மதியார் பெருங்கிளை தானது
கொண்டவீ ழுகா குறிப்பி னஃகுப
வெண்டலை நின்று வெறுக்கை யிலாயின்
மண்டினர் போல்வர்த மக்களு மொட்டார்.

267. சொல்லவை சொல்லார் சுருங்குபு சூழ்ந்துணர்
கல்லவை யாரு நனிமதிப் பாரல்லர்
கல்வியுங் கைப்பொரு ளில்லார் பயிற்றிய
புல்லென்று போதலே மெய்யென்று கொண்மீ.

268. தொழுமக ளுயினுந் துற்றுடை யானைப்
பழுமரஞ் சூழ்ந்த பறவையிற் சூழ்ப
விழுமிய சோறும் வெறுக்கை யுலந்தாற்
பழுமரம் வீழ்ந்த பறவையிற் போப.

269. பொருளில் குலனும் பொறுமையி னென்பும்
அருளி லறனு மமைச்சி லரசும்
இருளினு ளிட்ட விருண்மயி ரென்றே
மருளில் புலவர் மனங்கொண் டுரைப்ப.

ஔவையார் பாட்டு.

270. உடையரா யிச்சென் றக்கா லுரைசெல்லாஞ் சுற்றம்
முடவரா யக்கோ லூன்றிச் சென்றக்காற் சுற்றம்
[1]உடையாரும் வேறு படும்.

271. [1]கவிகற் றவர்க்குங் கணிகற் றவர்க்குங்கம் மாளருக்கும்
ஓவிகற் றவர்க்கு முவாத்தி களருக்கு முயர்ந்தமட்டுங்
குவிவைக்கு மொட்டர்க்குங் கூத்தாடி கட்குங் குருக்களருக்கும்
இவ ரிட்டுப் பேர்கட்கு நீங்காத் தரித்திர மென்றைக்குமே.

(266–269)வேளையாபதி(புறத்). (270)யாப்.வி. 93; [1]உடையவியும். (271) தனிப்பா. [1]கவிகற்ற பேர்க்குங் கணிகங்கற் றோர்க்குங்கம் மாளருக்குங், குவி கட்டு மொட்டர்க்குங் கூத்தாடி கட்குங் குருக்களருக்கு, மவியுற்ற யோகிக்கும் வாத்திமை யோர்க்கும்வண் ணாருக்களருக்கும், இவரெட்டுப் பேருக்கும் வெய்ய தரித்திர மெய்,றிலமே (செந்தமிழ். தொ. 22, பக். 58, 59)

272. கருங்கட லுடுத்த மல்லன் ஞாலத்துச்
செம்மையின் வழாஅது கொடைக்கடம் பூண்டு
வாழ்வது பொருந்தா தாகிற்
சாவது மினிதவர் வீவது முறுமே.

273. உவர்க்கட லன்ன செல்வரு முளரே
கிணற்றூற் றன்ன நீயுமா ருளையே
செல்வர்தாம் பெருந்திரு வுறுக பல்பகல்
நீவா ழியரோ நெடிதே யீயாச்
சிறுவிலைக் காலத் தானு
முறுபொரு டந்தெஞ் சொற்கொள் வோயே.

274. மின்னுந் தமனியமும் வெற்றிரும்பு [1]மோரினமாய்ப்
பொன்னின் பெயர்படைத்தாற் போலாதே—கொன்னே
ஒளிப்பாரு மக்களா யொல்லுவ தாங்கே
யளிப்பாரு மக்களா மாறு.

275. சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்க—நித்தம்
நடையு நடைப்பழக்க நட்புந் தயையுங்
கொடையும் பிறவிக் குணம்.

276. ஆர்த்தசபை நூற்றொருவ ராயிரத்தொன் றும்புலவர்
வார்த்தை பதினா யிரத்தொருவர்—பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே தாதாகோ டிக்கொருவர்
உண்டாயி னுண்டென் றறு.

277. சிறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்கா ஞாலப்
பெறுநன்றி [1]மன்னும் பெரிதென்—றுறுநன்றி
தானவாய்ச் செய்வதூஉந் தானமன் றென்பவே
வானவா மூள்ளத் தவர்.

278. துற்ற னவாத் தொகுத்து விரல்வைத்த
தெற்றுக்கம் தென்னி னிதுவதன் காரணம்
அற்றமி றன மெனைப்பல வாயினுங்
கற்றவி ழொவ்வாத் தினிவென்னு மாறே.

(272) யாப். வி. 53. (273) நன். 268 மயிலைநாதருரை; [தஞ்சைச் சரச்சுவதிமால் வட்டுப்பிரதி யொன்றில் ஒருபாட்டாகக் காணப்படுகின்றது]. (274) பெரும்பொருள்விளக்கம் (புறத்; தொல். பொ. 90. நச்.) [1]மொன்றுகிப. (276) ஒளவைவாக்கென்பர். (277) யாப். வி. 4, 95; யாப். கா. ஒழி. 1 மேற். [1]மின்னும். (278) வளையாபதி (புறத்).

279. ஈட்டிய தெல்லா மிதன்பொருட் [1]டென்பது
காட்டிய கைவண்மை காட்டிஞர்—வேட்டொறுங்
காமருதார்ச் சென்னி கடல்சூழ் புகார்வணிகர்
தாமரையுஞ் சங்கும்போற் றந்து.

ஈயாமை.

280. இறைத்தொறு மிறைத்தொறு மணற்கிணற்றிற் சுருங்காது
பன்னு ணிற்பினும் புண்ணடையின் மிகாஅது
இரப்போர்க் கீயுங் கடனறி வாளர்
கையோ மூடங்கக் கண்டது மிலையால்
ஈயா மாந்த ரீட்டிய பெரும்பொருள்
பாரி பறம்பிற் பனிவரை போல
உயரக் கண்டது மிலையா லறனறிந்
தற்றோர்க் குதவா ஞயிற்
கற்றோர் விச்சையொடு கல்லா ஞயிற்
இளமூலை மாதரின்னகைச் செவ்விக்
கலவி யின்பங் கலவா ஞயின்
விருந்துற வருந்தா ஞயின்
மருந்தோ வாழ்க்கை மாநிலத் தீர்ாக்கே.

281. சுற்றுங் கருங்குளவி சூரைத்தூ ருரியப்பே
யெற்றுஞ் சுடுகாட் டிடுகரையின்—புற்றில்
வளர்ந்த மடற்பனைக்குள் வைத்தமித மெஞ்சுங்
தளர்ந்தோர்க்கொன் றீயார் தனம்.

ஒளவையார்.

282. கருங்குளவிச் சூரைத்தூற் றிச்சங் கரிபோல்
வருந்தினர்க்கொன் றீயாதான் வாழ்க்கை—பருப்பதமில்
தேச்சித் திரிந்தபொரு டாயத்தார் கொள்வதிர
வற்றோமற் றீற்றோமற் றெற்று.

283. தண்டாம ரீவது தாளாண்மை தண்டி
அடித்தக்கா லீவது வண்மை யதுத்தடுத்துப்
பின்சென்று மீவது காற்கூலி பின்சென்றும்
பொய்த்தா னிவனென்று மேமே லவன்குடி
எச்ச மிறுமெ னிறு.

---

(279) பெருமைபொருள்விளக்கம். (புறத்; தொல். பொரு. 75 ந.) [1]டென்பதே. (280) தஞ்சைச் சரச்சுவதிமஹால் ஏட்டுப்பிரதியொன்றிற்கண்ட பாடல்; (281-282) ஔவையார்வென்பர் (தனிப்பா.) (283) தகுந்த ... 33

284. பாடல் பெறுனேற் பலர்மெச்ச வாழானேல்
நாடறிய நன்மணங்க ளுடானேற்—சேட
னிவன்வாழும் வாழ்க்கை யிருங்கடல்சூழ் பாரிற்
கவிழ்ந்தென் மலர்ந்தென்னே காண்.

285. நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காங்
கொள்ளைக்காங் கள்ளருக்காங் கோவுக்காஞ் சாவுக்காங்
கண்ணார்க்காங் கீக்காருங் காண்.

ஒரூஉ யியலாகிது.

286. கல்லு முடி கூட்டுங் கனிறுஞ் சுரைப்பழத்தின்
உண்ணுடிப் புக்க வுறுபொரு நு—மன்னுஞ்
சனங்குறைந்த வாலிறன் கயமர்பாற் செல்லு
தினங்கெரிந்த வாலினவே செப்பு.

287. வெள்ளரிலவே லற்பழுன் மெத்தவே மூட்டைக்குங்
புள்ளுருவ வாழைபலாச் சோலைக்குள்—மெள்ள
அதிக்கவொட்டா வாழுவோ லற்பர்கிலர் கூடிக்
கொடுக்கவொட்டார் தாமுங் கொடார்.

288. கல்லா லயமாம் தெவருமாங் கழுதை கசடர் பொதிசுமக்குங்
கடாவோ வுழுது பயிரிடற்காங் கட்டம் பன்றிக் கிரையாகும்
புல்லே மீசர் வாகனமாம் பொதியுஞ் சுமக்கும் பிணமெனிலோ
பூரி முடித்து மறையோர்க்குப் பொருளு மீந்து புகழெய்தும்
மல்லார் குட்டிச் சுவரெனிலோ மாடு முரைஞ்சு மறைவாகும்
மதியாத் துடைப்பந் தானெனிலோ மாட கூடந் தானெவிளக்கும்
அல்லா குழுத்தன் றனக்கிணையா யாரை யுரைப்பன் புவிமீதில்
யவனங் குறித்துக் கூறுமிடத் தவனுக் கவனே யிணையாமே.

வற்றல்.

289. நிலம்பொறை யாற்று நிதிபல கொண்டுங்
குலம்பெறுதிங் கந்தணர் கொள்ளார்—நலங்கிளர்
தீவா யவிசொரியத் தீவிளக்கு மாறுபோற்
றூவா வெனினிறந்தார் தாம்.

(284, 285) ஔவை வாக்கென்பர். (286) செந்தமிழ். 4, 180: (287) ஷே. 3, 481. (288) இராமசந்திரகவிராயர் வாக்கென்பர். (289) பெரும் பொருள்விளக்கம் (புறத்; தொல். பொருளதி. 75.)

நன்றிமறவாமை.

290. முன்னொருவன் செய்யு முபகார மூவுலகந்
தன்னைக் கொடுத்தாலுஞ் சாலுமே—யென்னே
உயிர்க்குறுதி யாக வொருவர்சோ றுண்டார்
பிறர்க்குரிய ராவரோ பேசு.

புகழ்.

(இரண்டு திருக்குறளினீத்த பாட்டு).

291. எய்தற் கரிய வியன்றக்கா லங்கிலையே
செய்தற் கரிய செயலென்று—வையத்
தீதி லிசைப வாழ்த லதுவல்ல
தாதிய மில்லை யுயிர்க்கு.

292. வெய்ய சுரஞ்சென்றி வெஞ்சினவே றுட்கொளினும்
பெய்யு [1]மழைமுகிலைப் பேணலரால்—வையத்
திருள்பொழிபுங் குற்றம் [2]பலவெளிறும் யார்க்கும்
பொருள்பொழிவார் மேற்றே புகழ்.

293. கல்லார் நாவிற் கட்டுரை கொள்வார்—புகழெய்தார்
புல்லார் வாயிற் சொற்பெறா வற்றூர்—புகழெய்தார்
நல்லார் மேவு நண்பு துறந்தார்—புகழெய்தார்
இல்லா ராய்ந்தின் றின்ப முவந்தார்—புகழெய்தார்.

நிலையாமை.

294. ஒருவ லெண்பது சென்றது நின்ற
வின்றுஞ் செல்லா நின்ற முன் சென்று
வருநாள் கண்டவர் யாரே யதனால்
ஒருநா ளகப்படத் துடையோ நின்மையி னின்
இல்லது நாடுமி னுள்ளது கொழுமின்
வாழ்வி லின்பமும் புணர்மி னைந்தாண்டு
கீழது சேரக் புகினு மேலது
விசும்பின் பிடர்த்தலை யேறினும் புடையது
சேமி மால்வரைக் கப்புறம் புகினும்
கோள்வாய்த் துஞ் கொட்குங் கூற்றத்து
வீளிக் கொடுஞ் விலக்குதற் கரிதே

---

(290) பாரதவெண்பா. (291) யாப். வி. 60. (292) வீரசோ. அலங். 20; தண்டி 47; இலக்.வி. 651. [1]மூஇறன்னோப. [2]பலவரினும், இருப்பினும். (293) வீரசோ. யாப். 15, மேற். (294) ஆசிரியமாலை (புறத்.)

295. பலமுறையு மோம்பப் படுவன கேண்மின்
சொலன்முறைச் சுட்டோன்றிச் சுடர்மணித் தேர்ந்து
நிலமுறையி ஞண்ட நிகரிலார் மாட்டுஞ்
சிலமுறை யல்லது செல்வங்க ணில்லா
விலங்கு மெறிபடையு மாற்றலு [1]மாண்புங்
கலந்ததங் கல்வியுந் தோற்றமு மேன்மைப்
பொலஞ்செய் பூணகலமெ டில்வாற மெய்யும்
விலங்கிவருங் கூற்றை விலக்கலு மாகா
அனைத்தாத வரியிருங் காண்டிற் சினைத்தகக்
கூறிய வெம்மொழி பிழைபாத
தேனிரீ ரொராஅற்கிற் கொன்றுபயன் றருதலே.

296. பாலை மாக்கடற் [2]பொறுகி ரார வரவும்
பண்டைச் [3]செய்தி யின்றிவண் வரவும்
பகற்பின் மூட்டா தெரிவ ளாய வரவும்
பகிபு மார்கையும் வரவும்
பரியினும் பேரா நுவப்பினும் வருமே.

297 இளமையு நிலையாவா லின்பமு நின்றவல்ல
வளமையு மதிதிகபால் வைகலுந் தூண்டிவெள்ளம்
உளவென நினைபாதே செல்சுதிக் மென்றுமென்றும்
வினைதில முழுவார்போல் விக்துநீர் செய்துகாண்மின்.

298 கண்டார் காலுற வுலகத்தே காதல் செய்து நில்லாதே
பண்டே பரமன் பாடைத்தாட் பார்த்து நின்று நையாதே
தண்டா மூப்பு வந்துன்னைத் தளரச் செய்து நில்லாமுன்
உண்டே லுண்டி விக்கதிவ் வுலகம் மறிய வைம்மினே.

299. நில்லாது செல்வ நிலவா ருடம்படைத்தார்
சொல்லா தொருகுவிகன்று சிந்தித்து—[4]நல்லார்
அருளாளம் புரிகுவ ராயி
னிருவாறு சிவகதி யெய்தலோ வெளிதே.

300. அந்தரத் துள்ளே யகங்கை புறங்கையா
[5]மந்தரம் போலு மனைவாழ்க்கை—[6]அந்தரத்து
வாழ்கின்றே மென்று மயிழன்மின் வாளரவம்
போகின்ற பூவையே போன்று.

---

(295) யாப். வி 55.; யாப். கா. செய். 15. மேற். [1]அன்பும். (296) யாப். வி. 40, 58. [2]பதினிரை. [3]செய்தியினின்றிவண். (297) வினையாபதி (புறத்.) (298) திருவெள்ளறைச் சாஸனப்பாடல் (செந்தமிழ். 4, 399). (299) யாப்; வி. 55. [4]நல்லவ ருள்ளம் புரிகுவ. (300) வீரசோ. யாப். 5; யாப். வி. 37. யாப். கா. ஒழி. 6, மேற் ; [5]மந்தரமே. [6]மந்தரத்து.

301. கல்வியா னல்லனே காமாதி யாற்றீயன்
செல்வத் துயர்ந்தான் குலத்தினிற் முழ்ந்தனனும்
வல்லுவா னெனன்றென்று வல்லா னிதுவன்றே
நில்லா யமருக்கு நீர்மை.

பாக்கை நீலியாமை.

302. யாணர் வரவின் மேனு ளீங்கிவன்
நிலைமைச் செய்யி னயந்த பேதையர்
காத லுண்கண் வருபனி நீங்கி
இன்றுத துயில்கொண் டிலனே யின்றிவன்
போர்வை பகையற வுணங்கிப் பாணர்
பழந்தலைச் சீறியாழ் போலக் குரலுழிக்கு
நரம்புமடிந் நிவாத்த யாக்கை மூப்புவப்
பனிவகறை மூதார் மன்றத்துப்
பொதியிற் புறஞ்சிறைச் சார்ந்தனன் மன்னோ.

303. உள்ளது நரந்தநி கள்ள யாக்கை
மேம்படு குற்ற மூன்றெரு வழங்கலின்
உண்டி கல்லாசு தண்டத்தின் வகுத்த
நோன்சிணி யகப்பட் டிருப்பினும்
தோன்றுவது பின்னர்க் காபபது முன்னே.

304. நீல நிறத்தனவாய் நெய்கனிந்து போதவிழ்ந்து
கோலங் குயின்ற குழல்வாழி நெஞ்சே
கோலங் குயின்ற குழலுங் கொழுஞ்சிகையும்
காலக் கனலெரியின் வேம்வாழி நெஞ்சே
காலக் கனலெரியின் வேவன கண்டாலும்
சால மயங்குவ தென்வாழி நெஞ்சே.

305. வேற்கண் மடவார் விழைவெழிய யாம்விழையக்
கோற்கை யிறைகாட்டக் கொல்கூற் றுழையதா
நற்ப திகந்தா னரைத்தாது வந்ததினி
நீத்த நுணர்வா நிலையா நிளமையே.

306. கழிந்த நிளமை கவிடையக்கள் தீர்ந்த
கொழிந்தது காதன்மே லுள்ளஞ்—கழிந்து
முருகெறிபுன கூந்தலா காதலெனய் தீர்ந்த
தொருநெறியே சேர்ந்த நிளம்.

---

(301) கீலி 8 ஞ், மொக்கல, 113, சமயதிவாகர நரை, (302, 303) ஆசிரிய மாலை (பழைய) (304) வியோயாபதி; பாப். வி, 93, (305) வியோயாபதி (புறத), (306) வீரசோ, அலங, 26 உரை; நண்டி, 6 உரை,

307. நன்கென நாறுமி தென்றிவ்
வுடம்பு நயக்கின்ற தாயின்
ஒன்பது வாயில்க டோறு
மூண்ணின் றழுக்குச் சொரியத்
தின்பதொர் நாயு மிழுப்பத்
திசைதொறுஞ் சீப்பில்கு போழ்தின்
இன்பநன் ஞற்ற மிதன்க
ணெவ்வகை யாற்கொள்ள லாமே.

308. உறுப்புக்க டோமுடன் கூடி
யொன்ரு யியைந்த பெரும்பை
மறைப்பில் விழைவிற்குச் சார்வாய்
மக்குவ தேலிவ் வுறுபபுக்
குறைத்தன போல வழுகிக்
குறைந்து குறைந்து சொரிய
வெறுப்பிற் கிடந்த பொழுதின்
மீவண்டப பதிவது முண்டோ.

செல்வநிலையாமை.

309. அரையது மூகிலீல மார்பின தார
முடியது முருகு நாறுந் தொடையல்
புடையன பால்வெண் கவரியின் கற்றை
மேலது, மாலை தாழ்ந்த மணிக்காற் றூளிக்தை -
முன்னது முரசு முழங்குந் தானை
யிந்நிலை யிலைய செல்வத் தீங்கிவர்
யாவ ரேயோ தேவ ரல்லர்
இமைப்பதுஞ் செய்தனர் மாந்த ரேயென
மயக்க நீங்கக் கனிற்று மிரச வுக்தனர்
தெருமர் வின்றிவர் பரிப்பினி னாய்தலின்
உணர்ந்திய நூணர்பு மூதி்த்து
மாகரீப மீபார்க்த யாக்கையாய்
நரமே யொருக்கை யிரந்தனர் மன்னை.

310. விரித்தகர் வெப்ப விளங்கு முடம்பினித்தா
மத்தக மாண்பறிதல் காலனாரி வெரந்தி
மத்தக மாண்பறிதல் கண்டான் படர்சாரித

(307, 308) குண்டலகேசி (புறத்.) (309) ஞானசாரம்(புறத்.). (310) ஐோயாபதி (யாப். வி. 93)

உத்தம நன்னெறிக்க ணில்வாழி நெஞ்சே
உத்தம நன்னெறிக்க ளின்மூக்கஞ் செய்கியேற்
சித்தி படர்த தெளிவாழி நெஞ்சே.

311. வெள்ள மறவி விறல்வேந்தர் தீத்தாயங்
கள்வரொன் றிவ்வாற்றிற் கைகரபபத் தீர்ந்தகலும்
உள்ளி னுறுபொருளை யொட்டா தொழிந்தவர்
எள்ளும் பெருந்துயர்நோ யெவ்வ மிகப்பவே.

312. ஒழிந்த பிறவற முண்டென்பா ருட்க
வழிந்து பிறரவாம் வம்பப் பொருளா
இழந்து சிறிதாணு மெய்தா தொழிந்தார்
அழிந்து பெருந்துயர்நோய்க் கல்லாப் பவரே.

313. நின்மை யிழிவா முடைமை யுயிர்க்கச்சம்
மன்னல் சிறிதாய் மயக்கம் பெரிதாகிப்
புன்மை யுறுநம் புரைபி லருமம்பொருளை
துன்னு தொழிந்தார் துறவோ விழுமியீர்.

314. ஈண்டு லரிதாய்க் கெடுத லெளிதாகி
நாண்டல் சிறிதாய் நடுக்கம் பலதருஉம்
மாண்பி லியற்கை மறுவி லரும்பொருளை
வேண்டா தொழிந்தார் விறலோ விழுமியீர்.

315. இல்லெனின் வாழ்க்கையு மில்லபுண் டாய்விடிற்
கொல்வர் கயவர் கொலைப்பட்டும் வீடுவர்
இல்லையுண் டாய்விடி னிம்மை மறுமைக்கும்
புல்லென்று நாட்டும் புணர்வது மன்பீறை.

அருளுடைமை.

316. ஆற்று மின்னரு ளாருயிர் மாட்டெலாம்
தூற்று மின்னறத் தோநனி தூண்ணன்மின்
மாற்று மின்கழி யாயமு மானமும்
போற்று மின்பொரு ளாவினை கொண்மதீர்.

317. பொருளைப் பொருளாப் பொருந்தாம்பல் செய்பா
கருளைப் பொருளா வறஞ்செய்தல் வேண்டும்
அருளைப் பொருளா வறஞ்செய்து வான்கண்
இருளிலியல் பெய்தாத தென்னே நமர்காள்.

கொல்லாமை.

318. எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃகு வார்க்கில்லை வீடு.

319. இந்நோய் நமக்குண்டென் றெண்ணுதே யெவ்வுயிரும்
முன்னேவக் கொன்றுண்ணு மூர்க்கர்தாம்—எந்நோவும்
பண்ணப் படுகரகிற் பாவிகளிற் பாவிகளென்
றெண்ணப் படுவரிசைந்து.

320. தகாதுயிர்கொல் வானின் மிகாமையிலை பாவம்
அவாவிலையி லுண்பான் புலால்பெருகல் வேண்டும்
புகாவலை விலங்காய்ப் பொருதுபிற தூன்கொன்
றவாவிலையில் விற்பானு மாண்டருகல் வேண்டும்.

321. பிறவிக் கடலகத் தாராய்ந் துணரிற்
றுறவுயிற் குற்ற பிலார்களு மில்லை
யுறவகை யோரா விடத்து மிசைவோர்
குறவின்றித் தஞ்சுற்றந் தின்றன ராவர்.

322. உயிர்க ளோம்பி னுலன்விழைக் துண்ணன்மின்
செயிர்க ணீங்குமின் செற்ற மிகந்தொழுக்
கதிக ணல்லுருக் கண்டனர் கைதொழு
மதிகள் போல மதுவிலர் மீதான்றுளிர்.

323. உலகுடன் விளங்கவுயர் சீர்த்திநிலை கொள்ளி
னிலகுபில் நகி னான்றினிடை நின்றுதவி மாயும்
அலகுபுய மருஞ்சினவி லஞ்சவரும் வஞ்சக்
கொலையியாழியி னென்றுகரி கூறின ரறிந்தார்.

பொய்யாமை.

324. அற்றன் றரிதலதுதான் மனஞ்செய்தல்
வெற்றன் மாட்டு நிகழ்த்தல் பிறவுரைத்தல்
மற்றித் தன்மை பயனாயின் மாண்டிலர்க்
குற்றப் பொய்யிபன் னுரைப்பர் குணமிக்கார்.

325. கல்வி யிம்மையு மிகப்பிறருள் மீதாகவும்
கல்லில் செல்லல்ல ளாளலி வண்மையும்
பொய்யில் பொய்யாடி கூறுதற் காகுதல்
அய்ய மில்லை யதுகடிந் தீதாம்புமின்.

(318) யாப் வி. 3. (319) பாரதவெண்பா. (320–323) வளை பாபதி. (புறத்.) 324. நீலகேசி. மேற்.
(325) வளையாபதி (புறத்.)

326. பொய்யி னீங்குமின் பொய்யின்மை பூண்டுகொண்
டையு மின்றி யறநெறி யாற்றுமின்
வைகல் வேதனை வந்துற லொன்றின்றிக்
கவ்வை யில்லுல கெய்துதல் கண்டதே.

கள்ளாமை.

327. பீடில் செய்திக ளாற்கள விற்பிறர்
வீடில் பல்பொருள் கொண்ட பயனைகக்
கூடிக் காலொடு கைகளைப் பற்றிவைத்
தோட லின்றி யுலையக் குறைக்குமே.

தவம்

328. வரிக்கடை நெடுங்கண் விளங்க மேதக
மணித்தோடு பெய்து வாண்முகந் திருத்தி
நானிலம் வளர்த்த பாவையொடு கெழீஇய
கான்யாற்று வருபுன லாடலுங் தீமலர்
வல்லிப பந்தர் வண்டுவா ழொருசிறை
நிலமகட் புணருஞ் சேக்கையு மரமுதன்
மெல்லுரி வெண்டுகி லுடையுந் தொல்வகைப்
படைபுழா வீளையுளி னுணவு மந்திரத்துச்
சுடர்முதற் சூலமுறை வளர்த்தலும் வரையாது
வருவிருந் தோம்புஞ் செல்வமும் வரைமுதற்
காடுகைக் கொள்ளு மூரைபுரு மெ ற்றிவ்
வெண்வகை மரபி னிசைந்த வாழ்க்கை
யையம்பொறிச் சேனை காக்கு மாற்றலொடு
வென்றுவிளங்கு தவத்தின ராசியற் பெருமை
மாக்கட லுடுத்த வரைப்பின்
யார்க்கினி தன்றஃ தறிபுநர்ப் பெறினே.

329. [1]மேனமக் கருளும் வியனருங் கலமே
மேலக விசும்பின் வீழவொடு வருமே
மேருவரை யன்ன விபுத்குணத் தவமே
மேவதன் நிறநனி மிக்கதென் மனமே.

(326, 327) வளையாபதி (புறத்.) (328) ஆசிரியமாலை (புறத்). (329) யாப். வி. 52, 95. [1]மேன்மக்கட் கருளும், மேன்மக்க ளுள்ளும்.

330 தவத்தின் மேலுறை தவத்திறை தனக்கல தரிதே
மயக்கு நீக்குதன் மனமொழி யொடுமெயிற் செறிதல்
உவத்தல் காய்தலொ டிலாதுபல் வகையுயிர்க் கருளே
நயத்து நீங்குதல் பொருடனே யனையது மறிநீ.

331. பொருளொடு போகம் புணர்த லுறினும்
அருளுதல் சான்ற வருந்தவஞ் செய்ம்மின்
இருளில் கதிச்சென் றினியிவண் வாரீர்
தெருளு லுறினுந் தெருண்மி னதுவே.

332. தானஞ் செய்திலந் தவமு மன்னதே
கானந் தோய்நில விற்கழி வெய்தின்
நானந் தோய்குழ னமக்குய்த லுண்டோ
மானந்சீர் கொள்கையார் மாற்றம்பொ யல்லவாய்.

பற்றறுத்தல்.

333. உலகே,
மூர்கொடுத்தார் பற்கொளவும்
பிற்கொடுத்தார் முற்கொளவும்
உறுதிவழி யொழுகு மென்ப
அதனால், நற்றிற [1]நாடுத னன்மை
[2]பற்றற யாவையும் பரிவறத் துறந்தே.

334. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகையிவை யுள்வழிப்
பற்று வினையாய்ப் பலபல யோனிகள்
அற்று யுழலு மறுத்தற் கரிதே.

335. உற்ற வுதிர மொழிப்பான் கலிங்கத்தை
மற்றது தோய்த்துக் கழுவுத லென்னுமெக்கும்
பற்றினு ளுகிய பாவத்தை மீட்டும்
பற்றொடு நின்று பறைக்குறு மாறே.

336. பருவந்து சாலப் பலர்கொலென் றெண்ணி
யொருவந்த வுள்ளத் துவத்த லொழிமின்
வெருவந்த துன்பம் விடுக்குந் திறலோன்
ஒருவ னுலகிற் குளனென்னு மாறே.

(330–332) வளையாபதி (புறத). (333) யாப்.வி. 94; தொல். செய். 80, நச்; வீரசோ. யாப். 13 உரை; யாப். கா. ஒழி. 8 மேற். [1]நாடெ. [2]பற்றிய, (334–336) வளையாபதி (புறத).

337. வேரிக் கமழ்தா ரரசன்விடு கென்ற போதும்
[1]தாரித்த லாகா வகையாற்கொலை சூழ்ந்த [2]பின்னும்
பூரித்தல் வாட லிவற்றூற்பொலி [3]யாது விட்டான்
பாரித்த வெல்லாம் வினைபின்ப வெனன்ன வல்லான்.

338. ஒருமன மாந்தர் மூவகை யுலகின்
இருமணம் பட்டுநாற் கதியுழல் வோரே
இருமணம் பட்டு நாற்கதி யுழல்வோர்
ஒருமன மாகி மூன்றுகிரி விலரே
மூன்றுகிரி வறிந்து முதலொன் றறிந்தோர்
ஆன்ற நாற்கதி யிரண்டன்வ ரிலரே
ஆன்ற நாற்கதி யிரண்டன்வ ரடைபவர்
மேற்செயன் மூன்றி னொன்றுணர்ந் தோரே.

339. கற்றுத் துறைபோய நாதலற்குக் கற்பிஞள்
பெற்றுக் கொடுத்த பெருமகன்போல்—மூற்றத்
துறந்தார்க்கு மெய்யுணர்வு தோற்றுவதே யின்பம்
இறந்தவெலாந் துன்பமலா தில்.

ஔவையார் கந்துவங் கூறிய வெண்பா.

340. ஒன்றுகண் காண்பதே காட்சி புலனைந்தும்
[4]வென்றுன்றன் வீரமே வீரமாம்—ஒன்றுறுந்
சாகாமற் கற்பதே கல்வி தனைப்பிறர்
வகாம லுண்பதே யூண்.

341. பெரும்பாவ மறத்துய்த்துப் பெறுதும்யாம் வீடென்னேம்
அரும்பாவ காரிதீ யாவர்வா யதுகேட்டாய்
வரும்பாவ மெதிர்காத்து மன்னுந்தம் பழவினையும்
ஒருங்காக வுதிர்த்தக்கா லுயிர்த்தூய்மை வீடென்றான்.

பழவினை.

342. உய்த்தன்றி யேர்தந் தழவுழு தாற்றவும்
வித்தின்றிப் பைங்கூழ் விளைக்குற லென்னெஞ்சும்
மெய்த்தவ மில்லான் பொருளொடு போகங்கட்
கெய்த்துழந் தேதா னிடர்ப்படு மாறே.

(337) குண்டலகேசி (புறத்.); [1]சோரிக்கலத்தின். [2]பொதும். [3]வின்றி கின்றுன். வீரசோ. அலங். 9 உரை. (338) யாப். வி. 95. (339) அடையாற் றப்புத்தகசாலைத் திருக்குறளோட்டிற் கண்ட பாட்டு. (340) தமிழ்நா. 59. [4]வென்றுன் றனவீர மேவீரம். (341) நீலகேசி. (342) வினாயாபதி (புறத்).

343. இட்டமுட னென்றலியி னின்னபடி யென்றெழுதி
விட்டகிவ னுஞ்செத்து விட்டானே—முட்டமுட்டப்
பஞ்சமே யாளுலும் பாரமவ னுக்கன்னும்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

344. ஆர வடமு மதிசித சந்தனமும்
ஈர நிலவு [1]மெரிவிரவும்—பாரிற்
றுதிவகையான் மேம்பட்ட தூப்புரவுந் தக்கம்
விதிவகையான் வேறு படும்.

345. தலையிழந்தா னெவ்வுபிருந் தந்தான் பிதாவைக்
கொலைபுரிந்தான் [2]குற்றங்க டீர்ந்தான்—உலகிற்
றனிமுதன்மை பூண்டொர்ந்தோர் [3]வெண்டிவலேற் றப்பாம்
வினையும் விபரீத மாம்.

346. எய்த வின்னல் வந்த போழ்தி யாவ ரேனும் யாவையும்
செய்ய வல்ல ரென்ப தோர்க செண்ணெ நிங்க ணேகிட
மைய கண்ணி செய்ய பாதம் வல்ல வாய மற்றிவன்
கைக ளின்று பன்ன சாலை கட்ட வல்ல வாயவே.

மூன்றுவது:

பொருளியல்.

அரசரியல்பு.

347. நண்ணினார்க்கு [3]நண்ணுர்க்கு நாடோறுங் கோடாமைத்
தண்ணியராய் வெய்யராய்த் தக்காரோ—டெண்ணிக்
கருங்கடல்சூழ் மாநிலத்தைக் காப்பதா மன்றே
இருங்கழற்கால் வேந்தர்க் கியல்பு.

அரசர் பெருக்கற்தரிய ஆறும் கடிதற்தரிய ஏழும்.

348. நாடிய நட்புப் பகைசெலவு நல்லிருக்கை
கூடி னரைப்பிரித்தல் கூட்டலா—நீடிலா
வேட்டல் கடிந்சொன் மிகுதண்டஞ் சூதுபொரு
ளீட்டங்கட் காமமிவை யேழு.

---

(343) ஒளவையார்சென்பர். (344, 345) நீரசோ. அலங். 20உரை; தண்டி. 47. [1]மெரிவிரியும். [2]குற்றங் கடிந்தான். (346) இராமாவதாரம் (புறத்). (347) யாப். வி 94; [3]மேனோர்க்கு. (348) பு. வெ. 9, 37. உரை.

அரசியற் சிறப்பு.

(சொற்சீரடி.)

349. திருக்கொண்டு பெருக்கமெய்தி வீற்றிருந்து
குற்றங்கெடுத்து விசும்புதைவரக் கொற்றங்குடை யெறிப்பித்து
நிலநெளியப் படைபரப்பி
ஆங்காங்குக் களிறியாத்து
நாடுவளம் பெருகக் கிளைகுடி போம்பி
நற்றூய் போல வுற்றது பரிந்து
நகத்துக்குப் பகலாணிபோலவும்
மக்கட்குக் கொப்பூழ்போலவும்
உலகத்துக்கு மந்தரமேபோலவும்
நடுவுநின்று செங்கோலோச்சி
யாறில்வழி யாறுதோற்றுவித்தும்
குளனில்வழிக் குளந்தொட்டமைத்து
முயல்பாய்வழிக் கயல்டாயப் பண்ணியும்
களிறுபிளிற்றுவழிப் பெற்றம்பிளிற்றுக்கண்டும்
களிறார் பலகால் சென்றுதேன் றேறலும்
தண்புனற் படப்பைத்தாகியும்
சூழைகொண்டு கோழியெறிந்தும்
இழைகொண் டான்றட்டும்
இலக்கங் கொண்டு செங்காஞரை யெறிந்தும்
உலக்கைகொண்டு வாலோயோச்சியும்
தங்குறை நீக்கியும் பிறர்குறை தீர்த்தும்
நாடாள்வதே யரசாட்சி.

கொடுங்கோன்மை.

350. தற்பாடு பறவை பகிப்பப் பசையற
நீர்சூல் கொள்ளாது மாறிக் கால்பொரச்
சீரை வெண்டலைச் சிறுபுன் கொண்மூ
மழைகா லூன்ற வளவயல் வியோபா
வாய்மையுஞ் சேட்சென்று காக்குந் தீதுதரப்
பிறவு மெல்லா மெறிமாறு படுமே
கடுஞ்சினங் கனைஇய காட்சிக்
கொடுங்கோல் வேந்தன் காக்கு நாடே.

---

(349) யாப். வி. 93, (350) ஆசிரியமாலை (புறத்)

கல்வி.

351. எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் மூட்டறுப்பா னேனு—மொழித்திறத்தின்
மூட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்.

352. எழுதரிது முன்ன மெழுதியபின் னத்தைப்
பழுதறவா சிபபரிது பண்பா—முழுதுமதைக்
கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டகதால்
நிற்பரிது தானந் நிலை.

353. கண்ணு வார்விழை கையு நாவாறும்
நற்றவர்க்கர சாய ஞானநற்
கண்ணி மூடியே யடைவார்கள் கற்றவரே.

354. கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகின்றாள்—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டா புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண்.

355. வான்குருவி யின்கூ வல்லரக்குத் தெரல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்—யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாகாண்
எல்லார்க்கு மொவ்வொன் றுரிது.

356. ஆற்றவுங் கற்ற ரறிவுடையா ரஃதுடையார்
கூற்றிசையுஞ் செல்லாத கோடில்லை யங்காடி
வேற்றூரா டாகா தமவேயா மாதலால்
ஆற்றுலு வேண்டுவ தில்.

கல்லார்.

இரட்டையர்.

357. மூடர்முன்னே பாடன்மொழிந்தா லறிவரோ
ஆடெடுத்த தென்புலியூ ரம்பலவா—ஆகப்பெற்
செந்திருப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தமே னாயகனுலல்.

(351) குறள். 392 பரிமே. மேற். (352) நாலடி. (353) யாப். வி. 64. (354) நாலடி. (வளையாபதி) (355) நாலடி. (356) தொல். பொரு. 75 நச்.

ஒதத்தகாத நாள்கள்.

358. அட்டமியி லேகாதி லாசானுக் காகாது
சிட்டருக்குப் பன்னென்கு நீதாகுங்—கெட்டவுவா
வித்தைதக்கு நாசமாம் வெய்ய பிரதமையிற்
பித்தரும் பேசார் பிழை.

துறைவகை.

359. ஆசையர் முதிய வனவிருபால் பற்றி
வீசாயு மறிவென்ன மீவண்டா—ஆசையறுத்
தன்றுதை காம நுகர்தற்குத் தன்காம
மொன்றுது நீத்தா னுளன்.

பெண்ணறிவு.

360. நுண்ணறி வுடையோர் நூலெலாம் பழகினும்
பெண்ணறி வென்பது பெரும்பே தைமைத்தே.

அறிவுடையோர்செய்திறம்.

361. மாதர்க் கிதங்கவி வாணர்க்குச் சால வணக்கங்குரு
நாதர்க்கு நீதியொ டாசார நண்பி னையந்தவர்க்குக்
கோதற்ற வாசகம் பொய்க்குப்பொய் கோளுக்குக் கோளறிவில்
ஆதர்க் கிரட்டிப் பறிவுடை யோர்செய்யு மாண்மைகளே.

(தத்துவப்பிரகாசர்).

362. ஆயிரம் புலவோரி லொருவன் ப்ரபந்தகவி
யவரா யிரர்க்கு ளொருவ
னந்தாதி தூலா பரணிகோ வைக்கமத
னவரா யிரர்க்கு ளொருவன்
ப்பாயிடம் பொருணை டகபுரா ணிகனவன்
போலா யிரர்க்கு ளொருவன்
பொருட்பெருங் காப்பியம் புகல்வாக்கி மற்றவன்
போலா யிரர்க்கு ளொருவன்
பாயிரந் தருபஞ்ச [1]லட்சண விதானியிப்
படியா யிரர்க்கு ளொருவன்

---

(358) தனிப்பா. (359) பெரும்பொருள்விளக்கம் (புறத்). (360) நன் 264 மயிலை. (361) தனிப் பா. (362) தமிழ் நா. 229. [1]லட்சணவி சாரணனிப்.

பாசமய தர்க்கநூல் பகர்வாதி மற்றுமப்
படியா யிரர்க்கு ளொருவன்
தேயமெண் டிசைபரவு தேசிகோத் தமனத்
திறத்தா யிரர்க்கு ளொருவன்
சிவனைத் துதித்துண் டுடுத்துக் கொடுத்திடுந்
தெய்வச் சிவக் கியானியே.

363. கினைவுகவி சொல்வோ மெனைச்சொலிப் பலகவிதை
நினைவினைத் திருடி வையோம்
நீதிலகின் மனிதரைப் பாடிமீளா நாமென்று
நீள்வசைகள் பாட வறியோம்
பகையியலை நாவல ருடன்பங்கு பேசிப்
பரபந்தங்கள் பாடிக் கொடோம்
பேசுவது தேவார மேயலால் வாய்க்களரிய
பேய்க்கிரங் தங்கள் பேசோம்
[1]ஐனிமைதரு குலத்துக் குருக்களை மறந்தெட்
டிடங்களிற் றீட்சை போகோம்
ஐட்டகிலு போமாற்றி மாதையொரு பீரிட்
டழைக்கநா மிறுமாந் திரோம்
தனியருந் தெம்மைப் புரங்கூறு வார்பாடு
கயனியக் கவிபா டுவோம்
[2]சமயநூல் கள்ளபின்பாரு ளெனக்கொளோம்
திருஞான சமபந்த ரடியர்காமே.

ஊடம்பரகவி.

(ஒளவையார்.)

364. விரக ரிருவர் புகழ்வாரும் வேண்டும்
விரனிறைய மோதிரங்கள் வேண்டும்—அரையிலொரு
பஞ்சேனும் பட்டேனும் [3]வேண்டி மகர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனு நன்று.

நிடகவி.

365. பொற்றினும் பொற்றுவர் பொருள்கெ டாயிடிற்
றுறற்றினும் தூற்றுவர் தெளின்ன சொற்களை
மாற்றினு மாற்றுவர் மன்ன ருளர்கள்
கூற்றினும் பாவலர் கொடிய ராவரே.

---

(363) தமிழ்நா. 231; [1]னினிமைதரு பூருவத் துக்குருக் களைமறந் தெட்டிடத் தினிற்றீட்சைபோய். [2]சமயநூல். (364) வெ. 55; [3]மில்லேயோ பாணிகவி. (365) தமிழ்நா. [illegible]

366. இலக்கணக் கவிஞர்சொ லின்பந் தேடுவர்
மலக்குசொற் றேடுவர் வன்க ணுளர்கள்
நிலத்துறு கமலத்தை நேடும் வண்டதீ
தலைக்குறை கமலத்தைச் சாருந் தன்மைபோல்

அவைபத்தாரியல்பு.

367. அழுக்கா றிலாமை யவாவின்மை தூய்மை
ஒழுக்கங் குடிப்பிறப்பு வாய்மை—யிழுக்காத
நற்புலமை யோடு நடுவு நிலைமையே
கற்புடைய வெட்டுமுபுக் காண்.

368. குடிப்பிறப்புக் கல்வி குணம்வாய்மை தூய்மை
நடிச்சொல்லு நல்லணி யாகங்—கெடிக்கும்
அழுக்கா றவாவின்மை யவ்விரண்டோ டெட்டும்
இழுக்கா வவையின்க ணெண்.

369. குடிப்பிறப் புடித்துப் பணிவல் குடி
விழுப்பே ரொழுக்கம் பூண்டி [1]காமுற
வாய்மைவாய் மடித்து மாந்தித் தூய்மையிற்
காத லின்பத்துத் [2]தூங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும்
அழுக்கா றின்மை [3]யவாஅ வின்மையென
இருபெரு நிதியமு மொருதா மீட்டுக்
தோலா நாவின் மேலோர் பேரவை
[4]புடன்மீ றுயிருக்கை யொருநாட் பெறினிற்
பெறுகதில் லம்ம யாமே வரன்முறைக்
கதான்றுவழித் தோன்றவழிப் புலவுப் பொதிந்து
நின்வழி நின்வழி ஞாங்கர் கல்லாது
நிலையழி யாக்கை வாய்ப்பவிம்
மலர்தலை யுலகத்துக் கொட்கும் பிறப்பே.

நல்லவை.

370. நல்லவை யென்பது நாடுங் காலை
எத்துறை யானு மிருவரு மியம்பும்
அத்துறை வல்லோ ரறிஞரு புணர்ந்தோர்
மெய்ப்பொருள் கண்டோர் மிக்கவை போல்வ்பவர்

(366) நணிப்பா. (367) ஔசொ. பொருட். 19 மேற். (368) பு வெ. 8. 19 மேற். (369) ஆசிரியமாலை (புறத்); தொல். பொரு. 76; [1]நாளினும். [2]துடங்கி. [3]யவாவின்மை யென்றவ். [4]உடனய லிருந்தை யொருநா ளாமெனின். (370) யாப. வி. 96.

கற்றவர் கல்விக் கடாவிடை யறிவோர்
செற்றமுஞ் சினமுஞ் சோா மனத்தோர்
மூனிவொன் றில்லோர் மூர்க்க ரல்லோர்
இனிய முகத்தோ டிருந்தூரை கேட்போர்
[1]வேந்த னொருவற்குப் பாங்கு படினும்
தாந்தா மொருவர்கட் பாங்கு படாதோர்
அல்லோர் முன்னர்க் கூறிய பொழுதிற்
றொலையு மாயினுந் தொலைவெனப் படாஅது
வெல்லு மாயினு மிகச்சிறப் புடைத்தே.

தீயவை.

371. தீயவை யென்பது தெரிபுங் காலைச்
சலாவஞ் (?) சுண்டுந் தாமேற் கொண்டு
நிலவாப் பொருள்களைக் குலவி யெடுத்தாங்
குரைத்தவொரு வற்சாப்பச் செருவென மொழிந்து
சொல்லிய தறாத வல்லவை யுணர்ந்து
வாரம் படுவன தீயவை யாகும்.

(பூதத்தார் அவையடக்கு).

372. திரைத்த விரிக்கிற் றிரைப்பிலு வாய்போல்
உரைத்த புரையகனே கேட்டு—முரைத்த
பயன்றரவா செய்வார் சிலரோதந் நெஞ்சத்
தியன்றரவா செய்வார் பலர்.

மன்றிற் பரிதானம்பெறல்.

(ஔவையார் கிழியிறப்பாடியது).

373 சென்றழு தண்பதற்குச் செய்வ தரிதென்ற
மன்றழு தண்பான் மனைவாழ்க்கை—முன்றிலிற்
றுச்சி லிருந்து துடைத்தெழுகண் ணீராலெழ்
எச்ச மிறுமே லிறு.

வழக்கழிவு.

(கெழ)

374. வழக்குடையார் நிற்ப வரும்பொருள்கை வாங்கி
வழக்கை வழக்கழிவு சொல்லின்—வழக்குடையார்
கூற்றமுந் தாமும் [2]துடைத்தெழுகண் ணீராலேழ்
கூற்ற மிறுமே லிறு.

---

[1]வேந்த னொருவர்கண் வாரம் படினும். (371) யாப். வி. 95. (372) தொல். பொரு. 425. (373) தமிழ்நா. 34. (374) கெழ. 35; [2]துடைத்தழு கண்ணீராற்.

375. உள்ள வழக்கிருக்க வூரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி—எள்ளளவும்
கைக்கூலி தான்வாங்குங் காலறுவான் தன்னிலையும்
எச்சமிறு மென்ற லிறு.

376. கல்வி யுடையீர் கருங்கான கத்திடையே
கொல்லி யிலையுரித்து நிற்பதெவன்—வல்லாப்கேள்
வெல்லா வழக்கை விலைவாங்கி வெல்விக்கும்
வல்லாளன் உற்றம்போன் மாண்டு.

நடப்பு.

377. வெட்டே னிதுவென் னிலையென்று சார்தற்கண்
கட்டை ரல்லார் கனிகுக பவர்கூற்றம்
பெற்றது சொல்லிப் பெரிதிகழ்ந் தாற்றவும்
வட்டவந் தோரிடத் தேகி நிற்பவே.

378. அளவறியா னட்டவர் சேரப் பலபே சிழுக்கீர்த்
தறியறியான் பாய்க்காடி யற்று.

முயற்சி

379. கண்ணெறிநீர் சின்ற சுவத்தா லளிமருவு
புண்டளிக நின்வதனம் போன்றதால்—உண்டோ
பயின்றுரு ளும்பருகும் பான்மொழியாய் பார்மேல்
முயன்றன் முடியாப் பொருள்.

முயற்சியில்லார்.

380. தானாள நல்லாதார் தாம்பல ராயக்கா லென்னு மென்னும்
யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்த்து விடும்பிளிற்றி யாங்கே.

பொருள்செயல்வகை.

381. குலத்தருங் கல்வி கொணர்ந்து மூடிக்கும்
அலந்த விலோக ளழிபசி தீர்க்கும்
நிலம்பக வெம்பிய நீள்சுரம் போதிப்
புலம்பில் பொருடரப் புன்கண்மை யுண்டோ.

(375) தனிப்பா. (376) திரட்டையர்வாக்குப்போலும், ஔவைவாக்கென் றுரைப்பாரு முளர். (377) வளையாபதி (புறத்) (378) யாப்.வி. 89. (379) தண்டி. 87 மேற். (380) யாப். வி. 67; யாப். கா. செய். 7. வீரசோ. யாப். 15 மேற்; இலக். வி. 731 உரை. (381) வளையாபதி (புறத்),

அறக்காவல்.

382. ஆர்கலி ஞாலத் தறங்காவ லாறறிந்த
பேரருளி னேற்குப் பெறலருமை யாதரோ
வார்திரைய மாமகர வெள்ளத்தை நாபா னும்
போர்மலைந்து வெல்லும் புகழ்.

பண்பறிவுரை.

383. நகைகருளி தீது துணிநன் றியார்க்கும்
பகைகருளி தீது பணிந்தீயா தோதிம்
மிகைமிகு பொருளென் நிறத்த லிலரே
வகைமிகு வாணுல கெய்தி வாழ்பவே.

பேதைமை.

384. தெண்ணீர் பரந்து திசைதொறும் போக்கெட்ட
எண்ணெய்கொண் டட்ட விவறுத லென்னெஞ்சும்
பெண்மனம் பேதித் தொருப்படப் பன்னெனும்
எண்ணி லொருவ னியல்பென்னு மாறே.

காமக்கேடு.

385. ஆசை யல்குல் பெரியாரை யருளு மிடையுஞ் சிறியாரைக்
கூச மொழியும் புருவமுங் குடில மாகி யிருப்பாரை
வாசக் குழலு மலர்க்கண்ணு மனமுங் கரிய மடவாரைப்
பூசல் பெருக்க வல்லாரைப் பொருந்தல் வாழி மடநெஞ்சே.

386. ஆனை யூற்றின் மீன்சுவையி னசுண மிசையி னளிநாற்றத்
தேனைப் பதங்க ணுருவங்கண் டிடிக்க ணெய்து மிவ்வனைத்தும்
கான மயிலஞ் சாயலார் காட்டிக் கௌவை விளைத்தாலும்
மான மாந்த ரெவன்கொலோ வரையா தவரை வைப்பதே.

387. ஆசைப் படுவ வருந்தவங் கல்வியல் லாப்பிறகள்
பேசப் படுவ திலமிவை யாவையு மேபிறப்பாம்
தேசத் தியற்கை தெரிந்துணர் வாருக்குச் சேயிழைமார்
பாசப் படுகுழிப் பற்றறுத் தார்வினைப் பற்றறுத்தார்.

---

(382) இரும்பல்காஞ்சி (புறத்). (383—384) வளையாபதி (புறத்). (385—387) யாப். வி. 95.

388. கொடியிடை மாதர் மேனி குவளைமல ருண்க ணென்றும்
பிடிநடை மாதர் மாண்ட நடைதானெனப் பேது செய்தும்
வடிவொடு வார்ந்த மென்றோள் வளைசேர்ந்தகை காந்த ளென்றும்
இடையிடை நின்று நின்று பலகாலு மூவப்ப செண்ணை.

389. எண்ணின்றி யேதுணியு மெல்வழி யாளு மோடும்
உண்ணின் றுருக்கு மூரலோரு ரைகோட லின்ற
நண்ணின்றி யேயு நயவாரை நயந்து நிற்குங்
கண்ணின்று காம நனிகாமுறு வாரை வீழ்க்கும்.

390. சான்றோ ருவர்ப்பத் தனிநின்று பழிப்ப காலூர்
ஆன்றுங் கமைந்த குரவர்மொழி கோட லீயார்
வான்றுங்கி நின்ற புகழ்மாசு படுப்பர் காமன்
தான்றுங்கி விட்ட கணைமெய்ப்படி மாயி னக்கால்.

391. மாவென் றுரைத்து மடலேறுப மன்று தோறும்
பூவென் றெருங்கி னிணர்சூடுப புன்மை கொண்டே
பேயென் றெழுந்து பிறரார்ப்பது நிற்பர் காம
நோய்கண் கெழுந்து நனிகாழ்க்கொள்வ காயி னக்கால்.

392. நக்கே விலாவிறுவர் நாணுவர் நாணும் வேண்டார்
புக்கே கிடப்பர் கனவுங்கினை கையு மேற்பர்
துற்றுண் மறப்ப ரழிவர்கணி துஞ்ச லில்லார்
நற்றோண் மிகைபெரிது நாடறி குன்ப மாக்கும்.

393. அரசொடு நட்டவ ராள்ப விருத்தி
அரவொடு நட்டவ ராட்டியு மூண்பர்
புரிவினை மூப்பைக்கப் பூணைபிழை கல்லார்
நிரகில ரென்று விடுத்தனர் முன்னே.

394. வகையெழிற் றோள்க ளென்று மணிநிறக் குஞ்சி யென்றும்
புகழெழ விகற்பித் தின்ற பொருளில்கா மத்தை மற்றோர்
தொகையெழுங் காத றன்னுற் றுய்த்தியாங் துடைத்து மென்பார்
அகையழ லழுவர் தன்னை யெய்யினு லவிக்க லாமோ.

395. அனலென நினைப்பிற் பொத்தி யகந்தலைக் கொண்ட காமக்
கனலினை யுவப்பு நீராற் கடையற வவித்து மென்னூர்
நினையிலாப் புணர்ச்சி தன்னு னீக்குது மென்று நிற்பார்
புனலினைப் புனலி னூலே யாவர்போ காமை வைப்பார்.

(389 393) வளையாபதி (புறத்.) (394-395) குண்டலகேசி. (புறத்).

உழவு.

(ஔவையார்)

396. ஒரு பிரண்டுமாதா யில்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுமாய்—ஊருக்குச்
சென்று வாவணித்தாய்ச் செய்வாருஞ் சொற்கேட்டால்
என்று முழவே யினிது.

வேளாண்பெருமை.

397. யானை நிரையுடைய [1]மாலு மெழில்சிறந்தார்
வேனை [2]நிரையுடை யேர்வாழ்க்கை—யானைப்
படையோர்க்கு [3]வெண்ணி பயக்கும பகட்டே
ருடையோர்க் காசமீரா வொப்பு.

398. வயலுழுவார் வாழ்வாருள் வாழ்வா ரயலுழுவார்
வாழ்வாருள் வாழா தவர்.

399. மேழி பிடிக்குங்கை வேல்வெய்தர் சோக்குங்கை
யாழி தரித்தே யருளுங்கை—சூழ்வினையை
நீக்குங்கை யன்று நிலைகருங்கை நீழ்ழி
காக்குங்கை காராளர் கை.

வேளாளர் நிரைகாவல்.

400. [1]போர்வாகை வாய்த்த புரவலரின் மேதக்கா
சீர்வாழ்வு ரென்பதற் கேதுவாஞ்—சீர்சால்
உலைகாக்கு மன்னர்க் கொளிபெருகுத் தாங்கு
நிரைகாத்துத் தந்த நிதி.

பல்லைறவி.

பிதாக்களாவர்.

401. பிறப்பித்தோன் வித்தைதனைப் பேணிக் கொடுத்தோன்
சிறப்பி னுபதேசஞ் செய்தோன்—அறப்பெரிய
பஞ்சத்தி லன்னம் பகிர்ந்தோன் பயந்தோன்
எஞ்சாப் பிதாக்களென வெண்.

---

(396) தமிழ்நா. 60. (397) பெரும்பொருள்விளக்கம் (புறத்); தொல்-புறத்.
21 நச்; [1]சீராசமீரா நிலுஞ்நிறம்தோர். [2]நிரைபுடைய. [3]கண்ணி. (398) யாப்.
வி. 96. (399) தம்பிரான்தோழர். (400) தொல். புறத். 21 நச்.
(401) தனிப்பா.

(ஔவையார்).

இருவரின் இது நன்றெனல்.

402. எரியிடலி னிடாமையே நன்றெரிதிற்
பேசு மனையாளிற் பேய்நன்று—நேசமிலா
வங்கணத்தி னன்று வலியபகை வாழ்விலாச்
சங்கடத்திற் சாதலே நன்று.

இன்ன இன்னவை அழகாம் எனல்.

403. சுரதந் தனிலிளைத்த தோகை சுகிர்த
விரதந் தனிலிளைத்த மேனி—நிரதங்
கொடுத்துயாத்த தாதா கொடுஞ்சமரிற் பட்ட
வடுத்துளைத்த கல்லபிரா மம்.

இன்ன இன்னவிடத்துப் புகழ்க எனல்.

404. பிச்சணைக்கா றுவிடத்து நெஞ்சார் வெதுப்பித்தல்
ஆசாலே வெவ்விடத்து மப்படியே—வாச
மலையாளை பஞ்சணையில் வைத்தமை நெஞ்சில்
விலையாளை வேலைமுடி வில்.

இன்னுழிக் இது துரும்பு எனல்.

405. பீபாத்த வுதாரனுக்குப் பொன்னுரும்பு சூரனுக்குச்
சேர்ந்த மரணஞ் சிறுதுரும்பாம்—ஆய்ந்த
அறிவோர்க்கு நாரி யருந்துரும்பா மில்லத்
துறவோர்க்கு வேந்தர் துரும்பு.

பயனற்றவை இவையெனல்.

406. மாடில்லான் வாழ்வு மதியில்லான் வாணிபந்
தேடில்லான் செல்கோ னடாத்துவது—கூடுங்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டி
பிருந்தில்லா வீடு பிழை.

(வேறுமொழி செய்யாடு பயவாமை.)

407. கல்லாதார் நல்லவையுட் கல்லிலீபாற் சென்றிருந்தாற்
கருமம் யாதாம்
புல்லாதார் செல்வமைபோற் புணர்ந்திடிய மியமுற்ற
விடையவ தென்னும்

பொல்லாதார் நன்கல மெய்புதைப்பப் பூண்டாலும்
பொலிவ தென்னும்
புல்லாதார் பொய்க்கேண்மை புனைந்துரைத்தா லாவதென்னே
அல்லாதார் பொய்யாவ தறிபவே லமையாதே.

(ஔவையார் பாட்டு).

408. வெண்பா விருநாலிற் கல்லாமை வெள்ளோலை
கண்பார்க்கக் கையா லெழுதாமைப்—பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

இதனோடு இது நீங்குமேனும்.

409. தாயா டமுசுவைபோற் தந்தையொடு கல்விபோஞ்
சேயாடு தான்பெற்ற செல்வம்போம்—மாயவாழ்
வற்றா ருடன்போ மூடற்பிறப்பாற் பிறள்வலிபோம்
பொற்றொடி யாளெவ்வ மும்போம்.

அட்டமத்துச் சனிபோல்வார்.

410. காலையில் பல்கலையுங் கல்லாத் தலைமகனும்
ஆலையிரி போன்ற வயலாளும்—நாலு
மல்லாக்கட் டழிக்கு மனையாளு மூன்றுங்
களைக்கட் டமைத்துச் சனி.

ஒவ்வாரை மேலுவர் போலல்.

411. நிட்டூர மாக நிதிபதி மன்னவனும்
பிட்டதலை யெச்சா விரவலனும்—முட்டவே
கூடிநில் லாத குலக்கொடியுங் கூடிய
வீடியுங் கைட்டி யிடம்.

ஒருங்கிது பகைபோலல்.

412. ஆருமுதற் கொள்ளாக் கொண்டும் பகைபோக
வாருநற் கலைவாழ்க்கை யஞ்சியும் பகைபோக
மருளுந்நு லாலறிவு 1 ளாளாப பகைபோக
பொருளுக்கஞ் சில்லாமை பகை.

(108—411) தனிப்பா. (412) யா. வி. 10. 1 மாயாப்.

மதிகெடுத்தகாப்பொருள்கள்.

413. துறவுளவாச் சான்மே ரிளிவரவுந் தூய
பிறவுளவா வூன்முறவா வூணும்—பறைகறங்கக்
கொண்டா னிருப்பக் கொடுங்குழையா டெய்வமுமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

குறுகத்தகாதவை.

414. வடுக ரருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறுங்
குறுகா ரறிவுடை யார்.

(ஔவையார் நாலுகோடி கவிபாடியது).

415. (1) மதியாதார் முற்ற மறித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி யுறும்.

(2) உண்ணீருண் ணீரென்றே யூட்டாதார் தம்மினையி
லுண்ணுமை கோடி யுறும்.

(3) கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி யுறும்.

(4) கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைதான்
கோடானமை கோடி யுறும்.

பொய்ம்மகள்.

416. [1]ஆயத் துறைப்பிறந்த நந்தணர் பால்குடித்த தையிருக்கள்
மாயக்கண் வேசை யிடத்தே வளர்ந்துவண் மாலிருநாள்
கையப் புலவ ரிடத்தெட்டி நாள்செட்டி யேயென்றபின்
பொய்யக்க சாலை புகுந்தனள் காணம்பர மாப்பரதேவி.

(ஔவையாராற்பாடிய நோயறியுங்கிளவி.)

417. வையக மெல்லாம் வளையலா வாழ்ஞர்
தெய்வமா முகடி சேரி யாகத்
தாணமு முத்து மணியுங் கலந்திரு
கோடானு கோடி கொடுப்பினு மொருநாள்
ஒருபொழு தொருவடூ ரெறிந்தால் பார்க்கும்
நேர்ந்தறை யில்லா தென்னுயிரன்ன மனனே
நேர்ந்தறை யில்லா தெனனுயிரன்ன மனனே.

---

(413) தண்டி. 38. (414) நன். 377 மயிலை. (415) தமிழ்நா. 37.
(416) தனிப்பாட்டு ; [1]ஆயத் துறைப்பிற் பிறந்துவந் நந்தணர் பால்குடித்தி.
(417) தமிழ்நா. 36.

பதினெறு பேறுகள்.

418. தகிவாணி வீரம் விசயஞ்சந் தானந் துணிவுதனம்
அதிகாரி யஞ்சவு பாக்கியம் போக மறிவழகு
புதிதாம் பெருமை பறங்குல நோயின்மை பூண்வயது
பதினெறு பேறுந் தருவாய் மதுரைப் பாராபரனே.

பறந்திணைப்பிரிவு.

419. வெட்சி நிரைகவர்தன் மீட்டல் நடந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியாம்—உட்கா
தெதிரூன்றல் காஞ்சி யெயில்காத்த னெஞ்சி
யதுவளைத்த லாகு முழிஞை—யதிரப்
பொருவது நும்பையாம் போர்க்களத்து மிச்சார்
செருவெல் நடவாவாகை யாம்.

வெட்சி.

மன்னுறுதோழில்.

420. வான்வலம் பெற்ற வயவேந்த னேவலாற்
சான்வல் லியோயவர் தாஞ்செல்லி—னூனைக்
கடுங்கூர [1]னல்லாவின் கன்றுள்ளப் பாலி
னனைவது போலு மிவ்வூர்.

421. எதிர்த்த நிரைகொணெ வென்றலுமே வென்றி
வடித்திலங்கு வைவாளை வாங்கத்—தடித்தனவே
கண்டுரை மார்பும் தடந்தோளும் வெல்லிழியும்
மண்டுத மண் மர்ந் திடம்.

விரிச்சி.

422. நிரைகவுள் வெள்வாய்த் திரிந்துவீழ் தாடி
கரைமுகியோ [2]னின்றுரைத்த நற்சொல்—நிரையன்றி
எல்லோர்க் வைய மிறையோற் களிக்குமால்
[3]வல்லையே சென்மின் வழி.

---

(418) காளமேகப்புலவர்வாக்கென்பர். (419) வீரசோ. பொருட் 21 மேற்; பிங். (420) பெரும்பொருள்விளக்கம் (புறத்); தொல். பொருளி. 58. [1]நல்லாத்தன் கன்றுள்ளப் பாலா. (421) தண்டி. 39. (422) பெரும் பொருள்வி. (புறத்); முல்லைப்பாட்டு. 8–11 மேற். [2]னேற்றுரைத்த. [3]வல்லீரீர்.

விரிச்சிவிலக்கிய வீரக்குறிப்பு.

423. நாளும் புள்ளுங் கேளா வுக்கமொ
டெங்கோ னேயினு ஞதலின் யாமத்துச்
[1]செங்கால் வெட்சியுந் திணைபுந் தாம்ப
மறிக்குரற் குருதி மன்றுதொ ளவிப்ப
விரிச்சி யோர்த்தல் வேண்டா
பாயிற்புறங் கருதுப்பாம் பகைப்புல நிரைவே.

வேய்.

424. கெடுநிலையா யக்கு நிரைகவ டொற்றிப்
பதிமணி யாயம் பகர்ந்தோய்—கொடிய
மணக்குரிய காதல் வயவேந்த னென்று
நினைக்குரிய வாக நிரை.

நிரைகொள்ளற்குக் கொற்றவையின் பரவுக்கடன்.

425. வந்த நிரையி னிருப்பு மணியுடன்
வந்தலை தின்றலை [2]யாந்தருது—மூந்தீ
மற்றவை பெற்று வயவேந்தன் கோலோங்கக்
கொற்றவை கொற்றங் கொடு.

துடிநிலை.

426. நித்திலஞ்செய் பட்டமு நெற்றித் திலதமும்
வித்திலங்க மெய்ப்பூசி யோர்ந்தமை இத்—தத்தம்
துடியதோ ரேர்ப்புறஞ் சூழ்ந்தார் மறவர்
குடிநிரை பாராட்டக் கொண்டு.

செலவு.

427. கரந்தியல் காட்டுத்தீப் போலப் பெரிதும்
பாந்தசென் மள்ளர் பதிந்தார்—அரந்தை
விரிந்தவியு மாறுபோல் விண்டோயத் தோன்றி
எரிந்தவியும் போலுமிவ் வூர்.

(423-424) தகடூர் யாத். தொல். பொரு 58. மேற். [1]செகதோல். (425) பெரும்பொருள் வி. (புறத்); சிலப். 12. பக். 331; தொல். பொரு. 53; [2]யான் றருவன். (426) தொல். பொரு. 59. (427) ஷே. ஷே. 58.

428. பிறர்புல மென்னுர் தமர்புல மென்னுர்
விறல்வெய்யோர் வீங்கிருட்கட் சென்றூர்—நிறையுங்
கடாஅஞ் செருக்குங் கடுங்களி யாஅ
படாஅ முகம்படித் தாங்கு.

429. [1]வெவ்வாண் மறவர் மிலைச்சிய வெட்சியாற்
செவ்வானஞ் செல்வதுபோற் செல்கின்றூர்—எவ்வாயும்
ஆர்க்குங் கழலொலி யாங்கட் படாலியரோ
போர்க்குந் துடியோடு புக்கு.

வேம்.

430. ஒருவ ரொருவ ருணராமற் சென்றூங்
கிருவரு மொப்ப விசைத்தார்—வெருவர
வீக்குங் கழற்கால் விறல்வெய்யோர் வில்லோக்
கோக்குஞ் சரந்தெரிந்து கொண்டு.

புறத்திணை.

431. இருநில மருங்கி னெப்பிறப் பாயினும்
மருவின் மாலையோ வினிதே யிரவின்
ஆகோண் மள்ளரு மருள்வரக் கானத்து
நாம்புறத் திறுத்தன மாகத் தாந்தம்
கன்றுகூர் கேட்டன போல
நின்றுசெவி [2]யோர்த்தன சென்றுபடு நிரையே.

வள்ளிக் கூத்து.

432. மண்டம ரட்ட மறவர் குழாத்திடைக்
கண்ட முருகனுங் கண்களித்தான்—பண்டே
குறமகள் வள்ளிதன் கோலங்கொண் டாடப்
பிறமக ணேற்றுள் பெரிது.

பூசன்மாற்று.

433. ஒத்த வயவ ரொருங்கவிய நாண்படாத்
தத்த மொலியுந் தவிர்ந்தன—வைத்தகன்றூர்
தம்பூசன் மாற்றி நிரைகொள்வான் றுக்கினூர்
வெம்பூசன் மாற்றிய வில்.

---

(428) பெரும்பொருள்வி. (புறத்). தொல். பொரு. 58. நச். (429) பெரும் பொருள்வி. (புறத்). [1]வெவ்வாய். (430) தொல். பொரு. 58. (431) தகடூர் யாத்-தொல். பொரு. 58. [2]யேற்றன. (432) சிலப். 12. பக். 328; தொல். பொரு. 60, நச். (433). தொல். பொரு. 58.

தந்துநிறை.

434. குளிறு குரன்முரசங் கோட்டின் வெரூஉங்
களிறெறுதேர் காண்டலு மாற்ற—நளிமணி
நல்லா னினநிரை நம்மூர்ப் [1]பெருங்கானம்
எல்லாம் பெருக விடம்.

435. கழிவொடு பாகர் கலங்காமல் யாத்துத்
தொழுவிடை யாயந் தொகுமின்—எழுவொழித்தாற்
போமே யிவையிவற்றைப் போற்றுமின் புல்லொடுநீர்
சாமேய் புலம்போலத் தந்து.

வேய்கூறிஞர்க்குச் சிறப்பு.

436. மாற்றருந் துப்பின் வயவேந்த னல்லனே
ஏற்ற பெருஞ்சிறப் பின்றீதும்—வேற்றூரிற்
புல்வேய் குரம்பைப் புறஞ்சிறைவாய் நின்றெற்றி
நல்வே யுரைத்தார்க்கு நாம்.

கரந்தை.

படைத்தலைவர் படையாளரைக் கூறியது.

437. கடிமனைச் சீறூர்க் கடுங்கட் கறவை
வடிநவின் மேலோன் மறுத்தோம்ப லொட்டான்
அடிபுனை தோளி னரண்சோந்து மள்ளர்
வருகமன் வாயிற் கடை.

படைச்செருக்கு.

438. வாள்வலம் பெற்ற வயவேந்த னேவலாற்
றாள்வல் லியைவர் தாஞ்செல்லி—னஞ்சக்
கனைகுர னல்லாத்தன் கன்றுள்ளப் பாலால்
நனைவது போலுநம் மூர்.

ஊர்கோள்.

439. அரசூர் மதியிற் கரிதூர மீம
விரசூ ரெரிகொளீஇக் கொன்று—நிரைநின்ற
பல்லான் றொழுவும் பகற்கண்மார் போர்கண்டோர்
கொல்வார்ப் பெறுஅர் கொடித்தி.

(435—437) தொல். பொரு. 58. நச். [1]புறங்கானம். (438) தொல். ஷை. பெரும்பொருள்வி (புறத்). (439) தொல். [1]பொரு. [1]58 மேற்.

440. சென்ற நிரைப்புறத்துச் சீறூர்த் தொடைகொண்டு
நின்ற மறவர் நிலஞ்சேர்ந்தார்—கொன்ஞண்
டிகலிழந்த வல்வி லிளையோர்புண் டூரத்
துகளெழுங்கொல் பல்லான் றெழு.

நிரைமீட்சி.

441. அடியறி யார்ப்பின ராபெயர்த்தற் கன்ஞய்
கடிய மறவர் கதழ்ந்தார்—மடிநிரை
மீளாது மீளார் விறல்வெய்யோர் யாதாங்கொல்
வாளார் துடியர் வலம்.

442. கடல்புக்கு மண்ணெடுத்த காரேனக் கோட்டின்
மிடல்பொரி தெய்தின மாதோ—தொடலைக்
கார்தை மறவர் [1]கருதார் குழாஅந்
தூர்ந்து நிரைமீட்ட தோள்.

பூசன்மாற்று.

443. ஆஅ றெறிந்து நிரையொடு பெயர்ந்த
வெட்சி மறவர் வீழவு முட்காது
கயிறியல் பாவை போல வயிறிரித்
துழைக்குரற் குணர்ந்த வளைப்புலி போல
முற்படு பூசல் கேட்டனர் பிற்பட
நிணமிசை யிழுக்காது தமர்பிண மிடறி
நிலங்கெடக் கிடந்த கருந்தலை நடுவண்
மாக்கட னெருப்புப் போல மோக்குபு
வெஞ்சின விடலை வீழ்ந்தனன்
அஞ்சுதக் கன்றுற் செஞ்சோற்று நிலையே.

நிரைமீட்டோர் வரவு.

444. காட்டகஞ் சென்றுயிர் போற்றுன் கடுஞ்சுரையான்
மீட்ட மகனை வினவுறுள்—ஓட்டந்து
தன்னெதிர் தோன்றும் புனிற்றுத் தழீஇக்கலுழும்
[2]என்னதுயர் பட்டாயோ வெண்ணு.

(440) தொல். பொரு. 58 மேற். (441) பெரும்பொருள்வி (புறத). (442, 443) ஸ்ரீ.; தொல். பொரு. 58. மேற். [1]கருதாதாருள்ளம். (444) பெரும் பொருள்வி (புறத்). தொல். பொரு. 58. மேற். [2]என்னெனதிர்ப்பட்டாயோ; என்னது பட்டாயோ.

445. கல்கெழு சீறூர்க் கடைகாண் விருப்பிலுன்
மெல்ல நடவா [1]விரையு நிரையென்னே
தெள்ளறற் காளியாற்றுத் தீநீர் பருகவும்
மள்ளர் நடவா வகை.

446. கங்கை பரந்தாங்குக் கானப் டெருங்கவலை
எங்கு மறவ ரிரைத்தெழுந்தார்—[2]தங்கிலைகண்
மன்றுகாண் வேட்கை [3]மடிசுரப்பத் தோன்றுவ
கன்றுகாண் [4]மெய்குளிர்வீர் கண்டு.

பாதீடு.

447. யாமே பகுத்திட மீவண்டா வினநிரை
தாமே தமரை யறிந்தனகொல்—எழுற
அன்றீன்ற தம்மை யறிந்துகொள் கன்றேய்ப்பச்
சென்றீண்டு மாங்கவர்பாற் சென்று.

நிரைக்கோடை.

448. கொடைத்தொழி லெல்லாங் குறைவின்றிப் பண்டே
மூடிதன னென்றிருந்த மூதாதான்—கொடைக்கு
வரம்பில னென்றே மருண்டா னிரைகோட்
கரந்தையங் கண்ணியாற் கண்டு.

உழாடாட்டு.

449. பகைவர் கொண்ட பகுமணி யாயம்
மீட்டிவட் டந்த வாட்டிறற் குரிசின்
முழவுத் துயின்மறந்த மூதூ ராங்கண்
விழவுத் தலைக்கொண்ட வீளையாட் டாயத்
தூன்சுடு கொழும்புகைக் கருங்கொடி யும்பர்
மீன்சுடு புகையின் விசும்புவாய்த் தன்றே
கைவல் கம்மியர் பலகூட் டாரமொடு
நெய்பிழி நறுவிரை நிலம்பரந் தன்றே
காவிற் காவற் கணங்கொள் வண்டெனப்
பூவிலை மகளிர் புலம்படர்ந் தனரே
சந்தியுஞ் சதுக்கமும் பந்தர் போகிய
வாடுறு நறவின் சாடி தோறும்
கொள்வினை மாற்றுக் கொடையொடு
கள்விலை யாட்டியுங் கைதூ வாளே.

---

(445) பெரும்பொருள்வி(புறத). தொல். மெய். [1]விரையுநிரை-யொல்லென. (446) பெருமைபொருள்வி (புறத). [2]தவிலைக்கண. [3]மடிசுரபப வேதோன்றுவ. [4]மெய்குளிரப்பீர். (447) மெய்; தொல். பொரு. 58 நச். (448-449) மெய்.

வஞ்சி.

வஞ்சியாவம்.

450. விண்ணசைஇச் செல்கின்ற வேலியாய ராரப்பெடுப்ப
மண்ணசைஇச் செல்கின்முன் வாள்வேந்தன்—எண்ணம்
ஒருபாற் படர்தாரக்கண் டொன்னார்த முள்ளம்
இருபாற் படுவ தெவன்.

451. போர்ப்படை யார்ப்பப் பொடியா யெழுமரோ
பார்ப்புர வெண்ணுன்கொல் பார்வேந்த—னூர்ப்புறத்து
நில்லாத தானை நிலனெளிய நீளிடைப்
புல்லார்மேற் செல்லும் பொழுது.

துணைவந்தபோது அரசர் விளக்கம்.

452. மேற்செல்லுங் காலைத் துணைவந்த வேந்தர்தம்
பாற்செல்லச் செல்லும் பரிசிலை—குற்கடல்சூழ்
மண்மகிழுங் காட்சியான் மீன்பூத்த வானத்து
வெண்மதிபோன் மீமம்பட்டான் வேந்து.

கொற்றவஞ்சி.

453. நீணில [1]வேந்தர் நாட்செல் விருப்பத்துத்
தோள்சுமந் திருத்த லாற்றா ராள்வினைக்
கொண்டி மாக்க ளுண்டியின் முனிந்து
மூனைப்புல மருங்கி னினைப்பருஞ் செய்வினை
வென்றியது மூடித்தனர் மாதோ
யாங்குள கொல்லினி யூங்குப்பெறுஞ் செருவே.

454. ஆளுங் களியும் பரியுஞ் சொரிகுருதி
தோளுந் தலையுஞ் சுழித்தெறிந்து—நீள்குடையும்
வள்வார் முரசு மறிநிரைமேற் கொண்டொழுக
வெள்வா ளுறைகழித்தான் வேந்து.

மாயவஞ்சி.

455. மீபார்க்கட லாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக்
கார்க்கடல் பெற்ற கரையன்றே—போர்க்கெல்லாந்
தானுஞ் யாகிய தார்வேந்தன் மோதிரஞ்சேர்
வனுமிப் பட்டத் திவன்.

(450, 451) தொல். பொரு. 63; பெரும்பொருள்வி (புறத்). (452–453) ஷே. ஷே. ஷே. [1]வேந்தருடன்செல். (454) தண்டி. 54; வீரசோ. அலங். 25 மேற்; (455) தொல். பொ. 63.

பெருஞ்சோற்றுநிலை.

456. உண்டியின் மூன்றா னுடனுண்பான் றண்டோறல்
மண்டி வழங்கி வழீஇயதற்கோ—கொண்டி
மறவர் மறமிக் குயிர்நோர்ந்தார் மன்னர்க்
குறவிலர் கண்ணோடா தோர்ந்து.

தழிஞ்சி.

457. தழிச்சிய வாட்புண்ணோர் தம்மில்லந் தோறும்
பழிச்சியசீர்ப் பாசறை வேந்தன்—விழுச்சிறப்பிற்
சொல்லிய சொல்லே மருந்தாகத் தூர்ந்தன
புல்லணலார் வெய்துயிர்க்கும் புண்.

கொடைவஞ்சி.

458. வேத்தமர் செய்தற்கு மேற்செல்வான் மீண்டவர்
தேத்துநர்க் கீத்துமென் றெண்ணுமோ—பாத்தி
யுடைக்கலி மான்றே ருடனீந்தா னீந்த
படைக்கலத்திற் சாலப் பல.

சூடின நொச்சியைப் புகழ்ந்தது.

459. மணிதுணர்த் தன்ன மாக்குர லெஞ்சி
போதுவிரி பன்மா னுள்ளஞ் சிறந்த
சாத னன்மா நீமற் றிசினே
கடியுடை வியனகர்க் காண்வரப் பொலிந்த
[1]தொடியணி மகளிர் பல்குலுங் கிடத்தும்
காப்புடைப் புரிசை புக்குமா றழித்தலி
னூர்ப்புறங் கொடாஅ நெடுந்தகை
பீடுகெழு சென்னிக் கிழமைய நினதே.

உழிஞை.

அகத்தோன் செல்வம்.

460. பொருசின மாறப் புலிப்போத் துறையும்
அருவரை கண்டார்போ லஞ்சி—யொருவருஞ்
செல்லா மதிலகத்து வீற்றிருந்தான் றேர்வேந்த
னெல்லார்க்கு மெல்லாங் கொடுத்து.

---

(456) தொல். பொரு. 63. (457) ஷை; பெரும்பொருள்வி (புறத்). (458) தொல். பொரு. 63. நச். (459) ஷை. ஷை. 68. [1]தொடையுடை. (460) ஷை. ஷை. 67; பெரும்பொருள்வி (புறத்).

461. மேலது வானத்து மூவா நகரும்
கீழது நாகர் நாடும் புடையன
திசைகாப் பாளர் தேயக் குறும்பும்
கொள்ளே சாற்றிக் கவர்ந்துமுன் றந்த
பல்வேறு விழுநிதி யெல்லா மவ்வழிக்
கண்ணுதல் வானவன் காதலி னிருந்த
குன்றேந்து தடக்கை யனைத்துந் தொழிலுறத்
தோலாத் துப்பிற் முணிழல் வாழ்க்கை
வலம்படு மள்ளர்க்கு வீசி யிலங்கையில்
வாடா நொச்சி வகுத்தனன்
மாலை வெண்குடை யாக்கர் கோவே.

(பொன்முடியார் சோமானுக்குத் தகுதின்தன்மை கூறியது)

462. மொய்வேற் கையர் மூரண்சிறந் தொய்யென
வையக மறிய வலிதலைக் கொண்ட
தெவ்வழி யென்றி வியன்முர் மார்ப
எவ்வழி யாயினு மவ்வழித் தோன்றித்
திண்கூ ரெஃகின் வயவர்க் காணிற்
புண்கூர் மெய்யி னுராஅய்ப் பகைவர்
பைந்தலை துமித்த மைந்துமலி தடக்கை
யாண்டகை மறவர் மலிந்துபிறர்
நீண்ட றகாது வெந்துறை யாளே.

அகத்தோன் தடைநாட்கோள்.

463. குன்றுயர் திங்கள்போற் கொற்றக் குடையொன்று
நின்றுயர் வாயிற் புறநிவப்ப—வொன்முர்
விளங்குருவப் பல்குடை விண்மீன்போற் முன்றித்
துளங்கினவே தோற்றந் தொலைந்து.

அகத்தோன் வாணட்கோள்.

464. மூற்றரண மென்னு முதிலுருமுப் போற்முன்றக்
கொற்றவன் கொற்றவா ணட்கொண்டான்—புற்றிழிந்த
நாகக் குழாம்போ னடுங்கின வெண்ணுக்கொல்
வேகக் குழாக்களிற்று வேந்து.

---

(461) ஆசிரியமாலை (புறத்). (462) தொல். பொரு. 67 நச். (463, 464) ஷே., ஷே., 68; பெரும்பொருள்வி (புறத்).

அகத்தோன் அகமிசைக்கிவர்தல்.

465. புற்றுறை பாம்பின் விடநோக்கம் போலெக்கிக்
கொற்றுறை வாய்த்த கொலைவேலோர்—கொற்றவ
ஞெரியின்மேற் ரேன்றினு ரந்தாத்துக் கூடாத
போரெயின்மேல் வாழ்வுணர் போன்று.

அகத்தோர் ஏணி மயக்கம்.

466. இடையெழுவிற் போர்விலங்கும் யானையோர் போலும்
மடையமை யேணி மயக்கிற்—படையமைந்த
ரூயில் பிணம்பிறக்கித் தூர்த்தார் ரதரோர்க்கு
வாயி லெவனுக்கொன் மற்று.

அகத்தோன் பாசிமறம்.

467. தாந்தங் கடைதொறுஞ் சாய்ப்பவு மேல்விழுந்த
வேந்தன் படைப்பிணத்து வீழ்தலா—னுங்கு
மதுக்கமழுந் தார்மன்னர்க் குள்ளூர் மறுகிற்
பதுக்கையும் வேண்டாதாம் பற்று.

அகத்தோன் முற்றிய முதிர்வு.

468. ஊர்சூழ் புரிசை யுடன்சூழ் படைமாயக்
கார்சூழ்குன் றன்ன கடைகடந்து—போர்மறவர்
மேசமே போலெயில் சூழ்ந்தார் விலங்கல்போன்
ரூசஞ்சேர் தோள்கொட்டி யார்த்து.

அகத்தோன் தோகைநிலை.

469. தலையன் மதில்சூழ்ந்த தார்வேந்தர்க் கொன்று
வலையன் வலைசுருக்கி யாங்கு—நிலையிருந்த
தண்டத் தலைவர் தலைக்கூட வீற்றிருந்தான்
உண்டற்ற செற்ரு மொழித்து.

எயில்காத்தல்.

470. தாக்கற்குப் பேருந் தகர்போன் மதிலகத்
தூக்க முடையோ மொதுங்கியும்—கார்க்க
ணிடிபுறப் பட்டாங் கெதிரேற்றூர் மாற்றூர்
அடிபிறக் கிடு மரிது.

(465–469) தொல். ஷே. (470) ஷே; பெரும்பொருள்வி (புறத்).

அகத்தோன் எயில்காத்த நோச்சி.

471. இருகன்றி னொன்றிழந்த வீற்றுப்போற் சீறி
ஒருதன் பகிசுற் றெழியப்—புரிசையின்
வேற்றரண்ங் காத்தான் விறல்வெய்யோன் வெஞ்சினத்துக்
கூற்றரணம் புக்கதுபோற் கொன்று.

472. பூத்தாட் புறவிற் புனைமதில் கைவிடார்
காத்தவிக் காவல ரேனையார்—பார்த்துரூர்
வேண்டார் வணக்கி விறன்மதி ருன்கோடல்
வேண்டுமாம் வேண்டார் மகன்.

அகத்தோன் வாண்மங்கலம்.

473. வருபெரு வேந்தற்கு வான்கொடுத்து மற்றை
யொருபெரு வேந்தற்கு ரீந்தாள்—[1]ஒருவன்வாள்
இவ்வுலகிற் பெற்ற விசுற்கலேயேற் றூர்ஜியாள்
அவ்வுலகிற் போய்ப்பெறுங்கொ லாங்கு.

அகத்தோன் மண்ணுமங்கலம்.

474. வென்றி பெறவந்த வேந்தை யிகன்மதில்வாய்க்
கொன்று குடுமி கொளக்கண்டு—தன்பால்
விருந்தினர் வந்தார்க்கு விண்விருந்து செய்தான்
பெருந்தகையென் றூர்த்தார் பிறர்.

புறத்தான் குடைநாட்கோள்.

475. பகலெறிப்ப தென்கொலோ பான்மதியென் றஞ்சி
யிகலாணத் துள்ளவ ரெல்லாம்—அகலிய
விண்டஞ்ச மென்ன விரிந்தகுடை நாட்கொள்ளக்
கண்டஞ்சிச் சும்புளித்தார் கண்.

புறத்தோன் வாணட்கோள்.

476. தொழுது விழாக்குறைக்குத் தொல்கடவுட் பேணி
அழுது விழாக்கொள்வ ரன்னே—முழுதளிப்போன்
வாணட்கோள் கேட்ட மடந்தையர் தம்மகிழ்நர்
நீணட்கோ னென்று நினைத்து.

---

(471) தொல். ஷே. (472) யாப். வி. 94; நன். 154 மயிலை. (473, 474) தொல். பொரு. 68, [1]ஒருவன்பால். (475, 476) ஷே; பெரும்பொருள்வி (புறத்).

கொள்ளார்தேங் குறித்தகொற்றம்.

477. மாற்றுப் புலந்தோறு [1]மண்டில மாக்கள்செல
வேற்றுப் புலவேந்தர் வேல்வேந்தர்க்—கேற்ற
படையொலியிற் பாலெலி பல்கின்ற லொன்ஞ
ருடையன தாம்பெற் றுவந்து.

இயங்குபடையரவம்.

478. இலங்குதொடி மருப்பிற் கடாஅம் வார்ந்து
நிலம்புடையூஉ வெழுதரும் வலம்படு குஞ்சரம்
எரியவிர்ந் தன்ன விரியுளை சூட்டிக்
கால்வளர்ந் தன்ன கடுஞ்செல விவுளி
கோன்முனைக் கொடியின் விரவா வல்லோன்
நோன்வினை கடிக்கும் தோன்றல பொரிதெழுந்
தருவியி னெலிக்கும் வரிபுனை நெடுந்தேர்
கண்வேட் டனவே முரசங் கண்ணுற்றுக்
கதத்தெழு மாதிரங் கல்லென வொலிப்பச்
கறங்கிசை வயிரொடு வலம்புரி யார்ப்ப
நெடுமதி னிரைஞாயிற்
கடிமிளைக் குண்டுகிடங்கின்
மீப்புடை யாரரண் காப்புடைத் தேஎம்
நெஞ்சுபுக லழிந்து நிலைதளர் பொரீஇ
ஒல்லா மன்னர் நடுங்க
நல்ல மன்றவிவன் வீங்கிய செலவே.

479. செருவெங் கதிர்வேற் சினவெம்போர் மாறன்
உருமி னிடிமுரசு மார்ப்ப—வரவுறழ்ந்
தாமா வகளு மணிவரையி னப்புறம்போய்
வேமால் வயிறெரிய வேந்து.

புறத்தோன் முற்றிய முதிர்வு.

480. கடல்பரந்து மேருச்சூழ் காலம்போற் சென்றோர்
கொடிமதில் காத்தோரைக் கொல்லக்—கடலெதிர்
தோன்றுப் புலிபோ லரண்மறவர் தொக்கடைந்தார்
மான்றேரான் மூதூர் வரைப்பு.

---

(477) தொல். பொரு. 67; பெரும்பொருள்வி (புறத்). [1]போர்மண்டி மாக்களன்கொள். (478)தொல்.ஷே. (479)முதற்தொள்ளாயிரம்(புறத்). (480)தொல். பொரு. 68. நச்.

தோலின் பெருக்கம்.

481. [1]இருசுட ரியங்காப் பெருமூ திலங்கை
நெடுந்தோ ளிராமன் [2]கடந்த ஞான்றை
எண்கிடை மிடைந்த பைங்கட் சேனையிற்
பச்சை போர்த்த பல்புறத் தண்ணடை
எச்சார் மருங்கினு மெயிற்புறத் திறுத்தலிற்
கடல்சூ ழாணம் போன்ற
தடல்சின வேந்தன் முற்றிய வூரே.

482. மாமுது தாதை யேவலி னூர்துறந்து
காணுறை வாழ்க்கையிற் கலந்த விராமன்
மாஅ விரலே வேட்டம் போகித்
தலைமகட் பிரிந்த தனிமையன் றனதுது
சுற்றமுஞ் சேணிடை யதுவே முற்றியது
நஞ்சகறை படுத்த புன்மிடற் றிறைவன்
உலகுபொதி யுருவமொடு கோதையைத் தலைநாள்
வெண்கோட்டுக் குன்ற மெடுத்த மீளி
வன்றோ ளாண்டகை யூரே யன்றோர்
சொன்முறை மறந்தனம் வாழி
வில்லு முண்டவற் கந்நா ளாங்கே
மாதர்க் கெண்டை வரிப்புறத் தோற்றமும்
நீலக் குவளை நிறமும் பாழ்பட
இலங்கை யகழி முற்று மாக்கிய
கருங்கா னெடுங்கழைக் கண்ணும் விளிம்பழிந்து
பெருநீ ருகுதன் மாதோ
குரங்குதொழி லாண்ட விராமன்
அலங்குதடற் றெரள்வாள் (கழித்த?) ஞான்றே.

(சேரமான், பொன்முடியாரையும் அரிசில்கிழாரையும் நோக்கித் தன்படைபட்டதன்மை கூறக்கோட்டோற்று அவர் கூறியது)

483. கலையெனப் பாய்ந்த மாவு மலையென
மயங்கம ருழந்த யானையு மியம்:படச்
சிலையலை தும்ந்த வயவரு மென்றிவை
பலபுறங் கண்டோர் மூன்ற ளினியே

---

(481) ஆசிரியமாலை (புறத்); தொல்.பொரு. 67.நச். [1]இருசுடர் வழங்காட். [2]கடந்தடு. (482) ஆசிரியமாலை (புறத்). (183) தொல். பொரு. 67. நச்.

யமர்புறங் கண்ட பசும்புண் வேந்தே
மாக்களி றுதைத்த கணைசேர் பைந்தலை
மூக்கறு நுங்கிற் றூற்றயற் கிடப்பக்
கலையாக் கழற்காற் கருங்க ணுடவர்
உருகெழு வெகுளியர் [1]செறுத்தன ரார்ப்ப
[2]மிளைபோ யின்று நாளை நாமே
யுருமிசை கொண்ட மயிர்க்கட்
டிருமூ சிரங்க ளூர்கொள் குவமே.

ஏணிமயக்கம்.

484. சேணுயர் ஞாயிற் றிணிதோளா னேற்றவும்
ஏணி தவிரப்பாய்ந் தேறவும்—பாணியாப்
புள்ளிற் பரந்து புகல்வேட்டார் போர்த்தொழிலோர்
கொள்ளற் கரிய குறும்பு.

485. பொருவரு மூதூரிற் போர்வேட் டொருவர்க்
கொருவ [3]ருடன்றெழுந்த காலை—யிருவரு
மண்ணெறி சார்த்தி மதில்சார்த் தியவேணி
விண்ணெறி சார்த்தி விடும்.

புறத்தோன் அகமிசைக கிவர்தல்.

486. வாயிற் கிடங்கொடுக்கி மாற்றினர் தம்பிணத்தாற்
கோயிற் கிடங்கொடுக்கிக் கோண்மறவர்—ஞாயிற்
கொடுமுடிமேற் குப்புற்றூர் கோவேந்தர்க் காக
நெடுமுடிதாங் கோட னினைந்து.

தோல்லெயிற் கிவர்தல்.

487. இற்றைப் பகலு ளெயிலகம் புக்கன்றிப்
பொற்றேரான் போனகங்கைக் கொள்ளாஞல்—எற்றுங்கொல்
ஆருத [4]லெம்பசித்தீ யாற வுயிர்பருகி
மாரு மறலி வயிறு.

பாசி.

488. பொலஞ்செய் கருவிப் பொறையுமிப் பண்ணமைய்
நிலந்திடர் பட்டதின் றுயிற்—கலங்கமர்மேல்
வேததமர் செய்யும் விரகென்னும் வேண்மறவர்
நீததுநீர்ப் பாய்புலிபோ னின்று.

பாசிமறம்.

489. மறநாட்டுந் தங்கணவர் மைந்தறியு மாதர்
பிறநாட்டுப் பெண்டிர்க்கு நொந்தார்—எறிதொறும்போய்

---

[1]செறுத்தெழுந் தார்பப. [2]எறிபோய். (484) தொல் பொரு. 68. (485) ஷை; பெருமபொருளவி (புறத்). [3]ருடன்றெழுநதாராகில். (486) ஷை. (487) ஷை67. [4]வெம்பசித் தீயா லுயிர்பருகி. (488, 489) ஷை. 68.

நீர்ச்செறி பாசிபோ னீங்காது தங்கோமான்
ஊர்ச்செரு வற்றூரைக் கண்டு.

புறத்தோன் மனங்காத்த நோச்சி.

490. தாய்வாங்கு கின்ற மகனைத் தனக்கென்று
பேய்வாங்கி யன்னதோர் பெற்றித்தே—வாய்வாங்கு
வெல்படை வேந்தன் விரும்பாதா ரூர்முற்றிக்
கொல்படை வீட்டுங் குறிப்பு.

நல்லிசைவஞ்சி.

491. பறைநிறை கொல்யானைப் பஞ்சவர்க்குப் பாங்காய்த்
திறைமுறையி னுய்யாதார் தேய—முறைமுறையின்
ஆன்போ யரிவையர்போ யாடவர்போ யாயீன்ற
வீன்போ யுறையு மிடம்.

492. வாகை வனமாலை சூடி யரசுறையும்
மகை யுயர்மாடத் துள்ளிருந்து—கூகை
படுபேய்க்குப் பாட்டயரும் பண்பித்தே தென்னன்
விடுமாற்றங் கொள்ளாதார் நாடு.

493. இரியன் மகளிரிலஞ்செமலு ளீன்ற
வரியிளஞ் செங்காற் குழவி—யரையிரவின்
ஊமன்பா ராட்ட வுறங்கிற்றே செம்பியன்ற
ஞமம்பா ராட்டாதார் நாடு.

494. [1]வேரறுகை பம்பிச் சுரைபட்டுத் வெள்ளூத்
தூரறிய லாகா கிடந்தனவே—போரின்
முகையவிழ்தார்க் கோதை முசிறியார் கோமான்
நகையிலைவேல் காய்த்தினூர் நாடு.

495. கரிபரந் தெங்குங் கடிமுள்ளி பம்பி
நரிபரந்து நாற்றிசையுங் கூடி—எரிபரந்த
பைங்கண்மால் யானைப் பகையடுதோட் கோதையைச்
செங்கண் சிவப்பித்தார் நாடு.

புறத்தோன் விரித்த புதுமை.

496. வெஞ்சின வேந்த னெயில்கோள் விரும்பியக்கால்
அஞ்சி யொதுங்காதார் யார்யாவர்—மஞ்சுசூழ்

(490) தொல். பொரு; பெரும்பொருள்வி (புறத்) (491—495) மூத் தொள்ளாயிரம். [1]வேரறுகுபம்பிச்சுரைபரந்து. (496)தொல்.பொரு 68; பெரும் பொருள்வி (புறத்).

வான்முரண் புரிசை பொறியு மடங்கின
ஆன்றோ ரடக்கம்போ லாங்கு.

497. மழுவான் மிளைபோய் மதிலா னகழ்தூர்ந்
தெழுவாளா னேற்றுண்ட தெல்லாம்—இழுமென
மட்டவிழ் கண்ணி மறவேந்தன் சிற்றத்தீ
விட்டெரிய விட்ட [1]மிகை.

புறத்தோன் வாண்மங்கலம்.

498. செற்றவர் செங்குருதி யாடற்கு வாள்சேர்ந்த
கொற்றவை மற்றிவையுங் கொள்ளுங்கொல்—முற்றியோன்
பூவொடு சாந்தும் புகையவி நெய்ந்நறைத்
தேவொடு செய்தான் சிறப்பு.

மண்ணுமங்கலம்.

499. மழுவாளான் மன்னர் மருங்கறுத்த மால்போற்
பொழிலேழுங் கைக்கொண்ட போழ்தி—னெழின்முடி
சூடாச்சீர்க் கொற்றவனுஞ் சூடினன் கோடியர்க்கே
கூடார்நா டெல்லாங் கொடுத்து.

புறத்தோன் தொகைநிலை.

500. கதிர்சுருக்கி யப்புறம்போங் காய்கதிர்போல் வேந்தை
எதிர்சுருக்கி [2]யேந்தெயில்பா ழாக்கிப்—பதியிற்
பெயர்வான் முரசுத்த படைத்துகளாற் பின்னும்
உயர்வான் குறித்த துலகு.

தும்பை.

தானைநிலை.

501. கார்க்குலமும் பாய்திரையுங் காட்டுங் கடற்படையும்
போர்க்களிறும் பாய்மாவும் பொங்குமால்—ஏற்ற
கலமுடைத்து முந்நீர் கதிராழித் திண்டேர்
பலவுடைத்து வேந்தன் படை.

502. அனைத்துலகுஞ் [3]சூழ்போ யருந்தியங் கைக்கொண்
டினைத்தளவைத் தென்றற் கரிதாம்—பனிக்கடன்

(497) தொல். பொரு. 67; பெரும்பொருள்வி(புறத்). [1]வகை. (498–500) ஷெ. 68. [2]யேற்றெயில்பா. (501) தண்டி. 48. (502) ஷெ; வீரசோ. அலங். 23 மேற். [3]சேய்போ யரும்பொருள்.

மன்னவரின் சேனைபோன் மற்றது நீர்வடிவிற்
றென்னு மிதுவொன்றே வேறு.

503. நாயகர்க்கு நாய்கள்போ னட்பிற் பிறழாது
கூஉய்க் குழாஅ முடன்கொட்கு—மாய்படை
பன்றி யினையர் பகைவேந்த ராங்கவர்
சென்றெவன் செய்வர் செரு.

504. வெய்யோ னெழாமுன்னம் வீங்கிருள் கையகலச்
செய்யோ [1]ளெளிவழங்குஞ் செம்மற்றே—கையகன்று
போர்தாங்கு மன்னன்மூன் புக்குப் புகழ்வெய்யோன்
தார்தாங்கி நின்ற தகை.

505. தற்கொள் பெருவிறல் வேந்துவப்பத் தானவற்
கொற்கத் [2]தூதவிளு ளுகுமாற் பிற்பிற்
பலர்புகழ் [3]செல்வங் தருமாற் பலர்தொழு
[4]வானக வாழ்க்கையு மீயுமா லண்ணதோர்
மேன்மை யிழப்பப் பழிவருவ செய்பவோ
தானேயும் போகு முயிர்க்கு.

யானைமறம்.

506. மாயத்தாற் றுக்கு மலையு மலையும்போற்
காயத்தூ றஞ்சாக் களிற்றெடும்போய்ச்—சாயுந்
தொலைவறியா வாடவருந் தோன்றினர் வான்மேன்
மலையுறையுந் தெய்வம்போல் வந்து.

507. மம்மர் விசும்பின் மதியு மதிப்பகையும்
தம்மிற் றமோற்றம் போன்றதே—வெம்முனையிற்
போர்யானை மன்னர் புறங்கவித்த வெண்குடையைக்
கார்யானை யன்றடர்த்த கை.

508. வான்றோய் கழுகினமும் வள்ளுகிர்ப் பேய்க்கணமும்
ஊன்றோய் நரியு முடன்றொக்க—மூன்றும்
கடமா நிலமானைக்குங் கார்யானைக் கிட்ட
படமாறு நீப்பதனைப் பார்த்து.

சேனையானை.

509. வீறுசான் மன்னர் விரிதாம வெண்குடையைப்
பாற வெறிந்த பரிசயத்தாற்—றேறுதி

---

(503) தொல். பொரு. 312 உரை. (504) ஷே. ஷே. 72; பெரும் பொருள்வி (புறத்). [1]ஒளிதிகழுஞ். (505) ஷே. [2]தூலத்தானு மாகுமால். [3]செம்ம லுடைத்தால். [4]வானுறை. (506) தொல். பொரு. 72 உரை; பெரும்பொருள்வி (புறத்). (507, 508) பெரும்பொருள்வி (புறத்).

செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
திங்கண்மே னீட்டுந்தன் கை.

சோழன்யானை.

510. அயிற்கதவம் பாய்ந்துழக்கி [1]யாற்றல்சால் மன்னர்
எயிற்கதவங் கோத்தெடுத்த கோட்டாற்—பனிக்கடலுட்
[2]பாய்தோய்ந்த நாவாய்போற் றோன்றுமே யெங்கோமான்
காய்சினவேற் கிள்ளி களிறு.

511. கச்சி யொருகான் மிதியா வொருகாலாற்
றத்துநீர்த் தண்ணுஞ்சை தான்மிதியாப்—பிற்றையு
நீழ லொருகான் மிதியா வருமேகங்
கோழியர்கோன் கிள்ளி களிறு.

512. பாற்றின மார்ப்பப் பருந்து வழிப்படா
நாற்றிசையு மோடி நிகதிப்ப—வாற்ற
வலங்கலம் பேய்மகளி ராட வருமே
யிலங்கிலைவேற் கிள்ளி களிறு.

513. கொடிமதில் பாய்ந்திற்ற கோடு மரசர்
மூடியிடறித் தேய்ந்த நகமும்—பிடிமுன்பு
பொல்லாமை ராணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு.

514. மண்படுதோட் கிள்ளி மதவேழ மாற்றரசர்
வெண்குடையைத் தேய்த்த வெகுளியால்—விண்படர்ந்து
பாயுங்கொ லென்று [3]பனிமதியுந் தன்னுருவந்
தேயுந் தெளிவிசும்பி னின்று.

515. வங்கா முகில்பொழியா நாளும் புனறேங்கும்
பூங்கா விரிநாடன் போர்மதமா—நீங்கா
வளைபட்ட தாளணிகண் மாறெதிர்ந்த தெவ்வர்
தளைபட்ட தாட்டா மரை.

516. கானிமிர்த்தாற் கண்பரிப வல்லியோ புல்லாதார்
மானினையார் மங்கலநா ணல்லவோ—தான
மழைத்தடக்கை வார்கழற்கான் மானவேற் கிள்ளி
புழைத்தடக்கை நால்வாய்ப் பொருப்பு.

(509, 510) மூத்தோள்ளாயிரம். [1]யாழித்தேர் குத்தி, [2]பாய்செய்த. (511-513) ஷ (புறத்). (514) தொல். பொரு. 307 மேற்; வீரசோ. அலங். 25 மேற்; தண்டி. 55 மேற். [3]பனிமதியம் போல்வதூஉம். (515) வீரசோ. அலங். 31 மேற்; தண்டி. 77 மேற். (516) தண்டி. 28.

பாண்டியன்யானை.

517. உருவத்தார்த் தென்னவ னேங்கெழில் வேழத்
திருகோடுஞ் செய்தொழி லெண்ணி—ஒருகோடு
வேற்ரு ரகல முழுமே யொருகோடு
மாற்ரூர் மதிறிறக்கு மால்.

518. மருப்பூசி யாக மறங்கனல்வேன் மன்னர்
உருத்தகு மார்போலை யாகத்—திருத்தக்க
வையக மெல்லா மெமதென் றெழுதுமே
மொய்யிலைவேன் மாறன் களிறு.

519. அடுமதில் பாய வழிந்தன கோட்டைப்
பிடிமுன் பழகழித ஞணி—முடியுடை
மன்னர் குடையான் மறைக்குமே செங்கனல்வேற்
றென்னவர் கோமான் களிறு.

520. தோற்ற மலகட லோசை புயல்கடாஅங்
காற்றி னிமிர்ந்த செலவிற்ரூய்க்—கூற்றங்
குறியெதிர்ப்பை கொள்ளுந் தகைமைத்தே யெங்கோன்
எறிகதிர்வேன் மாறன் களிறு.

521. கையது கையோ டொருதுணி கோட்டது
மொய்யிலைவேன் மன்னர் முடித்தலை—பைய
உயர்பொய்கை நீராட்டிச் செல்லுமே யெக்கோன்
வயவெம்போர் மாறன் களிறு.

களப்பாளன்யானை.

522. படுபருந்துஞ் சூர்ப்பேயும் பல்விலங்குஞ் செந்நாய்
கொடிகழுகு மின்னவெலாங் கூடி—வடிவுடைய
கோமான் களப்பாளன் கொல்யானை போமாறு
போமாறு போமாறு போம்.

யானைநிலை.

523. ஆர்த்தார்த்துக் கண்சேர்ந்து வேர்த்து விரைந்துதன்
பொன்னுடை யானையின் மேற்கொண்டா னென்னுங்கொல்
மன்ன ருறையு [1]மதில்.

524. மட்டித்தா னுண்டு மதஞ்சோர்ந்து விட்டுக்
களியானை கொண்டுவா வென்ரூன் களியானைக்
கியாரோ வெதிர்நிற் பவர்.

(517—520) மூத்தோள்ளாயிரம். (521) தொல். பொரு. 72. நச். (522) தனிப்பாட்டு. (523, 524) யாப். வி. 94, [1]மெயில்.

525. ஒருகை யுடைய தெறிவலோ யானும்
இருகை சுமந்துவாழ் வேன்.

தகுதிநிலை.

526. மூற்குளம்பி னுற்கிளறி மோந்தங்கோர் மூக்காலும்
பொற்சுண்ண மாடிப் புரண்டெழுந்து—நற்சென்னி
நேர்நிறுத்தி நின்றுதறிக் கங்கைநீ ருண்டனவே
பானிறத்த மால்வெண் பரி.

527. பல்லுருவக் [1]காலின் பரியுருவத் தாக்கித்தன்
தொல்லை யுருவிழந்த தோற்றம்போல்—எல்லா
மொருகணத்துத் தாக்கி யுருவிழந்த பாய்மாப்
பொருகளத்து வீழ்ந்து புரண்டு.

மாவளவன்தகுதி.

528. சாலியரி சூட்டான் மடையடைக்கு நீர்நாடன்
மாலு மழைத்தடக்கை மாவளவன்—காலியன்மா
மன்னர் முடியுதைத்து மார்பகத்துப் பூணுழக்கிப்
பொன்னுரைகற் போன்ற குளம்பு.

பாண்டியன்தகுதி.

529. நிரைகதிர்வேன் மாறனே நேர்நின்றூர் யானைப்
புரைசை யுறநிமிர்ந்து பொங்கா—வரசர்த
முன்முன்னு [2]வீழ்ந்த முடிக ளுதைத்தமாப்
பொன்னுரைகற் போன்ற குளம்பு.

போர்த்தொழில்.

530. சேந்தன வேந்தன் றிருநெடுங்கண் டெவ்வேந்தர்
வந்து தடந்தோ ளிழிகுருதி—பாய்ந்த
திசையனைத்தும் வீரச் சிலைபொழிந்த வம்பும்
மிசையனைத்தும் புட்குலமும் வீந்து.

531. செம்மை யுடையார் சிறியார்மேற் சொல்லுஞ்சொல்
வெம்மை யுடைய விறற்பகழி—தம்வண்மை
காலிட்டா னென்னுது காய்ந்தவர்மேற் பாய்ந்தனவே
மேலிட் டியிர்போக மிக்கு.

---

(525) தொல். பொரு. 254. (526) வீரசோ. அலங். 10. மேற். (527) தொல். பொரு. 72. நச். [1]காரி. (528) செ. செ. 86. (529) மூத்தொள் ளாயிரம். [2]வீழ்ந்தார். (530) தண்டி. 38. (531) வீரசோ. அலங். 12 மேற்.

532. குழாக்களிற் றரசர் குறித்தெழு கொலைக்களம்
விழாக்களம் போல மெய்ம்மலி யுவகையர்
ஆண்மை யுள்ளங் கேண்மையிற் றுரத்தலின்
அழுந்துபடப் புல்லி விழுந்துகளம் படுநரும்
நீர்ப்பெயற் பிறந்த மொக்குள் போலத்
தாக்கிய விசையிற் சிதர்ந்துநிலம் படுநரும்
தகருந் தகருந் தாக்கிய தாக்கின்
முகமுகஞ் சிதர முட்டு வோரும்
முட்டியின் முறைமுறை குத்து வோரும்
கட்டிய கையொடு காறட் குநரும்
கிட்டினர் [1]கையற் றொட்டிநிற் போரும்
சுட்டிய பெயரை [2]விட்டழிப் போரும்
சக்கரம் போலச் சங்குவிட் டெறிநரும்
சிலைப்புடை மூசிற் றலைப்புடைக் குநரும்
மல்லிற் பிடித்தும் வில்லி னெற்றியும்
உடைக்கியு மூரப்பியு நோக்கியு நுவன்றும்
போக்கியும் புழுங்கியு நாக்கடை கவ்வியும்
எயிறுடன் நிருகியுங் கயிறுபல வீசியும்
இனைய செய்தியின் முனைமயங் குநரும்
பிறப்பும் பெருமையுஞ் சிறப்புஞ் செய்கையுஞ்
அரைசறி பெருமையு முரைசெ லாண்மையும்
உடையோ ராகிய படைகொண் மாக்கள்
சென்றுபுகு முலக மொன்றே யாதலின்
ஒன்றுபடு மனத்தொடு கொன்றுகொன் றுவப்பச்
செஞ்சோற்று விலையுந் தீர்ந்ததம் மனையியர்
தம்பிணந் தழீஇ நொந்துகலுழ்ந் திரங்கவும்
புதுவது வந்த மகளிர்க்கு
வதுவை சூட்டிய வான்படாந் தோரே.

நடாப்படையாண்மை.

533. மாநாக முன்னுயர்த்தான் சேனை களமுழுதுந்
தானு வருமதனைத் தாங்கினன்—மேனின்
அருகணையா வண்ண மடற்போரின் வென்று
வருகணையாற் பெற்ற மகன்.

---

(532) தொல். பொரு. 72 நச். [1]கையிற் றொட்டெதிர்போரும். [2]யிட்டைழப் போரும். (533) விரசோ. பொருட். 15.

மெய்யாற்போருதல்.

534. கொல்லேறு பாய்ந்திறுத்த கோடுபோற் றண்டிறுத்து
மல்லேறு தோள்வீமன் மாமனைப்—புல்லிக்கொண்
டாரூத போர்மலைந் தாங்காசர் கண்டார்த்தார்
ஏரூட லாய ரென.

களிறெறிந்தெதிர்ந்தோர் பெருமை.

535. இடியா னிருண்முகிலு மேறுண்ணு மென்னும்
படியாற் பகடொன்று மீட்டு—வடிவே
லெறிந்தார்த்தார் மள்ள ரிமையாத கண்கொண்
டறிந்தார்த்தார் வானேரு மாங்கு.

536. இருபாற் சேனையு ணிமிருண்டு நோக்க
மூடுகியற் பெருவிசை யுரவுக்கடுங் கொட்பின்
எண்டிசை மருங்கினு மெண்ணிறைந்து தோன்றினும்
ஒருதனி யணுமன் கையகன்று பரப்பிய
வன்மாந் துணிபட வேறுபல நோன்படை
வழங்கி யகம்பன் ரேள்படை யாக
ஒச்சியாங் கவனு முன்கையி னழுத்தலிற்
றனதது வன்றலை யுடல்புக்குக் குளிப்பக்
கரிந்துயிர் போகு செங்நெறி பெருமையிற்
பொருகளத்து நின்றன நெடுஞ்சேட் பொழுதே.

537. பருதிவேன் மன்னர் பலர்காணப் பற்ரூர்
குருதிவாள் கூறிரண்டு செய்ய—ஒருதுணி
கண்ணிமையா முன்னங் கடிமதிலுள் வீழ்ந்ததே
மண்ணதே மண்ணதே யென்று.

538. அறத்திற் பிறழ வாசெறியுந் தானை
மறத்திற் புறங்கண்டு மாரூன்—ரூறைத்தடுக்கிச்
செல்லுங்காற் காட்டுத்தீச் சென்ரூங்குத் தோன்றுமே
பல்படையார் பட்ட படி.

539. சென்ற வுயிர்போலத் தோன்ரூ துடல்நிறைந்தோன்
நின்ற வடிபெயரா நின்றவை—மன்ற
லாமகளிர் மங்கலத்திற் காங்காங்கு வைத்த
மாவடியே போன்றன வந்து.

---

(534) தொல். பொரு. 72. நச். (535) ஷை; பெரும்பொருள்வி. (புறத்). (536) ஆசிரியமாலை (புறத்). (537) தொல்.பொரு. 71 நச். (538,539) ஷை.72.

அட்டையாடுதல்.

540. வான்றுறக்கம் வேட்டெழுந்தார் வாண்மறவ ரென்பதற்குச்
சான்றுரைப்ப போன்றன தங்குறை—மான்றோர்மேல்
வேந்து தலைபனிப்ப விட்ட வுயிர்விடாப்
பாய்ந்தன மேன்மேற் பல.

இருவருந்தபுநிலை.

541. அறத்துறைபோ லாரெயில் வேட்ட வரசர்
மறத்துறையு மின்னது மன்னே—நிறைச்சுடர்கள்
ஒன்றி வரப்பகல்வா யொக்க வொளிதேய்ந்தாங்
கின்றிவர் வீழ்ந்தா ரெதிர்ந்து.

வாளோராடும் அமலை.

542. ஆளுங் குரிசி லுவகைக் களவென்னுங்
கேளன்றிக் கொன்றுமே கேளாகி—வாள்வீசி
ஆடினு ரார்த்தா ரடிதேய்ந்த மண்வாங்கிச்
சூடினுர் வீழ்ந்தாரைச் சூழ்ந்து.

எருமைமறம்.

543. சிற்றங் கனற்றச் சிறக்கணித்துச் செல்லுங்கால்
ஏற்றெருமை போன்ரு னிகல்வெய்யோன்—மாற்ருன்
படைவரவு [1]காத்துத்தன் பல்படையைப் பின்காத்
திடைவருங்காற் பின்வருவார் யார்.

வாகை.

கூதிர்ப்பாசறை.

544. மூதில்வாய்த் தங்கிய முல்லைசால் கற்புடை
மாதர்பாற பெற்ற வலியளவோ—கூதிரின்
வெங்கண் விறல்வேந்தன் பாசறையுள் வேனிலான்
ஐங்கணை தோறற வழிவு.

அவிப்பலி.

545. கச்சிலைவேற் காளைக்கு நாளையே கொற்றவை
கைச்சிலையு நல்கும்யாங் காணேங்கொல்—மிச்சில்கூர்
வாளின்வாய்த் தீண்டாத வார்குருதி மெய்சாய்ப்பத்
தாளின்வாய் வீழ்த்தான் றலை.

---

(540) தொல். பொரு. 71 நச். (541) ஷ்டி. 68 நச். (542) பெரும்பொருள்வி (புறத்); தொல். பொரு. 72 மேற். (543) தொல். ஷை. [1]பார்த்துத்தன் பல் படையைக்காத்துய்த். (544) பெரும்பொருள்வி (புறத்). (545) சிலப். காதை 12. பக். 331.

களவேள்வி.

546. வென்று களங்கொண்ட வேந்தன்றேர் சென்றதற்பின்
கொன்ற பிணநிணக்கூழ்க் கொற்றவை—நின்றளிப்ப
உண்டாடு பேய்கண் டுவந்தனவே போர்ப்பரிசில்
கொண்டா டினகுரவைக் கூத்து.

547. மாகதப் பூண்மன்னர் தோள்வளை [1]கீழா
வயிரக் கடகக்கை வாங்கித்—துயருழந்து
புண்ணுற் றழைக்குங் குறுகாரித்தே பூழியனைக்
கண்ணுற்று வீழ்ந்தார் களம்.

548. முடித்தலை வெள்ளோட்டு மூலைநெய் யாகத்
தடித்த குடர்திரியா மாட்டி—யெடுத்தெடுத்துப்
பேஎய் விளக்கயரும் பெற்றித்தே செம்பியன்
சேஎய் பொருத களம்.

549. வேய பெண்டி ரெரிமூழ்கக் கண்டுதன்
ரூனையாற் கண்புதைத்தான் ரூர்வழுதி—யானெயெலாம்
புல்லார் பிடிபுலம்பத் தாங்கண் புதைத்தவே
பல்வாயார் பட்ட களத்து.

550. வெருவரு வெஞ்சமத்து வேலிலங்க வீழ்ந்தார்
புருவ முரிவுகண் டஞ்சி—நரிவெரீஇச்
சேட்கணித்தாய் நின்றழைக்குஞ் செம்மற்றே தென்னவன்
வாட்கணித்தாய் வீழ்ந்தார் களம்.

பசுகயிடமழித்தல்.

551. கொல்லியம பொருபபனை மேவார் கோநகர்
இல்லெரி மேவுவ தியம்ப வேண்டுமோ
வல்லியந் தாமரை வனங்க ளாயின
வல்லியந் தாமரை வனங்க ளாயின.

வென்றி.

552. கொடித்தலைத்தார் மன்னவன் றேற்ரூன்போ னின்ரூன்
மடித்தவாய் சுட்டிய கையாற்—பிடித்தவேல்
கண்ணேரா வோச்சிக் களிறணையாக் கண்படுத்த
மண்ணேரா மன்னரைக் கண்டு.

---

(546) பெரும்பொருளவி(புறத்). (547-550) முத்தொள்ளாயிரம் [1]கீளா. (551) தண்டி. 94. (552) முத்தொள்ளாயிரம்.

553. தொழிறேற்றுப் பாலகனே முன்னிறீஇப் பின்னின்
றழலிலேவேல் காய்த்திருர் பெண்டிர்—கழலடைந்து
மண்ணீத்த லென்ப வயங்குதார் மாமாறன்
கண்ணீத்தந் தீர்க்கு மருந்து.

நிறை.

554. பல்யானை மன்னர் படுநிறை தந்துய்ம்மின்
மல்ல னெடுமதில் வாங்குவிற் பூட்டுமின்
[1]வல்லிதழ் வாடாத வாளெரும் வானவன்
வில்லெழுதி வாழ்வர் விசும்பு.

555. நேமி நிமிர்தோ ணிலவுதார்த் தென்னவன்
காமர் நெடுங்குடைக் காவல ஞாணையால்
வம மணிப்பூ ணிணையார் திருந்தடி
பூமி மிதியாப் பொருள்.

556. நிறைமதிபோல் யானைமே லிலத்தார் மாறன்
குடைதோன்ற ஞாலத் தரசர்—நிறைகொள்
இறையோ வெனவந் திடம்பெறுத லின்றி
முறையோ வெனநின்ரூர் மொய்த்து.

557. நின்றீமின் மன்னீர் நெருநற் றிறைகொணர்ந்து
மூன்றந்த மன்னர் மூடிதாக்க—வின்றுந்
திருந்தடி புண்ணுகிச் செவ்வி யிலனே
பெருந்தண் ணுறந்தையார் கோ.

அறிவனீவாகை.

558. வாய்மை வாழ்நர் மூதறி வாள
நீயே யொருதனித் தோன்ற லுறைபதி
யாருமி லொருநிறை யானே தேரின்
அவ்வழி வந்தநின் னுணர்வுமுதற் றங்குந்
தொன்னெறி மரபினு மூவகை நின்றன
காலமு நின்னெடு வேறென
யாரோ டெருமநிற் றேர்கு வோரே.

(553—557) முத்தொள்ளாயிரம். [1]வள்ளிதழ். (558) தொல். பொரு. 75, மேற்.

பாடாண்.

அரசன் சிறப்பு.

559. மின்னுர் மணிப்பைம்பூண் வேந்தே நினக்குலகில்
இன்னு தவர்யாரு மில்லையால்—ஒன்னுர்
குலமுழுதுங் கூற்றங் கொளவெகுண்டு நீயே
தலமுழுதுந் தாங்க றகும்.

560. விண்ணின்மேற் காவல் புரிந்துறங்கான் விண்ணவர்கோன்
மண்ணின்மே லன்னே வயவேந்தே—தண்ணளியிற்
சோரா வவுணர் நிறங்களேயுந் தேவர்கோன்
நேரார்மே லத்தகையை நீ.

சேங்கோற் சிறப்பு.

561. [1]நிறைபடுவ புட்ருலமே நீம்புனலு மன்ன
இறைவநீ காத்தளிக்கு மெல்லை—முறையிற்
கொடியண [2]குன்றத்தின் மாளிகையே யன்றிக்
கடியவிழ்பூங் காவு மூள.

562. வெண்ணீர்மை தாங்குவன முத்தே வெளியநாய்க்
கண்ணீர்மை சோர்வ கடிபொழிலே—பண்ணீர
மென்கோலி யாழே யிரங்குவன வேல்வேந்தே
நின்கோ [3]னிலவு நிலத்து.

மன்னரிதிறம்.

563. உறையு மிடமன்றே பாரெலா மும்பர்
[4]நெறியு நிலாமுற்ற மன்றே—நிறுவாய்க்கா
லற்றன்றே மூங்நீ ரகன்றுயர்ந்த மாமேரு
புற்றன்றே நீமுனிந்த போது.

(பொய்கையார்)

564. அவிழ்ந்த தணியசைக்கு மம்பலமுஞ் சிக்கும்
மலிழ்ந்திடுவார் முன்ன மலருங்—கவிழ்ந்து
நிழறுழா யானே நெடுமான்றேர்க் கின்னி
கழறுழா மன்னர்த்தங் கை.

---

(559) தண்டி. 100 மேற்; வீரசோ. (560) வெ. 30. (561, 562) வெ. 75; வீரசோ. அலங். 30 மேற். [1]நிறைபயில்வ. [2]மாளிகையின் குன்றமே [3]துலவு. (563) வீரசோ. பொருட். 15 மேற். [4]லவு. (564) யாப். வி. 36.

கண்படைநிலை.

565. வாய்வாட் டானை வயங்குபுகழ்ச் சென்னிகின்
ஓவா வீகையி னுயிர்ப்பிடம் பெரூஅர்
களிறுகவர் முயற்சியிற் பெரிதுவருந் தினரே
உலகங் காவலர் பலர்விழித் திருப்ப
வறிது துயில்கோடல் வேண்டுநின்
பரிசின் மாக்களுந் துயில்கமா சிறிதே.

அரசனுக்குச் சென்றநாழிகைக்குச் சொன்ன கவி.

566. பூமென் கணையும் பொருசிலையுங் கைக்கொண்டு
காமன் றிரியுங் கருஞ்சா—யாமங்கள்
ஒன்றுபோ யொன்றுபோ யொன்றுபோய் நாழிகையும்
ஒன்றுபோ யொன்றுபோ யொன்று.

நாண்மங்கலம்.

[பறைசாற்றியது.]

567. ஏமாரு மன்னீ ரெயிறிமி னெக்கோமான்
வாமான்றேர்க் கோதை சதயநா—ளாமாறு
காம நுகருமின் கண்படுமி னென்னுமே
ஏம முரசின் குரல்.

[வேள்ளணிநாட் செறுவொழிந்தது.]

568. கண்ணுர் கதவந் திறமின் களிறூடுதேர்
பண்ணுர் நடைப்புரவி பண்விடுமின்—நண்ணுதீர்
தேர்வேந்தன் றென்னன் றிருவுத் திராடநாட்
போர்வேந்தன் பூச விலன்.

569. அந்தண ராவொடு பொன்பெற்றூர் நாவலர்
மந்தரம்போன் மாண்ட களிறூர்ந்தார்—எந்தை
இலங்கிலைவேற் கிள்ளி யிரேவதிநா ளென்னே
லெம்பிதன் கூடிழந்த வாறு.

சிறைவிடுதல்.

570. செய்கை யரிய களவழிப்பா மூன்செய்த
பொய்கை யொருவனுற் போந்தாமோ—சைய
மலைச்சிறைதீர் வாட்கண்டன் வெள்ளணிநாள் வாழ்த்திக்
கொலைச்சிறைதீர் வேந்துக் குழாம்.

---

(565) தொல். பொரு. 90 ஈச். (566) சிலப். 5, 49 அடி. (567) தொல். பொரு. 91 ஈச். (568, 569) ஷே ; மூத்தொள்ளாயிரம். (570) தொல். பொரு. 91 ஈச்.

மண்ணுமங்கலம்.

571. அளிமுடியாக் கண்குடையா லுகுதிநாள் வேய்ந்த
ஒளிமுடி பொன்மலையே யொக்கும்—ஒளிமுடிமேன்
மந்திரத்தா லந்தணர் வாக்கியநீ ரம்மலைமே
லந்தரத்துக் கங்கை யனைத்து.

வாண்மங்கலம்.

572. ஆளி மதுகை யடல்வெய்யோன் வாள்பாடிக்
கூளிகள் வம்மினே கூத்தாடக்—காளிக்குத்
தீராத வெம்பரி தீர்த்தநாஞ் செங்குருதி
நீராட்டி யுண்ட நிணம்.

573. அரும்பவிழ்தார்க் கோதை யாசெறிந்த [1]வொள்வாள்
பெரும்புலவுஞ் செஞ்சாந்து நாறிச்—சுரும்போடு
[2]வண்டாடும் பக்கமு முண்டு குறுநரி
கொண்டாடும் பக்கமு முண்டு.

தூடைமங்கலம்.

574. மந்தரங் காம்பா மணிவிசும் போலியாத்
திங்க ளதற்கோர் திலதமா—வெங்கணு
முற்றுநீர் வையமு முழுது நிழற்றுமே
கொற்றப்போர்க் கிள்ளி குடை.

575. அறநீர்மை தாங்கி யளப்பரிதாய் வானப்
புறநீர்போன் முற்றும் பொதியும்—பிறரொவ்வா
மூவேந்த ருள்ளு முதல்வேந்தன் முத்தமிழ்க்குக்
கோவேந்தன் கண்டன் குடை.

576. மனுப்புவிமேல் வாழ மறைவளர்க்கு மாரப்
பனித்தொடையற் பார்த்திவர்கோ னெங்கோன்—தனிக்கவிகை
தண்மை நிழற்றன்று தற்றொழுத பேதையர்க்கு
வெம்மை நிழற்றுய் மிகும்.

வேள்விநிலை.

577. பொன்னிறைந்த பொற்கோட்டுப் பொற்குளம்பிற் கற்றுதந்
நின்மனிலா னந்தணரை யின்புறுப்பர்—சென்னிதன்
மாநிலமே யாலுலகம் போன்றது வான்றுகள்போர்த்
தானுலக மண்ணுலகா மன்ற.

(571, 572) தொல். பொரு. 91 நச். (573, 574) கூ; முத்தொள்ளாயிரம். [1]வென்வேல். [2]கொண்டாடும் பக்கமு முண்டு குறுநரி, யுண்டாடும்பக்கமு முண்டு. (576) வீரசோ, அலங். 29; தண்டி, 74 மேற். (577) தொல். பொரு. 90 நச்.

விளக்குநிலை.

578. மைம்மிசை யின்றி மணிவிளக்குப் போலோங்கிச்
செம்மையி னின்றிலங்குந் தீபிகை—தெம்முனையுள்
வேலினுங் கோடாது வேந்தன் மனைவிளங்கக்
கோலினுங் கோடா கொழுந்து.

வாயினிலை.

579. வேற்றுச் சுரத்தோடு வேந்தர்கண் வெம்மையும்
மாற்றற்கு வந்தனெம் வாயிலோய்—வேற்றூர்
திறைமயக்கு மூற்றத்துச் சேணெங்கு கோயில்
இறைமகற்கெம் மாற்ற மிசை.

செவியறிவுறூஉ.

(மருட்பா)

580. பல்யானை மன்னர் முருங்க வமருழந்து
கொல்யானை தேரோடு கோட்டங்து நல்ல
தலையாலங் கானம் பொலியத் தொலையாப்
படுகளம் பாடுபுக் காற்றிப் பகைஞர்
அடுகளம் வேட்டோன் மருக வடுதிற
[1]லாழி நிமிர்தோட் பெருவழுதி யெஞ்ஞான்றும்
ஈர முடையையா யென்வாயச்சொற் கேட்டி
உடைய வுழவரை நெஞ்சணுங்கக் கொண்டு
வருங்கா லுழவர்க்கு வேளாண்மை செய்யன்
மழவு நிழைக்கும் [2]வரைகா ணிதியீட்டங்
காட்டு மமைச்சரை யாற்றத் தெளியல்
[3]அடைத்த வரும்பொரு ளாறன்றி வெளவல்
[4]ஈகைப் பெரும்பொரு ளாசையாற் சென்று
பெருங்குழிசி, மன்ற மறுக வகழாதி யென்றும்
மறப்புற மாக மதரையா ரோம்பும்
அறப்புற மாசைப் படேற்க [5]வுறத்தால்
அவையார் கொடுநாத் திருத்தி நவையாக
நட்டார் குழிசி நிதையாதி யொட்டார்
[6]செவிபுதைக்குந் தீய கடுஞ்சொற் கவிபடைத்தாய்

(578, 579) தொல். பொரு, 90 நச். (580) யாப். வி. 55; வீரசோ. பக். 189; யாப். கா. செய். 27 மேற். [1]லாளி. [2]குலநெதி யீட்டங்; வரைக்கா னிதி யீட்டம்; [3]படைத்த. [4]இனத்தைப். [5]வரத்தால். [6]செவியிசைக்குந் தீய கடுஞ்சொ லுடைத்தாய்க்.

கற்றூர்க் கினஞ்சிக் கல்லார்க் கடிக்தொழுகிச்
செற்றூர்ச் செகுத்துநிற் சேர்ந்தாரை யாக்குதி
அற்ற மறிந்த வறிவினுய் மற்றும்
இவையிவை [1]நீயா தொழுகி னிலையாப்
பொருகட லாடை நிலமகள்
ஒருகுடை நீழற் றுஞ்சுவண் மன்னே.

(செவியறிவுறூஉச் சமநிலைமருட்பா.)

581. இருமூன்றி லொன்றுகொண் டேதங் [2]கடிந்து
பெருநீர்மை யார்தொடர்ச்சி பேணி—யிருநிலங்
காப்பா யாகுமதி கடனென
மாப்பெருந் தானை மன்ன ரேறே.

புறநிலைவாழ்த்து.

582. தென்ற லிடைபோழ்ந்து தேனூர் நறுமுல்லை
முன்றின் முகைவிரியு முத்தநீர்த் தண்கோளூர்க்
குன்றமர்ந்த கொல்லேற்ரு னிற்காப்ப—என்றும்
தீரா நண்பிற் றேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே.

(மதிவாணனார்)

583. அந்தணர் வேள்வியோ டருமறை முற்றுக
வேந்தன் வேள்வியோ டியாண்டுபல வாழ்க
வாணிக நிருநெறி நீணிதி தழைக்க
பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக
வாழ்க நெடுமுடி கூர்கவென் வாய்ச்சொலென.

பரிசில்கடாநிலை.

584. தென்குமரி வடவிமய
மாஅவெல்லைத் தம்புகழ்விளங்கக்
கடலன்ன படைநாப்பண்
மலையன்ன களிற்றெருத்தின்
ஞாயிற்றன்ன சேண்விளங்குதிறலர்
திங்களன்ன வெண்குடையுயரிய
ஒன்னுதார் மிடல்சாயத்
துன்னரிய வகழ்கடந்தவர்

---

[1]நீவாதொழுகிற் றெய்லையாப். (581,582) யாப்.வி. 55. [2]கழிந்து. (583) சிலப். 6.36. (584) யாப். வி. 94.

பொன்னுடைய வெயின்முருகி
ஒவத் தன்ன வினைபுனை நல்லில்
கோவத் தன்ன கனையெரி கவரச்
சென்றவர்திறன் மழுங்கவாற்றலிற்
புலவர்பல புகழ்கொண்டு
பெறலரிய விழுத்தாயம்
விறலியர்க்கு மகிழ்ந்துவீசினை
ஒன்னார் தப்பிற் றென்னவர் மருக
பல்கினைப் பகிநோலுது
கல்பிறங்கிய சுரநீந்தி
இவண்வந்த நசைவாழ்நன்
எனைவைத் தெல்லாம்பிறர்க்கும் ?
ஈந்ததெல்லாம் எனக்காகும் ?
பொருள்கொடுத்தும் புகழ்கொள்வனென
இவற்கீயே னெனக்கெவனென்ன
என்னேக்காது நின்னேக்கி
என்னை விடுமதி வென்வேல் வழுதி
வெயிற்கதிர் நுழையா வியன்பெருங் காவிற்
றண்புனல் வையை யொண்டுறைத் தொகுத்த
கோடுறு மணலினு மேத்திப்
பாடுதும் பெருமநின் னெடாறும் புகழ்ந்தே.

பாணற்றுப்படை.

585. மேற்கோட்டுநீர் கீழ்ப்பரந்ததன்
[1]விழுக்கோட்டுமெய் வியல்விசும்புதோய்ந்
தோங்குமுன்னர்க் [2]காம்புகிழியப்
பாய்ந்துசென்றுசென் றுங்குநிலிபுகின்
றெறிர்த்துமீண்டாங் கதிர்த்துக்கரைகொன்
றலங்குகோட்டுமுத் திலங்குநிலவுச்செய்
தூர்திரைக் காவிரி பரக்குந் தண்டலை
மூதூ ரோனே பேரிசை வளவன்
சுரம்படர்ந்து வருந்துவ தெவனே
நிரம்பா வாழ்க்கைப் பாணர் கடும்பே.

(585) தொல். செய். 20. பேரா; நச். [1]விழுக்கோட்டுமேல். [2]காம்புகழியப்.

இயன்மொழி.

(கொடைச்சிறப்பு)

586. வையம் புரக்குமான் மன்னவனின் கைக்காரும்
பொய்யின்றி வானிற் பொழிகாரும்—கையா
மிருகார்க்கு மில்லைப் பருவ மிடிக்கும்
ஒருகார் பருவ முடைத்து.

587. சேர்ந்த புறவி னிறைதன் றிருமேனி
சூர்ந்திட் டியர்துலைதா னேறினான்—நேர்ந்த
கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கட்
படைவீர [1]மோசென்னி பண்பு.

588. முத்தரும்பிச் செம்பொன் முறிதைத்து பைந்துகிரின்
தொத்தலர்ந்து பல்கலனுஞ் சூழ்ந்தொளிருங்—கொத்தினதாம்
பொன்னேர் மணிகொழிக்கும் பூங்கா விரிநாடன்
தன்னேர் பொழியுந் தரு.

589. உள்ளிய வுள்ளியாங் கீயு முயர்விற்றாங்
கள்ளவிழ் பூஞ்சோலைக் கற்பகமும்—வள்ளல்
வளைபாய் புனலுடன் மானவே ளின்றும்
உளவாக வாடா துலகு.

(புகழ்)

590. மடங்கா மயிலூர்தி மைந்தனே நாளுங்
கடம்பம்பூக் கொண்டேத்தி யற்றாற்—றொடங்கமருள்
நின்றிலங்கு வென்றி நிறைதகர்வேன் மாறனே
யின்றமிழால் யாம்பாடும் பாட்டு.

591. செங்க ணெடியான்மேற் றேர்விசய னேற்றியபூப்
பைங்கண்வெள் ளேற்றான்பாற் கண்டற்றா—லெங்கு
முடிமன்னர் சூடியபூ மொய்ம்மலர்த்தார் மாறன்
அடிமிசையே காணப் படும்.

592. கூந்தன்மா கொன்று குடமாடிக் கோவலஞ்ஞப்
பூந்தொடியைப் புல்லிய ஞான்றுண்டால்—யாங்கொளித்தாய்
தென்னவனே தேர்வேந்தே தேறுநீர்க் கூடலார்
மன்னவனே மார்பின் மறு.

---

(586) வீரசோ. அலங். 19 மேற்; தண்டி. 36 மேற். (587-588) வீரசோ. அலங். 28 மேற்; தண்டி. 69 மேற். (589) வீரசோ. அலங். 12 மேற். (590-592) முத்தொள்ளாயிரம்.

593. வானிற்கு வையகம் போன்றது வானத்து
மீனிற் கினையார் மறமன்னர்—வானத்து
மீன்சேர் மதியினையன் விண்ணுயர் கொல்லியர்
கோன்சேரன் கோதையென் பான்.

594. பார்படுவ செம்பொன் பதிபடுவ முத்தமிழ்நூல்
நீர்படுவ வெண்சங்கு நித்திலமுஞ்—சார
மலைபடுவ யானை வயமாறன் கூர்வேற்
றலைபடுவ தார்வேந்தர் மார்பு.

595. அருமணி யைந்தலை யாடரவம் வானத்
திருமேற்றை யஞ்சி யொளிக்கும்—செருமிகுதோட்
செங்கண்மா மாறன் சினவேல் கனவுமே
அங்கண்மா ஞாலத் தரசு.

(வெட்சியும் வாகையும் வந்த பாடாண்)

596. முனைப்புலத்துக் கஞ்துடை முன்னரைப்போல் வேந்தூர்
முனைப்புலம்பு முன்னிரையும் வீசி—யெனைப்புலத்திஞ்
சென்றது நின்சீர்த்தி தேர்வளவ தெவ்வர்போல்
நன்று முண்டாக நமக்கு.

(கடவுண் மாளிடப்பெண்டிரை நயந்தது)

597. குடுமிப் பருவத்தே கோதை புனைந்த
[1]இடுமுத்தப் பூத னிருப்பப்—படுமுத்தம்
புன்னை யரும்பும் புகாஅர்ப் [2]புறம்பணையாய்க்
கென்ன முறைய ளிவள்.

தெய்வப்பாடாண்.

(கடவுண்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்தது.)

598. வெண்பலிச் சாந்த மூழுமெய்யு மேற்பூசி
உண்பலிக் கூரூர் திரிவது மேலிட்டுக்
கண்பலிக் கென்று புகுந்த கபாலிமுன்
எண்பலித் தாளிவள் யாதுவாய் வானே.

(திருஞானசம்பந்தழரித்தநாயனார்பேரில்)

599. வருக்கைமுறுக் கனிசிதறிச் செந்தேன் பொங்கி
மடுக்கரையிற் குளக்கரையின் மதுகை லோடப்
பெருக்கெடுத்து வண்டோலஞ் செய்யுஞ் காழிப்
பிள்ளையார் சம்பந்தப் பெருமான் கேளிர்

(593–595) மூத்தொள்ளாயிரம். (596) தொல். பொரு. 80. (597) ஷை. செய். 149 பேரா. [1]இடுமுத்தம், நெடுமுத்தம். [2]புறம்பணையார்க். (598) ஷை. ஷை. 80 பேரா; நச். (599) தனிப்பா.

அருட்குலவு மயிலைதனி லனலால் வெந்த
அங்கத்தைப் பூம்பாவை யாக்கி ஞெமென்
றிருக்குமது தகவன்று நிலவால் வெந்த
இவளையுமோர் பெண்ணைக்க லியல்பு தானே.

(திருமங்கையாழ்வார்பேரில்.)

600. கடியுண்ட நெடுவாளே காவிற் றப்பிக்
கயத்துக்கு ளடங்காமல் விசும்பிற் பாய
அடியுண்ட வுயர்தெங்கின் பழத்தாற் பூகம்
அலையுண்டு சூலிசிதறு மாலி நாடா
படியுண்ட பெருமானைப் பறித்துப் பாடிப்
பதம்பெற்ற பெருமானே தமியேன் பெற்ற
கொடியொன்று நின்பவனிக் கெதிரே சென்று
கும்பிட்டா ளுயிரொன்றுங் கொடுவந் தாளே.

புலவிபொருளாகத்தோற்றிய பாடாண்.

(பாண்டியன்மனைவி)

601. வேண்டியபோ தின்பம் விளைக்கு மடந்தையரைத்
தீண்டியகை யாலென்னைத் தீண்டாதே—பாண்டியா
முல்லைக் கதிபா முகம்பார்த் தகலநின்று
சொல்லக் கடவவெலாஞ் சொல்.

கைக்கிளை.

சோன்.

602. காமன்கா ணென்று கருவூரார் பாராட்டத்
தாமந்தாழ் கோதை வருவானே—யாமும்
இருகுடங்கை யானெதிரே கூப்பித் தொழக்கண்
டொருகுடங்கை யாயின கண்.

603. தாய ரடைப்ப மகளிர் திறந்திடத்
தேயத் திரிந்த குடுமியவே—யாய்மலர்
வண்டுலாங் கண்ணி வயமான்றேர்க் கோதையைக்
கண்டுலாம் வீதிக் கதவு.

604. காப்படங்கென் றன்னே கடிமனை யிற்செறித்
தியாப்படங்க வோடி யடைத்தபின்—மாக்கடுங்கோன்
றன்னலங் காணக் கதவந் தானெதாட்டார்க்
கென்னைகொல் கைம்மா றினி.

(600, 601) தனிப்பா. (602) தொல். செய். 19 பேரா; ந. (603, 604) மூத்தோள்ளாயிரம்.

605. வரைபொரு நீண்மார்பின் வட்கார் வணக்கும்
நிரைபொரு வேண்மாந்தைக் கோவே—நிரைவளையார்
தங்கோலம் வவ்வுத லாமோ வவர்தாய்மார்
செங்கோல னல்ல னெனை.

606. வாமான்றேர்க் கோதையை மான்றேர்மேற் கண்டவர்
மாமையே யன்றே விழப்பது—மாமையிற்
பன்னூறு கோடி பழுதோவென் மேனியிற்
பொன்னூறி யன்ன பசப்பு.

607. நீரு நிழலும்போ னீண்ட வருளுடைய
ஊரிரே யென்னை யுயக்கொண்மின்—போரிற்
புகலுங் களியானைப் பூழியர்கோக் கோதைக்
கழலுமென் னெஞ்சங் கிடந்து.

608. கடற்றானைக் கோதையைக் காண்கொடாள் வீணி
லடைத்தா டனிக்கதவ மன்னை—யடைக்குமேல்
ஆயிழையா யென்னை யவன்மே லெடுத்துரைப்பார்
வாயு மடைக்குமோ தான்.

609. புன்னுகச் சோலை புனற்றெங்கு சூழ்மாந்தை
நன்னுக நின்றலரு நன்னுடன்—என்னுகங்
கங்கு லொருநாட் கனவினுட் டைவந்தான்
என்கொ லிவரறிந்த வாறு.

610. ஆய்மணிப் பைம்பூ ணலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைத்தே—ணிப்
பெருஞ்செல்வ நில்லாது நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேருமென் னெஞ்சு.

611. கடும்பணித் திக்கட்டன் கைபோர்வை யாக
நெடுங்கடை நின்றதுகொ ரூழி—நெடுஞ்சினவேல்
ஆய்மணிப் பைம்பூ ணலங்குதார்க் கோதையைக்
காணிய சென்றவென் னெஞ்சு.

612. வருக குடாடன் வஞ்சிக்கோ மானென்
றருகல் செல்லா மறிய—ருகலாம்
உண்டா யிருக்கவுள் வொண்டொடியாண் மற்றவனைக்
கண்டா ளொழிந்தாள் கலாம்.

(605—612) முத்தொள்ளாயிரம்.

613. இவனென் னலங்கவர்ந்த கள்வ னிவனெனது
நெஞ்ச நிறையழித்த கள்வனென்—றஞ்சொலாய்
செல்லு நெறியெல்லாஞ் சோலர்கோக் கோதைக்குச்
சொல்லும் பழியோ பெரிது.

614. காராட் டிரந்தூஉ யண்ணே களனிழைத்து
நீராட்டி நீங்கென்ற னீங்குமோ—பூராட்டி
வென்று களங்கொண்ட வெஞ்சினவேற் கோதைக்கென்
னெஞ்சங் களங்கொண்ட நோய்.

615. மல்லனீர் மாந்தையார் மாக்கடுங்கோக் காயினும்
சொல்லவே வேண்டு நமகுறை—நல்ல
நிலகங் கிடந்த திருநுதலா யஃதால்
உலகங் கிடந்த வியல்பு.

616. மாலே யருளாது வஞ்சியான் வஞ்சியான்
மேலே யமரர் கடைவேலே—வேலே
வளையார் திரைமேல் வருமன்ன மன்ன
இளையா ளிவளே வளே.

சோழன்.

617. அன்ன யறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
ஒன்ன ருடைபுறம் போல நலங்கவர்ந்து
தன்னுன் முறந்து விடல்;
ஏடீ யறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
கூடா ருடைபுறம் போல் நலங்கவர்ந்து
வீடான் முறந்து விடல்;
பாவா யறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
மேவா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
காவான் முறந்து விடல்.

618. நிறந்திகிமின் றீயலை பிற்காண்டு மாதர்
இறந்து படிற்பெரிதா மேதம்—உறந்தையர்கோன்
தண்ணூர் மார்பிற் றமிழ்நார் பெருமானைக்
கண்ணூர்க் காணக் கதவு.

619. நீணிலத் தார்வளவ னின்மேலா ணுகவும்
நாணின்மை யின்றி நடத்தியால்—நீணிலம்

(613—615) மூத்தொள்ளாயிரம். (616) தண்டி 93 மேற். (617) யாப். வி. 66; வீரசோ. யாப். 15 மேற். (618, 619) மூத்தொள்ளாயிரம்.

கண்டன்ன கொண்டல் வருங்கா விரிநாட்டுப்
பெண்டன்மை யில்லே பிடி.

620. சுடரிலேவேற் சோழன்றன் பாடல மேறிப்
படர்தந்தான் பைந்தொடியார் காணத்—தொடர்புடைய
நீல வலையிற் கயல்போற் பிறழுமே
சாலேக வாயிறுறுங் கண்.

621. கண்டன வுண்கண் கலந்தன நன்னெஞ்சந்
தண்டப் படுவ தடமென்றோள்—கண்டா
யுலாஅ மறுகி னுறையூர் வளவற்
கெலாஅ முறைகிடந்த வாறு.

622. என்னெஞ்சு நாணு நலனு மிவையெல்லாம்
மன்னன் புனலுடன் வவ்வினன்—என்னே
அரவக லல்குலா யாறிலொன் றன்றே
புரவலர் கொள்ளும் பொருள்.

623. கனவினுட் காண்கொடா கண்ணுங் கலந்த
நனவினுண் முன்விலக்கு நாணும்—இனவங்கம்
பொங்கோதம் போழும் புகாஅர்ப் பெருமானர்
செங்கோல் வடுப்படுப்பச் சென்று.

624. தானேகொண் டோடுவ தாயிற்றன் செங்கோன்மை
சேனே யறியக் கிளவேலே—யானே
பிடிவீசும் வண்டடக்கைப் பெய்தண்டார்க் கின்னி
நெடுவீதி நேர்பட்ட போது.

625. தெண்ணீர் நறுமலர்த்தார்ச் செண்ணி யிளவளவன்
மண்ணகங் காவலனே யெண்பரால்—மண்ணகங்
காவலனே யானக்காற் காவானே மாலேவாய்க்
கோவலர்வாய் வைத்த குழல்.

626. அறைபறை யானே யலங்குதார்க் கின்னி
முறைசெயு மென்பாற் றேழி—பிறையிறந்த
அங்கோ லணிவளேயே சொல்லாதோ மற்றவன்
செங்கோன்மை செய்கின்ற வாறு.

627. அன்னையுங் கோல்கொண் டலைக்கு மயலாரும்
என்னே யழியுஞ்சொற் சொல்லுவர்—தண்ணிலைய

(620—622) முத்தொள்ளாயிரம். (623) ஷை; தொல். பொரு. 472 மேற். (624—627) முத்தொள்ளாயிரம்.

தெங்குண்ட தேரை படுவழிப் பட்டேன்யான்
றிண்டேர் வளவன் றிறத்து.

628. புலவி புறக்கொடுப்பன் புல்லிடினு ணிற்பன்
கலவி களிமயங்கிக் காணேன்—நிலவியசீர்
மண்ணுளுஞ் செங்கோல் வளவனே யாணிதன்றே
கண்ணுரக் கண்டறியா வாறு.

629. செங்கான் மடநாராய் தென்னுறந்தை சேறியேல்
நின்கான்மேல் வைப்பனென் கையிரண்டும்—நன்பாற்
கரையுரிஞ்சி மீன்பிறழுங் காவிரிநீர் நாடற்
குரையாயோ யானுற்ற நோய்.

630. குதலைப் பருவத்தே கோழிக்கோ மானே
வதுவை பெறுகென்று ளன்னே—யதுபோய்
விளைந்தவா வின்று வியன்கானல் வெண்டேர்
துளங்குநீர் மாமருட்டி யற்று.

631. அலங்குதார்ச் செம்பிய னுடைழிற்றே ணேக்கி
விலங்கியான் வேண்டா வெனினும்—நலந்தொலைந்து
பீர்மேற் கொளலுற்ற பேதையர்க் கென்வாய்ச்சொல்
நீர்மே லெழுந்த வெருப்பு.

632. ஊட லெனவொன்று தோன்றி யலருறூஉங்
கூட லிழந்தேன் கொடியன்னுய்—நீடெங்கின்
பாளையிற் றேன்றெடுக்கும் பாய்புன னீர்நாட்டுக்
காளையைக் கண்படையுட் பெற்று.

633. நாணெருபால் வாங்க நலனெருபா லுண்ணெகிழ்ப்பக்
காமருதோட் கிள்ளிக்கென் கண்கவற்ற—யாமத்
திருதலைக் கொள்ளியி னுள்ளெறும்பே போலத்
திரிதரும் பேருமென் னெஞ்சு.

634. வரக்கண்டு நாணுதே வல்லேயா னெஞ்சே
மரக்கண்ணே மண்ணுள்வார் கண்ணென்—றிரக்கண்டாய்
வாளுழுவை வெல்கொடியான் வண்புனனீர் நாடற்கென்
தோளுழுவந் தோன்றத் தொழுது.

635. பேயோ பெருந்தண் பனிவாடாய் பெண்பிறந்தா
ரேயோ வுனக்கிங் கிறைக்குடிகள்—நீயோ
களிபடுமால் யானைக் கடுமான்றேர்க் கிள்ளி
யளியிடை யற்றம்பார்ப் பாய்.

(628—635) முத்தொள்ளாயிரம்.

636. நாம நெடுவேல் நலங்கிள்ளி சோணாட்டுத்
தாமரையு நீலமுந் தைவந்—தியாமத்து
வண்டொன்று வந்தது வாரல் பனிவாடாய்.
பண்டன்று பட்டினங் காப்பு.

637. சரியும் புனைசங்குந் தண்டளிர்போன் மேனி
வரியுந் தனதடஞ்சூழ் வம்புந்—திருமான
ஆரந் தழுவு தடந்தோ ளகலங்கன்
கோரந் தொழுத கொடிக்கு.

638. நறவேந்து கோதை நலங்கவர்ந்து நல்கா
மறவேந்தன் வஞ்சியா னல்லன்—துறையின்
விலங்காமை நின்று வியன்றமிழ்நா டைந்தின்
குலங்காவல் கொண்டொழுகுங கோ.

639. இகன்மதமால் யானை யனபாய னெங்கோன்
முகமதியின் மூர னிலவால்—நகமலர்வ
செங்கயற்க ணல்லார் திருமருவு வாள்வதன
பங்கயங்கள் சாலப் பல

640. கல்லுயர்தோட் கிள்ளி பரிதொழுது கண்பணிசோர்
மெல்லியலார் தோழியர்முன் வேறொன்று—சொல்லுவாற்
பொங்கும் படைபரப்பி மீதெழுந்த பூந்துகள்போர்த்
தெங்கண் கலுழ்ந்தனவா லென்று.

641. நறைகமழ்தார் வேட்டார் நலனணியு நாணும்
நிறையு [1]நிலைதளரா நீர்மை—யறநெறிசூழ்
செங்கோல னல்லன் கொடுங்கோலன் றெவ்வடுபோர்
வெங்கோப மால்யானை வேந்து.

642. மானவா மானவா நோக்கின் மதுகரஞ்சூழ்
கானவாங் கூந்தலெங் காரிகைக்குத்—தேனே
பொழியாரந் தார்மேலு நின்புயத்து மேலுங்
கழியா கழியா தரவு.

643. மூற்பற்றி ஞ்சை முறைசெயிற் றானென்னைக்
கைப்பற்றக் கண்டேன் கனவினுள்—ளிப்பெற்றி

---

(636) முத்தொள்ளாயிரம். (637) தண்டி. 38; (638) வெ. 74; வீரசோ. அலங். 29 மேற். (639) வெ. 62; வீரசோ. அலங். 26. (640) வெ; வெ. 27. (641) வீரசோ. அலங். 29; தண்டி. 73 [1]நிறைதளரு. (642) தண்டி. 93. (643) தொல். புறத். 86.

தன்னைத் தனக்கே முறைப்படி னென்செய்யும்
பொன்னம் புனலுட்டார் கோ.

644. அங்க மிலாத வனங்கன் [1]றலம்புரியும்
வெங்கணையுங் காக்குங்கொல் வேல்வேந்தர்—தங்கோன்
நிலையார்த் தொடையதுல னேரிழைக்காய் முன்னோர்
மலையாற் கடல்கடந்தான் மால்.

(கூத்தன்மாணிக்கனும் அம்பிகாபதியும் பாடியது.)

645. மாவுறங்கின புள்ளுறங்கின வண்டுறங்கின தண்டலைக்
காவுறங்கின வின்னமென்மகள் கண்ணுறங்கிலள் கையணைக்
கோவுறங்கு கடைத்தலைக்குல தீபவள்ளை குதட்டின்
மூவுறங்கு புகாரசஞ்சல வஞ்சலென்ன வடிக்குமே.

(அம்பிகாபதி பாடியது.)

646. ஏகா வடமென் னிருகொங் கையின்மேல்
ஆகா வடமா னதறிந் திலையே
த்யாகா பரணை திசையா னைகளின்
பாகா பராச பயங்கரனே.

(கூத்தர்பாடியது.)

647. வெள்ளத் தடங்காச் சினவாளை வேலிக் கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக் கிழித்துமழைத் துளியோ டிறங்குஞ் சோணைடா
கள்ளக் குறும்பர் குலமறுத்த கண்டா வண்டர் கோபாலா
பிள்ளை மதிகண் டென்பேதை பெரிய மதியு மிழந்தாளே.

(புகழேந்திபாடியது.)

648. பங்கப் பழனத் தழுமுழவா பலவின் கனியைப் பறித்தெனைச்
சங்கிட் டெறியக் குரங்கிளநீர் தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா
கொங்கைக் கமரா பதியளித்த கோவே ராச குலதிலகா [லே.
வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கு மெலிந்தப் பிறைக்கும் விழிவே

649. என்று பெறுவேன்யா னீசன் றிருமுடிமேற்
சென்று வீழாயுங் தீபமே—என்றுஞ்
செருப்புக்குத் தோல்வாங்குஞ் சென்னியக ளங்கன்
பொருப்புக்குத் தோலாப புயம்.

பாண்டியன்.

650. பன்மாடக் கூடன் மதுரை நெடுந்தெருவில்
என்னோடு நின்ரு ரிருவ ரவருள்ளும்

---

(644) தண்டி. 102. இலக். வி. 695. [1]னமர்புரியும். (645, 646) தமிழ்நா. 132, 135. (647–649) தனிப்பா. (650) தொல். பொரு. 471; யாப். வி. 62.

பொன்னெடை நன்றென்று ணல்லனே பொன்னெடைக்
கியானெநன் றென்றுளு மங்கிலையள் யானெ
யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
றிருத்தார்நன் றென்றேன் றியேன்.

651. வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனும்
கொடிபடு வரைமாடக் கூடலார் கோமானே;
எனவாங்கு—
துணைவளைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந் [1]தூறப்புண்டாங்
கிணைமலர்த்தா ருருளுமே லிதுவதற்கோர் மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணுர் துணையாகக் கருதாரே.
அதனுல்—
செவ்வாய்ப் பேதை யிவடிறத்
தெவ்வா முங்கொலீஃ தெண்ணிய வாறே.

652. வார்பணிய தாமத்தால் வளைக்கையோர் வண்டோச்ச
ஊர்பணிய மதியம்போ னெடுங்குடைக்கீ ழுலாப்போந்தான்
கூர்பணிய வேற்றுனைக் கொற்கையார் கோமானே.
அவற்கண்டு,
பூமலர் நறுங்கோதை புலம்பலைப்ப நறுங்கொண்டைத்
தூமலர்க்கண் மடவார்க்குத் தொல்பகையே யன்றியுங்
காவலர்க்குப் பெரியதோர் கடனுகிக் கிடவாதே.

653. செய்யா ரெனினுந் தமர்செய்வ ரென்னுஞ்சொல்
மெய்யாதல் கண்டேன் விளங்கிழாய்—கையார்
வரிவளை நின்றன வையையார் கோமான்
புரிவளை போந்தியம்பக் கேட்டு.

654. எலாஅ மடப்பிடியே யெங்கூடற் கோமான்
புலாஅ னெடுந்தல்வேன் மாறன்—உலாஅங்காற்
பைய நடக்கவுந் தேற்றுயா னின்பெண்மை
யையப் படுவ தடைத்து.

655. போரகத்துப் பாயுமா பாயா துபாயமா
ஊரகத்து மெல்ல நடவாயோ—கூர்வேன்
மதிவெல் களியானை மாறன்றன் மார்பில்
கதவங்கொண் டியாமூர் தொழ.

---

(651) யாப். வி. 86; வீரசோ. யாப். 12. இலக். வி. 735; [1]தொலைப் புண்டாங். (652) யாப். வி. 86. (653—655) முத்தொள்ளாயிரம்.

656. ஆடுகோ சூடுகோ வைதாக் கலந்தகொண்
டேடுகோ டாக வெழுதுகோ—நீடு
புனவட்டப் பூந்தெரியற் பொற்றேர் வழுதி
கனவட்டங் கால்குடைந்த நீறு.

657. குடத்து விளக்கேபோற் கொம்பன்னூர் காமம்
புறப்படா பூந்தார் வழுதி—புறப்படின்
ஆபுகு மாலை யணிமலையிற் றீயேபோல்
நாடறி கவ்வை தரும்.

658. வழுவிலெம் வீதியுண் மாறன் வருங்காற்
றெழுதேனைத் தோணலமுங் கொண்டான்—இமிழ்திரைக்
கார்க்கடற் கொற்கையார் காவலனுந் தானேயால்
யார்க்கிடுகோ பூச லினி.

659. மன்னுயிர் காவல் தனதான வவ்வுயிருள்
என்னுயிரு மெண்ணப் படுமாயின்—என்னுயிர்க்கே
சீரொழுகு செங்கோற் செழியற்கே தக்கதோ
நீரொழுகப் பாலொழுகா வாறு.

660. தானேற் றனிக்குடைக் காவலனுற் காப்பதுவும்
வானேற்ற வையக மெல்லாமால்—யாரேனு
மெளியனெர் பெண்பாலே னீர்ந்தண்டார் மாறன்
அளியானே லன்றென்பா ரார்.

661. களியானைத் தென்னன் கனவில்வந் தென்னை
யளியா னளிப்பானே போன்றான்—தெளியாதே
செங்காந்தண் மெல்விரலாற் சேக்கை தடவுந்தேன்
என்காண்பே னென்னலால் யான்.

662. கார்நறு நீலங் கடியகத்து வைகலும்
நீர்நிலை நின்ற [1]தவங்கொலோ—கூர்நுனைவேல்
வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியாற்
கொண்டிருக்கப் பெற்ற குணம்.

663. அறிவாரார்.....பெண்டிரே மாகச்
செறிவார் தலைமே னடந்த—மறிதிரை
மாட முரிஞ்சி மதுரையார் கோமானைக்
கூட வொருநாள் பெற.

(656–661) முத்தொள்ளாயிரம். (662) கூ; யாப். வி. 513 [1]பயன் கொல்லோ, (663) முத்தொள்ளாயிரம்.

664. கைய தவன்கடலுட் சங்கமாற் பூண்டதுவும்
செய்யசங் கீன்ற செழுமுத்தால்—மெய்ய தவும்
மன்பொரு வேன்மாறன் வார்பொதியிற் சந்தனமால்
என்பெரு வாடுமென் றேருள்.

665. நாணுக்காற் பெண்மை நலனழியு முன்னின்று
காணுக்காற் கைவளையுஞ் சோருமாற்—காணைஞன்
வண்டெவ்வந் தீர்தார் வயமான் வழுதியைக்
கண்டெவ்வந் தீர்வதோ ராறு.

666. வாருயர் பெண்ணை வருகுரும்பை வாய்ந்தனபோல்
எரிய வாயினு மென்செய்யுங்—கூரிய
கோட்டானைத் தென்னன் குளிர்சாந் தணியகலங்
கோட்டுமண் கொள்ளா முலை.

667. ஏற்பக் குடைந்தாடி லேசுவ ரல்லாக்கான்
மாற்றி யிருந்தா ளெனவுரைப பர்—வேற்கண்ணாய்
கொல்யானை மாறன் குளிர்புனல் வையைநீர்
சொல்லா மெனக்கோ ரிடர்.

668. கூடற் பெருமானைக் கூடலார் கோமானைக்
கூடப் பெறுவனேற் கூடென்று—கூட
லிழைப்பான்போற் காட்டி யிழைபா திருக்தம்
பிழைப்பிற் பிழைபாக் கறிந்து.

669. என்னை யுரையலென் பேருரைய வூருரையல்
அன்னையு மின்ன ளெனவுரைப பல்—பின்னையும்
தண்படா யானைத் தமிழ்நர் பெருமாற்கென்
கண்படா வாறே யுரை.

670. வளையவாய் நீண்டதோள் வாட்கணை யன்னை
இளையளாய் மூத்திலள் கொல்லோ—தளையவிழ்தார்
மண்கொண்ட தானை மறங்கனல்வேன் மாறனைக்
கண்கொண்டு நோக்கலென் பாள்.

671. கொடிபாடித் தேர்பாடிக் கொய்தண்டார் மாறன்
முடிபாடி முத்தாரம் பாடித்—தொடியுலக்கை
கைம்மனையி லோச்சப் பெறுவனே யாலுமோ
சம்மனைச் சாவ லுனேன்.

(664—671) முத்தொள்ளாயிரம்.

672. கோட்டெங்கு [1]சூழ்கூட்டற் கோமானைக் கூடவென
வேட்டாங்குச் சென்றவென் னெஞ்சறியாள்—கூட்டே
குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன்போ லண்ணே
வெறுங்கூடு காவல்கொண் டாள்.

673. களியானைத் தென்ன னிளங்கோவென் றெள்ளிப்
பணியாரே தம்பா ரிழக்க—அணியாகங்
கைதொழு தேலு மிழக்கோ நறுமாலின்
கொய்தளி ரன்ன நிறம்.

674. கனைவை நனவென் றெதிர்விழிக்குங் காணும்
நனவி லெதிர்விழிக்க நாணும்—புனையிழாய்
என்க ணிவையாஞ லெவ்வாறே மாமாறன்
தன்க ணருள்பெறுமா தான்.

675. தளையவிழும் பூங்கோதைத் தாயரே யாவி
களையினுமென் கைதிறந்து காட்டேன்—வளைகொடுபோம்
வன்கண்ணன் வாண்மாறன் மால்யானை தன்னுடன்வந்
தென்கண் புகுந்தா னிரா.

676. ஓராற்ரு னென்க ணிமைபொருந்த வந்நிலையே
கூரார்வேன் மாறனென் கைப்பற்ற—வாரா
நனவென் றெழுந்திருந்தே னல்வினையொன் றில்லேன்
கனவு மிழந்திருந்த வாறு.

677. உகுவாய் நிலத்த துயர்மணன்மே லேறி
நகுவாய்மூத் தின்றசைந்த சங்கம்—புகுவான்
றிசைவரவு பார்த்திருக்குந் தென்கொற்கைக் கோமா
னுரைவரவு பார்த்திருக்கு நெஞ்சு.

678. மாறடுபோர் மன்னர் மதிக்குடையுஞ் செங்கோலுங்
கூறிடுவாய் நீயோ குளிர்வாடாய்—சோறடுவார்
ஆரத்தாற் றீமூட்டு மம்பொதியிற் கோமாற்கென்
வாரத்தாற் ரேற்றேன் வளை.

679. புகுவார்க் கிடங்கொடா போதுவார்க் கொல்கா
நகுவாரை நாணி மறையா—இகுளையின்
மொன் பிணைபோல நின்றதே கூடலார்
கோமான்பின் சென்றவென் னெஞ்சு.

(672—679) ழுத்தொள்ளாயிரம். [1]சூழ்மாந்தை.

680. பிணிகெடுந் தார்க்குப் பிறந்தநாட் போல
அணியிழை யஞ்ச வருமால்—மணியாலே
மாறன் வழுதி மணவா மருண்மாலை
சீறியோர் வாடை சினந்து.

681. மாணார்க் கடந்த மறவெம்போர் மாறனைக்
காணக்கா லாயிரமுஞ் சொல்லுவேன்—கண்ணுக்காற்
பூணகந் தாவென்று புல்லப் பெறுவலே
நாணே டுடன்பிறந்த நான்.

682. புல்லாதார் வல்லே புலர்கென்பர் புல்லினர்
நில்லா யிரவே நெடிதென்பர்—நல்ல
விராஅமலர்த் தார்மாறன் வெண்சாந் தகலம்
இராவழிப் பட்ட திது.

683. இப்பியீன் றிட்ட வெறிகதிர் நித்திலங்
கொற்கையே யல்ல படுவது—கொற்கைக்
குருதிவேன் மாறன் குளிர்சாந் தகலங்
கருதியார் கண்ணும் படும்.

684. யானூடத் தானுணர்த்த யானுணரா விட்டதற்பின்
தானூட யானுணர்த்தத் தானுணரான்—றேனூறு
கொய்தார் வழுதி குளிர்சாந் தணியகல
மெய்தா நிராக்கழிந்த வாறு.

685. வையைக் கிழவன் வயங்குதார் மாணகலந்
தையலா யின்றுநீ நல்கினை நல்காயேற்
கூடலார் கோவோடு நீயும் படுதியே
நாடறியக் கவ்வை யொருங்கு.

686. சென்றதுகொல் போந்ததுகொல் செவ்வி பெறுந்துணையு
நின்றதுகொ னேர்மருங்கிற் கையூன்றி—மூன்றின்
முழங்குங் கடாயானை மொய்ம்மலர்த்தார் மாறற்
குழந்துபின் சென்றவென் னெஞ்சு.

687. உழுத வுழுத்தஞ்செய் பூர்க்கண்று மேயக்
கழுதை செவியாரிற் சற்றுல்—வழுதிவையக்
[1]கண்டகருங்க ணீருப்பப் பெரும்பிணைதான்
கொண்டன மன்னே பசப்பு.

(680—683) மூத்தோள்ளாயிரம். (684) ஷெ ; தொல். பொரு. 157. (685) நன். 396. மயிலை. (686) தொல். பொரு. 196. (687) ஷே. ஷே. 489. [1]கண்டன கண்ணீ ருருப்பப.

(சீதாபிராட்டியின் கைக்கிளை.)

688. ஆள்வினை முடித்த வருந்தவ முனிவன்
வேள்வி போற்றிய விராம னவனே
மிதிலை மூதூ ரெய்திய ஞான்றை
மதியுடம் பட்ட மக்கட் சிதை
கடுவிசை வின்ஞா ணிடியொலி கேளாக்
கேட்ட பாம்பின் வாட்ட மெய்தித்
துயிலெழுந்து மயங்கின ளதாஅன்று மயிலென.

(பொய்கையார்பாட்டு.)

689. ஆழி யிழைப்பப் பகல்போ [1]மிரவெல்லாந்
தோழி துணையாத் துயர்தீரும்—வாழி
நறுமாலை தாராய் நிரையவோ வென்னுஞ்
செறுமாலை சென்றடையும் போது.

690. காய்ந்துவிண் டாரையக் காமரு கூடலிற் கண்சிவந்த
வேந்துகண் டாயென்ன வெள்வளை சோரக் கலங்கிழப்
போந்துகண் டாளொடும் போந்துகண் டேற்கவன் பொன்முடிமேற்
போந்துகண் டாளென்று போந்ததென் மாட்டோர் புறவுரையே.

691. அணியார்ய செம்பழுக்காய் வெள்ளிலையொ டேந்திப்
பணியா யெமபெருமா னென்று—கணியார்வாய்க்
கோணலங் கேட்பதூஉங் கொண்கர் பெருமாஞர்
தோணலஞ் சேர்தற் பொருட்டு.

692. மதுப்பொழிதார் மன்னவனே மால்கரிமேற் கண்டு
விதிர்ப்ப மயிரரும்பு [1]மெய்யும்—புதைத்தாள்
வளவா ணெடுங்கை [2]நுண்டுவலை வாய்ந்த
இளவாடை கூர்ந்த தென.

693. துடியடித் தோற்செவித் தூங்குகைந் நால்வாய்ப்
பிடியேயா னின்னை யிரப்பல்—கடிகமழ்தார்ச்
சேலேக வண்ணனெடு சேரி புகுதலுமெஞ்
சாலேகஞ் சார நட.

---

(688) தொல். பொரு. 54. (689) யாப். வி. 45, 95. [1]இரவரில் (690) ஒழி. 94. (691) தொல். புறத். 83. (692) தண்டி. 65; வீரசோ. அலங். 27. [1]மெய்யிற். [2]வண்டுவலை. தோய்ந்த. (693) முத்தொள்ளாயிரம்.

694. தவளை யுகளுந் தடம்புனனீர் நாடன்
இவளை வினைகரந்தா னென்றுற்—றவளைத்
தனிக்காவல் வெண்குடையான் றண்ணளியு மஃதே
இனிக்காவ லாமோ வெமக்கு.

(வத்தவர்கோ.)

695. வேட்டொழிவ தல்லால் வினைஞர் விளைவயலுட்
டோட்ட கடைஞர் சுடுநந்து—மோட்டாமை
வன்புறத்து மீதுடைக்கும் வச்சத் திளங்கோவை
இன்புறுத்த வல்லமோ யாம்.

696. வாடை குளிர மருந்தறிவா ரில்லையோ
கூட வினியொருகாற் கூடாதோ—ஓடை
மதவா ரணத்துதயன் வத்தவர்கோ னுட்டிற்
கதவான தோதமியேன் கண்.

உட்கோள்.

697. உருகி யுடல்கருகி யுள்ளீரல் பற்றி
எரிவ தலியாதென் செய்கேன்—வரியரவ
நஞ்சிலே தோய்ந்த நளின விழிப்பெருமான்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

மடலேறுமம்.

698. கடலன்ன காமத்த ராயினும் பெண்டிர்
மடலூரார் மைந்தர்மே லென்ப—மடலூர்தல்
காட்டுகேன் வம்மின் கலிவஞ்சி யார்க்காமான்
வேட்டமா மேல்கொண்ட போழ்து.

ஏறுகோள்.

699. காளையோ டாடிக் கதக்காரி மீதான்றுங்கால்
வாளழுவ மக்களோ டேகுமா—மேனொடும்
பொன்றுமா நங்காய்நங் கேள்.

(சீறுழிசைக் கோச்சகக்கலிவகை)

700. மாயவனுய் மூற்றேன்றி மணிநிரைகாத் தணிபெற்ற
ஆயனோர் குடையினரா யாசர்கள் பலர்கூடி

(694) வீரசோ. அலங். 17. (695) கூடி. 11 மேற். (696) பெருங்கதை, மூகவுரை, பக். 9. (697) தனிப்பா (அம்பிகாபதிவாக்கென்பர்). (698) தொல். அகத். 35. (699) யாப். வி. 59. (700) கூடி. 86.

மணிநின்ற மேனியாள் மதநகையைப் பெறுகுவார்
அணிநின்ற விடைகொண்டா ரெனச்சொல்லி யறைந்தனரே; (தரவு)
தானவ்வழி,
எழுப்பற்றிச் சனந்துறுமி யெவ்வழியு மியமியம்ப
விழுக்குற்று நின்றுரும் பலர்;
ஆங்கே,
வாளுற்ற கண்ணுளா மகிழ்விப்பா மெனக்கருதிக்
கோளுற்று நின்றுரும் பலர்.
ஆண்டே,
இத்திறத்தாற் குறையென்னை யிருங்கிளைக்குங் கேடென்னப்
பற்றுது நின்றுரும் பலர். (மூன்றுந் தாழிசை)
அதுகண்டு, (தனிச்சொல்)
மைவரை நிறத்துத்தன்ன மாலை பியருழக்
கைவரை நில்லாது கடிதேற் றெருத்தொடிபப
அழுங்கின ராய மமர்ந்தது சுற்றம்
எழுந்தது பல்சன மேறுதொழு விட்டன
கோல வரிவளை தானுங்
கால்வன போலுங் கடிமகிழ் வோட்டே.

---

*கரந்தை.

மறக்காஞ்சி.

(போர்முடிந்த பின் களம்புக்கு, நடுகல்லாயினானை ஒருவீரன்கண்டு நிகழ்த்தியது).

701. பொருது வடுப்பட்ட யாக்கை நாணிக்
கொன்று முகந்தேய்ந்த வெஞ்சுரங் காங்கிச
சென்று களம்புக்க யானை தன்னெடு
முன்மலைந்து மடிந்த வீரா விடலை
நடுகன் னெடுநிலை நோக்கி யாங்குத்தன்
புண்வாய் கிழித்தனன் புகழோ னங்கிலைச்
சென்றுழிச் செல்க மாதோ வெண்ருடை
அரசுமலைந்து தாங்கிய கரிறுமடி பறந்தலை
மூண்கெழு தெவ்வர் காண
இவன்போ லிங்கிலை பெறுகயா னெனவே.

---

*இத்திணை, வஞ்சியை யடுத்துவைத்துப் படிக்கத்தக்கது. (701) தொல். பொரு. 79 நச்.

முதின்முல்லை.

(துறைக்கத்துப் பெயர்ந்த *நெடுங்கோளன்தாய் இறந்துபட்ட தலைப்பெயனிலை.)

702. எற்கண் டறிகோ வெற்கண் டறிகோ
என்மக னுத லெற்கண் டறிகோ
கண்ணே கணைமூழ் கினவே தலையின்
வண்ண மாலையும் வாளிவிடக் குறைந்தன
வாயே, பொங்குநனைப் பகழி மூழ்கலிற் [1]புலாவழித்
தாவ நாழிகை யம்புசெறித் தற்றே
நெஞ்சே வெஞ்சரங் கடந்தன குறங்கே
நிறங்கரந்து பல்சர நிரைத்தன வதனல்
அவிழ்பூ வப்பணைக் கிடந்தோன்
[2]கமழ்பூங் கழற்றீங் காய்போன் றனனே.

703. குரங்கு மேனித் திரங்குமுகச் செதுமூலை
நரைமூ தாட்டி வினவுதி யாயின்
நும்மகன் கொல்லோ வறியே னிம்மகன்
கொற்ற வெண்குடை மன்னர்க் குதவிச்
செஞ்சோற் றருங்கடன் வெஞ்சமத் தாற்றிக்
களிறுதலை யடுத்து மாகா னீட்டிப்
பிளிறுகுரான் மூரச மெத்தணை யாகப்
பருந்தின் செறுநிழல் பந்த ராக
அழிபிணக் குன்றே வேலி யாக
கழுகுணக் கிடந்த [3]காளை
நும்மகன் கொல்லோ யானறி யேனே.

704. வாழிய நடிய வாழிய நடிய
என்மகன், ஆர்த்தெறிந் தனனே வெறிந்தார்த் தனனே
ஆர்த்து மெறியா னெறிந்து மமரான்
கையது வேலே காலது கழலே
மெய்யது வெமே மேற்சென் றனனே
வேர்த்த லெல்லாந் தன்னுக் கினரே
கோள்நி னுக்கான் மூறுவலன் முச்சித்
தழீஇந் தாமெனத் தண்ணுமை
கழித்தா னென்வாள் வீழ்ந்தன களிறே.

---

*நெடுங்கோளன். (702) தகரியாத். தொல். பொரு. 79 நச். [1]புலர்வழித். [2]கவிழ்பூங்கழற்றிண். (703, 704) தகரியாத், [3]காளைதும், மகன்கொலோ வறியேன் யானிம் மகனே.

705. வாதுவல் வயிறே வாதுவல் வயிறே
கேடுவே னத்தை நின்னீன் றனனே
பொருந்தா மன்ன ரருஞ்சம முருக்கி
அருகளத் தொழிதல் செல்லாய் மிக்க
புகர்முகக் குஞ்சர மெறிந்த வெஃகம்
அதன்முகத் தொழிய நீபோந் தனையே
அதனால், எம்மில் செய்யாப் பெரும்பழி செய்த
கல்லாக் காளையை யீன்ற வயிறே.

706. தருமமு மீதையாந் தானமு மீதாங்
கருமமுங் காணுங்கா லீதாஞ்—செருமுனையிற்
கோள்வாண் மறவர் தலைதுமிப்ப வென்மகன்
வாள்வாய் முயங்கப் பெறின்.

ஆஞ்சிக்காஞ்சி.

707. இன்ப முடம்புகொண் டெய்தவிர் காண்மிஞை
அன்பி னுயிர்புரக்கு மாரணங்கு—தன்கணவ
னல்லாமை யுட்கொள்ளு மச்சம் பயந்தசே
புல்லாவேன் மெய்சிதைத்த புண்.

பேய்க்காஞ்சி.

708. புண்ணனந்த ருற்றுனைப் போற்றுந ரின்மையிற்
கண்ணனந்த நில்லாப்பேய் காத்தனவே—புண்ணை
மூளையோரி யுட்க வுணர்வொடுசா யாத
இளையோன் கிடந்த விடத்து.

சூரநவு.

709. கருந்தடங்கண் மங்கையரை நோக்குற்ற கண்ணுஞ்
பெருந்தடந் [1]தோட்பிணித்த கையும்—பருந்தின்
வளைவாயிற் பெய்யேனேல் வந்திரந்தார் துன்பங்
களையாது மாற்றுகவென் கை.

பூசன்மயக்கம்.

710. இரவலர் வம்மி னெனவிசைத்த லன்றிப்
புரவலன் மாய்ந்துழியும் பொங்கும்—[1]உரைமயங்கு
வேற்கண் ணியாமுத வெம்பூசல் கேட்டடங்காத்
தோற்கண்ணை போலுந் துடி.

(705-706) தகடூர்யாத். (707) ஷே. தொல். பொரு. 79 நச். (708) ஷே. 79 நச். (709) வீரசோ பொருட். 17 மேற். [1]தோள் யாப்புறுத்த. (710) தொல் பொரு. 79. (தகடூர்யாத்) [1]உரையழுங்க.

பையுள்.

(சுற்றத்தாரின்றி மனைவியர் தந்தங் கொழுநரைத் தழீஇ அழுதது)

711. மழைகூர் பாலுட் கழைபிறங் கடுக்கத்துப்
புலிவழங் [1]கதரிடைப் பாம்புதூங் கிறுவரை
இருள்புக்குத் [2]துணிந்த வெண்குவரற் கல்லினை
ஒருதனி வைகிய தனைத்தே பெருவளத்து
மனின் மூதூர்ப் பூநாறு நறும்பகல்
எழுதுசுவர் மாடத்துக் கிளையுடை பொருகிறை
யவரின்று நிகழ்தரு மூறவே யதனால்
அழுதபனி கலுழ்ந்தவெங் கண்ணிணை யவ்வழி
நீர்நீந்து பாவை யசைவது நோக்கிச்
சேணிடை யகன்ற தயிலே யதுவினி
யவருடைக் கனவோ டிவ்வழி யொருகால்
வாரா தாயினும் யாதாங் கொல்லோ
மெலிந்து மெலியுமென் யாக்கையிற்
கழிந்து கழியுமென் றுருயிர் நிலையே.

நுபுதாரநிலை.

712. கழல்சேர்ந்த தாள்விடலை காதலிமெய் தீண்டும்
அழல்சேர்ந்து தன்னெஞ் சயர்ந்தான்—குழல்சேர்ந்த
தாமந் தரியா தசையுந் தளிர்மேனி
சுமந் தரிக்குமோ வென்று.

காடுவாழ்த்து.

713. உலகு பொதியுருவந் தண்ணுருவ மாகப்
பலர்பரவத் தக்க பறந்தலைகன் காடு
புலவுங்கொ லெண்பொற் புலவுக் களத்தோ
டிலவெனவே லாலே யிழந்து.

கையறுநிலை.

(உயிர்நீதோ னெருவன் குறித்தநிலை.)

714. தொடியுடைய தோண்மணந்தனன்
கடிகாவிற் பூச்சூடினன்
நறைகமழ் சாந்தணிவினன்
செற்றோரை வழிதேய்த்தனன்

(711) தொல். பொரு. [1]சாரிலை. [2]துறந்த. (712) தண்டி. 70 மேற்; வீரசோ. அலங். 89 மேற். (713) தொல். பொரு. 79 மேற், (714) யாப்பி. 90.

நட்டோரை யுயர்வுகூறினன்
வலியரென வாய்மொழியலன்
மெலியரென மேற்செல்லலன்
பிறரையொன் றிரப்பறியலன்
இரப்போர்க்கு மறுப்பறியலன்
வருபடையை யெதிர்கழறினன்
பெயர்படையைப் புறங்கண்டனன்
நெடுந்தெருவிற் றேரோட்டினன்
[1]கடும்பரிய மாகடாயினன்
உடல்சினத்த களிறூர்ந்தனன்
[2]நீந்தேறற் றகும்புதொலைச்சினன்
வானுவப்பப் பலிதீர்த்தனன்
மயக்குடைய மொழிவிடுத்தனன்
ஆங்குச
செப்வகை யெல்லாஞ் செய்தன ஞதலின்
இடுக வொன்றே கூடுக வொன்றே
படுவழிப் படுகவிப் [2]புகழ்வெய்யோன் றலையே.

715. தேரோன் மகன்பட்ட செங்களத்து ளிவ்வுடம்பிற்
நீராத பண்பிற் றிருமடந்தை—வாரா
உலகத் துடம்பிற் சொரிந்தனள் கொல்லோ
அலகற்ற கற்பி னவள்.

பொதுவியல்.

போந்தைமலைந்தாடியது.

716. ஏழக மேற்கொண் டிரேயோ னிகல்வென்றான்
வேழ மிவனேற வேந்துளவோ—வேழலுங்
தாந்தையங்கு நாகந் தலைதையங்க வாடாமோ
போந்தையங் கண்ணி புனைந்து.

வேம்புமலைந்தாடியது.

717. குறும்பூழ்ப்போர் கையெறிந்து கொற்றம் பெறுதல்
இறும்பூதென் றியாமாடல் வேண்டா—செறுக்கோன்
குலமதிக்கு மாறறியிற் கொற்றவன் வேம்பு
தலைமலையற் பாலதூஉ மன்று.

---

[1]கடும்பரி பூர்கடாயினன். [2]நீஞ்சேரற். [3]இகல் வெய்யோன். (715)தொல் பொரு. 79 நச், (716, 717), ஷை. ஷை. 60 நச்.

ஆர்மலைந்தாடியது.

718. ஆர்வேய்ந்த கோலத்தோ டாடுவர் பாடுவர்
போர்வேந்தர் பெற்றநாள் போன்றுவப்பர்—சீர்சால்
பறைகெழு வாரணப்போர் [1]பண்டிகழ்ந்தோ ரின்று
சிறைகெழு வாரணப்போர் செய்து.

வேலன்வெறியாட்டு.

719. அமரகத்துத் தன்னே மறந்தாடி யாங்குத்
தமரகத்துத் தன்மறந் தாடுங்—குமரன்மூன்
கார்க்காடு நாறுங் களனிழைத்துக் [1]காரிகையா
ரேர்க்காடுங் காளை யிவன்.

நேடுமொழிகூறல்.

720. தாழுல் விலங்காற் றனித்தாற் பிறன்வரைத்தால்
யானே யெறித வினிவரவால்—யானே
ஒருகை யுடைய தெறிவலோ யானும்
இருகை சுமந்துவாழ் வேன்.

வாள்வாய்த்துக்கவிழ்ந்த பிள்ளோநிலை.

721. ஆடும் பொழுதி னறுகயிற்றுப் பாவைபோல்
வீடுஞ் சிறுவன்றுய் மெய்ம்மறிந்தாள்—வீடுவோன்
வாள்வாயின் வீழ்ந்த மறவர்தந் தாயரே
கேளா வழுதார் கிடந்து.

வருநார் தாங்கும் பிள்ளோநிலை.

722. ஏற்றெறிந்தார் தார்தாங்கி வெல்வருகென் றேவினளை
கூற்றினுந் தாயே கொடியளே—போர்க்களிறு
காலுற வினமையாற் கண்டிவடி ஞின்றிலனென்
மாலுற்ற யார்பிழைப்பார் மற்று.

பிள்ளையாட்டு.

723. வன்கண் மறமன்னன் வாண்மலைந்து மேம்பட்ட
புன்றலை யொள்வாட் புதல்வற்கண்—டன்புற்றுக்
கான்கெழு நாடு கொடுத்தார் கருதார்க்கு
வான்கெழு நாடு வா.

---

(718) தொல். பொரு. 60 நச. [1]பண்டிழந்தோ. (719) மேடி.மேடி. 66 நச. [1]காரிகை, யார்க்காடுவ. (720–723) மேடி.

அரசரீர்புகழைக் காட்டிவாழ்வோர்க்குக்கூறியது.

724. வீங்குசெலற் பருதி வெவ்வெயி லெறித்தலின்
[1]நோங்க ணெக்கா தாங்கு நீபோய்
அரசுநகம் பூண்ட பின்னர் நின்னிலை
மூரசுடை வேந்தர் முகந்திரிந் தனரே
அஃ தான்று,
உவவுமதி நோக்குநர் போலப் பாணொடு
வயிரியர் பொருநர்நின் பதிநோக் கினரே
அதனால்,
[2]அதருங் கோடு முதலிய கூட்டுண்
டிகலி னிசைமேஎந் தோன்றித்
[3]திதில வாகிய நீபெறு நாளே.

உன்னநிலை.

725. முன்னங் குழையவுங் கோடெலா மொய்தரிரீன்
றுன்னங் குழையொலித் தோங்குவாய்—மன்னரைக்
கொன்று களங்கொள்ளுங் கொல்யானை வேந்தனை
வென்றுகளங் கொள்ளுமேல் வேந்து.

726. பொன்னன்ன பூவிற் சிறிய விலைப்புன்கால்
உன்னப் பகைவனெங் கோன்.

கழுனிலைக்கூத்து.

727. மீளாது பெற்ற விறற்கழலோன் வாளாட்டின்
வாளாடு கூத்திவந் தாடினாள்—வாளாட்டின்
மண்ணுளு மன்னரே பெண்ணுவார் வண்மைக்குப்
பெண்ணுடின் யாதாம் பிற.

கூத்திப்பாசமறை.

728. கவலை மறுகிற் கடுங்கண் மறவர்
உவலைசெய் கூரை யொடுங்கத்—துவலைசெய்
கூதிர் நலியவு முள்ளான் கொடிததோரான்
மூதின் மடவாண் முயக்கு

(724—727). ஷை. [1]ஆங்கண், ஆங்குண். [2]அதனுங், [3]பலவா கியநில.
(728) ஷை; பொரு. 76.

729. வாடை நலிய வடிக்கண்ணுள் தோணசைஇ
மூடை மழகளிற்று ளுள்ளான்கொல்—கோடல்
முகையோ டலமர மூற்றெரிபோற் பொங்கிப்
படையோடு பாசறையு ளான்.

நகைம் காட்சி.

730. தாழி கவிப்பத் தவஞ்செய்வார் மண்ணுக
வாழிய நோற்றனை மால்வரை—ஆழிசூழ்
மண்டில மாற்று மறப்புகழோன் சீர்பொறிப்பக்
கண்டனை னின்மாட்டோர் கல்.

731. கல்லாயு மெற்றெரிந்து காண்டற் கெளிவந்த
வல்லாண் விடலைக்கு வம்மினே—வெல்புகழாற்
சீரியல் பாடல் சிதையாமல் யாம்பாடத்
தூரிய மெல்லாங் தொட.

கால்கோள்.

732. வரையறை சூழ்கிடக்கை மாத்தாட் பெருங்கல்
வரையறை செய்யிய வம்மோ—வரையறை
வாராப் பெரும்புகழ் வல்லேல் விடலைக்கும்
ஓராற்றுற் செய்வ துடைத்து.

733. காப்புரூல் யாத்துக் கடிகமழ் நீராட்டிப்
பூபபலி பெய்து புகைகொளீஇ—நீப்படர்ந்த
காலை நடுகற் சிறப்பயர்ந்து கால்கொண்மின்
நாலை [1]வரக்கடவ நாள்.

நீர்ப்படை.

734. வானமா வீழ்க்க மறவோன் [2]நீர்த்தொழுக்கிற்
கேனி ரடையக் கிளர்ந்தெழுந்து—நீள்விசும்பி
னார்ப்பதித்த வல்லேறு போலக் கழலோன்கல்
நீர்ப்படுத்தார் கண்ணினீரி னின்று.

735. பல்லா பெயர்த்து நல்வழிப படர்ந்தோன்
கல்சொரிந் தாட்டிய நீர தொல்லை
வான்வழங்கு நீரினுந் தூய்தே யதருஞ்
கண்ணீ ரருவியுங் கழீஇக்
தெண்ணீ ராடுமின் நீர்த்தமா மதுவே.

---

(729) பத்துப்பாட்டு. பக். 344. (730-735) தொல். பொரு. 60 நச். 1வரக்கடவ. 2நீர்த்தொழுக்கில்.

கல்நாட்டியது.

736. சீர்த்த துகளிற்ருய்த் தெய்வச் சிறப்பெய்த
நீர்ப்படுத் தற்கு நிலைகுறித்துப்—போர்க்களத்து
மன்னட்ட வென்றி மறவோன் [1]பெயர்பொறித்துக்
கன்னட்டார் கல்சூழ் கடத்தி.

நடுகல்லிற் பெயர்முதலிய பொறித்தது.

737. கைவினை மாக்கள் கலுழக்க ணேக்கிழந்துஞ்
செய்வினை வாய்ப்பவே செய்தமைத்தார்—மொய்போர்
மறவர் பிணம்பிறக்கி வாள்வாய்த்து வீழ்ந்தோன்
பிறபெயர்சூழ் கன்மேற் பெரிது.

நடுகற்குச் சிறப்புப்பலடத்தது.

738. அன்றுகொ னாபெயர்த் தாரமரில் வீழ்ந்தோன்கற்
கின்றுகொள் பல்லா னினமெல்லாங்—குன்றுமற்
கெய்ம்மிலை சீர்ப்பச் சிறப்பாகத் தீபங்கள்
வைம்மிலை [2]பீடம் வகுத்து.

739. கோள்வாய்த்த சீயம்போற் கொற்றவர்தம் மாவெறிந்து
வாள்வாய்த்து வீழ்ந்த மறவேலாய்—நாள்வாய்த்
திடைகொள வின்றி யெழுத்துடைக் கல்வாய்
மடைகொளல் வேண்டு மகிழ்ந்து.

நடுகல்வாழ்த்தது.

740. ஆவாழ் குழக்கன்றாய் வித்துக் களத்தவிந்த
நீவாழ வாழிய நின்னடுகல்—ஓவாத
விற்கோட்ட நீண்டதோள் வேந்தன் பெயரொறித்த
பொற்கோட் டிமயமே போன்று.

வளாஅல்.

741. தண்ணளிசேர்ந் நின்சொன் மருவுந் தகைமைத்தாய்
எண்ணிய வெப்பொருளு மெய்தாளும்—மண்ணுலகில்
வந்து நமக்களித்து வாழு முகிலொன்று
தந்ததான் [3]முன்னைத் தவம்.

(736—740) தொல். பொரு. 60. நச். [1]பெயர்பொறிப்ப. [2]கோட்டம்.
(741) தண்டி. 53 மேற். வீரசோ. அலங். 24 மேற். [3]தந்தது.

வள்ளல் வறுமை.

742. [1]கடைகொ லுலகியற்கை காலத்தின் றீங்கால்
அடைய வறிதாயிற் றன்றே—அடைவோர்க்
கருமை யுடைத்தன்றி யன்தேன் சுவைத்தாய்ந்
கருமை விரவாந் கடல்.

அரசர்.

சிபி.

743. சேர்ந்த புறவி னிறைதன் றிருமேனி
ஈர்ந்திட் டெயர்துலதா னேறினான்—நேர்ந்த
கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கட்
படைவீர [2]மோசென்னி பண்பு.

இராமசரிதம்.

(இராமபிரான்கூற்று—பழைய இராமாயணம்).

744. வான்குணத் தெம்பிக்கு [3]மண்ணின் பெருஞ்செல்வம்
யான்கொடுப்பேற் கெங்கோனு [4]மீந்தளித்தான்—தேன்போய்க்
கரும்பேறு நன்னுட்டார் காவலன்றன் றேவி
[5]பெரும்பேறு மற்றுண்டோ பேசு.

(பகைச்சேனை வரவை இராவணற்கு ஒற்றன் அறிவித்தது.)

745. ஐயிருப தோசனையு மங்கோ ரிடமின்றிக்
கையாந்த சேனைக் கடலொலிப்பத்—தையல்
வழிவந் திராமன் வடகரையா னென்றான்
விழிவந்து வேறுக மீட்டு.

(இராமபிரான்பெருமைபற்றிய கவிக்கூற்று).

746. மற்றிவனே மாலென் றறிந்தாலவ் வாளரக்கன்
பெற்றி கருதுவதென் பேதையர்காண்—மற்றிவன்றன்
கண்டான் கடைசிவத்தற் குண்டோ கடலிலங்கை
வண்டா ரரக்கன் வலி.

---

(742) தண்டி. 53 மேற்; வீரசோ. அலங். 24 மேற். [1]கடைபோல். (743) வீரசோ. அலங் 28 மேற்; தண்டி. 70 மேற்; [2]மோவவன். (744)வீரசோ. அலங். 12 [3]மன்னு. [4]மிக்களித் தான்—ஆன்போய்க், கரும்பேறு நாட்டார் தன். [5]தரும்பேறு மற்றுண்டோ சாற்று. (அச்சுப்பிரதி). (745, 746) ஷே. பொரு. 18.

பரதநம்பி.

747. கடலு மலையு நேர்படக் கிடந்த
[1]மண்ணக வளாக துண்வெயிற் றுகளினும்
நொய்தா லம்ம தானே யிஃதெவன்
குறித்தன னெடியோன் கொல்லோ மொய்த்தவ
வாங்குசிலை யிராமன் றம்பி யாங்கவன்
அடிபொறை யாற்றி னல்லது
முடிபொறை யாற்றலன் படிபொறை குறித்தே.

(ஏகவிருத்த ராமாயணம்)

748. தாதையார் சொலராமன் காடே போதல்
சார்ந்துளபொன் மானெனலு மீசன் சாதல்
சீதையார் பிரிவெருவை மரணம் பாலு
சேயொடுநட் புக்கிகாடல் வாலி வீடல்
ஓதநீர்க் கடற்பரப்பை யனுமன் முண்டல்
உயரிலங்கை நகரெரியால் வேவக் காண்டல்
பாதகரா மரக்கரொலா மிறக்கத் தாக்கல்
பாக்கியரா மாயணச்சீர்க் காதை யீதே.

பராசராமனைக் காசிபன் வேட்பித்த பாட்டு

749. சன்ற வுலகளிப்ப வேதிலரைக் காட்டாது
வாங்கியதா யொத்தாணம் மாதவத்தோன்—ஈந்த
மழுவா னெடியோன் வயக்கஞ்சால் வென்றி
வழுவாமற் காட்டிய வாறு.

பார்த்தனும் பாண்டியன்மகளும்.

750. பூண்டாழ் மார்பிற் பொருப்பிற் கோமான்
பாண்டியன் மடமகள் பணைமுலைச் சாந்தம்
வேறு தொடங்கிய விசய னெஞ்சத்
தாரழ லாற்றா,.....
பொதியிற் சாந்த மெல்லாம் பொருதிரை
முத்தினு முழங்கழற் செந்தீப்
பொத்துவது போலும் புலம்புமூர் துறந்தே

---

(747) தொல். பொரு. 70 நச்; [1]மண்ணக வளாக நிறைய துண்வெயிற், றுகளினு நொய்தா லம்ம தானே, இஃதெவன் குறித்தனன் கொல்லோ மொய்த்தவ. (748) தமிழ்ப்பு. ச. பக். 62. (749) தொல். பொரு. 75. நச். (750) வெ. 54; நச்.

பாரத சரிதம்.

(பாரீத்தன் நிவாரகவாகரை அழித்தது.)

751. மண்ணகன்று [1]தன்னிலையி னீங்கி வணம்புகுந்து
பண்ணுந் [2]தவமுயலும் பார்த்தன்முன்—விண்ணிறைந்து
நீகண்டீர் கோண்குலையும் வெய்யோர் குலத்தினலித்தான்
கோதண்ட மேதுணையாக் கொண்டு.

(கன்னன் கவரதுண்டலங்கள் அளித்தது.)

752. இந்திரன் மைந்த னுயிர்வேட் டிரந்திரவி
மைந்தனை வெல்வான் வரங்கொண்டான்—தந்தகான்
வந்திலவேல் மைந்தனை பன்றி யிரற்குவந்த
வேந்தனும் பெற்றான் மிகை.

(நளன்மேற்பாட்டு.)

753. [3]மலைகுகர்ந்து போகாதோ வற்றுதோ பல்வம்
அலர்நதிரான் வீழாதே வற்றி—யிலையாக்குப்
பார்வென்ற [4]ராற்றவோ பாம்பீர்ந் குருகுலத்தார்
போர்வென்றே பாண்முனிந்த போது.

(குருக்கள் தமக்குப் படைத்தலைவரை வகுத்தது)

754. கங்கை சிறுவனுங் காய்கதிரோன் செம்மலும்
இங்கிருவர் வேண்டா [5]வெனவெண்ணிப்—சங்கை
சிறுவன் படைக்காவல் பூண்டான் செயிர்த்தார்
மறுவந்தார் தத்த மனம்.

(படையீட்டம்.)

755. கலிவா ழாழியின் வாழ்க்கை கழித்து
மலிபுகழ் வேண்டி மனத்தர்—ஒலிகடல்சூழ்
மண்ணகலம் வேண்டாது வான்வேண்டி நின்றனர்
[6]புண்ணகலாப் போர்க்களத்துப் போந்த.

(வேற்றெழிலி வன்மை.)

756. குன்று துகளாக்குங் கூர்ங்கணையான் வேலெறிந்
தன்று திருநெடுமா லாடினான்—என்றும்

---

(751) வீரசோ. அலங். 29. [1]தன்னிலைய நீங்கி வணமடைந்து. [2]தவத நினைந்த பார்த்தனுர்—எண்ணிறைந்த. (752) தொல். பொ. 76 நச். (பாரதம்). (753) வீரசோ. அலங். 12, 28; [3]மலைகரந்து. [4]சொப்பமோ. (754) தொல். புறத். 72. (பாரதம்.) [5]வெனவெள்ளிச். (755, 756) மே. 76 நச்; புறத் திரட்டு. (பாரதம்). [6]புண்ணியமாம்.

பனிச்சென்று மூளாத பல்கதிரோன் சேயோ
டினிச்சென் றமர்பொரா யென்று.

(ஒருவன் தன்னை அவிப்பலி கொடுத்தது.)

757. எம்பியை வீட்டுத லெம்மனைக்கா யாண்பதுதல்
வெம்பகன்மூன் யான்வியோப்ப னென்றெழுந்தான்—தம்பி
புறவோரிற் பாணிப்பப் பொங்கெரிவாய் வீழ்ந்தான்
அறவோன் மறமிருந்த வாறு.

(வீரஞ்சேர்.)

758. நடல்கிழிய வோடுங் கலப்போல வொன்னர்
நடல்கிழிய வொள்வாள் விதிர்த்து—நடல்கிழியும்
மைம்பொற்றூர் மன்னர் படைகடலே யோடிற்றே
செம்பொற்றண் டேந்திஞன் றேர்.

(களிறெதிர்ந்தோர் பெருமை.)

759. வானவர் போரிற் முனைவர்க் கடந்த
மான வேந்தன் மாலையிற் றணந்தது
பல்படை கெரிவ தெல்லான் வீமன்
பிறக்கிடங் கொடானகன் முகத்தெதிர்ந் தார்த்ததற்
காணெதிர் மலைந்த காலை யாங்கதன்
கோடுமுக் கிழிந்த மார்பொடு நிலந்சேர்ந்து
போர்க்கோள் வளாகந் 1தேர்த்தக வினைத்தினும்
இடைகொள வின்றிப் புடைபெயர்ந்து புரண்டு
வருந்தா வுள்ளமொடு பெயர்ந்தனன்
பெருந்தகை யாண்மையொடு பெயர்த்தலோ வரிதே.

(களிற்றெடுபட்ட வேந்தனை அட்டவேந்தன்படையாளர் சூழ்ந்தாடியது.)

760. நான்மருப் பில்லாக் கானவில் யானை
வீமன் வீழ்த்திய தடன்றெதிர்ந் தாங்கு
மாமுது மதுரை மணிநிறப் பாகனை
டாடமர் தொலைத்த லாற்றுன் றேரொடு
மைத்தனன் பணியின் வலமுறை வந்து
கைத்தலங் கதிர்முடி யேற்றி நிற்றந்

(757) தொல். புறத். 76 நச்; புறத்திரட்டு. (758) தொண்டை. சத. 52 மேற். (பாரதம்.) (759, 760) தொல். பொரு. 72 நச். (பாரதம்). 1தோய்த்தக வினைத்தினும்.

திறைஞ்சின னேவர்க் கிடையோ னதுகண்டு
மறந்தீர் மன்னனு மிறைஞ்சித் தரஅது
வேழம் விலக்கி வினைமடிந் திருப்பச்
சூர்மருங் கறுத்த நெடுவேள் போல
மலைபுரை யானையுந் தலைவறுங் [1]கவிழிய
ஆருகு களத்து வாள்பல வீசி
யொன்ஞ மன்னரு மாடினர் துவன்றி
யின்ஞ வின்ப மெய்திக்
தன்னமர் கேளிரு முன்னுர்த் தனரே.

(இருதானைத்தலைவருந் தம்மிற்பொருது வீழ்தல்.)

761. ஆதி சான்ற மேதகு வேட்கையின்
நாளுங் கோளு மயங்கிய நூட்பின்
மதியமு ஞாயிறும் பொருவன போல
ஒருத்தி வேட்கையி [2]னுடன்வயிற் றிருவர்
செருக்கூர் தண்டி னெருக்கின ரெனவும்
அரவணி கொடியோற் கிளையோன் றிலவனும்
பெருவிறல் வீமற் கிளையோன் சிலவனும்
உடன்றமர் தொடங்கிய காலை யடங்கார்
[3]உட்குறுஞ் சீற்றத்துக் கைப்படை வழங்கி
இழந்தவை கொடாஅர் கிடந்தன வாங்கித்
தேர்மிசைத் [4]தமியர் தோன்றர் பார்மிசை
நின்றுசுடர் நோக்கியு மொன்றுபடத் தெரிதியும்
தும்பியடி பிணங்கு மண்ணிற் றேரற்றமொடு
கொடிகொடி பிணங்கி வீழ்வன போல
ஒருவயின் வீழ்ந்தடு காலை
இருபெரு வேந்தரும் பெரிதுவந் தனரே.

(தருதலைமேற்றானைக் குரங்குமுற்றுறுதலும் சிவந்த அதிசுவேந்தாமாலின் போர்ச்சிதைதலும்.)

762. [5]மறங்கெழு வேந்தன் குறங்குமுற் றிட்டபின்
அருமறை யாசா னெருமகன் வெகுண்டு
பாண்டவர் வேர்முதல் கிண்டெறி சிற்றமொ
டிரவு ரறியாது துவரை வேந்தரை
மாதுலன் றன்னை வாயிலி னிறீஇக்

---

[1]கழிய. (761, 762) தொல். பொரு. 72 நச். (பாரதம்) [2]உடல்வயிற். [3]உடங்குவருஞ். [4]தழீஇயர். [5]சிறங்கெழு.

காவல் பூட்டி [1]பூர்ப்புறக் காவயின்
ஐவகை வேந்தரொ டரும்பெறற் றம்பியைக்
கைவயிற் கொண்டு காரியோன் காத்தலிற்
றெருக்குடம் பிரிந்தத் தறக்க மெய்திய
தந்தையைத் தலையற வெறிந்தவ னிவனெனத்
தஞ்சிடத் தெழீஇக் குஞ்சி பற்றி
வடாஅது பாஞ்சால னெடுமுதற் புதல்வனைக்
கழுத்தெழுத் திருகிப் பறித்த காலைக்
கோயிற் கம்பலை யூர்முழு துணர்த்தலிற்
றம்பியர் மூவரு மைம்பான் மருகரும்
உடன்சமர் தொடங்கி யொருங்குகளத் தவிய
வான்வாய்த்துப் பெயர்ந்த காலை யாள்வினைக்
கின்னே ரினிப்பிற நில்லென வொராங்குத்
தன்முதற் றுதையொடு [2]கோன்முத லமரர்
வியந்தனர் நயந்த விசும்பின்
இயன்றதலை யுலகமு மிறந்ததா லதுவே.

குந்தி தேவி.

763. காய்கதி ரோனுக்குக் கன்னனேயீன் றுங்கன்னி
யாகிப்பின் மூவரையு மீன்றளித்த—தோகை
தலைமைசேர் கற்பிலுட் டான்வணங்கு முன்னுள்
மலையெடுத்துக் கார்காத்த மால்.

சீவகன்.

764. உருவள ரகலை பூமி யுயர்தவங் கருணை யூக்கம்
பொருவலி விசயம் வீரம் புண்ணிய மாதர் போகம்
பெருஞ்சி யொழுக்கஞ் சிலம் பிள்ளைகண் மானங் கல்வி
திருமுத லிவையீ ரெட்டுஞ் சீவக னெருவன் பெற்றான்.

வத்தவர்கோ.

(வச்சத்தொள்ளாயிரம்).

765. உன்னுயிரு மென்னுயிரு மொன்றென்ப தின்றறிந்தேன்
மன்னுபுகழ் வச்சத்தார் மன்னவா—உன்னுடைய
பொன்னகத் தெங்கையர்தம் பொற்கைநகச் சின்னங்கண்
டென்னகத் தேயெரிகை யால்.

[1]பூர்ப்புக்காவயின். [2]கொண்முத. (763) தண்டி. 125 மேற். வீரசோ. அலங். 'காலமலிவொடுடமலிவு' என்னுஞ் செய்யுளுரை (வட்டுப்பிரதி) (764) சீவக சிந். மூன்றும்பதிப்பு, பக். 916. (765) பெருங்கதை, முகவுரை, பக். 9.

766. கொங்கை கோங்கரும் பாக வங்கை
யணிநிறத் தாமரை யாக மணிநிறக்
கண்ணினை குவளை யாக நுண்ணிழை
நுண்ணிடை வல்லி யாக நண்ணிய
மூறுவன் மூல்லை யாக விறுமாந்து
செவ்வாய் கொவ்வை யாகக் கைவிரற்
சீறடி தளிர்க ளாகச் சிறு
மாவுஞர் தந்தவிம் மங்கை தன்னைக்
காத்து மென்றனக் கிரக்க மின்றி
யூடாரிக் கண்ணியை யொளித்தீ ராயினுங்
காட்டுமி னென்று கைதொழு திறைஞ்சினன்
வாட்டிறற் றடக்கை வத்தவர் கோவே.

அவந்தியார்கோ.

767. கடுங்கை வயமுழவர் காலைத் தடிய
மடங்கி யரியுண்ட நீலத்—[1]தடஞ்சோரா
நீளரிமேற் கண்படுக்கு நீணீ ரவந்தியார்
கோளரியே றிவ்விருந்த கோ.

தமிழ்வேந்தர்.

768. வில்லுடையான் வானவன் மீயாழ் தமிழுடையான்
பல்வேற் கடற்றடக்கைப் பாண்டியன்—சொல்லிகவா
இல்லுடையான் பாலி யிளஞ்சாத்தன் வேட்டனே
நெல்லுடையா னீர்காட்டார் கோ.

சேரன்.

(பலதேவராகக்கூறியது).

769. நுந்நிர னென்னரி னிரண்டுட னேறு மார்ந்த
அந்தரத்தா னென்னரிற் பிறழ்வில்லை— ஆங்கரத்துக்
கோழியா னென்னரின் மூகவிறன்மே லேகுதலை
ஆழியா னென்னுணரற் பாற்று.

770. வற்றாநி யாறு மிகல்வெம்போர் வானவனும்
ஆற்றலு மாள்வினையு மொத்தொன்றி னெஞ்வாரே

---

(766) வீரசோ. அலங். 'ஈற்றயன் மூக்கீர்' என்ற செய்யுளுரை (வட்டப் பிரதி). மெ. அலங். 9 உரை(அச்சுப்பிரதி)யிலும், பெருங்கதை மூகவுரை 12-ம் பக்கத்தும் பாட பேதங்கள் கண்டுகொள்க. (767) மெ.; தண்டி. 25; [1]தடஞ் சேர்ந்து. (768) யாப். வி. 60. (769, 770) தொல். பொரு. 60. நச்.

கூற்றக் கணிச்சியோன் கண்மூன் றிரண்டேயாம்
ஆற்றல்சால் வானவன் கண்.

771. வஞ்சியே னென்றவன்ற னூருரைத்தான் யாணுமவன்
வஞ்சியா னென்பதனால் வாய்கோர்த்தேன்—வஞ்சியான்
வஞ்சியான் வஞ்சியே னென்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ.

(*முப்பேட்டுத் தேர்ப்பாட்டு).

772. கல்லினைக் கதிர்மணிக் கவண்பெய்து கானவர்
கொல்லையிற் களிகறி வெற்பே யாதே
கொல்லையுட் களிகறி வெற்பனின் வியருட்டார்
பல்புகழ் வானவன் குடுமே யாதே
பல்புகழ் வானவன் [1]குன்சேரா மன்னர்க்கு
நல்ல படாஅ பறையே யாதே.

(குறிலொழுகலேந்தீஞ்சை யம்மானை).

773. வரையென மாடங் கோங்குறு வீதியின் வஞ்சிமன்னவன்
புரைபுரை நின்றலர் பூந்தொடையும் பொறையன்ற னருளாமனம்
கரையெனக் காலுங் காண்பரி பு கடல்போலுங் கண்களையும்
அரையின மேகலை யோடமோ டிவளாடி யாற்குடே.

774. [2]எருத்துமே றேருக்குறிஞ் வாழிலை மெல்லுங்
கருத்திற்கை கூப்பிப் பழி—பெருந்திறைஞ்சிக்
கால்வண்ண மல்லாற் கடுமான்மே லோர்க் கோகையை
மேல்வண்ணங் கண்டறியான் வேல்.

சேரமான்.

கபிலர் பாடியது.

775. முச்சக் கரமே மலைப்புகுந் நிட்டியகால்
மூச்சக் கரமே யளந்ததாற்—பெய்க்கெய்
அரிகாண்மற் றோன்றி மறுத்திரு மாய்புனையு நாடன்
கரிகாலன் காவிரைநீப் புற்று.

776. அரிமா சுமந்த வமளிமே லாகத்
திருமா வளவனைத் தேற்றல்—திருமார்பின்

(771) யாப். வி. 61; வீரசோ. யாப். 8 மேற். *முப்பெட்டுச்செய்யுள். (772) யாப். வி. 93; [1]தாளாதிசார் மன்னர்க்கோர். (773) மேற். 94. (774) தொல். மெய்ப். 8 உரை; இலக். வி. 578, உரை. [2]எருத்துமே. (775–776) பத்துப்பாட்டு, பொருந. பக். 92.

மானமா லென்றே தொழுதேன் தொழுதகைப்
போனவா பெய்த வளை.

777. கச்சி வளைக்கைச்சி காமக்கோட் டங்காவல்
மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன்—கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
கொம்பொற் கிரிதிரித்த செண்டு.

778. [1]தொக்க கலியின்மூ வாயிரத்துத் தொண்ணூற்றில்
மிக்க கரிகால வேந்தனுந்தான்—பக்கம
லேலும் புழற்பெண்ணி யாறுகளா கண்டான்
மேலைத்தூர் பூபத்தாறும் வந்து.

779. அஞ்சின் முடிகவித் தைம்பத்து முன்றை யிற்
கஞ்சிகா வேரிக் கரைகண்டு—தஞ்சையில
வெண்பத்து மூன்றளவு மீண்[ட விருந்தே]தான்
விண்புக்கான் றண்புகார் வேந்த.

பெயர்க்குறிப்புகள்.

இராசகேசரி இராசராசன்.

780. திருமகள் போலப் பெருநில மடந்தை
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளாக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியும்
[2]தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
மாட்டெழிற் சிங்கள மீழமண் டலமும்
இரட்ட பாடி யேழரை யிலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீரா யிரமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
னெழில்வள நாடியு வெல்லா யாண்டுந்
தொழுதக விளங்குட் யாண்டே கெழியைத்
தேசுகொள் கோராச கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீராசராச தேவர்க்கு யாண்டு—

---

(777) சிலப் 5, 95–8. அடியார்க். (778) சோழமண். சத. பக். 41. [1]தொக்க சகனிற் றிரளாயிரத்துத் தொண்ணூற்றிற். (779) செண்னே மியூவியம் கையெழுத்துப்புத்தகசாலைப் பிரதியொன்றிற் கண்ட பாட்டு. [ ] இக்குறிக்குள் ளான எழுத்துக்கள் ஊகித்தமைக்கப்பட்டவை. (780) சாஸனம். [2]தடிகை வழியும் நுளம்ப பாடியும்.

அருண்மொழி (இராசராசன்).

781. அருமொழிதன் கோயி லடலரசர் மிண்டித்
திரும[குடக்]கொடிக டேய்த்த—பருமணிகள்
ஒதக் கமுதமென்ன வொண்ணுகலார் வெண்மலராம்
பாதத்தி னொன்றும் பரல்.

பரகேசரி இராசேந்திரசோழதேவன்.

782. திருமன்னி வளர விருநில மடந்தையும்
போர்ச்சயப் பாவையுஞ் சீர்த்தனிக் கெல்வியுங்
கண்பெருந் தெவிய ராகி யின்புற
நெடிதிய லுழிப்பி னிடைதுணை நாடும்
தொடர்வன தேவியர் மடந்தை வாயிலும்
கன்னிச் சுற்றமுற் கொள்ளிய [1]பாக்கமும்
நண்ணுற் கருமுரண் மன்னரைக் கடந்தமும்
பொருகட லித்தச் சாசர்த முடியும்
ஆங்கவர் தேவிய ரோங்கெழின் முடியும்
முன்னவர் பற்கற் றென்னவர் வைத்த
சுத்தா முடியு மிந்திர ரரமும்
தென்னுல கரசி யீழ மண்டல முழுவதும்
எறிபடைக் கோளன் முறைமையிற் கூடும்
குலகன மாகிய பலர்புகழ் முடியும்
செங்கதிர் மாலையுஞ் சங்கதிர் வேலுந்
தொல்பெருங் காவற் பல்பழந் தெவ்வும்
தெருவிற் சினவி யிருபத் தொருகால்
அரசுகளை கட்ட பரசு ராமன்
மேவருஞ் சாந்திமத் தீவரண் கருதி
இருத்திய செம்பொற் றிருத்தகு முடியும்
பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்
டொளித்தசய சிங்க னளப்பரும் புகழொடு
பீடிய விராட்ட பாடி யேழரை
யிலக்கமு நவநிதிக் குலப்பெரு மலைகளும்
விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமு
முதிர்பட வல்லை மதுரை மண்டலமும்
காமிடை வளைய நாமணிக் கோவையும்

---

(781) வீரசோ. அலங். 12 மேற். (782) சாஸனம்; வீரசோ. யாப். 19 மேற். [1]பாக்கமும்.

வெஞ்சின வீரர் பஞ்சப் பள்ளியும்
பாசடைப் பழன மாசுணி தேசமும்
அயர்வில் வண் கீர்த்தி யாதிநக ரகலையிற்
சந்திரன் ரெல்குலத் திந்திர ரதனை
வினையமர்க் களத்துக் கிளையொடும் பிடித்த
பலதனத் தொடுகிறை குலதனக் குவையும்
கிட்டரஞ் செறிமினை யொட்ட விதழும்
பூசுரர் சேருநற் கோசல நாடும்
தன்ம பாலனை வெம்மனை யழித்து
வண்டுறை சோலைத் தண்ட புத்தியும்
இரண சூனனை முரணறத் தாக்கித்
திக்கனை கீர்த்தித் தக்கண லாடமும்
கோவிந்த சந்தன் மாவிழிந் தோடத்
தங்காத சாரல் வங்காள தேசமும்
தொடுகழற் சங்கு வொட்டல்மகி பாலனை
வெஞ்சமா வளாகத் தஞ்சுவித் தருளி
ஒண்டிறல் யானையும் பெண்டிர்பண் டாரமும்
நித்திலை நெடுங்கட லுத்திர லாடமும்
வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனற் கங்கையும்
அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்திச்
சங்கிராம விசையோத் துங்க வர்ம
னெனிய கடாரத் தரசனை வாகையம்
பொருகடல் கும்பக் கரியொடு மகப்படுத்
தரிமையிற் பிறக்கிய பரநிதிப் [1]பிறக்கமும்
ஆர்த்தவ னைகளர்ப போர்த்தொழில் வாசலில்
விச்சா தரத்தோ ரணமு மொய்த்தொளி
புனைமணிப் புதவமுங் கனமணிக் கதவமும்
நிறைசீர் விசயமுங் துறைநீர்ப பண்ணையும்
வண்மலை யூரெயிற் ரெண்மலை யூரும்
ஆழ்கட லகழ்சூழ் மாபிர டிங்கமும்
கலிங்கா வல்வினை யிலங்கா சோகமும்
கோப்புறு நிறைபுனல் மாப்பா பாளமும்
காவலம் புரிசை மேவிலீம் பங்கமும்
வினைப்பன் னூருடை வினைப்பன் னூரும்
கலைத்தச் சோர்புகழ் தலைத்தக் கோலமும்

---

[1]பெருக்கமும்.

தீதமர் பல்வினை [1]மாதமா லிங்கமும்
கலாமுதிர் கலந்திற லிலாமுரி தேசமும்
தேனக்க வார்பொழில் மாகத்க வாரமும்
தொடுகடற் காவற் கடுமுரட் கடாரமும்
மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேசரி வன்மரான
உடையார் ஸ்ரீராசேந்திர சோழதேவர்க்கு யாண்டு.

இராசகேசரிவர்மன்–இராசாதிராசன்.

783. திங்களோர் தருதன் றிருந்தெ வெண் குடைக்கீழ்
நிலமக ணிலவ மலர்மகட் புணர்ந்து
செங்கோ லோச்சிக் கருங்கலி கடிந்து
தண்டிறிய தாதை யுந்திருத் தமையனும்
குறிகொடன் னிளங்கோக் கோப் பெருமுணர்
தன்றிருப் புதல்வர் தம்மையுந் துன்றிழில்
வானவன் வில்லவன் மீனவன் கங்க
னிலங்கையர்க் கிறைவன் பொலம்கழற் பல்லவன்
கன்னகுச் சியர்கோ வலனைனப் பிபான்னணி
சுடர்மணி மகுடஞ் சூட்டிப் படர்புக
ழாங்கவர்க் கவர்மா டருளிப் பாலுற
மன்னுபல் லூழியுட் டென்னவர் மூவருள்
மாறு பாணன் பொன்முடி யாருப்
பருமணிப் பசுந்தலை பொருகளத் தரிந்து
வாரண வியகழல் வீரகே ரளனை
முனைவயிற் பிடித்துத் தனது வாரணக்
கதக்க ளிற்றினு லுதைப்பித் தருளி
அந்தமில் பெரும்புகழ்ச் சுந்தர பாண்டியன்
[2]கொற்றவெண் குடையுங் கற்றைவெண் கவரியும்
இங்கா தனமும் வெங்களத் திழந்துதன்
முடிவிழத் தலைவிரித் தடிதளர்ந் தோடத்
தொல்லை மல்லையூர்த் துரத்தி யெல்கலில்
வேணாட் டரசைச் சேணாட் டொதுக்கி
மேவுபுக ழிராமகுட மூவர்கெட முனிந்து
மிடல்கெழு வில்லவன் குடர்மடிச் கொண்டதன்
நாடுவிட் டோடிக் காடுபுக் கொளிப்ப
வஞ்சியம் புதுமலர் மலர்தாங் கெஞ்சலில்

---

[1]மதமா. (783) சாஸனம். [2]ஒற்றை.

வேலைகெழு காந்தளூர்ச் [1]சாலை கலமறுத்
தாகவ மல்லனு [2]மஞ்ச தேதவுந்
தாங்கரும் படையா லாங்கவன் சேனையுட்
கண்டப் பயனும் கங்கா தரனும்
வண்டமர் களிற்றெரு மடியத் நிண்டிறல்
விருதர் விக்கியும் விசய தித்தனுங்
கருமுரட் சாங்க மப்பனு முதலினர்
சமர சீருவொத் துடைய விரிசுடர்ப்
பொன்னே டைக்கரி புரவிபாடும் பிடித்துத்
தன்னு டையிற் சயங்கொ ண்டசோ ழன்னர்
கொள்ளிப் பாக்கை யுள்ளெரி மடுப்பித்
தொருதனித் தண்டாற பொருகட லிலங்கையர்
கோமான் விக்கிரம பாகுவின் மகுடமும்
முன்றனக் குடைந்த தென்றமிழ் மண்டல
முழுவ தும்மிழந் தெழுகட லீழம்
புக்கவிலங் கேச னுரிய விகக்கிரம
பாண்டியன் பருமணி மகுடமும் காண்டகு
தன்ன வாக்கித்தன் கன்னகுச் சியினும
ஆர்கலி யீழஞ் சீரிதென் றெண்ணி
உளங்கொளங் நாடுதன் னுறவொடும் புகுந்து
வினங்குமுடி கலித்த வீரசலா மேகன்
போர்க்களத் தஞ்சித்தன் கார்ககளி றிழிந்து
கவ்வையுற் றோடக் காதலி யொடுந்தன்
றவ்வையைப் பிடித்துத் தாயைமுக் கரிய
ஆங்கவ மானம் நீங்குதற் காக
மீட்டும் வந்து வாட்டொழில் [3]புரிந்து
வெங்களத் துலந்தவச் சிங்களத் தரசன்
பொலனறுவை முடியுங் கன்னரண் வழியும்
தூரைகொ ளழகத் தரசரு கியஜீ
வல்லவ மதன ராசனு மெல்லொளித்
தடமணி முடியுங் கொண்டு வடபுலத்
திருகா லாவதும் பொருபடை நடாத்திக்
கண்டரான் றினகரன் நாரணன் கணவதி
வண்டலர் தெரியன் மதுரை தனெனென்
றெனைப்பல வரைசரை முனைவயிற்[4] றாத்தி

---

[1]சாலைக் கலமறுப்பித். [2]மஞ்சதேதவுந்தன். [3]ஒழந்து. [4]பிடித்து.

வம்பலர் தருபொழிற் கம்பிலி நகருட்
சளுக்கியர் மாளிகை தகர்ப்பித் திளக்கமில்
வில்லவர் மீனவர் வேள்குலச் சளுக்கியா
வல்லவர் கௌசலர் வங்கணர் கொங்கணர்
சிந்துர ரையணா சிவகளர் பங்களர்
அந்திரா முதலிய வரைசரிற் றிறைகளும்
ஆறிலொன றவனியுட் கூறுகொள் பொருள்களும்
உகந்துநான் மறையவர் முகந்துகொளக் கொடுத்து
விசுவஜ்லா கததும விளங்கமனு நெறிநின்
றசுவமே தஞ்செய் தரைசுவீற றிருந்த
சயஙகொண்ட சோழ னுயர்ந்த பெருமபுகழ்க்
கோவராச கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீராசாதிராச தேவர்க்கு யாண்டு:—

பரகேசரி வீரராசேந்திரதேவன்.

784. திருமா தபுவியெனும் பெருமாத ரிவாதன்
மாதே வியர்க ளாக மீதொளிர்
வெண்குடை யுயர்த்துத் திண்கலி பெயர்த்துத்தன்
சிறிய தாதை யாகிய வெழுழ்வலிக்
கங்கை கொண்ட சோழனைப் பொருகிகல்
இருமுடிச் சோழ னென்னும் பொருமுரட்
டன்றிருத் தம்பியர் தம்முள் வென்றிகொள்
மும்முடிச் சோழனைத் தெம்முனை யடுதிறற்
சோழ பாண்டிய னென்றுங் கேரளன்
நெறுகெழல் வீர சோழனைப் படிபுகழ்
கரிகால சோழ னென்றும் பொருதொழில்
வாள்வலித் தடக்கை மதுராந் தகனைச்
சோழ கங்க னென்றுந் தோள்வலி
மேலிகல் பராந்தக தேவனைச் சே:ழ
வம்சாத்திய ராச னென்றும்
நிருதயத் தன்பொடு கருது காதலருள
இந்த லமபுக ழிராசேந்திர சோழனை
உததம சோழ னென்றுந் தொத்தணி
மூசையவி ழலங்கன் முடிகொண்ட சோழனை
இகல்விச யாலய னென்றும புகர்முகத்
தேழுயர் களிற்றுச் சோழகே ரளனை

(784) சாஸனம்.

வார்சிலைச் சோழ கோள னென்றும்
திண்டிறற் கடாரங் கொண்ட சோழனைத்
தினகரன் குலத்துச் சிறப்பமர் சோழ
சனக ராச னென்றும் கனைகடற்
படிகொண்ட பல்புகழ் முடிகொண்ட சோழனைச்
சுந்தர சோழ னென்றுஞ் செந்தமிழ்ப்
பிடிக்களிற் றிரட்ட பாடி கொண்ட
சோழனைத் தொல்புவி யாளுடைச் சோழ
கன்னருச் சியராச னென்றும் பின்னுந்தன்
காதலார் காதலர் தம்மூள் மேதகு
கதிராங் கனைகழல் மதுராந் தகனை
வெல்படைச் சோழ வல்லப னென்றும
மானச் சிலைக்கையோ ராளர்சே வகனை
நிருபேந்திர சோழ னென்றும் பருமணிச்
சுடர்மணி மகுடஞ் சூட்டிப் பாடமிசை
நிகழு நாளினு ளிகல்வேட் டெழுந்துசென்
றிருண்டிற விரட்ட மண்டல மெய்தி
நதிகளும் நாடும் பதிகளு மநேகம
அழித்தனன் வளவனெனு மமாழுபலபாருள் கேட்டி
வேகவெஞ் சளுக்கி யாகவ மல்லன்
பரிபவ மெனக்கிதென் றெரிவிழித் வெதழந்து
செப்பருந் திறத்த கொப்பத் தலைவிற்
சென்றெறி சோன்றமர் தெரிஞ்சிய பொழுதவன்
செஞ்சர மாரிதன் குஞ்சர முருக்கினுந்
தன்றிருத் துடையினுந் தன்றுறும் புயத்தினுந்
தைத்க வுந்தன் னுடன்களி றிறுபிய
தெதிரிதழல் வீரர்கள் மடியவும் வலையா
லொருதனி யரிந்தக ய்பெரு படை வழங்கியம
பெயரபமர் முருகி தடபிசய னிங்கனுட
பேயர்பபுல மகளயும் தார்த்தச பலமனு
மானமன் னவரில்மண் டலிய சோ ழையனும்
ஆனவண் [1]புகழா மாலை யணிந்தவர்
மட்டலி முலங்கல்மொட் டலையனுந் திண்டிறல்
நன்னி நுளம்பனு மெனுமிவர் முதலினர்
எண்ணிலி யரைசரை விண்ணகத் தேற்றி

[1]புகழா லையணிந்.

வண்ணிய ரேவணும் வயப்படைத் துத்தனும்
கொன்னவில் படைக்குண்ட மய்யனு மெண்றின
வெஞ்சின வரைசரோ டஞ்சிக் கலங்கி
[1]குலகுல குலைந்து தலைமயிர் விரித்து
வெந்நுற் றெருளித்திப் பின்னுற நோக்கிக்
கால்பரிக் தோடி மேல்கடற் பாயத்
தூரத்திய பொழுதச் செருக்களத் தவன்விடு
சத்துருபயங் கரன்கர பத்திரன் மூல
பத்திர சாதி பகட்டரை சநேகமும
எட்டுநிரை பரிகளு மொட்டக நிரைகளும்
வாகவெல் கொடிமுத லிராசபரிச [2]சன்னமும்
ஒப்பில்சத்தி யவவைசாங் கபபையன் றிவர்முதல்
தேவியர் குழாமும் பாவைய ரீட்டமு
மினையன பிறவு முனைவயிற வெகாண்டு
விசையாபி [illegible]
போர்ப்படை நடாத்திக் கார்க்கட மிலங்கையில்
விறற்படைத் தலிங்கர்மன் வீரசலா மேகவண்ணக்
கடகளிற் றெறிபடக் கறிர்முடி கடவித்
திலங்கையர்க் கிறைவன் மாறை பாணன்
காதல ரிருவரைக் களத்திடைப் பிடித்து
மாப்பெரும் புகழ் விகவளர்த்த கோப்பரகேசரி வர்மரான
உடையார் ஸ்ரீவீராராசேந்திர தேவர்க்கு யாண்டு

இராசகேசரி இராசமகேந்திரதேவன்.

785. திருமகள் விளங்கு மிருதில [illegible]
ஒருகுடை நிழற்கீழ் நிலாவரித்து [illegible]
தருமகெறி திற்ப மறுவின்றி நடாத்திய
கோவிராச கேசரி வர்ம ராச
உடையார் ஸ்ரீராசமகேந்திர தேவர்க்கு [illegible]

வீரராசேந்திர தேவன்.

786 திருவளர் திரள்புயத் திருதில வலபத்
தண்ணணிப் பூணனைத் தயங்கப் பல்மணிக்
கொற்றவெண் குடைநிழற் குவலயத் துயிர்களைப்
பெற்ற தாயினும் பேணி மற்றுள
அறைகழ லரையர்தன் னடிநிழ லொதுங்க

(785—86) சாஸனம். [1] நுலங்குலை குலைந்து. [2] சந்தமும்.

உறைபிலத் தூடைகலி யொதுங்க முறைசெய்து
விழைமலர்த் தெரியல் விக்கலன் றன்னெடு
வரிசிலைக் கடக்கை மாசா மந்தரைக்
கங்க பாடிக் களத்திடை நின்றுந்
தங்கபத் திரைபுகத் துரத்தி யங்கவர்
வேங்கைகொன் னெட்டிடை மீட்டுமவர் வீட்ட .
தாங்கரும் பெருவலித் தண்டெகடத் தார்கி
மாதண்ட நாயகன் சாமுண்ட ராயனைச்
செற்றவன் சித்திரை யறுத்து மற்றவ
னெஞ்சுமக ளாகிய விருதையன் றேவி
நாகலை யெண்ணுக் தோகையருந் சாயலை
முகத்தெரி மூக்குவே ரூக்கிப் பகைத்தெதிர்
மூன்று மம்பையினு மேன்றெரிர் பொருத
பரிபவம் தீர்வதெனைக் கருதிப் பொருபுனற்
கூடல சங்கமத் தாகவ மல்லன்
மக்க ளாகிய விக்கலன் சிங்கண
னென்றிவர் தம்மொடு மெண்ணில்சா மந்தரை
வென்றடு நாசிமூனை விட்டுத் தன்றூனை
மன்னருந் தானும் பின்னடுத் திருந்து
வடகட லென்ன வருத்தவத் தானையைக்
கடகளி றொன்றுற் கலக்கி படல்பரிக்
கோசலைச் சிங்கனைக் கொடிபட மூன்னர்த்
தூசிவெங் களிற்றொடுந் தூளித்துக் கேசவ
தண்ட நாயகன் தார்க்கேத் தரையன்
திண்டிறல் மாரயன் சினப்போத் தரைய
னிசோச்சய னிகல்செய்பொற் கோதைமூ வத்தியென்
றூர்த்தடு தபபி லநேகசா மந்தரைச்
சின்ன பின்னஞ் செய்து பின்னை
முதலி யாலு மதுவண வேடை
விரித்த தலையொடு விக்கல னேடைச்
செருத்தொழி லழித்து சிங்கண னேடை
அண்ணன் முதலிய ரனைவரு மமர்போர்ப்
பண்ணிய பகடிழிந் தோட நண்ணிய
ஆகவ மல்லனு மவர்க்குமுன் னேடை
வேகவெங் களிற்றினை விலக்கி வாகைகொண்
டுன்னவர் தாரமு மவர்குல தனமுஞ்

சங்குந் தொங்கலுந் தாரையும் பேரியும்
வெண்சா மரையு மேக டம்பமும்
சுகரக் கொடியும் மகரதோ ரணமும்
புட்பகப் பிடியும் பொருகளிற் றீட்டமும்
பாய்பரித் தொகையொடும் பறித்துச் சேயொளி
வீரஞெய் காதனம் பார்தொழ வேறி
எழிறர வுலக மூழுகடை யாளொடும்
விசயமணி மகுட மேய்ந்தே யெழில்கொள்
தத்துமாப் புரவிப் பொத்தப்பி வேந்தனை
வாரண வன்கழற் கேரளன் றன்னைச்
சனநா தன்றன் றம்பியைப் போர்க ளத்
தலங்கல்சூழ் பசுந்தலை யரிந்து பொலங்குழற்
றெண்ணிலைச் சிவல் லவன்முதல் சிறுவன்
மின்னவில் மணிமுடி வீரசே கரியை
மதவரை யொன்று ஞுதைப்பித் துதகையிற்
சேரளர்தங் குலசெங் கோ யோடும்
வேரறப் பறிந்தோடி மேல்கடல் வீழ
வாரண மருகுளி செலுத்தி வாரியி
லெண்ணருங் களிற்றின மிரட்டரிற் கவர்ந்த
கண்ணியற் களிற்றெடுங் கட்டிப் பண்ணுப்
பிடியொடு மாங்கவர் விடுதிறை கொண்டுமீண்டு
கொண்டாற் றுறவிற் குறித்தவெம் போரிற்
றண்ட நாயகர் தம்மிற் றிண்டிறல்
மல்லியண் ணனையு மஞ்சிப்ப னையும்
பில்குமதக் களிற்றுப் பிரமதே வனையுந்
தண்டா ரசோகையன் றன்னையு மொண்டிறற்
சத்தியண் ணனையுஞ் சந்திவிக் கிரகப்
பத்தி யண்ணன் றன்னையு மத்தகு
தேமரு தெரியல் வீமயண் றன்னையு
மாமதி வங்கா ரனையும் நாமவேற்
கங்கனை நுளம்பனைக் காடவர் கோனை
மங்குமத யானை வைதும்ப ராயனை
யிருந்தலை யரிந்து பெரும்புனற் றளுதை
கல்கை மாகதர் புகுந்தபின்? நிற்களின்
வழிவரு சளுக்கி பழியொடு வாழ்வதிற்
சாவது சால நன்றென் றெறிவு

மூற்றிய சிந்தைய ஞெ முன்னம்
புதல்வருந் தானு முதுகிட் டெடுந்த
கூடலே களமெனக் குறித்தக் கூடலில்
வாரா தஞ்சினர் மன்ன ரல்லர்
போர்ப்பெ ரும்பழிப் புரட்ட ராகவென்
றியாவரு மறிய வெழுதிய பதிக
மேவரு மோலை விடையொடுங் கொடுத்தவ்
விரட்ட பாடிப் புரட்டர்க ளனைவருங்
கங்கா கேத்தனே யேவ வங்சவன்
வந்தடி வணங்கி வாசக முணர்த்தலும்
சிந்தையு முகமுந் திருப்புய மிரண்டு
மேன்தெழி லுகவையொ டிருமடங்கு பொலிய
போந்தப் போர்க்களம் புகுந்து காந்தையில்
வல்லவர் கோனை வரவு காணுது
சொல்லிய நாளின் மேலுமோர் திங்கள்
பார்த்தி ருந்த பின்னைப் பேர்த்தவன்
கால்கெட வோடி மேல்கட லொளித்தலுங்
தேவ நாதனுஞ் சித்தியுங் கேளியு
மூவருந் தனித்தனி முதுகிடப் பரவரு
மிரட்ட பாடி யேழரை யிலக்கமு
முரட்டொழி லடக்கி மூழங்கெரி யூட்டி
வெங்கதிப் புலியேறு வியந்துவீளை யாடத்
துங்கபத் திரைக்கரைச் செயபத் திரத்தூண்
நானிலம் பரச நாட்டி மேலுள்
வந்த புரட்டனை வல்லவ ஞக்கிச்
சுந்தர கண்டிகை கட்டிப்
புரசை யானைப் புழைக்கையிற் பிழைத்திவ்
வுலக மறிய வோடிய பரிசொரு
பலகையிற் பழுதற வெழுதிய பின்னை
சார்த்தின வுறையுஞ் சளுக்கி பதம்பெற்ற
பூத்தின? மார்வொடும் பூட்டிப் பேர்த்துக்
தான்கைக் கொண்ட வேங்கைகான் ஞெடி
மீட்டுக் கொண்டலான் மீன்றிலங் கேட்டுமீ
வல்ல ஞெல் வந்தாக் சென்று
சொல்லி யெடுத்தவத் தானை விசைய
வாடையொ டடுத்தபே ராற்றிற் றடுத்த

சனநா தனையுந் தண்டநா யகனும்
இனமார் கடக்களிற் றிராசமய் யனையு
முதப்பர சனையு முதலாக வுடைய
அப்பெருஞ் சேனைய டவியிற் பாய்ச்சிக்
கோதா விரியிற் றன்போ தகநீ
ருண்ணக் கலிங்க முங்கடந் தப்பாற்
சக்கரக் கோட்டத் தப்புறத் தளவு
மேவருந் தானைத் தாவடி செலுத்தி
வேங்கைநாடு மீட்டுக் கொண்டுதன் பூங்கழற்
கடைக்கலம் புகுந்த படைக்கலத் தடக்கை
விசையா தித்தற் கருளி விசைகொடு
மீண்டுவிட் டருளி யிகலிடை பூண்டசயத்
திருவொடுங் கங்கா புரிபுகுந் தருளி
அங்கே ராசாதி ராச ராச
னெனத்தராதிபரா.....
படியில் மன்னவ ரடிதொழு தேத்த
வின்மணிப் பீடத் திருந்து வேங்கைநன்
னாட்டினிற்கொண்ட
இருகிதிப் பிறக்கம் வரிசையிற் காட்டி
ஆழியு நிகளமு மகற்றி யாங்கவர்
வாழிய விரத மாற்றிப் [1]பூழிமஞ்
செய்துவரம் பாகச் செங்கோல் செலுத்தி
மேதினி வினக்கி மீதுயர் வீரத்
தனிக்கொடி தியாகக் கொடியொடு
மேற்பவர் வருகென்று நிற்பப் போர்த்தொழில்
உரிமையி லெய்தி யரசுவீற் றிருந்து
மேவரு மனுநெறி விளக்கிய கோவிராச கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீவீரராசேந்திர தேவர்க்கு யாண்டு:—

அதிராசேந்திரதேவன்.

787. நிக்களோர் மலர்ந்து வெண்குடை மண்டில
மன்னுயிர் தோறு மின்னருள் சுரந்து
நிறைநிழல் பரப்பி நிற்ப முறையிற்
செங்கோல் நிலைதொறுஞ் செல்லத் தங்கள்
குலமுதற் பரிதியின் வலிசேர் புவனிக்கும்

[1]பூழிமஞ், (787) சாஸனம்.

ஒற்றை யாழி யுலாவ ரற்றவத்
திருமலர்ச் செல்வியு மிருநிலப் பாவையும்
கீர்த்தியங் கின்னோயும் போர்த்தனிப் பூவையும்
வதுவையிற் புணர்ந்து பொதுமை துறந்து
உரிமைத் தேவிய ராக மரபினிற்
சுடர்மணி மகுடஞ் சூடி நெடுநில
மன்னவர் முறைமுறை தன்னடி வணங்க
வீரமுந் தியாகமு மாரமெனப் பூனைந்து
வீரசிம் மாசனத்து உலகமுழுதுடையாரொடும் வீற்றிருந்தருளிய
மாப்புகழ் மனுவுடன் வளர்த்த கோப்பரகேசரி வன்மரான
உடையார் ஸ்ரீ அதிராசேந்திர தேவர்க்கு யாண்டு:—

(கூடற்சங்கமத்துப்போர்.)

788. மின்னுர் வடிவேற்கை வீரா சேந்திரன்றன்
பொன்னுர் பதயுகளம் போற்றுது—கன்னுடர்
புன்கூ டலசங்க மத்திலெடும் போருடைந்தார்
மன்கூ டலசங்க மத்து.

789. விண்கூ டலசங்க மத்துடைந்த வேல்வடுகர்
எண்கூ டலறு மிருங்கானிற்—கண்கூடப்
பண்ணினுன் றன்னுடைய பாதம் பணியாமைக்
கெண்ணினுர் சேரு மிடம்.

790. வீரத்தால் விண்ணுதல் மெய்த்தவத்தால் வீடாதல்
ஆரத்தா லான்வதெவர் தாடேற்ற (?)—சீரொத்த
மின்னுர் படைத்தடக்கை வீரரா சேந்திரனுக்
கொன்னுராய் வாழ்வ துறின்.

(கோப்பத்துப்போர்.)

791. தற்றுற் றண்றுவெம் போர்செய்த
விற்கைப் பண்மண்முன் போடவெர்
தத்திற் றுன்றுவன் பாய்பரி
யுய்த்துத் தன்மெய்கொண் டோடிய
வெற்றிச் செம்பியன் பார்புகழ்
கொற்கைக் கண்டன்வன் பாரதம்
வெற்புக் கொண்டதிண் போர்புரி
கொப்பத் தன்றெதிர்ந் தோர்பெறு

(788–790) வீரசோ. அலங். 39 மேற். (791) ஷே. யாப். 34. மேற்.

கொற்றத் தொங்கல்சிங் காதன
மொற்றைச் சங்குவெண் சாமரை
குத்துப் பத்தர்முன் பாவிய
முத்துப் பந்திமுன் முன்மகிழ்
ஒற்றைப் பெண்டிர்பண் டாரமொ
டற்றைத் தன்பெருஞ் சேனையும்
இட்டிட் டன்றுடைந் தான்வசை
பட்டுக் கண்டவங் காரனே.

(இராசேந்திர சிங்கன்.)

792. எனவே தனமென் றிராசேந்த்ர சிங்கனெ டின்றணைந்த
கனவே யுடையன் களிப்புக்கண் டாற்கட லேழுமமைந்
தனவே யெனவவன் முனுதித் தன்றே தொடங்கியென்று
நனவே புணர்திரு வின்களிக் கேதுகொ னல்லனவே.

(இராசகண்டீரவன்.)

793. குடைநின் றதுசெம்மை கோலொடு சென்றது கோமனுவி
னடைநின் றதுகலி ஞாலங் கடந்தது நன்மையன்றி
யிடைநின்ற தொன்றுண் டியாதெனி னிராசகண் டீரவநின்
முடைநின்ற தார்புனை வார்மட வார்படுந் தன்புறவே.

(அநுபமன்).

794. மிகைசேர்ந்த நாகமும் வெண்மதியுந் தம்மிற்
பகைதீர்ந்த [1]மால்சடையோன் காப்ப—முகைமலரக்
கோழி யநுபமன் கோரம் புலிவாழி
வாழிய மண்டலத்து வான்.

795. மண்ணுங் காத்தற்கு நீயுறங்காய் வானவர்கோன்
விண்ணுங் காத்தற்கு மேலுறங்கான்—நண்ணுதா
ரானவரைக் கொன்று யநுபமா நீயவனுந்
தானவரைக் கொன்றுன் றடிந்து.

796. மேரு நெடுவரை மீது பொருபுலி
சேர வெழுதிய சோழன்
ஆர மலராணி யாளி யனுபமன்
வீர னடுகணை யானே.

---

(792) வீரசோ. யாப். 22. மேற். (793) ஷே. அலங். 22. மேற். (794) ஷே. அலங். 13, 32 மேற். [1]பாய்சடையோன். (795) ஷே. 15 மேற். (796) ஷே. யாப். 16 மேற்.

(மானதன்).

797. இணங்கு மாத ரேசவே யிரங்கி மோத வேலைமா
ணணங்கு லாவு வாளியா ணணிந்த சாப மாயமால்
உணங்கி மேனி வாடுமோ லுறங்தை யாளு மானதா
வணங்கி ஞவி காவனீ யணிந்த வார மாகுலம்.

முதற்குலோத்துங்கன்.

(முதல் மெய்க்கீர்த்தி)

798. திருமன்னி விளங்கு மிருகுவ டனையதன்
தோளும் வாளுந் துணையெனக் கேளலர்
வஞ்சனை கடந்து வயிரா கரத்துக்
குஞ்சரக் குழாம்பல வாரி யெஞ்சலில்
சக்கரக் கோட்டத்துத் தாரா வாசனைத்
திக்கு நிகழத் திறைகொண் டருளி
அருக்க னுதயத் தாசையி லிருக்குங்
கமல மனைய நிலமக டன்னை
மூங்நீர்க் குளித்த வங்கா ளாதிக்
கேழ லாகி யெடுத்த திருமால்
யாதுஞ் சலியா வகையினி தெடுத்துத்
தன்குடை நிழற்கீ ழின்புற விருத்தித
நிகிரியும் புலியுங் திசைதொறும் நடாத்திப்
புகழுந் தருமமும் புவிதொறு நிறுத்தி
வீரமுந் தியாகமும் மானமுங் கருணையும்
உரிமைச் சுற்ற மாகப் பிரியாத்
தலநிகழ் சயமுந் தானும்வீற் றிருந்து
குலமணி மகுட மூறைமையிற் சூடித்
தன்கழல் தாங்கிபர் சூடச் செங்கோல்
நாவலம் புவிதொறும் நடாத்திய சகாவிராசகேசரிவன்மரான
உடையார் ஸ்ரீராசேந்திர சோழதேவர்க்கு யாண்டு :—

(இரண்டாவது மெய்க்கீர்த்தி.)

799. புகழ்சூழ்ந்த புணரி யகழ்சூழ்ந்த புவியிற்
பொன்னேமி யளவுந் தன்னேமி நடப்ப
விளங்குசய மகளோ யினங்கோப் பருவத்துச்
சக்கரக் கோட்டத்து விக்ரமத் தொழிலாற

(797) வீரசோ. யாப். 33. மேற். (798) சாஸனம். (799) S.I.I. iv. 135–136.

புதுமணம் புணர்ந்து மதுரை யீட்டம்
வயிரா கரத்து வாரி யயிர்மூனைக்
கொந்தள வரசர் தந்தன மிரிய
வாளுறை கழித்துத் தோள்வலி காட்டிப்
போர்ப்பரி நடாத்திக் கீர்த்தியை நிறுத்தி
வடதிசை வாகை சூடித் தென்றிசை
தேமரு கமலப் பூமகள் பொதுமையும்
பொன்னி யாடை கன்னிலப் பாவையின்
தனிமையுந் தவிரப் புனிதத் திருமணி
மகுட முரிமையிற் சூடித்
தண்டி யிரண்டுந் தடமுடி யாகத்
தொன்னில வேந்தர் சூட முன்னே
மனுவாறு பெருகக் கலியாறு வறப்பச்
செங்கோல் திசைதொறுஞ் செல்ல வெண்குடை
இருநில வளாக மெங்கணுந் தழுதி
திருநிழல் வெண்ணிலாத் திகழ வொருதனி
மேருவிற் புலிவிளை யாட வார்கடற்
றீபாந் தரத்துப் பூபாலர் திறைவிடு
கலஞ்சொரி களிறுமுறை நிற்ப விலங்கிய
தென்னவன் கருந்தலை பருந்தலைத் திடத்தன்
பொன்னகர்ப் புறத்திடைக் கிடப்ப விங்நாட்
பிற்குலப் பிறைபோல் நிற்பிழை யெண்ணுஞ்
சொல்லெதிர் கோடிற் றல்லது தன்கை
வில்லது கோடா வேள்குலத் தரசர்
அளத்தியி லிட்ட களிற்றின நீட்டமும்
பட்டவெம் பரியும் விட்டதன் மானமும்
கூறின வீரமும் கிடப்ப வேறின
மலைகளு முதுகு நெரிப்ப விழிந்த
நதிகளுஞ் சுழன்றுடைந் தோட விழுந்த
கடல்களுங் தலைவிரித் தலமரக் குடதிசைத்
தங்நா ளுகந்து தானும் தானையும்
பன்னி ளிட்ட பலபல முதுகும்
பயத்தெதிர் மாறிய சயப்பெருந் திருவும்
பழியிகந்து கொடுத்த புகழின் செல்வியும்
வாளா னொண்கண் மடந்தைய ரீட்டமும்
மீளாது கொடுத்த வெய்கரி நிரையும்

கங்கமண் டலமும் சிங்கண மென்னும்
பாணி யிரண்டு மொருவிசைக் கைக்கொண்
டீண்டிய புகழொடு பாண்டிமண் டலங்
கொள்ளத் திருவுளத் தடைத்து வெள்ளம்
வருபரித் தரங்கமும் பொருபரிக் கலங்களும்
தந்திர வாரியு முடைத்தாய் வந்து
வடகடல் தென்கடல் படர்வது போலத்
தன்பெருஞ் சேனையை யேவிப் பஞ்சவர்
ஐவரும் பொருத போர்க்களத் தஞ்சி
வெரிநளித் தோடி யரணெனப் புக்க
காடறத் துடைத்து நாடடிப் படுத்து
மற்றவர் தம்மை வனசார் திரியும்
பொற்றை வெஞ்சர மேற்றிக் கொற்ற
விசயத் தம்பந் திசைதொறு நிறுத்தி
முத்தின் சலாபமு முத்தமிழ்ப் பொதியிலு
மத்தவெங் களிபடு மய்யச் சையமும்
கன்னியுங் கைக்கொண் டருளித் தென்னுட்
டெல்லை காட்டிக் கடன்மலை நாட்டின
சாவே றெல்லாந் தனிவிசும் பேற
மாவே றியதன் வரூதினித் தலைவரைக்
குறுகலர் குலையக் கோட்டா றுட்பட
நெறிதொறு நிலைகளிட் டருளித் திறல்கொள்
வீரஞ் மாசனந் திரியவிட் டருளி
வடதிசை, வேங்கை மண்டலங் கடந்து தாங்கலர்
களிங்க மேழுங் கனலெரி பரப்ப
விலங்கல் போல விலங்கிய வேந்தர்
விட்டவெங் களிற்றொடு பட்டுமுன் புரளப்
பொருகோ பத்தொடு போர்முக மதிர
வருகோ மட்டையன் மாதவ னெதிர்பட
எங்க ராய னிகலவ ரேச்சணன்
மாப்பிறவா(?) மதகரி யிராசணன்
தண்டபதி யாகிய தலைச்சே னைபதி
மண்டலிக தாமய னெண்பர்த்(?) திசைமுகன்
போத்தயன் கேத்சணன் செருச்சே னைபதி
என்றிவ ரனைவரும்
வென்றவே ழித்தொடு பட்டு மற்றவர்

கருந்தலை யொடுவெண் ணிணங்கழு கோடு
பருந்தலைத் தெங்கணும் பரப்ப வுயர்த்துத
தருங்கட லடையத் தாதலந் திறந்து
கலிங்க மேழுங் கைக்கொண் டலங்கல்
ஆரமுந் திருப்புயத் தலங்கலும் போல
வீரமுந் தியாகமும் விளங்கப் பார்தொழச்
சிவனிடத் தமையெனத் தியாக வல்லி
உலக முடையா ளிருப்ப வவளுடன்
கங்கைவீற் றிருந்தென மங்கையர் திலதம்
ஏழிசை வல்லபி யேழுலகு முடையாள்
வாழி மலர்ந்தினி திருப்ப வூழியுந்
திருமா லாகத்துப் பிரியா தென்றும்
திருமக ளிருந்தென வீரசிம் மாசனத்து
வீற்றிருந் தருளின கோவிராசகேசரி வன்மான
திரிபுவன சக்காவர்த்திகள்
ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு—

(முன்று மெய்க்கீர்த்தி.)

800. புகழ்மாது விளங்கச் செயமாது விரும்ப
நிலமக ணிலவ மலர்மகள் புணர
உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி
மீனவர் நிலைகெட வில்லவர் குலைதர
ஏனை மன்னவ ரிரியலுற் றிழிதர
விக்கலன் சிங்கணன் மேல்கடற் பாயத்
திக்கனைத் துந்தன் சக்கர நடாத்தி
விசயாபி டேகம்பண்ணி வீரசிம் மாசனத்துப்
புவனமுழு துடையாளொடும் வீற்றிருந்தருளிய
கோவிராசகேசரி வன்மான சக்கரவர்த்திகள்
ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவர்க்கு யாண்டு.—

(நான்காமெய்க்கீர்த்தி.)

801. பூமன்னு பாலை காமுற்று முயங்க
இருநிலச் சிலத்தினைத் திருமணம் புணர்ந்து
கலியின் செல்வி நலிமை யோங்கப்
போர்மகள் காப்பச் சீர்மகள் போற்ற

---

(801) சாஸனம்; இஃது இரண்டாங்குலோத்துங்கனுக்குரியதாகவும் சொல்லத்தகுரியது.

மாகதப் புரவி யிரவிகுலம் விளங்கப்
பாற்கடற் றெய்வப் பள்ளி நீங்கி
நாற்கடல் வட்ட நாடொறுந் தாங்கி
எண்டிசை யாணை தண்டுவிடை நிற்பக்
காவற் றேவர்க ளேவல் கேட்பக்
கலிப்பகை யோட்டிப் புலிக்கொடி யெடுத்துத்
தென்னவர் கோளர் சிங்களர் தெலுங்கர்
கன்னட ரிலாடர் கலிங்கர் முதலாகக்
கொற்றவர் வந்து குடிமை செய்ய
ஒற்றை வெண்குடை புலருதனி கவிப்ப
ஊழிபல கோடி யாழி நடாத்திச்
செம்பொன் வீர சிம்மா சனத்துத்
திரிபுவன முடையாளாகிய மீற்றிருந் தருளிய
கோவிராசகேசரி வன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள்
ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு—

குந்தவை கீழ்லைக்கோயில் பொன்வேய்ந்தது.

802. நானிலத்தை முழுதாண்ட சயதரற்கு
நாற்பத்து நாலா மாண்டில்
மீனநிகழ் நாயிற்று வெள்ளிபெற்ற
வுரோகிணிநா ளிடப் போதாற்
றேனிலவு பொழிற்றில்லை நாயகர்தங்
கோயிலெலாஞ் செம்பொன் வேய்ந்தாள்
வனவருந் தொழுதேத்து மிராசராசன்
குந்தவைபூ விந்தை யாளே.

(கலிங்கத்துப்போர்.)

803. ஒருவ ரொருவர்மேல் வீழ்ந்து வடநாடர்
அருவ ரருவரென வஞ்சி—வெருவந்து
தித்தித்தி யென்றயர்வர் செண்ணி படைவீரர்
போர்க்கலிங்க மீதெழுந்த போது.

804. கோட்டங் திருப்புருவங் கொள்ளா வவர்செங்கோல்
கோட்டம் புரிந்த கொடைச்சென்னி—நாட்டஞ்
சிவந்தன வில்லை திருந்தார் கலிங்கஞ்
சிவந்தன செந்தீத் தெறம.

(802) சோழவமிச. பக். 27. (803) தண்டி. 106, மேற். (804) வீர சோ. அலங். 31; தண்டி. 79, மேற்.

805. காடத்தான் மாரியுங் கண்ணுல் வெயிலும்
நிரைவயிரக் கோட்டா னிலவுஞ்—சொரியுமால்
நீளார்த் தொடையதல னேரார் கலிங்கத்து
வாளாற் கவர்ந்த வளம்.

806. தடங்குலவு நாண்மாலைத் தாமத்தன் கையில்
விடங்குலவு வெள்வாள் விதிர்ப்ப—நடுங்கியதே
கோண்மேவு பாம்பின் கொடுமுடிய தல்லவோ
வாண்மே வியகலிங்கர் மண்.

807. வாட்டாறு கொங்கம் வடகலிங்கந் தென்மதுரை
கோட்டாறுங் கொண்ட குலதீபன்—ஏட்டில்
எழுத்திருபத் தெட்டிட்டா னென்றரசர் கேட்டுக்
கழுத்திருபத் தெட்டிட்டார் காண்.

(கருநடருடன்போர்.)

808. உடைதலையு மூளையு மூன்றடியு மென்பும்
சுடருங் கொழுங்குருதி யீர்ப்ப—மிடைபேய்
பெருநடஞ்சேர் பெற்றித்தே கொற்றப்போர்க் கிள்ளி
கருநடரைச் சிறுங் களம்.

809. மலையி னலைகடலில் வாளரவின் வெய்ய
தலையிற் பயின்ற தவத்தாற்—றலைமைசேர்
அம்மாதர் புல்லு மபயன் புயம்புணர
எம்மா தவம்புரிந்தோம் யாம்.

(அபயன் பகைவர்நிலை.)

810. மழையார் கொடைத்தடக்கை வாளபய னெங்கோன்
விழையார் விழையார்மெல் லாடை—குழையார்
தழையா முணவுங் கனியா மினமு
முழையா முழையா முறை.

(விக்கிரமசோழதேவன்.)

811. பூமாலை மிடைந்து பொன்மாலை தகழப்
பாமாலை மலிந்த பருமணித் திரள்புயத்
திருநில மடந்தையொடு சயமக ளிருப்பக்
கனவரை மார்வந் தனதெனப் பெற்றுத்
திருமக ளொருதனி யிருப்பக் கலிமகள்

---

(805) தண்டி. 59. மேற். (806) கலிங்கத்துப்பரணியிறுதி (கையெழுத்துப்பிரதி). (807) தஞ்சைச் சரச்சுவதிமால்—பிர தி. (808) தண்டி. 70. மேற். (809) ஷெ. 59. (810) ஷெ. 93. மேற். (811) சாஸனம், [illegible]

சொற்றிறம் புணர்ந்த கற்பின ளாகி
விருப்பொடு நாவகத் திருப்பத் திசைதொறுங்
திகிரியொடு செங்கோல் நடப்ப வகில
புவனமுங் கவிப்பதோர் புதுமதி போல
வெண்குடை மீமிசை நிழற்றக் கருங்கலி
யொளித்துவன் பிலத்திடைக் கிடப்பக் குளத்திடைத்
தெலுங்க வீமன் விலங்கன்மிசை யேறவுங்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்
ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கியும்
வேங்கை மண்டலத் தாங்கினி திருந்து
வடதிசை யடிப்படுத் தருளித் தென்றிசைத்
தருமமுந் தவமுந் தானமுந் தழைப்ப
வேதமும் மெய்ம்மையு மாதியுகம போலத்
தலைத்தலை சிறப்பவந் தருளி வெலற்கரும்
போர்ப்புலி யாணை பார்த்திவர் சூட
நிறைமணி மகுட முறைமையிற் சூடி
மன்னுயிர்க் கெல்லா மின்னுயிர்த் தாய்போற்
றண்ணளி[1] பாப்பித் தனித்தனி பார்த்து
மண்முழுதுங் களிபப மனுநெறி வளர்த்துத்தன்
கோயிற் கொற்ற வாயிற் புறத்து
மணிநா வொடுங்க மூசுகண் முழங்க
விசயமும் புகழும் மேன்மே லோங்க
வாழி வாழியிம் மாநிலங் காக்கத்
திருமணிப் பொற்றேட் டெழுதுபத் தாண்டு
வருமுறை முன்னே மன்னவர் சுமந்து
நிறைநிறைத்துச் சொரிந்த செம்பொற் குவையாற்
றன்குல நாயகன் தாண்டவம் பயிலுஞ்
செம்பொனம் பலஞ்சூழ் திருமா ளிகையும்
கோபுர வாசல் கூடசா லகளும்
உலகு வலங்கொண் டொளிவிளக்கு நேமிக்
குலவரை யுதய குன்றமொடு நின்றெனப்
பசும்பொன் வேய்ந்த பலிவளர் பீடமும்
விசும்பொளி தழைப்ப விளங்குபொன் வேய்ந்து
இருநிலந் தழைப்ப விமையவர் களிப்பப்
பெரிய திருநாட் பெரும்பெயர் விழாவெனும்

[1] தன்னெளி.

உயர்பூரட் டாதி யுத்திரட் டாதியில்
அம்பல நிறைந்த வற்புதக் கூத்தர்
இம்பர் வாழ வெழுந்தருளு வதற்குத்
திருத்தேர்க கோயில் செம்பொன் வேய்ந்து
பரூஉத்திரண் முத்தின் பயில்வடம பாப்பி
நிறைமணி மாளிகை நெடுந்திரு வீதிதன
திருவளர் பெயராற் செய்துசமைத் தருளிப்
பைம்பொற் குழித்த பரிகல முதலாச்
செம்பொற் கற்பகத் தொடுபெரிச் சிந்நமும்
அளவில் லாதன வொளிபெற வமைத்துப்
பத்தா மாண்டிற் சித்திரைத் திங்கள்
அத்தம் பெற்ற வாதிவா ரத்துத்
திருவளர் மதியின் திரயோதசிப் பக்கத்து
இன்ன பலவு மினிதுசமைத் தருளி
ஒருகுடை நிழற்கீழ்த் தலமுழுதுங் களிப்பச்
செழிபர்வெஞ் சுரம்புகச் சேரலர் கடல்புக
அழிதரு சிங்கள ரஞ்சிநெஞ் சலமாக
கங்கர் திறையிடக் கன்னடர் வெந்திடக்
கொங்க ரொதுங்கக் கொங்கணர் சாயமற்
றெத்திசை மன்னருந் தத்தமக் கரணெனத்
திருமலர்ச் சேவடி யுரிமையி னிறைஞ்ச
அங்கவன் மகிழுங் கங்கையொப் பாகிய
தெரிவையர் நிலதந் தியாக பதாகை
புரிகுழன் மடப்பிடி புனிதகுண வனிதை
திரிபுவன முழுதுடையா ளெனவுட னிருப்ப
ஊழி யங்நெடு மாலா கத்துப
பிரியா தென்றுந் திருமக ளிருந்தென
மாதர் மடமயில் பூதலத் தருந்ததி
அரணியல் கற்பிற் றரணிமுழு துடையா
ளிவன்திரு மார்வத் தருளொடு மிருப்பச்
செம்பொன் வீர சிம்மா சனத்துத்
திரிபு வனமுழு துடையா ளோடும்
வீற்றிருந்தருளிய கோப்பர கேசரி வர்மரான
திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீவிக்கிரம சோழ தேவர்க்குயாண்டு:–

இரண்டாவது மெய்க்கீர்த்தி.

812. பூமாது புணரப் புவிமாது வளர
நாமாது விளங்கச் சயமாது விரும்பத்
தன்னிரு பதமலர் மன்னவர் சூட
மன்னிய வரிமையான் மணிமுடி சூடிச்
செங்கோல் சென்று திசைதொறும் வளர்ப்ப
வெங்கலி நீங்கி மெய்யறம் தழைப்பக்
கலிங்க மிரியக் கடமலை நடாத்தி
வலங்கொ ளாழி வரையாழி திரிய
இருசுட ரளவு மொருகுடை நிழற்ற
விசயாபிடேகம்பண்ணி வீரசிம்மாசனத்து
முக்கோக்கிழானடிகளோடும் வீற்றிருந்தருளிய
கோப்பரகேசரிவன்மரான திரிபுவனசக்கரவர்த்திகள்
ஸ்ரீவிக்கிரமசோழத்தேவர்க்குயாண்டு:—

"சரச்சுவதி தம்பலங்கொடுக்கக் கவிதையுண்டாகிய கூத்தழகலியார் அரும்பலகைதொளாயிரம் பாடும்போது, விக்கிரமசோழன் கேட்டு 'ஒருகவியை ஓட்டச்சொல்' என்று சொன்னபோது பாடியது."

813. நடித்தது நச்சர வுசசியி லுச்சி மதிலிலங்கை
யுடித்தது வென்ற திருபது தோள்பதி னெண்பகலே
முடித்தது பாரதம் வீரப புலிவைபப மூரிச்செண்டால்
அடித்தது பொறகிரி விக்ரம சோழ வகளங்களே.

கூத்தர் விக்கிரமசோழனுலாப்பாடியபோது 'இரண்டு கண்ணியை ஒருபாட்டாகப் பாடு' வென்றபோது பாடியது.

814. கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்
செய்ய கரிய திருமாலே—வையம்
அளந்தா யகளங்கா வாலிலேமேற் பள்ளி
வளர்ந்தாய் தளாந்தாளென் மான்.

815. விச்சா தரனேனு மந்தரத்து மேவாலுல்
அச்சுத னேனுமம மாயனலன்—நிச்ச
நிறைவான் கலேயா னகளங்க னீதி
இறையா னனகனெங் கோ.

---

(813) தமிழ் நா. 117. 1 ருச்சி (தஞ்சைச் சரச்சுவதிமால்—பிரதி). (814) வெ. 120. (815) தண்டி. 77 மேற்; வீரசோ. அலங. 30 மேற்.

816. தண்டாமரை தருங்ண்மலர் மீதோதிம மீனத்
தாளத்திரள் பவளத்திர ளென்றேழையர் தங்கைக்
கொண்டாடிட முன்னேக்கிது பின்னேத்தரு செம்மைக்
குணநான்மடி யுளதாகிய குடகாவிரி நாடா
பண்டாலிலே யமளித்துயில் குழவிப்பரு வத்தே
பவ்வத்தொடு முலகைச்சிறு பவளத்துவர் வாயால்
உண்டா யகளங்காநிக ளங்காய்கரி தொழுதாள்
உய்யத்திரு வுளமோவெது செய்யத்திரு வுளமோ.

817. செய்யோனக ளங்கன்வள வன்சோழ குலேசன்
சென்னிக்குல தீபன்னுயர் பொன்னித்திரு நாடன்
பொய்யோடொரு நாளும்முறை செய்யாமனு துங்கன்
போர்வல்லவன் மல்லேப்பொழில் பொங்குங்குரு கீரே
ஐயோவவ ரைப்போலொரு நிட்ரேரு மூண்டோ
அஞ்சம்படு கைக்கேதுயர் நெஞ்சம்படு கைக்கே
வெய்யோன்விழு கைக்கேமுழு மதிவந்தெழு கைக்கே
விழிநீர்சொரி கைக்கேயென விட்டுபபிரிந் தாரே.

818. வடவைக்கணலைப் பிழிந்துகொண்டு மற்றுமொருகால் வடித்தெடுத்து
வாடைத்திருதகி வைத்தூதி மறுகக்காய்ச்சிக் குழம்புசெய்து
புடவிக்கயவர் தமைப்பாடிப் பரிசுபெறுமற் றிரும்பிவரும் [ளோ
புலவர்மனம்போற் சுடுநெருப்பைப் புழுகென்றிறைத்தாற் பொறுப்பா
அடவிக்கதலிப் பசுங்குருத்தை நச்சுக்குழலென் றஞ்சியஞ்சி
அஞ்சொற் கிளிகள் பஞ்சரம்விட் டகலாகிற்கு மகளங்கா
திடமுக்கடவா ரணமுகைத்த தேவே சோழசிங்கமே
திக்குவிசயஞ் செலுத்தியொரு செங்கோ னடாத்து மெங்கோவே.

இரண்டாவது குலோத்துங்கன்.

819. பூமன்னு பதுமம் பூத்தவே ழுலகும்
தாமுன்செய் தவத்தாற் பரிதிவழித் தோன்றி
நெடுமா லிவனெனச் சுடர்முடி சூடி
இருநில மகளே யுரிமையிற் புணர்ந்து
திருமகள் பிணைமுலைச் செஞ்சாந் தணைந்து
பருமணி மார்வம் பனிவரை நிகர்ப்பச்
சயமகள் செழுந்தண் சந்தனச் சுவட்டாற்
புயமிரு கயிலைப் பொருப்பெனத் தோன்ற

(816–817) தஞ்சைச் சரச்சுவதிமால்-பிரதி. (818) தனிப்பா.

ாமகள் தானுமெங் கோமகன் செவ்வாய்ப்
பவளச் சேயொளி படைத்தன னியானெனத்
தவள நன்னிறந் தனித்துடை யோரெனப்
புகழ்மகள் சிந்தை மகிழு நாளிலும்
ஒருகுடை நிலவும் பொருபடைத் திகிரி
வெயிலுங் கருங்கலி யிருளினைத் துரப்ப
நீடுபல் லூழி யேழ்கடற் புறத்தினுங்
கோடாச் செந்தனிக் கோலினி தலாவ
மீனமுஞ் சிலையுஞ் சிதைத்து வானுயர்
பொன்னெடு மேருவிற் புலிவீற் றிருப்ப
உம்ப ரியானே யோரெட் டினுக்குந்
தம்ப மென்னத் தனித்தனி திசைதொறும்
விசயத் தம்ப நிற்பப் பசிபகை
யானது தீங்கு நீங்க
மன்னுயிர் தழைப்ப மனுவாறு விளங்க
மாதவர் தவமு மங்கையர் கற்பும்
ஆதி யந்தண ராகுதிக் கனலு
மீதெழு கொண்டல் வீசுதண் புனலு
மேதினி வளருஞ் சாதி யொழுக்கமும்
நீதி யறமும் பிறழாது நிகழப்
பாவும் பழனப் பரப்பும் பிணைக்கை
மாவு மல்லது வன்றலைப் படுதல்
கனவிலுங் காண்டற் கரிதென வருநிப்
புடையினும் பல்வேறு புள்ளினு மல்லது
சிறையெனப் படுத லின்றி நிறைபெருஞ்
செல்வமோ டவனி வாழப் பல்லவர்
தெலுங்கர் மாளுவர் கலிங்கர் கோசலர்
கன்னடர் கடாரர் தென்னர் சேரலர்
சிங்கணர் கொங்கணர் சேதியர் திரிகர்த்தர்
வங்க ரங்கர் வத்தவர் மத்திரர்
கங்கர் சோனகர் கைகயர் சினரென்
றறைகழல் வேந்தரு மெல்லா வரைசரும்
மூறைமையில் வருந்தித் திறைகொணர்ந் திறைஞ்ச
அம்பொன் மலர்க்கொடி செம்பியன் சிழாணடி
ஒருமருங் குடனமர்ந் திருப்பவருள்புரி
சிமயப் பொற்கொடி யிமயப் பாவையுஞ்

சிவனும் போலப் புவனமுழு துடையா
ளிவன்திரு மணிமார்வத்
துலகமுழு துடையா ளெனவுட னிருப்பச்
செம்பொன் வீர சிம்மா சனத்துப்
புவனமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய
இராசகேசரி வன்மரான திரிபுவன சக்காவர்த்திகள்
குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு:—

குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ்ப்பாட்டு.

820. பருவ வனங்குயில் பயில்வன பைந்தளிர்
கொந்தோ டுங்கோதப்
பருகு பெருங்களி யளிகுல பங்கிகள்
கந்தா ரம்பாடக்
கருவி வியன்கதிர் கனிய மணந்தவர்
சந்தா பந்தீரக்
கழிகுரு கின்கிலை கலக மிடும்படி
போங்கோ தம்போகப்
புருவ நெடுஞ்சிலை புரள வளைந்தொரு
வெஞ்சா பங்கோலிப்
புதுமல ரம்புகள் பொழிய மணந்தவர்
சந்தே ரன்றேரிக்
தெருவின் மதன்புரு வித்லை யடங்குர
செங்கோ செங்கீரை
தினகர செம்பிய செயதர பஞ்சவ
செங்கோ செங்கீரை.

"உலாப்பாடியபோது பொருசிரியர்—நேமிநாதர் பட்டோலைபிடிக்க (கூத்தர்) பாடியது".

821. செங்கான்மட வன்னம்படர் தீயாமென வெருவிச்
சிறையிற்பெடை மறையக்கொடு திரியத்திரள் கழுகின்
[1]பைங்கான்மர கதமீதி படர்ந்தேறி நறுந்தண்
பாளைக்கிடை பவளக்கொடி படர்காவிரி நாடா
தங்காதலி யருமைந்தரு மூடனை வணங்கித்
தலைகாவெம திடல்காவெம துயிர்காவக ளங்கா
கொங்காமன துங்காவென மதரேசர் வணங்குங்
கொல்யானை யபங்கா விவள்குழலோசை பொருளே.

(820) தஞ்சைச் சரச்சுவதிமால்-பிர. (821) தமிழ்நா. 129. [1]டைங்காய்மர.

'கண்டன் சென்றுவெளியிற் குதிரையேறியபோது கூத்தர் பாடியது.'

822. கண்டன் பவனிக் கவனப் [1]பரிநெடுங்கால்
மண்டுளக்கா தேயிருந்த வாறென்னே—கொண்டிருந்த
பாம்புரவி தாயல்ல பாருரவி தாயல்ல
வாம்புரவி தாய வகை.

'கண்டன் துலாபுருடதானம் பண்ணியபோது கூத்தர் பாடியது.'

823. தொழுகின்ற மன்னர் சொரிந்திட்ட செம்பொற் றுலாத்திடைவண்
டுழுகின்ற தார்க்கண்ட னேறிய ஞான்றி னுவாமதிபோய்
விழுகின்ற தொக்கு மொருதட்டுக் காலையில் வேலையில்வந்
தெழுகின்ற ஞாயிறுத் தான்குல தீப னெதிர்த்தட்டிலே.

ஷெ துலாபுருடதானத்திற் புகழேந்தி பாடியது.

824. பொருந்த வொருதட்டு மேருப் புகினும்
இருந்த திருத்தட் டெழாதால்—திருந்து
மறைபுக்க சொல்லபயா வன்புறவுக் காக
நிறைபுக்க தெல்வாறு நீ.

கூத்தர் குலோத்துங்கசோழனுலாப் பாடியபோது பாடிய வெண்பா.

825. இன்றும்யான் மீள்வ தறியே னிரணியனை
அன்றிரு கூறு வடர்த்தருளிக்—கன்றுடனே
ஆவின்பின் போன வனக னனபாயன்
மாவின்பின் போன மனம்.

கூத்தர்பாதி புகழேந்திபாதி பாடியது.

826. வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்று முதிருக் கிடான்கவசம்—தின்றும்
வெறியார் தொடைகமழு மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடுக்கி னென்று.

அனபாயன் (இரண்டாங்குலோத்துங்கன்.)

827. மூவாத் தமிழ்பயந்த முன்னூன் முனிவாழி
ஆவாழி வாழி யருமறையோர்—காவிரிநாட்
டண்ண லனபாயன் வாழி யவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை.

828. அன்னேபோ லெவ்வுயிரும் தாங்கு மனபாயா
நின்னேயா ரொப்பார் நிலவேந்தர்—அன்னதே

---

(822) தமிழ்நா. 122. [1]பரிநெருக்கால், மண்டுளக்கா. (823) தமிழ்நா. 124. (824) ஷெ 141. (825) குலோத்துங்கசோழனுலாவிறு. (826) தனிப்பா. (827) தண்டி. 88 மேற். (828) ஷெ 32 மேற்.

வாரி புடைசூழ்ந்த வையகத்துக் கில்லையாற்
சூரியனே போலுஞ் சுடர்.

829. னன்னேய் சிலமடவா ரெய்தற் கெளியவோ
பொன்னே யனபாயன் பொன்னெடுந்தோள்—முன்னே
தனவே யென்றாலுஞ் சயமடந்தை தோளாம்
புனவேய் மிடைந்த பொருப்பு.

830. தம்மாற் பயன்றாக்கா தியாவரையுந் தாங்கினும்
கைம்மாறுங் கால மூடைத்தன்றே—வம்மாலி
அன்னவனே யாழி யனபா யனைமலராள்
மன்னவனே மானுமோ வான்.

831. பூதலத்து ளெல்லாப் பொருளும் வறியராய்க்
காதலித்தார் தாமே கவர்தலால்—நீதி
அறித்துயர்ந்த கீர்த்தி யனபாயா யார்க்குங்
கொடித்தியெனக் கொன்கின் றிலம்.

832. தண்கவிகை யாலுலகந் தாங்கு மனபாயன்
வெண்கவிகைக் குள்ளடங்கா வேந்தில்லை—யெங்கும்
மதியத் திடனிரவி வந்தலவும் வானிற்
பொதியப் படாத பொருள்.

கூத்தர் இராசராசசோழனைப் பாடியது.

833. அன்று தொழுத வரிவை துளவணிவ
தென்று துயில்பெறுவ தெக்காலந் —தென்றிசையில்
நீரதிரா வண்ண நெடுஞ்சிலையை நாணெறிந்த
வீரதரா வீரோ தயா.

மூன்றுங் குலோத்துங்கன்.

834. புயல்வாய்த்து வளம்பெருகப் பொய்யாத நான்மறையின்
செயல்வாய்ப்பத் திருமகளுஞ் செயமகளுஞ் சிறந்துவாழ
வெண்மதிபோற் குடைவினங்க வேல்வேந்த ரடிவணங்க
மண்மடந்தை மனமகிழ மனுவினெறி தழைத்தோங்கச்
சக்கரமுஞ் செங்கோலுந் திக்கனைத்து நிலைநாட்டக்
கற்பகாலம் புவிகாப்பப் பொற்பமைந்த மூடிசூடி
விக்கிரம பாண்டியன் வேண்டிவிட்ட தாண்டால்

---

(829) தண்டி 3. (830) வெ. 50. (831-832) வெ. 46. (833) இராச ராசசோழனுலாவிறுதி. (834) சாஸனம்.

வீர பாண்டியன் மகன்பட வேழகம்
படமறப் படைபடச் சிங்களப் படைமுக்
கறுப்புண் டலைகடல் புகவீர பாண்டியனை
முதுகி டும்படி தாக்கி மதுரையும்
அரசுங் கொண்டு சயத்தம்ப நட்டு
அம்மதுரையு மரசுநாடு மடைந்தபாண்டியற் களித்தருளி
மெய்ம்மலர்ந்த வீரக்கொடியுடன் நியாகக் கொடியெடுத்துச்
செம்பொன் வீர சிங்கா தனத்துப்
புவனமுழு துடையாளோடும் வீற்றிருந் தருளிய
கோப்பரகேசரி வன்மரான திரிபுவனசக்கரவர்த்திகள்
ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு—.

இரவிசோழன்

835. இரவி துணைத்தா ளிகல்வேந்தர் செண்ணி
விரவு மலர்பொழியு மேவா—அரசிரிய
மின்பொழியுஞ் செவ்வேல் வெறியோ ரினங்கவரப்
பொன்பொழியுஞ் செங்கைப் புயல்.

836. சோதி யிரவி கரத்தா னிரவொழிக்கும்
மாதிடத்தான் மன்மதனே மாறழிக்கும்—மீதாம்
அனகமதி தோற்றிக் குமுத மலிக்குந்
தனத னிருநிதிக்கோன் ரூன்.

(சோழனைப்பற்றிய புகழாப்புகழ்ச்சி.)

837. போர்வேலின் வென்றதூஉம் பல்புகழாற் போர்த்ததூஉம்
தார்மேவு திண்புயத்தாற் ரூங்குவதூஉம்—நீர்நாடன்
தேரடிக்கூர் வெம்படையாற் காப்பதூஉஞ் செங்கண்மால்
ஓரடிக்கீழ் வைத்த வுலகு.

(சோழன் செல்வம்.)

838. கன்றும் வயவேந்தர் செல்வம் பலகவர்ந்தும்
என்றும் [1]வறியோ ரினங்கவர்ந்தும்—ஒன்றும்
அறிவரிதாய் நிற்கு [2]மளவினதா லம்ம
செறிகதிர்வேற் சென்னி திரு.

839. மலயத்தி மாகவனே போன்று மவன்பால்
அலைகடலே போன்று மத்துட்—குலவு

---

(835) தண்டி. 118. (836) வீரசோ.அலங்.30; தண்டி. 78. (837) தண்டி. 84. (838) வீரசோ அலங். 29; தண்டி. 74; [1]வயவ ரினங்கள். [2]மளவின தாற் சோரி. (839) தண்டி. 32.

நிலவலய மேபோன்று நேரியன்பா னிற்கும்
நிலைகெழுதோள் வேந்தர் நிரு.

(சோழன் கோடைச்சிறப்பு.)

840. செருமான வேற்சென்னி தென்னுறந்தை யார்தம்
பெருமான் முகம்பார்த்த பின்னர்—ஒருநாளும்
பூதலத்தோர் தம்மைப் பொருணசையாற் பாராவாங்
[1]காதலித்து வந்தடைந்தோர் கண்.

(சோழன் பகைநட்புக்களாலாவன)

841. தள்ளா விடத்தோர் தடந்தா மரையடைய
வள்ள வரிமா னிடர்மிகுப்ப—உள்வாழ்தேம்
சிந்தும் தகைமைத்தே யெங்கோன் நிருவுள்ளம்
நந்தும் தொழில்புரிந்தார் நாடி.

(சோழன் வீரச்சிறப்பு)

842. பொன்னி வளநாடன் கைவேல் பொழிநிலவால்
முன்ன ரணைந்து மூகுளிக்கும்—கன்னார்
பொரவந்த வேந்தர் புனைடகச் செங்கை
யரவிந்த னூரு யிரம்.

843. அடல்வணங்கு கழற்செவ்வே லலங்குதார்ச் செம்பியன்றன்
கெடலருங் கிளர்வேங்கை யெழுதித்தம் முயிரோம்பா
உடல்சமத் தருத்தெழுந்த வொண்ணுத பல்லரசர்
கடகஞ்சேர் நிரண்முன்கை கயிற்றூடும் வைகினவே.

(*முப்பேட்டுச்செய்யுள்)

844. ஈரிதழ் நிணர்நீல மிடைதெரியா தரிந்திடூஉம்
ஆய்கதி ரழற்செங்கெ லரியே யாதே
ஆய்கதி ரழற்செங்கெ லகன்செறுவி லரிந்திடூஉங்
காவிரி வளநாடன் கழலே யாதே
காவிரி வளநாடன் கழல்சேர்ந்த மன்னர்க்
காரர ணிற்ற லரிதே யாதே.

845. சுற்றுவிற் காமனுஞ் சோழர் பெருமானுங்
கொற்றப்போர்க் கிள்ளியுங் கேழொவ்வார்—பொற்றெழுடி

(840) தண்டி.21. [1]காதலித்துத் தாழ்ந்திரப்போர் கண். (841) வீரசோ. அலங். 30; தண்டி. 77. மேற். (842) வீரசோ. அலங். 26; தண்டி. 63. (843) யாப். வி. 15; வீரசோ. யாப். 12. *முப்பெட்டுச்செய்யுள். (844) யாப். வி. 93. (845) தொல். பொரு. 307 மேற்; தண்டி 50 மேற்.

யாழி யுடையான் மகன்மாயன் சேயனே
கோழி யுடையான் மகன்.

846. புனலுடர் கோமானும் பூந்தழாய் மாலும்
வினைவகையான் வேறு படுப—புனலுடன்
ஏற்றெறிந்து மாற்றலர்பா லெய்தியபார் மாயவன்
ஏற்றிரந்து [1]கொண்டமையா லின்று.

847. ஏறடர்த்து வின்முருக்கி யெவ்வுலகுங் கைக்கொண்டு
மாறடர்த்த வாழி வலவனைக்—காலெழுதற்
கெஞ்சினு ரில்லெனினு மாய னிகனெமொல்
வஞ்சியா னீர்நாட்டார் மன்.

848. அடிநோக்கி ஞெழ்கடல் வண்ணன்றன் மேனிப்
படிநோக்கிற் பைங்கொன்றைத் தாரோன்—முடிநோக்கித்
தேர்வாவ ஞத றெளிந்தேன்றன் சென்னிமேல்
ஆரலங்க லேறன்றிற் றுக்கண்டி.

(சூரியனுக்குஞ் சோழனுக்குஞ் சிலேடை.)

849. செங்கரங்க ளாலிரவு நீக்குந் திறம்புரிந்து
பங்கய மாதர் நலம்பயிலப்—பொங்குதயத்
தோராழி வெய்யோ னுயர்ந்த நெறியொழுகும்
நீராழி நீணிலத்து மேல்.

850. மன்ன ரொளிமுடிமேன் மாணிக்கங் கால்சாய்த்து
மின்னி விரிதத வெயிற்கதிர்கள்—தன்னி
அடிமலர்மேற் சென்றெறிப்ப வின்று னவிரொண்
கொடிமலர்வேய் நீண்முடியங் கோ.

851. இகலெயல்லாங் கொட்ட வெழிற்றினை யூர்ந்து
வகையிலா மன்னர்வந் தேத்த—இகையும்
அடிசில் பருகு மணியார்த்துப் போந்தான்
கொடிமதிற் கோழி யார் கோ.

(சோழனை வாழ்த்தியது.)

852. இமையா முக்க ணிலங்குசுடர் வாய்ந்த
உமை யொரு பாகத தொருவன் காப்பின்

(846) தொல். பொருள். 307 மேற்; தண்டி. 50 மேற். [1]கொண்டமையினுல். (847) வீரசோ. அலங். 23 மேற்; தண்டி. 50 மேற். (848) தொல். பொரு. 307 மேற். (849) வீரசோ. அலங். 30; தண்டி. 77 மேற். (850) வீரசோ. அலங். 17 மேற். (851) யாப். வி. 94. (852) தொல். பொரு 422 பேரா.

பல்லிளைச் சுற்றமொடு நல்லிருக் கைந்தி
நீடுபல் வாழிய வாய்வாட் செண்ணிநின்
ஒருகுடை வரைப்பி னீழற் பெற்றுக்
கிடந்த வெழுகட னுப்பண்
அகலிரு விசும்பின் மின்னினும் பலவே.

(சோழனை.)

853. [1]வான்பொய்யாது நீம்பெயல்பெய்து
மால்யாறுபோந்து காஸ்சுரந்துபாய்ந்து
சுரைபொய்யாது நிரைவளஞ்சான்று
வரையாதுவந்து பலாப்பழுத்துவீழ்ந்து
பாம்புகொள்ளாது வீங்குசுடர்நீண்டு
வித்தாறுவாய்த்து முத்துக்கரும்புபூத்து
வரம்புகொள்ளாது நிரம்புபெருங்கூட்டு
விசும்புநீங்குமஞ்சு [2]துயின்றுபெயர்ந்துபோந்து
வாழை யோங்கிய கோழிலைப் பரக்குந்
தண்டா யாணர்த் தென்ப வென்றும்
பலவது கூட்டுண்டு கடவது நோக்கிக்
குடிபுறந் தருஉம் வேந்த
னெடுநிலத் தண்குடை நிழற்று நாடே.

(சோழன்பகைவர்நா.)

851. தண்டண்டலைத் தாதுறைத்தலின்
[3]வண்டோட்டுவயல் வாய்புகைபுகரந்
தயலாலையி னறைக்கடிகையின்
வழிபோகுவர (?) மறித்துருபுகிளர்ந்
தோங்குசென்னிலை [4]வாங்குகதிர்தாழ்ந்
போதுதாங்குநிலை மீதுபுகுந்துபுகுந்
தொடுங்குசெய்தொழில் வழங்குதிரிக்குழாந்
திருந்துகோட்டுமிசைக் குரங்குவிருந்துகையாரும்
நன்னர் நன்னெ டென்னெ குவகொல்
பொன்னிருன் னூட்டுப் பொருந னெங்கோன்
நாடோய் [5]நடக்கை வல்லமன்
நாடுகெழு திருவிற் பீடுகெழு வேந்தே.

---

(853) தொல். செய். 29; பேரா; நச். [1]வான் பெய்யாது. [2]துயின்று பெயர்ந்துபோந்து. (854) தொல். செய். 20. பேரா. நச். [3]வண்டோடுவயல் வாய்புகைபர. [4]வாங்குகதிர்தரும். [5]நடக்கை மல்லவன்; தகையு மல்லவன்.

855. சிற்றமிகுபு செல்கினஞ்சிறந்து
கூற்றெறித்துவிரைபு கோள்குறித்துமுயன்று
புலிப்போத்துலவும் பொலங்கொடியெடுத்துப்
[1]புகலேற்றுமலைந்து பகையரசுதொலைத்து
வேம்புமீதணிபு போந்துபடத்தொகைத்து
வீற்றுவீற்றுப்புனைந்து வேற்றுச்சுரும்புகிளர்ந்து
களிறுகால்கிளர்ந்து குளிறுகுரல்படைத்துச்
சொரிந்துதூங்குகடாத்து [2]வீரைத்துமலர்த்தொலைத்து
மணங்கமழ்ரமொடு தயங்கச் சூடிய
வெண்வேற் செங்ணி பொன்னியற் புனைகழல்
பாடுபெறு பாணினும் பலவே
பாடா தோடிய நாடுகெழு வேந்தே.

(சோழனை மாயோனுகக் கூறியது)

856. குருந்த மொசித்தஞான் றுண்டா லதனைக்
கரந்த படியமக்குக் காட்டாய்—மரம்பெருப்
போரிற் குருகுறங்கும் பூம்புன னீர்நாட
மார்பிற் கிடந்த மறு.

857. நினைவரிய பல்புகழார் நின்குலத்துத் தொல்லோர்
அனைவரையும் புல்லினு னன்றே—மனுநூல்
புணர்ந்த நெறியொழுகும் பூழியனீ யிந்நாள்
மணந்த தடமலர்மேன் மாது.

858. வீரியத்தால் வெய்யோன் வெகுளியா லூழித்தீச்
காரியத்தாற் சாணக் கியன்.

பாண்டியன்.

(திருமாலும் பாண்டியனும்.)

859. கண்ண னவனிவன் மாறன் கமழ்தழாய்க்
கண்ணி யவற்கிவற்கு வேம்புதார்—வண்ணமும்
மாய னவனிவன் சேயன் மரபொன்றே
ஆய னவனிவன் கோ.

860. பல்லோரார் கூடிப் பகர்வதூஉம் பண்புணர்ந்த
சொல்லவையா ரெல்லாருஞ் சொல்வதூஉம்—மெல்லிணைப்

---

(855) தொல். செய். 20 பேரா; நச். [1]புகலேற்றுமலைந்து. [2]வீரவுப்பலவு தொலைத்து. (856) தொல். பொரு. 60. நச். (857) வீரசோ. அலங். 32; தண்டி. 84. (858) வீரசோ. அலங். 15 மேற். (859) தொல். பொரு. 307. (860) யாப். வி. 60.

பூந்தாம நீண்முடியான் பூழியர்கோன் முழ்தடக்கைத்
தேந்தாம வேலான் றிறம்.

861. காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப
போதுசேர் தார்மார்ப போர்ச்செழிய—நீதியான்
மண்ணமிர்த மங்கையர்தோண் மாற்றூரை யேற்றூர்க்கு
நண்ணிய வாய பொருள்.

862. கொங்கலர் கோதைக் குமரி மடநல்லாள்
மங்கலம் பாடி மலிவெய்தக்—கங்கையாள்
பூம்புன லாகங் கெழீஇயினனூன் போரடுதோள்
வேம்பார் தெரியலெம் வேந்து.

863. கடைக்குறிரை யேறி றுந்தார் வழுதி
அடைப்பையா கோறூ வெனலும்—அடைப்பையான்
கொள்ளச் சிறுகோல் கொடுத்தான் றலைபெறினும்
மெள்ளா தியாங்கண் டிலம்.

(*முப்பேட்டுச் செய்யுள்.)

864. நித்திலங் கழலாக நிரைதொடி மடநல்லார்
எக்கர்வா னிடுமண லிணரே யாதே
எக்கர்வா னிடுமண லிணர்புணர்ந் திசைசந்தாடும்
கொற்கையார் கோமானே கொடியே யாதே
கொற்கையார் கோமான் கொடித்திண்டேர் மாறற்குச்
செற்றர ணிற்ற லரிதே யாதே.

(குறளடி வஞ்சிப்பா.)

865. தாழிரும் பிணர்த்தடக்கைத்
தண்கவு ளிழிகடாத்திதத்
தாழ்வாகத் தமபேணக்
கடுஞ்சினத்த களிற்றெருத்தின்
நிலனெளியத் தொகுபீடிக்
கடன்மருளப் படைநடுவண்
ஏற்றுரியி னிதிழ்முரசங்
கூற்றுட்க வெழீஇச்சிலைப்பக்
கேளல்லவர் மிடல்சாய
வாள்வலியா னிலம்வவ்வி

(861) யாப். வி. 95; நன். 413 மயிலை. (862) பி. வி. 48 உரை. (863) யாப். வி. 9. *முப்பெட்டுச் செய்யுள் (864, 865) யாப். வி. 93.

மூழிதாண்டவர் வழிசாவல
குன்றமருளச் சோறுகுவைஇப்
புனன்மருள னன்னெய்சொரிந்து
திருமறைமுதல்வர் வழிகாட்ட
ஆகுதியி னழலருத்திப்
பல்கேள்வித் துறைபோகிய
தொல்லிசையான் மீக்கூறும்
கொற்கையார் குலவேறே
கூடலா டுபொருந
வென்றியா
னல்கியார்த்த வரிக்கிணைபின்
மாபுளியின் வரவிசைப்ப
னனிவிரும்பி நயனெக்கி
னினிவேண்டானின் னிணைத்தொழிலென
னெனக்கொவ்வாமைப் பெரிதருளித்
தனக்கொப்பத் தலையளித்தனன்
அதற்கொண்டும்
கலங்கொண்டன கள்ளென்கோ
காழ்கோத்தன சூட்டென்கோ
நெய்கனிந்தன வறையென்கோ
குய்கொண்டன தினையென்கோ
எனைப்பல வெமக்குத்தலைக்கூடாது
வைகலுமுறுங் கைகவிசொரிசுவை
விலங்குகதி ராவிர்விளரி
யலங்குபெண்ணை வழியுறையினும்
குளஞ்சேர்ந்து சனிகொட்பினும்
[1]அருந்தே மாத்தனம் யாமே
வருந்தல் வேண்டா வாழ்கனின் [2]ரூளே.

(செம்பூட்சேய் பவனிச்சிறப்பு.)

866. பரூஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்றிக்
குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழப்
படைப்பரிமான் றேரினெடும் பரந்தலவு மறுகினிடைக்
கொடித்தானையிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே; (தரவு)

ஆங்கொருசார்—

---

[1]அருந்தே மாத்தனம், [2]னருளே, (866) யாப். வி. 86; வீரசோ. யாப்பு, 12. மேற்.

உச்சியார்ச் சிறைவளை யுலகமெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனுப் பாவித்தார்
வச்சிரங்[1]காணுத காரணத்தான் மயங்கினரே;

ஆல்கொருசார்—

அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனே வடிவழித்த மாயவனுப் பாவித்தார்
[1]சக்கிரங் காணுத காரணத்தாற் சமழ்த்தனரே;

ஆல்கொருசார்—

மால்கொண்ட பகைதணிப்பான் [2]மாத்தடிந்து மயங்காச்செங்
கோல்கொண்ட சேவலங் கொடியோனுப் பாவித்தார்
வேல்கொண்ட தின்மையால் [3]விம்மிதராய் நின்றனரே; (தாழிசை)

அஃதான்று (தனிச்சொல்)

கொடித்தே ரண்ணல் கொற்கைக் கோமான்
[3]நிறைபுக ழொருவன் செம்பூட் சேஎய்
வன்புணர் யறிந்தனர் பலரே தானும்
ஐவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தச்
தென்னவன் வாழி திருவொடெம் பொலிந்தே. (சுரிதகம்)

[1]அரிகேசரி—நெடுமாறன் (முதல் மாறவர்மன்)

பாண்டிக்கோவைப்பாடல்கள்.[1]

(நெல்வேலிப்போர்.)

867. நீடிய பூந்தண் கழனிநெல் வேலி நிகர்மலைந்தார்
ஓடிய[1]வாறுகண் டொண்சுடர் வைவே லுறைசெறித்த
ஆடியல் யானை யரிகே சரிதெவ்வர் போலழுங்கி
வாடிய காரண மென்னைகொல் லோவுள்ளம் வள்ளலுக்கே. (22)

868. பொறிகெழு [1]கெண்டை வடவரை மேல்வைத்துப் பூமியெல்லாம்
நெறிகெழு செல்கோ னடாநெடு மாறனேல் வேலிவென்றன்
வெறிகமழ் [1]பூங்கண்ணிக் காணல் விளையாட் டயரின்ற
செறிகுழ லார்பலர் யார்கண்ண தோவண்ணல் சிந்தனையே. (106)

---

[1]சக்கரங். [2]மாதடிந்து. [3]நின்றபுக. (867–868) இதையனுர்களிய துரை மேற்கோள். [1]கெண்டைபொன் மால்வரை. [1]பூங்கன்னிக்.

(பாழிப்போர்).

869. கோடன் மலர்ந்து குருகிலை தோன்றின கொன்றை செம்பொன்
பாடன் மணிவண்டு பாண்செயப் பாரித்த பாழிவென்ற
ஆட லெடுங்கொடித் தேரரி கேசரி யந்தண்பொன்னி
நாடன் பகைபோன் மெலிகின்ற தென்செய்ய நன்னுதலே. (309)

(செந்நிலத்துப்போர்).

870. மைதா னிலாததங் கல்வி பிருத்து வருவதெண்ணிப்
பொய்தா னிலாதசொல் லார்செல்வர் போலும்புல் லாதமரே
செய்தார் படச்செந் நிலத்தைக் கணைமழை திண்சிலையாற்
பெய்தான் விசாரிதன் றென்புன லூடன்ன பெண்கொடியே. (235)

(சங்கைமங்கைப்போர்).

871. தகரக் குழலாய் தகவில ளேசங்க மங்கைவென்ற
சிகரக் களிற்றுச்செங் கோனெடு மாறன்றென் கூடலின்வாய்
மகரக் கொடியவன் றன்னினை வேனின் மலர்வீலக்குப்
பகரக் கொணர்ந்தில்லந் தோறுந் திரியுமிப் பல்வளையே. (266)

(கோட்டாற்றுப்போர்)

872. வானுடை யான்முடி மேல்வளை யெற்றியும் வஞ்சியர்தங்
கோனுடை யாப்படை கோட்டாற் றழிவித்துங் கொண்டவென்றி
தானுடை யான்றென்னன் சத்ருது ரந்தரன் பொன்வரைமேன்
மீனுடை யான்கொல்லி வேங்காய் நினக்கு விடையில்லையே. (149)

(நறையாற்றுப்போர்)

873. வில்லவன் ரூனை நறையாற் றழிந்துவிண் ணேறவெல்ல
வல்லவன் மாறனெவ் கோன்முனை போல்சுரம் வாணுதலாள்
சொல்லவன் பின்சென்ற வாறென்ற போழ்தெனக் குச்சொல்லுமே
பல்லவ மாக்கித்தன் பாவை வளர்க்கின்ற பைங்குரவே. (187)

(கடையற்போர்)

874. தெவ்வா யெதிர்நின்ற சேரலர் கோனைச் செருக்கழித்துக்
கைவா னிதியமெல் லாமுட னேகடை யற்கவர்ந்த
நெய்வா யயினெடு மாறன் பகைபோ னினைந்துபண்டை
யொவ்வா வருவு மொழியுமென்னெவள்ள லுள்ளியதே. (24)

(சேவூர்ப்போர்)

875. சிலையுடை வானவன் சேவூ ரழியச் செருவடர்த்த
நிலையுடை வேனெடு மாறன் சுழலிறைஞ் சாதவர்போல்

(869–875) இறையனார்களவியலுரை மேற்கோள்.

நிலையிடு சிந்தைவெங் நோயொடிந் நீள்புனங் கையகலான்
மூலையிடை [1]நேர்பவர் நேரு மிடமிது மொய்குழலே. (92)

(பூலந்தைபபோர்)

876. பொருநெடுந் தானைப்புல் லார்தம்மைப் பூலந்தைப் போர்தொலைத்த
செருநெடுஞ் செஞ்சுடர் வேனெடு மாறன்றென் ஞடனையாய்
அருநெடுங் காமம் பெருகுவ தாய்விடி ஞடவர்கள்
கருநெடும் பெண்ணைச்செங் கேழ்மட லூரக் கருதுவரே. (79)

(விழிஞத்துப்போர்)

877. விண்டார் படவிழி ஞக்கடற் கோடியுள் வேல்வலங்கைக்
கொண்டான் சூடைமன்னன் [2]கூடற் குடவரைக்கொம்பொடொக்கும்
வண்டார் குழன்மட மங்கை மதர்வைமென் ஞெக்கமென்போற்
கண்டா ருளரே லுரையார் பிறவின்ன கட்டுரையே. (31)

(குளந்தைப்போர்).

878. செல்லா ரவரென் றியானிகழ்ந் தேன்சுரஞ் [3]செல்வதென்கண்
ஒல்லா ளவளென் றவரிகழ்ந் தார்மற் றுலையிரண்டும்
கொல்லா ரயிற்படைக் கோனெடு மாறன் குளந்தைவென்ற
வில்லான் பகைபோ லெனதுள்ளந் [4]தண்ண மெலிவிக்குமே. (293)

(களத்தூர்ப்போர்).

879. கலவா வயவர் களத்தூ ரவியக் கூணெயுதைத்த
கொலையார் சிலைமன்னன் கோனெடு மாறன்றென் கூடலன்ன
இலவார் துவர்வாய் மடந்தைநம் மீர்ம்புனத் தின்றுகண்டேன்
புலவார் குருதி யளைந்தவெண் கோட்டுப் பொருகளிறே. (70)

(நெடுங்களத்துப்போர்).

880. பலமன்னு புள்ளினம் பார்ப்புஞ் சினையு மலையழிய
உலமன்னு தோளண்ண லூரக்கொ ளாய்கொ லொலிதிரைசூழ்
நிலமன்ன னேரியன் மாற னெடுங்களத் தட்டதிங்கட்
குலமன்னன் கன்னிக் குலவர்பெண் ணைக்கொழுமடலே. (80)

(வல்லத்துப்போர்).

881. ஊனங் கடந்த வொருகுடை வேந்த னுதித னெஞ்ஞர்
மானங் கடந்துவல் லத்தம ரோட்டிய கோன்படிமேல்
ஈனங் கடந்தசெங் கோன்மன்னன் றெம்மூனை போலெரிவேய்
கானங் கடந்துசென் றேபொரு டேர்வது காதலரே. (259)

---

[1]நோபவர். (876-881) இறையனார் களவியலுரை மேற்கோள். [2]கொல்லிக் குடவரைக் கொம்பொடொக்கும். [3]செல்லத்தன்கண். [4]தண்ணை.

(ஆற்றுக்குடிப்போர்).

882. ஆழித் திருமா லதிசயற் காற்றுக் குடியுடைந்தார்
சூழிக் களிற்றிற் முனேகதிண் டேர்துயர் தோன்றின்றுகாண்
கோழிக் குடுமியஞ் சேவறன் பேடையைக் கால்குடையாப்
பூழித் தலையிரை யார்வித்துத் தாணிறகும் பூம்புறவே. (249)

(மணற்றிப்போர்).

883. கொங்கை தளரினுங் கூந்த னரைபபினு மேந்தன்மற்றிவ்
வங்கை யடைக்கல மென்றே கருதி யருளுகண்டாய்
கங்கை மணாளன் கலிமத னன்கடி மாமணற்றி
மங்கை யமரட்ட கோன்வையை நாடன்ன மாதரையே. (175)

(நெடுமாறனது சிவபத்தி).

884. முன்ருன் முகிழ்மூலை யார மூயங்கி முறுவலுண்டு
சென்ரூர் வாவிற்குத தூதா யெழுந்த செழும்புலிப்பை
வென்ரு னழிய நறையாற் றகத்துவென் ருன்முடிமேல்
நின்ரூன் மணிகண்டம் போலிரு டாங்கிய நீண்முகிலே. (256)

885. மெல்லிய லாய்நங்கண் மேல்வெய்ய வாய்விழி ஞத்துவென்ற
மல்லிய றேண்மன்னன் செண்ணி நிலாவினன் வார்சடையான்
சொல்லியல் காமனைச் சுட்டசெந் தீச்சுடர் சென்றவன்மேற்
செல்லிய பாரித்த பிரான்றன பிண்டியின் றேமலரே. (297)

(பாண்டியன் பூதமபணிகொண்டது முதலிய செயல்கள்.)

886. ஓதங் கடைந்தரு தாக்கி யமரர்க் குணக்கொடித்துப்
பூதம் பணிகொண்ட பூழியன் மாறன் பொதியிலின்வாய்
ஏதம் பழியிலை டெய்துத லாலிர வும்பகலு
மாதங் கடைந்தமென் ரேகதி றத்தைய வாரண்மினே.

(பாண்டியன் அகத்தியன்வாய்த் தமிழ்கேட்டது).

887. அலைதரு பேகலே யன்னமன் ரூயன் றகத்தியன்வாய்
உரைதரு தீந்தமிழ் கேட்டோ னுசித னெஞ்சும் பொதியில்
வரைதரு வார்புனங் கைபம லான்வந்து மாவினவும்
விரைதரு கண்ணியன் யாவன்மகா லோவெவர் விருந்தினனே. (89)

(பாண்டியன் இடிக்கொடியுடைமை).

888. அடிக்கண் ணிருங் கழலாரி கேசரி தெவ்வனுக்கக்
கொடிக்கண் ணிடியுரு மேந்திய தென்னவ னகடலன்னுய்
வடிக்கண் ணிரண்டும் வணங்கர் காக்கும்வை வேலினஞர்
துடிக்கண் ணிரண்டுங்கு குற்றலே யொன்றுந் துயின்றிலவே. (214)

(882—888) இறையனர் களவியலுரை மேற்கோள்.

பராந்தகன்—நெடுஞ்சடையன்.

(வேள்விதுடிச் சாலனப்பதி).

889. கொல்யானை பலவோட்டிக் கூடாமன்னர் குழாந்தவிர்த்த
பல்யாகமுதுகுடுமிப் பெருவழுதி யெனும் பாண்டியாதி ராசனுல்
நாகமா மலர்ச்சோலை நளிர்கின்ற மிசை வண்டலம்பும்
பாகனூர்க் கூற்றமென னும் பழனகெடுக்கை நீர்நாட்டுச
சொற்கணுளார் சொலப்பட்ட சுருதிமார்க்கம் பிழையாத
கோற்கைகிழா னம்கோற்றன் கொண்டவேள்வி முற்றுவிக்கக்
கேள்வியந்த ணுளர்முன்பு கேட்கையென் றெடுத்துரைத்து
வேள்விச்சாலை முன்புநின்று வேள்விதுடி யென் றப்பதியைச்
சீரோடு திருவளரச் செய்தார்வேந்த னப்பொழுதே
நீரோட்டிக் கொடுத்தலையா னீபுக்கி துய்த்தபின்
ஆளவரிய வதிராசரை யகலநீக்கி யகலிடத்தைக்
களப்பாளனெனுங் கலியரைசன் கைக்கொண்டதனை யிறக்கியபின்
பகைடன்முளைத்த பருதிபோற் பாண்டியாதிராசன் வெளிப்பட்டு
விசுதி ரவிரொளி விலகவீற் றிருந்து
வேலைசூழ்ந்த வியலிடத்திக்
கோவுங் குமும்பும் பாலுடன் முருக்கிச்
செங்கோ லோச்சி வெண்குடை நீழற்
றங்கொளி னிறைந்த தரணி மங்கையைப்
பிறர்பா லுரிமை நிறவிதி னீக்கித்
தன்பா லுரிமை நன்கன மமைத்த
மானம் போர்த்த தானை வேந்தன்
ஓங்கா மன்ன ரொளிகெ ராழித்த
கடுங்கோ னென்னுங் கதிர்வேற் றென்னன்
மற்றவற்கு மகனுகி மகீதலம்பொதுநீக்கி மலர்மங்கையொடு மண
அற்றமில் பரவைத்தானை யாதிராச னவனிசூளாமணி [னடர்ந்த
வத்திறதது மிகலழிக்கு மத்தயானை மாறவர்மன்
மற்றவன்கு, மருவினியவொரு மகனுகி மண்மகளை மறுக்கடிந்து
விக்கிரமத்தின் வெளிப்பட்டுவிலங்கல்வெல்பொறிவேந்தர் வேந்தன்
சிலைத்தடக்கைக்கொலைக்களிற்றுச் செழியனவானவன் செங்கோற்
மற்றவற் குப்பழிப் பின்றிவழித் தோன்றி [கேந்தன்
உதயகிரி மத்தியத் துமுசுடர் போலத்
தெற்றென்று திசைவிளங்க மற்றவன் வெளிப்பட்டுச்
சூழியானை செலவுச்சிப் பாழிவா யமர்கடந்தும்
வில்வேலிக் கடற்றானையை நெல்வேலிச் செருவென்றும்

விரவிவந் தடையாத பரவரைப் பாழ்படுத்தும்
அறுகாலினம் புடைதிரிலோக்குங் குறுநாட்டவர் குலங்கெடுத்தும்
கைந்நலத்த களிறுந்திச் செந்நிலத்துச் செருவென்றும்.
பாரளவுந் தனிச்செங்கோற் கோளனேப் பலமுறையும்
உரிமைச் சுற்றமு மாவும் யானையும்
புரிசை ம(ர)மதிற் புலியூ ரப்பகல்
நாழிகை யிறவாமைக் கோழியுள் வெண்றுகொண்டும்
வேலாழியும் வியன்பரப்பு மேலாமைசென் றெறிந்தழித்தும்
இரணியகர்ப்பமுந் துலாபாரமுந் தரணிமிசைப் பலசெய்தும்
அந்தணர்க்கு மரசர்க்கும் வந்தணைகென் றீத்தளித்த
மகரிகையணி மணிமுடிமி
அரிகேசரி யசமசமன் சீமாறவரீமன்
மற்றவற்கு மகளுகிக் கொற்றவேல் வலனேந்திப்
பொருதாருங் கடற்றானையை மருதாருள் டாண்பழித்
தாய்வேளா யகப்பட வேயெல்ளுமை யெறிந்தழித்துச்
செங்கோட்டம்? புதான்கோட்டஞ் செருவென்றவர் சினந்தவிர்த்
கொங்கலரு நறும்பொழில்வாய்க் குயிலோடு மயிலகவும் [துக்
மங்கலபுரமெனு மாநகருண் மாரதரை யெறிந்தழித்
தலைதடல் வளாகம் பொதுமொழி யகற்றிச்
சிலையும் புலியுங் கயலுஞ் சென்று
நிலையமை நெடுவரை யிடவயிற் கிடாய்
மண்ணினி தாண்ட தண்ணளிச் செங்கோற்
றென்ன வானவன் செம்பியன் சோழன்
முன்னர் மன்னன் மதுரகரு நாடகன்
கொன்னலிவின்ற நெடுஞ்சுடர்வேற் கொங்கர்கோமான் கோச்
மற்றவற்குப் புத்திரனுய் மண்மகளது பொருட்டாக [சடையன்
மத்தயானை செலவுந்தி மானவேல் வலனேந்திக்
கடலிசையா லெதிர்ந்தவரை நெடுவயல்வாய் நிகரழித்துக்
கறுவடைந்த மனத்தவரைக் குறுமடைவாய்க் கூர்ப்பழித்து
மன்னிருறிச்சியுந் திருமங்கையு முன்னின்றவர் முரணழித்து
மேவலோர்கடற்றானேயோ டேற்றெதிர்ந்தவரைப் பூவலூர்ப்புறம்
கொடும்புரிசை நெடுங்கிடங்கிற் கொடும்பா ளூர்க்கூடார் [கண்டும்
கடும்பரியுங் கருங்களிறுங் கதிர்வேலிற் கைக்கொண்டும்
செழும்புரவிப்பல்லவனைக் குழும்பூருட் டேசழிய
எண்ணிறந்த மால்களிறு மிவுளிகளும் பலகவர்ந்தும்
தரியலராய்த்தனித்தவரைப் பெரியலூர்ப் பீடழித்தும்

பூவிரியும் பொழிற்சோலைக் காவிரியைக் கடந்திட்
டழகமைந்த வார்சிலையின் மழகொங்க மடிப்படுத்தும்
ஈண்டொளிய மணியிமைக்கு மெழிலமைந்த நெடும்புரிசைப்
பாண்டிக்கொடுமுடி சென்றெய்திப் பசுபதியதுபதமபாதம்பணிந்
கனகராசியுங் கதிர்மணியு மனமகிழக் கொடுத்திட்டுங் [தேத்திக்
கொங்கரவ நறுங்கண்ணிக் கங்கராசனெனுஞ் சம்பந்தஞ்செய்தும்
எண்ணிறந்தன கோசகசிரமு மிரணியகர்ப்பமுந் துலாபாரமும்
மண்ணின்மிசைப் பலசெய்து மறைநாவினர் குறைதீர்த்துங்
கூடல்வஞ்சி கோழியென்னு மாடமா ரதிற்புதுக்கியும்
அறைகடல் வளாகங் குறையர சாண்ட
மன்னர் மன்னவன் றென்னவர் மருகன்
மான வெண்குடை மான்றேர் மாறன்
மற்றவர்க்கு மகளுஞ் மாலுருவின் வெளிப்பட்டு
மூன்று கொற்ற முரசுட னியற்பக்
குளிர்வெண்குடை மண்காப்ப
பூமகளும் புலமகளு நாமகளு நலனேத்தக்
கலியரசன் வலிதளரப் பொலிவிழந்து வீற்றிருந்து
கருங்கட லுடுத்த பெருங்கண் ஞாலத்து
நாற்பெரும் படையும் பாற்படப் பரப்பிக்
கருதாதுவந் தெதிர்மலைந்த காடவனைக் காடடையப்
பூவிரியும் புனற்கழனிக் காவிரியின் றென்கரைமேற்
றண்ணகை மலர்ச்சோலைப் பெண்ணகடத் தமர்வென்றும்
தீவாய வயிலேந்தித் திசைததெதிரே வந்திறுத்த
ஆய்வேளையுங் ருறுப்பையு மடலமரு ளழித்தோட்டிக்
காட்டுக்குறும்பு சென்றடைய நாட்டுக்குறும்பிற் செருவென்றும்
அறைகடல் வளாக மொருமொழிக் கொளீஇய
சிலைமலி தடக்கைத் தென்ன வானவன்
அவனை,
சிவரன் சிமலைகரன் சினச்சோழியன் புனப்பூழியன்
வீரசன்மகன் விசயவிச்சுருதன் விக்கிரமபாரகன் வீரபுரோகன்
மருத்பலன் மான்யசாசனன் மனுபமன் மர்த்திசவீரன்
கிரிஸ்திரன் கிதிகிந்தரன் கிருபாலயன் கிருதாபதானன்
கலிப்பகை கண்டகவிஷ்டிரன் கார்யதக்ஷிணன் கார்முகபார்த்தன்
பராந்தகன் பண்டிதவத்ஸலன் பரிபூர்ணன் பாபபீரு
குரையுறு கடற்படைத்தானைக் குணக்கிராயியன் கூடனிர்ணயன்
நிரையுறுமலர் மணிமுடி சோழியர்கோ னேடுத்தடையன்

மற்றவன்றன் ராஜ்யவற்சரம் மூன்றுவது செலாநிற்ப
ஆங்கொருநாண்
மாடமா மதிற்கூடற் பாடுநீத்தவ ராக்குரோதிக்கக்
கொற்றவனே மற்றவரைத் தெற்றென நன்குகூவி
என்னேநங் குறையென்று முன்னுகப் பணித்தருள
மேனுணின் குரவராற் பான்முறையின் வழுவாமை
மார்கந்தோய் மலர்ச்சோலைப் பாகனூர்க் கூற்றத்துப்படுவது
ஆன்வதானே யடல்வேந்தே வேள்விகுடியென்னும் பெயருடை
ஒல்காத வேற்றூனையோ டோதவேலி யுடன்காத்த [யது
பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியெனும் பாமேகுவாஞல்
வேள்விகுடி யென்னப்பட்டது கேள்வியிற் றரப்பட்டதனைத்
தெளக்கமில்லாக் கடற்றூனையாய் களப்பிரனு லிறக்கப்பட்டது
என்றுரின்றவன் விஞ்யாப்யஞ்செய்ய நன்றுநன்றென்று முறு
நாட்டானின் பழமையாதல் காட்டிநீ கேளென்ன [வலித்து
நாட்டிற்றன் பழைமையாதலைக் காட்டினனங் கப்பொழுதே
காட்ட, மேனுளை நங்குரவராற் பான்முறையிற் றரப்பட்டதை
எம்மாலுத் தரப்பட்டதென்று செம்மாந்தவ னெடித்தருளி
வீற்கைத்தடக்கை விறல்வேந்தன் கொற்கைகிழான் காமக்கணி
நற்சிங்கற்குத்
தேரோடுங் கடற்றூனையா னீரோடட்டிக் கொடுத்தமையின்
மற்றிதற்குப் பெருநான்கெல்லை தெற்றென விரித்துரைப்பிற்
புகரறுபொழின் மருங்குடுத்த நகரூரெல்லைக்கு மேக்கும்
மற்றிதற்குத் தென்னெல்லை [வடக்கும்
குளந்தைவங்கூழ் வந்தசைக்குங் களந்தைக்குளத்தி லாலுக்கு
மற்றிதற்கு மேலெல்லை யற்றமில்லாக் கொள்ளன்புத்தூரொடு
மையிருப்பைச் செய்யிடை மேற்றலைப்பொருப்பிற்குக் கிழக்கும்
மற்றிதற்கு வடபாலெல்லை
காயலுட்கமலமலரும் பாயலுள் வடபாலைப்பொருப்பிற்குத் தெற்
இவ்வியைந்த பெருநான் கெல்லையிற் பட்டபூமி [கும்
காராண்மை மீயாட்சி யுள்ளடங்க மேலெங்
குரவராற் கொடுக்கப்பட்டபரிசே யெம்மாலுங் கொடுக்கப்பட்டது
மற்றிதற் காணத்தி குற்றமின்றிக் கூறுங்காலைக்
கொங்கரைவ ராலுங்கண்ணிக் கங்கராசனது கன்யாரத்னம்
கொங்கர் கோற்குக் கொணர்ந்து கொடுப்ப

(889) செந்தமிழ்.

ஆர்வமரு வடந்ருனைப் பூர்வராசர் புகன்றெழுந்தி
வில்லிரவுங் கடற்ருனை வல்லவனை வெண்பைவாய்
ஆளமரு ளழிந்தோட வாளமரு ளுடன்வவ்விய
ஏனப்பொறி யிகலமரு விடியுருமென வலனேந்தி
மானத்தானை மதவீகலன் மன்னர்கோ னருளிற்பெற்றும்
கொல்வினைக்கும் வேற்ருனைப் பல்வினைக்கோன் கொணரப்பட்டும்
பொரவந்தவர் மதந்தவிர்க்குங் கரவந்தவர் குலந்தோன்றல்
மாவேந்துங் கடற்ருனை முவேந்தமங்கலப் பேரரையனுயிய
வைத்யசிகாமணி மாறங்காரி—

பராந்தகன்-நெடுஞ்சடையன்.

(சீரிவரமங்கல சாஸனப்பதிகி)

890. அன்ன ளுயிய வலர்கதிர் நெடுவேற்
றெனனன் வானவன் செம்பியன் வடவரை
இருங்கய லாணை யொருங்குட னடாஅய்
ஒலிகெழு மூன்றீ ருலகமுழு தளிக்கும்
வலிகெழு திணிதோண் மன்னவர் பெருமான்
தென்னல ராடி தேம்புனற் குறட்டிற்
பொன்மலர்ப் புறவில் வெள்ளூர் விண்ணஞ்
செழியக் குடியென் றிவற்றுட் டெவ்வர்
அழியக் கொடுஞ்சிலை யண்டுகால் வணைத்தும்
மாயிரும் பெரும்புனற் காவிரி வடகரை
ஆயிர வேலி யயிரூர் தன்னிலும்
புகழி யூரிலுந் திகழ்வே லதியனை
ஒடுபுறங் கண்டவ ளெலியுடை மணித்தேர்
ஆடல் வெம்மா வலையுடன் கவர்ந்தும்
பல்லவனுங் கோளளு மாங்கவற்குப் பாங்காகிப்
பல்படையொடு பார்ளுளியப் பல்வமைப் பரந்தெழுந்தி
குடபாலுங் குணபாலு மணுகவந்தி விட்டிருப்ப
வெல்படையொடு மேற்சென்றங்
கிருவரையு மிருபாலு மிடரெய்தப் படைவிடுத்துக் [போர்த்து
குடகொங்கத் தடன்மன்னனைக் கொல்களிற்ருெடு கொண்டு
கொடியணிமணி மெமோடக் கூடன்மதி லரசத்தவைத்தும்
கங்கபூமி யதனளவும் கடிமுரசுதன் பெயரறையச்
கொங்கபூமி யடிப்படுத்துக் கொடுஞ்சிலைப்பூட் டிழிவித்துப்

(890) செந்தமிழ், தொ. 4, பக். 841—8.

பூஞ்சோலை யணிபுறவிற் காஞ்சிவாய்ப்பே ரூர்புக்குத்
திருமாலுக் கமர்ந்துறையக்
குன்ற மன்னதோர் கோயி லாக்கியும்
ஆழிமுக்கீ ரகழாக வகல்வானத் தகடெரிஞ்சும்
பாழிநீண்மதில் பரந்தோங்கிப் பகலவனு மகலவோடும்
அணியிலங்கையி னரணிதாகிய
மணியிலங்கு நெடுமொட மதில்வீழிரு மதுவழியக்
கொற்றவேலை யுறைநீக்கி வெற்றத்தானை வேண்மன்னனை
வென்றவன் விழுகிதியோடு குன்றமன்ன கொலைக்களிறுங்
கூந்தன்மாவுங் குலதனமு நன்னுடி மனைகொண்டும்
அரவிந்த முகத்தினைய ரரிநெடுங்க ணம்புகளாற்
பொரமைந்தர் புலம்பெய்தும பொன்மாட நெடுவீதிக்
கரவந்தபுரம் பொலிவெய்தக் கண்ணகன்றதேரர் கல்லகழொடு
விசும்புதோய்ந்து முகிறுஞ்சலி னசும்பறுத வகன்சென்னி
நெடுமதிலை வடிவமைத்தும்
எவமாதி விக்கிரமங்க ளெத்துணையோ பலசெய்து
மணிமாடக் கூடல்புக்கு மலர்மகளொடு வீற்றிருந்து
மணிதாங்கித மார்க்கத்தினுற் குருசரிதங் கொண்டாடிக்
கண்டகசோதனை தான்செய்து கடன்ஞால முழுதளிக்கும்
பாண்டிய நாதன் பண்டித வத்ஸலன்
வீர புரோகன் விக்கிரம பாரகன்
பரந்தகன் பரம வைஷ்ணவன் ரூஞ்சி
நின்றிலங்கு மணிநீண்முடி நிலமன்னவ நெடுஞ்சடையற்கு
ராஜ்யவர்ஷம்—

(பழம்பாட்டு.)

891. நாளை வரகுணர்கோ னுங்கையிலே தங்கலாம்
மீளு மமரும் விடிந்துபோம்—நீளுமோர்
அம்பிட் டெயுந்தூர மவ்வு ரயில்வேற்கட்
கொம்பிற்குங் காலாறக் கொண்டு.

(891) இறை. களவி. மேற்கோள்விளக்கம். (சென்னைமியூஸியம்பிரதி)

இராசசிங்கபாண்டியன்.

(சின்னமனூர்ச்சாஸனப்பதிதி).

[கௌஸ்துபத்தொடும்

892. திருவொடுங் கொள்ளுமிர்தத்தொடுஞ் செங்கதிரொளிக்
அருவிமத களிமூன்றொடுந் தோன்றியர னவிர்சடைமுடி
வீற்றிருந்த வெண்டிங்கள் முதலாக வெளிப்பட்டது
நாற்றிசையோர் புகழ்தர நானிலத்தி னிலெபெற்றது
பாரத்துவா சாதிகளால் நேராக ஸ்துதிக்கப்பட்டது
விரவலர்க்கரியது மீனத்வயசாஸனத்தது
பொருவருஞ்சீ ரகத்தியனைப் புரோகிதனாகப் பெற்றது
ஊழியூழி தோறுமுள்ளது நின்றவொருவனை யுடையது
வாழியர் பாண்டியர் திருக்குலமிதனில் வந்துதோன்றி
வானவெல்லை வரைத்தாண்டும் வளைகடல்கடைந் தமிர்தங்கொண்
நானிலத்தோர் விஸ்மயப்பட நாற்கடலொரு பகலாடியும் [டும்
மங்கிலொளி மணிமுடியொடு சங்கவெள் வளைதரித்தும்
நிலவுலகம் வலஞ்செய்தும் நிகரில்வென்றி யமரர்க்குப்
பலமுறையுந் தூதுய்த்தும் பாகசாஸ னரம்வவ்வியுஞ்
செம்மணிப்பூ ணெருங்கோன்றித் தென்றமிழின் கரைகண்டும்
வெம்மூனவே லொன்றுவிட்டும் விரைவரவிற் கடன்மீட்டும்
பூழியனைப் பெயரெய்தியும் போர்க்குன் முயிரம்வீசியும்
பாழியம்பா யலினிமிர்ந்தும் பஞ்சவனெனப் பெயர்கிறீஇயும்
வளமதுரை நகர்கண்டும் மற்றதற்கு மதில்வகுத்தும்
உளமிக்க மதியதனா லொண்டமிழும் வடமொழியும்
பழுதறத்தா னாராய்ந்து பண்டிதரின் மேற்தோன்றியும்
மாரதர்மேல களத்தவியப் பாரதத்திற் பகடோட்டியும்
விசயனை வசுசாபநீக்கியும் வேந்தழியச் சுரம்போக்கியும்
வசையில்மாக் கயல்புலிசிலை வடவரைநெற் றியில்வரைந்தும்
தடம்பூதம் பணிகொண்டு தடாகங்கள் பலதிருத்தியும்
அடம்பகிதோய் நாடகற்றி அம்பொற்சத் திரமூலர்த்தும்(?)
தலையாலங் கானத்திற் றன்னெதிர்க்கு மிருவேந்தரைக்
கொலைவாளிற் றலைதுமித்துக் குறைத்தலையின் கூத்தொழித்தும்
மகாபாரதந் தமிழ்ப்படுத்து மதுராபுரிச் சங்கம்வைத்தும்
மகாராசரும் சார்வபௌமரும் மகீமண்டலங் காத்திகந்தபின்
வில்லவனை நெல்வேலியிலும் விரிபொழிற் சங்கரமங்கைப்

---

(892) சாஸனம்; செந்தமிழ். தொ. 23, பக். 220–23.

பல்லவனையும் புறங்கண்ட **பராந்தகன்** பஞ்சவர்தோன்றலும்
மற்றவற்குப் பெளத்ரனுயின மன்னர்பிரா **னிராசசிங்கனும்**
கொற்றவர்க டொழுகழற்காற் கோவராதண மகாராசனும்
ஆங்கவற் காத்மசனுகி யவனிதலம் பொறைதாங்கித்
தேங்கமழ்பொழிற் குண்ணூரிலுஞ் சிங்களத்தும் விழிஞத்தும்
வாடாத வாகைசூடிக் கோடாதசெங் கோனடப்பக்
கொங்கலரும் பொழிற் குடமூக்கிற் போர்குறித்து
வந்தெதிர்ந்த கங்கபல்லவ சோளகாலிங்க மாகதாதிகள்
குருதிப்பெரும் புனற்குளிப்பக் கூர்வெங்கணை தொடைகொடுத்
பருதியாற்ற லொடுவிளங்கின **பாசக்கிர கோலாகலனும்** [துப்
குரைகழற்கா லரைசிறைஞ்சக் குவலயதலந் தனதாக்கின
வரைபுரையு மணிநெடுந்தோள் மன்னர்கோன் வரதுணவர்மனும்
மற்றவனுக் கினியனுன மனுசரிதன் வாட்கடையன்
பொற்றடம்பூண் சிரீபராந்தகன் புனைமணிப்பொன் முடிசூடிக்
கைந்நிலத்தோய் கரிகுலமும் வாசிவிருத்தமுங் காலாளும்
செந்நிலத்தி னிலஞ்சேரத் திண்ணிலவாய்க் கணைதெறியும்
கரகிரியிற் கருதாதவர் வரகரிகுல நிரைவாரியும்
ஙலம்பேர நகர்கடந்து நெடும்பெண்ணை கடமழித்தும்
ஆலம்போர்ப் பரியொன்மூ லகன்கொங்கி லமர்கடந்தும்
தேவதானம் பலசெய்தும் பிரமதேயம் பலதிருத்தியும்
நாவலந்தீ வடிப்பபித்த நரபதியும் வானடைந்தபின்
வானவன்மா தேவியென்னு மலர்மடந்தை முன்பயந்த
மீனவர்கோ **னிராசசிங்கன்** விகடபா டலனவனை
அந்பதியா யிரந்தலையா லரிதாகப் பொறுக்கின்ற
மதிமண்டலப் பெரும்பொறைதன் மகாபுசபலத் தாற்றுங்கி
புஜகநாயக தரணிதாரண ஹரணராஜித புஜசுந்தரனுய்
உலப்பிலிமங் கலத்தெதிர்ந்த தெவ்வருட லுகுத்தசெந்நீர்
நிலப்பெண்ணிற் கங்கராக மெனநிலப் பரணிதந்தும்
மடைப்பகர்நீர்த் தஞ்சையர்கோன் தானைவரை வைப்பூரிற்
படைப்பரிசா ரந்தந்தி போகத்தன் பணைமுழக்கியுங்
கொடும்பைமா நகர்நிறைத்த குரைகடற் பெருந்தானை
இடும்பையுற் றிரியத்த னிரணைதய மேற்கொண்டும்
புனற்பொன்னி வடகரையிற் பொழில்புடைசூழ் மதில்வஞ்சி
கனற்படவிழித் தெதிர்ந்தவீரர் கவந்தமாடக் கண்டிவர்ந்து
சேவலுயர் கொடிக்குமர னெனச்சிறித் தென்றஞ்சை

கானலனது கரிதுரத பதாதிசங்கங் களத்தவியப்
பூம்புனலு வற்பதியில் வாம்புரவி வலங்காட்டியும்
விசயஸ்தம்பம விசும்பணவச் செங்கோற்றிசை விளிம்பணவக்
குசைமாவுங் கொலக்குன்றமுங் குருதியாறு முங்கொணர்ந்திம்
மருடவர்த்தன ரடிவணங்க மகேந்திரபோக மனுபவித்த
விகடபாடலன் ஸ்ரீகாந்தன் மீநாங்கித சைலேந்திரன்
ராஜசிகா மணிதென்னன் ராஜிதகுண கணகங்கோன்
எண்ணிறந்த பிரமதேயமு மெண்ணிறந்த தேவதானமும்
எண்ணிறந்த பள்ளிச்சந்தமு மெதகிசையு மினிதியற்றி
உலப்பிலோத வொலிகடல்போ லொருங்குமுன்னந் தானமைத்த
இராசசிங்கப் பெருங்குளக்கீழ்ச் சூழுநக ரிருந்தருளி
ராஜ்யவர்ஷ மிரண்டாவதி னெதிர்பதினஞன் காம்யாண்டில்—

போய்யாமொழிப்புலவர் பாண்டியன்வாசலிற்போய்ப் பாதி வசையும் பாதி நசையுமாகப் பாடிய கலித்துறை.

893. சூழற்கா ரரவிந்தங் கூம்பக் குமுதம் பொதியவிழ்ப்ப
மிழற்கான் மதியமன் னேரின் றிருக்குல நீயவன்றன்
அழற்கா [1]லவிர்சடை மீதே யிருந்தமவ் வந்திவண்ணன்
கழற்கால் வணங்குதி யோவணங் காமுடிக் கைதவனே.

பராந்தகபாண்டியன்.

894. கோலெடித்துக் கோத்துரத்துங் கோகனகச் செங்கைவடி
வேலெடித்துங் கோத்துரத்தல் விட்டிலனே—[2]சால்படித்த
பூபால ரனைவரும் போமோ [3]பராந்தகற்குக்
கோபால ரென குணம்.

பராந்தகபாண்டியன் மெய்க்கீர்த்தி.

895. திருவளரச் செயம்வளரத் தென்னவர்தங் குலம்வளர
அருமறைநான் கலைவளர வனைத்துலகுந் துயர்நீங்கத்
தென்மதுரா புரித்தோன்றித் தேவேந்திரனே டினிதிருந்த
மன்னர்பிரான் வழுதியர்கோன் வடிம்பலம்ப நின்றருளி
மால்கடலே யெறிந்தருளி மலையத்துக் கயல்பொறித்துச்
சோழனைச் செருவில்வென்று திறைகொண்டு வாகைசூடிக்
கூபகர்கோன் மகட்கொடுப்பக் குலவிழிஞ நகைக்கொண்டு
கன்னிப்போர் செய்தருளிக் காந்தளூர்ச்சா லைகலமறுத்து
மன்னுபுகழ் மறையவர்த மணியம்பலத் தினிதிருந்து

---

(893) தமிழ்நா. 63. [1]லொளிர்சடை. (894) தனிப்பா. [2]சிலம்பி கு. [3]புரா தனத்தில். (895) T. A. S. ii, 4.

ஆயிரத் தெண்ம ரவிரோதப் பணிப்பணியால்
பறைபோர்த்துக் கண்ணுட்டிப் பண்ணெள்ள பேர்தவிர்த்து
அளப்பனவுஞ்சிறப்பனவுங் கயலெழுதி யனந்தபுரத் தெம்மாற்கு
நிலவியபொன் மணிவிளக்கு நின்றெரியப் பத்தனமத்தி[1]

* * * *

தைப்பூசப் பிற்றைஞான்று
வந்திருந்தா ரெல்லார்க்கு மாற்முதே நியாகமிட
அறத்தால் விளங்கிய வாய்ந்த கேள்வித்
புறத்தாய நாடு பூமகட் களித்துத்
தெலிங்கவீமன் குளங்கொண்டு தென்கவிங்க மடிப்படுத்துத்
திசையனைத்து முடனுண்ட சிரீபராந்தகதேவர்க்கு யாண்டு—

வீரபாண்டியன் மெய்க்கீர்த்தி.

896. பூமடந்தையுஞ் சயமடந்தையும் பொலிந்துதிருப் புயத்திருப்பப்
பார்முழுதுங் குடைநிழற்றப் பராக்கிரமத்தான் முடிசூடித்
தென்மது ராபுரித் திருவிழையாட் டத்திற்கண்டு
மன்னரெல்லாம் வந்திறைஞ்ச மலைநாடு கொண்டருளி
மாபா ரதம்பொருது மன்னவர்க்குத் தூதுசென்று
தேவாசுர மதுகைதரித்துத் தேனருமறை(?)யுங் கொண்டருளி
வடவரையிற் கயல்பொறித்து வானவர்கோ னரம்பூண்டு
திடவாசகக் குறுமுனிபாற் செந்தமிழ்நூல் தெரிந்தருளி[2]
செங்கோ லெங்குந் திசையுற நடாத்தி
மன்னிய வீர சிம்மா சனத்தில்
திரைலோக்யமுழு துடையாளொடும் வீற்றிருந் தருளி
மாமுதன் மதிக்குலம்விளக்கிய கோமுதற் கொற்றவன்மரான
திரிபுவனசக்கரவர்த்திகள் சிரீவீரபாண்டியதேவர்—

சுடாவீமன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி.

897. பூமலர்வளர் திகழ்திருமகள் புகழாகம் புணர்ந்திருப்ப
நாமலர்வளர் கலைவஞ்சி நலமிருமா மனத்துறையச்
சிமையவரைத் திறன்மடந்தை திருத்தோளின் மிசையாழ
விமையவர்கோ னன்றிட்ட வெழிலாரங் கழுத்திலங்கப்

---

[1]ஆங்கமைத்த தாயால்லூர், அடதென் னூட்டரையனென வறிவையோ லறிந்தணர்த்து, தென்னவர்தங் குலதெய்வர்தென்குமரிகன்....திருநாள் விழாவதனிற்(?) (896) T. A. S. ii, 19. [2]தளிருங் கைத்த மாதரிமை (?) (897) செந்தமிழ், தொ-4, பக், 514—

பகிரதிபோற் றுய்யபுகழ்ப் படர்வல்லி கொழுந்தோட்டத்
திகிரிவரைக் கப்புறத்துச் செழுந்திகிரி சென்றுலவத்
தண்டாரள மணிக்கவிகை தெண்டிரைசூழ் பார்நிழற்ற
வெண்கோபக் கலிகடிந்து செங்கோலெண் டிசைநடப்பச்
செம்மூரசின் மூகில்முழங்கச் சிலேயகன்று விசும்படையத்
திறற்புலிபோய் வனமடையக்
கயலிரண்டு நெடுஞ்சிகரக் கனவரையின் விளையாட
வொருமைமனத் திருபிறப்பின் முத்தீயின் நால்வேதத்
தருமறையோ ரைவேள்வி யாறங்க மூடன்சிறப்ப
வருந்தமிழு மாரியமு மறுசமயத் தறநெறியுந்
திருந்துகின்ற மனுநெறியுந் திறம்பாது தழைத்தோங்கக்
குச்சரரு மாரியரும் கோசலருங் கொங்கணரும்
வச்சிரருஞ் சோனகரும் வங்கியரு முதலாய
விருநிலமா முடிவேந்த ரிறைஞ்சிநின்று திறைகாட்ட
வடிநெடு வாளும் வயப்பெரும் புரவியுந்
தொடிநெடுந் தோளுமே துணையெனச் சென்று
சேரனுந் தானையுஞ் செருக்களத் தொழிய
வாரசும் புலரா மலைநாடு நூறப்
பருமா மரபிற் பொருதிறல் மிக்க
சென்னியைத் திறைகொண்டு கிண்டோள் வலியிற்
பொன்னி நாட்டுப் போசலத் தரைசர்
களப்புரி.....டைத்துப் பொங்கு வீரப்புரவியுஞ்
செருவிற லாண்மைச் சிங்கணன் முதலாய
தண்டத் தலைவருந் தானையு மழிபடத்
துண்டித் தளவில் சோரி வெங்கலிப்
பெரும்பிணக் குன்ற மிருங்கன் னிறைத்துப்
பருந்துங் காகமும் பாறுங்.....
அருந்தி மகிழ்ந்தாங் கமர்க்கள மெடுப்பக்
குவையுந் திகழ்கதிர் மணியு மடந்தைய
ராரா மார்பு மூடன்கவர்ந் தருளி
மூதகிடு போசளன் றன்னெடு மூனையுமது
தவறென் றன்னை பொற் பெற்றிட..... ...தி
போலுட் பகையாய்நின்ற
சேரனைக் கொன்று சினந்தணிந் தருளி
ரண்ணுதல் பிறரா லெண்ணுதற் கரிய
கண்ணனூர்க் கோப்பத்தைக் கைக்கொண் டருளிப்

பொன்னி சூழ்செல் வப்புன னுட்டைக்
கன்னி நாடெனக் காத்தருள் செய்யப்
பெருவரை யானிற் (?) பின்னகருக் காக்கிய
கருநட ராசனைக் களிறுதிறை கொண்டு
தலங்கொளி மணியுஞ் சூழி வேழமும்
மீலக்கை காவலனை யிறைகொண் டருளி
வருதிறை மறுத்தங் கவனைப் பிடித்துக்
கருமுகில் நிகளங் காலிற் கோத்து
வேந்தர்கண் டறியா விறற்றிண் புரிசைச்
சேந்த மங்கலச் செழும்பதி முற்றிப்
பல்லவ னெங்கப் பலபோ ராடி
நெல்வியல் நாடு நெடும்பெரும் பொன்னும்
பரும யானையும் பரியு முதலிய
வரசுரிமை கைக்கொண் டரசவற் களித்துத்
தில்லையம் பலத்துத் திருநடம் பயிலுந்
தொல்லை யிறைவர் துணைக்கழல் வணங்கிக்
குளிர்பொழில் புடைசூழ் கோழிமான் காளி
(ருனி)செறி வேம்பினணிமலர் கலந்த
தொங்கல் வாகைத் தொடைகள் சூட்டித்
திங்களுயர் மரபு திகழவந் திருந்த
தன்.....சையா னன்னிலை வினையம்
(எண்ணருங்) கலைதே ரின்மொழிப் பாவலர்
மண்ணின்மே லூழி வாழ்கென (வாழ்த்)தக்
கண்டவர் மனமுங் கண்ணுங் களிப்ப
வெண்டிரை மகர வேலையி னெடுவரை
யாயிரம் பணைப்பணைத் தனந்தன் மீமிசைப்
பாயல் கொள்ளும் பரமஞ்.....கத்
தொருபெருங் கடவு ளுவந்தினி திறையு
மிருபெருங் காவிரி யிடைநிலத் திலங்குந்
திருவரங் கம்பெருஞ் செல்வம் சிறப்பப்
பன்முறை யணிதிலா பார மேறிப்
பொன்மலை யென்னப் பொலிந்து தோன்றவும்
பொன்வேய்ந் தருளிய செம்பொற் கோயிலுள்
ளனந்தசிங் டாச னுதைய வெற்பெனத்
திருவளர் தூலமணிச் சிங்கா சனமிசை

மரகத மலையென மகிழ்ந்தினி தேறித்
தினகரோ தயமெனச் செழுங்கதிர் சொரியும்
கனக மாமுடி கவின்பெறச் சூடிப்
பாரான் வேந்த ருரிமை யரிவைய
ருருமருங்கு லன்று விரிபெருங் கவரியின்
மந்த மாடையு மலையத் தென்றலு
மந்தளிர்க் கரங்கொண் டசைய வீச
ஒருபொழு தும்விடா துடனிருந்து மகிழும்
திருமக ளன்னைத் திருத்தோள் மேவி
யொத்த முடிசூடி யுயர்பே ராணை
திக்கெட்டுஞ் சுடப்பச் செழுந்தவஞ் செய்த

* * *

உலகுமுழுது முடையாளெனும் வீற்றிருந் தருளிய
சிரீகோச்சடை வன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள்
சிரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு—

898. வாழ்க கோயில்பொன் வேய்ந்த மதிபதி
வாழ்க செந்தமிழ் மாலை தெரிந்தவன்
வாழ்க மண்டலம் யாவையுங் கொண்டவன்
வாழ்க சுந்தர மன்னவன் தென்னனே.

(சுந்தரபாண்டியன் தில்லையில் துலாபாரஞ் செய்தது.)

899. இனவரிக் கிம்புரி வெண்பிறைக் கோட்டிகல் வெங்கடுங்கட்
டினமத்த வெங்களிச் சுந்தரத் தென்னவன் றில்லைமன்றில்
வனசத் திருவுடன் செஞ்சொற் றிருவை மணந்தொக்கும்
கனகத் துலையுடன் முத்தத் துலையிற் கலந்ததுவே.

(சுந்தரபாண்டியன்செய்த போர்.)

900. வட்ட வெண்குடை மன்னர் தம்புகல்
கொண்டு மாமுடி கொண்டுபோர்
மாறு கொண்டெழு போக ளன்றடை
கொண்டு வாணன் வனம்புகத்
தொண்ட வெம்படை வீரன் வென்றி
புனைந்த சுந்தர மாறன்முன்

---

(898) திருப்புட்குழி விஜயராகவப்பெருமாள்கோயில் மகாமண்டபத்துக் கிழ்ப்பக்கத்துக்கண்ட சாஸனப்பகுதி. (செந்தமிழ். தொ-4, பக் 514-16,) (899) S. I. I. iv, p. 189; செந்தமிழ். தொ4, பக், 491,

சூழ விட்ட தலைங்கர் சேனை
துணித்து வென்றவெங் களத்துமேல்
விட்ட வெம்பரி பட்ட போதெழு
சோரி வாரியை யொக்குநேர்
மேன்மி தந்தரி ணப்பெ ருந்திரள்
வெண்ணு ரைத்திர ளொக்குமுன்
பட்ட வெங்கரி யந்த வாரி
படிந்த மாமுகி லொக்கு மீழ்
பரும ணிக்குடை யங்கு வற்றெழு
பருதி மண்டில மொக்குமே.

901. காரேற்ற தண்டலைக் காவிரி நாடனைக் காணுலகுந்
தேரேற்றி விட்ட செழுந்தமிழ்த் தென்னவன் சென்றெதிர்ந்து
தாரேற்ற வெம்படை யாரியர் தண்டு படத்தனியே
போரேற்று நின்ற பெருவாழ்த்தை யின்னும் புதுவார்த்தையே.

902. பண்பட்ட மென்மொழிப் பைந்தொடி கொங்கை பரக்கவைவேற்
கண்பட்ட முத்த வடங்கண்டெங் காக்கிலன் காடவர்கோன்
எண்பட்ட சேனை யெதிர்ப்பட் டொழுக வெழுந்தபுண்ணர்
விண்பட் டலையப் படைதொட்ட சுந்தர மீளவனே.

903. மீளா வழிசெல்ல வேணுடர் தங்கோ வெண்றதடந்
தோளான் மதுரைமன் சுந்தர பாண்டியன் சூழ்ந்திறைஞ்சி
யாளான மன்னவர் தன்னேவல் செய்ய வவனிமுட்ட
வாளால் வழிதிறக் கான்வட வேங்கை மார்திறந்தே.

904. கொங்க ருடல்கிழியக் குத்தியிரு கோட்டெடுத்து
வெங்க ணழலில் வெதுப்புமே—மங்கையர்கண்
சூழத்தா மப்புனையுஞ் சுந்தரத்தோண் மீளவுஞ்
கீழத்தா னிட்ட விறை.

905. வாக்கியல் செந்தமிழ்ச் சுந்தர பாண்டியன் வாளமரில்
வீக்கிய வன்கழற் கண்டகோ பாலனே யின்னுயிரைப்
போக்கிய பின்பவன் தம்பியர் போற்றப் புரந்தரசி
லாக்கிய வார்த்தை பதினெ லுலகமு மாகியதே.

(900—902) S. I. I. iv, No. 618-620; செந்தமிழ், iv, பக். 491-492.
(903—905) செந்தமிழ், iv, பக். 493.

கோமாறவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி 1.

906. பூமருவிய திருமடந்தையும் புவிமடந்தையும் புயத்திருப்ப
காமருவிய கலைமடந்தையுஞ் சயமடந்தையு நலஞ்சிறப்பக்
கோளார்ந்த சினப்புலியுங் கொடுஞ்சிலையுங் குலைந்தொளிப்ப
வாளார்ந்த பொற்கிரிமேல் வரிக்கயல்கள் விளையாட
இருங்கடல் வலயத் தினிதறம் பெருகக்
கருங்கலி கடிந்து செங்கோல் நடப்ப
ஒருகுடை நீழ லிருநில மருளிப்
மூவகைத் தமிழு முறைமையின் விளங்க
நால்வகை வேதமு நவின்றுடன் வளர
ஐவகை வேள்வியுஞ் செய்வினை யியற்ற
அறுவகைச் சமயமு மழகுடன் றிகழ
வெழுவகைப் பாடலு மியலுடன் பரவ
எண்டிசை யளவுஞ் சக்கரஞ் செல்லக்
கொங்கணர் கலிங்கர் கோசலர் மாளுவர்
சிங்களர் செவ்வியர் சீனர் குச்சரர்
வில்லவர் மாகதர் விக்கலர் செம்பியர்
பல்லவர் முதலிய பார்த்திவ ரெல்லாம்
உறைவிட மருளென வொருவர்மு னொருவர்
முறைமுறை கடவதந் திறைகொணர்ந் திறைஞ்ச
இலங்கொளி மணிமுடி யிந்திரன் பூட்டிய
பொலங்கதி ராரமார்பினிற் பொலியப்
பனிமலர்த் தாமரைத் திசைமுகன் படைத்த
மனுநெறி தழைப்ப மணிமுடி சூடிப்
பொன்னிசூழ் நாட்டிற் புலியாணை போயகலக்
கன்னிசூழ் நாட்டிற் கயலாணை கைவளர
வெஞ்சின விவுளியும் வேழமும் பரப்பித்
தஞ்சையு முறந்தையுஞ் சென்றமர் கொளுத்திக்
காவியு நீலமு நின்று கவினிழப்ப
வாவியு மாறு மணிநீர் நலனழித்துக்
கூடமு மாமதிலுங் கோபுரமு மாடரங்கும்
மாடமு மாளிகையு மண்டபமும் பலவிடித்துத்
தொழுதுவந் தடையா நிருபர்தந் தோகையர்
அழுத கண்ணீ ராறு பரப்பிக்

(906) S. I. I iv. p. 108—9.

கழுதைகொண் டுழுது கவடி விதித்திச்
செம்பியனைச் சினமிரியப் பொருதுசுரம் புகவோட்டிப்
பைம்பொன் முடிபறித்துப் பாணனுக்குக் கொடித்தருளிப்
பாடருஞ் சிறப்பிற் பருதி வான்றேய்
ஆடகப் புரிசை யாயிரத் தளியிற்
சோழ வளவ னபிஷேக மண்டபத்து
வீராபி ஷேகஞ் செய்து புகழ்விரித்து
நாளும் பரராசர் நாமத் தலைபிடுங்கி
மீளுந் தறுகண் மதயானை மேற்கொண்டு
நீராழி வையம் முழுதும் பொதுவொழித்துக்
கூராழியுஞ் செய்ய தோளுமே கொண்டுபோய்
ஐயப் படாத வருமறைதே ரந்தணர்வாழ்
தெய்வப் புலியூர்த் திருவெல்லை யுட்புக்குப்
பொன்னம் பலம்பொலிய வாடுவார் பூவையுடன்
மன்னுந் திருமேனி கண்டு மனங்களித்துக்
கோல மலர்மே லயனுங் குளிர்தூழாய்
மாலு மறியா மலர்ச்சே வடிவணங்கி
வாங்குசிறை யன்னந் துயிலொழிய வண்டெழுப்பும்
பூங்கமல வாவிசூழ் பொன்னம ராவதியில்
ஒத்துலகந் தாங்கு முயர்மேருவைக் கொணர்ந்து
வைத்தனைய சோதி மணிமண் டபத்திருந்து
சோலை மலிபழனச் சோணாடுந் தானிழந்த
மாலை முடியுந் தரவருக வென்றழைப்ப
மான நிலைகுலைய வாழ்நகரிக் கப்புறத்துப்
போன வளவ னுரிமை யொடுபுகுந்து
பெற்ற புதல்வனெனின் பேரென்று முன்காட்டி
வெற்றி யரியணைக்கீழ் வீழ்ந்து தொழுதிரப்ப
தாளுடி முன்னிகழ்ந்த தன்மையெலாய் கையகலத்
தாளு தகம்பண்ணித் தண்டார் முடியுடனே
விட்ட புகலிடத்தன் மாளிகைக் குத்திரிய
விட்டபடிக் கென்று மிதுபிடிபா டாகவெனப்
பொங்குதிரை ஞாலத்துப் பூபாலர் தோள்வினங்குஞ்
செங்கயல்கொண் மீன்றுஞ் திருமுகமும் பண்டிழந்த
சோள பதியெல்லு நாமமுந் தொன்னகரும்
மீள வழங்கி யிடைகொடுத்து விட்டருளி

வாகைக் கதிர்வேல் வடவேந்தர் தம்பாதம்
மேகத் தலையணிய வீரக் கழலணிந்து
விளங்கிய மணியணி வீரசிம் மாசனத்து
வளங்கெழு கவரி யிருமருங் கசைப்பக்
கடலென முழங்குங் களிநல் யானை
வடபுல வேந்தர் மணிப்புயம் பிரியா
இலகுகுழை யிலையர் தொழுதகின் றேத்தும்
உலகமுழு துடையாளொடும் வீற்றிருந் தருளிய
கோமாற வன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள்
சோணாடு வழங்கி யருளிய
ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு—

ஷ. சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி.—2.

907. பூமலர்த் திருவும் பொருசய மடந்தையும்
தாமரைக் குவிமுலை சேரப்புயத் திருப்ப
வேத நாவின் வெள்ளிதட் டாமரைக்
காதன் மாது கவின்பெறத் திளைப்ப
வெண்டிரை யுடுத்த மண்டிணி கிடக்கைத்
திருவில் மடந்தை யுரிமையிற் களிப்பச்
சயமகள் நீதியுந் தருமமுந் தழைப்ப
இணையவர் விழாக்கொடி யிடந்தொறு மெடுப்பக்
கருங்கவிக் கலல்கெடக் கடலுள் வேதியர்
அருந்தொழிற் வேள்விச் செங்கனல் வளர்ப்பச்
சுருதிபுத் தாரிழுந் தொல்வளங் குலவப்
பொருதிற லாழி பூதலஞ் சூழ்வர
ஒருகை யிருசெவி மும்மத நாற்கோட்
டயிரா வதமுதற் செயிர்தீர் கொற்றத்
திருண்டிசை யானை யெருத்த மேறிக்
கோசலந் திருவவந் குகிரய குச்சரம்
போசல மகதம் பொப்பளம் புண்டரம்
கலிங்க மீழங் கடாரங் கவுடம்
தெலிங்கஞ் சோனகஞ் சீன மூதலா
விரிமுறை திகழ வெவ்வேறு வகுத்த
முதுநிலக் கிழமையின் முடிபுனை வேந்தர்க்
கொருதனி நாயக னென்றல கேத்தத்

(907) சாஸனம்.

திருமுடி சூடிச் செங்கோ லோச்சிக்
கொற்றத் தரளக் குளிர்குடை நீழற்
கற்றைக் கவரி காவலர் வீச
ரிடைகதிர் நவமணி வீரசிங் காதனத்
துடன்முடி சூடியுயர்குலத் திருவெனப்
பங்கய மலர்க்கரங் குவித்துப் பார்த்திவர்
மங்கையர் திரண்டு வணங்குஞ் சென்னிச்
சுட ரொளி மவுலிச் சூடா மணிமிசைச்
சிவந்த வினைமலர்ச் சிறடி மதுகரம்
கமலமென் றணுகு மூலகமுழு துடையாளொடு
வீற்றிருந்தருளிய
மாமுதன் மதிக்குலம்விளக்கிய கோமுதற் கோமாறவன்மரான
திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர்க்கு
யாண்டு—

சுந்தரபாண்டியன் செய்த கோபுரத்திருப்பணி.

908. சந்திர சேகரர் தென்மது ரேசர்தஞ் சந்நிதியில்
வந்தொரு கோபுர மாமக மேரு வளர்ந்ததெனச்
சுந்தர பாண்டியன் கோபுரமொன்று துலங்கச் செய்தான்
மந்தர நேர்புயன் சுந்தர பாண்டிய மன்னவனே.

தலசேகரபாண்டியன்.

909. உடைய சிவன்புதல்வ னுக்கிரனுக் கப்பால்
அடையுமுடி யையெட்டி லக்கத்—திடையறுபத்
தையா யிரத்தறுநூற் றைம்பதின் மேலழகன்
கையேற் குலசே கரன்.

தலசேகரபாண்டியனது வேப்பத்தூர்த்தானம்.

910. தனக்கொருபத் தேழு கலிக்கொருபத் தாறு
புனக்குமிக் கோமான் புதல்வன்—மனக்கினிய
தென்னிம்பை பூதனைச் சேர்மறையோ ருக்களித்தான்
கன்னன் குலசே கரன்.

கோமாறவர்மன் தலசேகரபாண்டியன் மெய்க்கீர்த்தி.

911. தேர்போ லல்குற் றிருமகள் புணரவும்
கார்சேர் குன்றத் கலைமகள் கலப்பவும்

---

(908) மதுரைத்திருப்பணிமாலை. 7. (909) செந்தமிழ், iv, பக். 690. (910) திருவாலவாயுடையார் திருவிளையாடல், பெரும்பற்றப்புலியூர் நம்பி வரலாறு. (911) சாஸனம்.

பார்மகள் மனத்துப் பாங்குட னிருப்பவும்
செங்கோ னடப்பவும் வெண்குடை நிழற்றவும்
கருங்கலி முருங்கவும் பெரும்புகழ் விளங்கவும்
காளிலே செம்பியன் கடிப்புலி யாளவும்
மீனம் பொன்வரை மேருவி லோங்கவும்
முத்தமிழ் மனுநூலு நான்மறை முழுவதும்
எத்தவச் சமயமு மினிதுடன் விளங்கவும்
சிங்கணங் கலிங்கந் தெலிங்கஞ் சேதிபம்
கொங்கணங் குதிரம் போசளங் குச்சனம்
முறைமையி னுளந்தூதரில வேந்தர்
நிறைமுறை காட்டிச் சேவடி வணங்க
மன்னர் மாதர் பொன்னணி கவரி
இருபுடை மருங்கு மொருபடி யிரட்டப்
பழுதறு சிறப்பிற் செழுவை காவலன்
வீரசிங் காதனத் தோராங் கிருந்தே
யாரும் வேப்பு மணியிதழ் புடையாத்
தாருஞ் சூழ்ந்த தடமணி மகுடம்
பன்னூ றூழி தொன்னிலம் புரந்து
வாழ்கென ..... மகிழ்ந்திடன் சூடி
அலைமகள் முதலா மாவையர் பரவ
உலகமுழு துடையா ளொடும்வீற்றிருந் தருளின
கோமாற வன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள்
ஸ்ரீகுலசேகர தேவர்க்கு யாண்டு.—

912. கொத்தலருந் தாரான் குலசே கரன்கூடற்
பத்தி யிளங்கமுகின் பாலொதாறு—தத்திவரும்
தாளஞ் சுகமே தலைவர் நமைப்பிரிந்தால்
நாளஞ் சுகமே நமக்கு.

913. பூதம்பணி கொண்டாய்கடல் பாதந்தொழ நின்றாய்
புயலேத்தவ யிட்டாய்கயல் பொற்குன்று பொறித்தாய்
மூதண்டபு ரேசன்கதிர் முடிசித்த முனிக்தாய்
மூரிச்சிலை வேளாண்மை மூடிக்குந்திற மரிதோ
வேதண்டமொ ரெட்டிங்கினர் வேழங்களொ ரெட்டும்
வீடாகமு மூடனெந்த வீழாமற்புலி யாளும்
கோதண்ட முகுந்தாவர குலசேகர மாரு
கூடற்பதி யிறைவாவுயர் கொற்கைப்பெரு மானே.

(912, 913) தஞ்சைச் சரச்சுவதிமால் பிரதி.

914. சுரும்பேய்க்கும் வாட்கண்ணி பங்காளர் கண்கொண்டு சுட்டுவிட்ட
பெரும்பேய்க்கு வேப்பிலைக் காப்புத வாய்பிணர் சேர்பசுங்கோங்
கரும்பேய்க்கு மென்மூலை யாரமு தூட்டி யடர்ந்துகொல்ல
வரும்பேய்க்கு வாணுத வுங்குல சேகர மன்னவனே.

915. சடம்பழுக் குங்கிழட் டுக்குரு கீர்தலை சாய்த்துநின்று
முடம்பழுக் குங்கைதை நற்றுறை யிற்றெங்கு முப்புடைக்காய்
குடம்பழுக் குங்கொற்கை யான்குல சேகரன் கூடலிலென்
னுடம்பழுக் குஞ்சிறை யும்பழி காரு ருணாந்திலரே.

916. அலைகுளிப் பாட்டுஞ் சலராசி யேழு மடங்கவுண்டு
மலைகுளிப்பாட்ட வருங்கொண்டல் காடெவ்வர் மார்பில்வெள்வேற்
கொலைகுளிப்பாட்டுங்குலசேகரன்கொற்கைக் கொம்பின்கண்ணீர்
முலைகுளிப் பாட்டவன் றேறுவெம்மை நீர்விட்டு முந்துவதே.

விக்கிரமபாண்டியன்.

917. சீர்கொண்ட வெள்ளாறு குருதிப் பெருக்கிற்
செவ்வாறு பட்டோட வவ்வாறு சென்றப்
போர்வென் றுணைப்பேய் நடங்கண்ட தற்பின்
புலியூர் நடங்கண்ட புவனேக வீரா
பார்பண் டளந்துண்டொ ராலிற் கிடக்கும்
பச்சைப் பசுங்கொண்ட லேபற்ப நாபா
கார்கொண்ட தின்கையில் வேலுக்கு வற்றுங்
கடலல்ல வென்பேதை கண்டந்த கடலே.

918. மாறுபடு மன்னவர்தங் கைபூண்ட வாளிரும்பு
வேறுமவர் கால்பூண்டு விட்டதே—சீறுமிக
வேட்டங் திரிகளிற்று விக்கிரம பாண்டியன்றன்
நாட்டங் கடைசிவந்த நாள்.

919. மீனவற்கு விக்கிரம பாண்டியற்கு வேற்தரிடும்
யானே திருவுள்ளத் தேறுமோ—தானவரை
வென்றதல்ல மேனிநிறம் வெள்ளையல்ல செங்கனகக்
குன்றதல்ல நாலல்ல கோடி.

920. ஏந்து மருவி யிரவி புரவியின்மூன்
பூந்துவலை வீசும் பொதியிலே—கார்தினை

(914—916) தனிப்பா. (917-918) திதம்பரசாஸனம்; S. I. I. IV, No. 228. (919-420) சாஸனப்பாடல்கள்; செந்தமிழ். IV. பக்கம் 493—494.

வேணு டனெவென்ற விக்கிரம பாண்டியன்மெய்ப்
பூணரம் பூண்டான் பொருப்பு.

921. புயலுக் தருவும் பொருகைப் புவனேக வீரபுனல்
வயலுக் தரளந் தருகொற்கை காவல வாரணப்போர்
முயலுங் கணபதி மொய்த்தசெஞ் சோதி முகத்திரண்டு
கயலுண் டெனுமது வேமுனி வாறிய காரணமே.

922. வெங்கண் மதயானை விக்கிரம பாண்டியனே
பொங்கி வடதிசையிற் போகாதே—யங்கிருப்பாள்
பெண்ணென்று மீண்ட பெருமாளே பேரிசையாழ்ப்
பண்ணென்று வேய்வாய் பகை(?).

விக்கிரமபாண்டியன் செய்த மதுரைத் திருப்பணிகள்.

923. மட்டா ரலங்கல் புனைசோழன் விட்ட மதகளிற்றைக்
கட்டா ரழல்விழிச் சிங்கக் கணைதொட்டுக் காய்ந்தசொக்கர்க்
கட்டாலே மண்டப முண்டாக்கி ஞனல் லறந்தழைப்பப்
பட்டாபி டேகம் புனைகூடல் விக்ரம பாண்டியனே.

924. கல்லானை யானதை யெல்லாருங் காணக் கரும்புதந்த
வல்லாமும் வல்லசித் தர்க்குப்பொற் கோயி லினிதமைத்தான்
வல்லாரில் வல்லவன் சந்தரு லேச மகாமன்னவன்
பல்லாரும் போற்ற வருகூடல் விக்ரம பாண்டியனே.

பராக்கிரமபாண்டியன்.

("சார்வபௌமன் பாண்டியன்வாசலில்வந்து அவன்புறப்படவில்லை யென்று பழியாகப் பாதிபாடி, அவன் வந்து வணங்கப் புகழாகப் பாதி பாடியது")

925. ஏண்ணீர்மை நூலுக் கெகத்திய ஞமிவ னென்பதெல்லாம்
வெண்ணீர்மை யன்றி விரகல்ல விக்ரம மாறன்செஞ்சொற்
பண்ணீர்மை தேரும் பராக்ரம மாறன் பதங்கழுவுத்
தண்ணீர் குடித்தல்ல வோகும்ப யோனி தமிழ்சுற்றதே.

926. வடிவைத்த வேல்வல்ல வையர் தொழுகின்ற மாறன்முன்னுட்
படிவைத்த வுள்ளிப் பராக்ரம பாண்டியன் பார்புரக்க
முடிவைத்த பின்பு பராசர் தங்கண் முறைமையிட்டுக்
குடிவைத் தனர்செய்ய கானிலும் வானிலும் குன்றிலுமே.

(921—922) சாஸனப்பாடல்கள்; செந்தமிழ். IV, பக். 498—494. (923-924) மதுரைத்திருப்பணிமாலை. 10, 11. (925) தமிழ்நா. 147. (926) மதுரைச் சொக்கநாதர்கோயில் மேலைக்கோபுரத்திற் கண்ட சாஸனப்பாட்டு.

927. கடந்தூங்கும் வேழப் பிடர்க்கே வரக்கண்டு கண்கண்முத்து
வடந்தூங்க [1]வாடு மயிற்கென்செய் கேன்பல வாய்கடொறும்
விடந்தூங்கு பாம்பின் [2]படத்தே யுறுத்தி மிதித்தொருகாற்
படந்தூங்க வாடும் புயலே பராக்கிர பாண்டியனே.

928. சராசரி சம்பு வயிரியென் மாது சரீரமெல்லாம்
பொராரா சரத்துக் கிவள்பொரு தோபகும் பொற்கிரண
சுராராச திவ்ய கிரீட விபாடத் தொடித்தடக்கைப்
பராராச ராவண ராமா பராக்கிர பாண்டியனே.

929. காளை முகிற்குல மெல்லாம் விலங்கு கடிந்திட்டநீ
வேளையு மப்படிச் செய்திலை தேவியோ டல்வயலில்
வாளை குதித்து வளர்பூங் கமுகின் மடல்லாடியப்
பாளை முறிக்குந் துறைவா பராக்கிர பாண்டியனே.

930. ஆர்க்குங் குளிரு நிலவுயர் கோளின் மலங்கல்பெரு
வார்க்குங் குமமூலை யாட்கன லாகும் வடக்குந்தெற்கும்
மேற்குங் கிழக்கு மொருவெருப் பாய்கின்று விண்ணேயெட்டிப்
பார்க்கும் புகழுக் கிறைவா பராக்கிர பாண்டியனே.

931. கூரம் பொறுத்த விழியாள் கதலிக ளுருத்திலிட்ட
ஈரம் பொறுக்க வறிந்திலை யோயித்த னிட்டசெம்பொ
ஞரம் பொறுத்த புயமீதி லாயிர நாவுரக
பாரம் பொறுத்த புயலே பராக்கிர பாண்டியனே.

932. காம்பு வனம்புக்க தோளாட்கு நின்றன் கழுத்திலிட்ட
வேம்பு தனக்கும் விதியில்லை யோவெகுண் டாய்ச்சியர்கள்
தாம்பி னடிக்க வுரலோடு கட்டத் தடைப்பட்டுச்சிப்
பாம்பி னடிக்கின்ற மாலே பராக்கிர பாண்டியனே.

933. ஒருவா ணுதல்பண் டுளங்களிக்க வுயர்வான் முகடு கிழித்தெழுந்து
மருவார் தருவின் மரங்கொணர்ந்த மதுரை வடிவே [3]லதிதீரா
அரவார் வேம்பின் பசுங்கண்ணி யத்தி யிறைவிக் கருளென்னு
இரவா விருக்க நீயளித்தற் கிரங்கா திருந்தா யிதுநாளே.

பராக்கிரமபாண்டியன்செய்த திருப்பணி.

934. கிரமேவு கங்கை யணிசொக்க நாதர்க்குச் சீர்பெறவே
உரகா திபனுறை பாதலம் பேதித் துவானங்கட்டித்

---

(927) தஞ்சைச் சரச்சுவதிமால் பிரதி: [1]லாடுஉ மிளிக்கென்செய் கேன்மணி வாய்திறக்க. [2]படத்தின் மிசைதிரி தித்தியென. (928—933) தனிப்பா. [3]லதிவீரா; இப்பாடத்தால், அதிவீரராமபாண்டியனுக்குரியதாக இச்செய்யுள் அமையும். (934) மதுரைத்திருப்பணிமாலை. 12.

நிரமேவு மேரு வெனக்கோ புரமேற் றிசையமைத்தான்
பரராசர் நாளும் பணியும் பராக்ரம பாண்டியனே.

935. ஆலி னிலைக்கு ளடங்கிய மாய னவனியெல்லாம்
சேலி லடக்கிய செண்பக மாறன்றெவ் வேந்தர் தம்மை
வேலி லடக்கிய வையந் தொழுதென்னன் மீண்டுமுன்னைக்
காலி லடக்குவன் காணத் தகுங்கொழி கார்க்கடலே.

936. வெறிக்குங் குமக்கொங்கை மீதே யிளம்பிறை வெள்ளிலா
எறிக்கும். பொழுதவந் தாயிலை யேயிலங் காபுரியைக்
குறிக்கின்ற ராவணன் பொன்முடி பத்துங் குரங்கைவிட்டுப்
பறிக்கின்ற சண்பக மாரு பராக்ரம பாண்டியனே.

937. மற்றெழுப் பிலாக்கொடைச் செண்பக மாற வரோதயனின்
வெற்றிக் கிரண்டுண் டடங்காத காரிய மேருவிரிச்
சுற்றுக்குங் கீர்த்தி யடங்காது நின்னுடைத் தோடழுவாக்
கற்றைக் குழலிக்கு மாலடங் காதிது கைகண்டதே.

அரிகேசரி—பராக்கிரமபாண்டியன் மெய்க்கீர்த்தி.

938. பூமிசை வனிதை மார்பினிற் பொலிய
நாமிசைக் கலைமக ணலமுற விளங்கப்
புயவரை மீதி சயமகள் புணரக்
கயலினை யுலகின் கண்ணெனத் திகழச்
சந்திர குலத்து வந்தவ தரித்து
மூன்றையோர் தவத்து மூளெனை வளர்ந்து
தென்கலை வடகலை தெளிவுறத் தெரிந்து
மன்பதை புரக்க மணிமுடி புனைந்து
சங்கர சரண பங்கயஞ் சூடிச்
செங்கோ லோச்சி வெண்குடை நிழற்றி
வான வாரியு மன்னருள் வாரியும்
தான வாரியுந் தப்பா தளித்து
மறக்களை பறித்துகல் லறப்பயிர் வினைத்துச்
சிங்கையி லனுரையி லிராசையிற் செண்பையில்
வித்தையி லறந்தையின் முதலையில் வீரையில்
வைப்பாற்.....மன்னரை வெங்கண்
டெப்பாற் றிசையு மிசைவிளக் கேற்றிப்

---

(935) சாஸனப்பாட்டி ; செந்தமிழ், தொகுதி, 4. பக். 494.
(936—937) தனிப்பா. (938) T. A. S. 1. P. 91.

பதினெண் பாடைப் பார்த்திவ ரனைவரும்
திறையுஞ் சின்னமு முறைமுறை கொணர்ந்து
குறைபல விரந்து குரைகழ லிறைஞ்ச
அவரவர் வேண்டிய தவரவர்க் கருளி
அந்தண ரனேகர் செந்தழ லோம்ப
விந்தைமுத லகர மைந்திடத் தியற்றிச்
சிவநெறி யோங்கச் சிவார்ச்சனை புரிந்து
மருதூ ரவர்க்கு மண்டப மமைத்து
முன்னெரு தூறு மூங்கில்புக் கிருந்த
சிற்பரர் தம்மைத் திருவத்த சாமத்திப்
பொற்கலத் தமுது பொலிவித் தருளிச்
சண்பக வனத்துச் சங்கார் தமக்கு
மண்டப மமைத்து மணிமுடி சூட்டி
விழாவணி நடாத்தி விரைப்புன லாடல்
வழாவகை நடாத்தின் மன்னரு ளதனுல்
வற்ரு வருவியும் வற்றி வற்கடம்
உற்றவிக் காலத் துறுபுன னல்கென
வேண்டியப் பொழுதே வேறிடத் தின்றிச்
சேண்டரு புனலித் செழும்புன லாட்டி
மின்கால் வேணி விசுவநா தர்க்குத்
தென்கா சிப்பெருங் கோயில் செய்து
நல்லா கமவழி நைமித் திகமுடன்
எல்லாப் பூசையு மெக்கோ யிலினும்
பொருண்முத லனைத்தும் புரையற நடாத்தித்
திருமலி செம்பொற் சிங்கா சனமிசை
உலக முழுது முடையா ளுடனே
இலகு கருணை யிரண்டுரு வென்ன
அம்மையு மப்பனு மாயனைத் துயிர்க்கும்
இம்மைப் பயனு மறுமைக் குறுதியும்
மேம்பட நல்கி வீற்றிருந் தருளிய
ஸ்ரீ அரிகேசரி பராக்கிரம தேவர்க்கு யாண்டு.—

939. அன்பினுடன் சகாத்தமா யிரத்து மூர்நூற்
றறுபத்தெட் டதன்மேல்வை காசித் திங்கள்
மன்றியதி யீரைந்திற் பூர்வ பக்க
மருவுதசமியில்வெள்ளி வாரந் தன்னில்

மின்றிகழுத் தராணீ னத்தில் வாகை
வேலரிகே சரிபராக் ரமம கீபன்
தென்றிசையிற் காசிநகர்க் கோயில் காணச்
சென்று நின்று கருடணைதான் செய்வித் தானே.

940. பன்னுகலி யுகநாலா யிரத்தைஞ் ஞூற்றைம்
பத்தெட்டின் மேலெவரும் பணிந்து போற்றச்
செந்நெல்வயற் றென்காசி நகரி கற்கார்த்
திகைத்திங்கட் டியதியைந்திற் செம்பொன் வார
மன்னியமார் கழிநாளின் மதுரை வேந்தன்
வடிவெழுதா ணைதபராக் ரமம கீபன்
சொன்னவரை போற்றிருக்கோ புரமுங் காணத்
திடியிடையா யுபான மூதற் றுடங்கினானே.

941. மென்காசை மாமல ரன்னமெய் யோற்கும் விரிஞ்சனுக்கும்
வன்காசு தீர்த்திடும் விச்சுவ நாதன் மகிழ்ந்திருக்கப்
பொன்காசை மெய்யென்று தேடிப் புதைக்குமிப் பூதலத்திற்
றென்காசி கண்ட பெருமாள் பராக்ரமத் தென்னவனே.

942. ஓங்கு நிலையொன்ப துற்றதிருக் கோபுரமும்
பாங்குபதி னொன்று பயிறூணுந்—தேங்குபுகழ்
மன்னர் பெருமான் வழுதிகண்ட தென்காசி
தன்னிலன்றி யுண்டோ தலத்து.

943. அணிகொண்ட விந்த வணங்குமொன் றேயடி யேற்குனக்கு
மணிகொண்ட வாசன் மணியுமொன் றேபகை மன்னரையும்
பிணிகொண்ட காரையு மூர்நீ ரையும்பெரும் பூதத்தையும்
பணிகொண்ட செண்பகத் தென்ஞ பராக்ரம பாண்டியனே.

பராக்கிரமபாண்டியன் தென்காசிக் கோயில்கண்டு பாடியவை.

944. ஆரா யினுமிந்தத் தென்காசி மேவும்பொன் னுலயத்தி
வாராத தோர்குற்றம் வந்தாலப் போதங்கு வந்ததனே
நேராக வேயொழித் திப்புரப் பார்களை நீதியுடன்
பாரா ரறியப் பணிர்தேன் பராக்ரம பாண்டியனே.

945. அரிகே சரிமன் பராக்ரம மாற னரனருளால்
வரிசேர் பொழிலணி தென்காசிக் கோயில் வகுத்துவலம்

(940—941) T. A. S. I. P. 91. (942—945) செந்தமிழ்த்தொகுதி 1. தென்காசிச்சாஸனப்பகுதி.

புரிசேர் கடற்புவி போற்றவைத் தேனன்பு பூண்டிதனைத்
திரிசேர் விளக்கெனக் காப்பார்பொற் பாதமென் சென்னியதே.

946. சாத்திரம் பார்த்திங்ஙன் யான்கண்ட பூசைக டாநடத்தி
ஏத்தியன் பால்விசுவ நாதன்பொற் கோயிலென் றும்புரக்கப்
பார்த்திவன் கொற்கைப் பராக்ரம மாறன் பரிவுடனங்
கோத்திரந் தன்னிலுள் ளார்க்கு மடைக்கலங் கூறினனே.

947. சேலே றியவயற் றென்காசி யாலயந் தெய்வச்செய
லாலே சமைந்தநின் கென்செய லல்ல வதனையின்னம்
மேலே விரிவுசெய் தேபுரப் பாரடி வீழ்ந்தவர்தம்
பாலேவல் செய்து பணிவன் பராக்ரம பாண்டியனே.

948. மனத்தால் வருக்கவு மெட்டாத கோயில் வருக்கமுன்னின்
றெனைத்தான் பணிகொண்ட நாதன்றென் காசியை யென்றுமண்
டினைத்தா தரஞ்செய்தங் காவல்புனையு மிருபர்பதந் [மேல்
தனைத்தா னிறைஞ்சித் தலைமீதி யாணுந் தரித்தனனே.

949, பூந்தண் பொழில்புடை சூழுந்தென் காசியைப் பூதலத்திற்
றுந்தங் கிளையுட னேபுரப் பார்கள்செந் தாமரையாள்
காந்தன் பராக்ரமக் கைதவன் மான கவசன்கொற்கை
வேந்தன் பணிபவ ராகியெந் நாளும் விளங்குவரே.

பராக்கிரமபாண்டியன் சிவபதமடைந்தது.

950, காண்டகு சீர்புனை தென்காசிக் கோபுரக் கற்பணியா
ருண்டின் முடித்துக் கயிலைசென் றுனதி லேசர்பதம்
பூண்டுறை சிந்தை யரிகே சரிவிந்தைப் போர்கடந்த
பாண்டியன் பொன்னின் பெருமாள் பராக்ரம பாண்டியனே.

951. கோதற்ற பத்தி யறுபத்து மூவர்தங் கூட்டத்திலோ
நீதற்ற வெள்ளிச் சிலம்பகத் தோசெம்பொ னம்பலத்தோ
வேதத்தி லோசிவ லோகத்தி லோவிசுவ நாதனிரு
பாதத்திலோ சென்று புக்கான் பராக்ரம பாண்டியனே.

952. ஏரார் சகாத்தமூன் நூற்றுட னாயிரத் தெண்பத் தைஞ்சிற்
சீரார மார்கழிச் சித்திரை நாளிற் சிறந்தருற்றம்
வாராத பூர ணையினிற் பராக்ரம மாறனெங்கோன்
[காராரும் கண்டத் தரன்கயி லாயந்தான் கண்டனனே!]

(946—952) செந்தமிழ்த்தொகுதி 4. தென்காசிச் சாலைப்பகுதி.

வீரவேள் குலசேகரபாண்டியன் முடிசூடியகாலம்.

953. ஏறிய சகாத்தமா யிரத்திநாணூற் றெழுபஃ
தியலுலி லாண்பெரி தாபிதனின் மாதந்
தேறியசித் திரையிலிரு பத்தொன்ப தாகுந்
தேதியிரண் டாம்பக்கந் திங்களுரோ கணிநாள்
வீறுயர்ந்த மிதுனத்து நெல்வேலி மாறன்
வீரவேள் குலசேக ரச்செழிய னென்றும்
ஆறுபுனை யகிலேசர் காசியிலே வீளங்க
வணிமவுலி தரித்தனன்பா ரரசர்பணிக் தனரே.

954. ஏடியன் மாலே யணிந்தாலும் வாகை மெனப்புலவர்
பாடிய வீரவெண் பாமாலை யைப்பொன்னின் பாண்டியன்போர்
தேடியவேற் செழியன்குல சேகரத் தென்னனைப்போற்
சூடிய வேந்தருண் டோவொரு வேந்தரைச் சொல்லுகிலே.

955. விண்ணுடர் போற்றுந்தென் காசிப்பொற் கோபுர மீதிலெங்கள்
அண்ணல்வி செய்த பணியிப் படிக்குறை யாய்க்கிடக்க
ஒண்ணுதனக்கண் பெயர்ந்ததட் டோடெங்கு மூன்றளித்தான்
மண்ணுலு மாலழ கன்குல சேகர மன்னவனே.

சீவலவேள்மாறன் முடிசூடிய காலம்.

956. சகன்கால மாயிரத்து நாணூற்றெண் பத்தாறிற் சலதி சூழ்ந்த
செகங்காண விரத்தாக்கி சித்திரையி லிருபதாந் தேதி வேந்தர்
புகழ்ந்தேவல் செய்பூர்வ திதியாறின் மூதல்வாரம் புனர்பூ சத்திற்
சுகந்தாதி புனையழகன் சீவலவே ளெனமகுடஞ் சூடி னனே.

அதிவீராமபாண்டியன்.

957. அத்தர்தென் காசிகண் டோன்கண்ட வாலயமு
மடியாரும் வாழ்வு பெறவந்
தழகனதி வீரரா மன்சருவ மானியம
தாகக் கொடுத்த படிதான்
சித்திரைப் பரணியூர்த் தெண்டதோ டப்பொன்
திரும்பக் கொடுத்த வூரிற்
செங்கோட்டை யார்கொண்ட பகுதியு மீறுத்திக்
கிருக்கோயி லிற்பகுதியாய்

(953—957, செந்தமிழ்த்தொகுதி 4, தென்கா-சிசாஸனப்பகுதி.

வைத்ததை யறக்கழித் தாயங் கணைக்குடன்
மகாநவமி திருநாளிடை
வந்த காணிக்கைபாட் டப்பகுதி காணம்பல்
வரியிலையெ லாங்கழித்துப்

பத்தியாய்க் குணராம நாதர்க்கு மேற்படி
பணங்கழித் தடியர்வீட்டிப்
பணமுங் கழித்திப் படிச்சருவ மானியப்
பட்டயமு மருளி னனே.

வீரபாண்டியன் முடிசூடியகாலம்.

958. நண்புற் றெதிர்ந்தகலி நாலா யிரத்தறுநூற்
றெண்பத்தொன் பானி லிருங்கடல்சூழ்—மண்பெற்று
றின்னுமகு டம்புனைந்தான் வேல்வீர மாறனென
மன்னவர்கோ மானபிரா மன்.

வீரபாண்டியன் முடிசூட்டுநாட் காசிக்கலியன்கவிராயன் பாடிய மங்கலம்.

(நாண்மங்கலம்).

959. சீர்கொண்ட செங்கமலை வாழத் திரையாடை
பார்கொண்ட வாள்வீர பாண்டியனென்—றேர்கொண்ட
காலுலா மாலைக் கனகமகு டம்புனைந்தான்
மானவே லானபிரா மன்.

(குடைமங்கலம்).

960. சேணுலவு வெண்டிங்கட் செல்வனெனத் தண்ணென்று
நீணிலமோ ரேழு நிழற்றுமே—பேணிவந்து
பூவேந்த ரேத்தும் புகழ்வீர பாண்டியனங்
கோவேந்தன் கொற்றக் குடை.

(வாண்மங்கலம்).

961. பற்றலர்மண் கொள்ளும் பணிந்தார்க் கரசளிக்கும்
கொற்ற முயர்க்குமறங் கூருமே—வித்தடர்தோள்
வில்லவனே வென்றுகொண்ட வீரமா துன்செழியன்
வல்லமெறிந் தானேந்து வாள்.

962. கற்றுணர்ச்தோன் காசிக் கலியன் கவிராயன்
மற்றடர்தோள் வேல்வீர மாறனுக்குச்—சொற்புனைந்தான
காண்மகங் கலமு ஈவிற்றுகுடை மங்கலமும்
வாண்மகங் கலமும் வருத்தி.

(வானன்) நாலுதாதியரைப் பாண்டியன்மாலை வாங்கிக்கோவை அனுப்ப அவர் பாடியவை.

963. தென்னவா மீனவா சிவலமா ருமதுரை
மன்னவா பாண்டி வரராமா—முன்னஞ்
சுரும்புக்குத் தாரளித்த தூயதமிழ் நாடா
கரும்புக்கு வேம்பிலே கண்.

964. மாப்பைந்தார்க் சல்லமுத்து வண்ணத்தார்க் கல்லஞ்சி
வேப்பந்தார்க் காசைகொண்டு விட்டாளே—பூப்பைந்தார்
சேர்ந்திருக்கு நெல்வேலிச் சிவலமா ருதமிழை
ஆய்ந்திருக்கும் வீரமா ரு.

965. வேம்பா லிலுமினிய சொல்லிக்கு நீபயர்த்த
வேம்பா லிலுமுதவ வேண்டாவோ—தேம்பாயும்
வேலையிலே வேலைவைத்த மீனவா நின்புயத்தி
மாலையிலே மாலைவைத்தாள் மான்.

"இந்த மூன்றுகவிக்கும் மாலைகொடாளைப் பின்னேருந்தி பாடியது."

966. இலகு புகழாறை யேகம்ப வாணன்
அலகை வரும்வரு மென்றஞ்சி—யுலகறிய
வானவர்கோன் சென்னியின்மேல் வண்ண வனையெறிந்த
மீனவர்கோன் கைவிடான் வேம்பு.

[("இதுகேட்டு மாலை கொடுத்தான்")]

967. நடந்த தெங்குநின் றெங்கினை நடப்பது
நம்மையோ கமலத்தி
மடர்தை யென்பது வர்தது வரவொரு
வாசகர் தர்தாலோ
கடர்த ருங்களிற் றண்ணல்சி வலவனற்
களவழி நன்னாட்டிற்

(962) T. A. S. I., 115—6. (963—966) தமிழ்நா. 179—82, (967) இறையனர்களவியல் மேற்கோள்விளக்கம்.

ரெடார்த்து வண்டினஞ் பின்வர முன்வருந்
துடியிடை மடவீரே.

968. பூணித் திலத்துப் புயல்வீர மாறன் புகல்கலிக்கு
நாணிப் புலவர்செல் லாதென்செய் வாரிந்த நானிலத்தில்
ஆணிக் கனக மணந்தரிற் பூமணம் யார்கொள்ளுவார்
மாணிக்கந் தித்திக்கி னென்னுகு மற்ற மதுரங்களே.

969. மங்கலமங்கையராய் மன்னவர் கன்னியராய்
மைந்தர் வயிற்றினராய் வாழ்வின ராயதிலே
திங்கணி றைந்துவருஞ் சேயிழை யார்நடைபோல்
தென்ற லசைந்துவருஞ் செந்தமிழ் நாடையாய்
கங்கையி னன்கொழுநா காவிரியின் கணவா
கன்னித ஞயகமே சென்னிக ஞடையாய்
எங்க ளிளங்கொடிதா னுங்க ளிளம்பிறையால்
எத்தனை கோடியிரா யிப்படி வாடுவதே.

பல்லவர்.

பல்லவன் வடகார்முனையிற் பல்லா கவர்ந்தது.

970. மூலைபொழி நீம்பான் மண்சேறு படுப்ப
மலர்தலை யுலக மோம்பு மென்ப
பழிதிலத் தொண்டைப் பல்லவ ஞணையின்
வெட்சித் தாயத்தி வில்லே ருழவர்
பொருத்தா வடகார் முனைச்சுரங்
கடந்து கொண்ட பல்லா நிரையே.

கச்சியார்கோசிங்கன்.

(சிறப்பில் கலித்தாழிசை).

971. திலமகன் கேள்வனு நேர்கழலி ஞனும்
நலமிகு கச்சியார் கோவென்பவே
நலமிகு கச்சியார் கோவாயி ஞனும்
சிலமிகு தோட்சிங்க னவனென்பவே
செருவிடை யானை யவனென்பவே.

---

(968) தனிப்பா. (969) தஞ்சைச் சரச்சுவதிமால்பிரதியிற் கண்டது.
(970) தொல். அகத். 54. (971) யாப். வி. 87.

மகேந்திரபல்லவன்.

972. தொண்டையந்தார் வேந்தன் சுரேந்திரப் போத்தரையன்
வெண்கோட்டின் றென்பான் மிகமெழ்ந்து—கண்டான்
சரழிக்க வெஞ்சிலையான் சத்துமல்லே சம்மென்
தரனுக் கிடமாக வன்று.

நந்தி.

973. கரைபொருநீர்க் கடல்கலங்கக் கருவரைமத் ததுவாகத்
திரைபொருது புடைபெயரத் திண்டோளாற் கடைந்தனையே;

முகில்பொரு துடல்கலங்க முழவுத்தோள் புடைபெயர
அகல்விசும்பி னமரர்க்கு மாரமுதம் படைத்தனையே;

வரைபெரிய மத்தாக வாளரவங் கயிறாகத்
திரையிரியக் கடல்கடைந்து திருமகளைப் படைத்தனையே;
(தாழிசை)

அமரரை யமரிடை யமருல கதுவிட
நமரத பகழ்மிக மிகவிக லடித்தனை; (அராகம்)

அலைகட லுலகமு மந்தணர்க் கீந்தனை;
உலகொடு நிலவிய வொருபுகழ் சுமந்தனை; (பேரொண்)

ஆதிக்க ணரசெய்தினை;
நீதிக்கண் மதிநிரம்பினை;
விளங்கெரி முதல்வேட்டனை;
துளங்கெரியவர் புகழ்தளக்கினை; (இடையெண்)

ஆலகு நீ; உலகு நீ; அருளு நீ; பொருளு நீ;
நிலவு நீ; வெயிலு நீ; நிழலு நீ; நீரு நீ; (அளவெண்)

எனவாங்கு—தனிச்சொல்.

பவள மெறிதிரைப் [1]பாகைக் கோவே
புகழ்துறை நிறைந்த பொருவேல் நந்தி
உலகுட னளந்தனை நீயே
உலகொடு நிலவுமதி யுதையவரை யொத்தே. (சுரிதகம்)

அச்சுதநந்தி.

974. அகலிடமு மமருலகு மமர்பொருது மறந்தோற்றுப்
புகலிடநின் குடைநிழலாப் புகுமரணம் பிறிதின்றி
மறந்தோற்று நிறங்கருகி மால்புகழு நிலைதளரப்

(972) தளவனூர்க் குகைச் சாஸனம். (973—74) யாப். வி. 86.
[1]பாவைக்; பாதைக்.

புறந்தோற்றுக் கழலார்ப்பப் பொருதகளம் வெறிதாக
மண்ணுலகு மறிகடலு மாமலையு நிலைகலங்க
விண்ணுலகம் வியப்பெய்த வெஞ்சமத்து ளலைத்தனையே;
அதனால்,
கனைகட லுடைதிரை கரைபொரக் கடைந்தனை;
மூனைவரு மமரரு முறைமுறை வந்துநின்
இணைமலர் பலர்புகழ் பயில்வதொர் பண்பினை;
மருளுறு துதைகதிர் மணியது மணிகிற மருளுநின் குடை;
குடையது குளிர்நிழ லடைகுனவுயிர்களை யளிக்கு நின்கோல்;
கோலது செம்மையிற் குறைகடல் வளாகம்
மாலையுங் காலையு மகிழ்தூங் கினையு; (அராகம்)

ஆருயிர்க் கெல்லா மமிழ்தின் றமையா
நீரினு மினிது நின்னருள்;
அருளு மலைகடலு மாயிரண்டு மொக்கும்
இருள்கொடிமேற் கொண்டாய்(?) நினக்கு; (பேரெண்)

நீர்நிலங் காத்தோய்நீ; நிலவுலக மீந்தோய்நீ;
போரமர்க் கடந்தோய்நீ; புனையெரிமூன் வேட்டோய்நீ;
ஒற்றைவெண் குடையோய்நீ; கொற்றச்செங் கோலோய்நீ
பாகையந் துறைவனீ; பரியவ ரிறைவனீ; (சீர்நெண்)

வனவாங்கு—(தனிச்சொல்).

பொருகுடை வளாக மொருகுடை நிழற்றி
இருபிறப் பாளர்க் கிருநிதி யீந்து
மனமகிழ்ந்
தருள்புரி பெரும்புக ழச்சுத கோவே
இனையை யாதலிற் பனிமதி தவழும்
நந்தி மாமலைச் சிலம்ப
நந்திநிற் பரவுத லுலவர்க் கரிதே. (கூரிதகம்)

975. சென்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சித
சந்தனமென் ரூரோ தடவினர்—பைந்தமிழை
ஆய்கின்ற கோனந்தி யாகந் தழுவாமல்
வேகின்ற பாவியேன் மேல்.

976. திருத்தேர் புகழ்நந்தி தேசபண் டாரிதெள் ளாறைவெற்பில்
மருத்தேர் குழலிக்குக் கார்முந்து மாகின் மகுடரத்னப்

(975—76) நந்திக்கலம்பகம்.

பரித்தேரும் பாகனு மென்பட்ட வோவென்று புன்கயக்கை
சொரித்தே வயிற்றில்லைத் தேறிற்ப னேவஞ்சி நெஞ்சுவர்ந்தே.

977. வானுறு மதியை யடைந்ததுன் வதனம்
வையக மடைந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை யடைந்ததுன் வீரம்
கற்பக மடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலரா ளரியிடஞ் சேர்ந்தாள்
செந்தழல் புகுந்ததுன் மேனி
யானுமென் கலியு மெவ்விடம் புகுவே
மெந்தையே நந்திநா யகனே.

தொண்டைமான்.

தொண்டைமா ளிளந்திரையன்.

978. கங்குலு நண்பகலுந் துஞ்சா வியல்பிற்றாய்
மங்குல்சூழ் மாக்கட லார்ப்பதூஉம்—வெஞ்சினவேற்
காண்பயந்த கண்ணிக் கடுமான் றிரையனை
யாண்பயந்தே னென்னுஞ் செருக்கு.

போய்கையார் பாட்டு.

979. ஆழி யிழைப்பப் பகல்போ [1]மிரவரிற்
சூழி துணையாத் துயர்நீரும்—வாழி
நறுமாலை தாராய் நிரையவோ வென்னுஞ்
செறுமாலை சென்றடையும் போழ்து.

980. பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ
பாவீற் றிருந்த புலவீர்காள் பாடுகோ
ஞாயிற் றொளியான் மதிவிழற்றே தொண்டையார்
கோவீற் றிருந்த குடை.

சிற்றரசர்.

981. வெற்றிபுனை தாதகிக்கும் வேம்புக்கும் பெண்ணைக்குஞ்
சுற்றும் பெருநிழலாய்த் தோன்றுமே—கற்றோர்
திறந்தாங்குந் தாங்குஞ் செகமுழுதுந் தாங்கும்
அறந்தாங்குந் தொண்டை யரசு.

---

(977) நந்திக்கலம்பகம். (978) பெரும்பாண். இறுதி. (979) யாப். வி. 4. 96. [1]மிரவெல்லாந். (980) யாப். வி. 51. (981) தனிப்பா.

982. ஊதைகூட் டெண்ணு முகுபனி யாமத்தெங்
கோதைகூட் டெண்ணிய தான்யார்மன்—போதெல்லாந்
தாதோடு தாழ்ந்தார்க் கச்சி வளநாடன்
தூதோடும் வாராத வண்டு.

அதிகமான ஔவையார் நெல்லிக்கனி கொடுத்ததைச்
சிறப்பித்துப் பாடியது.

983. பூங்கமல வாவிசூழ் புள்வேலூர்ப் பூதனையும்
ஆங்குவரு பாற்பெண்ணை யாற்றினையு—மீங்கு
மறப்பித்தாய் வாளதிகா [1]வன்கூற்றை நாலை
அறப்பித்தா யாமலகந் தந்து.

காரி.

(வெண்டலையான்வந்த ஆரியநேர்த்துறை.)

984. கண்ணியோர் [2]கண்ணி வலத்தசைத்த காரி
கமழ்தண்டார் காமம் புணைபவே காரி
பண்ணியோர் [3]பாட லெழப்பண்ணி காரி
[4]பணைமுழவஞ் சீர்தயங்கப் பாடானே காரி
சீர்தயங்கத் தார்தயங்கச் செய்யாத செய்திவன்
நீர்தயங்கு கண்ணினளாய் நிற்கவோ காரி
னெக்கினியார்க் கெல்லாமி னையையோ காரி.

பாரி, காரி.

985. ஆரிய மன்னர் பறையி னெழுந்தியம்பும
பாரி பறம்பின்மேற் றண்ணுமை - காரி
விறன்மூவ ரூர்வேங்கை வீ தாஞணுந் தோளான்
றிறனுள்ளூ ருள்ள தலர்.

பாரி, அஞ்சி.

986. நடங்கடன் மண்ணிற் றருமருள் வீரும்பிய
னின்மென் னிளவித் தெய்வப் பாரியும்
இல்லை யாகிய திரவலர் வினையெனத்

---

(982) பி. வி. 42. உரை. (983) தமிழ்தா. 21. [1]வன்கூற்றி னுலை. (984) யாப். வி. 76. [2]கண்ணே. [3]பாட மெழப்பண்ணி. [4]பணைமுழவின். (985) யாப். வி. 94; தொல். செய். 210 நச்; யாப். கா. ஒழி. 8. (986) யாப். வி. 95.

தண்ணுடன் பொத்திய தாசிடு சிதவலு
மடித்த மெய்யள், கடைத்தலை முன்சனத்
தீவது நோக்கி (?)
ஏனை மூனைகெட வேவிய வெட்சி
சால்பிற்றச் தோ(?)லா தாங்கே மதிநிலை
வென்றி வேழ மிருந்தி பாடி
நின்றனள் விறலி நெருந லின்(றே)
அஞ்சி பாடிய வல்வை போல
வறுமை யுற்ற சிறுமை மூதூரை
தணந்து மிக்க தழற்பொலி திருமணி
யணிந்தனைத்(?) துஞ்ச வல்லிரின் ரோளே.

நன்னன்.

987. தூஉத் தீம்புகை தொல்விசும்பு போர்த்ததுகொல்
பாஅய்ப் பகல்செய்வான் பாம்பின்வாய்ப் பட்டான்கொல்
மாஅ மிசையான்கொ னன்ன னறுநுதலார்
மாஅமை யெல்லாம் பசப்பு.

அழிசி.

988. ஆளான் விடுமே யழிகொட் டன்றெதிர்ந்தார்
தாளார் கருங்களிற்றுத் தார்வீக்க—வாளான்
உலகவா மெங்கோன தோங்கொளிபோற் சோதி
விலகாவாம் பல்கதிரோன் விண்.

நல்லியக்கோடன்.

989. அணியிழையார்க் காரணங் காகிமற் றந்நோய்
தணிமருந்துந் தாமேயா மென்ப—மணிமிடைபூ
ணிம்மென் முழவி னெயிற்பட் டினநாதன்
செம்மல் சிலைபொருத தோள்.

990. நெடுவரைச் சந்தன நெஞ்சங் குளிர்ப்பப்
பகைமகம் பாம்பேர் மருங்கு—[1]லிடுகொடி
யேரடிய [2]மார்ப னுயர்ந்தல் லியக்கோடன்
சூடிய கண்ணி யகம்.

---

(987) பத். ரலைபடுகடாத்திறுதி; தொல். பொருளதி. 874 மேற். (988) யாப். வி. 95. (989-990) பத். சிறுபாண். இறுதி. [1]இடுகிடையாய். [2]மார்பின்.

புள்வேளூர்ப்பூதன் வாகரிசிச்சோறிட்டபோது ஔவையார் பாடிய வெண்பா.

991. வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டமும்
முரமுரவென் றேபுளித்த மோரும்—பரிவுடனே
புள்வேளூர்ப் பூதன் புகழ்புரிந் திட்டசோ
றெல்லா வுலகும் பெறும்.

992. காலையும் வந்த [1]கலைஞர் கதிர்கரந்த
மாலையும் வாராதே யெண்செய்வார்—நீலம்
புனிற்றா நிரைமேயும் புள்வேளூர்ப் பூதா
னினிற்றாக ணம்மறையோர் கை.

பெருந்தலைச்சாத்தனார் தம்பியால் நாடுகொள்ளப்பட்டுக் காடுபற்றியிருந்த தமணனைப் பாடியது.

993. ஆறு பெருக்கற் றருந்திடர்தான் பட்டாலும்
ஊறலைமை யாதோ வுலகாற்றத்—தேற
வறியைநீ யாஞ்சூ மென்கலியை மாற்றச்
சிறியையோ சீர்க்குமணஞ் செப்பு.

கள்ளி - ஆளி.

994. சில்செவி யண்ணே பெருங்கேள் வியனே
குறுங்கண் ணினனே நெடுங்காட் சியனே
இளைய ஞயினு மறிவின்மூத் தனனே
மகளி ரூடினும் பொய்யறி யலனே
கீழோர் கீழ்மை செய்யினுங் தான்றன்
வாய்மை வழுக்க முறுத லஞ்சி
மேனெறி படரும் பேரா ளன்னே
ஈண்டுநிலந் தருதல் வேண்டிப் பாண்டியர்
பாடுதமிழ் வளர்த்த கூடலின் வடாஅது
பல்குடி துவன்றிய கள்ளியம் பெரும்பதிச்
சால்பு மேன்மேற் சூழ்ந்திய வாளி
காதலின் மேவலன் பிறர்பிறர்க் கீயும்
தானு மூண்ணும் லிருந்தண்டு மிகினே.

---

(991) தமிழ்தா. 22. (992) வீரசோ. அலங். 9 மேற். [1]கலைஞர். (993) தமிழ்தா. 13. (994) ஆசிரியமாலை (புறத்திரட்டு)

மதுரைமீந் பிட்வோணிச்சிமக்திது மங்கல்க்குறிப்பாம்
சான்றோர் கூறியது.

995. அன்ன யிவளெருவ னந்தாத்தா னெனென்றான்
முன்ன மொருகான் மொழியினன்—பின்னுங்
கலிகெழு கூடலிற் [1]கண்ணீடி வந்து
புலியாய்ப் பொருவான் புகும்.

செந்தன்.

996. இன்னமிழ்த மூட்டி யெழில்வளைசேர் முன்கைக்கொண்
டென்னையர்பேர் சொல்லென் றிரந்தாலுந்—தென்னம்பைசெ
செஞ்சுடர்வாள் வெஞ்சினவேற் சீர்ச்சேந்த னென்னுமால்
கிஞ்சுகவா யஞ்சொற் கிளி.

பூதன்.

(கடவுள் மாளிடப்பெண்டிரை நயந்தபக்கம்.)

997. குடுமிப் பருவத்தே கோதை புனைந்தே
[2]இடுமுத்தப் பூத னிருப்பப்—படுமுத்தம்
புன்னை யரும்பும் புகாஅர்ப் புறம்பணையார்க்
கென்ன முறைய ளிவள்.

காளிம்பன்.

998. விடஞ்சூ ழரவி னிடைதுடங்க [3]வில்வாள் வீசி விரையார்வேங்
கடஞ்சூழ் நாடன் [4]காளிம்பன் கதிர்வேல்பாடு மாதங்கி
வடஞ்சூழ் கொங்கை மலைதாந்தாம் வடிக்கணீல மலர்தாந்தாம்
தடந்தோ ளிரண்டும் வேய்தாந்தா மென்னுந்தன்கைத் தண்ணு [மையே.

[5]மச்சத்தார்கோ.

999. ஒற்றை யலவ னுழுத வரப்பருகே
மூற்றி யெழுந்த மூடத்தாழை—மற்றவ்
வயலே கனியுநிர்க்கு [5]மச்சத்தார் கோமாற்
கயலே பிறவே யவா.

1000. அரிகருகு நின்ற கனிகிடப்ப வாங்கே
வரியலவன் வாயில்வா னீட்டி—ரரிதனது

---

995. தொல். பொரு 84 ந்ச். [1]கண்ணுடி. (996) யாப். வி. 94. (997) தொல். பொரு. 88. ந்ச். [2]இடுமுத்தம். (998) யாப். வி. 77; யாப். கா. செய். 5 உரை; தொண்டை. சத. 14. [3]மின்வாள், மினல்வாள். [4]காளிங்கன். [5]வச்சத்தார். (999—1000) தஞ்சைச் சரச்சுவதிமால் - பிரதி. (வச்சத் தொள்ளாயிரத்தைச்சேர்த்தபாடல்கள்போலும்.)

வால்வாங்க மாட்டாத [1]மச்சத்தார் கோமானென்
மால்வாங்க வல்லனே வந்து.

1001. அவற்பதத்த செந்நெ லருந்தி யருகே
துவர்ப்பதத்த செங்கிடையுந் துய்த்துக்—கவர்ப்பதத்த
மாமேதி மேய்ந்துவரு [1]மச்சத்தார் கோமானுக்:
கியாமே திலமே திலம்.

அச்சுதகளப்பாளன் தளையிட்டபோது முவேந்தர் பாடியவை.

(சேரன்)

1002. தினைவினைத்தார் முற்றந் தினையுணங்குஞ் செல்சென்
தினைவினைத்தார் முற்றமது தானும்—கனைசீர்
முரசுணங்கச் சங்குணங்கு மூரித்தேர்த் தானை
அரசுணங்கு மச்சுதன்முற் றத்து.

(சோழன்)

1003. [2]அரசர் குலதிலக னச்சுதன்முற் றத்தில்
அரச ரவதரித்த வந்நாள்—முரசதிரக்
கொட்டிவிடு மோசையினுங் கோவேந்தர் காற்றினையை
வெட்டிவிடு மோசை மிகும்.

(பாண்டியன்)

1004. குறையுளா ரெங்கிரார் கூர்வே லிராமன்
நிறையறு திங்க ளிருந்தான்—முறைமையால்
ஆலிக்குந் [3]தானை யலங்குதா ரச்சுதமுன்
வாலிக் கினையான் வரை.

[4]இது பாடியபின்பு ஒருவிலக்கு கூடப்போட்டபின்
பாண்டியன் பாடியது.'

1005. குடகர் குணகடலென் றூர்த்தார் குடகர்க்
கிடகர் வடகடலென் றூர்த்தார்—வடகடலர்
தென்கட லென்றூர்த்தார் [4]தில்லையச்சு தானந்தன்
முன்கடைகின் றூர்க்கு முரசு.

(1001) தஞ்சைச் சரச்சுவதிமால்-பிரதி. [1]வச்சத்தார் (?) (1002—5) தமிழ்நா. 154—7. [2]அரச னகளங்கன். [3]தார்மாலை யச்சுதா முன்னமொரு. [4]தென் றில்லையச்சு தானந்த.

களப்பாளன் வெற்றிச்சிறப்பு.

1006. பலபெருந்துஞ் சூர்ப்பேயும் பல்விலங்கு நாயும்
கொடியுங் கழுகுமிவை கூடி—வடிவுடைய
கோமான் களப்பாளன் கொல்யானை போமாறு
போமாறு போமாறு போம்.

மதுரைவீரகஞ்சுகன் சுந்தரன்.

1007. காவிரித் துறைப்படிந்து பொருநையைக் கலக்கியே
கடைக்கணங்கி கொண்டிறந்தை கனல்கொளுத்து மாணையா
வாவுகொற்ற மாவுகைத்து வஞ்சிவென்ற சுந்தரன் [ன்
மதுரைவீர கஞ்சுகன் வரைப்புறத்து மாதரீர்
பாவையர்க்கு வாடைவே றெனக்குவேறு வாடையோ
பாயன்மற் றவர்க்குவே றெனக்குவேறு பாயலோ
யாவருக்கு மதியம்வே றெனக்குவேறு மதியமோ
யாவெனுத்தி பெண்பிறக் கிரண்டுபட்ட துலகமே.

1008. திக்கயங்க ளெட்டுமுட்ட வைத்தபுட் பதாகையான்
செழியர்சேரர் வளவர்வந்து திறையளக்கு மூன்றிலான்
மைக்கருங்கண் மாதராரி மனங்கவர்ந்த மாரவேள்
மதுரைவீர கஞ்சுகன் மணந்துதந்த காதலேய்
கைக்குவந் தகப்படாது கண்முனிற்கு மொருவராற்
காணுணாது காணுமென்று காட்டொணாத தன்றியும்
ஒக்குமென் றுரைக்கலான வுவமையில்லை யிருவரும்
உள்ளறிந்த தன்றிமற்றிவ் வூரறிந்த தில்லையே.

1009. மலைந்த மன்னவர்கள் வாணி லேறவடி
வாள்வி திர்த்தமுகில் சுந்தரன்
வாகை கொண்டபர ராச கேசரிநன்
மதுரை யங்குரிசில் பின்புபோய்
உலைந்து லைந்துவிள யாடு கின்றவுனை
வந்தெ தித்துரிய தாயர்பால்
உங்க ளையரை யழைத்தி ரேகென
உரைத்த மாதவரொ டென்சொலாய்

(1006) தொண்டை. சத. 69 உரை.

அலைந்த லைந்துகவிழ் குழலுமக் குழலி
னள்ளி யிட்டசிறு புழுதியும்

அமுத மூறுகனி வாயு மந்தவமு
தருவி யாலுழுகு பண்டியும்

கலைந்த செம்பொன்வளை யும்பிசைந்திரு
கருங்கண் மைபடி புறங்கையுங்

கழன்று தொங்குமரை ஞாணு மாகவரு
காதலா சிறிய கள்வனே.

1010. பாக சாதன கிரீட கோடிபொடி
படவெ றிந்ததொடி மீனவன்

படவி லேறியெழ வாசி யேறியெழு
பார்பு ரக்குமுகில் சுந்தரன்

தியாக தாருவென நாவ லர்க்குதவு
செங்கை யானரச ராகவன்

திசைதொ றுந்தரள மணிகொ ழித்துவரு
திருவை யைத்துறையி லன்னமே

மாகம் வேகவரு திங்க ளாலிளைய
தென்ற லான்முகிய வன்றிலால்

வாடை யாலவனி யாடை யாலயல்சொல்
வம்பிலுன் மதன னம்பிலுல்

ஆக மேதுபடி னெஞ்ச மேதுபடும்
ஆசை யேதுபடி நிலையிலா

அமளி யேதுபடி நாண மேதுபடும்
அந்தி மாலைபடி நேரமே.

1011. சந்த ளைடவி மலைப்பி றந்ததமிழ்
சங்கம் வீறிவளர் கூடலான்

தாறு கொன்றுநிழல் சீறி நின்றுகடை
சாய்த்தெ றிந்தகவி யானையான்

மந்த ராசல மெடுத்து வாசுகி
பிணித்து வாருதி கடைந்தமால்

வாசை வாகுபுனை சுந்தரன் குவலை
மாலை கேட்டபின் மடந்தைமீர்

அந்தி மாலைதனி வந்து போர்செயும்
அனங்க வேள்பகழி வெள்ளமோ
ஆவி சோரமட நாண்வரம் பழிய
ஆசை கொண்டபெரு வெள்ளமோ
இந்த வானிலவின் வெள்ள மோமகளிர்
ரேசு கின்றபெரு வெள்ளமோ
இருகண் மாரிபொழி வெள்ள மோவுலகி
லெங்கும் வெள்ளமிக வானதே.

முத்தரையன்—மாறன்.

(அழுந்தூர்ப்போர்)

1012. வெங்கட் பொருகயல்சேர் வெல்கொடியோன் வாண்மாறன்
செங்கட் கரும்பகடு சென்றுழக்க—அங்குலந்தார்
தேரழுந்தி மாவழுந்தச் செங்குருதி மண்பரந்த
ஊரழுந்தி யூரென்னு மூர்.

பாசிசில்வேள் நம்பன் பாடியது.

(மணலூர்ப்போர்)

1013. [ஒழுகு குருதி யுடனெப்ப] வோடிக்
கழுகு கொழுங்குடர் கவ்வ—விழிகட்பேய்
புண்ணலைந்து கையூம்பப் போர்மணலூர் வென்றதே
மண்ணலைந்த சீர்மாறன் வாள்.

(கொடும்பாளூர்ப்போர்.)

1014. [வஞ்சிப்பூச் சூடிய] வாளமருள் வாகைப்பூக்
குஞ்சி கமழ்கண்ணிக் கோமாறன்—தஞ்சைக்கோன்
கோளாளி மொய்ம்பிற் கொடும்பாளூர் காய்ந்தெறிந்தான்
தோளா லுலகளிக்குந் தோள்.

கிழார்க்கூற்றத்துப் பவதாமமங்கலத்து அயருணிலை யூயின
தலாலன் காஞ்சன் பாடியது.

1015. ஏறி விசும்பு மிருநிலமாய்த் தென்பவால்
மாறன் செருவேன் மறங்கனன்று—சீறத்

(1012—15.) செந்தலைச்சாஸனப்பாடல்கள்; [ ] இவ்விருதலைப்பகரங் கட்கு உட்பட்ட எழுத்துக்கள், சிறைந்தவிடத்தை நிரப்ப ஊகித்தமைக்கப் பட்டனவாகும். (செந்தமிழ், தொ. 6, பக். 12—17.)

கொடிமாடத் தண்கொடும்பைக் கூடாத மன்னர்
நெடுமொ மதிலிடித்த நீறு.

1016. [அல்லித் பிரிந்தார்க்கே யல்லையாய்க்] காலத்தான்
முல்லைக்கே முற்பமோ வென்றென்று—வல்லக்கோன்
காரைவாய்ப் போர்வென்ற வேன்மாறன் கைபோலும்
காரைவாய்க் கேளேனே கண்டு.

(காந்தளூர்ப்போர்)

1017. செருவ(ல ரா) னதனைற் சிந்தியார் போலும்
மருவலராய் வாண்மாறன் சீறக்—கருவிளை
கண்டோற்ற வண்டரவங் கார்தோற்றுங் காந்தளூர்
மண்டோற்ற வேந்தர் மனம்.

(கோளூட்டுப்போர்)

1018. எண்கி னிருங்கினையு மேறற் கரியவே
வண்கைச் செருமாறன் வாள்காய்த்தி—விண்படர்வான்
சேய்நாடு தாழ்ந்த மாநாடக் கண்ணனூர்க்
கோளூடர் புக்கொளித்த குன்று.

1019. மலர்ந்ததார் வாண்மாறன் மண்ணண்ணல் வாயிற்
கலந்தநாட் காணலாங் காண்க—உலந்தவர்தம்
என்பருந்து சூற்பே யிருந்துறங்க வீழ்ருடர்
[பன்பருந்து] சிந்தப் பகடு.

1020. [பாமருவு கின்றயாழ்ப்] பாண்மகனே பண்டெல்லாம்
யாமறிது மெங்கையர்க்கே சொல்லுநீ—மாமங்கைத்
தென்னூடர் காதலியர் நீராட வாய்சிவந்த
மின்னூடு வேன்மாறன் மெய்.

சேந்தன்.

1021. எழிதரு ஞாயிற் றெழில்போ னினைந்து
பொழிதருவான் நிங்களே போல—முழுவலரும்
தன்புகழி னூனிறைந்த தார்வேந்தன் சேந்தன்மாட்
டென்புகழ்ந்த லாவ தினி.

(1016—20) செந்திலேச் சாலனைப்பாடல்கள்; [ ] இவ்விருதலைப்பகரம் கட்டு உட்பட்ட எழுத்துக்கள், நைந்தவிடத்தை நிரப்ப ஊகித்தமைக்கப் பட்டனவாகும். (செந்தமிழ், தொ. 6, பக். 12—17.) (1021) வீரசோ. அலங். 17. மேற்.

நாங்கூர்ச்சேந்தன்.

(பட்டினத்தடிகள் பாட்டு).

1022. மத்தனே தயிருண்டானு மலர்மிசை யயனுந் தேடிப்
பித்தனே கின்றபோது பிரானடிக் கன்பு வைத்துச்
[1]செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனே வேந்த னிட்ட
கைத்தலை நீக்கி யிங்கே காட்டுவெண் காட்டு ளானே.

கதக்கண்ணன்.

1023. செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே.

1024. கிருந்திலைய விலங்குவேற் றிகழ்தண்டார்க் கதக்கண்ணன்
விரிந்திலங்கு [2]வெண்குடைக்கீழ் வேந்தட்ட வியன்களத்து
முரிந்திறைஞ்சி முத்துறைக்கு முடியெல்லா மூறைமுறையே
[3]அருந்திறன்மா மறமன்னர்க் கழுவனவும் போன்றனவே.

கலிமல்லன்.

1025. மண்பாய வையகத்து மாலைமாற் றீரக
வெண்பா வெழுத்து மிணையொப்ப—வொண்பாவின்
சீர்கிடப்பத் [4]தென்றமி ழாளி கலிமல்லன்
போர்கிடப்பப் பேச லரிது.

சனந்தாங்கி.

1026. ஆர்கலிநீர் ஞாலத் தலந்தார்கட் காற்றலாற்
காரெழிலி நாணக் கலந்ததே—சீர்சான்ற
சண்டர சண்டன் சனந்தாங்கி சங்கையார்
கண்டர [5]கண்டன்றன் கை.

வீசயன்.

1027. என்னிற் பொலிந்த திவண்முக மென்றெண்ணித்
தன்னிற் [6]குறைபடுப்பான் றண்மதிய—மின்னி
விரிந்திலங்கு வெண்குடைக்கீழ்ச் செங்கோல் வீசய
னெரிந்திலங்கு [7]வேலி னெழும்.

(1022) சோழமண்; 64. [1]செய்த்தலை வயலூர். (1023) யாப். வி. 86, 78, 15; யாப். கா; வீரசோ. யாப். 12 மேற். (1024) யாப். வி. 32; வீரசோ. யாப். 12 மேற். [2]மலர்பைம்பூண் [3]அருந்திறல. (1025) யாப். வி. 95. [4]தென்றமி ழாலி கலிமன்னன் (1026) யாப். வி. 93. [5]கண்டன. (1027) யாப். வி. 96; இலக். வி. 887 உரை. [6]குறைபவொன். [7]வேல்கொண்டெழும்.

திங்களூர்த்தேவன்.

1028. திங்க ளிளங்கதிர்போற் [1]றென்றிங்க ளூர்த்தேவன்
மைந்தர் சிறப்ப மகிழ்சிறந்து—திங்கட்
கலைபெற்ற கற்றைச் சடைக்கடவுள் காப்ப
நிலைபெற்று வாழியரோ நீ.

சுவரன்மாப்பூதன்.

1029. உதிக்காண்,
சுரந்தாளு வண்கைச் [2]சுவரன்மாப் பூதன்
பரந்தாளுப் பல்புகழ் பாடி—யிரந்தார்மாட்
டின்மை யகல்வது போல விருணீங்க
மின்னு மளித்தேர் மழை.

மாசேனன்.

1030. பாசிழை யாகம் பசப்பித்தான் பைந்தொடியை
மாசேன னென்று மனங்கொளீஇ—மாசேனன்
சேயிதழ்க் கண்ணி [3]தருகிலான் சேர்தியென்
னெய்தீர நெஞ்சின்மேல் வைத்து.

கருங்கோன்.

1031. கானக நாடன் கருங்கோன் பெருமலைமேல்
ஆனை கிடந்தாற்போ லாய பெருங்கற்கள்
தாமே கிடந்தன கொல்லோ வவையேற்றிப்
பெற்றி பிறக்கிவைத் தாருளர் கொல்லோ.

உளியன்.

1032. ஊகத்தி னுன்மல்கு சோலை யுளிய னுயர்வரைவாய்
மேகத்தி னுலுமின் னுலு மிகவு [4]மெலிந்திளைத்த
ஆகத்தி னேற்கரு ளாயென் பணியுமை வாயெயிற்று
நாகத்தி னுன்மால் கடைந்திடப் பட்ட நளிகடலே.

மள்ளன் - மதிநிலை.

1033. தருமலிந்த வண்மை தலைத்தந்து மிக்க
திருமலிந்து நீதிலவே யாக—வுருமலிந்த

(1028) தொல். பொருளதி. 422. [1]றேர்திங்க. (1029) தொல். பொருளதி. 361; யாப். வி. 94; யாப். கா. [2]சுவானமாப்பூதன், சுவர்ணமாப்பூதன், சுமானமாப்பூதன். (1030) யாப். வி. 94. [3]தருதலான். (1031) யாப். வி. 95. (1032) ஷே. 96. [4]மெலிந்துளைத்த. (1033) ஷே. 95.

என்னரசன் மள்ளன் மதிநிலே யேதிலர்கள்
தன்னரிய வஞ்சினத்தான் ரூரள்.

சிலம்பன் - திருவேங்கடன்.

(விளவுத்தரம்)

1034. பூமேலா ளாரென்பார் பூம்போர்வை யென்செய்யும்
நீமேற் படிற்கொடித்தாற் கொள்வதவன்—ஆமே
நலந்திகழுஞ் [1]செங்கை நயதீர னெங்கோன்
சிலம்பன் றிருவேங் [2]கடன்.

வண்கோசன் - சேருந்தை.

(காதைகரப்பு)

1035. பல்லார்க்கு மீயும் பரிசிற் கொடைத்தடக்கை
மல்லார் மணிவரைத்தோள் வண்கோசன்—மல்லலந்தார்
செஞ்சொற் செருந்தைதன் றென்னூறந்தை யென்ரூளாம்
வஞ்சிக் கொடிமருங்கின் வந்து.

கூத்தப்பெருஞ்சேந்தன்.

1036. கொய்தளிர்த் [3]தண்படலைக் கூத்தப் பெருஞ்சேந்தன்
வைகலு மேறும் வயக்களிறே—கைதொழுவல்
காலேக வண்ணனேக் கண்ணுரக் காணவெஞ்
சாலேகஞ் சார நட.

கவிகண்ணன்.

(மெய்வகை).

1037. தந்தை யிலேச்சுமடன் [4]தாய்தொழிலி தான்பார்ப்பான்
எந்தைக்கீ தெங்ஙனம் பட்டதுகொல்—மூந்தை
அவியுணவி ஞர்[5]தெரியின் யாவதாங் கொல்லோ
கவிகண்ண ஞர்தம் பிறப்பு.

வையையார்கோ.

(இருபுறவாழ்த்து)

1038. பண்டொ மொருகாற்றன் வைம்தொடியைக் கோட்பட்டு
வெங்கடம் வில்லேற்றிக் கொண்மெந்தான்—தென்களந்தைப்

(1034) யாப். வி. 95; நன். 268 மயிலை. [1]செங்கோல். [2]கடம். (1035) யாப். வி. 95. (1036) தொல். சொல். 87 நச்; நன். 396 மயிலை. ஷே. சங். ந. உரை. [3]தண்டலை. (1037) யாப். வி. 95; யாப்.கா. ஒழிபி. [4]தாய்தொழி. [5]தெரியி னவதாங். (1038) யாப். வி. 96; யாப். கா. ஒழிபி.

[1]பூமான் றிருமகளுக் கின்னும் புலம்புமால்
வாமான்றேர் வையையார் கோ.

எயினர்கோன் - கண்டன்.

1039. குலாவணங்கு வில்லெயினர் கோன்கண்டன் கோழி
நிலாவணங்கு [2]வெண்மணன்மே னின்று—புலாலுணங்கல்
கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மையோ நீபிறர்
உள்ளம்புக் [3]கியாப்ப துரை.

தும்றையெல்லன்.

1040. ஆலெங்கே யங்கே யரும்பறவை யாற்றுயிலும்
மாலெங்கே யங்கே மலர்மடந்தை—சோலைதொறும்
செங்கே தகைமணக்குஞ் செஞ்குன்றை யெல்லனெங்கே
அங்கே யிரவலரெல் லாம்.

சந்திரன் என்ற வள்ளல்.

1041. எடலர் தார்ச்சந் திரன்ற னிருங்கொடைக்கு
நீடு மழையே நிகரென்னிற்—கோடை
மறுக்கையினும் வக்கிரக்கோ ளுள்ளுந்தாம் பெய்யா
வொறுக்கையினு மாட்டாவே யொப்பு.

கந்தகோன்.

1042. கற்பகமோ வொக்குங் கணுவில்லை காவேரி
மற்புனல்போ லாமொருகால் வற்றுது—நற்புகழ்சேர்
நந்திகை மன்னு புலவோர் நவைதீரக்
கந்தகோன் வந்ததவுங் கை.

கற்சிறை என்னும் வள்ளல்.

1043. வண்மை மதம்பொழிந்து மாற்றூர் திறல்வாடத்
திண்மை பொழிந்து திகழும்போன்ம்—ஒண்மைசார்
கற்சிறைவண் டார்க்கு நளிநீர் வயற்பம்பைக்
கற்சிறை யென்னுங் களிறு.

---

[1]பூமாண்டிருமகளுக். (1039) யாப். வி, 22; யாப். கா. ஒழிபி; வீரசோ. யாப். 19 மேற். [2]நேர்மணன்மே. [3]காப்ப. (1040) தொண்டை. சத. 40, மேற். (1041) வீரசோ. அலங். 15. மேற். (1042) ஷ 17 மேற். (1043) யாப். வி. 60.

மயிலை - வீரன்.

1044. தளையவி ழப்புது நறைவிரி யப்பொழில் தடமலி துறைமாடே
வளைபொழி நித்திலம் வளநில வைத்தரு மயிலையி லெழுகாரே
அளவி யழற்சில மழைபொழி யச்செயு மடறிகழ் புயவீரா
இளைய மடக்கொடி யிடரொழி யப்புனை மலரித ழருளாயே.

சங்கபாலன்.

1045. வண்டிவரு மலர்வெட்சி மாலை மார்பன்
மால்வேண்ட மண்ணளித்த மலிதோள் வள்ளல்

ஞண்டிவருந் தண்படப்பை ஞாழன் மூதூர்
நரபதிக்கு வான்கொடுத்த நகைவே னந்தி

தண்டிவருந் தடவரைத்தோட் சயந்தன் வாடச்
சதமுகனைச் சயஞ்செய்த சங்க பாலன்

தெண்டிரைவாய்த் திருமகளோ டமிர்தங் கொண்டான்
சீர்பரவச் சென்றகலுஞ் செல்ல ருனே.

மாந்தைத்தியாகி.

1046. மாந்தையிலே வாழு மகுடத் தியாகியுனக்
கேந்து தழும்போ விரண்டென்பே—வேந்தர்
முடித்தழும்புன் காலிலே முத்தமிழோர்க் கீயும்
படித்தழும்புன் கையிலே பார்.

விதிவிடங்கன்—கம்பன்.

1047. "கங்குற், குழம்புபடு பேரிருட் பிழம்புபட வுருட்டிய
செஞ்சுடர் மௌலி வெஞ்சுடர் வானவன்
வழிமுதல் வந்த மகிபதி வழிமுதல்
அதிபதி நரபதி அசுவபதி...
கசபதி கடலிடங் காவலன் மதிமுதல்
வழுதியர் வரைபுக மற்றவர் தேவியர்
அழுதிய ரழுங்கலி னழுங்கிப் பொழுதியல்
வஞ்சியிற் காஞ்சி வகுத்துச் செஞ்சிலைக்
கலிங்கன்.....யணைந்து நொதுமலர்
கங்க பாடி கவ்விக் கொங்கம்
வெளிப்படத் தருளி யளிப்படத் திருளிய
சாரன்மலை யீட்டுஞ் சேரன்மலை ஞாட்டித்

(1044) வீரசோ. யாப். 33. மேற். (1045)யாப்.வி. 53. (1046)தனிப்பா.

தாவடிக் குவட்டின் பாவடிச் சுவட்டித்
தொடர்நெய்க் கனகந் துகளெழ நெருநற்
கோபுரங் கோவை குலைய மாபெரும்
புரிசை வட்டம் பொடிபடப் புரிசைச்
சுதைகவின் படைத்த சூளிகை மாளிகை
உதைகழு ளெள்ளெரி கொளுவி யுதகை
வேந்தைக் கடல்புக வெகுண்டு போந்து
சூழமண் டலந்தொழ வீழமண் டலமும்
கொண்டு தண்டுவிட் டருளிப் பண்டு
தங்க டிருக்குலத்தோர் தடவரை யெழுதிய
பொங்குபுலிப் போத்துப் புதுக்கத் துங்கத்
திக்கினிற் சேனை செலுத்தி மிக்க
ஒற்றைவெண் குடைக்கீ ழிரட்டைவெண் கவரி
தெற்றிய வனிலந் திவள வெற்றியுள்
வீற்றிருந் தருளிய வேந்தன் போற்றிருந்
தண்டமிழ் நாடன் சண்ட பராக்கிரமன்
திண்டிறற் கண்டன் செம்பியர் பெருமான்
செந்திரு மடந்தைமன் சீராச ராசன்
இந்திர சமான னிராசசர் வஞ்ஞனனும்
புலியைப் பயந்த பொன்மான் கலியைக்
கரந்து கரவாக் காரிகை சுரந்த
மூலமகப் பிரிந்து முழங்கெரி நடுவணுந்
தலைமகற் பிரியாத் தையல் நிலைபெறுந்
தூண்டா விளக்கு.....தாரன்
திருப்புய முயங்குந் தேவி விருப்புடன்
வந்துதித் தருளிய மலையர் திருக் குலத்தோர்
அன்வ யாகத மாகத் தொன்மையிற்
குலதெய்வ மாகக் கொண்டது கலமிருங்
கவசந் தொடுத்த கவின்கொள் கதிர்நுதித்
தவசந் தொடுத்த சுதைமதிற் சூழகம்

... .

காளா கருவுங் கமழ்சந் தணமும்
தாளாந் திரளச் சரளமு நீளார்
குறிஞ்சியுங் கொகுடியு முகடியர் குன்றிற்
பறிந்திடன் வீழப் பாய்ந்து செறிந்தியர்

புதுமத கிடறிப் பொரக்கலிங் கிடத்து
மொதுமொது முத்திரை வீலகிக் கதுமென
வன்கரை பொருது வருபுனற் பெண்ணைத்
தென்கரை யுள்ளது தீர்த்தத் துறையது
மொய்வைத் தியலு முத்தமிழ்க் கபிலன்
மூரிவண் டடக்கைப் பாரிதன் னடைக்கலப்
பெண்ணை மலையற் குதவிப் பெண்ணை
யலைபுன லழுவத் தந்தரிட் சுஞ்செல
மினல்புகும் வீடுபே றெண்ணிக்
கனல்புகுங் கபிலக் கல்லது புனல்வளர்
பேரெட் டான வீரட் டானம்
அனைத்தினு மனுகி யாயது நினைப்பினும்
உணர்தற் கரியது யோகிக ளுள்ளது
புணர்தற் கினியது பொய்கைக் கரையது
சந்தன வனத்தது சண்பகக் கானது
நந்தன வனத்தி னவிவது பந்தற்
சுரும்படை வெண்பூங் கரும்பிடை துணிதர
ஆட்டெ லலி யாலை யயலது பாட்டெலலி

... ...

பாடகச் சீறடிப் பணைமுலைப் பாவையர்
காடகத் தழுதி நவின்றது சேடகச்
சண்டையுங் கண்டையுந் தாளமுங் காளமும்
கொண்டதிர் படகமுங் குளிறுமத் தளங்களும்
கரடிகைத் தொகுதியுங் கைம்மணிப் பகுதியும்
[திருப்பொ]லி திருப்பலி சிறந்து விருப்பொலிப்
பத்தர்தம் பாடல் பயின்றது முத்தமிழ்
நாவலர் நாற்கவி நவின்ற தேவலில்
அருடையெ டரகர வெனக்குனித் தடிமைசெய்
பருடையர் பகுவிதம் பயின்றது...முக்
கண்ணவ னுறைவது கடவுளர் நிறைவது
மண்ணவர் தொழுவது வானவர் மகிழ்வது
மற்றுமின்ன வளங்கொண்மதிற் பதாகை
தெற்றுங் கொழுநிழற் சிவபுரத் தாற்குப்
பன்னு ணிலைபெற முன்னு ளரவோன்
செய்த தானந் தேவன் குடியில்

... ...

இதன்ற னிவந்த மியல்வகை யுரைப்பில்
ஒப்புத்திரு வனையவர் முப்பத் திருவர்
பாடல் பயின்ற நாடகங் களிற்கும்
நெஞ்சா சார நிறைவொடு குறையாப்
பஞ்சா சாரியப் பகுதி யோர்க்கும்
நறைப்புது மலர்விரி நந்த வானம்
இறைப்புத்தொழில் புரிந்த விருந்தவத் தோர்க்கும்
... ...
அறங்கள் யாவையு மிறங்கா வண்ணம்
விஞ்ஞா பனத்தால் மிகவெளிப் படுத்தோன்
அன்பது வேலியி னடைகுநர்க் காக்கும்
ஒன்பது வேலி யுடைய வுரவோன்
கொம்பர் நாடுங் குலாமலர்ச் சோலை
அம்பர் நாட ளலங் குடிக்கோன்
போராண் டலைமை புணர்புயத் துரவோன்
கூத்தொழில் கேளா தேத்தொழின் மூனைந்த
கண்டகர் களிசறத் துரிசற் கலிசெக
மண்டல சுகதியில் வயப்புலி வளர்த்தோன்
வான்பால் மதியும் வலம்புரி யிடம்புரி
மான்பா.....மலிர்சடைக் கடவுள்
நெற்றிக் கண்ணு நிலத்தவர் நினைந்த
தெற்றிக் கண்ணுஞ் சிந்தா மணியும்
போலப் பிறந்த புகழோன் கோலக்
கருங்களிற் றழவன் கம்பத் தடிகள்
மாதி லிடங்கு வரிபரி வல்ல
வீதி விடங்கன் மென்கருப் பாலைத்
தலந்தரு தண்டலைத் தடநீர்
நலந்தரு பொன்னி நாடுகிழ வோனே.

1048. வேலியர்கோன் வீதி விடங்கன் விறற்கம்பன்
ஆலியன்மான் சோழ னதிகாரி—கோலப்
படியின்மேற் பொற்பூப்பைங் கோவல்வீ ரட்டர்
முடியின்மேல் வைத்தான் முயன்று.

1049. பொன்மேக் கழஞ்சால் மணிப்பட்டம் பூப்புனைந்து
மின்மிக்க கட்டமைந்த மேற்கட்டி—சொன்மிக்க
கோவலான் வீரட்டற் கேந்தான் குலவேலி
காவலான் வாழ்கம்பன் கண்டு.

(1047—49) திருக்கோவற்சாஸனப்பகுதி; செந்தமிழ், தொ. 4, பக்—282—35.

விசயவாடை—உதயாதித்தன்.

1050. வேங்கை வளநாடன் விசயவா டைக்கதிபன்
ஓங்கு புகழுதயா தித்தனுக்குத்—தாங்குகடல்
நேராமென் றூலு நிறுத்தா லவன்செய்யன்
காராரி நிறமக் கடல்.

மங்கலக்கால்-ஐயநம்பி.

1051. தெண்டிரைநீர்த் தென்குமரி மாநகர்த்தண் ணீர்ப்பந்தல்
எண்டிசையு மேத்த வினிதமைத்தான்—வண்டிமிரும்
அந்தெரிய லாணைய நம்பி யடல்வளவன்
மந்திரிதென் மங்கலக்கால் மன்.

1052. மானமிக்க வேலையன் மங்கலக்கால் மன்குமரி
தானமைத்த பந்தலிற்றண் ணீரட்டத்—தேனிரைத்த
மைத்தங்கு சோலை மணற்குடியி லேவைத்தான்
நித்தம் பதிஞழி நெல்.

நக்கன்.

1053. கருப்பூர்மன் கம்பனுக்குக் காதலன்சீர் நக்கர்
விருப்பூர் விழுமிய தேவர்க்குத்—திருப்பூர்
விளக்குவைத்துத் தொண்ணூறு டாங்களித்தான் மெய்யே
உளக்கருத்தாற் சால வுவந்து.

சேரன் மகள்.

1054. சேரன் மகளார் சிறந்த [1]வெழின்மானைத்
தாரன் திரையன் தருவிருப்பாற்—றேரிற்
கொணர்ந்தானை... ....குட்டுவஞற்...
புணர்ந்தானைப் போற்று மூலகு.

சோழதூலவல்லி.

1055. ஒதிஞ் சகரர்யாண் டோரொருபத் தெட்டின்மேல்
ஆதிமூ லங்நாளி லானிதனிற்—சோதி
துளங்கில மேற்சோழன் சோழகுல வல்லி
களங்கமற வைத்தாள் கரு.

1056. வண்ணந் திகழுங் கொடிமாட மன்னுஞ் சோழ குலவல்லி
நண்ணுந் தலைமை யுடையாரை நாமார் புகழப் பாமாலை
எண்ணும் படியிற் புகழாள ரென்றே யன்றே யென்னுடைய
கண்ணும் பழனக் கழுமலமுங் கலந்தார் திருவ மலர்ந்தாரேல்.

(1050) வீரசோ. அலங். 23. மேற். (1051-52) T. A. S. 169-70. (1053) S. I. I, IV, NO. 545. p. 182. (1054) சாஸனம். [1]வெழின்மானை. (1055-6) S. I. I, IV, NO. 621.

கருணாகரத்தொண்டைமான்.

1057. சரநிரைத் தாலன்ன தண்பனி தூங்கத் தலைமிசைச்செங்
காரிரைத் தாரையுங் [1]காண்பன்கொ லோகலிங் கத்துவெம்போர்
பொரநிரைத் தார்விட்ட வேழமெல் லாம்பொன்னி நாட்டளவும்
வரநிரைத் தான்றொண்டை மான்வண்டை மாநகர் மன்னவனே.

முனையர்கோன்.

1058. வடித்தவேல் முனையர்கோன் வழுதி மாநகர்
இடித்தபோ தெதிர்முது கிட்ட மீனவன்
வெடித்தவே லடவியை மிதித்த தாள்கடல்
குடித்ததே யாயினுங் கொப்பு ளித்ததே.

மணவிற்கூத்தன் - காலிங்கர்கோன்.

(சிதம்பர சாஸனம்).

1059. எல்லை கடலா வெகல்வேந்த ரைக்கவர்ந்த
செல்வமெலாந் தில்லைச்சிற் றம்பலத்துத்—தொல்லைத்
திருக்கொடுங்கை பொன்வேய்ந்தான் றிண்மைக் கலியின்
தருக்கொடுங்க வெல்கூத்தன் ரூன்.

1060. தில்லையிற்பொன் னம்பலத்தைச் செம்பொனால் வேய்ந்துவா
னெல்லையைப்பொன் னாக்கினை னென்பரால் — ஒல்லை
வடவேந்தர் செல்வமெலாம் வாங்கவேல் வாங்குங்
குடவேந்தன் றொண்டையார் கோ.

1061. தென்வேந்தன் கூனிமிர்த்த செந்தமிழர் தென்கோயில்
பொன்வேய்ந்து திக்கைப் புகழ்வேய்ந்தான்—ஒன்னார்க்குக்
குற்றம் பலகண்டோன் கோளிழைக்கும் வேற்கூத்தன்
சிற்றம் பலத்திலே சென்று.

1062. பொன்னம் பலக்கூத்த ராடம் பலமணவிற்
பொன்னம் பலக்கூத்தர் பொன்வேய்ந்தார்—தென்னர்
மலைமன்ன ரேனை வடமன்னர் மற்றக்
குலமன்னர் செல்வமெலாங் கொண்டு.

(1057) கலிங்கத்துப்பரணிப் பிரதியிறதி (சென்னைமியூஸியம், தஞ்சைச் சரஸ்வதிமால் புத்தகசாலை) [1]காண்பர்கோ. (1058) தஞ்சைச் சரஸ்வதி மால்-பிரதி. (1059–1062) S.I.I. iv, p. 83—84.

1063. நில்லேச்சிற் றஞ்சலத்தே பேரும் பலந்தன்னை
மல்லற் கடற்றானை வாட்கூத்தன்—வில்லவர்தம்
அம்புசேர் வெஞ்சிலையி னுற்றதனை மாற்றியகோன்
செம்புவேய் வித்தான் றெரிந்து.

1064. ஏனை வடவேந்த ரிட்டிடைந்த செம்பொன்னுல்
ஏன(?) லெனத்தில்லை நாயகருக்—காணெய்
கொரிகலமா மாமயிலைத் தொண்டையர்கோன் கூத்தன்
பரிகலமாச் செய்தமைத்தான் பார்த்து.

1065. தென்ரு புனற்றில்லைச் சிற்றம் பலத்தார்க்குத்
தன்னியெயி ரம்பலந்தா தன்பாதம்—புன்ரூண்ண
நற்பயிக்கங் கண்ட நரலோக வீரன்செம்
பொற்படிக்கங் கண்டான் புரிந்து.

1066. இட்டா னெழிற்றில்லை யெம்மாற் கிசைவிளக்க
மட்டார் பொழின்மணவில் வாழ்கூத்தன்—ஓட்டாரை
யின்பமற்ற நீத்தான மேற்றிரு னீண்டொளிசேர்
செம்பொற் றனிக்காளஞ் செய்து.

1067. ஆடுந் தனித்தேனுக் கம்பலத்தே கர்ப்பூரம்
நீடுந் திருவிளக்கு நீடமைத்தான்—கூடார்
அடிக்க[த் திணை]ரியும் புன்ரூர்.....
தடிக்கப் பெருங்கூத்தன் ரூன்.

1068. பொன்னம் பலஞ்சூழப் பொன்னின் றிருவிளக்கால்
மன்னுந் திருச்சுற்று வந்தமைத்தான்—தென்னவர்தம்
பூவேறு வார்குழலா ரோடும் பொருப்பேற
மாவேறு தொண்டையார் மன்.

1069. சிற்றம் பலத்தானை யேற்றினர் தெல்லிடத்துக்
கொற்றத்தால் வந்த கொழுதெரியாற்—பற்ரூர்
தருக்கட்ட வஞ்சினவேற் ரூர்மணவிற் கூத்தன்
திருக்கட்ட மஞ்சனமுஞ் செய்த.(?)

1070. தொல்லைப் பதித்தில்லைக் கூத்தற்குத் தொண்டையர்கோ
னெல்லைத் திசைக்களிகை கெட்டனவுஞ்—செல்லப்போய்ச்
சாலமுது பேய்தடிக்க[த் தார்ட்டிகத்?] தொண்டையர்கோன்
பாலமுது செய்வித்தான் பார்த்து.

(1068—1070) S.I.I. IV, p. 83—84.

1071. ஆகர் தெளிதேனே யாயிர நாழிநெய்யால்
ஆகும் படிகண்டா னன்றினர்க—ளோகம்
நிறங்கண்ட [1]தாளன் னெக்கனிற்ரூன் ஞாலம்
அறங்கண்ட தொண்டையர்கோ னுங்கு.

1072. நட்டப் பெருமானுல் ஞானங் குழைந்தளித்த
சிட்டப் பெருமான் நிருப்பதிய—மூட்டாமைக்
கேட்போர்க்கு மண்டபத்தைச் செய்தான்றெவ் வேர்தர்கெட
வாட்போக்குந் தொண்டையார் மன்.

1073. மல்லற் குலவரையா னூற்றுக்கான் மண்டபத்தைத்
தில்லைப் பிரானுக்குச் செய்தமைத்தான்—கொல்லம்
அழிவுகண்டான் சேர னளப்பரிய வாற்றற்
கிழிவுகண்டான் ரொண்டையா ரேறு.

1074. தில்லைப் பெரிய நிருச்சுற்று மாளிகையை
எல்லைக் குலவரைபோ லீண்டமைத்தான்—தொல்லைநீர்
மண்மகளைத் தங்கோன் மதிக்குடைக்கீழ் வீற்றிருத்தி
உண்மகிழ்ந் தொண்டையர்கோ னூற்று.

1075. புட்கரணி கல்சாத்து வித்தான்பொற் கோயிலின்வாய்
விக்கரணம்(?) பார்ப்படத்தன் மேல்வித்தித்—திக்கனவு
மாகடத்திக் கோனடத்தும் வாட்கூத்தன் மண்ணிலதர்
தானடத்தி நீவித்தான் ரூன்.

1076. வீதிருழ் நல்வினக்கும் வீற்றிருக்க மண்டபமும்
மாதிருழ் பாக மமிழ்ந்தார்க்குப்—போதிருழ்
தில்லைக்கே செய்தான் திசைக்களிறு போய்நிற்கும்
எல்லைக்கே செல்கனிக்க ரேறு.

1077. நடங்கவின்கொ ளம்பலத்து நாயகச்செந் தேனின்
இடங்கவின்கொள் பச்சையிளந் தேனுக்—கடங்கார்
பருமா ளிகைமேற் படுத்தைத்த கூத்தன்
நிருமா ளிகையமைத்தான் சென்று.

1078. எவ்வுலகு மெவ்வுயிரு மீன்று மெழிலழியாச்
செவ்வியான் கோயிற் நிருச்சுற்றைப்—பவ்வலுழ்
எல்லைவட்டந் தன்கோற் கியலவிட்ட வாட்கூத்தன்
தில்லைவட்டத் தேயமைத்தான் சென்று.

(1071—1078) S.I.I. IV, p. 33—34. [1]ரானன்.

1079. வாளுடைய பொற்பொதுவின் [மன்ன னிடமாகும்]
ஆளுடைய பாலைக் கபிடேகம்—வேளுடைய
பொற்பிளுன் பொன்னம் பலக்கூத்தன் பொங்குகட
வெற்பிளுன் சாத்திளுன் வேறு.

1080. சேதாம்பல் வாய்மயிற்குத் தில்லையர் தேவிக்குப்
பீதாம் பரஞ்சமைத்தான் பெரொலிநீர்—மோதா
அலைகின்ற வெல்லை யபயனுக்கே யாக
மலைகின்ற தொண்டையார் மன்.

1081. செல்வி [திருத்தறங்க டென்]னகரித் தில்லைக்கே
நல்லமகப் பாலெண்ணெய் நாடோறுஞ்—செல்லத்தான்
கண்டா னரும்பையர்கோன் கண்ணகனீர் ஞாலமெலாம்
கொண்டானந் தொண்டையார் கோ.

1082. ஆதிசெம்பொ னம்பலத்தி னம்மா னெழுந்தருளும்
வீதியும்பொன் வேய்ந்தனனுய் மேல்விளக்குஞ்—[சோதிக்
கொடியுடைத்தாய்ப் பொன்னுற் குறுகவலா ளென்றும்?]
படியமைத்தான் ரொண்டையர்கோன் பார்த்து.

1083. நாயகர் வீதி யெழுந்தருளு நன்ளுளால்
ஆய கருவேழு தூபத்தாற்—போயொளிசேர்
வான்மறைக்கக் கண்டானிப் பார்மகளே வண்புகழால்
தான்மறைக்கக் கூத்தன் சமைத்தி.

1084. [பருமை ... ...]
திருவுருவ மானதிருக் கோலம்—பெருகொளியாற்
காட்டினுன் தில்லைக்கே காளினிவாய் வெங்கலியை
ஓட்டினுன் தொண்டையர்கோ [னுற்று.]

1085. மன்றுதிகழ் தில்லைக்கே வாணிக் கரசகணந்
தின்றும் பொழின்மணவிற் ரொண்டைமான்—என்றும்
இருந்திண்ணக் கண்டா னிகல்வேந்த ராகம்
பருந்திண்ணக் கண்டான் பரிந்து.

1086. தில்லைத் திலகவலி [விண்சிறி? பஞ்சவினி]
எல்லை நிலங்கொண் டிறையிழிசெய்—தில்லை
மறைமுடிப்பார் வீதி மடஞ்சமைத்தான் மண்ணோர்
குறைமுடிப்பான் தொண்டையர் கோ.

(1079—1086) S.I.I. IV, p. 33—34.

1087. என்றும் பெறுதலா லேரா ரெழிற்புலியூர்
மன்றி னடனுக்கு மாமத்தக்—குன்று
கொடித்தருளி மண்ணிற் கொடுங்கலிவா ராமே
தடித்தனன் ரெண்டையர்கோன் ரூன்.

1088. முத்திறத்தா ரீசன் முதற்றிறத்தைப் பாடியவா
ரெத்தமைத்த செப்பேட்டி னுள்ளெழுதி—இத்தலத்தி
னெல்லைக் கிரிவா யிசையெழுதி னென்கூத்தன்
தில்லைச்சிற் றம்பலத்தே சென்று.

1089. தில்லை வளருந் தெளிதே னெளிதழைப்ப
நல்லதிரு நந்தா வனஞ்சமைத்தான்—[வ?ல்லத்திற்]
கோட்டங்கொள் வாழ்வேந்தர் கொற்றக் களியானை
யீட்டங்கொள் காலிங்க ரேறு.

1090. நூரூ யிரமுக மாங்கமைத்தான் ரெண்சினத்தின்
மாருக வெல்களிற்று வாட்கூத்தன்—கூரூளும்
வல்லிச் சிறுமிடைக்கு வான்வளர மாடஞ்செய்
தில்லைச்சிற் றம்பலத்தே சென்று.

1091. மாசிக் கடலாடி வீற்றிருக்க மண்டபமும்
பேசற் றவற்றைப் பெருவழியும்—ஈசற்குத்
தென்புலியூர்க் கேயமைத்தான் கூத்தன் றிசையனைத்து
மன்புலியா ணேநடக்க வைத்து.

1092. ஒங்கியபொன் னம்பலத்தார்க் கோரா யிரஞ்சுரவி
ஆங்களித்தா னேற்றெதிர்ந்தா ராயிழையார்—தாங்கா
தொருக்கியுட லாவி யுயிர்த்தநாட் போக்கி
யிருக்கவென்ற தொண்டையா ரேறு.

1093. தொல்லோர்வாழ் தில்லைச் சுடலையமர்ந் தார்கோயில்
கல்லா லெடித்தமைத்தான் காசினியிற்—[ரெல்லை]
மறைவளர்க்க வெங்கலியை மாற்றிவழு வாமல்
அறம்வளர்க்கக் காலிங்க ரூய்ந்து.

1094. தில்லைமூ வாயிரவர் தங்க டிருவளர
எல்லையில்பே ரோங்கெழின்மதகு—கல்லினும்
ரூணமைத்தான் ரெவ்வேந்தர்க் கெல்லாந் தலந்தவிர
வானமைத்தான் ரெண்டையார் மன்.

(1087—1094) S.I.I. iv, p. 33—34.

[திருவதிகைச் சிவாசாரனம்.]

1095. பொன்மகர தோரணமும் பூணணியும் பட்டிகையுந்
தென்னதிகை நாயகர்க்குச் செய்தமைத்தான்—மன்னவர்கள்
தன்கடைவாய் நில்லாதார் தாள்வரைவாய் நின் றுணங்க
மின்கடைவேற் காலிங்கர் வேந்து.

1096. மின்னிலங்கு போற்சதுக்க மேகடம்ப மென்றிவற்றைத்
தென்னதிகை நாயகர்க்குச் சேர்த்தினான்—தென்னவர்தந்
தோணோக்கும் வென்றி துறந்தே சுரநோக்க
வாணோக்குங் காலிங்கர் மன்.

1097. வில்லில் வெயிலனைய வீரட்டர் தந்திருநாள்
நல்லநெயி லைஞ்ஞூற்று நாழியால்—வல்லி
யுடனுடக் கண்டான்றண் ணென்னலர்க்குக் கண்க
ளிடனுடச் செல்கூத்த னீண்டி.

1098. மண்டபமு மாளிகையும் வாழதிகை வீரட்டர்க்
கெண்டிசையு மேத்த வெடுத்தமைத்தான்—விண்டவர்கள்
நான்வாங்கச் சேயிழையார் நாண்வாங்க நற்படக்கை
வாள்வாங்குங் காலிங்கர் மன்.

1099. மன்னொளிசேர் தூற்றுக்கான் மண்டபத்தை மால்வரையால்
மன்னதிகை நாயகர்க்கு வந்தமைத்தான்—மன்ன
ரிசைகொடா தோட விகல்கொண்டாங் கெட்டித்
திசைகொடார் கூத்தன் தெரிந்து.

1100. மன்னுதிரு வீரட்டர் கோயின் மடைப்பள்ளி
தன்னைத் தடஞ்சிலேயா லேசமைத்தான்—தென்னர்
குடமலை நாடெறிந்து கொண்டவேற் கூத்தன்
கடமலைமால் யானையான் கண்டு.

1101. அதிகை யரணுக் கருவரையாற் செய்தான்
மதிகை நெடுங்குடைக்கீழ் மன்னர்—பதிக
ளரியதிருச் சுற்று மூடன்கவர்ந்த கூத்தன்
பெரியதிருச் சுற்றைப் பெயர்த்து.

1102. அருமறைமா தாவி னறக்காமக் கோட்டந்
திருவதிகைக் கேயமையச் செய்து—பெருவிபவங்
கண்டா னெதிர்ந்தா ரவியத்தன் கைவேலைக்
கொண்டானந் தொண்டையர் கோ.

(1095—1102) செந்தமிழ்.

1108. தென்னதிகை வீரட்டஞ் செம்பொனுல் வேய்ந்திமையோர்
பொன்னுலகை மீளப் புதுக்கினுன்—மன்னுயனங்கு
மூற்றத்தான் மூற்றுநீர் வையம் பொதுக்கடிந்த
கொற்றத்தான் தொண்டையர் கோ.

1104. வானத் தருவின் வளஞ்சிறந்த நந்தவனம்
ஞானத் தொளியதிகை நாயகர்க்குத்—தானமைத்தான்
மாறுபடத் தாருடலம் வன்பேய் பகிர்ந்துண்ணக்
கூறுபடுத்தான் கலிங்கர் கோ.

1105. எண்ணில் வயல்வினைக்கும் பேரேரி யீண்டதிகை
யண்ணல் திருவிளக்க வாங்கமைத்தான்—மண்முழுதுந்
தங்கோன் குடைநிழற்கீழ்த் தங்குவித்த வேற்கூத்தன்
எங்கோன் மணவிலா ரேறு.

1106. ஐயொருப தாயிரமாம் பூக மதிகையிலே
மையிரவு கண்டார்க்கு வந்தமைத்தான்—வெய்யகலி
போக்கினுன் மண்ணைப் பொதுநீக்கித் தங்கோனுக்
காக்கினுன் தொண்டையர்கோ னுங்கு.

1107. அராப்புனையும் நம்மதிகை வீரட்டா னர்க்குக்
குராற்பசுவைஞ் ஞூறு கொடுத்தான்—பொராப்புறத்தான்
கண்டருக்குத் தான்கொடுத்த காவிங்கன் காணிக்குத்
தண்டருப்போ னின்றளிப்பான் ரூன்.

1108. வாரி வளஞ்சுரக்க வாழதிகை நாயகருக்
கேரியு மூரு மிசைந்தமைத்தான்—போரிற்
கொலைாடு வெஞ்சினவேற் கூத்தன் குறுகார்
மலைாடு கொண்டபிரான் வந்து.

1109. அம்மா னதிகையிலே யம்பொற் றடமிரண்டும்
செம்மா மலரிலகச் செய்தமைத்தான்—கைம்மாவி
லீட்டின்ற வெம்பாமம் கண்டருளென் றீண்டரசர்
காட்டின்ற வேற்கூத்தன் கண்டு.

1110. அருளா காரல்லா ராங்கமைந்த வேரி
இருளார் களத்ததிகை யீசன்—அருளாரச்
சென்றமைத்தான் தென்னுடன் சாவேற்றின் றின்செருக்கை
யன்றமைத்தான் தொண்டையர்கோ னுங்கு.

(1108—1110) செந்தமிழ்.

1111. போதியி னீழற் புனிதற் கிறையிலிசெய்
தாதி யதிகையின்வா யாங்கமைத்தான்—மாதர்முலை
நீடுழக்கா ணைத்து நேரலரைத் தன்யானைக்
கோடுழக்காண் கூத்தன் குறித்து.

1112. மாசயிலத் தம்மைக்கு வாழதிகை வீரட்டத்
தீச னிடமருங்கி லேந்திழைக்கு—மாசில்
முடிமுதலா மூற்றணிகள் சாத்தினுன் வேளாண்
குடிமுதலான் தொண்டையார் கோன்.

1113. ஆற்றற் படைவேந்த ராற்ரு தழிந்திட்ட
மாற்றற்ற செம்பொன்னுல் வாழதிகை—ஏற்றுக்
கொடியார்க்குக் கோலப் பரிகலமாச் செய்தான்
படியார்க்குஞ் சீர்க்கூத்தன் பார்த்து.

1114. அண்ண லதிகையரற் கையிரண்டு நல்விளக்கு
மண்ணின் வறுமைகெட வந்துதித்துக்—கண்ணகன்ற
ஞாலத் தறஞ்செய் நரலோக வீரன்பொற்
சீலத்தி னுலமைத்தான் சென்று.

1115. நீடு மதிகையரண் நித்தல் பெருங்கூத்தை
யாடு மரங்கமைத்தா னன்றினுர்—நாடு
பரியெடுத்த தூளி பகல்மறைப்பச் சென்றுங்
கரியெடுத்தான் றொண்டையா ரேறு.

1116. ஈச னதிகையில்வா கீச னெழுந்தருள
மாசில் பெருங்கோயில் வந்தமைத்தான்—பூசல்
விளைவித்த வேணுடம் வெற்பனைத்துஞ் சென்றீ
வளைவித்தான் தொண்டையார் மன்.

1117. நல்யாக மண்டபத்தைச் செய்தான் நரபதியர்
பல்யானை யோடெண்கப் பாவலர்க்—கெல்லாம்
புகுங்குடையான் தொண்டையர்கோன் பொன்மழையோ டொக்
தருங்கொடையான் தானதிகை சார்ந்து. [கத்

1118. அண்ண லதிகையர னகம் பிரியாத
பெண்ணினல்லா ளெண்ணுன்கு பேறருமம்—எண்ணியவை
நானுன் செலவமைத்தா னண்ணு வயவேந்தர்
வானுன் கவர்கூத்தன் வர்த்து.

(1111—1118) செந்தமிழ்.

1119. ஆட லமர்ந்தபிரா னங்கதிகை வீரட்டம்
நீடுவதோர் கோயி னினைந்தமைத்தான்—கோடிக்
குறித்தா ருடல்பருந்து கூட்டுண்ணக் காட்டி
மறித்தானந் தொண்டையர் மன்.

முடிகொண்டான்.

1120. புயன்மேவு பொழிற்றஞ்சை மூதற்பஞ்ச
நதிவாணன் புதல்வன் பூண்ட
வயமேவு களியானை முடிகொண்டான்
மாநெடுவேல் வத்தர் வேந்தன்
இயன்மேவுதோளபயற் கிருபத்தை
யாண்டதனி னிடர்க் கரம்பைச்
செயன்மேவு மீசர்க்குத் திருநந்தா
விளக்கொன்று திருத்தி னானே.

கோதண்டராமன்.

1121. கூர்வேல்வல் கோதண்ட ராமன் குலோத்துங்கன்
பேராற் பணித்தமைக்கும் பிச்சையம்மன்—சேரமான்
வங்கத்தே துங்க வடகலிங்கங் கொண்டமைக்குஞ்
சங்கத் தருங்கடலே சான்று.

உதயமார்த்தாண்ட பிரமராயன்.

1122. பூமகள் புணரப் புகழது வளர
வெங்கலி கடிந்து செங்கோ லோச்சிய
பூழி வேந்தன் கோழியர் குலபதி
சிரீராச ராஜ சிரீலிக் கிரம
சோழ தேவர்ச் கியாண்டிரண் டதனில்
[நீ]ரார் நிகரிலி சோழமண் டலத்துக்
காராரர் வயல்சூழ் கைவார நாட்டின்
மாட மாளிகை மண்டப மோங்கிய .....
அருமொழித் தேவ சதுப்பேதி மங்கலத்துப்
பல்லோர் புகழு ரல்லூர் மூதல்வன்
மாத்திரை யதனின் மாசெதி ரல்லும்

(1119) செந்தமிழ்.(1120) s. I. I. IV. p. 470. No. 1888.(1121) Ibid. p. 291. (1122) Ephigraphica Carnatica, vol. x, p. 111.

ஆத்திரை யர்கோ னுதலர் சாலே...[1]
சாமுண் டையன் றண்பெருந் தேவி
பூச்செறி குழலாள் வீச்சமை பயந்த
தண்டமி ழாலேயன் தாரணி யேத்தும்
எண்டிசை திகழு மிருபிறப் பாளன்
கொண்ட லன்ன குவலய தந்திரன்
ஒன்கு புகழா னுதயமார்த் தாண்ட(ப் பிரமராய)ன்
தேங்கமழ் தாரோன் செழுமறை வாணன்
தன்றிருத் தமையன் றண்பெய ராலே
பொன்புரி சடையன் புண்ணியன் விண்ணவர்...
சோமீச் சுரன்றிருக் கோயி லெடுப்பித்துத்
திருப்பிர திட்டை திகழப் பண்ணித்
திருவடி நிலையுஞ் செம்பொ னுலைமைத்
திருவுரு வளர வுமாசகிதன் திருமேனி
இருநிலம் போற்ற வெழுந்தருள் வித்துக்
கேதகை மல்லிகை இஞ்சுக மஞ்சரி
பாதிரி புன்னே பராரை யார்மகிழ்
சிதலி மௌவல் செருந்தி செண்பகம்
மாதவி யென்றிவை வளம்பெற வமைத்துச்
செங்கண் விடையோன் சென்னி மன்னும்
கங்கை நீரு மண்ணுங் கொணர்ந்து
குருக்கள் குளிரக் கோயின் மேல்பாற்
றிருக்குள மாகத் தீர்த்தங் கண்டு..
கொட்டுங் தட்டுங் குலவி நிலவிய
விருப்பு மடியார் மேவிமுன் சிறக்கத்
திருப்படி மாற்றக்குத் தேவதான மாகப்
பெரிய வேரியி னிலமொரா யிரமும்
சிரார் செந்தமி ழோர்களிப் பார
யிரா யிரங்குழி (நீ)ரித் நிகழ
குணபதி யாயெங் குற்றங் கடியும்
கணபதி யார்க்கிரு நூறு குழியும்
சூரிய தேவர்க் கிருநூறு குழியும்
* * * *
பசுவூர் நாத்பா லெல்லே யுட்பட

---

[1]கூடல் கொற்றவாய்தல்பாகட்டேர் சூருட்டேர் என்றவர்கள் வந்தடிகள் பிழைபட்டுள்ளன.

நன்னில நிகழ நான்மறை யவர்ஙாற்
பொன்னற விட்டு மண்ணறக் கொண்டு
தாரணி நிகழத் தன்கினே வளர
சக்கிரா நித்தர் தாமுள் ளளவும்
ஊழி யூழி யுரவுபெற வமைத்தனன்
வாழி வாழி வையகத் தினிதே.

1123. தேனுருஞ் செங்கமல மாதுபுண ருந்தோளான்
காளுரும் விந்தைமகள் காதலனும்—பூநாடும்
வண்டறியாத் தாமரையோன் தன்மரபில் வந்துதித்த
கண்டன் கவுண்டின்ய கோத்திரத்தான்—எண்டிசையும்
சாலி வயல்புகுந்து சண்பகப்பூஞ் சோலைதொறும்
பாலி மணிசிந்திப் பரந்தோங்கி.....
செய்யார் மலருழக்கிச் செங்கமலப் பொய்கைபுகுங்
கைவார நாடன்மிகுங் கார்மேகம்—பொய்யாத
கங்கையிறுந் தூயபிரான் கண்டர வல்லவனும்
அங்கை முகிலமுதன்...பிரமாதிராயன்
மாதவியே மூல்லே வருக்கைமகிழ் சந்தனமே
சூத வனமேதா தவிபுன்னேப்—போதலரும்
சோலைவய ரேறுஞ் சுரும்பினங்கள் பண்பாட
வேலையது போலும் விதிர்ச்செட்டில்—ஆலிலைமேற்
பள்ளிகொண்ட மாலும் பதுமத்தோ லுங்காணு
வெள்ளிமலே நாதன் மிகவிரும்ப—வொள்ளார்
திருக்கற் றளியு முகமண் டபமும்
உருப்பெறச்செய் ஞழிபல வாழப்—பெருக்குஞ்
சகவருஷ மாயிரத்து நூற்றொன் றதனில்

* * *

செட்டிச் சுரமென்று..... .....
எட்டுத் திசைக்கு மெழில் விளக்காய்ச்—சிட்டர்தொழ
மண்ணும் வளஞ்சுரப்ப மாமறையோர் தாந்தழைப்ப
விண்ணு மழைபொழிய வெங்கலிபோய்—எண்ணிய

* * *

சீரார் சிவமறை யோன்றனக்கு—நீராரப்
பாணியிலே வார்த்துப் பகபதியைப் பூசித்துக்
காணியது வுங்கொடித்துக் கல்வெட்டி ..கொடித்தான்"

(1128) Ibid. p. 138.

தஞ்சை யாதவர்கோன்.

1124. ஓத வளர்வண்மை யோபளாநா தன்றஞ்சை
யாதவர்கோன் வாழ வினிதூழி—போத
மருக்குலவுஞ் சோலைவட வேங்கடவா ணர்க்குத்
திருக்கைமலர் தந்தான் சிறந்து.

திருக்கண்ணபுரத்துத் தாதி முனையதரனுக்கு எழுதிவிடுத்த பாட்டு.

1125. இன்றுவரி லென்னுயிரை நீபெறுவை யின்றைக்கு
[1]நின்று வரிலதுவு நீயறிவை—வென்றி
மூனையா கலவி முயங்கியவா றெல்லாம்
நினையாயோ நெஞ்சத்து நீ.

[2]ஓராசாவுக்கு வேளையது என்றுகேட்ட சோமனுக்குக்
கூத்தர் கூறியது.

1126. தன்னுடைய தேவியர்க்குத் தார்வளவன் முன்னுரைப்ப
தன்னுடைய கீர்த்தி யுயர்நலமே—துன்னுபுகழ்ச்
சோமா திரிபுவனத் தோன்றலே நின்புகழை
யாமா ருரைக்க வினி.

பழிகாரர் தொடர்ந்தபோது, கூத்தர் சோமன்வாசலில்
ஓடிச் சொன்ன கவி.

1127. அடையென்பார் தன்னென்பா ரன்பொன் றிலாமற்
புடையென்பார் தங்கடைக்கே போகோம்—கொடையென்றால்
முந்துஞ்சோ மாபுவனே முன்னவனே நின்கடைக்கீழ்
வந்துஞ்சோ மாதலான் மற்று.

சோமன் கோடைச்சிறப்பு.

1128. நிழலருமை வெய்யிலிலே நின்றறிமி னீசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின்—பழகுதமிழ்ச்
சொல்லருமை காலிரண்டிற் சோமன் கொடையருமை
புல்லரிடத் தேயறிமின் போய்.

1129. கையை விரித்தழைக்கக் கண்குழிந் ததச்சோமன்
செய்யசுட்டி யீந்தான் றினகரா—பையவே
தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

(1124) S. I. I. iv, No. 297, p. 84. (1125) தமிழ்நா. 184; சோழமண். சத. 42. [1]நின்றுவரி லென்னதுவு. (1126—7) தமிழ் நா. 130—31. (1128) தனிப்பா. (1129) செந்தமிழ். தொ. 3, பக். 68; தினகரவெண்பா.

***சடையன் இல்லறச்சிறப்பு.**

(கம்பர்பாட்டு)

1130. மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவ நீர்போதுங் [1]காவிரியே—பொய்கழுவும்
[2]போர்வேற் சடையன் [3]புதுவையா னில்லறத்தை
யார்போற்ற வல்லா ரறிந்து.

1131. புரந்தர னாரு புதுவைச் சடையன்
இருந்தவிய லூர்தெற்கு மேற்குப்—பரந்தபொன்னி
யாற்றுநீ ரால்வீயு மப்பாற் கிழக்கரிசி
மாற்றுநீ ரால்வீயு மாம்.

திரிகர்த்தராயன் என்ற புதுவைச்சடையன்.

1132. யாமார் புகழ வியற்கம்ப நாட னிராமனெனும்
பாமாலை சூடுங் குலமுடை யானைப் படிபுரக்கக்
கோமாற னிட்டபொற் சிங்கா தனம்பெற்ற கொற்றவனைத்
தேமாலை யச்சந் தவிர்ப்பான்வெண் ணைத்திரி கர்த்தனையே.

1133. தண்ணூர் கமலச் சதுமுகத் தோனையுந் தப்புவதோ
பண்ணூர் மணித்தலைக் கட்செவி யானது பாரினுள்ளே
கண்ணுக வாழும்வெண் ணைத்திரி கர்த்தன் கலைத்தமிழ்கேட்
டெண்ணு முடியசைத் தாலுல கேழு மிறக்குமென்றே.

சடையன் வல்லிவீட்டை வேய்ந்ததைச் சிறப்பித்துக் கம்பர் பாடியது.

1134. பொதுமாதர் வீட்டைப் புகழ்பெற வேநெற்
கதிரானே வேய்ந்தருளுங் கங்கைப்—பதிநேர்
வருவெண்ணை நாடன் வருநா வலர்க்குத்
தருவா னவன்சடையன் றான்.

**கண்டிநாடு பஞ்சம்பட்டகாலத்துக் கப்பலாயிரத்தில்
நெல்லனுப்பிக் காத்த சடையவள்ளலை வியந்து அந்நாட்டரசனை
பாராசசிங்கன் பாடியது.**

1135. இரவுநண்பக லாகிலென்பக லிருளருவி வாகிலென்
இரவியெண்டிசைமாறிலென்கடலேழுமேறிலென்வற்றிலென்

---

*(கம்பர்) 'காவிரி எச்சிற்படப் பாடிய வெண்பா' என்ற தலைக்குறிப்புத் தமிழ்நாவலர்சரிதையுட் கண்டது. (1130) மூவலூர்ச் சாஸனம்; தமிழ்நா 70; சோழமண். சத. 47. [1]காவேரி. [2]போர்வேள். [3]புதுவையான் றன்புகழை. (1131) சோழமண். சத. 91. மேற். (1132–33) சோழமண். சத. 91. (1134) ஷெ. 76. (1135) சோழமண். சத. 42.

மரபுதங்கிய முறைமைபேணிய மன்னர்போகிலெ ஞகிலென்
வளமையின்புறு சோழமண்டல வாழ்க்கைகாரண மாகவே
கருதுசெம்பொனி னம்பலத்திலொர் கடவுணின்று நடிக்குமே
காவிரித்திரு நதியிலேயொரு கருணைமாமுகி லியிலுமே
தருவுயர்ந்திகி புதுவையம்பதி தங்குமானிய சேகரன்
சங்கரன்றரு சடையனென்றொரு தருமதேவதை வாழவே.

இணையாரமார்பன்.

'கூட்டிக்கொண்டுவரச் சோழன் அனுப்பிய இணையார மார்பனைப் பாண்டியன் 'இவன் யார்' எனக் கம்பர் பாடியது.'

1136. என்னுடைய தம்பி சராம னுக்கிளையான்
கன்னன் மதயானைக் கம்பன்மகன்—[1]தன்னும்
பணையார்நீர் வேலிப் பழனஞ்சூழ் சோணாட்
டிணையார மார்ப னிவன்.

புதுவைச் சேதிராயன்.

1137. பழத்து டைந்தகனி நெக்கு நெக்குருகு
சாறு வீழவடி சேறெழும்

பலவு றுஞ்சுளையை யமுத மென்றுவெயில்
படவொ ணாதென மறைப்பபோல்

பொழிற்பு றஞ்சொரியு மூகிலி னந்தழுவு
புதுவை வாழ்சடை யனுதவுசேய்

பூத லம்பரவு சேதி பன்றனது
பொன்னி நாடனைய பூவையாள்

விழித்த னந்தலொ டெழுந்தி ருந்ததுவு
மெய்த்து வட்சியு மிழிச்சியும்

மென்ம ருங்கினி லெடுத்து டுத்ததுவு
மேக லைத்தலை யிணைத்ததும்

வழுத்தி நின்றுதிரு நீறு தந்துவிடை
தந்த பார்வையை மறப்பினும்

வாச லின்படி பிடித்து நின்றநிலை
மனம றப்பதிலை காணுமே.

(1136) தமிழ்நா. 86; சோழமண். சத. 75. மேற். [1]முன்னன், கணை யாழி முத்துதிர்க்குங் காவிரிசூழ் சோணாட்டு. (1137) சோழமண். சத. 46.

அகிலகலாவல்லவன் சோமான்பெருமாள் வஞ்சி மார்த்தாண்டன்
திருப்பாழந்தநிருவடி சொல்லிவாக் காட்டின
பாதுடகவி.

1138. காவிரியைச் சோணாட்டைக் காராளர் தம்மரபை
நாவலரைக் காவலரை நல்லோரைப்—பூவலயம்
உள்ளத் தகும்புதுவை யூரைச் சிறப்பித்தான்
பிள்ளைப் பெருமாள் பிறந்து.

1139. பேரோசைப் பிள்ளைப் பெருமாளைச் சேதிபனைக்
காரோசைக் கையானைக் கண்டீரே—பாரோர்
விடுங்கோள் கொடுங்கோள் விழியருள்பூண் டன்ன
படுங்கோன் கொடுங்கோ (னென?)

தாதன்.

(கம்பர் பாடியது)

1140. தாதாவென் றூலுந் தருவென்று சொன்னூலுந்
தாதாவென் றூலுந் தருவனே தாராதான்
தாதாவென் றூலுந் தருவென்று சொன்னூலுந்
தாதாவென் றூலுந் தருவனந் தாதனே.

காளிம்பன்.

'வல்லிவீட்டுக்கு ஏருமைவாங்கிவரப்போய்க் காளிம்பன் கிரைகள்
மேய்ப்பானைக்கண்டு அவன்பேரிற் பாட்டுச்சொல்ல,
அவன் ஈன்ற ஏருமை ஆயிரங்கொடுத்த
வெண்பா.'

1141. புக்கு விடைதழுவிக் கோடுழுத புண்ணெல்லாம்
திக்கிலுயர் காளிம்பன் தென்புழன்மா—னக்கணம்
தோள்வேது கொண்டிலளேற் சுந்தரப்பொற் றூண்றலுக்கு
வாழ்வேதங் கண்டிலமே மற்று.

கம்பர்க்குக் குலோத்துங்கன்விட்ட சாஸனப்பாட்டு.

1142. கதலிவரு பொன்னி கரைகடவா வண்ணம்
பதமமுகக் கம்பனவன் பாட—வதிலைவரி
மாடை யரைக்கழஞ்சு வண்கம்பர்க் கீந்தபரி
சேடர்குலோத் துங்க னெழுத்து.

(1138-1139) மூவலூர்ச் சாஸனம்; செந்தமிழ். தொ. 4, பக். 251, 252. (1140) தமிழ்நா. 84. (1141) தமிழ்நா. 92; தொண்டை. சத. 25. (1142) கொங்கு. சத. 80. மேற்.

கங்கன்.

1143. கங்க னகன்மார்பன் கற்றேர்க் கினிதளிக்குஞ்
[1]செங்கனகம் வெள்ளைச் செழுமணிக—ளெங்கும்
தெறித்தனவே போல்விளங்கு [2]மீன்சூழ்ந்த திங்க
ளெறிக்குநிலா வண்றே வினி.

போத்தப்பிச்சோழன்.

1144. பொத்தப்பிச் சோழன் புடோலியர சன்புவிமேல்
எத்திசையுஞ் செல்லுமெழின் மேற்பாடி —மெய்த்தவத்தாற்
சோளேந் திரசிங்க நாயகற்குத் தங்கமணித்
தாளேந்து மண்டபஞ்செய் தான்.

நின்றுவான்.

1145. இம்பர் நிகழவிளக் கிட்டா னிடர்க்கரம்பைச்
செம்பொனணி வீமீச் சரந்தன்னில்--உம்பர்தொழ
விண்ணுய்ய நின்றுடு வானுக்கு வேலுழ்
மண்ணுய்ய நின்றுடு வான்.

கடம்பை மாறன்.

1146. உண்ணீர்மை தாங்கி யுயர்ந்த நெறியொழுகி
வெண்ணீர்மை தாங்கி விளங்குமால்—தண்ணீர்த்
தரம்போலு மென்னத் தருகடம்பை மாறன்
கரம்போற் கொடைபொழிவான் கார்.

அயன்றைச் சடையன்.

'பாண்டியன் கழாய்க்கூத்துப் பார்க்குமிடத்தில் பராமுகமாக, கூத்தாடினவள் கோபித்துக்கொண்டு விழுங்காற் பாடியது.'

1147. மாகுன் றனையபொற் றேளான் வழுதிமன் வான்கரும்பின்
பாகொன்றுசொல்லியைப்பார்த்தென்னைப்பார்த்திலன் பையப்பை
போன்ற புள்ளினங் காள்புழற் கோட்டம் புகுவதுண்டேற் [யப்
சாகின் றனனென்று சொல்லீ ரயன்றைச் சடையனுக்கே.

(1143) ரன். 267 மயிலை; [1]செங்னைக. [2]மீன்குழத். (1144) S. I. I. IV. p. 88. (1145) Ibid. p. 887. (1146) [1]தண்டி. 31. (1147) தமிழ்நா. 160; தொண்டை. சத. 32.

'இந்தக்கவியைக் கேட்டுச் சோதிக்கச் சிலரை (ப் பாண்டியன்) விடுக்க, அவன் (அயன்றைச்சடையன்) சூலிமுதலிற் சோறிட்டபோது பாடியது.

1148. இரவ லாளரே பெருந்திரு வுறுக
அரவுமிழ் மணியு மலைகட லமுதும்
சிங்கப் பாலுந் திங்கட் குழவியும்
முதிரை வாலுங் குதிரை மருப்பும்
ஆமை மயிரு [1]மன்னத்தின் பேடும்
ஈகென விரப்பினு மில்லென வறியான்
சடையனை யயன்றைத் தலைவனை
உடையது கேண்மி [2]னுறுதி யோர்ந்தே.

நம்பிகாளியை நெற்குன்றவாணமுதலியார் பாடியது.

1149. சற்குங் கவிவல்ல யாதவர் கோனம்பி காளிக்கியாம்
விற்கும் பரிசன மாகிவிட் டோம்வட வேங்கடமும்
பொற்குன் றமும்புகழ்க் கங்கா நதியும் பொதியமும்போல்
நெற்குன் றமுநம் மரபுமெக் நாளு நிலைநிற்கவே.

ஐயந்தவிர்த்தபெருமாள்.

1150. வையம் பெறினும் பொய்யுரைக்க
மாட்டார் தொண்டை நாட்டாரென்
றையன் களந்தைப் புகழேந்தி
யாண்டா னுரைக்கு மவரோநீர்
வெய்யுஞ் சிலைக்கை மதவேளே
யெழுபார் புரக்கு மெங்கோவே
ஐயர் தவிர்த்த பெருமானே
யாவோ மடியோ மாவோமே.

பெருமங்கலழடையான் வடவாசரை வென்றது.

1151. கோட்டை வாசலிற் கூளிதன் பலத்தால்
வாட்டமில் வளவனை மலைவதப் பொருதிடும்
வடவர சரைப்பெரு மங்கல முடையீர்

(1148) தமிழ் நா. 161; தொண்டை. சத. 38; தஞ்சைச் சரச்சுவதிமால். பிரதி. [1]மடல்வேற் குடரும். [2]னுறுதியோ வாதே; னுறுதியுள் வீரே. (1149) தொண்டை. சத. 88 மேற். (1150) ஷ 17. மேற். (1151) சோழமண். சத. 95. மேற்.

படைபொரு தவசயப் பதித்துமென் றேலும்
காத்தெழு பத்திர காளியா லத்தப்
பேய்த்தலே கொண்டு பெரும்படை செயித்தோம்.

விண்ணன்.

'அரவின்மணி கொடுத்தபோது ஒருபுலவன் பாடியது.'

1152. கூர்ந்த வறுமையிடைக் கோளரவ மீன்றமணி
சார்ந்த புலவன் றனக்களித்தான்—வார்ந்ததரு
மேலைவிண்ணின் மண்ணில் விளங்கும் புகழ்படைத்த
சாலைவிண்ண னுக்கினையார் தாம்.

துடிதாங்கி.

1153. வெறும்புற் கையுமரி [1]தாய்க்கிள்ளை சோரவென் னீடுகெட்டேன்
[2]எறும்புக்கு மாற்பத மில்லைகண் டாயென் னிருக்கலியின்
குறும்பைத் [3]தூரத்துங் குடிதாங்கி யைச்சென்று கூடியபின்
[4]தெறும்புற்கை யானே கவளங்கொள் ளாமற் றெவிட்டியதே.

களத்தைத் துடிதாங்கி.

1154. பொன்னெல்லே யெல்லாம் பொதிபொதியாய்ப் பூசுரற்குச்
செந்நெல்லே போலச் சிறந்தளித்தான்—பன்னகத்தின்
சீரார் மணியையலே செய்யானுஞ் செய்யகளத்
தூராளுஞ் செய்கரும மொன்று.

மருத்தன்.

1155. திருத்தங்கி தன்வாழை தேம்பழுத்து கிற்கும்
மருத்தன் நிருக்குடர்தை வாழை—குருத்தோள்
நிலையுமிலை பூவுமிலை காயுமிலை யென்றும்
உலகில் வருவிருந்தோ ரெண்டு.

(1152) தமிழ்நா. 194. (1153) ஷே. 191; இது 'பாதிகேட்டுப் பரிசில்கொடுத்தபின் பாதி பாடியது' என்ற குறிப்புடன் உள்ளது. [1]தாங்கிள்ளை சோருமென். [2]எறும்புக்கொ ராற்பத மில்லை முன்னுள். [3]தவிர்த்த. [4]தெறும் புற்கொள். (1154) தொண்டை. சத. 68, மேற். (1155) தமிழ் நா. 64; சோழமண். சத. 70; ஔவைபாடியதென்பர்.

வல்லிக் கச்சியப்பனை ஒருபுலவர் பாடியது.

1156. மண்படுமோ வெய்யிலிலே வாடுமோ புல்லரிரு
கண்படுமோ வன்பாகக் கற்றவர்க்கு—மண்புகழ
மெச்சியப்பா லும்புகழும் வீறவல்லை யாளவந்த
கச்சியப்ப னையுதைத்த கால்.

நின்றைக் காளத்திவாணன்.

1157. நீளத் திரிந்துழன்றுய் நீங்கா நிழற்போல
நானைக் கிருப்பாயோ நல்குரவே—காளத்தி
நின்றைக்கே சென்றக்கா னீயெங்கே நானெங்கே
[1]இன்றைக்கே சற்றே யிரு.

"பொன்பாப்பினனை மகதைப்பெருமாள்கவி"

1158. தாரு முடியு முரகந் தமக்குரிய
பாரு முடன்பெறுவர் பார்வேந்தர்—வீரப்
பெருமாண் மகதேசன் பேசொழுதித் தத்தந்
திருமார்பி லாளோலை செய்து.

1159. வன்மதுரை வீட்டி வடகடலான் மால்வழுதி
தென்மதுரை வீட்டின்று தென்கடலான்—நன்னுதலாய்
மல்லார்தோண் மாகதர்கோ மான்முனிந்தான் மன்னவருக்
கெல்லாங் கடலோ விடம்.

1160. ஆழந் தருகடல் வையத்தரசு
செலுத்திய செங்கோ லரசெல்லாம்

வேழந் தருகொடை வாண னிவாகரன்
வீதிமுறை செய்வது வீதிகண்டீர்

ஈழந் திறையிடு மாணிப் படிமைக
ளிடுமின் றென்ன ரிடாராகிற்

சோழன் றிறையிடும் யானைக் குங்கோ
யிடுமென் றிருமிது சொன்னேமே.

(1156) தொண்டை. சத. 50 மேற். (1157) ஷெ. 32. [1]என்றைக்குக் காண்பே னினி. (1158-1160) திருவண்ணாமலை அருணாசலேச்சுவரர்கோயிற் சாசனம்; செந்தமிழ், தொ. 3, பக். 427—32.

1161. பாரோங்கு கொற்றக் குடைவாணன் பல்புரவித்
தேரோன் றிருவுத் திராடநாட்—பேருவமை
குன்றெடா மால்யானைக் கோவேந்தர் வீற்றிருப்பர்
இன்றெடா னின்றெடா னென்று.

1162. தென்னர் முதலா வுலகாண்ட செம்பொன்முடி
மனனர் பெருவாழ்வும் வான்வலியு—மின்னும்
உருவத் திகிரி யுயர்நெடுந்தேர் வாணன்
புருவக் கடைவளையப் போம்.

1163. நீய்ந்து பொழிலாகா பேர்ந்து நகராகா
தூர்ந்து மணிநீர்த் துறையாகா—ஏந்துமுலை
பூணாகா மாரி விழலாகா பொன்னெடுந்தேர்
வாணாகா வென்னுதார் மண்.

1164. பொருப்பிற் கரிய புகர்முகவெங் கூற்றின்
மருப்பிற் றுளைப்புண்ண வாரா—திருப்பின்
வடியுளவாஞ் செவ்வேன் மகதையார் கோமான்
அடியுளவாம் வேந்தர்க் கரண்.

1165. புரிந்த கனைகழற்காற் போர்வளவர் கோனே
வரிந்த திறைக்காக வாணா—தெரிந்தானே
வாங்கினா யென்று வழுதியர்க டாங்கலங்கி
யேங்கினார் பாரிழந்தே மென்று.

1166. முருகுந்து காஞ்சியும் வஞ்சியுங் கொண்டமொய் தார்மகதன்
திருகுங் கனைகழல் வீக்கிய நாட்சீ பராந்தகனிற்
பெருகுங் குருதிப் புனல்பாய் தொறும்பில வாய்மடித்துப்
பருகுங் கழுதுடன் செம்மைகொண் டார்க்கும் பணிக்கடலே.

1167. மட்டியன் றேறிய தார்புனை வாண புறந்தரநீ
வெட்டியன் றேகொன்ற வேண்மணிப் பாடி யுதிரவெள்ளத்
தொட்டியென் றேனுந் தொலைவதுண் டேதொலை யாதபந்தி
கட்டியன் றேதெவ்வர் பாய்பரித் தானை கலக்குவதே.

1168. சொங்குங் கலிங்கமுங் கொண்டகண் டாகொடித் தேருதியர்
தங்கும் படிகொண்ட வாணுதி பாதணி யாததென்கொல்
பொங்குஞ் சினப்படை வங்கார தொங்கன் புரண்டெழிச்
செங்குன்ற மின்று பிணக்குன்ற மாக்கிய தேர்மன்னனே.

(1161—1168) திருவண்ணுமலை அருணாசலேச்சுவரர்கோயிற் சாசனம்; செந்தமிழ், தொ. 3, பக். 427—32.

1169. வாரொன்று முலையாய்மற் றவரொன்றும்
பழுதுரையார் மகதை வேந்தன்
போரொன்று புரியாமுன் பெரியகுறிஞ்
சியிலெழுந்த புகையே கண்டாய்
காரன்று கனலெரியை மின்னென்று
தளரேலக் காரைக் காட்டில்
ஊரொன்று மதில்விழுந்த பேரோலியு
முருமதிர்வ தொக்குங் காணே.

1170. முன்பொரு படைக்கடலே விட்டரச ராளுர்
மூலதன மும்பரியு முறைமுறை யளிப்பார்?)
தென்பகை யடக்கியபின் வாணகுல தீபன்
செய்ததனி யாண்மைவட திக்கிலறி கிற்பாம்
பொன்பொரு பொருப்பரண் விடாமலைய மானைப்
போரெயிலி லேபொருத போதொரு பெரும்போர்
வன்பகை தவிர்த்ததொரு குதிரைவலி யாலே
வடபகை தவிர்த்ததொரு கோவின்வலி யாலே.

1171. மண்ணு டிகிரிக்கை வாணன் வடுகெறிந்த
எண்ணு யிரஞ்சூழ்ந்த வெண்டிசையும்—புண்வார்ந்த
நீரோநீர் காக நிழலே நிழனெடும்பேய்த்
தேரேதேர் செஞ்சேறே சேறு.

1172. எண்மேன் மிகும்பரித் தேர்மக தேச னிகல்விசையப்
பெண்மேல் விரும்பிவெம் போர்செய்த நாட்பின் கொடாவடுகர்
விண்மே னடந்து வடுகென்னு நாமம் விலக்குண்டபின்
மண்மே னடந்தது தேசிமுன் னை வடுகொன்றுமே.

1173. சூழும் பிணவுணமேற் சேய்கழுகின் பந்தர்க்கீழ்
வீழுங் கழுதினங்கண் மெய்காப்ப—வாழ்ந்தந்
தொன்னகரே போல்வதுகர் துஞ்சத் துயிற்றியதே
மன்னவர்கோ மாகதர்கோன் வாள்.

1174. மடலளவு நிறைந்தொழுகு மதுமலர்த்தார்
மகதேசன் வையங் காக்கும்
அடல்வினவி லணிநெடுந்தே ராய்மலர்த்தா
மனைவணங்கா வரசர் யாவர்

(1169—1174) திருவண்ணுமலை அருணுசலேச்சுவரர்கோயிற் சாசனம்; செந்தமிழ்; தொ. 3, பக். 427—32.

கடலளவு நடந்தவன் குரக்குநிரை
தாயவன்றன் கதிர்வேண் மன்ன
ருடலளவு நடந்ததுமற் றுலகளவு
நடந்தவ னொருசெங் கோலே.

1175. தேர்க்கொடி மாமறுகிற் றெண்மணலைச் சேயிழையார்
மார்க்கு மருந்தாக்க வல்லவாம்—யார்க்கும்
உயிராய செங்கோ லுயர்ந்தேந்தேர் வாண
னயிரா வதத்தி னடி.

1176. சொல்லி விடுசெரு மீனவர் சூழு முரிமைகொ டாழ்கடல்
எல்லி விடுபட வேறுவ ரேனும் யமபுரி யேறுவர்
கொல்லி விடுமுர காதிபர் கூளி கருதல ரூர்புக
வல்லி விடுமயி ராவதம் வாணன் வரவிடு நாளையே.

1177. வேலை நடுங்கல்லும் வெட்டுக்கீ ரக்குகையும்
மூலை தெறிக்கு முடித்தலையும்—நாளை
மதிவா ணுதன்மடவாய் காணலாம் வாண
னதிவா ரணந்தொடர்விட் டால்.

1178. நாமா னரவிந்த மான்விந்த மான்மூடி நாகர்சென்னிப்
பூமான் விரும்பும் புகழ்மக தேசற்குப் போர்வழுதி
வாமான் றிறையிட்ட வங்நா டொடங்கியவ் வானவர்தம்
கோமான் றனதென் றிராணம ராவதிக் குஞ்சரமே.

1179. மேருவின்மேல் வென்று கயல்பொறித்த வார்த்தையினும்
வாரிபட வேலெறிந்த வார்த்தையினும்—கார்விலங்கு
முன்னிட்ட வார்த்தையினுந் தென்னவர் மாகதற்குப்
பின்னிட்ட வார்த்தை பெரிது.

ஏகம்பவாணன்.

1180. வாணன் புகழ்க்கெல்லை வாழ்த்துவோர் நாவெல்லை
வாணன் புகழ்க்கெல்லை மண்ணெல்லை—வாணன்
படைக்கெல்லை திக்கெல்லை பைந்தமிழ்த்தேர் வாணன்
கொடைக்கெல்லை யேற்பவர்தங் கோள்.

(1175—1179) திருவண்ணாமலை அருணாசலேச்சுவரர்கோயிற் சாசனம்; செந்தமிழ், தொ. 3, பக். 427—32. (1180) தனிப்பா.

1181. வாணன் புகழெழுதா மார்புண்டோ மாகதர்கோன்
வாணன் புகழுரையா வாயுண்டோ—வாணன்
கொடிதாங்கி நில்லாத கொம்புண்டோ வுண்டோ
அடிதாங்கி நில்லா வரசு.

1182. பேரரசர் தேவிமார் பெற்ற மதலையர்த
மார்பகலங் கண்டு மகிழ்வரே—போர்புரிய
வல்லா னகளங்கன் வாணன் றிருநாம
மெல்லா மெழுதலா மென்று.

1183. வெற்றிபுனை தாதகிக்கும் வேம்புக்கும் பெண்ணைக்குஞ்
சுற்றும் பெருநிழலாய்த் தோன்றுமே—கற்றோர்
நிறந்தாங்கு தாங்குஞ் செகமுழுதுந் தாங்கும்
அறந்தாங்கு தொண்டை யரசு.

"வாணனுடைய பாணன் மதுரையிற்போனபோது, பாண்டியன் கொடுத்த நியாகம், வாணன்கையினுலேற்ற வலக்கையினு லல்லாமல் இடக்கையா லேற்க, பாண்டியன் உளவனென்று இகழ்ந்தபோது பாடியது."

1184. சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
யானை மிதித்த வருஞ்சேற்றின்—மானபரன்
மாவேந்தன் வன்கண்ணன் வாணன் பதித்துநடும்
மூவேந்தர் தங்கண் முடி.

"வாணன் தாதிமேற் கோபமாய் 'விலங்கு கொண்டுவா' என்றபோது வாணன் சேடியர் பாடியது."

1185. அலங்க லணிமார்ப னுறையர்கோன் வாணன்
விலங்கு கொடுவருக வென்று—னிலங்கிழையீர்
சேரற்கோ சோழற்கோ தென்பாண்டி நாடாளும்
வீரற்கோ யார்க்கோ விலங்கு.

1186. வாட்டானைத் தென்னவர்கோன் மாகதற்குத் தோற்றசெய்தி
கேட்டானைத் திக்குரலுங் கேட்டதற்பின்—நாட்டம்
பொருந்தா யிரவிழியான் பொன்முடியைச் சாய்த்தங்
கிருந்தானிற் கென்னுரு மென்று.

(1181—1183) தனிப்பாக்கள். (1184) தமிழ்நா. 188. (1185) ஆ. 178. (1186) தனிப்பா.

1187. என்கவிகை யென்சிவிகை யென்றுவச மென்கவசம்
என்கரியீ தென்பரியீ தென்பரால்—மன்கவன
மாவேந்தன் வாணன் வரிசைப் பரிசுபெற்ற
பாவேந் தரைவேந்தர் பார்த்தி.

வாணன் தன்புலவனது கடைவாயிற்கதவைத் தட்டியபோது அப்புலவன் பாடியது.

1188. பாண்டியனைப் பேர்மாற்றிப் பாணற் கரசளித்த
ஆண்டகையென் றுன்னை யறியேனே—மூண்டெழுந்த
கார்மாற்றுஞ் செங்கைக் கடகரிவா ணுவுனது
பேர்மாற் றுவதரிதோ பேசு.

வாணனைப் பாண்புலவன் பாடியன.

1189. சேற்றுக் கமலவயற் றென்னுறை வாணனையான்
சோற்றுக் கரிதரச் சொன்னக்கால்—வேற்றுக்
களிக்குமா வைத்தந்தான் கற்றவர்க்குச் செம்பொ
னளிக்குமா றெவ்வா றவன்.

1190. உலக்குரிய பண்ட முவந்திரக்கச் சென்றுற்
கொலக்குரிய வேழங் கொடித்தான்—கலக்குரிய
வாணர்கோ னுறை மகதே சனுக்கிந்தப்
பாணனே டென்ன பகை.

1191. பாணன் மதிரைப் பதியாள வைத்தபிரான்
வாணர் புகழ வருமாறை—வாணன்
கரும்போ தகமேகின் கால்பணிவேன் மீண்டு
வரும்போ தகமே வரின்.

(புலவாற்றுப்படை.)

1192. தேரு னேப்புரவி வார ணத்தொகுதி
றைகள் கொண்டுவரு மன்னரின்
றேய மேதுனது நாம மேதுபுகல்
செங்கை யாழ்தடவு பாணகேள்

(1187—1190) தொண்டை. சத. உரை. பக். 239-41. (1191) தனிப்பா. (1192) தொண்டை. சத. உரை. பக். 241.

வாரு மொத்தமுடி சேரு நாளுமக
தேச ரூலைநிகர் சாவலன்
வாண் பூபதி மலித்த ளித்தவெகு
வரிசை பெற்றுவரு புலவன்யான்

நீரு மிப்பரிசு பெற்று மீளவர
லாரு மேகுமவன் மூன்றில்வாய்
நித்தி லச்சிகர மாட மாளிகை
நெருக்கு கோபுர மருங்கெலாம்

ஆரு நிற்குமொரு வேம்பு நீற்குமுயர்
பனையு நிற்குமத னருகிலே
அரசு நிற்குமர சைச்சு மந்தில
வத்தி நிற்குமடை யாளமே.

மாவலிவாணன்.

1193. அதிகயலை மூண்ணளி லாடகக்குன் றிட்ட
வமெறைக்து போயு மறையா—மூதெருசமர்
மாற்சேர் தொழுந்திருமால் மாவுதைப்ப வேல்வழுதி
தோற்சேடிப் போன சுவடு.

1194. மாலாக்கி யிந்திரை யைத்திருத் தோள்வைத்து வையமொரு
சோலாற் புரந்தருண் மாவலி வாணன்றன் கொற்றவடி
வேலாற் றுரப்புண்ட பின்னீர மாறன் வெருண்பெண்டு
காலாற் குடித்த கடல்கண்க ளால்விழக் கண்டனமே.

1195. எற்சூர்க் கிடாதா ரிலையென்ப தின்றறிந்தேம்
சிற்றத் திருமால் செருவேந்த—மாற்றிலாப்
பொன்னிட்டான் சென்னிகொடிப் புள்ளிட்டான் சேரமான்
வெற்றிட்டான் கொற்கையார் வேந்து.

1196. கன்னலெனுஞ் சிறுகுருவி கனைமழைக் காற்றுமன்
மின்னலெனும் புழுவெறித்து விளச்சேந்தும் கார்காலம்
மன்னவனுர் தென்மதுரை மாவலிவா ணனைப்பிரிந்திங்
கென்னபிழைப் பென்னவிருப் பென்னைகைப் பின்னதுமே.

(1193—1195) கச்சிச்பாராயகிகோயிற் சாஸனம்— S. I. I. IV, NO. 348, p. 98. (1196) தனிப்பா.

1197. மன்னன் குலசே கரபாண் டியன்செய்த மாமண்டபம்
பின்னெரு காலத் தறைகுறை நீர்த்திப் பிறங்கச்செய்து
பொன்னின் திருவா பரணம் பலபுதி தாகத்தந்தான்
மன்னும் புகழ்த்திரு மாலிருஞ் சோலை மலைவலியே.

1198. பாறுசூழ் சுடரிலைவேற் குரிசில்குல
சேகரபாண் டியன்மூன் செய்த
ஆறுகாற் பீடத்திற் சிலபழைய
தைப்புதிதா வழகிற் செய்து
வீறுசேர் நாயகர்சந் நிதித்திருக்கா
வணப்பத்தி விளங்க வைத்தான்
தேறுநீர்க் கடலுலகெண் சுந்தரமா
வலிசேர்த்திச் செல்வன் மூனே.

திருவுக்கைக்கோங்காயன்
அசனமிடுவித்தபோது இரட்டையர் பாடியது.

1199. சாணர்க்கு முன்னிற்கு மாட்கொண்ட நாயன் தமிழ்க்கொங்கர்
பாணுற்ற வரிவண்டு சேர்வக்கை நகராதி பக்கத்திலே [கோன்
ஊணுக்கு வாரா திருப்பாய் விருப்பாகி யுயர்வானிலே
வீணுக்கு நின்னுக மெலிகின்ற [1]திவ்வாறு வெண்டிங்களே.

சம்பாசன்
விகடசமுத்தி பாடச்சொல்ல ஷெபுலவர்கள் பாடியது.

1200. எறிக்கும் புகழ்க்கச்சி யேகாம் பரன்சம்ப னெண்டிசைக்கும்
பொறிக்கும் புலிக்கொடி யான்புயம் வேட்டபின் பூவையன்னுள்
வெறிக்கும் குமக்கொங்கை மீதே விழிசொரி வெள்ளந்துள்ளித்
தெறிக்குந் திவலை வழிக்குஞ்சிந் தூரத் திலதத்தையே.

சம்பராசனது படைவீழ்ந்தியிருந்த பாண்டியனைநோக்கி
ஷெ புலவர் பாடியது.

1201. காற்று லலைப்புன்னெ ண்ணன் கடல்கடைத்தும்
ஏற்று னெறித்[1]வனைத் தெய்தினாத்த—மாற்றுத
செம்பொன் மலையன்று சேரற் கடல்கொடுக்கச்
சம்பன் மலைகை தவர.

(1197—98) மதுரைத்திருப்பணிமாலை, 20—1. (1199) தமிழ்நா. 107. [1]தெல்வாது. (1200) ஷெ. 109; தொண்டை. சத. 89 மேற். (1201) தமிழ்நா. 110. [1]வனைத்தெய்தும்.

காரிக்கோன்.

(சோழன் புறக்கொடையிற் பாண்டியன்புலவன் பாடியது.)

1202. ஆறெல்லாஞ் செந்நீ [1]ரருகெல்லாம் பல்பிணங்கள்
ஆறெல்லாஞ் சோழன் சுரிகுஞ்சி—[2]மாறில்லாக்
கன்னிக்கோ [3]னேவமுடிக் காரிக்கோன் பின்னுடாப்
பொன்னிக்கோன் [4]போன புகார்.

பிரதாபருத்திரனிடத்திற்போய்

அவன் அடைப்பைகட்டிவரக் கம்பர்பாடிய வெண்பா.

1203. அவனிமுழு துண்டு மயிரா வதத்துன்
பவனி தொழுவார் பதத்தும்—புவனி
உருத்திரா தின்னுடைய வோரங்க னூட்டிற்
குருத்திரா வாழைக் குழாம்.

சிங்கையாரியன்.

1204. கங்கணம்வேற் கண்ணினையாற் காட்டினர் காமர்வளைப்
பங்கயக்கை மேற்றிலதம் பாரித்தார்—பொங்கொலிநீர்
செங்கைநக ராரியனைச் சேரா வனுரேசர்
தங்கண் மடமாதர் தாம்.

ஆரியசேகரன்

யானைமேல் ஆயிரம்பொன்னும் வரவிட அத்தயானையைப்
பாண்டியன்வந்துகேட்கச் சாருவபூமன் பாடியது.

1205. பாவலன் வாசலில் வந்திபம் வாங்கப் படிபுரக்குங்
காவலர் நிற்கும் படிவைத்த வாகண்டி யொன்பதினும்
மேவலர் மார்பினுந் திண்டோ ளினுஞ்செம்பொன் மேருவினுஞ்
சேவெழு தம்பெரு மான்சிங்கை யாரிய சேகரனே.

ஆரியசேகனிடத்திற் போயிருந்து

புத்தசமயத்திற் கடகம்யானை வாங்கி மீண்டு மதுரையில் வந்து
பாண்டியன் வரிசையளிப்ப இருக்தபின்
ஆரியசேகரன் பட்டானென்று கேட்டபோது பாடியது.

1206. ஆஅ லிதியோ வடலா ரியர்கோமான்
ஏஎ வலரா லிழித்தான்—ஓஒ

(1202) தமிழ்நா. 172; கொங்குமண். சத. 57 மேற். [1]ரவனியெல்லாம். [2]மீறுவெற [3]னேவலிறுத் காரைக்கோன். [4]ஒடம் பொழுது. (1203) தமிழ் நா. 89. (1204) கொழும்பு மியூஸியம் சாஸனம்—S. I. I. iv, No. 1413. (1205) தமிழ்நா. 148. (1206) ஷெ. 144.

தருக்கண் ணிலுங்குளிர்ந்த தண்ணளிதந் தாண்ட
திருக்கண் ணிலுங்கடலோ நீ.

1207. போது போனது வந்தது தனிமையும் புகுந்தது பனிவாடை
தூது போனவண் டிவ்வழி மறந்தது சொல்லுவ தினியேதோ
ஓது வார்புகழ் மணவைய ரதிபதி யோருல கோவ்வாதான்
சேது காவல னரிய சேகரன் றிருவுளர் தெரியாதே.

பராசசேகரன்.

1208. சூட்டும் பராசர் தொன்முடிமேற் செவ்வானைத்
தீட்டும் பராச சேகரா—வீட்டுபுகழ்ச்
சிங்கைக்கோ வேமகிழ்ந்து சேராநாட் சந்தனமென்
கொங்கைக்கோ வேதனேயா கும்.

1209. மஞ்சுமஞ் சுங்கைப் பராச சேகர டின்னன்வெற்பிற்
பஞ்சுமஞ் சும்பதப் பாவைநல் லீர்படை வேன்பகழி
யஞ்சுமஞ் சுங்கட லஞ்சுமஞ் சுங்கய லஞ்சுமஞ்சும்
நஞ்சுமஞ் சுங்கொலை வேலோ வுமதி நயனங்களே.

1210. ஆரார் பொதுப்பார்சொ லாதித்தா வஞ்சிமன்னு
சேரா பராச சேகரா—நேரேநி
னத்தவட்ட மிட்டசெப்பெ னப்பணைத்தி நித்தபொற்ற
னத்திலிட்ட முத்துவெக்கை தான்.

புவனேகவாது.

1211. இலகிய சகாத்த மெண்ணூற் றெழுபதா மாண்ட தெல்லை
அலர்பொலி மாலை மார்ப னும்புவ னேக வாகு
நலமிகும் யாழ்ப்பா ணத்து நகரிகட் கெவித்து நல்லக்
குலவிய வித்த வேட்குக் கோயிலும் புரிவித் தானே.

சேகாசசேகரன்.

1212. செய்யாள் கணவா சேகராச சேகரா
ஐயா வடகங்கைக் காரியா—அய்யா
குடஞ்சுட்டுப் பின்போன கோபாலா முத்து
வடஞ்சுட்டுக் கண்டியிலாண் மான்.

(1207) சேதுநாடெங் தமிழும். பக். 4. (1208) தஞ்சைச் சரஸ்வதிமஹால்-தமிழ்நூல் அட்டவணை பக். 279. (1209) ஷை. பக். 295. (1210) தனிப்பா. (1211) தமிழ்ப்புல. சரி. பக். 154. (1212) தனிப்பா.

1213. அது மதுரை துவரை கடம்பிடைமுன்
ஒதுமின்ற மூவெழுத்து மோர்குமே—நீதிச்
செகராச சேகரன்வாழ் சிங்கையெனுஞ் செல்வ
நகரா யிழையார் நகை.

தன்மபாலன்.

1214. போதி நிழலமர்ந்த புண்ணியன்போ லெல்லையிர்க்குந்
நீதி லருன்சுரக்குஞ் சிந்தையான்—ஆதி
வருதன்மம் குன்றுத மாதவன்மாக் கோதை
யொருதன்ம பால னுரான்.

தொண்டையான்.

1215. கருங்கலி மூன்நீரின் மூழ்காத முன்னம்
இருங்கடி மண்மகளே யேந்தினவே யாயிற்
பெரும்பெய சேனத் தெயிறனைய வன்றே
சுரும்பறை தொண்டையான் சோள்.

சிவலோகநாதன்.

1216. பூப்பாவை கோன்வீர ராசேந் திரர்க்காப் புராரிகலே
நாப்பா னவிற்றுஞ் சிவலோக நாதனே [னன்னருந்] தேன்
ஆப்பாலை டைத்தொடும் வெண்சரட் டரற்கையப் பித்தவறங்
காப்பா ரவரென்னை யாளுடை யாரிக் கடலிடத்தே.

வானவன்மாராயன்.

1217. பஞ்சநதி வாணன் றிருவுருவும் பாற்றெளிவாம்
அஞ்சொ லுமையுருவு மையாற்றே—செஞ்சவே
வாசத்தார் வானவன்மா ராயன் வெளிப்படுத்தான்
தேசத்தா ரேத்தச் சிறந்து.

(1213) தனிப்பா. (1214) இவ்வைகைத் தனதவுலிகாவா சாஸனம் S. I. I. iv. No. 1405: (1215) புறத்திரட்டு—புகழ். (1216) வீரராசேந்திர சோழனது ஆட்சியின் மூன்றுமாண்டில் அமைந்த சாஸனப்பாடல்; செந். தொ.14. பக். 395. (1217) திருவையாற்றுத் தென்கயிலாயம், தென்னும் பட்டிகையிற்கண்ட சாஸனப்பாட்டு.

கண்டன்மாதவன்.

1218. [ஆ]ரிய வுலக மனைத்தையும் குடைக்கீழ்
ஆக்கிய குலோத்துங்க சோழற்
காண்டொரு நாற்பத் தாறிடைத் தில்லை
யம்பலத் தேவட கீழ்பால்

போரியன் மதத்துச் சொன்னவா றறிவார்
கோயிலும் புராண நூல் விரிக்கும்
புரிசைமா ளிகையும் வரிசையால் விளக்கப்
பொருப்பினுன் விருப்புறச் செய்தோன்

நேரியற் காண்டோ ளஞ்சுடன் மூன்றில்
னிகரிலாக் கற்றளி கீழ்
நிலாவினும் கமைத்த நிலாவினு னமுத
சாகர னெ[ன்றமிழ்த்] தொகுத்த

காரிகைக் குளத்தூர் மன்னவன் ரெண்டை
காவலன் சிறுகுன்ற நாட்[டு க்]
கற்பக மிழலை நாட்டுவே ளா[ண்மை
கொண்]டவன் கண்டன்மா தவனே.

1219. எண்டிசை யுலகை யொருகுடை நிழற்கீ
ழிருத்திய குலோத்துங்க சோழற்
கியாண்டொரு மூப்பத் தெட்டினிற் சோணாட்
டிசைவள ரிக்தலூர் நாட்டு [ள்

உண்டை] நீ டியநீ ருமை யோடு
[மு] லாவின [வெபெரு மாளுக்]
குவந்து [வெண் கயி] லை மலையெனச் சிலையா
லுத்தம விமானமிங் கமைத்தான்

தண்டமி ழமித சாகர முனியைச்
சயங்கொண்ட சோழமண் டலத்திற்
றண்றெ குன்ற நாட்டகத் திருந்தி [ச்
சந்த] நாற் காரிகை யவனுற்

(1218—19) கீழ்ச்சாலைம்—Ep. Ind. Vol. XVIII, p, 64—69.
[] இக்குறிக்குப்பட்ட எழுத்துக்கள் மோனையெதுகைமுதலியவற்றுக்கையைய ஊகித்தமைக்கப்பட்டவை.

கண்டவன் மருமான் காரிகைக் குளத்தூர்க்
காவல னிலாவிலு னெவர்க்கும்
கருணையு [நிதியும்] காட்டிய மிழலை
நாட்டுவேள் கண்டன்மா தவனே.

காரை உத்தமசோழக் காமீண்டன்.

1220. சரங்கொண் டிலங்கை சமைத்தபெற் ருன்றரி யாரிறைஞ்ச
உரங்கொண்ட காரைம னுத்தமச் சோழ னுபயபுயம்
இரங்கும் படியரு ளான்மட வீரினி யென்னுயிரைக்
குரங்கின்கை யிற்பட்ட பூமலை யாக்குங் குளிர்தென்றலே.

கோரைக்காலாள்வான்.

1221. கரியாய்ப் பரியாகிக் காரெருமை தானுய்
எருதாய் மூழப்புடைவை யாகித்—திரிதிரியாய்த்
தேரைக்கால் பெற்றுமிகத் தேய்ந்துகா லோய்ந்ததே
கோரைக்கா லாழ்வான் கொடை.

ஓராசசிங்கன்.

1222. வடலைக் கனலைப் பிழிந்து கொண்டு
மற்று மொருகால் வடித்தெடுத்து
வாடைத் தருத்தி வைத்தாதி
மறுகக் காய்ச்சிக் குழம்புசெய்து

புடவிக் கயவர் தமைப்பாடிப்
பரிசு பெறுமற் றிரும்பிவரும்
புலவர் மனம்போற் கடுநெருப்பைப்
புழுகென் றிறைத்தாற் பொறுப்பாளோ

அடவிக் கதலிப் பசுங்குருத்தை
ரச்சுக் குழலென் றஞ்சியஞ்சி
யஞ்சொற் கிளிகள் பஞ்சரம்விட்
டகலா திற்கு மகளங்கா

(1220) கொங்குமண். சத. 87. (1221) தனிப்பா; ஔவையார் கொன் பர். (1222) தனிப்பா. இது, வீரசோழன்போன்ற சோழவரசரைப்பற் றியதாகத் தோற்றுகின்றது. அந்தக்கலிவீராகவமுதலியார் பராசசிங்க னென்ற சிங்களவேந்தனைப் பாடியதென்றும் கூறுவர்.

திடமுக் கடவுட் டணமுறைத்த
தேவே நாச சிங்கமே
திக்கு விசயஞ் செலுத்தியொரு
செங்கோ னடாத்து மெங்கோவே.

மலைநாட்டுவணிகன்-ஆதியிராமன் கோதான்.

1223. பொய்கை யருவா னரைப்புனைந்து புத்தரும்
அய்யமறக் கொண்டவர்க்கு நாக்கிலுன்—செய்யமலர்
மாதுயர் கின்ற மலைநாட்டு வாழ்வணிகன்
ஆதியிரா மன்கே ரளன்.

சீயகங்கன்.

1224. சொல்காப் பியத்தின் குணதோடந் தேர்ந்து சொலுவதற்குத்
தொல்காப் பியங்கற்க நீண்ட ததனைச் சுருக்கியிசை
ஒல்காப் பெரும்பவ ணந்தியென் றோதி யுபகரித்த
வல்கா வலன்சீய கங்கனுந் தான்சொங்கு மண்டலமே.

நீலகங்கன் சிற்றம்பலவனைக் கண்டியதேவன் பாடியது.

1225. அலைவளைத்த திருப்பாற் கடலிலை
ஆட ராவி னணையிலை பச்சையால்
இலைவளைத்த மணிமண் டபமிலை
யிக்கு நீவந்த வாறே நினைப்புவாய்
கொலைவளைத்த வேலங்கேசன் மாமலர்க்
கொத்து மாமுடி பத்துக்கு மன்றொரு
சிலைவளைத்த காலை கண்டலை
திங்கள் வெண்குடைச் சிற்றம் பலவனே.

வாயற்பதி வணிகன்.

1226. தன்னுடன் கூடப் பிறந்துயி ராகிய [1]தம்பியையும்
அன்பிலை மாண்டது தோன்றுமன் மூடிலைத் தன்னமிட்டான்
மன்னவர் போற்றிட வாழ்செங்க லங்கை வகைதனுக்குக்
கன்னனுஞ் [2]சோமனு மோகிக ராயினிக் காண்பதுவே.

(1223) S. I. I. vol. I, p. 90. (1224) கொங்குமண். சத; சன். மயிலைநாதருரை, முகவுரை. (1225) தமிழ்நா. 180. (1226) தெ. 195; தொண்டை. சத. 58 மேற். [1]தம்பியுயிர். [2]சோமனு மோகினி யாகக் கழுத லுதே.

வாயல் வடகன்மகனை ஒரு புலவர் பாடியது.

1227. முந்தவினே யோன்மாள முத்தமிழோர் கன்னமிட்ட
அந்த வடகன் மகளுயின்—வந்தென்
தலைக்கலியா ணத்துக்கே தான்பிணத்தை மூடி
இலக்கணமாச் செய்குவனீ யே.

ஆறையெல்லனை ஒரு புலவன் பாடியது.

1228. பன்றி கோடெழுத ஈர்ந்தி வெற்பனிரு
பார வெற்பினை யடக்கிலான்
பாணன் வெம்பிணை மெடுத்த வன்கொடிய
பாணன் வெம்பிணை மெடுக்கிலான்

சென்று நன்மூனையை வாரிஞேன் புதிய
திங்கள் வெண்மூனையை வாரிலான்
செட்டி தன்பழி தவிர்த்த வன்பரிவு
செய்து பெண்பழி தவிர்க்கிலான்

அன்று சூலிமுது கண்ணமிட் டவனென்
னன்னை கூன்முது களிக்கிலான்
அங்கை யாடரவின் வாயி லிட்டவனென்
அல்கு லாடரவு நீண்டலான்

வென்றி மேவுதொடை யாடை கீறினவன்
நேமி யாடையது கீறிலான்
வீறு லாவுதமி ழாறை மேவுபர
மேசு ரன்புதல்வ னெல்லனே.

அரும்புடையான்மகன்.

1229. நாளார் பெரும்புகழ் நாட்டியத் தான்குடி நம்பரம
வேளார் மகனை யரும்புடை யான்மகன் வெண்ணெய்க்கள்வத்
தானாய் பனைசெயி லாதி வராகன்கொண் டம்புவியின்
மீளாத வீடு குடிபுகுந் தானவன் மேன்மைகொண்டே.

பாண்பிணத்தைமந்து ஈமக்கடன்செய்த அரங்கேசவள்ளல்.

1230. உறவைப் பிரிந்தவர் தேயிறர் தானங் கொருபுலவன்
மறவைப் பதிஞறி வம்பெத் தோனரம் கேசவள்ளல்

(1227) தொண்டை. சத. 60 மேற். (1228) வே. 10, மேற். (1229) சோழமண். சத. 99 மேற், (1230) தொண்டை. சத. உரை.

அரவைம் பிணஞ்சுட ரூன்செவென் ரூன்வினைத்தென்றே
பிறர்ரைக் கொடாம லெறித்தானப் பாரூன் பிரிந்தினையே.

தென்கொடிமூர் வேளுடன்.

1231. மாறுகொண்ட மன்னவரை வடவரையி லேற்றி
வல்லாரைத் திறைகொணர்ந்த வரகுணவீச் சுரனுக்
காறிரண்டு பன்னிரண்டி னாடியளந்த கோலால்
அகமகிழ்ந்தே தென்னூன்று கிழமே லெட்டுக்
கூறுகொண்ட மடைகுழிமுப் பத்திரண்டு
குறுக்கெருவும் பெருக்கெருவுங் குறித்து நாட்டிச்
சேறுகொண்ட வயற்சாலைத் திராமங் கண்டான
தென்கொடிமூர் வேளுடைச் செல்வன் முனே.

ஷ வேளுடனைப் பாண்டியன் பாடியது.

1232. சென்றுமா மேருவின்மேற் சேலேற்றியே புடைத்திட்
டன்றிருந்தேஞ் சங்கச் தவரோடும்—நன்று
விரும்தோம்புந் தென்கொடிமூர் வேளுடன் கூட
இருந்தோம் படிவேண்டி யின்று.

கோல்லாபுரிச்சத்திரன்.

1233. நேற்றினு மின்று மிருந்தது காதனிலவெனுங்கூன்
கூற்றினு மன்னை கொடியன்கண் டாய்மன்னர் கொன்றபழஞ்
சேற்றினு மேதிக் குளம்பா னெருக்குண்ட செங்கருப்பஞ்
சாற்றினுஞ் சங்கந் தவழுங்கொல் லாபுரிச் சந்திரனே.

முல்லான்,

1234. காலையிலொன் முவர் கதிம்புதவி லொன்முவர்
மாலையிலொன் முவர் மனிதரெல்லாம்—சாலவே
முல்லானைப் போல முகமுமக மும்மலர்ந்த
நல்லானைக் கண்டறியோம் நாம்.

வங்கா தலோத்தமன்.

1235. மடலே சொரிதொங்கல் வங்கா குலோத்துமன் வண்டடக்தை
யடலே புரியு மரும்புனி வாடையை யஞ்சும்வஞ்சி

(1231-32) பழம்பாடல்கள்; சேதாரின்தமிழும். பக். 20. (1233) தொண்டை. சத. 86, மேற். (1234) தனிப்பா. (1235) வங்கர்க்கோவை—இறையனார் களவியல் மேற்கோள்விளக்கம் (சென்னை, மியூஸியம் பிரதி.)

உடலேயு மன்றி யுயிருங் கிடந்தெதன் றேரொருகாற்
கடலே கருங்கழி யேயுரை யீரெங்கள் காதலற்கே.

நஞ்சைத் தயாபரன்.

1236. பாக்கத் திரவின்கட் பட்டதொன் றுண்பைங் கானலெங்குஞ்
சேக்கைத்துணைத்தலையோடொன் றுஞ்சேர்ந்திலசேர்ந்துசெங் கை
தாக்கச் சிவந்த தடந்தோட் டயாபரன் றஞ்சையன்ஞாய்
பூக்கட் கழித்தலைக் கெண்டைமுள் ளோடுண்ட புள்ளினமே.

கம்பணர்புடையார்.

1237. பின்னொரு காலந் திருக்காப்பு நீக்கித்தன் பேரன்பிலால்
முன்னுள ஆர்களும் பின்புதுப் பித்தரும் மூக்கணர்க்கு
மன்னிய பூசை திருப்பணி கூடல் வளரச்செய்தான்
கன்னியும் பொன்னியுங் கங்கையுங் கொண்டருள் கம்பணனே.

திருமலைராயன்.

காளமேகப்புலவர்பாட்டு.

1238. இந்திரன் கலியா யென்மருங் கிருந்தான்
அக்கினி யுதரம்விட் டகலான்

எமனெனைக் கருதா னரனெனைக் கருதி
நிருதிவந் தென்னையென் செய்வான்

அந்தமாம் வருண னிருகண்விட் டகலான்
[1]அகத்தும மக்களும் யானும்

அனிலம தாகு மமுதினைக் கொள்வோம்
யாரெனை யுலகினி லொப்பார்

சந்தத மிந்த வரிசையைப் பெற்றுத்
தரித்திர ராசனை வணங்கித்

தலைசெயு மென்னை நிலைசெய்தல் யாணிச்
சாளுவத் திருமலை ராயன்

மந்தர புயனுங் கோப்பய னுதவு
மதிபதி விதரண ராமன்

வாக்கினுற் குபேர னுக்கினு னவனை
[2]மாசிலா வீசனு வானே.

(1236) அரையர்கோவை. (இறை. களவி. மேற்கோள்விளக்கம்.) (1237) மதுரைத்திருப்பணிமாலை -18. (1238) தமிழ்நா. 206 [1]அகத்து மக்களுக்குமப் படியே, அனில்மா மதியே யமுதமா வருவன். [2]மாசிலீ சானனு வானே.

ஆழிக்களப்பாளன்.

(காளமேகப்புலவர்பாட்டு.)

1239. உள்ளங்கால் வெள்ளெலும்பு நோவ வொருகோடி
வெள்ளங்கா லந்திரிந்து விட்டோமே—தெள்ளுதமி
ழாழூர் முதலி யரசர்பிரா னிங்கிருக்கப்
போழு தறியாமற் போய்.

பெற்றன்

"நாகபட்டினத்துச் செட்டி (கடை) யடைப்பித்துப் பாடச்சொன்னபோது காளமேகப்புலவர் பாடியது."

1240. மூற்றூத காஞ்சியினு முல்லையினும் பாலையினும்
கற்றூன்பின் சென்ற கருணைமால்—பெற்றூன்சேர்
ஆலைப் பதித்தா ரளகத்தி யார்க்கயலூர்
வேலைப் பதித்தார் விழி.

வேளூர்க்கம்பன்.

1241. கன்னனரை நாட்கொடுப்பான் காவேரி பாதிகான்
அன்னை முலைகொடுப்ப தக்காலம்—பன்னுங்
கலைவைத்த வேளூர்வாழ் கம்பனெனுங் கொல்ல
னுலைவைத்தாற் றூணுருண் ணும்.

கிருட்டிணராயர் ஒட்டியனை வென்றபோது தமாசாச்சுவதி பாடியது.

1242. கலிங்க மிழந்துநுதிக் கைச்சங்கந் தோற்று
மெலிந்துகடை கந்தழுவ விட்டாள்—மலிந்தமலர்ப்
பொன்னிட்ட மானவிட்ண பூபாலா வுன்றனக்குப்
பின்னிட்ட வொட்டியன்போற் பெண்.

கிருட்டிணராயர் வள்ளன்மை.

1243. படைமயக் குற்ற போதும் படைமட மொன்றி லாதான்
மடைசெறி கடகத் தோளான் மதிக்குடை மன்னர்மன்னன்
கெடிமன்னர் வணங்குந் தாளான் கிருட்டிண ராயன்கைபோற்
கொடைமட மென்ப தம்ம வுரையாது கொடித்த லாமே.

(1239) தொண்டைமண். சத. 80 மேற். (1240) தமிழ்நா. 214. (1241) செந்தமிழ். தொ. 3, பக். 480. (1242) தமிழ்நா. 217. (1243) சூடாமணிநிகண்டு.

கிருட்டிணராயர் சிம்மாசலத்தே சயத்தம்பம் நாட்டியது.

1244. கிரிபோல் விளங்கிக் கிளரும்புயக் கிட்ண ராயர்
தரைமீது செங்காத் திரியிற்சயத் தம்ப நாட்ட
வரமா தரவா லளித் தேவட கூவ மேவுங்
கருமா மணிவண் ணனேநீ கருத்தின் வைப்பாம்.

விட்டல (தேவ) ராசர்.

1245. தொட்டி லிருக்கத் தொடங்கிய நாண்முதலா
அட்டதிக்கு நின்குடைக்கீ ழாயிற்றே—விட்டலையா
தன்குமரி யன்றித் தனிக்குமரி கொள்ளாதே
தென்குமரிக் கேகுவதென் செப்பு.

அறம்வளர்த்தமுதலியாரைக் கலம்பகம்பாடலாமோ என்ற புலவர்க்குப் பாண்டியன் கூறியது.

1246. உங்கண் மனந்தெரி யும்புல வீரொரு சீர்மரபோர்
திங்கண் மரபினர் திங்களின் கூடச்செம் பூரமா
துங்கன் மரபினிற் கங்கையுஞ் சூடினன் சோதியன்றே
எங்கண் மரபுண் டெனக்கவி பாடினம் யாமவற்கே.

செழியதரையனுக்கு அந்தகக்கவி வீராகவமுதலியார் விடுத்த சீட்டுக்கவி.

1247. ஏடா யிரங்கோடி [1]யெழுதாதி தன்மனத்
தெழுதிப் படித்த வீரகன்

[2]எதிசொலினு மதுவே யெனச்சொலுங் கவிவீர
ராகவன் விடுக்கு மோலை

சேடாதி பன்சிர மணைக்குங் கலாகரன்
திரிபதகை குலசே கரன்

தென்பாலை சேலஞ் [3]செனித்ததா கந்தீர்த்த
செழிய னெதிர் கொண்டு காண்க

பாடாத கந்திருவ மெறியாத கந்தகம்
[4]பத்திகோ ணுத கோணம்

பறவாத கொக்கனற் பண்ணுத கோடைவெம்
படையாய்த் தொடாத குந்தம்

(1244) இருசமயவிளக்கப் பாயிரம். (1245) தமிழ்நா. 164. (1246) ஷே. 163. (1247) ஷே. 251. [1]எழுதிவன் றன்மனத். [2]இமசேது பரியந்த மெதிரிலாக் கவிவீர. [3]செயித்த; புரந்துதா. [4]பற்றிக்கொளாத.

ஊடாத பாடலம் பூவாத [1]மாவொடு
தொடுத்துமுடி யாத சடிலம்
சொன்னசொற் சொல்லாத கின்னையொன் றெங்குந்
திரிக்கவர விடவே ணுமே.

செழியதரையன் பரிசில்கொடுத்தனுப்பியபோது மேலும் சில பொருள்வேண்டி ஷெபுலவர்பாடியது.

1248. சாலப் பழுத்த மரம்பார்த் தெறிவர்தண் ணீர்சுரக்கும்
ஞாலத் தகழ்வர் கதக்கின்ற வாளைநற் காநினைவர்
நீலக் கடல்விட்டுப் பாலாழி மத்திட்டு [2]நித்பரிநீர்
சேலத்து வேந்த னகத்தாகந் தீர்த்த செழியனுக்கே.

காளத்திக் கிருஷ்ணப்பவாண்ணன் ஷெபுலவர் பாடியது.

1249. இனிதினி தெனச்சோர சோழபாண் டியர்மெச்சு
மிச்சித்த மதுர வாக்கி

யீழமண் டலமளவு மிறைகொண்ட கவிவீர
ராகவன் விடுக்கு மோலை

வனிதையர் விகாரமன் மதராச ரூபனண்
மயிலேயா திபதி சகீர

வாளத்தி யாதிநங் காளத்தி க்ருஷ்ணப்ப
வாணனெதிர் கொண்டி காண்க

கனமுற்ற முத்தமிழ்த் துறையறி மரக்கலங்
கன்னிகா மாட நன்னூற்

கட்டுபொற் கொட்டாரம் வாணிங் காதனன்
கவிரா டகஞ்செய் சாலை

வினவுவை காதைச் சரக்கறை யெனத்தக்க
வினையே னுடம்பு நோயான்

மெலியுமோ மெலியா வகைபால் பெருத்ததொரு
மேதிவர விடவேணுமே.

சந்திரவாணனை ஷெபுலவர் பாடியது.

1250. மின்னு மாளிகை யனத்தை யாதிபதி
சந்த்ர வாணமணி பாலன்முன்

---

[1]மாத்தொடை. (1248) தமிழ்நா 250. [2]நித்பரெண்ணீர். (1249) ஷெ. (1250) ஷெ.

வீர ராசவன் வீதிக்கு மோலேத்தன்
விருப்பி னல்வலிய வேயழைத்

தன்னு காவிய மதிற்பெ ருத்தொரு
கோவை யோதுகென வோதினன்

ஓதி மாதமொரு மூன்று போதியொரு
நாலு மாதமள வாகவும்

இன்னமூன் தனது செவியி லேறவிலை
[1]யென்ன லிந்தவுல கெண்ணுமோ

இராச ராசர்திறை கொள்ளு மென்கவிதை
யிங்கு வந்துகுறை வாகுமோ

தன்னை யென் சொலுவ ரென்னை யென்சொலுவர்
தான்ற மிழ்க்குமண மல்லவோ

தன்பு கழ்க்குமிது நீதி யோவடிது
[2]தானிக் நேரம்வர வேணுமே.

தீம்மையவப்பையனை ஷை புலவர் பாடியது.

1251. இன்னா ளிருந்தபேர் புதியபா கம்பண்
டிருந்தபேர் பழைய பாதம்
இருபாக மும்வல்லி லக்கணக் கவிவீர
ராசவன் வீதிக்கு மோலே

அன்னதி தானப்ர வாகனப்ர சங்கத்
தனந்தசே டாவ தாரன்
அகிலப்ர காசன்திம் மய்யவப் பய்யன்ற
[3]னகமிக மகிழ்ந்து காண்க

தன்னுரு மோலேயும் வரக்கண்டு நாம்வேத
சயிலப் புராணத் தையித்
தனேநா ளிருந்தோதி னேமரங் கேற்றுவது
தான்வந் தலாம லில்லே

நன்னுவ லோருட னிதைக்கேட் டெனைச்சோழ
நாட்டுக் கனுப்ப வேணும்
நலிலோலே தள்ளாம லேசுக்ர வாரத்து
நாளிற்கு வரவேண்டுமே.

---

[1]யென்னி லென்னவுல; யென்னி லிந்தவுல. [2]தானு நேரவர. (1251) தமிழ்நா. [3]னகமகிழ்ந் தினிது காண்க.

செம்பியவளவன் கழக்குன்றன்.

1252. வைவத் துரந்தாடி முரசக் குலேசன்மகன்
மகளுகு மொருதொண்டைமான்
வாரிதித் திரைநல்கு மன்னன் பெரும்பேர்
வரம்பெற்ற வெற்றி கொண்டான்

சைவத் தவப்பயனே யொத்தவன் வழிவந்த
தனையன் கழுக்குன்றனுக்
தக்கசெம் பியவளவன் வந்தனக் காலயஞ்
சகலமுக் தந்த தற்பின்

பெனவத் தலத்தெழு சகாத்தமோ ராயிரத்
தொருநாலு நூற்றின் மேலும்
பயிலுநாற் பத்தைமூ வருடமாம் விகிவருட
மகரம் பகுத்த திருநாள்

தெய்வத் திருத்தே ருருட்டியது போலவிச்
சிறுதே ருருட்டி யருளே
செய்கையாய் சரவணப் பொய்கையாய் தோகையாய்
சிறுதே ருருட்டி யருளே.

ஈழநாட்டாசனன பராசசிங்கனைக் கர்ணவந்தபோது அவன் தாயிட்டே உள்ளிருந்ததைக்குறித்து அந்தகக்கவி பாடியது.

1253. சரைகோட் டிளங்கன்று நல்வள நாடு நயந்தளிப்பான்
விரையோட்டி தார்ப்புய வெற்பிழ மன்னனென் றேவிரும்பிக்
கரையோட்ட மீதின் மரக்கலம் போட்டனைக் காணவந்தால்
திரைபோட்டு நீயிருக் தாய்சிங்க பூப திரோமணியே.

அவ்வாசனை ஷெ புலவர் பாடியது.

1254. வாழு மிலங்கைக்கோ மானில்லை மானில்லை
ஏழு மராமரமோ விங்கில்லை—ஆழி
அலையடைத்த செங்கை யபிராமா வின்று
சிலையெடுத்த வாறெமக்குச் செப்பு.

(1252) சேயூர்முருகன்பின்னைத்தமிழ். சிறுதேர். 6. (1253-4) தனிப்பா.

அவ்வாசன் பொற்பந்தங்கோடித்தபோது அப்புலவர் பாடியது.

1255. பொங்குமிடி [1]யின்பந்தம் போயதே [2]யென்கவிதை
எங்கும் விருதுபந்த மேற்றதே—குங்குமந்தோய்
வெற்பந்த மானபுயன் வீரபர ராசசிங்கம்
பொற்பந்த மின்றளித்த போது.

விசயராசன் பல்லக்கின்பின் வந்தபோது அப்புலவர் பாடியது.

1256. திருமாலு மீசனும் பின்போயுந் தூது செலத்துணிந்தும்
அருமா தரியத் தமிழ்வளர்த் தாரவ ரோபெங்காய்
வருமா மறையவன் பேர்சாதித் தேமிக வண்டமிழ்க்குப்
பெருமான் சிவிகைப்பின் சென்றுன் விசயப் பிரமனுமே.

அரியலூர் மழவராயன் படிகோடித்ததற்கு அவர் பாடியது.

1257. சேயசெங் குன்றை வருமொப்பி லாதிக்குச் செங்கமலத்
தூயசெங் கண்ண னிணையொப்ப ஞாதண் டுழாயணிந்த
மாய னளக்கும் படிமூன்று [3]மிட்ணைய மாமழவ
ராய னளக்கும் [4]படியோத நாளைக் கிலக்கமுண்டே.

தமார ஒப்பிலாதான் சங்கீதத்தைக் கேட்டு ஷை புலவர் பாடியது.

1258. வாழொப்பி லாதவன் சேயொப்பி லாத மழவதிசை
யாழக் கடல்விட்டு நீபாடுங் காலத் தரிசெலுங்கால்
நீழற் கவுத்துவ நீத்துச்செல் வானந்த நீண்மணிதான்
காழொப் பிலுகின் னிசைகேட்குங் காற்கரைந் தேகுமென்றே.

நீத்தான்சங்கீதத்தைக் கேட்டு அவர் பாடியது.

1259. வாவிய பொற்பரி யாவூரில் வீரையன் மைந்தபஞ்ச
காவியந் தோற்கின்ற நீத்தானின் கீதத்திற் காவலர்தம்
ஓவிய சாலையெல் லாங்கொல்லி [5]யாவுள் ளுருகும்ரத்ன
மேவிய கூடமெல் லாந்திரி கூடத்தின் மேற்படுமே.

சந்திரசேகரவாணன்.

1260. ஒப்பாரி யாய்கின் மகவைத் தெருவி லொருத்திகண்டே
அப்பா வெனவெடித் தாளணைத் தாளன்னை தானுமென்றுள்

(1255) தமிழ்நா. 243. [1]யன்பந்தம்; [2]யென்கவிதைக்கு. (1256) ஷை. 258. (1257) ஷை 247. [3]மிட்ணை யமர்மழவ. [4]படியொரு. (1258) ஷை. 248. (1259) ஷை 249. [5]யாழுள்ளுருகு மொற்றின். (1260) தொண்டை. சத. 65, மேற்.

தப்பாதுன் மைந்தனென் றூளங்கை னேதலே சாய்த்துநின்றுள்
செப்பா யவளெவள் காண்சேறை வாழ்சத்ர சேகரனே.

அழகப்பெருமாள்.

1261. மாறே செயுமரவின் வாய்நீண்ட வும்பயர்த்தி
பேறே மணியுதவப் பெற்றகுல மென்னுமல்
ஊறே பரத்தையர்க ளுள்வாயில் வைத்தகுறி
யாறேறன களிந்தை யழகப் பெருமாளே.

வள்ளலான கூவத்து நாரணனைக் கொன்றவனைப் பழித்து ஒருபுலவர் பாடியது.

1262. இவ்வார் சிலரு மிடாதார் பலரும்
வவ்விலா வையத் திருப்பப்—படபாவி
கூவத்து நாரணனைக் கொன்றுயே கற்பகப்பூங்
காவெட்ட லாமோ கறிக்கு.

பாக்கழடையானை ஒருபுலவர் பாடியது.

1263. காரோலை சேவப்ப நாயக்க ரோலை கருப்புக்கட்டி
நீரோலை திம்மப்ப நாயக்க ரோலை நிலத்தின்மற்றப்
பேரோலை பாக்க மூடையான் செவிக்குப் பிடிபடுமோ
ஆரோலைக் கும்மட்டங் காண்கால னோலைக்கு மப்படியே.

கன்றப்பூர்ச் சிங்கப்பெருமானை அநதாரிப்புலவர் பாடியது.

1264. திரம்பெறுகன் ருப்புடைய சிங்கப் பெருமாள்
உரமபெறுதண் டாயுதனுக் கோலை—பெரும்பகலே
அந்திவரு நீயினைந்தா லல்லவென்ற லுங்காலம்
பிந்திவரு முந்திவரும் பேச்சு.

திருவிருந்தான் அநதாரிப்புலவரால் கந்தரபாண்டியம் என்ற தமிழ்க்காவியம் செய்வித்தது.

1265. ஆய சொக்க ரருட்கடல் வெள்ளமார்
சேயன் வெண்குடை நீழலிற் சேடன்போற்
சேய பார்ச்சுமை சென்றகர் தாங்கிலுன்
தூய நெஞ்சினை னீதி தொடர்த்தலான்.

(1261) தொண்டை. சத. 14, மேற். (1262) ஷை. 47, மேற். (1263) சோழமண். சத. 51, மேற். (1264) ஷை. 52, மேற். (1265) கந்தர பாண்டியம்—பாயிரம். (செந்தமிழ். தொகுதி-4. பக் 373)

1266. அன்னவ னரசர் சூழுங் கச்சிவீ ரப்ப னென்னும்
மன்னவ னருள்சேர் மன்றைச் செவ்வந்தி தூணவன் வாய்மைத்
தென்னவன் றிருவி ருந்தான் சவுந்தரன் றேவ பாடைத்
தன்னிருங் கதைதென் னூலாற் சொலலெனச்சொல்ல லுற்றேன்.

1267. குடக்கொடி குணக்குங்றை யத்திறை கொடுப்ப
வடக்கரச ரிற்கரு நடப்படையை மாரூய்த்
திடத்தொடுசெ வந்திதூண வன்றிரு விருந்தான்
அடர்த்தசெய லிற்பொரு தடாதகை யடர்த்தாள்.

1268. செவ்வந்தி தம்பி திருவிருந் தான்மன்றைத் திண்கிரிமேற்
பவ்வந் தருந்திரு மாமயி லேபவ ளக்கிரிவாய்த்
தவ்வொன்று னவ்வொன்று மவ்வா றிரண்டொன்று தாமிருக்க
மவ்வஞ்சு தவ்வஞ்சு கவ்வஞ்சு காட்டல் வழக்கல்லவே.

திருமலைநாயக்கர்.

1269. தரணிபுகழ் மேருகிரி பலவுரு வெடித்துநற்
சந்திதா னத்தில் வந்து

தவமுற்ற தென்ன நூற் றிருபத்து நாலுகா
றன்னிலே யெந்த நாளும்

திரமுறும் புதியமா மண்டபங் கட்டியே
சித்திரமு மெழுதி யந்தச்

செய்யமண் டபமணியு மாலையென விருபாற்
சிறந்தமண் டபமி யற்றிக்

குரவமர் கருங்குழ லங்கயற் கண்ணம்மை
கொன்றையணி சொக்கே சனுர்

கூடலிலே யாடியும் வசந்தமெனு நல்லிழாக்
கொண்டருள வேசெய் தனன்

பரராச சேகரன் பரராச பூஷணன்
பரராச ராச திலகன்

பரராசர் பணிமுத்து கிருஷ்ணப்ப பூபனருள்
பாலதிரு மலைபூ பனே.

(1266-67) சுந்தரபாண்டியம் (செந்தமிழ். தொகுதி-4. பக். 575). (1268) செந்தமிழ். தொ-4. பக். 375. (1269) மதுரைத்திருப்பணிமாலை 80.

1270. மகரமெறி கடல்ராம வாளியான் முனிகையான்
மாறனூர் தாட்சி லம்பால்
மாதவ னெடித்தவவ தாரமீ னத்திலுல்
வருசுப்ர மணியன்வேலால்

தகருற்று வெந்துபய மாய்ப்பின்ன மாகிமிகு
சாழ்வாகி யுடலம் வற்றித்
தரைபட்டு மொருகால நிறைவுற்று மிப்படித்
தளர்ந்திகடை பட்ட வதனூற்

புகலரிய சத்தசா கரமுமத னகவிலே
புவனதவ கண்டங் களும்
பொன்மேரு நிகர்மேவு மண்டபமு மதுரேசர்
புகழதவ மாய்ப்பு துக்கித்

திகழ்செய்திரு மலைநாய கர்சமுத் திரமெனுந்
தெப்பக் குளங்கண் டனன்
சிரபுய பலவிசய சுமுகமுத் துக்கிட்ண
திருமலை மகீபா லனே.

1271. உரக்கவெகு ரொக்கங் கொடுத்துப் படங்குதூ
ணுத்திர முதற்ப ழங்கல்
ஒடிந்தன பிடுங்கிநவ மாயமைத் துக்காரை
யோடுசே ரணம கற்றி

அரைத்தசுண் ணும்பைவெல் லச்சா று விட்டுரன்
சூய்க்குழைத் துச்செங் கலும்
அடுக்காய்ப் பரப்பிக் கடுக்காயொ டாமலக
மரியதான் றிக்கா யுழுந்

தொருக்கா லிருக்கா லிடித்துரன் னீரினி
லூறிய கடுஞ்சா றும்விட்
டேறிகா லங்களினு மசையாத வச்சிரக்
காரையிட் டோங்கு மம்மை

சிரக்காலம் வாழவே மீனுட்சி கோயிலுஞ்
செப்பமிடு வித்து நன்றாய்ச்
செய்வித்த புண்ணியஞ் சதகோடி புண்ணியர்
திருமலை மகீப னுக்கே.

தளவாய் ஓராமப்பயிலன்.

1272. திரமேவு விசுவநா தத்திரும லேந்திரன்
சித்தமகி ழிராமப்பையன்
செங்கோட்டு வேலருட னுமைபா கரைத்தொழுதி
ஜிக்குவிச யஞ்செய்தனன்

உரமான தென்கடற் றிருவணை யடைத்தன
னுலகுநாற் பதுலக்கமும்
ஒருகுடைக் கீழாக வாக்கினை புரிந்தன
னுடையவன் மனதுவரவே

திரமான மலையா ளமுங்கொள்ளை கொண்டனன்
தட்டரைக் கழுவேற்றினன்
சோரரை யடக்கினன் குருவியழ கன்றலை
தணித்தனன் பாண்டியரையும்

பொரமாற விட்டுச் சடைக்கனை யடக்கினன்
பூசுரர்கள் தேவர்பூசை
பொலிவுற நடாத்தினன் சந்த்ரசூ ரியரளவு
புகழ்நிலை நிறுத்தினனே.

சேஷாத்திரி.

1273. நணிய கயிலாய நாதருக்குப் பூசை
அணிதிளருங் கோபுரமுண் டாக்கிப்—பணிமலைமேற்
காசிவிச்வ நாதருக்குக் கற்கோ யிலும்பணித்தான்
தேசருணற் சேஷாத் திரி.

சிவந்தாள் மல்லைப் பல்லவன்.

1274. மாதாம் படியுண்டு மெய்சிவந் தான்குழல் வைத்திசைத்துச்
சேதாம்ப லங்கனி வாய்சிவந் தான்செம் மலர்த்திருவின்
சூதாந் தனத்தைத் தரஞ்சிவந் தாளவர் தூதுசென்று
பாதாம் புயஞ்சிவந் தான்சிவந் தான்மல்லைப் பல்லவனே.

(1272) திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை—71. (1273) திருச் செங்கோட்டு ஸ்ரீ கைலாசநாதர்கோயிற் கோபுரவாயி னிலையின் மேற்படியிற் கண்டவெண்பா (திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை.). (1274) தனிப்பா-பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்வாக்கென்பர்.

1275. பாடுந் தமிழ்க்குச் சிவன்தெழுந் தான்மல்லைப் பல்லவர்கோன்
காடுஞ் செடியுந் திரியா திரட்டைக் கடிக்கன்செய்து
போடும் பொழுதென்ன பூட்டக மோவற்பப் புல்லரைகொண்
டாடும் பொழுதிரு கன்னத்தி லேகின் றடிக்கின்றவே.

1276. குளக்காவி மலர்த்தொடையான் சிவன்தெழுந்த
பல்லவனைக் கூடா ளாளில்
இளக்கார மோபிரிந்த வாறுகண்டோ
காளேழை யென்று தானே
உளக்காத ரூண்டுகோல் பனிநீர்நெய்
யாலுறவ்கு மூச னல்ல
விளக்காக வெனைத்திரியா விடியுமட்டு
மெரித்தனையே வெண்ணி லாவே.

தாண்டவவாணன்.

1277. பாலாழி யிற்றுயி ரூண்டவ வாணன் பனிவரைமேல்
மாலான மங்கையை நீபிரிந் தாற்கண்கள் வாருதியாம்
சேலா மறுமுகன் வேலாந் தமிழ்தெரி தென்னவன்றன்
காலாங் குறுமுனி கையாநம் வஞ்சி கனதனமே.

கோவல் தாண்டவராயப்பிரபுவை நமச்சிவாயப்புலவர் பாடியது.

1278. பாங்குயர் பளிக்கு மேடைகொல் லூலையா
மாருதர் திருத்தியா நீடும்
பகர்நிலாக் கற்றை பதடியா மூடும்
படரிருட் குழாங்குடை காரியா

ஓங்கிய செக்க ருள்ளிடங் கனலா
உயர்பெரும் பனிகொடும் புகையா
உருவிலி யென்னுங் கொல்லனென் பொன்னை
யுருக்குமா றென்கொலோ வுரையாய்

தூங்கிய விழியுந் தாம்புடைக் கயிறும்
ஞம்புறு காம்பியல் குழலும்
துவருடைத் திகிலுங் கவருடைக் கழியுந்
தொறுவிய ருறிபடு குடமும்

(1275) தனிப்பா—பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்வாக்கென்பர். (1276) செந்தமிழ். தொ-3, பக். 482. (1277) தஞ்சைச் சரச்சுவதிமால்-பிரதி. (1278) தனிப்பா.

தாங்கிய கையு மெய்யுமாய் நின்று
தண்ணளி பெய்யுமா முகிலே
தாண்டவ ராயா பாண்டவர் தூதா
தாவில்சீர்க் கோவலா திபனே.

சர்க்கரை எச்சில்வாய் கழுவியது.

1279. மகிழ்ந்துகா ரைப்பதியில் வாழ்சர்க் கரைதான்
புகழ்ந்து திரிபுல வோரை—யிகழ்ந்துநான்
வையவில்லே யென்றுசொலி மண்டலமெல் லாந்துதிக்க
நெய்யிலே கையைவிட்டா னேர்ந்து.

கம்பையன் வீரலாழியளித்ததை ஒருபுலவர் பாடியது.

1280. வையம புகழுஞ் சந்த்ரகிரி வளங்கொள் பதியைப் புரக்குமெங்கள்
ஐயன் குமரக் கம்பையனே எறிவுக் கினிமே னிகருண்டோ
வைய வையச் சினந்தீர வாயி லடித்தே ஞருமென்று
கையைப் பிடித்து மோதிரமுங் கனக முடிப்புந் தந்தானே.

தேவைப்பெரியவன்.

1281. கண்ணு யிரம்படைத் தான்மக வானவர் காதலைந்தார்
எண்ணுன நூற்றெரு பேர்மடிந் தாரிலங் காபுரியும்
மண்ணுய் மடிந்தது வாலியும் பட்டனன் மாநிலத்திற்
பெண்ணு ருனக்கெளி தாமோநந் தேவைப் பெரியவனே.

செவ்வந்தி.

1282. சுரிகுழ லங்கயற் கண்ணிபொற் கோயிலைச் சூழ்ந்ததெற்குத்
திருமதி லுக்கரு கேயொரு மண்டபஞ் செய்ததிலே
உரிமையி னலருட் செவ்வந்தி யீசரை யுண்டாக்கினன்
திருவளர் கல்லூர்ச் சனிப்பெரு மாடந்த செவ்வந்தியே.

செங்குன்றையூரன்.

1283. ஆலெங்கே யங்கே யரும்பறவை யாற்றயிலும்
மாலெங்கே யங்கே மலர்மடந்தை—கோலஞ்சேர்
செங்கே தகைமணக்குஞ் செங்குன்றை யூரனெங்கே
யங்கே யிரவலரொல் லாம்.

(1279) செந்தமிழ். தொ. 3. பக் 72. (1280) ஷே. ஷே. 78. (1281) ஷே. ஷே. 74. (1282) ஷே. தொ-4. பக். 374. (1283) தனிப்பா.

சேதுபதிவேந்தர்.

1284. ஆதிபதி யானமண்ட லாதிபதி வம்சபதி யரசர்க் கென்றும்
நீதிபதி சத்ரபதி சமத்தான பதிவிசய நிறைந்தே நிற்கும்
மாதிபதி துரகபதி கசபதிந ராதிபதி வளர்தென் றேவைச்
சேதுபதி தெரிசனமே யிராமலிங்க தெரிசனமாய்ச் செப்ப லாமே.

1285. சேதுபதி யென்றுநர சென்மமெடுத் தாய்கமல
மாது பதிக்குன்பேர் வாய்க்குமா—பூதலத்தில்
நீயே ரகுராம னின்னையிங்குப் பெற்றெடுத்த
தாயே யருட்கோ சலை.

1286. மூவேந் தருமற்றுச் சங்கமும் போய்ப்பதின் மூன்றெடட்டுக்
கோவேந் தருமற்று மற்றெருரு வேந்தன் கொடையுமற்றுப்
பாவேந்தர் காற்றி லிலவம்பஞ் சாகப் பறக்கையிலே
தேவேந்த்ர தாருவொத் தாய்ரகு நாத செயதுங்களே.

இரகுநாதசேதுபதி.

1287. அன்பட்ட திக்கெங்கும் போற்றுந்தென் றேவைக் கதிபதியாய்ப்
பொன்பட்டஞ் சூடும் ரகுநாத பூபவிப் பூதலத்தே
நின்பட்ட மேபட்ட நீயே துரைமற்றிந் நீணிலத்தோர்
தன்பட்ட மென்பட்டந் தோலா லடிபடுந் தம்பட்டமே.

1288. தேனூட்டு மூல்லைத் தொடைரகு நாதன் செழித்தகழல்
பூநாட்டு மன்னர் தொழாமலி ரார்மணிப் பூணணிந்த
வானூட் டரம்பையர் மண்ணூட் டரசர் மணத்திலுக்குக்
காலூட் டுவரிவன் கைந்நாட்டு வேலினைக் கண்டுகொண்டே.

தளவாய் விசயரகுநாத சேதுபதி.

1289. தேனூர் மொழிமட மாதர்சந் தானம்பொன் சேருக்கல்வி
மேனூட் டவமூனைப் போற்செய் தவர்க்குண்டு வீணர்க்குண்டோ
வானூ டருப்பணி ராமே சருக்குமூண் மண்டபஞ்செய்
தானும் விசய ரகுநாத சேது தளவங்களே.

1290. எனதன்ம மாலிலுர் தான்கற்ப கால மிருக்குவன்போன்
மனதி னினைந்த படிகெய்ய யார்க்கும் வராதகண்டாய்
கனதன மாறிருப் புல்லாணிக் கோபுரங் கட்டுவித்த
தனத விசய ரகுநாத சேது தளவங்களே.

(1284—88) தனிப்பாக்கள். (1289—90) தளவங்கமாலைப் பாடல்கள்.

1291. சிலையா மெழுத்துஞ் சகாயமுங் கீர்த்தியுஞ் செந்தமிழும்
நிலையாகு மன்னர்சொல் வார்த்தையு மென்றைக்கு நிற்குங்கண்
கலையாருங் காணில்வன்கல்லெப்பெண்ணைக்கியகாலிலெட்டன் [டாய்
தலையார் விசய ரகுநாத சேது தளசிங்கமே.

இரகுநாதசேதுபதிமேல் கவ்வாதுப்புலவர் பாடியது.

1292. இலையாளன் சேது பதிரகு நாயகன் கிஞ்சுகவாய்
இலையார் கலவி யிடத்துநம் மீச ரிடத்துமன்றி
வலையாத பொன்முடி சற்றே வளையு மகுடமன்னர்
[1]தலையா டியகையிற் காளாஞ்சி யேந்துஞ் சமயத்துமே.

1293. ராமநா யகரைமுற்று நம்பிலேனல்
ராசகா ரியமடைத்து நங்கண்மால்
வாமமார் குழலியர்க்கு வந்தவேள்
மாரிநீ ரருவிசுற்று குன்றின்வாய்
சேமமார் தருமுழக்க மண்டவே
சீதவீ யிலகுசப்ர மஞ்சமேல்
காமமீ றியமுயக்கி லன்றில்போல்
காதலாய் மிகினேக்கு நெஞ்சமே.

இரகுநாதசேதுபதியின் யானை.

1294. கடிவாங்கு மலர்த்தடஞ்சூழ் சேதுபதி
ரகுநாதன் களிநல் யானை
அடிவாங்கி முன்னடக்கில் வடகலிங்கங்
கிடுகிடெனு மங்க தேசம்
குடிவாங்குங் கடலேழு முள்வாங்கு
மொன்னலர்தங் கோட்டை வாசல்
படிவாங்கு மரசர்மணி முடிவாங்குஞ்
சேடன்முடி படியுந் தானே.

1295. கொல்லாத மானென்று மீசன்கைம் மாணிக் குவலயத்தே
வெல்லாத யானைவெள் ளானையொன் றேமெய்ப் புனமகளார்
இல்லாத வீர மிவரதன் ரூவினி யாதவன்சொல்
கல்லாத மூத்த ரகுநாதன் விஞ்சையிற் காவலரே.

(1291) தளசிங்கமாலை. (1292–1293) செந்தமிழ். தொ. 17, பக். 91.
[1]தலையாடி. தொண்டைகை. (1296) தனிப்பா. (1295) விஞ்சைக்கோவை–சேது நாடும் தமிழும், பக். 18.

சேதுபதிவேந்தர் திருவாவடுதுறைமடத்துக்குச் சாமியளித்ததைப்பற்றிய செப்புப்பட்டயப் பாட்டு.

1296. நதியாம் விரிசெல நன்னகர்பொற் கோட்டை
பதியார் துறைசைப் பதிக்கு—விதியாகத்
தான்மீட்டான் சேதுபதி தாரணிதா னுள்ளளவும்
ஈன மிலையாகு மென்று.

சேதுபதிமந்திரி-சேதிராயன்.

1297. தருக்கொளும்விண் பொழில்சூழுந் திருச்சாலை
யெனுமூல தலத்தைக் கண்டு
வெருக்கொளும்வெம் புலிக்காடா னவையெல்லாம்
வேரறவே வெட்டிச் செய்ய
தெருக்களுமா டமுங்கூட கோபுரமுந்
தூபிதிரு மதிலுஞ் செய்து
திருக்குளமுங் கரைகண்டான் மந்திரியாந்
திருஞானச் சேதி ராயன்.

1298. நட்டேரிற் சோமேசர் கோயிலற மானதனை நகத்தாற் செய்து
மட்டேரும் குழலுமையா ளுலகுடைய நாயகியை வகுத்தங் கேற்றிச்
சட்டேன் றிலைவாழச் சேதுபதி ரகுநாதன் கருணை வாழ
நெட்டேருங் காணியுங்கொண் டாண்டுகொண்டா னிறைஞானச்
[சேதிராயன்.

சேதுபதிமந்திரி-தெய்வகன்னி.

1299. எத்திக்கும் போற்றும் ரகுநாதன் விஞ்சைக் கிருதியாய்
வர்த்திக்கு மந்திரி மால்தெய்வ கன்னி வரையிடத்தே
மூத்திக்கை யாற்றொட்டுக் கட்டிக்கொண் டாளம்மொழிக்குமொழி
தித்திக்கு நெஞ்சுக்கு நாவுக்குங் கண்ணுக்குந் தித்திக்குமே.

தெய்வகன்னி, ஸ்ரீராஜராஜேசுவரி பலிபீடம் கொணர்ந்ததுபற்றிய பாட்டு.

1800. சலியாண சோமனல் லேலன வாருகர்த் தாக்கண்மெச்சும்
சலியா மதிமர் திரிதெய்வ கன்னிதன் தந்திரத்தால்
நலியா நிராயவே வூர்புகுந் தேயன்றி ராத்திரியே
பலிபீடங் கொண்டவர் தான்சேது வாசல் பலக்கவென்றே.

(1296) செந்தமிழ்-தொ. 7. பக். 152 (1297–98) சேதுநாடும் தமிழும்-பக். 20. (1299) மே. பக். 18. (விஞ்சைக்கோவைப்பாட்டு.) (1800) மே. பக். 19.

சேதுபதி மந்திரி-முத்திருளப்பபிள்ளைமேல் ஒரு புலவர் பாடியது.

1301. உறுக்குமதி வேந்தருக்குங் கள்வருக்கும்
நீதிதப்பி யொளிக்கின் றேர்க்குங்
கிறுக்குவரச் செயுந்துரையே பாவரண
ரோலையினுங் கிறுக்குண் டாமோ
பொறுக்குமர சுரிமைமுத்து ராடலிங்க
சேதுபதி பூமி யெல்லாம்
நிறுக்குமதி மந்திரிமுத் திருளப்பா
வருளப்பா நிருபர் தானே.

ஷ மந்திரி, மணம்புரிதற்குரிய கன்னியர்க்கெல்லாம்
மணம்புரிந்துவைத்தபோது ஒரு புலவர் பாடியது.

1302. அமரிக்கை யாளன்முத்து ராமலிங்க
சேதுபதி யவனிக் கெல்லாம்
சுமுகப்ர தாபனெங்கண் முத்திருளப்
பேர்த்தமந்த்ரி துலங்கு நாளிற்
சமருக்கென் றெதிர்மன்னர் தரையிலிலை
மதலைருவன் றவிர மின்னூர்
குமரிக்குட் கன்னியா குமரியல்லான்
மற்றிலைப்பெண் குமரி தானே.

ஷ மந்திரி செய்வித்த இராமேச்சுரத்திருப்பணியை வியந்து
ஒரு புலவர் பாடியது.

1303. பருப்பதங்க ளொவ்வொருதூண் பாவுக்கல்
வலையாத பார மேரு
சுரிப்படங்காப் போதிகைகள் செய்தபணிப்
பெருமையென்ன சொல்வே னையா
தருப்பொலியுங் கரதலமுத் திருளப்ப
சாமீன் முய்பா லுண்ணக்
கருப்பணிமுன் றிருப்பணிக்கென் றுருப்பணிஞன்
மருப்பொலியுங் கமலத் தோனே.

(1301—2) செந்தமிழ். தொ.-3, பக். 294. (1303) தனிப்பா.

வச்சிரநாட்டுத்தலைவன் கலுபா.

1304. பிறையார் நறுநுதற் பேதைதன் காரண மாப்பெரும
வறைநா ளிரவில் வருவது நீயொழி வச்சிரநாட்
டிறையா யிகலு பாமுத லானவர் யானைகணின்
றறைவாரும் விஞ்சத் தடவிகள் சூழு மணிவரையே.

சீதக்காதியைப் படிக்காசுப்புலவர் பாடியவை.

1305. காய்ந்து சிவந்தது சூரிய காந்தி கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னுர் நெடுங்கண் டொலைவில்பன்னூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்ச மனுதினமும்
ஈந்து சிவந்தது மால்சீதக் காதி யிருகரமே.

1306. ஓர்தட்டி லேபொன்னு மோர்தட்டி லேநெல்லு மொக்கவிற்குங்
கார்தட் டியபஞ்ச காலத்தி லேதங்கள் காரியப்பேர்
ஆர்தட் டினுந்தட்டு வாராம லேயன்ன தானத்திற்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே.

1307. நேரித்து வந்த கவிராசர் தங்கட்கு நித்தநித்தம்
பூரிக்கு நின்கைப் பொருளொன்று மேமற்றைப் புல்லர்பொருள்
வேரிக்குஞ் சந்து நடப்பார்க்கும் வேரிக்கு வேலைசெய்யுந்
தாரிக்கு மாகுங்கண் டாய்சீதக் காதி தயாநிதியே.

1308. ஈயாத புல்ல ரிருந்தென்ன போயென்ன வெட்டிமரங்
காயா திருந்தென்ன காய்த்துப் பலனென்ன கைவிரித்துப்
போயா சகமென் றுரைப்போர்க்குச் செம்பொன் பிடிபிடியாய்
ஓயாம லீபவன் மால்சீதக் காதி யொருவனுமே.

ஷை வள்ளலை நமச்சிவாயப்புலவர் பாடியவை.

1309. மைப்போ தகமும் வளநாடுஞ் செந்தமிழ் வாணர்க்கருள்
கைப்போ தகமனை யான்சீதக் காதியைக் காத்திருந்த
அப்போ தறிந்தில மிப்பாழ்ம் பணத்தி னருமையெல்லாம்
இப்போ தறிந்தன மீயாத லோப நிடத்திற் சென்றே.

1310. தடக்கும்ப கிம்புரிக் கொம்பச லப்பெருந் தந்திபட
நடக்குந் துரங்கத் துரைசீதக் காதிநன் னாட்டினல
வடக்குங் குமக்கொங்கை மின்னே யவன்றெரு வாயிலிலே
யிடக்குங் கலியும் பராரா சரத்ன கிரீடமுமே.

(1304) பல்சந்தமாலை-இறையனார் களவியல் மேற்கோள் விளக்கம். (சென்னை மியூஸியம் கையெழுத்துப்புத்தகசாலைப்பிரதி.) (1305-310) தனிப்பாக்கள்.

(தாய் சோதிடரை நிந்தித்துரைத்தல்).

1311. மாகத்தத் தும்புக ழான்பகை வேந்தர் மகுடம்பொடி
யாகத்தத் தும்பரி யான்சீதக் காதி யணிமலரின்
ஏகத்தத் தும்பி யிசைபாடு மார்பனி லென்மகட்கோர்
மோகத்தத் தண்டென்று சொன்னு நீலமுண் மொழிந்தவரே.

(பாலனைப்பழித்தல்)

1312. வேளா மழகன் றுரைசீதக் காதியென் வீட்டிலொரு
நாளா கிலும்வரக் காண்கில னேயெந்த நாளுமவன்
தோளா லணையுஞ் சுகவா லிபத்தைத் துணிக்கவொரு
வாளாய்ப் பிறந்தனை யேமக னேயென்ன வாயுனக்கே.

சீதக்காதி இறந்தபோது படிக்காசுப்புலவர் பாடிய கையறவு.

1313. பூமா திருந்தென் புவிமா திருந்தெனிப் பூதலத்தில்
நாமா திருந்தென்ன நாமிருந் தென்னநன் னுவலர்க்குக்
கோமா னழகமர் மால்சீதக் காதி கொடைமிகுந்த
சீமா னிறந்திட்ட போதே புலமையுஞ் செத்ததுவே.

1314. விண்ணுக்கு மண்ணுக்கும் பேராய் விளங்குதே வேந்தரெனுங்
கண்ணுக் கினிய துரைசீதக் காதி கமலநிகர்
தண்ணுக் கிசைந்த வதனசந் த்ரோதய சாமியிந்த
மண்ணுக்கு ளேயொளித் தான்புல வோர்முகம் வாடியதே.

1315. தேட்டாளன் காயற் றுரைசீதக் காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கம்ப நாட்டிவைத் தான்றமிழ் நாவலரை
ஓட்டாண்டி யாக்கி யவர்கடம் வாயி லொருபிடிமண்
போட்டா னவனு மொளித்தான் சமாதிக் குழிபுகுந்தே.

1316. மறந்தா கிலுமரைக் காசுங் கொடாமட மாந்தர்மண்மேல்
இறந்தாவ தென்ன விருந்தாவ தென்ன விறந்துவிண்போய்ச்
சிறந்தாருங் காயற் றுரைசீதக் காதி திரும்பிவந்து
பிறந்தா லொழியப் புலவோர் தமக்குப் பிழைப்பில்லையே.

மாவைக்கறுப்பன் என்ற பிரபுவைப் படிக்காசுப்புலவர் பாடியது.

1317. ஓர்கறுப்பு மில்லாத தொண்டைவள
நன்னாட்டி லுதித வேளாள
சீர்கறுப்பொன் றில்லாத கத்தூரி
மன்னனருள் சேயைப் பார்மேல்

(1311–16) தனிப்பாக்கள். (1317) தொண்டைமண். சத. முகவுரை.

ஆர்கறுப்பு னென்றுசொலி யழைத்தாலும்
காமவனே யன்பி னுலே
பேர்கறுப்ப னிதஞ்சிவப்பன் கீர்த்தியிஞல்
வெஞ்சுப்பனெனைப் பேச லாமே.

ஷ. பிரபுவைப் பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் பாடியது.

1318. நினம்போதத்தள்ளிப்பெரும்பூதம்போலப்பின்னேற்றுச்செத்த
பிணம்போற் கிடந்து புரளுவர் காண்பிறர்க் கீட்டிவைத்த
பணம்போன பின்பு விவேகமுண் டாகுமப் பஞ்சைகள்வங்
கணம்போதும் போதுங் கறுப்பாதென் மாலையிற் காவலனே.

சோலப்பிள்ளைமேல் ஒருபுலவர் பாடியது.

1319. அலையான் கவடுபடா ஞருடனுங் காயான்
இலையென்ப தோர்நாளு மில்லை—கலைதேர்ந்த
சாலமுத்துக் கிட்ணனருள் சற்குணஞ்சே ராமணியைச்
சோலையென்று சொன்னவரார் சொல்.

இரசை-வடமலைப்பிள்ளையைச்
சிறிய இரத்தினகவிராயர் பாடியவை.

1320. எர்விற்றுப் பன்விற் றுடைமையெல் லாம்விற் றிருந்தமனைச்
சீர்விற் றனமுன்னைக் காணுத முன்றெரி சித்தபின்பு
போர்விற் றடக்கை யிரையூர் வடமலைப் பூபதிநின்
பேர்விற்று முன்விற்ற தெல்லா மறுபடி பெற்றனமே.

1321. கூவிக்கு நான்சொல்வ தோவெம்ம ஞேர்நின் கொழுங்கருணை
வேவிக்கு ணின்ற பயிரல்ல வோவெறுங் கான்புகுந்த
நீலிக்கும் ராவணன் மோலிக்குங் கும்ப கிகும்பனுக்கும்
வாலிக்கும் வாளிதொட் டாயிரை யூரில்-வடமலையே.

1322. பாடுவன் பாடுவ தல்லாமற் பாவலர் பாடலுங்கொண்
டாடுவன் செய்வ னிரையூர் வடமலை யன்றிப்புல்லன்
தேடுவன் றேடிப் புதைப்பா னவனுக்குச் செந்தமிழென்
வேடுவன் சேரியி லெவ்வா றுனம்மி லீலச்செல்வதே.

1323. கோதிச்சிக் கின்றி முடிக்கின்ற மாலைக் குழலிவிடு
தூதிச்சிக் கின்றுசெங் காவிநல் காய்துணைக் கண்கறுத்தி
மோதிச்சிக் கென்று பணைத்திறு மாந்த முலிண்முலைப்பூ
மாதிச்சிக் கின்றபொன் மார்பா விரசை வடமலையே.

(1318—19.) தனிப்பாக்கள். (1320-23) செந்தமிழ்-தொ. 1; புலவராற்றுப்படை யிறுதி.

1324. ஈர்க்கிடை போகப் பெருமூலை மாலை யிளம்பிறையாற்
பார்க்கிடை யானது பார்க்கிலை யேயெதிர் பாறிட்டொன்னார்
நீர்க்கிடை போனெகி ழாமனம் பேதிக்க நேரிடும்போர்
வார்க்கிடை வேற்கை யபங்கா விரசை வடமலையே.

1325. முடக்கால் வலைக்கும் பிறைக்கீற்றுக் கண்டபின் மோகமென்னு
லடக்கா வகைகைக டந்தெதண் ணுனர்க் குந்தமிழ்க்கும்
இடக்கா லெனினு மொருக்கான் மனங்கொண் டெதித்தவடி
மடக்கா முழுவல் லமையா னிரசை வடமலையே.

1326. இரசைப் பதியில் வடமலை ராயன்றே வேந்திரனென்னப்
புரசைக் களிற்றிற் பவனிவந் தான்வந்த போதிலென்பெண்
ணரசைக் குறித்தின்று போர்க்கோலங் கொண்ட வனங்கன்வெற்
முரசைப் பறித்துடைப் பாரில்லை யோவமர் மூளுமுன்னே. [றி

ஷே. பிரபுவைச் சொக்கநாதப்புலவர் பாடியது.

1327. புரசை வடமலை யப்பா விருட்கயம் பூண்டுகொண்டு
முரசை வடமலை யப்பாலுஞ் செல்ல முழக்கஞ்செய்தோய்
சிரசை வடமலை யப்பாம்பில் வைத்துத் திருக்கண்வளர்
இரசை வடமலை யப்பாவிப் பாருக் கிறையவனே.

(அலர்க்குறி)

1328. பார்க்க வனைத்தனிக் கண்ணெறி மாயன் பகைத்திலகன்
பார்க்க வனைத்தரு சீரான் வடமலைப் பார்த்தன்வெற்பில்
பாற்கர னைக்கடிந் தேயில கானனப் பைங்கிளியே
பாற்கர னைச்சுமந் தேயிருந் தாளொரு பாற்கரனே.

வல்லெக் காளத்தியை ஒருபுலவர் பாடியது.

1329. பள்ளமே செய்யுட் பயிரையெல்லாங் கொள்ளுமுடி
வெள்ளமே யும்மையுநாம் வென்றேமே—புள்ளலம்பும்
பொற்சாலி வாவிவல்லைப் பூபதிகா ளத்தியெனும்
நற்கார் நெடுமுடியை நட்டு.

1330. நற்றேர ணவீதி நண்ணும்வல்லெக் காளத்தி
கற்றோர் தமக்களிக்குங் கையேகை—மற்றோர்கை
வேங்கை யலகைபுகை வேட்கை பலகைகை
சாங்கை யழுகைவீழு கை.

(1324–26) செந்தமிழ் தொ-1; புலவராற்றுப்படை யிறுதி. (1327–28) தனிப்பா. (1329) தொண்டைமண். சத. 52. மேற். (1330) தனிப்பா பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்வாக்கென்பர்.

ஷெ. பீரபுவைக் குறுந்தடிநம்பி பாடியவை.

1331. பொரடக் கயம்பிடி யென்றூன் மதனனிப் பூவையுமா
தரடக்க முஞ்சற் றறிந்திலை தேனைத் தாள்பணியா
மூரடக் கவுடக் கெடிமண்ட லீகர் முடிபிங்கும்
கரடக் கட்டாக்களிற் றுய்வல்லை மாநகர்க் காளத்தியே.

1332. பெற்றூ ளொருபிள்ளை யென்மனை யாட்டியப் பிள்ளைக்குப்பால்
பற்றூது கஞ்சி குடிக்குந் தரமன்று பாலிரக்கச்
சிற்றூளு மில்லையிவ் வெல்லா வருத்தமுந் தீரவொரு
கற்றூ தரவல்லை யோவல்லை மாநகர்க் காளத்தியே.

1333. வழிமேல் விழிவைத்து வாடாம லென்மனை யானைமற்றோர்
பழியாமற் பிள்ளையும் பாலென் றழாமற் பகிரெனுஞ்சொன்
மொழியாம லென்னை வரவிட்ட பாவி மூசித்துச்சதை
கழியாம லாவளித் தான்வல்லை மாநகர்க் காளத்தியே.

சீகைத் தானன்.

1334. இல்லெனுஞ்சொ லறியாத சீகையில்வாழ்
தானைனப்போய் யாழ்ப்பா ணன்யான்
பல்லிவிரித் திரந்தக்கால் வெண்சோறும்
பழந்தூசும் பாலி யாமல்
கொல்லவினைந் தேதனது நால்வாயைப்
பரிசென்று கொடுத்தான் பார்க்குள்
தொல்லையென தொருவாய்க்கு நால்வாய்க்கு
மிரையெங்கே துரப்பு வேனே.

செய்யூர் வளவநயினன்.

1335. மையூருங் கண்ணூர் [1]மயங்கப் பொருகரும்பு
கையூருங் காமாவுன் கண்ணுனை—செய்யூர்
வளவாயி னன்பிரிந்த வாறுனக்குச் சொன்ன
உளவனையின் னுனென் றுரை.

(1331) தொண்டைமண். சத. 38, மேற். (1332–33) ஷெ. 51. மேற். (1334) தனிப்பா. அத்தகக்கவிவாக்கென்பர். (1335) தனிப்பா. [1]மயலாக விற்றெடுக்கும், கையூரு மாரா.

திருவேங்கடம்.

1336. செஞ்சிச் செயசிங்க ராசாதி ராசன்றன் சித்தமெச்ச
விஞ்சைப்ர தானிக்குஞ் செம்பூதப்பிள்ளைத் திக்கும் விசயஞ்செய்து
பஞ்சத்து மன்னம் பகர்ந்திட் டெர்புகழ் பாரிற்பெற்ற
மஞ்சொக்குஞ் செங்கைத் திருவேங் கடனந்த மண்டலமே.

காரையூர்ச் சர்க்கரை.

1337. கண்டாற் புலவரை மேனும்பு பேசுங் கசடரிட
மிண்டாநல் லுத்தமக் காமிண்ட னேவித்து வான்களுக்குத்
தொண்டா புலவர் சுவுக்கடி யேற்ற சுழுகொடைத்
தண்டா மரைக்கையுத் தண்டா நலதம்பிச் சர்க்கரையே.

புலவர் கவிகேட்டு ஓராமப்பய்யன் சம்பந்தச் சர்க்கரையைச் சிறைமீட்டது.

1338. வாண னுரைத்திட மால்ராமப் பையன் மனமிழ்ந்து
வேணது கேளெனச் சம்பந்தச் சர்க்கரை வேளினுமிவ்
வீணரைக் காவல் விடுரென்று கூறிட வீட்டிடலும்
தாணுவென் றிம்மூடிக் காணிக்கைச் சாதனந் தந்தனனே.

சிறையிலிருந்த சம்பந்தச் சர்க்கரையை ஒருபுலவர் யார் என விளவியது.

1339. எவரையென்று நாமறியோ மிரப்பவரே
விடமறியா னிரவி ளுகங்
கவருமதி யொருபுறத்தே நிலவெறிக்கும்
பான்மைதனைக் கண்டி லீரோ
அவரைபத மாருமுனங் கடுகுபொடி
யாகிவிடு மதனை யோர்ந்து
நவரைமுதற் காதலளுஞ் சம்பந்தச்
சருக்கரையார் சொல்லு வீரே.

புலவர்க்குத் தாலியைக் கொடுத்தனுப்பிய சர்க்கரையின் தேவிசெயலை அப்புலவர் பாடியது.

1340. கொங்கினி லிராமப் பயனதி காரக் கொடுமையினுற்
கங்கு லிராப்பகல் சர்வசங் காரஞ்செய் காலத்திலே

(1336) நற்றமண். சத. 67. (1337) கொங்குமண். சத. 58 மேற். (1338) ப. வெ., 66. (1339—40) வெ. 65. மேற்.

சிங்கநற் சம்பந்த சர்க்கரை தேலி திருக்கழுத்தின்
மங்கலி யந்தனைத் தந்தாள் தமிழ்க்கவி வாணருக்கே.

ஞானச்சர்க்கரை.

1341. செங்குவ்வை யெல்லாரின் செங்கைக் கொடையதனுக்
கெங்கெங்குந் தேடி யிணைகாணேன்—கொங்கதனிற்
சர்க்கரையைப் பாடலாந் தண்டமிழ்க்கொவை நீயாத
எக்கரையாம் பாடோ மினி.

அல்லாளன் இளையான்.

1342. மூவருக்கு மகத்தியமா முனிவருக்கு
மரசிருந்த முன்னே யோர்க்கும்

தேவருக்குந் திரும்பாத காவிரியைக்
கொங்கேற்றித் திறைகொண் டாயே

பூவிருக்கு முரமாயன் கடலடைத்தா
னவன்வேடம் புனைந்த வாறே

யாவருக்கு மிளையானே யல்லாள
திருமலையா வீகை யானே.

தூயகாங்கயன்.

1343. மிண்டாறை வாணனேநேர் வெட்டாமற் பாண்டியனேர்
கொண்டுவந்து நிற்கவிட்ட கொற்றவனு நீயலையோ
தெண்டிரைசேர் மோரூரிற் றென்னன்மரு டாசனனே
மண்டலிகர் வாழ்ந்துமெச்ச வாழ்ரூர்ய காங்கயனே.

மோரூர்க்காங்கயர்.

1344. பூதத் தினைகொண்ட போர்வாண் மாறனிரு
பாதத் தினைகாணப் பண்ணினோர்—ஒதுமிசை
ராமா யணங்கேட்டோர் நாவலர்வைப் புப்பொருளாங்
கோமான்வாழ் மோரூர்க் குடி.

காஞ்சிகாயன்.

1345. திரைகொண்ட வாரியை மாலடைத் தான்செழுங் காவிரிவை
உரைகொண்ட சோழன்முன் னாளடைத் தானுல கேழறிய
வரைகொண்ட பூர்துறை நன்னூ வாழவவ் வானிதனைக்
கரைகொண்டடைத்தவன்வெள் ளோடைச்சாத்தந்தைகாலிக்கனே.

(1841)ஷெ.51 மேற். (1842-44) ஷெ 54 உரை. (1845) ஷெ.70 மேற்.

1346. ஆலிங்க காகமலே யர்த்தகா ரீச்சுரர்க்குக்
காலிங்க ராயனெனுங் காராளன்—மாலிங்க
மென்றேமா மாந்தைநில மேழுமா வுங்கொடுத்து
கன்றே புகழெய்தி னான்.

1347. எற்று திரைப்பொன்னி கூடுறு வானி யிடைமடங்க
வெற்றி மிருந்த வதிவீர பாண்டிய வேந்தமைச்சன்
கற்ற வறிவினன் காலிங்க ராயன்செய் கால்கழிநீர்
உற்ற வனத்தை வளவய லாக வுயர்த்தியதே.

மசக்காளி.

1348. முன்னு ஞறங்கைதவரு மரசர்பெரு மானுலகின்
முடிமன்ன வர்தம் பிரான்

முதுமொழி குலோத்துங்க சோழனருள் செய்தனன்
முத்தமிழ்க் கம்ப நாடன்

அக்காளி லேபொன்னி கரைகள்கட வாதுள்
ளடங்கவிசை பாட லுக்கா

ஆகித்த னுள்ளளவு மழியாத வதுவைவரி
யளித்தனர்க ளன்று முதலாப்

பன்னுத நிலைமைசெறி கொங்குநாட் டினின்மேவு
படிகார வித்வச் சனர்

பல்கென நடந்துவரு படிதனுக் கிடரதாய்ப்
படித்தலெர் கைக்கொண்டதை

இக்காளி லேசேர்த்தி நிலையாக விடுவித்தவ்
வியல்வாண ருக்க ளித்தான்

இவ்விதம தாகவரு கவசைநகர் வாழ்வுற்ற
விம்முடி மசக்கா ளியே.

செட்டிப்பிள்ளையப்பன்.

1349. இட்டமான கவிசொல்லும் பாவலர்க்
கில்லெ பன்று சொலற்கஞ்சிக் காட்டில்வாழ்

திட்டவன்புலித் தூற்றிற் புகுந்தவன்
றூயவ னகண வாள குலத்தினன்

(1346) அடி 70 மேற். (1347 அடி 71 மேற். (1348) அடி, 85. (1349) அடி 99. மேற்–அமரவிடங்கர் குறவஞ்சி.

செட்டிப்பிள்ளையப் பன்றினைத் தொண்டுசெய்
தேவிமாமலி மாதாரு பங்குள
கட்டுசெஞ்சடை யமர விடங்களூர்
கதித்து வாழ்பாரி பூரெங்க ளூரே.

வேணுவுடையான்.

1350. நாத னிரத னடவாது செய்கொடிய
பூத மகலப் புதல்வனேவி—னோதமுற
வெட்டிப் புகழ்படைத்தான் வேணுடையான் கொன்றையான்
எட்டித் திசைமகிழ வே.

கோப்பணன்.

1351. பம்பிடச் சிங்களர் தென்னர் களிக்கப் பணுங்தரந்தைக்
கம்பக் களிக்கோப் பணன்வரை யீர்வேள் கலாபத்திலே
செம்பொற் குடத்தைப் பவளத்தை முத்தைத் தெரியவிட்டே
யம்பைப் புதைத்துவைத் தீரிந்த வண்ண மறிந்திலனே.

பூந்துறை வாணவாசி கூட்டியை வென்றது.

1352. மாற்றலர் மண்கொள்ளும் வணங்கா முடிக்கட்டி
ஆற்றவழிந் தேங்கி யடங்கினை—தாற்றரம்பைப்
பூங்கனித்தேன் பாய்மருதப் பூந்துறையான் சேனைமதிற்
பாங்குமுத்துச் செய்கொமை பார்த்து.

பூந்துறைக் குப்பிச்சி.

1353. விசய நகரத்து மேலி யிருக்கும்
அசையா ரரபதித னன்பால்—இசைவுபெறக்
கொங்குக்கு மேன்மைக் குறிப்பு மணியிழைத்த
தங்கப்பொற் றண்டிகையுந் தான்படைத்தோன்.

திருப்பனந்தாட் பட்டன்.

1354. விண்ணீரும் வற்றிப் புவிநீரும் வற்றி விரும்புமழைத்
தண்ணீரும் வற்றிப் புலவோர் தவிக்கின்ற காலத்திலே
உண்ணீருண் ணீரென் றுபசாரஞ் சொல்லி யுபசரித்துத்
தண்ணீருஞ் சோறுந் தருவான் திருப்பனந் தாட்பட்டனே.

(1350) வெ. 94 மேற். (1351) வெ. 59 மேற். (1352) வெ. 83, மேற். (1353) வெ. 56. மேற். (1354) தனிப்பா; காளமேகப்புலவர்வாக்கென்பர்.

ஔவைத்தாய்க்குரியன.

1355. பாலுகிர ணம்பார்க்கும் பங்கே ருகநிலவு
தாலும்வரப் பார்க்குஞ் சகோரங்கள்—வானமரும்
மையைப்பார்க் கும்மயில்கண் மாவிகயா னந்தங்கண்
கையைப்பார்க் கும்புலவோர் கண்.

1356. மந்திர யூகி யறிவினிற் சேடன் வடிவின்மதன்
இந்திர போக னிதியிற் குபேர னிரவலர்க்கோர்
ஐந்தரு வாகுஞ்செல் வாக்கி லரிச்சந்த்ர னுகுமென
வந்தரு ளானந்த ரங்கனும் வாழ்தொண்டை மண்டலமே.

ஷெ பிரபுவை மதுரகவி பாடியது.

1357. உலங்கொண்ட மணிப்புயனே பிரம்பூரா
னந்தரங்கா வுன்பாற் செல்ல
வலங்கொண்ட கருடனேயா மிடங்கண்டோ
மெழினரையான் வலத்தே கண்டோம்
பொலங்கொண்ட மணிமாட மீமிசையே
புயறவழும் புதுவை யென்னுந்
தலங்கண்டோ மினதருகை முகங்கண்டோ
மினிவேண்டுந் தனங்கண் டோமே.

ஷெ பிரபுவை நமச்சிவாயப்புலவர் பாடியது.

1358. பாரார்சொல் லாரார் பறவைக் குலங்கடம்மிற்
சீராருங் கிள்ளைமுதற் செப்பலால்—ஓரா
யிரம்பையா னந்தரங்க னீன்பரங்க னன்பன்
பிரம்பையா னந்தரங்கன் பேர்.

1359. கார்படைத்த கரதலத்தான் தூரைதிருவேங்
கடமளித்த கன்னு வெங்கும்
பேர்படைத்த வானந்த ரங்கமகி
பாலாறின் பிரம்பூர் நாட்டில்
நேரிழைக்கு விழியேழு மூலையாறு
காதைந்து நெற்றி நான்கு
பாரிடத்தி லிப்புதுமை கண்டுவந்தே
னீதென்ன பகர்ந்தி டாயே.

(1355) தனிப்பா. (1356) நந்தமண். சத. 63. (1357) பாவலர்சரித் திரதீபகம். பக். 230. (1358-59) தனிப்பா.

ஷ பிரபுவை சவாதுக்கவி பாடியது.

(சுரம்போக்கு)

1360. பாலெயிலாள் பின்னவ்காற் பஞ்சவியென் றேசுவிப்பாள்
பாலெயிலாட் பின்னென் படுவளோ—சோலெயிலே
ஆ மயிற்பிரம்பூ ரானந்த ரங்கதுரை
நாதனி லென்னினமின் னுள்.

துன்னரங்கனே அப்பிரதீபக்கவிராயர் பாடியவை.

1361. தென்னரங்க னரங்கனென்பார் வாய்திறவான்
கண்விழியான் திரும்பிப் பாரான்
என்னரங்கன் றுங்கிரங்க னேழையர்பாற்
கருணையுட னிரங்கா ரங்கன்
மன்னரங்கன் தமிழ்ப்பெருமான் மழவரங்க
னளித்தருளு மைந்த னன
குன்னரங்கா வெனவிரங்காய் குழைந்தெழுந்த
தமிழ்கிரங்கிக் குழைந்தெ ழாயே.

1362. எண்டிசையும் புகழ்படைத்த குன்னரங்க
மதிபாலா வினிமே லிந்த
மண்டலத்தை யரசாள வொப்பிலா
நின்புதல்வன் மழவன் போதும்
விண்டலத்தி லிந்திரனுக் காசுகிலே
யில்லாமல் வெகுநா ளாக
நண்டளந்த நாழியாக் கிடப்பதால்
விண்ணுளை கடந்தி டாயே.

எட்டயபுரவேந்தைக் கடிகைமுத்துப்புலவர் பாடியவற்றுட் சிலகவிகள்.

1363. முடிக்கு மருப்புக் கிசையாப்பைக் கூந்தலம் மூரிமதன்
பிடிக்கு மருப்புக் கிலக்கல்ல வேயெதிர் பேசுமொன்னர்
குடிக்கு மருப்புக் கடலேற்று வித்துக் கொடிமதில்பாய்ந்
திடிக்கு மருப்புக் களிற்று ளிளசையி லெட்டமனே.

1364. கொட்டமிடு மருவலர்க ளிட்டகற்கோட்
டைகளனைத்துங் கொழுந்து ளாக
வட்டமிடு பரிகுல னெட்டமரா
சேந்திரனென்னை மருவா நாளில்

(1360) தனிபபா.

திட்டமதன் கணைதொடுத்த தினைவழியே
தென்றல்வந்து தடைத்துத் தள்ளி
விட்டவெறுங் கூட்டையினிச் சுட்டதனு
லெனைபயன் விளமபி டாயே.

சிவகரித்தலைவர்மீது முத்துப்புலவர்
பாதிவசுகயும் பாதிநகையுமாகப் பாடியது.

1365. வாக்கிரண்டு பேசா வரகுணரா மேந்திரனே
வாக்கிரண்டு பேச மனமவைத்தான்—ரூக்கு
மருவலரைக் கொல்லென்ரூன் வந்தடைந்த போது
சருவாமற் காப்போமென் ரூன்.

சேற்றூர்த்தலைவர் சிவப்பிரகாசத் திருவன்.

1366. ஒருகையிலே யன்ன மொருகையிலே சொன்னம்
வருகையிலே சம்மான வார்த்தை—பெருகுபுகழ்ச்
சீமானு மெங்கள் சிவப்பிரகா சத்திருவக்
கோமானுக் குள்ள குணம்.

சேறுபதி பொன்னன்.

1367. சேற்றூரார் நெஞ்சத் திடப்படமே தென்மலையான்
தோற்றமெனன் ரோடித் தியர்ப்படமே—மாற்றரசர்
தெண்டனிடுஞ் சினனனைஞ்சான் சேறு பதிப்பொன்னன்
தண்டிகையைக் கண்டவுடன் ரூன்.

மருதுபாண்டியன்.

1368. பரனு ரியல்புணரும் பண்பன்ற னின்பம்
பரரா ரியரறியாப் பண்பன்—நிரனூர்
அணிமருது பாண்டில்விழ வன்றதைத்தோன் யாரும்
பணிமருது பாண்டியபூ பன்.

1369. ஒருபுருடன் றனக்கிரண்டு மனைவியரி
லொருத்தியகு மூடையான் சித்தை
வரசடந்து பதினாறு பிள்ளைபெற்றே
யகமிழ்ந்தாண மற்றொ ருத்தி

(1365—67) செந்தமிழ். தொ-3, பக். 296. (1368) ஷெ, ஷெ, 295. (1369) ஷெ, ஷெ, 482.

இரவுபகல் புருடன்முகம் பாராமற்
கற்பழியா திருந்தாள் பின்னை
கருதி நொந்து பெற்றவட்கோ
மற்றவட்கோ மருதைந்த்ர கழறு வாயே.

வடகரைப் புலவரோருவர் வில்லவராய முதலியார் உறைவிடம் உசாவியபோது, தெருவில்விளையாடிநின்ற முதலியார் குமாரர் சின்னத்தம்பிப்புலவர் கூறிய வெண்பா.

1370. பொன்பூச் சொரியும் பொலிந்தசெழுந் தாதிறைக்கும்
நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலா—மின்பிரபை
வீசுபுகழ் நல்லூரன் வில்லவரா யன்கனக
வாசலிடைக் கொண்ற மரம்.

பள்ளி கொண்டான்.

1371. வள்ளிகொண் டான்மயி லேறிக்கொண்
டான்மதி போலுமலி

வெள்ளிகொண் டான்விடை யேறிக்கொண்
டான்வீண் ணவர்க்கமுதம்

துள்ளிகொண் டான்புள்ளி லேறிக்கொண்
டான்சுப சோபனஞ்சேர்

பள்ளிகொண் டான்புக ழேறிக்கொண்
டானென்று பார்ப்பதற்கே.

குழமூர்க் கோனேரியப்பன்.

1372. எழுமூவ ரேழெழுவ ரேழொன் பதின்மர்
வழுவா தவர்போல வந்தான்—குழுமூரன்
கோனேரி யப்பன் கொடையிஞ்சி கல்வியினன்
ஆனேறி போன்பி ஞல்.

தஞ்சைநாயகம்.

1373. வேரூரு மாலுதவும் வீழுதனவே
யுனதுதந்தை மேன்மை யான
பேரூர்தான் வீணுங்கமிரு பெருங்கோயுள்
தழைக்கவந்த பேக னீகாண்
தேரூருஞ் செகராசர் செங்கோலே
யுழக்கோலின் செயலாற் சாக்கும்
ஆரூர்வாழ் புழுகாச்சி யளித்ததஞ்சை
நாயகமே யனக வேளே.

(1370) பாவலர்சரித். நீப. பக். 148. (1371) தனிப்பா. (1372) சென்னை 'மீயூஸியம்' கையெழுத்துப்புத்தகசாலைப் பிரதி (1373) தஞ்சைச்சரஸ்வதி மால்பிரதி.

வல்லாள சுந்தரன்.

1374. போர்மூன்று மோகன வல்லாள சுந்தரன் பூவைக்கிந்தத்
தேர்மூன்று மோமதன் றேர்மூன்று மோவிரு தேர்மூன்றுமுன்
கார்மூன்று மோவது மூன்றுமுன் னேயிரு கண்கள்சொரி
நீர்மூன்று மோவறி யேன்வல வாவென்ற னேரிழைக்கே.

அருணாசல வீரவசந்தன்.

(அலர்க்குறி)

1375. வாரண மாங்கள மாமலே யாமுலே யாரணங்கே
வாரணஞ் சூழ்புவி நாடிய தேவந்தை வந்தவண்பால்
வாரண மாமரு ணாசல வீர வசந்தன்வெற்பில்
வாரண மேலொரு வாரண மேறி வதிந்ததுவே.

ஒருவள்ளலைப் பற்றியவை.

1376. உண்ணிலவு நீர்மைத்தா யோவாப் பயன்சுரந்து
தண்ணளி தாங்கு மலர்முகத்துக்—கண்ணெகிழ்ந்து
நீங்க லரிய நிழலுடைத்தாய் நின்றளிக்கிங்
கோங்கிய சோலை யுளது.

1377. தண்ணளிசேர்ந் தின்சொன் மருவுந் தகைமைத்தாய்
எண்ணிய வெப்பொருளு மெந்நாளு—மண்ணுலகில்
வந்து நமக்களித்து வாழு முகிலொன்று
தந்ததான் முன்னைத் தவம்.

வறுமையுற்றுன் ஒருவள்ளலைப்பற்றியது.

1378. கடைபோ முலகியற்கை காலத்தின் றீங்கால்
அடைய வறிதாயிற் றன்றே—யடைவோர்க்
கருமை யுடைத்தன்றி யர்தேன் சுவைத்தாய்க்
கருமை வீரவாக் கடல்.

(1374-75) தனிப்பா. (1376—77) வீரசோ. அலங். 24, மேற். (1378) ஷெ. ஷெ. 25. மேற்.

மிழலைநாட்டு வேளாளர்.

1379. அடுக்கப் படிக்கின்ற செந்தமிழ்ப் பாவல ராரினையும்
தடுக்கப் படிக்கின்ற கல்விகல் லாரிந்தத் தாரணியிற்
கொடுக்கப் படிக்கின்ற கல்விநன் ருய்வந்து கூடியபின்
நடக்கப் படிக்கின்ற நாட்டார் மிழலை நராதிபரே.

1380. பொன்மாரி பெய்யினு மெப்போது மேகம் புயலேச்சிந்தி
வின்மாரி பெய்யினு மென்னு முயிர்க்கதின் மேன்மையுண்டோ
சொன்மாரி பெய்யு மிழலைநன் னுட்டுத் துளுவர்செய்யின்
நென்மாரி பெய்யும் பொழுதே யுலக நிலைகிற்குமே.

வேங்கப்பன்.

1381. ஆதி வருடத் தினுக்குப்பத் தொன்பதென் ருரியர்க
ளோதுமந் நாளின் முதன்மண் டகப்படி யுண்பெண்ணி
வேதிய ராளுடை யாரைப் பணிசெல்வன் வேங்கப்பனுங்
காதனெல் வேலி மிழலையில் வாழ்கரு ணாகரனே.

தமிழ்க்களித்த நுலேவர்கள்.

1382. வந்தவுயிர் தனேயளித்தான் கிடங்கில் வேந்தன்
வயலுழா னறமடங்கா தெனவு ரைத்தான்
செந்தமிழோர் நிலேவளர்த்தான் வேலூர் மன்னன்
செம்பியன்முன் வயிறிடந்தான் பேரை யூரான்
அந்தமூள நாணளித்தான் வீரே நாதி
யடையாத வாசலா னிடையா லத்தான்
நந்தமூட னழுதுண்டான் பேரா வூரான்
நடைப்பரியா யிரங்கொடுத்தா னுறை யானே.

தமிழக்குத் தொண்டுசெய்தோர்.

1383. சிலரு மான்மணிப் பாய்சுமந் தான்கம்பர்
சிலேகைபாண் டியனேற்றினன்
செல்வமிரு கச்சியப் பன்னுதை பொறுத்தனன்
நிகழ்கட்டி சோம னீந்தான்

(1379—80) மிழலைச் சதகப்பாடல்கள். (1381) கூ. (1382) தொண்டைமண். சத. 69. மேற். (1383) அமிர்தகவிராயர் தாம் நித்திரைசெய்த போது, மந்திரி—அண்ணுமலேப்பிள்ளே தம் பாதத்தை வருட அப்போது பாடியதென்பர். (செந்தமிழ் தொ. 3, பக். 66.)

தாருலவு குமணனுந் தலைகொடுத் தான்சிவன்
ரூனுமொரு னூது சென்றான்
சர்க்கரையு மெச்சில்வாய் கழுவினான் காளத்தி
தனதிருகை புற்றி லிட்டான்
பேரிலகு கம்பையனும் விரலாழி யீந்தனன்
பெரியவன் பெண்கொ டுத்தான்
பிணிமுகத் தோன்கீ ரனைப்புரந் தான்பேதை
முதலிலன மொருவ னிட்டான்
பாருலவி லித்தமிழ்க் குத்தொண்டு செய்தபேர்
பார்க்கிற் கணக்கில் லையே
பரராசர் பணிகின்ற வண்ணுமை லக்குரிசில்
பாதத்தை வருடி னனே.

புலவர்.

முச்சங்கப்புலவர் வாலாறு.

1384. வேங்கடப் குவர் நீம்புனற் பௌவத்
திந்நான் கெல் லயி னிருந்தமிழ் பயின்ற
செந்நாட் புலவர் செய்தியீண் டுரைப்பின்
ஆடகக் கொடி மாடக கூடலின்
முன்னரீ சங்கக் கன்மாப் பலகையிற்
றிரிபுர மெரித்த விரிசடைக் கடவுள்
மன்றன் மராத்தார்க் குன்றெறி யிளஞ்சேய்
திண்டிறற் புலமைக் குண்டிகைக் குறுமுனி
புவிபுகழ் மருதங் கவினிய முரஞ்சிப்
பதிமுடி நாக னிதியின் கிழவன்
இனையர்நா னூற்று நாற்பத்தொன் பதின்ம
ரனையர் நானுன் காயிர னூற்றெரு

(1384) சிலப்பதிகாரம் இரண்டாம்பதிப்பு, பக்-7 கீழ்க்குறிப்பு. ["இச் செய்யுள் பாண்டிநாட்டின்ள செவ்வூர்ச் சிற்றம்பலக்கவிராயரவர்கள் வீட்டி லிருந்த பழைய ஏட்டுப்புத்தகமொன்றில் எழுதப்பட்டிருந்தது ; இவ்வகவலி லுள்ள சிலபகுதி மறுத்தற்குரியனவாக வீருந்தும், ஒருசாராருடைய கொள் கை தெரிவதற்கே இஃது இங்கே பதிப்பிக்கலாயிற்று" என்ற மஹாமஹோ பாத்யாய-ஐயரவர்கள் எழுதிய குறிப்பு இங்கு அறிதற்பாலது.]

நாற்பத்தொன் பதின்மர் பார்க்கிற்செந் தமிழோர்
புரிந்தன செய்யுட் பெரும்பரி பாடலும்
முதுமை யறித்த நாரையும் குருகும்
கதியுறச் செய்த களரியா விரையும்
ஆங்கவ ரிருந்தது மத்தொகை யாகும்
ஈங்கிவர் தம்மை யீரிஇயபாண் டியர்கள்
காய்சின வழுதிமுதற் கடுங்கோ னீறா
ஏசி லாவகை யெண்பத்தொன் பதின்மர்
கவியரங் கேறிஞ ரெழுவ ராவர்
மகத்துவ முடைய வகத்திய நிலக்கணம்
வடிவறு காட்சி நேவட் சங்கத்
தகத்தியர் தொல்காப் பியத்தமிழ் முனிவர்
இருந்தை யூரிற் கருங்கோழி மோசியார்
வள்ளாப் புலமை வெள்ளூர்க் காப்பியன்
இறவா விசையிற் சிறுபாண் டரங்கன்
தேசிக மதுரை யாசிரியன் மாறன்
தவரோப் பாய துவரைக் கோமான்
தேருங் கவிபுனை கீரந்தை யாரிவர்
ஒன்பதொ டிரத்த வைம்பதின்ம ராகும்
தவலருங் கேள்வித் தன்மைய ருள்ளிட்
டிவர்மூ வாயிரத் தெழுநூற் றுவரே
வையகம் பரவச் செய்த செய்யுளும்
இருங்கலி கடிந்த பெருங்கலித் தொகையொடு
குருகுவெண் டாளி தெருள்வியாழ மாலை
அங்கா னிலக்கண மகத்திய மதனெடு
பின்னுட் செய்த பிறங்குதொல் காப்பியம்
மதிநலங் கவின்ற மாபு ராணம்
புதுநலங் கனிந்த பூத புராணம்
வல்லிதி னுணர்ந்த நல்லிசை நுணுக்கம்
தாவாக் காலத் தமிழ்பயின் றதுவும்
மூவா யிரத்தோ டெழுநூற் றியாண்டு
பரீஇய சங்க மீரீஇயபாண் டியர்கள்
வெண்டேர்ச் செழியன் முதலா விறல்கெழு
திண்டேர்க் கொற்ற முடத்திரு மாறன்
முரசுடைத் தானை மூவா வந்தம்

அரசுநிலை யிட்டோ ரைம்பத்தொன் பதின்மர்
இவ்வகை யரசரிற் கவியரங் கேறினர்
ஐவகை யரச ராயிடைச் சங்கம்
விண்ணகம் பரவு மேதகு கீர்த்திக்
கண்ணகன் பரப்பிற் கபாடபுர மென்ப
அருங்கடைக் கூக மிருந்தோர் யாரெனிற்
நிறுமே தாவியார் சேந்தம் பூதனர்
அறிவுடை யரனர் பெருங்குன் றூர்கிழார்
பாடல் சான்ற விளந்திரு மாறன்
கூடலா சிரியர் நல்லந் துவனர்
பாவுதமிழ் மதுரை மருதனிள நாகர்
அவிகணக் காயர் நவினக் கீரர்
கீரங் கொற்றர் கிளர்தே வூர்கிழார்
ஒருங் கலைமண வூரா சிரியர்
நல்லூர்ப் புளியங் காய்ப்பெருஞ் சேந்தர்
செல்லூ ராசிரியர் முண்டம் பெருங்குமரர்
முசிறியா சிரியர் நீல கண்டனர்
அலைவிரி குன்றத் தாசிரிய ரன்றி
நாத்தலங் கனிக்குஞ் சீத்தலைச் சாத்தர்
மூப்பா லுனரு மூப்பூரி குடிகிழார்
உருத்திர சன்மர் மருத்துவ ராகிய
நாம நாற்கலைத் தாமோ தரனர்
மாதவள னோ டோதிமிள நாகர்
கடியுங் காமப் படியங் கொற்றனர்
அருஞ்செய லூர்வாழ் பெருஞ்சுவ னுருடன்
புவிபுகழ் புலமைக் கபிலர் பரணர்
இன்னுத் தடிந்த நன்னுக ரன்றியும்
ஒல்காப் பெருமைத் தொல்காப் பியத்துக்
குரையிடை யிட்ட விரகர்கல் லாடர்
பேர்மூல மூணரு மாமூலர் தம்மொடு
விச்சை கற்றிடு நச்செள்ளை யார்முதற்
றேனூற் றெடுப்பச் செந்தமிழ் பகர்ந்தோர்
நானூற் றுவர்மூத னூற்பத்தொன் பதின்மர்
பீடுபெற வுலகிற் பாடிய செய்யுள்
மூத்தொள் ளாயிர நற்றிணை நெடுந்தொகை

அகநா னூறு புறநா னூறு
குறுந்தொகை சிற்றிசை பேரிசை வரியோ
டறம்புகல் பதிற்றுப்பத் தைம்பதோ டிருபான்
பெறும்பரி பாடலுங் குறுங்கலி நூற்றைம்
பதிமூத லாகிய நவையறுங் கலைகள்
அக்கா லத்தவர்க் ககத்திய மதனெடு
மிக்கா மிலக்கணம் விளங்குதொல் காப்பிய
மெண்ணூற் கேள்விய ரிருந்த தாயிரத்
தெண்ணூற் றைம்பது வருட மென்ப
இடர்ப்படா திவர்களைச் சங்க மிரீஇயினர்
மூடத்திரு மாறன் முதலா வுக்கிரப்
பெருவழுதி யீறுப் பிறங்கு பாண்டிய
நரபதிக ளாகு நாற்பத்தொன் பதின்மர்
இவருட் கவியரங் கேறினர் மூவர்
புவியிற் சங்கம் புகழ்வட மதுரை
யாதிமுச் சங்கத் தருந்தமிழ்க் கவிஞர்
ஓதிய செய்யு ளுலவாப் பெரும்பொருள்
வானாக் கேட்குந் தோளாச் செவிக்குங்
கேட்டுந் தெரியா வோட்டைநெஞ் சினுக்கும்
நுழையா வாதலி னுழைபுலன் றண்ணெமும்
விழைவார்க் குரைக்க வேண்டுவர் தெரிந்தே.

1385. ஏழேழா டைஞ்னூறு மேழே ழொடுபஃதும்
ஏழேழுஞ் சங்க மிரீஇயினர்—ஈழேழ்சேர்
நாற்பதினு னூறுமூப்பா னேழ்நூறு நாணூற்று
நாற்பதினெண் பான்கவிஞர் நாடு.

காளமேகப்புலவர் பாட்டு.

1386. நூலாநா லாயிரநா னூற்றுநாற் பத்தொன்பான்
பாலாநா னூற்றுநாற் பத்தொன்பான்—மேலாநாற்
பத்தொன்பான் சங்கமறு பத்துநா லாடலுக்குங்
கத்தன் மதுரையிற்சொக் கன்.

அகத்தியனார்.

1387. வீங்குகட லுடுத்த வியன்கண்ஞா லத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்குவிளக் காகென

(1385—1386) தனிப்பா. (1387) (பன்னிருபடலம்) தொல். பொ. 649).

வாலே ரேத்தும் வாய்மொழிப் பல்புகழ்
ஆலப் பெருமை யகத்திய னெண்ணும்
அருந்தவ முனிவ ஞக்கிய முதனூல்
பொருந்தக் கற்றுப் புரைதப வுணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்.

தொல்காப்பியனார்.

1388. கூறிய குன்றினு முதனூல் கூட்டித்
தோமின் றுணர்த்த லெல்காப் பியன்ற
னாணையின் றமிழறிர் தோர்க்குக் கடனே.

இலக்கணத்தைத் தொகைவகைவிரிவிற் செய்த ஆசிரியர்.

1389. தொல்காப் பியப்புலவோர் தோன்ற விரித்துரைத்தார்
பல்காய னூர்வகுத்துப் பன்னினூர்—நல்யாப்புக்
கற்றூர் மதிக்குங் கலேக்காக்கை பாடினியார்
சொற்றூர்தந் நூலுட் டொகுத்து.

மார்க்கண்டேயனார்—காஞ்சி.

1390. மாயிரும் பரப்பகம் புதையப் பாம்பின்
ஆயிர மணிவிளக் கழலுஞ் சேக்கைத்
துணிதரு வெள்ளந் துயில்புடை பெயர்க்கும்
ஒளியோன் காஞ்சி யெளிதினிற் கூறின்
இம்மை யில்லே மறு[illegible]ம யில்லே
நன்மை யில்லே தீ[illegible]பில்லே
செய்வோ ரில்லேச் செய்பொரு ளில்லே
அறிவோர் யாரஃ திறிவுழி யிறுகென.

'வந்தடைகாலத்து நும்மைத் தாங்கியோர் யாவர்' என்ற பாண்டியற்குச் சங்கத்தார் கூறிய அகவல்.

1391. காலே ஞாயிறு கலங்கதிர் பரப்பி
வேலையுங் குளனும் வெடிபட ச் சுவறித்
தந்தையை மக்கண் முகம்பா ராமே
வெந்த சாகம் வெவ்வே றருந்திக்

(1388) பல்காப்பியம். (தொல். பொ. 649.) 592. (1389) யாப்.வி. 1, உரைசோ. அலங். 10, மேற். (1390) யாப். வி. 94. (1391) தமிழ்கா. 18. சோழமண். சத. 30.

[1]குணமுன தனையுங் கொடித்து வாழ்ந்த
கணவனை மகளிர் கண்பா ராமே
விழித்தவிழி யெல்லாம் வேற்றுவிழி யாகி
அறவுரை யின்றி மறவுரை பெருகி
உறைமறந் தொழிந்த வூழிகா லத்தில்
தாயில் லவர்க்குத் தாயே யாகவும்
தந்தையில் லவர்க்குத் தந்தையே யாகவும
இந்த [2]ஞாலத் திடுக்கண் டீர
வந்து தோன்றினன் மாநிதிக் கிழவன்
நீலஞ் சேரு [3]நெடுமால் போல்வன்
ஆலஞ் சேரி [4]யயிந்த னென்பான்
ஊருண் கேணி நீரே போலத்
தன்குறை கொல்லான் [5]பிறர்பழி யுரையான்
மறந்தும் பொய்யான் வாய்மையுங் குன்றான்
இறந்து போகா தெம்மையுங் காத்தான்
வருந்தல் வேண்டா வழுதி
இருந்தன மிருந்தன [6]மிடர்கெடத் தனமே.

திருவாலங்காட்டுத் திருநடங்கண்டீரோ என்று முனிவர் கேட்க வள்ளுவர் பாடியது.

1392. பூவி லயனும் புரந்தானும் பூவுலகைத்
தாவி யளந்தோனுந் தாமிருக்க—நாவில்
இழைநக்கி தானெருமை மேழையறி வேனே
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து.

மனைவியைப்பிரிந்தபோது வள்ளுவர் பாடியது.

1393. அடிசிற் கினியாளே யன்புடை யாளைப்
படுசொற் பழிநாணு வாளை—அடிவருடிப்
பின்றாங்கி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தா
லென்றாங்கு மென்க ணெனக்கு.

---

[1]குணமொரு நான்குங் கொடித்துற வாண்ட. [2]மாநிலத். [3]சேர்ந்த. [4]மயிந்த. [5]பிறர்வசை. [6]மிடர்கெடத் தனனே, மிடர்கெடுத் தின்னே, மிடர்களைர்ந் தனமே. (1392) தமிழ்நா. 19. (1393) தொல். பொ. 153. 'தலைவன் மனையறங்கண்டு கூறியதற்கு மேற்கோள்காட்டினர் நச்சினார்க்கினியர். "அடிசிற் கினியாளே யன்புடை யாளே, படிசொற் றவறுத பாவாய்—அடிவருடிப், பின்றாங்கி முன்னெழுதும் பேதையே போதியோ, என்றாங்கு மென்க னிரா' என்பது இக்காலத்துப்பாடம்.

கபிலர் பிறந்தபோது பாடியது.

1394. கெட்டிலே யிருப்பை வட்ட வான்பூ
[1]வாடா தாயிற் பீடைடைப் பிடியின்
கோடேய்க் கும்மே [2]வாடித் பைந்தலைப்
பரதர் மனைதொறு முணங்குஞ்
செந்தலை யிறவின் சேரேய்க் கும்மே.

[3]தெற்கில் வாயில் திறவாத பட்டிமண்டபத்தோர் பொருட்டு நக்கீரர் ஒருவன் வாழவுஞ் சாவவும்பாடி இன்னவாறுவேனச் சமித்தற்பொருட்டாய்வந்த மந்திரப்பாட்டான அங்கத வெண்பாக்கள்.

1395. ஆரிய னன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியி லகத்தியனு ராணையினுற்
செந்தமிழே [4]தீர்க்கசுவா கா.

1396. முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி—அரணிய
லானந்த வேட்கையான் வேட்கோக் [5]குயக்கோட
னுனந்தஞ் [4]சேர்கசுவா கா.

நக்கீரர்தலத்தைச்சுட்டி இறையனர் பாடியது.

1397. அங்கட் குலுங்க வரிவாளி னெய்தடவிப்
பங்கம் படவீரண்டு கால்பரப்பிச்—சங்கதனைக்

(1394) தமிழ்நா. 11. [1]வாடாதாயின், [2]வாடில் என்பவற்றைக்கூலுக்கி, "பீடைடைப்...கும்மே" என்றும், "பைந்தலைப்...முணங்கும்" என்றும் அடி பிரிப்பர்சிலர். [3]"தெற்கண்வாயில்திறவாகப்பட்டிமண்டபத்தார்பொருட்டு நக்கீரர் ஒருவன்வாழவும் ஒருவன்சாவவும் பாடிய மந்திரம்" என்பது பேராசிரியர் உரை. (1395–96.) தொல். செய். 178 நச்சினார்க்கினியருரை. [4]'தீர்க்கசுவா', [4]சேர்கசுவாவென்பன நச்சினார்க்கினியத்திற்கண்டபாடங்கள். [5]"நாடத்திற்குயக் கொண்டானைச் சாகப்பாடிய அங்கத வெண்பா"என்று முன்னதற்கும், 'குயக் கொண்டான் பிழைக்கப்பாடிய அங்கதவெண்பா' என்று பின்னதற்கும் தலைக்குறிப்புக்களும், குயக்கொண்டான் என்று மூலபாடமும் தமிழ்நாவலர் சரிதையிற் காணப்படுகின்றன. 'புகழ்ச்சிப்பொருளே யுறுபடைகூறிய பொருளானன்றத்திற்கு'ப் பின்னதை மேற்கோள் காட்டுவர் இலக்கணவிளக்க மூடையார் (சூத்திரம் 887).

கீர்மே லெனைதுக்குங் கேதே வென்னியை
ஆராயு முள்ளத் தவன்.

அவ் விறையனரிகூற்றுக்கு விடையாக நக்கீரனார் பாடியது.

1398. சங்கறுப்ப தெங்கள்குலர் [1]தம்பிரார்க் கேதுகுலம்
பங்கமுறச் சொன்னற் பழுதாமோ—சங்கை
அரிந்துண்டு வாழ்வோ [2]மரனேரின் போல
இரந்துண்டு [3]வாழோ மினி.

1399. ஊசி யறுகை யுறுமுத்தங் கோப்பனபோன்
மாசி யுகுபனிநீர் வந்துறைப்ப—மூசு
மூலைக்கோடு புல்லுதற்கொன் றில்லாதேன் காண்மோ
வீறக்கோடு கொண்டெரிக்கின் றேன்.

ஔவையார் ஏழிற்கோவை முனிந்துபாடியது.

1400. இருடூர் மணிவிளக்கத் [4]தேழிலார் கோவே
குருடேயு மன்றுநின் குற்றம்—[5]மருடூர்ந்த
பாட்டு முரையும் பயிலா தனவிரண்
டோட்டைச் செவியு முள.

ஒருவனைப்பாடி அவன் இகழ்ச்சிசொல்ல அப்போது
ஔவைபாடிய அங்கதம்.

1401. எம்மிகழ் வோரவர் தம்மிகழ் வோரே
எம்மிக [6]ழாதவர் தம்மிக ழாரே
தம்புக ழிகழ்வோ ரெம்புக ழிகழ்வோர்
பாரி யோரி ளள்ளி யெழினி
[7]ஆஅய் பேகன் பெருந்தோண் மலையனென்
றெழுவரு வொருவனு மல்லை யதனால்
நின்னை நோவ தெவனே

(1397—98.) தனிப்பாக்கள்; திருவாலவாயுடையார் திருவிளையாடல், 16, 23. [1]சங்கரனார்ச். [2]மரனரைப் போல. [3]வாழ்வ தில்லை. (1399.) யாப்.வி. 36; "ஊசி மூங்கையி லொளிர்முத்துக் கோத்ததுபோல், வீசும் பனிவர்த்து மெய்குளிர—மூசு, முலைத்தடங்கண் மாதே முழுவிளையேற் கின்று, நிலைக் கடையோ நிச்சயித்தாய் நீ" என்ற பாடத்துடன் இவ்வெண்பா தமிழறியும் பெருமான்கதையிற் காணப்படுகின்றது. (1400) தொல். செய். 125, பேரா. ரச். உரை; 159, ஷை; தமிழ்நா. 32; [4]நிமிழிசையார். [5]மருடேயும். (1401.) தொல். செய். 125, 159; பேரா. ரச். உரை; தமிழ்நா. 42. [6]ழாரவர், [7]ஆயே.

[1]அட்டார்க் குதவாக் கட்டி போல
நீயு முளையே நின்னான் னோர்க்கே
யாணு முளனே [2]நிம்பா லோர்க்கே
குருகினும் வெளியோய் தேவத்துப்
பருகுபா லன்னவென் சொல்லுகுத் தேனே.

புல்லறிவாளர் சிலர் தங்களைப் பாடச்சொன்னபோது ஔவை பாடிய அகவல்.

1402. மூவர் கோவையு மூவிளங் கோவையும்
பாடிய வென்றன் பனுவல் வாயால்
எம்மையும் பாடெ வென்றனிர் நும்மையிங்
கெங்ஙனம பாடுகென் யானே வெங்கட்
களிறுபடு செங்களங் கண்ணிற் காணீர்
வெளிறுபடு நல்யாழ் விரும்பிக் கேளீர்
புலவர் வாய்ச்சொற் புலம்பலுக் கிரங்கீர்
இலவு வாய்ச்சிய விளமூலை புல்லீர்
அவிச்சுவை யல்லது தமிழ்ச்சுவை தெருளீர்
உடீஇ முண்ணீர் கொடீஇர் கொள்ளீர்
ஒவ்வாக் கானத் தியர்மரம் பழுத்த
துவ்வாக் கனியெனத் தோன்றிய நீரே.

திருக்கோவலூரில் அங்கவை சங்கவை என்ற பெண்கள் ஔவைக்கு இலக்கறியிட்டபோது பாடியது.

1403. வெய்தாய் நறுவிதாய் வேண்டனவுந் தின்பதாய்
நெய்தா னளாவி நிறையிட்டுப்—பொய்யே
அடகென்று சொல்லி யமுதத்தை யிட்டான்
கடகஞ் செறியாதோ கைக்கு.

சிற்றடைகொடுக்க அப்போது அவர் பாடியது.

1404. பாரி பறித்த பறிபும் பழையனூர்க்
காரியன் நீந்த [3]களாக்கோலும்—சேரமான்
[4]வாராயோ வென்றழைத்த வார்த்தையு மிம்மூன்றும்
நீலச்சிற் [5]றூடைக்கு நேர்.

---

[1]மூட்டாற் றூக்குறைக் கட்டி போல; முட்டார்க் குறவாக் கட்டி போல; உறுவட் டாற்றூக் குறைக்கட்டி போல; முல்வாட் டாட்டாக் கட்டி போல. [2]லெம்பா லோர்க்கே. (1402) தமிழ்நா. 43. (1403) ஷே. 44. (1404) ஷே. 45; தொண்டை. சத. 36. [3]கழைக்கோலும், களாக்கொட்டும், களாக்கோலும். [4]வாரா யெனவழைத்த வாய்மையும்.

பழையனூர்க் காரிக்கு ஆடுவாங்கிக்கொடுக்க வாதவன், வந்தவன், யாதவன் என்ற மூவரிடத்தும்போய், அவர்கள் கொடாதபடியினாலே சோமாலிடத்துப்போய் ஒளவை சொல்லிய வெண்பா.

1405. வாதவர்கோன் பின்னையென்னுன் வந்தவர்கோ னுனையென்னுன்
யாதவர்கோன் யாதொன்று மில்லையென்னுன்—ஆதலால்
வாதவர்கோன் பின்னையினும் வந்தவர்கோ னுனையினும்
யாதவர்கோ னில்லை யினிது.

அப்பொழுது சோன் பொன்னுக் கொடுக்க அவர் பாடியது.

1406. [1]சிரப்பான் மணிமுடிச் சேரமான் றன்னைச்
[2]சுரப்பாடு கேட்கவே பொன்னுடொன் றீந்தான்
இரப்பவ ரென்பெறினுங் கொள்வர் கொடுப்பவர்
தாமறிவர் தங்கொடையின் சீர்.

அங்கவை சங்கவையைத் தெய்வீகனுக்குக் கல்யாணம்பண்ணி வைக்கிறபோது ஓலமெழுத விநாயகனை அழைத்த வெண்பா.

1407. ஒருகை யிருமருப்பு மும்மதத்து நால்வாய்க்
கரியுருவக் கங்காளன் செம்மல்—கரிமுகவன்
கண்ணுல வோலை கடிதெழுத வாரானேற்
றண்ணுண்மை நீர்ப்பன் சபித்து.

சோனுக்கு விநாயகன் எழுதப் பாடியவெண்பா.

1408. சேரலர்கோன் சேரல் செழும்பூர் திருக்கோவ
லூரளவுந் தான்வருக வுட்காதே—பாரிமகள்
அங்கவையைக் கொள்ள வரசன் மனமியைந்தான்
[3]சங்கியா தேவருக தான்.

சோழனுக்கு எழுதப் பாடியது.

1409. புகார்மன்னன் [4]பொன்னித் திருநாடன் சோழன்
தகாதென்று தானங் கிருந்து—நகாதே
[5]தகுக வருக கடிக்கோவ லூர்க்கு
[6]விடியல் பதினெட்டா நாள்.

(1405) தமிழ்நா. 23; தனிப்பாடற்றிரட்டுமுதலிய பிற்பட்டநூல்களிற் பாடம் பலபடியாகவுள்ளன. (1406) ஷெ. 24. [1]சிரப்பார் மணிமவுலி. [2]சுரப்பா டியான்கேட்கப். (1407) ஷெ. 46. (1408) ஷெ. 47. [3]சங்கவையை யுங்கூடத் தான்' என்பது தனிப்பாடற்றிரட்டிற்கண்டபாடம். (1409) ஷெ. 48. [4]பொன் னிப் புனலுடன். [5]கடிதின். [6]விடியப்.

பாண்டியனுக்கு எழுதப் பாடியது.

1410. வையைத் துறைவன் மதுராபுரித் தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே—தையற்கு
வேண்வேன கொண்டு விடியல்பதி னெட்டாநாள்
ஈண்டு வருக வியைந்து.

பாரீமகள் திருமணத்துக்கு முவரும் வந்தபோது பனந்துண்டத்தைப் பாடியது.

1411. திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின் மூர்மணப் பந்தரிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்துக்
கொங்கிற் குறத்தி குவிமுலை போலக் குரும்பைவிட்டு
தங்குக்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து தனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே.

அந்த மணத்திற் பெண்ணையாற்றைப் பாடியது.

1412. முத்தெறியும் பெண்ணை முதுநீ [1]ரதுதவிர்ந்து
தத்திவரு நெய்பா றலைப்பெய்து—குத்திச்
செருமலைதெய் வீகன் றிருக்கோவ லூர்க்கு
[2]வருமளவிற் கொண்டோடி வா.

வருணனைப்பாடியது.

1413. கருணையா லிந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே மாமலையன் கோவற்—[3]பெருமணத்தி
[4]னன்மாரி தாழ்க்கொண்ட நன்னீ ரதுதவிர்த்துப்
பொன்மாரி யாகப் பொழி.

ஔவையார்

ஒருநாட் பசியினலே ஒருவன்மனையிற்போக அவன் 'சோறில்லைபோ
னன்று சொன்னபின்பு, அவன் மனைவி உபசாரஞ்சொல்லி
அன்னமிட அப்போது சொல்லிய வேண்பா.

1414. அற்ற தலையி லருஞ்சு றலையதனைப்
பற்றித் திருகிப் பறியேனே -வற்றல்

(1410–1411) தமிழ்நா. 49, 50. (1412) ஷை. [1]ரதுதவிர்த்தி. [2]வருமள வுங். (1413) ஷை. 52. [3]நீருமணத்தி. [4]முன்மாரிபெய்யுமுதுநீ ரதுதவிர்த்துப். (1414) ஷை. 27; இப்பாட்டுப் பிற்பட்ட பதிப்புக்களிற் பாடபேதங்கொண் டனது.

மரமனையா ளுக்கிம் மனையானை யீத்த
பிரமனையான் காணப் பெறின்.

ஒரு குறவன்பலாவைப் பகைவர் வெட்டிப்போட
அப்பலா வனா (அவர்) பாடியது.

1415. உரிய வாளாற் குறைபட்ட கூன்பலா
ஓரிலையாய்க் கோம்பா யுயர்மரமாய்ச்—சீரிய
வண்டுபோற் கொட்டையாய் வன்காயாய்ப் பின்பழமாய்ப்
பண்டுபோ னிற்கப் பணி.

அப்போது குறவன் நாழித்தினை கொடுக்க வாங்கிக்கொண்டு
சோழனிடத்தில் வந்து பாடிய வெண்பா.

1416. கூழைப் பலாத்தழையப் பாடிக் குறச்சிறார்
மூழக் குழக்குத் தினைதந்தார்—சோழாகேள்
உப்புக்கும் பாடிப் புளிக்கு மொருகவிதை
ஒப்பிக்கு மென்ற வுளம்.

சோழன் ஒருதுகிலைப்பார்த்துப் பாராக்காயிருப்ப
அப்போது பாடிய வெண்பா.

1417. நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினு நூற்சீலை
காற்றிங்க டன்னிற் கிழிந்துபோம்—மாற்றலரைப்
பொன்றப் புறங்கண்ட போர்வே லகளங்கா
என்றுங் கிழியாதென் பாட்டு.

பந்தனென்ற வணிகனைப் பாடியது.

1418. யானவ்வை யென்றிரந் தேத்தினேன் மற்றவனும்
எனவ்வே டேயென் றிரங்கிலன் —நானுங்கேள்
மன்னும் புகார்வணிகன் மாநாகன் பந்தனெனும்
பொன்னினருள் பெற்றேனிப் போது.

ஔவையார் சோனைக்கண்டு பாடிய கலித்துறை.

1419. மதுர மொழிதல் லுமையாள் கணவன் மலரடியை
முதிர நினையவல் லார்க்கரி தோமுதில் போன்முழங்கி
அதிர வருகின்ற யானையுந் தேரு மதன்பின்வருங்
குதிரையுங் காதங் கிழவியுங் காதங் குலமன்னனே.

(1415—16) தமிழ்நா. 28, 29. பின்னூல்களிற் பாடபேதங்கள் உண்டு.
(1417) ஷே 53. (1418) பந்தனந்தாதி. 22. (1419) தமிழ்நா. 56.

சோமானைப் பிரிந்தமின் பாடிய வேண்மா.

1420. சிறுக்கீரை வெங்வடகுஞ் சேதாவி னெய்யும்
மறப்படாத் தண்டயிரு மாந்தி—வெறுத்தேனே
வஞ்சிக்குங் கொற்கைக்கு மன்னவனேற் பித்தானே
கஞ்சிக்கும் புற்கைக்குங் கை.

சோழனைக்கண்டு கூறியது.

1421. காலெந்தே லெந்தேன் கடுகை வழிநடந்தேன்
யான்வந்த தூர மெளிதன் று—கூனன்
கருந்தேனுக் கங்காந்த காவிரிசூழ் நாடா
இருந்தேனுக் கெங்கே யிடம்.

இடைக்காடர்.
(ஊசிமுறிப்பாட்டு).

1422. வெறிகமழ் [1]தண்புறவின் வீங்கி யுகளும்
மறிமுலை யுண்ணுமை வேண்டிப்—பறிமுன்கை
அஉ [2]அறியா வறிவி லிடைமகனே
[3]கொ அலையல் நின்னுட்டை நீ.

1423. மன்றலங் கோதை மலர்மலர் தஞ்சுவஞ்
சென்று திரியு மிடைமகனே—சென்று
மறியாட்டை யுண்ணுமை வன்கையால் வல்லே
அறியாயோ வண்ணுக்கு மாறு.

1424. அற்றங் கரையி னருகிருக்கு மாமாத்திற்
காக்கை யிருந்து கஃகஃகெனக்—காக்கைதனை
ஏய்யக்கோ லில்லாம லிச்சிச்சிச் சென்றானே
வையக்கோ ஞர்த்தம் மகன்.

1425. பற்றிப் பலகாலும் பான்மறி யுண்ணுமை
கொ அலையல் நின்னுட்டை நீ.

அதிகமானைச் சிறப்பெய்திய பெரும்பாக்கனை மதியாது
சோமான் முனைப்படை நின்றானைக் கண்டு
அரிசில்கிழார் கூறியது."

1426. மெய்ம்மலி மனத்தி னம்மெதிர் நின்றோன்
அடர்பினைப் பொலிந்த சுடர்விடு பாண்டித்

(1420) தமிழ்நா. 57. (1421) தனிப்பா. (1422) தொல். செய். 7. பேரா. நச்; யாப். வி. 6; 94. [1]தண்ணிலம்பின். [2]மறியா. [3]கொ அலை. (1423) தமிழ்ப் புலவர்சரி. 29. (1424) தனிப்பா. (1425) யாப். வி. 58; இந்து ஊசிமுறிப் பாடற் பகுதிபோலும். (1426) தொல். புறத். 68, நச்; தகடூர்யாத்திரைப்பாட்.

கையிகர் தமருர் தையணற் புரவித்
தலையவிழ் கண்ணி யினையோன் சிறின்
விண்ணுயர் நெடுவரை வீழ்புயல் கடுப்பத்
தண்ணறுங் கடாஅ முமிழ்ந்த வெண்கோட்
டண்ணல் யானை யெறிந்த லொன்றே
மெய்ம்மலி யுவகைய னம்மருங்கு வருதல்
கடியமை கள்ளுண் கைவல் காட்சித்
தடிய ஞெண்க ணேக்கிச் சிறிய
கொலைமொழி மின்னுச்சிதர்ந் தனையதன்
வேறிரித் திட்டு நகுதலு நகுமே.

பெரும்பாக்கனைப் போரிற்கண்டு பொன்முடியார் கூறியது.

1427. கார்த்தரும் புல்லணற் கண்ணஞ்சாக் காலைதன்
தார்ப்பற்றி யேர்தரு தோணேக்கித்—தார்ப்பின்னர்
ஞாட்பினுள் யானைக் கணநோக்கி யானைப்பின்
தேர்க்குழா நோக்கித்தன் மாநோக்கிக்—கூர்த்த
கணைவரவு நோக்கித்தன் வேணேக்கிப் பின்னைக்
கினைவனை நோக்கி நகும்.

பொன்முடியார் தகுதிதன் தன்மைகூறியது.

1428. மொய்வேற் கையர் மூரண்சிறர் தொய்யெனை
வையக மறிய வலிதலைக் கொண்ட
தெவ்வழி யென்றி யியரூர் மார்ப
வெவ்வழி யாயினு மவ்வழித் தோன்றித்
தின்கூ ரெஃகின் வயவர்க் காணிற்
புண்கூர் மெய்யி னுராஅய்ப் பகைவர்
பைந்தலை யுதைத்த மைந்துமலி தடக்கை
யாண்டகை மறவர் மலிந்துபிதிர்
நீண்ட நகாது வெந்துறை யாவே.

பொன்முடியார் பாட்டு.

1429. மறனுடை மறவர்க் கேறவிடு னின்றி
நெய்யோ டைபவி யப்பியெல் வாயும்
வர்நிரப் பறவை யியற்றின சிறீஇக்
கல்லுங் கவணுங் கடிவிசைப் பொறியும்
வில்லுங் கணையும் பலபடப் பரப்பிப்

(1427—29) தொல். புறத். 68, 67. நச்; தகுதியாதிரைப்பாட்டு.

பந்தும் பாவையும் பசுவரிப் புட்டிலும்
என்றிவை பலவுஞ் சென்றுசென் றெறியும்
மூன்றை மகளிரை யியற்றிப் பின்றை
எய்பெரும் பகழி வாயிற் றூக்கிச்
சுட்டல் போயின் ரூயினும் [1]வட்டத்
தீப்பாய் மகளிர் திகழ்நலம் பேர
நோக்குநர் நோக்குநர் நொந்துகை விதிர்க்கும்
தாக்கருந் தானை யிரும்பொறை
பூக்கோட் டண்ணுமை கேட்டொறுங் கலுழ்ந்தே.

"சோமான், பொன்முடியாரையும் அரிசில்கிழாரையும் நோக்கித் தன்படைபட்டதன்மை கூறக்கேட்டோற்று அவர் கூறியது.

1430. கலையெனப் பாய்ந்த மாவு மலையென
மயங்கம ருழந்த யானையு மியம்படச்
சிலையலைத் திலேந்த வயவரு மென்றிவை
பலபுறங் கண்டோர் முன்ன ளினியே
அமர்புறங் கண்ட பசும்பூண் வேந்தே
மாக்களி றுதைத்த கணைசேர் பைந்தலை
மூக்கறு நுங்கிற் றூற்றயற் கிடப்பக்
கலையாக் கழற்காற் கருங்க ணைவர்
உருகெழு வெகுளியர் [2]செறுத்தன ரார்ப்ப
[3]மிலேபோ யின்று நாளை நாமே
உருமிசைக் கொண்ட மயிர்க்கட்
டிருமுர சிரங்க வூர்கொள் குவமே.

பத்தினிக்கீசெய்யுள்.

1431. கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க
ஒண்செங் குருதியி னெஞ்[4]கிடப்பதே—கெண்டிக்
[5]கெழுதகை யில்லேன் கிடந்தூடப் பண்ணுள்
அழுதகண் ணீர்துடைத்த வை.

இளங்கோவடிகளைப் பற்றியவை.

1432. நீடிருங் குன்ற கிழல்காலு மண்டிலத்திக்
கோடுகோ டாய்த்தோன்றுங் கொள்கைத்தே—கூடலார்

---

[1]வீட்ட (1430) தொல். புறத். 67, நச்—தகரேர்யாத்திரைப்பாட்டு (?) [2]செறுத்தெழுந்தார்ப்ப. [3]மிலேயேறுபோ, எறுபோ.(1431) தொல். செய்.63, பேரா, நச்; யாப். லி. 93. [4]கிடந்தே. [5]கெழுதகைகமை.

கொண்டாடுஞ் செஞ்சொற் குடக்கோ முனிசேரன்
தண்டா வுரைமுத் தமிழ்.

1433. நலத்தகு நால்வரென் றோதிய நான்முகத் தோன்படைத்த
குலத்தகு காரு வணிகர் குலபதி கோத்ததமிழ்ப்
புலத்தகு காரு ருறைபதி பூம்புகார் போற்றநின்ற
சிலப்பதி காரஞ்செய் தானெடுஞ் சேரர் சிகாமணியே.

*"" பொய்கைக் கதத்தயானைச் சூழாசிரியர் பாடியவை. ""

1434. நறுமாந் தளிர்மேனி நாளுருப் பிள்ளை
உறுமாறு கொள்ளின் வருந்தும்—பெறுமாறு
வெண்ணெ யுருக்கி நறுநெய் கொடித்தேனும்
எண்ணெய்சொண் டப்புந் தலை.

1435. என்னைநீ காய லெரிகதிரோ யான்பயந்த
பொன்னங் கழலான்பின் போகிய—மின்னைக்
கருதலரே யாகிக் கருணைகொன் றிட்ட
பருதிவேற் பாண்டவரைக் காய்.

1436. செய்தமோ பாண திருவி லுடனேந்திப்
பொய்தீர் நெடுந்தேர் புகுதுக—மெய்யே
பலமுறை யாலிர வென்மா(?) மகிழார்
குலமுறையாற் சென்றான் குறை.

(ஷ ஆசிரியர் வைத்த விரதம்)

1437. தேருடைத்தாய்க் காமர் திணைமருதாய்த் திண்மா
மோரடியுட் பத்திட னெற்றுப்பேர்த்—தேருடைய
பண்பாவு தொல்சீர் மறமன்னர் தம்மூன்னல்
வெண்பா வுரைப்பான் கவி.

பூதத்தாரும் காரைக்காற் †பேயாரும் பாடியது.

1438. கறைப்பற் பெருமோட்டுக் காடி [1]கிழவோட்
கரைத்திருந்த [2]சார்தைத்தொட் டப்பேய்
[3]மறைச்க வறியாது மற்றுர்ந்தன் கையைக்
குறைக்குமான் கூர்ங்கத்தி கொண்டு.

(1432-33) சிலப். இரண்டாம்பதிப்பு. பக். 32. *பொய்கைக் கதயானைச் சூழாசிரியர். (1434-37) யாப். வி. 93. † பேயன்மையாரும். (1438) யாப். வி. 93; வீரசோ. யாப். 21, மேற். [1]கிழவோட்கொத். [2]சார்துகொண். [3]மறைக்குமா காணுது வன்பேய்தன் கையைக்.

பாக்கனூர், பறவடிழுன்றனே தாமோதரடி பாடியது.

1439. ஈயற் புற்றத் தீர்ம்புறத் திறுத்த
கற்றேய்த் தெடுத்த படிவப் பார்ப்பான்
நன்னுட் பூத்த [1]நாகிள வேங்கை
மலர்கொய வுறுவதென் மனமவண் மாட்டே.

காரியாசான்.

1440. மல்லிவர்தோண் மாக்காயன் மாணுக்கன் மாநிலத்துப்
பல்லவர் நோய்நீக்கும் பாங்கினுற்—கல்லா
மறுபஞ்சந் தீர்மழைக்கை மாக்காரி யாசான்
சிறுபஞ்ச மூலஞ்செய் தான்.

கல்லாடர்.

1441. கல்லாடர் செய்பனுவற் கல்லாட நூறு நூல்
வல்லார்சங் கத்தில் வதிந்தருளிச்—சொல்லாயும்
மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டிமுடி
தாமசைத்தார் நூறு தரம்.

1442. வாய்ந்தபொருட் கொருபொருளாய்க் கலிவாணிக்
கருள்கொழிக்கு மனமாய்ப் பாரில்
ஓய்ந்தமுது தமிழ்வடித்துக் கல்லாட
மெனவொருநூ லருளி யிட்டார்
தேய்ந்தமதிச் சடைப்பரமர் கருணைபெறச்
சங்கமுது செல்வர் வாழ்த்தக்
காய்ந்தபுல னடக்கியுயர் பெருஞானம்
பழுத்தருள்கல் லாட னீரே.

பொய்யாமொழிப்புலவர்.

1443. வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே
ஆய்த்த வருகா ணிவ்வயலிற்—காய்த்த
கதிரைமா ளத்நின்ற காளிங்க னேறுங்
குதிரைமா ளக்கொண்டு போ.

(1439) யாப். வி. 96;—இப்பாட்டின் முதலடி அகநானூற்று 8 ம் பாட்டில் உள்ளதாகவும், இரண்டாமடி முல்லைப்பாட்டின் 37 -ம் அடியாகவும், மூன்றுமடி அகநானூற்று 85-ஆம் பாட்டில் உள்ளதாகவும் உள்ளமை காண்க. [1]பொன்னினர். (1440) சிறுபஞ்சமூலப் பாயிரம். (1441-42) கல்லாடம்—பாயிரம். (1443) சமிழ்நா. 61.

பொய்யாமொழியார் ஆசிரியர் பாடியது.

1444. பொதியி லகத்தியனுய்ப் பொய்யா மொழியாய்
[1]அதிகை யமண்பா[க்க]க் கீழாய்த்—துதிபெருகு
செங்காட்டுக் கோட்டந் துறையூ ரெனுந்தலத்துச்
சங்காத்தங் கொண்டிருப்பாய் தான்.

முருகவேளை அவர் பாடியது.

1445. [2]பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலும்
மானவேன் முட்டைக்கு மாறுய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு.

முருகவேள் பொய்யாமொழியாரைப் பாடியது.

1446. விழுந்ததுளி யந்தரத்தே வேமென்றும் வீழ்ந்தால்
[3]எழுந்த சுடர்சுடுமென் றேறங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வளையும் [4]போயினளே
பொய்யா மொழிப்பகைஞர் போல்.

நாலுபேருக்குக் கண்தெரிய அவர் பாடிய வெண்பா.

1447. கூத்தாண் முகத்திரண்டு கூர்வேல்கள் கூத்தாடன்
மூத்தாண் முகத்தின் முழுநீலம்—மூத்தாடன்
அன்னே முகத்தி லரவிந்த மன்னேதன்
அன்னே முகத்திலிரண் டம்பு.

காளையார்கோவில் தேவடியார் எழபதுபேரும் எழபதினாயிரம் பொன்கொடுக்க அவர் பாடிய வெண்பா.

1448. வாச மலர்மடந்தை போல்வார்வண் கானப்பேர்
ஈசன்றன் மக்க ளெழுபதின்மர்—தேசத்
திரவலர்மே னீட்டுவர்கை யீண்டுலகங் காக்கும்
புரவலர்மே னீட்டுவர்பொற் கால்.

(1444) தமிழ்நா. 62. [1]சிதைவில் புலவர் சிறப்பாய். இவ்வெண்பாவின் இரண்டாமடியின் சுத்தபாடம் தெளியக்கூடவில்லை. (1445.) ஷை. 70. [2]பொன்பாவுங் கன்னிப் பொறிப்புறவே பேதி லன்பின், என்பாவை போக விசைந்தனளே. (1446.) ஷை. 5. [3]எழுந்து சுடர்விடுமென். [4]போயினளே. (1447.) ஷை. 72. (1448.) ஷை. 75.

சங்கப்பலகையிற் சிலாநுபமான சங்கத்தாரை அவர் பாடிய வேண்பா.

1449. உங்களிலே யாளெருவ ளெப்பேளே வொவ்வேளே
திங்கட் குலனறியச் [1]செப்புங்கோள்—சங்கத்துப்
பாடுகின்ற [2]மூத்தமிழென் பன்னூலு மேற்குமோ
ஏடவிழ்தா ரேழெழுவீ ரின்று.

பாண்டியன்முன் சங்கப்பலகை மிதப்ப அவர் பாடிய வெண்பா.

1450. பூவேந்தர் முன்போற் புரப்பா ரிலையன்றிப்
பாவேந்த ருண்டென்னும் பான்மைதான்—மாவேந்தன்
மாற னறிய மதுரா புரித்தமிழ்ச்சார்
வீறணையே சற்றே மித.

பாண்டியன் 'நீர் நல்ல புலவர்' என்றபோது அவர் பாடியது.

1451. அறமுரைத் தானும் புலவன்முப் பாலின்
திறமுரைத் தானும் புலவன்—குறுமுனி
தானும் புலவன் தரணி பொறுக்குமோ
யானும் புலவ னெனின்.

சீநக்கன் கட்டீச்சோறுகொடுக்கப் பாடியது.

1452. அளிகொ ளுந்தொடை யன்னர சைக்குமன்
ஒளிகொள் சீநக்க னின்றுவந் திட்டசோ
புளியஞ் சோறுமென் புந்தியிற் செந்தமிழ்
தெளியும் போதெலாந் தித்தியா நிற்குமே.

கண்டியூர்வண்ணத்தியைப் பாடிய வெண்பா.

1453. தூசுதூ சாக்குவார் பாவை சுடர்த்தொடிக்கை
ஆலொக் கண்டியூ ராணைங்கு—வாசமலர்க்
கண்ணைங்கை கொங்கைமுகங் காலுங் கடிக்கமலம்
கண்ணைங்கை கொங்கைமுகங் கால்.

பொய்யாமொழியார் பாதிபாட ஒளவையார் பாதிபாடிய வெண்பாக்கள்.

1454. தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணு வதிஞ்சோழ மண்டலமே—பெண்ணுவாள்

(1449.) தமிழ்நா 64. [1]செப்புங்கள். [2]மூத்தமிழ்க்கென் பைந்தமிழு மொக்குமோ. (1451.) ஷை. 73. (1452-53) ஷை 76. 69. (1454) ஷை. 25; இஃது ஒளவை தனியே பாடியதென்று சோழமண்டலசதகமும் (44), கம்பர்பாடியதென்று பிற்காலத்துப் புத்தகங்களும் கூறும்.

[1]அம்பர்ச் சிலம்பி யரவிந்த மேமலராஞ்
செம்பொற் சிலம்பே சிலம்பு.

1455. பத்தம்பிற் பாதி யுடையா ளிரண்டம்பிற்
கொத்தம்பி யென்பாள்பாற் கோட்புக்குச்—சுத்தப்
பசும்பொ னரவல்குற் பாவையர்க்குத் தோற்று
விசும்பிடைவைத் தேகினென் வில்.

புலவன்றன் உடல்வெடிக்கப் பொய்யாமொழியார் பாடியது.

1456. கோதில் [2]குலமங்கை குலோத்துங்கச் சாவகனென்
றோதினேன் றன்னை யொறுப்பதனுன்—மாது
[3]துலையாத முத்து வடந்தூக்கி ஞாளாம்
வீளையாடாச் செப்பிரண்டின் மேல்.

தமக்கு அபவாதம்வந்தபோது அவர் பாடியது.

1457. தேரையார் [4]தெங்கிளநீ ருண்ணூர் பழிசுமப்பர்
நாரியார் தாமறிவர் நாமவரை நத்தாமை
[5]கோரைவாய் பொன்சொரியுங் [6]கொற்றவன் றன்கண்டி
பூரைவாய் மூட [7]வுரையறிந்தோ மில்லையே.

பொய்யாமொழியார் சீநக்கருடன் தீப்புகுந்த பாட்டு.

1458. அன்றுநீ [8]செல்லக் கிடவென்று யாருயிர்விட்
டின்றுநீ வாணுலக மெய்தினுய்—[9]வென்றிதிகழ்
[10]மாநக்க பூண்முலையார் மாரனே தென்னரசூர்ச்
சீநக்கா [8]செல்லக் கிட.

பொய்யாமொழியார் தீப்புகுந்தது கேட்ட ஏழூர்ச் சிற்றரசர் தீப்புகுக செய்தியறிந்து முன்னே நின்று பாடிய வெண்பா.

1459. சிற்றரசூர் பேரரசூர் தென்மாவை பூத்துருத்தி
கொத்தமலி கண்டி குருகாவூர்—இத்தனையும்

---

[1]'அம்பொற்சிலம்பி யரவிந்தத் தாளணியும்' என்று தனிப்பாடற் றிரட்டு முதலியவற்றிற் காணப்படினும், பழைய சுத்தபாடம் அஃதன்று. (1455) தமிழ்நா. 26. (1456) ஷெ. 75. [2]குலமங்கைக். [3]துலையாது முத்து வடந் தூக்கினு ளாரம், வீளையாடு. (1457) ஷெ. 74. [4]செவ்விளநீர். [5]கோரை வாய்ப். [6]கொற்றவன்றன் கண்டியெனும். [7]வுரையறிவா ரில்லையே (தஞ்சைச் சரச்சுவதிமால்—பிரதி). (1458) ஷெ. 76. [8]செல்லக்கட. [9]நன்றுநன்று. [10]வானக்க; மாஞெக்கும் வேல்வீழியார். (1459) சோழமண். சத. 55, மேற்.

[1]வாய்ப்பாய மாந்தருளு மன்னுகுடி யத்தனையுர்
நீப்பரிய்ந்த நல்ல திறம்.

பழையனூரார் பழிதீர்ந்த நீக்குழி அவியாதேரிய
முவேந்தரும் வந்துபார்த்துப் பாடியன்.

(சேரன்)

1460. யாவரே காராளர் யாவ ரிணையாவார்
நாவலோ நாவலோ நாவலோ—கோவைப்
பொருப்பா [2]லளித்தார்க்குப் போதுமே யுண்மை
நெருப்பா [2]லளித்தார்க்கு நேர்.

(சோழன்)

1461. எல்லே பலகடந்திட் டெங்கும் புகழ்பூத்திச்
தொல்லே மனுக்காகத் தோன்றிற்றே—கொல்லே
வழியிலொரு பேய்கின்று வஞ்சனையாற் செய்த
குழியிலெழு செந்தீக் கொழுந்து.

(பாண்டியன்)

1462. பிழைத்தாரோ காராளர் பேய்மகள்சொற் கேட்டுப்
பிழைத்தார்க ளல்லர்பிழை தீர்த்தார்—பிழைத்தார்க
ளெல்லாருங் காண வெரியகத்தே மூழ்கினர்
எல்லாரு மின்று முளர்.

சத்திமுற்றப்புலவர்

"சத்திமுற்றத்தில் ஒருபுலவன் பாண்டியன்மதுரைக்குப்போகப்
பாண்டியன்வாசற்புலவர் வாசல்விடாமல் மறிக்க வுளரில்
அம்பலத்திற்கிடந்தான் பாடியது"

1463. நாராய் நாராய் செங்கா ஞராய்
பனம்படு பணையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கா ஞராய்
நீயுமுன் பெடையும்
தென்றிசைக் குமரி யாடி வடதிசைக்
காவிரி யாட வேகுவி ராயின்
சத்திமுற் றத்து வாவியிற் சென்று

---

[1]வாய்ப்பாய மார்தர்களும்; வாய்ப்பா யமர்ந்தருளும். (1460–1462) தமிழ்நா. 151—153. [2]லளித்தார்க்கு. (1463) ஷெ. 168; சோழமண். சத. 65, மேற். இக்காலத்துப் பாடபேதங்கள்: பல இதனிடை யுண்டு.

நினைசுவர்க் கூரைக் கினைகுரற் பல்லி
வரவுபார்த் திருக்கு மினைவியைக் கண்டெங்
கோமான் வழுதி கூடன் மன்றத்
தாடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலுறத் தழீஇ
[1]அலகுநிறர் தன்ன பல்லின ளுகிப்
பேழைசெய் பாம்பென வுயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டன மெனுமே.

பொன்பற்றிகாவலன்.

1464. மிக்கவன் போகியின் மேதக் கிருந்தவன் மெய்த்தலத்தாற்
றொக்கவன் யார்க்குந் தொடரவொண் ணுதவன் றாயனைத்
தக்கவன் பாதந் தலைமேற் புனைந்து தமிழுரைக்கப்
புக்கவன் பைம்பொழிற் பொன்பற்றி மன்புத்த மித்திரனே.

1465. ஆயுங் குணத்தவ லோகிதன்பக்க லகத்தியன்கேட்
டேயும் புவனிக் கியம்பிய தண்டமி ழீங்குரைக்க
நீயு மூனையோ வெனிற்கரு டன்சென்ற நீள்விசும்பில்
ஈயும் பறக்கு மிதற்கென் கொலோசொல்லு மேந்திழையே.

1466. நாமே வெழுத்துச்சொ னற்பொருள் யாப்பலங் காரமெலும்
பாமேவு பஞ்ச வதிகார மாம்பரப் பைச்சுருக்கித்
தேமே வியதொங்கற் றேர்வீர சோழன் றிருப்பெயராற்
பூமே லுரைப்பன் வடநூன் மரபும் புகன்றுகொண்டே.

1467. ஈண்டுதூல் கண்டா னெழின்மாலைக் கூற்றத்துப்
பூண்டபுகழ்ப் பொன்பற்றி காவலனே—மூண்டவரை
வெல்லும் படைத்தடக்கை வெற்றிபுனை [2]வீரன்றன்
சொல்லின் படியே தொகுத்து.

பெருந்தேவன்.

(வீரசோழிய உரைகாரர்.)

1468. தடமார் தருபொழிற் பொன்பற்றி காவலன் முன்மொழிந்த
படிவீர சோழியக் காரிகை நூற்றெண் பஃதொடொன்றின்
நிடமார் பொழிப்புரை யைப்பெரும் தேவன் செகம்பழிச்சக்
கடலுல கேமொழிந் தான்றமிழ் காதலிற் கற்பவர்க்கே.

---

[1]அலகுநிறர். (1464–1468) வீரசோ. பாயிரம். (1467) ஷே. அலங். 89.
[2]மாரன்றன். (1468) ஷே. மூடிவு.

செயங்கொண்டார்

"செட்டிகள்மேல் இசையாயிரம் பாடியபோது செக்கார் 'புகார் தங்கட்கு ஊர்' என்று பாடிச்சொல்லப் பாடியது."

1469. ஆவதுஞ் செக்கே யளப்பதுவு மெண்ணெயே
கூவதுஞ் சக்கிலியக் கோதையே—நீபுகழ்க்
கச்சிச்செப் பேட்டிற் கணிக்குங்காற் செக்கார்தாம்
உச்சிக்குப் பின்புகா ரூர்.

"அபயன்மேற் கோபம் வந்தபோது (அவர்) பாடியது".

1470. காவல ரீகை கருதுங்காற் காவலர்க்குப்
பாவலர் கல்கும் பரிசொவ்வா—பூவினிலே
யாகாப் பொருளை யபயனளித் தான்புகழா
மேகாப் பொருளளித்தேன் யான்.

கூத்தரீவராலாறும், அவர் காங்கயன்மேல்
நாலாயிரக்கோவை பாடியதும்.

1471. புதவைச் சடையன் பொருந்துசங் கரனுக்
குதவித் தொழில்புரி யொட்டக் கூத்தனைக்
கவிக்களி றுகைக்குங் கவிராட் சதனெனப்
புவிக்குயர் கவுடப் புலவனு மாக்கி
வேறுமங் கலநாள் வியர்துகாங் கயன்மேற்
கூறாா லாயிரக் கோவைகொண் டியர்ந்தோன்.

சோழன் வரிசையளித்துவிடுத்தபோது கூத்தர்கூறிய வதுப்பு.

1472. இடுக்கட் புண்படு நிரப்புக் கொண்டுழன்
றிரக்கச் சென்றவின் றெனக்குச் சிங்களர்

நிடுக்குற் றஞ்சும்வெஞ் சினத்துச் செம்பியன்
றிருக்கைப் பங்கயஞ் சிறக்கத் தர்தன

படுக்கக் கம்பளம் [1]பதக்கக் குங்குமம்
பதிக்கக் கங்கணம் பரிக்கக் குஞ்சரம்

கடுக்கக் குண்டலங் கலிக்கச் சங்கினம்
கலிக்குப் பஞ்சரங் கலிக்கத் தொங்கலே.

(1469) தமிழ்நா. 116. (1470) ஷே. 115. (1471) சோழமண். சத. 93, மேற். (1472) தமிழ்நா. 118. [1]பரக்கக்.

'இந்த விருதுகள் யாருக்கு' என்றபோது அவர் பாடியது.

1473. பத்துக்கொண் டணதிக்கும் பதறிப்போய் முடியப்
பைம்பொற்ரு ரகைசிந்தப் பகிரண்டத் திடையே
மத்துக்கொண் டமுதத்தைக் கடையாழித் திருமால்
வடிவாகிப் புவிகைக்கொண் டருண்மாஞ பரஞ
முத்துப்பந் தரினிற்குங் குருவேக்குஞ் சினவேன்
மூருகற்கும் பொதியக்கோ முனிவற்கும் பதுமக்
கொத்தற்குஞ் சடிலக்கொந் தளருக்கு மல்லாற்
கூழைத்தண் டமிழர்க்கேன் கொடியுங்கா ளமுமே.

கூத்தர்பாதி சோழன்பாதி பாடியது.

1474. ஆடுங் கடைமணி நாவசை யாம லகிலமெல்லாம்
நீடுங் குடையிற் றரித்தபி நானென்று நித்தநவம்
பாடுங் கவிப்பெரு மாஞட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென் றேயெனைச் சொல்லுவரே.

இராசா கைகொடுத்தபோது பாடியது.

1475. கொலையைத் தடவிய வைவே லரக்கர் குலமடியச்
சிலையைத் தடவிய கையே யிதுசெக தண்டத்துள்ள
மலையைத் தடவிய விந்தத் தடவி மலைந்தவொன்னூர்
தலையைத் தடவி நடக்குங்கொல் யானைச் சயதுங்கனே.

"கவிகளை அறுத்தபோது புலவரெல்லாம் *வேதனைப் பாடியது".

1476. பாட்டுத் தொடுக்கும் புலவோர்க்குக் கூத்தன் பயப்படல்பே
தாட்டுக் கடற்புலி யஞ்சலன் ரேவறுத் துக்கிடந்த
சூட்டுக் கதிர்க ணிலத்தடங் காமற் ரெருகுத்துமள்ளர்
மேட்டுக் குவாலிடும் பொன்னிநன் ஞடைை வேற்கண்டனே.

"கவிகளை அறுத்தபோது, சோணும் பாண்டியனும் 'பாவம்' என்று ஓலைவாவிட, இராசா வேட்டவந்தபோது பாடியது."

1477. அன்றையினு மின்றைக் ரகன்றதோ வல்லாது
குன்றெறித்து நீதிருத்திக் கொண்டாயோ—என்றும்
அடைந்தாரைக் காக்கு மகளங்கா ரியும்
நடந்தாயே நாலேர் தடி.

(1473) தமிழ்நா. 119. (1474) ஷை. 128. (1475) ஷை. 134. *வெருளப். (1476) ஷை. 126. (1477) ஷை. 121.

நெற்குன்றைவாணமுதலியார்
'கவிஞரை வேட்டவேண்டா' என்று பாடியது.

1478. கோக்கண்டி மன்னர் குரைகடற் புக்கிலர் கோகனகப்
[1]பூக்கண்டி கொட்டியும் பூவா தொழிந்தில பூவில்விண்ணோர்
காக்கண்ட செங்கைக் கவிச்சக்ர வர்த்திகின் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர்க ளோகவி பாடிய பாவலரே.

தேவி ஊடலாய்க் கதவடைத்தபோது கூத்தர் பாடியது.

1479. கரத்துஞ் சிரத்துங் களிக்குங் களிறுடைக் கண்டன்வந்தான்
இரத்துங் கபாட மினித்திறப் பாய்பண் டிவனணங்கே
உரத்துஞ் சிரத்துங் கபாடந் திறந்திட்ட தண்டிலங்கா
புரத்துங் கபாட புரத்துங் கல்யாண புரத்தினுமே.

மடையனைத் தண்டஞ்செய்ததை விலக்க அவர் பாடியது.

1480. மீனகம் பற்றிய வேலையு மண்ணையும் வெற்படங்கப்
போனகம் பற்றிய மாலலை யோபொருந் தாவரசர்
கானகம் பற்றக் கனவரை பற்றக் கலங்கள்பற்ற
வானகம் [2]பற்ற வடிவேல் விடுத்த மனதுங்களே.

கூத்தர் செங்குந்தரிட்ட தலைச்சிங்காதனத்திருந்து கூறியது.

1481. கலைவாணி நீயுலகி லிருப்பதுவுங் கல்வியுணர் கவிவல் லோரை
[3]நிலையாகப் புரப்பதுவு மவர்சாவில் [4]வாழ்வதுவும் நிசமே யன்றே
சிலைவாண னுவிருந்தா யிரம்புயங்க ணெடுந்துமுயர் சீவ னுற்றான்
தலையாவிகொடுத்திடுஞ்செங்குந்தருயிர்பெற்றிடநீதயைசெய்வாயே.

தமக்குச் சிரச்சிங்காதனமிட்ட செங்குந்தவீரரைப் புகழ்ந்து
அவர் பாடியது.

1482. நிலைதந்தா ருலகினுக்கே யாவருக்கு
மபிமானம் நிலைக்கத் தந்தார்
கலைதந்தார் வணிகருக்குச் சீவனஞ்செய்
திடவென்றே கையிற் றந்தார்
விலைதந்தார் தமிழினுக்குச் செங்குந்த
ரென்கவிக்கு வீலையா கத்தான்
தலைதந்தா ரெனக்கொட்டக் கூத்தனெனும்
பெயரினையுந் தாந்தந் தாரே.

(1478) தமிழ்நா. 127. [1]பூக்கண்ட. (1479) ஷே. 125. (1480) ஷே 135. [2]பற்றக் கதிர்வேல். (1481–82) ஈட்டியெழுபதுப்பாயிரம். [3]தலையாகக் காப்பதுவும். [4]வாழ்வதுஞ்சத் தியமே யன்றே.

மலரிக்கூத்தன்.

1483. சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவி லின்ப நிறைப்பவற்றுள்—ஒன்று
மலரிவருங் கூந்தலார் மாதர்கோக் கொன்று
மலரிவருங் கூத்தன்றன் வாக்கு.

யானை நிகளம்விடுத்தபோது கூத்தர் பாடியது.

1484. இன்னங் கலிங்கத் திகல்வேந்த ருண்டென்றே
தென்னன் றமிழ்நாட்டைச் சீறியோ—சென்னி
அகளங்கா வுன்ற னயிரா வதத்தின்
நிகளங்கால் விட்ட நினைவு.

மணவைக்கூத்தன்.

1485. தூபமு மாமர மோரேழு மெய்தவன் தூதுகவி
உபமு வாரிதி யொன்றே கடந்த தொளிர்தரள
வபமு வாவி மணவைமன் கூத்தன் வகுத்தகவி
தபமு காலுட னேகட லேழையுந் தாண்டியதே.

புகழேந்திப்புலவர்

சூதில் சோழன்தேவியை உயர்த்திப்பாடியது.

1486. பழியும் புகழு மெவர்க்குமுண் டாமிந்தப் பாரினுனக்
கழியுஞ் சிலையுங் கயலுமன் றேவக ளங்கதுங்க
மொழியும் பொழுதெங்கள் பெண்சக்ர வர்த்தி முகத்திரண்டு
விழியும் புருவமு மாகியிப் போதுன்னை வெல்கின்றவே.

சோழன்தேவி ஊடலாய்க் கதவடைத்தபோது
அப்புலவர் பாடியவை.

1487. தூபங் கமழும்பைங் கோதையன் விக்ரம சோழன்மன்னர்
தீபன் புறங்கடை வந்துநின் றுனின் றிருப்புருவச்
சாபங் குனிய விழிசிவப் பத்தலே சாய்த்துநின்ற
கோபந் தணியன்ன மேயெளி தோநங் குடிப்பிறப்பே.

1488. இழையொன் றிரண்டு வகிர்செய்த வற்றேரன் றிணையுமிடைக்
குழையொன் றிரண்டுகெட் கொம்பனை யாய்கொண்ட கோபத்தவிர்
மழையொன் றிரண்டுகைம் மான பரன்கண்டன் வாசல்வத்தாற்
பிழையொன் றிரண்டு பொறுப்பதன் றேகடன் பேதையர்க்கே.

(1483) தண்டி. 48, மேற். (1484) தமிழ்நா. 123. (1485) தனிப்பா. (1486) தமிழ்நா. 142. (1487–88) தமிழ்நா. 138–39. 1488-ம் பாட்டில் வழங்கும் பிற்காலத்துப் பாடபேதங்களைத் தனிப்பாடற்றிரட்டுமுதலிய வற்றிற் கண்டுகொள்க.

1489. நானே யினிச்சொல்லி வேண்டுவ தில்லை நளினமலர்த்
தேனே கவாடந் திறந்துவி டாய்செம்பொன் மாரிபொழி
மானே ரபய னிரவி குலோத்துங்கன் வாசல்வந்தாற்
ரூனே றிறக்குநின் கைம்மல ராகிய தாமரையே.

பித்தனென்றபோது அப்புலவர் பாடியது.

1490. சத்தம் பயிலும் புலவோர் கதலித்தண் [1]டோட்டம்புகும்
பித்த னிவனென்ப ரென்னைக்கண் டாய்பிழைத் துக்கனைத்தே
தத்த முதுகிட்ட தெவ்வேந்தர் தங்க டடமகுட
சத்த மவசத்த மாகுங்கொல் யானைச் சயதுங்கனே.

பாண்டியன்யானை தளையவிழாமைக்குக் காரணம்
புகழேந்தியார் கூறியது.

1491. தென்னவன் தென்னர் பெருமான் றிறன்மதுரை
மன்னவன் கோக்களிற்றின் வல்லிக்கும்—பொன்னிகா
டாலிக்கும் வேந்தா மபயன் குலமகளிர்
தாலிக்கு மொன்றே தளை.

சோழனுந் தேவியும் பாடியவை.

(தேவி)

1492. காடுமீ னம்படக் கண்டகங் [2]கண்டன்வெண்
[3]கோடுமே யுந்துறைக் [4]கொண்டலும் பின்கொளத்
தேடுநீ ரெங்கொடித் [5]தேருரா முய்யவந்
தாடுமே பாடுமே யன்னமே யின்னமே.

(சோழன்)

1493. மலையினும் [6]கானினும் போயினர் வருவரே
[7]முலையின்மேற் பசலைபோய் முதனிறங் கொள்ளுமே
துலையிலங் கியகொடைச் சோமன்வாழ் புவனையில்
சிலையிலங் கியதடத் தன்னமே யின்னமே.

(1489) தமிழ்நா. 140. இதில் வழங்கும் பிற்காலத்துப் பாடபேதங்களைத் தனிப்பாடற்றிரட்டுமுதலியவற்றிற் கண்டுகொள்க. (1490) ஷ. 137. [1]டோட்டம்புக்க. (1491) தனிப்பா. (1492) தமிழ்நா. 174. [2]கண்டன் மேற், கண்டன்வேற். [3]கோடுமேய் துறையுறை. [4]தொண்டியிற் கோனகர். [5]தெரியாரா. (1493) ஷ. 175. தஞ்சைச் சரச்சுவதிமால்—பிரதி. [6]கடலினும். [7]முலையினும் பலபொரி முழுகிறங் கொள்ளுமே.

சோழன்கேட்டுத் தேவியைத் தன்மடியில்வைத்த பாட்டு.

1494. காலெனுந்தேன் வந்தேன் கடுகெ வழிநடந்தேன்
யான்வந்த தூர மெளிதன்று—கூனன்
கருந்தேனுக் கங்காந்த காவிரிசூழ் நாடா
இருந்தேனுக் கெங்கே யிடம்.

கம்பர் தெய்வவரத்தினும் கவிசொல்லியநாளிற் பாடிய வெண்பா.

1495. மோட்டெருமை வாவிபுக முட்டிவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே—நாட்டில்
அடையா நெடுங்கதவு மஞ்சலென்ற சொல்லும்
உடையான் சரராம னூர்.

ஏழாம்பதுபாடி அரங்கேற்றும்போது புதுவைச்சேதிராயனை விடந்தீண்டத் தீர்த்தவெண்பா.

1496. ஆழியான் பள்ளி யணையே யவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே—[1]பூழியான்
பூணை புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற
நாணை யகல நட.

1497. மங்கை யொருபாகர் மார்பிலணி யாரமே
பொங்கு கடல்கடைந்த பொற்கயிறே—திங்களுயுஞ்
சிறியதன் மேலூருந் தெய்வத் திருநாணே
எறிய பண்பே யிறங்கு.

1498. பாரைச் சுமந்த படவரவே பங்கயக்கண்
வீரன் கிடந்துறங்கு மெல்லணையே—யீரமுறச்
செஞ்சடையான் பூணுந் திருவா பரணமே
நஞ்சுடையாய் தூர நட.

வாணியன்தானன் விருதுகாளம்பிடிக்கக் கம்பர் பாடியது.

1499. கூளம் பிடித்தெள்ளின் கோதுவைப் பானங் குலக்கவிக்குக்
காளம் பிடித்திடிற் சின்னம் பமென்பர் காதலிமார்
வேளம் பிடித்தகண் வெள்ளம் பிடிக்கவெம் [2]பேய்க்கிளம்பேய்
தாளம் பிடிக்கத் தனிவேல் பிடித்த சயதுங்கனே.

(1494) தமிழ்நா. 176. தஞ்சைச்சரச்சுவதிமால்—பிரதி. (1495) ஷே. 77; சோழமண். சத. 28. மேற். (1196) ஷே 78; தொண்டைமண். சத. 57, மேற். [1]பூழியான். (1197) ஷே. 79. (1498) தனிப்பா. (1499) தமிழ்நா. 83. [2]பேய்க்குழப்போய்.

சோழனுடன் கோபித்துக்கொண்டு மதுரைக்குப் போகும்போது பாடியது.

1500. காத மிருபத்து நான்கொழியக் காசினியை
ஒதக் கடல்கொண் டொளித்ததோ—[1]மாதவா
கொல்லி மலையுடைய கொற்றவா நீமுனிந்தால்
இல்லையோ வெங்கட் கிடம்.

ஒரு வேளாளன்களத்திற் தூணி நெல்வாங்கி வேலிக்காலில் இறைத்துப் பாடியது.

1501. செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள் வாசல்வழிப் போகோமே—[2]யிட்டமிலாப்
பார்ப்பா ரகத்தையெட்டிப் [3]பாரோம் பரிசறிந்து
காப்பா ருழவாளர் காண்.

வேலி எள்பாட்டு மண்சுவர்வைத்துக் கூலிபெறப்போம்போது சுவர் இடிந்துவிழ, மீளக்கட்டிப் பாடிய பாட்டு.

1502. மற்கொண்ட திண்புயத்தான் மாகுகர்விட் டிங்குவந்தேன்
சொற்கொண்ட பாவின் சுவையறிவா ரீங்கிலையே
விற்கொண்ட வாணுதலாள் வேலி தருங்கூலி
நெற்கொண்டு போமளவு நில்லாய் நெடுஞ்சுவரே.

கம்பர் தம்பிரியாணத்தில் ஓர் ஏரிப்பக்கத்திலின்றுகொண்டு 'முடிக்கரை என்ற ஊர்க்கு வழியாது' என இடையர் சிலரை உசாவ 'அடிக்கரை பிடித்துச்சென்றல் முடிக்கரை அடையலாம்' என்று அவர்கள் கூறிய பொருளை முதலிற்றெரியாது திகைத்துப் பின் தெரிந்து கூறியவெண்பா.

1503. கருங்காலிக் கட்டைக்கு நாணுக்கோ டாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்—மருங்காகக்
காட்டெருமை மேய்க்கின்ற காலையர்க்கே நார்தோற்றும்
நாட்டரசன் கோட்டை நகர்க்கு.

(1500) தமிழ்நா. 85. [1]மேதினியிற், கொல்லிமலை தேன்சொரியுங் கொற்றவா. (1501) ஷெ 82. [2]மூட்டிபுகும். [3]பாரோமே யென்னாளுங்-காப்பாரே வேளாளர் காண்—என்பன பிற்காலப் பாடல்கள். (1502) தனிப்பா. (1503) சேதுநாடெங் தமிழும். பக். 8. இஃது, ஒளவைபாடியதாகக்கொண்டு கதைவேறுபாடும் பாடபேதங்களும் கூறுவர். (விநோதரசமஞ்சரி ஒளவை யார்சரித்திரம் பார்க்க.)

கம்பர் மதுரைக்குச் சென்றபோது பாண்டியனுந் தேவியும் பல்லக்குதூக்குமக்க அப்போது பாடியது.

1504. உமையவளு நீயு [1]மொருங்கொப்பே யொப்பில்
உமையவளுக் குண்டங்கோ ரூனம்—உமையவடன்
பாகந்தோய்ந் தாண்டான் பலிக்குழன்ரூன் பாண்டியனுன்
[2]ஆகந்தோய்ந் தாண்டா னரசு.

நென்மலித்தச்சனேப்பாடி ஆயிரக்கலநெல் தியாகம் பெற்றுப் பாடியது.

1505. நெற்பயிர் விளைகழனி நென்மலி வாழ்தச்சன்
கற்பகி திண்டோளான் கங்கண கணகணவன்
விற்புரை திருநுதலாள் [3]மின்மினு மினுமினுவை
சொற்படி வேலைசெய்வான் [4]துந்தரு திருதிருமி.

கம்பர், இராமாயணம் இரவிற் பாடுதற்காகக் காளியைப் 'பந்தம்பிடி' என்று பாடிய வெண்பா.

1506. ஒற்றியூர் காக்க வுறைகின்ற காளியே
வெற்றியூர் காருத்தன் மெய்ச்சரிதை—பற்றியே
நந்தா தெழுதற்கு நல்லிரவின் மாணுக்கர்
பிந்தாமற் பந்தம் பிடி.

தம்மகன் அரசனுற் கொல்லப்பட்டபோது பாடியனவாகக் கூறப்படும் செய்யுட்கள்.

1507. மட்டுப் படாக் கொங்கை மானுர் கலவி மயக்கத்திலே
கட்டுப்பட் டாயென்ன காதல்பெற் றூய்மதன் கையம்பிஞற்
பட்டுப்பட் டாயினுந் தேறுவையே யென்று பார்த்திருந்தேன்
வெட்டுப்பட் டாய்மக னேதலே நாளின் விதிப்படியே.

1508. பரப்போத ஞால மொருதம்பி யாளப் பனிமதியர்
திரப்போ ளொருதம்பி பின்வரத் தானுந் தினைவியுடன்
வரப்போன மைந்தற்குத் தாதை பொருதுயிர் மாய்ந்தனனெஞ்
சுரப்போ வெனக்கினி யினியா ருவமை யுரைப்பதற்கே.

(1504) தமிழ்நா. 87. [1]மொருங் கொப்பை யொப்பை. [2]பாகந்தோய்ந் தாண்டான் பதி; பாதந்தோய்ந் தாண்டான் பதி. (1505) ஷே. 98; சோழ மண். சத. 99, மேற்; [3]மிம்மினு மினுமினுவை. [4]துந்துமி திருதிருவை. (தனிப்பாடற்றிரட்டிற்கண்ட இந்த பாடபேதங்கள் கண்டுகொள்க.) (1506) ஷே. 96. (1507—8) தனிப்பாக்கள்.

பிள்ளைக்காற் கம்பர் சோழனுடனே கோபித்துக்கொண்டு சொன்ன வெண்பா.

1509. மன்னவனு நீயோ [1]மண்ணுலகு மிவ்வளவோ
உன்னையோ யான்புகழ்ந்திங் கோதுவதும்—என்னை
[2]விருந்தேற்றுக் கொள்ளாத வேர்த்தண்டோ [3]சோழா
குரங்கேற்றுக் [4]கொள்ளாதோ கொம்பு.

கொங்குநாடு சென்று பாடியது.

1510. நீரெலாஞ் சேற்று நாற்ற நிலமெலாங் கல்லு முள்ளும்
ஊரெலாம் பட்டி தொட்டி உண்பதோ கம்பஞ் சோறு
பேரெலாம் பொம்மன் திம்மன் பெண்களோ நாயும் பேயும்
காருலாங் கொங்கு நாட்டைக் கனவிலு நினைக்கொ ணுதே.

கம்பர்மேற் சோழன் புலியைக் கொல்லவிட்டபோது பாடியது.

1511. வெங்கண் சிவந்து வெடிவான் முழுக்கி வெகுண்டெழுந்தென்
அங்கம்பிளக்க வரும்புலி யேயன் றிரணியனேப்
பங்கம் படப்பட வள்ளுகி ராலுரம் பற்றியுண்ட
சிங்க மிருப்பது காண்கெடு வாயென்றன் சிந்தையுள்ளே.

சோழன் எய்தபோது கம்பர் பாடியது.

1512. வில்லம்புஞ் சொல்லம்பு மேதகவே யாளுஞ்
வில்லம்பிற் சொல்லம்பு வீறுடைத்து—வில்லம்பு
பட்டுருவிற் றென்னையென் பாட்டம்பு கின்குலத்தைச்
சுட்டெரிக்கு மென்றே துணி.

கம்பர் மாணகாலத்திற் பாடிய கவி.

1513. ஆன்பாலுந் தேனு மரம்பைமுதன் முக்கனியுந்
தேம்பாய வுண்டு தெவிட்டுமனந்—தீம்பாய்
மறக்குமோ வெண்ணை வருசடையா கம்பன்
இறக்கும்போ [5]தல்லா லினி.

கம்பர் அருளிய இராமாவதாரத்திற்கண்ட சில பாயிரச்செய்யுட்கள்.

1514. வான்வளஞ் சுரக்க நீதி மனுநெறி முறையெய் நாளும்
தான்வளர்ந் திகல் வல்லோர் தங்கினை தழைத்து வாழ்க
தேன்வளர்ந் தமுத மாலைத் தெரிதரு ராமன் செய்கை
யானளந் தறிந்த பாட லிடையுறு தொளிர்க வெங்கும்.

(1509) தமிழ்நா. 88. [1]வளாகமு முன்னதோ, உன்னையறிந் தோதமிழை யோதினேன். [2]விரைந்தேற்றக். [3]வண்டோ. [4]கொள்ளாத. (1510) தனிப் பா. (1511) தமிழ்நா. 99. (1512) ஷே. 100 (1513) ஷே. 101; சோழ மண். சத. 80. மேற். [5]தேனுமினி. (1514) இராமாயண எட்டுப்பிரதிகள்.

1515. பராவரு மிராமன் மாதோ டிளவல்பின் படரக் கான்போய்
விராதனைக் கரனை மானைக் கவந்தனை வென்றி கொண்டு
மராமரம் வாலி மார்பு துளைத்தவை வகுத்துப் பின்னர்
இராவணன் குலனும் பொன்ற வெய்துட னயோத்தி வந்தான்.

1516. தராதலத்தி லுள்ள தமிழ்க்குற்ற மெல்லாம்
அராவு மரமாயிற் றன்றே—இராவணனை
அம்பினல் வீழ்த்தா னடிபரவு மாதித்தன்
கம்பநா டாள்வான் கவி.

1517. இம்பரு மும்பர் தாமு மேத்திய விராம காதை
தம்பமா முத்தி சேர்த்தல் சத்தியஞ் சத்தி யம்மே
அம்பரந் தன்னின் மேவு மாதித்தன் புதல்வன் ஞானக்
கம்பன்செங் கமல பாதங் கருத்துற விருத்து வாமே.

1518. ஆதவன் புதல்வன் முத்தி யறிவினை யளிக்கு மண்ணல்
போதவ னிராம காதை புகன்றருள் புனிதன் மண்மேற்
கோதவஞ் சிறிது மில்லான் கொண்டன்மா றன்னை யொப்பான்
மாதவன் கம்பன் செம்பொன் மலரடி சென்னி வைப்பாம்.

1519. ஆவின் கொடைச்சகர ராயிரத்து நூறெழுபத்திரண்
டேவன் றிருவழுந்தூர் நன்னாட்டி—மூவலூர்ச்
சீரார் குணஇத்தன் சேயமையப் பாடினன்
காரார்கா குத்தன் கதை.

1520. கரைசெறி காண்ட மேழு கதைகளா யிரத்தெண் ணூறு
பரவுற சமரம் பத்துப் படலநூற் றிருபத் தெட்டே
உரைசெயும் விருத்தம் பன்னீ ராயிரத் தொருபத் தாறு
வரமிகு கம்பன் சொன்ன வண்ணமுந் தொண்ணூற் றாறே.

வாணியன் காதன் கம்பர்மேற் பாடிய வகை.

1521. கைம்மணிச் சென்றிச் சேறி யாக்கம்ப நாடன்சொன்ன
மும்மணிக் கோவை முதற்சீர் பிழைமுனை வாளெயிற்றுப்
பைம்மணித் தித்திக் [1]கணமணிப் பாந்தட் படம்பிதுங்கச்
செம்மணிக் [2]கண்பதம் பொக்கக்கொல் யானைச் செயதுங்கனே.

(1515—20) இராமாயண எட்டுப்பிரதிகள். (1521) தமிழ்நா. 102.
[1]கனமணிப். [2]கண்பிதுங் கப்பதம் போர்த்த செயதுங்கனே.

வாணியன்தாதன், கம்பனிறந்தபின் பாடிய கையறவும்.

1522. இன்றேநங் கம்ப னிறந்தநா ளிப்புவியில்
[1]இன்றேவப் புன்கவிகட் கேற்றநாள்—இன்றேதான்
பூமடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருப்ப
நாமடந்தை தூல்வாங்கு நாள்.

சோழன்புலவன்

பாண்டியன் போரிற் புறந்தந்தோடுவதுகண்டு கூறியது.

1523. மான பரனபயன் வந்தா னெனவழுதி
போனவழி யாரேனும் போவரோ—ஆனற்
படவே யமையாதோ பாவியே னிந்தக்
குடைவே லிடைதுழைந்த கோ.

வசைபாடிய புலவன், மதுரைப் பாண்டியன்கண்டு முனியப்
பின்னும் பாடியது.

1524. இலங்கிலைவேற் கிள்ளி யெதிர்மலைந்த வந்நாட்
பொலங்கலனும் பொன்முடியுஞ் சிந்த—நிலங்குலுங்க
ஓடினூர் மேலோ [2]ருயர்தரள வன்குடையாய்ப்
பாடினூர் மேலோர் பழி.

கம்பனைக் கொன்றுன் என்று பழிகூறலிற் பாண்டியனிடத்திற்
சோழன்விட்ட புலவன் முடிசூட்டுமங்கலநாட் பாடிய வசை.

1525. பாண்டியரிற் பாண்டியரிற் பாழான பாண்டியரில்
ஈண்டிரென விட்ட வெழுத்தல்ல—பூண்டதிருப்
போகவென்றும் வேற்றூர் புகுதவென்று நீயிவண்விட்
டேகவென்றும் விட்ட வெழுத்து.

சாருவபூமன்

பாண்டியன் உண்டிநிமித்தமாகக் கோபித்து ஆரியதேசத்தான்
வாசலிலேயும் இரந்தக்குறும்பு செல்லுமோ என்னப் பாடியது.

1526. கவியரசர் தம்முனிவு கண்டாற் புகழ்கொள்
புவியரசர் சிரே பொறுப்பர்—கவியரசர்

(1522) தமிழ்நா. 103. [1]இன்றேநம். (1523) ஷை. 169. (1524) ஷை. 170. [2]ருயர்கான. (1525) ஷை. 171—"இது கேட்டு நன்றுகவே பொருள் கூறிப் பரிசில்கொடுக்க மறுத்தான்; நீ வந்த காரியம்வேண்டிற் சோழன்பாற் போக என்றுன்" என்ற குறிப்பும் ஷை நூலிற் பாட்டையடுத்துக் காணப்படுகின்றது. (1526) ஷை 143.

உன்னென் முனியின் வுரப்புரு ரோதமவர்க்
கென்னாடுஞ் செல்லாத தில்.

இராசாவைப்பாடாமல் ஓடக்காரனை ஷெ புலவர் பாடியது.

1527. கயக்காவி காறங் கொழும்பிற்ப ரண்டா
காரோர் கொடைச்செங்கை யாரோதன் மைந்தா
இயக்காரின் மார்பிற் செழும்புன்னை யந்தார்
இப்போது நீல்நி லென்பேதை தன்மேற்
சயக்காம வேளம்பு தையாது முத்தின்
தாமஞ் சுடாசக் தனம்பூசி னலும்
நியக்காது வேயுஞ் [1]செவிக்குப் பொறுக்குஞ்
நீயென்று மூளாது நிங்கட் கொழுந்தே.

சித்திரசந்தனுமனைப் பாடச்சொல்ல ஷெ புலவர் பாடியது.

1528. புராதன மென்னுங் கவிப்புலவீ ரிந்தப் புன்குரங்கு
வராவனம் விட்டிங்கு வந்ததென் னேவந்த வாறுசொல்வேன்
தராதல மெண்ணுந் தமிழ்மா னினையுமத் தம்பியையும்
இராகவ னென்று மிலக்குவ னென்றுமிங் கெய்தியதே.

அம்பர்க் கணபுரத்தேவன்.

1529. திருத்தங் ககலத்து மாயனைச் சேவடி சேர்த்தியும்பர்
குருப்பண் டிரைத்த கனவுநன் னூலைக் குழைத்தெழுந்த
கருத்தங் கியபொழி லம்பர்க் கணபுரத் தேவன்சொன்னன்
அருத்தம் பயிலுந் தமிழ்ப்புல வோர்த மருள்படைத்தே.

***ஆதிரையன் பேராசிரியன் பாடிய பொதுப்பாயிரம்.**

1530. வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்
வான்யா றன்ன தூய்மையும் வான்யாறு
நிலம்படர்ந் தன்ன நலம்பட ரொழுக்கமும்
நிங்க ளன்ன கல்வியுந் நிங்களொடு
ஞாயி றன்ன வாய்மையும் யாவதும்
அஃகா வன்பும் வெஃகா வுள்ளமும்
துலாரா வன்ன சமநிலை யுளப்பட

(1527) தமிழ்நா. 146. [1]செவிக்கும்புகாது. (1528) ஷெ. 149. (1529) கனுநூல். 1 *ஆதிரையான்பெய ராசிரியன். (1530) (தொல். மரபி. 68, பேரா; நன். விருத்தி. பாயிரம்.)

எண்வகை யுறுப்பின ராகித் திண்ணிதின்
வேளாண் வாழ்க்கையுந் தானா ளாண்மையும்
உலகிய லறிதலு நிலைஇய தோற்றமும்
பொறையு நிறையும் பொச்சாப் பின்மையும்
அறிவு முருவு மாற்றலும் புகழும்
சொற்பொரு ளுணர்த்துஞ் சொல்வன் மையும்
கற்போர் நெஞ்சங் காமுறப் [1]புனைதலும்
இன்னே ரன்ன தொன்னெறி மரபினர்
பன்னருஞ் சிறப்பி னல்லா சிரியர்
அறனே [2]பொருளே யின்பெனு மூன்றின்
திறனறி பனுவல் செப்புங் காலை
முன்னர்க் கூறிய வெண்வகை யுறுப்பினுள்
ஏற்பன வுடைய ராகிப் பாற்படச்
சொல்லிய பொருண்மை சொல்லியாங் குணர்தலும்
சொல்லிய [3]வகையொடு சூழ்ந்துநன் குணர்தலும்
தன்னே ரன்னோர்க்குத் [4]தான்பயன் படுதலும்
செய்ந்நன் றியறிதலுந் தீச்சார் [5]வின்மையும்
மடிதடு மாற்ற மானம்பொச் சாப்புக்
கடுநோய் சிற்றங் களவே காமம்
என்றிவை யின்மையுஞ் சென்றுவழி படுதலும்
அறத்துறை வழாமையுங் குறிப்பறிந் தொழுகலும்
கேட்டவை நினைத்தலும் பாடம் போற்றலும்
மீட்டவை வினவலும் விடுத்தலு முரைத்தலும்
உடைய ராகி நடையறிந் [6]தியலுநர்
நன்மா ணுக்க ரென்ப மண்மிசைத்
தொன்னூற் பரவைத் [7]துணிபுணர்ந் தோரே.

துணைவீரபண்டிதர்.

1531. பண்பார் கவிஞர் வியந்தேத்தப் பாட்டியலாம்
வெண்பாவந் தாழி விளம்பினன் —நண்பாரும்
கோடாத கீர்த்திக் குணவீர பண்டிதனும்
பீடார் களந்தைப் பிரான்.

1532. உளமலி பேரரு ளுயிர்மிசை வைத்த
வளமலி களந்தை வச்சணந்தி முனிவரன்
கொள்கையின் வழாஅக் குணவீர பண்டிதன்.

---

[1]படுதலும். [2]பொருட்பயனின்பெனு. [3]பொருளொடு. [4]தான்பயப். [5]பின்மையும். [6]தொழுகும். [7]துணிபுணர்வோரே.(1531-32)வச்சணந்திமாலை. பாயி.

வச்சணந்தி.

1533. என்களங்கம் யாவையு நீக்கி யினிதருளி
நன்களந்தை தூலோடு நாட்டுவரால்—தென்களந்தை
மன்பெயரா வண்புகழான் வச்சணந்தி மாமுனிவன்
தன்பெயரா னூட்டுந் தமிழ்.

1534. எய்திய மணிப்பூ ணிலங்குமணி நெடுந்தேர்
வேந்தர் சூடும் விரைகெழு மலர்த்தாள்
விளங்கெழின் மாடத்துக் களந்தையெம் பெருமான்
வளர்ந்த சீர்த்தி வச்சணந்தி தேவன்.

இடையளநாட்டு மணக்குடியான்
பால்வண்ணதேவனை வில்லவதரையன்.

1535. நின்ற நீதி வென்ற நேமிப்
பழுதில் கொள்கை வழுதிய ரவைக்கண்
அறிவுவீற் றிருந்த செறிவுடை மனத்து
வான்றோய் நல்லிசைச் சான்றோர் குழீஇ
அருந்தமிழ் மூன்றுந் தெரிந்த காலை
ஆய்ந்த கொள்கைத் தீந்தமிழ்ப் பாட்டுள்
நெடிய வாகி யடிநிமிர்ந் தொழுகிய
இன்பப் பகுதி யின்பொருட் பாடல்
நானூ றெடுத்து நூனவில் புலவர்
களித்த மும்மதக் களிற்றி யானைகிரை
மணியொடு மிடைந்த வணிகளர் பவள
மேவிய நித்திலக் கோவை யென்றுங்
கத்தகு பண்பின் முத்திற மாக
முன்னினர் தொகுத்த நன்னெடுந் தொகைக்குக்
கருத்தெனப் பண்பிலை ருரைத்தலை நாடின்
அவ்வகைக் கலைதாழ் செவ்விய வன்றி
அரியலை யாகிய பொருண்மை நோக்கிக்
கோட்ட மின்றிப் பாட்டொடு பொருந்தத்
தகவொடு சிறந்த வகவ னடையாற்
கருத்தினி தியற்றி யோனே பரித்தேர்
வளவர் காக்கும் வளநாட் டென்னும்

(1533) வெண்பாப்பாட். முடிவு. (1534) ஷை, பாயிரம். (1535) அக நானூறு, இறுதி, உரைப்பாயிரம்.

நாடெனச் சிறந்த பீடுகெழு சிறப்பிற்
கெடலருஞ் செல்வத் திடையள நாட்டுத்
தீதில் கொள்கை மூதூர் புள்ளும்
ஊரெனச் சிறந்த சீர்கெழு மணக்குடிச்
செம்மை சான்ற தேவன்
தொன்மை சான்ற நன்மை யோனே.

பேராசிரியர் தாமியற்றிய திருக்கோவையுரைபற்றிக் கூறிய அகவல்.

1536. திருவாத வூரடிக ளித்திருக் கோவையை
என்னுதலி யெடுத்துக் கொண்டா ரோவெனின்
அறிவோ னறிவில தெனவிரண் டாகும்
நெறியினிற் றொகைபெற்று நிரல்பட விரிந்த
மண்புன லனல்வளி மாவிசும் பெனுமை
வெண்மதி செஞ்சுடர் வேட்போ னெனுமை
எண்வகை நிலையிய வெவ்வகைப் பொருளும்
தோற்றநிலை யிறுதி கட்டுவீ டென்னும்
மாற்றருஞ் செயல்வழி மாறுதுசெயப் பட்டு
வெருவா வுள்ளத்து வேட்போன் முன்செய்
இருவினைப் பயன்றுய்த்து மும்மல வொழிப்
பொருவறு சிவகதி பொற்பினிற் பொருந்தவும்
வேனய தத்தங் குணநிலை புணரவும்
நிலையி யல்வயி னிமித்த மாகி
அலகு தவிர்த்த பலவகை யண்டமும்
மின்னுமை வெயிலின் முன்னணுப் புணைத்து
தன்னு ளடங்கவுந் தானவற் றுள்ளும்
நுண்ணுணர் வாயு நோக்கரு நூழையிற்
சிறுமை பெருமைக் கிருவரம் பெய்திப்
போக்கும் வரவும் புணர்வு மின்றி
ஆக்கமுங் கேடு மாதியு மந்தமும்
நடுவு மிகந்து ஞானத் திரளாய்
அடியு முடியு மளவா தயர்ந்து
நெடியோ னென்முக னெண்மறை போற்ற
எரிசுடர்த் கனலியி னீக்காது விரிசுடர்
வெப்பமும் விளக்கமு மொப்பவோர் பொழுதினித்

(1536) திருக்கோவை. 1, உரை.

றப்பற வியற்றுவ தெனவெப் பொருளும்
காண்டலு மியற்றலு மியல்பா மாண்டென்
தன்னி னீங்காது தானவின் றுவிளங்கிய
எண்ணெண் கலையுஞ் சிலம்புஞ் சிலம்படிப்
பண்ணமை தேமொழிப் பார்ப்பதி காண
ஐயா றதன்மிசை யெட்டேத்தலை யிட்ட
மையில் வாண்கலை மெய்யுடன் பொருந்தித்
தில்லை மூதூர்ப் பொதுவினிற் றேன்றி
எல்லையி லானந்த நடம்புரி கின்ற
பரம காரணன் றிருவரு ளதனால்
திருவாத வூர்மகிழ் செழுமறை முனிவர்
ஐம்பொறி கையிகந் தறிவா யறியாச்
செம்புலச் செல்வ ராயின ராதலின்
அறிவனூற் பொருளு முலகநூல் வழக்குமென
இருபொருளு நுதலி யெடுத்துக் கொண்டனர்
ஆங்கவ் விரண்டனுள்
ஆகமநூல் வழியி னுதலிய ஞான
யோகநுண் பொருளினை யுணர்த்து றற்கரி
தலகநூல் வழியி னுதலிய பொருளெனும்
அலகி றீம்பாற் பரவைக் கண்ணெம்
புலனெனுங் கொள்ளலன் முகந்த வகைதிறி
தலையா மரபி னுரைக்கற் பாற்று.

பவணந்திமுனிவர்.

1537. கங்கக் குருசி லுலக்கநன் னூலெக் கனிர்துபுகல்
திங்கப் புலமைப் பவணந்தி மாமுனி தோன்றிவளர்
கொங்கிற் குறும்பு தனிலாதி நாத குருவிளக்கும்
மங்குற் பொழிற்சன காபுர மூர்தொண்டை மண்டலமே.

திருக்குறளுக்கு உரையிட்டோர்.

1538. தருமர் [1]மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பருதி—திருமலையர்
மல்லர் [2]பரிப்பெருமான் [3]காளிங்கர் வள்ளுவர் றூற்
கெல்லையுரை செய்தா ரிவர்.

(1537) நன்னூல் மயிலைநாத குரை மூகவுரை—கொங்குமண்டலசத கம். (1538) தொண்டைமண். சத. 41, மேற். [1]மணக்குடையர், [2]கலிப் பெருமான், கலிப்பெருமாள், கலைப்பெருமாள். [3]காலிங்கர்,

திருக்குறள்—பரிப்பெருமாள் உரைப்பாயிரச்செய்யுட்கள்.

1539. மாயிரு ஞாலத்து மன்பொருள் விளக்கும்
ஆயிரங் கதிரு மாழ்கடன் மறைந்தபின்
விரிகதிர் மதியும் விளங்காக் காலத்
தெரிதலைக் கொளீஇய சிறிரி விளக்கின்
அரியவும் பெரியவு மறிந்தோர் போல
வசையில் வள்ளுவன் வாய்மொழிப் பொருளை
இசைபட வுவல்லோ ரிறந்த பின்னர்
நன்மதி யுடையோர் நாடா தாதலின்
என்மதி யளவின் யானறிந் துரைத்த
மழலைக் கிளவியை மதியோ ராராய்ந்
திகழ்த லின்றியே யாவரு மியைத்துத்
திருத்தி யுரைத்தல் வேண்டும்
அருத்தப் பயில்வோ ரருங்கட னெனவே.

1540. புதியது தீது பழையது நன்றென்றல் பூமியுள்ளோர்
விதியது வேபொரு ளென்னன்மி னல்லோர் விருப்பமுண்டேற்
புதியது நன்று பழையது தன்னினும் பூமடந்தை
பதியதின் மேவிற் பருமுத்தொ டாடையைப் பார்மின்களே.

1541. கண்ணு முகமுங் கருங்குழலுஞ் செவ்வாயும்
வண்ண முலையும் வனப்புடைத்தென்—றெண்ணிக்
கருத்தறியார் சாரலுறுங் காலையர்கோ முப்பாற்
கருத்தறியா [1]தட்பொருள்காண் பார்.

1542. தெள்ளி மொழியியலைத் தேர்ந்துரைத்துத் தேமொழியார்
ஒள்ளிய காமநூ லோர்ந்துரைத்து—வள்ளுவனூர்
பொய்யற்ற மூப்பாற் பொருளுரைத்தான் தென்செழுவைத்
தெய்வப் பரிப்பெருமாள் தேர்ந்து.

பரிமேலழகர் திருக்குறளைச் சிறப்புப்பாயிரம்.

1543. திருந்திய தமிழிற் றெய்வப் புலமை
அருந்திறல் வள்ளுவ னுய்ந்ததன் வாக்கால்
அறம்பொரு ளின்பம் வீடென நான்கின்
நிறந்தெரிந் துரைத்த செவ்விமுப் பாலுள்
சோருரை யின்றி யொன்பது சென்றும்
ஐயுற வாக வையுற காலே

(1539–42) திருக்குறள்-பரிப்பெருமாளுரைப்பிரதி. [1]தட்குறள்காண்.

வள்ளுவன் மீளவும் வந்துதித் துலகோர்க்
[1]குள்ளிய பொருளே யுரைத்தன னென்ன
எழுத்து முதல வீலக்கண வகையும்
[2]வழுத்துவே தாகம வகையதன் பயனும்
தங்கிய குறட்பாத் தமிழ்மனு நூலிற்
கிதுவே யுரையென் றியாவரும் வியப்பப்
பொழிப்பக லத்தொடு தூட்ப வெச்ச
விழுப்பொரு டோன்ற விரித்தினி துரைத்தனன்
வடநூற் றுறையுந் தென்றிசைத் தமிழும்
விதிமுறை பயின்ற நெறியறி புலவன்
அன்பரு ணெஞ்சப் புரவுகண் ணோட்டம்
நன்றறி வாய்மை நற்றவ மூடையோன்
இத்தகை யன்றி யீசன தருளால்
உய்த்துணர் வுடையவோ ருண்மை யானன்
பரிமே லழக னெனப்பெயர் படைத்துத்
தரைமே லுதித்த தலைமை யோனே.

1544. திருத்தகுசீர்த் தெய்வத் திருவள் ளுவர்தங்
கருத்தமைதி தானே கருதி—விரித்துரைத்தான்
பன்னு தமிழ்தேர் பரிமே லழகனெனும்
மன்னு முயர்நாமன் வந்து.

1545. பாலெல்லா நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி.

1546. தெய்வப் புலமைத் திருவள் ளுவர்குறளில்
உய்விக்கு நூலெல்லா முள்ளதெனச்—செய்வித்தான்
தத்துவமெல் லாமுடம்பிற் றந்துணர்வார் போலுலக
மொத்தபரி மேலழக னோர்ந்து.

1547. விரைத்தா ரலங்கற் றிருவள் ளுவர்முன்னம் வெண்குறட்பா
திரைத்தார் மிகுபொரு ணுண்கும் வினக்க நெறிப்புலவ
ருரைத்தார் பலரு மதற்குரை தன்னே யுலகறியக்
கருத்தான் வருத்தமைத் தான்சலே தேசொக்கை காவலனே.

1548. முன்னுரைத்த தேவர்குறள்.....
இன்னதிது வென்றுரைக்க வெய்தினனே—முன்னும்

(1543–48) திருக்குறட் பரிமேலழகருரை வட்டெழுத்துப் பிரதிகளிற்கண்டவை.
[1]கொள்ளிய. [2]வழுத்தில்.

புரிமே லழகியகோப் போற்றுதமிழ்க் கூடற்
பரிமே லழகியனென் பான்.

பரிபாடல்-உரைச்சிறப்புப்பாயிரம்.

1549. கண்ணுதற் கடவு ளண்ணலங் குறுமுனி
முனேவேன் முருக னெனவிவர் முதலிய
திருந்துமொழிப் புலவ ருருந்தமி ழாய்ந்த
சங்க மென்னுந் துங்கமலி கடலுள்
அரிதி னெழுந்த பரிபாட் டமுத
மாசுநிலை திரீஇய வளப்பருங் காலங்
கோதில் சொன்மக ணேதகக் கிடத்தலிற்
பாடிய சான்றவர் பீடுநன் குணர
மிகைபடு பொருளை நகைபடு புன்சொலிற்
றந்திடை மடுத்த கந்திதன் பிழைப்பும்
எழுதினர் பிழைப்பு மெழுத்துரு வொக்கும்
பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்
ஒருங்குடன் கிடந்த வொவ்வாப் பாடம்
திருந்திய காட்சியோர் செவிமுதல் வெதுப்பலிற்
சிற்றறி வினர்க்குந் தெற்றெனத் தோன்ற
மதியின் றகைப்பு விதியுளி யகற்றி
எல்லையில் சிறப்பிற் றெரல்லோர் பாடிய
அணிதிகழ் பாடத்துத் துணிதரு பொருளைச்
சுருங்கிய வுரையின் விளங்கக் காட்டிணன்
நீணிலங் கடந்தோன் றுடொழு மரபிற்
பரிமே லழக னுரிமையி னுணர்ந்தே.

1550. விரும்பி யருணீல வெற்பிமயக் குன்றின்
வரும்பரிசு புள்ளுரு மாலே—சுரும்பு
வரிபாட லின்சீர் வளர்துளவத் தோளாய்
பரிபாட லின்சீர்ப் பயன்.

நச்சினார்க்கினியர் உரைப்பாயிரச் செய்யுட்கள்.

1551. பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டெங்கலியும்
ஆசக் குறுந்தொகையு நாஞ்ஞான்கு—சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்தினச்சி னர்க்கினிய மே.

(1549–50) திருக்குறட் பரிமேலழகருரைப்பிரதியிறகண்டவை. (1551) சிவகசிந்தாமணிப் பதிப்பு.

1552. பாற்கடல் போலப் பரந்த கன்னெறி
நூற்படி வான்பொரு ணுண்ணிதி னுணர்ந்த
போக்கறு கேள்விப் புலவோர் புலத்தின்
காற்பொருள் பொதிந்த தூக்கமை யாப்பினைத்
தேக்கிய சிந்தைய ஞெகிழ் பாற்பட
எழுத்துஞ் சொல்லும் பொருளுமிம் மூன்றும்
இழுக்கற வாய்ந்த வழுக்கிறல் சீர்த்தித்
தொல்காப் பியமெனுந் தொடுகடற் பரப்பை
மறுவுங் குறைவு மின்றி யென்றும்
கலையி னிறைந்த கதிர்மதி யென்ன
நிலையுடை கலத்தி னெடுங்கரை காணுக்
கல்லா மாந்தர் கற்பது வேண்டியும்
நல்லறி வுடையோர் நயப்பது வேண்டியும்
உரைபிடை யிட்ட காண்டிகை யுரைத்தும்
ஆன்றோர் புகழ்ந்த வறிவினிற் றெரிந்து
சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரியல்
ஒருபது பாட்டு முணர்பவர்க் கெல்லாம்
உரையற முழுதும் புரைபட வுரைத்தும்
ஒலித்திரைத் தலத்தி னுணர்ந்தோ ருரைக்கும்
கலித்தொகைக் கருத்தினைக் காட்சியிற் கண்டதற்
குன்ளுறை யுவமமு மேனை யுவமமும்
தென்னிதிற் றெரிந்து நினைப்பொருட் கேற்ப
உன்ளுறை யுவமத் தொளித்த பொருளைக்
கொன்பவர் கொள்ளக் குறிப்பறிந் துணர்த்தி
இறைச்சிப் பொருளுக் கெய்தும் வகையைத்
திறப்படத் தெரிந்து சிர்பெறக் கொளீஇத்
துறைப்படு பொருளொடு சொற்பொருள் விளக்கி
முறைப்பட வினையை முடித்துக் காட்டிப்
பாட்டிடை மெய்ப்பாடு பாங்குறத் தெரித்துப்
பாற்பட நூலின் யாப்புற வுரைத்த
நாற்பெயர் பெயரா நடப்பக் கிடத்திப்
போற்ற வின்னுரை பொருள்டெற விளம்பியும்
வையம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்ச்
சிந்தா மணியைத் தெண்கடன் மாநிலம்

(1552) சிவகசிந்தாமணிப் பதிப்பு.

வந்தா ரிரப்ப வண்பெரு வஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தகு முனிவன் கருத்தினி தென்னப்
பருப்பொருள் கடிந்து பொருட்டொடர்ப் படித்து
வினையொடு முடியப் புனையுரை யுரைத்தும்
நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியுங் காட்சியுங் காணினி யறியப்
பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற்
கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய
இதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்தும்
தண்டமிழ் தெரித்த வண்புகழ் மறையோன்
வண்டிமிர் சோலை மதுரா புரிதனில்
எண்டிசை விளங்க வந்த வாசான்
பயின்ற கேள்விப் பாரத் துவாசன்
நான்மறை துணிந்த நற்பொரு ளாகிய
தூய ஞான நிறைந்த சிவச்சுடர்
தானே யாகிய தன்மை யாளன்
நவின்ற வாய்மை நச்சினர்க் கினியன்
இருவினை கடியு மருவியம் பொதியிலின்
மருவிய குறுமுனி தெரிதமிழ் விளங்க
ஊழி யூழி காலம்
வாழி வாழியிம் மண்மிசை தானே.

1553. பச்சைமா லனைய மேகம் பெளவநீர் பருகிக் கான்ற
எச்சிலுற் றிசையு மூண்ணு மமிழ்தென வெழுதா வெச்சில்
மெச்சினா ளுலகும் விண்ணோர் மிசைகுவர் வேத போதன்
[1]நச்சினர்க் கினிய ஞான னல்லுரை கொள்வர் நல்லோர்.

1554. பருவ ராலுகள் வாவிசூழ் மதுரையம் பதிவாழ்
பொரு வாநச்சி னர்க்கினி யானுரை புனையாக்
கருவ ராதெறி யுதவுதொல் காப்பியக் கடற்கே
வெருவ ராதுநின் றனமகிழ்ந் தேகுவான் விரைந்தே.

1555. கரைபெற்ற தோர்பஞ்ச லட்சண மானதொல் காப்பியமும்
தரைமுற்றும் போற்றிய சிந்தா மணியுந் தமிழ்ச்சங்கத்தில்
நிரைபெற் றுயர்பத்துப் பாட்டும் விளங்க நிசவுரையை
வரைநச்சி னர்க்கினி யன்னையன் பாண்டியன் மண்டலமே.

(1553) சிவகசிந்தாமணிப்பதிப்பு. [1]நச்சினர்க் கினிய னெச்சி னறுந்தமிழ் தகர்வர் நல்லோர். (1554) தஞ்சைச் சரச்சுவதிமால்—பிரதி. (1555) பாண்டி மண்டலசதகம்.

அடியார்க்குநல்லார் உரைச்சிறப்புப்பாயிரம்.

1556. பருந்து நிழலுமெனப் பாவு முரையும்
பொருந்துநெறி யெல்லாப் பொருளும்—தெரிந்திப்
படியார்க்கு நல்லமிர்தம் பாலித்தா னன்னூ
லடியார்க்கு நல்லானென் பான்.

1557. ஒருந் தமிழொரு மூன்று முலகின் புறவருத்துச்
சோன் றெருகுத்த சிலப்பதி காரத்திற் சேர்ந்தபொரு
ளாருந் தெரிய விரித்துரைத் தானடி யார்க்குநல்லான்
காருந் தருவு மனையா னிரம்பையர் காவலனே.

1558. காற்றைப் பிடித்துக் கடத்தி லடைத்தக் கடியபெருங்
காற்றைக் குரம்பைசெய் வார்செய்கை போலுமற் காலமெனும்
கூறறைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கெயர் கோனளித்த
சோற்றுச் செருக்கல்ல வோதமிழ் மூன்றுரை சொல்வித்ததே.

அடியார்க்குநல்லார் பாட்டு.

1559. எழுத்தின் றிறனறிந்தோ வின்சொற் பொருளின்
அழுத்தந் தனிலொன் றறிந்தோ—முழுத்தும்
பழுதற்ற முத்தமிழின் பாடற் குரையின்
றெழுதத் துணிவதே யான்.

பதுமனார் வகுத்த நாலடி அதிகார வகுப்பு.

1560. வளங்கெழு திருவொடு வையக முழுதும்
உளங்குளி ரின்பத் தின்ப மூவப்ப
வண்பெருஞ் சிறப்பின் மாதவம் புரிந்தாங்
கெண்பெருங் குன்றத் திருந்த முனிவரர்
அறம்பொரு ளின்பம் வீடெனு மவற்றின்
நிறம்பிற ரறியுங் கிறத்தை நாடிப்
பண்புற வெடுத்துப் பாங்குறப் பகர்ந்த
வெண்பா வியலெண் ணுபிர மிவற்றுட்
பாரெதிர் கொண்டு பரவி யேத்த
நீரெதிர் வந்து நிரையணி பெற்ற
மேனூற் றகையின் விதிமுறை பிழையா
நானூ றவற்றி னயந்தெரிந் தோதிய
மதுமலர்த் தண்டார்ப் பதுமனார் தெரிந்த

(1556–1559) சிலப்பதிகாரம், இரண்டாம்பதிப்பு, பக். 11. (1560) காலடி—பழையபிரதி.

ஐயமில் பொருண்மை யதிகா ரந்தாம்
மெய்யா நலத்த வெண்ணேர் தவற்றுள்
அறவியல் பதின்மூன் றரசர்க் குரிய
பொருளிய லிருபத் தொருநான் கின்பம்
ஆன்ற வகையை மூன்றென மொழிந்தனன்
சான்றோ ரேத்துந் தருமத் தலைவனே.

தருமர். (நாலடியுரையாசிரியர்.)

1561. சில மூனிவ ரிருந்து தெரிந்துரைத்த
நாலடி நானூற்றி னற்பொருளைப்—பால்வகையே
கண்டான் பொருடான் பயனுரைத்தான் காதலித்துத
தண்டாப் பொறைத்தருமன் றான்

நாற்கவிராசநம்பி.

1562. பூமலி நாயகன் மாமலைச் சென்னி
ஈண்டிய விமையோர் வேண்டலிற் போந்து
குடங்கையின் விந்த நெடுங்கிரி மிகைதீர்த்
தலைகட லடக்கிய மலயத் திருந்த
இருந்தவன் றன்பா லியற்றமி ழுணர்ந்த
புலவர்பன் னிருவருட் டலைவ னெனிய
தொல்காப் பியனரு ளொல்காப் பெரும்பொருள்
அகப்பொரு ளிலக்கண மகப்படத் தழீஇ
இகப்பரஞ் சான்றோ ரிலக்கிய நோக்கித்
தொகுத்து முறைநிறீஇச் சூத்திரம் வகுத்தான்
சகப்பொருள் வினக்கமென் றதற்கொரு நாமம்
புலப்படுத் திருளறப் பொருள்விரித் தெழுதினன்
மாந்தருந் தேவரும் வாழ்த்தமுக் குடைக்கீழ்
ஏந்தெழி லரிமா னேந்துபொன் னணைமிசை
மதிமூன்று கவிப்ப வுதய மால்வரைக்
கதிரொன் றிருந்தெனக் காண்டக விருந்து
தத்துவம் பகர்ந்தோன் சரணம் பொருந்திய
உத்தமன் புளிங்குடி யுய்யவந் தானெனும்
மூத்தமி ழாசான் மைந்த னித்தலத்
திருபெருங் கலைஞ ரொருபெருங் குரிசில்
பாற்கடற் பல்புகழ் பரப்பிய
நாற்கவி ராச நம்பியென் பவனே.

(1561) தஞ்சைச் சரச்சுவதிமால்—பிரதி பக்.95. (1562) நம்பியகப் பொருட்பாயிரம்.

ஐயஞரிதனார்.

1563. மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சிர்சான் முனிவான்
தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சிர்த்திச் தொல்காப் பியன்முதற்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலமும் பழிப்பின் றுணர்ந்தோன்
ஓங்கிய சிறப்பி னுலகமுழு தாண்ட
வாங்குவிற் றடக்கை வானவர் மருமான்
ஐய ஞரித னகலிடத் தவர்க்கு
மையறு புறப்பொருள் வழாலின்று விளங்க
வெண்பா மாலை யெனப்பெயர் நிறீஇப்
பண்புற மொழிந்தனன் பான்மையிற் றெரிந்தே.

தண்டியாசிரியர்.

1564. வடதிசை யிருந்து தென்மலைக் கேகி
மதிதவழ் குடுமிப் பொதிய மால்வரை
இருந்தவன் றன்பா லருந்தமி முணர்ந்த
பன்னிரு புலவரின் முன்னவன் பகர்ந்த
தொல்காப் பியநெறி பல்காட் பியத்தும்
அணிபெறு மிலக்கண மரிதினிற் றெரிந்து
வடநூல் வழிமுறை மாபினின் வழாஅது
நரிரண் டெல்லியி னிகவா மும்மைப்
பாரத விலக்கணம் பண்புறத் தழீஇத்
திருந்திய மணிமுடிச் செம்பிய னலையத்
தரும்பொருள் விளங்க யாப்பின் வருத்தனன்
ஆடக மன்றத்து நாடக நவிற்றும்
வடநூ லுணர்ந்த தமிழ்நூற் புலவன்
பூவிரி தண்பொழிற் காவிரி நாட்டு
வம்பவிழ் தெரிய லம்பி காபதி
மேவரும் தவத்தினிற் பயந்த
தாவருஞ் சிர்த்திற் தண்டியென் பவனே.

(1563) புறப், வெண், பாயிரம். (1564) தண்டியலங்காரப் பாயிரம்.

தொல்காப்பியதேவர்

(சமணர்கோயிலுக்குச் செங்கலறுப்பிக்கச் சிவதலத்தார்
'தங்கள் எல்லை' என்றபோது பாடியது.)

1565. வேத மொழிமிசும்பு மேனி சுடர்விழிமண்
பாதந் திருப்பா திரிப்புலியூர்—நாதர்
பரமாம் பரமாம் படுகடலெண் டிக்குங்
கரமா மவர்க்குயிர்ப்பாங் கால்.

அப்புலவர் திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகம் அரங்கேற்றும்போது
சிதம்பரத்திற் கயிறுபோட்டேப்பார்த்துக் கண்ட கவி.

1566. பாடுவார் பாடும் பரிசில் வரிசையெல்லாம்
ஆடுவா ரன்றி யயலா ரறிவரோ
தோடுவார் காதன்றே தோன்றுத் துணையையர்
பாடுவா ரோரிருவர்க் கிட்ட படைவீடே.

வேம்பையர்கோன்-நாராயணன்
திருச்சிராப்பள்ளி மலைக்குகைப் பிற் பொறித்த கல்வெட்டிற்
கண்ட பாடல்கள்.

1567. மற்பந்த மார்வன் மணியன் மகன்மதில் வேம்பையர்கோன்
நற்பந்த மார்தமிழ் நாரா யணனஞ் சிராமலைமேற்
கற்பந்த னீழலில் வைத்த கலித்துறை நூறுங்கற்பார்
பொற்பந்த நீழ லான்றிருப் பாதம் பொருந்துவரே.

1568. மாட மதுரை மணலூர் மதில்வேம்பை
யோடமர் சேய்ஞலூர் குண்டேரிந்—நீடிய
நற்பதிக்கோ ஞரா யணனஞ் சிராமலைமேற்
கற்பதித்தான் சொன்ன கவி.

இராசபவித்திரப் பல்லவதரையன்.

1569. இந்தப்பத் தெச்சமும்
புவிபுகழ் புலமை யவிரய நூலுட்
டண்டலங் கிழவன் றகைவரு நேமி
எண்டிசை நிறைபெய ரிராச பவித்திரப்
பல்லவ தரையன் பகர்ச்சியென் றறிக.

(1565) தமிழ்நா. 105; திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், 2. (1566) ஷே. 106. (1567–68) S. I. I. IV—A. R. No. 62 of 1888. (1569) நன்னூல் 359, மயிலைநாதருரை.

இராட்டையர்.

[காட்டுவழியிற் செல்லும்போது இளஞ்சூரியர் வினவுக்கு முதுசூரியர் கூறிய விடை.]

1570. குன்றும் வனமுங் குறுகி [1]வழிநடந்து
சென்று திரிவதென்றுந் தீராதோ—ஒன்றுங்
[2]கொடாதாரைச் சங்கென்றுங் கோவென்றுஞ் சொன்னல்
இடாதோ வதுவே யிது.

திருவாமாத்தூர்க்கலம்பகம் பாடச்சொன்னபோது அப் புலவர்கள் பாடிய கவி.

1571. தொல்காப் பியதேவர் சொன்னதமிழ்ப் பாடலன்றி
நல்காத் திருச்செவிக்கு நாமுரைத்த தேறுமோ
மல்காப் புனறதும்ப மாநிலத்துக் கண்பிசைந்து
பல்காற் பொருளழற்குப் பாற்கடலொன் றீந்தார்க்கே.

திருவண்ணுமலைச் சம்பந்தன் சமத்தியாடச்சொல்லியபோது அப் புலவர்கள் பாடியது.

1572. மன்னுதிரு வண்ணு மலையிற்சம் பந்தனுக்குப்
பன்னு தலைச்சவரம் பண்ணுவதென்—மின்னின்
இளைத்த விடைமடவா ரெல்லாருங் கூடி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு.

ஆங்கூர்ச் சிவன்கோயிலில் அப் புலவர்கள் பட்டினிகிடந்தபோது பாடியது.

1573. தேங்குபுக ழாங்கூர்ச் சிவனேயல் லாளியப்பா
நாங்கள் பசித்திருக்கை ஞாயமோ—போங்காணும்
கூறுசங்கு தோன்மூரசு கொட்டோசை யல்லாமற்
சோறுகண்ட மூளியார் சொல்.

ஓபளநாதன் என்ற தனிகன் புலவர்களை அவமதித்திகழ்ந்தது பொறுமற் பாடியது.

1574. ஒருகாவித் தண்டலம்வா ழோபளநா தன்வீ
டிருகாலும் பற்றி யெரிக—அருகாரும்

(1570) தமிழ்நா. 113. [1]வழிநடப்ப, தென்று விடியுநமக் கெங்கோவே. [2]கொடாதானைக் கோவென்றுங் காவென்றுங் கூறின், இடாதோ நமக்கிவ் வீடி—என்பன பிற்காலப் பாடங்கள். (1571) மே. 112. (1572-74) தனிப் பாக்கள்; இவற்றுள் ஒருசில வேறுபுலவர்வாக்கென்றுங் கூறுவர்.

கம்பத்தான் வீங்கு கலந்தெரிக மற்றிவர்கள்
சம்பத்தெல் லாமொழிக தான்.

திருநெல்வேலி சென்றபோது பாடியது.

1575. வேயீன்ற முத்தர்தமை வெட்டினு னேரிடையன்
தாயீன்ற மேனி தயங்கவே—பேயாகேள்
எத்தனோ ரென்றே யிடறுவான் பாற்குடத்தை
அத்தனையும் வேண்டு மவர்க்கு.

மதுரையிற் பொய்கையில் ஆடைதுவைக்கும்போது அது வீலகி நீரில் நழுவிவிட அப்போது அவர்கள் பாடியது.

1576. அப்பிலே தோய்த்திட் டடித்தடித்து நாமதனைத்
தப்பினு னம்மையது தப்பாதோ—இப்புவியில்
இக்கலிங்கம் போனலென் னேகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்க முண்டே துணை.

கூவாயன் பெருமையை வீரசம்புழன் அப்புலவர்கள் கூறியவை.

1577. கூவரா யன்தியாகங் கொள்வோம் வலக்கைமுடி
யாவர் தரினுமிடக் கைகொள்வோம்—பூவுலகில்
மின்பணிமின் னோமதனு வீரசம்ப ராயநாம்
இன்பமு நேரோ மினி.

1578. மாதா பிதாவுமவன் மன்னுகுரு தெய்வமவன்
தாதா வவனே தருவுகீர்த்திக்—காதாரன்
தியாக சமுத்திரன் தண்கூவ ராயன்றன்
ஈகைதனைச் சொல்லவெளி தே.

காட்டுவழிபோம்போது ஒருவன் தன்மகளோடு கூடியிருத்தல்கண்டு பாடியது.

1579. மாங்காட்டு வேளான் மகளை மருமகன்பாற்
போங்காட்டி லின்பம் புணர்ந்தானை—ஓங்காணும்
மக்கண்மெய் தீண்ட வுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லிப்பதுஞ் செவிக்கு.

வறுமைநீங்கத் தெய்வங்களை வேண்டியும் அவர் அருளாமையாற் பாடியது.

1580. கேட்ட வரமளிக்குங் கீர்த்தியுள்ள தெய்வங்கள்
கூட்டோடு மெங்கே குடிபோனீர்—பாட்டாய்கேள்

(1575-80) தனிப்பாக்கள்; இவற்றுள் ஒருசில வேறுபுலவர்வாக்கென்றுங் கூறுவர்.

செல்கால மெல்லாஞ் செலுத்திலே மல்காலங்
கல்லாலேஞ் செம்பாலேஞ் காண்.

திருவேகம்பழடையநயினார்மேற் பாடிய வண்ணம்.

(உடன்போக்கு)

1581. மறுத்தோன்ற வெளுத்தபிறை படப்பாந்த ளிடைச்செருகி
வளர்த்தோங்கி முடித்த சடையார்—காஞ்சனமனையார்

மலர்க்காந்தள் முறுக்கவிழ விதழ்த்தேன்கள் குறித்தொழுகி
மடைத்தேங்கி யடைத்து வருநீர்—போஞ்சுழிவழியே

சிறுத்தூண்டின் முரித்தசுற வரக்காம்ப லுழக்கியொரு
சிறுச்சம்பை யொடித்து வெடிபோய்—வீழ்ந்தயலருகே

திடப்பாங்கர் மூடக்கமுகின் மடற்கீன்று களித்துவரு
திருக்காஞ்சி புரத்தி றைவரே—காம்பரடியே

குறித்தோர்ந்து தடிக்குளுடல் வளைத்தாம்பி மூளைத்தனைய
குடைக்காம்பு பிடித்து வரும்வே—தாந்தவிரதியீர்

குலக்காந்த ளெருத்தலெலி குலக்காந்தை யொருத்தியிரு
குடித்தீங்கு விளைத்து மிகுமால்—பூங்கொடியனையாள்

உறச்சேர்ந்து மடித்தலையில் வளர்த்தேங்கள் தமக்குமலள்
உயிர்ப்பாங்கி தமக்கு மலள்பா—தாம்புயமலரே

உலப்போன்ற பரற்பொதிய னடித்தீய்ந்து விரற்கருகி
உலக்காலன்ற சுரத்தில் வருவீர்—[1]சேர்ந்தழிதரிவீரே.

விலிபுத்தூரரைப்பற்றி அவர்மகனார் வரத்தருவார் பாடியவை.

1582. தார காயண வண்டலை தண்டலைச் சன்னியூர்
வீர ராகவ னருள்பெறு வில்லிபுத் தூரன்
ஊர ராமுடி மண்மிசை யுயர்புகழ் நிறுத்தித்
தீர காளம் பெறுதலின் யாரினுஞ் சிறந்தோன்.

1583. எங்குமிவ னிசைபரப்பி வருநாளில்
யாமுரைத்த விந்த நாட்டிற்

கொங்கர்குல வாபதியாட் கொண்டானென்
றெருவண்ணமைக் குரிசி றேன்றி

(1581) மதுரைத் தமிழ்ச்சங்கப் புத்தகசாலையிலுள்ள காஞ்சிப்புராணக் கலித்துறைப்பிரதியிற் கண்டது (செந்தமிழ், தொ-5, பக். 107). [1]தோர்ந்தளி.

வெங்கலியின் மூழ்காமற் கருநடப்பேர்
வெள்ளத்து விழாம லுண்காஞ்
சங்கமென மூச்சங்கத் தண்டமிழ்நூல்
கலங்காமற் றலைகண் டானே.

1584. ஆற்றியமெய்ச் செல்வத்தா லளகையையென்
றிருங்கவிஞ லமர ரூரை
மாற்றியபொற் றடமதில்சூழ் வக்கபா
கையினறத்தின் வடிவம் போலத்
தோற்றியவக் கொங்கர்பிரான் சூத்தமிழி
லுட்கொண்டான் சுற்றத் தோகும்
போற்றியவிப் புவிமுழுதுந் தன்றிருப்பேர்
மொழிகொண்டே புரந்தா னம்மா.

1585. பிறந்துய்யக் கொண்டவனிப் பேருலகம்
பெருவாழ்வு கூரு நாளில்
றிறைத்தபுகழ்ச் சனிநகர்வாழ் வில்லிபுத்தூ
ரனைநோக்கி நீயு நாலும
பிறந்தநிலைக் கிசைகிற்பப் பாரதமாம்
பெருங்கதையைப் பெரியோர் தங்கள்
சிறந்தசெவிக் கமுதமெனத் தமிழ்மொழியின்
விருத்தத்தாற் செய்க வென்ரூன்.

காரியாசான்.

1586. பொன்னி காட்டிப் பொருந்திய [1]புகழோன்
மன்னவர் [2]கோமான் வழிமுத லுடையோன்
முத்தமிழ் செரிவோன் முகியம் பெரும்பதி
[3]மத்திமத் தலத்தின் மறையவர் வாழ்தும்
குற்றமில் காட்சிக [4]கொறுக்கையர் கோமான்
புத்தன் புதல்வன் [5]காரியென் பவனே.

(1586) கணக்கதிகாரம் பாயிரம்; சென்னை மியூஸியம் கையெழுத்துப் புத்தகசாலைப்பிரதி. (மியூ. புத்தக அட்டவணை, ii, பக். 473, 546.) [1]புகழ் பெறும். [2]சேவை. [3]மத்திமபத்தன்மை. [4]கொற்கையர். [5]புத்தன்புதல்வன் புராரியென் பவனே; புத்த னருளிய புதல்வன் மேன்மைக், கணக்கர் சிரோமணி காரியென் பவனே.

1587. எண்ணி லிலைவைத் தியம்புங் கணக்கெல்லாம்
மண்ணிலற வோர்க்கு வருத்துரைத்தான்—ஒண்ணுதலாய்
பாரின் முழுதும் பரந்த புகழ்க்கொறுக்கைக்
காரிதான் சொன்ன கணக்கு.

காளமேகப்புலவர்.

அதிமதுரகவிராசன் குதிரை யேறிப் பின்னே காளவரப் பாடியது.

1588. கோக்குதிரை மின்குதிரை கோவன்மது ராவொன்னர்
மாக்கு திரையெல்லா [1]மண்குதிரை—நூக்குதிரைத்
திங்கக் கரைக்குதிரை சொக்கன் குதிரைதது
ரங்கக் குதிரைகளே யாம்.

அதிமதுரகவிராயனுக்குரிய கட்டியத்தை அசதியாடிக் கூறியது.

1589. அதிமதுர மென்றே யகில மறியத்
திதிமதுர மாபெருத்துச் சொல்லும்—புதுமையென்ன
காட்டிச் சரக்குலகிற் காரமில் லாச்சரக்குக்
கூட்டிச் சரக்கெனவே கூறு.

கவிராயர் 'உமக்குப் பாடத்தெரியுமோ' என்னக் காளமேகம் கூறியது.

1590. இம்மென்னு முன்னே யெழுநூறு மெண்ணூறும்
அம்மெனவே யாயிரமபாட் டாகாதோ—சும்மா
இருந்தா லிருப்பே னெழுந்தேனே யாயிற்
பெருங்காள மேகம் பிளாய்.

புலவர்தழுவிப் பாடியது.

1591. சதுரியுற் றியகட லுப்பென்று நன்னூற் கடலின்மொண்டு
வழியுற வொத்திய வரையினிற் கால்வைத்து வன்கவிதை
மொழியும் புலவர் மனதேதி யிடித்து முழங்கிமின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே.

ஆருலீல் அதிமதுரகவிராசனுடன்வந்து
'கோயிலிலே ஒருகவி பாடுக' எனக் காளமேகம் பாடியது.

1592. சேலை யுடையழகா சேவரகண் டாகழுநீர்
மாலை யழகா மணிமார்பா—வேலை
அடங்கார் புரமெரித்த வாரூரா வீதி
விடங்கா பிரியா விடை.

(1587) மியூயியம் புத்தகவட்டவணை, i, ii, பக். 475. (1588) தமிழ்நா. 207. [1]மனைக்குதிரை. (1589–91) தனிப்பாக்கள். (1592) தமிழ்நா. 208.

அதிமதுரக்கவிராசன் முதலிரண்டடிகளைப்பாடக் காளமேகம் துறையடிகளை நிரப்பிப் பாடியது.

1593. நாணெண்ரு னஞ்சிருக்கு நற்சாபங் கற்சாபம்
பாணந்தான் மண்டின்ற பாணமே—தாணுவே
சீராரூர் வாழுஞ் [1]சிவனேயஃ தெப்படிநீர்
நேராரூர் செற்ற நினைவு.

திருமலைராயன், கங்கை தடத்தில் அடங்தும்படி பாடசீசொன்னபோது அப் புலவர் பாடியது.

1594. விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும்—பெண்ணே
இடத்திலே வைத்த விறைவர் சடாம
குடத்திலே கங்கையடங் கும்.

பிராமணர் அம்மைச்சிவீட்டைப் பிடுங்கியபோது அப்புலவர் பாடியவை.

1595. பெருமாள் திருநாளைப் பேயாக்க வென்ரே
வருமாண்டு தோறுமிந்த மாண்பா—ஒருநாளும்
மாக்குதிரை யேறறியார் மாசனங்கா ளாமணக்குஞ்
சாய்க்குதிரை யேறினர் சாம்.

1596. பாப்புக் குரங்கைப் படையாகக் கூட்டிவந்தீர்
தேப்பெருமா ளேகச்சிச் செல்வரே—கோப்பமைந்த
கொம்மைச்சிங் காரலங்கைக் கோட்டையென் ரு கொண்டீரோ
அம்மைச்சி வாழ்வா ளகம்.

சைவரிக்கும் தாதரிக்கும் சண்டையானபோது அப்புலவர் பாடியது.

1597. சீரங்கத் [2]தாருந் திருவானைக் [3]காவாரும்
போரங்க மாகப் பொருவதேன்—ஓரங்கள்
வேண்டாமி தெல்லாம் விகற்பந் தெரியாதோ
ஆண்டாருந் தாதருமா னால்.

'சீரங்கத்திற் பிள்ளையார் வருவார்' என்றதற்குப் பாடிய வெண்பா.

1598. தந்தை பிறந்திறவாத் தண்மையாற் ரு ன்மாமன்
[4]அந்தம் பிறந்திறக்கு மாதலால்—மூந்தாமரி
நாணிக்கு வில்வேளு மேகலான் ரண்மாமன்
காணிக்கு வந்திருந்தான் காண்.

(1593-94) தமிழ்நா. 208, 209. [1]சிவனேநீ யெப்படியோ, நேரார் புர மெரித்த நோ. (1595–96) ஷெ. 199, 200. (1597) ஷெ. 203. [2]தார்க்குந், [3]காவார்க்கும். (1598) ஷெ. 201. [4]அங்கம்.

ஞானவரோதயர் மதுரைக்குப்போனபோது காளமேகம் எழுதியனுப்பிய கவிதை.

1599. முதிரத் தமிழ்தெரி நின்பாட றன்னே முறையறிந்தே
எதிரொக்கக் கோப்பதற் கேழெழு பேரில்லை யின்றமிழின்
பதரைத் தெரிதரக் கோவில்லை யேறப் பலகையில்லை
மதுரைக்கு நீசென்ற தெவ்வாறு ஞான வரோதயனே.

பாகவதரிட்ட சமத்தியைப் பாடியது.

1600. தடக்கட லிற்பள்ளி கொள்ளுவம் யாமதைச் சங்கரனார்
அடற்புலிக் குட்டிக் களித்தன ராலது கேட்டுநெஞ்சம்
நடுக்கம தற்றது கைகா லெழாநனி னத்தியென்னே
இடுக்கடி பாயைச் சுருட்டடி யேறடி யம்பலத்தே.

கடனடுவிற் செந்நா ளெழப் பாடியது.

1601. சுத்தபாற் கடலி னடுவினிற் றூளி
தோன்றிய வதிசய மதுகேள்
மத்தகக் கரியை யுரித்தவன் மீது
மதன்பொரு தழிந்திடு மாற்றம்
வித்தகக் கமலை செவியுறக் கேட்டாள்
விழுந்துநொந் தயர்ந்தழு தேங்கிக்
கைத்தல மலரான் மார்புறப் புடைத்தா
ளெழுந்தது கலவையின் செந்தூள்.

சந்தியோபாலம்பனத்தில் சிவபரமாகவும் திருமால்பரமாகவும் பாடியது.

1602. இருந்தாரை கேள்வனே யோங்கு மராவை யெழுபுனலைத்
திருந்தாரை வன்னியை முன்முடித் தோன்செய்ய வேளைப்பண்டு
தருந்தாதை நாயகன் சுந்தரன் றூதன் சமரிலன்று
பொருந்தார் புரத்திட்ட நீப்போன் மதியம் புறப்பட்டதே.

பிறவாநெறியார்கூறிய சமத்தியை முடித்துப் பாடிய வெண்பா.

1603. நீரோ பிறவா நெறிகாட்டி யாரெமக்கு
நீரோ சமுசை நிலையிட்டீர்—நீரோலிவ்
விங்களமேன் செய்நீர் விடுங்கடுங்காற் றும்மழைகாட்
டுங்கடொட் புப்பகைகாட் டும்.

(1599) தமிழ்நா. 204. (1600) ஷே. 202. (1601-603) தனிப்பாக்கள்.

ஈயேற மலைதலுங்கியதாகப் பாடியது.

1604. வாரணங்க ளெட்டு மகமேரு வுங்கடலும்
தாரணியு மெல்லாஞ் சலித்தனவால்—நாரணனைப்
பண்வா யிடைச்சி பருமத்தி னுலடித்த
புண்வாயி லீமொய்த்த போது.

சிவபிரானுக்கு உரியனவெல்லாம் வாப் பாடியது.

1605. ஏறு கட்டிய கொட்டி லரங்கமே
ஈரி ரண்டு முகன்வா யிலாயமே

மாறு கண்ணப்பன் வாய்மடைப் பள்ளியே
வாய்த்த வோடை திருமால் வதனமே

வீறு சேர்திருத் தொண்டனில் லாளுந்தி
வேட்ட நற்கறி காய்கின்ற தோட்டமே

நாறு பூம்பொழில் சூழ்திலே யம்பல
நாரி பாகர்க்கு நாடக சாலையே.

செட்டிகள் காளமேகத்தைக்கண்டு தம்முள் பரிபாஷையாகப்பேச அதுதெரிந்து அவர்பாடியது.

1606. கருந்தலை செந்தலை தங்கா றிரிக்கால் கடையிற்சுற்றி
வருந்திக் [1]குடவற்குச் சாட்டிக்குங் கொத்திட்டு மாய்வதல்லாற்
கரந்தைக ளாண்டி லொருக்கால் வருவது கண்டிருந்தும்
அரும்புக்குங் கொத்துக்கும் வந்தார் பிழைப்ப தரிதென்பரே.

இடைச்சியொருத்தி நீராமிகக்கலந்து மோரைக்கொடுத்தபோது அவர் பாடியது.

1607. காரென்று பேர்படைத்தாய் ககனத் திறும்போதி
நீரென்று பேர்படைத்தாய் நீணிலத்தி லுற்றதற்பின்
வாரொன்று மென்முலையா ராய்ச்சியர்கை வந்தபின்பு
மோரென்று பேர்படைத்தாய் மூப்பேரும் பெற்றாயே.

மாவலிவாணனை அப்புலவர் பாடிய வகை.

1608. சொக்கன் மதுரையினிற் றொண்டர்க்கு முன்னளித்த
பொய்க்குதிரை சந்தைக்குப் போகுமதோ—மிக்க
கரசரணு வந்திக் கருமபுறத்தார்க் கெல்லாம்
[2]அரசரணு மாவலிவா ணு.

(1604—607) தனிப்பாக்கள். [1]குடவைக்குச். (1608) தமிழ்நா. 210, [2]அரசாணை.

புலிக்குட்டிசிங்கனைப் பாடியவகை.

1609. போன போன விடங்தொ றுந்தலை பொட்டெ ழப்பிறர் குட்டவே
புண்ப டைத்த மனத்த ஞெய பொட்டி புத்திர னத்திரன்
மான வீன னிலச்சை கேட ஞெழுக்க மற்ற புழுக்கையன்
மாச ஞம்புலிக் குட்டி சிங்கன் வரைக்கு ளேறி யிறங்குவீர்
பேனு மீரு மெமக்க வோசடை பின்னி வேப்பநெய் வார்க்கவோ
[1]பீவி ழிக்கரி யெழுத வோவொரு பீ று துண்ட முமித்தவோ
கான கந்தனில் வைக்க வோவிரு கால்விலங்கிடு விக்கவோ
[2]காத கங்கொடி சாட வோவொரு காரி யந்தனை யேவுமே.

திருக்கண்ணமங்கை நம்பிமாரைப் பாடிய வகை.

1610. தருக்குலவு கண்ணமங்கைத் தானத்தா ரெல்லாந்
திருக்குளத்து மீனெழுதித் தின்றூர்—குருக்கொடுக்கும்
நம்பிமா ரென்றிருந்தோ நாட்டி லழிகூத்தி
தம்பிமா ராயிருந்தார் தாம்.

சுவையப்பநாயனைப் பாடியகவி.

1611. சொருக்கவிழ்ந்த மூன்குடுமிச் சோழியா சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா புலையா—திருக்குடந்தை
நாயா நரியாவுன் ஞயகமுஞ் சேய்வடிவுந்
தாயார்தாண் கண்டிலளோ தான்.

வேளாளன் வீட்டிலிருந்ததில்லை என்று சொன்னபோது பாடியது.

1612. பாலலகை யன்று பரிந்தளித்த கோத்திரத்துக்
காலமென வந்த வடைக்கலவன்—சூலம
திருக்கையிலே யேந்துஞ் [3]சிவனிருக்க வேளான்
இருக்கையிலே [4]சாகலா ஞன்.

கண்ணபுரம் தீத்தாளைப் பாடிய வகைகவி.

1613. கந்த [5]மலரயன்றுன் கண்ணபுர மின்னருக்
கன்தவிள நீரைமூலை யாக்கினன்—சந்ததமும்
தோற்றமுள தீத்தாட்குத் [6]தோற்பைமூலை யாக்கினன்
எற்றெமவர்க் காமோ வினி.

(1609) தமிழ்நா. 219. [1]பிரிவிழிக்கரி. [2]கற்க ரங்கொடி. (1610) ஷே. 216. (1611) ஷே. 215; பிற்காலத்துக் கதையும் பாடமும் வேறுபட்டுள்ளன. (1612) ஷே. 213. [3]சிவனமிய. [4]சாகுடியா ஞன். (1613) ஷே. 217. [5]மலரயனூர். [6]தோப்பை.

ஒருதழந்தை புலவரைக்கண்டு அஞ்சித் தன்தாயிடம் அழதுசெல்ல, அவள்கண்டு 'உன்னைக்கொடுக்க' என்று கைநீநெரித்தபோது பாடியது.

1614. என்னைக் கொடுத்தா விரக்கமுனைக் குண்டாமோ
வன்னைக் கமலமுக வல்லியே—துன்னுமதக்
காட்டானைக் கோட்டுமுலைக் காரிகையே நீபயந்த
கோட்டானைத் தானே கொடு.

திம்மி என்னுந் தேவடியாளைப்பாடிய வசை.

1615. எமிரா வோரி யென்பா னெந்துண்டி வஸ்தி யென்பாள்
தாமிராச் சொன்ன வெல்லாந் தலைகடை தெரிந்த தில்லை
போமிராச் சூழுஞ் சோலை பொருங்கொண்டைத் திம்மி கையில்
காமிராப் பட்ட பாடு கண்ணையிற் பாடு தானே.

தம்மை யிகழ்ந்தவர் ஊர் அழியப் பாடியது.

1616. கோள ரிருக்குமூர் கோள்கரவு கற்றவூர்
காளைகளாய் நின்று கதறுமூர்—நாளையே
விண்மாரி யற்று வெளுத்து மிகக்கறுத்து
மண்மாரி பெய்கவிந்த வான்.

தடவாசல் விண்ணுள் வசை தானேபாடச்சொல்லப் பாடிய கவி.

1617. செக்கோ மருங்குல் சிறுபய றேனஞ் சிக்களகம்
[1]லைக்கோற் கழிகற்றை யோகுழி யோவிழி வாவிதொறும்
கொக்கேறி மேய்குட வாசல்விண் ணுள்வரைக் கோம்பியனீர்
எக்கோ படைத்தது நீரே தெருப்பி லெரிந்தவரே.

பாதிவெண்பாவில் திருமாலவதாரம் பத்தும்வர அப்புலவர் பாடியது.

1618. மெச்சுபுகழ் வேங்கடவா வெண்பாவிற் பாதியிலென்
இச்சையிலுன் சென்ம மெடுக்கவா—மச்சாகூர்
மாகோலா சிங்காவா மாப்மா ராமாரா
மாகோலா மாவா வாய்.

நாலைக்காத்தான்சத்திரந்தை இழித்துப் பாடியது.

1619. கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்றன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதி லரிசிவருட்—தத்தி

(1614—16) தனிப்பாக்கள். (1617) சமிழ்நா. 212. [1]லைக்கோல் களின் கற்றை. (1618) அதிமதுரகவிராயர் வினவ இது பாடப்பட்டதென்பர். (தனிப்பா). (1619) தனிப்பா.

உலையிலிட வூரடங்கு மோரகப்பை யன்னம்
இலையிலிட வெள்ளி யெழும்.

புங்கனூர்கிழவன் நடத்திய கலியாணத்திற் பசியால் வருந்திய ஒருபுலவர் பாடியது.

1620. வெண்ணெயும்பார்த்தன்னைகண்ணெயும்பார்த்துத்தன்மெய்யிற்பட்ட
புண்ணெயும் [1]பார்த்த திருநெடு மால்புங்க னூர்கிழவன்
பண்ணெயுஞ் [2]சேலுக ளுந்தட நீள்கயல் பாயுநெடுங்
கண்ணெயுங் கெண்டை புரட்டுங்கல் யாணத்திற் சென்றவர்க்கே.

ஆசுகவிராச சிங்கம் கடிகையாரைப் பாடியது.

1621. [3]செந்தமிழோர் தங்களிரு சீபாத தூளிபொர
வந்த புலவோர்தம் மார்பாணி—கந்தன்
அடிகையா ரப்பரவு மாசுகவி ராசன்
கடிகையார் கோலா கலன்.

பாண்டியராசா 'ஆர்' என்று கேட்டபோது அப்புலவர் பாடியது.

1622. தென்பா ராளு மறிவிற் குறுமுனி
தெக்கிணை கயிலையில்வாழ்
செங்குந் தக்குல வேங்கட ராயன்
திருவா சற்புலவன்

என்பேர் வண்ணக் கட்சிய தன்றி
யெதிர்த்தவர் மார்பாணி

இந்தத தேசப் புலவர் மனத்துக்
கிடியென வந்தேன் காண்

உண்பால் யாண்வர வாசற் காரர்க்
குத்தா ரம்பண்ணி
யுள்ளுக் கென்னை யழைப்பித் தாசி
லுரைக்குங் கவிதைகள்கேட்

டென்பால் வரிசைகள் [4]பரிசுக ணல்கி
யிரட்சித் திடவேறும்
இராமா சீவிலி மாரு பாண்டிய
ராச வரோதயனே.

(1620) தமிழ்நா. 190; சோழ மண். சத. 72; [1]பார்க்குந். [2]சேலுக ளும்வா வியுங்கயல் பாயுமவன். (1621) ஷெ. 238. [3]செந்தமி ழோர்தங்கள் சீர்பாத. (1622) ஷெ. 239. [4]பரிசில்க, பரிசைக.

திருவண்ணமலையிற் பரமேசுரப்புலவன் பாடியது.

1623. [1]கண்ணு மதிக்குங் கவிராச சிங்கங் கடந்திகிரி
வண்ணு மலையப்பர் மேல்வண்ணம் பாடிமுத் தாலத்திகொண்
டெண்ணு யிரமட வார்சூழப் பல்லக்கி லேறிவந்தான்
உண்ணு முலையெல்லன் மூலக டோறு மொதுங்கினனே.

ஒருவரை விடநீண்ட அஃதிறங்கும்படி
ஆசுகவிராசசிங்கத்தின் மாணாக்கர் பாடியது.

1624. ஆறுமுக ஞாணை யவனடியார் தம்மாணை
ஏறு மயிலாணை யென்ஞாணை—வீறுபுகழ்
தேறு கவிராச ராசன் றிருவாணை
வறிய கொம்பா லிறங்கு.

உண்ணுழலை எல்லப்பநயினார் பரமேசுரப்புலவனைப் பாடிய வகை.

1625. பாழ்ப்பா மடத்திற் பரமாவுன் பாழ்ங்கவிதை
கேட்பாரெல் லாம்புத்தி கெட்டபேர்—தோட்பாவு
மோணன் விழுந்தாலு முண்பெரி காரமிது
வாணு ளளவே வரும்.

வாதுங்காமபாண்டியன் பிரமோத்தரகாண்டம் பாடி
அரங்கேற்றியது.

1626. கறங்குதிரைப் பெருங்கடல்சூ ழுனிபுரத்
திகல்கடிந்து கலியை மாற்றி
மறந்திகழ் விலங்கிலேவல் வரதுங்க
ராமனிய மதுரைச சங்கஞ்
சிறந்தவறு காற்ப்டச் சனிற்பிரபோத
சரகாண்டஞ் சென்சொ லாக்கி
யறந்தழைக்குங் கவிர்செவிக் காரமூ
லகவாகு மேற்றி ஞனே.

மதுரை பாண்டியன் தேவி பணியாகத்துடத்துள் மதுரைக்கு
விடுத்த கவி.

1627. [2]என்னையவ ரறமறந்தும் யானவரை
மிகநினைந்தென் கிருந்து வாட
முன்னைவினைப் பயன்றானே விப்பிறப்பிற்
செய்ததவ முடிந்த வாறே

(1623) தமிழ்நா. 240. [1]கண்ணுநர்; கண்ணுய். (1624) திருக்காளத்தி காதருலா, தூலாசிரியர்வரலாறு, பக். 7. (1625) தமிழ்நா. 241. (1626) பிரமோத். காண். பாயிரம். (1627) தமிழ்நா. 165. [2]என்னையிவ்வா றவர்மறந்தும்.

கன்னல்மத னபிராமன் வரதுங்க
ராமனியற் காசி நாட்டில்
அன்னவயற் குருகினங்கா ளினியெவ்வா
றுயிர்தரித்திங் காற்று மாறே.

1628. செப்பாரு முகிழ்முலையா ரெல்லாருங்
கணவருடன் சேர்ந்து வாழ
ஒப்பாரு மில்லாவென் கணவருடன்
யான்கூடி யுறவா டாமல்
வெப்பாலு மிகுகாமத் தியராலும்
நாடோறு மெலிந்து வாடி
இப்பாடு படவென்றே விறையவனென்
தலையோட்டி லெழுதி னனே.

1629. எண்டிசா முகமுக் திங்க ளிளம்பிலா வெள்ளங் காயக்
கொண்டமால்பெருகுத்தோ றுங்கொழுங்கணீர் முலையிற்கோப்பப்
பண்டுகா மறியாக் காமத் தியரினுற் பலவு செல்லாம்
வண்டுகா ளுரையீ ருங்கள் வரதுங்க ராம னுக்கே.

ஐயம்பெருமாள் சிவத்தகவிராசன்.

1630. வையம் புரக்கும் வரோதய வழுதி மகிழச் சமர்த்மாரி
பெய்யுஞ் சிவந்த கவிமேக மருகன்.....ருமான்
ஐயம் பெருமாள் சிவத்தகவி ராசன் காசி நகரமர்ந்தோன்
பொய்யொன் றில்லா முத்தமிழ் நூல் புலவர் புகழப் புகன்றனனால்.

1631. மூன்றுகண் ணனலுக்குச் சூல முளரிக்கண் ணனலுக்கு கோதி
லென்றவா யிரத்தி னனலுக் கிலகுவ சிறுமை மூன்றும்
தோன்றிய தன்னை மூன்றுட் கடைந்தருள் சொழில்வ லாளன்
போன்றதலே லாயு தன்சொற் புகலையம் பெருமாள் சொற்றான்.

அதிவீராம பாண்டியன் கூர்மபுராணம்பாடி அரங்கேற்றியது.

1632. கடலக முழுதும் பொறித்தபேழ் வயிற்றுக்
கடவுண்மோட் டாமையெம் பெருமான்
வடமொழி தொகுத்த தெய்வமாக் கதையை
வடித்தசெந் தமிழினுற் செய்தான்

(1628-29) தமிழ்நா. 166—67. (1630-31) புராவசனைப்பாயிரம். (செந்தமிழ். தொ. 6. பக். 82).

பமெதஞ் செருக்கிப் பாகுடல் பிளந்து
படர்சிறை மழலைவண் டோச்சும்
அகிசினக் களிற்று மானவேள் வழுதி
யடலதி வீரபூ பதியே.

1633. எதிர்மலைக் தேற்ற வெஞ்சமத் தரச
ரிகிதிறை கடையளக் தறியா
துரையும் புகாரும் வஞ்சியும் புரக்கும்
மானவேல் வழுதியர் பெருமான்
அகிர்பொலங் கழற்கா லடலதிவீர
னரிறபத் தெரிந்துகன் கிசைத்த
முகுதமிழ்க் கூர்ம புராணமுற் றுணர்ந்தோர்
முத்திவீட் டினிதுவீற் றிருப்பார்.

மே பாண்டியன் நைடதம்பாடி அரங்கேற்றியது.

1634. நிலவுபொழி தனிக்கவிகை கிடதர்கோன்
புகழ்ச்சரித நெடுநீர் வைப்பிற்
புலவர்களி யமுதமாழுகு புதுமொழிகூட்
டுணைத்தமிழாற் பூனைதல் செய்தான்
வலனுயர்த்த வண்ணலஞ்சேல் வான்றெடிபொற்
கோட்டிமய வரையிற் நீட்டி
அலர்தலைமா நிலம்புரக்கு மதிவீர
ராமனிக லரச ரேறே.

அதிவீரராமபாண்டியனைத்தாய் பாடியது.

1635. செஞ்சுடரின் மைக்தனையுக் தென்னிலங்கை வேக்தனையும்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே—விஞ்சு
விரதமே பூண்டிக்த மேதினியை யாண்ட
பரதனையும் ராமனையும் பார்.

அறம்வளர்த்தழதலியார்மேற் பாண்டியன் கலம்பகம்பாட, 'அங்ஙனம் பாடலாமோ' என்ற புலவரிக்த, அவ்வரசன் கூறியது.

1636. உங்கண் மனக்தெரி யும்புல வீரொரு சிர்மரபோக்
திங்கண் மாரினைத் திங்களின் கூடச்செம் பூரமா

(1632 33) கூர்மபுராணம் முதலு முடிவுங் காண்க. (1634) நைடதப் பாயிரம். (1635) தனிப்பா. (1636) தமிழ்வி. 163.

துங்கன் மரபினிற் கங்கையுஞ் சூடினன் சோழியன்றே
எங்கண் [1]மரபொன் றெனக்கவி பாடினம் யாமவற்கே.

தத்துவப்பிரகாசர்

திருவாரூர்க்கோடி இறக்காமல் தகைந்த பாட்டு.

1637. மருவுபுகழ் க்ருஷ்ண [2]மகராச ராணே
அரிய வடமலையா ராணே—திருவாரூர்ப்
பாகற் கொடியறுப்பார் [3]பாதத் திருவாணை
த்யாகக் கொடியிறக்கா தே.

கிருட்டிணராயரை அம்முனிவர் பாடியது.

1638. ஸழித் துலுக்கல்ல வொட்டியான் ருணுமல்ல
வீழித் துலுக்குவந்து மேலிட்டே—ஆழி
சிறந்தசே ராரூர்த் தியாகருடைப் பூசை
இறந்ததே கிருட்டிணரா யா.

இதுகேட்டு ராயர் [4]சிரிபட்டரை மாற்றிடபோது அம்முனியார் பாடியது.

1639. உண்ட வயிற்றி லுதிக்காத்த லிட்டதே
தொண்டரே வீழித் துலுக்கரே—பண்டெல்லாம்
அப்ப [5]மவலென் றதிரசமுஞ் சோசைகளுங்
கப்புவது போச்சே கவிழ்ந்து.

சாளுவநாயக்கர் படுத்துக்கொள்ளச் சொன்னபோது அம்முனியார் பாடியது.

1640. மூட்டை கலம்புழுதி மூக்காலுஞ் சுத்தப்பாழ்
வீட்டை விதியாய் விட்டாயே—போட்ட
தெக்கெல்லாம் [6]நிற றலையணையோ வைக்கோல்
படுக்கலா மோசொல்லப் பா.

தத்துவப்பிரகாசர்பாட்டைக்கேட்டுத் திருத்தோணியப்பர் பாடியது.

1641. குட்டுதற்கோ பின்னோப்பாண் டியனு நில்லை
குறும்பியள வாக்காதைக் [6]குழித்துத் தோண்டி
[7]எட்டிநா வறுப்பதற்கோ சீப்பி யில்லை
யிரண்டொன்று மயிரைமுடிந் திறங்கப் போட்டு

---

[1]மரபுண் டெனக்கவி. (1637) தமிழ்நா. 225. [2]மகாராய. [3]பாதர்.(1638-39) ஷே 226, 227. [4]சிலபட்டரை. [5]மவலென் றதிரசமுர். (1640—41) ஷே 228, 230. [6]குறித்துத்; குடைந்து. [7]எட்டினாமட் டறுப்பதற்கோ.

வெட்டெதற்குக் கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டுக் கவிப்பாட்டு விரைந்து பாடித்
தெட்டெதற்குத் தமிழறியாத் திறைக ளுண்டு
[1]தெல்லடித்துப் புலவனெனத் திரிய லாமே.

'தத்துவப்பிரகாசபண்டாரத்துக்கு இலக்கணம் வருமோ' என்றபோது அவர் பாடியது.

1642. கவடிகளா கத்திரியுங் கள்ளர்கா ணன்னூற்
சுவடியிருந் தாவதென்ன சொல்வீர்—குவலயத்துக்
காட்டுக் கெறித்தநிலாக் கண்ணிரண்டு மில்லாதான்
வீட்டுக் கெறித்த விளக்கு.

தத்துவப்பிரகாசர், 'கூத்தனூர்ப்பன் வாலகோகிலங்கவிகள் எப்படி' என்றுகேட்டபோது சொல்லியது.

1643. மன்கவி தாவும் பொழிற்கூத்த னூரப்பன் [2]வாய்தலைமன்
தன்கவி தென்னிய பால்வால கோகிலக் தானுரைத்த
நன்கவி பாலுக் கிடுசர்க் கரைக்கவி நாங்கள்சொல்லும்
புன்கவி யுப்பொதி காயமென் றேசொல்லிப் போற்றுவதே.

ஒட்டக்கூத்தன் என்றெரு புலவன்வர [illegible]புலவர் பாடியது.

1644. பறியாரோ நின்வாயிற் பல்லதனைப் [3]பாரோர்
முறியாரோ நின்முதுகின் முள்ளைச்—சிறியவொரு
மட்டப்பேர் போதாதோ வாக்கிதுவே யானக்கால்
ஒட்டக்கூத் தன்ரு னுனக்கு.

ஒருவன் புடவைதரப் பார்த்துச்சொல்லியது.

1645. வெற்றிப் பாடெங் குணப்பாடெம் வீரப்பாடெ மொருகவியிற்
றெற்றிப்பாட வதுகேட்டுச் சேரக்கரசர் துகிலீந்தார்
பற்றிப் பார்க்க வதனூடே பலதே வீசர் வீற்றிருந்தார்
சுற்றிப்பார்க்கப் பயப்பட்டுத் தூரவைத்துத் தொழுதோமே.

திருவாதூர் நாகராசநம்பிசெய்த குற்றம் கிள்ளைக்குச்சொல்லுபித்துத் தலத்தார் இராயருக்கு அறிவித்தது.

1646. மூன்ரு ளறுபத்து மூவரிருந் தாரவரில்
இன்ரா விரண்டுபே ரேகினர்—கன்ரு
ருக்குகின்ரு ரன் விற்றுவிட்ட நாகரச நம்பி
இருக்கின்ரு ரன் திருட்டிணரா யா.

---

[1]தேசமெங்கும். (1642) தமிழ்நா. 237. (1643-45) ஷே 232-34. [2]வாழ்தலைவன். [3]பாவோர். (1646) ஷே. 189.

கச்சியப்பனே உதைத்த புலவன் பாடியது.

1647. மண்பகுமோ வெய்யிலிலே வாடுமோ புல்லரிரு
கண்பகுமோ வெப்போதுங் கற்றவர்க்குப்—பண்புடனே
மெச்சியப்பா லுங்கொடுக்கும் வீறுவல்லெக் காளத்திக்
கச்சியப்ப னேயுதைத்த கால்.

ஒருபுலவன் வண்டியூர்க்கேழந்தருளப்பண்ணுகிற மண்டபத்திற் பாடியது.

1648. அடும்போதுஞ் சொல்லில்லை யென்று மடுஞ்சோ
றிடும்போதுஞ் சொல்லில்லை யென்றுங்—குடும்பமெனும்
பேய்க்கொளித்துப் போகின்றேன் பேரையூ ராதிபனே
தாய்க்கொளித்த சூலுண்டோ தான்.

ஓதுகேட்டு வேம்பத்தூர்ப் பிராமணப்பிள்ளையன் பாடியது.

1649. ஒன்று மறியோங்கா மும்மாணை யப்பரே
சென்று தொழில்புரியுஞ் சீர்பதியார்—கன்றக்
கயிற்றினுற் கட்டிக் கதவுபடத் தெற்றி
இயற்றினு லென்செய்வோம் யாம்.

ஒரு தாதியைப் புலவனெருவனுக்கு அளிப்ப அவளுடலிற்கொல்லியது

1650. முன்னு ளிருவர் முயங்கும் படிகண்டு
மன்னு [1]பனிதவிர்த்து வாழ்வித்தாய்—தின்னுந்தஞ்
[2]சேனைகண் டாலிக்குஞ் செம்பியர்கோன் செங்கண்விழித்
தானைகண் டார்தா மவர்.

உதிசிதேவர்.

1651. வையக மடந்தை வாழ்முக மாகிய
மைவளர் தொண்டையம் பதிக்கு வடாஅது
கன்னி காரத்து மன்னிய பெரும்புகழ்ப்
பழியில் பல்குடிப் பையூர்க் கோட்டத்
தொழியாச் சீர்த்தியொடு வழியறம் பயப்பினும்
ஆங்கலை கருதா வன்புகொ ளியல்பிற்
றூங்கா வீகைச் சான்றோர் குழீஇய
காரணி செர்நெற் கழனியம் படப்பை
ஆரணி நெடுந்துறை யார்ப்பா கைக்கோன்

(1647—49) தமிழ்நா. 196—198. (1650) கூடி. 173. [1]பணிதவிர்த்து. [2]சேனைகண்டா லாலிக்குஞ். (1651) திருக்கலம்பகப்பாயிரம் (எட்டுப்பிரதி).

அரசாக் கரசெனு முரைசால் பெருமையிற்
முவில் வடபான் மொழிதலை மணந்த்
தேவ னென்னுந் தென்றிசைப் பெரும்பெயர்
மாவண் டமிழின் வாதுசெறி பயின்ற
சாவக நிலேயோன் சாக்கிய குடாரன்
காதல் சார்ந்து மேதகப் புனேந்த
திருமலி பிண்டித் தெய்வ நாயகன்
அருமலர்ச் சேவடிக் கமர்ந்தன னணிந்த
தொன்மலர்க் கலம்பகத் தூய மாலே
பன்முறை யோதுநர் பழிச்சுந ரெல்லாம்
சேதியம் பெருகெறி சேர்குவர் விரைந்தே.

வேம்பத்தூர்ப் புலவர்களும் அவர்கள் இயற்றிய நூல்களும்.

1652. திருமருவு பஞ்சலக கணவேலே பொங்கிச்
செழிக்குமிரு கிதிகொழிக்கும்
தென்னிம்பை நகரமதில் வாழுமந் தணரிற்
சிறந்தசெவ் வைச்சுடுவார்
சுருதிபுகழ் பாகவத பௌராண மோதினர்
தலங்கும்வா சிட்டமதனேச்
சொல்லிஞ ரானவந் தார்மாத வப்பட்டர்
சொன்னதிரு விளேயாடலும்

* * * * * *
* * * * *
* * * * * *

புகழ்மவுத் தரியலகரி
பெருமைமிகு கவிராச பண்டிதர் புகன்றனர்
பிரதாபமிகு திருவெல்வேலிப்
பெருமா நாயன்சொனுன் வெல்லையங் கோவைப்
பிரபந்தவகை புகழ்பெருகவே.

செவ்வைசூடுவார்.

1653. தருக்குமது பிறப்பொழித்துக் கதிகொடுக்கும்
பாகவத கதையை முன்னம்
மருக்குமுயர் வடமொழியாற் புனேந்தருளவ்
வியாதமுனி வரனே மீள

(1652) செந்தமிழ். தொ-4, பக். 370; திருவாலவாயுடையார் திருவிளையாடல். (1653) ஷே. ஷே., பக். 409.

உதிக்குமிம்பை மாதவபண் டிதச்செல்வைச்
சூடியென வுலகு போற்ற
விதிக்குமறை யவர்குலத்திற் ரோன்றியருங்
தமிழாலும் விளம்பி னானே.

ஆளவந்தார் மாதவபட்டர்.

1654. தாளவந்த மலரோன்றன் மனத்துதித்த
வசிட்டனயன் றன்பாற் கேட்டு
நாளவந்தான் போகாத வியாமனுக்கங்
குபதேச நல்கி யிங்கே
யாளவந்தான் வீரையின்மா தவபட்ட
னம்சவவ தார மாகி
மீளவந்தான் வந்துதமிழ் வசிட்டரா
மாயணமும் விளம்பி னானே.

பெரும்பற்றப்புலியூர்நம்பி.

1655. பல்லக்கு மேலேறிப் பல்லக்கு மேலிட்டோம்
பல்லக் கணிசொக்கைப் பாடினேம்—பல்லக்கு
மன்னு குறையுண்டு மண்மதிக்கும் விண்மதிக்கும்
என்ன குறையுண் டெமக்கு.

1656. ஆர்பதமத் தார்ச்சல்லி யாண்டான் கவுணியர்கோன்
நம்பெரும்பற் றப்புலியூர் நம்பிவியக்—தெம்பெருமான்
ஆதிவிளை யாட லறுபத்து நான்கினையும்
ஓதி முடித்தா னுவந்து.

1657. கார்வளங்கொள் மண்டலத்துக் கப்பிரிந்தி நாட்டிரைத்தோன
சார்பரசு ராமச் சதுர்வேதி மங்கலமாம்
சீர்தருதென் சல்லிக ராண்டான்சொற் றில்லைநம்பி
ஆர்புனைவான் விளையாட லறுபத்து நான்கன்றே.

வீரைக் கவிராசபண்டிதர்.

1658. இன்ன தன்மைய நூலி னைக்கவி ராச ராச வதோதயன்
மன்ன னம்பிர மாதி ராயன் வடித்த கும்பொரு ளூறவே

(1654) ஞானவாசிட்டம், இரு. (1655—57) திருவாலவாயுடையார் திருவிளையாடல் நூறு. (1658) சௌந்தரியலகரி 5.

கன்ன லஞ்சில வேளை னுங்கவி ராச பண்டித னை யான்
சொன்ன யம்பெறு காவி யக்கவி சொல்ல வென்று தொடங்குவான்

கவிராசபண்டிதர்மகனார் வீரை அம்பிகாபதி.

[தென்காசி, மதுரை, திருநெல்வேலி, கருவை என்ற நாலூர்ப்பெயரும் இந்நாலூர்ச் சுவாமிபெயரும் அம்மைபெயரும் அமைத்துப்பாடும்படி பாண்டியனைக் கூறப் பாடியது.]

1659. இலகே ழகிலத்தர் சொக்கர்முத் தீச ரிபந்தொழுவோர்
கலைதேர் தென் காசி மதுரைநெல் வேலி கருவைவந்த
பலகேள்வ ருள்ளிரெம் பஞ்சுநிற் பீர்வந்து பாதந்தொழ
உலகே கயற்கண்ணி யேவடி வேயெங்க ளொப்பனேயே.

1660. கண்ணூறு சாதது மரியயன் போற்றுங கழைமுத்தற்குப்
பண்ணூறு சொல்வருக் ககோவை தன்னைப் பரிவுடனே
வெண்ணீ றணியம்பி காபதி வீரையில் வேதியன்சொற்
றெண்ணூறு மெட்டும் படிப்பார் தமக்கில்லைத் துன்பங்களே.

நல்லூர் வீரை ஆசுகவிராசர்.

1661. தண்கவிகைக் குரிசிலரிச் சந்திரன்றன்
சரிதமதைத் தாரணிப்போர் விருப்ப மெய்த
வண்கவிஞர் வகைவகையே வகுத்துரைத்த
வடமொழியுந் தென்மொழியின் வழுவி லாத
வெண்கவியுங் கண்டாருங்கிண் மாத ராடல்
விதங்கேட்டு மையெனவே வெருண்டு சோலைக்
கண்கவிகள் குறிபாயு நல்லூர் வீரைக்
கவிராச னெனவிருந்த கவிசெய் தானே.

மஹாகவிராசர் அரிசந்திரபுராணம்பாடி அரங்கேற்றிய காலம்.

1662. விதியினரு ளிருந்தவரிச் சந்திரன்றன்
வியன்கதையாம் வெண்கவியை விருத்த மாக்கி
அதிவிதமாங் கலியுகத்தில் வருச சாத்தம்
ஆயிரத்து நானூற்று நாற்பத் தாறிற்

(1659) சேதுநாடகத் தமிழும், பக். 12. (1660) தஞ்சைச் சரஸ்வதிமால்-பிரதி. (1661-62) அரிச்சந். புரா. பாயிரம்.

சதுமறைதேர் புல்லாணித் திருமான் முன்னே
சக்கரதீர்த் தக்கரைமேன் மண்ட பத்துக்
கதிதருசீர் நல்லூர்வாழ் வீரை யாசு
கவிராசன் கவியரங்க மேற்றி னானே.

கையாகார்.

1663. பேதையர் பித்த றியாத பாலர்சொற் பேதங்கொள்ளார்
ஓதினுங் குற்றக் தெரியார் பெரியவ ரோங்கிடப
கேதனன் பற்று மறவாத தேவைக் கையாகரன்மொல்
வேதியன் சொற்ற வரிச்சொற் பனுவலு மேம்படுமே.

1664. மேவு மரும்பொரு ளத்தாதி கேட்டிந்த மேதினியோர்
தாவும் வினைகெடச் சாற்றிய தென்றமிழ்த் தேவைமன்னும்
கோவை யிராமேச் சுரக்கோவை சொற்ற குருபரன்மற்
றேவுத லின்றி யமைத்தான்பத் தாவ தொலியியலே.

பகழிக்கூத்தர்.

1665. மாரனு மெனவடிவு கொண்டசே வகசரிதை
மாமுனி யுரைத்தசித்தர்
மணியிற் பெருங்கதை யெவர்க்குமள விடவொணு
மற்றதுந் தனேச்சுருக்கிச்

சேரரா னென்னுடைய புன்சொற்க ளாயிறுஞ்
செப்புவ னெனவிரு ப்பிச்
செந்தமிழ்ப் பாவாணர் திருவுளக் கருணையென்
சென்னியுற வைத்துரைத்தேன்

ஆரணம் மலர்செட் டிதழ்க்குவ னேயகவயலி
லகடெலாந் தொருகோடிசங்
கடைவிடக் கக்குருகு பெடைபெனச் சிறகா
லணைத்திடுஞ் செம்பிநாட்டு

வீரரா ராயணச் சதுர்வேத மங்கலம்
வினங்கவே வந்தருமால்
வேதியர் குலாதிபதி தர்ப்பா தனன்புதல்வன்
மிக்கபக ழிக்கூத்தனே.

(1663—64) கையாகரநிகண்டு (செந்தமிழ் தொ. 5, பக். 122). (1665) சிவகசிந்தாமணிச்சுருக்கம். செந்தமிழ், தொ. 6, பக். 182.

1666. சொல்லெயி லிரும்புனக் குற்றியை யடைந்தபுற்
கோடாதெனப் பழைமைநூல்
கூறுந் திறத்தைக் குறித்துக் கருத்திடன்
கூறினே னென்னுடையபுன்

சொல்லையும் பொருளையுங் காதையிற் படிவழுத்
தொகையையு மளந்துகண்டு
சோர்வுரைக் கப்பெரும் பாரமோ பணைமுலைத்
திடியிடைப் பவளவாய்வெண்

முல்லைநகை யங்கயற் கண்ணுமை மடந்தையுடன்
முன்னே முளைக்கும்பிரான்
மூடிரூடு மெம்பிரான் மூவாத தம்பிரான்
முத்தமிழ்த் திருவாலவாய்

வல்லைதனின் மதுரைமா நகரியி லிருந்திவை
யெடுத்துரைத் தேனுதலால்
இச்சல விசேடத்தை யெண்ணியும் பெரியோர்க
ளிகழப்ப டார்காணுமே.

1667. செந்தமிழ்க்கு வாய்த்ததிருச் செந்திற் பதிவாழும்
கந்தனுக்குப் பிள்ளைக் கவிசெய்தான்—நற்றேர்
கிருமாது சோமார்பன் றேர்ப்பாகற் கன்பு
சருமால் பகழிக்கூத் தன்.

சிதம்பரபுராணஞ் செய்யப்பட்ட காலம்.

1668. சூழு மாகடற் புடவியான் சுடர்முடிச் சகற்கீ
ரேழு நூறுடன் முப்பஃ திறையெத்தவாண் டெல்லைத்
தாழு மாமதிக் கடைமுடித் தனிமுத லென்றும்
வாழு மம்பலப் பெருமையை வழுத்தலுற் றனன்யான்.

பரஞ்சோதி.

(சிதம்பரப்பாட்டியலாசிரியர்)

1669. சிதம்பரப் பாட்டியலைச் செய்தான் றமிழாற்
சிதம்பர புராணமுதற் செய்து—விதம்பெறுசீர்
சேர்ந்த புராணத் திருமலோ தண்டுவத்தாற்
சார்ந்தபரஞ் சோதியென்பான் ரூன்.

(1666) சிவகெந்தாமணிச்சுருக்கம். செந்தமிழ், தொ. 6, பக். 183. (1667) திருச்செந்தூர்ப்பிள்ளைத்தமிழ்ப் பாயிரம். (1668) சிதம்பரபுராணம், பாயிரம். (1669) சிதம்பரப்பாட்டியற்பாயிரம்.

1670. பாடலாஞ் செந்தமிழைப் பாடி யரனருளைக்
கூடலா மின்பநலங் கொள்ளலாம்—பேடனுய்
நாட்டியசீர்ப் பாவினங்க ணுலுஞ் சிதம்பரப்
பாட்டியலைக் கற்றூர் பயன்.

1671. பூமன்னு பொழில்வெண்ணெய் மெய்கண்டான் சுச்சிப்
புகழ்புனைதத் துவஞானப் பிரகாசமாய் வந்து
பாமன்ன வுரையென்ன வவனருளா லவன்றன்
பதம்பரவிச் சிதம்பரப்பாட் டியலெனப்பேர் வகுத்தான்
மாமன்னு சிதம்பரபு ராணமுத னூலும்
மதுரையுலா வும்பகர்ந்தோன் மருவுகுல மைந்தன்
தேமன்னு புராணகலை பலதெரி புராணத்
திருமலைரா யகனருளின் றேசுபூண் டோனே.

1672. பாடி முறைமைச்சும் பன்னு தமிழ்தெளித்து
சூடும் பனுவற்குச் சொற்பொருள்க—ணுதற்கும்
எண்ணிலராய் நின்றூரு மிந்நூல் வினவியதேற்
கண்ணிலான் காட்டியது காண.

வரதராசர் பாகவதம்பாடி அரங்கேற்றிய காலம்.

1673. ஆயுமறை யோரெண்ண வருஞ்ச காத்தம்
ஆயிரத்து நானூற்றே டறுபத் தஞ்சாம்
தூயசுப கிருதுதனின் முதன்மா தத்திற்
றுலங்குகுரு வாரத்துத் திராட நாளில்
நேயமுட னெல்லிநகர் வரத ராசன்
நிகரிலரங் கத்திலர வணையி னேங்கும்
நாயகன்முன் னறிஞர்மகிழ்ச் திடவே வாசு
தேவகதை யரங்கேற் றி னலனுற் றானே.

அரசகேசரி இரகுவமிசம் பாடி அரங்கேற்றியது.

1674. வன்றிசைக் காளிதாசன் வடமொழி
தென்றி சைத்தமி ழாலனி செப்பகேன்
நன்றி சைக்கு முரைவழி நன்னெறிங்
குன்றி சைப்பது போலுங் குறிப்பரோ.

(1670-72) சிதம்பரப்பாட்டியற் பாயிரம். (1673) வரதராசர்பாகவதம், பாயிரம். (1674) இரகுவமிசப் பாயிரம்.

1675. இன்ன காதை யியன்ற விரும்பொருள்
துன்னு செஞ்சொற் றுகடபு தூய நூல்
பன்னு செஞ்சொற் பரராச சேகர
மன்ன னின்ப மனங்கொள வாய்த்ததே.

சேகராசசேகரன் தட்சிணகைலாசபுராணம் பாடியது.

1676. மணிநிறக் கண்டன் மாண்புறு கயிலையின்
அணிநிறக் கொடுமுடி யாயிரத் தோர்முடி
படவர சொதுங்கப் பறிதரு மிலங்கை
வடகட னிவெண் மாதிர மதிப்ப
வருமுக் கோண மலைதென் கயிலை
பரனரு ளருத்திரர் பதினொரு பேரும்
ஒருபது முகுந்தரு மொன்பது விரிஞ்சரும்
வருகடற் கடகமும் வழங்கிய மீனமும்
திருமலை தழுவிய தெசமுக ருருதனும்
பொருமத மலைகரிப் புரவலர் டலரும்
பூசையோ டிறைஞ்சிய புராண நூற் கதையை
ஆசறு தமிழி லறைகுதி யென்ன
அருமறை யுபநிட மாகச் சோதிடம்
விரிகலை பலவும் விளங்கிய குரவன்
சேயிலுக் திறலான் சிவனெறித் தவமுளான்
தாயிலு மினியான் தயாநிதி யனையான்
மூப்புரி நூற்பயன் மூரிய தாமன்
செப்பருஞ் சைவ ராச பண்டிதன்
அத்தா னித்தொடை யடிகொடு தொடுத்து
நத்தா விருத்த நலையறக் கூறினன்
நன்னு டனடைந்த நாரியர் கோமான்
பொன்னு டனடைந்த பொருவரு காதலன்
மருவலர் தங்கோ மாலித் திருத்திப்
பொருவரு புவியை யொருகுடைப் புரப்போன்
தென்னிலங் காபுரி திசைதொறு மருவும்
மின்னிலங் கியவேல் வேலாம் புயத்திப்
பாவா முடித்த பார்மூழு தாண்ட
விடலாண் வயமா வினங்கிய தொடியான்
இங்கை யாரியன் சேது காவலன்

(1675) இரகுவமிசப்பாயிரம். (1676) தட்சிணகைலாசபுராணப் பாயிரம்.

கக்கை நாடன் கற்றவர் திலகன்
ஆயுண் மறையுட னரிய சோதிடம்
பாய்திரைக் கடலுட் பலவு முணர்ந்தோன்
ஒப்பிலா மூத்தமி ழோர்ந்த
செப்ப ருஞ்செக ராசசே கரனே.

அந்தகக்கவி வீராகவமுதலியார் கச்சியிற்படித்தபோது
கந்தபுராணம் கச்சியப்பர் பாடியது.

1677. பொங்குதமி ழயோத்தியில்வாழ் தசரதனென்
பானிடத்தும் பூதூர் வேந்தன்
தங்கவடு கண்ணிடத்தும் வீரரா
கவரிருவர் தோன்றி னரால்
அங்கொருவ னெருகலோ மனெய்திடப்போய்
வசைபெற்ரு னவனி யின்பால்
இக்கொருவன் பலகலோ மனெய்திடப்போய்க்
கல்வியினு லிசைபெற் ருனே.

அந்தகக்கவி இராமாயணம் அவதானித்துச்சொன்னபோது
பாராட்சிங்கம் பாடியது.

1678. இன்னங் கலைமகன் கைம்மீதிற் புத்தக மேந்தியச்சப்
பொன்னம் புயப்பள்ளி புக்கிருப் பாளென்ன புண்ணியமோ
கன்னன் சளுக்கைக் கவிவீ ராகவன் கச்சியிலே
தன்னெஞ்ச மேடெனக் கற்ரூன் கனமுத் தமிழையுமே.

அப்புலவர் பாடிய தீட்டுக்கவிகளைப்பற்றி நிரஞ்சனநாதர் கூறியது.

1679. தீட்டுக் கவியென்று சொல்வர் சிலரத்தத் தீட்டுக்கவி
காட்டுக் கெறிந்த நிலவாகிப் போஞ்செங் கனகரதனச்
சூட்டுக் கிரீட முடிவேந்த ருற்பத்தி சூறைகொள்ளும்
நாட்டுச் சிலக்கியங் கவிவீர ராகவ னற்கவியே.

திருவாரூலாப் பாடியது.

1680. தெள்ளுதாரி நாரூர்த் தியாகேசர் மெய்யன்பு
கொள்ளுங் கமலையுலாக் கூறினனுல்— உள்ளக்
குவிவீர ராகவன்சொற் கூடிற் புலவீர்
கவிவீர ராகவன்சொற் கண்டு.

(1677) தமிழ்நா. 242. (1678) வே. 244. (1679) வே. 255. (1680) திருவாரூலா இறுதி.

ஆதுரலாக்கேட்டுப் பராசசேகரன் பாடியது.

1681. புவியோர் பெறுக்கிரு வாரு ருலாவைப் புலவர்க்கெலாம்
செவியே சுவைபெறு மாறுசெய் தான்சிவ ஞானவனு
பவியே யெனுநங் கவிவீர ராகவன் பாடியநற்
கவியே கவியவ னல்லாத பேர்கவி கற்கவியே.

ஷெ உலாப்பாடியபோது கயத்தாற்று ராசா பாடியது.

1682. ஒட்டக்கூத் தன்கவியு மோங்கியகம் பன்கவியும்
பட்டப் பகல்விளக்காய்ப் பட்டவே—யட்டதிக்கும்
வீசுங் கவிவீர ராகவனும் வேளாளன்
பேசுங் கவிகேட்ட பின்.

கவிவீரராகவமுதலியார் வண்ணம்பாடியபோது
பராசசிங்கம் பாடியது.

1683. வீரகன்முத் தமிழ்க்கவி வீர ராகவன்
வரகவி மாலையை மதிக்கும் போதெலாம்
உரகனும் வாணனு மொப்பத் [1]தோன்றிஞற்
சிகர கம்பிதஞ் செய்ய லாகுமே.

ஷெ புலவர் பாடியவை.

1684. இம்பர்வா னெல்லையிரா முனையே பாடி
என்கொணர்ந்தாய் பாணரீ யென்ருள் பாணி
வம்பதாங் களபமென்றேன் பூசு மென்ருள்
மாதங்க மென்றேன்யாம் வாழ்ந்தே மென்ருள்
பம்புசீர் வேழமென்றேன் றின்னு மென்ருள்
பகடென்றே னுழுமென்ருள் பழனத் தன்னைக்
கம்பமா வென்றேனற் களியா மென்ருள்
கைம்மா வென்றேன் சும்மா கலங்கினளே.

1685. கலைமகளு நாணிகின்று கைகட்டிப் போற்றச்
சிலைமதவேள் முன்கணையே தாங்கக்—குலமருவு
கொம்மைச்சிங் காரமுலைக் கோதை நிருப்பனங்காட்
டம்மைச்சி வந்தா ளதோ.

(1681—82) தமிழ்நா. 251, 257. (1683) ஷெ. 245. [1] கூடி னாற்.
(1684—85) தனிப்பா.

அந்தகக்கவி இறந்தபோது கயத்தாற்றாசா பாடிய கையறவும்.

1686. இன்னமுதப் பாமாரி யிவ்வுலகத் திற்பொழிந்து
பொன்னுலகிற் பெய்யப் புகுந்ததால்—மன்னும்
புவிவீர ராகமன்னர் பொன்முடிமேற் சூட்டுங்
கவிவீர ராகவமே கம்.

1687. தோற்ற தொழிந்திருந்த தூலக் கவிகளெல்லாம்
மேற்ற ரகையின் விளங்கியவே—ஏற்றுலவுங்
கன்னவ தாரன் கவிவீர ராகவனும்
பொன்னுருஞ் சென்கதிரோன் போய்.

1688. மூன்னுட்டுத் தவமுனியுஞ் சேடனும்வான்
மீகனுமே முன்னில் லாமல்
சென்னுட்டு மலையிடத்தும் பாரிடத்தும்
புற்றிடத்துஞ் சென்று சேர்ந்தார்
இந்நாட்டுப் புலவருனக் கெதிரிலையே
கவிவீர ராக வாரீ
பொன்னுட்டுப் புலவருடன் வாதுசெய்யப்
போயினையோ புகலு வாயே.

திருக்குருகைப்பெருமாட்கவிராசர்.

1689. இருக்குமுதற் பனுவலிலு லியற்றமிழ்த்தேர்
நாவீற னென்னு மேன்மை
யருட்புயலைப் புகழ்புலமைத் திருக்குருகைப்
பெருமான்பே ரன்பு கூரும்
சருக்குலவும் பொழிற்குருகா புரிவணிகன்
சடையனிதைத் தமிழாற் சாற்றித்
திருக்குருகைப் பெருமாள்வண் கவிராச
னெனைப்புனைபேர் சிறந்த தொன்றே.

கவிராசர் தருகாமான்மியம்பாடி அரங்கேற்றிய காலம்.

1690. அறந்திகழாண் டவையெழுநூற் றிருபான் மூன்றில்
ஆனிவிளர்கார்த் திகைமாத மெட்டில் வாழ்வு

(1686—87) தமிழ்நா. 263—64. (1688) தனிப்பா. (1690) மாறனலங் காரம் நூலாசிரியர் வரலாறு, பக். 19, 20.

சிறந்திடுதிங் களிலுலுத் திரத்தி லேகா
தெசியின்ம காமூர்த்தந் திருந்த முற்றத்
துறந்தவரெண் மகிழ்மாறர் திருமுன் னேதிச்
சுருதியுடன் மிருதியுஞ்சொற் றமிழின் வாய்மை
பிறந்தபெருங் காப்பியமுந் தெரிந்தோர் கேட்கும்
பெற்றியுட னரங்கேற்றப் பெற்ற தன்றே.

ஷ கவிராசர் மாறனலங்காரம் இயற்றி அரங்கேற்றியது.

1691. உலகம் யாவையு முறுபயன் வினைப்பான்
அலகில் சோதி யணிகிளர் திருவுரு
உணர்வுயி ரெனக்கலந் துத்தமர் நித்தர்
கணமக லாதபொற் கவின்பதி நின்று
முரவுநீர் வளைத்தவொன் பானுட் டென்புலப்
பரதகண் டத்துப் பழம்பதி யெனப்புகும்
விண்டொட ரிவந்த பொழில்வட வேங்கடந்
தெண்டிரை கறங்குதென் குமரியென் றுயிடை
அமிழ்திலும் வான்சுவைத் தாகிய மும்மைத்
தமிழ்தெரி புலமைச் சான்றோர் மகிக்கும்
முதுமொழித் தெண்டி முதனூ லணியொடும்
புதுமொழிப் புலவர் புணர்த்திய லணியையும்
தனுதுறண் ணுணர்வாற் றருபல வணியையும்
மனுதிறத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும்
பொதுவியல் பொருள்சொல் லணியெச்ச வியலெனச்
சதுர்பெற வீரண்டிடந் தழிஇயசார் பெனலாய்க்
காரிதக் தருள்கலைக் கடலியற் பெயர்புனைந்
தாரியர் தவன்ற வலைவக்களத் துரைத்தனன்
சிற்குணச் சிங் வாதனின் னருளால்
நற்பொருண் மூன்றையு நலனுற வுணர்வோன்
பெருநிலம் புகழ்திருக் குருகைப் பெருமான்
அருள்குரு கூர்வரு மனகன் செழுந்தேன்
மருக்கமழ் சிரகத் தார்வணி சன்புகழ்த்
திருக்குரு கைப்பெரு மாட்கவி ராயன்
அருட்குணத் துடன்வளர் சடையன்
பொருட்டொடர் நலம்புனை புலமை யோனே.

(1691) மாறனலங். பாயிரம்.

ஷி கவிராசர்மேல் அபியுத்தர் ஒருவர் பாடியது.

1692. நேற்றுப் பிறந்து வரும்பாவி யான நிலாநெருப்புக்
காற்றும் படிதொங்க றந்தில னேயருட் கூடற்சங்கந்
தோற்றும் படிசொன்ன சொன்னூற்பத் தொன்பதை யைம்பதெ
சாற்றுந் திருக்குரு கைப்பெரு மாணஞ் சடைக்குட்டியே. [ன்று

மாறனலங்காரவுரையாசிரியர்—பேரை இரத்தினகவிராயர்.

1693. தருகாள மேகங் கவிராச ராசன் சடையனன்பாற்
குருகா புரேசர் புனையலங் காரங் குவலயத்தே
கருகாத செஞ்சொ லுரைவிரித் தான்கற்ப காடவிபோல்
வருகா ரிரத்ன கவிராயன் பேரை வரோதயனே.

சிறிய இரத்தினகவிராயர் இரசை-வடமலையப்பபிள்ளையன்மேல் புலவராற்றுப்படை பாடியது.

1694. கன்ன னனவரத கல்யாணன் பார்புரக்கும்
மன்ன னிரசை வடமலைமேற்—பன்னுதமிழ்
எற்றுப் படைக்கு மிரத்னகவி ஞன்புலவ
ராற்றுப் படைபாடி ஞன்.

1695. அரச வடமலையே யாதலர்தம் வாழ்வே
இரசையர சேயரச ரேறே—முரசப்
புலவராற் றுப்படையும் போர்வேலோய் நின்மேற்
புலவராற் றுப்படைபொற் பூண்.

இரசை-வடமலையப்பபிள்ளையன் மச்சபுராணம் பாடிய காலம்.

1696. மைப்புயல் வண்ணன் மச்சமா யுரைத்த
மச்சமாம் புராணத்தைத் தமிழால்
இப்புவிக் கெண்ணூற் றெண்பத்தி ரண்டாண்
டிசைந்திடு மவ்விய வருடத்
தைப்பசி மதியி லொப்பிலாத் தினத்தி
லமுதெனக் கனியென யார்க்கும்
செப்பிய விரசை வடமலை மகிபன்
செல்வமோ டினிதுவா ழியவே.

(1693) மாறனலங்காரம், உரையாசிரியர் வரலாறு. பக். 20, 22. (1694-95) புலவராற்றுப்படைப் பாயிரம். (1696) மச்சபுராணத்தின் இறுதி.

கோனேரியப்பர் உபதேசகாண்டம் பாடியது.

1697. மூவர்தமிழ் வேத முதற்பொருளின் முன்பெவையுந்
தேவர்தொழச் செப்பியபின் சேக்கிழார்—பூவலய
மாந்தர்க்கா றங்கமுற வந்தகோ னேரியெனத்
தீந்தமிழ்செய் தாணுபதே சம்.

1698. சதுமுகனிற் பழமறையோர் கும்ப யோனி
தலைசாய்க்குந் தமிழ்வாணர் தரணி தாங்கும்
மதுவொழுகுந் தார்த்தடந்தோண் மன்னர் சேடன்
மன்பதையன் பொருகுழைந்து செவியான் மாந்த
உதயகிரைடைந் தெடுத்தவழு தன்ன பாடல்
உயர்தமிழ்ச்செந் தாரிலுப தேச காண்ட
மதுரியன்முத் தமிழ்க்குரைத் கவிக்கும் வேந்தன்
மாபுலவன் கோனேரி வடித்திட் டானே.

கந்தர்கிருவிழாவில் கனமழைபெய்யக் கோனேரியார் கூறிய வெண்பா.

1699. கார்க்கு மனழக்குங் கவலேங் கடுஞ்சிறையாற்
சூர்க்குடைந்த நின்னைச் சுகத்திருத்தி—ஊர்க்குள்விழுங்
கந்தன் விழாவைக் கருதாது பெய்வித்த
தந்தமோ வாகண்ட டா.

கோனேரியப்பர் உபதேசகாண்டம் பாடியதைப் புகழ்ந்து அவராசிரியர் பாடியது.

1700. அன்குழி னின்றுதித்த வாரமுதை யொப்பிவர்
பொன்குமைக் கேயதுவாம் புத்திநினைந்—தொன்ற
உதேரிற் குருவென லொக்குமலால் வேறென்
குனேரி நாவலனூற் கு.

தாண்டவேசர் பாகவதசாரம் பாடியது.

1701. பாருலோர்க் கெளாத பவத்தாபங்
கேடப்பாக வதத்தைத் தஞ்சத்
தாருலாந் தாண்டவனுற் பாகவத
சாரமெனத் தமிழ்செய் வித்தான்

(1697—98) உபதேசகாண்டப் பாயிரம். (1699—1700) தனிப் பா.—(உபதேசகாண்டவுரை, தாலாசிரியர் சரித்திரம்.) (1701) சென்னை ரிஷபுலியம் சாட்லாக்தொகுதி—I, பக். 393.

தேருலா நெடுவீதிக் கரும்பொக
ரீஞ்சகுல நீபன் கொற்ற
மாரவேள் பெரியாண்டிப் புழுகணிவேங்
தலகாளு மன்ன ரேறே.

1702. வடமொழியில் வேதவியா தன்புகலும் பாகவத நூலெ வாவுங்
கடலமுதந் திரட்டியெதித் திருங்கரையின் மேல்வைத்த காட்சிபோலக்
குடமுனிவன் றென்றமிழாற் பாகவதசாரமெனக் குறித்து ரைத்தான்
தடமலியு மோகரப் பூசுரர்கோன் சுருதியுணர் தாண்டவேசன்.

குருகை—இராத்தினகவிராயர்.

1703. பார்புகழ் குருகையூரன் பைங்குவ ளூத்தார் மார்பன்
நாரியர் வேளிரத்ன நாத்கவிச் சிங்க மெங்கோன்
வார்முலை மடவார் தேக வண்ணனை யனைத்துந் தேர்ந்து
சீர்புனை தமிழான் மாறன் றிருவடி தொழுது செய்தான்.

அனதாரியப்பப் புலவர்.

1704. கம்பனென் றுங் கும்பனென் றுங்[1]காளியொட்டக் கூத்தனென் றுங்
கும்பமுனி யென்று மோர்பேர் கொள்வரோ—அம்புவியில்
மன்னு வலர்புகழும் வாயலன தாரியப்பன்
அந்நாளி லேயிருந்தக் கால்.

அனதாரியர் சுந்தரபாண்டியம் பாடியது.

1705. மதுரை நாயகன் சுந்தர பாண்டியன் வடநூல்
கதிரு லாமணி யாறுகாற் பீடத்திற் கல்லா
ரதிப ஞந்திரு விருத்தல னவையினில் வாயற்
பதியில் வாழன தாரிசெர் தமிழினிற் பகர்ந்தான்.

சுப்பிரமணியதீக்கிதர் பிரயோகவிவேகம் இயற்றியது.

1706. உம்பர்க் குரியபிர யோக விவேகத்தை
ஐம்பத் தொருகவிதை யாலுரைத்தான்—செம்பொற்சீர்
மன்னு மதிற்குருகூர் வாழ்சுப் பிரமணிய
னென்னு மொருவே தியன்.

(1702) சென்னை மியூஸியம் காட்லாக் தொகுதி-1, பக். 398. (1703) உவமானசங்கிரகப்பிரதியினிற்றித் கண்டசெய்யுள்—செந் தாமிழ், தொ—14, பக். 161. (1704) தொண்டைமண். 51, மேற். [1]காழியொட்டக். (1705) சுந்தரபாண்டியப் பாயிரம்—செந்தமிழ், தொ—4, பக். 373. (1706) பிரயோக விவேகத்தின் இறுதி.

1707. பெரும்புங் கவர்புகழ் போதா யனிசுப் பிரமணியன்
அரும்புங் குருகையிற் கோதில் குலோத்துங்க ஞரிடமாய்
விரும்பும் பொருளோத் தரும்பிர யோக விவேகவுரை
கருப்புங் கனியு மெனப்பாடி ஞன்தமிழ் கற்பவர்க்கே.

இராமபத்திரதீக்கிதர் தம்நூலைக்கேட்கவிரும்பி ஷை தீக்கிதர் பாடியவை.

1708. சீதள சந்த்ர முகராம பத்திர தீக்கிதர்க்குப்
போதொடு சென்று புகல்வோ மவர்க்கும் பொழுதிலையேல்
மேதினி யிற்றமிழ் செய்பிர யோக விவேகந்தன்னைப்
பேத மிலாத பதஞ்சலி பாற்சென்று பேசுவமே.

இராமபத்திரதீக்கிதரிடம் அரங்கேற்றியபின் ஷையார்கூறியது.

1709. டேர்கொண்டு நின்றபிர யோக விவேகத்தைச்
சீர்கொண்ட ராமபத்ர தீக்கிதன்முன் —நேர்கொண்டு
கேட்டா னினிக்கண்ணுற் கேட்கும் பதஞ்சலிதான்
கேட்டாலென் சோலாக்கா லென்.

மாதைத் திருவேங்கடநாதர்.

1710. போதத் தமிழ்க்கும் வடகலைக்கும்
புலவோர் தமக்கும் பொருள்விரித்துச்
சீதைக் கிறைவ னெனநீதிச்
செங்கோல் செலுத்தித் திசைபுரந்து
வேதப் பனுவன் மெய்ஞ்ஞான
விளக்காலுலகை விளக்குமெங்கள்
மாதைத் திருவேங் கடநாத
முனையோன் வாழி வாழியவே.

இலக்கணவிளக்கம் —வைத்தியநாததேசிகர்.

1711. ஐம்பதின்மர் சங்கத்தா ராகிவீடா ரோராற்பத்
தொன்பதின்ம ரென்றே யுரைப்பாரோ—இம்பர்புகழ்
வண்மீக நாதனருள் வைத்தியா தன்புடவி
தண்மீதர் நாட்சரித்தக் கால்.

(1707—709) பிரயோகவிவேகத்தின் இறுதி. (1710) பிரபோதசந்திரோதயமுடிவு. (1711) இலக்கணவிளக். பதிப்புரை, பக். 4—இது கலிவீர ராகவமுதலியார் பாட்டென்பர்.

ஷி தேசிகர் இயற்றிய இலக்கணவிளக்கத்தைப்பற்றி அவர் புதல்வரும் மாணிக்கருமாகிய சதாசிவநாவலர் பாடியது.

1712. கடல்விளிம் புடுத்த கண்ணகன் ஞாலத்
தடருமவ் விருடொந் தனைத்தையும் விளக்கும்
பல்கதிர்ப் பருதியிற் பரம்பர னருளால்
உள்ளகத் திருள்கடந் தறுபொரு ளெவற்றையும்
பாற்படத் தொகுத்த பதினெண் மொழியுரும்
மேற்கடல் கீழ்க்கடல் வேங்கடங் குமரி
யாகிய வெல்லையு ளருந்தமிழ்ப் பெளவத்
தெழுத்துமுதன் மூன்றையும் யாவருந் தெரியத்
தொகைவகை விரியிற் பகருக வென்ன
வேதியர் திலகன் விரவலர் கோளரி
மாசைய ரதிபன் வரகுண மேரு
கல்லிக் கெல்லை கருணைக் காகரம்
பெருமாண் மெய்த்தவப் பேறெனத் தோன்றிய
திருமா லுலகஞ் செவ்விதிற் புரக்கும்
மேதகு புகழ்த்திரு வேங்கட நாதன்
ஓதின ஞால வுவகைமீ தூர
முன்னோர் நூலின் முடிபு நோக்கிச
சொல்லுந் பொருளு மொல்வன தழீஇப்
பல்சுவைக் கரும்பி னெருவட் டேய்ப்ப
இலக்கண விளக்கமென் றொருபெயர் நிறீஇப்
புலப்படத் தியலுறப் பொருள்விரித் தனைத்தனன்
பயத்தொகை யகற்றுந் தவத்தின்வரம் பானோன்
பண்மீ ளுப்பட் பான்மதி போல
வண்மீக நாத மாதவன் வரத்தால்
அந்த ணூரர் வந்தருள் செல்வன்
வலம்புரி யொருமுத் தன்ன
நலம்புரி வைத்திய நாததே சிகனே.

வைத்தியநாததேசிகர் மலைநாட்டாசரைப் பாடியபோது அவ்வாசனது சபையார் வியந்து கூறியது.

1713. ஓதும் ப்ரபந்தக்க ளொருகோடி நிமிடத்
தூதைக்கும் ப்ரசண்ட வாக்கி
உத்தண்ட வமிர்தரச தெரவித் தாரகலி
உபயகலி ராச ராசன்

(1712) இலக். விளக்கப்பாயிரம். (1713) இலக். வி. பதிப்புரை, பக். 4.

போதும் பசுந்தமிழ்ப் பலகையுங் குடிபுகப்
புலமக ளெனுங்கு மாரி
புதுநலந் தனைநுகர்ந் தவனுநீ யாகிலுன்
புலமையை வழுத்த வசமோ
காதுங் கடுங்கொலைப் பாடுங் கடதடக்
களியானை யரச வெள்ளங்
களிசுவைப் பரணிமட லந்தாதி தூதுலாக்
காதல்செய வோத வல்லாய்
மோதுந் தனிக்கொற்ற வாயிலாய் மூதண்ட
முழுதும் பரந்த சீர்த்தி
முருகுகமழ் தருகமலை வருவைத்ய நாதகுரு
மூத்தமிழ்க் கவிராசனே.

1714. தவிப்பார்க் குறுதுணை வண்மீக நாதன் றனையனிந்தப்
புவிப்பாற் புலவன் வயித்திய நாதன் புகன்றசெஞ்சொற்
கவிப்பாகந் தேவர்க் கவிப்பாகம் போலின்பங் காட்டுங்கத்தேர்
செவிப்பா லுளேசென்று சித்தத்தி லேறின்று தித்திக்குமே.

ஷை தேசிகர் நல்லூர்ப்புராணம் பாடி அரங்கேற்றியது.

1715. பொன்னெடுஞ் சடிலத் தெம்பிரா னல்லூர்ப்
புராணமாக் காதைசெந் தமிழாற்
கன்னலுந் தேனு மமுதமு மதுரக்
கனியும்போற் கட்டுரை செய்தான்
பன்னுமெய்ப் புகழான் றவவேணு முதல்வன்
பாரெலாம் வணங்குதென் கமலை
மன்னவன் கல்விக் கடலென்னச் செழித்த
வைத்திய நாததே சிகனே.

தியாகராசதேசிகர்
இயற்றிய பாட்டியலைப்பற்றி, அவர் புதல்வரும் மாணவருமாகிய
வைத்தியநாததேசிகர் பாடியது.

1716. பொன்மலை நின்று தென்மலை யுற்ற
அகத்திய முனிவன் செகத்தவர்க் காகச்

(1711-15) தஞ்சைச் சுரச்சுவதிமால் தமிழ்ப்பிரதி அட்டவணை, பக். 419; செந்தமிழ், தொ—13, பக். 187).

செந்தமி ழிலக்கண மூன்று நூல் கிளப்பப்
பல்கா லுன்னித் தொல்காப் பியமுனி
இயற்றமிழ் முதலினின் றெடுத்துரைத் திடவதன்
ஒட்பங் கண்டு தட்பங் கூரா
தைந்திய லுத்தம் புந்தியின் வேறுகொண்
டுரைத்த புலவர் வரைத்த வுரையான்
முதலு முடிவுஞ் சிதர்தரப் பலவாய்க்
கிடந்த வியலைத் தொடர்ந்தொரு வழிப்பட
வீட்டலா னிலக்கண விளக்க மென்ன
நாட்டினன் வைத்திய நாத தேசிகன்
அன்னவன் முவத்தி னுலவ தரித்த
மூன்னவன் பாயிர மொழிந்துசொல் லணியும்
தற்பவ முதன்மூன் றிற்பட நாடிப்
பகர்ந்தன னிளவல்பன் னூலு மாராய்ந்
துகந்துதொல் காப்பியத் துண்மை தோன்ற
ஐந்திய லுத்தன் புந்திசான் முகத்
தந்தைமுன் னுரைத்தநூ றுன்முடி பெய்த
அந்த ணுரூர்ச் சந்திர மௌலி
அருளுட் கொண்டு மருண்மன நீங்கிப்
புலங்கொளப் பாட்டிய லிலங்க வுரைத்தனன்
வாய்மை தருதியாக ராயதே சிகனே.

மயிலேறும்பெருமாள்பிள்ளையைப்பற்றி அவர் மாணாக்கர் சுவாமிநாததேசிகர் கூறியது.

1717. திருநெல் வேலி யெனுஞ் சிவபுரத்தன்
தாண்டவ மூர்த்தி தந்தசெந் தமிழ்க்கடல்
வாழ்மயி லேறும் பெருமாண் மதிபதி
இருபத கமல மென்றலே மேற்கொண்
டிலக்கணக் கொத்தெனு நூலியம் புவனே.

சுவாமிநாததேசிகர் தாம்செய்த இலக்கணக்கொத்தினுக்குத்தாமே உரையெழுதியதுபற்றிக் கூறியது.

1718. நூல்செய் தவனந் நூற்குரை யெழுதல்
முறையோ வெனிலே யறையக் கேணீ
மூன்பின் பலரே யென்கண் காணத்
திருவா ரூரிற் றிருக்கூட் டத்திற்

(1718) இலக்கணக்கொத்து, பாயிரம், 7 உரைச்சூத்திரம்.

தமிழ்க்கிலக் காகிய வைத்திய நாதன்
இலக்கண விளக்கம் வகுத்துரை யெழுதினன்
அன்றியுத் தென்றிசை யாழ்வார் திருநக
ரிப்பதி வாழுஞ் சுப்பிர மணிய
வேதியன் தமிழ்ப்பிர யோக விவேகம்
உரைத்துரை யெழுதின னெண்றே பலவே.

ஷி தேசிகர்
இலக்கணக் கொத்தியற்றியதைப்
பற்றிய பாயிரம்.

1719. மதிவெயில் விரிக்குங் கதிரெதிர் வழங்கா
தயர்வரை புடவியி னயர்வுற வடக்கித்
தென்புவி வடபுவி யின்சம மாக்கிக்
குடங்கையி னெங்கட லடங்கலும் வாங்கி
ஆசமித் துயர்பொதி நேசமுற் றிருந்த
மகத்துவ முடைய வகத்திய மாமுனி
தன்பா லருந்தமி ழன்பா லுணர்ந்த
ஆறிரு புலவரின் வீறுறு தகைமை
ஒல்காப் பெருந்தவத் தொல்காப் பியமுனி
தன்பெய ராலுல கின்புறத் தருநூல்
உளங்கூ ருரையா மிளம்பூ ரணமும்
ஆஞ வியல்பிற் சேஞ வரையமும்
உச்சிமேற் புலவர்கொ ணர்சினுர்க் கினியமு
மற்றமற் றிடப்பொருண் முற்று முணர்ந்தும்
நன்னூன் முதலிய சின்னூ றெரிந்தும்
தொல்காப் பியங்கள் பல்காற் பயின்றும்
அவைகளி னருஇய நலையற விதிகளும்
வடமொழி யிலக்கணக் கடன்முடி புடைடவும்
கற்பவர்க் கெளிதி னிர்த்புலப் படவே
மதியினின் மதித்துமுன் றதிகார மாக்கிப்
புலக்கணத் தெனவுல கிலக்கணக் கொத்தென்
றெருபெய ரிட்டுத் திருவுளம் பற்றினன்
வளமையின் வளர்புக ழளவிய புனலுட்
டேவடி விழியுமை யாவடி துறையின்
ஆசிலா வுயிர்க்கருண் மாசிலா மணிப்பெயர்

(1719) இலக்கணக்கொத்துப் பாயிரம்.

அம்பல வாணனென் றும்பரும் பரவ
வருஞான தேசிக னிருதாள் புனையும்
அமிழ்தினு மினிய தமிழ்வளர் செல்வ
உவாமுதிர் மதிக்கலைச் சுவாமி நாதன்
தேசார் ஞானச் செல்வன்
ஈசான தேவ னெனுந்தே சிகனே.

சங்கரநமச்சிவாயப் புலவர் கூறியது.

1720. மலர்தலை யுலகிற் பலநூ லாய்ந்து
செய்வதுந் தவிர்வதும் பெறுவது முறுவதும்
உய்வது மறியே னொருபொரு ளாக
நன்னெறி பிறழா நற்றவத் தோர்பெறுந்
தன்னடித் தாமரை தந்தெனை யாண்ட
திருவா வடுதுறைத் தேசிக ரெனிய
கருணையங் கடலெனுங் கண்ணேவிட் டகலாச்
சுவாமி நாத குரவனே யனுதினம்
மனமொழி மெய்களிற் றொழுதல னருளாற்
பொன்மலை யெனவிப் புவிபுகழ் பெருமை
மன்னிய வூற்று மலைமரு தப்பன்
முத்தமிழ்ப் புலமையு முறையர சுரிமையும்
இத்தலத் தெய்திய விறைமக னுதலின்
நன்னூற் குரைநீ நவையறச் செய்து
பன்னூற் புலவர்முன் பகர்கியென் றியம்பலின்
நன்ன வலர்முக நகைநா ணுமே
என்ன லியன்றவை யியற்று (வ னூலே.)

அப்புலவர் இயற்றிய நன்னூல்விருத்தியுரையைப்பற்றிய பாயிரச்செய்யுட்கள்.

1721. நன்னூலுட் கருத்தலகோ ரறியவுரை
செய்கவென நரேந்திர சிங்கம்

தென்னூற்று மலைமருதப் பன்புகலப்
பொருள்விளங்கச் செய்தான் பாரில்

(1720) நன்னூல்விருத்திதொடக்கம். ( ) இக்குறிக்குட்பட்ட எழுத்துக்கள் முடிபுகாட்டப் பெய்யப்பட்டன. (1721) நன்னூல் விருத்தியுரை சிறப்புப்பாயிர விருத்தி.

எங்நூற்கு மெழுத்தொடுசொற் பொருளறிசங்
கரநமச்சி வாய னென்னும்
பன்னூற்செந் தமிழ்ப்புலவன் சைவசிகா
மணிநெல்லைப் பதியி னனே.

1722. அகத்தியர்தொல் காப்பியமே முதலியமுன்
னூல்கள்பல வாய்ந்து முப்பால்
பகுத்தருளு வள்ளுவரே முதன்ஞான
நூல்களெலாம் பகல்செய் வான்போல்
இகத்திலுரை செயவலசங் கரநமச்சி
வாயனெனு மிசைப்பேர் பெற்ற
தகைப்புலவ னன்னூலுக் குரைவகுத்த
தொருவியப்போ தமிழ்வல் லோரே.

1723. முன்னூற்கு மலயமுனி தன்னூற்கும்
புவியிடத்து முதியோ ராற்சொல்
எந்நூற்குந் தமிழ்க்கடலு ளினியியற்று
நூற்கும்வகை யிசனுற் காட்டி
நன்னூற்கு விரித்துரைசெய் தான்றிகாந்
தத்தளவு கடந்துங் கீர்த்தித்
தென்னூற்று மலைமருதப் பன்சொலச்சங்
கரநமச்சி வாயன் றனே.

வைத்தியநாததேசிகர் புதல்வர் சதாசிவநாவலர் பிரசங்கஞ்செய்தது கேட்டு அம்பலவாணத்தம்பிரான் பாடியது.

1724. வன்மீக நாதன் வரத்தா லவதரித்த
வன்மீக நாதன் மரபினோன்—வன்மீகர்
தாமோர் தமிழுருவாய்ச் சார்ந்த சதாசிவனே
யாமோ புகழவல்லே மீண்டு.

சதாசிவநாவலர்முணைக்கர்சிலர் காட்டில் தூதுளங்காய் பறிக்கையிற் காரைகையோதுகின்றனரை, அவ்வழிச்சென்ற படிக்காசுப்புலவர்கேட்டுப் பாடியது.

1725. கூடுஞ் சபையிற் கலிவா ரணங்களைக் கோளரிபோற்
சாடுஞ் சதாசிவ சற்குரு வேமுன்னுன் தர்தைதம்மாற்
பாடும் புலவர்க ளாரேமின் றிச்செம்மற் பட்டியெற்குங்
காடுஞ் செடியுமென் னேதமிழ்க் காரிகை கற்றதுவே.

(1722-28) நன்னூல்விருத்தியுரைச் சிறப்புப்பாயிரவிருத். (1724)இலக்கணவிளக்கப் பதிப்புரை, பக். 5. (1725) ஷே. பக். 4.

படிக்காசுப்புலவர் தொண்டைமண்டலசதகம் இயற்றி அரங்கேற்றியகாலத்துப் பாடியவை.

1726. தகைவந்த சீர்த்தொண்டை மண்டலத் தார்தஞ் சரிதையையித்
தொகையென் றொருருவர்க்குஞ் சொல்லப் படாதுசொன் னூலுமிக்க
நகைவந் திலிஞ்சொற் புலவோர் சபையினி னூமும்மால்
வகைவந்த மாத்திரஞ் சொல்லிவைத் தோமிந்த மண்டலத்தே.

1727. காவைவென் றிகத் தூரி கண்மணி கறுப்ப னெண்ணும்
மாவையம் பதியான் றொண்டை மண்டல சதகங் கேட்டு
நாவலர் புகழ்ந்து மெச்ச நவநிதி பொழிந்து நன்கு
பூவுல கெங்கும் போற்றப் புகழ்ந்திலை யிறுத்தி னூனே.

1728. கன்மாரி காத்தமுகில் கத்தூரி
யருண்மாலைக் கறுப்ப னென்னும்
வின்மாரி தனதுதிரே யத்தனையுஞ்
சபைகூட்டி வியந்து கேட்டே
சொன்மாரி பொழிந்திடவே சிரசரகம்
பிதஞ்செய்து சுருளுந் தந்து
பொன்மாரி பொழிந்ததந்தப் பல்லக்குஞ்
சுமந்துமிகு புகழ்பெற் றனே.

1729. எல்லப்ப னம்மையப்பன் தருதிருவேங்
கடநாத னெழிற்சி ராமன்
வல்லக்கொண் டையன்மாதை வேய்கடே
சுரன்போல வரிசை செய்தே
செல்வத்தம் பியருடனே கத்தூரி
முகன்கறுப்பன் தெருவீ திக்கே
பல்லக்குத் தான்சுமந்தா னிதுநமக்கோ
ராயிரம்பொன் பரிசு தானே.

1730. இந்தச் சதக மரங்கேற்று கைக்கிசைச் தேனைவரும்
வந்திக்கு மாவைக்கத் தூரிக் கறுப்பன் வளமைபெறு
புந்திக் குலாவுதன் னாறர்தம் பாதம் பொருந்திமன்பன்
வந்தற் புவிக்க மிழ்வா னதுர்தொண்டை மண்டலமே.

1731. பிள்ளோவய தினிற்கல்வி கற்றேரும் பின்பு
பெரியகர வாகனமும் பெற்றேரும் பூமி
உள்ளளவுங் கீர்த்திகிலே நிறுத்திக் கொண்டோம்
ஒருகுறையு மில்லையினி யுரைப்பக் கேண்மோ
தெள்ளிலகு சிதம்பரத்தைத் தெரிசித் தோம்பின்
சேற்கருங்கட் டவளகைத் தெய்வ யானை
வள்ளிபுணர் சிவப்பனையுந் துதித்தோ மெங்கள்
மாலைவளர் கறுப்பனை வாழ்த்தி னேமே.

ஷை புலவர் சிறைப்பட்டபோது பாடிய கவி.

1732. காட்டிற் சிறந்த திருமலையா துங்க காகரிகா
காட்டில் வனத்திற் றிரிந்தழ லாமற் கலைத்தமிழ்தேர்
பாட்டிற் சிறந்த படிக்காச னென்றொரு பைங்கிளியைக்
கூட்டி லடைத்துவைத் தாயிரை தாவென்று கூப்பிடவே.

படிக்காசுப்புலவர்கவித்திறத்தை வியந்து ஒரு புலவர் பாடியது.

1733. மட்டாருந் தென்களத்தைப் படிக்காச
னுரைத்ததமிழ் வரைந்த வேட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலு மூவுலகும்
பரிமளிக்கும் பரிசுதவ் வேட்டைத்
தொட்டாலுவ் கைமணக்குஞ் சொன்னாலுச்
வாய்மணக்குந் துய்ய சேற்றில்
நட்டாலுச் தாழிப்பயிராய் விளைத்திடுமே
பாட்டினுடை நளினந் தானே.

தமரேந்திரகாங்கேயர் தமக்குத் தந்தப்பல்லக்கு அளித்தபோது அப்புலவர் பாடியது.

1734. அந்திப் பிறைச்சடை யாரர வாசல ராலயத்திற்
கந்தப் பிரான்கதை கற்சிலே யாலமை காங்கெயரில்
வித்தப் புயக்கும ரேந்திர வேந்து வியர்தெமக்குத்
தந்தச் சிவிகை கொடுத்தான் பெரும்புகழ் தாங்கினனே.

(1731) தனிப்பா; இது பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் பாட்டென் பாரு முளர். (1732) தனிப்பா. (1733) பாவலர்சரித்திரதீபகம், பக். 807; இது பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்பாட்டென்பர். (1734) கொங்கு மண்., சத., 85, மேற்.

ஷி புலவர் தங்காலத்துக் கொங்குப்புலவர்களைப்பற்றிக் கூறியது.

1735. அஞ்சாலி [1]மக்களுஞ் சாணரும் பாணரு மம்பட்டரும்
செஞ்சாயக் காரரும் வேசையர் மக்களுஞ் செந்தமிழைப்
[2]பஞ்சாகப் பன்னி யொருகாசுக் கோர்வண்ணம் பாடலுற்றார்
நஞ்சாகப் போயிற் [3]றிராசாக் களுக்கெங்க ணற்கவியே.

திருமேனிக்கவிராயர்.

1736. கல்விக் கடலைக் கரைகண்ட ரத்னகவி
செல்வப் புதல்வன் றிருமேனி—நல்ல
திருப்பணி மாலையிற்றத் தேசமெலாம் ஏழ்த்த
விருப்பமுடன் செய்தான் விரைந்து.

வீரைநகர் ஆனந்தக்கூத்தர்.

1737. பொருகைகதி யுவட்டெறியுந் தமிழ்நாட்டி
லரசைகர் பொருவும் வீரைக்
குருசில்பரி மளகவிரா சன்றமிழ்தே
ரானந்தக் கூத்தன் விண்ணோர்
பரவுமியற் காசிதனில் வாசமா
யகிலேசன் பாதம் பெற்றோன்
சுருதிபுகழ் காளத்திப் புராணத்தைச்
செந்தமிழாற் சொன்ன னன்றே.

அழகியமணவாளதாசர் என்ற
ஸ்ரீ ளப் பெருமாளையங்காரி

1738. மழைமுகி லெனவே பணுமு கந்திகழ்
வரியர வணையேறி வாழ ரங்கர்தம்
எழில்பெரு மிருதாளி லேக லம்பகம்
எனுமொரு தமிழ்மாலை தான னிந்தனன்
குழலிசை யளிமேவு கூரம் வர்தருள்
குருபர னிருபாத போத டைந்தவன்
அழகிய மணவாள தாச னென்பவன்
அடியவ ரடிசூடி வாழ மன்பனே.

(1735) கொங்குமண். சத. 85, மேற்; செந்தமிழ் 3, 481; [1]சாதியும் வண்ணானும் செட்டியும். [2]பஞ்சாகத் தூற்றி யரைக்காசுக் கோர்கவிபாடுவ தால். [3]றையோவென் றமிழ்கொங்கு நாடென்குமே. (1736) குழைக்காதர் திருப்பணிமாலை—சென்னைரிபூவியம் கையெழுத்துப் புஸ்தகசாலைப் பிரதி. (1737) திருக்காளத்திப்புராண மூடிவு. (1738) தனிப்பா.

ஐயங்கார் தம் அந்திமதசையிற் பாடியது.

1739. துளவ துளவவெனச் சொல்லுஞ்சொற் போச்சே
அளவி னெடுமூச்சு மாச்சே—முளரிக்
கரங்கால் குளிர்ந்ததே கண்ணும்பஞ் சாச்சே
இரங்கா யரங்கா வினி.

சுப்பிரதீபக்க பிராயர் இறந்தபோது
பலபட்டடைச்சொக்கநாதப்புலவர் பாடியது.

1740. செய்ய கொழுஞ்சிவசுப் பிரதீபா
வெய்ய கொழுந்தழலில் வேவதே—ஐயகோ
"திண்மலனூர் வெண்ணீற்று நெற்றிக்கண் காணுத
மன்மதன்கா" ணென்றுசொன்ன வாய்.

கந்தசாமிப்புலவர் திருப்பூவணவுலாப்பாடியது.

1741. திருவால வாயரெலாம் வலசித்த
ரிரதவா தஞ்செய் தற்கா

வருவாரை வணங்கவவர் மணிமுறுவல்
சிறிதரும்பி மலர்க்க ணேக்கக்

கருவாகிப் பொன்னனையாள் பெற்றெடுத்த
புத்திரனேர் சுந்த சாமி

பெருவாய்மைப் பூவையுலாப் பாடியதெம்
போலியர்கள் பிழைக்கத் தானே.

1742. பூவணத்த புண்ணியன்மூன் பொன்னனையா ளுக்காக்கொள்
தூவணத்த பொன்மேனிச் சுந்தரன்மேற்—பாவணத்த
கந்தசா மிப்பேர்க் கவிஞனன்பிற் செய்யிந்நூற்
கெந்தநூ லாகு மிலை.

வீமநாதபண்டிதர்.

1743. பொன்னலர்பூங் கடம்பவன புராணத் தொன்னூற்
பொதியமுனி யகத்திபன்மூன் புகன்ற வாறை

பன்னுபய கவிஞர்செவிக் கமுத மாகப்
பரனருளிற் செழுந்தமிழால் விளங்கச் செப்தான்

(1739) தணிப்பா. (1740) செந்தமிழ். தொகுதி—3, பக். 344. (1741—42) திருப்பூவண உலாதூல்; தூலாசிரியர் உலாறு. (1743) கடம்ப வலபுராணப்பாயிரம்.

தென்னவரா யன்புகழ்மாக் கண்ண னெய்தற்
செல்வனுயர் தருமிலம்பூர் வீம நாதன்
நன்னெறிசேர் புராணமுழு துணர்ந்தோன் கங்கை
நதிகுலவேள் பெருந்தொண்டை நாட்டி னானே.

நமச்சிவாயப்புலவர்
தமக்கு மோதிரமிட்ட செல்லூரானைப் பாடியது.

1744. தாவொன்று கைத்தலத் தண்ணல்செல் லூரன் கனிந்துநம்மை
வாவென் றழைத்திட்ட மோதிர மேவண்மை யானதமிழ்ப்
பாவொன்றுஞ் சற்று மறியாத புல்லர்தம் பக்கலிற் போய்த்
தாவென்று கையெடுத் தேற்காம லிட்ட தடையிதுவே.

பாவநாசம் நமச்சிவாயக்கவிராயர்
சேதுபதிவேந்தரைக் காணுதற்குப் பலநாட்காத்தும்
காணுமல்வருந்திக் கூறிய கவி.

1745. முத்தலை சிந்தும் பொருநா நதித்திறை மூழ்கியெழுந்
தத்தலை நின்று விடாயாறிக் கல்வி யளைந்துநறுங்
கொத்தலர் சண்பகக் காவொடு நின்று குலாவியயான்
இத்தலை வந்துன் கடைத்தலை காத்த திளைத்தலையே.

ஷை கவிராயர், பணியாளொருவனைப் பாடச்செய்விக்க
அவன் பாடியது.

1746. பாவுக்குள் ளேயரன் பாதிக்குள் ளேபன் னிரண்டுமடற்
பூவுக்குள் ளேநவ கோணத்தி லேதென் பொதியவரைக்
காவுக்குள் ளேவந்து நின்றதல் லாலுல கம்பிகையென்
நாவுக்குள் ளேவந்து நின்றுடன் கீர்த்தி நடாத்தவென்றே.

ஷை கவிராயர் தம் மரணகாலத்துப்பாடியது.

1747. பாரிலே மைக்கொருவர் நிகரோ தென்றற்
பருவத்து வருதாம்ர பர்ணி யாற்று
நீரிலே மூழ்கிவினை யொழிந்தோஞ் சைவ
நெறியிலே நின்றுளிலே பெற்றேஞ் சிங்கை
யூரிலே குடியிருந்தோ மெமது கீர்த்தி
யுலகமெலாம் புகழ்ந்தேத்த வுலக மாதின்
பேரிலே கவிதையெலாஞ் சொன்னேஞ் சொன்னேம்
பிறப்பிலெழு பிறப்புமறப் பெறுகின் றோமே.

(1744) தனிப்பா. (1745–47) சிங்கைப் பிரபந்தத்திரட்டு, நூலாசிரியர் வரலாறு.

அட்டாவதானி-சோக்கப்பநாவலர்.

1748. பொய்யா மொழியா ரெனும் பெரியோர்
புகலும் வாணன் கோவையுரை
மையார் சோலைக் குன்றத்தூர்
வளரட் டாவ தானி சொக்கன்
கையார் கனிபோ லகப்பொருளிற்
காணுஞ் சங்கை யெலாந்தீர
மெய்யாந் தொல்காப் பியநூலின்
விதியா லெழுதி விளச்சினனே.

அபத்தநாவலர்.

(பாதசாத்திரநூலாசிரியர்.)

1749. திருமி குத்தநற் சைவருந் தெளிந்தநா வலரும்
பெருமி தத்தொடு வாழ்ந்திடுந் திருப்பெருந் துறையில்
அருமைக் கங்கைகு லாதிப ஞமர பத்தன்
பரம தாகிய பரதத்தைச் சுருக்கியே பகர்ந்தான்.

வேளூர் ஆன்மநாததேசிகர்
சோழமண்டலசதகம்பாடி அரங்கேற்றியது.

1750. சீர்கொள் பிரபவ வருடந் திகழு மிடபத் திங்கள்
கார்கொ ளிருபான் மேதி நவிலும் பானு வாரம்
கார்கொ ளமர பக்கங் கருதுந் தசமி திதியே
ஏர்கொண் டிலகு மிருபத் தேழா நட்சத் திரமே.

1751. இன்ன ணவ ாய ாளே யெழுதினன் கன்னல் வேளூர்
மன்னிடு மான்ம நாத மாப்பெருங் குரவ னுவான்
மன்னிய வளஞ்சூழ் சோழ மண்டல சதகந் தன்னை
சொன்னனூற் றைந்து பாவாற் சொல்லினிற் றுலங்க மாதோ.

1752. நிதிநிகர்வெண் ணீச்சடைய னிராமசதை
யரங்கேற்றி நிறுத்திக் கொண்டான்
துதிபெறு ாகா மான்கறுப்பன் ரெண்டைமண்
டலசதகந் துலங்கச் செய்தான்

(1748) சந்தைவாணன்கோவையுரைப் பாயிரம். (1749—52) சோழ மண். சத. இரு.

மதிதவழ்கோ புரசிகர மண்டபஞ்சூ
ழுஞ்சோழ மண்ட லத்தின்
சதகமரங் கேற்றிவைத்தான் சித்துடையான்
புகழருணை சலமென் பாரே.

சருக்கரைப்புலவர்.

1753. தருதஞ்சை வாழும் ப்ரதாபசிங் கேந்த்ர தருமன்மெச்ச
வருமணி மாமுத் திரைவேங்க டாசல மால்சம்பிரதி
நரதுங்க மாணிக்க வாசக வேள்சபை நாவலிலே
உரைசெய் மிழலைச் சதகத்தைச் சர்க்கரை யோதினனே.

ஷை புலவர் வேதாந்தசூடாமணி உரையியற்றியது.

1754. உரைதரு வேதாந்தசூ டாமணியுட் பொருளை
உலகிலுளோ ருணரவுரை செய்கவெனக் கடல்சூழ்
தரையரையன் சேதுபதி யமாத்தியஞ் தாமோ
தரன்கங்கா குலதிலகன் தகுதிபெறச் சாற்ற
வரையறுத்துச் சித்தாந்தப் பொருட்டிறனுந் தோன்ற
வகுத்தனனற் றுறைசைநமச் சிவாயதே சிகன்றாள்
பரவுசிவக் கொழுந்துதிரு யருள்கல்விக் கடலைப்
பருகுமுகில் சருக்கரைநற் பாவலர்கோ மானே.

சாந்துப்புலவர் மயூரகிரிக்கோவை பாடியது.

1755. செந்திரு மார்பன் மருதூர் நராதிபன் செப்புகென்ன
மைந்தர்செல் வத்தொடு மாஞானம் வேண்டி மயூரகிரிப்
பைந்தமிழ்க் கோவையைப் பாடினன் சர்க்கரை பாலனைங்கள்
இந்திரன் சாந்து மகிபால வாலக வீச்சுரனே.

**ஷை புலவர் மயூரகிரிக்கோவை பாடி
மருதங்குடியை மருதுபாண்டியனுற் பெற்றபோது
பாடியது.**

1756. பொருதன்பி லார்தரு மன்னிய வாகை புயத்தணிந்த
விருத னுயர்முத் தமிழ்மாலை யுங்கொள்ள வேண்டுமென்றே
யொருதன் குடியென் றுரையாமற் றூணு முயர்வுபெற
மருதன் குடிதனைத் தந்தான்மருது மகிபதியே.

(1753) சென்னை மியூஸியம் கையெழுத்துப் புத்தகசாலைப்பிரதி. (1754) சேதுநாடுத் தமிழும். பக். 15. (1755-56). செந்தமிழ் தொ. 6, பக். 266, 364.

சுவ்வாதுப்புலவர்.

1757. வெண்டா மரையனந்தான் வேறுருக்கொண் டேற்றதுவோ
தண்டா மரையனந்தன் முனிவனே—வண்டமிழின்
எண்ணே வெழுத்தோ விசையோ வியற்புலவர்
கண்ணேசுவ் வாதுக் கவி.

சிவகங்கையாசர் கவுரிவல்லபதேவரிடங் காத்திருந்தும் பயனின்றி ஷை புலவர் பாடியது.

1758. வல்லவனு குங்கவுரி வல்லவனைக் காத்திருந்தாற்
கல்லையிலைக் காகிலரைக் காசுண்டோ—அல்ல
தபிமான முண்டோ வருமையுண்டோ வாய்ச்சொ
லுபசார மாகிலுமுண் டோ.

சேதுபதி மரிதிரி முத்திருளப்பபிள்ளை பாடியது.

1759. கண்ட கனவிலிம்மிக் காசளவே லுங்களவி
லுண்டு செலுத்திடநா ளெட்டெவனே—மண்டெங்
கிருமுத்து ராமலிங்க சேதுபதி மந்திரி
தருமுத் திருளப்பன் முன்.

மதுரகவிகள், தம் ஊரில் உடையானென்பவன் தமக்கு இழைத்த தீங்கை நீக்கியுதவிய ஆறுயிரம் என்பவரைப் பாடியது.

1760. காக்கை குளமாங் கடிமலர்ப் பூம்பொய்கை
ஊர்க்குட் கராவா முடையானே—நீர்க்குவந்த
வாரணமே கல்ல மதுரகவி சேமிதொட்ட
ஆரணனே யாரு யிரம்.

சிற்றம்பலவர் மருதூர்ப் (நயினார்கோவில்) புராணம் பாடியது.

1761. சம்பரரு ளிளங்குமரு தார்ப்புரா
ணம்பகர்ந்தோன் ஞான வாசி
கம்பைபோர்க் காராளர் மரபினிற்சுப்
பிரமணியன் கருணை மைந்தன்

(1757) செந்தமிழ். தொ. 1, பக். 482. (1758) ஷை, தொ-5, பக். 108, (1759) ஷை. தொ—3, பக். 481. (1760-61) சேதுநாடுந்தமிழும், பக். 21.

செம்பொருணு வலர்மகிழ்சிந் தாமணிசிற்
றம்பலவன் றெண்ணீர் வேலி
யம்புவியில் வெண்கமலே யருட்பனுவல்
பெற்றதமி ழாசு தானே.

1762. பரமர்திரு நாகேசர் சந்நிதியிற்
சிறந்ததிருப் பணிநி டாத்திச்
சரமசரந் தொழுங்கடவுட் செவ்வந்தி
லிங்கமுனி தழைக்குங் காலம்
புரவரனே யருச்சனைசெய் நம்பிமார்
பதநம்பிப் புராணம் பாடி
இரவிகுல சேதுபதி ரகுநாதன்
சபையிலரங் கேற்றி ஞனே.

சீகாழி அருணசலக்கவிராயர்.

1763. கணிகொண்ட பஞ்சலட் சணமூ ம்ரா
மாயணக் கடலேயு முணர்ந்த புலவன்
கவிராசர் புகழ்கின்ற காழியரு ணாசலக்
கவிராய னெழுது மோலே

மணிகொண்ட மார்பிலிங் கப்பமகி பாலகன்
மகிழ்ந்தசுதன் வணிகாதிபன்
வருஞ்சீர் படைத்ததேப் பெருமாண் மகிபனிதை
மனமுவந் தினிது காண்க

அணிகொண்ட தியாகேசர் வண்ணமுரை செய்ததும்
அதற்குவெகு மதிசெய்ததும்
அதிசமக் குபகார மானதுவு மிப்புவியி
லறியாத பேரு மூளரோ

பணிகொண்ட ராமதீர்த் தனேயுமிப் படியே
பரிந்துநீ கேட்க வேண்டும்
பாரிலோ ராயிரம் பிறைகண்டு நீபொருள்
படைத்துவாழ்ந் திகே மாதோ.

(1762) சேதுநாடுசிறப்பும். பக். 21. (1763) இராமாயணம்; தாலாசிரியர்வரலாறு.

1764. சித்திதரு நிறவல்லி பத்திதரு நிறவல்லி
தேவர்கள் வணங்கும் வல்லி
தில்லைநா யகவல்லி சிவகாம வல்லியிரு
திருவிழிக் கருணை யாலே
சத்யவா சகனென்று பூமண்ட லாதிபர்க
டாமெங்க ணுந்து திக்கும்
சகலபா ஷாநிபுண மணலிமுத் துக்கிருஷ்ண
சதுரரீ வாழி கண்டாய்
நத்துமலர் குவலைநான் மதியநீ செஞ்சாலி
நான்கருவி மழைமேகநீ
நவினைநான் பருதிநீ பிள்ளைநா னன்னைநீ
நான்கவிஞன் வழுதி நீகாண்
சுத்தமுள ராமா யணந்தனைக் கொண்டெனது
சுமுகமது பெறவருகிறேன்
சொற்பொரு ளறிந்தளவு சொல்லுவன் கேட்கவே
துணையாக வேண்டு நீயே.

1765. கனந்தந்தான் கனகாபி ஷேகந் தந்தான்
களங்கமிலாக் கருப்பொருளை யழைத்துத் தந்தான்
மனந்தந்தான் முடிசூட்டு மாலை தந்தான்
வாணிசிங்கா தனத்திருத்தி வரிசை தந்தான்
இனந்தந்தா னிராமகதை யெவர்க்குந் தந்தான்
எனைராமா யணக்கவிஞ னெனப்பேர் தந்தான்
அனந்தந்தான் மணலிமுத்து க்ருஷ்ண பூபன்
அகந்தர்தா னிருமையினுஞ் சுகந்தர் தானே.

ஷி புலவர் பாப்பையவேளைப் பாடியது

1766. பத்துரூ பாயினேர் பாப்பையவே ளேயுனக்குப்
பத்துரூ பாயென்ன பஞ்சமோ—மூத்தகைகை
வீழிவாய்ப் பாலுண்ட வேந்தன் பிறந்தநி
காழியரு ணாசலன்யான் காண்.

(1764—65) இராமநாடகம்; நூலாசிரியர் வரலாறு. (1766) தனிப்பா.

கீழைச் சடகோபதாசர்.

1767. அரிசமய தீபமென்றோர் காவியமாய்
விருத்தமா யிரத்தைஞ் ஞூறுரைத்
தெரியவருஞ் செந்தமிழாழ் வார்குருப
ரம்பரையுந் தெளிந்து சொற்றான்
புரிவருங்கீ ழையிலரங்க நம்பெருமாள்
பதம்பணிவோன் பொருப்பி னல்லான்
பெரியதிரு வடிமறவாச் சடகோப
தாதனெனும் பெயரி னோனே.

பூங்கோதையார் புலவரீதி
எழுதிவிடுத்த கவி.

1768. அறிவி லிலாரே யாண்மக்கள் மாதர்
அறிவின் முதிரரே யாவர்—அறிகரியே
தாங்கொண்ட சூலறிவர் சத்தைய ராண்மக்கள்
தாங்கொண்ட சூலறியார் தாம்.

நம்பிகாளி பட்டமரம் தழையப்
பாடிய வெண்பா.

1769. தெய்வத் தமிழெண் ணுஞ் செம்மொழியு மம்மொழிசேர்
செய்விப்பர் தேவ ரெனல்சேறத்—தெய்வஞ்
சுரந்தளிக்கு மாகருவூர்ச் சோலையிலே பட்ட
மரந்தளிர்க்க வின்று வளர்ந்து.

புவனேகவாது, சின்னமனத்தார் செய்த விருநீதைப்
புகழ்ந்து பாடியது.

1770. சின்ன மனத்தான் செயும்விருந்தின் சாற்றுருசி
அன்னதினம் விண்ணே றறிந்திருந்தால்—முன்னலெவாய்
வெற்பதனைக் காவியுய்த்து வேலெவிட்டு நின்றுலைதல்
அற்பமெனத் தள்ளுவரே யாம்.

மயில்வாகனப்புலவர்.

1771. நெய்யார்ந்த வாட்கைப் பராரா சேகரன் பேர்நிறுவி
மெய்யாக நல்ல கலைத்தமிழ் நூல்கள் விரித்துரைத்த
வையாவின் கோத்திரத் தான்மயில் வாகனன் மாதவங்கள்
பொய்யாத வாய்மைப் புலியூரன் தாதி புகன்றனனே.

(1768) கொங்குமண். சத. 65, மேற். (1769) ஷெ. 78. மேற். (1770) பாவலர்சரித்திரதீபகம், பக். 221. (1771) ஷெ. பக். 281.

முத்துராசக்கவிராசர்.

1772. கற்றோர் மகிழக் கயிலாய மாலேதனை
நற்றமிழி னுற்றெருகுத்து நாட்டினன்—சுற்றுமறையூர்ச்
செந்தியப்பன் றந்த சிறுவன்முத்து ராசனெனும்
வந்தகவி ராசர்மகு டம்.

சேறைச்சோக்கநாதப்புலவர்.

1773. செஞ்சொல்வருக் கக்கோவை செங்கோட்டி வெண்பாவும்
பஞ்சவிதி லட்சணமாய்ப் பாடினன்—தஞ்சமெனுங்
காரணிகன் சேறை கதித்தபிறை சூடிமைந்தன்
தாரணிகன் சொக்கநா தன்.

பரமானந்தபாரதி.

1774. விதிதரு வேதியன் வேங்கட நாதன் விரகறியும்
அதிகுண வேள்பர மானந்த பாரதி யாங்கடம்பைப்
பதிநிதி யோதிய பாரதி நீபத்திற் பன்னிரண்டாம்
முதிரொரு சொற்பல் பொருட்பேர்த் தொகுதி முடிந்ததுவே.

இராமபாரதி.

1775. உலகம் புகழ்பாகை யோங்குதொண்டை நாட்டிற்
றிலகன் கணபதிமால் செம்மல்—நலமிகுந்த
வாழ்வாகும் புன்னை வனநாத னற்றமிழ்க்குச்
சூழாத்தி சூடி துணை.

1776. பாரோர் புகழிராம பாரதிசெம் பாகமதாச்
சீராத்தி சூடிச் செழுந்தமிழைப்—பேராக
நாகரிகன் புன்னை வன நாதமகி பன்புனைந்தான்
வாகுவினிற் கீர்த்தி வர.

பவளப்பாடிப்புலவர்.

1777. மதிசூடி யருண்மிகுத்த சானந்த கணேசன்வர
லாற்றை யெல்லாம்
பதிமேவு பவளப்பா டிப்புலவ னற்றமிழாற்
பாடல் செய்தான்

(1772) பாவலர்சரித்திரதீபகம். பக். 244. (1773) திருச்செங்கோட்டித் திருப்பணிமாலை. (1774) மே. 211. (1775-6) ஆத்திசூடி வெண்பா இரண்டி.

சதுர்வேத தாத்பரிய சங்கிரகப் பாடல்புரி
சங்க மேசன்
துதிமேவு வீரைய தேசிகனங் கதத்குரையுந்
துலக்கி னனே.

திலலைநாயகர்.

1778. காராளன புகழ்த்தொண்டை வளநாட்டி
னந்தியர்கோன் கமழுங் காவித்
தாராளன் பெரும்பற்றப் புலியூரான்
கனகசபை தன்னைப் போற்றும்
வராள னருந்தவஞ்சேர் திலலைநா
யகன்கனிதத் தியறகை யாயுஞ்
சீராளன சாதகசிந் தாமணியின்
பொருள்விளங்கச் செப்பி னனல்.

வாலசுப்பிரமணியகவிராயர்.

1779. புலையிற் சிறந்த திருவர்தங் குலத்தான்
புகழ்பெரி யவன்கவி ராயன்
சொலவரு மதலைச் சங்கமன் வால
சுப்பிர மணியனுங் கவிஞன்
பலவருந் துதிக்க வருணிலைப் பெரியோர்
பகர்பழ னிப்புரா ணத்திற்
சிலமொழி யறிந்து குமரவே ளருளாற்
செந்தமி ழுரைபகர்ந் தானே.

நல்லகவிராயர் மகாபாரதம் பாடி அரங்கேற்றியபோது
டலவர்கள் பாடியன.

1780. இச்சகைய பாரதமுன் றமிழ்வெண் பாவா
லெடுத்துரைத்தார் பெருந்தேவ ரிதனை வில்லி
புத்தூர்வே தியன்விருத்த மாக்க வுன்னிப்
புகன்றனன்மூ வாயிரமேற் சிலவாஞ் செய்யுள்
அத்தகைய காப்பியத்தை மறைவி யாத
லுரைருளான் முற்றுமவ ரிசைத்த வண்ணம்
உத்தமமாம் வடமொழியைத் தென்சொ லாக
வுரைத்தனன்மூத் தமிழ்ப்புலவ ருவகை யோங்க.

(1779) சென்னை மியூஸியம் காட். 2, 616.

1781. வடமொழியுந் தென்மொழியும் வல்லோர் நீதி
வகுத்தன றருமனு விரண்டுந் தேர்ந்தோன்
இடரறுதொல் காப்பியமே முதலா வுள்ள
விலக்கணமு மிலக்கியமு மெல்லா மாய்ந்தோன்
கடனிகரா முதலேழு ராளி நல்ல
கவிராய ஞவளர்வெண் கமல மங்கை
புடவியுள ஞானமெலாந் தழைத்து மேன்மேற்
பொலியமகா பாரதத்தைப் புகன்ரு ன் மாதோ.

1782. சீர்பெறுநற் கலைமகடன் னருளாற் செல்வச்
செகம்புகழ்பா ரதம்வடசொற் றமிழாற் செப்பக்
கார்பிணையா வருமுல்லைக் குடையா னென்னுக்
கருதுபெயர் முருகயனுங் கவியு ளானே
நாரமர்நல் லயன்றெளிவி னயஞ்சல் லாப
நடத்தியிதிற் சிலதொடைக ணவில்வ தாக்கி
வர்பெறச்செய் கவிதைகளு முடனே கூட்டி
இயம்பினன் முழுதுமென விளம்பு வாமே.

முத்துக்குட்டிப்புலவர்.

1783. ஊருண் டிறங்கி யொருசாம மாயிற்றிவ் வூர்தனிலே
நீரும் பருக்கையு மார்தரு வாரிச்ச தேமென்றேன்
மூரன் மலர்மங்கை மார்பா சவுரிய மூர்த்தியுன்றன்
தேருந் தருங்கட்டிச் சோறுங் கடற்கரைச் சீனியுமே.

1784. தருமணி யாந்தாண் டவராய சாமியென் றக்தையவன்
திருமனை யாண்முத்துத் தாயுல கேத்துஞ் செயலக்குமி
இருவரு மீன்ற தமிழ்முத்துக் குட்டியென் பேனிவர்தம்
பெருமைை நீடூழி காலமு மேத்திப் பெருகுவனே.

கல்போதுந் தலைவர் கடன்பட்டகாலத்து ஆற்றுங்கையைத் தலைவரைப்பாடியது.

1785. எட்டையா பேரையா வென்றுரையே யென்றுரைத்தேன்
எட்டையா பேரையா வென்றுரைத்தான்—கட்டக்
குரைகடற்கு னீர்த்துக் கொடுபோகா தாற்றங்
கரையதனிற் சேர்த்தெனைநீ கா.

(1783–84) சேதுநாடுத் தமிழ். (1785) செந்தமி தொ–3, பக்–297.

கவிக்களஞ்சியம் வேதாளகதைபாடியது.

1786. கருத்தி னன்பொடு கறுப்ப னிங்கருள்
கவிக்க ளஞ்சியங் கவிப்பி ரான்
உருத்தி ரன்றரு மயிற்கு கன்றனை
யுனத்தி லிங்கெணி விளக்கமா
அருத்தி விஞ்சும லகைச்செ முங்கதை
யனைத்தை யுங்கலை யகத்தியன்
திருத்து செந்தமி முரைத்த னன்னெரு
தினத்தி லெம்பது விருத்தமே.

1787. பலித்து கந்ததார் முகிப்பெ ரும்பெயர்
படைத்து வந்தவ ருடத்திலே
நலத்தி லங்கண்ணீ யினிற்பு குந்தி
னத்த திங்களொ ருபத்தின்மேல்
சொலத்த குந்தின கரத்தி னங்கதிக
ழற்றி ருத்தசமி பெற்றநாள்
கலைப்பெ ருங்கதை விருத்த மிங்கிது
கவிக்க ளஞ்சிய முகித்ததே.

அட்டாவதானி—ஆதிசரவணப்பெருமாட் கவிராயர்
திருவனந்தபுரவேந்தர் 'எந்தவூர்' என்று வினவியபோது பாடியது.

1788. இலைநாட்டு வேற்கரத்துச் சேதுபதி
தரிசனத்துக் கேழு காலோர்
மலைநாட்டு ராசன்வந்து காத்திருந்த
வாசல்வித்து வான்யான் கண்டாய்
கலைநாட்டிற் பெண்ணெனவே செய்தசர
ணுசனகன் கன்னிக் காகச்
சிலைநாட்டி வளைத்தபுய வீரகே ரளமார
செயசிங் கேறே.

ஷ. கவிராயர் விசயரகுநாதத் தொண்டைமானுக்கு எழுதிவிடுத்த சீட்டுக்கவி.

1789. நீதிபெறு கல்விப்ர தானந் தெளிர்திடு
நிதானஞா னப்ர காசம்
நித்தியசு மங்களக் கவிதாப் பிரசங்கனன்
னேயசுந் தரவி லாசம்

வேதாந்த சாகரஞ் சித்ராவ தானதமிழ்
மேகஞ் சபாரஞ்சிதம்
வித்வஜ்ஜன சேகரஞ் சேதுபதி வாசலில்
விளங்குகவ ரத்ன தீபம்

சீதரன் சோமசுந் தரகுரு சுவாமியிரு
திருவடி துதிக்கு மடிமை
சீர்பெறுஞ் சரவணப் பெருமான் கவீச்சுரச்
செயசிங்க மெழுது மோலை

மாதவன் விசயரகு நாதத் துரைத்தொண்டை
மானெதிர் நடந்து காண்க
வரிசைபெறு தாதென்று பாடிவந் தனமுனது
மனமகிழ்ந் தருள்புரிவையே.

ஷ. கவிராயர் காரை இலக்குமணபிள்ளைக்கு விடுத்த சீட்டுக்கவி.

1790. மரபுதவி ராதவன் சோமசுந் தரகுரு
மலர்ப்பதம் பரவு தாசன்
வண்டமிழ்ச் சரவணப் பெருமாட் கவிச்சக்ர
வர்த்திதேர்ந் தெழுது கிருபம்
வளர்காரை யம்பதியின் மேவுதுரை லட்சுமண
மந்திரியெதிர் கொண்டுகாண்க
வாணருக் குபகாரி நீயாகையா லெமது
வல்லமையு மகிமையுங் கேள்
கருணீகர் நால்வர்க்கு நாற்கவிதை சொல்லவாய்
கனவேலு மயிலு மென்னக்
காலிலொரு கவிதையுயர் தோளிலொரு கவிதையிரு
கையிலொரு கவிதை யெழுதக்

கணக்கொரு புறஞ்சொல விலக்கொரு புறஞ்சொலக்
காணுத திரைமறைவிலே
கனகூது சதுரங்க மொருகுதிரை யடிசொலக்
கன்னெல்லு முதுகி லெண்ணப்,

பரிவுபெற் றப்புதச் சேரியிற் சென்றினிய
பண்பரிற் சினைய வாத்தி
பண்புள குமாரபா ரதிமதுர கவிவீர
பத்ரகவி கொண்டாடவே
பாக்யஞ னந்தரா தன்சபையி லுஞ்செய்து
பல்லக்கு வரிசை பெற்றேன்
பாரகா வியங்களுந் தெரிவே னளப்பரிய
பஞ்சலட் சணமு மறிவேன்

அரசரி லுயர்ந்ததிரை யாரெனிற் சேதுபதி
யாகுமவன் மணிவாயி லில்
அகத்திய முனிக்குமதி கங்கற்ற பேர்களா
யாயிரங் கவிவாணருண்

டவரிலொரு சிறுவன்யான் பாடவறி யேனென்
றகற்றிவிட் டார்களென்னே
யாதலாற் பூமியிற் சஞ்சரித் தேனின்
னகந்தனின் மிஞ்சருள்வையே.

சென்னைத் தெள்ளியசிங்கபூபனுக்கு கவிராயர்
விடுத்த சீட்டுக்கவி.

1791. பைங்குவளை மார்பனெடு வையையள நாடனுயர்
பார்த்திவர்கள் புகழ்ச லூரன்
பாக்யனதி குலதிலகன் யோக்யபரன் மேழிப்
பதாகையன் பூமி பாலன்
மங்களக் கவிராசன் வித்வசன சேகரன்
மணித்தமிழ்ச் சம்ப்ர தாயன்
வச்ரதே கன்யதும நாயன்வே லாயுத
மோகாந்த்ரி குருபுத் திரன்

துங்கமிகு சேதுபதி மகிழுநே சன்சோம
சுந்தர சுவாமி தாசன்

சோடசந லவதான சரவணப் பெருமாட்
சுயம்ப்ரகா சன்கை யோலே

பொங்கிவளர் செல்வச் செழுஞ்சென்ன பட்டினப்
பொன்னகர்த் தெளிய சிங்க

பூபவெதிர் வந்துகண் டின்சபையி லவதான
புனிதமறி வுறல்வேண் டுமே.

மடி. கவிராயர் சிவகிரித் தலைவரிகித
விடுத்த சீட்டுக்கவி.

1792. வார்பெறுங் கலசமுலை யார்மதன் சேதுபதி
வாசற் ப்ரசண்ட வாக்கி

வடிதமிழ்க் கும்பன்சு வாமிநா தன்றுணைவன்
வளர்செல்லை யப்பன் மைந்தன்

பார்பெறுவ் குணஞான சோமசுந் தரருரு
பதாம்புயம் பரவு தாசன்

பைந்தமிழி லக்கண விலக்கியக் கடலுண்டு
பாரெலாம் பொழியு மேகம்

கார்பெறுங் கையலையர் சரவணப் பெருமாள்
கனிந்தெழுது கின்ற வோலை

கதிகொள்சிவ கிரியில்வர குணராம செந்தொட்டி
காளையெதிர் கொண்டுகாண்க

சீர்பெறும் பணுவலொன் றிருருகோடி பொன்பெறச்
செய்துனைத் தேடி வந்தோம்

திண்புய மதிற்புனைந் தென்றனே யனுப்பிடிற்
செகமெலாங் கொண்டா டுமே.

மடி. கவிராயர் இரவணப்பபூபனுக்கு
விடுத்த சீட்டுக்கவி.

1793. தொடையெலாந் திரிபுசொற் பொருளெலாங் கற்பனைப
தலையெலா மாலை மாற்று

(1788—93) தனிச்செய்யுள்கள்.

பெருந்தொகை

சொல்லெலா மதுரம்வெண் பாவெலாங் கதைகலித்
துறையெலா மேக பாதம்

தாதெலாஞ் சந்தமஞ் சரியெலாங் கௌடமா
சுகமொலாங் தனிகி ரோட்டம்

சுயமெலா நிமிஷமெய்க் கணமெலாங் கணம்வணத்
துறையெலா ராக டத்தம்

அடையெலாஞ் சிலசரிதை சிந்தெலா நீதிகொச்
சகமெலா மடிம டக்கவ்

வடியெலா மெமகமுயர் பதமெலாங் கட்டுரா
டகமொலா ரகித் திரம்

அசையெலா மிருபொருள்சொ னூலெலாம் வேதமட்
சரமெலாம் பிரம லிங்கம்

அளவெலாந் தராசுரிறை மூடிவெலாம் பொருளா
வமைத்தெலாம் பாடி கவிஞன்

பெடையெலாஞ் சேரனம் புடையெலாஞ் செறிவயற்
பெருநெலார் தேவை மூல்லைப்

பிணையலாஞ் சேதுபதி புகழெலாம் போற்றிவரு
பெட்பெலாங் திகழ்சி லாக்யன்

பெருநலான் சோமசுந் தரகுரு பதத்தைப்
பிறப்பெலாம் போற்று மடிமை

பேச்செலா மமுதமொழி யாச்சொலுஞ் சரவணப்
பெருமாள் மிடுங்ரா கிதம்

படையெலாங் கொண்டுபொரு பகையெலாம் வென்றுசந்
பண்பெலா மறியு நிபுணன்

பாரெலாம் போற்றவரு ரவணப்ப பூபனெதிர்
பண்பெலாங் கொண்டு காண்க

பலனெலாம் பெலனெலா நலனெலாங் கலமெலாம்
பரியெலாங் கரியெ லாம்பொற்

பணியெலா மணியெலாந் தனிலெலா செல்லெலாம்
பனமெலாந் தரவேண் டுமே.

ஷை கவிராயர் சிவகங்கையார்க்கு விடுத்த சீட்டுக்கவி.

1794. தண்ணமுத சாகரங் கவிதாப்ர சங்கந்
தமிழ்க்கடலை யுண்ட மேகம்
சற்குண விலாசமெய்க் கவிராச சிங்கம்வெண்
டாமரை மடந்தை வாசம்

வண்ணப்ர பந்தத்து மும்மதக் குஞ்சர
மணத்தவட் டாவ தானம்
வாசாம கோசரங் கல்விப்ர வாகத்தெய்
வச்செயல் வரப்ர சாதம்

கண்ணிலவு முல்லையணி சேதுபதி வாசலிற்
கனகாபி ஷேக யோகம்
கற்றவர்கள் கொண்டாடு சரவணப் பெருமாட்
கவிச்சக்ர வர்த்தி யோலை

பண்ணுலவு சிவகங்கை யம்பதிப் பேட்டையிற்
பலரெதிர் தடந்து காண்க
பரிவுறு புராதனமி வூரென்று வந்தனம்
பணந்திரள வரவி கெவே.

ஷை கவிராயர் சேதுபதி மந்திரி முத்திருளப்பபிள்ளைக்கு விடுத்த சீட்டுக்கவி.

1795. மாரும்மல் வாய்வேலு மயிலுமென வேசொல்ல
வாசகங் கைக ளெழுத
வருகணக் கொருபுறத் தீரமற் றொருபுறம்
வரைந்திடு மிலக்க மாற

வளைநிரைக் குட்சிறிது கல்லணி வருத்தின்ற
வன்கணக் கினிது பகர
மருவுசொக் கட்டானும் விளையாட மறைபோக
வைத்தசது ரங்க மாடக்

கூருக வெட்டெழுத் தாணியெழு தும்படிக்
குங்கவிதை பகர வதிலோர்

கூரெழுத் தாணிசது ரங்கமுது குப்புறங்
குதிரையடி வெண்பா வரக்

கூறுபுல வோர்சபையி லட்டாவ தானமுல
கோர்புகழ வேக டத்தக்

கோடிலாச் சதுரங்க மாடவய லூரிருக்
குஞ்சூது மாட வொருபால்

எழுகி வண்ணப்ர பந்தமெட் டெப்பேர்க்
கெழுத்தெழுத் தாவு ரைக்க

இவ்வாறு ஈற்புறக் கவிதா ப்ரசங்கம
திசைக்கும் ப்ரசண்ட வாக்கி

இலக்கண விலக்கியக் கடலேமுழு துங்குடித்
தேப்பமிடு காள மேகம்

இனியகவி யவதானி சரவணப் பெருமாளை
யெழுதுமொப் பத்தி னேலே

சேரூடு குங்குமக் கொங்கையார் மடலெழுதி
திவ்யரம ணீய மோகன்

சேதுபதி வாசற் ப்ரதானிமுத் திருளப்ப
சிங்கவே றெதிர்ந்து காண்க

சித்தபரி பூரண கடாட்சலீட் சணகுண
த்யாகபர னீயா கையாற்

செந்தமிழ்க் காதற்ப்ர பந்தமொன் றுன்மீது
செய்துவந் தனம கிழ்ந்தே.

எண்ட கவிராயர் சிங்கநகரிக் குமரவேற்பூபறுகீது
விடுத்த ஏட்டுக்கவி.

1796. மகபதி ராஜாதிபதி நீதிபதி சேதுபதி
வாசற்ப்ர சண்ட வாக்கி

வடிதமிழ்ச் சோமசுந் தரகுருசு வாமியடி
மைக்குமடி மைக்கு மடிமை

மயில்வா கனக்கடவு ளருளிஞ ரூபயசா
மரவிருது ப்ரசண்ட தேப்பன்

(1796) தனிசெய்யுள.

மலையாள ராசனருள் தந்தபல் லக்குவெகு
மதிபெற்ற சார்வ பூமன்

உகமெலா மகிமைபெறு தஞ்சைமக ராசனெயொ
ரேழடி யழைத்த நிபுணன்

உசிதனச ரதநவா பிருகையாற் றருவரிசை
ஒருகையால் வாங்கு கவிஞன்

உற்றசிவ கங்கையிற் கவுரிவல் லபராச
னுதவுவள நாடு பெற்றோன்

உயரிலங் கைப்பூமி ராசசமூ கத்தினிலு
மொருகோடி வரிசை பெற்றோன்

ககனமூ தண்டவே தண்டபிரு மாண்டங்
கவிப்புகழ் படைத்த வுரவோன்

காசிமூத லாகரா மேச்சுரம் வரைக்குங்
கவித்துவச நாட்டும் விசயன்

கற்றுச் சொலிக்கும்வரு தாளுப திக்குமிரு
கனகதண் டிகைகொ டுத்தோன்

கவிமதக் குஞ்சரஞ் சரவணப் பெருமாட்
கவீச்சர னெழுது மோலை

புகழ்மேவு சிங்கநகர் வளருங் குமாரவேற்
பூபனெதிர் கொண்டு காண்க

பொரவரா வேங்கைகை பாராத தாதுசெப்
புக்குளமை யாத சாமி

புவியிலிரு ளாவேம மேய்ந்துவள ராமாடு
பொங்கிவே காத காணம்

பூண்டொடி படாவத்த மறுபடா வடலேழு
பொதிதந்து நீவா ழியே.

ஆடி கவிராயர் பாகைச் சொக்கலிங்கர்சித்து
விடுத்த சீட்டுக்கவி.

1797. அட்டதிசை பணிசெயுஞ் சேதுபதி மணிவாச
லட்டாவ தான சிங்கம்

(1797) தனிச்செய்யுள்.

அருந்தமிழ்ச் சோமசுந் தரகுருசு வாமியடி
மைக்குமடி மைக்கு மடிமை

அசரது ஈவாபுவை வரச்சொலிக் காகிதமொ
டான்வச மனுப்பி வைத்தோன்

ஆயிரத் தெட்டடி வரச்சொலிச சனதிதள
வாய்முதலி யார்க்கு விட்டோன்

எட்டடி வரச்சொலித் தஞ்சையர சர்க்கிலகு
துள்ளுசீட் டுக்கொ டுத்தோன்

எழுடி வரச்சொல்லி மலைராச னுக்கோலை
யெழுதியுத் தரவு செய்தோன்

இனியபா ளையகார ருக்கெலா மொப்பமிட்
டெழுதுநிரு பங்கொ டுத்தோன்

இக்கரையு மல்லாம லக்கரையும் யாழ்ப்பாண
மெல்லாங் கிளாக்கு விட்டோன்

கொட்டமிடு லோபரைப் புத்திவர வன்கவிக்
குறடாவி ளைல டிப்போன்

கூறிய கவிக்கர்த்த மறியார்க டலையிலே
குட்டிப் பயன்சொல் லுவோன்

குற்றஞ்சொல் வோர்களைச் சோழன்மக னைப்போன்று
குத்திச் சினந்த விர்ப்போன்

கோளர்களை வசையான கவிதைக் கயிற்றாடி
கோத்ததோ ரணங்கட் டுவோன்

கட்டிமா னிக்கமுயர் சரவணப் பெருமாட்
கவிச்சக்ர வர்த்தி யோலை

கனபாகை நகர்மேவு சொக்கலிங் கக்கொடைக்
கன்னனெதிர் கொண்டு காண்க

கணபதி தருந்திரு முகத்தைமுன் சொன்னபடி
கண்டரங் கேற்றி யன்பாக்

கனகமும் பவளமுந் தரளமுங் கோமேத
கங்களுந் தந்தருள் வையே.

*

கோட்டையூர்ச் சிவக்கொழுந்துதேசிகர்
சாபோஜிராஜன்குறவஞ்சி பாடியது.

1798. மன்னுமதி மந்தரத்தாற் றமிழ்க்கடலைக்
கடைந்தகுற வஞ்சி யென்னும்
இன்னமுதந் தனையெடுத்துப் பகர்ந்திடோ
வெனுங்கரத்தா லெழிலார் தஞ்சை
என்னுநகர் மேவுசர பேந்திரற்குப்
புலவர்களு மினிதுட் கொள்ள
நன்னயங்கொ ளேரண்ட புரத்துவளர்
சிவக்கொழுந்து கல்கி னனே.

மக்கிஞ்சி நுரை கலிங்கத்துப்பாணிப் பிரதி
தருவித்துக்கூடது.

1799. உண்மைமுறை செயங்கொண்டா னுரைத்திடுக
லிங்கத்துப் பரணி தன்னை
ஒண்மைபெறு கலிநாலா யிரத்தொன்பா
னூற்றுப்பத் தொன்று மாண்டு
நுண்ணலிச் சாலிவா கனசகாத்
தம்பதினேழ் நூற்றெண் ணூன்காம்
வண்மைசுச் சிலவருட மகிபதிமக்
கிஞ்சிதுரை வருவித் தாரே.

கழைசீகூத்தியொருத்தி கழைமேனின்று ஆடியபோது
பூப்படையக் கழையினின்று இறங்குங்காற் பாடியது.

1800. கல்லுருகுங் காலங் கழுகறியு மக்காலம்
வையக மெல்லா மலர்ந்தபூ வண்டறியும்
ஒங்க லறியு மூயர்கடலி னுள்ளாழம்
பாங்கனுக்குப் பாங்கன் பயனறிவான் மன்ற
அறிவா ரறிவா ரறியா ரறியார்
ஒருகாம் பிருதலையும் பூ.

(1798) தஞ்சைச் சரச்சுவதிமால் பிரதி. (1799) சென்னை மியூஸியம்–புத்தசவட்டவணை, i, பக். 276. (1800) அகலிகை வெண்பா–மூகவுரை, பக். 8.

பாண்டியன் திருமணத்தில் ஒருபுலவர் துன்புற்றுக்கூறியது.

1801. வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்
துண்ட பெருக்க முரைக்கக்கேள்—அண்டி
நெருக்குண்டேன் றள்ளுண்டே னீள்பசியி னூலே
சுருக்குண்டேன் சோறுண் டிலேன்.

புலமைச்சிறப்புடையோர்.

1802. வாக்கிற் கருணகிரி வாதவூ ரார்கனிவில்
தாக்கிற் றிருஞான சம்பந்தர்—நோக்கிற்கு
நக்கீர தேவர் நயத்திக்குச் சுந்தரனர்
சொற்குறுதிக் கப்பரெனச் சொல்.

1803. காசுக்குக் கம்பன் கருணைக் கருணகிரி
ஆசுக்குக் காளமுகி லாவனே—தேசுபெறும்
ஊழுக்குக் கூத்த னுவக்கப் புகழேந்தி
கூழுக்கிவ் கௌவையெனக் கூறு.

1804. வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர்
செயங்கொண்டான் விருத்த மென்னும்
ஒண்பாவிற் குயர்கம்பன் கோவையுலா
வந்தாதிக் கொட்டக் கூத்தன்
கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள்
வசைபாடக் காள மேகம்
பண்பாக வுயர்சந்தம் படிக்காச
லாதொருவர் பகரோ ணூதே.

சிருமால்சமயத்துப் பெரியோர்.

பொய்கையார்வாக்கு.

1805. வஞ்சி வெளிய குருகெல்லாம் பஞ்சவன்
நான்மாடக் கூடலிற் கல்வலிது
சோழ னுறந்தைக் கரும்பினிது தொண்டைமான்
கச்சியுட் காக்கை கரிது.

(1801) தனிப்பா—ஔவைவாக்கென்பாரு முண்டு. (1805) யாப். வி. 93.

1806. கிடங்கிற் கிடங்கிற் கிடந்த கயலைத்
தடங்கட் டடங்கட் டளரியலார் கொல்லார்—கிடங்கில்
வளையாற் பொலிந்தகை வையெயிற்றுச் செவ்வாய்
இளையாடன் கண்ணெஞ்சு மென்று.

1807. வரிசை பெரிதுடையர் கட்கலமுந் தூயர்
புரிசை யொருசாரா ரம்பலமுந் தண்ணீருந்
தன்னிலத்த வல்ல புரிசைக்குத்
தென்கொற்றித் தோன்றுந் திருநென் மலியேரும்
பொற்கொற்றி புக்கிருக்கு மூர்.

1808. அரிமல ராய்ந்தக னகலமா கடைஇ
நிரைமுகமுந் திங்களுஞ் செத்துச்—சிதருமந்தி
வையத்தும் வானத்துஞ் செல்லா தணங்காடி
ஐயத்து ணின்ற தரவு.

1809. பகலவன் செய்தூதிற் பண்பின்றி வந்தா
ரிகலினி னின்றூர் வலியு—மிகலுடைய
கன்னயத்தோ டாயக்காற் சந்தியா கட்டாரா
மன்னனடை கட்டாருட் பேறு.

1810. அம்ம [1]பவள வரிநெடுங்க ணுய்வஞ்சிக்
கொம்ம [2]பவள கொடிமருங்குல் சோங்கி
னரும்ம பவண்முலை யொச்சுமே யொக்குங்
கருமம் பவள்வாயிற் சொல்.

பூதத்தாருங் *காரைக்காற்பேயாரும்
பாடிய தூரிடவெண்பா.

1811. கறைப்பற் பெருமோட்டுக் காடு கிழவோட்
கரைத்திருந்த சார்தைத்தொட் டப்பேய்
மறைக்க வறியாது [3]மற்றுத்தன் கையைக்
குறைக்குமாங் கூன்கத்தி கொண்டு.

(1806—7) யாப். வி. 93. (1808) ஷெ. 57. (1809) ஷெ. 61. (1810) ஷெ. 3. கையெழுத்துப்பிரதி. ன். 413, மயிலை. [1]பவள். [2]பவள். *காரைக்காற்பேயாரும். (1811) யாப். வி. 93; வீரசோ. [3]மற்றுத்தன், மற்றுதன்.

திருமழிசைப்பிரான்.

1812. சாக்கியங் கற்றுஞ் சமண்கற்றுஞ் சங்கரனூர்
ஆக்கிய வாகமநூ லாராய்ந்தோட்—பாக்கியத்தாற்
செங்கட் கரியானைச் சேர்ந்தியாந் தீதிலோம்
எங்கட் கரியதொன் றில்.

1813. குலங்க ளாய வீரி ரண்டி லொன்றிலும் பிறந்திலேன்
கலங்க ளாய காற்கொ ணலினுங் கவின்றிலேன்
புலங்க ளைந்தும் வென்றி லேன்பொ றியிலேன் புனிதனின்
இலங்கு பாத மன்றி மற்றொர் பற்றிலேனெம் மீசனே.

பெருங்கிலியூரில் நடந்தவர்வியிலே அறியாது
தம்மையிகழ்ந்த சடங்கவிகள் முன்பு
பாடிய பாசுரம்.

1814. அக்க ரங்க ளக்க ரங்க ளென்று மாவ தென்கொலோ
இக்கு றும்பை நீகி யெண்ண மீச னுக்க வல்லையேல்
சக்க ரங்கொள் வைய மெல்ல டங்கர் வாய டங்கட
உக்கி டர்த்த வண்ண மேபு றபொ சிந்து காட்டிடே.

1815. கருங்கண் ணன்செல் லென்றுன் காமருபூங் கச்சி
மணிவண்ணு நீகிடக்க வேண்டா—துணிவுடைய
செந்தாப் புலவன்யான் செல்கின்றே னீயுரன்றான்
பைங்காகப் பாய்சுருட்டிக் கொள்.

ஸ்ரீ சடகோபர்.

1816. சேமஞ் சுருதையோ செய்யதிருப் பாற்கடலோ
நாமம் பராங்குசனே நாரணனே—தாமம்
திளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கோ
உளவோ பெருமா னுனக்கு.

1817. ஈயா வெதோ கருடற் கெதிரே
இரவிக் கெதிர்மின் மினியா வெதோ
நாயா வெதோ வுறுமிப் புலிமுன்
னரிதே சரிமுன் னடையா வெதோ
பேயா வெதோ வெழிலார் வஜிமுன்
பெருமா னடிசேர் வகுளா பரணன்
ஓரா பிரமா மறையின் தமிழி
லுரைசொற் பொருமோ வுலகிற் கவியே.

(1815) குருபரம்பரை; ஆறாயிரப்படி. (1816–17) தனிப்பாடல்; இவை சங்கத்தார்வாக்கென்பர்.

1818. நீயே யறிவை நினைதொறுத் தேகிற்கு நேமியன்கை
யாயே யறியுமற் றூரறி வாரடி யோங்களுக்குத்
தாயே பொருளைத் திருக்குரு கூர்த்தமிழ்க் காரிபெற்ற
சேயே நினது திருவாய் மொழியின் செழும்பொருளே.

1819. ஐம்பொருளு நாற்பொருளு முப்பொருளும் பெய்தமைத்த
செம்பொருளே யெம்மறைக்குஞ் சேட்பொருளைத்—தண்குருகூர்ச்
சேய்மொழிய தென்பர் சிலரியா னிவ்வுலகின்
தாய்மொழிய தென்பேன் றகைத்து.

1820. சேய்மொழியோ வாய்மொழியோ செப்பி லிரண்டுமொன்றவ்
வாய்மொழியை யாரு மறையென்ப—வாய்மொழியால்
ஆய்மொழிகள் கால வுளவெனினு மம்மொழியின்
சாய்மொழியென் பேன்யான் றகைத்து.

1821. வாய்க்குங் குருகைத் திருவீதி யெஞ்சில வாரியுண்ட
நாய்க்கும் பரம பதமளித் தாயந்த நாயொடித்தப்
பேய்க்கு மிடமளித் தாற்பழு தோபெரு மாண்மகுடஞ்
சாய்க்கும் படிக்குக் கவிபாடி ஞானத் தமிழ்க்கடலே.

1822. பாராத கல்விப்ர பந்தப் பொருளனைத்தும்
நேராக முன்வந்து நிற்குமே—தேராது
தேவீறு கொண்ட திருமாலை முத்தமிழ்தேர்
நாவீறு மனமுந் துதித்த நாள்.

1823. பாடுவ தெல்லாம் பராகுசனை யெஞ்ஞான்றார்
றேடுவதெல் லாம்புளிக்குத் தேசிகனே—ஓடிப்போய்க்
காண்பதெலா நங்கையிரு கண்மணியை யாண்விரும்பிப்
பூண்பதெலா மாறனடிப் போது.

1824. தேன முமிழ்த்தொடையலு மவிழியுந்
திருக்கினார் குழைக்காதும்
கான முமலர்த் திருமுகச் சோதியுவ
கயிரவத் துவர்வாயும்

(1818) தனிப்பாடல்; இது சடகோபர்சார்வாக்கென்பர். (1819) தனிப்பா; மூன்றவாக்கென்பர். (1820) தனிப்பா; இடைக்காடர்வாக்கென்பர். (1821) தனிப்பா—திருப்பரிதி பாடியதென்பர். (1822) செந்தமிழ். தொகுதி—4. பக். 180. இரட்டையர்வாக்கென்பர். (1823) செந்தமிழ். தொகுதி - 4, பக். 180. (1824) [illegible]

மோன மாகிய வடிவமு மார்பமு
மூத்திரைத் திருக்கையும்
ஞான தேசிகன் சரணதா மரையுமென்
னயனம்விட் டகலாவே.

பொருள்காணும்படி.

சங்கத்தார்க்கு ஆழ்வார் அருளிச்செய்துவிடுத்த அகவல்.

1825. அண்ட கோளத் தாரணு வாகிப்
பிண்டம் பூத்த பேரெழி லொருமை
ஈருயிர் மருங்கி னொருயிர் தொகுத்து
நித்திலத் தன்ன வெண்மணல் பரப்பி
வேரும் வித்து மின்றித் தானே
தன்வலி யறியாத் தொன்மிகு பெருமரம்
மூவழி மூப்பழ முறைமுறை தருதலின்
ஒன்றுண் டொன்சுவை தருவது மற்றது
கல்லி லெழுந்து கடலி லழுந்தி
அறுகாற் குரவ னிறை விளக்கும்
நிறைபொழிற் குப்பை தறுகட் பொன்னுவித்
தறுகோட் டாமா விளக்கு நாடன்
அவனே தலையிலி யவன்மகண் மூலையிலி
தானு மீனு னீனவும் படாஅன்
எழுவர் மூவர் சிறுவரைப் பயந்தனள்
அவளிவ ளுவளென் றறிதல்
துகளறு காட்சிப் புலவரது கடனே.

குருகைகாவலப்பன் அருளிச்செய்தது.

1826. சீரார் மாடத் திருக்கோ ளூரதனுட்
காரார் கருமுகிலைக் காணப்புக்—கோரார்த்
திருக்கண்டே னென்றுரைத்த சீரான் கழலே
உரைக்கண்டாய் நெஞ்சே யுகந்து.

மணக்கால்நம்பி அருளிச்செய்தது.

1827. ஆரை கெடப்பர னண்பர்கொள் ளாரென் றவர்களுக்கே
வாரங் கொடுகுடப் பாம்பிற்கை யிட்டவன் மாற்றலரை

(1825) செந்தமிழ். தொ. 3. பக். 405. (1826) திவ். இயற்பா. மூன்றாந் திருவந்தாதித் தனியன். (1827) பெருமாள் திருமொழித்தனியன்.

வீரங் கெடுத்தசெங் கோற்கொல்லி காவலன் வில்லவர்கோன்
சேரன் குலசே கரன்முடி வேந்தர் சிகாமணியே.

திருவாங்கப்பெருமாளரையர்.

1828. மண்டங் குடியென்பர் மாமறையோர் மன்னியசீர்த்
தொண்டை நடிப்பொடி தொன்னகரம்—வண்டு
திணர்த்தவயற் றென்னரங்கத் தமமானைப் பள்ளி
யுணர்த்தும் பிராணுதித்த வூர்.

பிள்ளை திருநறையூரரையர்.

1829. முள்ளிச் செழுமலரோன் தாரான் முளைமதியம்
கொள்ளிக்கென் றுள்ளங் கொதியாமே—வள்ளல்
திருவாளன் சீர்க்கலியன் கார்க்கலியை வெட்டி
மருவாளன் றந்தான் மடல்.

எம்பெருமானுர் (ஸ்ரீராமாநுஜ முனிவரர்)

1830. வாழி பராகாலன் வாழி கலிகன்றி
வாழி குறையலூர் வாழ்வேந்தன்—வாழியரோ
மாயோனை வாள்வலியான மந்திரங்கொள் மங்கையர்கோன்
ஆயோன் சுடர்மான வேல்.

அபயப்பிரதானத்தை செங்கழுநீர்க் கிழங்கிலே பூவிண்டாம்படி
திருக்கச்சிநம்பிகளப்படியது.

1831. வாக்கி னனைன் மனத்தா லெண்ணியுளக்
காக்கி னுண்ட யருளான வண்ணலே
தேக்கு மோடையிற் செங்கழுநீ ரின்று
பூக்கு மாறருள் புரக நினைதனே.

திருக்கச்சிநம்பிகள்பெருமை.

1832. பெருக்கச் சிவந்திடுத் தானவ னுகம் பிளந்தளைந்த
திருக்கைத் தலத்தின் மிதியுடன் பற்றித் திருமகளார்
தெருக்கச் சிவந்திடுத் தாளினை கும்ற செழுதவத்து
திருக்கச்சி நம்பியென் னேதிரி வாரெங்கள் தேசிகரே.

(1828) திருப்பள்ளியெழுச்சி தனியன். (1830) பெரியதிருமொழித் தனியன். (1831—32) ஸ்ரீராமாநுஜார்ய திவ்யசரிதை, பக். 35, 36.

எம்பெருமானார் (ஸ்ரீ ராமானுஜமுனிவர்) ஆழ்வார்திருநகரியை அணுகியதும் அருளிச்செய்த வெண்பா.

1833. இதுவோ திருநகரி யீதோ பொருநல்
இதுவோ பரமபதத் தெல்லை—இதுவோதான்
வேதந் தமிழ்செய்து மெய்ப்பொருட்கு மூட்பொருளாய்
ஓதுஞ் சடகோப னூர்.

எம்பெருமானார் ஸ்ரீ ஆண்டாளிடம் ஈடுபட்டு அருளியவை.

1834. மெல்லிய பஞ்சடி யுந்துவ ராடையு மேகலையும்
வல்லிடை வென்ற மருங்குமுத் தார வனமுலையும்
சொல்லியல் வண்மையும் வில்லிபுத் தூரம்மை தோளழகும்
முல்லையை வென்ற நகையுமெல் லாமென்றன் முன்னிற்குமே.

1835. வாழி திருப்பாவை பாடி மடப்பாவை
வாழி யரங்க மணவாளர்—வாழியவன்
மாடுகிற்கும் புள்ளரையன் வாழி பெரியாழ்வார்
பாடுகிற்கும் வேதாந்தப் பா.

எம்பெருமானார் மேல்நாட்டினின்று திரும்பியதும் திருவரங்கம்பெரியகோயிலார் பாடியது.

1836. வையகு குருடன்றே மாமறையும் பொய்யன்றே
ஐய னுரைத்ததமி ழாறறிவார்—வையத்துக்
கூன்றுகோ லெக்தை யெதிராச ருத்தரித்த
மூன்றுகோல் காண்பதற்கு மூன்.

எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யம் தலைக்கட்டின காலம்.

1837. இன்ன வாறு திருப்பதிக ளெங்கும் வாழ்வித் தெதிராசன்
தன்ன தாக்கித் தரிசனமுந் தானி யெங்கும் விளங்குவித்து
மூன்ன முரைத்த பாடியத்தின் முற்ற மூன்றத் தொருகூறு
தன்னை யுலக மென்றுங் காயிததாக வெழுபத் தேழிற் சாற்றினனே.

எம்பார் அருளிய பாசுரம்.

1838. பற்ப மெனததிகழ் பைங்கழ லுன்றன
பல்லவ மேவிரலும்
பாவன மாகிய பைந்துவ ராடை
பதிந்த மருங்கழகும்

(1833) இராமானுசார்யதிவ்யசரிதை. பக். 129. (1834-35) மே. பக். 125, 127. (1836-37) மே. (1838) மே. பக். 114.

முப்புரி நூலொடு முன்கையி லேரிசழ்
முக்கோ ணண்ணழகும்
முன்னவர் தந்திடு மொழிகணிறைந்த
முறுவனி லாவழகும்

சுற்பக மேவிழி கருணைபொ ழிந்திடு
கமலமு கத்தழகும்

காரிசு தன்சுழல் சூடிய முடியுங்
கனகற் சிகைமுடியும்

எப்பொழு தும்மெதி ராசன் முகத்தழ
கென்னிட யத்துளதால்

றிலி லெணக்கெரி ரில்லை யெனக்கெரி
ரில்லை யெனகெருடா.

கூடற்தாழ்வான்

திருமலைகம லனன்பீ ரடியமாகத் கூறிய தனியன்.

1839. கொருங்குக் கிருள்கடி தீப மடங்கா கெடும்பிறவி
நருங்குகு ரல்ல வழுதர் தமிழ்முகன் னூற்றுறைகள்
அருங்குக் கிலக்கிய மாரண சாரம் பரசமயப்
பருங்குக் கனலிலி பொறிபர காலன் பனுவல்களே.

திருக்தருகைப்பிரான்பிள்ளான்பாசுரம்.

1840. என்பிறவி தீர வினைஞ்சினே னின்னமுதா
அன்பே தகவி யளித்தானை — நன்புகழ்சேர்
சீதத்தார் முத்துக்கள் சேருங் கடன்பல்லைப்
பூகத்தார் பொன்னகர் கழல்.

கிடாம்பிப்பெருமாள்விஷயமான பாட்டு.

1841. வேதாந்தங் கொண்டு வடதிசைப் போதந்து மீண்டவர்தாள்
போதார் பொழிற்மங்கை யூர்வந்த கொண்டிதன் புண்ணியகெடு
யாதானு மாகிலு மென்பேற்றை யெய்தென் றெழுதியருள்
தாதாரு மையன் கிடாம்பிப் பெருமாள் தயாகிதியே.

(1839) பெரியதிருமொழித் தனியன். (1840) இரண்டாந்திருவந் தாதித் தனியன். (1841) இராமாநுஜார்யதிவ்யசரிதை. பக். 173.

அருளாளப்பெருமாள்விஷயமான பாட்டு.

1842. நீங்காம லென்று நினைத்துத் தொழுமின்க ணீணிலத்தீர்
பாங்காக நல்ல பிரமேய சாரப் பதங்கொழிக்கும்
பூங்கா விளம்பொழில் சூழ்புடை யாரும் புதுப்பள்ளிமன்
ஆங்கார மற்ற வருளாள மாமுனி யம்பதமே.

முதலியாண்டான்பாசுரம்.

1843. கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர் வந்துதித்த
பொய்கைப் பிரான்கவிஞர் போரேறு— வையத்
தடியவர்கள் வாழ வருந்தமிழந் தாதி
படிவிளங்கச் செய்தான் பரிந்து.

ஸ்ரீ பராசபட்டர்பாசுரம்.

1844. மிக்க விதைதிலையு மெய்யா முயிர்நிலையும்
தக்க நெறியுந் தடையாகித்—தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையு மோதுங் குருகையர்கோன்
யாழினிசை வேதத் தியல்.

பாண்டியபட்டர்பாசுரம்.

1845. மின்னுர் தடமதில்சூழ் வில்லிபுத்தூ ரென்றுரைகாற்
சொன்னுர் கழற்கமலஞ் சூடினேம்—மின்னுர்
கிழியறுத்தா னென்றுரைத்தோங் கீழ்மையினிச் சேரும்
வழியறுத்தோ நெஞ்சமே வந்து.

வேதப்பிராட்பட்டர்பாசுரம்.

1846. கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழ்வூர்
சோதி மணிமாடந் தோன்றுமூர்—நீதியால்
நல்லபத்தர் வாழுமூர் நான்மறைகள் ஓதுமூர்
வில்லிபுத்தூர் வேதக்கோ னூர்.

நம்பிள்ளைவிஷயமான பாட்டு.

1847. இந்திரன் வார்த்தையு நான்முகன் வார்த்தையு மீசனுடன்
கந்தன்சொல் வார்த்தையுங் கற்பவ ராரிக்குக் காசினிக்கே
நந்தின மூத்தறி நம்பூர் வரதர்தம் மாளிகையிற்
சிந்தின வார்த்தைகொண் டேசில ரோடு திறைக்கொள்வரே.

(1842) பிரமேயசாரத் தனியன். (1843) மூதற்றிருவந்தாதித் தனியன். (1844) திருவாய்மொழித்தனியன். (1845) பெரியாழ்வார்திருமொழித் தனியன். (1846) நாய்ச்சியார்திருமொழித் தனியன். (1847) பின்பழகிய பெரியர் குருபரம்பரை—இறுதி.

ஸ்ரீ ஸோலோகாசாரியர் விஷயமான பாடல்கள்.

1848. வாழியுல காசிரியன் வாழியவன் மன்னுகுலம்
வாழி முடும்பையெனு மாகரம்—வாழி
மனஞ்சூழ்ந்த பேரின்ப மல்கமிகு நல்லார்
இனஞ்சூழ்ந் திருக்கு மிருப்பு.

1849. திருமா மகடன் சீரரு ளேற்றமும்
திருமா நிருவடி சேர்வழி நன்மையும்
அவ்வழி யொழிந்தன வனேத்தின் புன்மையும்
மெய்வழி யொன்றிய மிக்கோர் பெருமையும்
ஆணவம் வல்லவ ரமருரன் னெறியையும்
காரண னருள்தரு நற்குரு நீதியும்
சோதி வானரு ளாயமா குருவின்
பாத மாமலர் பணிபவர் தன்மையுஞ்
சீதில் வானவர் தேவ னுயிர்களை
ஏது மின்றி யெடுக்கும் படியையும்
மன்னிய வின்பமு மாகதி யுங்குரு
வென்னு நிலைபெறு மின்பொரு டன்னையும்
அசைவிலா வேத மதனு ளனேத்தையும்
வசன பூடண வழியா லருளிய
மறையவர் சிகாமணி வண்பொழின் முடும்பை
இறையவ னெங்கோ னேருல காரியன
தேமலர்ச் சேவடி சிந்தை செய்பவர்
மாநிலத் தின்ப மெய்திவாழ் பவரே.

1850. போர்மண் டலஞ்சங்கு தண்டவில் வான்புக ழாழிவெய்யோன்
கார்மண் டலஞ்சென்று காண்பார் தமக்குக் கதிரொளியோன்
ஏர்மண்ட லத்தன்னை யெய்தும் வழியை யினிதுரைத்தான்
பேர்மண் டலருரு வென்னு முடும்பைப் பிறந்தவனே.

ஸ்ரீ அழகியமணவாளநயினார்.

1851. தலையான வெட்டெழுத் திற்பிறர் தேசர ணுகதித்தாம்
முலையா ரமுதில் வளர்ந்த பிரான்முடும் பைக்கதிபன்
மலையார் திருப்புயத் தான்மண வாளன் மலரடிக்கே
நிலையான நெஞ்சம்பெற் றேனுப்பர் வாழ்வு நிலைபெற்றதே.

(1849) ஸ்ரீவசனபூஷணத்தனியன். (1850) அர்ச்சிராதித் தனியன்.
(1851) மாணிக்கமாலை-சென்னை மியூசியம் கையெழுத்துப்புத்தகசாலைப்பிரதி.

ஷை பெரியார் ஆசார்யஹ்ருதயம் அருளிச்செய்தது.

1852. பணவா ளரவணைப் பள்ளி பயில்பவர்க் கெவ்வுயிரும்
குணபோக மென்று குருகைக் கதிப னுரைத்ததுய்ய
உணர்பாலி னுட்பொரு ளொன்று மறியா வுலகறிய
மணவாளன் மாறன் மனமுரைத் தான்வண் முகிம்பைவந்தே.

அழகியமணவாளநாயினார் பரமபதிக்குநீதருணம்
அவர் திருமுடியைத் தம்மடியில் வைத்துக்கொண்டு
தமையனார் பிள்ளைலோகாசாரியர் இரங்கிக்கூறிய பாசுரம்.

1853. மாமுடிப்பை மன்னு மணவாளா வண்ணலொகும்
சேமமுடன் வைகுந்தஞ் சென்றக்கால்—மாமென்று
தொட்டிரைத்த சொல்லுக் துயத்தி னரும்பொருளாம்
எட்டெழுத்து மிங்குரைப்பா ரார்.

வேதாந்ததேசிகன்.

1854. சீரொன்று தூப்பிற் றிருவேங் கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமாம்பு—னோரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்பவர்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

தேசிகன் அருளியது.

1855. வெள்ளைப் பரிமுகர் தெசிக ராய்வீர காலடியோம்
உள்ளத் தெழுதிய தோலெயி லிட்டனம் யாமிதற்கென்
கொள்ளத் தனியினுங் கோதென் றிகழினுங் கூர்மதியீர்
எள்ளத் தனையுக வாதிக ழாதென் னெழின்மதியே.

பரமதபங்கம் அருளிச்செய்ததுபற்றிய தேசிகன் பாசுரம்.

1856. கோதவமொன் றில்லாத தகவே கொண்ட
கொண்டலென வந்துலகி லுவர்க் கன்றோர்
ஆதிவரு மாருகோடி மறைக ளெல்லாம்
தொடர்ந்தோடத் தனியோடித் துயரந் தீர்த்த
மாதவனூர் வடகொண்டின் வாணி யாற்றின்
வண்ணிகைதன் னடைக்கண்டு மகிழ்ந்து வாழும்
போதிலைதாம் பொன்னயிர்தை நகருண் முன்னுட்
புணராத பரமதப்போர் பூரித் தோமே.

(1852) ஆசார்யஹ்ருதயத் தனியன். (1853) யதிந்த்ரப்ரவணப்ரபாவம் பக். 10,

மணவாளமாமுனிகள் ஸ்ரீ பேரும்பூதூரை அணுகியதும்
அருளிச்செய்த பாசுரங்கள்.

1857. இதுவோ பெரும்பூதூ ரிங்கே பிறந்தோ
எதிராச ரெம்மிடரைத் தீர்த்தார்—இதுவோதான்
தேங்கும் பொருநற் றிருநகரிக் கொப்பான
ஓங்கும் புகழ்படைத்த வூர்.

1858. எத்தை யெதிராச ரெம்மை யெடுத்தளிக்க
வந்தபெரும் பூதூர்க்கு வந்தோமோ—சித்தை
மருளோ தெருளோ மகிழ்மாலை மார்ப
னருளோவிப் பேற்றுக் கடி.

1859. இவ்வுலகந் தன்னி லெதிராசர் கொண்டருளும்
எவ்வுருவும் யான்சென் றிறைஞ்சிபக்கால்—அவ்வுருவ
மெல்லா மினிதேனு மிங்ங னிருப்புப்போல்
நில்லாதென் னெஞ்சு னிறைந்து.

ஸ்ரீவசனபூஷண வியாக்கியானம் அருளிக்
கூறிய பாசுரம்.

1860. சீர்வசன பூடணமாந் தெய்வக் குளிகைபெற்றோம்
பார்தன்னைப் பொன்னுலகாப் பார்க்கவல்லோம்—தேரினமக்
கொப்பா ரினியா ருலகா சிரியனருள்
தப்பாம லெய்தியபின் றான்.

திருவரங்கத்துத் தைத்திருநாள்
நிலைநீது கூறிய பாசுரம்.

1861. தேவியருந் தாமுந் திருத்தேரின் மேலரங்கர்
மேவிவர விக்கிரமன் வீதினிற்—சேவைதரும்
அந்தத் துறக்க மனுபவிக்கப் பெற்றிலமே
இந்தத் திருநாளில் யாம்.

வாவாமுனிகள் திருவாலிதிருநகரியை அணுகிக் கூறிய பாசுரம்.

1862. ஈதோ திருவர ஈதோ மணங்கொல்லை
ஈதோ வெழிலாலி யென்னுமூர்—ஈதோதான்
வெட்டுங் கலியன்வேல் வெற்றி நெடுமாலை
எட்டும் பறித்த விடம்.

திருமங்கைமன்னனது வேடுபறித்திருக்கோலங்கண்டு
அப்பெரியார் களித்துக்கூறிய பாசுரங்கள்.

1863 வேலணைத்த மார்பும் விளங்குதிரு வெட்டெழுத்தை
மாலுரைக்கத் தாழ்த்த வலச்செவியும்—காலணைத்த
தண்டையும்வீ ரக்கழலுந் தார்க்கலியன் வாண்முகமும்
கண்டு களிக்குமென்றன் கண்.

1864. உறைகழித்த வாளையொத்த விழிமடந்தை மார்தமேல்
உருகவைத்த மனமொழித்த வுலகளந்த நம்பிமேற்
குறையைவைத்து மடலெடுத்த குறையலாளி திருமணங்
கொல்லைதன்னில் வழிமறித்த குற்றமற்ற செங்கையான்
மறையுரைத்த மந்திரத்தை மாலுரைக்க வவன்மூனே
மடியொதுக்கி மனமொடுக்கி வாய்புதைத்த வொண்ணலார்
கறைகுளித்த வேலணைத்து நின்றவிந்த நிலைமையென்
கண்ணைவிட் டகன்றிடாது கலியனுணை யாணையே.

மணவாளமாமுனிகள்வைபவங்களில் ஈடுபட்டுப்
பெரியோர்கூறிய பாசுரங்கள்.

1865. சுருதித் தமிழ்மொழி யுஞ்சட கோபர் துணையடியைக்
கருதிப் பரவு மெதிராச ராசன் கவியமுதம்
வருதிக் கறிய வுரைசெய் வரமுனி வண்புகழ்போய்ப்
பருதிக் கதிர்செல்லு மண்டல மேறப் பரந்ததுவே.

1866. வாதுசெய வென்றுசில வாதியர்கள் வந்து(மிக)
மனமுறிய நிற்ப வொருபால்
வாழியென வேபெரிய சாபமற (நின்று)சிலர்
வந்தனைகள் செய்ய வொருபால்

போதுமினி வாதமூன பாதமரு ளென்(றடி)
புகழ்ந்துசிலர் நிற்ப வொருபால்
பொங்கிவரு மெங்கள்வினை மங்கவரு ளென்றுசிலர்
போற்றிசெய்து நிற்ப வொருபால்

சந்திவை கிடக்கமறை நூல்தமிழ் தெரிந்துசில
ரின்பமுற வாழ்வ வொருபால்
ஏதமற வாதுலர்கள் பேதையர் மயக்கற
விறைஞ்சியய னிற்ப வொருபால்

(1863 66) யதிந்த்ரபரவஜனப்ரபாவம.

மாதகவி ஞனுலக மேழையு மளிக்கவென
வந்தவெதி ராச னடிசேர்
மாமுனிவர் தீபமரு ளாளுமண வாளமுனி
மன்னுமடம் வாழும் வளமே.

1867. மண்ணுடு வாழவந் தோன்மண வாள முனிவன்வண்மைக்
கண்ணு ராருளுக் கிலக்காக வாழவுங் கண்டவன்றன்
திண்ணு ரடிகளிற் குற்றேவல் செய்து திரியவுநாம்
எண்ணு திருக்க நடுவே நமக்குவந் தெய்தியதே.

1868. பொன்னிதனிற் குளிர்நகாங் தனிற்புகுதப் பெற்றேரும்
பொருவருஞ்சீர் நம்பெருமாள் பதம்புகழப் பெற்றேரும்
மன்னியசீர் மணவாள மாமுனியென் னையன்
வாழ்ந்திருக்கு மடந்தன்னில் வந்திருக்கப் பெற்றேரும்
சென்னிதனி லவனடியார் பதஞ்சூடப் பெற்றேரும்
திருமலையாழ் வாரிலென்னுஞ் சிறந்திருக்கப் பெற்றேரும்
பின்னையவர்க் கந்தரங்கர் பேரருளும் பெற்றேரும்
பெருந்திவத்தி லின்பமிங்கே பெருகவும்பெற் றேமே

திருநாராயணபுரம் ஆயி அருளிச்செய்தது.

1869. பூதூரில் வந்துதித்த புண்ணியனே பூங்கமழும்
தாதார் மகிழ்மார்பன் முனிவனே—தூதாக
வந்தெடு மாலோ மணவாள மாமுனிவன்
எந்தையிவர் மூவரிலும் யார்.

கோயிற்கந்தாடையண்ணர்.

1870. எக்குணத்தோ ரெக்குலத்தோ ரெவ்வியல்போ ரேனுமவர்
அக்கணத்தி தம்மிறைவ ராவரே—மிக்கபுகழ்க்
காரார் புகழ்க்கோயிற் கந்தாடை யண்ணனெனும்
பேரா ளனையடைந்த பேர்.

சீலவாசகர்.

1871. மூப்புரிநூன் மார்பினன் முக்கோல்கைக் கொண்டிளான்
பொய்ப்புலனை வென்ற பொறைபுடையான்—மெய்ப்பொருளைச்
சேவிக்கு நண்ணுணர்வான் சீலவா தன்றமியேன்
ஆவிக் கருள்புரிந்தாள் வான்.

(1867—70) யதீந்த்ரப்ரவணப்ரபாவம். (1871) மாறனலங்காரம், நூலாசிரியர்வரலாறு. பக். 18.

சைவப் பெரியோர்.

அறுபத்துமூவர்நாயன்மாருள் இன்னதுலத்தார் இத்துணையொன்பதுபற்றிய முன்னூற்பாட்டு.

1872. மாமறையோர் பன்னிருவர் சிவமறையோர் நால்வர்
மருத்துவரி லொருவர்மன் னவர்களிலோ ரறுவர்
கோமுறைமைக் குறுநிலமன் னரிலெவர் வணிகர்
குலத்தைவர் வேளாள குலவர்பதின் மூவர்
தாமுறுகு யவர்வேடர் பாணர்செக்கார் கடையர்
சான்றார்வண் ணர்பரவர் சாலியரி லொருவர்
ஆமருவு மிடையிரண்டோ டறுவர்மர பறியார்
ஆகவறு பான்மூவ ராகியமா தவரே.

நால்வர் அவதாரச்சிறப்பு.

1873. சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனு—மூற்கோலி
வந்திலரே னீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தையிரா வனந்தெழுத்தெங் கே.

ஆளுடையபிள்ளையார் பாடற்சிறப்பு.

1874. புனலி லேடெதிர் போகெனப் போகுமே
புத்த ரார்தலை தத்தெனத் தத்துமே
கனலி லேயிடப் பச்சென் றிருக்குமே
கதவு மாமறைக் காட்டி லடைக்குமே
பனைபி லாண்பனை பெண்பனை யாங்குமே
பழைய வென்புபொற் பாவைய தாக்குமே
சினவ ராவிடந் தீர்கெனத் தீர்க்குமே
செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே.

ஆளுடையவரசின் பாடற்சிறப்பு.

1875. தலைகொ ணஞ்சமு தாக வீயுமே
தழல்கொள் வீடித டாகம தாகுமே
கொலைச யானை குனிந்து பணியுமே
கோள ராவின் கொடிவிடந் தீருமே

(1872) சோழமண்டலசதகம். 10, மேற். (1873) தனிப்பா. (1874-1875) தமிழ்ப்புலவர்சரித்திரம். பக். 94.

கலிகொள் வேத வனப்பதி தன்னிலே
கதவு தானுங் கடுகத் திறக்குமே
அலிகொள் வாரியிற் கல்லு மிதக்குமே
அப்பர் செப்பு மருந்தமிழ்ப் பாடலே.

ஆசுடையநம்பிகள் பாடற்சிறப்பு.

1876. வெங்கரா வுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை யானையின் மீதேறிச் செல்லுமே
மங்கை பாகனைத் தூது நடத்துமே
மருவி யாறு வழிவிட நிற்குமே
செங்க லானது சங்கம தாக்குமே
திகழு மாற்றிட்டுச் செம்பொ னெடுக்குமே
துங்க வான்பரி சேறற்கு நல்குமே
துய்ய நாவலூர்ச் சுந்தரர் பாடலே.

சமயதரவர் வயது.

1877. அப்பருக்கெண் பத்தொன் றருள்வாத வூரர்க்குச்
செப்பிய நாலெட்டிற் றெய்வீகம்—இப்புவியிற்
சுந்தரர்க்கு மூவாறு தொண்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினு றறி.

சமயதரவர் திருநட்சத்திரம்.

1878. பாடிய சம்பந்தர் வைகாசி மூலம் பயிலுமப்பர்
நீடிய சித்திரை மாதச் சதயம் நிறைவண்ரெண்டர்
ஆடியிற் சோதி திருவாத வூரர்நல் லானிமகந்
தேடிய சேக்கிழார் வைகாசிப் பூசஞ் சிறந்தனரே.

பட்டினத்துப்பிள்ளையார்வாக்கு.

1879. நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி
நலமொன்று மில்லாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வெழுகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவு மாட்டீர்
கவட்டுமரத் திருக்கதனிற் காலுழைத்துக் கொண்டே
ஆப்பதனை யசைத்துவிட்ட பேய்க்குரங்கு போல
வகப்பட்டீர் கிடந்தழல அகப்பட்டீர் நீரே.

(1876) தமிழ்ப்புலவர்சரித்திரம். பக். 94. (1877—78) தனிப்பா.

அப்பெரியார், இறந்த தம் தாயார்க்குக்கொள்ளியிட்டபோது பாடியவற்றுட் சிலவெண்பாக்கள்.

1880. ஐயிரண்டு திங்களா வங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பே னினி.

1881. அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனே கூசாமல்—மெள்ள
முகமேன் முகம்வைத்து முத்தாடி யென்றன்
மகனே யெனவழைத்த வாய்க்கு.

சேக்கிழார்.

1882 கொண்டறவழ் தண்டலைசூழ் குன்றைநகர்ச் சேக்கிழார்
ஒண்டரணி யோருய்ய வோதினர்—தண்டமிழ்சீர்
என்றபுகழ் நாலா யிரத்திருநூற் றெண்பத்து
மூன்று திருவிருத்த மும்.

ஞானமிதவாசிரியான வாகீசமுனிவிவாக்கு.

1883. இருணெறி மாற்றித்தன் னுணிழ லின்ப மெனக்களித்தோன்
அருண்மொழித் தேவனற் கோடலம் பாகை யதிபனெங்கோன்
திருநெறி காவலன் சைவசி காமணி செல்சமய
மருணெறி மாற்ற வரும்பா மானந்த மாமுனியே.

மெய்கண்டதேவர்.

1884. கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும்—வெண்ணைநலூர்
மெய்கண்டா னென்றொருகான் மேவுவரேல் வேறின்மை
கைகண்டா ருள்ளத்தின் கண்.

1885. வேதம் பகுவதன்பால் மெய்யா கமமால்வர்
ஓதந் தமிழதனி லுன்னுறுமெய்—போதமிரு
செய்யி லுறுசைவமா தீன்வெண்ணெய் மெய்கண்டான்
செய்யதமிழ் நூலின் றிறம்.

(1882) தொண்டைமண். சத. மேற். பக். 12. (1883) ஞானமிர்தம்: நாலாசிரியர்வரலாறு. (1884) வெளானைகாபாடியம், பக். 10, (1885) தனிப்பா.

1886. நண்ணும் பொருண்மூன்று நாணறிந்து நானறவென்
கண்ணுங் தனதாகக் காட்டிஞன்—வெண்ணெயிலே
மெய்கண்ட தேவனெரு மெய்கொண்டு வந்திலனேற்
பொய்கொண்டு போமே புவி.

அருணந்திசிவாசாரியர்திருவாக்கு.

1887. சோர் கயிலைத் திருவாய் மலர்ந்த சிவாகமங்கற்
ரூராய் வதுவட சொற்பயின் ரூர்க்கெளி தம்மொழியைச்
சாரா தவருமத் தத்துவ ஞானந் தலைப்படுதற்
கோரார் தமிழ்ச்செய்யு ளான்மய நீர வெழுதுவனே.

கொற்றங்குடி உமாபதிசிவாசாரியர்க்குச்
சிற்றம்பலவர் எழுதிய திருமுகப்பாசுரம்.

1888. அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைத் தீட்டுப்—படியின்மிசைப்
பெற்ருன்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுத்தன் முறை.

1889. கற்றவன் கருணை கூரக் கலந்துயிர் சிவமாய் வாழப்
பற்றவன் பாமே யாகப் பரிவினுற் சிவப்ர காசம்
சொற்றவன் பொருட்சு பாவந் துலக்கிய தூபன் தொல்லோன்
கொற்றவன் குடியா னந்தங் குலமுழு தாண்ட கோவே.

1890. இப்பிறப்பே சீவன்முத்தி யெய்துவிக்கு மேற்பிறக்கும்
அப்பிறப்பு மிங்கே யறுத்தருளி—யொப்பறவே
உண்மையருள் கொற்றங் குடிவா ழுமாபதிதன்
வண்மையருட் குண்டோகைம் மாறு.

சந்தானதாவர் திருநட்சத்திரங்கள்.

1891. சித்திரை யத்த முமாபதி யாவணித் திங்கடன்னில்
உத்திரஞ் சிர்கொள் மறைஞான சம்பந்த ரோதுகன்னிச்
சுத்தமெய்ப் பூர மருணந்தி யைப்பசிச் சோதிதன்னில்
வித்தக மெய்கண்ட தேவர் சிலததி மேவினரே.

(1886) சிவப்பிரகாசம்—சத்தியஞானப்பிரகாசருரையிற்கண்ட செய்யுள்—(சென்னை மியூசியம் கையெழுத்துப்புத்தகசாலை). (1887) சிவஞானசித்தியார். பாயிரம். (1888) தனிப்பா. (1889) சங்கற்பநிராகரண மூடிவு. (1890) சிவப்பிரகாசமூடிவு. (1891) தனிப்பா.

உய்யவந்ததேவநாயனார்.

1892. சேடன் படிபுரக்குந் தென்கடலூ ருய்யவந்தான்
பாடுங் களிற்றுப் படிதனக்கு—நீடிமையோர்
தேடுபுகழ்ச் செஞ்சொற் சிவப்ரகா சன்றிருந்த
நாடுமுரை நாடாய் நயந்தி.

சீகாழித்தியாகராசப்பிள்ளையார்.

1893. செழுமலர் மென்குழன் மாஞ ருதரத்துச் சென்றுசென்று
புழுமல வாக்கை யெடுக்கவொட் டான்புனல் சேருழவர்
உழுமலம் பட்டுவெண் சங்கு சொரிமுத் தொதுங்கும்வயற்
கழுமல மன்னுசிற் றம்பல நாடியைக் கண்டபின்னே.

சத்தியஞானபண்டாரம் என்ற
மாசிலாமணிதேசிகர்.

1894. கண்ணிற் சிறக்குமா கமமுணர்ந் தினியதச
காரியந் தமிழி னிற்செய்
களந்தைவரு ஞானப்ர காசனுல கத்தவர்கள்
கருதரு சிவப்ர காசம்

பண்ணிற் சிறக்குமுரை யெழுதுமண் பூரவனி
பரவுஞா னப்ர காசம்
பகரரிய விருவருந் தலைவணங் கக்கருணை
பாலிக்கு மொருகுரவனே

எண்ணிற் சிறக்குமுயர் முத்தலத் தினுமுதன்மை
யீதென வெடுத்தி சைக்க
எவ்வுயிர்க ளெவ்வரு வெடுக்கினுஞ் சாரூப
மெய்துவிக் கும்புதுமைசேர்

மண்ணிற் சிறக்கும் புகழ்க்கமலை நகர்மேவு
மானபூ டணன்வருகவே
வளவர்வண நாடவர சிவசமய பரிபால
மாசிலா மணிவருகவே.

(1893) சென்னை மியூசியம் கையெழுத்துப்புத்தகசாலைப்பிரதி. (1894) சத்தியஞானபண்டாரம் பிள்ளைத்தமிழ்-தஞ்சைச் சரச்சுவதிமால்—பிரதி.

மதுரைச்சிவப்பிரகாசர்.

1895. ஓதுபுகழ்ச் சகாத்தமா யிரத்து நானூற்
ரொருபதின்மேற் செல்கின்ற காலந் தன்னில்
மாதுபயின் மதுரையில்வாழ் சிவப்ர காசன்
வண்மையரு ணிகழ்ச்சியினு லுண்மை யாக
சதுமல மீதுவினே யீது மாயை
யீதுயிர்பின் னீதுசிவ மென்றே காட்டித்
தீதில்சிவப் பிரகாசச் செய்யு ணூறுந்
தேர்ந்துரையிட் டேயுலகிற் சிறப்பித் தானே.

பாண்டிப்பெருமாள்.

1896. திரிவறுசொல் லுண்மைச் சிவஞான போதம்
பெரிதுணர்ந்த பாண்டிப் பெருமாள்—அருமறையின்
போராஞ் சுவேதவன மெய்கண்டான் போருளால்
ஆராய்ந் துரையெழுதி னன்.

1897. மூற்றருளார் மெய்கண்டான் மூண்டகத்தா னேபாவப்
பெற்றருளும் பாண்டிப் பெருமானர்—சொற்ற
கழிப்பாலை மான்காணீர் காட்டளவை யீட்டின்
மொழிப்பாலைக் கேளா முனம்.

1898. தெரிவரிய செஞ்சொற் சிவஞான போதத்
தரிய பொருளி னமுதங்—கருதிற்
பழுதிரியும் பாண்டிப் பெருமான் பரிவாற்
சிவஞான போதந் தெரியவுரை செய்தான்
தவஞா னிகளுணரத் தான்.

சிவாக்கிரயோகிகள்.

1899. பெருவாழ்வு மிக்க நிலமீ திருக்கை
பெறுவார் தமக்க ருள்வதாம்
பரவா வனுக்கி ரகமே குறித்த
பலசாத கர்க்கு தவியாம்
கருவேர் பறித்த பெரியோர்கண் முத்தி
கையி லாமலக்க னியதாம்
திருவீழி யுற்ற சிவயோகி செப்பு
சிவஞான சித்தி யுரையே.

(1895) சிவப்பிரகாசவுரை முடிவு. (1896—98) சிவஞானபோத விருத்தியுரை. (1899) சிவஞானசித்தியார் உரை.

1900. புண்ணியன் சிவாக்ர யோகி புகழ்சிவ ஞான சித்தி
நண்ணுமுற் சூத்தி ரத்தி னலந்தரு பொருளே யாய்ந்து
திண்ணிய வுலகிற் கேது திட்டாந்த பூர்வ மாக
அண்ணலா மான்கர்த் தாவென் றறைந்திட வுரைசெய் தானே.

ஞானப்பிரகாசமுனிவர் சிவஞானசித்தியுரை எழுதியதுபற்றிக் கூறியது.

1901. பொன்னிறக் கடவுளும் புத்தேள் கோனும்
பன்னக முனியும் பாவிப் போற்றும்
ஒற்றி மாநகர் நற்றவர் தலைவனைப்
பாடி யாடும் படம்பக்க நாயனைத்
தொழுது போற்றிப் பழுதக லும்படி
அல்லிரு வீக்கிய வாதவ னென்ன
நல்லருள் புரியு நந்தி கேசன்
ஓதிய போதத் துண்மை தன்னைச்
செந்தமிழ்ப் படுத்திக் திருநா மத்தூர்
நந்துலரப் படுத்தினன் றபோதனர் தமக்கு
வெண்ணை மாநகர் மெய்கண்ட தேவன்
அவனடி பாவித் தொழுதருள் பெற்றவன்
சிவஞான சித்தி யெனும்பெய ரிட்டுப்
பாமதந் தன்மத மென்றிரண் டாக்கித்
தாமுட னுரைத்தனன் சண்பையர் தலைவன்
கற்றவர் பாவுஞ் சேந்தையர் காவலன்
நற்றவ ரடிபணி ஞானப்ர காசன்
நன்னூ லுணர்ந்த ஞானிகண் முன்னே
யிந்நூ லதனி னியல்பர மதந்தனக்
குரைதனை யெழுத வுன்னி யதுதான்
குரைகட லேழு நீந்தி யேற
விரைபவ னெனக்க விளங்குவ னின்றே.

தத்துவப்பிரகாசர்.

1902. நத்துவய லொற்றியூர் ஞானப்ர காசனருட்
சித்தி படருரையைச் செப்பியபின்—வித்தகமாந்
தத்துவப்ர காசன் பதவிருத்தி தான்செய்தான்
உத்தமசித் தத்தொருமை யோர்ந்து.

(1900) சிவஞானசித்தியார். உரை. (1901) சென்னை மியூசியம் கையெழுத்துப் புத்தகசாலைப்பிரதி. (iv, pp. 1107—8).

ஞானப்பிரகாசரைப்பற்றி நிரம்பவழகியதேசிகர் கூறிய வெண்பா.

1903. ஆரணமு மெக்கலையு மாகமமுங் கற்றலும்
சேருமுதன் மூன்றுந் தெரியாதே—பாரிற்
கருணைபொழி ஞானப்ர காசன் கமலச
சரண மிரண்டிலையேற் முன்.

நிரம்பவழகியதேசிகர் நாம்செய்த சிவஞானசித்திச் சுபக்கவுரைபற்றிக் கூறியது.

1904. மைகண்ட மேவும் பெருமா னடியை மருவியருள்
கைகண் டுணருஞ் சிவஞான சித்திக் கடற்சுபக்கம்
பொய்கண் டிறுதவர் போற்ற வியான்சொற் பொருட்குதவி
மெய்கண்ட தேவ னடித்தா மரையன்றி வேறிலையே.

மேற் தேசிகர் சேதுபுராணம் பாடியது.

1905. விரிதருபைங் கடலுலகம் புரந்தமுடி
வேந்தரெலாம் வியந்து கேட்ப
அரியமறை முனிவர்தமிழ்ப் பாவாணர்
செவிதுகர்பே ரமுத மாகத்
தெரிதரமுத் தமிழ்வடிச்சு முனிகிரம்ப
வழகியதே சிகனுஞ் செம்மல்
வரிசைபெற வடமொழியிற் சேதுமாக்
கதைதனிழால் வகுத்திட் டானே.

சாலிவாடிபுரம் ஞானப்பிரகாசமுனிவர்.

1906. திருமருவுஞ் சிவஞான சித்தியின்க
ணுரைபெயர்க்குந் தெரிய வேதான்
கருமருவுஞ் சிவாகமத்தின் கனவிதிகள்
கண்டெடுத்துக் கழறு மேன்மை
மருமருவும் வயற்சாலி வாடிபுர
மீதிதவ வடிவா யோங்கும்
பெருங்கருணை மொழிஞானப் பிரகாசன்
றிருவடிகள் பேணல் செய்வாம்.

(1903—4) சிவஞானசித்தி. பரபக்கம்—இறுதி. (1905) சேதுபுராணப் பாயிரம். (1906) சென்னை மியூஸியம் கையெழுத்துப்புத்தகசாலை.

குரு நமச்சிவாயக்கவிட்ட மானியசாஸனப்பாட்டு.

1907. தென்னருணை மருவுகுரு நமச்சி வாய
தேவர்சிஷ்யன் குருநமச்சி வாயன் செய்யும்
மன்னுபணி விடையாகப் புலியூர்ச் செம்பொன்
மன்றுடையான் பூசைகொண்டு மகிழ்ந்து காண்க
இன்னிலமெ லாந்தழைக்க வரசூர்ப் பத்து
மிலிங்கபுர சாதனக்கல் லெழுதி நாட்டி
நன்னெறிசேர் காலாட்க டோழன் சின்ன
நல்லநயி னன்கொடித்து நடத்தி னனே.

குருநமச்சிவாயவழுவிவர் பாட்டு.

1908. அத்தி முதலெறும்பீ ருனவுயி ரத்தனைக்கும்
சித்த மகிழ்ந்தளிக்குந் தேசிகா—மெத்தப்
பசிக்குதையா பாவியேன் பாழ்வயிற்றைப் பற்றி
[1]இசிக்குதையா காரோண ரே.

ஷை முனிவர் அடைந்த தினம்.

1909. வந்திச் சுரவருடம் வைகாசி தேதிரவம்
இந்தா ஞழிகை யேழரைமேல் ---வந்தகுரு
தாளு மருணகிரித் தாணுசிவ லிங்கத்துள்
ஆளு னடச்சிவா யன்.

கமலை ஞானப்பிரகாசமுனிவர்.

1910. ஆய்வார் பதிபசு பாசத்தி லுண்மையை யாய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாங்கல்வி கேள்வியல்லல்
ஓய்வார் சிவானந்த வாரியுள் ளேயொன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையுண் ஞானப்ர காசன்மெய்த் தொண்டர்களே.

1911. கவுளிய மார்க்கங் கலந்தளித் தோன்கம லாலயத் தோன்
இவுளி நரித்திர ளாக்கிவைத் தோனிசைப் பாணருக்காப்
பவுளி யுரைத்தருண் ஞானப்ர காசன் பயின்மடத்திற்
கெவுளி யுரைக்கும் பதிபசு பாசத்தின் கேள்விகளே.

(1908) தமிழ்காவலர்சரிதை. 177. [1]வரிக்குதையா.—இப்பாட்டுப் பட்டினத்தடிகள்வாக்கென்பது பிற்கால வழக்கு. (1909) தனிப்பா. (1910-11) சோழமண்டலசதகம், 25. மேற்கோள்.

ஞானசம்பந்ததேசிகர் தம் ஆசிரியரை நோக்கிக்கூறியது.

1912. களக்கும் பொதிக்கு மெருதுக்குந் தன்னிச்சை கண்டதுண்டோ
எனக்கு மூடற்கு மெனதிச்சை யோவிணங் கார்புரத்தைச்
சினக்குங் கமலையுண் ஞானப்ர காச சிதம்பரவின்
முனக்கிச்சை யெப்படி யப்படி யாக வுரைத்தருளே.

மாசிலாமணிச் சம்பந்ததேசிகர்.

1913. பொருமா கடலிடைத் தோன்றலல் லாது புணரி வெள்ளைத்
தருமா மணியொன்று கண்டதுண் டோவையந் தந்தவனும்
திருமாலும் போற்றுஞ்சதன் ஞரூரிற் சம்பந்த தேசிகனும்
ஒருமாசி லாமணி போன்ப வாரி யுதவியதே.

மனவாசகங்கடந்தார்.

1914. மன்னதிகை வாழ மனவா சகங்கடந்தான்
மின்னேய வாழ்வினிலு மெய்கண்டான்—பன்மறைகள்
வண்ணமருவு மாகமநூல் வைத்த பொருள்வழுவா
தண்ணைவிளக் கஞ்செய்தா னுற்று.

இராமநாதபண்டாரம்.

1915. சேல்கண்ட வாரி யிலங்கேசன் வெம்பழி தீரமுன்னுள்
மால்கண்ட கோயி லிராமீச ராடல்செய் மண்டபத்தை
நூல்கண்ட நற்சக ஞயிரத் தோடைந்து நூற்றிருபான்
மேல்கண்ட நாளின் முனிராம நாதன் விதித்தனனே.

1916. திருமா லரனுக் கபிடேகஞ் செய்யச் சிலையதனுல்
வருமா று கண்டவண் கோடிப் புனற்கண் மகாலயத்தைத்
தருமா யிரத்தைந்து நூற்றுமுப் பான்செல் சகவருடத்
தருமா தவஞ்செய் முனிராம நாத னமைத்தனனே.

1917. பற்றுஞ் சகனிற் பதினைந்து நூற்றிரு பான்மருவ
நற்றும் புலியினை யாள்வீர பூபதி நாளிற்றொண்டர்
குற்றங் கடிந்தவர் சோம நாயகர் கோயிலன்பான்
முற்றுந் தவங்கள் புரிராம நாதன் முடித்தனனே.

(1912) செந்தமிழ். தொகுதி-7. பக்—433. (1913) தொண்டைமண். சத. 21, மேற். (1914) பாவலர்சரித். பக். 233. (1915—17) சாஸனம்—(சேதுராஜ்தமிழும்).

திருவாவடுதுறை ஆதீனகருத்தர் சேதுநாட்டில் மழைபெய்யப்பாடியது.

1918. சைவ சமயஞ் சமயமெனி னச்சமயத்
தெய்வம் பிறைசூடுந் தெய்வமெனின்—ஐவரைவென்
ருனந்த வின்பி லழுந்துவது முத்தியெனின்
வானங்காள் பெய்ம்மின் மழை.

மழைபெய்து தம் நாடு வளம்பெற்றதற்கு உவந்து பொற்கோட்டை என்னும் ஊரைச் சேதுவேந்தர் திருவாவடுதுறை மடத்துக்கு முற்றூட்டாக அளித்தபோது அவ்வாதீனகர்த்தர் பாடியது.

1919. நதியாம் வீரிசிலை நன்னகர்பொற் கோட்டை
பதியாக் துறைசைப் பதிக்கு—விதியாகத்
தானளிட்டான் சேதுபதி தாரணிசா னுள்ளளவும்
ஊனமிலை யெச்சகாலும்.

அறிவானந்தர்.

1920. காணுந்து சோலை வலங்கைமீ காமன் கதிபெறவே
வாணுந்து தேவர்க்கெட் டாவரி வானந்தன் வண்மைகுன்ரூத்
தேனுந்து செஞ்சொற் றமிழா லுரைத்த சிறந்தவரி
வானந்த சித்தி தனைத்தேர் பவர்பிறப் பற்றவரே.

சிவப்பிரகாசமுனிவர்
வெள்ளியம்பலவாணத்தம்பிரான் கொடுத்த
சமத்தியை முடித்துப் பாடியது.

1921. குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழல்
முடக்கோடு மூன்னமனி வாற்ற—வடக்கோடு
தேருடையான் றெவ்வுக்குத் தில்லைதோன் மேற்கொள்ளல்
ஊருடையா னென்னு முலகு.

விவாகஞ்செய்துகொள்ளும்படி வேண்டிய அண்ணமலைரெட்டியாரை நோக்கி கடி முனிவர் கூறியது.

1922. சேய்கொண்டா ருங்கமலச் செம்மலுட னேயரவப்
பாய்கொண்டா னும்பரவும் பட்டீச் சுரத்தானே
நோய்கொண்டா லுங்கொளலா நூறு வயதிருந்து
பேய்கொண்டா லுங்கொளலாம் பெண்கொள்ள லாகாதே.

(1918) இது தாயுமானவர்வாக்கென்றும் பிறவாறும் கூறுவதுண்டு. (1919) சேதுராசர் தமிழும், (1920) தனிப்பா,

1923. நிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த
பெரியோர்க ணிமலன் சூலைக்
கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும்
பெரியசுகங் கிடைக்குங் காம
வெட்டையிலே மதிமயங்குஞ் சிறுவருக்கு
மணம்பேசி விரும்பித் தாலி
கட்டையிலே தொடுத்துநடக் கட்டையிலே
வைக்குமட்டுங் கவலை தானே.

சிவப்பிரகாசர் சந்திரோதயத்தைக்கண்டு தம் ஞானசாரியரை நோக்கிக் கூறியது.

1924. கடன்முரச மார்ப்பக் கதிர்க்கயிற்று லேறி
யடைமதி விண்கழைநின் றுடச்—கொடைமருவு
மெங்கள் சிவஞான வேந்த னிறைத்தமணி
தங்கியவே தாரகைக டாம்.

பழமலையில் சிதம்பர பூபதி அமைத்தளித்த மடத்தைச் சிறப்பித்துப் பாடியது.

1925. வெங்கைப் பழமலை யார்மீது கோவை வியந்துரைக்குங்
கங்கட் கினிய சிவஞான தேவ னிசைவுகொடு
தங்கட் பவனி யிருகான் முதுகுன்றர் சேர்மறுகின்
மங்குற் சிதம்பர பூபதி நல்கு மடமிதுவே.

வெங்கைப்பிடாரியின் தேரோட்டத்தில் தம்மடத்தருகிருந்த முருங்கைமரம் ஒடிந்தபோது பாடியது.

1926. திருந்துதமி ழிலக்கணைவர் தினைக்கோவை
விருத்தகிரிச் செல்வற் கோதும்
பெருந்தகைமை யுடையம்யாம் விடுமோலை
வெங்கைகாகர்ப் பிடாரி காண்க
இரும்புலியி லொருமுருங்கைக் கொம்பொடிய
மற்காத்திங் கிருக்கு நீரம்
முருங்கைதனை வேரோடுங் களைந்தனையெண்
ணூலனைக்கு முலைய தாமோ.

மாங்கனியொன்றை எடுத்ததற்காகத் தம்மை வருத்திய
சோலைக்காவலாளன் சாகப்பாடிய வெண்பா.

1927. அடித்துவருந் தொண்டனுக்கா வந்தகனைத் தாளால்
அடர்த்ததுவுஞ் சத்தியமே யாஞல்—எடுத்ததொரு
மாங்கனிக்கா வெண்ணே மடிபிடித்த மாபாவி
சாங்கனிக்கா தித்தன்வரத் தான்.

திருக்காட்டுப்பள்ளித் தெருவில உப்புவிற்றுநின்ற பெண்ணைக்கண்டு
அவளது புலமையறிந்து கூறியது.

1928. நிறைய வுளதோ வெளிதோ கொளுவேம்
பிறையை முடிக்கணிந்த பெம்மான்—உறையுந்
திருக்காட்டுப் பள்ளி திபாவாய் நீயிங்
கிருக்காட்டுப் பள்ளி யெமக்கு.

அரிபுனிவாது நயனதீக்கைபெற்ற அப்பெண் கூறிய பாட்டு.

1929. தென்னெஞ்சு நில்லேச் சிவப்பிரகா சப்பெருமான்
பொன்னெஞ்சு சேவடியைப் போற்றினேன்—அன்னேன்
திருக்கூட்ட மத்தனைக்குந் தெண்டனிட்டோந் தீராக்
கருக்கூட்டம் போக்கினேனுங் காண்.

அம்புனிவரி பிரபுலிங்கலீலை பாடியது.

1930. தண்ணிலவு புனைசடிலத் திறைபுகழல்
வாசேவன் சரிதைத் தீம்பால்
புண்ணியர்தஞ் செவியாயிற் றமிழ்ச்சங்கத்
தான்முகந்து புகட்டி னனேல்
எண்ணரிய புகழ்மலயத் திருக்கவனேர்
வடிவெடுத்தா னென்று கூறப்
பண்ணியன்முத் தமிழ்க்கவிதைச் சிவப்பிரகா
சப்பெருட்பேர் படைத்து ளாரே.

பிரபுலிங்கலீலை செய்யப்பட்ட காலம்.

1931. பார்கெழு சகாத்த மூவைஞ் ஞூற்றெழு பானுன் காவ
தார்கெழு கரா மங்கொ ளாண்டெறு விடைஞா யிற்றிற்
சீர்கெழு மல்ல மன்றன் றிருவிளை யாடற் காதை
கார்கெழு மிடற்றெங் கோமான் கருணைகொண் டியம்பினனே.

(1930—31) பிரபுலிங்கலீலை முதலும் முடிவும்.

கல்லிடபம் கடலிற்றின்னப்பாடியது.

1932. வில்லார் பொதுச்சபையின் வித்தகா நீயுமுனங்
கல்லானைக் கிக்கருத்திக் காட்டியவுன்—வல்லாண்மை
கட்டுரையே யாயினிந்தக் கல்லே றெழீஇக்கடலே
இட்டவிவர் முன்னினைச்செய் யே.

**கருணைப்பிரகாசர் விவாகஞ் செய்துகொள்ளுங்
குறிப்புத்தோன்றப் பாடியது.**

1933. நாணி யென்பதை நாரியென் றுரைத்திடு மையால்
வேணு வானது வளர்ந்துபோய்ப் புகுந்தது வென்றுற்
காண லாவதோ குருவமெய்ந் நாரியைக் கண்டாற்
பூணு வார்மயல் காளைய ரென்பதும் புதிதோ.

**தம் சகோதரர் திருமணகாலத்தில் சிவப்பிரகாசர் கூறிய
வாழ்த்துக்கவிகள்.**

1934. அய்யன்சென் னிமிசை யுறைகின்ற மடமங்கை
யாரென்ன வுமைவினவவும்

அன்னதொரு மடமங்கை யன்றுவெண் டிரைகொழித்
தழகொழுகு தண்புனலெனத்

தூய்யவொளி யானனங் காரியவிழி காதுவாய்
தோயத்தி லுண்டோ வெனச்

சொல்லருங் கமலமலர் காவிமலர் கொடிவந்தோ
தாபசெங் குமுத மென்னப்

பொய்யென நினைத்துற் கொங்கையும் கூந்தலுற்
புனலினிடை யுண்டோவெனப்

புற்புதஞ் சலமெ தையுவே மறுத்துப்
புகன்றிடுதி நங்காயெனத்

தையலவ ளேயென்ன நாமெழுதி வணங்கிபன்
னன்பிழை பொறுத்தியென்னும்

சங்கர னுரைத்திடத் திருவுள மகிழ்ந்தசிவ
சங்கரி யுமைக்காக்கவே.

(1932) கொற்றமண். சத. 49. சேற். (1933-31) சிவப்ப. பிரபந்தகிரி : வரலாறு.

1935. அரனவ னிடத்திலே யைங்கரன் வந்துதா
னேயவென் செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளிஞ னென்றே சிணுங்கிடவு
மத்தன்வே லவனே நோக்கி

விரைவுடன் வினவவே யண்ணனென் சென்னியில்
விளங்குகண் ணெண்ணினனென
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்துநீ யங்ஙனம்
விகடமேன் செய்தாயென

மருவுமென் கைக்கீள முழமளந் தானென்ன
மயிலவ னகைத்து நிற்க
மலையரைய னுதவவரு முமையவளை நோக்கிநின்
மைந்தரைப் பாராயெனக்

கருதரிய கடலாடை யுலகுபல வண்டங்
கருப்பெரு தீன்ற கன்னி
கணபதியை யருகழைத் தகமகிழ்வு கொண்டவள்
களிப்புட னுமைக்காக்கவே.

1936. அம்பிகை யரன்றன்னை நோக்கியுன் னுபரண
மரவமென வுமையை நோக்கி

யரியரவ சயனத்தை யரவுருவ மானத்தை
யறியாய்கொல் சிறிது மென்ன

நம்பியனை தொழுமிரக் குணுமாண்டி நீயென்ன
நான்றுத னறிவேனென

நவையுறும் பொய்புகன் றீரெனப் பாரதம்
நடந்ததே காரியாமென

வெம்பியொரு வன்பிரம் பாலடித் தானென
விளங்கிழை யொருத்தி தாம்பால்

வீசினது சொல்லென்ன வெண்ணூ யிரம்பெண்கள்
மிகுகற்பை நீக்கி னையெனப்

பம்புகற் பினிலோ ரிரட்டிப்பு நீக்கினது
பதறுமன் னீரே யெனப்

பரமருட னிவ்வாறு விளையாடு பச்சைப்
பசுங்கொடி யுமைக்காக்கவே.

(1935–36) சிவப்ர. பிரபந், ஆசிரியர் வரலாறு.

1937. அச்சுத னளிப்பனில முமதுதே யன்வித்தை
யருளுவன் பலபத்திரன்
அலமுதவு வன்சமன் பகடவ னந்தமக்
கானதோ ரெருதுமுண்டே

மூச்சிர வயிற்படை யினைக்கொழுவ தாக்குவோம்
மொய்ம்புட னிழுத்திறுக்க
முந்திய வடக்கயிற் றுடன்மற்று நமதன்பர்
முன்பே யிரந்து கொள்வோம்

இச்சையுடை நமதிளைய தனையனு கியகந்தன்
இனிமையொடு மாடுமேய்ப்பன்
இனியுழுது பயிரிதை னன்றுநன் றிதைவிட்
டிரந்துண்ப தினமெனவே

கச்சுமுலை மாதுமை யுரைத்திடும் புத்தியைக்
ககக்கொண் டளத்தி லிதுநற்
காரிய மெனக்கருதி மெத்தக் களித்திடுங்
கண்ணுத லுமைக்காக்கவே.

1938. கவுரிகம லாயர னிரந்தசோ றிதுவெனக்
கமலமண் கண்டேனெனக்
காளையொன் றேயரற் கெனவாடு மேய்த்ததைக்
கட்டிடைய னோவெனச்

சிவனெனுவர் தூதென்ன வத்தூது சென்றகதை
செப்பிலொரு பாரதமெனச்
சேரோடு திருடினை னரனெனக் கட்டுண்ட
செய்திகா மறிவோமென

அலையிலை மாடினு னரனென்ன வவ்வாட
லரவமறி யாதோவென
ஆலமதை யுண்டன னரனென்ன மண்ணுண்ட
வதனை யறி யோமோவென

விவரமொடு மலைமகளு மலர்மகளு மிவ்வா று
விளையாடு மிவர்க டிணையா
மேவிவரு புத்திமித் திரகளத் திரருடன்
மேன்மேலு மிகவாழியே.

(1937–38) சிவப்ர. பிரபந், ஆசிரியர் வரலாறு.

தம் இளையசகோதரரான கருணைப்பிரகாசர் சிவபதமடைந்தபோது சிவப்பிரகாசர் இரங்கிக் கூறியது.

1939. முன்னமொரு தமிழ்ப்புலவன் றனையுண்டு
கண்டசுவை முதிர்ச்சி யாலே

தன்னியலே முழுதுமுரைத் தமையாமுன்
னினைக்கவர்ந்து தடங்கா ளத்தி

மன்னவனுண் டானெனது மாதவத்தின்
வலிதீர மண்ணின் மீதே

என்னுடன்வந் தவதரித்த விளங்கருணைப்
பிரகாச னென்னுங் கோவே.

அக் கருணைப்பிரகாசர் இறந்தமைக்கு ஆற்றது அவர் முன்றேன்றலான வேலையசுவாமிகள் கூறியது.

1940. ஆண்டதனு லெனையொவ்வாய் விதத்தையினிற்
றமையனினு மதிக மென்றே

பூண்டவுல கதனினுளோர் புகல்வதுகேட்
டிருந்தமென்ன புதுமை தாமே

காண்டகுகண் மணியேயுல் லிளங்கருணைப்
பிரகாசக் காளாய் நீதான்

மாண்டனையென் றறிந்திருந்து முயிர்தரித்தேன்
யானுமிக வன்னெஞ் சேனே.

தமையனார் சிவப்பிரகாசர் சிவபதமடைந்தபோது வேலையசுவாமிகள் கூறியது.

1941. அல்லிமலர்ப் பண்ணவனு மாராய்ந் தறிந்த
சொல்லு மிருவரிடைத் தோன்றியயால்—முல்லை
யரும்பிற் பொலியு மணிமுறுவ னல்லாய்
கரும்பிற் கணுவிகர்த்தேன் காண்.

சிவப்பிரகாசமுனிவர் வேதாந்தசூடாமணி பாடியதுபற்றிய பாயிரச்செய்யுள்.

1942. அருமறையின் பொருடெரிந்த விவேகசிந்தா
மணியதனு ளறைவே தாந்தப்
பொருளினைமுன் னீர்வரைப்பி னுலகறியச்
செந்தமிழாற் புனைதல் செய்தான்

பெருகுசுவை நறவொழுகு செஞ்சொன்மல
ராற்புனையாப் பெருந்தண் மாலை
கருவிடற்று வானவற்கே சாத்துசிவப்
பிரகாசன் கவிஞர் வேந்தே.

வெங்கையுலாப் பாடியது.

1943. வெங்கைப் பதிப்பழைய வெற்புக் கணிமுழுதுந்
தங்கத் திருவுலாச் சாற்றினான்—சங்கத்துப்
போற்றுந் தமிழ்நூல் பொதுக்கடிந்தா னென்றுலகஞ்
சாற்றுஞ் சிவப்பிர காசன்.

சிவப்பிரகாசர், வேலையர், கருணப்பிரகாசர் என்ற மூவர் சகோதரரும் பாடிய நூல்கள்.

1944. தெருள்சிவப் பிரகாச வடிகளாரு ளியநூல்கள்
சீர்த்சோண சைல மாலை

செந்திலந் தாதிவெங் கைக்கோலை வெங்கைக்
கலம்பகம் வெங்கை யிரட்டை

செப்பரிய வெங்கையி னலங்கார மேசிவப்
பிரகாச நல்லி சாசம்

சேர்த்தர்க்க பரிபாஷை நால்வர்நான் மணிமாலை
திரிபில்சத மணிமா லையே

அருளுறுஞ் சிவஞானி செஞ்சுவிடு தூதுதா
லாட்டுபிள் ளைத்த மிழ்ச்சலம்

பகமொடும் பள்ளியி னெழுச்சிகூ வப்புரா
ணம்பிரபு லிங்க லீலை

அமையுமிவ் வாசந்தரு டாமணீ சித்தாந்த
சிகாமணிகல் பழமலையினந்

தாதிபிட் சாடனை வமணிமா லையுட
னணைதொச்ச கக்க லிப்பா

மருளதனை மாற்றுபெரி யம்மைக் கலித்துறை
வளர்மெய் விருத்த மேசு

மதகரா கரணகன் னெறியோடு சிவநாம
மகிமைதல வெண்பாமுறை

வதியிட்ட லிங்கவபி டேகமா லையுநெடுங்
கழிநெடில் குறுங்க ழிநெடில்

மாநிரஞ் சனமாலை கைத்தலம் பகர்மாலை
மற்றும்வே லையர் நூல்கள்

வெருளில்கைத் தலமாலை நல்லூர்ப்பு ராணமலர்
விரிபாரி சாத லீலை

வீரசிங் காதனபு ராணமயி லாசல
விரட்டைமணி மாலை யொடுலா

மிளிர்குகை நமச்சிவா யர்லீலை கருணைப்ர
காசர்மே விவ்விட லிங்க

விதியகவல் காளத்தி நன்புரா ணந்தனை
விரித்தனரிம் மூவ ருமரோ.

சிவப்பிரகாசர்முதலிய முவர்க்குந் தந்தையான குமாரசுவாமிகள் பாடியது.

1945. கயல்வாய்த்த கண்ணி யுலகின்ற வல்லிபங் காவுனது
செயல்வாய்த்த வன்பர்க்கு மல்லா தவர்க்குஞ் சிரிப்பல்லவோ
இயல்வாய்த்த வெற்றைக் கியான்வாய்த் ததிவுமிங் கென்றனக்கு
வயல்வாய்த்த தும்மினை வாய்த்தது மைந்தர்கள் வாய்த்ததுமே.

சிவப்பிரகாசசுவாமிகள்மாணக்கர் பழனிமாமுனிவர் அடைந்த தினம்.

1946. அடையு மிரத்தாட்சி யாண்டாடி மாதத்
திறைவன் றிருவா திரையிற்—றுறைசைச்
சிவப்பிரகா சையன் றிருவடியைச் சார்ந்தான்
தவப்பழனி மாமுனிவன் முன்.

குமாரகுருபாமுனிவர்.

1947. திருமக ளகலாப் பரமவை குர்த
நன்னக ருதித்த செற்றொகிக் குரிசில்
ஐர்தெனும் பருவம் வர்துறு மளவும்
மழக்குண மொருவி மிழற்றிடாச் செம்மல்
செந்திலம் பதிவாழ் கர்தன தருளால்
ஓதா துணர்ந்த போதனுய் முன்னர்க்

(1945) தனிப்பா. (1946) சென்னை மியூஸியம் புத்தகசாலைப்பிரதி.

கலிவெண் பாவெனு மொலிபெறு மலங்கல்
குகன்றிரு முடிதனக் குகந்திடச் சூட்டிப்
பிள்ளைக் கவிமுதல் வெள்ளைக் கிழத்தி
மாலையீ ருகச் சால்பமை பிரபந்தம்
முந்நான் கியற்றித் தன்னுஞ் சமய
நிலையையுங் காட்டி யுலாவிலா தியாரும்
தீதெலா மொருவி நீதியே புரிய
நீதிநெறி விளக்கமென் றேதமில் பனுவலும்
இயற்றின னில்லறந் தியக்குறு நிலையென
இளமையிற் றுறந்து வளமைசேர் தருமை
மாசிலா மணியெனுந் தேசுறு குரவன்
பதமலர் பழிச்சுமற் புதகுண குமர
குருபர னெனும்பெயர் மருவிய முனியே.

தமரதருபாழனிவர் தம் நாலாசிரியரைப் பாடியது.

1948. காட்டிருந் தாலு மலையிருந் தாலுங் கருகரிய
நாட்டிருந் தாலு நமக்கென்ன காணில்ல தோர்கமலை
வீட்டிருந் தாண்டருள் ஞானப்ர காசன் விரைமலர்த்தாள்
கேட்டிருந் தாலும் பிறவா நெறிவந்து கிட்டிடுமே.

வேலையர் வீரசிங்காதனபுராணம் பாடியது.

1949. கலியது நாலா யிரத்தெண் ணூற்றி ருபான்
கதிசகாத் தம்மொரா யிரத்தின்
மலியறு நூற்று நாற்பத்தொன் ருக
வழங்கிய விளம்பிசைத் மாதஞ்
செலுமதிற் பதினொன் காந்தின மதனிற்
றிங்களிற் கயிலையோர் குடக்தை
சொலும்வீர பத்ர நிரேணுகர் சோம
சேகரர் சரிதமுஞ் தொகுத்தே.

1950. மகத்துதே சிகன்முன் கருமடந் தமிழால்
வழுத்துமென் றியம்பவே லையர்
தொகுத்தருண் மழைய மல்லையர் சரிதர்
தொண்மையா மூர்க்கர்தஞ் சரிதம்

(1948) குமரகுருபரசுவாமிகள்பிரபந்தத்திரட்டு, நூலாசிரியர்வரலாறு.
(1949—50) ஷ வீரசிங்காதன புராணப்பாயிரம்.

பகுத்தக லங்கைச் சோழர்தஞ் சரிதம்
பகர்ந்தனர் சிதம்பர மடத்துள்
மிகுத்துவாழ் வசவ லிங்கையர் பிறரும்
விளம்பிட வேண்டுமென் றிசைக்க.

ஒப்பிலாமணிதேசிகர் சிவரகசியம்பாடி அரங்கேற்றிய காலம்.

1951. மன்னர்புகழ் சரபோசி மகராச ராசன்
மாநிலங்காத் திருளிற் றஞ்சைமா நகரிற்
றுன்னுமே விளம்பியுற்ற மகாமகி யைந்திற்
சோதிசிவ ரகசியமொப் பிலாமணிசொற் றமிழை
இன்னிலத்தி லரங்கேறச் செய்தனர்பொன் மாறை
எழில்சேருந் தீராத வினைதீர்த்தான் பாகைப்
புன்னைவன நாதனிவர் சைவநெறி வளர்க்கும்
பூபால ரவனியெங்கும் புகழினிதோங் கிடவே.

அரசூர்ச் சொக்கப்புலவர் தடாதகைப்புராணம் அரங்கேற்றியது.

1952. கொண்டல்கண் மிளிரும் சோலைக் குடந்தையிற் பலரு மேவத்
தண்டமிழ்ப் பனுவல் வெற்றித் தாரைவேற் றூனை மன்னன்
மண்டலம் புரக்குஞ் செங்கோன் மனுநிகர் சகசி வாழ்நாள்
தொண்டைநாட் டரசூர்ச் சொக்க னரசவை சொற்ற தன்றே.

சம்பந்தமுனிவர் திருவாரூர்ப்புராணம்பாடி அரங்கேற்றிய காலம்.

1953. பார்புகழ் சகாத்தமா யிரத்தைஞ் ஞூற்றுப்
பதினொன்கா மியபிங்க லப்பே ராண்டிற்
சீர்பரவு பங்குனியுத் தரத்துத் தேவா
சிரயெனுங் காவணத்திற் றேவர் போற்றும்
கார்பரவு கண்டரா ஞர்ப்பு ராண
காதைதா சரகாண்டங் கலவ லோர்முன்
வர்பரவு பேரளகை வணிகர் கோமா
னிசைவளர்சம் பந்தனரங் கேற்றி ஞனே.

(1951) சிவரகசியம்—பாயிரம். (1952) தஞ்சைச் சரச்சுவதிமால் பிரதி. (1953) திருவாரூர்ப்புராணப் பாயிரம், 85.

வேறு புலவர் ஒருவர் திருவாதூர்ப்புராணம்பாடி அரங்கேற்றியவாலாறு.

1954. ஆண்கெலி யுகத்துக்கு நாளூற்று
முப்பத்தீ ராயி ரத்துள்
ஈண்டியநா லாயிரமு மறுநூறு
மெண்ணேந்து மேழுஞ் செல்லப்
பூண்டபரா பவவாண்டின் மகரத்திற்
புகதிரையோ தசிபூர் வத்திற்
காண்டகுதிங களின்மானின் மயேந்திரத்திற்
கவுலவமாங் கரணந் தன்னில்.

1955. அருமறைக ளொருநான்கு மாகமங்க
ளெழுநான்கு மங்க மாறும்
திரிவறவா ராய்ந்துசிவ னேபரம
தெய்வமெனத் தெளிந்த சைவர்
பொருவரிய சிவஞரூர்ப் புற்றிடங்கொண்
டருள்புரிந்த புகழை யெல்லாம்
உரைசெய்யு மாரியத்தின் பொருடமிழா
லுணர்த்துகவென் றுரைக்கச் சொல்வாம்.

திருவையாற்றுப்புராணம்பாடி அரங்கேற்றப்பட்ட வாலாறு.

1956. மலிபுனல்சேர் சோணாடு தஞ்சையிற்காத்
திமெரசர் மதியமைச்சன்
ஒலிமறைதேர் கோவிந்த தீட்சிதரை
யன்றிருவாக் குடைமையாலே
கலியுகத்துக் சகஞாண்டு ஏழைஞ்நூற்
றிருபதின்மேற் காணுமேழாய்ப்
பொலிவருடத் தையாற்றுப் புராணவட
மொழிதமிழாற் புகலலுற்றேன்.

வேற்காட்டேப்புராணம்பாடி அரங்கேற்றப்பட்ட வாலாறு.

1957. ஆதவன்போற் கணிவிளக்குங் கலிதாலா
யிரத்தெண்ணூற் றறுபத் தொன்பான்
மீதுவனப் புசகஞண்ட டாயிரத்தோ
ரறுநூற்றின் மேற்றொண் ணூற்றிற்

(1954—56) தஞ்சை சரச்சுவதிமால்—பிரதிகள்.

சிதவயற் பொழிலுதித்த சிகாழி
வடுகேசன் றிருத்தாள் போற்றி
வேதவனப் பெருமைமிகும் வடமொழியைத்
தமிழ்மொழியால் விளம்ப லுற்றேன்.

சுந்தரலிங்கமுனிவர் திருப்பெருந்துறைப்புராணம் பாடியது.

1958. திருவளரும் பெருந்துறைமான் மியத்தையருஞ்
செந்தமிழாற் றிசைகள் போற்ற
அருளுதவு துறைசையில்வாழ் திருச்சிற்றம்
பலகுருவி னடிமை மேலாய்
மருவியஞா னப்பொருள்சேர் கல்வியின்ற
னெல்லையுணர் மதுர வாக்கி
இருநிலத்தோர்க் கமுதெனச்சுந் தரலிங்க
முனிவரன்ரு னியம்பி னனே.

சாந்தலிங்கதேசிகர் அவிரோதவுந்தியார் இயற்றியது.

1959. பன்னெறியி னிகல்விளைக்கும் பலசமயத்
தவருமுத்தி பதத்திற் கீது
நன்னெறியென் றுய்யவவி ரோதவுந்தி
யாரெனுநூ னல்கி னனெல்
வென்னெறிதேர் மறைநெறியா கமநெறியொன்
றெனக்காட்டும் வீர சைவத்
தொன்னெறிமா கேசனெங்கள் சாந்த லிங்க
தேசிகனுந் தூயன் றானே.

ஷ தேசிகர் வைராக்கியதீபம் இயற்றியது.

1960. உருட்கறங் கூசன் மனமொடுங் கிடவென்
னுணர்வுநேத் திரக்கியா னெனதா
மிருட்கெடுத் தெலாமாம் பொருட்டிகழ்ந் திடுமோ
ரெழில்வயி ராக்கியதீ பத்தை
மருட்கொடும் பாசக் குழிக்கண்யாம் வீழா
வகையரு ளினன்மறை முடிவின்
தெருட்கமை வீர சைவனெஞ் சாந்த
லிங்கதே சிகன்றெருட் சுடரே.

ஆதியப்பர் மாயூரபுராணம்பாடிய வரலாறு.

1961. இங்குறுவல் வடகலையிற் சருக்க மெல்லா
மிலகுபசுந் தமிழ்மொழியா லெவர்க்குந் தோன்றப்
பொங்குபுகழ் வணிகர்கோத் திரத்தின் மேவும்
பொன்மாறைப் பதிபுரக்கும் போசன் வாசச்
செங்குவளைத் தெரியல்வயித் தியநா தன்சேய்
தீராத வினைதீர்த்தான் செப்பென் றோதச்
சங்கவயற் பொன்விளைந்த களத்தூர் மேய
தமிழரைய ஞதியப்பன் சாற்றி னனால்.

1962. பொன்னருங் திருக்களரங் கொள்ளம் பூதூர்
பூவனம் பருதிவனம் போற்றுந் தஞ்சைத்
தென்னருங் கொடிவீதிக் கண்ணூர் கோயில்
சிறந்தவைகற் பதியிவைக்குஞ் சிவபு ராணம்
பன்னளுந் தனியோங்குந் தமிழாற் செய்தேன்
பகர்ந்த னுரைத்தபடி பரன்பால் வைகு
மின்னருமா யூரப் பதிக்கு மீண்டும்
விளம்புகேன் வழுவுறினும் விரும்பு வாரே.

1963. ஞ்யிலுரை யுணர்புலவ ருவகையோடு
..... கம வுறுச காத்தம்
ஆயிரத்தோ டறுநூற்று நாற்பத்தி
ரண்டினுக்கு மப்பா லிங்ஙன்
மேயவரு டஞ்சாரு வரிதனிற்சித்
திரைமதியில் விண்ணேர் போற்று
நாயகன்வாழ் மாயூரத் தலபுரா
ணம்பாடி நவின்ற தாமால்.

தாயுமானவர் சிவகதி அடைந்ததைப்பற்றி அவர்மாணாக்கர் அருளையர் பாடியது.

1964. உலகினுக் கணியா மிராமநா தபுரத்
துயர்நறை வாவியின் குணபால்
மலர்நிறை வனத்திற் சிவத்துறு நிட்டை
மருவிமெய் யொருவிவே தாந்தத்

நிலைய பொருளாய் வானமாய் நிறையு
மெய்தையே யெனதுபந் தமும்மேபாய்

நிலையுற நினது திருவரு ளளிப்பாய்
நின்மலா னந்தமே போற்றி.

கோடிக்கரைஞானிகள் தாயுமானவர் அடைந்த காலத்தைக்குறித்துப் பாடிய பாட்டு.

1965. தகளறு சாலி வருடமா யிரத்தைந்
நூற்றெடெண் பத்தொன்று தொடரும்

மிகுசுப கிருதாம் வருடந்தை மாதம்
வெண்மதி வாரநாள் விசாகம்

மகிமைசேர் பூர்ணைத் திதியினி லருத்த
மண்டல சமயத்திற் கங்கை

திகழ்கரை யதனிற் சுயுமா னவனூர்
சிவத்தினிற் கலந்தநற் றினமே.

முக்களாலிங்கர் எனப் பிள்ளைத்திருநாமம்பெற்ற சிவஞானமுனிவர் சிறுவயதில் தம் விருப்பிற்கைசந்து அடியவர்க்கு அமுதிட்ட தம் அன்னையாரைப் புகழ்ந்து கூறியது.

1966. அருந்ததியென் னம்மை யடியவர்கட் கென்றுந்
திருந்த வமுதளிக்குஞ் செல்வி—பொருந்தவே
ஆனந்தக் கூத்த ரகமகிழத் தொண்டுசெயும்
மானந் தவாத மயில்.

திருப்பாதிரிப்புலியூர்ச் சிவாலயத்தில் சமத்திபாடிமுடிப்போர்க்கென்று புலவர்கட்டிவைத்த பொற்கிழியை ஏழைப்பிராமணரொருவர் பெறும்படி சிவஞானமுனிவர் பாடிமுடித்த செய்யுள்.

1967. வரையேற விட்டமுதஞ் சேந்தனிட வுண்டனவல்
வினமென் சூலும்

உரையேற விட்டமுத லாகுமோ வெனச்சித்தென்
னுரைக்கி னென்னும்

நரையேற விட்டமுத ஞானவனுக் கொண்டிடமும்
புலிசை மேவும்

கரையேற விட்டமுதல் வாவுண்ண வன்றியுமோர்
கதியுண் டாமோ.

(1965) தாயுமானவர்பாடல்; ஆசிரியர்வரலாறு.

சிவஞானமுனிவர் கலைசைச்சேங்கழநீர்விநாயகர் பிள்ளைத்தமிழ் அரங்கேற்றிய காலம்.

1968. இலகுசக வீரெட்டு நூற்றுநாற் பத்தேழி
னிற்கரங் குர்ப மிருபத்
தேழிரே வதிவெள்ளி பூர்வபக் கத்திதியை
யேர்க்கவுல வஞ்சுப் பிரம்

கலவியுறு சுபதினங் கன்னிலக் கினமதிற்
கலைசைப் பதிக்குள் வாழ்செங்
கழுநீர் விநாயகர்த மீதுபிள் ளைத்தமிழ்க்
கவிபாடி வாலேருணை

அலைமலி கடற்கடைந் தமுதூட்டி மாலென்ன
வவனியிற் புலவர் செவியால்
ஆர்ந்திடத் துறைசைவாழ் சிவஞா ச தேசிக
னரங் கேற்றி னனைதலால்

நலசுகுண மலிகுவலே யணிபுயன் வீரப்ப
னல்குமக ராச யோகன்
நங்கள்சே சவபூப னனுசர்சேய் சுற்றமு
நன்மைதகு வாழ்வுறுகவே.

1969. இன்றிழக்கு மூக்கன்றே யீர்த்தமா னங்கொகித்தா
னென்றுசய வீரனேயே யேத்திவாள்—மன்றவே
ரற்கலைமான் றாயிவ ஞானமுனி யோதுதமிழ்ச்
சொற்சுவையை நோக்குந் தொறும்.

அம்முனிவர் சைவசித்தாந்தசுகிகட்டளை இயற்றியது.

1970. வடதூற் கடலுந் தென்றமிழ்க் கடலும்
மூழ்துணர்ந் தருளிய முனிவரன் றுறைசை
வாழ்சிவ ஞான மாதவன் முன்னூற்
சித்தாந் தப்பிர காசிகை சிறந்திட
மொழிபெயர்த் தருளினன் தென்மொழி யாக
மருளகன் றெம்மனோர் மதிபெறற் பொருட்டே.

(1968-69) சிவஞானசுவாமிகள் பிரபந்தத்திரட்டு.

சிவஞானமுனிவர் சிவகதியடைந்த காலம்.

1971. மன்னும் விசுவா வசுவருட மேடமதி
உன்னிரவி ஈரட்பகலோ தாயிலியம்—பன்னுந்
திருவான னெங்கோன் சிவஞான தேவன்
திருமேனி நீங்குந் தினம்.

அம்முனிவரைப்பற்றி அவர் மாணாக்கர்கள் பாடிய துதிகள்.

1972. ஒலியங் காணச் சுவரிலை சுவரை
யுற்றறிந் திடிலவை யிலபோன்
மேவுசத் தாதி காணுறிற் சிவமும்
விளங்குரு விளங்குருச் சிவத்தைப்
பாவிநீ சிவம லாலிலை யெனவே
பகருபூ ரணம்விளங் குறுமென்
ஆவகை துறைசை யமர்சிவ ஞான
தேசிக னறைந்தன னன்றே.

1973. கண்ணிலுற் காணச் சித்திரங் கையாற்
றடவுரிற் சுவரல திலையே
கண்ணுபொய்ப் புலனுற் காணுறிற் சகமாய்
நணுகுமப் புலன்வழி யொழுகா
துண்ணிறை யருளா லுற்றறிந் திடிலவ்
வுறுசுக மகன்றுபூ ரணமே
நண்ணுமென் றுரைத்தா னவகை துறையார்
நஞ்சிவ ஞானதே சிகனே.

தோட்டிக்கலைச் சுப்பிரமணியமுனிவர் பாடியவை.

1974. ஒதரிய வாய்மைச் சிவாகமங் கட்கெலா
முற்றபே ராக ரமதா
ஒன்குதிரு வாவடு துறைப்பதியி லத்புதத்
தொருவடிவு கொண்ட குளியே

(1971—73) சென்னை மியூஸியம் கையெழுத்துப்புத்தகசாலை. (1074) வெஞ்ஞானபோதமாபாடியம், வெஞ்ஞானமுனிவர் வரலாறு.

பேதமறு சமயவா திகளுள மயக்கைப்
பெயர்க்கும்ரச குளிகை யாகிப்
பிரியமுட னேவந் தடித்தவர்க் கின்பப்
பெருங்கருணை மேரு வாகி

ஆதரித் தடியேங்க ளுண்ணத் தெவிட்டாத
வமிர்தசா கரமாகியே
யழகுபெறு கலைசைச் சிதம்பரே சுரரடிக்
கதிமதுர கவிதை மாரி

மாதவர் வழுத்தப் பொழிந்தருளி யென்றுமவர்
மன்னிவளர் சன்னி தியிலோர்
மணிவிளக் கென்னவளர் சிவஞான மாதவன்
மலர்ப்பதம் வணங்கு வாமே.

1975. திண்ணை வின்பச் சேவடியுந் திருவிழியுந்
திருமார்புஞ் செல்வக் கையும்
கண்ணுறு மன்பர்க் கருள்கருணைத் திருமுகமும்
பசுங்குழவி நடையே யாகிப்

புண்ணிய யத்தின் பொலிவாகி யற்புதக்கோ
லக்கொழுந்தாய்ப் புலேசா யேற்குக்
கண்ணே விட்டு நீங்காத சிவஞான
சற்குருவே கருணை வாழ்வே.

கச்சியப்பமுனிவர் விநாயகபுராணம்பாடி அரங்கேற்றியது.

1976. சொல்வாழ்ந்த புகழ்த்தொண்டை வளநாட்டிற் சிறந்த
திருவர்குல சிகாமணியாங் கந்தப்ப னருளும்
வல்லாண்மைத் தடம்புயத்தோன் குளக்கைபூர் வள்ளல்
மாமேரு காவலனும் வரம்பில்பெரும் புகழோன்
வில்லார்ந்த வருட்சிவபுண் ணியக்கொழுந்தா புலகில்
விளங்குசிதம் பரபூபன் விநாயகன்மான் மியத்தை
எல்லாரு முயத்தமிழா லருளுகெனத் தந்தான்
இருந்தமைசைக் கச்சியப்ப னெல்லையின்மா தவனே.

(1975) சிவஞானபோதபாடியம். சிவஞானமுனிவர் வரலாறு.

கச்சியப்பமுனிவர் சிவகதியடைந்தகாலம்.

1977. ஏர்தரு சாலி வாகன சகாத்த
மாயிரத் தெழுசதத் தொருபத்
திரண்டின்மேற் சாதா ரணவரு டத்தோ
டியைதரு சித்திரைத் திங்கள்

சார்தரு தெய்தி பத்திரு நிறைம
தகுஞ்செவாய் வாரம்பூர் வத்திற்
சத்தமி புனர்பூ சத்திரு நாளிற்
சார்தரு கும்பலக் கினத்திற்

சீர்தரு துலைசை நமச்சிவா யன்றன்
திருட்புக ழுலகினிற் றுலக்கித்
திகழ்ந்துன கச்சி யப்பதே சிகனற்
றிருப்பெருங் காஞ்சியி னெய்தித்

சேர்தரு மடியார் தமக்க விருளைத்
தினகரன் மூன்னிரு வென்னைத்
திருந்துதன் னருளா லகற்றிவீ டுறுத்திச்
சிறந்தபு ரணத்தடைந் தனனே.

1978. வருடஞ்சா தாரணமா மன்னுதிங்கண் மேடம்
திருநாட் புனர்பூசஞ் சேர்ந்தார்க்— கருளாற்
கருவே ரறுத்தருளுங் கச்சியப்ப தேவன்
திருமேனி நீங்குந் தினம்.

சைனப்பெரியோர்.

தணிகைமாமுனிவர்.

1979. அலைபுரியும் புனற்பொன்னி யாறுடைய சோழன்
அரு(ண்)மொழிக்கி யாண்டிருபத் தொன்றாவ தென்றும்
கலைபுரியு மதிநிபுணன் வெண்ணிலான் கணிச்சேக(?)
காமருபொற் சூரியன்ற ஞமத்தால் வாம

(1977—78) சென்னைமியூஸியம் கையெழுத்துப் புத்தகசாலைப்பிரதி.
(1979) S. I. I. Vol. I, 95.

நிலைநிற்குங் கலிங்கிட்டு நிமிர்வைகை மலைக்கு
நீழெழி யிருமருங்கு நெல்வினையக் கண்டோன்
கொலைபுரியும் படையரசர் கொண்டாடும் பாதன்
குணவீர மாமுனிவன் குளிர்வைகைக் கோவே.

வச்சணந்திமுனிவர்.

1980. மன்னுந் திருமலை யாகு முதயத்து வச்சணந்தி
யென்னுங் கடவுட் கதிரவன் றோற்ற விருநிலத்[தே]
[துன்னுஞ் சமயங்க ளாகிய] தாரகைத் தொல்கணந்தான்
பன்னுந் திருநய நூல்வா தியரொடும் பாறியதே.

பிறபெரியோர்.

முன்னோரான துறவியொருவர் வாக்கு.

1981. திருத்தக்க மாமுனிசிற் தாமணி கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம்—உருத்தக்க
கொங்குவேண் மாக்கதையைக் கூறேங் குறளணுகேம்
எவகெழிலென் ஞாயி றெமக்கு.

பல்லவவேந்தனை

பெருமானடிகள் விழுய அபராஜித விக்கிரமவர்மன் வாக்கு.

1982. திருந்து திருத்தணியற் செஞ்சடைப் சற்குக்
கருங்கல்லாற் கற்றளியா நிற்க—விரும்பியே
ற்கலக ளெல்லா நவின்றசீர் நம்பியப்பி
பொற்பமையச் செய்தான் புரிந்து.

சத்திபல்லவனைப்பற்றிய சாஸனப்பாடல்கள்.

1983. காடவர்கோன் சத்தி கற்றோட்டி லிட்டயாண்
டேடியலி மைந்தி லிகிவீத்தான்—நீடியசீர்ப்
பல்லவமா ராயன் பகிரீக்கி தண்டலத்துக்
கல்லிவர்நீ சோரிக் கலிங்கு.

(1980) தஞ்சைச் சரச்சுவதிமால் பிரதி. (1981) பெருங்கதை ஆசிரியர் வரலாறு. வேலுபாடமுமுண்டு (1982) The Journal of the S. I. Association, Oct. 1910. p. 183. Foot Note-"இவ் வெண்பாப் பெருமானடிகள் தாம் பாடி அருளித்தி"என்ற குறிப்பு இப்பாட்டின்கீழ் உள்ளது. (1983) Rock Inscriptions at Tandalam, by Dr. Hultzsch (Ep. Ind. Vol. vii, p.26.)

1984. மண்டலத்து ளோர்மதிப்ப வண்போளி யூர்நாட்டித்
தண்டலத்தே ரிக்கலிங்கு தானமைத்தான்—ஒண்டமிழ்ப்
பாமங்கை தான்விரும்பும் பல்லவமா ராயனெழிற்
பூமங்கை தன்கோன் புரிந்து.

இராமனரசிங்கன்.

1985. நங்கோ னிராமனெழிற் செங்கோ னரசிங்கன்
எங்கோன்முன் கோவ லிடைகழியில்—அங்கேய்
கருங்கற் படையைந்து செம்பொற் குடந்தான்
நெருங்கப் பயில்வித்தா னின்று.

பூவணவன்–காரி.

1986. சுலவுமலர்ச் சோலைச் சுசீந்திரவா திக்குத்
தலங்கழ மாதைச் சமைத்தான்—நிலவுபுகழ்
வாளபயற் கியாண்டுபதி னாறிரட்டி சேய்வார்மன்
பூவணவன் காரி புரிந்து.

சாஸனமுடிவில் எழுதப்பட்ட வெண்பாக்கள்.

1987. தண்டூச் [1]சுரனோலை சாகரஞ்சூழ் வையகத்துக்
கண்டூச் [2]சுரன்கரும மாராய்க—பண்டே
அறஞ்செய்தான் செய்தா னறங்காத்தான் பாதந்
திறம்பாமற் சென்னிமேல் வைத்து.

1988. ஆகொடித்தா னறம்பெற்றான் கொற்றவனுய்ப் பின்னுமே
லுடித்தா னறங்காத்தல் வேண்டும்—கடித்தரவே
மாற்றினனேற்றரசாளு மற்றதனைப்
போற்றினனென்...[வீடு புகும்].

(1984) Rock Inscriptions at Tandalam, by Dr. Hultzsch (Ep. Ind. Vol. vii, p. 23) (1935) Ep. In Vol. VII, p. 45. (1986) T. A. S. Vol. iv. p. 133. (1987) Ep. Carn Vol. IX, pp. 9, 21. [1]சுரன் கோயிற். [2]சுரன்கருப்ப மீறூர, கரும மாராயன்—இது 'தொண்டைமான் சேந்தமழபார் சாஸனம்' என்னு மிடத்துக் காணப்படுகிறது.

நூல்கள்.

தொல்காப்பியத்துக்குப் பனம்பாரனார்கூறிய பாயிரம்.

1989. வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
மூன்றுநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்
நிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்
தறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரிறபத் தெரித்து
மயங்கா மரபி னெழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பி னைந்திர நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

தொல்காப்பிய எழுத்ததிகார இயல்வைப்பு.

1990. நூலின் மரபு மொழிமரபு நூன்மிறப்பு
மேலைப் புணர்ச்சி தொகைமரபு—பாலாம்
உருபியலின் பின்னுயிர் புள்ளி மயக்கம்
தெரிவரிய குற்றுகரஞ் செப்பு.

ஷ அதிகார சூத்திரந்தொகை.

1991. எழுத்ததி காரத்துச் சூத்திரங்க ளெல்லாம்
ஒழுக்கிய வொன்பதோத் துள்ளும்—வழுக்கின்றி
நானூற் றிருநாற்பான் மூன்றென்று நாவலர்கண்
மேனூற்று வைத்தார் விரித்து.

ஷ சொல்லதிகார இயல்வைப்பு.

1992. இளவியாக் கம்மே இளர்வேற் றுமைசொல்
லுளவேற் றுமைமயக்க மோங்கும்—வினைமரபு

(1990—92) தொல்காப்பிய வட்டுப்பிரதிகள்.

தேற்றும் பெயர்வினைச்சொற் சேரு மிடையுரிச்சொற்
றோற்றிய வெச்சவியல் சொல்.

೮೭ அதிகார சூத்திரத்தொகை.

1993. தோடவிழ்பூங் கோதாய் சொல்லதி காரத்துட்
கூடிய வொன்பதியற் கூற்றிற்கும்—பாடமாம்
கானூற் றறுபத்து நான்கேகன் னூற்பாக்கள்
[1]கோனூற்று வைத்த குறி.

1994. இளவியோ ரறுபா னிரண்டுவேற் றுமையிற்
கிளரிரு பஃதிரண் டேழைந்
தளமையங் கியலாம் விளியின்முப் பாலே
முயர்பெயர் நாற்பதின் மூன்று
தெளிவினை யியலெம் பானுட னொன்று
செறியிடை யியலிரண் டைம்பான் மெய்ப்
டொளிருரி யியலொன் பதிற்றுப்பத் துடனெட்
டொழிபறு பானின்மே லேழே.

೮೮ பொருளதிகார இயல்வைப்பு.

1995. எட்டி மகத்திணையு மேய்ந்த புறத்திணையுங்
காட்டு களவியலுங் கற்பியலும்—மீட்டும்
பொருளியன்மெய்ப் பாடிவமம் போற்றிய செய்யுண்
மரபியலு மாம்பொருளின் வைப்பு.

೮೯ அதிகார சூத்திரத்தொகை.

1996. [2]பூமலர்மென் கூந்தால் பொருளியலின் சூத்திரங்கள்
ஆவவறு நூற்றறுபத் தைந்தாகும்—மூவகையால்
[3]ஆயிரத்தின் மேலு மறுநூற்றுப் பஃதென்ப
பாயிரத்தொல் காப்பியங்கற் பார்.

"நெற்குதிரு மரியன்றிக் கடலெல்லையாகிய காலத்துச்
சிறுகாக்கைபாடினியார் பாடிய முதற்சூத்திரம்".

1997. வடதிசை மருங்கின் வகுகுவரம் பாகத்
தென்றிசை புள்ளிட் டெஞ்சிய மூன்றும்

(1993-96) தொல்காப்பிய எட்டெப்பிரதிகள். [1]மேனூற்று வைத்தனவா மே. [2]பூமலர்மென். [3]'ஆயிரத்தின் மேலா றறுநூற்றி னாறென்ப, பாயிரமோ வோரிரண்டென் பார்'. (1997) தொல். பொருளதி. 600, 594.

வரைமருள் புணரியொடு பொருது கிடந்த
நாட்டியல் வழக்க நான்மையின் சடைக்கண்
யாப்பி னிலக்கண மறைகுவன் முறையே.

திருக்குறளைப்பற்றிய பழம்பாடல்கள்.

பொய்யாமொழிப்புலவர் வாக்கு.

1998. குறமுனிவன் கோத்தெடுத்த கொற்கோரி யூரி
உறவிலக்கு வீற்றதனை டொக்குந்—தெறுகலியைச்
செற்றவேன் மாற திருவள் ளுவனுர்வாய்ச்
சொற்றகுறட் பால்வாழ்த்துச் சொல்.

(பிறர் கூற்று)

1999. மூப்பாலு முண்டோ மூவேப்பா லினிதுகரோம்
அப்பாலுக் கப்பாலு மாயினேம்—எப்பொருளும்
உள்ள படியுணர்ந்தோ மோதிக் குறைதீர்ந்தோம்
வள்ளுவனுர் வைட்பொருக்கு வாய்த்து.

2000. எப்பாலு சித்துவா மின்பம் பொருளறா
மூப்பாலு மாயிரத்து மூந்நூற்று மூப்பதா
ரடி மூக்கா லுரைத்திரு வள்ளுவனுர்
ஈரடி மூக்காலு மே.

2001. அவனே புலவ னவனே யறிஞன்
அவனே தமிழை யறிந்தோன்—சிவனறிய
வள்ளுவ தேவன் வசனத்தை மெய்ப்பாக
உள்ளுவ தேவ னுளன்.

2002. வாழிமழை யானினங்கள் வாழிமறை யாகமங்கள்
வாழிமனு நீதிமன்னர் மன்பதைகள்—வாழியரோ
தெள்ளுகுறட் செந்தேன் செவிகுளிரப் பெய்தமுகில்
வள்ளுவர் பாத மலர்.

2003. மாயோன் வடிவம் போல (வேள்வியின்)
மூன்றெரு குறளுரு வாகிப் பின்னது
மூவடி முறைமையிற் செல்லாது தாக்கம்
ஈரடி யியக்க நிரம்பா வளவையின்
உலக மூன்று மளர்தன
புலவன் வள்ளுவன் குறள்வெண் பாட்டே.

(1998—2002) திருக்குறளோட்டுப்பிரதிகள்—செந்தமிழ், தொ. 1, பக். 294. (2003) ஆழ்வார்திருநகரி எட்டுப்பிரதி.

திருக்குறள் அறத்துப்பாற்பகுப்பு.

2004. பாலாகும் வேதப் பயனுகும் பாயிரநான்
கேலாகே ளில்லறமு நாலேந்தா—மேலாந்
துறவு பதின்மூன்று தொடர்ந்தாழொன் றெண்ப
அறிவுநெறி யாய்ந்துண்டார் தாம்.

ஷி பொருட்பாற்பகுப்பு.

2005. அரசிய லேயைந் தமைச்சிய லீரைந்
துரைநா டரண்பொரு ளொவ்வொன்—றுரைசால்
படையிரண்டு நட்புப் பதினேழ்பன் மூன்று
குடியெழுபான் றெக்கபொருட் கூறு.

ஸ்ரீ காமத்துப்பாற் பகுப்பு.

2006. புணர்தல் பிரிதற் பொருள்களவு கற்பென்
றுணருமிரு கூறு மூரைக்கிற்—புணருங்
களவே ழறுமூன்று கற்பிவையை யைந்தா
வளவுறு காமத்துப்பா லாம்.

பரிப்பெருமாள் தம் திருக்குறளுரைப்
பாயிரமாகக்கூறிய பாட்டு.

2007. நல்வினை செய்பவர் நாடொறும் வந்திக்க நான்முகனுர்
தொல்லுரை யைத்தென் றமிழா லறியத் துகடபுசீர்
இல்லற மூந்திற வும்பொருட் பக்கமு மின்பமுமாம்
பல்வகை யாலரு ளுந்திரு வள்ளுவன் பாதங்களே.

பத்துப்பாட்டு இன்னவின்ன வென்பதுபற்றிய
பழைய வெண்பா.

2008. முருகு பொருநாறு பாணிரண்டு மல்லே
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொகும் பத்து.

(2004) திருக்குறள்—பரிப்பெருமாள் உரைப்பிரதி. (2005–6) திருக்குறள்—தண்பொருள்மாலையிற் கண்டவை. (2008) பத்துப்பாட்டிறுதி.

எட்டுத்தொகை இன்னவின்ன என்பதுபற்றிய பழைய வெண்பா.

2009. நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறு நூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
[1]கற்றறிந்தா ரேத்துங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை.

ஐங்குறுநூற்றுத் திணைகளைப் பாடியவர் இன்னாரின்னார் என்பதுபற்றிய வெண்பா.

2010. மருதமோ ரம்போகி செய்தலம் மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலன்—கருதிய
பாலையோ தாலாந்தை பனிமுல்லை பேயனே
நாலையோ தைங்குறு நூறு.

பரிபாடல் எழுபதனுள் இன்னாரின்னாரிற்கு இத்துணைச் செய்யுள் உரிய என்பது பற்றிய பழைய வெண்பா.

2011. திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டுக் [2]காடுகாட் கொன்று—மருவினிய
வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்யபரி பாடற் றிறம்.

கலித்தொகைத் திணைகளைப் பாடியவர் இன்னாரின்னார் என்பதுபற்றிய பழைய வெண்பா.

2012. பெருங்கடுங்கோன் பாலை குறிஞ்சி கபிலன்
மருதனிள நாகன் மருதம்—அருஞ்சோ
ணல்லுத் திரன்முல்லை நல்லந் துவனெய்தல்
கல்விவலார் கண்ட கலி.

2013. திருத்தகு மாமுனிசிற் தாமணி கம்பன்
விருத்தக் கவிவளமும் வேண்டேம்—திருக்குறளோ
கொங்குவேண் மாக்கதையோ கொள்ளேம் ஞனியார்வேம்
பொங்குகலி யின்பப் பொருள்.

(2009) இலக்கணவிளக். 817, உரை; [1]கற்றறிந்தார் போற்றுங்; கற்றறிந்தார் சொல்லுங். (2011) பரிபாடன் முகவுரை. [2]கார்கோளுக். இவ்வெண்பா கர்நியார்வாக்கு என்றும் கூறுவர் (செந்தமிழ். தொ. 20, பக். 201). (2012) செந்தமிழ். (2013) கலித்தொகைப் புதிப்பதிப்பு-முகவுரை.

அகநானூற்றுப் பாடல்களை உருத்திரசன்மர் கோத்திட்ட முறை.

2014. வியமெல்லாம் வெண்டே ரியக்கங் கயமலர்ந்த
தாமரையா ரூகத் தகைபெறீஇக் காமர்
நறுமுல்லை நான்காக நாட்டி வெறிமாண்ட
எட்டு மிரண்டுங் குறிஞ்சியாக் கூட்டத்
திவர்திரை பத்தா வியற்பட யாத்தான்
தொகையி னெடியதனைத் தோலாச் செவியான்
வகையி னெடியதனை வைப்பு.

2015. ஒன்றுமூன் றைந்தேழொன் பான்பாலை யோதாது
கின்றவற்றி னொன்கு செறிமுல்லை—யன்றியே
ரூரு மருத மணிநெய்த லேயிரண்டு
கூரு தலைகுறிஞ்சிக் கூற்று.

2016. பாலை வியமெல்லாம் பத்தார் பணிசெய்தல்
காலு நனிமுல்லை காதங்கான்—மேலையோர்
தேறு மிரண்டெட்டு டிலைகுறிஞ்சி செந்தமிழின்
ஆறு மருத மகம்.

பதினேழ்கீழ்க்கணக்கு நூல்கள் இன்னவென்பது.

2017. நாலடி நான்மணி நாலைந்து தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
[1]இன்னிலைய காஞ்சியோ டேலாதி [2]யென்பவே
கைந்நிலையு மாங்கீழ்க் கணக்கு.

நாலடியார்.

2018. ஆலி னரசி னசோகி னணியிருளின்
மேலை மறையின் விரிந்தபொருள்—நாலடியாம்
வெள்ளாஅண் வேதத்தி னின்னுரையைக் கண்டக்காற்
கொள்ளாரோ நல்லோர் குறித்து.

2019. வெள்ளாண் மரபுக்கு வேத மெனச்சான்றோ
ரெல்லாருங் கூடி யெடுத்துரைத்த—சொல்லாரும்
நாலடி நானூறு நன்னினைதா வெண்மனத்தே
சேலமுட னிற்க தெளிந்து.

(2014—16) அகநானூற்றின் இறுதி. (2017) தனிப்பா. [1]மெய்ந்நிலைய, [2]யென்பதாமே. (2018—19) ஏட்டெப்பிரதிகள்.

2020. எண்பெருங் குன்றத் தெணுஅ யிராமிருடி
பண்பொருந்தப் பாடியபா நாலூறுங்—திண்பொருந்தி
நீரெதிர்கொண் டோடுதலா னேரிசைப்பா வென்றதனைப்
பாரெதிர்கொண் டார்பயனைப் பார்த்து.

2021. மன்னன் வழுதியர்கோன் வையைப்பே ராற்றினிடை
யெண்ணி யிருநான்கோ டாயிரவர்—உன்னி
எழுதியிடு மேட்டி லெதிரே நடந்த
பழுதிலா நாலடியைப் பார்.

ஷ நூலைத்தொகுத்தவர்.

2022. ஞாலத் தழிதரு நற்பாட்டே கொண்டடக்கி
நாலடி நாலூ றெனப்பெயரால்—வாலிதி
னீட்டித் தொகுத்தா னிசைசால் பதுமனே
கூட்டமைந்த மூன்றுபால் கொண்டு.

அந்நூலின் அருமம்பதவுரை.

2023. நல்லோ ரருள்செய்த நாலடி நானூற்றின்
சொல்லோர் பொருளனைத்துந் தோன்றியதே—கல்வி
வருப்பதனால் கொண்ட மதிவரன்றன் வாக்கால்
அருமபத மிட்ட வழகு.

சீவகசிந்தாமணி.

கந்தியார்கூற்று.

2024. தத்தைகுண மாலையொடு தாவில்புகழ்ப் பதுமை
ஒத்தவெழிற் கேமசரி யொண்கனக மாலை
வித்தகநல் வீமலையொடு வெஞ்சுரமஞ் சரிதான்
அத்தகையி லக்கணையொ டாகமண மெட்டே.

2025. நாமகள்கோ விந்தையொடு நற்காத் திருவதித்தை
தாமகுண மாலை தளிப்பதனை—கேமசரி
மின்கனக மாலை வீமலைசுர மஞ்சரியோ
டன்பி னிலக்கணைபத் தாம்.

(2020—23) எட்டுப்பிரஜைகள். (2024—25) சீவகசிந்தாமணி, மூன்றும்பதிப்பிறுதி.

சூளாமணி.

2026. பொழிந்து பொருள்விளக்கும் போழ்திருன்கால் சிக்கும்
இழிந்தவரை யேற்றி நிறுத்துஞ்—செழுந்தாளத்
[1]தோளா மணிதொகுத்தார் போலாதே தோலாச்சீர்ச்
சூளா மணியகத்துச் சொல்.

2027. திக்கெட்டும் புகழ்படைத்த திறல்விசயன்
புயலனைய கையன் றெவ்வைக்
கைக்கொட்டி கணைக்குமிகற் கார்வெட்டி
யரையன்வள நாடற் கேற்பப்
பொக்கெட்டும் பசுந்தமிழான் புகழ்த்தரும
தீர்த்தன்மலர்ப் பதம்பூ சிப்போன்
சொற்கெட்டா வரன்முறுலா மொழிசூளா
மணியுணர்வோர் துணைரண் டாரே.

மேருமந்தரபுராணம்.

2028. ஆயிரதது நாதூறற்பின் மேலு மிருமூனமும்
பாயபுகழ் மேருக்கண் மந்தரர்பாற்—றூய
தவராச நாசன குணமுனிவன் றந்த
பவரோக மந்திரமாம் பாட்டு.

யாப்பருங்கலம்.

2029. சொல்லிற் சுருங்கிப் பொருள்விளங்கித் தொல்லுரைமெல்
லாம் விளக்கி யிருளகற்றும்—நல்யாப்
பருங்கலம் வல்லவர் தாமன்றே கேள்வி
யொருங்கறிய வல்லா ருணர்ந்து.

நேமிநாதம்.

2030. தொல்காப் பியக்கடலிற் சொற்றீவச் சுற்றளக்கப்
பல்சாத்கொண் டோடும் படவென்ப—பல்கோட்டுக்
கோமிகா நற்புலனே வெல்லுங் குணவீரன்
நேமிநா தத்தி னெறி.

(2026) சென்னை மியூஸியம் கையெழுத்துப் புதகசாலைப் பிரதி. [1]தோளா மணியைநகுந் தோலா மொழித்தொகுத்த; தோளா மணிதொகுத் தார் போலாதே தோலாச்சீர். (2027) சூளாமணிப்பதிப்பு. (2028) மேருமந்தரபுராணப்பதிப்பிலுள்ளது.

2031. எண்ணும் பெயரு முறையு மியன்றதற்பின்
நண்ணிவரு மாத்திரையு நற்பிறப்பும்—கண்ணு
வடிவும் புணர்ச்சியு மாயவோ ரேழுங்
கடியமருங் கூந்தலாய் காண்.

நன்னூற்பாயிரம்.

2032. மலர்தலை யுலகின் மல்கிரு ளகல
இலகொளி பரப்பி யாவையும் விளக்கும்
பரிதியி னெருசா னகி முதலீ
ருருப்பள வாசை முனிவிகந் துயர்ந்த
அற்புத மூர்த்தித னலர்சரு சன்மையின்
மலைவிரு ளிரிய மாண்பொருண் முழுவதும்
முனிவற வருளிய மூவறு மொழியுளும
குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலுள்
அரும்பொரு ளனந்தையும் யாவரு முணரத்
தொகைவகை விரியிற் றருகெனத் துன்னூர்
இகலற நூறி யிருநில முழுவதுந்
தனதெனக் கோலித் தன்மத வாரணந்
திசைதொறு நிறுவிய திறலுறு தொல்சீர்க்
கருங்கழல் வெண்குடைக் கார்மிகர் வண்கைத்
திருந்திய செங்கோற் சிய கங்கன்
அருங்கலை விநேத னாமரா பரணன்
மொழிந்தன னகு மூன்றினூர் நூலின்
வழியே னன்னூற் பெயரின் வகுத்தலன்
பொன்மதிற் சனகை யன்மதி முனியருள்
பன்னரு நிறப்பிற் பவணந்தி
யென்னு நாமத் திருந்தவத் தோனே.

நன்னூல் எழுத்ததிகாரம் கூறும் பொருள்கள்.

2033. அடையெண் பெயர்முறை தோற்றம் வடிவள வாதியந்தம்
இடைநிலை போலியென் றிரைத் தெழுத்து மிருபதும்
படுபுணர் மூன்றி னியல்பும் விகாரமுஞ் சாரியையும்
உடனறி வாரை யெழுத்தறி வாமென்ப ருத்தமரே.

2033. நன்னூல், மயிலைநாதருரை—எழுத்ததிகார சொல்லதிகாரங்களின் இறுதி.

பெருந்தொகை

ஷை எழுத்ததிகாரவியல்களின் சூத்திரத்தொகை.

2034. எழுபா னிரண்டெழுத்தி னேற்றபதத் தைஞ்ஞான்
கொடிமூன் றுயிரீறைம் பான்மூன் — றருமெய்யீ
ருரு முருபியன்மு வாரு மெழுததுரைநூற்
பாவிருநூற் றோரிரண்டாப் பார்.

ஷை சொல்லதிகாரம் கூறும் பொருள்கள்.

2035. இருதிணை மூவிட நான்மொழி யைம்பா லுறுதொகையேழ்
அருவழு வெட்டிரு பொன்பான் றெருகாலே யாய்ந்தவெச்சம்
ஒருபது கோளெட்டி முப்பொழு தீரிட மோரியல்பாய்
வருமொழி மூன்று முணரச்சொல் வண்மை வருந்திருவே.

ஷை சொல்லதிகாரவியல்களின் சூத்திரத்தொகை.

2036. பேரறு பத்திரண்டி பின்வினையெண் ணுன்குபொது
ஓரறுபத் தெட்டிடை மூவேழின் — மேலொன்
றுரியிருபத் தொன்றுகச் சொற்சூத் திரத்தின்
விரியிரு நூற் றோரைந்தா வேண்டி.

நம்பியகப்பொருளியற்சூத்திரவகை.

2037. ஏற்ற வகத்திணைச சூத்திர நூற்றுப்பத் தேழதன்பின்
சாற்றுங் களவிய லம்பத்து நாலன்றிச் சார்வுரைவு
போற்று மிருபதி னென்பான்கற் பாரைந்து பொங்கொழிவு
கூற்றிய னெற்பத்து மூன்று மகப்பொருட் கொள்கையதே.

திருவாசகம்.

2038. தொல்லை யிரும்பிறவிச் சூழற் றளைபோக்கு
அல்லலறுத் தானந்த மாக்கியதே — யெல்லை
மருவா நெறியளிக்கு மாதவ னெங்கோன்
திருவா சகமென்னுத் தேன்.

திருவாசகப் பதிகங்கள்.

2039. சிவபுரா ணாங்கீர்த்தித் திருவண்டம் போற்றித்
திருவெகவன் முதலனைகாஞ் சதக மும்மும்
இவர்நீத்தல் விண்ணப்ப மைம்ப தாகும்
மெம்பாவை யம்மானே சுண்ணங்கோத் தும்பி

(2034—36) நன்னூல், மயிலைநாதருரை — எழுத்ததிகார சொல்லதிகாரங்களின் இறுதி. (2037) தஞ்சைச் சரஸ்வதிமால் — பிரதி. (2038-39) சென்னை மியூஸியம் கையெழுத்துப்புத்தகசாலை - திருவாசக எட்டுப்பிரதியிற் கண்டவை.

புவனமளிழ் தெள்ளேணஞ் சாழலிரு பஃதாம்
பூவல்லி திருவுந்தி பத்தொன்ப தாகும்
உவமையிலாத் தோணோக்கம் பத்தொன்ப தாகும்
ஊசலொன்ப தாருமென வுரைத்த வாறே.

2040. திருவன்னே குயிற்பத்துத் திருத்த சாங்கம்
திருப்பள்ளி யொடுகோயின் மூத்ததிருப் பதிகம்
அருள்கோயிற் றிருப்பதிகஞ் செத்திலடைக் கலமே
யாசையதி சயமபுனர்சி வாழாப்பத் தருட்பத
தொருபதென வுரைசெய்வர் கழுக்குன்ற மேழா
மொருபதாங் கண்டபத்துப் பிரார்த்தனைபன் னென்றே
திருமருவு குழைத்தபத்தோ ருயிருண்ணி யச்சன்
திருப்பாண்டி பிடித்தபத்தோ டேசறவுப் பத்தே.

2041. திருப்புலம்பன் மூன்றுருங் குலாப்பத்தற் புதமே
செண்ணிதிரு வார்த்தைபத் தெண்ணப்பத் தாறும்
பரற்குரிய யாத்திரைப்பத் தொருப தாகும்
படையெழுச்சி யிரண்டாகும் பதினென்று வெண்பா
இருட்டவிரும் பண்டாய நான்மறையே ழாகு
மெட்டாகும் படையாட்சி நின்னேரே ழாகும்
அருட்பெறுமச் சோவென்பா ஞற்பத்தேழ் பதிக
மகவலுடன் பாட்டுறுநூற் றைம்பத் தாறே.

திருக்கோவையார்.

2042. ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலிதென்பர்
வரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே.

2043. எண்ணிறை தில்லை யெழிற்கோ புரத்திகழக்
கண்ணிறைந்து நின்றருளுங் கற்பகமே—நண்ணியசீர்த்
தேனூறு செஞ்சொற் றிருக்கோவை யெண்சிற்றை
நானூறு நிற்கவே நல்கு.

(2040—41) சென்னை மியூஸியம் கையெழுத்துப்புத்தகசாலை—திருவாசக—ஏட்டெப்பிரதியிற் கண்டவை.

சைவசித்தாந்த சாத்திரத்தொகை.

2044. உந்தி களிறே யுயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மை பிரகாசம்—வந்தவருட்
பண்புவினை போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவீ
ணெண்மைநெறி சங்கற்ப முற்று.

சிவஞானபோதம்.

2045. மலர்தலை யுலகின் மாயிரு டியப்
பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போ லண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் ணிருவர்த்
தருந்துயர்க் குரம்பையி னுண்மா ராடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
உயர்சிவ ஞான போத முரைதரிதான்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெ சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவமடி புனைந்த தலைமை யோனே.

2046. எந்தை சனற்குமர னேத்திக் தொழுவிபல்பாப்
நந்தி யுரைத்தருளு ஞான நூல்—சிந்தைசெய்து
தானுரைத்தன் மெய்கண்டான் றாணியோ ருள்ளாவும்
வதிதிருட் டாந்தத்தா லின்று.

சிவஞானபோதச் சூணி வெண்பாக்களின் தொகை.

2047. சூத்திரமீ ராறினுக்குச் சூரணிமுப்பா லெனன்பா
னேத்தவெண்பா வெண்பா னிரண்டனேத்தும்—சேர்த்ததொகை
நூற்றுமுப்பான் மூன்றிலற்றைதுண்ணுணர்விஞ்ஞர்துணர்ந்தோர்
வேற்றுருக்கொள் ளாருறுவர் வீடு.

ஷி அதிகரண வெண்பாத்தொகை.

2048. ஐயிருப தோரேழு மாங்கமைத்த நாலாறும்
ஐயெண்ப தோரெட்டோ டாராறும்—துய்யவெட்டோ
டெண்பத்து மொன்றுஞ் சிவஞான போதத்தின்
மண்ணருளும் வெண்பா வகை.

ஷை அதிகாரணத்தோகை.

2049. மூன்றுநான் கேழு மூன்றே முடிந்தபி னிரண்டி ரண்டே
மூன்றுநான் மூன்று நன்றாய் முடிந்தபி னிரண்டி ரண்டே
என்றநான் கீறு தாமே யிவையீரா றிலகத் துள்ளே
வென்றமூப் பாலெனன் பாலே யெனக்கரு னிரங்கி னனே.

ஷை சூத்திரக்கருத்து.

2050. முதற்பதி யாரனே யைந்து மூன்னத்து வித்தரிரண்டே
இதற்பினே யனுபா னத்தா லெண்ணிலா வுயிர்கண் மூன்றே
அதற்பினே யவத்தை நான்கே யகமறுத் திடலே யைந்தே
சுகற்பதி பிரித்த லாறே தெரிவித்த லுயிரை யேழே.

2051. மறைப்பினே நீக்கி ஞான வாரியை நினைத்த லெட்டே
சிறப்புடை யுபாயக் கம்மாற் தெளிவித்த லுயிரை யொன்பான்
அறுத்திடன் மலங்கள் பத்தே யழுத்தல சிவத்தி லொன்றே
நிறப்பரி சகால மிரண்டே சிவஞான போதஞ் சித்தி.

சிவஞானசித்தியார்.

2052. பார்விருத்த நூலெல்லாம் பார்த்தற்குச் சித்தியிலே
ஓர்விருத்தப் பாதிபோ தும்.

சிவஞானசித்தியார்சுபக்கப்பிரிவு.

2053. ஓர்துறுதி யீரேழு மாலை யாகும்
அதிதனி லெழுபதாம் பின்னெண்ணூற் றறு
நற்றிகழ்ட்டயாதற்பா னவமும்பின் னவமும்
நனிநான்கு நாற்பதினி லொன்றிழந்தீ தாறும்
கற்றமுக போராறுங் கரமங்கி ராறும்
கருதிவங் கணபதியைங் கரமுமிரு பதமும்
சிற்றையிவை மூவொன்ப தோடுமூ நூறும்
சிவஞான சித்தியுப பக்கமெனத் தெளியே.

ஷை பரபக்கப்பிரிவு.

2054. முகவுரையிற் றசமெழுமூன் றுதன்முப்பா லொன்று
மூதிலகன் முப்பாலொன் றெண்ணேந்தாம் புத்தன்
திகழ்மூவர்க் கோரெட்டா கிண்டனுக்கெட் டீரேழ்
சிவகணுக் கிரைத்தோ டிருமூன்றும் பாட்டன்

(2049—51) சிவஞானபாடியம், முகவுரை.

பகர்பதின்மூன் றீரைந்தே பாகாளீ நிரண்டாம்
பரிணமை நான்கிருநான் கேமாயா வாதம்
நிசைழம்மூன் றுறுமூன்றும் பாற்காரியற் கேழாம்
நிரீச்சுரற்குச் சதுராத்ரி யெழுமுப்பா லெண்றே.

சிவஞானசித்தியார்—மறைஞானதேசிகருரை.

2055. திருத்துறையூர்ச் சைவன் றிருந்து மறையும்
விரித்துரைக்கும் வேதியன்மெய் கண்டான்—கருத்தின்
அருணந்தி தேவ னருண்மொழி யாய்ந்தே
இருணன்கம் பாற்கண் டிலேம்.

2056. கிலையடைய வனுதினமு கிலையெனது மனமே
தலையிலரு டருமகலு மலமுமுறு துயரும்
மலைவுடைய வுணர்மட மதியுடைய வருளும்
உலவின் மறை ஞானமுனி யுரைசெய்திரு மொழியே.

மெய்நூலுக்குத் தாஞ்செய்த உரைபற்றிச்
சிவாக்கிரயோகிகள் கூறிய பாட்டு.

2057. ஒருமையும் மிருவினையுங் குணங்களின் மூன்று
மூட்கரண மோர்நான்கும் புலன்க ளைந்தும்
வருபகைக ளோராறும் பவங்க ளேழும்
மாய்ந்திடப்பே ரின்பமெட்டும் வகையதாகத்
தருவதுவாய்ப் பரஞான மூர்த்தி தானே
தாரணிமேற் குருவுருவந் தரித்து வந்தோன்
திருவருளாற் சிவஞான சித்தி யென்னுந்
தென்னூலுக் குரைவிரித்தேன் தெரிந்த வாறே.

மெய் யாரி உரைபற்றிக்கூறிய
பிறர் பாட்டு.

2058. இரவியெழுந் திருளதனை நீக்குவபோ லென்று
மிறைஞ்சுமடி யவர்மனத்தி லிருளதனை நீக்கக்
கருணைபொறை தவந்தருமங் கல்விசிவ ஞானங்
காசினியி லொருவடிவாய்க் காட்டியபோற் றோன்றிப்

(2055—58) சிவஞானசித்தியார் சுபக்ஷவுரை யிழுக்கு.

பரசமய கோடரமே னின்று தெறி கொண்டு
பலகலையு முணர்ந்துசைவ பரிபால னுகித்
திருமருவு சிவஞான சித்திதரு பொருளைத்
தெரிந்திடவே விரித்துரைத்தான் சிவாக்கிரதே சிகனே.

ஷை ஞானப்பிரகாசருரை.

2059. சொல்லி னுவிற் முரிசறுஞ் சோத்திரத்
தொல்லு மேற்சிவ ஞான முதித்துமெம்
செல்லு மெய்யரு ணந்திசெய் சித்திக்கு
நல்ல ஞானப்ர காச னவிற்றுரை.

நிரம்பவழகியதேசிகர் சிவ நாலுக்குத் தாஞ்செய்த உரையைப்பற்றிக் கூறியது.

2060. சத்து மசத்திலுஞ் சதசதத்திலுஞ் சத்திய மாகிநிற்கும்
சித்தன் றிருவம் பலவாண னென்னுளஞ் சேர்ந்ததனுற்
சுத்தம் பயின்ற பதிபசு பாசத்தைச் சொல்லுஞ்சத்த
மத்த மதற்கு ளனுபோகங் காண்டற் கரிதல்லவே.

சிவப்பிரகாசக் கருத்து.

2061. பாயிரமீ ராறு பதியாறு பல்லுயிரொன்
றேயுந் திரோதமல மொன்றென்பர்—தூயபதி
முத்தி தருமாயை யொன்றுக் மூவுலகிற்
புத்திதரு மாயைப் புணர்ப்பாறு—பெத்தம்விட
நன்றுதீ தாகும்வினை நாலாகு நாடோறும
துன்று மலத்தின் றொகையொன்று—பொன்றுவரும்
சேவல மைந்து கிளக்கு முயிருக்குப்
பாவுணர்த்தும் வையரியின் பாலிரண்டு—மேவுகளும்
கூடுஞ் சகலரா லேந்தாகுங் கூடாப்பம்
வீடுகின்ற சுத்த வியல்பொன்று—நீடுமிவை
மூன்றியொன் றுக மதித்தருளா லுயி ரிலுர்க்கள்
பத்தியாற் சொன்ன பரிசினுல்—இத்தலமேல்
உண்மை யுரைக்கி லுயிருண்மை யொண்பதாம்
கண்ணவத்தை மூன்று நலமாக —எண்ணரிய

(2059—60) சிவஞான சித்தியார் சுபக்ஷ உரை யிழுவி.

தன்னை யுணர்த்துந் தகையையந்து தன்னுணர்த்து
மன்னுணர்வின் ஞான வகைமூன்று—பின்னுயிரை
மாசறவே காணும் வகையையந்து மற்றதனில்
ஆசொழிக்குந் தன்மை யதுநான்கு—தேசனுரு
பார்வையறப் பார்க்கும்வகை பத்தாம்பஞ் சாக்கரத்தைத்
தேரும்வகை மூன்று தெரியுங்காற்—சீர்மருவும்
அன்பாற் சிவனே யனுபவிக்கு மெய்யடியார்
இன்பப் பகுதி யிருமூன்று—துன்பமறச்
சொற்றரு தூலன் கருத்தொன்று சொற்றரு நூல்
நற்றவருக் கீயு நலமொன்று—முற்றவரும்
பந்த மறுத்த சகசர்தன் பார்வையென
வந்தளித்த சம்பந்த மாமுனிவன்—எந்தைபதம்
சென்னியின்மேல் வைத்துச் சிவப்பிரகா சக்கருத்தை
அன்ன வயற்காவை யம்பலவன்—நன்னயத்தாற்
சொன்ன வொழுபிறப்புச் சொல்லெவினை யுந்தீய
மன்ன கமத்தை மதித்து.

பண்டார சாத்திரங்கள்.

2062. தரசமயத் தசகாரி யங்கண் மூன்று
சன்மார்க்க சித்திசிவாச் சிரமத் தேற்றம்
பரசமயப் பற்றொழிபஃ றொடைகண் மூன்று
பகருஞ்சித் தாந்தசிகா மணிய தொன்று
முரசமைய சித்தாந்த வுபாய நிட்டை
முயனிட்டை விளக்குமுப தேச வென்பா
வரசமயத் தரிசயனைத் தெழுத்தின் மாலை
யருடருமெய்ப் பண்டார நூல்க ளாமே.

2063. கனியுறழ் வேதக் கலையொரு மூன்றுங்
கண்கவர் வியாதனு ணன்காங்
கருத்துறு நிகம முருத்திரர் கேட்பக்
கவின்றெழு தான்கென லாய

தனிதவிர் மூவரிசைதமிழ் முறைதாஞ்
சுந்தர கோட்டியி னோழாற்

மூயவை பின்னர் கம்பிமாட் டருளாற்
சுடர்த்தொகை மந்திர மாகும்

இனிதின் மெய்கண்டா னியம்புநூன் முதல
வீரெழு சோசங்க ளென்ன

வின்னியற் சைவ ஞானமா யினவே
யெழிற்றகை யுமாபதி சிவனே

டனேமகிழ் தசகா ரியமுதற் றசகான்
கவைபுகன் முவகு துறையி

னஞ்செழுத் துண்மை விளக்கிமெய்ப் போகத்
தழுத்துவே லப்பதே சிகனே.

அம்பிகைமாலை.

2064. பிடித்தாரக் கட்டி யணைத்தமு தூட்டிய பேயின்முலை
குடித்தாகி மாயன் குலசே கரன்வட குன்றைச்செண்டால்
அடித்தாலை வடித்தசொ லம்பிகை மாலையை யாறுகவி
படித்தார்சொல் கற்பகக் காவும்பொன் னுலகும் படைத்தவரே.

சுந்தரபாண்டியன் றெகுதி.

2065. தென்னவன் மணிதிகழ் திருமே னியனூர்
மன்னவன் மேலில வலம்பட நின்றவன்
இந்திரன் மேலில யினவளை யெறிந்தவன்
செந்தமிழ்க் காரி சிறப்புக முடையோன்
சந்திர குலபதி சுந்தர பாண்டியன் றெகுதி.

களப்பாளன் நேற்துன்றவாணர் பாடிய கலித்துறையந்தாதி.

2066. வளப்பா டிலாத வெருக்கு மிதழி மலருமன்ப
ருளப்பா லிறைபுக வூரருக் காதலி னேதிமிக்கோர்
தளப்பா டிதமிழ்க் கென்னினுஞ் சாற்றுவன் சந்திரன்மொற்
களப்பா ணனேற்குன்ற வாணனைக் காதிக் கலித்துலையே.

கோவையொன்றைப்பற்றிய பாட்டு.

2067. கடித்துவர்த்த தேனுங் கடம்பினீர்த் தின்பங
கொடித்ததுபோல் யாழுரைத்த கோவை—கெடுத்துணர்ந்தோர்

(2065) செந்தமிழ். தொ. 2, பக். 8. (2067) இலக். வி. 907, உரை.

பொய்ப்பொருள்யா வுந்தெளிந்து போச்சியபின் முங்காணும்
மெய்ப்பொருளா னெய்துவார் வீடு.

2068. வருகோவை சூடி வளைகோவை சாத்தி
ஒருகோவை யேறியுயர் கோவைத்—தருகோவைக்
கைக்கோவை யாய்ந்துரைத்தார் காண்பார்க்குக் காணுதார்க்
கிக்கோவை யாய்ந்துரைத்தா ரீங்கு.

கருடநூல்.

2069. அனந்தனுங் குளிகனு மாதி யாகிய
நனந்தலைப் பெருங்குல நான்கு காட்டிய
கனங்கெழு கருடநூ லகத்துக் காணலாம
இனம்புரி யெதிர்நிர னிறையு மென்பவே.

சரசோதிமாலை.

2070. உரைத்தசக வருடமூ றுமாயிரத் திருநூற்
றொருநாலெட் டினிலிலகு வசந்தந் தன்னிற்
றரித்திவை காசிபுதன் பனையி னுளித்
றம்பைவளர் பராக்கிரம வாகு பூபன்

இருத்தலையிற் சரசோதி மாலை யீரா
றேய்ப்படல நூற்றொருண்பான் முப்பா னுன்காம்
விருத்தமரங் கேற்றினனுற் போக ராச
விஞ்சைபுனை வேதியனும் புலவ ரேறே.

திவாகரம்.

2071. வடநூற் கரசன் றென்றமிழ்க் கவிஞன்
கவியரங் கேற்று முபயகவிப் புலவன்
றெறிகுணத் தம்பர் கிழவோன் சேந்தன்
அறிவுரி யாகத் தெரிசொற் றிவாகரத்துள்...

2072. சற்ற நாவினன் கேட்ட செவியினன்
முற்ற வுணர்ந்த மூதறி வாளன்
நாகரிக நாட்டத் தாரிய னருவந்தை
தேருங் காட்சிச் சேந்தன் திவாகரத்து...

(2068) இலச். வி. 907, உரை. (2069) யாப். வி. 363. (2071—72) திவாகரத் தொகுதியு நிகண்டுகளு.

2073. காத லீகையிற் போதிப் பெருந்தவன்
தெவ்வழி கால வைவே லெழினி
அவ்வை பாடிய வம்பர் கிழவன்
தேன்ஞர்ச் சேந்தன் றெரிசொற் றிவாகரத்துள்...

2074. நாடே பிறர்தந் நாட்டிற் ருவனம
ஆறே, காலமறிந் தீதவுங் சாவிரி தாளை
ஆடவர் திலக னம்பர் மன்னன்
நீடிசைத் தலைவ னருவந்தைச் சேந்தன்
ஆய்ந்த திவாகரத்து ...

2075. அண்ணல் செம்பாதிக் காணி யாட்டியைப்
பெண்ணணங்கை மூவுலகும் பெற்ற வர்மையைச்
செந்தமிழ் மாலையந் தாதி புனைந்த
நாவல னம்பர்க் காவலன் சேந்தன்
இயல்வுற்ற திவாகரத்து .....

2076. அரக்கரைப் பொருத மூரட்போர் வில்லும்
பாரதம் பொருத பேரிசைச் சிலையும்
தாருகற் கடிந்த வீரச் தயிலும்
பாடிய புலவன் பதியம்பர்ச் சேந்தன்
பயில்வுற்ற திவாகரத்து .....

பிங்கலந்தை.

2077. இருங்கட லுடுத்தவிம் மாநிலம் விளங்க
அருட்பொரு டெரிந்த வகன்றமிழ் வரைப்பில்
இயற்சொ றிரிசொ திசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யுட் கணிகல ஞதலிற்
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாம லிசைக்கு மியற்சொல்
ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த வொருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி
செந்தமிழ் சேர்ந்த திசைதொறுந் திசைதொறும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி

(2073–76) திவாகரத் தொகுதியிறுதிக் கட்டுரைகள். (2077): பிங்கல நிகண்டுப்பாயிரம்.

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொற்ரு னுகும்
சிதைந்தன வரினு மியைந்தன வரையார்
அந்நாற் சொற்றிற மரிறப முழுதுஞ்
செங்கதிர் வரத்தாற் றிவாகரன் பயந்த
பிங்கல முனிவெனத் தன்பெயர் ரீஇ
உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
விரிப்புடன் நிலேயிய வீறுசால் சிறப்பின்
வானுன் வகையும் வானவர் வகையும்
வானினு மண்ணினுர் வழங்கல் வழாஅ
ஈனமி லேயரியல்புளி வகையும்
அவனி வகையு மாடவர் வகையும்
அவர்திறத் தமைந்த வனுபோக வகையும்
அவயவத் தடைத்த வாரு வியல்பிற்
பண்பிற் செயலிற் பகுதி வகையும்
மாப்பெயர் வகையு மரப்பெயர் வகையும்
ஒருசொற் பல்பொரு ளோங்கிய வகையுமென்
றிருளற வீரைந் தாக்கி
மருளற வகுத்தனன் மதியினின் விரைந்தே.

சூடாமணி.

2078. சொல்லொடு பொருளு ணர்ந்தோன் சோதிட நீதி வல்லோன்
நல்லறி வாள னெனங்க ணுங்குன்றை ஞான மூர்த்தி
பல்லுயிர்க் கொருதா யாதும் பரமன்மா முனிவன் மெய்ந்நூல்
வல்லுநர் வல்லார்க் கெல்லாம் வகையறத் தரையில் வந்து.

2079. செகமெனும் பளிங்கு மாடத் திகிரிவேந் தரையே போலப்
புகழெனும் பஞ்சி சேர்த்திப் பொலிவுறு பேரத் தாணி
மகிழ்குண பத்ர னெனங்கள் வழித்தெய்வம் போல்வான் சொல்ல
இகபர மிரண்டும் வேண்டி யியலிசை வல்லோர் கேட்ப.

2080. ஒருங்குள பொருளு மோர்ந்திட் டுரைத்தனன் விருத்தத் தன்னில்
இருந்தவை நல்லோர் குற்ற மியம்பிடா ரென்ப தெண்ணித்
திருந்திய கமல வூர்தி திருப்புகழ்ப் புராணஞ் செய்தோன்
பரந்தசீர்க் குணபத் தன்ரூன் பணிந்தமண் டலவன் தானே.

(2078—80) சூடாமணிநிகண்டுச் சிறப்புப்பாயிரத்துக் கண்ட செய்யுட்களிற் சில.

2081. நிகண்டெ ளாமணியி னின்ற முறையே
அகன்ற விருத்தங்க ளாய்ந்து — புகன்றவெலாம்
ஈரைஞ்ஞூற் றீரைம்பா னீரைந்து மூவைந்தும்
சோர்வின்றி யாய்ந்த தொகை.

அகராதிநிகண்டு.

2082. உலகினர் பவமற மலைமக டவஞ்செயுந்
தேசுகொள் பட்டீச் சுரன்பதம் பணிந்து
ஒலியெழு கடல்சூ ழுலகினிற் றெரிக்கும்
இயற்சொ றிரிசொ றிசைச்சொல் வடசொலென்
றுரைதரு செரற்க ளொருநான் கதனிற்
றிரிசொலின் பேத மிருவகை யதுதான்
ஒருசொற் றானே பலபொரு ளாகியும்
பலசொற் றானே யொருபொரு ளிலையியும்
வருமிதி லொருசொற் பலபொரு ளதனைத்
தெரிதரு பிங்கலந் திவாகர முதலாய்ப்
பரவிய நிகண்டு பலவெடுத் தாராய்ந்
ததிற்சில திரட்டி யகர முதலாய்
மதித்தெழு வகார வர்க்க மீறாய்
மொழிமுத லெழுத்தி னாற் றொடரு ளடைவே
மொழிதரு சூத்திர முதற்பதந் தோறும்
வருபெய ராதிப் பொருளா யெடுத்தே
ஒருபெயர் முதலுற் பத்தி நீறாய்
நிகழ்தர வுரைக்குந் தொகைதனக் கிப்பெயர்
அடைவினி லங்கங் கமர்ந்துள பேரும்
இடையிடை யடைவிலுங் கில்லாப் பேரும்
மன்னுசூத் திரமூ வாயிரத் திடனே
மூன்னூற் றறுபதிற் றெட்டெனுந் தொகையாய்
வந்திடுந் தொகுதியி னைந்தென வகுத்தே
அரிய சகாத்த மாயிரத் தைஞ்ஞூற்
றொருபத் தாறென வுரைத்திடு மாண்டினில்
ஐந்ததி காரம றுபத்து நாற்கலை
உந்திய வறிவா லொருங்குட னுணர்ந்த
நாற்கவி வாணர் நலைதர யானும்
நூற்பா வதனு னுண்ணிய வறிவினில்

ஆதர வாலக ராதி கிகண்டென
ஒதினன் யாவரு மூணர்ந்திட வினைந்தே.

2083. திருப்பட் டீச்சுரச் செழுந்தமிழ்ப் புராணம்
தெரித்தாற் சிதம்பர ரேவண சித்தன்
ஒதிய தமிழக ராதி கிகண்டினில்...

2084. தொண்டைமான் ஞெ துலங்கிய புலியூர்
ணண்டருஞ் சிதம்பர ரேவண னுரைத்த
மூன்றாஞ் சகரா திப்பேர்த் தொகுதி.....

2085. வரமிகு வலஞ்சுழி வாணர்தம் புராணம்
உரைதருஞ் சிதம்பர ரேவண னியம்பிய
வாய்ந்த தகராதித் தொகுதி.....

2086. திருமேற் றளிக்குச் செழுந்தமிழ்ப் புராணம்
தெரிதரு சிதம்பர ரேவணன் பகர்ந்த
ஏழெனும் பகரா திப்பெயர்த் தொகுதி.....

2087. மேழித் தவசன் விளங்கிய புலியூர்
வாழிநற் சிதம்பர ரேவண சித்தன்
கிதியிற் றருமக ராதி கிகண்டினில்.....

சூடாமணி உள்ளழடையான்.

2088. விளம்பிய சகர ஞண்டா யிரத்தொரு நூற்றின் மிக்க
வளம்புகழ் பாண்ட மங்கை யாரிய முனிய வன்சேய்
இளங்கொடி மடவார் காம னிசைத்திருக் கோட்டி நம்பி
உளம்புகக் கணித நூலே யுரைத்தன னுலகுக் கெல்லாம்.

சதுவார்த்த சாரபூடணம்.

2089. பூமாது வாழ்மார்ப னடியார் குழாங்களிப்
புவிதனி லுகர்து காணப்
புனிதமா மிக்குரு பரம்பரையை யனைவரும்
போதவே யெளிதி லறியத்

தேமாலை சூழ்மின்ற செகரும் பூரெனூர்
திருப்பதியின் மேலி வளர்வோன்

(2088) சூடாமணி உள்ளழடையான் இறுதி, (2089) சென்னை மியூ
சியம் புத்தகசாலைப் பிரதி.

சீர்பெறு மயோத்தியி லிராமகோத் திரமதிற்
றிங்களென வந்து தித்தோன்

காமாதி யரிவர்க்க மூக்குறும் பணிகளைக்
கடந்தகலி யாண மிதியாம்
கச்சிக் கிடாம்பியே தாந்ததே சிகனினிய
கருணைக் குகந்த பாத்ரன்

பாமாலை யோடிரு வாசகப் பத்துமெண்
ணூயிரப் படிய தாகப்
பகர்வித்த னன்பரசு ராமனு மியபராங்
குசதாச பாக வதனே.

ஒருவர் பத்துப்பாட்டினை எழுதியதுபற்றிப்
பாட்டு.

2090. மூருகாறு பொருநாறு சிறுபா ணூறு
மூல்லைபெரும் பாணூறு மதுரைக் காஞ்சி
பரிசாய பொருடழுவு நெநெல் வாடை
பட்டினப்பா லைகுறிஞ்சி மலைக டாமும்
மருவாரும் பொழில்புடைசூழ் களக்தை மூதூர்
வருசிவப்ப பூபனருள் வேல பூபன்
உரையோடு மெழுதினனு தலினு லன்னேன்
ஒங்குபெருஞ் செல்வமிசை யுற்று வாழி.

தமிழ்நாடுகளின் சிறப்பியல்பு.

சோநாட்டெல்லை.

2091. வடக்குத் திசைபழனி வான்கீழ்தென் காசி
குடக்குத் திசைகோழிக் கோடாம்—கடற்கரையின்
ஓரமோ தெற்காகு மூள்ளெண் பதின்காதஞ்
சோநாட் டெல்லையெனச் செப்பு.

(2090) சென்னை மியூஸியம் புத்தகசாலைப்பிரதி. (2091) தனிப்பா ; கம்பர்வாக்கு என்பர் சிலர்.

சோநாட்டுச்சிறப்பு.

2092. அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇப்-புள்ளினந்தங்
கைச்சிறகாற் பார்ப்பொதிக்குங் கவ்வை யுடைத்தரோ
நச்சிலவேற் சோக்கோன்றை நாடு.

சோழநாட்டெல்லை.

2093. கடல்கிழக்குத் தெற்குக் கரைபொருவெள் ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையி
லேணுட்டுப் பண்ணை யிருபத்து நாற்காதஞ்
சோணுட்டுக் கெல்லையெனச் சொல்.

சோணுட்டுச்சிறப்பு.

2094. காவ லுழவர் களத்தகத்துப் போரேறி
நாவலோ [1]வென்றிசைக்கு நாளோதை—காவலன்றன்
கொல்யானை மேலிருந்து [2]கூற்றிசைத்தாற் போலுமே
நல்யானைக் கோக்கிள்ளி நாடு.

2095. எரியு மேற்றத்தி னுணும் [3]பிறர்நாட்டு
வாரி [4]சுரக்கும் வளனெல்லாம்—தேரின்
[5]அரிகாலின் கீழுகூஉ மந்நெல்லே சாலும்
கரிகாலன் காவிரிசூழ் நாடு.

2096. ஒத்த முயற்சியா னெஞ்சு வெளிப்படினும்
நித்திய மாக நிரப்பிற்றே—எத்திசையும்
தாவாத வந்தணர் தாம்பயிற்றிக் காவிரிநாட்
டோவாத வோத்தி னொலி.

2097. தாமரை வண்கிழங்கு வீரவி யொராங்குக்
கருமலங்கு மிளிரக் கொழுமுகந் தியக்கிய
பழஞ்சேற்றுப் பரப்பிற் பருமுத லெடுத்து

(2092) முத்தொள்ளாயிரம்: (2093) சோழமண். சத. 8, மேற்; கம்பர் வாக்கென்பர் சிலர். (2094) முத்தொள்ளாயிரச்செய்யுள்— யாப். வி, 2. மேற். [1]வென்றழைக்கு நாளோசை. [2]கூற்றிசைப்ப போலாதே. (2095) தொல். புறத். 86, உரை; பத்துப்பாட்டு, பொருநராற்றுப்படையிறுதி. [3]பிறர்நாட்டு. [4]யுகுக்கும். [5]அரிதாளின். (2096) தொல். புறத். 75, உரை. (2097) ஆசிரியமாலை. (புறத்திரட்டு).

நெடுங்கதி ரிறைஞ்ச வாங்கிக்கால் சாய்த்து
வாளிற் றுமித்த சூடே மர்வீன்
சினைகளுந்து பிறக்கிய போரே யெருத்தின்
கலையடி வைத்த வுணவே மருதின்
கொழுமிழற் குவையிய குப்பையோ டனைத்தினும்
பலர்மகிழ் தூங்க வுலகு புறந்தரூஉம்
மாவண் சோணாட் டேதொறும்
ஏரோர் களவழி வாழிய நெடிதே.

பாண்டிநாட்டெல்லை.

2098. வெள்ளா றதுவடக்கா மேற்குப் பெருவழியாம்
தெள்ளார் புனற்கன்னி தெற்காகும்—உள்ளார
ஆண்ட கடல்கிழக்கா மைம்பத் தறுகாதம்
பாண்டிநாட் [1]டெல்லை பகர்.

பாண்டிநாட்டுச்சிறப்பு.

2099. நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ்
வில்லந் தொறுமூன் றெரியுடைத்து—நல்லரவப்
பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின்
நாட்டுடைத்து நல்ல தமிழ்.

2100. நந்தி னிளஞ்சினையும் புன்னைக் [1]குவிமொட்டும்
பந்த ரிளங்கமுகின் பாளையும்—சிந்தித்
திகழ்முத்தம் போற்றோன்று நெம்மற்றே தென்னன்
நகைமுத்த வெண்குடையா னூர்.

2101. சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியுஞ்
சவுந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனும்
சங்கப் புலவருந் தழைத்தினி திருந்த(து)
மங்கலப் பாண்டி வளநா டென்ப.

தொண்டைநாட்டெல்லை.

2102. மேற்குப் பவளமலை வேங்கட நேர்வடக்காம்
ஆர்க்கு முவரி யணிகிழக்குப்—பார்க்குளுயர்

(2098) தனிப்பா; கம்பர்வாக்கென்பர் சிலர். [1]டெல்லைப் பதி. (2099) பத்துப்பாட்டு. திருமுருகாற்றுப்படை, நச். உரை, பக். 41. (2100) மூத்தோள் ளாயிரப்பாட்டு. [1]கருவிமொட்டும். (2101) நன்னூல், 271. சங்காரமைச், விருத்தி. (2102) தனிப்பா; கம்பர்வாக்கு என்பர் சிலர்.

தெற்குப் பிஞகி திகழிருப தின்காதம்
நற்றெண்டை நாடெனவே நாட்டு.

தொண்டைநாட்டுச்சிறப்பு.

2103. வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப்—பூழியர்கோன்
தென்ஞமு மூத்துடைத்துத் தெண்ணீர் வயற்றெண்டை
நன்ஞமு சான்றே ருடைத்து.

தமிழ்நாடு நான்கின் சிறப்பியல்பு.

2104. வஞ்சி வெளிய குருகெல்லாம் பஞ்சவன்
நான்மாடக் கூடலிற் கல்வலிது
சோழ ஞறற்றைக் கரும்பினிது தொண்டைமான்
கச்சியுட் காக்கை கரிது.

கொங்குநாட்டெல்லை.

2105. [1]வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்குக்
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று—கிடக்கும்
களித்தண் டலைமேவுங் காவிரிசூழ் நாட்டுக்
குழித்தண் டலையளவுங் கொங்கு.

கொங்கு இருபத்துநான்கு நாடுகள்.

2106. சொல்லவரி தானபூந் துறைசைதென் கரைநாடு
தோன்றுகாங் கேய நாடு

தோலாத பொன்கலூர் நாடுதிக ழாறையளி
தோய்ந்தவா ரக்க நாடு

வல்லமை செறிந்தகிரு வாவினன் குடிநாடு
மணநாடு தலைய ஞடு

வரதட்டை பூவாணி யரையநா டொடுவங்க
வடகரை யிழங்கு நாடு

(2103) தொண்டைமண். சத. 13, மேற்; சோழமண். சத. 29, மேற். (2104) யாப்.வி. 93, மேற்; தொண்டைமண். சத. 22, மேற். (2105) கொங்கு மண். சத. 2, மேற். [1]வடக்குத் தலைமலையாம். (2106) ஷை. ஹார்த் தொகை, 2.

நல்லுருக் கன்னடு வாழவர் நியுமண்ட
நாடுவெங் காள நாடு
நாவலர்கள் சொல்கா வடிக்காரா டானைமலே
நாசிபுர நாடு நிதமும்

இல்லறம் வளர்த்துதவு மல்குகாஞ் சிக்கோயி
லியல்செறி குறும்பு நாடும்
இனியபுகழ் சேர்கொங்கு மண்டலந் தனிலான
விருபத்து நான்கு நாடே.

கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டு.

2107. தென்பாண்டி குட்டங் குடங்கற்கா [1]வேள்பூழி
பன்றி [2]யருவா ளதன்வடக்கு—நன்றுய
சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்.

தமிழொழி பதினேழ்நிலங்கள்.

2108. சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக்குடகம்
கொங்கணங் கன்னடங் கொல்லந் [3]தெலிங்கங் கலிங்கம்வங்கம்
கங்க மகதங் கடாரங் கவுடங் கலிங்குசலம்
தங்கும் [4]புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்நிலந் தாமிவையே.

தமிழொழி பிறநிலங்கள்.

(அகத்தியனூர்வாக்கு.)

2109. கன்னித் தென்கரைக் கட்பழந் தீவம்
சிங்களங் கொல்லங் கூவிள மென்னும்
எல்லியின் புறத்தவு மீழம் பல்லவம்
கன்னடம் வடுகு கலிங்கர் தெலிங்கம்
கொங்கணந் துளுவங் குடகங் குன்றம்
என்பன குடபா லிருபுறச் சையத்
திடனுறைபு பழகுந் தமிழ்நிரி னிலங்களும்
மூடியுடை மூவரு மிடுகில வாட்சி

(2107—109) நன்னூல். 272, மயிலை. உரை. [1]வேண்பூழி. [2]யருவா வதன் வடக்கு. [3]தெலுங்குவங் கலிங்கம். [4]தமிழ்ப்புவி.

அரசுமேம் பட்ட குறுநிலக் குடிகளுள்
பதின்மரு முடனிருப் பிருவரும் படைத்த
பன்னிரு திசையிற் சொன்னய முடையவும்
[ஆகு மென்ப வறிந்திசி னோரே].

நகர்.

கூடல்.

2110. மைந்தரொ டேடி மகளிர் திமிர்ந்திட்ட
குங்கும வீர்ஞ்சாந்தின் [1]சேறிழுக்கி—எங்குந்
தமோற லாகிய தன்மைத்தே தென்னன்
நெமோடக் கூட லகம்.

2111. ஆடல் புரியு மரனென்று மூவர்தமிழ்ப்
பாடல் புரியும் பரனென்றும்—கூடலிலே
நன்னரிவா சிக்கு நடைபயிற்றி னோனென்றுங்
கின்னரிவா சிக்குங் கிளி.

உறந்தை.

2112. மாலை விலைபகர்வார் கிள்ளிக் களைந்தபூச்
[2]சாலை மிகுவதோர் தன்மைத்தாய்க்—காலையே
லிற்பயில் வரணகம் போலுமே வேல்வளவன்
பொற்பா ருறந்தை யகம்.

புகார்.

2113. காலை யரும்பி மலருங் கதிரவனும்
மாலை மதியமும்போல் வாழியரோ—வேலை
யகழா லமைந்த வவனிக்கு மேலைப்
புகழா லமைந்த புகார்.

2114. முன்னேத்தஞ் சிற்றின் முழங்கு கடலோத மூழ்கிப் பெர
வன்னேக் குளப்ப னறிவாய் கடலேயென் றலறிப் பேருர்
தன்மை மடவார் தணந்துகுத்த வெண்முத்தம்[3]
புன்னையரும்பேய்ப்பப்போவாரைப்பேதுறுத்தும்புகாரேயெம்மூர்.

(2110) மூத்தொள்ளாயிரப்பாட்டு–(புறத்திரட்டு). [1]சேறுழக்கி. (2111) தஞ்சைச் சரச்சுவதிமால்—பிரதி. (2112) மூத்தொள்ளாயிரப்பாட்டு–(புறத் திரட்டு). [2]சால. (2113) லெப் பக். 268. (2114) தொல்.செய். 64, பேரா. ரச். [3]'தனைசால் கானல்' என்று வேறுசொல்லைப்பெய்து பாடங்கொள்வாருமுளர். அங்ஙனமாயின், உரையாசிரியர்கள் காட்டியவாறு, 'இவ்வடி சேடியாத லின்மையின், அப்பாடம் தவறுமென்க.

2115. மஞ்சின் மதிரு டையான் மணஞ்செய்யப்
பஞ்சவனம் வாடை படைத்தருளும்—விஞ்சு
புகழா ரளகேசர் பூம்புகா ரென்னும்
நகராரை யொப்பவரார் நாட்டு.

தஞ்சைத்தெரு.

(பொய்யாமொழியார் வாக்கு.)

2116. இறையின் முறைகொணர்ந்து [1]தெவ்வரெலா மீண்ட
[2]இறையு மிறைகழிக்க லாகா—வறைகழற்காற்
போர்வேந்தர் [3]போர்மாளப் போர்வா ளுறைகழித்த
தேர்வேந்தன் றஞ்சைத் தெரு.

நாகை.

(இரண்டடியாய் ஈறுகுறைந்துவந்த குறட்போலி)

2117. உற்றவர்க் குறுப்பறுத் தெரியின்க ணுப்பத்தலே யன்ன
நீமை செய்தோர்க்கு மொத்த மனத்ததாய்
நற்றவர்க் கிடமாகி னின்றது நாகையே.

2118. தண்மலர் வில்லிதன் போரா னமக்குத் தயையளித்த
கண்மலர்க் காவிக் கெதிரா னதுமன்று சுரப்பொலிந்த
பண்மலர் யாழ்பயில் வாரார்வு சேர்பதி நாகைமிக்க
தண்மை யகத்துப் பதிமத்த மாதர் தடங்கண்களே.

கங்கைகொண்டசோழபுரத்து அரண்மனை.

2119. வண்புயலைக் கீழ்ப்படித்து வானத் தருமலைந்து
மண்குளிரச் சாயல் வளர்க்குமார்—தண்கவிகைக்
கொங்கா ரலங்கலன பாயன் குளிர்பொழில்சூழ்
கங்கா புரமாளி கை.

திருவாரூர் விசேடங்கள்.

2120. சங்குநீர்த் தந்திருச் சாளரவா யில்வீர
சிங்கா தனந்திருவந் திக்காப்புப்—பங்குனிமா
தத்திருநா டார்த்தந் திருவிழை தன்கோயில்
உத்தரபா சுந்திருவா ரூர்.

(2115) வீரசோ. யாப். 4, மேற். (2116) தமிழ்நாவலர்சரிதை. 68. சோழ மண். சத. மேற். [1]தெவ்வேந்தரீண்ட. [2]இறையு மிறைகடக்க வொண்ணூர். [3]போய்மடியப். (2117) வீரசோ. அலங். 12 மேற் (2118) ஷே.ஷே. 39 மேற். (2119) தண்டியலங். 95, மேற். (2120) தனிப்பா.—காளமேகம்வாச்சென்பர்.

தும்பகோண விசேடங்கள்.

2121. திருக்குடந் தையாதி கும்பேசர் செந்தா
மரைக்குளங் கங்கை மகங்கா—விரிக்கரையின்
ஓரங்கீழ்க் கோட்டங்கா ரோணமங்கை நாயகியார்
சாரங்க பாணி தலம்.

பழையாறு.

2122. தாழி யோங்குமலர்க் கண்ணவர் தண்ணடி
பாழி யோங்குபுன லார்பழை யாற்றுள்
காழி நின்றமதி யான்மதி சேர்ந்து
வாழி யென்று வணங்கவினை வாரா.

இலந்தைப்பதி.

2123. திருக்கிளர் தாமரையின் றேனெழுகச் சாலி
பருக்கு மிலந்தைப் பதியே—யிருக்கென்னு
நாமாலை யிட்டார் நலங்கிளர்தார் மூவேந்தர்
பாமாலை யிட்டார் பதி.

மருதூர்.

2124. தென்ற லுலவச் சிலைமாரன் போர்செய்ய
மன்றல் கமழு மருதூரே—கொன்றையின்
மட்டாகுந் தொங்கலினர் வந்து மணஞ்செய்யப்
பட்டாரை யிட்டார் பதி.

சடையவள்ளலது ஊர்ச்சிறப்பு.

2125. புரந்தர னாரு புதுவைச் சடையன்.
இருந்தவிய வூர்தெற்கு மேற்குப்—பரந்தபொன்னி
யாற்றுநீ ரால்வியோ டப்பாற் கிழக்கரிசி
லாற்றுநீ ரால்வியோ டாம்.

திருவழுந்தூர்.

(ஷையூர்த் தாதியைச் சோழன் 'எந்த ஊர்?' என்றுகேட்டபோது பாடியது.)

2126. கம்பன் பிறந்தவூர் காவேரி தங்குமூர்
கும்பமுனி சாபங் குலைந்தவூர்—செம்பதுமத்

(2121) தனிப்பா—காளமேகம்வாக்கென்பர். (2123) வீரசோ. அலங். 18, மேற். (2124) ஷே. ஷை. 12, மேற். (2125) சோழமண்., சத. 89, (2126) தமிழ்நா. 185,

தாதகத்தி நான்முகனுந் தாதையுந்தே டிக்காணு
[1]ஓதகத்தார் வாழுமழுந் தூர்.

கச்சிமாநகர்.

2127. பூண்டாங்கு கொங்கை பொரவே குழைபொருப்பும்
தூண்டாத தெய்வச் சுடர்விளக்கும்—நாண்டாங்கு
[2]வண்மையாற் சான்ற வருங்காஞ்சி வண்பதியும்
உண்மையா லுண்டிவ் வுலகு.

2128. மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்மூள்
ஒலியும் பெருமையு மொக்கும்—மலிதேரான்
கச்சி பலிவ கடல்படா கச்சி
கடல்பலிவ வெல்லாம் படிற்.

பெருஞ்சித்திரனர் வாக்கு—ஆரிடப்போலி.

2129. எரி யிரண்டுஞ் சிறகா வெயில்வயிறுக்
காருடைய பீலி கடிகாவாச்—சீரிய
அத்தியூர் வாயா வணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு.

2130. வையக மெல்லாங் கழனியா வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள் செய்யகத்தி
வான்கரும்பே தொண்டை வளநாடு வான்கரும்பின்
சாறேயந் நாட்டித் தலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங் கச்சியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றுன் கச்சி யகம்.

2131. புரவுதரு குடியாகிப் புயல்வண்ணன்
விரும்பியதூஉம் பொழில்சூழ் காஞ்சி
கரியசுடர் வீதிதொறு மூலாப்போந்து
கவர்வதூஉங் கலைசூழ் காஞ்சி
நிரைவளையிவ் வுலகுய்ய நின்றுதவுஞ்
செய்வதூஉ நிழல்சூழ் காஞ்சி
சுரமகளிர் பாடுவதூஉம் பயில்வதூஉம்
சொன்மாலை தொடுத்த காஞ்சி.

---

[1]வேதவித்து. (2127) வீரசோ.அலங். 31; தண்டியலங். 78,மேற். [2]வண்மைசால். (2128) தொல் பொரு. 86; யாப்.வி. 61,மேற்; வீரசோ.அலங். 23, மேற்; தண்டி. 48,மேற். (2129) யாப்.வி. 93,மேற்; தண்டி.37. (2130)யாப். வி. 62;மேற்; தொண்டைமண். சத. 7,மேற். (2131)வீரசோ. யாப்.16,மேற்.

(அடிநிரணிறை)

2132. முலைகலிங்க மூரி நிலமா மகட்கு
மலைபரவை மாரிமென் கூந்தல் —குலநதி
தண்ணுரங் காஞ்சி தகைசான் முகமவட்குக்
கண்ணுவா னேறுயர்ச்ச தோ.

காசிமின் ஆறுவிசேடங்களை
காளமேகப்புலவர் பாடிய வெண்பா.

2133. அப்பா குமரகோட் டக்கீரை செவ்வலிமேட்
டுப்பாகற் காய்பருத் திக்குளநீர் —செப்புவா
சற்காற்றுக் கம்பத் தடியிற் றவங்கருமா
றிப்பாய்ச்சல் யார்க்கு மினிது.

திருமழிசை.

(திருக்கச்சிநம்பிகள்பாசுரம்.)

2134. உலகு மழிசையு மூள்ளுணர்ந்து தம்மிற்
புலவர் புகழ்க்கோலாற் றூக்க —உலகுதன்னை
வைத்தெடுத்த பக்கத்து மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது,

நென்மலி.

(பொய்கையார்வாக்து—ஆரிடச்செய்யுள்)

2135. வரிசை பெரிதுடையார் கட்கலமுக் தாயர்
புரிசை யொருசாரா ரம்பலமுக் தண்ணீரும்
தண்ணிலத்த வல்ல புரிசைக்குத்
தெற்கொற்றித் தோன்முக் திருசென் மலியேகம்
பொற்கொற்றி புக்கிருக்கு மூர்.

கோற்கைத்துறை.

2136. தொக்குத் துறைபடியுக் தொண்டையஞ்செவ்
வாய்மகளிர் தோண்மேற் பெய்வான்
கைக்கொண்ட சீருட் கருங்கண்
பிறழ்வ கயலென் றெண்ணி

(2132) யாப்.வி. 94, மேற். (2133) தனிப்பா. (2134) இவ். திருச்சந்த விருத்தம்—தனியன். (2135) யாப். வி. 93, மேற். (2136) தொல். பொரு எ. 76, சேர்.

மெய்க்கென்றும் பெய்கல்லார் மீண்கரைக்
கேசொரிந்து மீன்வார் காஞ்சி
எக்கர் மணற்கிளைக்கு மேழை
மகளிர்க்கே யெறிநீர்க் கொற்கை.

ஸ்ரீவில்லிபுத்தூர்.

(இடமணித்தென்றல்).

2137. முத்தாரும் வெண்ணகை யாய்கடந் தோமுது பாலிலிலம்
எத்தாரம் போதுமுன் செல்கின்ற தார மெனிலிரண்டு
செய்த்தாரம் போதுந் திருமல்லி நாட்டுச் செறிந்தவில்லி
புத்தாரும் பச்சைத் திழாய்மண நாறிய பொய்கையுமே.

கோஞ்சி.

2138. மாரியொடு மலர்ந்த மாத்தாட் கொன்றைச்
கடிகமழ் புறவிற் கானவண் டார்க்கும்
யாணர்க் கோஞ்சி ரென்ப
பாணர்ப் பாரந் தாங்கியோன் பதியே.

2139. நன்னுள் வேங்கைப் பொன்னேர் புதுமலர்
குறிஞ்சியொடு கமழுங் குன்ற நாட
கடிபுனற் கோஞ்சி மன்ன
தொடிபொலி பணைத்தோ டிறவாய் நீயே.

புத்தூர்.

2140. தடமண்டி தாமரையின் தாதா டலவ
னிடமண்டிச் செல்வதனைக் கண்டு—பெடைதெண்டு
நூழிக் கதவடைக்கும் புத்தூரே பொய்கடிச்
தூழி நடாயிலு ஞூர்.

பெருவல்லம்.

2141. நெற்றியாறு பாய்ச்சாடுஞ் சேயரி புண்கணுய்
வற்ரு வளவயலும் வாய்மாண்ட வேரியும்
பற்ரூர்ப் பிணிக்கு மதிலும் பகிடங்கும்
ஒப்ப வுடைத்தா யொலியோவா நீர்ப்புட்கள்
தத்தி யிரைதேருந் தையலாய் நின்னூர்ப்பே

(2137) இராமாநுஜார்ய திவ்யசரிதை. பக். 125. (2138—39) யாப். வி. 16, மேற். (2140) வெ. மா. 60, மேற். (2141) வெ. மா. 62. மேற்.

ரொத்தாய வண்ண முரைரீ யெனக்கூறக்
கட்டலர் தாமரையு ளேழுங் கமொன்றேர்க்
கத்திரிய ரைவருங் காயா மரமொன்றும்
பெற்றவிழ்தேர்ந் துண்ணுத பேயே யிருதலையும்
வித்தாத செல்லி னிறுதியுங் கூட்டியக்கால்
ஒத்தியைந்த தெம்மூர்ப் பெயரென்னூள் வானவன்கை
வித்பொறித்த வேற்புருவத் தாள்.

கூவநீதியாகசமுத்திரம்.

2142. *ஒண்டிய செந்தமிழ்த் தாதற் கடிமையவ் வூரதனுல்*
காண்கவி சொல்வது மில்லையென் றேகம்ப நாடன்செல்ல
ஆண்கவ னேறுஞ் சிவிகை சுமந்து மலடப்பையிட்டுந்
தாண்கவி கொண்டது கூவந் தியாக சமுத்திரமே.

2143. *மட்டாருஞ் செங்கழு நீர்மணி மார்பரை வாழ்த்துமக்தக்*
கிட்டாத யாசகர் கிட்டிவந் தாலதைக் கேட்டுமென்னுட்
பட்டோலை வாசித் தவரவர்க் குள்ள பரிசிலெலாந்
தட்டா னளிப்பதுங் கூவந் தியாக சமுத்திரமே.

திருக்கோவலூர்.

2144. *பொன்மாரி பெய்யுமூர் பூம்பருத்தி யாடையாய்*
அந்நாள் வயலரிசி யாகுமூர்—வந்நாளும்
தேங்குபுக ழேபெருகுஞ் சேதிமா நாடதனில்
ஓங்குந் திருக்கோவ லூர்.

குடிதாங்கியூர்.

2145. *வாவிகளே யன்றி மலரா வயல்களுமப்*
பாவிகளே யன்றிப் பயிராகா—காவினிற்காற்
றேரோன் விருதன்றிச் சேரா திரிந்தவர்க்கும்
ஊரோ குடிதாங்கி யூர்.

போய்கைநகர்.

2146. *பால்வாய் மணக்குங் குழந்தைகள் கூடநற் பாவலராய்*
நூல்வாய் மணக்குமுன் செய்யுப காரநு கர்ந்திடிலோர்

(2142–43) தொண்டைமண். சத. 25, மேற். (2144) தனிப்பா; ஒளவை வாக்கு என்பர். (2145) தனிப்பா. (2146) சென்னை மியூஸியம் கையெழுத்துப் புத்தகசாலை. காட். I, 1912, பக். 319.

கால்வாய் மணக்குங் களித்தேற லுண்டு களித்துகித்தஞ்
சேல்வாய் மணக்கும் வயலூரும் பொய்கைத் திருநகரே.

வஞ்சியகம்.

2147. களிகள் களிகட்கு நீட்டத்தங் கையாற்
களிகள் விதிர்த்திட்ட [1]வெங்கட்—டெளிகலந்
தோங்கெழில் யானை [2]மிதிப்பச்சே ரூயிற்றே
[3]பூம்பொழில் வஞ்சி யகம்.

மிழலைநாடு.

2148. கேளும் புகழிரும் பாபுரி மேலெல்லை கீழெல்லைநீர்
நீளுங் கடலந்தப் பாம்பாறு தெற்கெல்லை நேர்வடபா
லாளும் புவியெல்லை தானம் புவிநதி யாய்வினங்கும்
வேளும் புகழெழிற் காராளர் வாழு மிழலையிலே.

நாட்டாசன்கோட்டைநாடு.

2149. வாச மானதென் பாண்டிநன் ஞெ
மதுரை நாட்டில் வளருமிந் நாடு

காசி னிக்குட் கதிர்க்கின்ற நாடுமுன்
கம்பர் வந்து துதிக்கின்ற நாடு

பூசு ரர்க்கன்ன தானஞ்செய் நாடு
புலவர் மேலபி மானஞ்செய் நாடு

ராச லட்சுமி கண்ணுடை யாளருள்
நல்கு நாட்டர சன்கோட்டை நாடே.

திருப்புல்லாணி அச்சுவத்தம்.

2150. பெருவயிறு கண்டமாலை யுதரவலி யண்டவாயு
பிரமிய திரத்திருலை தலைநோவும்

இருமலொடு தத்தவாயு குருடுசெவி டெஞ்சொலாமை
யிவைகண்முத லெழுத்தயோக வினையாவும்

ஒருசோடியி லஞ்சியோடும் வறுமையொடு சஞ்சிதாதி
யுபாரியி னடர்ந்தபாவ மவைதானும்

மருவலர் பிறர்த்தகோதை மருவிமகி மும்புலாணி
வளரரசு கண்டபேரை யணுகாவே.

(2147) மூத்தொன்னூயிரப்பாட்டு—(புறத்திரட்டு). [1]செங்கட். [2]மிதிப் பச்சே ரூருமே. [3]பூம்புலை. (2148) மிழலைச்சதகம். 88. (2149) கண் ணுடையம்மை பள்—சேதுநாடுந் தமிழும். (2150) சேதுநாடுந் தமிழும்.

காவிரி.

2151. மரத்தினை யோரெழுத்துச் சொல்லுமற் றொன்று
நிரப்பிட நீரிற்பூ வொன்றும்—நிரப்பிய
வேறே யெழுத்துய்க்க வீரா சேர்ந்திரண்டு
டாஞ் மெனவுணரக்க லாம்.

2152. சோலையை யோரெழுத்தா லென்சொல்லுந் தொக்கதன்மே
லீலப்பே ரெவ்வெழுத்தி னுனிரம்பு ?—மாலைக்
குலவேந்தன் சென்னி குலநதியின் பேரைக்
கடைசேர்ந்த வோரெழுத்தாற் காண்.

2153. மரகதச் சோதியுடன் மாணிக்கச் சோதி
இருமருங்குஞ் சேர்ந்தரிவை பாகன்—உருவ
மலைக்கு மகில்சுமந் தாரத்து வாண்கோ
டலைத்து வரும்பொன்னி யாறு.

கரிகாலன் காவிரிக்கரை கட்டியழறை.

2154. உச்சங்கோ லெண்கோ லுயரம் பதினறுகோல்
எச்சம் பிரிவா யிருபதுகோல்—(த)ச்சளவு
மண்கொள்ளக் கொண்டகோ லெண்கோல் வளவர்கோன்
கண்கொள்ளக் கண்ட கரை.

கம்பர் காவிரியின் பெருக்கடங்கப் பாடிய வெண்பா.

2155. கன்னி யழிந்தனள் கங்கை யிறம்பினள்
பொன்னி கரையழிந்து போனனென்—றிந்நீர்
உரைவிடக்க லாமோ வுலகுடைய தாயே
கரைகடக்க லாகாது காண்.

2156. வாரம் புலர்ந்த மனத்தார் மணிக்குறங்கி
னீரம் புலர்ந்தாலு மேகாரிவ்—வீரர்
அலிலோடு காவிரிநீ ராடி வருவார்
தலிலோடு சுற்றிச் சுழன்று. (?)

(2151) வீரசோ. அலங். 39, மேற். (2152) நன்னூல். 268, மயிலை. (2153) தண்டி. 122. (2155) தமிழ்நா. 81. (2156) வீரசோ. வேற். 6, மேற்.

இயற்கைச்சிறப்புக்கள்.

தமிழ்.

2157. ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியு—மாங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

2158. பைங்க [1]ணிளம்பகட்டின் மேலானைப் பான்மதிபோற்
றிங்க ணெடுங்குடையின் கீழானை—[2]யங்கிருந்து
[3]நாம்வேண்ட நன்னெஞ்சே நாடுதிபோய் நானிலத்தோர்
தாம்வேண்டுங் கூடற் றமிழ்.

2159. சொல்லென்னும் பும்போது தோற்றிப் பொருளென்னும்
நல்லிருந் நீதாது நாறுதலான்—மல்லிகையின்
வண்டார் கமழ்தாம மன்றே மலியாத
தண்டாரான் கூடற் றமிழ்.

2160. மாவடு வென்னு மலர்புரை கண்ணினுப்
பாவெடுத்துப் பாடும் பயனெக்கி—மேவி
எடுத்த வினத்தினு லின்பஞ்சொற் சேரத்
தொடுத்து மொழிவ தமிழ்.

2161. செந்தமிழ்ச் செய்யுட் டிறந்தெரிந்து செந்தமிழ்க்கண்
வந்த வடமொழியு மாற்றுதே—சந்தம்
வழுவாமற் கொண்டியற்று மாண்பினுர்க் குண்டே
தழுவாமை நிற்குந் தமிழ்.

மருதம்.

2162. களைகளைய முளரியரு கடைகடைய
மகளிர்கதிர் மணியு மணியும்
வளைவளைய கரதலமு மடைமடைய
மதுமலரு மலைய மலைய

(2157) தண்டியலங். 49. (2158—59) பத்துப்பாட்டு. மதுரைக்காஞ்சி இறுதி. பக். 819. [1]ணினம்பகட்டு. [2]தங்காது. [3]நாம்.வேண்டு. (2160—61) யாப். வி. 94. (2162) தண்டியலங். 93, மேற்.

மிளையிளைஞர் கிளைவிரவி யரியரியின்
மிசைசுவளை மலரும லரும்
கிளைகிளைகொ ளிசையளிகண் மகிழ்மகிழ்செய்
கெழுதகைய மருத மருதம்.

அரசனூர்ச்சிறப்பு.

2163. குருகுகாரையொடு கொட்பாலை
வரிதிரைநீர் வியன்கழனி
மறுகுகெழீஇய மலிசும்மை
னெவாங்குத்
தண்பணை தழீஇய விருக்கை
மண்கெழு செம்மைதின் மன்ன னூரே.

2164. சுறமறிவன துறையெல்லாம்
இறவின்பன வில்லெல்லாம்
மீன்றிரிவன கிடங்கெல்லாம்
தேன்றுவ்வன பொழிலெல்லாம்
னெவாங்குத்
தண்பணை தழீஇய விருக்கை
மண்கெழு [1]செங்கோன் மன்ன னூரே.

நகர்ச்சிறப்பு.

2165. கலைபயி லல்குலார் காமர்மெல்லநடைபோன்
றுலவுவர் மெல்லவே யொண்பொன் மாநகர்
அலர்மலி வீதிக ளாறு போன்றுள
மலையென நிவந்தன மதலை மாடமே.

மாளிகை.

2166. பேணு குமுத மலரப் பெரும்பகலே
வாணிலவ தாகி மலியுமே—பூண்முலையார்
பண்களகத் தோதப் பரந்தெழுந்த மாளிகைமேல்
வெண்களபத் தாலே விரைந்து.

(2163) யாப். வி. 31. (2164) மே. 12. [1]செம்மைதின். (2165) மே. 94. (2166) வீரசோ. அலங். 11, மேற்.

கடற்பட்டினம்.

2167. பானல்வாய்த் தேன்விரிந்தன
கானல்வாய்க் [1]கழிமணந்தன
ஞாழலோடு நறும்புன்னை
தாழையோடு [2]முருகுயிர்த்தன
வண்டல்வாய் நறுநெய்தல்
கண்டலோடு [3]கடலுமித்தன
தவளமுத்தஞ் சங்கீன்று
பவளமோடு ஞெமிர்ந்துராய்
இன்னதோர்
கடிமண முன்றிலு முடைத்தே
படுமீன் பரதவர் பட்டினந் தானே.

தும்பி.

(அடிமறிமண்டில வெளிவிருத்தம்)

2168. மாலை மணங்கமழு மெளவன் முகைவிரியும்—எத்தைகுன்றம்
காலை மணிக்குவளை காதலர்போற் கண்விழிக்கும்—எத்தைகுன்றம்
நீல மழைமுழங்கி நின்று சிலம்பதிரும்—எத்தைகுன்றம்
மாலை மயிலகவ வந்தன்று வானமே—எத்தைகுன்றம்.

(மூன்றடி மண்டில வெளிவிருத்தம்).

2169. ஆடு கழைதிழிக்கு மத்தண் புயலிற்றே—எத்தைகுன்றம்
நீடு கழைமே னிலாமதிய நிற்குமே—எத்தைகுன்றம்
கூடு மடைதவழுங் கோயிர் சந்தமே—எத்தைகுன்றம்.

பொழில்.

2170. பொழிலே,
இரவோ ரன்ன விருளிற் நுகியும்
நிலவோ ரன்ன வெண்மண லொழுகியும்
அரைசுமண நயந்த பந்தர்ப் போலவும்
வரைவா ழியக்கிய நுறைவிடம் போலவும்
வண்ணனை முற்று நாகியு மொண்மலிந்
பூவினி நாற்ற மன்றியு மேர்வரக்
குங்குமங் கமழு மெங்கோன் (வரை) யென

(2167) யாப்.வி. 26,90. [1]கழிமலர்ந்தன. [2]முருகுயிர்ப்ப. [3]கடலுமித்தித்.

வியந்தன ளிருந்து வீணை பண்ணி
நயந்த கீதம் பாடு மென்ப
வயந்த மாகிய பொழிலி னூனே.

2171. வேனில் [1]வெயிற்குலர்ந்த மெய்வறுமை கண்டிரங்கி
வானின் [2]வளஞ்சுரந்த வண்புயற்குத்—தானுடைய
தாதுமே தக்க மதுவுந் [3]தடஞ்சினையாற்
போதுமீ தேந்தும் பொழில்.

2172. மாலை மருவி மதிதிரிய மாமணஞ்செய்
காலைத் துணைமேவ லார்கடிய—வேலைமேன்
மிக்கார் கலியடங்கா தார்க்கும் வியன்பொழில்கள்
புக்கார் கலியடங்கும் புள்.

2173. உண்ணிலவு நீர்மைத்தா யோவாப் பயன்சுரந்து
தண்ணளி தாங்கு மலர்முகத்துக்—கண்ணெகிழ்ந்து
நீங்க லரிய நிழலுடைத்தாய் நின்றெமக்கிங்
கோங்கிய சோலை யுளது.

2174. (பொழிலே,) இரவோ ரன்ன கொழுநிழற் ரூஅய்
நிலவோ ரன்ன வெண்மண லொழுகி
வண்டுந் தேனும் வரிக்கடைப் பிரசமும்
கொண்டு புணர்ந்தம் பென்று முரன்று
விழைவு விடுத்த விழுமி யோர்க்கும்
விழைவு தோற்று விக்கும்பண் பிற்றே.

2175. கழிமலர்ந்த காவிக் களிவண்டு பாடக்
குழிமலர்ந்த நீலங் குறுமுறுவல் கொள்ளும்
குழிமலர்ந்த நீலங் குறுமுறுவல் கொள்ளப்
பொழின்மலர்ந்த பூம்புன்னை நுண்டாது சிந்தும்.

இன்பம் விளைப்பன.

(உரைநடை)

2176. தெள்ளறல் யாற்றுத் திரைமண லடைகரை
வண்டுவரி பாடத் தண்போ தலர்ந்து

(2171) வீரசோ. அலங். 25; தண்டியலங். 55, மேற். [1]வெயிற்குடைந்த [2]வளமருளும். [3]தடஞ்சினைக்கைப். (2172) வீரசோ. அலங். 30. (2173) தண்டி. 52. (2174) இறையனார் களவியல் 3. (2175) யாப். வி. 52. (2176) தொல். அகத்திணை. 9.

தாதுந் தளிரு மேதகத் துவன்றிப்
பல்பூஞ் சோலைப் பன்மலர் நாற்றமொடு
செவ்வியிற் றென்ற லெவ்வியிற் ரூகிக்
குயில்கூஉக் குரலும் பயிலவதன் மேலும்
நிலவுஞ் சாந்தும் பயில்வுறு முத்தும்
இன்பம் விளைக்கு நன்பொருள் (பலவே).

2177. வளர்கொடியன மணம்விரிவன மல்லிகையொடு மௌவல்
நளிர்கொடியன நறுவிரையக நறுமலரன நறவம்
குளிர்கொடியன குழைமாதவி குவிமுகையன கொகுடி
ஒளிர்கொடியன வுயர்திரளிணை டொழுகினரன வோடை.

சுனை.

2178. சுரையாழ லம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.

ஓடைமுதலியன.

2179. ஓடையே யோடையே யோடையே யோடையே
கூடற் பழனத்துங் கொல்லி மலைமேலும்
மாறன் மதகளிற்று வண்பூ தருதன்மேலும்
கோடலுங் கொல்லைப் புனத்துங் கொடுங்குழாய்
நாடி யுணர்வார்ப் பெறின்.

நீர்த்துறை.

2180. தோடு கொண்டளி மூரன்றெழக் குடைபவர் குழல்சோர்ந்த
தோடு கொண்டதே மலர்சுமந் தகில்கமழ்ந் தவர்தந்
தோடு தைந்தசெஞ் சாந்தணி திரண்முலை யிடைதோயத்
தோடு தண்புன னித்திலந் துறைதொறுஞ் சொரியும்.

அந்திமாலை.

2181. விரிந்த மதிநிலவின் மேம்பாடும் வேட்கை
புரிந்த சிலைமதவேள் போரும்—பிரிந்தோர்

(2177) யாப். வி. 16. (2178) ஷே. 59. (2179 ஷே. 51. (2180) தண்டி யலங். 93, மேற். (2181) ஷே. 62; வீரசோ. அலங். 26, மேற்.

நிறைதளர்வு மொக்க நிகழ்ந்தனவா லாவி
பொறைதளரும் புன்மாலைப் போது.

சேவ்வானம்.

2182. பண்டி புரமெரித்த நீயே படர்ந்தின்றும்
அண்ட முகடு தெருப்பரு—தொண்டளிர்க்கை
வல்லி தழுவக் குழைந்த வடமேரு
வில்லி நுதன்மேல் விழி.

சந்தீரகளங்கம்.

2183. பெரியோ ருழையும் பிழைசிறிதுண் டாயின்
இருநிலத்துள் யாரு மறிதல்—தெரிவிக்கும்
தேக்குங் கடலுலகில் யாவர்க்குந் தெள்ளமுதம்
வாக்கு மதிமேண் மறு.

நிலா.

2184. திங்கள் சொரிகிலவு சேர்வெள்ளி வள்ளத்துப்
பைங்கிள்ளை பாலென்று வாய்மடுப்ப—அங்கயலே
காந்தர் முயக்கொழிந்தார் கைவறிதே நீட்டுவரால்
வந்திழையார் பூந்துகிலா மென்று.

சூரியோதயம்.

2185. வேலை மடற்றுழை வெண்டோட் டிடைக்கிடந்து
மாலைத் துயின்ற மணிவண்டு—காலைத்
துளிநறவந் தாதெதிரத் தோன்றித்தே காமர்த்
தெளிதிற வெங்கதிரோன் றேர்.

2186. பிறர்செல்வங் கண்டாற் பெரியோர் மகிழ்வுஞ்
சிறியோர் பொருத கிறமும்—அறிவுற்றிச்
செங்கமல மெய்ம்மலர்ந்த தேங்குமுத மெய்யயர்ந்த
பொங்கொளியோன் வீறெய்தும் போது.

(2182) வீரசோ. அலங். 25 மேற். (2183) தண்டி. 83. (2184) வீரசோ. அலங். 25, தண்டி. 54, மேற். (2185) வீரசோ. அலங். 17, மேற். (2186) ஷி. அலங். 32; தண்டி. 83, மேற்.

2187. இரவிடை மதிய மென்பா ணுடிப்போய் மறையு மெல்லே
விரியிரு ளெழினி நீக்கி விசும்பெனு மரங்கு தன்மேற்
கரைகடன் முழவ மார்ப்பக் கதிரெனுங் கைகள் வட்டித்
தெரிகதி ரென்னுங் கூத்த ஞவொ னெழுந்து போந்தான்.

2188. காமரு தேர்வெய்யோ னெங்குங் கரம்பரப்பித்
தேமரு சோலை மலர்திறக்குந்—தாமரையின்
தொக்க விதழ்விரித்துப் பார்க்குந் தொலைந்திருள்போய்ப்
புக்க புரைகிளைப்பான் போல்.

சூரியசந்திரர் கிரகணங்களாற் பீடிக்கப்படல்.

2189. விண்ணவரின் மிக்கு விளங்கொளியான் மேம்பட்டு
மண்ணவர்க்குங் கண்ணிய வான்கதிர்கள்—கண்ணெதிரே
பற்றித் திருளடையும் பாரிலொன் ருனவினைப்
பற்றத்தை யாவர்கடப் பார்.

சூரியாஸ்தமனம்.

2190. புறந்தந் திருளரியப் போன்னேமி யுய்த்துச்
சிறந்த வொளிவளர்க்குந் தேரோன்—மறைந்தான்
புதவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இதவாது வாழ்கின்றூர் யார்.

கார்.

2191. புனையும் பொலம்படைப் பொங்குளைமான் றிண்டேர்
துனையுந் துணைபடைத் தின்னூர்—முனையுள்
அடன்முகந்த தானை யவன்வாரா முன்னங்
கடன்முகந்து வந்தன்று கார்.

2192. வியன்ஞாலஞ் சூழ்திசைக ளெல்லாம் விழுங்கும்
அயலாத் துணைநீத் தகன்றூர்—உயிர்பருகும்
விண்கவரும் வேரிப் பொழில்புதைக்கு மென்மயில்கள்
கண்கவரு மீதெழுந்த கார்.

(2187) வீரசோ. யாப். 3, மேற். (2188) தண்டி. 56. (2189) வீரசோ. அலங். 20, மேற். (2190) தண்டி. 47. (2191) பத்துப்பாட்டு. முல்லைப் பாட்டு, பக். 210. (2192) தண்டி. 40.

2193. எல்லைநீர் வையகத் தெண்ணிறைந்த வெவ்வுயிர்க்குஞ்
சொல்லரிய பேரின்பந் தோற்றியதால்—முல்லைசேர்
தாதலைத்து வண்கொன்றைத் தாரலைத்து வண்டார்க்கப்
பூதலத்து வீழ்ந்த புயல்.

2194. மின்னிருக்கச் சாடி விழுத்துவலை மும்மதமா
முன்னுருமிக் கோசை முழக்காகப்—பெண்ணுருவ
வார்மென் முலையார் மனக்கோட்டை மேல்வருமே
கார்மேக மென்னுங் களிறு.

கார்காலம்.

2195. சோலை பயிலுங் குயின்மழலை [1]சோர்ந்தசைந்த
ஆலு மயிலினங்க ளார்த்தெழுந்த—ஞாலங்
[2]குளிர்த்த முகில்கறுத்த கோபஞ் சிவந்த
[3]விளர்த்த துணைபிரிந்தார் மெய்.

2196. நீயின்றி வேந்தமியோர் சிந்தை செழுந்தேறல்
வாயின்றி மஞ்ஞை மகிழ்தூங்கும்—வாயிலா
ரின்றிச் சிலரூட நீர்ந்தா ரிகலின்றிக்
கன்றிச் சிலவுகோக்குங் கார்.

2197. நிழற்கோப மல்க நிறைமலர்ப்பூங் காயா
கழற்கலப மேல்விரித்த தோகை—தழற்குலவு
தீம்புகை யூட்டுஞ் செறிகுழலார் போலுங்கார்
யாம்பிரிந்தோர்க் கென்னு மினி.

2198. அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா
செவிழ்ந்தன [4]நேர்முகை மல்லி—மகிழ்ந்துடன்
வீண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டன காந்தள் குலை.

2199. நிரையா நிரையா மணிபோனிறை கோடல் கோடல்
வரையா வரையா மிருண்மூன்வரு மாலை மாலை

(2193) தண்டி. 58. (2194) வீரசோ. அலங். 35, மேற். (2195) ஷெ. ஷெ, 31; தண்டி. 80, மேற்; பிரயோகவிவேக. 37 உரை. [1]சோர்ந்தடங்க. [2]குளிர்த்த. [3]விளர்த்த. (2196) ஷெ. ஷெ. 24; தண்டி. 50, மேற். (2197) தண்டி. 30. (2198) ஷெ 41; பிரயோகவிவேகம், 39. உரை. [4]சோரிதழ். (2199) தண்டி. 93, மேற்.

விரையா விரையா வெழுதின்னெரி மேக மேகம்
உரையா வுரையா ரிணமொல்லன முல்லை முல்லை.

சோழன்பாட்டு.

2200. காந்து மகிற்புகையுங் கத்தூரி யும்புழுகுஞ்
சாந்து மிகநாறுந் தாழ்குழலும்—வந்துதனைத்
தோளோடு தோளிறுகத் தோகையு முண்டாமால்
நாளோ மழைநா ணமக்கு.

பாண்டியன்பாட்டு.

2201. பாவடிக்கு மெல்லணையும் பச்சைவட மும்புகுய
பூவடிக்கு மென்குழையும் பூவையருந்—தாவடிக்க
ஒன்றே மொழியு முயிர்த்தோ ழனுவருமால்
நன்றே மழைநா ணமக்கு.

சேரன்பாட்டு.

2202. பொரிப்பு நறுநெய்யும் போனகமுந் தேனும்
பருப்பு நினை சர்க்கரையும் பாலும்—விருப்பமுடன்
வாளோ டணையுவிழி மங்கையு முண்டாமால்
நாளோ மழைநா ணமக்கு.

இளவேனில்.

2203. இரங்கு குயின்முழவ வின்னிசையாழ் தேனு
வரங்க மணிபொழிலா வாடும் போது மினவேனில்
அரங்க மணிபொழிலா வாடி மாயின்
மயங்கொண் மணந்தகண்ணூர் நெஞ்சமெண் செய்த தினவேனில்.

2204. இன்னினவேனி லென்பது
தண்ணிழ லறல்யாற் றடைகலைத் திறைதொறும்
இலங்கு மூலைக்க ணேய்ப்பக்கோங் கலிழ்த்தி
வண்டுதா தூதுத் தண்டளிர்க் காவிற்
பருமல ருதிர்த்து முருகுகமழ் பரப்பின்
மண்வயிறு குளிர்க்குர் தண்ணறுங் கயத்தி
நிழலிரு ணெடுவ ணழலவிர் தாரைத்

(2200—202) தஞ்சைச் சரச்சுவதிமால்—பிரதி. (2203) யாப். வி. 52, 76, மேற்; வீரசோ. யாப். 16; ஷெ, அலங். 20, 3; நன்னூல்; 413, மயிலை நாதருரை. (2204) தொல். பொருளதி. 664.

தாள்கறித் தருந்தும் வாளையிற் றிளமீன்
புள்ளுக வெறிய வெள்ளென் றுபிறழும்
பளிங்குநெகிழ்ந் தன்ன தெளிங்காத் தெண்ணீர்
தளிர்குடைந்து தெவிட்டிய குயில்குனிந்து குடிப்ப
மரவந் தாழ்ந்த கரைமரச் சாரற்
றேனூறு தேறல் வேனற் கண்ணும்
வாரார் கொல்லென நீர்வார் கண்ணெனு
புலம்புடை மகடூஉக் கலங்கஞ ரொய்த
யாறுங் குளனுங் காவு மாடி
ஒருயிர் மைந்தரு மகளிருங் களிப்பக்
காம விழவொடு கன்னியர் சோற்ப
நிலவுஞ் சாந்தும் பலவயிற் பாயன்படத்
தண்பக் காலந் தடைத்தனர் பெறூஉம்
இன்பக் கால மென்மனுர் புலவர்.

2205. கொங்கை மூகையாக மென்மருங்குல் கொம்பாக
ஐங்கை மலரா வடிதளிராத்—திங்கள்
அளிநின்ற மூவ லணங்கா மெனச்சு
வெளிநின்ற வேனிற் றிரு.

2206. செந்தா மரைவிரியத் தேமாங் கொழுந்தொழுக
மைந்தா டீசோக மடலவிழத்—தொந்தா
ரிளவேனல் வந்தசா லெண்ணுங்கொ லின்று
வளவேனற் கண்ணி மனம்.

2207. அருணை மாஞ்சினை கறித்திட னகன்பொழி
லலவணைக் குயில்கூவத்
தருண வேனிலுர் புகுந்தது தணுகெகத்
தடமலர்ச் சரபுங்கங்
கருண மூலமோ [1]டுறினைறைத் திலங்கினன்
கறைமிடற் றிறைநாட்டக்
கிரணர் தான்சுடக் கிரியிடைத் திருவுடம்
பிழந்தழல் விழவோனே.

2208. ஊனுடை யுழுவையி னுதிரந்தோ யுகிர்போல
வேனிலை யெதிர்கொண்டு மூசுக்கெல்லா மரும்பினவே.

(2205) தண்டி. 35, மேற். (2206) சிலப். பக். 229. (2207–208) யாப. வி, 94; [1]டுறினைறைத் திறைஞ்சினன்.

தென்றல்.

2209. கனிகொள் பொழிலருவி கைகலந்து சந்தின்
பனிவிரவிப் பாற்கதிர்க்க டோய்ந்து—தனியிருந்தோர்
சிந்தை யுடனே யுயிருணக்குந் தென்மலயந்
தந்த தமிழ்மாரு தம்.

2210. இவளளவுத் தீயுமிழ்வ தென்கொலோ தோயும்
கவள மதமான் கடத்திற்—றிவளும்
அலையார் புனலருவி நீயணுகா நாளின்
மலையா மலயா நிலம.

2211. வரிவண்டு நாணு மதுமல ரம்பாப்
பொருவெஞ் சிலைக்குப் பொலிவும்—பிரிவின்
விளாக்கு நிறமுடையார் தம்மேன் மெலிவும்
வளர்க்கு மலயா நிலம்.

2212. குரவார் குழலாள் குவிமென முலைதாம்
விரவா விரவாமென நென்றல்—உரவா
வரவா வரவா மெனவினையாய் வையம
புரவாளர்க் கீதோ புகழ்.

2213. சென்ற லனங்கள் நுணைபாற் சிலகொம்பா
மன்னற் றலைசூழ வான்பொருண்மேற்—சென்றவர்க்குச்
சாற்றவிடுத் தூதாருந் தங்கு பெருபுலவி
மாற்ற வருவிருந்து மாம்.

இறுதி வேண்டுகோள்.

2214. ஓரா யிதழுதினே னுபிணு மொண்பொருளா
ஆராய்ந்து [1]கொளவ றிவுடைமை—சீராய்ந்து
[2]குற்றங் களைந்து குறைவெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

பெருந்தொகை முதற்றொகுதி

முற்றும்.

(2209) தண்டி, 58. (2210) செ. 93. (2211) செ. 40. (2212) செ. 93. (2213) செ. 38. [1] கொள்வறிவுடையார்,

ஸ்ரீ:

பெருந்தொகை

விசேடக்குறிப்பு.

1. இப்பாட்டு அயன் அரன் அரி என்னும் திரிமூர்த்திகளுடைய இடம், கொடி முதலியன இன்னவென்று நிரனிறைவகையாற் கூறியவாறு. வாய்மை. நிறைமொழி; அஃதாவது—'அருளிக்கூறினும் வெகுண்டுகூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழி' (குறள். 28, பரிமே). கண்ணன், கரியோன் என்ற பொருளில் வந்த பாகதச்சிதைவாய்த் திருமாலுக்கு வழங்கும் பெயராகும் (திசிசிற்றம்பலக்கோவை, 53, பேரா.). இவ்வாறன்றி யாவர்க்குங் கண்ணகவுள்ளவன்' எனினும் ஆம்; "யாதினு மூயர்ந்தோர் தன்னை யாவர்க்குங் கண்ண னெனறே—ஓதிய பொருட்டுத் தானே யுறுபொரு ளுணர்த்தி விட்டான்" என்றார் கம்பநாடரும் (கம்பரா உலாவியல். 6.). அகஷிணீ புருஷன் என்பதைக் கடவுட்குவழங்கும் பெயரும் இப்பொருள்பற்றியதென்பர்.

2. 'கந்தழியாவது, ஒருபற்றுமற்ற அருவாய்த் தானேநிற்குந் தத்துவங் கடந்த பொருள்' என்பர் நச்சினார்க்கினியர். [கந்து - பற்றுக்கோடு, அழி - கடந்தது].

3. தேவர்ப பராவுதலுடைய பாட்டைப பாணி என்பர் (சிலப். 6, 35, அடியார்க்.). (வரி-1) மணி-நெனத்துபட. (2-3) "வரிசிறைத் தும்பியுங் கிளைகளும வினங்கி...மலைமார் மேக மறைதி போல" (சிலப். 11, 43—6) எனச் சக்கரக்கருடன்கூடிய திருமாலுக்கு இளங்கோவடிகள் கூறிய உவமை இங்கு ஒப்பிடற்பாலது. (9) 'எவ்வுயிர்க்கு முயிரோ யியக்குதல்' என்றது, விஷ்ணு சப்தத்தின் பொருளை விளக்கியவாறு; 'வியக்கிதவ்குஞ் சென்றமையால் விண்ணுறுவுமாய்' என்றார் பிறரும் (பெருந்தொகை. 170). பகலிரவு படைப்பது எனவியைக்க. பகலிரவு - முகூர்த்தநாள். 'மூவருவாகிய தலைபிரியொருவனே' (பரிபா. 13, 37) என்றவாறு, திருமால் முக்குணங்களின்வேறுபாட்டால் மும்மூர்த்திகளாகின்றும் தொழிலடத்துதல் மூன்றுதாழிசைகளாலுங் கூறப்பட்டது. (29) பாலநிறவண்ணன் - பலபத்திரன். (31) ஆல் கிழற் கடவுள் - கல்லாலின்கீழ் முமர்த்தியான தக்ஷிணாமூர்த்தி. முனிமை - முனிதன்மை; 'முனிமை முகடாய மூவா முதல்வன்' (சீவக. 1609) எனக் காண்க.

4. நீலகேசிக்காப்பு. பிறப்பாதி நான்கு - பிறப்புப் பிணி மூப் பிறப் பென்பன (குறள். 266, 362, 370, பரிமே.). 'பிறந்தது மூத்தது மிணப்

பட்டிருக்கலும் - இறத்தலு முடையது' என்பது மணிமேகலை (18, 136–8). 'உயிரின்பம்' என்றும் பாடம்.

7. அரி - திருமால், இந்திரனும் ஆம்.

8. திருமால் உலகளந்தஞான்று நான்முகன் மீகாஞ்சுகவும், சுராதி(- கங்கை) பாயாகவும், அரிதிருத்தான் கூம்பாகவும், புயி நாவாயாகவும் தோன்றியது என்பது கருத்து. மேதினி நாவாயம் பொலிவிற்று என இயையும்.

9. இது பொய்கையாழ்வார் அருளிய முதற்றிருவந்தாதியின் 92-ஆம் பாசுரமாகும். ஆன் ஆயன் - பசுமேய்க்கும் இடையன். 'வாஞ்சித் தீயாய்' 'ஆஞய்ச்சி' 'மூன்ஞாநாள்' என்பன திவ்யப்பிரபந்த பாடபேதங்கள்.

10. ஆய்ச்சியின் நோக்கம் நின்றநிலையை இனிப் பெறுவது என்றுகொல் என இயையும். கஞ்சனுல் வஞ்சப்பட்டு விளாமரத்தின்வடிவுகொண்டு, கண்ணன் தன்கீழ்வரும்போது அவன்மேல் விழுந்துகொல்லக் காத்திருந்த கபித்தாசுரனையும், அவ்வாறே தன்னை முட்டிக்கொல்லும்பொருட்டுக் கன்றுவடிவுடன் வந்த வற்சாசுரனையும் ஒருசேர முடித்தற்பொருட்டு அப்பிரான் அக்கன்றின் பின்னிரண்டுகால்களையும் பிடித்தெதித்துச சுழற்றி விளவின்மேல் எறிய அவ்விருவடிவினரான அசுரரும் ஒருங்குமாய்ந்தனர் என்பது புராண வரலாறு.

11. மா பிளந்து என்க. மா - குதிரைவடிவான கேசி என்ற அசுரன்; 'மா வாய் பிளந்தான்' என்பது திருப்பாவை. படை - ஈண்டு யானைமருப்பு. அதனைப் பறித்தென்க. " யானையின்கொம்பினைப பறித்து " என்றார் ஆலிநாடரும். (பெரியதிருமொழி, 4,2, 4). இனம் - ஆனிரை; 'நுனங்காப்பார்' (கலித். 143) என ஆயரை வழங்குவதுங் காண்க.

12. சேர அழித்துக் கோடு ஊதி என்க. சேர - வாணன் நகரான சோணிதபுரம். கோடு - சங்கம். பூகொண்டு - பூதலபியை வராகரூபியாய்க் கோட்டினிடைக்கொண்டு எ - று. அமிழ்தை ஆக்கி, நஞ்சைக் கண்டு நீக்கினான் என்க.

13. மதவேழம் - கஜேந்திரன்; அதனைக் காத்தானும் என்க. வாய்மருப்பு-குவலயாபீடத்தின் தந்தம். எழில் வறு என்பது கண்ணர்க்கு அடை. குரவைச்சீர் கொடுத்தான் என்க. குரவை - மகளிர் எழுவரேனும் எண்மரேனும் கைகோத்தாடுங் கூத்து. சீர் - தாளம்.

14. (1) உரைபதி - உத்திதாமரை. (5) மறுவை வித்திய மார்பு என்று சொல்லும்படி; 'பொன்னிற் றோன்றிய புனைமறு மார்ப' (பரிபா. 4, 59), 'திருமறு மார்பன்' என்ப. (6) நிறத்தோடு நெஞ்சொத்த - உள்ளும் புறம்பும் ஒரு

தன்மையளாய. (9) 'அன்னமாய் முன்ன மருமறை பயந்தான்' என்பது பெரியதிருமொழி. (10) 'முதன்மயங்கி வெறியாகி' என்றும் பாடம். (14) கோள் நாகம் மதிவாங்கிக் கொடுத்தருளி என்றது பாம்பின்வாயினின்று சந்திரனை மீட்டுக்கொடுத்த கதையை; 'மதிகோள் விடுத்தாய்' (நான்முகன் திருவந்தாதி. 12), 'தேம்ப லிளந்திங்கள் சிறைவிடுத்து' (பெரியதிருமொழி, 11, 8, 7) என்று பெரியாரும், 'கோள்வாய் மதிய நெடியான் விடுத்தாங்கு' எனப் பிறரும் (சீவகசிந்தி. 454) கூறல் காண்க. (14, 15) பிறர்காணுத மயர்வறு மதிநலத்தை அடியவர்க்கு அருளும் என்க. (21) நால்வகை உரு - சங்கருடண பிரத்தியும்ந அநிருத்த வாசுதேவர் என்ற நான்கு வியூகங்களை. (பரிபா. 3, 80–3).

15. (2) கடல்கெழுகணைசுடர் - வடவைக்கனல். அரிமாவாய் (3) மார்பிடந்த (6) எனவும், மலர்ந்தானை (3) மார்பிடந்த எனவும் இயையும். (7) மதுரை–வடமதுரை. (18) ஏழு மலி பெருந்தெழு - தாதெரு மன்றம். (சிலப். ஆய்ச்.) தண்சுடர் உறுபகை தவிர்த்தது, மேற்பாட்டிற் குறித்த மதிகோள்விடுத்தகதையை. (36) 'தொன்று மூதிர் கடலுலகம்' என ஏழ்த்தடி மூச்சீராகவும் பாடம் (தொல். புறத்திணை. 27, இளம்பூ.). (35) அசீகுநன் என்பான், 972, 974-ஆம் பாடல்களிற் கண்ட அசீகுதநீதி, அன்றி 1002, 1005-ஆம் பாடல்களிற் கண்ட அசீகுதகளப்பாளன் என்ற அரசருள் ஒருவன் போலும்.

17. முதலடியுள் நீர்க்கு அங்கை எனவும், நான்காமடியுள் நஞ்சு அங்கு எனவும் பிரித்துப் பொருள்கொள்க. தாளால் கங்கை ஏற்றது திரிவிக்கிரமாவதாரத்தில்; 'சதுமுகன் கையிற் சதுப்புயன் முளிர் சங்கரன் சடையினிற் றங்கி யிழிபுனல்' என்ப (பெரியாழ். திரு. 4, 7, 3). சலம் - பகை. தாயலான்–பூதனை. தானவரை - மதகீர் பொழியும் மலையையொத்த குவலயாபீடம்; அது தன்னைக் கொல்லநெருங்கத் தான் அதனைக் கொன்றவன் எனவும் இன்னிர்தம் தன்னுவார் பெற ஆக்கித்தந்தவன் எனவும் பொருள்கொள்க.—*[பி. தானவரைத்—தி. தானவரை].

19. கூத்தர் முதன்முதற் சோழனைக் காணவந்தபோது அவரது புலமையைச் சோதிக்கவேண்டி 'அரியைப் பாடுக' என்றுகூற, தாம் அரசனைப்பார்த்த முதற்கண் திருமால் அவன் வாயினின்று அங்ஙனம் வந்ததனையே வியந்து 'ஆரே எனும் ஒன்று சொல்லத்தொடங்கினும் அவ்விடத்து உன் பேரே வரும்' என்று அவன் கொடுத்த விஷயத்தையே திருப்பி அழகுபெறப்பாடி அரசனை யினரை மகிழ்வித்தனர் புலவர் என்பர். எனும் - எதேனும். இதனைக் கம்பர் வாக்காக இக்காலத்தார் மாறிக் கருதுவர்.

---

* பி, தி.–என்பன பிழை திருத்தம் என்பவற்றைக் காட்டும் குறிப்பெழுத்துக்களாகக் கொள்க.

20. கருணாகரன் - இராமபிரானுக்கு ஒரு திருநாமம்; இலங்கை யெறிந்த கருணாகரன்' எனச் சயங்கொண்டாரும் (கலிங்) "வருணவயத்தை வழிவேண்டிச் சரணகமாகக் கிடந்த கருணாகரப் பெருமாளையும்" (இராமாநுஜார்யதிவ்ய சரிதை, பக். 64) எனப் பெரியோரும், 'கருணையங்கடல்'(இராமா. வருணனை-5) 'கருணையார்கலி' (ஷே. குகப். 69) எனக் கம்பநாடரும் கூறுதல் காண்க.

21. இது நாராயணசதகத்துள்ள அழகிய பாடல்களுள் ஒன்று.

23. நாமம் ஒதித் தரிக்க என்க; 'ஈராறு நாம மூரைசெய்து மண்கொடிவோர்கள் காணு மிமையோர்' என்றார் வில்லிபுத்தூராரும்.

25. "தீமேவு திருமலையி லஞ்சாயன் மயிலாடு நிலைகுருடர் காணவறுகால், நிரையிம் மெனப்பாடி யிசைசெவிடர் வினவவிந் நீர்மைகண் டேமை புகழ" என, முத்தமிழ்க்கவி வீராகவமுதலியார் பாடிய திருவேங்கடந்தான் பதிகப் பாடற் பகுதியுடன் இஃது ஒப்பிடற்குரியது.

26. மூட்டம் - ஸ்ரீமுஷ்ணம். பன்றி - வராகரூபியான திருமால். துப்புவலிமை.

29. திருமழிசையாழ்வாரது அடியாரான கணிகண்ணர், தன்னேப்பாடும் படி வற்புறுத்திய கச்சிவேந்தனேநோக்கித் திருமாலைச் சிறப்பித்துக்கூறிய பாட்டாகக் குருபரம்பரைகள் கூறும். வெஃகாவிற் கிடந்தான், பாடகத்திருந்தான், ஊரகத்து நின்றான் என எதிர்நிரனிறையாகக் கொள்க. இம்மூன்றும் கச்சியைச் சார்ந்த திருமால்திருப்பதிகளாம். பஞ்சரம் - திருவண்ணுழிகைப்பகுதிக்குச் சிற்பநூல் கூறும் பெயர்; கோஷ்டபஞ்சரம், கும்பபஞ்சரம் என்ப. [திருவண்ணுழிகை - கருப்பக் கிருகம்; 'மாடக்கோயி லுண்ணுழிகையார்' (தேவா. 592, 3) எனச் சிவபிரானேப் பெரியோர் வழங்குதலுங் காண்க.] 'எவ்வாறகன் றெழிவார்' என்றும் பாடம் (நன். 413, மயிலேநா.)

30. அத்திகிரி - கச்சியில் தேவப்பெருமான் திருக்கோயில்கொண்ட தலம். முதலேக்கண் (அஃது) இற(- சார) மேவுவது அத் திகிரி(- சக்கரம்) என்க. தான வரை - மதகீர் பொழியும் மலேபோன்ற குவலயாபீடம். தன் றெழிலால் அழிப்பதும் தானவரை (- அரக்கரை) என்க. எயிறு, முன்னது யானைத்தந்தம்; பின்னது வச்சிரதந்தம்.

31. பொன்னன் - இரணியன். கா - பாரிசாதத் தரு. அத் தேவதரு சத்தியபாமைபொருட்டுக் கருடன்மேலேற்றிக் கண்ணபிரானுல் மண்ணுலகிற் கொணரப்பெற்றது என்பது வரலாறு. அப் பாமையையே நப்பின்னே என்பது இது பாடினேர்கருத்தப்போலும். நடலை - நடுக்குசெல்லுகை.

32. வருக்கு - வருக்கம், இனம், ஒப்பு.

34. பணித்தற்பம் - அரவாகிய அணை.

35. 'மாயோன் பரிசு' எனத் திருத்தித் திருமாலியல்பு கூறியவாறுகக் கருத்துக் கொள்க.

36. ஆதிரை - சிவபெருமானுக்குரிய திருநாள் ; " தானா லாக்கன்றேன் சாய்த்த தலைமகன்றன், நானாதிரை யென்றே " (தேவா. திருவாமாத். 8, சம்.) 'ஆதிரைநாயகன்' (ஷே. பொது. ஆதிபுராணத் திருக்குறுந். 1) 'ஆதிரை முதல்வன்' (பரிபா. 8, 6) என்ப.

37. இயமானன் - ஆன்மா. [பி. தண்டி. 74.-தீ. தண்டி. 73)

39. கங்கையாகிய தலையாடை யுடையவன். மேருவாகிய தன்கையில் வில் அம்பாக அமர்ந்த திருமால் என்க. 'இழவு கெடுத்தான்' என்ற பாடம். இழவு - துக்கம்.

40. சிவபிரானது மிடற்றில் ஆலம் அமிர்தாகியது, மொழியாலோ ஒலியாலோ என்க. மாதர் - அழகு. இருதிறன் - ஆண் பெண் உருவம் ; உரு அரு எனினுமாம். [பி. தண்டி. 63.—தீ. தண்டி. 62]

41. கொடியவரது கொடிபொருந்திய மதில். படி - தன்மை. கடி ஆர் உரி - அச்சந் தங்கிய யானைத் தோல். கனம் கரியார் என்க.

42. கடி - காவல். இரவோடு நிற்பித்தது - இரந்துநிற்கும்படிசெய்தது. 'நான்மேலோர் ஆமைபூண்டார்' (தேவா. பந்தணைநல். 1, அப்.) என்பதனால், ஆமை சிவபிரானணிகளுள் ஒன்றுதல் காண்க.

43. வேனிலான் - காமன்.

44. (1) என்பு பூணுகும்படி. (2) கோன் நாகம் - தீங்கிழைக்கும் பாம்பு. (3) மாண் ஆகத்தில் (- மார்பில்). (6) ஆர்வம் - பத்தி. (11) மனைமாண்ட பாகம் - தேவியால் மாட்சிமைப்பட்ட இடப்பாகம்.

45. கால் வீழ்த்த - தன்னிடத்தினின்றும் வீழச்செய்த ; இல்லையாம்படி. போக்கின எனினுமாம். பச்சைப் படாம் - பசிய தோலாகிய போர்வை ; மேற் போர்வைக்குப் 'பச்சைவடம்' என்ற வழக்குண்மையும் (ஈடு 4, 8, 2) அறியத்தக்கது (பெருந்தொகை-2201). இடா மூண்ட - இடம் அகன்ற ; விகாரம். மூண்டம் - திரட்சி. சடையானது வெண்ணீற்றை அணிந்தால் என்க. நான் கடிச் செய்யுள் மூடியவும் ஈற்றடியிரண்டுமிக்கு வேறுபடவந்த கொச்சகத்துக்கு இப்பாட்டை மேற்கோள்காட்டினர் நச்சினர்க்கினியர் (சீவக. 653, உரை) 'கால் வீழ்த்த' என்றும் பாடம்.

46. (2) பைத்தலை - படமுன்ன தலையுடைய பாம்பு. (4) இதழி - கொன்றை. இதழியுடன் பிறை தலைமலிந்து தயங்க என்க. (6) [பி. உணர் வழியா.–தி. உணர்வழிய]. (7) கடற் கச்சி - கடல்வளமுழுதுமுடைய காஞ்சி; 'கச்சி கடல்படுவ வெல்லாம் படும்' என்ப (பெருந். 2128); கடல்போல் ஒலி மிக்க கச்சி எனினும் ஆம். (8) ஒலிதல்-தழைத்தல்; 'வாசொலி கூந்தல்' (சிலப். பதிகம், 50) எனக் காண்க. மூலைச்சுவடு - நீர்ப்பெருக்குக்கஞ்சித் தன்னைத் தழுவிய தேவியின் தனக்குறி. உருவழிந்தோன் உணர்வழியவும், உடன்சிறப்பவும் உலவுங்கால் என்க. (10) கடைதோறும் - மனைவாயிலிடந்தொறும். (22) தொடிக்கை பரிகலமேந்துமனவு நிலைகடந்ததுபோலும். பொழில் - உலகம். (26) அது - அவ்வேறு. (31) எழீஇயது - இசை எழுப்பப்பெற்றது. (34) மகளிர் - தாருகாவனத்து இருடிபத்தினியர்; அவர் இட்டுரைக்கும் நிந்தைகளை விரும்பி. (36) கொடியில் எழுதப்பட்ட பன்றி மண்ணிற் புழுதி படிந்துகிடக்க என்றது, தம் வராகத்தவசம் மண்ணிடைவீழ்ந்து புழுதியாடும்படி சளுக்கரசர் தோற்க என்று. சளுக்கர்க்கும் சோழர்க்கும் 10, 11-ஆம் நூற்றாண்டுகளில் நடந்த போர்களுள்ளே இம்மீது இன்னதைக் குறிப்பது என்று துணிய இடமில்லையேனும், 'வடதிசை வாசை சூடித் தென்திசை, வென்றிவாய்ந்த...வளவன்' என்றதனால், சளுக்களுடைய ஆகவமல்லன் முதலியவரை வடபால் இருமுறைவென்று அவர் தலைநகரைப் பிடித்தும் தென்னாடு முழுதும் தன்னடிப் படுத்தும் போந்த சோழன்—இராசகேசரிவர்மன் - இராசாதிராசன் (கி. பி. 1018—1052) என்று கருதற்குப் பொருத்தம் உண்டு. (மே சோழன் மெய்க்கீர்த்தி காண்க—இந்நூல், பாட்டு. 783). வேங்கடம்(39)போல வாழிய(41) என இயையும். (40) நாவலந்தீவினதாகிய தமிழ்நாடு என்க.

49. கல்வித்துறை - சத்துவநெறி.

51. மஞ்ஞை கோன் - சிவபிரான்; 'பூண்முலை மஞ்ஞை கோன்' என்பது சேர்பாடம்போலும்.

54. (1) எரியினிறத்தை இகழ்வது போன்ற நிறத்தன்; 'வன்ன நிறத்தன்'–என்று பிரித்து, அழகிய நிறத்தன் என்றும் ஆம். (2) பொன்னூர் - யாவராலும் அழியாத திரிபுராதியர். (4) காடு - சுடுகாடு. (6) விழவு - கொண்டாட்டம். (7) சொன்றை - கையுதிக்கை; "கையதோர் சொன்றையான் செல்காட்டங் குடியான்" (தேவா. செல்காட்டன். சம். 8) எனக் காண்க. (8) ஈரணி - ஆண் பெண்ணணிகள்; 55-ஆம் பாடல் நோக்குக. (10) மாறேற்றல் - மாறுபடுதல். (12) காலக்கடவுள் - காலர்க்கெல்லாங் காலனை வெபிரான்; 'காலகாலா' என்ப (தேவா. திருவண்ணாமலை. அப். 6). 'மிருத்தியுக்களிலே சங்கரன் யான்' என்ற கீதாவசனமும் "கூற்றைத் தீயே மாற்றருஞ் சிற்றம்" என்று

அழித்தற்றொழிலுடைமையான் – மணிமிடற்றோனைக் கூற்றமாகக் கூறியதும் அறியற்பாலன. (புறம். 56). [பி. சிறந்தை.–தீ. சிரந்தை; பி. மாறோர்க்கும்.–தீ. மாறேற்கும்.

57. மன்று - சிற்றம்பலம். பெற்றம் - இடபம். [பி. அழகு பெற்றம்.–தீ. அணிகொள் பெற்றம்; பி. திருவடிச் சிலம்பே.—தீ. திருமறைச் சிலம்பே.]

59. பத்திரித்து அகட்ட - வரைகளுடையதாகிய வயிற்றினையுடைய. துத்தி - பொறி. கவை நா - பிளவுபட்ட நா. ஆகம் - மனம்; 'ஆகத் தெழுகனல் கண்வழியுக' என்றார் கம்பநாடரும் (கம்பரா. காட்சிவதை. 97). பணிகள் அகட்டிடற்ற எயிற்ற என்க.

60. வண்டு, சூழ்தல்முதலியனசெய்து அருந்தும் என்க. வீழ்ந்த பெரும் பாசத்தார் - பெரும்பாசம் வீழ்ந்தவர்; மலமற்றவர் என்றபடி.

61. உளர்தல் - சிதறுதல்; 'வண்டுளர்ந்த தார்' (சீவக. 707) என்புழிப் போல; அசைத்தல் எனினுமாம்; 'கூந்தல் வரைவளி யுளர' (புறம். 133) எனக் காண்க.

63. இஃதாவது ஒருபொருண்மேல் ஒன்றுய் ஈற்றடியிக்கு இரண்டாமடி குறைந்து வெண்டளையிரண்டும் ஒத்துவந்த சிறப்பில் கலித்தாழிசை என்பர் யாப்-விருத்தியுடையார். இதனை, மூன்றடியின்றியே 'மூன்றடியான் வந்து இடையடி குட்டம்பட்ட கொச்சகவகை' என்றும், 'கந்திருவமார்க்கத்தான் இடை மடக்கி நான்கடியுமாம்' என்றுங் கூறுவர் பேராசிரியர்.

65. கூற்றுவனை என்பது முதலியவற்றை ஏற்றலகின்புறக் காற்றொழிலால் ஊற்றழிய உதைத்து என்றவாறு; ஒவ்வோரடியினும் முறையே ஏற்றபடி வினையவற்றுடனும் கூட்டி நிரனிறையே பொருள்கொள்க. இமயப் பெண் வெருவக் குஞ்சரத்தை உரித்தமை—"வாட்கண்ணி வாட்டம தெய்த, அம்பர வீருரியாளும்" (தேவா. திருவாரூர். 'பாடினம்' அப். 4) "கொடுங்கரிக் குன்றுரித் தஞ்சுவித் தாய்வஞ்சிக் கொம்பினையே" (திருவாசகம். நீத்தல். 19) என்பவற்றுல் உணர்க.

66. திருக்கைலாயஞானவுலாவில் இப்பாட்டைச் குறிப்பிட்டு "என் றெழிலுடைய வெண்பா விரித்துரைக்கும் போழ்தில்" என்று சோமான் பெருமாணுயனுர் அருளியவாறு காண்க. இவ்வெண்பாவைப் பிரயோகவிவேக நூலார் தம்நூலுள் மேற்கோள்காட்டுதலால், அவ்வாறு தனிப்பாட்டாகவும் இது முன்பு வழக்குப்பெற்றிருந்தமை புலப்படும்.

67. விழி புரமெரித்த தீ என இயையும்.

69. மருளாம் மருள் ஆதரித்து உரைக்கும் மாற்றம் - ஆசையாகிய மயக்கத்தினை மேற்கொண்டு அடியார் கூறும் அறிவழிந்தசொல். "கோழைமிட றுகவி கோளுமில வாகவிசை கூடும் வகையால் - ஏழையடி யாரவர்கள் யாது சொன சொன்மகிழு மீசன்"என்ப (தேவா. திருவைகாவூர். சம். 1).

70. பொருள் விளைத்தது ஒன்று - பொருள் விளைத்தற்குக் காரணமான முயற்சி. ஆர்த்தல் - பொருந்துவித்தல்; ஈண்டுத் தேடிக்கொள்ளுதலாம்; 'ஆத்த' எனவும் பாடம்.

72. இது, விளுவுத்தரம் என்னும் சொல்லணிக்கு மேற்கோள். திருவேகம்பம் என்ற பெயரை திரு, வகு, அம்பு, அம் எனப் பிரித்துப் 'பூமகள்யார்' என்பதுமுதலிய விளுக்கட்கு விடையாக்குக.

73. நன்மையமைந்த பெருமைபெறல் வேண்டி இருசாணங்களையும் எத்தும் நம் குலத்தவர்காங்களைப் பணிகொள்ளும் ஏகாம்பரத்தன் (ஏக + ஆம்பரத்தன் = ஒற்றைமாவின்கீழான்) என்க. நலத்தகை மகள் - நற்குணம் அமைந்த உமாதேவி. கூட்டத்தகுதியுடைய பாம்பால் மேலே அலங்கரிக்கப்பட்ட ஏகாம்பரத்தன் (ஏக + அம்பரத்தன் = ஒற்றை ஆடையுடையவன்) என்க. 'நண்ணுமே' என்றும் பாடம் (இலக்கணவி. 688, உரை).

74. மூக்கால்-மூப்பிற் கொள்ளுங் கோலொன்று கூட்டி மூன்று கால்கள். முன் நரையில் என்றும், அக் காலரை (= யமதூதரை) என்றும் பிரித்துப் பொருள்கொள்க. மா காணி - மயானம்.

76. இதழ்முயற்சியாற் பிறக்கும் எழுத்துக்கள் வாராமற் பாடப்படும் நிரோட்டம் என்னுஞ் சொல்லணிக்கு மேற்கோள். கச்சாலை - கச்சபேச்சுரம்.

77. இவ்வெண்பா எல்லாவடியும் முதல்நடு இறுதியாகச் சொல்லினும் பொருள் கொண்டுநிற்கும் ஆசிரியமண்டிலவிருத்தத்துக்கு மேற்கோள். வெள்ளம் (= கங்கை) பரக்கும் எனவும், வெள் அம்பு (= மொட்டம்புகள்) அரக்கும் (= அழுத்தும்) எனவும் பிரித்துக்கொள்க. தனையடைந்தார் செல்லும் நெறியையுடையவன் என்றது அவரை நற்கதியடைவிப்பவன் என்று. தனையடைந்தார் செல்லும் நெறியானவன் எனினும் ஆம்; "நெறிவாசல் தானேயாய் நின்றானே" இயற்பா. முதல் திருவந். 4) என்ப. நெறிக்காரை - கார் நெறியை: இருண்மயமான நரகவழியை என்று.

78. இது திருச்சிராப்பள்ளிக் குன்றின் குடைவரையிற் பொறிக்கப்பட்டதும், வேம்பையர்கோன் - நாராயணன் என்பவரால் 104-கட்டளைக் கலித்துறைகளிற் பாடப்பட்டதுமான அந்தாதியின் 40-ஆம் செய்யுளாகும். (S. I. I. IV, No. 167). [பி. வன்ற கிளி.—தீ. எனற்கிளி].

79. பிரசம் - தேனீருல். 'பனைக்கை புகமடுக்கும்' என்றும் பாடம்.

80. பங்கு அம்புலி - பிறைச் சந்திரன்.

(81, 82.) இவ்விரண்டும் சோழன்முன்னிலையிற் கூத்தரும் புகழேந்தியும் பாடியன என்பது, "நூலார் கலைவல்ல" என்ற தொண்டைமண்டலசதகச் செய்யுளான் அறியப்படும்.

81 ஆவி உக்கு எனவும், (பொருளைப்) போய்த் தேடி இல் வைப்பீர், சேவித்து நிற்பீர் எனவும் இயையும். அக்கு - எலும்புமாலை; அப்பு - கங்கைநீர். தீ - வலக்கை மழுத்தீ. காணம் - மயானம்.

82. துன்பம் விளைக்கும் பாசத்தில் தம்மை அகப்படுத்துக்கொண்டு உய்யும்வழி தேடாமல் இறப்பதற்கே உடலொடுநிற்பீர். முற்கோலிக் கோலிச் சேவித்து - முற்பட முயன்று தொழுது. பாரச்சேல் - பருத்த சேல்மீன். சேல், கழுநீரில் எறித் தாவிப்போய் நெல்லின்தாளில் உற்று அதனினின்று கரும் பாலைப்பாகிற் சேரும் என்க.

83. (1) 'சாலநல கவரியுள' (2) 'வரிமறி கொடியுமுள' (5) 'இனவரால்' (6) 'திருவையா றடையநந் தீவினைகள் கெடுமே' என்பன பிரதிபேதங்கள். (5) 'காவிரியின் றென்பால்' என்பது 'காவிரியின் வடபால்' என்றிருத்தற்குரியது போலும், வெண்காடும் ஐயாறும் அவ்வாற்றின் வடகரைக்கண்ணவாகலான்.

84. அகலியை இராமபிரான் திருவடி தீண்டப்பெற்றுச் சாபவிமோசனம் பெற்றகாலத்துக் கௌதமர் தேவூர்க்கு வந்து அங்குவாழும் தேவூர்வேளின் பொற்கலப்பையைத் தீண்டி அனேக நெல்விளைத்து, வந்தவர்க்கெல்லாம் அமுதளித் துபசரித்தனர் என்ற கதை வழங்குவதென்பர். தேவூர் - கீழ்வேளூர்க்குத் தெற்கே 2-மைலில் உள்ளது (சோழமண். சதகம். பக். 29–30).

85. புரஞ்சீறிய வெங்கணை - திருமால். கணைக்கு ஆவம் ஆற்குழையோ ...தம்பமோ என இயையும். தம்பம் - நரசிங்கமூர்த்தி அவதரித்த தூண். மாற்கருமாகிநின்றார் - மார்க்கசகாயர். இப்பாட்டு, இரட்டையர் பாடிய திருவாமாத்தூர்கலம்பகத்துள் ஒன்றாகும். அக்கலம்பகத்தை இரட்டையர்பாடி ஒருநாளிரவில் அரங்கேற்றியபோது இப்பாடல்வர, பம்பையாற்றுக்குக் கீழ்க் கரையிற் கோயில்கொண்ட சிவபிரானைப் 'பம்பை மேற்கரைக் கோயில்கொண்டார்' என்று புலவர் பாடியிருப்பதைக் கேட்ட சபையோர், 'பாடியவர்க்குக் கண்ணுங் காதும் இல்லாமற்போயினும் கேட்பவர்க்கும் அவை இல்லாமற் போகவில்லை' என்று அசதியாடி எழுந்துசென்றனர் என்றும், அங்ஙனஞ் சென்றவர் பொழுதுவிடிந்ததும் ஆற்றங்கரைக்கு வந்துபார்க்க, அன்றிரவில் உண்டான பெருவெள்ளத்தால் ஆற்றின்கதி முற்றும் மாறி மேற்கரைக்கோயிலாகவே

இருத்தல்கண்டு, முன்னுளிரவிற் கேட்ட புலவர்வாக்கின் தூய்மைக்கு வியப்பு மேவப்பும் அடைந்து அவரை யாவரும் போற்றிப் புகழலாயினர் என்றும் சரித்திரம் வழங்குகின்றது. தமிழ்நாவலர்சரிதையில் 'ஆறு விலகிய பாட்டு' என்று காணப்படும் தலைக்குறிப்பும் காண்க.

86. சுணை, சோணை மரூஉ. நடுநாடு - மகதைநாடு. நாணம் - மானம்.

87. காளை - திருக்காணப்பேர் (காளையார்கோயில்).

88. வீரட்டம் - வீரட்டானம் [வீரஸ்தானம்]; சிவபிரான் தன் வீரச் செயல்களைக் காட்டிய தலம் எ-று. பூமன் - பிரமன். புரம் - திரிபுரம். மாமன் - தக்கன். மா - யானை. [பி. சயந்தரன்.—தி. சலந்தரன்; பி. வெறுக்கை.—தி. கொறுக்கை].

89. திருவாரூர் முதலிய ஏழும் ஸ்ரீ தியாகராசமூர்த்தங்களையுடைய தலங்களாதலின் 'ஸப்த விடங்கஸ்தலம்' எனப்படும். விடங்கர் - தியாகராசர். இத்தலங்களின் மூர்த்திகள் முறையே வீதிவிடங்கர், அழகவிடங்கர், நகரவிடங்கர், புவனிவிடங்கர், ஆதிவிடங்கர், நீலவிடங்கர், அவனிவிடங்கர் என்ற திருநாமங்கள் பெறுவர். (திருவாருலா. 61-ஆம் கண்ணி, அரும்பதவுரை).

95. இஃது விநாயகருக்கும் மலைக்குஞ் சிலேடையாய் 'இன்பந்தரும்' என ஒருவினைகொண்டு முடிந்தமையால் ஒருவினைச்சிலேடை. 'அம்பொற் பிணைமுகத்தத் திண்கோட்டு அணிநாகம்' என்ற தொடரை—'அழகிய பொற்பு அணை(=அலங்காரம்பொருந்திய) முகத்தில் திண்ணிய கொம்பினையுடைய நாகம்' (=யானை)' என விநாயகர்க்கும், '(பொன் பிணை=) அழகிய மூங்கில் பொருந்திய இடத்தினையும் திண்ணிய சிகரங்களையுமுடைய நாகம்' என மலைக்கும் பிரித்துப் பொருள்கொள்க. வம்புற்ற தோடை—(யானைக்கு) புதுமை கொண்ட நெற்றிப்பட்டம்; (மலைக்கு) மணம்பொருந்திய நீர்நிலை எனக் கொள்க.

96. இது பரிதிநாராத்திருமுறையுள் கபிலதேவநாயனார் அருளிச் செய்த மூத்தகாளஞ்திருவிரட்டைமணிமாலையின் தலைப்புச்செய்யுளாகும்.

98. புறத்திரட்டால், இரும்பலிகாஞ்சி என்ற நூலகத்தின் காப்புச் செய்யுளாக அறியப்படும் இப்பாட்டு, நளவெண்பாவின் பாயிரப்பாடல்களுள் ஒன்றாகச் சிலராற் பதிப்பிக்கப்பட்டுள்ளது. கொண்மூ (=மேகம்) மயிற்கும், காய்கதிர் முருகற்கும், இருள்சீதகதல் சூர்வென்றமைக்கும் உவமைகள். நெற்றி-உச்சி; "நீணிறக் கொண்மூ நெற்றி மூன்கும் - வானிற வனர்பிறை" என்பது பெருங்கதை (1, 41, 74). நிழல் காறி – நிரணத்தொடு தோன்றி.

100. (6) அறுவர் - கார்த்திகையாகிய மகளிர் அறுவர்; 'அறுவர் மற்றை யோரும்' (பரிபா, 5, 45,) என்ப. அகடு ஊறு அருந்தமுது எனக்கூட்டுக. (8) ஈர் உருவத்து ஒரு பெருஞ்சூர்' என்பதற்கு 'இருவேறுருவி னொருபேரியாக்கை' (திருமுரு. 57) 'ஈரணிக்கேற்ற வொடியாப்பருவத்துச் சூர்' (கலித். மருதம்) என்புழி, நச்சினார்க்கினியர் கூறிய பொருள் கொள்க. சூர் மருங்கு - சூரபன்ம னது குலம் (திருமுரு. 57). (10—14) விலையொழிகாலம் - உயிர்கள் செய லற் றொடுங்குதற்குக் காரணமான ஊழிமுறுதி. எயிற்கோலத் தனைவரும் - கொடிய சூலம்பிடித்த கோலங்கொண்ட யமபடரெல்லாம். முக்காண்கு உருவிற் கண் சுட்டன என இயையும். [பி. முன்ஞான்கு.—தி. முந்நான்கு] (17) மணிக் கம்பலம் - செவ்வாடை. (18—19) தார்கள், கடம்பன்றேர் சுற்றுதல்தவிரா என்க. [பி. தார்க்கடம்பன்.—தி. தார்கடம்பன்] (27) முருகியம் - முருகற் குரிய வெறியாட்டில் முழக்கும் குறிஞ்சிப்பறை (தொல். அகத். 18. நச்.). (38—42) 'நின்னீதக்க தாயினும்...எமக்கே' - நின்னுல விலக்கத்தக்கதாயினும் யாமறியாவகையின் தமிழ்புனைந் தேத்துதகம், கடம்பு மயில் நீர் முதலிய அஃறிணைச்சாதிகளும் நின்பாலவர்தன வன்றோ? நின் எதிர் நாணிலமாய் வணங் கற்கும் அடைதற்கரிய புலமை எமக்கு வருதற்கும் அருள் புரிக' எனக்கூட்டிக் கருத்துகொள்க. மார் - அசை (தொல். எழுத். 186, பதிற், 59).

102. இம்மூ இரண்டடியெதுகைவருதற்கு மேற்கோள். இரண்டா வது நாகம் ஒருவகை மலைமரம்; 'மலைமிசை நீண்ட கோழரை நாகம்' (சீவக. 524) என்ப. பிறங்கன்மா - யானை; மலையிலங்குமாம். இறை - சக்தியாகிய சிவபிரான். காமம் - கதிர்காமம்.

103. தாயர் - செவிலி முதலியோர்; அவை (அவ்வை) - நற்றாய்: இவர் கன்முன் என்க. மயிற்பெருமானே!(=மயிலரசே!) தாயரைமுன் வருத்தும் சக்திரனெழுச்சியை உன்வாயிற்கையிய அரவைவிட்டு நீக்காயோ என்க. தீயர் அவை - கொடியரான அசுரர்குழுவை. [பி. தீயரவைச். - தி. தீயரவை] ஆயில் - வேல். தமிழ்நாவலர்சரிதையுள், முன்றொடர்பினை நோக்குமிடத்து இப்பாடல் புகழேந்தியாவுக்காகக் கந்த இடமுண்டு.

104. இம்மூ அக்கரசுதகம் என்னும் சொல்லணிக்கு மேற்கோள்; அஃ தாவது, ஒருபொருண்டயப்பதோர் சொற்கூறி அச்சொல்லில் ஒரோர் எழுத்தாக நீக்க வேறுவேறுபொருள் பயப்பதாம். கண்டி எடுத்துக்கொண்டசொல் கண காரி; அதன் முதலெழுத்தை நீக்க நகாரி என்றும் அதன் முதலெழுத்தைநீக்க காரி என்றும் ஆயின. கணகாரி - இரணியற்குப் பகைவனான திருமால். நகாரி - மலைக்குப் பகைவனான இந்திரன். கடர் - நரசிங்கமூர்த்தி. பொய்கை பயந்த அண்ணல் - சரவணபவனான முருகன். 'சிற்றுயன்...செம்மல்' - திருமால் மோகினிவடிவாகிப்பெற்ற ஐயனார்.

105. யாப். வி. 55, மேற்; புறத்திரட்டு.

106. சீவக. 580, உரைமேற்; 'செய்யானே' என்ற பாடத்துக்குச் சிவபிரான் முருகக்கடவு ளிருவருள் ஒருவரைக் கூறியதாகக்கொள்க.

108. அமரி (- துர்க்கை), மலையும் (-கயிலையினும்) அலையும் (- பாற்கட லினும்) உறையும், கலை (- சந்திரனை)யும் வேயும்; கலை (- மானை)யும் கடவும்; குமரி அரி (-சிங்கத்தின்) மேற்கொண்டு முன்னிற்கும் என்க.

109. கலைக்குமரி - கலைமானூர்தியுடைய பகவதி. அரியேறு உகைப் பான் - சிங்கவேற்றை ஊர்ந்துசெலுத்துவான்.

111. கரை உருமேறு - பெருமையினையுடைய இடியேறு; 'வரையுதிர்க்கு நரையுருமின்னே றனைய' என்பது மதுரைக்காஞ்சி; வெள்ளிய உருமேறு எனினுமாம். கடற்புறஞ்சூழ்மலை - சக்கரவாளகிரி. மைம்மேனி மருங்கு, அரி யேறு மேகத்திடைப்பிறந்த உருமேறதிசயிப்ப அதிர வால்புடைப்ப—எனக் கூட்டிப் பொருள்கொள்க. படிவத்தாளுகிய நெடியோன் என்க. நெடியோனே முதுமறை பாவினும் என இயையும். "தேவுமெப்பொருளும் படைக்கப் - பூவி னன்முகனைப் படைத்த - தேவ" ஞாலின் முதற்பயந்த தாயென்று திருமாலே வேதம் புகழலாயிற் றென்க.

112. (4—6) பொன்வரைமேல் மின் எழுந்தாங்குக் கலைமானூர்தியை யுடையோய் என்க. [பி. வெய்துறுமி யெழுந்தாங்கு. - தி. வெய்துறுமினெழுந் தாங்கு] (11) கூளி - பேய்ப்படை. (13—14) மூன்கைக்கிளியையும் எடுக் கும் வலியற்ற மாழைமை (- இளமை). அப்பொறியணை - அந்தத் திரட்சி பொருந்திய பஞ்சணை. பொறி - திரட்சி (நெடுநல். 13); ஒளியுமாம் (பெரும் பாண். 448). அவுணவீரரை நோக்கி, நின் மருங்குலதளவு மாழைமை தோளின் றண்மைகளையும் நோக்குமிடத்து, அண்ணாந் நினக்குத் தோற்றாரெனல் மாயமும் மருளும் ஆம் என்றவாறு. (20). துடுப்பிற்காந்தள் - மடலுடைய காந்தள்; காந்தண்மடல் முன்கைக்கும் அதன் முகை விரல்களுக்கும் உவமையாதலை "காந் தள்...துடுப்பெனப் புரையுநின் றிரண்டநே ரரிமுன்கை" (கலித். 59) 'காந் தண் முகிழ்விரல்' (பெரும். 2, 19, 201) என்பவற்றா லறிக. (30—31) வாழை முகிழை 'வாழைக்கூம்புமுகிழன்ன வீங்கிள வனமுலை' எனப் பிறரும் தனத்துக்கு உவமையாக்குதல் காண்க. (பெரும். 4, 11, 74—75). (36) சேடகம் - சேடம் (தொல். அரி. 159). சேடு - அழகு (சீவக. 1223).

114. கண்ணுடையம்மை - வெகுண்டசிவை காட்டரசன்கோட்டையிற் கோயில்கொண்ட துர்க்காதேவி; கண்ணுத்தாள் என்று வழங்குவர். இத்தலத் தில் இவ்வம்மையருளால் அவித்தகொல்லுலைப்பதை இன்றும் காணலாம் என்பர் (சேதுநாட்டுத் தமிழும், பக். 9).

115. இப்பாட்டு, தொல்காப்பியம் புறப்பொருள்வெண்பாமாலை முதலிய வற்றி னுரைகளிற் காப்புச்செய்யுளாகப் பதிப்பிக்கப்பட்டுளது.

118. பொத்தகம் - சுவடி. பளிங்கு - படிகமாலை. வண்ணிகை - எழுது கோல், வர்ணிகா என்ற வடசொற்றிரிபு.

119. இது சாக்கியவதியந்தாதியின் காப்பாகும். அவ்வந்தாதி கூத்தர் வாக்கென்றுகருதுவாரும் உண்டு.

122. திருமால் உலகளத்தற்கு வளர்ந்தருளியகாலத்து, மேல்விளங்கிய சூரியன், அப்பெருமான் வளரவளர அவனுக்கு முடிமணிபோலவும் திலதம் போலவும் கவுத்துவம்போலவும் படிப்படியே தாழ்ந்தனன் என்பது கருத்து.

124. (2) மூரற்சி - இசை (மதுரைக்காஞ்சி. 217). (3) ஆர் - சக் காக்குறட்டுக்கும் சூட்டுக்கும் இடையமைந்த கதிர். (4) 'சேயிழை' என்று பாடங்கொள்க. பாற்கடற்பூத்த தாமரைமலரின் இதழில் வெளிப்பட்ட சேயிழை (=திருமகள்) என்க. "ஸ்ரியாம் றிரண்மயீம் லக்ஷ்மீம்" "ஆதித்யவர் ணே" என்று சூரியவர்ணமுடையவளாகத் திருமகள் வேதத்துட் கூறப்பட்ட வாறே, ஈண்டுத் திருமகள் சூரியற்கு உவமையாயினள் என்க. தீங்கல், எதிர் மறைவியங்கோள். மார் - அசை (பதிற்றுப். 59, உரை).

126. வள்ளி - தண்கதிர்மண்டிலம் என்பர் நச்சினார்க்கினியர்.

127. கடலாகிய தாய் செருக்குறுதற்குக் காரணமான மதலை (=தழவி) என்க; "தாய்வா யடைந்து மிருந்தலையை மோதிமோதிச் சலித்தலறக் காய் வாய் நிலவே" என்றார், சிவப்பிரகாசமுனிவரும் (பிரபுலிங். பிரபு. வங். 57.). மதிக்களங்கத்தை முயலென்றல் கவிமரபு (சீவக. 254). இறையவன் - சிவ பிரான். "சந்த்ரமா மனஸோ ஜாத:" (புருஷஸூக்தம்) "எங்கண் மாதவ னிதயமா மலர்வரு முதயத் திங்கள்" (வில்லி-பாரதம்) என்பவற்றால், சந்திரன் பிறப் பிடங்களுள் திருமால்மனமும் ஒன்றுதல் காண்க. உதிதன் - தோன்றியவன். 'கயிரவ மலர்த்து மணிணே' என்பது நேர்பாடம்போலும்.

130. 'தமோறி' 'பற்றற்றேன்' என்பன பாடபேதங்கள் (சீவக. பக். 916, மூன்றும் பதிப்பு).

132. மாகதம் - அர்த்தமாகதீ பாஷை. மஹாவீரர்காலத்துவழங்கியதும் சைனாகமங்கள் எழுதப்பட்டதும் இப்பாஷையே என்பர். இம்மொழியை "மூவற மொழிப்பொதுமையொருமொழி" என்பர் திருக்கலம்பகமுடையார் (109).

137. யாப். விருத். 95; இது நான்காரைச்சக்காரத்துக்கு மேற்கோள்.

138. இது, மண்டலமயக்கந்தாதிக்கு மேற்கோள்.

139. "சித்திரக்காவாவது, நான்கு கூடினவெல்லாம் பத்தாகவும் மூன்று கூடினவெல்லாம் பதினைந்தாகவும் பிறவாற்றானும் வழுவாது பாடுவது; இப் பாட்டு, இரண்டு நான்குகூடினவெல்லாம் பத்தாகிய சித்திரக்கா. இதனைச் செவ்வே நான்குவரியுமெழுதிப் பின்னை ஈறுமுதலாக எழுதுக." என்பர் யாப் பருங்கலவிருத்தியுடையார்.

140. "எழுகூற்றிருக்கையாவது—எழுதையாக்கி முறையானே குறுமக்கள் மூன்னின்று புக்கும் போந்தும் விளையாடும்பெற்றியான்வழுவாமை ஒன்று முதலாக எழிறுதியாக முறையானே பாடுவது" (யாப்.வி. பக். 498; வீரசோ. அலங். பக். 197). (1) இருதுணிபு - ஒருபொருட்கு ஒருபோதே உண்மையும் இன்மையுங்கூறும் முடிபு; இதனை அநேகாந்தவாதம் என்ப. (2) மூவமிழ்து - நற்காட்சி நன்ஞான நல்லொழுக்கங்கள். (3) ஈரறம் - யதிதர்ம சிராவகதர்மங்கள். (4) இருநெடுங்கண் என்க. (5) மூவகையுலகு - நாகம், சுவர்க்கம், பூமி. நால்வகைத்தேவர் - பவணர், வியந்தரர், சோதிடர், கற்பவாசியர். (7) இரு வினை - காதி அகாதி கர்மங்கள். மூவெயில் - காமம் வெகுளி மயக்கங்கள்; 'மூன்று கடிமதிலுங் கட்டழித்த காவலன்' (சீவக. 1245) எனக் காண்க. (8) நாற்கதி - தேவ மனுஷ்ய நாரக திர்யக் கதிகள். (9) நான்மறை - பிரதமானுயோகம், கரணானுயோகம், சரணானுயோகம், திரவ்யானுயோகம் என்பன; 'வேத நான்கும் விரித்தோய் நீ' (மேருமந். 807) என்ப. மும்மதில் - உதயதரம், பிரீதிதரம், கல்யாணதரம் என்பன. (10) இருகுணம் - உண்மையும் இன்மையும். மும்முறைவலஞ்செய்தல் மரபு; (சிலப். 11. 105). [பி முருகயர்வுயிர்க்கும்.—தி. முருகயாவுயிர்க்கும்] நால்வகை அனந்தம் - அனந்த சதுஷ்டயம் (சீவக. 2846, உரை). ஐவகை வீழவு-பஞ்ச கல்யாணம்; ஸ்வர்க்காவதரணம், மந்த்ராபிஷேகம், மஹாப்ரஸ்தானம், கேவலோத்பத்தி, பரிநிர்வாணம் (திருநூற்றந். 4). அறுபொருள் - சீவம், புற்கலம், தர்மம், அதர்மம், ஆகாசம், காலம் என்பன (திருக்கலம்). எழுநயம் - ஸப்த பங்கிநியாயம்; 'எழுநயம்பயந்த பிண்டியாய்'என்றார் உதிசிதேவநும் (திருக் கலம்.). ஈம்பதம் - பஞ்சமந்திரம்; ஆவன:—அ, வி, ஆ, உ, ஸா என்பன. அறு பிறவியை - அற்ற பிறவியினையுடையாய். கதிரொளிமண்டிலத்தினை - பிரபாவலயமூன்றினையும் உடையாய்; 'செஞ்சுடர்போனின்றிலங்கு மண்டிலத்தினையே' என்றார் திருக்கலம்பகத்தும். விகதி - பரிநிர்வாணம்.

141. கூடசதுர்த்தமாவது—நான்காமடியெழுத்துக்கள் எனையமூன்றடிகளுள்ளும் மறைந்துநிற்குமாறு பாடப்படுஞ் சித்திரகவியாம்; கூடசதுக்கம் எனவும் வழங்குப. வினைகள் புதர்போன்மண்டிக் காற்றடிக்கப்போய் நாகத்தில் வீழ்வதற்கஞ்சி, 'என்சிந்தனை அடிக்கு ஆனாயொழிந்தது' என இயையும்.

142. கினபாதம், திருமுடிமேலும் போதினும் உறும் என்க. கருவிளைப் பூவை அலைக்கும் கண்ணையும் வாயையுமுடைய சித்தியாகிய திரு எ-று; "அறிவன் காதற் பெருங்கிழத்தி...பிறழா முத்திநாயகி" என்ப (திருக்கலம். 101).

143. வட்டினம் - வண்டினம். அரம்தை - பிறவித்துன்பம்.

144. மலர்ப்புயல் - பஞ்சாச்சரியங்களுள் ஒன்றாகிய புஷ்பவர்ஷம். புரிதல் - விரும்புதல். ஈரம் - அன்பு. [பி. மலர்.—தீ. மலர்ப்.]

147. அனகத்தான் - குற்றமின்மையையுடையான்.

148. இது வலையாபதிக் காப்புச்செய்யுளாகும் (புறத்தீராட்டு).

149. 'அலர் சோதியான்' என்றும் பாடம். வினைக்காதி - காதிவினை (152-ம் பாடற்குறிப்புப் பார்க்க).

151. அங்கம் எனப் பெயரிய ஆதிநூல விரித்த சினவேள் என்க.

152. காதிகர்மங்கள் - ஞானவரணீயம், தர்சனவரணீயம், மோகனீயம், அந்தராயம் என்பன.

153. இந்திரர் - தேவர்; "இந்திர ரமிழ்த மியைவதாயினும" (புறம்-182) "இந்திரார்க்கும் புகழ்வரிதே" (சீவக. 173) எனக் காண்க.

154. "சூடையொன்ற தொன்று மதன்மேல தொன்று முடையார்க்கு" என்ற 160-ம் பாடற்றொடர் ஒப்பிடத்தக்கது. கடி மதில் - மும்மதில்; (140-ம் பாடற்குறிப்புப் பார்க்க).

155. "பதினெண் மொழியு நிதமு மதரமுமாய்—முழங்குங் கலைமகள் காந்தர்கண்டீர்" என்றார் திருக்கலம்பகத்தும் (6).

157. ஒழுகு - ஒழுங்கு. மகுடமுறப பணிபவரான நரபதிகள் மலியும் நகர், செழுமை வழுவாது எனக் கூட்டுக. குரிசில் - தலைமை.

158. இது சூளாமணி கல்யாணச்சருக்கம் 213-ம் பாட்டு; தெய்வஞ்சுட்டிய வரிப்பாட்டில், கூடைச்செய்யுட்கு மேற்கோள் (சிலப். 7. பக். 205; 3. பக். 111.). 'தொழலணங்கு மனமுடையார்' 'வீழ்களிப்புஞ்' என்பன பாடபேதங்கள்.

159. "இவ் வெழுசீராசிரிய முதலாகவுடையவற்றில்.....நாலசைச்சீர் வந்தன பிறவெனின், 'அகத்தியனூர் ஆணையினூற் செய்யப்பட்ட நூல்களெல்லாம் வகையுளி சேர்த்துக' என்பதனூற் 'போற்றிவீச' என்பதனையும் 'ஆசனத்தின்மேல்' என்பதனையும் வகையுளிசேர்க்க மூவசைச்சீர் என்பதாம்" என்னும் யாப்பருங்கலவிருத்தித் தொடர் அறியற்பாலது. அங்கம் - அங்காகமம்.

160. 'மணிமாலை போத' 'மாகமுறைநீள்' என்பனவும் பாடங்கள். மற்றச் சமயதெய்வங்கட்குப் படை அணி சுற்றம் இவை உண்மையாகிய குற்றங்களுள்ளன என்று பழித்தவாறு.

161. சோதிமண்டலம் - அருகபரமேஷ்டியைச்சூழ்ந்துள்ள ஆலோகம், பிரபாமூர்த்தி, கனப்பிரபை என்ற மூச்சோதிகளும்; 'வளைத்தவெம் மூவெளியான்' (8) 'இலங்கொளி மூத்தேசன்' (71) என்றார் திருநூற்றந்தாதியினும் காதிவினைகளை 15-ம் பாடற்குறிப்பிற் காண்க.

163. இது பதின்சீர்க்கழிநெடிலடியாண்வந்தசெய்யுட்கு மேற்கோள். அங்காகமம், பூர்வாகமம், பகுசுருதியாகமம் என்பன.

164. இது நாறபதுமூன்றடியாண்வந்த அளவியற்குண்டகத்துக்கு மேற்கோள். கண - தன்னுடைய. தலைவரதன் எலப் படங்கொண்டு முதுநிச்சென்வாளிப்பவை எனினும் ஆம். இவை தலைவராலுடைய பெருமைகளாகும்; அவனருளிய பரமாகமத்தினைத் தெளிரும் (=தெளிமின்); மாழியுளவில் நற்கதியிறல் உறுதி என்க.

165. (5) பொன்னெயில் - சமவசரணம். வெள்ளில் - பிணப்பாடை. (9) பன்னிரண்டுகணங்கள் இன்னவென்பது திருநூற்றந்தாதி, 58-ஆம்பாட்டினை பார்க்க.

166. (3) திருநகர் - சமவசரணத்துள்ள இலையம். (12) 'கருவரை போல்' 'நின்மினி னெனவுணர்த்தல்' என்பன பாடபேதங்கள். பொருதுதல் - பொருந்துதல். (35—37) 'சங்கசக்கரங்களையுடைய திருமால் வேண்டப் பூமியை அளித்த நந்தி' என்பதனால், ஈண்டுக்கூறப்பட்ட அரசன், மகாபலியின் மரபினனான பாணவமிசத்தவனும், ஆந்திரதேசத்துக்கு மேல்பக்கத்து நாட்டை ஆண்டவனுமான ஜயநந்திவர்மன் ஆகலாம் என்று தோற்றுகின்றது.

167. (4—5) "மறவாழி யிமையவரு மாதவரும் புடைசூழ - அறவாழி வலனுயரி" என மூன்னும் (169, 3—4) வருதல் காண்க, 'அறவாளி' என்னும் பிரதிபேதம். நயம்-ஸப்தபங்கிநியாயம். இயல்ஞானமுதலியவற்றில் வரும் இயல் என்பவை 'ஸம்யக்=நல்ல' என்ற பொருள்பெறும்.

168. (6) ஒளிவட்டம் - இறைவனைச்சூழ்ந்து வினங்கும் பிரபாவலயம் முதலியன; 'சுற்று மொளிவட்டஞ்சூழச் சோதிபரந்து' என்றார் பெரியாரும் (தி. பெரியாழ். 4, 3). (10) ஒளிவட்டம் - சக்கரான். ஊர் - பரிவேடம். (11) குறடு - சக்கரத்தின் நடுக்குடம். சூட்டு - ஆரைச்சூழ்ந்த வட்டை. ஆரம் - ஆர். (20) நீத்தக்கு - நீத்தத்துக்கு; விகாரம். (22) இருதுணி ஒருபொருட்கியல்வகை - அசேகாந்தமுறை. (26) ஒருத்தல் - யானை. 'கடுநாகமதலடக்கி' (162) என

மேல்வந்த தொடரோடு ஒப்பிடுக. [34. பி. பூமியுடீ.–தி. பூமிடீ.–(37) பி. பெருவகை. - தி. பெருவரை. (39) பி. விண்ணவன். - தி. விண்ணன்] 182-ம்பாட்டிலும் விண்ணன் என்பான், ஜினபத்தனுகச் சிறப்பிக்கப்படுதல் காண்க.

169. (2) பி. உடைமையா.-தி. உடையையா. (6) பி. முனையவர்கள்.–தி. முனைவர்கள். (15) பி. அடர்ந்தோய். - தி. அடர்த்தோய்.

170. (2) 'இன்பத்தால்' என்பதனுல் சங்காசப்தமும், (4) 'விரிந்தெங்குஞ் சென்றமையால்' என்பதனுல் விஷ்ணுசப்தமும், (5) 'நான்மையினும்' என்பதனுல் சதுமுகசப்தமும் பொருள்விளங்கநிற்றல்காண்க. (5) ஆரிடம்நான்மை - நான்கு ஜினவேதங்கள்; (140-ம் பாடற்குறிப்புக் காண்க.) 'திரிவில்லாச் சார்வுற்ற நான்மை' - அனந்தசதுட்டயங்கள். (7) இருத்தி - சித்தி (மணி. 26, 61; சூடா. நி.—2, 4). (12—13) கறுத்து எரித்ததூமம் எனக் கூட்டுக. (15) தமர்கெல்லாம் எனத் திருத்துக. (20) பி. சைவகைமுகை.–தி. சைவலமுகை. (25-) போருறுதகையன...மழை - போர்புரிவதுபோன்ற தன்மையினையுடை...மழை; 'சார்ங்க மூதைத்த சாமழைபோல் வாழவுலகினிற் பெய்திடாய்' என்ற ஆண்டாள்திருவாக்கு ஒப்பிடத்தக்கது. போர்த்தலுறுந் தகையன எனினும் ஆம்.

173. (4) கதழ்ந்து - மிகுந்து; 'கதழொளி' (சீவக. 1749) என்புழிப்போல; வேகமாக, சிறப்பாக எனினுமாம்; "கதழ்வுவேகமுஞ் சிறப்புமாகும்" என்பது தீவாகாம். (10) பொன்புனை நெடுமதில் - சமவசரணத்தைச் சூழ்ந்துள்ள மும்மதில்; 'குமரிமூ வெயில்சூழ் கோயில்' என்றார் திருக்கலம்பகத்தும் (75). திருப்பாமாலை என்ற நூலில் 'ஆருகதபக்தி' என்ற தலைப்பின்கீழ் உள்ளபாடல்களில் இம்மை ஒன்றுகக் காணப்படுகின்றது.

177. இதற்கு 'அவிநயனுர் காட்டிய பா' என்ற குறிப்புக் காணப்படுகின்றது. தாழியுள் கீலம் - தாழியில் வளருங் குவளை (சிலப். 4, 64). எல், ஓர் அசைகன்.

178. குரு - ஒளி. எயில் - பொன்னெயில்வட்டம். செப்பியேன் திருந்தடி புனையெனத் தொழ என்க.

179. இலிழ்தருதல் - ஒலித்தல். அருவிநீர் மாலைபோல் தோன்றும் உச்சந்தம் எனவும், உரைபுக வாழ்த்துவாம் எனவும் இயையும். உச்சந்தம் - வட

நாட்டிற் சைனர்க்குச் சிறந்ததலமாகிய ஊர்ஜ்ஜயந்தகிரி; "உலகளந்தமுகில்வண்ணன் மருவுநீல வுச்சந்த மலைகுறுகி" என்றார் திருக்கலம்பகத்தும்.

180. இப்பாட்டுத் தீபங்குடிப்பத்து என்ற *பதிகத்தின் மூன்றாஞ்செய்யுளாகக் காணப்படுகின்றது. தீபங்குடி என்ற பெயர்கொண்ட ஊர்கள், திருவாரூர்ப்பக்கத்தும் திண்டிவனப்பக்கத்தும் உள்ளன. அபயன் - முதற்குலோத்துங்கன் (கி. பி. 1070—1118). 'அறவுந் தவிர' 'கோபங் கடியும்' என்பன பாடபேதங்கள். அறநூல்செய்தார் - அருகக்கடவுள்.

181. பழையாறு கும்பகோணத்துப்பக்கத்துள்ளதோர் ஊர்; இது சோழர்க்குரிய தலைமைநகரங்களுள் ஒன்றென்பது சாஸனங்களால் அறியப்பட்டவாறு, முதலிரண்டடிகளும் குறிப்பிதல் காண்க. 'ஏறையர்கொடியின்' என்பதனால், இவ்வூர் பல்லவர்க்குரியதாயிருந்தமை விளங்கும்; ஏறை - இடபம்; 'விடைவெல்கொடி...பல்லவர்கோன்' (பெரியதிருமொழி, 2, 9, 6) என்பதனால் இடபத்துவசம் பல்லவர்க்கு உரியதாதல் காண்க.

182. சேதிகம் - சைத்தியம்=சைனப்பள்ளி. 'செதியம்' என்றும்பாடம். (1) 'கடல்யானை' (4) 'சேதிகத்துளே யிருந்தவண்ண லாரடி' (6) 'தொடர்ந்து நின்ற வெவ்வினை' என்பன பாடங்கள். பழசை - பழையாறு. விண்ணன்—சோழசேனபதி; 168-ம் பாடலிற் 'செங்கோல் விண்ணன்' என்பான் இவனே போலும்.

183. பாங்குன்று - திருப்பரங்குன்றம்போலும். யானை - யானைமலை. இருங்குன்றம் - அழகர்மலை (பரிபா. 15, 35). இவ்வெண்பாவிற் குறிக்கப்பட்ட எட்டுமலைகளும் மதுரையைச் சூழ்ந்தன என்று கொள்வாரு முண்டு. 'எண்பெருங்குன்றத் தெண்ணுயிரவர்' என்ப(பெருந்தொகை. 1560, 2020).

184. அரியேறு - சிங்கவேறு; புத்தர் அவதரித்த சாக்கியகுலத்தரசர்க்குச் சிங்கம் கொடிபோலும். புரி - தொகுதி.

186. (8) 'மாலவனிதையர் வேட்டும்' என்று திருத்திப் படிக்க. மாறன் மகளிர் விரும்பியும் புத்தர் அவர்செயல்களைப் பொருட்படுத்தாமல், துறந்த செய்தி, 132-ஆம் ஜாதகக் கதையாலும்† இந்நூல் 190-ஆம் பாடற்குறிப்பா

* இப்பதிகத்தின் பிரதியொன்று, 'ஜைன—கெஸட்'—பத்திராதிபரான ஸ்ரீ ஸி. எஸ். மல்லிநாதன் அவர்களால் அன்புடன் எனக் களிக்கப் பெற்றுள்ளது.

†பாளீபாஷையினின்று மொழிபெயர்த்து, புரொபஸர். இ. பி. கவல், (Prof. E. B. Cowell) என்பார் பதிப்பித்த "ஜாதகம்" (Jataka) என்ற நூற்றொகுதிகளில், இதுவும் பிறவுமான கதைகளைக் காணலாம்.

லும் அறிக. மன்னுபுரம் - தாம் ஆட்சிபுரிந்து தங்கிய தலைநகர். (12) புத்தர் புலிக்கு உடம்பளித்த வரலாற்றை 192-ஆம் பாடலுட் காண்க. (17) பாராவதம் - புரு; புருக்களை உய்வித்த கதை 277-ஆம் ஜாதகத்துட் கண்டது. (27) கைங்காகம் - யானை; யானைக்குத் தம் அரசியலை அளித்த வரலாறு 122-ஆம் ஜாதகத்துட் கண்டது. ஆழி - ஆஞ்ஞாசக்கரம்.

187. (7) தசபாரம் - பத்தாகிய பாரமிதைகள்; இவற்றின் விரிவை மணிமேகலை (26—45) அரும்பதவுரையுட் காண்க. (15) கருடற்கும் அரவு கட்குமிருந்தபகைமையைப் போதிசத்துவர் நீக்கிவைத்தசெய்தி, 154-ஆம் ஜாதகத்துட் கண்டது. (25—28). நாகர் மீன்கள் மான்கள் இவற்றுக்குப் புத்தர் அருள்புரிந்த ஜாதகங்களிற் பலவுள்ளன. பொன்பற்றி-மிழலைநாட்டதோர் ஊர்; "எழின்மிழலைக்கூற்றத்துப்.....பொன்பற்றிகாவலனே" என்பர் (வீரசோ. அலங். 39 உரை.); இவ்வூர் அறந்தாங்கிச்சேகரத்துள்ளது. இவ்வூர்த்தலைவனுகவும் பல்லவன்படைத்தலைவருள் ஒருவனுகவும் கூறப்பட்ட சேந்தன், வீரசோழியம் இயற்றிய புத்தமித்திரனது முன்னோன்போலும்.

189. இப்பாடல் மூதலிய மூன்றும் அருகக்கடவுள்வணக்கமாகவும் கூறற்குரியன.

190. மாரன் - நற்குணநற்செய்கைகளை நீக்கித் தீக்குணந்தீச்செயல்களை விளைவிப்பவனுகிய ஒரு தேவன்; இவன் புத்தர்க்கு ஞானமுண்டாகாவண்ணம் தன்மகளிரான காமம், மோகம், பொறையின்மை என்பாருடன் வந்து பல்வகை இடையூறுகளையும் விளைத்து முடிவில் தோல்வியுற்றான் என்றும் இதுபற்றி 'மாரஜித்' என்ற திருநாமம் புத்தர்க்கு வழங்கலாயிற்றென்றும் கூறுவர். மலரினும் மெல்லிதாகச் சொல்லப்படுவது வானாலும் போழப்பட்டிலதாயின் அதற்கு மென்மைத்தன்மை கூறுவது யாங்ஙனம்? என்பது குறிப்பு.

191. (5—7) 'இரண்டேற்ற படையாக்கர்க் கிழிருநிதி பொழிந்தனையே' என 186-ஆம் பாட்டினும் இக்கதை வருதல் காண்க. மாயயாக்கை சொல்லிய—மாயாவருவமான யாக்கையின் துன்பத்தைக் களையவேண்டி; 'புறவினல்லல் சொல்லிய' என்றார் புறத்தினும் (39). [பி. தாம்றன்.—இ. தான்றன்].

192. புனிற்றுப் பசி - ஈன்றணிமையில் உண்டான பசி. எயிற்றுக் கொள்ளை - பற்கூட்டம். கதவுதல் - பற்றிமெல்லுதல்.

193. தருமசோமி—அறவாழி; இப்பாட்டு அருகற்குக் கூறினும் அமையும்.

194. விம்பசாரகதை என்ற தமிழ்ப் பெளத்தநூல் வழக்கிலிருந்ததென்றும், இது கௌதமபுத்தருடைய மாணக்கருள் ஒருவனும், இராசக்கிருகத்தரசனுமான பிம்பசாரன் என்பானுடைய சரித்திரத்தைக்கூறும் காப்பிய

மாகவேண்டுமென்றுங் கூறுவர். (மணிமே. பக். 367, 521—2). தேவி - புத்த ரது தாயான மாயாதேவி; இத்தேவியின் வலமருங்குல்வழியே புத்தர் அவ தரித்தனர் என்பர்.

196. சித்தாந்தத்தோகை என்பது, நீலகேசியுரை முதலியவற்றிற் பயிலுதலினின்று, அஃது ஒரு பௌத்தமதநூல் என்று தெரியவருகின்றது (மணிமே. பக். 458).

197. கண்கொடுத்தது இந்திரன்பொருட்டு; இவ்வரலாறு 212-ஆம் பாட் டாலும், 499-ஆம் ஜாதகத்தாலும், புலிக்கு உடம்புகொடுத்தது 192-ஆம் பாட் டாலும் அறிக.

198. திருப்பதிகம்–பத்துப்பாடல்களில் புத்தருடைய அருமைபெருமை களைப் பாராட்டிக்கூறும் ஒரு தமிழ்நூல் (மணிமே. அரும்பத. பக். 472).

199. சீலவதம்-கொல்லாமை, கள்ளுண்ணாமை, பொய்யாமை, காமமின் மை, கள்ளாமை என்ற ஒழுக்கங்கள்.

201. இஃது அருகற்கும் ஏற்புடைத்து.

202. 'குற்றமான' என னகரவகரத்தை முன்னடியிற் சேர்த்துப்படிக்க. குற்றமான ஐந்து - கள் பொய் களவு கொலை காமங்கள் (மணிமே. அரும். பக். 450). பவம் - கருமவீட்டம்; அது ஆதியான்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய் விகம் என மூத்திறப்படும். மூன்று - காம வெகுளி மயக்கங்கள்.

205. உற்கிருதியாவது பாதமொன்றற்கு இருபத்தாறெழுத்துப் பெற்று முடியுஞ் சந்தம்.

206. அறவழக்கம் - தருமோபதேசம். புத்தர் நிர்வாணமடைந்தபின்னர் அவரருள்பெற்ற உலகினர் இரங்கிக்கூறியவாறு.

207. "இஃது ஆர்தோறும் நான்கெழுத்துநின்று கொப்பூழில் ரகாரம் பெற்றுக் குறட்டில் வசதாரை என்னும் பெயர்வந்து சக்காத்தில் இருபத்தெட் டெழுத்தாய்வந்த நான்காரைச்சக்கரம்" என்பது வீரசோழியவுரை.

208. போதி - ஞானம்; 'போதிச்செல்வம் பூண்டவர்' (சீவகசிந். 366) என்றுர் பிறரும்.

212. இந்திரற்குக் கண்கொடுத்ததை, 197-ஆம் பாடற்குறிப்புட்காண்க; 'கண்பிறர்க் களிக்குங் கண்ணேய்' என்றுர் மணிமேகலையிலும் (11—66).

213. துடிதபுரம் - துஷிதலோகம் போலும். இது கௌதமபுத்தராக அவதரித்த பிரபாபாலர் என்னும் போதிசத்துவர், அங்ஙனம் அவதரிப்பதற்கு முன் இருந்த ஒரு தெய்வலோகம்; அன்றிப் பூமியிலுள்ளதொரு புத்தஸ்தலமு மாம்.

214. மாஞலூர் - காஞ்சிபுரத்துக்குத் தெற்கே ஒன்றரைக்காதவழரத்தில் உள்ளதும், பௌத்தசின்னங்கள் உடையதுமான மாஞம்பதி போலும். புத்தர் எடுத்த பல்பிறவிகளும் இச்செய்யுளுட் கூறப்பட்டுள்ளன. 'வாஞடும் பரியாயும்' என்றது 196-ஆம் ஜாதக கதையை; இலங்கைத்தீவில் அரக்கியர்கூட்டத்தவராற் கவர்ப்பட்ட வணிகர்குழுவைப் புத்தர் ஆகாசகாமியான குதிரை வடிவுடன்சென்று தன்பா லிடங்கொடுத்து வெளியேற்றி உய்வித்தனர் என்பது வரலாறுதலின் 'வாஞடும் பரி' என்றார். அரிணம் - மான். மாஞரு வான கதை 483-ஆம் ஜாதகத்தாலும், களிறுயது 455-ஆம் ஜாதகத்தாலும், சிங்கமாயது 475-ம் ஜாதகத்தாலும், மயிலாயது 491-ஆம் ஜாதகத்தாலும், பிற பிறப்புக்கள் பல ஜாதகங்களாலும் அறியப்படுகின்றன.

216. பேய்க்கணத்தான் - சிவபிரான்.

219. நாகு - கன்று. நந்துதல் - பெருகுதல். இனம்பொலியும் போத்து - பசுக்கூட்டத்திடைவிளங்கித்தோன்றும் விடையேறு. போத்தென வாளுழவர் வளஞ்சிறப்ப, ஆ வாழியர் என இயையும். அன்றிக் குட்டிகளோடு தன்னினம் பொலியவிளங்கும் புலிப்போத்து எனினுமாம்; 'புலிப்போத்தன்ன புல்லணற் காளை' (பெரும்பாண். 138) எனல் காண்க. வாய்வான் உழவர்-வீரர்; களமருமாம். அதன்று ஆர் சுரை - வாயகன்றிருத்தலால் இடும்பண்டம் நிரம்பக்கூடிய மூங்கிற்குழாய். வான்பொருளாகிய தயிர் என்க. வட்டம் - சுழற்கட்டி. அளை - வெண்ணெய். பாலினும் அதன் பரிணமமான பண்டங்களிலும் சுத்தாசுத்தங் களை உலகோர் காணுமையின், 'புனிதமும் எச்சிலும் கீக்கி' என்றார். புறவு - முல்லைநிலம். கலித்தல் - தழைத்தல். [பி. நெடியது.—தீ. நெடிது].

220. (2) சேவல் - கருடன். எழுவோஞகிய இந்திரன் என்க. (5) நேரியன் - சோழஞன முசுகுந்தன்; (8) அவனேவல் கேட்பதாக என்று ஆணை நிறுவி. (12) 'தஞ்சமன்றிது' என்பது நேர்பாடம் போலும்; தஞ்சம் - எளியது. (15) வெயிலோன் - சூரியகுலத்தவனன அசோழன் (16) இருகண்-அகக்கண் புறக்கண்கள். ஒருகணும் - ஓரிடத்தையும். (17) காணிற்ப - காணுமல் நிற்க. "என் சொல்லியவாறே எனின், அங்ஙனம் விட்ட அம்புகண் ணையும் மனத்தையும் புதைத்தலாற் போர்த்தொழில் முற்றுதின்ற முசுகுந்தற்கு அவ்விருளுடைதற்குக் காரணமாயதோர் மந்திரத்தையருளன, அதனன் வஞ்சங் கடிந்து அவுணரைக் கொன்றுகுவித்துநின்றானைக் கண்ட இந்திரன், 'அவரை எம்மனங் கொன்று குவித்தாய்' என்றற்கு, அவன் 'இப்பூதத்தின் செயல்' எனக் கேட்ட இந்திரன் அப்பூதத்தை அவன்பொருட்டு மெய்காலலாக வேதலின் ஆற்றுநின்றும் போந்து நமக்குப் புகாரினுள்ளிருந்து பலியுண்ணும்" என்று அடியார்க்கு நல்லார் எழுதிய வரலாறு அறியத்தக்கது. [சிலப். 6, 7—13].

222. இக்காலத்து இவ்வகையல் பாடபேதம் பலகொண்டு வழங்கும். நற் குறல் - நன்குறுதல்.

223. மனிதரிற் றேன்றுதல் அரியதாகும் எனக் கூட்டுக.

224. ஏடா - கீழோனே முன்னிலைப்படுத்தும் விளி; (சீவக. 1236).

225. பிறக்கும் - பிறங்கச்செய்யும் : பெருமையுறுவிக்கும் எ-று.

226. ஆணவம் மாயைகளுடன் ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்ற கன்மவினைப்பகுதி மூன்றையுங் கூட்டி வினைகள் ஐந்து ஆகக் கொள்ளற் குரியன.

233. சிறப்பில்வஞ்சித்தலையான் வந்த வெண்கலிப்பாவுக்கு மேற்கோள்.

234. தாளுடைந்து - கால் தளர்ந்து. நாற்கதி, மக்கள் தேவர் விலங்கு நாககதிகள். 'மூழ்ந்த - வளைந்த' (நன். 416, மயிலை)

236. தாரநல்லிதம் - மனைவிக்குரிய நன்மைச்செயல்.

238. 'கேடில் விழுச்செல்வங் கல்வி' என்ற திருக்குறட்டொடர் ஒப் பிடற்பாலது.

239. தளி - மேகம் ; தளியிற் சிறந்தானை (கலித். 50) எனக் காண்க.

240. மணல், துளி, இலை, மயிர் எத்தினை அத்தினையும் பொதியறைப் பட்டார் பிறர் என்க. பொதியறைப்படுதல் - துவாரமில்லாத கீழறையுள் அகப் படுதல்; 'பொதியறைப்பட்டோர் போன்றுளம் வருந்தி' என்றார் மணிமேகலை யினும் (4—105).

245. 247-ஆம் பாட்டின் தலைப்பெயரான 'நாவடக்கம்' என்பதை இப் பாட்டிலிருந்து அமைத்துக்கொள்க.

246. நல்லார்கள் நன்கறிதலை வேண்டுவாயின். அது - அச்சொல்.

247. ஆக்கம் படிக்கும் - ஆக்கத்தை அழிக்கும் ; வலித்தல் விகாரம். போக்கப்படுக்கும் - நாடு சுற்ற முதலியவற்றினின்று வெளியேற்றும்.

249. ஆயினும் - உயர்வுசிறப்பும்மைப் பொருள்படநின்றதோர் இடைச் சொல். (எண்ணிடைச்சொல்லாகவும் இது வரும். சிலப். 1, 14, அடி). உறவு உற வருவன - தொடர்புமிக்கு வருவனவற்றுள். செறிவு உறதொழிலினர் - தம்மோடு பொருந்தியபுரியும் தொழிலுடையவர். சிறத்தல் - பழமையாற்சிறந்த நாதல். பிறபிற - கேடுசூழும் செயல்கள்.

250. பட்ட பொருள் - நடந்த செய்தி.

251. வாழ்வார் - நல்வாழ்வுக்கு உரியவர், வாழ்வார், சொற்றொறி முதலிய வற்றின்கண் நிற்பு என இயைக்க.

253. தேக்குதல் - தீர்மானித்தல். அமுதம் வாக்கும் – அமுதகிரணங் களைப்பொழியும். மறு யாருமறிதல் தெரிவிக்கும் என்க.

254. வாமன் - புத்தன்; சிவனும் அருகனுமாம். வேற்றுப்பொருள்வைப் பணிவகை.

255. இறைவரை - பெரியமலை. (பரிபா. 13, 3). சிறப்பெனினும் - சிறப் புடையதாயினும். ஒப்பு - உலகம் ஏற்றுக்கொள்வது.

256. பலா, பூவாதே பலன்தருவது ; மா, பூத்துப் பலன்தருவது; பாதிரி, பூத்தும் பலன் கொடாதது—என அறிக.

257. முன்குதல் - தங்குதல் (பெருங்கதை. 1, 41, 74): ஆதலின், 'முன் காத்தல்' என்பதும் அப்பொருளுடையதாகத் தோன்றுகிறது.

262. இப்பாட்டு 260-ம் செய்யுளுடன் ஒப்பிடத்தக்கது. தண்டிகை – பல்லக்கு.

267. சொல்லவை - பேசக்கூடியவற்றையும். பயிற்றியகல்வியும் புல் லென்று போதலை என்க.

271. கணி - சோசியம். ஒவி - ஓவியம்.

274. செம்பொன் கரும்பொன் என்ப; 'தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று' (குறள். 931) என்புழி, இரும்பு பொன்னென வழங்கப்பட்டமைகாண்க. போலாதே - போலுமன்றே.

276. பாண்டியன் கட்டிவைத்த பொற்கிழி அற்றுவிழப் பாடியவற்றுள் இஃது தொன்று என்ப. "வக்தா சத ஸகஸ்ரேஷு" (சொல்லுதல்வல்லான் நூறு யிரவருள் ஒருவன்; குறள். 648, பரிமே.) என்பது வடமொழி வழகசு.

278. தற்றனவாக - அநுபவித்தவைபோல. விரல்வைத்தது - எண் ணிக் கணக்கிட்டது தானங்க ளெவ்வளவும், ஓவிழுக்கு ஈடாகா என்பது. அவ்வுலோபர்துணிவு என்பது கருத்து.

279. தாமரை சங்கு - பதுமநிதி சங்கநிதிகள்.

280. (2) புண்ணடை - புண்தழும்பு? பண்ணடை என்றும் பிரதி பேதம். வாழ்க்கை - அவ்வுலோபியின் வாழ்வு.

282. 'எற்றென் கினவி யிறந்த பொருட்டே' (தொல். சொல். 263) என்பதனால், எற்றே என்பது வீணே கழிந்தது என்ற பொருள்படும்.

283. "மூன்றுகிழி சங்கிலி இறப் பாடுவார்க்கென்று பாண்டியன் தன் கோயில்வாயிலிற் கட்டிவைத்த பொற்கிழி இறும்படி ஒளவைபாடிய மூன்று பாடல்களுள் இஃது ஒன்றாகத் தமிழ்நாவலர்சரிதை கூறும். தண்டுதல் - அடித்தடித்துக்கேட்டுப் பெறுதல். காற்கூலி-பிறாமடந்ததற்குக்கொடுக்கும் கூலி.

286. இஃது இரட்டையர்வாக்கென்பர். களிறு முதலியனபோலக் கய வரும் பெருமையற்றவர் என்பது கருத்து.

287. வெள்ளிலை வேல், அற்பதிழலுடையது, முள்தைப்பது, அடிக்க வொட்டா, அவ்வாறுபோல் என்க.

288. கட்டம - மலம். மல் - வலிமை.

289. கொண்டும் - அரசர் முதலியோரிடம் ஏற்றுக்கொண்டும்; அவ் வேற்றலாகிய குற்றங்கொள்ளாது அந்தணர்விளங்குதல், அக்கினி அவியை ஏற்கவேற்க ஒளியான் விளங்குதல்போலும் என்பது கருத்து.

291. செயல், ஈதல், வாழ்தல் என்பன வியங்கோள். அது - அப்புகழ். ஊதியம் - பயன்.

292. வேற்றுபபொருள்வவப்பணிவகைக்கு மேற்கோள். வெஞ்சின வறு - மிக உகுகிரமான இடி.

294. கோள்வாய்த்துக் கொட்கும் - தீங்கிழைப்பதில் தவறுததாய்ச் சுற் றித்திரியும். கோள் வலிமையுமாம். வீளி - சீழ்க்கை. (2) 'செல்லாநின்றது' (6) 'வழாஅ வின்பமும்', 'அதாஅன்று', (11) மீளிக்கொடுநா' என்னும் பாடங் கள் உள்ளன. (புறநா. 42, கீழ்குறிப்ப).

296. பண்டைச்செய்தி - முன்புநிகழ்ந்த உண்டிகோடல், உறக்கமுத லாயின. ஆர்கை - உணகை. பரியினும் - வெறுப்பினும்.

298. இது, திருவெள்ளறை ஸ்ரீ புண்டரீகாக்ஷஸ்வாமிகோயிற்குத் தென் புறமுள்ள வாணியங்கிணற்றிற் கண்ட சாஸனப்பாடலாகும். (The Journal of the S. I. Association, Oct. 1910. p. 174). 'உலகத்திற்' 'மிக்கதுவுல கம்' என்று அச்சாஸனத்திலுள்ளன.

300. மந்திரம் ஈண்டு மாயம். அம்தரத்து - நன்னிலையில். பூளை - இல வம்பஞ்சு; இலவங்காய் வெடித்ததும் அதனுட் பஞ்சு சிறுகச்சிறுக வெளியேறி விடுமென்க; இலவுகாத்த கிளிபோல என்பது வழக்கு.

301. ஒன்று வல்லான் மற்றொன்று மாட்டாதவனுவன்.

302. மேனுள் யாணர் வரவின் - மன்னுளின் நிகழ்ந்த இவனது புதிய பவனியிடத்து. போர்வை - போர்க்கும் ஆடை; உடலுமாம். உணங்கி - நைத லுற்று, நிரங்கி.

303. குற்றம் மூன்று - வாதபித்தசிலேட்டுமங்கள்: உணவாகிய அரசனது ஆணைபால் நியமிக்கப்பட்ட பிணியாகிய தண்டத்தலைவனுல் உடல் சூழ்ந்து கொள்ளப்பட்டிருத்தலின், அப்பிணி முன்னர்த் தடுக்கப்படினும் பின்னர்த் தப் பாது தோன்றுவதாம் என்க.

306. 'கருநெரியும்' என்று திருத்துக.

309. நெருநல் களிற்றுமிசை வந்தனர், இன்று ஒருசிறை இருந்தனர் என்க.

310. மூடிகவித்தவருடைய சிரக்கோலம் அழிதல்காண் என்க. மத்தகம்-தலை. (சீவக.2251).

311. மறவி - மறதி. தாயம் - ஞாதியர்.

312. எய்தாதொழிந்தார் - அவ்வறத்தை அடையாது கழிந்தவர்.

315. இல்லையுணடாதல் - நல்குரவுஞ் செல்வமும் மாறிமாறிவருதல்.

316. 'மாற்றுமின் களி' எனத் திருத்திக்கொள்க.

317. இருளில் இயல்பு - இருள் அற்ற வீட்டுநிலை.

320. 'தகாதுயிர்கொல்வதனின்' 'புலாலருகல்வேண்டும்' என்பன நேர் பாடங்கள்போலும்.

321. தெறுவதிற் குற்றம் - உயிர்களை வருத்துவதால் நேரும் பாவம். விடக்கு – இறைச்சி.

322. மதிகள் - கேவலஞானிகள்; சந்திரன்போல் எனினும் ஆம்; 'மலர் கதிர் மதியன புங்கவன்' என்ப (சீவக. 602).

323. நிலைகொள்ளினும் அஞ்சினும் ஒழிமின் என்க.

324. உண்மைத்தன்மையின் மறுதலையாயது என்பார் 'அற்றன்றுதல்' என்றும், அம்மறுதலை, சோர்வு மருட்கை அசதியாடல் மூதலியவற்றினுங் கூடுதலின், அவ்வாறன்றி உள்ளம் ஒப்பியதாகவேண்டும் என்பார் 'அதுதான்மனஞ் செய்தல்' என்றும், உள்ளம ஒத்ததாயினும வாய்மூலம் வெளிப்படுதல் இன்றியமையாதென்பார் 'நெஞ்சொடுகிளக்குஞ்சொல்' என்றும், வாயால் வெளிப்படினும், நெஞ்சொடுகிளக்குஞ்சொல், ஆகாயச்சொல் மூதலியனபோலன்றிப் பிறராற் கேட்கப்படவேண்டும் என்பார் 'பிறனுணர்த்தல்' என்றும், இவை நான்கும் கூடியவழியே தீமைவிளைக்கும் பொய்யாம் என்பார் 'குற்றப்பொய்' என்றுங் கூறினர். 'புரைதீர்ந்த நன்மைவிளக்கும்' பொய் என வேறுண்மையும் அதன்கண் 'அதுதான் மனஞ்செய்தல்' என்னும் இலக்கணமின்மையும் உணர்க.

325. பொய்யில் பொய் - தீமைவிளைத்தலில் தவறுதபொய். பொய்த்தல்–தவறல். கூடுதற்கு - கூடுதற்கண்; 'நிழங்கு மணற்கீன்ற மூளை' என்புழிப் போல உருபுமயக்கம். பொய்யொடுகூடுமிடத்து இன்மையும் போகலும் உண்மையும் ஆகுதல் ஐயமில்லை என்க.

328. 'நாலிருவழக்கிற் றுபதபக்க'ங்கள் (தொல். பொ. 75) இப்பாட்டுட் கூறப்படுவன. தாபதர் - ஈண்டு வானப்பிரத்தர். மணித்தோடு - அக்கமணி முதலிமணிகள். படையுழா வினையுள் - கந்தமூலபலங்கள். யார்க்கு இனி தன்று என்றது எல்லாரையும் உவப்பிக்கும் என்றவாறு. மணித்தோடு பெய்தற்குப் பிரதியாகச் சடைதாழவிடுதலைக் கூட்டிப் பிறநூல்கள் எண்வகை கூறும் (புறப். வெண். வாகை. 14; தொல். பொரு. 75, நச்.). ஈண்டுத் தாபதநிலையை அரசியனிலையோடு உருவகப்படுத்தலின, அச் சடைவிடுதலைக் மணித்தோடு பெய்தலைக் கூட்டி 'எண்வகை மரபி னிசைந்த வாழ்க்கை' என்றுரைக்க.

329. தவம் அருங்கலமாய் விழவோடு வரும்; அதனுன் அதன்றிறத்து என்மனம் மிக்குச்சென்றது என்க.

330. தவத்திறை - தவராசன். நீக்குதல், செறிதல், நயத்தல், நீங்குதல் என்பன தவத்திறைக்கே உள; அத்தன்மையதாதலை நீ அறிகஎன்க. பொருடனை நீக்குதல் எனக் கூட்டுக. [பீ. நயத்து.—தீ. நயத்தல்].

332. 'கழிவெய்தினம்' என்று திருத்துக.

333. 'வினைவழி யொழுகு மென்ப' என்றும் பாடம்.

334. அற்றாய் - அம்மிகையான உடம்பினதாய்.

335. பறைக்குறுதல் - போக்கமுயலுதல். பறைத்தல், போக்கற்பொருளதாதலை 'பத்திசெய்பவர்கள் பாவம் பறைபபவர்' என்பதனுல் அறிக (தேவா. திருவீழி. திருநேரிசை. அப். 9).

336. 'பருவந்து சாவ' என்று திருத்திக்கொள்க. துன்புற்றுச் சாதற்கு உலகிற் பலருளர்போலும் எனறு கருதிப பற்றுசெய்தலை நீங்குமின் என்க.

337. தாரித்தல் - பொறுத்தல். "விலங்கிவில் லுமிழும் பூணுன் விழுச் சிறைப் பட்டபோழ்தும், அலங்கலந் தாரி னுன்வந் தருஞ்சிறை விடுத்த போழ்தும், புலம்பலு மிரிழ்வு நெஞ்சிற் பொலிதலு மின்றிப் பொன்னார்ந், துலங்கலந் துயர்ந்த தோளா னூழ்வினை யென்று விட்டான்" என்ற சிந்தாமணிச்செய்யுள் (1167) ஈண்டு ஒப்பிடற்பாலது. 'சோரிக்கலம' என்ற பாடத்துக்கு இரததக்கறையுடைய வாள் எனப பொருள்கொள்க.

339. காதலற்குக் கற்பினுரிடமாகப் பெருமகன் தோன்றுவதுபோலத் துறந்தார்க்கு மெய்யுணர்வினிடமாக இன்பம் தோன்றும் என்பது கருத்து. இறந்தவெலாம் - இவ்வின்பமல்லாத பிறவின்பம் யாவும்.

340. காட்சி - ஞானம். ஒன்றுகக்காண்டல்—அதுவிதுவென்னுது ஒரு தலையாக உணாதல்; கடவுளொருவனேயாகக் காண்டல் எனினுமாம்.

342. உழவுழுது உய்த்தன்றியும், வித்தின்றியும் பைங்கூழ்விளைக்குறல் என இயையும். என்னெஞ்சும், இடர்ப்படுமாறு அதுபோலும் என்க.

344. தப்புரவு - தாய்த்தற்குரியன. தலைவியின் விரகவேதனை கூறிய வாறு.

346. புறத்திரட்டில் இஃது 'இராமாவதாரம்' என்ற தலைக்குறிப்புடன் உள்ளது. [இராமாவதாரம் கம்பராமாயணத்துக்கு வழங்கிய பழம்பெயர்.] சீதாபிராட்டியின் திருவடிகள் காட்டுவழி நடக்கவும், இளையபெருமாள் திருக் காங்கள் பன்னசாலைகட்டவும் வல்லனவாயின : அதனால் துன்பக்காலத்தில் எவ ரும் எதனையுஞ் செய்யவல்லராவர் என்பது அறியத்தகும் என்பது கருத்து. கம்பராமாயணம் அயோத்யாகாண்ட ஏட்டுப்பிரதிகள் சிலவற்றில் இப்பாடல் காணப்படினும், பலபிரதிகளிலும் இப்பாடற்குப்பிரதியாக—''மேவு கான மிதி லையர் கோன்மகள், பூவின் மெல்லிய பாதமும் போந்தன, தாமி லெம்பிகை சாலை சமைத்தன, யாவை யாது மிலார்க்கியை யாதவே'' என்ற செய்யுளே மிகுதியும் காணப்படுகின்றது.

347. தண்ணியர் - எளியர்.

348. நட்புமுதல், கூட்டல் ஈறுனவை, அரசர்க்குரிய ஆறாகும் ; வேட்ட முதல் காமம் ஈறுனவை, அவர்க்குரிய ஏழாகும் என்க. ஆறு பெருக்குதற்கும், ஏழு கடிதற்கும் உரியவை என்பது 'ஆறகற்றி ஏழ்கடிந்து' (பு. வெ. 9, 37) என்பதனால் உணர்க. ஆறனை, சந்தி, விக்கிரகம், யாணம், ஆசனம், துவைதீ பாவம், சமாதி என்றும், ஏழனை சத்தவிதனம் (குறள். 566, உரை) என்றும் கூறுவர் வடநூலார்.

349. 'நகத்திற் பகலனையான்' என்பது தஞ்சைவாணன்கோவை.

350. தற்பாடு பறவை - வானம்பாடி. சிரைவெண்டலை...கொண்மூ-ஆடை போல வெண்மையான இடத்தைக்கொண்ட மேகம்.

356. ஆற்றுணை - வழியுணவு.

357. இஃது இரட்டையர்வாக்கென்பர். அணங்கு பாடற்கும், அந்த கன் (குருடன்) பாடல்பெற்ற மூடற்கும் உவமைகள்.

359. தன்தை காமநுகர்தற்காகத் தன்காமத்தைத் துறந்தவன் - வீடுமன் ; புரூரவாவும் ஆம்.

362. இலக்கணதீபம் என்ற தலைப்பெயரின்கீழ்ச் செந்தமிழில் (தொகுதி - 14, பக். 243) வெளிவந்துள்ள சிறுநூலில், பல பாடபேதங்க ளுடன் 10ம் பாட்டாக இது காணப்படுகின்றது.

363. நினைவுகவி - பிறர்நினைத்த கருத்தமையப் பாடும் பாட்டு. தயனியம் - தைன்யம் - இரக்கம். தைனியக்கவி - இரங்கிக்கூறும் பாட்டு.

366. வண்டு கமலத்தை நேடும் ; ஈ தலைக்குறை கமல(மல)த்தைச்சாரும் என்க.

367–369. இம்மூன்று பாடலும் அவையத்தாரியல்பு எட்டனையும் கூறுவன. 'எட்டுவகை முதலிய அவையத்தானும்' என்பர் தொல்காப்பியனார் (புறத்திணை. 76)

369. பனுவல் நூண்டுப் புலமை ; ஆகுபெயர். கொட்டுதல்–சுழலுதல். போலவை பெறும் எனில், பிறப்புப்பெறுக என்க.

370. பாங்குபடுதல் - வாரம்படுதல், ஒருசார்பாதல்.

372. திரைத்த - திரையையுடையது, பாய்மரம். திரைப்பு - சாய்வு. திரையை எடுத்து விரிக்குமிடத்து, ஒருபக்கஞ்சாயாது ஓடும் நாவாய்போல, உரைகேட்டதும் பயன்பெறச்செய்வார் சிலர் என்க. [பீ. திரைத்த.—தீ. திரைத்து].

373–74. 283–வெண்பாவுடன் இவ்விரண்டும் கிழியிறும்படி ஔவையார் பாடியன (மேல் பாடற்குறிப்புப் பார்க்க). 'மன்றுழுது உண்பான் - தருமாசனத்திருந்து பரிதானம்பெற்று வாழ்பவன். 'வில்லேருழவர்' (குறள்), 'களவேர் வாழ்க்கை' (பெரும்பாண். 40) என்பவற்றிற்போல மன்றுழுதுண்ணற்குப் பொருள்கொள்க. மன்றுழுதுண்பானது மனைமுன்றிலின் துச்சிலில் (ஒதுக்கிடத்தில்) இருந்து, அவனுற் கேடுற்ற குடியினர் துடைத்தழுங் கண்ணீர் என்க. மன்றுழுதுண்பானது வாழ்க்கை அழுகண்ணீரொடு எழைச்சம் இழம் எனினுமாம்.

375. கைக்கூலி - பரிதானம். காலறுவான் - வழிசமற்றுப்போவான் ; வஞ்சை.

377. நட்டவரல்லார் சுற்றம் எஞ் நிற்பனவாம். சார்தற்கண் - சாருமிடத்து.

378. கீழ்நீர்த்தறி - நீர்க்கீழ் நட்ட கோல்.

381. அலந்தலை - வறுமையாற்றுன்புற்ற சுற்றம். புலம்பு இல்பொருள் - தனிமையையுத்தாராத செல்வம்; பரிவாரங்களுடன் சேரவைத்தும்பொருள் என்பதாம்; வருத்தந்தாராத செல்வமெனினுமாம்.

388. நசை - நூண்டு விருப்பு. துனி - வெறுப்பு. விருப்பு வெறுப்புக்களும் பகையும் குறிக்கொண்டு காத்தற்குரியன என்றகொண்டு, அவற்றின்கண் மிகுதலைச்செய்யாதவர் என்க.

384. இவறுதல் - பற்றுள்ளஞ்செய்தல். 'இயல்பெண்ணுமாறே' எனத் திருத்துக.

385. குடிலம்-வஞ்சம். பொருந்தல் - பொருந்தற்க.

386. பழகிய பெண்யானையைக்கொண்டு ஊற்றின்பம் விளைவித்து வசப் படுத்துதல், ஆண்யானைபிடிப்பார் முறை. பதங்கம் - விட்டில்.

389. காமம் எழுவாய்.

390. உவர்த்தல் என்று திருத்தி, வெறுத்தல் என்று பொருள்கொள்க. கோடலீயார் - கொள்ளுதலைச்செய்யார்.

392. நற்றேரண்மிகை - பெண்டிர்தோள்களிற் செல்லும் உள்ளமிகுதி. தற்றாண் - உணவுகொள்ளுகை.

393. விருத்தி - சீவனத்துக்காக விடப்பட்ட இறையிலிநிலம். (சீவக. 2577; பெருங்கதை. 4, 3, 24). விரகு - உபாயம். நல்லார் நட்பாகிய உபாயத்துக்குரியர் அல்லா என்று பெரியோர் முன்னமே கைவிட்டனர் என்க.

394. அகை யழல் அழுவம் - கூறுபட்டு எரியும் தீப்பரப்பு.

395. 'உவர்ப்பு நீரால்' என்று திருத்துக. உவர்த்தல் - வெறுத்தல். கடையற - முடிவுபோக.

397. ஏனிசை - ஆனிசை.

402. வங்கணம் - நட்பு.

412. அலைவாழ்க்கை - பிறவுபிரை வருத்தியுண்ணும் வாழ்வு. வால் அறிவு - உண்மையறிவு.

416. ஆயத்துறை - சுங்கம்பெறுந் துறை. அக்கசாலை - தட்டார்களரி.

419. வட்கார் - பகைவர்.

420. மண்ணுறுதொழில் - தம் அரசனேவலால் வேற்றுப்புலஞ்சென்று பகைவர்பகுதியை வெட்சிவீரர் கைக்கொள்ளுதல். கவர்ந்து கொணரப் பட்ட பசுக்கள் தம் கன்றுகளை நினைந்து முலைவழியேயின்று சோரும் பாலால் நாளை ஊர் நனைவதாம் என்று கண்டோர் கூறியவாறு.

421. அரசன் கொணை என்றலும் பகைமன்னர்க்கு மார்பும் தோளும் விழியும் இடந்துடித்தன என்க.

423. விரிச்சி - நற்சொல்; 'இன்ன சொன்ன மிகையா விரிச்சியும்' (பு. வெ. 10, பொது. 1) என்ப. தாடி - மீசை. நிரைகோடற்கு எழுந்தோரை நோக்கிய கூற்று.

423. விரிச்சி விலக்கிய வீரக்குறிப்பு - நற்சொல்கேட்டே நிரைகொள்ள வேண்டுமென்பதை விலக்கி வெட்சிவீரர் பகைமேற்சென்ற உள்ளமிகுதி. இடையாமத்துப் பலியிட்டு விரிச்சிகேட்டல் மரபு.

424. வேய் - ஒற்றரான் அறியும் குறிஞ. கூட்டமாகிய பகைவரது ஆனிரையின்சுவட்டை ஒற்றியறிந்து, மணிகட்டிய அந்நிரையினிருப்பை எமக் கறிவித்தோய்! வேந்தன்காதலும் அந்நிரையும் உனக்கு உரியன ஆகுக என்க.

425. வந்தநிரை - இனிவாக்கடவ பசுக்கூட்டம்; இறந்தகாலம் தணிவு பற்றி.

426. தடிநிலை என்பது பரம்பரையாக வீரனுக்குப் போரில் தடிகொட்டு வோனது குணங்கூறும் புறத்துறை. ''மறங்கடைகூட்டிய தடிநிலை'' என்று தொல்காப்பியனார் கூறுதலின் (புறத். 59), தடிகொட்டி வீரனைப் போர்த் தொழிலில் ஊக்குதல் தடியன்செயல் என்பது பெறப்படும்.

427. செலவு என்பது—''வில்லேருழவர் வேற்றுப்புலமுன்னிக், கல்லோர் கானங் கடந்துசென்றன்று'' என்பர் ஐயனரிதனார் (பு. வெ. 1, 5). பதிதல் - பகைவர்நிரையின்புறத்தொடுங்கித் தங்குதல்.

428. மதயானைக்குக் கட்படாத்தை முகத்தினிற் படித்துவதுபோல இருள் தம்முகம்படிக்க வெய்யோர் சென்றார் என்க.

431. புறத்நிறை என்பது, நிரைகோடற்கும் மீட்டற்கும் எழுந்த வீரர் ஒற்றரால் நிரையுள்ளவிடம் அறிந்து அதன்புறத்து ஒடுங்கியிருக்கும் இருப்பு. மதிலரண்புறத்தை வளைந்துகொண்டு வீரர் சங்குதல் என்பர் ஐயனரிதனார் (பு.வெ 17). நிரைகவர்ந்தவீரரும் மனமிரங்கும்படி நாம் புறத்திருந்தமையறிந்து தம் கன்றுகளின் குரல்கேட்பனபோல நம் வரவை நின்று ஓர்த்தன; ஆதலின், உலகில் எப்பிறப்புடையவாயினும் அவற்றுடன் பழகற்றன்மை இனியதே யாகும்—என்று நிரைமீட்டற்கு எழுந்தோர் கவரப்பட்ட தம் நிரையின்புறத்து ஒடுங்கியிருந்தபோது, அவற்றின்செய்கைகண்டு மகிழ்ந்து கூறியவாறு.

432. வள்ளிக்கூத்து என்பது இழிந்தோர் காண்டற்குரியது என்றும் பெண்பாற்குப் பெருவரவிற்றென்றுகூறுவர் நச்சினார்க்கினியர். கொற்றவை கோலங்கொண்டு சாலினி ஆடுங்கூத்தென்பது அடியார்க்குநல்லார்கருத்து. (சிலப். 12, வேட்டுவவரி பக். 328) முருகற்கு நிகழ்த்தும் வெறியாட்டென்பர் ஐயனரிதனார் (பு. வெ. 9, 41).

433. பூசன்மாற்று என்பது நிரைகவர்ந்தகொண்டுபோன்றோரும் மீட்டுக்கொண்டுபோன்றோரும் பகைவரைத் தொடர்ந்துசென்று போர்புரிந்து பூசல்மாற்றுதல் என்பர் நச்சினார்க்கினியர். இது நிரைகொண்டோரது

பூசன்மாற்று. பூசல் மாற்றிய வீரரின் விற்கள், பகைவீரர் ஒருங்குழிந்தமையின், நாணேற்றப்படாவாய் ஒலியடங்கின. அதனால், வெட்சிவீரர் தம் போர்த் தொழிலை ஒழித்து அவற்றை ஓரிடத்து வைத்து அகல்வாராயினர் என்பது பொருள். [பி. நாண்படர.-தி.–நாண்படா].

434. தந்துநிறையாவது:—வெட்சிபாரும் கரந்தையாரும் தாம் கொண்ட நிரையை ஊர்ப்புறத்துத் தந்துநிறுத்தல் ஆகும். இனநிரை கொட்டின் வெரூஉம், காண்டலும் ஆற்ரு ; ஆதலின் கானத்தை அவையெல்லாம் இடமாகபபெறுக என விளைமுடிவு செய்க. [பி. கோட்டின்.-தி. கொட்டின் ; பி. பெருக.—தி. பெறுக.]

435. கழு - கறவாதபசுவைக் கறப்பதறகு அதன்கழுத்தில் இரண்டு தலையுஞ் சீவி மாலைபோற் கட்டியிடுங் கழி (கலித். 106.). பாகர் - நடத்துவோர். எழு - தொழுவங்களின் கிணையமரம்.

436. வேய் - ஒற்று. புல்வேய் குரம்பைப் புறஞ்சிறை - புற்களால் வேயப்பட்ட குடிசைகளையுடைய ஊரபுறம். வேந்தன் நல்லன் என்க.

437. கரந்தை - நிரைமீட்டல். 'வடிநவில்வேலோன்' எனவும், 'அடி புனைதோலின்' எனவும் திருத்திக்கொள்க.

439. ஊர்கொலையாவது:—பகைவர் புறஞ்சேரியை வளைந்துகொண்டு ஆண்டுநின்ற நிரைகாவலரைக கொன்று பகையறுத்தலாம். பாம்பின்வாய்ப் பட்ட மதிப்பாலக் கரி பரந்துவீழ இரவில் ஊரை சுமவெரியாற்கொளுத்தி நிரைகாவலரைக்கொன்று, அவ்வூரிலுள்ள பல ஆனிரைமுழுவங்களையும் பகலிற் பாய்ப்பவர்போலக் கண்ட வீரர், மற்றும கொல்லபபடுதற்குரியாரை ஆண்டுப் பெருராயினர் எ - று. [பி. போர்கண்டோர்.—தி. போற்கண்டோர்.]

440. தொடைகொண்டு - நெருங்கி ஒருவரையொருவர் தொடுத்துக் கொண்டு.

441. வாள்பொருந்திய தடியினையுடைய வீரர் என்க. 'வாளா' என்றும் பாடம். 'தடியர் வனம்' என்பது பாடமாயின், பகைவர்க்குத தடிகொட்டுவோர் அவராற் பயன்பெறுதலிலர் என்பது கருத்தாக்குக.

442. கார் வனம் - ஆகிவராகமூர்த்தி. தோள், வனக்கோட்டினும் மிடல் பெரிதெய்தின என்க.

443. "வெட்சிமறவர் மீ வீழ்ந்தமைகேட்டு விடாது பின்வந்தோன்பாடு கூறினமையிற் பூசன்மாற்ருயிற்று" என்பர் நச்சினார்க்கினியர். இதனும் கரந்தை வீரனொருவன விடாது பின்சென்று வெட்சியாரை அழித்துத தானும் பட்ட

செய்தி அறிக. (1) 'இரவூர்' என்பது நேர்பாடம்போலும். (3) கயிறு இயல் பாவை - சூத்திரத்தால் இயங்கிச் சுழலும் பாவை. அயில் - வேல். (4) உழைக் குரற்கு உணர்ந்த - மான்குரல்கேட்டுத் தயில் ஈங்கிய. (6) இழுக்குதல் - வழுக்குதல். (10) செஞ்சோற்றுநிலை - தான் பெற்றுண்டுவளர்ந்த சோற்றுக்கடனைத் தீர்த்துநின்றநிலைமை. அஞ்சுதக்கன்று - அஞ்சத்தக்கது.

444. கடுஞ்சுரை - மிகச்சுரக்கும் ஆன்மடி. தன் மகன் நிரைமீட்டுவந்த அருஞ்செயலை உசாவாது, ஆவினிடமுள்ள அன்புமிகுதியால் அவன்தாய் அதனைத் தழுவிக் கலுழ்வாள் எ - று.

445. நிரைமீட்டோர் தாகசாந்திசெய்துகொள்ளவும் இடமின்றி அந்நிரை தம்மூர்வாயிலைக் காண விரையும் எ - று. மள்ளர் - கரந்தைவீரர்.

446. தம கிளைகளையும் மன்று (தொழுவங்) களையும் காணும் வேட்கை எனவும், அவ்வேட்கை மடிசுரத்தலால் வெளிப்படுதலைக் கன்றுகள் காண்பீர் எனவும் பொருள்கொள்க.

447. பாதிடி - பகுத்து இடுகை; அஃதாவது—நிரைகொண்டோரும் மீட்டோரும் தாங்கொண்ட ஆனிரைகளைப் பகுத்துக்கோடலாம். இது கரந்தையார் பாதிடி

448. கரந்தையங்கண்ணியான் - நிரைமீட்டுக் கரந்தைமாலை சூடிவந்த வீரன்; அவனைக்கண்டு, அவன்செய்த உதவிக்கொப்ப நிரையளிக்குஞ் செயலறியாது அரசன் மருண்டான் என்க.

449. உண்டாட்டாவது:—நிரைகொண்டும் மீட்டும்போந்த வீரர் சுற்றத்தோடு களாண்டுமகிழ்ந்து விளையாடுதலாம். இது கரந்தையார் உண்டாட்டு. (1) படி மணி ஆபம்-மணிசட்டப்பட்ட பசுநிரை. (3) தயின்மறத்தல், இடையீடின்றி ஒலித்தல். (6) விண்மீன்கள் சூடப்படுதலான்எழுந்தபுகையொழுங்குபோல; அமீன்களைச் சுடுதற்கெழுந்த எரியுமாம். (7) நம்பியர் - தொழில்வல்லார். (10) பூவிலைமகளிர் - அற்றைப் பரிசங்கொள்ளும் பரத்தையர். (சிலப். 5, 51) (11) சர்ரி-ருட்ச்சி. சதுக்கம்-நாற்சந்தி. (13) கொள்வினை மாற்றுக்கொடை - விலைப்பொருள்கொடுத்து வீரர்கொள்ளுஞ் செயற்கு மாறுதல்செய்யாத பண்டங்கொடுத்தற்றொழில்: ஆவது—கொள்வதூஉ மிகைபடாது கொடுப்பதூஉங் குறைபடாது புரியும் வாணிகம் என்றபடி. (14) கைதூவுதல் - கையொழிதல்; "கருமஞ் செயவொருவன் கைதூவேன் என்னும்" (குறள். 1021) எனக் காண்க.

450. இளையர் செல்கின்ற ஆர்ப்பு என்க. நசைஇ - விரும்பி. சென்ற வேதனமனம், செலவாகிய ஒருபாற்படப் பகைவேந்தர்மனம் இருபாற்படலாயின என்பது கருத்து.

451. பார் தண் படையார்ப்பாற் பொடியாய் எழும் ; அப்பார்க்குரிய வேந்தன் அதனை எண்ணுன்கொல் என்க. புல்லார் - பகைவர்.

452. மேற்சென்ற வேந்தன் இடையே துணைவந்த அரசருடன்சேர்ந்து செல்வதனால் மீன்பூத்தவானத்து வெண்மதிசெல்வதுபோலச் சிறந்து விளங்கினன் அவன் எ-று.

453. கொற்றவஞ்சியாவது:-"வையகம் வணங்க வாளோச் சினனெனச்-செய்கழல் வேந்தனை சோமிருத் தன்று" (பு. வெ. 3. 7) என்பர் ஐயனரிதனர். இதனை 'அடித்தூர்ந் தட்ட கொற்றம்' என்பர் தொல்காப்பியர். வேந்தர் அமர்பெற்று நாட்சென்றமையின் அதுபெறும் விருப்பத்தால் வெறுந்தோளைச் சுமந்திருத்தலைப் பொருதவராய் என்க. "இருதோளெனைச் சோம்பியோர்க்குங் கல்லுஞ் சுமந்தேன்" என்ற இளையபெருமாள்வார்த்தை காண்டு ஒப்பிடற்பாலது (கம்பரா. நகர்நீங். 139). ஆள்வினைக் கொண்டிமாக்கள் - ஆண்மைச் செயலாற் பகைவர்நாட்டைக்கொள்ளைகொள்ளவல்ல வீரர். அவர் போர்முயற்சியால் உண்டிகொள்ளுதலை வெறுத்தல்போலத் தோளால் இன்பந்துய்த்தலை வெறுத்து என்க; "பகைநோக்கார்..... கருமமே கண்ணாயினர்" என்ப (நீதிநெறி. 53.). ஊங்கு - இனிமேலும். தாம் கொண்ட விருப்பம் நிறைவேறப்பெற்றன ராதலின், இனி அத்தகையஅவா நிறைவேறற்கு இடமின்று என்பது கருத்து.

454. சொரிருந்தி, சுழித்தெறிந்து கொண்டொழுக வாள்கழித்தான் என்க. மறிதிரை - கடல்.

455. மாராயவஞ்சியாவது:—"மறவேந்தனிற் சிறப்பெய்திய, விறல் வேலோர் நிலையுரைத்தன்று" என்றார் ஐயனரிதனர் (பு. வெ. 3, 11). மாராயம்—மகாராயனால் (ராசனால்) அளிக்கப்பெறுஞ் சிறப்பு. அச்சிறப்பாவன—ஏனைக் காவிதிமுதலிய பட்டங்களும் நாடும் ஊர்முதலாயினவும் பெறுதல். "மாராயம் பெற்ற நெடுமொழியானும்' என்பர் தொல்காப்பியனர். போர்க்குஅடல் ஆற்றுதல்—போரில் வலிமைசெலுத்தவல்ல. பகைப்படையாகிய கடற்கு இவன் கரையன்றோ என்க. தார்வேந்தன் மோரிஞ்சேர் ஏனைதி—அரசன் ஏனைப்பட்டத்தின் அடையாளமாகக் கொடுத்த மோதிரம். 'ஆழிதொட்டான்' என்பதற்கு (சீவக. 2167) ஏனைமோதிரஞ் செறிந்த சேனைபதி என்பர் நச்சினார்க்கினியர்.

456. பெருஞ்சோற்றுநிலையாவது:—"வேந்தன் போர்தலைக்கொண்ட பிற்றைஞான்று தானே, போர்குறித்த படையாளரும் தானும் உடனுண்பான் போல்வதோர் மூகமன்செய்தற்குப் பிண்டித்துவைத்த உண்டியைக்கொடுத்தல்" என்பர் நச்சினார்க்கினியர். "இருந்தார் தெம்முனை தெறுகுவ ரிவரெனப், பெருஞ்சோ றுடவர் பெறுமுறை வகுத்தன்று' என்பர் ஐயனரிதனர் (பு. வெ

3. 23). உடனுண்பாஞைய வேந்தன் கள்ளை மிகவழங்கித் தம்மை அறிவு வழுவச்செய்ததனுற்போலும், மறவர் தம் உயிர் நேர்ந்தார்: என்றது செஞ் சோற்றுக்கடன் கழித்தார் எ-று. கொண்டி–போர்க்கொள்ளை. தம்மையளித்த அரசரிடம் கண்ணேடாது உறவற்று உயிர்துறந்தார் என்க.

457. தழிஞ்ஞியாவது:—'கணையும் வேலும் முதலிய படைகளைத் தம் மிடத்தே தடுத்துக்கொண்டு புண்பட்ட வீரர்பால் அரசன் நேரிற் சென்று வினவியும் பொருள்கொடுத்தும் தழுவிக்கோடல்' என்றும், ''தழிச்சுதல் தழிஞ்சி யாயிறறு; 'பொருகணை தழிச்சிய புண்ணுர் மாபின்' எனறுற்போல'' என்றுங் கூறுவர் நச்சினர்க்கினியர். புல் அணலார்–புல்லியதாடியுடைய வீரர் (புறநா. 260).

458. கொடைவஞ்ஞியாவது:—'நீடவங் குறுகவு நிவப்பவுந் தூக்கிப், பாடிய புலவர்க்குப் பரிசினீட் டின்று' என்பர் (பு. வெ. 3. 16). மேற்செல்லும் வேந்தன் தன் படையாளர்க்குப் படைக்கலங்களும பரிசிலர்க்கு வேண்டியன வும் அளித்தல் என்பர் நச்சினர்க்கினியர். பாத்தி–பகுதி: 'மருவின்பாத்தி' என்றுற்போல (தொல். எழுத். 172).

459. மணி–நீலமணி. துணர்தல்–தளிர்விடுதல். மாக்குரல் நொச்சி–கரிய பூங்கொத்தினையுடைய நொச்சி. 'கருங்குர னெஞ்சி' என்ப (புறநா. 271). மற்று இசின் அசைகள். நொச்சித்தழை மகளிருடுத்தற்குரியதாதலை ''ஐதக லல்குற் றழையணி கூட்டுமை, கூழை நொச்சி'' (அகநா. 275), ''நொச்சிக் கண்ணுர் குரூஉத்தழை, மெல்லிழை மகளிர் தைதக லல்குற், றொடலை யாகவுங் கண்டனமை'' (புறநா. 271) என்பவற்றுல் உணர்க. ஊர்ப்புறங்கொடாமை— ஊரைப் பகைவர்க்கு விடாமை. நொச்சியே! நிடத்தி, நிழமையும் நினதே, இவற்றுல் நனமர நியே'' என விளைமுடிவுசெய்க.

461. கொள்ளைசாற்றுதல்—கொள்ளையூட்டுதல் (பு. வெ. 3, 15). குன்று - கயிலை. நொச்சி வகுத்தல் — எயில்காத்தற்குரியாரைத் தெரிந்து நியமித்தல்.

462. 'மொய்வேற்கையர்.....எவ்வழி' என்பது, சோமான்விற். பின்னது பொன்முடியார்விடை. (2) அமிய—அறிந்து வியக்க. வலிதலைக் கொண்டது எவ்வழி - வலிமை மிக்குள்ள இடம் யாங்குளது? (5) வயவர் - எயில்முற்றிய வீரர். அவரைக் காணின் எவ்வழியாயினுந்தோன்றி உராய்த் தலைதுமித்த மறவர் என்க. பகைவர் சுட்டுமாத்திரையாய்நின்றது. எவ்வழி யாயினும் மறவர் மலிந்துதோன்றுதலான், பிறர் சார்தற்கரியதுறைபுடன் நீண்டுமுடியாததாகும் தகரிடம் என்றவாறு.

463. நிவத்தல்—மேலெழுதல். இது தகரியாத்தினைப்பாட்டு என்பது புறத்திரட்டால் தெரிகின்றது.

464. மூற்றப்பட்ட மதிலாகிய மேகத்தினின்றெழும் இடிபோலத் தோன்ற, வாளை நாட்கொண்டான் என்க. நாட்கொள்ளுதல்—போர்கருதித் தான் புறப்படுமுன், ஒரு நன்முகூர்த்தத்தில் அரசன் தன் வாள் குடை முதலிய வற்றைப் புறவீடுவிடித்தல்.

465. அகத்தான்-கொச்சியான். அகமிசைக்கு இவர்தல்-உண்மதிலின் மேலிடத்து ஏறுதல். கொல் தறை-கொல்லன் களரி.

466. எணிமயக்கமாவது மதிலிற் சார்த்திய ஏணியிலை நின்று வீரர் போர்செய்தலாம். எழு-கணையமரம். மடையமை யேணி—"மீதிடுபலகையான் மடித்துச் செய்யப்பட்ட ஏணி" என்பர் நச்சினார்க்கினியர். ஞாயில் (=மதிற் சூட்டு) அளவு பிணங்களை உயரும்படி குவித்து, வாயிலைத் தூர்த்தார் என்க.

467. பாசிமறமாவது—'அகத்தோர் மதிற்புறத்தன்றி ஊரகத்துப் போரைவிரும்பிய நிலை' எனவும், 'பாசி என்னூர், நீரிற் பாசிபோல இருவரும் ஒதுங்கியுந் தூர்ந்தும் பொருதலின்' என்றுங் கூறவர் நச்சினார்க்கினியர். தாம் தாம் காத்துநின்ற வாயிலிடங்களோறும் பகைப்படையை வீரர் சாய்க்கவும் அஞ் சாது மேல்விழுந்த அப்பகைவேந்தன் முடிவில் அச்சாய்ப்புண்டபடையில் வீழ்ந்தமையால், அதுவே திட்டையாகி, அவனுக்கு நடுகல் அமைத்தற்குரிய வேறு திட்டை உள்ளூர்த்தெருவிடத்தில் வேண்டாததாயிற்று என்க. பதுக்கை-திட்டை. பற்று-இடம். [பி. தார்மண்ணர்க்கு —தி. தார்மண்ணற்கு.]

468. அகத்தோன் மூற்றிய முதிர்வாவது—"அகவிடத்தாளுகிய வேந் தன் தன்படையைச் செலுத்திப் புறமதிலிற் செய்யும போரின்முகப் புறத்தோன் படையைத் தள்ளி வென்று அப்புறமதிலைக் கைக்கொண்டு வளைத்த வினை முதிர்ச்சி" என்பர் நச்சினார்க்கினியர்.

469. தொகைநிலையாவது—"வென்ற வேந்தன் பரந்துபட்ட தன்படைக் கடற்கெல்லாம் சிறப்புச்செய்வான் ஒருங்குவருகென்றுதொகுத்தல்". வலவன்-வலஞன். உண்டற்று—தம்தலைவர்க்காகச் செஞ்சோற்றுக்கடன் கழித்த; உள்ளு தென்பது அற்ற எனினும் ஆம்.

470. அடிபிறக்கு நடுபின்னடிவாங்குதல், "ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர், தாக்கற்குப் பேருந் தகைத்து" (486) என்ற குறள் ஒப்பிடத் தக்கது. 'ஒடுங்கியும்' என்பதும் பாடம்போலும்.

471. உண்மதில் புறமதில் என்றவற்றுள் தன்படையைச் சூழ்ந்த புற மதிலை இழந்தமையின், இருகன்றி ஞெண்டிழந்த வீற்றுப்போல் அகத்தோர்

சிறினர் என்க. வேற்றரணம் - அரசன்கோயிலேச்சுறறியுள்ள உண்மதில். [பி. பதிசுற்று.—தீ. பதிச்சுற்று].

472. புறவின் - புறுவைப்போல. "இக்காவலர் மதில் கைவிடார்; அதனல் வேனப்பகைவர் அம்மதிலேப் பார்த்தலேயும் பெற்றிலர். அங்ஙனமாகவும் பகையிடத்துள்ள வீரன் அம்மதிலேத் தானே கோடல்வேண்டுமாம்!" என்று கண்டோர் இகழ்ந்தவாறு.

473. வாண்மங்கலமாவது:—இருபெருவேந்தருள் ஒருவன் ஒருவனே வென்றழி அங்ஙனம் வென்ற கொற்றவாளினேக் கொற்றவைமேல் நிறுத்தி நீராட்டுதல் என்பர். அகத்து வேந்தற்கு ஊரும் புறத்துவேந்தற்கு வானும் அளித்து, முன்னவனல் வள்பெற்ற கொற்றவை. புறத்துவேந்தன் வாளினே அவன் சென்ற வாணிடத்தே பெறுவள்போலும என்றவாறு.

474. மண்ணுமங்கலமாவது:—இகல்செய்த மதிற்கண் ஒருவேந்தன் பிற வேந்தனேக்கொன்று அவன் மூடிக்கலமுதலியனகொண்டு, பட்டவேந்தன் பெயராலே மூடிபுனேந்து நீராடும் மங்கலமாம். சூடுமி—மூடிக்கலம் என்பர் நச்சினர்க்கினியர். சூடுமிகொள அதனேப் பொருது எதிரேற்ற வீரர்க்கு விண் விருந்துசெய்தான் பெருந்தகை வன்க.

475. பகலில் மதிநிலவெறிப்பது துன்னிமித்தமாமென்று அரணகத்தோர் அஞ்சினர் என்க. விண்ணிடம் தனக்காக்குதல் எளிது என்று விரிந்த குடை எ - று. சும்புளித்தல் - ஒளிமிகுதி முதலியவற்றுற் கண் கூச்சங்கொள்ளுதல். "சுமந்த நாகமுங் கணசும் புளித்தவே" என்ப (சூப்பா.). (இதனேச் சிம்புளித்தல், செம்புளிதல் எனவும் வழங்குப.

476. தொழுதவீழ்தல்செய்யாதகுறைநீங்க. முழுதளிப்போன்-புறத்தோனிய வேந்தன். தம்கணவர் நீண்ட ஆயுள்கொள்ளுதலே என்றும் நினேந்து மகளிர் விழாக்கொள்வர் என்க.

477. கொள்ளார் தேசம் குறித்த கொற்றமாவது:-"பகைவர்நாட்டினேத் தாம் கொள்வதற்குமுன்பேயும் கொண்டவன்போல வேண்டியோர்க்குக் கொடுத்தலேக்குறித்த வெற்றி" எனவும், "ஒன்னு ராரெயி லவர்கட் டாகவும், நமதெனப் பாண்கட னிறுக்கும் தன்மையோய்" (புறம் 203) என்பதும் "இராமன் இலங்கைகொள்வதன்முன் வீடணற்குக்கொடுத்த துறையும் அது" எனவும் கூறுவர் நச்சினர்க்கினியர். மாற்றுப்புலம் - பகைவர் தேயம். மண்டிலமாக்கள் - சாமந்தர். வேல்வேந்தற்கு - எடுத்துச்செல்லும் அரசருடன்; உருபுமயக்கம். ஒலி - பரிசுபெறவந்த பாணர் ஆரவாரம். பல்லின்று - நிரம்பியது. பகையரசர் எதிர்க்கும் ஒலியினும் அப்பகைவருடைமைகளே அரசன் கொடுப்பதாக வாக்களிக்க வவந்த பாணரொலி மிக்கது என்றவாறு.

478. இயங்குபடை அரவம் - பகையரண்முற்றுதற்கெழுந்த படையின் செலவாலுண்டாம் ஆரவாரம். (1) தொடி - யானைக்கிம்புரி (2) புடையூ- புடைத்து. (3)எரி எழுந்துவிளங்கினூற்போன்ற உளையை(=தலையாட்டத்தை)ச் சூடி. [பி.சூட்டி.-தீ.சூடி.] (5)'கோன்முகைக்கொடியின்விரவா'-கோலின்மூனையி லுள்ள கொடியுடன்கூடி. (6—6) 'வல்லோன்.....தோன்றல்'—கைவல்ல தச்சனது தொழில்வண்மையால் விரையச்செல்லும் தோற்றத்தனவாய். (8) கண்விடுதல் - கடிப்பினடி மிகுதல். [பி. கண்வேட்டனவே.—தீ.கண்விட்டன வே]. (11) ஞாயில் - எப்புழைக்கு நடுவாய் எய்து மறையும் மதிற்சூட்டு (சீவக. 105, நச்.). (12) மிளை - காவற்காடு. (13) மீப்புடை ஆர் அரண்— மிக்கெழுதலையுடைய கடத்தற்கரிய மதில். மீப்பு - மிகுதி (புறம். 104)• (14) அழிந்த - அழிய. 'குஞ்சரம் எழுதரும், இவுளி கடுஞ்செலவினது, தேர் அருவியி னெலிக்கும், மாசரம், மாதிர மொலிப்ப, வயிரும் வலம்புரியு முடனுர்ப் பக் கதித்தெழும் ; இங்ஙனம் தேம் புகலழிய, மன்னர் நடுங்க இவன் வீங்கிய செலவு நல்லமன்ற' என வினைமுடிவு செய்க. [பி. கதத்தெழும்.—தீ. கதித் தெழும்.]

479. உருமுப்போன்று மழவொலித்தலால் அரவுபோன்று பகைவேந்த வேம் என்க. ஆமா - காட்டுப்பசு. உகளுதல் - தாவுதல்.

480. காலம் - ஊழியிறுதி. மேற்சென்றவீரர் எயில்காத்தோரை வெல் லுதலான் மற்ற மறவர் அணுள் தொக்கனர் என்க. கடல் மேருச்சூழ்காலம் எயிற்புறத்து வீரர்க்கும், அக்கடலின்முன் தோன்றுது மறைந்த புவி அகத்து வீரர்க்கும், உவமைகள். [பி. புவிபோல்.—தீ. புவிபோல்.]

481. தோலின்பெருக்கமாவது:—புறத்தோன்படை "மதின்மேற் சென் றுழி மதிலகத்தோர் அப்புமாரி விலக்குதற்குக் கிடுகுங் கேடகமும் நிறையக் கொண்டுசேறல்" என்பர், நச்சினார்க்கினியர். (3) கரடிகளுடன்கூடிய குரக்குப் படையால். சேனையோடு இறுத்தலின் என்க. (4) பச்சை -பசிய நெற்கதிர். தண் ணடை - மருதநிலம். (5) எச்சார் மருங்கினும் - எத்திசையிடத்தும். வேந் தன் மூற்றிய ஊர் - இராமனால் முற்றுகையிடப்பட்ட ஊர்; இராவணனது முற்றப்பட்ட இலங்காபுரம் எனினுமாம்.

482. (3) மா இரலை - பெரிய பொன்மான். (8) குன்றம் - கயிலை. குன்றத்தை, உருவமொடு கோதையை எடுத்த மீளி (=வல்லாளன்)—இராவ ணன். மூற்றியது மீளி ஊர் என்க. (18) தடறு - உறை. இராமன் உறையி னின்று வான்கழித்தகாலத்தே மாதர்கண்களும் மூங்கிற்கண்களும் பெருநீருகுத் தன என்பது கருத்து. இலங்காபுரியின் அகழைச்சூழக் காடாக வளர்க்கப்பெற்ற நீண்ட மூங்கில்கள் புறத்துமுற்றிய குரக்குச்சேனைகளால் வெட்டப்பட்டமை

யின், அவற்றின் கண்கள் (கணுக்கள்) நீருருத்தன என்க. மாதர்கண் தோற்ற மும் நிறமும் பாழ்படவும், மூங்கிற்கண் விளிம்பழியவும் நீருருத்தன எ - று. [பி. பெருநீருருதன்.—கீ. பெருநீருருத்தன].

483. இது 'மூரணிய புறத்தோன் அணங்கிய பக்கம்' (தொல்) என்ப தற்கு மேற்கோள். அஃதாவது—மாறுபட்ட புறத்தோனை அகத்தோன் தன் செல்வத்தானன்றிப் போர்த்தொழிலான் வருத்தியது கூறலாகும்; 'முன்னுள் பகைவர், மா யானை வயவர் (வீரர்) முதலிய பலவும் புறங்கண்டோரேயாவர். இனி, நம் வீரரால் அவர் பைந்தலைகள் தூறுகளின் அயலிற்கிடப்ப இன்று நாளை நம் திருமுரசு ஒலிக்க, அவரூரைக் கைக்கொள்வோம்' என்று பொன் முடியார் கூறினர் என்க. (3) உயத்தல் - வருந்தல். தலை, மூக்கற்ற துங்கு போலக் கிடப்ப.

484. 'பறந்து' என்பது பாடமாகலாம். ஏற்றவும் ஏணி தவிர்தலாற் பாய்ந்தேறினர் எ—று. பாணியா - தாமதமின்றி.

485. மதிலையடையச் சார்த்திய ஏணி விண்ணையடையச்செய்தது என்றது அகத்தோரும் புறத்தோரும் ஏணிமிசைநின்று பொருது இறந்தனர். எ—று.

491. நல்லிசைவஞ்சியாவது "எடுத்துவிட்டபின்பு பகைவர் தேயத்திற் கேட்டிற்கு இரங்குதலைக் கூறுதலாம்." (பு. வெ. 3, 25) பறை நிறை கொல் யானை - மூற்படப் பறையொலி நிரம்பிவருதற்குக் காரணமான யானை: ஆவது மதயானை எ-று; "நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப், பறையறைந் தல்லது செல்லற்க" என்ப (கலித். 56.). பஞ்சவன் - பாண்டியன். நிறை முறையின் உய்யாதார் - முறைப்படி நிறையைக்கொணர்ந்து நிறுதார்; 'நிறை யின் முறைகொணர்ந்து தெவ்வேந்தீண்ட' என்றார் பொய்யாமொழியாரும் (தமிழ்நா. 68.). உய்த்தல் - செலுத்துதல். "ஆயிற்றே, யீண்டே யுறையு மிடம்" என்பது புறத்திரட்டிற்கண்ட சிறந்த பாடம். பகைவர் தேயம் ஆள் முதலியன நீக்குதலான், ஈன்ற பேய்கள் உறையும் இடமாயிற்று என்க. [பி. பஞ்சவர்க்கு. கீ. பஞ்சவற்கு.]

492. அரசு - பகையரசு. படு பேய் - தயிலும் பேய். விடுமாற்றம்— இணக்கங்காட்டித் தூதர்வாயிலாக விடுத்த மொழி.

493. இரியண்மகளிர் - படையெடுப்பால் அலைந்தோடிய கருவுற்ற பெண்டிர். ஞெமல் - சருகு. ஊமன் - கோட்டான்.

494. மூதிறி - மேல்கடற்பக்கத்துச் சோர்க்குரிய பட்டினம். இதன் தானத்திற் பின்பு உண்டான ஊரே, மகோதை என்ற கொங்கோளூர்.

495. நாடு நாற்றிசையுங்கூடி எரிபரந்த என்க.

496. புறத்தோன் வீழ்ந்த புதுமை "புறத்திருந்த வேந்தன் அகத்தோனிடத்தினை விரும்பிக்கொண்ட புதுக்கோள்" என்பர் நச்சினார்க்கினியர். புரிசை (=மதில்) ஆன்றோரடக்கம் போலப் பொறியடங்கின என்க. ஆன்றோர்க்குப் பொறி -- ஐம்பொறிகள்; புரிசைக்குப் பொறி -- நூற்றுவரைக் கொல்லி முதலிய மதிற்பொறிகள். [பி. வான்றேய்.—தி. வான்றேய்.]

497. மேற்சென்ற வேந்தனிடம் சேற்றத்தீப் பிறந்ததும், பகைவளூர் பெரும்பாலும் அழிந்தன. அதனால அழியாது எஞ்சிய மிளை (காவற்காடு) மூதலிய ஒருசிலவே மழுமுதலியவற்றால் இப்போது அழியலாயின என்பதாகுதது. வேந்தனிசேற்றத்தீயாற் பகைநாடுகள அழிந்தனவாகக் கூறுதலை 530-ஆம் பாடலினுங் காண்க.

498. வாண்மங்கலத்தின் இலக்கணம் 473-ஆம் பாடற்குறிப்பிற் காண்க. இது புறத்தீதான வாண்மங்கலம். மூற்றியோன் சிறப்புச்செய்தான்: அச் சிறப்புக்களைக் கொற்றவைகொள்ளுங்கால் என்க. பகைவென்ற தன கொற்ற வாளினைக் கொற்றவைமேல நிறுத்தி நீராட்டுதலின் 'வாள்சேர்ந்த கொற்றவை' என்றார். [பி. சாந்தும். —தி. சாந்தம்.]

499. மண்ணுமங்கலத்தின இலக்கணம் 474-ம் பாடற்குறிப்பிற் காண்க. மருங்கு - வயிசம். மால் - பரசிராமன. பொழில் ஏழு - பூவுலகத்தின் பகுதிகளான சத்த தீவுகள். கோடியர் - கூத்தர்.

500. தொகைநிலையாவது, "வாண்மங்கலம் நிகழ்ந்தபின்னர் பொருது நின்ற இருவருள் ஒருவர் பரந்துபட்ட கடற்படைக்கெல்லாம் சிறப்புச்செய்வான் ஒருங்குவருக எனத் தொகுத்தல்" என்பர் நச்சினார்க்கினியர். இது புறத்தோன் தொகைநிலை. ஐயனாரிதனார் உழிஞைத்திணையிலும் தும்பைத்திணையிலும் இபபெயர்கொண்ட இருதுறைகள் கொண்டு வேறு கருத்துப்படக் கூறுவர்.

501. இது, வேற்றுமையணியுள் இருபொருள்வேற்றுமைச்சமத்துக்கு மேற்கோள். கடல் காட்டும், படையும் பொங்கும்; மூன்நீர் கலமுடைத்து, படை தேர்பலவுடைத்து என இயைக்க. சுணங்கு கடல் படை என்னும் இருபொருள் கட்கும் வேற்றுமை சமமாகச் சொல்லப்பட்டவாறும், ஒப்புமை குறிப்பாயறிய நின்றவாறுங் காண்க. [பி. கடற்படையும்.—தி. கடல்படையும்]

502. இது, மேற்கூறிய அணியுள் ஒருபொருள்வேற்றுமைச்சமத்துக்கு மேற்கோள். 'அனைத்துலகும்.....அரிதாம்' என்பது, கடல் சேனையிரண்டற்கும் உரிய பொதுத்தன்மை. 'நீர்வடிவிற்று' என்பது கடற்கேயுரிய சிறப்பியல்பு.

503. ஆய்படை—தெரிந்து கொள்ளப்பட்ட படைவீரர். அவர் நட்பிற் பிறழாது கூலிக்கொண்டு தம் தலைவருடன் குழாமாகச் செல்வர் என்றும், அந் நாய்களான் வேட்டையாடப்பெறும் பன்றிபோல்வர் பகைவராதலின் அவர் செருவிடைச் செய்வதென் என்றும் கருத்துக்கொள்க.

504. இதனை "ஏவல்மிகுவேந்தன் மொய்த்தவழி யொருவன்—ருன் மீண்டெறிந்த தார்நிலை"க்கு மேற்கோள்காட்டுவர் நச்சினார்க்கினியர் (தொல். புறத். 68). அஃதாவது வேற்றிடத்துப் பொருதுநின்ற வீரனொருவன் தன் வேந்தனைப் பகைவர் மொய்த்தவழித் தான் அதுகுறின்றும் விரையவந்து தார்ப் படையில் தன்னரசனைத் தாங்கிப் பகையெறிந்த நிலை எ-று. தார்—மூன்றுற்றுப் பொருபடை. தகை—பெருமை.

505. தொல்காப்பியப் புறத்திணையியல், 14-ம் சூத்திரத்தில் இதனை உரையாசிரியரும் மேற்கோள்காட்டினர். ஒற்கம்-தளர்ச்சி.

506. யானைமறமாவது—'எழுமாவக் கடந்ருனையான், மழகளிற்றின் மறங்கிளந்தனறு' எனபர் (பு. வெ. 7, 6). இதனை 'யானைநிலை' என்பர் நச்சினார்க்கினியர். காயத்து ஊறு - உடறபுண்.

507. குடையும் அதனை அடர்த்த யானைத் துதிக்கையுங் கூடியுள்ள தோற்றம், மதியும் அதன்பகையுங் கலந்த தோற்றம் போன்றதென்க. மதிப்பகை - கேது.

508. யானைக்கிட்ட கட்படாத்தைக் குருதியாறு நீத்துச்செல்வதனைக் கண்ட கழுகுமுதலியன உடன்றெழுக்கன என்க. மூன்றுகடம் - மும்மதங்கள். [பீ. மூன்றும்.—தீ. மூன்று].

510. அயிற்கதவம் - இருப்புக்கதவு.

511. உஞ்சை - அவந்தி. கோழியர்கோன்—உறையூர்வேந்தனைசோழன்.

512. பாற்றினம் - கழுகுக்கூட்டம். கதித்தல் - ஒலித்தல் (பிங்.). அலங்கல் - அசைதல்.

513. கோடும் நகமும் முறையே இற்றும் தேய்ந்தும்போனமையால் உண்டான அழகழிவுக்கு நாணி என்க. 519-ம் பாடலுடன் இக்கருத்து ஒப்பிடற்பாலது. புறங்கடை-பிடிநின்றசாலைக்குப் பின்புறமுள்ள இடம்.

516. வல்லி-கால்வலங்கு. கண்பரிதல்—வலங்குக் கணுக்கள் அறுதல். நால்வாய்ப் பொருப்பு, கடைநிலைத்தீவகம்.

517. ஏற்றூர் - எதிர்த்த பகைவர். அகலம் - மார்பு.

518. வஜி - எழுத்தாணி ; 'பொன்னேலை செம்பொனேசியா வெழுதி' (சீவக. 369) என்றுர் பிறரும்.

520. மலைபோன்ற தோற்றமும்; கடல்போன்ற ஓசையும், புயல்போன்ற கடாமும், காற்றுப்போன்ற செலவும் உடையதாய் எனக. குறியெதிர்ப்பை யாவது, 'அளவுநாடித்து வாங்கி அவ்வாங்கியவாறே எதிர்கொடுப்பது' (குறள். 221, பரி. உரை). கூற்றவனும் யானையிடம் குறியெதிர்ப்பைகொள்கை யாவது, தான் களத்திற் பகைவீரருடைய ஆயுளைப்போக்கிய உதவிக்குக் கைம் மாருக அவ்வியானையாலும் தனகாரியத்தை நடத்திக்கொடலாம.

521. மாறன்களிறு, பகைமன்னரது கையுடன்கூடிய ஒரு தண்டம் தன் துதிக்கையிடமாகவும், அவர் முடித்தலை கோட்டினிட மாகவும் கொண்டு சினமாறிப பொய்கைநீராடிச் செல்லும் என்க. [பி. நீராட்டி.—தி. நீராடி].

522. **களப்பாளன்** எற்பான் 1002—4-ம் பாடல்களிற் கூறப்படும் **அச்சுதகளப்பாளன்**போலும். கொடி-காகம். விடாதுபற்றுதற்பொருளில் மும் முறை அடுக்கியது.

523. பொன்னேலை—பொன்னலியன்ற நெற்றிப்பட்டம்.

525. வீரனெருவன்கூற்று. இருகையுடையாற்கு ஒருகையுடையது மாறண்மையின, அதனை எறிய நாணினன் எனக.

528. மழை மாலுந் தடக்கை—மழையோ என்று மயங்கற்குரிய கொடை யாற்பெரிய கை.

529. மேர்நின்முர்—எதிர்த்துநின்ற பகைவர். அவரது யானைப புரைசை யை (கழுத்திடுகயிற்றை)த் தொடும்படி எழும்பி, மூடிகளை உரைத்த மாவின் குளம்பு, உரைகற்போன்றன என்க.

530. இது முதனிலைக் குணத்தீவகத்துக்குமேற்கோள். 'சேந்தன' என்ற பண்படியாகப் பிறந்த சொல் முன்னின்று கண், திசை, அம்பு, மிசை, புன் என்பவற்றோடும் இயைந்து எல்லாவாக்கியங்கட்கும் உபகாரமாயினமை காண்க.

532. இது பொர்த்திதாழிலாற முனைநிலை கூறியவாறு. (3) கேண்மை அரசன்பாலுள்ள பற்று. (4) அழுத்துபதெல்—அழுத்தம் உண்டாதல். (5) நீர்ப்பெயல்—மழைவீழ்ச்சி. (10) தட்குதல்—தடித்தல். (12) சுட்டிய பெயரை—குறிப்பிட்ட வீரரை. (14) சிலைப்பு—ஒலி. (28) சூட்டிய—சூட்டுதற்கு.

535. இதுவும் அடுத்தசெய்யுளும் (534) பாரதப்பாட்டுக்கள். ஓடாப் படையாண்மையாவது, எதிர்த்துவரும் தார்ப்படையைத் தாங்கிநிற்றல். மாநாக

முன்னுயர்த்தான்—துரியோதனன். அவன் சேனை எதிர்வருமதனை எனவும், அச்சேனை அருகணையாவண்ணம் எனவும் கூட்டுக. வென்றுவரு கணையான் மகன்—அருச்சுனன்புத்திரனை அபிமன்னு. [பி. வருகணையாற்.—தீ. வரு கணையான்].

534. இதனைப் 'படையறுத்துப் பாழிகொள்ளும் வமம்' என்பர் தொல் காப்பியனார். 'கைப்படையைய போகஞ் செய்யாத போர்செய்யும் மயக்கம்' என்பது இதனைபொருள். தன் தண்டாயுதத்தை அடித்து இறுத்தமையால் மாமனை சகுனியைத் தழுவிப்பிடித்துக்கொண்டு வீமன போர்புரிந்ததை, அரசர் கண்டார்த்தார் என்க. பாய்ந்திற்ற எறிவேலகாம்பு வீமனது ஓடிந்த தண்டுக்கும் கொல்லேற்றைத் தழுவிப்பிடித்தல் அவன் சகுனியைப் புல்லிப் போர்மலைந்ததற்கும் உவமைகள். ஏறு ஆடல ஆயர்—ஏறுகோடல்விழவைக் கணமெடுப்பும் ஆயர். [பி போர்மலைந்.—தீ. போர்மலைந்த] 'பாய்ந்தழிந்த' என்றும் பாடம்.

535. ஏறுண்ணுதல்—தாக்கப்படுதல். மீட்டு—விலக்கி.

537. உழிஞைப்புறத்துத் தும்பையாய் வெட்டுண்டயாக்கை இருநிலந் தீண்டாவகை எழுந்துபன்றுதற்கு இதனை மேற்கோள்காட்டினர் நச்சினார்க் கினியர்.

538. "ஒருவற்குப பல்படை உடைதலின் மற்றவன் ஒள்வாள் வீசிய நூழில்" என்பதற்கு உதாரணங்காட்டினர் நச்சினார்க்கினியர். அறத்திற்பிறழக் குறைத்தடுக்கல் என்க. குறைத்து அடுக்குதல் - கொன்று குவித்தல்; ஆவது நூழிலாட்டு எ-று.

539. போன உயிர்போல உடல் தோன்றுது நிதைவுற்ற வீரனது முன் வைத்தவாய்ப் பிரவாங்காதகால்கள் அரமகளிர் மங்கலத்தின்பொருட்டு ஆங் காங்கு வைத்த மரவடிகண்போன்றன என்க. மரவடி—மரக்கால்; பாதுகை எனினுமாம்.

540. நீராட்டை இருதுண்டுகளாக அற்றவழியும், அத்துண்டங்கள் ஊர்ந்துசெல்லுமாறுபோல, தலை அற்றுழியும் உடம்பாடுதலின் 'அட்டையாடுதல்' என்பது பெயராயிற்று என்பர், நச்சினார்க்கினியர். வடுக கன்னடங்களில் மூறையே 'அட்ட' 'அட்டெ' என்பன, உடற்குறைக்குப் பெயர்களாதலின், அவற்று ளொன்று திரைச்சொல்லாய்த் தமிழில் வந்து வெட்டுண்ட உடற் குறையை உணர்த்திற்றென்றலுமாம். வேந்து—பகைவேந்தன்.

541. இருவரும் தபுநிலை—எயிலின் அகத்தும் புறத்தும் நின்ற வேந்த ரிருவரும் பொருதுவீழ்ந்த நிலைமை. ஒளிவாய்ந்த சந்திரசூரியர்கள் பகல்வாய்

ஒன்றிவந்து ஒளிமழுங்கியவாறுபோல, எயிலின் அகத்தும் புறத்தும் உள்ள வேந்தரிருவரும் எதிர்பொருது பட்டனர்; அறத்துறையாகக்கொண்டு எயில் கைக்கோடலே விரும்பிய அன்னோர் மறத்துறை கொடியது. எ–று. அறத்துறை – யுத்ததர்மம்.

542. இதனைக் 'களிற்றெருடுபட்ட வேந்தனை அட்டவேந்தன்வாளோர் ஆடும் அமலை' என்பர் தொல்காப்பியனார். களிற்றெருடும் பட்ட வேந்தனைக் கொன்றவேந்தன்படையாளர் வியந்து பட்டோனைச் சூழ்ந்து நின்றும் ஆடுந் திரட்சி" என்பது இதன் பொருள் (நச். உரை). அடிதோய்ந்தமண் - பட்ட வேந்தனது அடிக்கீழுள்ள மண். 760-ஆம் பாடலாகிய பாரதவகவலும் இத் துறைப்பாற்படும். அமலுதல் - நெருங்குதலாதலின் அமலை யென்பது திரட்சிப் பொருளதாயிற்று என்பர் (நச்.)

543. இத்துறையை "ஒருவ னொருவனை யுடைபடை புக்குக், கூழை தாங்கிய எருமையும்" என்பர் தொல்காப்பியனார். "தனது உடைந்த படைக் கண்ணே ஒருபடைத்தலைவன் சென்று நின்று அங்ஙனங்கெடித்த மாற்றுவேந்தன் படைத்தலைவனை அவன் எதிர்கொண்டுநின்ற பின்னணியோடே தாங்கின கடாப்போலச் சிறக்கணித்துநிற்கும் நிலைமை" என்பது நச்சினார்க்கினியர் உரை. எருமைமறமாவது "மூதிகிட்ட தன்சேனைக்குப் பின்னே கினத்தைக்கடவி ஒருவீரன் நின்றநிலை" என்பது ஐயனாரிதனார்கருத்து. சிறக்கணித்தல்-கண்ணை ஒருபக்கமாகச் சுருக்கிப்பார்த்தல் (குறள். 1095). இடையே அவ்வீரன் வருங் கால், மற்று அவனெதிர்வருவார் யார்? என்க.

544. கூதிர்ப்பாசறை வேனிற்பாசறை என இரண்டாம். கூதிர்வேளில் கட்குரிய பாசறையாவது, தண்மைக்கும் வெம்மைக்குந் தலைமைபெற்ற அக் காலங்களில், அரசன் போகத்திற் பற்றற்று வேற்றுப்புலத்துப் போந்திருத்தல் என்பர் நச்சினார்க்கினியர். "கூற்றனையான் வியன்கட்டேர்க் கூதிர்வான் றுளி வழங்க, ஆற்றலை நளிபொருகவ மயில்வேலோ னளிதறந்தன்று" (பு. வெ. 8, 15) எனக் காண்க. மூல்லைசால் கற்பு—இருத்தலொழுக்கம் அமைந்த கற்பு. பாசறையில் தங்கிய வேந்தனிடம் காமன் தன்செயல்புரியும் வலியின்றி அடைந்த தோல்வியளவும், இல்லிடத்துத் தனிநிலையிலுள்ள அவன் தேவியிடம் அவன் தன் ஆற்றல்காட்டிப் பெற்ற வெற்றியளவும் ஒத்தன என்க; என்றது பிரிவாற்றுமையால் உண்டாகும் வருத்தம் தலைவியிடத்தன்றிப் பாசறையிலுள்ள தலைவனிடமில்லை என்ற விளைவயின்மூண்டுநிற்கும் தலைவன்பெருமை உணர்த்தியவாறு. 'ஐங்கணை தோற்ற வளவு' என்பது சேர்பாடம்போலும்.

545. அலிப்பலியாவது "வென்வா னமருட் செஞ்சோ றல்லது, உள்ளா மைந்தர்பலி கொடுத்தன்று" எனக் காண்க (பு.வெ. 8, 30). குருதிப்

பலி என்றும் இதனைக் கூறுவர் (சிலப். 12, பக். 331). புறப்பொருள் வெண்பாமாலை உரையாளர் 'ஆவிப்பலி' என்பது 'அவிப்பலி' எனக்குறுகியது என்றார். வீரர் அவிப்பலிகொடுத்தற்பிறப்பைச், சிலப்பதிகாரம் இந்திரவிழ ஊரெடுத்தகாதையுள் (அடி. 76—88) அடியார்க்குநல்லார் விரித்துக்கூறு மாற்றுண் உணர்க. வாளின்வாயாற் சாய்ப்ப என்க. தீண்டாத-பகைவர் கருவியால் தீண்டுதல்பெறாத. காளை, தாளின்வாய்த் தலைவீழ்த்தான்; பெரு வீரனுக இனிப்பிறக்குமவற்குக் கொற்றவை நாளையே தன் கைச்சிலையை உதவுவள்; அதனை யாம் காணும் பாக்கியமில்லேம் என்க.

546. கனவெள்வியாவது, "அடுதிற லணங்கார விடுதிறலான் களம் வேட்டன்று" (பு. வெ. 8, 6) என்ப. [அணங்கு ஆர-பேய்கள் வயிரார உண்ண] கொற்றவை சூழ் அளிப்ப எனவும், அக்கூழுண்ட பேய்கள் போர்ப் பரிசிலெக்கண் டுவந்தனவாய்க் குரலைக்கூத்துக்கொண்டு ஆடின எனவும் கூட்டிப் பொருள்கொள்க. [பி. கூழ்ந் கொற்றவை.—இ. கூழ்கொற்றவை]

547. கிழா—சிதைத்து. வாங்குதல்—வெளிவர இழுத்தல். பூழியன்.—சோன்.

548. தலைவெள்ளோட்டு-வெள்ளிய தலையோடாகிய அகலில்.

549. ஏனைய பெண்டிர்—பகைவர் மகளிர். அவரெல்லாம் தத்தங் கணவருடன் தீப்பாய்ந்து உயிர்நீக்குஞ் செயலைக் கண்டு வழிஇ கண்புதைக்கலாஞன்; அங்ஙனமே, பகைவர்பிடிகள் தம் ஆண்களை இழந்து புலம்பியசெயலைக் கண்டு அவன்யானைகள் கண்புதைத்தன எ—று.

550. புருவமுரிவு-சினத்தால் உண்டான புருவவளைவு. சேட்கு அணித்தாய்-சேணெடு அணித்தாமாக; நான்காவது மூன்றன்பொருண்மைக்கண்வந்தது (குறள். 1214).

551. கொல்லியம்பொருப்பன் என்றது, கண்டுச் சோழனை. பின் னிரண்டடிகட்கும்,—'வல்லியொடுகூடிய அழகிய தாமரைப்பொய்கைகளாக உள்ளவை, புலிகளையும் தாவுகின்ற மரைகளையும் உடைய காடுகள் ஆயின்' என்று பொருள்கொள்க.

552. யானையின்கண்ணுக்கு நேராகத் தன் வேலை ஓச்சி அதனை வீழ்த்தி அதனையே தனக்குத் துணையாகக்கொண்டு தானும் வீழ்ந்திறந்த, கண்படுத்தல்—இறத்தல். தேற்றான்போலாவது "உடன்று மேல்வந்த வம்ப மள்ளரை, வியந்தன்று மிழிந்தன்று மிலனே யவரை.....கவிழ்ந்து நிலஞ்சேர வட்டதை, மகிழ்ந்தன்று மலிந்தன்று மகனீன்று மிலனே" என்றவாறு (புறம். 77), தன்வெற்றியை அறியான்போற் செருக்கின்றி உதாசீனஞ்செய்திற்றல்.

553. பகைவர்மகளிர் வெற்றிவேந்தன்கழலடைந்து, தம் இளஞ்சிறு வரை முன்னிறுத்தி அவன்பின் நின்றுகொண்டு, அழலாயினர்; அப்போது மாறன் (பாண்டியன்), அவர் கண்பொழிபுனலைத் தீர்க்க உதவும் மருந்து அவர் நாட்டினை அளித்தல் என்பர் எ-று. அழலிலைவேல் காய்த்துதல்—வேல்போலும் தம் கண்களை அழுது சிவப்பித்தல்.

554. மன்னர், அண்மைவிளி. நும் நெடுமதிலிற் சேரனது விற்கொடியை ஏற்றுமின்; வானோரும் விசும்பில் அவன்வில்லை எழுதிவாழ்தலை அறிமின் என்க. வானவனுதலின், வானோர் அவன் வில்லெழுதலாயினர் என்பது குறிப்பு.

555. தென்னவன் ஆணையால் பூமி மிதியாப்பொருள் இமையார் அடியே என்க. இந்திரனை வலியால் எறிந்து வென்றிகொண்ட பாண்டியனுணை துறக்கத் துண்டாவதல்லது, அத்துறக்கத்தார் இங்கு அடிவைக்கவும் இவன் இடங் கொடுத்திலன் என்றவாறு.

556. இறையோ—அரசேயோ! இறைகொள்—நிறைகொள்க.

557. நின்றீமின்—நிறையிறுத்தலைத் தவிர்மின். செவ்வி-உடம்பின்செவ்வை. 'பெருந்தரை மாந்தையார் கோ' என்பது புறத்திரட்டிற் கண்ட பாடம்.

558. வாய்மைவாழ்நர் - தத்துவஞானியர்: அவர் தம்முள் மூதிர்ந்த அறிவாள! என்க. நீயே தனித்தோன்றல்: நின் உறைபதி ஏகாந்தமானதோர் இடம்: அவ்விடத்து உதித்த நின் ஞானம் மூதண்மைபெற்றது: தொன்று பட்ட மூவகைக்காலமும் நின்னெடு வேறுபட்டனவல்ல என்க; நின் உணர்வில் மூன்றுகாலமும் தங்கும்: அவை நின்னெடு வேறுகா எனினும் ஆம். இதனால் 'மறுவில் செய்தி மூவகைக் காலமும், நெறியி னுற்றிய வறிவன் தேயம்' கூறப்பட்டவாறு காண்க. [பி. தொன்னெறி மாபினு.—தி. தொன்னெறி மரபுணை.]

560. அன்னை - அத்தன்மையுடையாய். நேரார் - பகைவர்.

561. இதுவும் அடுத்த வெண்பாவும் சிலேடித்தவற்றை நியமித்துச் சொன்னமையால் நியமச்சிலேடையாம் என்பர். 'இறைவனீ காத்தளிக்கும் எல்லை' என்பது இடைநிலைவிளக்கு. புள்ளுக்குச் சிறை பட்சம்; புனலுக்குச் சிறை அணை. மாளிகைக்குக் கொடி, பதாகை; காவிற்குக் கொடி, இலதை சிறைபடுதலும் கொடியனவும் இலையன்றி நின்னுட்டெல்லையுள் வேறில்லை என்பது குறிப்பு.

562. வெண்ணீர்மை - வெண்மை, வெளிற்றறிவு. கண்ணீர்மை சோர்வு—கட்குடிக்கும் தன்மையாற் சோர்வன, கள் நீர் சோர்வன. இரங்குதல் - புலம்பல், இசைத்தல், 'வெறியவாய்' எனவும், 'மென்கோல யாழே' எனவும் பாடம்.

563. இது பாரதப்பாடல்போலும். "மலையகழ்க்குவனே கடறூர்க் குவனே, வான்வீழ்க்குவனே வளிமாற்றுவனே" என்பது (பட்டினப். 271–3) இங்கு ஒப்பிடற்பாலது.

564. அசைத்தல் - அரைக்கண் உடுத்தல். அம்பலஞ்சித்தல் - தேவ கோட்டத்தை அலங்கிட்டு விளக்குதல். சிறைபிடித்த அரசரையும் அவர்மனைவிய ரையும் இத்தொழிலில் நியமித்தல் மரபு(பட்டினப். 246—49). இடுவார் முன் மலர்தல் - கொடுப்பார்முன் எற்கக் கைவிரிதல்.

565. கண்படைநிலையாவது, "அரசரும் அரசர்போல்வாரும் அவைக் கண் நெடிதுவைகியவழி மருத்துவரும் அமைச்சருமுதலியோர் அவர்க்குக் கண் யில்கோடலைக்கருதிக் கூறுவதாம்". உயிர்ப்பிடம் - மூச்சுவிடுதற்கிடமும். களிறு கவர் முயற்சியின் - யானைபிடிப்பார் இரவும்பகலும் கொள்ளும் முயற்சி போல; 'நின்னிடம் யானைப்பரிசுபெறும் முயற்சியால்' எனவும் ஒரு பொருள் படுதல் காண்க. வறிது - சிறிது. மா - வியங்கோளசைநிலை.

566. இது நாழிகைவட்டில்கொண்டு சென்றநாழிகையறிந்து அரசற்கு உணர்த்தும் நாழிகைக்கணக்கர் கூற்று. மூன்றியாமமும் மூன்றுநாழிகையும் இப்போதாயின என்பது பின்னடிகளின் பொருள். அமைச்சருடன் சூழ்கின்ற நிலையில் இரவு பெரிதுங்கழிய அவர்க்குச் சென்றநாழிகையை உணர்த்தி, இது காமன்றிரியுங் காலமாதலால் நீ போகமனுபவித்தற்குரியது என்று குறிப்பித்த வாறு.

567. நாண்மங்கலமாவது, "அறந்தருசெங்கோ லருள்வெய்யோன், பிறந்தாட் சிறப்புரைத்தன்று" (பு. வெ. 9, 24) என்பதாம். அரசன் நாடோ றும் தான் கைக்கொள்ளுகின்ற சிறைசெய்தல், செருச்செய்தல், கொலைபுரிதல் முதலிய செறுதற்றொழில்களை இந்நாளிற் கைவிட்டு, மங்கலவண்ணமாகிய வெள்ளணியணிந்து எல்லாவுயிர்க்கண்ணும் அருளேநிகழ்த்தலின், இதனை வெள்ளணி என்பர். ஏமாரும் - இன்பம் அடைமின்; ஏமம் ஆர்தல் - ஏமார் தல் என நின்றது. மன்னீர் - மன்னர்காள்! ஏம மூரசு-உலகிற்குக் காவலாகும் மூரசு. ஆம் ஆறு - இந்நாள் மங்கலமாம்படி. இப்பாட்டு இழிகுலத்தோன் பறைசாற்றினமை கூறியது என்பர் நச்சினார்க்கினியர்.

568. பண்ணீடுமின் - பூட்டுதலைத் தவிர்மின்.

569. இள்ளி - கோச்செங்கட்சோழன். இவன் முற்பிறவியிற் சிலந்தி யாகப்பிறந்து திருவானைக்காச் சிவபிரானைத் தன் வாயினூலாற் பந்தரிழைத்துப் பூசித்த சிறப்பாற் பேரரசனாகப்பிறந்தவன் என்பதனை—"சிலந்தியு மானைக் காவிற் றிருநிழற்பந்தர் செய்து, உலந்தலை நிறந்த போதே கோச்செங்க ணனு

மாகக், கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள், குலந்தனிற் பிறப்பித் திட்டார் குறுக்கைவீ ரட்டனரே" என்ற அப்பர்தேவாரம் (குறுக்கைவீரட், 4) முதலியவற்றால் அறிக. இப்பாட்டால், இரேவதி சேங்கணனது பிறந்த நாள் என்பது தெரியலாகும்.

570. முன்பு போய்கையாறாற் களவழிபாடிச் சிறைசீக்கப்பட்ட அரசன் ஒருவனே; இன்று வெள்ளணிநாளால் அது நீங்கப்பெற்றவேந்தர் பலர் எனபது கருத்து. போந்ததாமோ என்பது போந்தாமோ எனக் குறுகின்றது. கொலைச்சிறைதீர்ந்த வேந்துக்குழாம், ஒருவனற்போந்ததாமோ என்க.

571. மண்ணுமங்கலமாவது, வெற்றிவேந்தன் முடிபுனைந்து ஆடும் நீராட்டுமங்கலமாம். "எண்ணருஞ் சீர்த்தி யிறைவ னெய்தி, மண்ணு மங்கல மலிவுரைத் தன்று" என்பர் ஐயனரிதனார் (பு. வெ. 3, 36). அளி முடியாக் கண் குடையான்—அருள்புரிதற்கண் முடிவுடையவல்லாத கண்களையும் குடையையும் உடைய வேந்தன்; கண்களாலும் வெண்கொற்றக்குடையாலும் அளவிறந்த அருளை உலகிற்குப் புரிபவன் என்றபடி. ஆதி நாள் - ஓமம்வளர்த்துச்செய்யப்படும் முடிசூட்டுமங்கலநாள்.

572. வாண்மங்கலமாவது, வாள்வென்றியாற் பகைப்பிணிதீர்ந்த பேய்க் கணமும் பிறரும் அவ்வாளினை வாழ்த்துவதாம். கூளி - பேய். குருதிநீராட்டிக் காளியின்பகைதீர்த்து நாமுமுண்ட கிணத்தின்பொருட்டு, வாள்பாடிக் கூத்தாட வம்மின் என்க.

573. அரசெறிந்த புலவுநாற்றம் ஒருபக்கமும் அவ்வென்றி குறித்த மங்கலத்தில் அணிந்த சாந்துநாற்றம் ஒருபக்கமும் உண்மையால், வண்டு ஆடுதற்கும் நரி கொண்டாடுதற்கும் அவ்வாள் உரியதாயிற்று என்க.

574. குடைமங்கலமாவது, "நாற்றிசையும் புகழ்பெருக, வீற்றிருந்தான் குடைபுகழ்ந்தன்று" (பு. வெ. 9, 34). இதனைக் குடைநிழன்மரபு என்பர் தொல்காப்பியனார். மந்தரம் - மேரு; இங்ஙனம் கூறல் பழையவழக்கு (சிலப். 17, பாம்புகபிரு. அடியார்க்கு நல்லாருரை). ஓலை - குடைமேலே வேயும் தாழை முதலியவற்றின் மடல். திலதம் - மேலிடத்துள்ளது; அஃதாவது ஈண்டுக் குடைமேற் குமிழாம். "திலகவெண்குடை" (183) 'திலகமுக் குடைச் செல்வன்' (3001) என்றார் திருத்தக்கதேவரும் (சீவக).

575. அறநீர்மை தாங்குதல் - வெண்ணிறமும் தட்பமும் கோடல். வானப்புறத்தின் தன்மைபோல் முற்றுங் கவிக்கும் என்க. பிறசொல்வாக் கோவேந்தன் என இயையும்.

576. ஆரம் - ஆத்தி. சோழனது குடையின் தண்மையிலே வெம்மை யேற்றிச் சொல்லப்பட்டமையின் இது குணவவநுதிக்கு மேற்கோள். தண்மை நிழற்று - குளிர்ந்தநிழலையுடையது. வெம்மை நிழற்று - வெய்யதன்மையை யுடையது.

577. இதனைக் 'கபிலை கண்ணிய வேள்விநிலை' என்பர் தொல்காப்பிய னார். 'சேதாவினைக் கொடுக்கக்கருதிய கொடை'என்பது நச்சினார்க்கினியம். பொற்கோடு - அழகிய கொம்பு. பொன்னிறைந்த கோடும் பொற்குளம்பும் கன்றும் உடையவாக ஆனிரையை அளித்து என்க. இன்மகிழ்ான் - முகத் தான் இனிமையும் அகத்தான் மகிழ்வுமாய். சென்னி வேள்வியில் அளித்த ஆக்கொடையால் பூலோகம் கோலோகம்போலவும், அவ்வானிரையினின் றெழுந்த தூளிபோர்த்தலால், கோலோகம் பூலோகம்போலவும் மாறலாயின என்க.

578. இதனை 'வேலின் ஒக்கிய விளக்குநிலை' என்பர் தொல்காப்பியனார். மை - கிரியிற்பற்றுங் கரி. தீபிகை - விளக்கு. அவ்விளக்கு, அரசன், மனையுள் வினங்கும்படி. போர்மூனையுள் அரசன் வேல்வலையினும் தான் கோடாது, கோலா லும் கொழுந்து கோடாது என்க. கோல் - தூண்டுகோல்.

579. வாயினிலை எனினும் கடைநிலை எனினும் ஒக்கும். அஃதாவது, சான்றோர், சேணிடைவருதலாற பிறந்த வருத்தத்தீர வாயில்காக்கின்றவனுக்கு 'எம் வரவினை இசை' என அவர் கோயில்வாயிலின் நிற்றலாம். வேறுபட்ட சுரத்திடத்தும் வேந்தரிடத்தும் அமைந்த வெம்மையை மாற்றிக்கொள்ளவிரும்பி யாம் வந்தேம் என்க: அருவழிகளைக் கடந்துவந்த வருத்தந்தீரவும், வேற்றுவேந் தர்கொண்ட வன்கண்மை தீரவும் வேண்டியது எம் வரவு எனறு. வன்கண்மை- தமக்கு ஈந்தருளாமை. அவ்வேந்தர் தம்முட்கொண்ட பகைமைதீரச் சந் தின்பொருட்டுத் தம் வரவு எனினும் ஆம். இறைமகன்–அரசன்.

580. செவியறிவுறூஉ ஆவது, "பெருக்க மின்றிப் பெரியோர் நடுவண் அடங்கிவாழ்தல் கடப்பாடு எனக்கூறிச் செவிக்கு அறிவுறுத்துவது" (தொல், செய். 114). "ஓவதலை ஒருஉதல், ஒருஉ எனக் கூறுமாறுபோல, உறு வும் உறாஉதல், உறாஉ எனக் கூறப்படும்" என்பர் நச்சினார்க்கினியர். (1) முருங்க-அழிய. (2) கோட்டந்து - அகப்படுத்து. (4) பாடுபுக்கு ஆற்றி – ஊக்கத்தைமேற்கொண்டு .ஆற்றல்விளைத்து. (5) களம்வேட்டல் - களவேள்வி செய்தல். களவேள்வியின்வரலாற்றை 546-ம்பாடற்குறிப்பிற் காண்க. (3,5) தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன்மாபின் உள்ளாய்! இச்செழியன்வரலாறு புறப்பாடல் அகப்பாடல் பலவற்றால் அறிந்தது. (10) மழவர் - வீரர். அவராற் போர்முதலியவற்றிற் கொல்லையிடப்படும் நிலை

யீட்டத்தைக்காட்டும் அமைச்சர் என்க. (12) அடைத்த – கினைக்கென்று நியமிக் கப்பட்ட. ஆறு - நீதி. (13, 14) பொன் முதலிய பெரும்பொருளாசையால், பிறர் பெருமிடாவிற் புதைத்துவைதத நிதியமுள்ளவிடங் தேடிச்சென்று அத னைத் தோண்டிக்கொள்வதற்க. பொருளாசையால், பிறர் சோறடுகுழிசி வறி தாகும்படி அடியோடு கவர்தக எனினும் ஆம். (15) மறப்புறமாக,—காவல் வீரரைக்கொண்டு. மறம் - வீரர்; ''காப்பு மறம்'' என்ப (பதிற்று. பதிகம்). (16) அறப்புறம் - ஆதுலசாலை தேவகோட்டமுதலாயின. (17) அவையார்– தருமாசனத்தார்; அவரது ஒருபாற கோடிய நாவைத் திருத்துக; 'மாயங்கொல் போற்றி' (சீவக. 1720) என்புழிப்போலத் 'திருத்தி' என்பது ஈண்டு வியங் கோள். (22) அற்றம் - குடிகட்குற்ற குறை. (23) நீயாது - விலகாமல். (25) துஞ்சுதல் - தங்குதல்; 'அறந்துஞ்சுஞ் செங்கோலையே' (புறம் 20) என் புழிப்போல.

581. இருமூன்றில் ஒன்று - அரசர்க்குரிய ஆறில் ஒருபகுதி.

582. புறநிலைவாழ்த்தாவது, ''தெய்வவழிபாடு உடைத்தாயினும் மக்கள் கண்ணதேயாகித் தோன்றும் பாட்டுடைத்தலைவன் முன்னிலையாகத் தெய்வம் படர்க்கையாக வாழ்த்தும் வாழ்த்து'' என்பர் நச்சினார்க்கினியர். இடை போழ்ந்து - இடையே தாக்குதலால்; போழ மூல்லைமுகை மூன்றில் விரியும் என்க.

583. இருநெறி - கலத்தினுங் காலினுஞ் சென்று பொருளீட்டிய வழி. கூலம் - தானியம்; இஃது எண்வகையாகவும் பதினெண்வகையாகவுங் கூறப் படும் (சிலப்).

584. பரிசில்கடாநிலையாவது, ''பரிசிலரை நீங்குதலமையாது நெடிது கொண்டொழுகிய தலைவற்குப் பரிசில்வேட்டோன் தன்கடும்பினது இடும்பை முதலியன கூறித் தான் குறித்த பொருண்மையினைச் செலுத்திக் கடாவுமுறை'' என்பர் (தொல் புறத். 36). திறலராய்(5) உயரிய(6) ஒண்ணுர்(7) எனவும், அவர் எயில்(8) முருக்கி(9)எனவும் இயையும். (10)ஓவம்-ஓவியம்.(11)கோவம்- இந்திரகோபம். (16)ஒண்ணுர்துப்பின் - பகைவர்வலிகளைத் தன்வலியாக்கின. (22)புகழ்கொள்வன் என்றும, (23)எனக்கு ஈவன் எனறும் நோக்கி, விடுமதி என இயைக்க.(23) [பி. எனக்கெவனென்ன.—தி.எனக்கீவனென.]

585. இது, நேரிற்று மூவசைச்சீர் பதிஞறனுள்ளும் வெண்பாவுரிச்சீர் நான்கு மொழிய ஒழிந்த பன்னிரண்டு வஞ்சியுரிச்சீரும் முறையேவந்ததற்கு மேற்கோள். (1) கோடு - மலைச்சிகரம். கோட்டால் (-கிளையால்) விசும்பு தோய்ந்து (2) ஓங்கும் காம்பு (-மூங்கில்) (3) என்க. (6) கோடு - நீர்க்கரை. பாந்து(1) தோய்ந்து(2), பாய்ந்து(4), கரைகொன்று (5), ஊரும் காவிரி(7) என்க. (10) கடும்பு - சுற்றம்.

586. இயன்மொழியாவது, தலைவனெதிர்சென்று அவன்செய்தியே யன்றி அவன்குலத்தோர்க் கியல்பான செய்தியும் அவன்மேலேற்றிப் புகழ்தல். இப்பாட்டு வேற்றுமைபுருவகம்; அரசன்கரத்தினை முகிலாக உருவகஞ்செய்த வாறும், அவ்விரண்டற்கும் பருவத்தால் வேற்றுமைகூறியவாறும், அதனைக் கா மாகிய முகிற்கு உயர்வுதோன்றியவாறுங் காண்க.

587. தலையேறினன் - சிபி. 'பலபுரி மோவலர் பண்பு' என்றும் பாடம். 743-ஆம் செய்யுளும் இதுவே.

588. தன நேர்பு ஒழியும் தரு-தனக்கினையற்ற கரம். நாடனது தரு என்க.

589. உடனிலைக்கூட்டம் என்னும் அணிக்கு மேற்கோள். மானவேளும் எனை உம்மை தொக்கது.

590. மைந்தனைக் கடப்பம்பூக்கொண்டு வந்ததலும், வேம்மாறனை இன்றமிழாற் பாடுதலும் பயனெனத்தன என்பது கருத்து. பாடும் பாட்டு என்ப தற்கு உவமைக்கேற்பப் பாட்டுப்பாடுதல் எனப் பொருள்கொள்க.

591. அருச்சுனன கண்ணபிரானுடன் நிகழ்த்திய கயிலாயயாத்திரை யிடையிற் கண்ணனைச் சிவஞசப்பாவித்து அருச்சுனன் கண்ணன்முடிமேல் அருச்சித்த பூக்கள் சிவபிரானைத் தரிசித்தபோது அவன் அடியிற் காணப்பட் டன என்பது இதன் முன்னிரண்டடியின் பொருள். 'செங்க ணெடியான் மேல்', 'ஏற்றான்பால்' என்றாயினும், உவமைக்கேற்ப நெடியான்முடி என் றும் ஏற்றான் அடி யென்றும் கொள்க. ஸ்ரீ சடகோபர் திருவாய்மொழியில் "தீர்த்த னுலகளந்த சேவடிமேற் பூந்தாமஞ், சேர்த்தி யதுவே சிவன்முடிமேற் றான்கண்ம, பார்த்தன் தெளிக்கெழுந்த பைந்துழா யானபெருமை, போர்த்து மொருவராற் போசக் கிடந்தவீதி" என்று, கண்ணனடியிலிட்ட பூ சிவபிரான் முடியிலுற்றது எனறும், இக்கதை பிறரொருவரான் மாறுகக் கூறப்பட்டதென் றும் பாடுதல் காண்க. இங்ஙனம ஆழ்வாரால் 'ஒருவர்' என்று குறிப்பிடப்பெற் றவர் முத்தொள்ளாயிரவாசிரியராகலாம்.

592. கூந்தன்மா - கழுத்துமயிருடைய குதிரை; வினறது அக்குதிரை வடிவுடன் கண்ணனைக் கொல்லவபுக்க கேசி என்னும் அசுரனை. பூக்கொடி - நப்பின்னை. புலலியஞான்றுகண்ட என்றும அழியா மறுவை இப்போது யாங்கொளித்தாய் என்க.

593. வானிற்கு, மீனிற்கு என இரண்டாவதன்பொருளில் நான்காவது வந்தன.

595. கனவுதல் - கனவிற்கண்டஞ்சுதல்.

596. முனைப்புலத்தை, அதனை முன்பே உடையார்போலப் பகைவேந்து ஊர்முனையிற் புலம்புமுன அவர்க்கு நிரை மீளி எ-று. 'இவ்வாறு தெவ்வர் அடையும் நன்மை நமக்கும் உண்டாக என்று, குறிப்புவகையான் ஒன்று பயப்பா னேக்கி நினைந்துரைத்தது' என்பர் நச்சி னார்க்கினியர்.

597. தொல். புறத். 28, பேரா. குடுமிப்பருவம் - இளம் பருவம். புறம்பணையான் - மாசாத்தன்; "புறம்பணையான் வாழ்கோட்டம்' என்ப; ஊர்ப் புறம்பு அணைந்த இடம் புறம்பணையாயிற்று' (சிலப். 9, 13). புகார்ச் சாத்த னால், கண்ணகிதோழியாகிய தேவந்தி இளமையில் மனைவியாகக்கொள்ளப் பட்டசெய்தி ஈண்டு ஒப்பிடற்பாலது.

598. மேலிட்டு - வியாசமாக்கி. கண்பலி - கண்ணுற்கொள்ளும் பலி; ஆவது, இருடிபன்னியைக் காணும் விருப்பு. 'என்பலித் தாளிவள் யாது' என்பது பேராசிரியரையிற் கண்ட பாடம்.

599-600. இவ் விரண்டுபாடல்களும், சோழியிலும் திருநகரியிலும் சம் பந்தர், திருமங்கையார் இருவர் திருமேனிகளும் மூறையே கொண்டருளிய திரு வீதிப்புறப்பாட்டில், பெண்பாற்கைக்கிளையாக அபியுத்தர் பாடியனபோலும். ஓரடியார் மற்ற அடியாரைப் பாடியதாகவழங்குங் கதைக்குப் பழைய பிரமாணம் இன்று.

601. மூல்லைக்கதிபன் - திருமால்.

602. பேரழகைப்பருக இமையாது பார்த்து விழி பெருகினமையின், 'ஒருகுடங்கை யாயின கண்' என்றார்.

603. தன்மகன்கொண்ட கழிகாதலைத் தடுத்தற்குத் தாய் சதவடைத் தலை 604, 608-ம் பாடல்களானும் அறிக. குடுமி - இருமுனைகளாலும் நின் றாடுங் கதவுக்கூர். "திருகுங் குடுமி விடிவளவுந் தேயுங் கவாடம்" என்றார் பிறரும் (கலிங். பாணி. கடைதிறப்பு.). குடுமிக்கதவு என்பது வழக்கு.

604. அடைபட்ட கதவொன்றின் துளைவழியாகப் பவனிக்கண் அரசனைக் கண்டு மகள் உயிர்தரித்தமையின், அத்துளையை அமைத்த உபகாரியை (தச் சனை)ப் பின்னடிகள் புகழ்ந்தவாறு. காப்புள், யாப்புள் என விரிக்க.

605, மார்பினையும் வேலினையுமுடைய கோவே என்க. மார்தை - சேரர் தலைநகருள் ஒன்று.

606. மாமை-ஒளியுடன்கூடிய மேனிநிறம்; 'மாமைநிழற்றலின்' (சீவக. 1325) என்ப. பசப்பு - பிரிவாற்றுமையான் மகளிர்க்கு வருவதோர் நிறவேறு பாடு (குறள். 119, அதி. அவ.). "மாமையுங்! கவினு நொய்திற் போக்கினன்...

பொன்னிறப் பசலை மூழ்கிற்று" என்றார் பிறரும் (சீவக. 1291). இழந்த மேனிநிறத்துக்குப் பிரதியாக என்மேனியிலுற்ற பசப்புப் பொன்னாறியன்னது ஆகலின் அஃது அவ்விழந்ததினும் பழுதுடையதன்று என்பது கருத்து.

607. போரிற் புகலும் - போர்பெறுதற்கண் விருப்பஞ்செய்யும்; 'போரொளிற்புகலும் புனைகழன் மறவர்' என்ப (புறம். 31). கோக் கோதைக்கு-கோச் சேரனை அடைதற்கு; கோதைமார்பிற் கோதைக்கு எனினு மாம். நெஞ்சம் தன்னை அழன்றெரித்தலால் அதனைத் தணித்தற்கு நீரு நிழலும்போன்ற அருள் வேண்டி ஊராரிடம் ஓலமிட்டனள் என்க.

609. நாகம் - புன்னை. மாந்தை கடற்பட்டினமாதலின் 'நன்னுக நின்ற லரும்' என்றார்; 'புன்னையரும்பும் புகார்' என்ப (பெருந்தொ. 597). நன்னுடன் சேரன் என்னும் பொருட்டு.

610. காணியசென்ற யான், நாணிக் கதவடைத்தேனையினும் நெஞ்சம் நல்கூர்ந்தார்போல உழலும் எ-று.

611. "ஆடை யின்றி வாடையின் மெலிந்து, கையது கொண்டு மெய்யது பொத்தி" தமிழ் நா. 168.) என்ப.

612. 'வருக குடநாடன் வஞ்சிக் கோமான்' என்றது, பிரிவாற்றாது பெரிதும்வருந்திய மகனது செயலறவுநோக்கிப் பிறர் அஞ்சிக்கூறியது. அருகலர் - அயலார்; [அருகல்-அயல்; 'அவனென் னருகலிலானே' எனக் காண்க. (திருவாய். 1, 9, 2)].

613. செல்லுநெறி - பவனிபோம் வீதி. இவன் இவன் என்பன காதலுற்ற மகளிர்கூற்று.

614. காராடு - வெள்ளாடு. களனிழைத்தல் - வெறியாட்டயர்வித்தல். நெஞ்சினைக் களமாகக்கொண்ட.

615. மாக்கடுங்கோ - சேரன்பெயர். கடுங்கோவேயாயினும், குறையுற்றார் அவனிடம் குறைகூறிக்கொள்வது உலகியல் எ-று. மகளிர்நெற்றிக்குத் திலகம் அணிதல் "பவள வாணுத றிலக மிழப்ப' என்பதனாலும் அறியப்படும். (சிலப். 4, 54).

616. வஞ்சியான் வஞ்சியான் - கருவூராசனனை சேரன் வஞ்சித்தல்செய்யான். கடைவேலை - கடையுங்கால். வேலை - கடல். வளை - சங்கு. அன்னம்-திருமகள்.

617. உடைபீறம் - தோற்றோடிய களம்.

618. கதவு திறந்திடுமின் என்க. பூட்டுவிற் பொருள்கோட்கு மேற்கோள்.

619. பிடி அண்மைவிளி.

621. தண்டப்படுதல் - அபராதம் விதிக்கப்படுதல். கண்டதொன்று, கலந்ததொன்று, தண்டப்படுவது பிறிதொன்றாக வவ்வனது முறையைத் தோழி காண்க எ - று.

623. கண்ணும் காண்கொடா, நாணும் விலக்கும் என்க. செங்கோல் சென்று வடுப்படுத்தலால்.

624. என் தானை(-சேனை)யைக் கவர்ந்தோடிய செயலை அவன் தானை (-சேனை) அறியக் கிளப்பேன் என்பது நயம்.

626. செந்நின்றவாறு - நேர்வழிநின்ற முறைமை. 'சேரிதிரியாமற் செந்நிறீஇ' (திவ். இயற்பா. 1, 47) என்ப.

627. தெங்குண்ட தேரை படுவழிப் பிதிதல் - 'பேரையார் தெங்கினீ ருண்ணூர் பழிசுமப்பர்' என்ற வழக்காதல்.

628. புறக்கொடுப்பன் - பின்புறங்காட்டல். நாண் நிற்பன் - நாணின் கண் நிற்பேன்.

630. வெண்டேர், கீரால் மானே மருட்டிஞற்போலும்.

631. கீர்மேலெழுந்த நெருப்பு - அசம்பாவிதம். என்வாய்ச்சொல் பேதையர்க்குப் பொய்ம்மையாம் என்பது கருத்தி.

634. இரக்கண்டாய் - யாசிப்பாய்காண். மரக்கண் - மரத்தின்கணு. அழுவம் - துக்கமிகுதி; அழுவந்தோன்றத் தோளாற் றெழுதல் என்க.

635. இறைக்குடிகள் - இறையிறுக்கும் குடிகள். அற்றம்பார்த்தல் - சோர்வுநோக்கி இடைப்புகுதல்.

636. பண்டன்று பட்டினங் காப்பு, இனித் தியலை புகுதற்கு இடமில்லை என்ற குறிப்புப்பட வழங்குவதோர் தொடர். 'குறும்பர்களுள்ளீர், பாணிக்க வேண்டா நாடமின் பண்டன்று பட்டினங் காப்பே' என்றார் பெரியாரும். (திவ். பெரியாழ். 5, 2, 2).

637. வரி - அழகு. வம்பு - கச்சு. அளவன் - சோழன். தோரம் - குறிஞ்சி. சங்கும் வரியும் வம்பும் சரியும் என்க. முதனிலைத்தொழிற் றீவகம்.

638. வஞ்சியானல்லன் - வஞ்சியாதவனல்லன்; வஞ்சிநகருடைய சேரனல்லன். தமிழ்நா டடைந்து - சேர சோழ பாண்டிய தொண்டை கொங்கு மண்டலங்கள். கோ - சோழன்; பாண்டியனுமாம்.

640. பரிதொழுது கண்பனி சோர்தல் - சோழன் ஏறிச்செல்லும் பரியை நிற்கும்படிவேண்டியும் அது நில்லாமையால் அழுது கண்பனி சோர்தல். கண்ணீர்சிலும்பலாயிய சத்துவத்தை வேறுநெறியிற் புணர்த்தலால் இலேசவணியாம்.

642. மானவா - மனுகுலமேம்பட்டோ. மான் அவாம் நோக்கு - மான்கள் விரும்பும் பார்வை. கழி (-மிக) ஆதரவு கழியா என்க.

643. மூற்பற்றுதல் - பிறரிடமையை மூற்படக் கவர்தல். அங்ஙனங் கவர்ந்தவன் சோழனுதலின், அவன் தன்னைத்தானே முறைசெய்யுமாயின் என் செய்வான் என்று, தன்கைகுறைத்தான்செய்தியை உட்கொண்டு தூவி கூறினன்.

644. அணங்கன், காமன் என்னும் பெயர்மாத்திரையாய்நின்றது. தலம் - கைத்தலம். அதலன் - ஒப்பிலான். நேரிழைக்காய் - திருமகளை அடைதல் வேண்டி.

646. ஆகா - வேண்டாத பகைமையுள்ள. உலகவேந்தாதலின் திசையானைகளை அடக்கியாளும் பாகன் என்றார்.

647. பின்னைமதி - பிறைச்சந்திரன். கண்டன் - சோழன். மூன்று மதிவரப் பாடும் ஒட்டத்தில், கூத்தரது இப்பாட்டைக் கேட்டு 'ஒட்டா ஒருமதி கெட்டாய்' என்று புகழ்ந்து கூறினர் என்பது கதை.

648. கொங்கு ஐ - கொங்கின் அரசன். கரும்பு இறை - காமன். விழிவேல் அப்பு(-நீர்) இறைக்கும் என்க

649. செருவிற் புகுந்து பகைவர்யானைகளைக் கவரும் என்க.

650. தியேன் என்பது விகாரம். பொன்னுடையையும் யானையையும் அவ்விருவரும் பெற விரும்பினரில்லையாதலின் அவர் நல்லர். திருத்தார் பெற விரும்பிய யான் அது பெறாமையின் தீவினையுடையேன் என்றான்.

651. 'வானவற்கும்' எனத் திருத்திக்கொள்க.

652. நீட்சியும், வேலைப்பாடும் அமைந்த தாமம்; வார்ந்து அழகிய தாமம் எனினுமாம். ஊர் பண்ணிய மதியம் - ஊர்கோளால் அழகுசெய்யப்பட்ட மதியம்; ஊரார்பணிய எனினுமாம். மாலையால் வண்டோப்புதலைக் 'கற்பெறு

விசேடக்குறிப்பு. நூல

மாலை வீசி நாணெனுங் களிவண்டோப்பி' (சீவக. 2073) என்பதனாலும் அறிக. 'நறுங்கொண்டல்' எனவும் பாடம்.

653. பிறர்க்கு ஒன்று செய்யாதவராயினும், உறவினர் தம்மவர்க்காயிற் செய்வர் என்று உலகோர் கூறும் பழமொழி மெய்ம்மையாதலை, கழலகின்ற என் கைவளைகள், கோமானது பவனிச்சங்கம் இயம்பக்கேட்டுக் கழலாதுநின்றவதனால் அறிந்தேன் என்க. சங்கவளைகளாதலின், தம்மினமான சங்கினொலி கேட்டுக் களித்துத் தங்கலாயின என்பது கருத்து.

654. அரசனேறிய பிடி தன்னினமாதலின், 'எலா ஆ' என்றழைத்தாள். பவனியில் தலைவனை இனிதுகாண்டற்கின்றி விரையக்கொண்டுபோதுகின்ற பிடியை வெறுத்துக்கூறியவாறு.

655. பாயுமா - பாயுமாறு. கதவத்தைத் ஒருச்சாய்த்துக்கொண்டு யாரும் தொழும்படி. உபாயம் - இனிதுகண் டின்புறுதற்கேற்ற வகை.

656. ஐது - இளக்கம்; "சுண்ணம்....நாணீர் னேதுபட்டொழுகி" (சீவக. 117.) என்புழிப்போல. ஏடு கோடு ஆக - ஏடு எழுத்தாணிகளாகக்கொண்டு. ஏடுகொ டாகமெழுதுகோ என்பது பாடமாயின் ஆகத்தை வடாகக்கொண்டு எழுதுகோ என்க. ஆகம் - மார்பு. கனவட்டம் - பாண்டியன் குதிரை. புனத்தில் உண்டாகிய வட்டமாகிய தெரியல் என்க.

657. மாலைக்காலத்துத் தோன்றும் மலைத்தீப்போல நாடறிந்த ஆரவாரத்தைக்கொடுக்கும்.

658. நீதியாற் குற்றஞ்செய்தாரை ஒறுப்பவனே என்னலங்கவர்ந்த கள்வனுயின் யான் முறைவேண்டுவது யாரிடத்து எ - று. "யார்க்கிடுகோ பூசலினி" என்ற தொடர், "ஆர்க்கிடுகோவினிப்பூசல்" (தி. வி. திருவாய். 8, 2, 6;) 'ஆர்க்கோ வினிநாம் பூசலிடுவது' (10, 1, 7,) எனப் பெரியார் திருவாக்குக்களினும் பயில்வன.

659. "முறைதெரிந்து செல்வர்க்கு நல்கூர்ந் தவர்க்கும், இறைதிரியா னேரொக்க வேண்டும் - முறைதிரிந்து, கேரொழுகா ஞயி னதுவா மொருபக்கம, நீரொழுகப் பாலொழுகா வாறு" என்ற பழமொழிப்பாடல் சண்டி ஒப்பிடற் பாலது.

660. அன்று - நியாயமன்று.

662. நீலம், வழுதியாற் கொள்ளப்பட்டிருக்குந்தன்மை தவங்கொலோ என்க. நீலம் - பாண்டியன்மார்பில் அணிந்த குவளைத்தார்.

664. என் கையும் மார்பும் மெய்யும் அவனது (பாண்டியனது) கடலினும் மலையினும் பிறந்த பொருள்களையே அணிந்திருப்பவும் என் தோள்கள் என் பெருது வாடுகின்றனவோ, தெரிந்திலேன் என்க.

666. சோட்டுமண்கொள்ளுதல் - தலைவன் மார்பினை உழுது அதன்கண் உள்ள சாந்தினைத் தனங்கள் தம் தலைநுனியிற் கோடல்; 'முகிழ்முலை யுழுது சாந்தம், கோட்டுமண் கொண்ட மார்பம்' (சீவக. 2294) என்ப.

668. பிழைபாக்கு - தலைவனைச் சேர்தற்கண் தவறுகை. பாக்கு, 'படுபாக்கு' (குறள். 136) 'வைபாக்கு' (ஐந். 1128) என்புழிப்போல வினைப்பெயர்விகுதி. கூடல் - மகளிர் மணலிடை வட்டமாகச் சுழிபடக் கோடிழைத்தறியும் குறி; 'நீத்தகன்ஞர் வருகென் ருழிதிருத்திச் சுழிக்கணைக் கோதி' என்ப. (திருக் கோவை. 186)

669. தணைபடா - அருணேக்கம் கொள்ளாத.

671. மனைமீன்கையால் உலக்கையோச்சப்பெறுவனே என்க. கைம்மனை - சிற்றில்லுமாம். தொடி - பூண்; 'தொடித்தலை விழுத்தண்டினர்' என்ப. (புறநா.)

672. காட்டிற் காடைபிடித்தற்குச் சென்ற வேட்டுவன், அஃது அவன் கைப்படாது தன்கூட்டினின்றும் வெளியேறிவிட அஃதறியாது அதன்கூட்டை அவன் காவல்புரிந்தவாறு, அன்னையும் வேற்றிடஞ்சென்ற என் நெஞ்சினிலை யறியாது என் வெற்றுடலைக் காவல்பூண்டான் என்க. 'புதன மறைந்து வேட்டுவன் புட்சியிழ்ச்சதறும்' (குறள். 274) என்ப. 'குறும்பூழ் வேட்டுவன் வறுங்கை யும் வருமே' (புறநா. 214) என்பதனால் காடை வேட்டைக்குரியதாதல் காண்க.

673. 'பகற்கொண்ட சுடர்போன்ருன், மாவின தளிர்போலு மாணல மிழந்தனை" (கலித். 132) என்பதனால், மாந்தளிர்நிறம் மகளிர்மேனிக்கு உவமையாதல் காண்க.

675. கண்களை இறகுமுடிக்கொண்டு மகன்கூறிய வார்த்தை.

677. உகுவாய் நிலத்தது - நிலை நீரை உருக்கும் கரையினதான. மணன் மேலெழ முதிர்ந்த சகடம் திரும்பப் புருத்திற்குத் திரைவரவு பார்த்திருக்குங் கொற்கை எனக.

678. கூறிடுவாய் - மிகைத்துபோகடுவாய்; தன்மை கெடுவிப்பாய் எ - மு. குடைகோல்களின் வெயமை கொடுமைகளைக் கூறுவாயாக எனினுமாம்.

680. பிணிகிடந்தார்க்குச செண்மகூத்திரம் வரிற் பிணியிக்கு நோய் செய்யும் எனபது சோதிடநூல்வழக்கு. மாலையில் ஓர் வாடை சீறிச் சினந்து வாரும் என்க.

682. இராவழி - இராக்காலத்து. 'இராஅவழிப்' என்று திருத்துக.

683. 'வீஞ்ந முதிர்ந்த விழுமுத்தின் கொற்கை' (மதுரைக்காஞ்சி, 217) 'பிணையல், கொற்கையம் பெருந்துறை முத்தொடு பூண்டி' (சிலப். 14. 80) என்பவற்றால் கொற்கைத்துறை முத்தின்பிறப்பிடமாதல் காண்க.

684. உணர்தல் - புலவிதெளிதல். தலைவன்கொண்ட புலவிதெளியாமை யோடு இரவுகழிந்தமையின் அவனதகலம் எய்தாமையாயிற்று என்க.

685. 'நல்குதி' 'நீயும் படுதியோ' எனவும் பாடம் (தொல். சொல். 453 இளம்பூ.)

688. அருந்தவ முனிவன் - விசுவாமித்திரன். மதியுடம்படுதல் - இராம பிரான் திருவுள்ளம் தன்னுளாளக்கருத்துடன் ஒற்றுமைப்பட்டிருத்தல். சீதா பிராட்டியின் மதியுடம்பாட்டினை 'அண்ணலு நோக்கினு ணவளு நோக்கினள்' 'இருவரு மாறிப்புக் கிதய ணண்ணினர்' 'ஒருங்கிய வீரண்டுடற் குயிரொன் றுயினர்'—என்பன முதலாகக் கம்பநாடர் மிதிலைக்காட்சியிற் சிறப்பித்தல் ஒப்பிடத்தக்கது.

689. ஆழி - கூடற்சுழி. பாடப்படுவோன் பெயரைச் சார்த்தி எழுத் தனபெழப் பாடினை எழுத்தானந்தம என்றும், 'நிரையவோஒ' என்பது அவ்வா றளபெடுத்ததென்றும் கூறுவர் (யாப். வி. பக். 518).

690. விண்டார் - பகைவர். போர்த்து - சேரன்மாலை. 'வேந்தருண்டாய் பவனிவருவோன்' என்று போந்துகண்டலரோடுஞ் சென்றுகண்ட என்மாட்டுப் புறவுரைபோந்தது என்க.

691. 'பணியாய்நீ யெம்பெருமான' எனவும் பாடம். (தொல். புற. 87, இளம்பூ.) 'எம்பெருமான்' கணியை நோக்கிய விளி. நோன்தலம் - நிரகபலன். கொண்கர்பெருமான் - மருதத்தலைவன.

692. களிற்றின் நெடிய கையாலுண்டாகிய நீர்த்திவலையாகிய இள வாடை நனைத்தது என்று ஒன்றன்மேலிட்டு மயிர்சும்பிய மெய்யைப் புனைந்தான் என்க.

693. சேலேகவண்ணன் - சிந்தூரநிறமுடையான். சாலேகம் - சாளரம். "காலேக வண்ணனைக் கண்ணுறக் காணவெஞ், சாலேகஞ் சாரடா" என்றார் பிறரும் (1036).

695. "சிறப்புடையராகிய தலைமகளையிகழ்ந்து தலைமகன் சிறப்பில்லாத பரத்தையர்மாட்டு நிகழாநின்றமையின், நாட்டுக்கடைஞருள்ளார் சிறப்பில்லாத நம்தை வன்றுப்புடைய ஆமையின்புறத்துடைத்துத் தின்பர் என்னும் இதனுல்

தொகுத்துவிளங்கச் சொன்னமையால் தொகைமொழியாயிற்று" என்பர் வீர சோழியவுரைகாரர்.

696. கள்வரின்மையால் வந்தவர்கோளுட்டிற் கதவு இரவினும் அடை படாதாதலின், அஃது இதழ்மூடி உறங்காத கண்ணுக்கு ஒப்பிக்கப்பட்டது.

697. நளிஇவிழிப்பெருமாள் என்றது காதலிக்கப்பட்டவளை. 'பெண் பெருமை யாக்கப் புரப்பெருமான்' (இராசராசனுலா 80) என்றாற்போல ஆகுபெ சொல் மகடூவுக்கு வழங்கியது.

698. 'எத்துணை மருங்கினு மகடூ மடன்மேற், பொற்புடை நெறிமை யின்மை யான' எனத் தொல்காப்பியனாற் பெண்மடல் விலக்கப்பட்டதனால் "இது மடலேற்றமன்று, எறுழல் எனக் கூறியதுணையேயாம்" என்பர் நச்சி னார்க்கினியர்.

699. கேள் - காதலிக்கப்பட்டவன். நம் கேள் எருமை, பொன்னுமை என மூல்லைநிலத்தலைவி கவன்றுரை என்க.

700. (2) அரசர்கள் - ஆய்க்குலத்தலைவர். (6) எழு - எறுவிடுக்குந் தொழுவைச் சூழக் கட்டிய மரம். (15) 'நிறத்துத் தன்மாலே' என்று திருத்துக. கைவரை நில்லாது - இறையுந் தாழாது; ஒழுக்கத்தின் எல்லை கடவாது எனினு மாம் (சீவக. 407, உரை). (15–20) எருமைகள் தழுவிப் பிடிக்கப்பெற்றுத் தொழு வினின்றும் வெளியேறினமையின், மணம்விரும்பிய தலைவிக்குக் கைவளைகள் கழல்வனவாயின என்க.

701. எஃகாடு - வேல். விழுப்புண்ணன்றித் தான்பெற்ற சிறப்பில்புண் ணுக்கு நாணி அதன்வாயைக் கிழித்தனன் என்க.

702. எற்கருவி அறிகோ - எதனைக் கொண்டு அறிவேனே? அப்பணை - சாரயமரம். குழ மூட்கள்செறியவுள்ள கழற்காய், அம்புகளால் மொய்க்கப்பட்டுக் கிடக்கும் வீரற்கு உவமையாதலை – "மொய்ப்படு சரங்கண் மூழ்க முனையெயிற் றுளிபோல, அப்பணைக் கிடந்த மைந்தன்.....பொலங்கழற் காயு மொத்தான்" (சீவக. 2387) என்பதனாலும் அறிக. (6) ஆவநாழி - அம்பறாத்தூணி. மூங்கின் மூல்லையாவது மறக்குடிப்பெண்டிர்வீரத்தைச் சிறப்பித்தலாம்.

703. குரங்குதல் - வளைதல். செதுத்தல் - வற்றியொடுங்குதல்.

704. தடியன் - வீரருக்குப் பரம்பரையாகத் தடிகொட்டிப் போர்க்களத் திதவும் இழிசினன்.

705. யானைமேல் தன்வேலினை எறிந்துபோக்கி மீண்ட மகனைநோக்கிய மூதிற்முய் கூற்று. வாதுதல் - காதுதல்.

707. ஆஞ்சியாவது தன்கணவன் உயிர்நீத்தற்குக் காரணமான வேல் வடிவைக்கண்டு மனைவி அஞ்சியதாம். எஞ்ஞான்றும் இன்பஞ்செய்த கணவனுடம்பு இப்போது அறிகுறிதெரியாமல் புண்பட்டு அச்சஞ்செய்தலின், அதன் நிலையாமை கூறியவாறு.

708. பேய்க்காஞ்சியாவது கங்குல்யாமத்துக் காத்தற்குரிய சுற்றமின்மையின் அருகுவந்து புண்பட்டவீரனுடலை ஓரியும் நரியும் தின்டலஞ்சி அவனுயிர் போந்துணையும் பேய்கள் பாதுகாத்தல். புண் அனைந்தர் - புண்பட்டதனால் உண்டாகிய மயக்கம். உலை - ஊலை, கூவிளி; 'உலைபிட்டிப்புலம்பியோட' (பெரியபு. திருஞான. 638)

710. பெரும்புகழுடையனுகி மாய்ந்தானெனுமவனைச் சூழ்ந்திய பெண் கிளைச்சுற்றம் குரல்குறையக் கூப்பிடும் அழுகையமைக்க.

711. எண்கு - கரடி. கல்லலை - குகை, அவரிஞ்று - கணைமனையின்றி. இறுவரை - பக்கமலை.

712. தபுதாரநிலை - தாரத்தை (மனைவியை) இழந்துநின்ற கணவனிலை. (பு. வெ. 10, 3). அழல்சேர்ந்து - அழல் சேர்தலால். சுமம் - விறகடுக்கு.

713. காடுவாழ்த்து - பிறந்தோரெல்லாம் இறந்தொழியவும் தானழியாத புறங்காட்டை வாழ்த்தல்.

714. புறநானூறு 239 - பாடலுரை காண்க.

715. இவ்வுடம்பென்று கணவனுடலைச் சுட்டியவாறு. வாராவுலகம் - துறக்கம். உடனுயிர்நீத்த மனைவிநிலைநோக்கிய பிறர்கூற்று.

716. ஏழகம் - ஆட்டுக்கிடாய். நாகம் - ஆதிசேடன். ஆட்டுக்கிடாயை வீரன் ஊர்தலுண்டென்பது 'ஏழகநிலை' என்ற புறத்துறையாலும் உணர்க. (பு. வெ. 10, 5).

718. பறைகெழுவாரணம் - மதமிகுதியால் பறையறைந்து வெளிச்செலுத்தற்குரிய களிறு. சிறைகெழுவாரணம் - கோழி.

720. நெடுமொழி - வஞ்சினக்கூற்று. வீரனெருவன் வார்த்தை.

721. வான்வாய்த்துக் கவிழ்தல் - வாட்டொழிவிற் பொய்த்தலின்றி மாற்றுரைக்கொன்று தானும் வீழ்தல். வீரனிறப்புக்கு மகிழ்ந்தவள் அவன் ரூய்; அதற்கு இரங்கினுள் பகைவீரர் தாயர் என்பது கருத்து. [பி. வீழ்த்தது; வீழ்த்த].

722. வருநார் தாங்கல் - தன்மேல்வருங் கொடிப்படையினைத் தானே எதிர்த்துநிற்றல். வெல்வருக - வென்று வருக. போர்க்களிற்றைக்கண்டு அதனைத் தாக்க இவன் நின்றுவிட்டான்; அஃதின்றேல் பகைவருள் யாவர் பிழைப்பார் என்க. போர்க்களிற்றைக் கண்டிராத இளமையால் எனினும் ஆம்.

723. பின்னையாட்டாவது வாளாற் பொருதுயர்ந்த அரசிளங்குமரனை அந் நாட்டிள்ளார் கண் டுவந்து பறை தூங்கிசையாக ஒலிக்கும்படி அவற்கு அரசு கொடுத்துக் கொண்டாடலாம். மன்னனுடைய புதல்வனை என்க.

724. நோம் கண் - நோவுற்ற கண்கள். 'நீரிலவாகியர்' என்று திருத்துக.

725-6. உன்னநிலை - வீரவேந்தனை உன்னமரத்துடன் கூட்டிப் புகழ்வ தாம். இம்மரம் தெய்வத்தன்மையுடையதாய்த் தன்னூட்டுக் கேடுவருங்கால் உலறியும் வாராதகாலம் குழைந்தும் நிற்கும் என்பர் இளம்பூரணவடிகள். உன்னம் - அண்மைவினி.

727. கழனிலையாவது, இளமைப்பருவத்தானொருவன் கவசத்தினை ஓடாதுநின்றமைகண்டு, வீரர் அவற்குக் கழல்கட்டுதலாம்.

728. கூதிர்ப்பாசறையாவது தண்மைக்குத் தலைமைபெற்றகாலத்துப் போகத்திற் பற்றறறு வெண்றிவேண்டி வேற்றுப்புலத்துப் படையெடுத்துப் போந்திருத்தல். வெம்மைக்குத் தலைமைபெற்றகாலத்து இவ்வாறு போந்திருத் தலை 'வேனிற்பாசறை' என்ப. கவலை - கவர்த்தவழி. உவலை - தழை.

730. தாழி - முதுமக்கட்டாழி.

731. கல்லாயும் என் தெரிந்து - தன்னுருவம் வருத்தற்குத்தக்க கல்லி னை ஆராய்ந்தின்ற என்னைக் குறிப்பிட்டு என்றபடி. தூரியம் - வாச்சியம்.

732. கால்கோள் - திருவிழாத்தொடக்கமாகக் கால்நடுகை. வரைக்கண் அறை (=பாறை). தாள் - மலையடி. மாத் தாளின் (முயற்சியின்) எனினும் ஆம். வரையறைசெய்தல் - வருத்தெடுத்தல். வரையறைவாரா - அளவுக்கு அடங்காத.

733. மீ - விண்ணுலகு. வாக்கடை - வீரன் கல்லில் பிரதிட்டைபெறற் குரிய.

734. நீர்ப்படை - கால்கொண்ட கல்லினை நீர்ப்படுத்தித் தூய்மைசெய்தல். கார்ப்படுத்த வல்லேறுபோல - மேகத்திடமாக உண்டாக்கப்பட்ட இடியேறு போல ஒலியெழும்படி.

735. வான்வழங்கு நீர் - ஆகாயகங்கை.

736. சீர்த்த தகன் - மணப்பொடி; திருநீறுமாம்.

737. பிறக்குதல் - மிகுவித்தல். பிறபெயர் - வேளிர்கள். வீழ்ந்தோனைப் பிறவீரர் சூழ்ந்த கல்லின்மேற் செய்தமைத்தார் என்க.

741. அடைவிரவிப் பொருள்வேறுபடவரும் ஒட்டணிவகை. மூதில் - மேகம், வள்ளல். இன்சொல் - இன்மொழி, புகழ்.

742. அடையை விபரீதப்படுத்துப் பொருள் வேறுபடவந்த ஒட்டணி வகை. இது, வறுமையுற்றாலுங்கிய வள்ளலொருவனைக் கொள்ளுங்கின்றது. சேர்வோர்க்கு அருமையும் இனிமையின்மையும் கருமையும் கடற்குண்மை காண்க.

746. இராமனது கட்கடை சிவக்குமாயின் அரக்கன்வலிபுண்டோ என்க. கண்சிவத்தற்கு - வெகுளுமிடத்து.

749. பரசிராமனிடமிருந்து உலகைத் தானம்பெற்ற காசிபன் தானீன்ற உலகைத் தானே காத்தளிக்க விரும்பி, பிறர்க்கு உதவசெய்யாது தானே பெற்றுத் தன்மகவை வாங்கிய தாயினை ஒத்தான்; அதனால், கொடை வென்றியை அப்பரசிராமன் உலகிற்கு விளக்கினன் என்பது கருத்து.

752. இந்திரன் தன்மைந்தனை விசயனது உயிர்காத்தலை விரும்பி இரவிமைந்தனை கன்னனே வெல்லுதற்கேற்ற வரம் பெற்றான்; அதனால் கொடுத்த இரவிமைந்தனேயன்றிப் பெற்ற இந்திரனும் பெருமைபெறலாயினன் என்க.

754. செயிர்த்தார் மறுவந்தார் - பகைவர் மனங்கலங்கினர்.

755. கலிவரல் ஊழி - கலியுகம்.

757. "இப்பாரதத்துள் ஒருவன் இன்னது செய்வல் என்று அது செய்ய மூடியாமையின் அவிப்பலி கொடுத்தவாறு காண்க" என்பர் நச்சினார்க்கினியர். புறவோர் இல் பாணிப்ப - அயலார்வீட்டில் தாமதிக்க.

759. பிறக்கிடம் - பின்வாங்குகை. மானவேந்தன் - விசயன். ஒல்லான் - ஒல்லானுக.

760. பாகன் - கண்ணபிரான். நிற்றந்து - நின்று. ஐவர்க்கு இடையோன் - விசயன்.

761. (2 - 3) 'சேயுயர்த்தம்' எனவும் 'தாராகணப்போர்' (திவ். இயற்பா. நான்மு.) எனவும் கூறப. உடன்வயிற்று இருவர் - உடன்பிறப்பினான் சந்தோபசந்தர். (12) கடர - நிலவிழிக்க.

763. கற்பிலூர் மால் (கண்ணபிரான்) வணங்கும் என முடியும். கார் காத்தல் - மழையைத் தடித்தல்.

764. அகலை = வயது. பதிற்றுப்பத்துகளும் இதனுட் காண்க.

765. வச்சத்தா மன்னவன் - வச்சநாட்டரசன் மரபினனும் தமிழ் நாட்டுப்பகுதியாண்ட வேந்தன்; இன்னோர் வத்ஸராஜன் எனச் சாஸனங்களிற் கூறப்படுவர்.

768. சொல் இகவா இல் - கணவன் சொற்கடவாத கற்புடைய இல்லாள். கீர்நாடு - புனலுடான சொற்றேசம்.

769. தொல். புறத்திணை. 5, இளம்பூரண. மேற்கோள்.

770. இது புத்தோள்ளாயிகீ செய்புள் என்பர் இளம்பூரணவடிகள் (தொல். புறத்திணை. 5).

771. வஞ்சிமேல் - நாலூரில் உள்ளவள்.

772. பறை நல்ல படா - நல்ல பறைகள் ஒலிபா; செத்தார்க்குரிய நெய்தற்பறையே டுதலெனப்பதாம் (குறள். 1115, பரி.)

773. கரைவெண - இரவாகிய கடற்குக் கரைபாக. காலையும் கண்பரிய, கவ்வையும் கடல்போலும், ஆவி ஆற்றாது மேகலையோட ஓடும் என்க.

775. சக்கரம் - உலகவட்டம். அரசக்குரிய இலேயோன் தங்கியவீட்டில் பகைவர் தீக்கொளுவியபோது, அதனினின்று தப்பமுயன்றவழி, ஒருபாதம் தீப்பட்டுக் கருகினமையால், அவ்வீரனுன் கரிகாற்சோழன் எனப்பட்டான் என்பது வரலாறு.

777. கச்சியிலுள்ள வரைக்கையை உடையனாகிய உமாதேவியின் காமக் கோட்டம் என்க. மாசாத்தன் உதவிய செண்டு(ஓர் ஆயுதம்)கொண்டு கரிகாலன் இமயமால்வரை தீரித்தான் என்பது கதை.

778. இற்றைக்கு 1940-ஆண்டுகட்குமுன் கரிகாலன் காவிரிக்கரை கட்டியவன் என்பது இதனாற் பெறப்படும். "தொக்க சகனிற் றெளாயிரத்துத் தொண்ணூற்றில்" என்ற பாடல்படி இற்றைக்கு 1068-வருஷங்கட்குமுன் காவிரிக்கரை கட்டப்பட்டதென்பதாம். பின்னர்க்கண்ட பாடமுறையில் 9-ம் நூற்றாண்டில் ஆண்ட கரிகாலன் என்ற வேறொருவனே காவிரிக்கரை கட்டியவனுதல்வேண்டும்.

779. கஞ்சி = காவேரிக்கரை கண்டு - கச்சியையும் காவிரிக்கரையையும் செப்பனிட்டும் நிருமித்தும்.

780. மெய்க்கீர்த்தி என்பது, "சொற்சிரடியால் எழிலாசர் செய்கி பிசைத்த" லாகும் (வச்சணந்தி. செய். 34). இராசராசசோழன் ஆட்சிவருஷம் 985 - 1013. ஆகும். காந்தளூர்ச்சாலை என்பது திருவனந்தபுரத்துப் பக்கத்தது என்பர். வேங்கைநாடு - கோதாவரி கிருஷ்ணை ஜில்லாக்கள் அடங்கிய பிரதேசம். கங்கபாடி - காவிரிக்கரையிலுள்ள தழைக்காட்டைத் தலைநகராக உடையதும், மைசூர் இராஜ்யத்தின் தென்கிழ்பாலுள்ளதுமாகிய பகுதியாகும். நுளம்பபாடி - கங்கபாடியையடுத்ததும், மைசூர்க்கு வடக்கணுள்ளதும், நுளம்பர் என்ற பல்லவர் கிளையினரால் ஆளப்பட்டுவந்ததுமான நாடு. இரட்டபாடி - இராஷ்டிரகூடர் என்ற வேந்தராண்ட தக்கணதேசம் (Deccan). எழுசையிலக்கம் பன்னீராயிரம் என்பன அவ்வங்காட்டின் வருவாய்த் தொகைகுறிக்கும் என்பர் (Mysore and Coorg from the Inscriptions, 174). தடிகைவழி - பங்களூர்ஜில்லாவுக்கு மேலைப்பிரதேசம் என்பர். பழந்தீவு - லக்கதீவு (Laccadives), மாலைத்தீவு (Maldives) எனப்படுங் தீபகற்கள்.

782. இம்மெய்க்கீர்த்தியிற் கண்ட நாடுநகரங்களைப்பற்றி "எபிக்ராபிகா - இன்டிகா" (Epigraphica Indica) 9-ம் தொகுதி 280—1-ம் பக்கங்களில், டாக்டர் - ஹூல்ஷ் துரையவர்கள் எழுதிய குறிப்புக்களால் அறியத்தகும். இடைதுறைநாடு என்பது கிருஷ்ணைநதிக்கும் தெற்கிலும் துங்கபத்திரைக்கு வடக்கிலுமுள்ள ரெய்ச்சூர்ஜில்லா முழுதுமடங்கின பிரதேசம் என்றும், மண்ணைக்கடக்கம் என்பது மான்ய கேதம் என்றும், சக்கரக்கோட்டம் என்பது, பாஸ்டர் ராஜ்யத்து (Baster State) ராஜபுரத்தை அடுத்துள்ளதென்றும் கூறுவர் ஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரிகள் S. I. I. iii p. 466). முதல் இராஜேந்திரனது வரலாறுகளையும் வெற்றித்திறங்களையும் சோழவம்சசரித்திரம் 17 - 19-ம் பக்கங்களிற் கண்டுகொள்க.

783. இவன் 1018-ல் இளவரசுப்பட்டம் பெற்றவன். இவன் வரலாறு சோழவமிச சரித்திரம் 19—21-ம் பக்கங்களிற் காண்க.

784. இம் மெய்க்கீர்த்திகொண்ட சோழன்வரலாற்றைச சோழவமிச சரித்திரம் 21—23-ஆம் பக்கங்களிற் காணுக. வீராசேந்திரதேவன் என வரும் இடங்களை இராசேந்திரதேவன் எனத் திருத்திக்கொள்க.

785. இவன் மேற்கூறிய இராசேந்திரதேவன்மகன் (சோழவமி. பக். 23).

786. பரகேசரி இராசேந்திரதேவனுடைய மூன்றாம் மகன். இவனுக்கு வீரசோழன் என்பதும் பெயர். வீரசோழியம் இவன் பெயரால் அமைந்தது. இவன் பெருமைகளைச் சோழவமிசசரித்திரம் 25—26-ம்பக்கங்களிற் காண்க.

787. இவன் வீராராசேந்திரனுக்குப்பின் பட்டந்தரித்து, அவன் மருமகன் முதலாம் குலோத்துங்கனுற் கொல்லப்பட்டவன் என்றும் ,வீராராஜேந்திரனுக்கு மகன்முறையினன் என்றும் கூறுவர் (சோழவமீ, பக். 26).

788. கூடலசங்கமம் திருவஷ்ணாதி பஞ்சசங்காராதிகள் கூடும் இடம். கூடற்சங்கமம் என்றும் கூறுவர்; 'குந்தளரைக் கூடற்சங் கமத்து வென்ற கோனபயன்' என்பது கலிங்கத்துப்பாணி (193). புன் கூடல சங்கமம் - இழிவான சேர்க்கையுடைய கூட்டம்.

789. வடுகர் - கருநாடர்; கண்கூடப்பண்ணுதல் - இடத்தையடையச் செய்தல்; உறங்கச்செய்தலுமாம். கானில் வீண் கண்கூட இடம் பண்ணினன் என்க.

790. சோழன் பகைவராய் வாழவேண்டின், அவனுடன் பொருது வீரசுவர்க்கமடைதல், அன்றித் துறந்து வீடடைதல் ஆகிய இரண்டனுள் ஒன்று செய்யத்தக்கது என்பதாம்.

791. தற்று உற்று - இறுக ஆடையுடுத்துக்கொண்டு. வன்பாரதம் - வலிய பரப்பினையுடைய தேர். வலிய பாரதப்போர் போலப் போர்புரி எனினுமாம். வெற்பு - யானை. கொப்பம் - திருவஷ்ணாதியாகிய போராற்றல் கரைக்கணுள்ள ஊர்.

793. குடை நிலைபெற்றது, கோல் செம்மையொடுசென்றது; சேறல் - நிகழ்தல்; கோ - அரசியன்முறை. 'ஐவர் வந்து கோச்செய்து குமைக்க' (தேவா. 997,6) என்புழிப்போல. ஞாலம் கலியைக் கடந்தது என்க.

794. பகைதீர்தற்கு இடனுடைய சடை. கோரம் - சோழன்குதிரை, வான் - மேகம்.

798—801. முதற்குலோத்துங்கன் வரலாற்றினைச் சோழவமீசரித்திரம் 26—31-ஆம் பக்கங்களிற் காண்க. தாராவரசன் - மத்தியமாகாணத்துள்ள சக்கரக்கோட்டமண்டலத்து வத்ஸராஜ்யத்தைபாண்ட தாராவர்ஷன் (Ep In. ix, p. 178).

799 வேள்குலத்தரசர் - சளுக்கிய வேந்தர். பஞ்சவர் ஐவர் - ஐவர் பாண்டியர்; மார்க்கோபோலே என்ற பிறதேசயாத்திரிகரும் ஐவர்பாண்டியர் தங்காலத் தாணடனராகக் கூறுதல் ஒப்பிடத்தக்கது. சாவேறு - பகையரசனைச் சூழ்ந்துகாக்கும் படைமீது ஒருமுகமாகப்பாய்ந்து ஊடறுத்துச்சென்றும், அம்முயற்சி கைகூடாவிடத்து உயிர்துறத்தலைப் பொருட்படுத்தாமலும் தாக்கும் பெருவீரர்குழு. மலைநாட்டார் இப்படைவீரரை இவ்வாறே இன்றும் வழங்குவர். "சாவேறறிந் திண்செருக்கை யன்றமைத்தான்" (1110) என அபயன்

சேனபதியருள் ஒருவனனை மணவிற்கூத்தன் புகழப்படுதலும் காண்க. **எங்க ராயன் கலிங்கசேனபதியென்பது, "என்று கூறவே எங்க ராயனு, னென்று கூறுகே னென்று சைக்குமால்" என்ற கலிங்கத்துப்பரணித் தாழிசையாலும் அறிக.**

802. சயதரன் - முதற்குலோத்துங்கன். குந்தவை - அச்சோழன் சகோதரி. (சோழவமிச. 29)

803. அருவர் - தமிழர். 'அருவரருவரெனுமிவரைஞ்ஞை' என்றார் **சயங்கொண்டாரும்** (கலிங். 438). தீத் தீத் தீ = ஒதுங்கு ஒதுங்கு ஒதுங்கு என்னும் பொருளில்வரும் அடுக்கு; தெலுங்குத்தொடர்.

804. குணத்திலே குறைவுகூறிக் காரியத்திலே மேம்பாடுதோன்றச் சொண்ணமையாற் குணக்குறைவிசேடம் என்பர்.

805. அதுலன் - ஒப்பற்றவனனை சோழன. அதுலன கலிங்கத்துக் கவர்ந்த வளம் யானைத்திரள் எனபதாம்.

807. தலைமையரசனது ஆட்சியாண்டைக் குறிக்க, அவ்வாண்டின் எண்ணளவாக மணிகளை மாலையிற்கோத்துச் சிறந்தரசனிதல வழக்குப்போலும்.

809. மலை, கடல், அரவின்தலைகளிற் பிறந்த வடமுடையார் மூவரையே கொற்றவை, திருமகன், பூமிதேவி என்க. மலை - விந்தம

810. விழையார் - பகைவர்; அவர் விழைதல் ஆர்த்த மெல்லிய ஆடை தளிராச்சர்ந்த குழையாம் என்க. உழை - மானினம். உறை - உறையுள். முழை - குகை.

811—12. 1118-ல் பட்டம்பெற்றவன். இவன் வரலாற்றைச் **சோழவமிச சரித்திரம்** 35, 36 - ஆம் பக்கங்களிற காணக. குளம் - தெலுங்கவீமனூர்; இவ்விக்கிரமனுக்குத துணையாகச்சென்ற பரகேசரி பாண்டியன் மெய்க்கீர்த்தியினும் 'தெலுங்கவீமன குளவிகொண்டு தென்கலிங்கமடப்பித்து' எனவருதல் காண்க. (896). இமயலடப்பருவம் - பாலபபருவம்; மணிகா - ஆராய்ச்சிமணியின் நாக்கு.

813. அரும்பைத்தோள்ளாயிரம் என்ற நூலை இலக்கணவிளக்கப்பாட்டியலுடையார் எண்சையுளுக்குக் காட்டுவர் (88). அமீது கூததர் பாடிய நூல்போலும். செண்டாலடித்தது பொற்கிரி என்றது 'செண்டு கொண்டுகரி காலனெருகாலி லிமயச் சிமய மால்வரை நிரித்தருளி'ய கதையையாம். "வேங்கைவைக்க வொருதிருக்கைச் செண்டாற் கிரிநிரித்த சேவகனை" (விக்கிரம உலா. 155) என்றார் இப்புலவரும.

814. இவ்வெண்பாவின் முதலிரண்டடிகள், **விக்கிரமசோழனுலாவின்** 158-ஆம் கண்ணியாகும்.

815. 'இது சிலேடித்தவற்றைப் பின்னரும் விரோதிப்பச் சிலேடித்தமையால் விரோதச்சிலேடையாயிற்று' என்பர்.

816. நிகளம் - சங்கிலி.

817. மல்ல - மாமல்லபுரம். அஞ்சு அம்பு - காமனது பஞ்சபாணம்.

818. மன்னுண்டையை ஊதியெறித்து புன்வீழ்த்தும் சுங்குத்தான் குழல்.

819. இவன் வரலாற்றினைச் **சோழவமிசசரித்திரம்** 36, 37 - ஆம் பக்கங்களிற் காண்க.

821. **பேராசிரியர்** நேமிநாதர் என்பார் தொல்காப்பியத்துக்கு உரை விட்ட பேராசிரியர்போலும். மனதுங்கன் - உயர்ந்த மனமுடையான். அபங்கன் - பங்கமற்றவன்.

822. உரவிதாய் அல்ல - வலிதானமையால் அன்று. புரவிதாவிய வகையால், பூமி அரையவில்லை என்பது கருத்து.

823. நூலாடைநூடசானமாவது, தலையில் ஒருவர்க்குச் சமமாகப் பொன் மூத்தை முதலியவற்றை இட்டு நிறுத்தி, அந்நிறுத்தவற்றைத் தானஞ்செய்தல், 'உவாமதிபோய்விழுகின்றது' 'எழுகின்ற ஞாயிறு' என்பவற்றால், சந்திரவமிசத்தின் வீழ்ச்சியும் சூரியவமிசத்தின் எழுச்சியும் குறிக்கப்பட்டனவாம்.

823—4 நூலாடைநூடி நந்த சோழன் பொன்னிறையிற் குறைந்த பேரது கூத்தாலும், தானினைக்கபோது **புகழேந்தியாலும்** இவை முறையே [illegible] என்பது அபியற்பாலது.

824. பாண்டியன் 'தூயிழை புறக்கொடை அயில்வேலோச்சான்' என்பது பற்றியதேயன்றித் தான(சோழன்) புறங்கொடுத்தலில்லை என்பது பற்றியதன்று என்பது கருத்து.

829. தனமே என்று நுந்தம் - தனக்கே சொம்மாக நினைத்துத் துய்க்கின்ற.

831. கொடுத்தியெனக் கொள்கின்றிலேம் - கொடுப்பாயாக நினைக்கின்றிலேம்.

832. வேந்தும் பொருளும் எங்குமில்லை என்க.

833. வீரன், இராசராசன் II, பெயர்; 'சென்னிநாட் டெரியல் வீரன்' என்றுர் கம்பநாடரும்.. (கம்பரா. மருத். 58)

834. முன்றுங்துலோத்துங்கன் வரலாற்றினைச் சோழவமிசசரித்தி ரம் 41, 42 - ஆம் பக்கங்களிற் காண்க.

836. அவிரோதச்சிலேடையணி. இரவி - ஆதித்தன், ஒரு சோழன். இரவு - இரா, யாசகம். மாது இடத்தான் - சிவன்; மாதிடத்தால் - பெருவலி யால். மன்மதன் - காமன், அரசர் செருக்கு. மதி - அறிவு, சந்திரன். ரூமுதம் - நீலோற்பலம், பூமிக்கு மகிழ்ச்சி. தனதன் - குபேரன், தனத்தை அளிப்பவன்.

837. சேரடிக்கூர் வெம்படை - சக்காயுதம். இது புகழாப்புழ்ச்சி.

839. மாலையுவமை.

841. கந்துந்தொழில்புரிந்தார் என்பது உள்ளகமகிழ்ந்தபடி ஒழுகினோர், உள்ளம் வெறுக்கும்படி ஒழுகினோர் என முறையேபொருள்பட்டு, அப்பொருண் முறைக்கேற்ப, கெடாத வயலிடத்து வாளன் தாமரையை யடையவும், அசை யாத விடத்தேர்மாரும் பேரிடங்களைத்தாவும் மாசாத்தியிலங்கும் அடையவும் எனவும், இகழாத அரி (நெற்சூட்டை)யை மாளிடர் (உழவர்) சிரட்டவும் இகழப்படாத சிங்கப்போத்துக்கள் தின்புறுத்தவும எனவும் பொருள்கொள்க. பிரிமொழிச்சிலேடை.

843. பணிந்த பகையரசர் தம் சிலைமையெக்தன்பெயரை மார்பினும் தோளினும் எழுதிக்கொள்ளுதல் வழக்கு. 'மேலவர் மார்பினை நின்தோளி னுஞ்.....சேலெழுதும் பெருமான்' எனபர் (நமிழ் நா. 148). கயிறு - தளைக் கயிறு.

845. குணவேற்றுமையணி. மாபன் - கருநிறமுடையவன். சேயன் - செந்நிறமுடையவன்.

846. எற்றல் - பகைவரை எதிர்த்தல், யாசித்தல்; எற்றல் ஒக்குமாயி னும், எறிதலும் இரத்தலும் வேறுபட்டன என்பதாம்.

847. நெடுமொழுக்கு—ஏறடர்த்தல் விடைதழுவலும், வின் முருக்கல் வெதிலுரை மூரித்தலுமாகவும், சீர்நாட்டோற்கு (சோழனுக்கு)—ஏறடர்த்தல் பாண்டியனது கருவேற்றுக்கொடியையே சிலைத்தலும், வில் முருக்கல் சேரன் கொடியாகிய வெலையச் சிதைத்தலும் ஆகவும், நெடுமால் மாயன் (வஞ்சிப்பவன்), சீர்நாட்டார்மன் வஞ்சியோன் (கருஞ்சுடையான்) எனவும் கொள்க. எறு - பல்லவ ரது இடபக்கொடி எனினும் ஆம்.

848. 'வண்ண னவன்றன்' என்னும் பாடம். படி - வடிவம், போர்த் தொழிலில் உழந்து அடிகறுத்தமையின், 'ஆழ்க்டல் வண்ணன்' என்றார்.

849. கரம் - கிரணம், கை. இரவி - இரா, யாசகம். பங்கயமாதர் - தாமரையாகிய பெண், இலக்குமி. ஓராழிவெய்யோன் - ஒற்றையாழியைத் தேரினன்; தனியாணையுடைய விரும்பப்படுவோன்.

851. எழிறரு ஆனை - எழிலையுடையதான யானை.

852. ஈற்றடியில் 'மினனினும்' என்பதை 'மீனினும்' எனத் திருத்திக் கொள்க.

853. சுரை - சுரத்தல். கூடு - நெற்புரி. கூட்டில் மஞ்சு துயின்று, போந்து, கோழிலைப் பரக்கும் என்க. நாடு பெய்து பாய்த்து என இடத்துநிகழ்பொருளின் நிழில்கள் இடதநிகமேனிக்றன

854. வல்லமன் - சோழனபெயர்போலும். வல்லவன் என்பது பாட மாயின சளுக்கியவேந்தனை எனக.

857 பூழியன் - பாண்டியன; 'பூழியனெனப்பெயரெய்தியும்' என்பது இராசசிங்கன்மேய்க்கீர்த்தி (892); சேரனுமாம்.

858. சாணைக்கியன - சந்திரகுப்தனது மந்திரி.

859. மாயன் - கருநிற மூடையோன். ஒன்றே, விஞ.

862. சூமரி - நமரியாறு. குமரித்துறைவன் கங்கைத்துறையில் நீராடினன் என்பது கருத்து.

863. கோல் கொடுத்ததும் யாம் அதன் செலலலைக் கண்டிலம் என்க.

865. எற்றுரிமுரசம் - எற்றினது உரியையச் சேவாதுபோர்த்த வீரமுரசம் (புறநா. 228). மரபுளி - முறைமை. காழ் - இருப்புக்கோல். வறை - பொரித்த இறைச்சி. அருந்த வமாந்தணம் - உணணவிரும்பினேம்; 'அருந்தேமாந்த நெஞ்சம் - வருந்தவேண்டா வாழ்கவவன் றாளே' என்ற புறப்பாட்டடிகள் (101) இங்கு ஒப்பிடத்தக்கன.

866. இயற்கிரிறுழிசைக் கொச்சகக் கலிப்பாவுக்கு மேற்கோள். உச்சியார் - வானோர். வக்கிரன் - ஓர் அசுரன்; 'வக்கிரனைக் கொன்றான் வடிவு' என்பது முன்றுந்திருவந்தாதி (21). சமழ்த்தல் - மயங்குதல். செம்பூட்சேய் - பாண்டியன் பெயர்; 'செம்பூட்சேயார் கூற்றியல்' என்ற இலக்கணத்தால் இவன் பெயரான் அமைந்ததுபோலும். ஐவர் - திரிமூர்த்திகளும் இந்திர குபேரர்களும்; தமிழ்நாடைந்தின் (638) அரசருமாம்.

867—888. இப்பாடல்களிற்கண்ட நெல்வேலி, பாழி, செந்நிலம், முதலிய போர்க்களங்கள், வெள்ளிவீதி, சின்னமனூர்ச்சாஸனங்களினும் கூறப்படுவன. சம்பந்தமூர்த்திகள்காலத்தவனான நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன் என்றபாண்டியன் இம் மாறவர்மனே ஆவன்.

867. தலைப்பில் 'மூதல்மாறவர்மன்' என்பதனை 'இரண்டாம் மாறவர்மன்' எனத் திருத்திக்கொள்க. இறையனாரகளவியல் மேற்கோட் செய்யுட்களுள் கட்டளைக்கலித்துறையானமைந்தவை பாண்டிக்கோவையைச் சார்ந்த பாடல்களாகும் (ஆழ்வார்கள்காலநிலை, பக். 55 பார்க்க.). திகர் - போர். அரிகேசரி - நெடுமாறன் பெயர். இது பாங்கன்வினைதல்.

868. தலைமகன் தழையும் கண்ணியும் கொண்டு பின்னின்றவிடத்தும் தம்மாற் சொல்லப்படுவனோ அறியேன் என்று தோழி கூறியது. (இறை. 12, பக். 85).

869. ஒருசிறைநிலை என்னும் பொருள்கோட்கு மேற்கோள்; அஃதாவது - 'ஒருபாட்டினகத்துச் சொல்லப்பட்டபொருள் ஒருவழி நிற்பதாம்.' குருகு - குருக்கத்தி. பாண்செய - பாணர்தொழிலைச் செய்ய; இசைபாட. தலைவன் குறித்த பருவம்வந்தமை தோழிகூறல். நன்னுதல் என்செய்ய மெலிகின்றது என்க.

870. ஒதற்குப்பிரியுந் தலைவன் தோழியால் தலைவிக்குப் பிரிவுணர்த்தல். விசாரிதன் - நெடுமாறன்பெயர். செந்நிலம் - போர்க்களத்தொன்று.

871. பிரிவிடை ஆற்றாளாகிய தலைமகளைப் பருவம்வந்ததென்று தோழி வற்புறுப்ப வன்புறையெதிரழிந்து தலைவிகூறியது. இளவேனிற்பருவத்துப் பூத்தமலர்களைக்கொண்டுவந்து விலைகூறி வீதிதோறுந் திரியும் இப்பெண் தகவிலள் என்க. சங்கமங்கையைச் சங்காமங்கை என்று கூறும் சின்னமனூர்ச் சாஸனம். சங்கமங்கலம் என்ற ஊர் சிவகங்கைச்சீமையில் உள்ளது.

872. முன்னிலைப்புறமொழியாக வேங்கையை நோக்கிக் கூறித் தோழி செறிப்பறிவுறீஇயது. வானுடையான் - இந்திரன். கோட்டாறு - வேணாட்டதோர் ஊர். விடையில்லை - ஈரம் கூறும் மறுமொழியில்லை.

873. பின்சென்ற செவிலி சுரத்திடைக் குரவினைநோடி புலம்பிச் சொல்லியது. குரவு, பாலையை வளர்த்த அருமையறிந்ததாதலின், யான் அரிதின் வளர்த்த பாலையின் செயலை எனக்குச் சொல்லும் என்பது கருத்து. குரவின் பூ பாலைபோன்றது.

874. பாண்கன் விளுதல்.

875. தோழி தலைவியைக் குறையுயப்பித்தல். சேஞர் - சேரமண்டலத்துக் கொல்குகாட்டதோர் ஊர்.

877. பாண்கன் கழறத் தலைவன் கழற்றெதிர்மறுத்தது. விழிஞம்-மேல்கடற்பக்கத்ததோர் ஊர்; திருவனந்தபுரத்தை அடுத்தது. குடவரைக் கொம்பு - கொல்லிப்பாவை. 'குடவரை யெழுதிய நல்லியற் பாவை' (குறுந். 89) என்ப.

878. அறியாமைப்பிரிந்த தலைவன்செயல்பற்றித் தலைவிகூறியது. தண்ணை - எளிமையுடையதாக.

879. இது நடுங்காட்டம்.

882. வினைமுற்றிமீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியது. தோன்றின்று - தோன்றியது. கால் குடையா - காலாற் கிளறி. பூம்புறவு - அழகிய முல்லைநிலத்தின்கண்.

883. தோழி உடன்போக்கிற்குத் தலைவியை ஒருப்படுத்து ஒப்படை கூறியது. மணற்றி - சேலம் ஜில்லா திருச்செங்கோட்டுத் தாலூகாவில் உள்ள தோர் ஊர்.

884. பிரிந்ததலைவன் கூறிய பருவத்தின்வரவு கூறல்.

885. பிரிவிடையாற்றாளாயினள் எனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவல் என்பதுபடத் தலைவி கூறியது. 'இவ்வேனில்வரவின்கண் நம் மேல் இவ்வகை வெய்யவாய் விரியாநின்ற பிண்டியலர் அவற்கு மிக வெம்மையைச் செய்யு மன்றே? செய்தவிடத்துத் தாமெடுத்துக்கொண்ட பொருண்முடியாது மீள்வர் கொல்லோ என ஆற்றேனாகின்றேன் என்றாள்' என்பது களவியலுரை. (42—279.)

886. தலைவனே இரவினும் பகலினும் வரல் என்று தோழி குறிவிலக்கியது. பாண்டியன் பூதம்பணிகொண்ட செய்தி 892, 913, 943-ஆம் செய்யுட்களிலும் கூறப்பட்டுள்ளமை காண்க. மாதம் - செருக்கு.

887. மெலிதாகச்சொல்லிக் குறையுயப்பித்தது. பாண்டியன் அகத்தியமுனிவன்பால் தமிழ்கேட்டவன் என்பது 'அகஸ்த்ய சிஷ்ய:' என்ற இராசசிங்கன் சாஸனத்தொடாராலும், 'நிடவாசகக் குறுமுனிபாற் செந்தமிழ்நூல் தெரிந்தருளி' என்ற வீரபாண்டியன் மெய்க்கீர்த்தியாலும் (896) விளங்கும்.

888. காவலர் கடுகுதல். பாண்டியன் இடிக்கொடியுடையவன் என்பதனை 'மழையுரு மேந்திய கோன்' (117) 'மாறன் முன்னுளுயர்த்த கொடிமேலுருமு' (120) என்ற பாண்டிக்கோவைத் தொடர்களாலும் 'இடியுருமினை வலனேந்தி' என்ற வேள்விருடிச் சாஸனத்தொடராலும் அறிக.

889. கலிபரைசன் - கொடுங்கோலரசன். "இருங்கலி யுலகமெல்லா மிருள்கொள வெருவி நோக்கிப், பொருங்கலி யரசர் தானை போக்கிட மற்ற தன்றே" (சூளா. பக். 206) 'கட்டியங்காரனென்னுங் கலியரைசழித்தது' (சீவக. 2323) என்றார் முன்னோரும். இறக்குதல் - அறப்புறமுதலியவற்றை விலக்குதல். 'இறக்கிய வரியை நீக்க லென்றெழுதும் ஒருத்தர்' என்றார் சேக்கிழாரும் (பெரியபு. திருக்குறிப். 9). 'ஏதங்களாயின வெல்லா மிறக்க லிடுவித்து' என்ற ஆண்டான் திருவாக்கும் காண்க. களப்பிரர் என்பார் களப்பாளர் என்ற அரசமரபினராவர். 1002-ம் பாடற் குறிப்புக் காண்க. வில்வேலிக் கடற் றானையை - விற்படையை வேலியாகக்கொண்ட கடல்போன்ற சேனையை. "வேண்மிடைந்த வேலியும் பிளந்து" சீவக. 279), "வாங்குவில் லரண மரணமாக, வேறுபல் பெரும்படைநாப்பண்" (புல்லிப்பாட். 42—3). என்ற முன்னோர் தொடர்களுடன் இதனை ஒப்பிட்டுப் பொருள்கொள்க. பாழி, நேலி வேலி, சேந்நிலமுதலிய போர்க்களங்கள் பாண்டிக்கோவையினும் கூறப்படுவன (868—870). மங்கலபுரம் - மழநாட்டுத் தலைநகர்; "மழகன்னுடர, மங்கத மண்ணி லருங்கல மாக வதற்கேயோர், மங்கல மானது மங்கல மாகிய வாழ்மூதூர்" என்றார் சேக்கிழாரும் (பெரியபு. ஆனாய. 2).

890. காஞ்சிவாய்ப்பேரூர் - கொங்குநாட்டுள்ள மேலைச்சிதம்பரம் ஆகிய பேரூர். "கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர் குறுகினார்" (பெரியபு. எயர். 88) என்றார் சேக்கிழாரும். காவந்தபுரம் - களக்குடி; இது களக்குடி காட்டில் உள்ளது. (I. M. P. pp. 1402, 1494).

891. நாங்கை - சிவரமங்கலம். மீளும், அமரும், போம் என்பன உம் மீற்று முன்னிலைவினைமுற்றுக்கள்.

892. அமர்க்குப்பலமுறையும் தூது உய்த்தும் என்பதற்கேற்ப 'நற்றேவர் தூது நடந்தானும்' என்றார் புகழேந்தியாரும் (நளவெண். சுயம்வர. 137). பாண்டியன் மாகீர்த்தி தேவரிடம் தூதுசென்ற அசுரர்க்கும் அவர்க்குமிடையே சந்துசெய்வித்தான் என்பர், இறையனார் களவியலுரையார் (36, உரை). பாகசாதனன் - இந்திரன்; அவனுரம் வவ்வியது, வேலெறிந்து கடல் மீட்டது, மதுரைமாநகர்கண்டது முதலிய பாண்டியன்செய்திகளைத் திருவிளையாடற் புராணம் முதலியவற்றிற் கண்டுகொள்க. விசயனை வசசாபரீக்கியனன் - அருச்சனற்குச் சித்திராங்கதையிடம் பிறந்தமகனுப்பாண்டியற்குத் தத்த

புத்திரனுயின பப்புரவாகன். இவன் சாபரீக்கியவரலாறு மகாபாரதம் அசுவ மேதபர்வத்துக்கண்டது (கேந்தமிழ். தொ.-8, பக். 483). அம்பொற் சதிரம் உயரியும் - அழகிய பொற்குடையை உயர்த்தும். தலையாலங்கானத்துப் போர் வென்றவன் நெடுஞ்செழியனுவன். இச்சாஸனப்பகுதியின் மற்றை விவரங்கள் South Indian Inscriptions, Vol iii, 4—ஆம் சம்புடத்தில் விளக்கப்பட் டுள்ளன.

893. குழற் கால் - துளையுள்ள நாளம். பாண்டியன் சிவபிரானை வணங்கிய சமயத்தில் இச்செய்புள் பாடப்பட்டதாம். சிவபிரான் முடிமேல் உள் குலமுதல்வனுன சந்திரனிருபபயும், நீ அபிராமடிக்கீழ் வணங்கல் முறையோ எ - று.

894. (முதல்) கோ - பசுச்சாதி. (இரண்டாம்) கோ - அரசர்சாதி. திருமாலான கண்ணனுக்கு இயல்பான கோலெடுத்துக் கோத்தாரத்துக்குணம் அவன் பாண்டியனுய்க் கையில் வேலெடுத்தும் மாறியதில்லை என்றவாறு.

895. வடிம்பலம்ப நின்றருளி மால்கடலை யெறிந்தருளிய வரலாற்றைத் தீருவாலவாயுடையார் புராணத்துக் கடல்சுவற வேலெறிந்த திருவிளையாட லுட் காண்க. "முந்நீர் விழவி னெடியோன்" (புறநா. 9) "ஆழிவடிம்பலம்ப நின்றுன்" (நளவெண். சுயம். 137) என்று முன்னோர்கூறுவர் இப்பாண்டியனை. கூபகர் கோன் - கொல்லத்தைத் தலைநகராகவுடைய நாட்டிற்கு அரசன். கன்னிப்போர் - முதன்முதற் புரியும் போர்; 'காகுத்தன் கன்னிப்போரில்' என்றார் கம்பநாடரும். இப்பாண்டியனை விக்கிரமசோழன் (கி.பி. 1118—36) காலத்தவனும் அவற்குத் துணைபுரிந்தவனுமான பாண்டியன் என்பர் (T.A S.i, No. iii. p. 4).

896. இப்பாண்டியன் 1254-ல் பட்டம் பெற்றவன் என்பர். 'குறமுனி பால் செந்தமிழ்நூல் தெரிந்தருளி' என்பது, 'அன்றகத்தியன்வா, யுரைதரு நீத்தமிழ் கேட்டோ னிதென்' என்ற பாண்டிக்கோவைத் தொடருடன் (887) ஒப்பிடற்பாலது.

897. இப்பாண்டியன் 1251—1271 - வரை ஆண்டவன் என்பர். இவன் பெருவீரனும் 'எம்மண்டலமுங் கொண்டவன்' என்றும், திருவரங்கம் பெரியகோயிலைப் பொன்வேய்ந்தவனென்றும் கோயிலொழுகு கூறுதலும் ஒப்பிடத்தக்கது (பக். 12-14). இவன் வரலாற்றினை, Historical Sketches of Ancient Deccan, என்ற நூலின் 164-169 பக்கங்களிற் கண்டுகொள்க.

898. கோயில் - திருவரங்கம்.

901. காலுலவுந் தேர் - பேய்த்தேர்.

902. கொங்கை - கொல்லையில். முத்தவடம் - கண்ணிசொழுக்கு.

903. வேணு - திருவனந்தபுரச்சீமை. 'வாளால்வழிதிறந்தான்' என்பது இவனுக்கொரு பெயர் (I M. P. Mr 79). மார் - மார்பு; 'மார்திறந்தே' (903) 'அன்னதானத்துக்கு மார்தட்டிய தூசை' (1306) என்றார் பின்னேரும்.

904. சுழத்தானிட்ட இறை - களிறுகள்.

905. கண்ட கோபாலன் - தொண்டைநாடாண்ட வீரகண்ட கோபாலன் (கி. பி. 1259).

906. இப்பாண்டியன் 1216 - 1237-வரை ஆட்புரிந்த பெருவீரன்; 'சோணவெழுங்கியருளிய' என்பது இவனுக்குக்கூறப்படும் விசேடணமாகும். இவன் அது வழங்கியவாலாற்றை இம்மெய்க்கீர்த்தி கூறுதல் அறியத்தக்கது. கவடி - பலகறை. வீராபிஷேகம் - பெருவீரனென்பதற்காகச்செய்யும் மஞ்சனம். 'வீராபிஷேகம் விஜயாபிஷேகம்' என்ப. பிடிபாடு - ஆகாபத்திரம்.

910. தனக்கு ஒருபத்தேழு - தன் 17-ம் ஆட்டியாண்டு. கலிக்கொருபத்தாறு - கலிபிறந்த பதினாறுமாண்டு. குடுமிக்கோமான் - பல்யாகசாலை முதுகுடுமி போலும்.

911. மாறவர்மன் குலசேகரபாண்டியன் கி. பி. 1268-ல் பட்டம் பெற்றான் என்பர்.

912. தாளையுடைய அழகிய சுகம் (இளி) என்றும் கால் அஞ்சு (ஐந்து) உகம் (யுகம்) என்றும் பிரித்துப் பொருள்கொள்க.

913. பாண்டியன் பூதம் பணிகொண்ட கதை, 'பூதம் பணிகொண்ட பூழியன் மாறன்' எனப் பாண்டிக்கோவையினும், 'தடம்பூதம் பணிகொண்டு தடாகங்கள் பலநிருத்தியும்' எனச் சென்னமனூர்ச் சாஸனத்தும் கூறப்படுதல் காண்க. தடாகங்கண்ட பூதத்தைக் குண்டோதரன் என்று திருவாலவாயுடையார்புராணமும் கூறும் (7, 9). அண்டபுரேசன் - இந்திரன்.

914. சுடப்பட்டொழிந்ததனால் அரும்பியாய்ப் பேயாகிய மன்மதன்.

915. அழுக்கு - பிரிவால் வருந்திக் குளியாமையால் உண்டான உடன்மாசு. நிறை - தணிப்பட்ட நிலை.

916. பிரிந்த தலைவன் தான் வருவதாகக் குறித்த கார்காலங்கண்டு வருந்திக் கூறியது. சலராசி - கடல்.

917–22. இவை, 1283-ல் பட்டம்பெற்ற மாறவர்மன் விக்கிரமபாண்டியனைப்பற்றிய பாடல்கள்.

918. பகைமன்னர் கைவாளிரும்பே அவர் கால்கன்பூண்ட தலையிரும் பாயிற்று எ-று.

919. செங்கனகக் குன்றதல்ல - மேருமலையில் திரியும் யானையில்லை.

920. வேணுடன் - திருவடி.

921. புலனேகவீரன் - விக்கிரமபாண்டியற்கு ஒரு பெயர். கணபதி - காகதீயவரசர் பெயர். பாண்டியன் முனிவாறுதற்கு, பகையாகிய அக்கணபதி மூக்கை இருகயல்கள் உள்ளமையே காரணம் என்றது, அங்ஙனந் தன்னெடு பகைத்தவள் அக்குலத்துப பெண்ணரசியாதலின் என்க. 'வடதிசையிற் போகாதே யங்கிருப்பாள் பெண்ணென்று மீண்டபெருமானே' என்னும் அடித்த கவியினும். விக்ரமபாண்டியன்காலத்தே ஓரங்கல் அரசர் வமிசத்தில் ருத்ரா ாம்பா என்ற பெண்ணரசி 1261—1291 வரை ஆட்புரிந்தவள். இவள் கணபதியரசற்குப்பின் அவனுட்சி நடத்தற்குரிய ஒரு மகளாய் ருத்ரதேவ மகாராஜா என்னும் ஆண்பெயர் தரித்த ஆண்டவள் என்பர். (Ancient Deccan, p. 291—2). வடதிசையிற் பெண்பகையாதல்பற்றி மீண்ட உனக்கு ஈண்டும் அப்பெண்பகையுண்டென்பது குறிப்பு.

925. வெண்ணீர்மை - அறிவீனம். பதங்கமுவுந் தண்ணீர் - கடல்; ஆழி வடிம்பலம்ப நின்றவனுதலின், இங்ஙனங் கூறினர்.

927. யானையிற் பவனிவருதலைக்கண்டு கண்ணீருருத்து வாடும் பெண் என்க. பராக்ரமபாண்டியன் என்ற பெயர்தரித்த அரசர் பலருளர். அவருள் எவனைப்பற்றி இப்பாடல்கள் அமைந்தவை என்பது தெரிய இடமில்லை.

928. 'சர ராச' என்று பிரித்துக. சர ராசன் - போர்த்தலைவன்; சரம் - போர் (ஆடா). சம்புவைரி - மன்மதன். ராசர் அத்த - அரசரது ஆணையெல்லை. சுராராச நிவ்ய கிரீட விபாட - இந்திரனது கிரீடமுடியைத் தகர்த்தவனே!

929. காளமுகில் - காளமேகம்; ஐ, சாரியை. போர் எருதுகன்போன்ற முகில் என்றுமாம். 'நீலவல்லேறு பொராகின்ற வானமிது' என்ப (திருவிருத். 7) கடிந்து இட்ட - கோபித்துப் பூட்டிய. வேள் - காமன்.

930. ஆர்க்கும் - யார்க்கும். உயர்கோன், வினி. எல்லார்க்கும் குளிரும் நிலவு முலையாட்கு அனலாகும் என்க. வார் - கச்சு.

931. கூர் அம்பு ஒறுத்த என்க. நீயில் உடல்வெந்தாரை வாழைக்குருத்தில் இடுதல் வழக்கு.

932. காம்பு வனம்புகுதல் - மூங்கில் தோற்றிதல். உச்சிப்பாம்பில் - பாம்பின் உச்சியில்.

933. ஒருவாணுதல் - சத்தியபாமை. தருவின்மரம் - பாரிசாதம். இன் - அல்வழிச்சாரியை. அந்தி - அந்தியில்.

935. மாயனவனி - திருமாலின் தேவியாகிய பூமி. 'அத்தருக்கொழி' என்றும் பாடம். அ, பண்டறிசுட்டு.

936. குரங்கு - சுக்கிரீவன். குறித்தல் - அரணுகக்கருதல்.

938. அனுரை - இல்லக்கைத் தலைநகரான அனுராதபுரம். இராசை - இராசபுரமாகிய சங்காவிஞர்கோயில். செண்பை - செண்பகவனம் என்ற திருக்குற்றாலம். விந்தை - சாம்பூர் வடகரை விந்தனூர். முதலை - நாங்கு னேரித்தாலூகா முதலைகுளம். வீரை-வீரகோனம்புதூர். மருதூர் - அம்பாசமுத் திரம் தாலூகா திருப்புடைமருதூர்.

939. கருடனை - பூமியை உழுஞ்சடங்கு.

940. உபாணம், உவாணம் - அஸ்திவாரம் தோண்டுஞ் சடங்கு; வானம் தோண்டுதல் என்பர் இக்காலத்தார்.

941. காசை - காயா. காண்டல் - உண்டாக்குதல்.

943. அணங்கும் ஒன்றே - பால்வழுவமைதி. வாசன் மணி - ஆராய்ச்சி மணி.

955. அண்ணுள்வி - தமையன்.

958. இவனே வரதுங்காமன் என்பர். (T. A. S. i, 115.)

959—961. காண்மங்கல முதலிய மூன்றனியல்புகளையும் தொல்காப்பியம் புறத்திணையியல், 168-ஆம் சூத்திரவுரையால் உணர்க.

963. கரும்பு - பெண். வேம்பு - பாண்டியன்தார்.

964. ஏகம்பவாணன் - சிவலமாறனை வீரமாறன்காலத்தவன் (கி. பி. 1588) என்பது இப்பாட்டால் விளக்கும்.

965. வேம் பாகிலும் - வேரும் வெல்லப்பாகினிலும். வேலியிலே - கடலிலே. மாலைவைத்தல் - ஆசைவைத்தல்.

966. 'ஏகம்பவாண அலகை' என்பது பாடமாயின் வாணனுகிய பேய் என்க.

967. நம்மையோ - உம்மையோ. 'நம்மையொருகாற் காட்டி நடந்தால் நாக்கழுய்யோமோ' (திவ். பெரியதி. 4, 9, 1), 'காமிருக்கு மூர்பணியீர் அடிகே

சென்ன' (தேவா. 1109, 7) 'காமரை யாமத்தென் னெஞ்சு வவி யஞ்ச தலே' (திருக்கோ. 164) 'கெருகல் கடந்தவரோ ரமென்ன' (கம்பரா. தூர்ப்ப. 119) என்பனவற்றுல், ரகரமும் அதன்றிரிபுமாகிய ளகரப்பாட்டுத்தன்மை உயிர்வு தோன்ற முன்னிலைக்கண்வந்தமை காண்க.

968. 'புயவீரமாறன்' என்று திருத்துக.

970. பல்லாயிரை உலகமோம்பும் என இயையும். பரியையும் சினையையு முடைய பல்லவன். வெட்சித் தாயம் - நிரைகவரும் உரிமை.

971. கோ, சிங்கன், யானை என்ற நயங் காண்க.

972. 'வெண்பேட்டின்' 'சத்ருமல்லேசம்' 'விடமாக வாங்கு' என்பன திருத்தல்வேண்டும். 'சரேந்திரப் போத்தரையன்' என்பது 'நரேந்திரப் போத்தரையன்' எனச் சாஸனத்தில் தவருகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இவன், மகேந்திரவர்மன், சத்ருமல்லன், குணபான் என்ற பெயர்கள்பெற்றவன்.

973. எரியவர் - மூத்தவளர்க்கும் அந்தணர்.

975—7. சந்தி - தென்னாறெறிந்த சந்திவன்மன். தேசபண்டாரி - சந்தியின் ஒருபெயர்.

978. கடற்றிரையால் தரப்பட்டவனுதலின் நிரையன் எனப்பட்டான். 'அகீர்த் திரைந்தருமபி னாவோலும்பல்' என்றுர் சிறபாணற்றுப்படையிலும்.

979. ஆழியிழைத்தல் - கடலிழைத்தல். 'நிரையவோ' என இயற் பெயர்சார்ந்து எழுத்தனபெழுந்தமையால் எழுத்தானந்தம் என்பர்.

980. ஒளியான் - ஒளியோடு. ஞாயிற்றொளி தொண்டையர்கோன் நிறத்துக்கு உவமை.

981. 'சிற்றரசர்' என்றதிலைப்பு 978—ஆம் பாட்டிற்கு முன் வைத்தற் குரியது. தங்குஞ் செகம் - சராசரங்களைப் பரிக்கும் உலகம். அரசானது ஆர் வேம்பு பனைகட்கு (சோழ பாண்டிய சேரர்க்கு) நிழலளித்தலினும் என் பது நயம்.

982. தான் - நீ; இடவழுவமைதி. உண்ணுதற்கு வண்டே நீ யார்? என்க.

983. புன்னேலூர் எனவருமிடங்களைப் புல்வேலூர் என்ற திருத்திக் கொள்க. இவ்வூர் திருவண்ணுமலைத்தாலூகாவில் பெண்ணையாற்றங்கரையை அடுத்துள்ளது. 'சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா, தாதெரிண்ணைத் தடஞ்சிச், சாதலீக வெமக்கீத் தனையே' (புறநா. 91.) என ஔவை வேறுபாட்டிற் கூறியதுங் காண்க.

985. இது கொண்டுகூட்டுப்பொருள்கோட்கு மேற்கோள். "இதனுள், பாரிபறம்பின்மேற் றண்ணுமை தாளுணும் தோளான் எனவும், நிறன் வீறன் மூவ்வூர் வேங்கைவீ எனவும், உள்ளூர் நன்னாகையர் அலர் ஆரியமன்னர் பறையி னெழுந்தியம்பும் எனவும் முன்னும் பின்னும் கொள்வழியறிந்து கொளுவப் பொருளெதிரியைந்தவாறு கண்டுகொள்க" என்றார் சேனாவரையர் (தொல். சொல். எச்ச. 13).

987. 'தூஉத்தீம்புகை' என்பது பேராசிரியர்கொண்ட பாடம். 'தூஉஉத் தீம்புகை' என்புழித் 'தூஉஉ' என்பது நான்குமாத்திரைபெற்று நின்றதாக லின் இது செப்பலோசைபிழையாது வந்ததென்பர் நச்சினார்க்கினியர் முதலி யோர் (தொல். நூன். 6). 'தூஉஉய்த் தீம்புகையத் தொல்லிகும்பின்' என்றும் பாடமுண்டு.

988. இது கரந்துறைபாட்டொன்றினுள் அடங்கிய பழம்பாடலாகும். 'அழிசி யார்க்கா டன்னவிவள்' (குறுந். 258) என்பதனுல் அழிசிகாடு ஆர்க்காடு போலும். 'மிசையான்கோனன்னன்' என்பது அச்சுப்பாடம். களிற்றுத்தார் — யானைப்படை.

989. 'பட்டினநாடன்' எனத் திருத்துக. மணிமிடைபூண் நாடன் என்க.

990. பரம்பு ஏர் மருங்குல் - பாம்பை ஒத்த இடை. 'அரவினிடை' (998) என வருவதுங் காண்க.

991. வாட்டு - வாட்டற்கறி.

992. இது தலையாகுவள்ளலொண்புகழ் கிளப்பதாகிய உதாரதையணிக்கு மேற்கோள்.

997. புறம்பணையான்-மகாசாத்தன்; 'புறம்பணையாற்கு' என்று திருத்துக.

999. அவா, அகத்ததா புறத்ததா என்க.

1000. அரி - வண்டு, குரங்குமாம். குருகு - கொக்கு.

1001. அவம்பதம் - அவலாதற்கேற்ற பக்குவம். கவர்ப் பதம் - கவர்த்த கால்கள்.

1002. களப்பாளர் என்பார் ஒருசார் அரசமரபினர். 'களப்பாளனகிய கூற்றவனே' (நம்பி. திருத்தொண். திருவந். 47) என்பதனுல் கூற்றவராய னூர் இம்மரபினர் என்பது விளங்கும். களப்பிரர் என்று வேள்விருடிச் சாலனும்

கூறும் அரசரும் களப்பாளரும் ஒருவரே என்று தோன்றுகின்றது (Historical Journal, Vol. ii, p. 74-ல் 'களப்பிரர்' என்ற விஷயமாக யான் எழுதிய கட்டுரை காண்க). உணங்குதல் - உலருதல், வருந்துதல். இனி செங்கோல் வினைத்தவர் முற்றங்களில் அவை உலருதல்போல அச்சுதன்முற்றத்தில் அரசு உலரும் (வருந்தும்) எனக. 'சங்குணங்க' என்று திருத்திக்கொள்ளற் பாலது.

1003. 'அரசரவதரித்த' என்பது 'அரசனவதரித்த' என்றிருத்தற் பாலது. அரசன் - அரசனங்குமரன்.

1004. 'இறையறு திங்களிருந்தான்' என்பதும் பாடமாயின், இறை - வாசமாக என்க. 'இராமவிறை' என்று பாடமோதுவாரும் உளர். மேல்வந்த பாட்டில் பாண்டியன் தன்னை இராமனாகவும், அச்சுதனைச் சுக்கிரீவனாகவும் வைத்துப் பாடினமையே ஒருவிலங்கு கூட இட்டதற்குக் காரணமாம்.

1005. 'குடகர்க்கிடவர்' என்றும் பாடம். மேற்கிலுள்ளார்க்கு இடமானவர் - தென்பக்கத்தார்.

1007. இவன் சுந்தரத்தோள் மாவலிவாணன் என்பான் (1528 கி. பி.). காஞ்சிபுரசாஸன மொன்றில்-'தேவைகாவலன், திருவேகாவலன், வேதியர் காவலன், வீரகஞ்சுகன், புவனேகவீரன், சமரகோலாகலன்' என்று கூறப்படுபவன் இவன்போலும். இவன் சாஸனங்கள் திருப்புல்லாணி, தேவிபட்டணம், காளையார்கோயில் முதலிய இடங்களில் உள்ளன.

1009. தெருவில், பரத்தையால் தழுவப்பட்ட தன்மகனை கோக்கிக் கூறிய தலைவிகூற்று.

1012. வெங்கட் பொரு கயல் - மகளிரது வெய்ய கண்ணை ஒத்த கயல்.

1015. ஆய்த்த - ஆயிற்று. 'போக்கினீ ரென்னை போய்த்தென்' என்றார் கம்பராடரும் (சூர்ப்பண. 129). கொடும்பை-கொடும்பாளூர்; 'கொடும்பை நெடுங்குளக் கோட்டகம்' என்றார் இளங்கோவடிகள். (சிலப். 11; 71.)

1018. ஆகாயத்துப் பரவிய வானகிய சேய்மைகாட்டினைத் தாம் ஊர்ந்த களிறு நாட, கோனுடர் குன்றில் ஒளித்தனர் என்க.

1019. அண்ணல் வாயில் - சிற்றண்ணலாசல்.

1027. "இதனுள் மதியை விசயன் வேல்போல் எழும் என்பான் விசயன் எரிந்து எனை, அத் தொழில் அவன்மேலேறச் சொன்னமையால் சொல்லாணந்தம்" என்பர்.

1034. பூமேலாள் - திரு. தீமேற் படின் பூம்போர்வை என்செய்யும் - வேம். கொடுத்தால் சொல்வது - கடன்: திருவேங்கடன் என்றபடி.

1036. காலேகம் - கலவைச்சாந்து. சாலேகம் - பலகணி.

1037. இலேச்சுமடன் - இலேசுமந்து விற்கும் இலேவாணிகன்; "இலேசுமக்கு மொருவன்போ னுண்ணுணர்வு தனக்கில்லான்" என்னும் கீலகேசிச் செய்யுளும் உரையுங் காண்க (193).

1039. கோவின்மை - ஆராய்ச்சியில்லாச் செயல், செருக்கு. 'கோயின்மை' என்ற பெரியார் திருவாக்குக்களிற் பயிலும்; (நீவ். திருவாய். 6, 2, 6; பெரியதிருமொழி. 8, 2, 8.)

1045. 'மால்வேண்ட மண்ணளித்த...வள்ளல்' என்பதனால், இவன் வாணவமிசத்தவன் என்பது பெறப்படும்.

1046. நடுநாட்டுச் சித்தலிங்கமடத்துச் சாஸனமொன்று 'மகுடத்தியாதி' என்ற ஒருவனைப்பற்றிக் கூறுகின்றது (I. M. P. SA. 802).

1047. இவ்வகவலுள், முதல் இராசராசன்செய்திகளும், அவன் தாயின் குலமான மலையமான் வரலாறும், கபிலர் வேள்பாரியின் மகளை மலையற்கு மணம் புரிவித்து உயிர்துறந்ததும் பிறவும் புறநானூற்றுவரலாற்றை ஆதரித்துக் கூறப்பட்டுள்ளமை அறியத்தகும்.

1050. விஜயவாடை - பெஜவாடா என்ற தெலுங்குநாட்டே.

1058. தான் கடல்குடித்தது - ஆழி வடிம்பலம்பகின்றது.

1061. செந்தமிழர் - திருஞானசம்பந்தாயனர்.

1062. பொன்னம்பலக்கூத்தர், நரலோகவீரன் - மணவிற்கூத்தன்பெயர்கள்.

1065. அம்பலத் தாதன் - பகைவீரன்; புள் உண்ணும்படி அதற்குப் பயிக்கம் (=பிச்சை) இட்ட நரலோகவீரன்.

1071. அன்றினர் - பகைவர்.

1072. சிட்டப்பெருமான் - சம்பந்தமூர்த்திகள்.

1074. தன்கோன் - தம் சக்கரவர்த்தியாகிய அபயன்.

1076. கலிங்கரேறு - மணவிற்கூத்தன்.

1079. அபிடேகம் - திருமுடி.

1085. வாணிக்கு இருந்து உண்ணக்கண்டான் என்க.

1086. இறையிழிச்சுதல் - வரியைத் தள்ளுதல்.

1087. மாமத்தக் குன்று - களிறு; அஃது என்றும் பகைவரிடமிருந்து பெறுவதாம்.

1088. மூத்திறத்தார் - அப்பர் சம்பந்தர் சுந்தரர்.

1096. சதுக்கம் - விருதுவகை; 'சதுக்கஞ்சாமரை யுக்கமாதியாம் வரிசை' என்றார் கம்பநாடரும் (கம்பரா. நிந்தனை. 12). மேகடம்பம் - வாச்சியவகை (பாட்டு 786, வரி. 43).

1099. திசைகொள் தார் - திசைகளிற் பரவிய சேனை.

1107. கண்டர் - பகைவீரர்; கண்டகர் என்பதன் திரிபுமாம்.

1109. 'வெம்பரிமாக் கண்டருளென்று' என்று பிரித்தல் தகும்; 'ஆனை யிவையிவை...ஆடலயமிவை' என்றார் சயங்கொண்டாரும் (கலிங். 321).

1110. 'தென்னூட்டின்' என்றும் படித்தலாகும். சாவேறு - ஒருவகை வீரர்குழு; 799 - குறிப்புப் பார்க்க.

1111. மூலையுழுதலைக் காணும் ஆகம் (மார்பு).

1119. கோடிக் குறித்தார் - மாறுபட்டுத் தன்னைப் பகையாகக் குறித்து வந்தவர்.

1120. இவன், அபயனுக்கும் அவன்மகன் விக்கிரமசோழற்கும் அமைச்சருமொருவனாக விளங்கியவன். இவனை முடிகொண்டசோழ மூவேந்த வேளான் என்ற சாஸனமும் (I. M. P. SA. 986), முடிகொண்டசோழன் என்ற கலிங்கத்துப்பரணியும் (352) கூறும்.

1122. நிகரிலிசோழமண்டலம் - தளம்பபாடி (780 - ம் குறிப்புரை பார்க்க).

1124. ஓபளர் - ஒரு குடிப்பெயர்.

1125 மூனையதரையன் - அபயன் விக்கிரமன்காலத்து அமைச்சருள் ஒருவன். இவனும் இவன் தாதியும் பரமவைஷ்ணவபத்தர்கள். இவர்கள் வரலாற்றைச் செந்தமிழில் யான் எழுதிய வியாசத்தால் உணர்க (பே.தாகுநி. 7, பக். 190 - 4).

1126. சோமன் - ஒரு பெருவள்ளல்; கூத்தரை ஆபத்தினின்று காத்துதவியவன். இவன் வரலாற்றை யான் எழுதிய ஒட்டக்கூத்தர்வரலாற்றுட் காண்க (செங்குந்தர்பிரபந்தத்திரட்டு. முகவுரை.).

1127. புவனை - சோணாட்டுத் திரிபுவனம். வந்து உஞ்சோம் (உய்ந்தோம்) என்க.

1128. நாலு - நாலடியார்; இரண்டு - குறள்; 'ஆலும் வேலும் பல்லுக் குறுகி, நாலு மிரண்டுஞ் சொல்லுக் குறுகி' எனபர்.

1129. இப்போது அச்சிடப்பட்ட தினகாவெண்பாவில் இச்செய்யுள் காணப்படவில்லை.

1131–33. திரிகர்த்தராயன் என்ற பட்டப்பெயர் சடையனுக்கு வழங்கிய வரலாற்றை - "அளிக்கும் படைமூ வேந்தருங்கொண் டாடும் விருத்தாலசியமாய்த், திலைக்குந் திரிகர்த்த ராயனெனச் செப்பும் வரிசைத் திறஞ்சேர்ந்தோன், விலைக்கு மரிசி மாற்றியீர் வென்னங் கிழக்கு விலைக்குமென, வலைக்கும் பெருமைப் புதுவையர்கோன் வளஞ்சேர் சோழ மண்டலமே" என்ற சோழ மண்டலசதகச்செய்யுளால் அறிக.

1132. 'இராமனெடும் பாமாலெடுவ் குலம்' என்றது 'வெண்ணெய்தல் வூர்ச் சடையன்றன் மாபுலோர் கொடுக்க வாங்கி வகிட்டனே புனைந்தான் மௌலி' என்ற கம்பரிதிருவாக்கைப்பற்றி.

1135. மானியர் - மதிக்கப்பெற்றவர் 'மன்னிய சேகரன்' என்றும் பாடம்; 'பலமன்னியர் மண்டலிகர்' என்பர் (உத்தரராமா. திருவோக். 11)

1136. சராமன் - சடையவள்ளல் பெயர்; 'சராமன் வெண்ணை' என்றார் கம்பநாடரும் (கம்பரா. நாகபாச. 263.). 'கண்டன்மகன்' என்பது

சேர்பாடம். கண்டன் புதுவைச் சுல்தானால் தரிக்கப்பெற்ற அரசன்பெயர் போலும். இணையாரமார்பன் - சடையவள்ளல் தம்பி. 'விசயபிற் கடியரணம் பொடிசெய்த இணையாரமார்பன்' என்ற அப்பர்திருவாக்கினுள் இத்தொடர் பயிறல் அறியத்தக்கது (தேவா. திருப்பழனம்,7).

1137. இதனால் சடையவள்ளற்குமகன் சேதிபன் என்பது தெரிய லாகும். பிரிவுறுங்காலத்து மனைவி திருநீறுதந்து விடைதருதல் ஒரு சாரார் வழக்கு. 'மடிபிடித்துவின்றதில்லை' என்ற பாடம் சிறக்கும்.

1138-9. 'ஸகல கலா மார்த்தாண்டவர்மன் சிறைவாய் மூத்தபிருவடி' எனப் பெயரிய திருவாங்கூர் அரசனது சாஸனமொன்று கொல்லமாண்டு 716 (கி. பி. 1541)ல் சரித்திரத்து உள்ளது. வஞ்சிமார்த்தாண்டன் இவனுபின், சேதிராயன் என்பான் சடையவள்ளல்வழிபினனவன்.

1141. புழல் - புழற்கோட்டம். திருவொற்றியூர்க்குமேற்கே 5-மைலில் உள்ள ஊராம். 'அக்கணமே' என்று திருத்துக.

1142. வதுவைவரி - கல்யாணவரி.

1143. திருவேங்கட முடையானனை ஸ்ரீவாஸப்பெருமான்சந்நிதிமுதற் பிராகாரத்தின் தெற்குத்திருமதிலிற்கண்ட சாஸனப்பாட்டு.

1144. மூன்றாங்குலோத்துங்கன்காலத்தே (1178—1216) பொத்தப் பிச்சோழன் என்ற பெயர்கொண்ட சிற்றரசனொருவன் சோழர்கீழ் இருந்தவன் என்பது, சிதம்பர வேதாரணிய சாஸனங்களால் தெரிகின்றது (I. M. P. Tj. 1550; S. A. 102). புடோலி - கடப்பைஜில்லாவில் உள்ளதோர் ஊர் (I bid. Cd. 846). மேற்பாடி - சித்தூர்ஜில்லா சித்தூர்த்தாலூகாவில் உள்ளது. சோளேந்திரம் - அம்பூர்ச் சிவாலயம்.

1145. கோதாவரிஜில்லா, ராமசந்திரபுரந்தாலூகா திராக்ஷாராமத்துள்ள பீமேச்சுரர் ஆலயத்தின் தெழக்குத்திருமதிலிற் பொறிக்கப்பட்ட சாஸனப்பாட்டு. இடர்க்காம்பை ஷை திராக்ஷாராமத்துக்கு வழங்கிவந்த தமிழ்ப்பெயர் என்பது இதனாற் புலனும். இச்சாஸனம், மூன்றாங்குலோத்துங்கன்காலத்ததாகக் கருதப் படும்.

1146. பொழிவான் - பொழியும்பொருட்டு. தண்ணீர்த்தரம் - ஊருணி நீர்நிறைத்தாற்போல் உதவும் முறை.

1147. புழற்கோட்டம் - தொண்டைமண்டலத்து 24 - கோட்டங்களுள் ஒன்று. சென்னை எழும்பூர் முதலியன இக்கோட்டத்தைச் சார்ந்தவை. பாண்டியன்மூன் கழைக்கூத்தியொருத்தி 'விச்சுளிப்பாய்ச்சல்' என்னும் அரிய வித்தையை ஆடிக்காட்டியபோது, அவன், பெண்டிறுத்திபால் மனமீடுபட்டுப் பராமுகமாயிருந்துவிட்டு மறுமுறை அவளே ஆடச்சொல்ல, அரசாணையை மறுத்தற்கஞ்சி அவ்வாறே ஆடுபவன், அதனால் தன்னுயிர்க்கு நாசம்வருமென்று கண்டு இப்பாடலைக் கூறினள் என்பர். 'பாகென்ற சொல்லியை', 'புழற்கோட்டம் புகுதுவிரேல்', 'அயின்றை' என்பன பாடபேதங்கள்.

1148. 'சூலி முதுகிற் சுடச்சுடவப் போதசமை, பாலடிசி றன்னைப் பணைக்குங்கை' என்பது திருக்கைவழக்கம்.

1149. இப்பாட்டியற்றிய நெற்குன்றவாணர் என்பவர் கூத்தர்காலத்தவரென்பது, அப்புலவர் சிறுபுலவர்களைத் தண்டித்துவந்தபோது அதுபொறுமல் இவர் கூத்தரைநோக்கிப் பாடிய 'கோக்கண்டு' என்ற பாடலால் (1478) அறியப்படும். இந் நெற்குன்றவாணர் புகழ்ந்தாந்தாதி பாடியவரென்பதும் கனப்பாள மரபினர் என்பதும் 'கனப்பாள னெற்குன்ற வாணனந் தாதிக் கலித்துறையே' என்ற அவ்வந்தாதி யிறுதிச்செய்யுளாற் புலனாகின்றன. நம்பீகாளி என்பார் இரண்டாங்குலோத்துங்கன்காலத்து வினங்கிய பெரும்புலவருள் ஒருவர். இவர் நெற்குன்றவாணரைக் காணச்சென்றபோது அவர் வீட்டில்இல்லாதிருந்தமையால் அவர்தாதி வந்தபுலவரை உபசரித்துப் பரிசளித்தனுப்பினர் என்றும், பின் அங்குவந்த முதலியார் நடந்ததறிந்து மகிழ்ந்து பின்னும் அவர்க்கு வேண்டியன உதவினர் என்றும் தொண்டைமண்டலசதகம் கூறும் (83). தக்கயாகப் பரணியுரையாளரும் இப்புலவரைச் சிறப்பாகக் கூறுவர் (457). 'வல்லி' என்றும் பாடம். வல்லி - ஓர் ஊர்.

1150. இதன் முதலடியிற் குறிக்கப்பட்ட செய்யுள், செஞ்சிக் கொற்றத்தைமேல் புகழேந்தியார் பாடிய கலம்பகத்து உள்ளதாம் (தொ. சத. 63).

1151. பெருமங்கலம் - புள்ளிருக்குவேளூர்க்கு அணித்தான ஊர்.

1152. காளத்திமுதலியார் என்ற பிரபுவுக்கு இக்கதையைப் பிற்காலத்தார் கூறுதல் பொருந்தாமை காண்க.

1153. இது சத்திமுற்றப்புலவர்வாக்காகக் கூறுவர். நமிநந்தியடிகள் சரிதை சோழமண்டலசதகங்களால் இப்பாட்டுக் குடிதாங்கி என்ற தலைவனை வேறுபுலவரொருவர் பாடியதாகத் தெரிகின்றது.

1154. களந்தை - செய்யகளத்தூர்; பாண்டிநாட்டில் மானவீரன் மதுரை (மாஞ்மதுரை)க்கெதிர்த்துள்ளது. இப்பாடற்கதையை 'நன்ருய்வீரன்கதை' என்னும் தொண்டைமண்டலசதகச் செய்யுளான் (68) உணர்க.

1155. 'அவனிமுழுதுண்டும்...குருத்திரா வாழைக் குழாம்' என்ற கம்பர் பாட்டு இங்கு நோக்கிடற்பாலது.

1156. திட்டவீரன் - அங்ஙனம் உதைத்த புலவன்பெயர். 'பண்புடனே மெச்சியப்பா லும்புகழும் வீரவல்லி யாளவந்த' என்றும் பாடம்.

1158. பொன்பரப்பினன் - மூன்ருங்குலோத்துங்கசோழன் காலத்தவனை, அதளூநடையான் வாணகோவரையன் ராஜராஜதேவன் என்னும் தலைவன் (செந்தமிழ். 3, 323-7). ஆனேலை - அடிமையோலை; 'எழுதுமா னேலை வாங்கி' (தடுத்தாட். 45) என்பது பெரியபுராணம். திருமார்பில் ஆனேலைசெய்தலாவது, பணிந்த பகைவர்க்கு அவரதுமார்பில் இன்னுர்க்கடிமை என்று பச்சைகுத்திவிடுதல். இதனை 'மார்பெழுத்தாக்கல்' என்ப (ஈடு, 5 10-ப்ரவேசம்).

1159. மால் (கண்ணன்) வடமதுரையைவிட்டு வடகடலான்; வழுதி (பாண்டியன்) தென்மதுரையைவிட்டுத் தென்கடலான் என்க. மாகதர்கோ மான் என்பது வடநாட்டு மகததேசாதிபதியான சராசந்தனையும், தென்னுட்டு மகததேசாதிபனை வாணகோவரையனையும் குறிக்கும்.

1160. சுழன் என்றதிருத்துக. இடராகின் - நிறையிடராயின். தென்னர், வினி; இடராகின் யானைக்கு உங்களோ வாணன் இடமென்று இரும் என இயையும்.

1161. இது காண்மங்கலம். குன்று உவமை எடாத - மலை உவமை யாகாத. எடான் - படையெடான்.

1163. பூண் ஆகா - பூணுக்கு உரியவாகா. கா என்ருதார் - காப்பாயாக என்று பணியாதார்.

1164. மருப்பில் தளைப்பு உண்டாகாமல் இருக்கவேண்டின் அடியாயை அரண் உளவரம் என்க.

1168. தங்கும் படி - தங்கிய தேசம்.

1169. தலைவிக்குப் பருவவரவன்று என்று தோழி கூறியது.

1171. எண்ணெயிரம் - தென்னார்க்காடு ஜில்லாவில் உள்ள ஓர் ஊர்.

1172. 'தேசி முன்னை வடுகு - தேசிக்கூத்தை அடுத்த வடுகு என்னும் கூத்து; 'தேசி வடுகு உடலவர்த்தனே' என்ப (சிலப். 3, 16 உரை).

1174. தாய்த் தாவி நடந்தது என்க.

1176. உரகாதிபர் - உரகைக்கு அதிபரான சோழர் (குலோத். பிள். 45). வல்லி - நிகளம்.

1178. விந்தமான் - கொற்றவை. வாமான் நிறை - குதிரைகளாகிய நிறை. இந்திரன், தன்னை வென்ற பாண்டியனைத் நிறைகொண்ட வாணனல் தன்யானையை இழக்கவேரும் என்று அஞ்சினன் என்க; 1186-ஆம் பாடற் கருத்தும் இதனுடன் ஒருசார் ஒப்பிடற்பாலது.

1179. கார் - முகில். பின்னிதல் - தோற்றுதல்.

1181. மார்பெழுதலை 1158, 1182 - ஆம் பாடற்குறிப்பிற் காண்க.

1183. ஓர் வேம்பு பனை என்பன அம்மாலைகள் சூடிய மூவேந்தரை. அரசு அத்தி என்பன மரங்களையும் அரசர்யானைகளையும் குறிப்பன.

1189. களிகிண்டுதற்கு மாவினைத் தந்தான் என்பது குறிப்பு.

1194. தக்கக்கண்ணீர் பெருகியது எ - று.

1196. கன்னல் - குருவிவகைபோலும். 'எணும்' என்பது பாடமாயின் இராகழிகையை எண்ணுகின்ற என்க.

1199. சாணர் - போர்த்தழும்புள்ள வீரர். சாணம் - தழும்பு; 'சாணம்நின்ற சமத்தாக்கு தடக்கை' (மதுரைக்காஞ்சி. 593) என்ப. ஆட்கொண்டாயன் - வரபதியாட்கொண்டான் என்ற கொங்கர்கோன் (1583); இவனே வில்லிபுத் தூரரைக்கொண்டு பாரதம் பாடுவித்தவன். வக்கை - வக்கபாகை.

1200. சம்பராசன் - சம்புவராயன்; 'வடித்தசுடர் வேற்சம்பன் வாழ் மல்லி நாதன்' என்று, இவ்வீரட்டையரே மல்லிநாதன் என்ற சம்புவனைத் தம் ஏகாபீபாரதநூலாவிற் பாடுவர். இவன் இற்றைக்கு 540-வருஷத்துக்குமுன் வாழ்ந்தவன் (Ep. Rep. No. 390 of 1905). எகாம்பரன் இம் மல்லிநாதற்குத் தந்தையோ மகனோ ஆதல்வேண்டும். (1577-ம் பாடற் குறிப்புப்பார்க்க).

1201. மந்தரம் மேருவின் பருமையாதலின், அம்மந்தரத்தின்செயல் மேருவுக்கேற்றிக் கூறப்பட்டது.

1202. காரிக்கோன் - பாண்டியன் சேனாபதி. 'காரைக்கோன்' என்று பாடங்கொண்டு, இவனைக் கொங்குநாட்டுக் காடுவெட்டர்தலைவன் என்று கூறும் கோங்குமண்டலசதகம்.

1203. உருத்திரன் - காகதீய அரசருள் ஒருவன் (கி. பி. 1185). ஓரங்கல்-தெலுங்குராஜ்யத்துள்ளதோர் நகர் ஒருகல், ஒருங்கல், வகிலாநகரி என்று சாஸனங்கள் இதனைக் கூறும். சோனிடத்துக் கம்பர்சென்று அவனைத் தமக்கு அடைப்பைபட்டபனஞ்சோழனிடம் அழைத்துவந்தனரென்று கூறும் செய்தியை இப்பிரதாபருத்திரனுக்கு உரியதாகக்கொள்ளல் தகும்.

1204. யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியசக்கரவர்த்தி என்பான், கி. பி. 1288-ல் சிங்களவரசன் தலைநகரான அநுராதாபுரத்தைக் கைப்பற்றி அதன் பொக்கிஷங்களோடும் கவர்ந்துசென்றனன் என்றும், 1290-ல் சிங்களம் ஆண்ட பராக்கிரமபாகு அவனுடன் சமாதானஞ்செய்துகொண்டு இழந்த வளப்பொருள் களைத் திரும்பபெற்றனன் எனறும் கூறுவர் (Sketches of Ceylon History, p 47). அனுராசர் - அனுராதாபுரத்தரசர். 'காட்டினர்' என்பது 'கட்டினர்' என்று திருத்தற்பாலது. பலைவர்மகளிர் தம் நெற்றியில் இரண்டு உள்ளங்கைகளோடும் வைத்துக்கொண்டு துடித்தற்போது கண்ணினை மூன்றாக்குக் கண்களைக்கட்டியதுபோன்றும் உள்ளங்கையில் நெற்றித்திலகம் பதிந்தும் இருந்தமையின் இங்ஙனம் கூறினர். சிங்கை - சிங்களம்.

1205 - சே - விடைபிலாஞ்சனை; பல்லவர்க்குரியது.

1207. மணலவை - யாழ்ப்பாணம்; மணற்திடல், மணற்கிராமம் என்ப. (யாழ்ப்பாணநாட்டுவளப்பம். பக். 7 - 8). 'மணலவைக் கோமான்' என்றார் இராசவிசாரணாலாரும் (இலக்ண. 22). தனுக்கோடித் துறை அக்காலத்து இவ்வாரியசக்கரவர்த்திகள் காப்புக்குரியதாயிருந்ததென்பது 'சேதுகாவலன்' என்ற இவர் சிறப்புப்பெயராற் புலனாம். இவ்வாறே, 'சேதுகாவலன் திருவண்ணகாவலன்' (S. I. I. Vol. iv), 'சேதுமூலாவதாரத்தான்' (Ep. Rep. No. 585, 1902.) என மலவிசாணையாசரும் கூறப்படுவர்; 1007ம் பாடற் குறிப்புப் பார்க்க.

1208. சிங்கை - சிங்களர்.

1209. அஞ்சும் அஞ்சும் என்பன அடுக்கு.

1210. வஞ்சிமன்னர், சேரர் என்பவற்றால், சிங்கையாரியமன்னர் சேரர் தொடர்புடையவர்போலத் தெரிகின்றனர்.

1212, குடஞ்சுட்டு - பசுவினை. வடகங்கை - இலங்கைப் பேரியாறு, மூத்தவடம் - கண்ணீர்.

1213. மூவெழுத்து - முத்து. 1214. புண்ணியன் - புத்தபகவான். 1215. ஏனம் - ஆதியாகமூர்த்தி. 1216. பாலோடு ஐந்து - பாலோடு கூட்டி எண்ணப்படும் பஞ்சகவ்வியம். 1217. பஞ்சாதிவாணன் - திருவை யாற்றுச் சிவபிரான்.

1218 - 19. குலோத்துங்கசோழன் - அபயன். சொன்னவாறறிவார் - கழறிற்றறிவாரான சேரமான்பெருமான்நாயனார்; சோணாட்டுக் குற்றாலமாகிய 'வீங்குநீர்த்திருத்தவருத்திச' சிவபிரானுக்குச் சொன்னவாறறிவார் என்ற திரு நாமமுண்டு (I. M P. Tj. 599-60-6). இக் கண்டன்மாதவனையும் அவன் காலத்தரசனையும் பற்றிய விசேடங்களை 'அதிதசாகரா' என்ற தலைப்பின்கீழ் யான் எழுதிய கட்டுரையால் அறிக (செந்தமிழ், 24, பக். 161-70). காரிகை நூல் செய்த இடமாதலைப்பற்றிக் காரிகைக்குளத்தூர் என்ற பெயர் வழங்கியது இப்பாடல்களால் அறியத்தகும். காரிகைப்பேரூர்நாடு என்று சாஸனங்களில் வழங்குவதும் இந்நூல்பற்றியதாம். (Ep. Rep. 140 of 1912).

1220. காரை - கொங்குநாட்டுத் தாராபுரத்தாலுகா, காங்கேயஞ்சேகரத் துள்ள காரைபூர். பழையசேட்டைப் பட்டக்காரர்கள் உத்தமச்சோழன் என்ற பட்டப்பெயர்கொண்டிருந்தார் என்பர் (கொங். சரித. 107, உரை).

1221. பீ. ஸாழ்வான்-தீ. ஸாள்வான்.

1223. பொய்கை - தொண்டைநாட்டு விரிஞ்சிபுரத்தை அடுத்ததோர் ஊர்; அருளாளர் - நம்பூர்த்திருமால். பீ. 'மாதுபரவின்ற'-தீ. மாதுயராகின்ற.

1224. சிவகங்கன் மூன்றாங்குலோத்துங்கசோழன்காலத்தவன் (1178-1216). இவன் சோலார் என்று வழங்கும் குடாலபாத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த கங்கவம்சத்து அரசனவன். (நீண். மாலை. உரை, முகவுரை பார்க்க)

1225. கச்சிராயர், நீலகங்கன் என்பார் 16—ஆம் நூற்றாண்டில், விருத்தா சலப்பிரதேசத்தில் வாழ்ந்த தலைவர்களாகத் தெரிகின்றனர்.

1226. இவனை 'வாயற்பதியின் வடிகன்' என்று கூறும் தொண்டை மண்டலசதகம்.

1228. பார வெற்பு - தனங்கள். கொடிய பாணன் - மன்மதன். பிண மெடுத்தல் என்பது ஈண்டுச் சாகக்காணல் என்ற பொருள் குறிப்பது. பாணன் வெம்பிண மெடுத்த வரலாற்றை 1230-ம் பாட்டாலும், சூலிமுதுகில் அன்ன மிட்டதும், அரவின்வாயிற் கையிட்டதுமான வரலாறுகளை 1148, 1152-ம் பாடல்களாலும் அறிக. தொடையாடை கீறினவன், சடையவள்ளல்; ஒருகால் தொடைப்புண்ணில் வருந்திய சடையவள்ளல் அஃதாறியபின், சோழனிடம் விலைகொடுத்துப் பெறமுடியாதிருந்த ஆடையொன்றை உடுத்துக்கொண்டு சோழனைக்காணவந்தபோது, தொடைப்புண் ஆறியதை நேரில் அறியவிரும்பிய சோழற்கு, மரியாதையாக அப்புண்ணுள்ளவளவில் அவ்வாடையைக் கிழித்துக் காட்டினன் என்பர்; "ஆறுச், தொடையி லெழுசிலர்க்கி தோற்றுவிக்கப் பட்டின், புடைவைகிழித்தபெருக்கை" என்பது திருக்கைவழக்கம். நேரியாடை - கடல்.

1229. சிவபத்திமிக்க பரமவைணவர்மனைத் திருமால்பத்திமிக்க அரும் புடையான்மகன் மணம்புரிந்துவாழுநாளில், கணவற்குத் தெரியாமல் மாட்டுக் கொட்டிலில் உள்ள நடதறியைச் சிவலிங்கமாகக்கொண்டு வழிபாடுபுரிந்துவந்த மனைவியின் செயலையறிந்து, கணவன் அவளைச் சோதித்தபோது அந்நடதறியிற் சிவபிரான் தோன்ற அதனை அறிந்து வியந்து கணவனும் அடியவனாகி வீடு பெற்றான் என்றும் இச்சிவலிங்கமே கன்றாப்பூர் நடதறி எனப்பட்ட சிவபிரான் என்றும் கூறுவர்.

1230. ஒரு புலவன் - பாணன். மறவை - ஓர் ஊர். நெடுவங்கிசம் - கங்கை மரபு.

1231. கொடிமூர், சாலங்கிராமம் என்பன இராமநாதபுரஞ் சீமையைச் சார்ந்தவை.

1232. பாண்டியன் நாடழந்து வேணாட்டின் விருந்தினனாய் அவனு-னிருந்த காலத்து அவ்வரசன் பாடியதாம்.

1233. கொல்லாபுரிச்சந்திரன், நந்திக்கலம்பகங்கொண்ட பல்லவன்தம் பிக்குப் பட்டங்கட்டியவன் என்று தொண்டைமண்டலசதகங் கூறும்.

1235—36. காமமிக்க கழிபடர்கிளவி. பி-ர், 'வங்கர்கோவை', 'வங்கர் குலோத்தமன்'

1237. கம்பணவுடையார், கி. பி. 1372-ல் தெலுங்குட்டிற் படையெடுத்து மதுரையில் மகமதியரை யோட்டிக் கோயில் முதலியவற்றைத் திருக்காப்புசீக்கி

வேண்டிய சிறப்புச்செய்தவர். (Nelson's The Madura Country, Part. III, p. 81) 'மதுராவிஜயம்' என்ற வடநூலால் இவர் வரலாறுகள்பல விளங்குவனவாம்.

1238. இந்திரன் கலியாதல் - உடுத்த ஆடை பல துளைக்கண்கள் உடையவாதல். அரன் - பிக்ஷாடனமூர்த்தி. காளமேகப்புலவரை ஆதரித்தவரும் சாளுவகோப்பயன் குமாரருமான திருமலைராசரது சாஸனமொன்று திருவானைக்காக் கோயிலில் சகவு, 137.. ஸ்ரீமுகவு ஐம்புகேசுவரர்க்குத் திருவாபரணமொன்று அளித்ததாகக் கூறுகின்றது. இத் திருமலைராயர் விஜயநகர வேந்தர்களின் பிரதிநிதியாய்ச் சோணாட்டுத் திருபிலராயன் பட்டணத்திலிருந்து ஆட்சிபுரிந்துவந்தவர்.—'தமிழரும் ஆந்திரரும்' என்ற என் கட்டுரை பார்க்க— (செந்தமிழ், தொ.-22, பக். 281-3).

1240. 'அடைப்புவீதம்' என்று தலைக்குறிப்புக் காணப்படுவதாயினும் 'அடைப்பித்து' என்று அஃது இருத்தல்வேண்டுமென்பது பின்வரும் கன்ன பரம்பரைச்செய்தியால் தோற்றுகின்றது. அஃதாவது—ஆலைப்பதிப் பெற்றான் என்ற வணிகன் காளமேகத்தாற் பாடல்பெறமுயன்றும் அவன் அது பெற முடியவில்லை. அதனால், அப்புலவரது தாசியைக்கொண்டு தன்கருத்தை நிறை வேற்றவிரும்பிய அவ்வணிகன், அத்தாசியின் யோசனைப்படி, ஒருநாள் இரவு வெகுநேரம்வரை தன் பலசரக்குக்கடையை அடையாமலிருந்தான். அன்றிரவு தம் தாசியின் பெரும் தலைநோவினைத் தீர்த்தற்குரிய மருந்துச்சரக்குகளை அவள் விருப்பின்படி வாங்கிவர அவசரமாய்க் கடைத்தெருநோக்கி வந்த புலவர், நெடு நேரமானதாற் கடைகளெல்லாம் மூடப்பட்டதாயினும் ஒரு கடைமட்டும் திறந் திருத்தல்கண்டு அங்குவந்துநின்றபோது, அவ்வணிகன் அவசரமாகக் கடையடைத்து நிற்க, புலவர் தம்மாற் பாடல்பெறவிரும்பிய வணிகனே அவன் என்பதுகண்டு தாம்பெறவிரும்பிய பண்டங்களை அவனிடம் கேட்க, 'அரசர் முதலியவரைப் பாடுதற்குரிய நீர் எளியவனான என்னிடம் பெறத்தக்கதொன்றுமில்லை போம்' என்று வணிகன் கடுத்துக்கூறவும், புலவர், தம் தாசியின் நோவினை எவ்வகையினும் நீக்க விரும்பியவராதலின் அவ்வணிகனைத் தாம் பாடமறுத்ததற்கு நொந்து, இப்பாடலைப் பாடினர் என்பர். காஞ்சிபிற் கற்றான் - திருமழிசைப்பிரான். மூல்லைபிற் கற்றான் - மூல்லைநிலத்துக் கன்றுடன்கூடிய பசுவினை. பாலைபிற் கற்றான் - பாலைவனத்து விசுவாமித்திரர்; இவர்கட்குப் பின் சென்ற மால் என்க.

1241. 'கலியார்ந்த' என்றும் பாடம்.

1242. ஒட்டியன் - கலிங்கநாட்டுத் தலைநகரான கடகத்தில் (Cuttack) இருந்து ஆட்சிபுரிந்துவந்த கஜபதியரசனை பிரதாபருத்திரன் (கி. பி. 1497—1540). இவனைக் கிருஷ்ணதேவராயர் வென்று அவன்மகள் துக்கா என்ற பெண்மணியை மணம்புரிந்தனர் என்ப ('தமிழரும் ஆந்திரரும்' - சேந்தமிழ், 22, பக். 284-5). சிலைமடையண்; கலிங்கம் - தேசம், சிலை; நுதிக்கைச்சங்கம் - நுதிக்கையுடைய யானைகளை, முன்கையனை; கடகம் - தலைநகர், தோள்வளை. கஜபதியரசரின் யானைக்கூட்டங்களை இழந்தான் என்க

1243. 'பேசன், கொடைமடம் பிறதெய்வம் பணைமடம் படாண்பிறர் பணைமையுங் குறிசின்' (புறநா. 142) என்பதை ஈண்டு ஒப்பிடத்தக்கது. கெடி - வல்லமை, அதிகாரம்; 'கெடிமண்டலீகர்' என்பர் (1331); தெலுங்குச்சொல்.

1244. சிங்காத்திரி - சிம்மாசலம். இவ்வூரில் கிருஷ்ணதேவராயர் ஜயஸ்தம்பம்நாட்டியது கி. பி. 1515 - இல் அறிந்ததாகும். 'தமிழரும் ஆந்திரரும்' என்ற எனியாசம் பார்க்க (சேந்தமிழ், 22. பக். 287—8). வடகூவம் - காகலாபுரம்.

1245. விஜயநகரவேந்தர்காலில் அவர் பிரதிநிதியாய்த் தென்னாண்டவர்; "வீரப்பிரதாப மாமண்டலேசுவர மகாராஜ நிம்மராஜ விட்டலதேவ மஹாராஜா" என்று சிறப்பிக்கப்பெற்றவர். இவர் அனந்தசயனத்தின்மேல் கி. பி. 1543-ல் பட்டயமெழுத்தவர் என்பர் (சேந்தி. 22, பக். 270-1).

1246. அம்பி - விஜயநகரவேந்தர் தலைநகரான ஹம்பி (Hampi) என்பது. இம்முதலியார் மதுரைத்தளபதி நாராயணப்பரின் உள்ள செம்பூரினர். சந்திரவம்சத்துப்பாண்டியராகிய யாம், அச்சந்திரனுண்டோச் சிபிபான் தம் சடையிற் கொண்ட கங்கையின் மரபினரைப் பாட இழந்தில்லை என்பது கருத்து. (1635)

1247. பாடாத கந்தருவம், எறிபாத கந்தருவம் முதலிய, அடைமொழிகளாற் குறிக்கப்பெறாத கந்தருவம் (-இசை), கந்துகம் (-பந்து), குந்தம் (-சூலம்), பாடலம் (-பாதிரி), சூலம் (-சூடை) என்பன குறிக்கப் பெறாயவைகள்.

1248. செறியணுக்கம் இன்றி (நெருக்கமின்றி) என்க. 'எண்ணரி' என்ற பாடத்திற்கு, செறிபற்றம் (நெருக்கமான) எண்ணரி என்பது பொருளாகும்.

1249. கன்னிமாடம் - காரைக்கால்பெருமாள் தங்கும் இடம்.

1250. கோவை - சந்திரவாணன்கோவை. இவர் இக்கோவை இயற்றிய செய்தியைச் சேயூர்முருகன்பிள்ளைத்தமிழ் நூலாசிரியர்வரலாற்றுட் காண்க (பக். 14).

1252. 'ஒல்வத் தாந்தாடும்' என்பது திருத்தம்போலும். செம்பியவன்னன், பழைய நிரையர்மரபினன் என்பதும், இவன் திருத்தோர்செய்தகாலம் கி. பி. 1521 - என்பதும் அறியத்தக்கன.

1253 - 4. நகர கோடி - நகரைத்த (வெளுத்த) கொம்பு. யானைக்கன்றும் வளர்ந்தும் புலவர் அரசாற் பெறுதல் வழக்கு; 1303-ம்பாடல் காண்க. பராச சிங்கன், பராசசேகரன், பராசசிங்கையாரியன் எனப் பெயர்பெற்ற அரசன் யாழ்ப்பாணப் பிரதேசத்தை 16-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆண்டவன் என்பர். குருடரை அரசர் காணக்கூடாதலின் நிரைக்குன் மறைந்தும், விற்பிடித்தகோலங்கொண்டும் பராசசிங்கன் இருந்தநிலையை அந்தக்கவி தம் அகக்கண்ணாலறிந்து இப்பாடல்கள் இயற்றினர் என்பர்.

1255. பொற்பு வந்தம் - மலையின் அழகு; மலையும் தோற்றழியும் புய மென்னினுமாம்.

1256. திருமால் பின்போவது திருமழிசைப்பிரான்பொருட்டு; சிவன் தூதுசென்றது சுந்தரமூர்த்திகள்பொருட்டு; அம்முறையே பிரமனும் தமிழ்ப் பெருமான்பின் சென்றனன் என்க. விசயப்பிரமன் - விசயனென்ற பெயர் கொண்ட பிரமாதிராயன். பிரமாதிராயன் பிரமராயன் என்பன அரசாங்கத்தில் அதிகாரம்வகிக்கும் பார்ப்பனர் பெறும் பட்டப்பெயர்கள். திருவாதவூரடிகளைத் 'தென்னவன் பிரமராயர்' என்ப.

1257. செந்துன்னை - திருச்செந்துன்னாகிய செந்தோடி. 'ஒப்பிலாத மழவராயர்' என்பது திருச்சிராப்பள்ளிஜில்லா அரியலூர்த்தலைவர்கொண்ட பட்டப்பெயர் (I. M. P. Tp. 803 c). அளக்கும் படி—அளக்கின்ற பூமி, நித்தியப் படித்தரம்.

1260. சந்திரசேகரவாணன் என்ற தொண்டைமண்டலசதகக் கூறுகளால், இவன் வாணவம்சத்தரசன்போலும்.

1261. இவன், சாலிவாகனவம்சத்தவனென் (1152).

1263. சேவப்பநாயக்கர், தஞ்சாவூர் ஸம்ஸ்தானத்தை ஆண்ட முதல் நாயகவரசர் (1549–72); நிம்பப்பநாயக்கர் - அவர் தந்தையார்போலும். இவர் ஓலைகள் (-திருமுகங்கள்) சாரோலை நீரோலைகளாகும், பாக்கமுடையானுக்கு என்க.

1264. அதோரிப்புலவர்வரலாற்றை, செந்தமிழ் 4-ம் தொகுதி, 371-5-ம் பக்கங்களிற் காண்க.

1265—67. சுந்தரபாண்டியம் - தடாதகைப்பிராட்டியின் வரலாறு கூறும் காப்பியம்; இந்நூல் மதுரைத்தமிழ்ச்சங்கத்திற்கு முதன்முதற் கிடைத்தது. கச்சிவீரப்பன் - மதுரையாண்ட திருஷ்ணவீரப்பநாயக்கர் (கி. பி. 1575). திருவிருந்தான் - அவ்வரசன் சேனபதி . மன்னை - சிரங்கத்தையடுத்துள்ள ஊர் என்பர் (செந்., 4, பக். 374.)

1268. காணிக்கண்புதைத்தல். மூன்றடி நாளத்தையும், நான்காமடி மூதலையும் குறிக்கும்.

1269. மதுரையிற் புதுமண்டபம் என்ற வசந்தமண்டபம் நாயக்கவரசராற் கட்டப்பெற்றதைக் குறிப்பது. இம்மண்டபம் 1628ஹ்ரு மே மீ அஸ்திவாரம் நாட்டப்பெற்ற 1635ஹ்ரு மே மீ முடிவுற்றது என்பர்.

1270. இம்மீ அங்கு மீனாக்ஷி தெப்பக்குளம் அமைத்தவரலாறு குறிக்கும். திருமலைநாயக்கர்சமுத்திரம் எனப் பெயர்வழங்கிய இது 1635-ம் ஆண்டு கட்டி முடிக்கப்பெற்றது.

1272. இத்தனையாய் திருமலைநாயக்கருடைய சேனபதி. 'திருவினையடைத்தனன்' என்பதற்கேற்ப, இக்காலத்தாரும் அதனை 'இராமப்பய்யனணை' என்ற வழங்குதல் காண்க. சடைக்கன் - கூத்தன்சேதுபதிகுமாரரான சடைக்கத்தேவர் என்ற தனவாய்சேதுபதி (கி. பி. 1606). 'இராமப்பய்யனம்மானை' என்ற நூலில், இச்சேனாபதி படையெடுத்துப் பாம்பனணைகட்டி இராமேசுவரஞ் சென்ற சேதுபதியைப் போரிற் பிடித்துவந்தான் என்றுகூறும்.

1274. இவ்வரசன், புதுக்கோட்டைச் சீமையையும் அதனைச்சூழ்ந்த பிரதேசங்களையும் ஆண்ட பல்லவகுலத்தரசருள் ஒருவன். இவன் கி. பி. 1589-ல் வாழ்ந்தவன் என்றும் 'சிவக்கொழுந்த பல்லவனுலா' என்ற நூலொன்று இவன்மேற் பாடப்பட்டதென்றும் தெரிகின்றன (Manual of Pudukotta State). மாதாம்படி - பெண்ணுரிய பூமி.

1275. பூட்டகம் - வீண்பெருமை; தெலுங்குச்சொல்.

1276. இளக்காரம் - இளியநிலை, தாழ்மை; 'ஊரில் இளக்காரம் வண்ணாருக்குத்தெரியும்' என்பது உலகவழக்கு.

1277. செல் - மத்ஸ்யாவதாரமூர்த்தி. செல் வேல் கால்கள் கடல்களே யுற்றச்செய்தவை; அவைபோலக் கண்கள்பெருக்கும் நீர்வெள்ளத்தைக் கண தனங்கள் யுற்றச்செய்வன எ-று.

1278. பதடி - உமி. குடைகரி - பொன்னுருக்கக் குடைந்த கரிக்குகை.

1279—81. இப்பாடல்களின்வரலாறுகள் 1383-ஆம்பாடலிற் குறிக்கப் பட்டுள்ளன. 'முகஞ்சோர்ந் தகன்றிடு மேகாலிப் பாவலன் முன்னநின்றே, இகழ்ந்தே னிலையைய வென்ற சுடுநெய்யி னிற்கையைவிட், டகந்தே யுணு மெச்சில் வாயைக் கழுவி யுவப்பியற்றி, மகிழ்ந்தே புகழ்பெறு சர்க்கரை யுண் கொங்கு மண்டலமே' என்ற கோங்குமாடலசதகச் செய்யுளுங் காண்க.

1282. செவ்வந்தி, மேற்குறித்த (1268) திருவிருந்தான் தமையன் ஆவர்.

1283. செங்குன்றை - தொண்டைநாட்டுர். இவ் வெல்லன் ஆனூர்ச் சர்க்கரைகாலத்தவன் (1341 - ம் பாடற் குறிப்புக் காண்க).

1286. பதின்மூன்றெ டெட்டுக்கோ - மூவெழுவன்வல்லன், மற்றொரு வேந்தன் - சுமணன்.

1289-91. தளவாய்சேதுபதி 1645—1670- வரை ஆண்டவர்.

1295. விஞ்சைக்கோவை, சேதுபதிமந்திரி தெய்வகன்னியின்மே பேரில் பலபட்டடைச்சொக்கநாதப்புலவர் பாடியது. விஞ்சை-நெட்டுர்; சின கன்னைச் சிமையைச் சார்ந்தது. இக்கோவை பாடிய சின்னாளில் அப்பாடல் பெற்றதெய்வகன்னி இறக்கவும் சுப்பிரதீபக்கவிராயர் பலபட்டடைப்புலவர் மேல் வசையாக—''தேவைரகு நாதன்மெச்சுந் தெய்வகன்னி மீதுவிஞ்சைக், கோவையென்ற பில்லிவைத்துக் கொன்றுயே - பாவியுன்ற, னிட்டடைச்சொ லார்பொறுப்பா ரேண்டா மடையபல, பட்டடைச்சொக் காமுழுவம் பா'' என்று பாடினர் என்பர் (சேதுநாடுந் தமிழும் பக். 18-9).

1297—8. திருச்சாலை - சாலைக்கிராமம். நட்டுர் - ஊர்கெடி. கேம் - மலைக்கல். கட்டுர் - பாசறை; கட்டுரன் என்பதன் விகாரமுமாம்.

1300. பலிபீடம் - சேதுவேந்தர் அரண்மனையிற் கோயில்கொண்டிரு ஸ்ரீராஜராஜேசுவரியின் பலிபீடம். சேதுவாசல் - சேதுபதியின் ஆஸ்தானம். எலனவாரு - நாயக்கவரசர் குடிப்பெயர்.

1301—3. மூத்திருளப்பபிள்ளை - 18—ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த பிரபலமான சேதுபதிமன்னரி. 1303. கி பி. 1740—1769-ல் இராமேச்சுரக்கோயிலின் மூன்றும் பிராகாரம், இவராலும் (எங்கள் முன்னோர்) சின்னப்பிரதானி திருஷ்ணையங்காராலும் கட்டிமுடிக்கப்பட்டது. இவ்விருவரின் உருவச்சிலைகள் அப்பிராகாரத்து உள்ளன (M. M. 741).

1304. 'சீதக்காதி சிறந்தவள்ள நாட்டான்' என வச்சிர நாடு கூறப்படுதல் காண்க (1315). சலுபா - 14 - ம் நூற்றாண்டில் மதுரையைக் கைப்பற்றி யாண்ட திருக்கலுசர்மரபினர்போலும்.

1306. காரியப்பேர் - காரியத்தலைவர் (சீவக. 2110, உரை.)

1309. 1253 - ம்பாடற் குறிப்புக் காண்க.

1311. மாகத்து அத்தம் புகழான் - விண்ணை எட்டும் கீர்த்தியினன். அத்தல் - எட்டுதல். மலரினை (மலரில்) சுத்து அத் தும்பி என்றும், மோகம் தத்து (ஆபத்து) என்றும் பிரித்துப் பொருள்கொள்க.

1317. கறுப்பு - பஞ்சம், குற்றம். கறுப்பன் தொண்டைமண்டல சதகம் பாடியிருத்த பிரபு.

1318. நிணம் போதத் தள்ளி என்றது, மாமிசபிண்டமாகி எறு. வங்கணம் - கட்பு.

1320. இப்பிரபு, சொக்கநாதநாயக்கர்காலத்தில் (1704—31) அவர்பிரதிநிதியாய்த் திருநெல்வேலிச்சீமையை ஆண்டவர். இவரபூரான இரசை, சேரங்கத்தை யடுத்துள்ள தென்பர். இவ்வடமலைபார் புலவர்க் குபகாரியாக வினங்கியதோடு சிறந்த கவியாகவுமிருந்தனர் என்பது, 1706 - ல் இவரியற்றிய மச்சபுராணத்தாலும் 1322 - ம் பாட்டாலும் அறியத்தக்கது.

1321. நீலி - அரக்கியான தாடகை.

1322. நானம் - கத்தூரி. 1323. தாதிச்சி - தாதுசெல்லும் பெண். சிக்கென்று பிணைத்தல் - வலிதாய்ப் பெருத்தல்.

1324. தரையிற்கிடக்கும் கோரிலையடைந்த என்க. நீர்க்கிடை - நீரிலுள்ள நெட்டி வார்ந்த இடை வேல் - வாரால் கட்டப்பட்ட வேல்.

1325. மூடக்கால் - (பிறையின்) வளைந்த முனை; 'ஒருதனு விருகால் வளைய' (தேவா. 142, அடி 14) என்புழிப்போல. 1326. வெற்றிமுரசு - கடல்.

1327. புரசைவடம் அலைய - கழுத்திடுகயிறு அசைய. வடமலை - இமயம். வடமலையப்பாலுஞ் செல்ல முரசை முழக்கஞ்செய்தோய் எனக் கூட்டுக. வடம் அலை - ஆலிலையினும் பாற்கடலினும். அப்பாம்பில் - அந்த ஆதிசேடனிலும்.

1328. இரவுக்குறியில் அல்லகுறிப்பட்ட தலைவன் பூவொன்றினைத் தன் வருகைக்கு அடையாளமாக ஒருமரத்தில்வைத்துச் சென்றதாகப் பின்னோர் பாடும் 'அலர்க்குறி' என்னுந் துறை. மூங்கிலில் அல்லிமலரைவைத்துச் சென்றான் என்பது கருத்து.

1329—32—இப்பாடல்கள் குறுங்குடிநம்பி என்ற பார்ப்பனப்புலவர் பாடியவை என்று கொள்ளற்குரியன. இவரைச் 'சொல்லயிற்புலவன்' 'சொல்லயிலாகச் சொரிகவிமாரி' என்று தொண்டைமண்டலசதகங் கூறுதலால் வாக்குச் சித்திபெற்றவர் இவர் என்பது தெரிகின்றது. பள்ளம் - ஆழம். பீ—பள்ளமே - நீ—பள்ளமேய். பீ. கொள்ளமுடி - நீ—கொள்ளுமிடி. 1331. டக்கயம் - கொடி. மாதர் அடக்கமும் என்க. முரடக் கெடி மண்டலீகர் - கொடியரான வலிமைபெற்ற தேசாதிபதிகள். காடம் - மதம்பாய் சுவடு. 1332. கற்று - கன்றுடன்கூடிய பசு.

1334. 'சிலையில்வா முதானனே' என்று பாடமோதுவாருமுளர். 1189-90—ம் பாடல்கள் ஒப்பிடற்பாலன.

1335. கண்ணுணை - கண்ணிலடித்துப் புரியும் சூள். செப்பூர் - தொண்டைநாட்டது. 'உளவனேயினன்' என்று திருத்திக்கொள்க.

1337. காரிண்டன்—கொங்குநாட்டுத்தலைவர்க்கு வழங்கிய சிறப்புப்பெயர் (S. I. I. Vol. IV. 415). மேனாப்பு - நிக்ஷேபசொல். "மீறு மூலகிலட்டுத் திக்குஞ் சொட்டையில் வெல்லவல்லோன், கூறுக்தன் காரைபிற் சர்க்கரை வேந்தன் கொழுந்தமிழாற், பேறும் புகழும் பெறவிண்டி ராவலன் பெற்றதை யான், மாறுஞ் சவுக்கடி பெற்றது வுங்கொங்கு மண்டலமே" என்பது வரலாறு. சவுக்காலடித்த புலவர் பாடியது இப்பாட்டு.

1338. சம்பந்தசர்க்கரை தளவாய் இராமப்பையரால் சிறைப்பட்டிருந்த போது, தன்னைக் காணவந்த புலவர்க்கு ஏதேனுங் கொடுத்துதவுமாறு தன்மனை விக்குக் கடிதங்கொடுத்தனுப்ப அதனைப் பெற்ற அப்பெண்மணி வேறு

கொடுத்தற்கின்றித் தன்மாங்கலியத்தையே அளிக்க, அப்புலவர் அதனைக் கைக் கொண்டு, சர்க்கரையைச் சிறையிட்ட தனவாயிடம்வந்து நடந்த செய்தியை அறிவித்தவும் அவர் அப்பிரபுவைப் புகழ்ந்து அவரையும் அவருடனிருந்த தலை வர்களையும் சிறைவிடுவித்தனர் என்பர்; 1340—ம் பாடல் காண்க.

1339. அங்ஙனம் சிறைக்கோட்டத்திற் சென்ற அப்புலவர் சர்க்கரையை இன்னர் என்றறிதல்வேண்டி அவரைப்போல அங்குச் சிறைப்பட்டிருந்த தலைவர் சிலரை உசாவ அவர்கள் 'பரிசுபெறுஞ் சமயம் இதுவேயோ' என்று பரிகசித்தபோது அப்புலவர் கூறியதாம்.

1341. ஆனூர் - கொய்யல் என்ற நதியை அடுத்துக் கொங்குநாட்டுள்ள தோர் ஊர். செங்குன்றைத் தலைவனுன எல்லன் என்றவனுல் சர்க்கரையின் வன்னண்மைபை அறிய விடுக்கப்பட்ட புலவரொருவர், அச்சர்க்கரையைக்கண்டு அவராற் பெரிதும் உபசரிக்கப்பட்டுவந்தபோது, அப்பிரபுவின் தாயார்க்கு அவர் வேண்டுமென்று அவமானமொன்றிழைக்க அதனையும் பொருட்படுத்தாது முன் போலவே அபிமானங்காட்டிய அச்சர்க்கரையின் பெருந்தகைமைக்கு வியந்து தம் தலைவனுன எல்லனிடம் வந்து அப்புலவர் கூறியது இப்பாட்டு. இதனை— 'நிருத்து புகழ்பெறு மானூரிற் சர்க்கரை செந்தமிழோன், விருத்த மூடனன்னை மேலேறத் தாய்வெகு ளாமலெனைப், பொருத்த முடன்பத்து மாதஞ் சுமந்து பொறையுயிர்த்தாய், வருத்த மிதிலென்ன வென்ற னவன்கொங்கு மண்டலமே' என்ற பாட்டானும் உணர்க. எல்லனது கொடைப்பெருமையை 1283—ம் பாடலிற் காண்க.

1342. கொங்குநாட்டில் வடகரையாற்றூரில் வாழ்ந்த வேட்டுவத்தலைவன் இவனென்றும், நிருச்செங்கோட்டிற் பல திருப்பணிகளும், அரிய வீரச்செயல்க ளும் புரிந்தவனென்றும் 17—ம் நூற்றாண்டிடையில் வாழ்ந்தவனென்றும் "வடமுக நின்று வருகா விரியின வனத்தையென்றும், நிடமுற கொங்கினும் பாசன மாகச் செலப்பிரித்தவன்" என்றும் கூறுவர். (கோங்கு. சத. பக். 96,)

1343. ஆறை - ஆறகழூர்; சேலம் ஆர்க்காடுநில்லாக்கள் சந்திக்குமிடத் தில் ஒன்றினும் ஒன்றரை ஆறு அகழ்கள் சூழப்பட்டமையின் இப்பெயர்பெற்ற தென்பர் (கோங்கு. சத. பக். 60). இவ்வூர் வாணவமிசத்தரசர்க்குத் தலைமை யிடமானது. இவ்வாறைவாணன், மூன் 1158-ம் பாடல் முதலியவற்றிற் கூறப் பட்ட வாணருள் ஒருவனுன்,

1344. 'பூதத்தினைகொண்டபோர்வாணன்' என்பதனால், இவ்வாணனது போர்வெற்றிக்குப் பூதமொன்று துணைபுரிந்ததாகக் கருதப்பட்டமை தெரிய வருகின்றது. 'இலகு புகழாறை யேகம்ப வாண, னலகை வரும்வருமென் றஞ்சி' (966) என்ற வெண்பா இங்கு ஒப்பிடற்பாலது.

1345. இக்காலிங்கராயன் கட்டிய அணை 'காலிங்கராயன் அணை' என இன்றும் வழங்குவதென்றும், இவனைக் கோயம்புத்தூர்ஜில்லா ஊற்றுக்குழி ஜமீந்தார்களின் முன்னோனெனவும் கூறுவர் (கொங். சத. பக். 87—8.).

1348. கம்பர் காவிரி கரையடங்கப்பாடியது, "கன்னியழிந்தனள்" (504) என்ற வெண்பாவாம். இதற்காகக் கொங்குநாட்டார்விருப்பப்படி சோழனால் கம்பர்க்கு விடப்பட்ட கலியாணவரியை அங்குள்ள புலவர்க்கு அளித்துவரும்படி அவர் செய்வித்தனரென்று கூறும், கொங்குமண்டல சதகம். கவசைநகர்—கவசையம்மன்கோயில். இம்முடி – ஒரு பட்டப்பெயர்.

1349. "கலியின் மெலிந்து புலவருக் கீயக் கையிலின்மையால், புலியி னுழைப்புக்குக் கள்வர்கள் பங்குப் பொருட்டிரளை, மலிய வெடித்துப் புலவனுக் கீந்த வடகரையான், வலியன் கணவாளன் செட்டிபின் வான்கொங்கு மண்டல மே" என வரலாறு காண்க. பாரியூர் – கோபிசெட்டிப்பாளையத்தைச்சார்ந்தது. கணவாளகுலம் – ஒருவகைத் தொழில்செய்யுஞ் சாதி. 'கணவானத்தொழில்மு யன்றுண்பான் கணவாளன்' என்றும், சாதிகுறிக்கும் பெயரென்றுங் கூறுவர் மயிலைநாதர் (நன். 144, 275, உரை.). நொய்யலமன்னரான வீரவல்லாள தேவர்காலத்து அமைந்த இவன்சாஸனமொன்று பாரியூர்க் கோயிலில் உள்ள தாம் (கொங்கு. சத. பக். 122).

1350. தென்கரைநாட்டுத் தாராபுரத்தையடுத்த கொற்றனூரிற் கோயில் கொண்டுள்ள அப்பிரமேயஸ்வாமி. "கொற்றைபில் வீற்றரு ளப்பிர மேயர் கொடிஞ்சிசெலப், பெற்றதன் பின்னோரை வெட்டியிட் டானற் பெருமையுற, உற்றனர் ராயர்தொற் றிம்மா சனத்தி லுவந்துவைத்த, மற்றெரி நீள்புய வேடுடன் வாழ்கொங்கு மண்டலமே" என்பதனால் இவ்வரலாறறிக

1351. நாணிக்கண்புதைத்தல். இங்கனம் பம்பிட என்க. பம்புதல் - ஓடிப் பதுங்குதல்; பம்முதல் என்பது வழக்கு. கி. பி. 1190-ல் இலங்காபுரி என்ற தண்டநாயகன்மீழ்த் தென்னவராயர் கொன்னாயாடிய இங்களப்படையைப் பொருதோட்டிய பாண்டியன்சேனைத்தலைவருள் சோப்பணன் ஒருவன் என்

பதி, "தென்பாண்டி நாட்டினிற் சிங்களர் தீமை செயச்செழியன், முன்போ யகற்ற வலியற்ற காலத்தின் மெய்ம்பொடவர், பின்போடத் தானே கொடு மோட்டு வீரன் பெருங்களத்தை, மன்பூ வலனெனுங் கோப்பண னுங்கொங்கு மண்டலமே" என்ற பாடலால் உணர்க (கொங்கு. சத. 59). கொங்குநாட்டுப் புரவிபாளயம் ஜமீந்தார்கள் இக்கோப்பணன்மரபினர் என்பர் (ஸ்டி பக். 70).

1352. பழங்காலமுதலே கொங்குநாட்டில் வாழ்ந்த அரசவகுப்பினருள் ஒருவர். 'கங்கன்கட்டி' 'பல்வேற்கட்டி' எனச் சங்கச்செய்யுட்களினும் புகழப் பெற்றவர் (சோன் - தெங்நாட்டுவெள். பக். 114-5 பார்க்க). இவர் வமிசத் தோர் பிற்காலத்தும் பெருந்தலைவராகவும் வீராகவும் தாரமங்கலம் அமரகுந்தி என்ற தலைநகரங்களில் வாழ்ந்தனர். இ. பி. 1641—ல் கந்தருவராசனின் சேனை யால் வணங்காமுடிக்கட்டி என்பான் முறியடிக்கப்பட்டான் என்றும் அதற்கு இவ்வாரணவாசியே காரணமானவன் என்றும் கூறுவர் (கொங்கு சத. பக். 101).

1353. இக் குப்பிசிவராலாற்றை—'தேசுற் றிலகும் விசய நகரத் திற லரசன், வாசற் பணிக்கனை மண்கொள்ளக்குத்தியம் மன்னனைக்கண், டேசற் படி மசமாவினை யாட்டி யெனருமெச்ச, மாசற்ற நாடுகொள் குப்பிசசி யுந்தொண்டை மண்டலமே' என்பதனாலும் அதன்குறிப்பாலும் உணர்க (கொங். சத பக். 61.)

1356 இவர், 180 வருஷங்கட்குமுன் புதுச்சேரியில் டியூப்ளே என்ற பிராஞ்சியத்தலைவர்க்குக் காரியதரிசியாகத் தலைவராயிருந்த சீமான். 'ஆனந்த ரங்கனும் வாழ்நந்த மண்டலமே' என்று சிறுத்திக.

1357. நரையான - சிச்சிலிபபறவை, காரம. பிரம்பூ - சென்னையைச் சார்ந்த ஊர். புதுவை - புதுச்சேரி.

1358. நாபிரம் பைபான் - ஆதிசேடன். அந்தரங்கன் - உள்ளங் கலந்த நண்பன்; அறிவிறநிறைந்தவன் எ-று. இப்பு அரங்கன அன்பன - பத்தர்க்கு இன்பம்விளைக்கும் ஸ்ரீரங்கநாதர்க்கு அடியவன். பிரம்பை - பிரம் பூர்.

1359. கோரிழை - கன்னிராசி. (இவ்வியாசிக்கு) எழாவது மீனம், ஆறாவது கும்பம், ஐந்தாவது மகரம், நான்காவது தனுசு. பெண்ணைநுந்திக்கு விழியேழுன்னன என்பது முதலிய பொருளும், விழிமீனமும் முலைகும்பமும் காதி மகரமும் நெற்றி வில்லுமாக உன்னன என்ற வேறுபொருளுந் தோன்றல்

காண்க. "தங்கவரை மார்பா துரைரங்க பூபதியே, இங்கோர் புதுமை யியம்பக் கேள் - பங்கயக்கை, யாயிழைக்கு நான்குநத லேந்துகுழை யாறுமுலே, மாயவிழி யேழா மதி"என்ற வெண்பாவும், இப்பிரபுமேல் இக்கருத்தேபட அமைந்துள்ள மை அறியத்தக்கது.

1360. பால் அயிலாள் - பாலைப் பருகாள். பஞ்சு உளி என்றே சுளிப் பாள் - காவிற் படும் பஞ்சையும் உளியாகக்கொண்டு வருந்துவாள். பாலையில் ஆட்பின் - பாலைவனத்தில் தலைவனுடன்.

1361-2. குன்னாரங்கன் - அரியஹார்த்தலைவரான மழவராயருள் ஒருவன். இவன் இறந்தபோது இவை பாடப்பட்டனவாம் (1257-ம் பாட்டுக் காண்க.).

1363. முடிக்கும் மரு புக்கு இசையா - முடித்தற்குரிய மருக்கொழுந்து புகுந்து முடித்தற்கேலாத (இளமுடிமயிர்). மதன் பிடிக்கும் அரும்பு - புஷ்ப பாணம். குமர் - அழிவின்மை. கடல் வற்றுவித்தல் - சீபாந்தரதண்டம்விதித் தல். எட்டமன் - எட்டயபுரத்தரசர்.

1368. மருதுபாண்டியன் - சிவகங்கைச் சீமையை ஆண்ட தலைவர்; 18-ம் நூற்றாண்டினர். மருதும் பாண்டியனும் விழ. பாண்டில் - சகடம்.

1370. இப்புலவர் இற்றைக்கு 230-வருடங்கட்குமுன் வாழ்ந்தவர் என்பர்.

1371 துள்ளி - துளி; சுண்டிச் சுடல்.

1372. எழுமூவர் - கொடையிற் சிறந்த 21- வள்ளல்கள். எழெழுவர் - கல்வியிற் சிறந்த 49-சங்கப்புலவர். எழொன்பதின்மர் - சிவபத்தியிற் சிறந்த அறுபத்துமூவர். குழுமூர் - கொங்குநாட்டது.

1374. பாகனெடுகூறல். சுந்தரன் பூவை - சுந்தரனாட்டிலுள்ள பெண். மதன்தேர் - தென்றல்.

1375. அண்ணுமலையில் வீரவசந்தராயர் என்பார் சகஆ1770-ல் தரும கர்த்தாவாக விளங்கினவர் (அண்ணுமலைசதகம்—101). இப்பாட்டிற் கூறப் பட்டவர் இவர்போலும்: இப்பாட்டு 'அலர்க்குறி' என்னுந்துறை (1328—ம் பாட்டுக் குறிப்புக் காண்க.). 'வாரணமேல் ஒரு வாரணமேறி - அத்தியில் ஆம்பல் ஏறி. அத்தி ஆம்ப லிரண்டும் யானைப் பரியாயக்கள். அத்திமரத்தின்மீது அல்லிமலர் வைக்கப்பட்டிருந்தது என்றபடி.

1376. அடை பொதுவாக்கிப் பொருள்வேறுபட மொழியும் ஒட்டணிக்கு மேற்கோள் (தண்டி. 53, உரை). உண்ணிலவு நீர்மை - மனத்துள் உண்டாகிய குணம், உள்ளே உண்டாகிய நீருடைமை. தண்ணளி - அருள், தட்பமுடைய வண்டு. கண்ணெழித்தல் - கண்ணோட்டங் கொள்ளுதல், மதிச்சோர்தல்.

1377. அடைவிரவிப் பொருள்வேறுபட வரும் ஒட்டணிக்கு மேற்கோள்.

1378. அடையை விபரீதப்படுத்திப் பொருள்வேறுபடவரும் ஒட்டணிக்கு மேற்கோள். சேர்வோர்க்கு அருமையும் இனிமையின்மையும் கருமையும் கடற்குண்டென்க. கடல் மற்றொருபொருளில் வள்ளலாம்.

1379. மிழலைச்சதகம் சர்க்கரைப்புலவர் பாடியது (செந்தமிழ், தொகுதி 24; பக். 24.) கடக்கப்படிக்கின்ற - படிப்பு நடைபெற்ற. கல்விப் பயிற்சிக்கு முன்னே கொடைப்பயிற்சிபெற்றவர் எ - று.

1380. வின்மாரி - இந்திரவில்லிட்டுப் பெய்யும் மேகம்.

1381. ஆளுடையார் - திருப்பெருந்துறைச் சிவபிரான். மண்டகம் விகாரம்; 'மண்டகமெடுத்த நிலத்தொடும்' என்பது காளமேகம் (S. I. I. i. 150, 61.)

1382. இப்பாட்டிற் கண்ட தலைவர்வரலாறுகளைத் தொண்டை மண்டல சதகம் 69–76-ம் பாடல்கள் கூறும்.

1384. (வரி-11) 549-புலவர் என்றும்; (12) 449-பேர்கள் என்றும்; (28) மதுரையாசிரியன் மாறன், (36) வியாழமாலையகவல், (59) நக்கீரரும் என இத் தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர்–என்றுங்கூறும் களவியலுரைப்பாயிரம். அதனுள், 60–78-வரை அடிகளிற்கண்ட புலவர் பெயர்கள் காணப்படாததோடு, 60–5; 70–2-ஆம் அடிகளிற் கூறப்பட்டவர் களவியலுரைகேட்ட பரம்பரையினராகவும் காணப்படுகின்றனர். இப்பெயர்களுள் ஆண்டைப் பெருங்குமரனர் என்பது முண்டம்பெருங்குமரர் என்றும், மாதவனனர் இளங்காவனர் என ஒரு பெயராகவும், செல்வத்தாசிரியர் என்பது செல்லூராசிரியர் என்றும் பேதங்கள் உள்ளன. மூத்தோன்னாயிரம் பிறசான்றோர் செய்ததாக நச்சினார்க்கினியர் கூறுவர். (22-ம் வரி) 'அகத்தியமிலக்கணம்' என்ற இருத்தக.

1385. எழிழோடி ஐஞ்ஞூறு (=549) தலைச்சங்கத்தும், எழெழோடி பஃது (=59) இடைச்சங்கத்தும், எழெழு (=49) கடைச்சங்கத்தும் வீற்றிருந்த புலவர்கள் என்க.

1386. இப்பாடல் கூறும் புலவர் தொகைகள் முன்னூல்களுடன் வேறு படுகின்றன.

1390. இஃது இழுமென்மொழியான் வீழுமியது நவலும் தோல் என்ப தற்கு மேற்கோள். இக்காஞ்சிபற்றி மார்க்கண்டேயனார்பாடிய பாட்டொன்று புறநானூற்றுள் (365) தொகுக்கப்பட்டுள்ளமை அறியத்தக்கது. இவரைத் தலைச்சங்கப்புலவருள் ஒருவர் என்பர், நச்சினார்க்கினியர்.

1391. 'பயந்தமழைநீர்' என்னும் சோழமண்டலசதகப் பாட்டில் இவன் பெயர் 'மயிந்தன்' என்று கூறப்பட்டுளது; 'ஆலஞ்சேரி மயிந்தன், உளருண் கேணி நீரொப்போன்" என்று, இப்பாட்டின் 15-ஆ-அடிக்கோ நச்சினார்க்கினிய ரும் மேற்கோள்காட்டினர் (தொல். அகத். 30, உரை).

1392. வள்ளுவனார் நெய்தற்றெழிலில் செய்துவந்தார் என்பது இப்பாட் டாற் புலப்படுகின்றது.

1394. "நீதிமா மதுரை நீழ னெட்டிலை யிருப்பை யென்றோர், காதல்கூர் பணுவல் பாடுங் கபிலனூர் பிறந்த மூதூர்" (திருவிளையாடற்புராணம், 27, 3) என்பதனால் கபிலர் பிறந்த ஊர் பாண்டிநாட்டுத் திருவாதவூர் என்பது தெரியலாம். இருப்பை, அவ்வூர் ஸ்தலவிருக்ஷம் என்பர் (ஆழி., ஷை., குறிப்பு, பக். 105). 'வட்டவொண்பூ' என்றும் பிரதிபேதம்.

1395—6. இவை மந்திரச்செய்யுட்கு உரையாசிரியர் காட்டிய பாட்டுக்கள். இவ்வெண்பாக்களுள் முன்னது சாவவும் பின்னது வாழவும் பாடியதென்ப.

1397. 'அங்கக் குலுங்க வரிவாளி னெய்யென்றோர், பங்கக் கவிதை பரமன் சொலவிளித்து, சங்கறுப்ப தெங்கள்குலந் தம்பிரான் கேதென்றோர், திங்க முறுங்கவிதை சொன்ன னெதிர்முளித்து" என்பது திருவிளையாடற்புராணம். "வேளாப் பார்ப்பான் வாளாற் துமித்த வளை" என்ற அக நானூற்றுத் தொடர்க்கு, "வேளாப்பார்ப்பான்—யாகம்பண்ணுத ஊர்ப்பார்ப் பான்; இவர்களுக்குச் சங்கறுக்கையுந் தொழில்" என்றெழுதிய அநும்பவுரை யாசிரியர்கூற்று இங்கு அறியத்தக்கது. ஊர்ப்பார்ப்பான் — நகரவந்தண முதலிய இலௌகிகவிருத்தியுள்ள பிராமணன். "இவ்வூர் ஊர்க்கரணத்தான் வளர்ப்பார்ப்பான் பாரதாயன்மகன் நகரசன்மன்" எனவரும் சாஸனத் தொடரால் இப்பொருள் பெறப்படுதல் கண்டுகொள்க. (S. I. I. iv, p. 90)

1399. வையறுகு - அறுகுவகை. இறக்கோடு - இறகினின் செதில்.

1400—1421. இப்பாடல்களின் செய்திகளை மகாவித்வான். ரா. இராகவையங்கார் அவர்கள் எழுதிய 'கல்லிசைப் புலமை மெல்லியலார்கள்' என்ற நூலில், ஒளவையார்வரலாற்றுட் காண்க.

1400. *எழிற்கோ - நன்னன். எழில் - கொண்கானநாட்டில் உள்ள அவ்வமலை; 'நன்ன னன்னுட் டேழிற் குன்றத்து' (அகம் 349) 'கொண்கான நன்னுட் டேழிற் குன்றம்' (நற். 391) எனக் காண்க. இது, மேலைக்கடலருகில் உள்ள கன்னனூரிலிருந்து வடக்கே 18-மைலில் உள்ளதொரு மலை என்றும், 'ஸப்தசைலம்' என வழங்குவதென்றும் கூறுவர். இந்நன்னனைப் பெண்கொலை புரிந்தவன் என்றும் (குறுந். 292) புலவர்க்கு அடைத்தவாயில் உடையவன் (புறம்.151) என்றும் முன்னோர் இகழ்வர்.*

1401. *இது வசைச்செய்யுட்கு உதாரணம். சில அடிகளுந் தொடர்களும் முன்பின்னாக மாறியும் பிரதிபேதங்கள்கொண்டும் இருத்தலால், இப்பாட்டின் அமைப்புத் தெளியக்கூடவில்லை; ஆயினும் உற்றநோக்கி ஒருபடியாக அமைக்கப்பட்டது.*

1403. *அங்கவை சங்கவை - பாரிமகளிர்; 'பாரிமகன் அங்கவையை' (1108) என வருவதுங் காண்க.*

1404. *பாரி பறித்த பறி என்றது ஔவையின் பிரிவாற்றாத பாரி அவர் விருப்பின்படி பரிசில் கொடுத்தனுப்பி இடைவழியிற் பிறரையேவி அவற்றை வழிப்பறிகொள்ளச்செய்து மற்றுஞ் சிலகாலம் அவர் தம்பால் இருக்கும்படி செய்த வரலாறும், 'காரியன்றீர்த்த கலாக்கொட்பு' என்றது, தன்னைவிட்டுப்பிரியக்கருதிய ஔவைக்குக் காரி என்ற வள்ளல் தன் நிலத்தை அளந்துமுடிக்கும்படி ஆணையிட்டு வேறுகாரியத்தினிமேற்சென்றனன் என்ற வரலாறும். சேரமான் வாராய் என அழைத்தது, சேரன் கடத்திய பெரிய விருந்தொன்றில் ஔவை உடனுண்ண இருந்தபோது, இடையிற் பெருவிருந்தினனொருவன் வர, அவனுக்கு இடமொழிக்கவிரும்பிய சேரன் வேறெவரையும் இடம்பெயரும் படிசெய்யமுடியாது, ஔவையாரை 'இங்கே வாரீர்' என்றழைத்து அப்புதியவற்கு இடந்தந்தான் என்ற வரலாறும். இவை எவ்வாறு போன்புபற்றிய செயல்களோ அத்தகையதே இங்ஙஸ்சிற்றாடை அளித்ததும் என்க.*

1406. *சுரப்பு ஆடு - பால்சுரக்கும் ஆடு.*

1411. *அறுகிதல் - மங்கலச்சடங்குவகை; 'அடிமிசையறுகெடுத்திட' (1லிங். 251). 'மாமறையோரெதிர்கொண்டமறுகெடுப்ப' (சேக்கிழார்பு. 78) என்பவை காண்டு ஒப்பிடற்பாலன.*

1412. *'ஔவைபாடலுக்கு நறுநெய்பால் பெருகி யருந்தமி முறிவிலுற் சிறந்து, தெய்வமா நதிநீர் பரக்குநா டந்தத் திருமுனைப் பாடிநன் னாடு' என்றுர் வரந்தருவாரும் (வீ. பாரதம். பாயிரம்.)*

1416. மூழக்கு - மூவுழக்கு (நோல். எழுத் 457, நச்.) மூழக்கும் உழக்கும் என்க; ஒருநாழி எ-று.

1419. 'சேரன் கயிலைக்குப் போகிறபோது, ஔவையாரை அழைக்க, அவர் விநாயகபூசைபண்ணித் தாமதமாயிருக்க, விநாயகன் தன் துதிக்கையாலெடுத்துக் கைலையில்விடச் சேரனைக்கண்டு பாடியது' என்பது தமிழ்நாவலர் சரிதைத் தலைக்குறிப்பு.

1422. 'கொ' என்பது எவற்கண் வந்ததாம்; 1425-ம் பாட்டுக் காண்க. 'அ உ' என்பது தற்சுட்டு.

1426. 'கம்மெனிர்' என்பதனால், சேரமான்சார்பினர் அரிசில்கிழார் என்பது பெறப்படும். பாண்டில் - தேர். தை அனல் - அலங்கரிக்கப்பட்ட கழுத்து (பெருங்பா.மூ. 205). எறிதலொன்றே வருதற்கும் ஈதல்செய்யும் என்க; வருதற்கு உவமையன் எனினுமாம். 'கன்முரண்' என்று திருத்துக. திடியன் - வீரற்குப் போரிற் படைக்கலந்தாங்கித் திடிகொட்டுவோன். சிதர்தல் - பரத்தல்.

1427. புல் அணல்...காடு - புல்லிய தாடியுள்ள...வீரன். இணையன் - திடியன்.

1428. 462-ம் பாடற்குறிப்புக் காண்க.

1429. பெயல் - பெண்ணிறமுடைத்து; செம்பியர் பெயலைக் காப்பாக அட்டுதல் வழக்கு. தண் புலம் - முரசு. புட்டில் - ஒருவகைப்பெட்டி (புறம். 289.) பத்து பாலை முதலியபத்தை எதிர்த்து விளையாடும் மகளிருருவைக் கோட்டை வாயிலில் நிறுத்தல்வழக்கென்பது, 'வரிப்புனை பத்திரி பாலை தூக்கப், பொருந்தி நெய்ந்த போரு வாயில்" (நெடுநற் 68—70) என்பதனால் உணரப்படும். இப்பாட்டின் கருத்தையே "பத்தும் பாலையும் பசுவரிப் புட்டிலும் பலவுஞ் செல்ல மெறிந்தும், மூக்கை மாதரை யிறற்றுபின்றை யாய்ப் பகழி வாயிலிறுத்தி" (தஞ்சைவா. சி.பி. 5) என்று பின்னர் ஒருவர் அமைத்துப் பாடினர். "பகை வரமகளிரால் அவர்கொண்டி யிளையரை நோக்கப்படுவன" என்பர் நச்சினார்க்கினியர்.

1430. 483-ம்பாடற் குறிப்புக் காண்க. மயிர்க்கண்முரசு - "புலியைப் பொருது கொன்றுயின்ற சினத்தோட்மெண்கொண்ட வரி நிறத்தழி அதள் வரிபோலுமை மயிர்சீவாமற் போர்த்த முரசு" என்பர் அடியார்க்குநல்லார் (சிலப். 5, 88) 'கொல்லேற்றுப் பகடதள் சீவாதுபோர்த்த மாக்கண் முரசம்" (மதுரைக்காஞ்சி, 733—3) என்ப. மிஞி - கரும்பாம்பு.

1431. இது, பத்தினிதேவியாகிய கண்ணகி, தன் கணவன் கொலையுண்டு கிடந்தகிலைகண்டு பாடியதாகத் தெரிகின்றது. இரண்டாமடி ஐஞ்சீர்கொண்டு மிக்குவந்தது; "இவையெல்லாம் ஆரிடப்போலி ஆரிடவாசகம் என்றும், ஆகவுங் கொடவும் பாடல் தரும் கபிலர் பாணர் கல்லாடர் மாமூலர்.....இத்தொடக்கத் தோரால் ஆரிடச்செய்யுள்போல மிகவும் குறைபவும் பாடப்படுவன" எனவும் கூறுவர் யாப்பருங்கலவிருத்தியுடையார் (93, உரை.); பெருஞ்சித்திரனார் ஒளவையார் என்ற புலவர்வரிசையில்வைத்தது பத்தினியை அவ்விருத்திகாரர் கூறுவதாலும் இப்பாட்டின் அமைதிச்சிறப்பாலும் இப் பத்தினி பெரும்புலமை வாய்ந்தவள் என்பது பெறப்படும். கெண்டுதல் - வருத்துதல்; கெண்டி ஊடை என இயையும். கெழுதகைமை - அன்பு.

1432. நிழல் - ஒளி. மண்டிலம் - கண்ணாடி முத்தமிழ், ஆடிநிழலின் அறியத்தோன்றுவதாம் எ-று.

1433. நால்வகைன்றோதிய குலம் - நான்குவருணம். அதிகாரவணிகர் என குலத்துக்குரிய பதியும், தமிழ்ப்புலத்து அதிகார் பதியுமான புகார் எ-று. தமிழ்ப்புலம் - தமிழ்நிலை; புகார்க்காண்டமுதற்கண்ணவைத்துச் சிலப்பதிகாரம் ஜிறப்பித்தமையின 'பூம்புகார் போற்றகின்ற சிலப்பதிகாரம்' என்றார்.

1434—5. ஒற்றுப்பெயர்த்தல் என்னும் யிறைக்கவிக்கு இவை உதாரணங்களாகவும் 1437-ம் பாட்டு ஆசிரியர் வைத்த விதமாகவும் கூறப்பட்டுள்ளன. "ஒற்றுப்பெயர்த்தலாவது, ஒருமொழியைப் பாட்டின் இறுதிக்கண்வைத்துப் பிறிதொருபொருள்பயக்கப் பாடுவது" என்றும், ஒன்றிற்கும் வேறுபொருட்பெயர்த்தெடுத்தல் என்பது இதன் உறப்புப்பொருள் என்றும் கூறுவர். இப் பாடற் பொருள்கள் விளக்கக்கூடவில்லை. "ஓடிபுட் பத்து மரமுடனெற் றுப் போத்தூத், தேர்மருவி யூடற் றிறம்புனைந்து, சீலை, மருதம் புணர்ந்ததுவும் வெண்பாவாப் வையம், கருதிப பகர்வான் கவி" என்னும் நம்பியலங்கார மேற்கோட்செய்யுளை முதன உதாரணவெண்பாவுடன் வைத்து ஒப்புநோக்குக. சுண்டிப பதமாம் எண்ணுறுத்திற்கு ஓடகின்மையால், யாப்பு. விருத்தியிற்கண்ட 1136-ம் பாடல் பிழைபட்டுள்ளதாகத் தெரிகின்றது.

1438. இதுவும் 'வஞ்சிவெளிய' என்றபாட்டும் (1805) ஒளவையும் காரைக்காலம்மையும் கூறியன என்பர் பரிமேலழகரியர் (தொல். செய். 72, உரை). வெளிய, வலிது, கரிது என்ற மூன்றும் நற்பொருளாயும், இனிது தீப் பொருளாயும் குறிப்பிற் பெறப்படவைத்தலால், சோழனார் இதனுள் இழைப் பட்டதுபோலும்.

1439. இது பாதையங்கிற்கு உதாரணம்; அஃதாவது, 'மூவர்மூன் ருசிரியவடி சொன்னுல் தானேர் அடிபாடிக் கிரியை கொருத்தலது' என்பர்.

1440. கல்லா மறு பஞ்சம் - கொடுத்தல் கற்காது மறுக்கும் பஞ்சகாலம்.

1443—62. இப்பாடல்களின் வரலாறுகூறப் 'பொய்யாமொழிப்புலவர்' என்ற தலைப்பின்கீழ் யான் எழுதிய கட்டுரைகளிற் காண்க. (செந்தமிழ், தொகுதி-5, 6)

1443. இதனைக் கம்பர் இளமையிற் பாடினர் என்று பின்னோர் கதை வழங்குவர். வயிரபுரம் - தென்னார்க்காடுஜில்லா திண்டிவனம் தாலுகாவில் உள்ளதோர் ஊர்; சோழநாட்டில், மாயூரந்தாலுகாவில் உள்ள கூந்தரபாலபுரம் என்பாருமுளர்.

1444. செங்காட்டுக்கோட்டம் - தொண்டைநாட்டு 24 கோட்டங்களுள் ஒன்று. பொய்யாமொழிமங்கலம் என்ற ஊர் சாத்தனூர்வமிசியரான முத்தமிழாசிரியர் ஒருவர்க்குரியதாயிருந்ததென்பது சாஸனத்தால் தெரியவருகின்றது. (I. M. P. Cg. 129.) அஃது இப்புலவர்பெயர்பற்றி வழங்கியதுபோலும்.

1445. இப் 'பொய்யாமொழிப்புலவன்பாடலில், வேட்டுக்குமரன் தன் பெயர் முட்டை என்றற்றொடக்கத்தன இடுகுறியாக்கம் தொடர்ந்தன' என்பர் சங்காரமச்சிவாயர் (நன் 275, சங். உரை.). ''முற்பட்ட முருட்டுப் புலவனே முட்டைப்பெயர் செப்பிக்கவிபெறு பெருமானே'' என்றார் அருணகிரிநாதரும் (திருப்புகழ்).

1451. அறமுரைத்தான் - தக்ஷிணாமூர்த்தியாகிய சிவபிரான். 'ஆல நிழற்கீ ழறஞ்சொன்ன வழகனே' (தேவா. பக், 551, 2), 'அன்றுலின் கீழவ் வறமுரைத்தான் காணேடி' (திருவா. திருச்சாழல். 16) எனக் காண்க. சண்டித் தலைச்சங்கப்புலவருள் ஒருவரான சிவபிரானை அத்தொடர் குறிக்கும்.

1453. தூசு - புடைவை, சித்தம், வாசமலர்க்கண் கங்கை - திருமகள் போன்றவள். கங்கையின கண், அங்கை, செங்கை, முகம், கால்—இவை கடிக்கமலம் என்க. செங்கை முகங்காலும் - தேனே வெளியிடும். கங்கை கண் முதலியன, செங்கை முகங்கால் கடிக்கமலம் என இயையும்.

1454. 'பெண்ணா ளம்பர்ச்சிலம்பி பிறந்தமலையு மேருவென்றே' என்று ஔவை பாடியதாகச் சோழமண்டலசதகம் கூறுதலால், 'அரவிந்தத் தானணியும்' என்பது, முன்னோர் பாடமாகாமை காண்க.

1455. பத்தம்பிற் பாதி - பஞ்சபாணமுடைய மன்மதன். இரண்டம்பு - கண்கள்.

1456. என்னை ஒறுத்தமையால் குலமங்கையாகிய மாது கண்ணீர் பெருக்கலாயினள் என்க. தூயாத முத்துவடம் - கண்ணீர்; வியாபாரச் செப்பு - தனம்; வெளிப்படை.

1460–2. நீலியென்பான் பழையனூரில் வாழ்ந்த வணிகனொருவன் மனைவி. இவள் விவாகமாகிச் சிறிதுகாலத்திலிறந்து பேயாய்க் காட்டில் திரிவாளாயினள். ஒருநாள் அவளுடைய கணவன் அக்காட்டுவழியே தனித்துச்சென்றபோது, இந்நீலிப்பேய் அவனுடைய இரண்டா மனைவியைப்போல வடிவங்கொண்டு ஒரு கள்ளிக்கட்டையைப் பிள்ளையாக்கி இடையில் தாங்கியவண்ணம் அவனைப் பின்தொடர அவன் அவ்வடிவத்தைப் பேபெனத் துணிந்து அதன் வஞ்சமொழி கட்கு இணங்கா தோடினன். பேயும் அழுதுகொண்டு அவனைத் தொடர்ந்து காஞ்சிபுரத்தையடைந்து அங்கே அம்பலத்திற் கூடியிருந்த வேளாளரிடத்துச் சென்று தன்வழக்கைச் சொல்லிற்று. அவர்கள் இருவர்வழக்கையுங்கேட்டுப் பேயைப்பார்த்து, 'நீ கூறுவதற்குச் சாட்சி யாது' என்று வினவப் பேய் 'இப் பிள்ளைய விடுக்கின்றேன், அம்மை அப்பா என்று அறிந்து அணையாதோ, பாருங்கள்' என்று சொல்லி விடுப்ப, அப்பிள்ளை அவ்வாறே செய்ய, வணிகன் 'இது பேய்க்கூத்து' என்றான். அதுகேட்ட வேளாளர், 'இதற்கு நாங்கள் பிணை பாவோம்; நீயும் இவளுமாக இவ்வறைக்குட் சென்று சிறிதுநேரம் பேசி வாருங்கள்' என்றுசொல்ல, வணிகன் அவ்வுரை மறுக்க இயலாதவனாய் அறையி னுட்செல்லப் பேயும் உட்புகுந்து கதவடைத்து அவனுயிரைப் பருகி மறைத் தது. வேளாளர் எழுபதின்மரும் கதவைத்திறந்துபார்த்துத் தம்மால் வணிகன் இறந்ததுகண்டு, அப் பழிதீர அவர்களெல்லாம் தீப்பாய்ந்து உயிர்விடுத்தனர்— என்பது கதை. இவ்வரலாற்றையே 'வஞ்சம் படுத்தெருத்தி வாணன் கொள்ளும் வகைகேட்டஞ்சும் பழையனூர்" எனத் தேவாரத்தும் "மாறுகொடு பழையனூர் நீலி செய்த வஞ்சனைபால் வணிகனுயிர் நிழற்பத் தாங்கள், கூறிய சொற பிழையாது துணிந்து செற்றீக் குறியிலெழு பதுபேரு முழுதுங் கண்ணை, யாறணிசெஞ் சடைத்திருவா லவர்கட் டப்ப வண்டமுற நிமிர்ந்தாடு மடியின் நிழ்மைப்ப், பேறுபெறும் வேளாளர்' எனச் சேக்கிழாபுராணத்தும் பிற நூல்களிலும் கூறப்படுவன. 1460. காவலோ காவல் - இக்கக் குறிப்பு. சோவவப்பொருப்பால் அயிந்தார் - அசுரனை நிராவணனைச் சுமேருமலையால் செருக்கடக்கிய சிவபிரான்; கடலை மலையால் அணைகட்டிய இராமன் எனினு மாம். நெருப்பால் அயிந்தார்க்கு நேராகப் பொருப்பாலயிந்தார்க்குக் குணங்கள் போதுமோ என்று.

1463. சந்திமுற்றம் - சோணாட்டுச் சிவதலம். 'அன்னச்சேவல் அன் னச்சேவல்' என்னும் புறப்பாட்டு (67) இதனுடன் ஒருபுடை ஒப்பிடற்குரிய தாம்.

1464. பொன்பற்றி - தஞ்சை ஜில்லா அறந்தாங்கித் தாலூகாவில் 'பொன்பேத்தி' என வழங்கும் ஊர். வீரசோழியநூலாசிரியரான புத்தமித்திரர்

இவ்வூர்த்தலைவராவர். இவர்க்கு முன்னேரும் பின்னேரும் சோழர்முதலியவ ராட்சிக்கீழ்த் தலைமைவகித்தவர்கள் என்பது இந்நூல் 187-ம் பாடற் சுரிதகத் தாலும் சாஸனக்களாலும் அறியத்தகும்.

1465. அவலோகிதன் - போதிசத்துவருள் ஒருவராகக்கொண்டு பௌத் தர்கள் வழிபடும் அவலோகிதேசுவரர். இவர்பால் அகத்தியர் தமிழறிந்தவர் என்ற கதை பௌத்தர்க்குள் வழங்கல் அறியத்தக்கது.

1466. வீரசோழன் - முதல் வீரராஜேந்திரசோழன் (கி. பி. 1063–70)

1467. மாலைக்கூற்றம் என்பதனை மிழலைக்கூற்றம் என்று திருத்திக் கொள்க. 'ராஜராஜவளநாட்டுமிழலைக்கூற்றத்துப் பொன்பற்றிக் குருகுலராசன்' என்பது சாஸனம் (I. M. P. cg. 1014). வீரன் - வீரராசேந்திரன்.

1468. 'கடனுரவே மொழிந்தான்' என்பதனால், வீரசோழியவுரை காரான பெருந்தேவனாரைப் புத்தமித்திரர்மாணாக்கராகக் கருதுவாருமுளர். இவ்வுரைகாரர், வீரராசேந்திரன்காலத்துக்குப் பிற்பட்ட நூலொன்றையும் மேற்கோள்புரியாமையால் இவர், வீரசோழியநூலாசிரியர்காலத்தை ஒட்டி யிருந்தவர் என்று கொள்ளத்தகும்.

1470. புகழாம் எகப் புகழ் - கலிங்கத்துப்பரணி பாடித் தாம் நிலை நிறுத்த அபயன்புகழ்.

1471.—85. யான் எழுதிய ஒட்டக்கூத்தர்வரலாற்றுள் இப்பாடல்கள் இயற்றப்பட்ட சந்தர்ப்பங்களைக் காண்க. (செங்குந்தர்பிரபந்தத்திரட்டு, முகவுரை). 1471. பொருந்து - மனைப்பொருந்திய. சடையன் - சடைய வள்ளல். கவுட்புலவன் - எனைடம் என்றும் செப்புணரியிற் சிறந்த புல வன். காச்சேயன் - கூத்தரை ஆதரித்த பிரபு. 1472. கலிக்க - ஒலிக்க. கலிக்குப் பஞ்சரம் - கலி ஒடுங்கியடங்கக் கூடி. கலிக்கு என்பதனைக் கலிக்கு என்று திருத்துக.

1473. கொந்தளம் - மயிர்முடி. குருளை - இராஜாணசம்பந்த மூர்த்திகள்.

1474 'தரித்தபிரான்' என்ற தொடர்வரை கூத்தரும், எனையவை சோழ னும் பாடியவை. இவ்வரசன் அபயன்போனை இரண்டாங்குலோத்துங்க சோழனவன்.

1475. கிலை - கோதண்டம். அ விந்தத்து அடவி - அந்த விந்தமலைக் காடு.

1476. பேதை ஆட்டுக்கு - பேதைமையுள்ள ஆட்டுக்கு. குவால் - கெற் போர்.

1477. 'தேசோ விசால: ப்ரபவோப்யநந்த:' (தேசம் விசாலமானது; பிரபுக்களும் பலர்) என்ற முதுமொழி ஒப்பிடத்தக்கது. 'நீயும் நடந்தாயோ நாலுந் தடி' என்றது, மூவடியால் உலகளந்த திருமாலினும் அதிக அடியால் நீ பூமியை அளந்துகொண்டனையோ எ-று. 'நடந்தாயோ' என்று திருத்துக.

1478. கோ - சக்கரவர்த்தி. பூவில் விண்ணோர் காக்கண்ட செங்கை என்றது கற்பகதருப் போன்ற சோழன்கொடையைப்பெற்ற காங்கன் எ-று. கற்பகம்போற் கொடுக்கும் கை எனக் கூத்தர்க்கு அடையாக்கினும் ஆம். புலவரை 'வற்றாவுங்கண்ணுதாரன்' என்பர் (1687).

1479. கரத்துஞ் சிரத்துங் களித்தல் - கைம்மதம் கண்ணமதங்களாற் செருக்குறுதல். மும்மதங்களுள் கைம்மதமும் ஒன்று (தீவா.). இரத்தம் - இரக்கின்றோம். இவன் மூன்று மூன்று நகர்களிலே கபாடங்களைத் திறந்தவன் என்பதை உட்கொண்டு இப்போது கபாடந்திறப்பாய் என்றது, பகைவரது அகன்றமார்பத்தையும் சிரத்தையும் தன்வாளால் திறந்த வீரன் இவன் எ-று. அகன்றமார்பைக் 'கபாட வகூடஸ்' என்பது வடமொழிவழக்கு. கபாடபுரம் - பாண்டியர் தலைநகர். கல்யாணபுரம் - சளுக்கரசர் தலைநகர்.

1480. இம் மடையன் அரசற்கு உணவிடும்போது கேடுவினைத்தவன் என்பது உய்த்தறியப்படும்.

1483. மலரி - திருச்சிராப்பள்ளிமலைச் சார்ந்த திருவெறும்பியூர்க்கு முற்காலத்து வழங்கிய பெயர் என்பது சாஸனத்தால் தெரிகின்றது. (I. M. P. Tp²) பாண்டியநாட்டினும் மலரி என்றதோர் ஊர் உண்டு.

1485. மணலை - தொண்டைநாட்டு மணலில்போலும். மணலிற்கூத்தன் என்ற தலைவன் ஒருவனுளன் (1069). யாழ்ப்பாணப்பகுதிக்கும் இப்பெயர் வழக்கு உண்டென்பது, 'மணலையரதிபதி' (1207), 'மணலைக்கோமான்' (இராதவமீ. இலவண. 22) என்பவற்றால் அறியலாம்.

1486. சில கயல்கள் - சேர பாண்டியர் கொடிகள். உனக்குப் போரில் தோற்ற சில கயல்களே வீழி புருவங்களாய் இப்போது சூதுப்போரில் உன்னை வெல்கின்றன; அதனால், பழி புகழ்கள் எவர்க்கும் உரியன என்க. 'உலகங்களே முடைய பெண்சக்கரவர்த்தியுடன்' என்றார் கூத்தரும் (விக்கிரம. உலா. 79-80). பெண்ணாஞா என்பது மலைநாட்டெழக்கு.

1487—9. விக்கிரமசோழன் (கி. பி. 1118-35) அபயன்மகன். உணர்ப்புவயின் வாரா ஊடற்காலத்தைத் தலைமக்களே அறிவரென்போர் இடைகின்று கூட்டும் பழைய மரபு (தொல். பொ. 455) இங்கு அறியத்தக்கது. இரவிகுலத் தலைஞரலின் தாமரை தானே திறக்கும் என்றார்.

1490. சத்தம் - இலக்கணம்; 'சத்தமுஞ் சோதிடமு மென்றுங் கிளை பிதற்றும், பித்தரிற் பேதையா ரில்' என்பதனால், வெற்றிலக்கணம் கற்ற புலவராகிய பித்தர்கள் வாழைத்தோட்டம்புகுதற்குக் காரணமான பித்தனாக என்னைக் கூறுவர் என்றார். பித்தசாந்தியாக வாழைத்தோட்டத்துட்புகுதல் மரபு. 'சோலை வாழை யிருந்தலை நீவலின் மதனழிந்து' என்றார் முன்னோரும் (தருநீ. 308). 'பித்தனிவனென்பது என்னைகண்டாய்' என்பதும் பாடம்.

1491. வல்லி - காற்றாள். ஆவித்தல் – மகிழ்ச்சியால் ஆரவாரித்தல். இவ்வெண்பா, "கானிமிர்த்தாற் கண்பரிப வல்லியோ புல்லாதார், மானினையார் மல்கலரா ணல்லவோ.....கிள்ளி புழைத்தடக்கை நால்வாய்ப் பொருப்பு" (நன்னி. 24, உரை) என்ற பழம்பாடற்கருத்தைத் தழுவியுள்ளமை காண்க.

1495—1522. இப்பாடல்களிற் கண்ட வரலாறுகளை மகாவித்வான் ரா. இராகவையங்கார் அவர்கள் எழுதிய 'கம்பர்' என்ற ஆராய்ச்சிக்கட்டுரையுட் காண்க. (செந்தமிழ், 3—ம் தொகுதி).

1495. சராமன் - சடையவள்ளற்கு ஒருபெயர்; 'சராமன் வெண்ணெயணுகும் பாசங்கலந்த பிறிபோலகன்ற' என இவரே பாடுவர் (கம்பரா. நாக பா. 263).

1496. பூழி - திருநீறு. சேதிராயனை விடுத்திண்டிய செய்தியை "எரிமுழுப தோதியரச் கேற்றுக் களரியிலை, காரிவிட காகக் கடிக்குவகை" என்ற நீருக்கைவழக்கைக் கண்ணிபாலும் 'அழுவதுவ்கொண்டு' என்ற தொண்டைமண்டலசதகச் செய்யுளாலும் அறிக. இச்சேதிராயன் சடையவள்ளல் மகனைத் தெரிகின்றான்.

1499 இவ் வாணியன்வரலாற்றை 1521-ம் பாடற்குறிப்பிற் காண்க. குலக்கவிக்கு - உயர்ந்த கவித்துவத்துக்கு. காலம் - திருச்சின்னம். வேள் அம்பு இரத்தகண் - மன்மதபாணமான நீலோற்பலத்தை வென்ற கண்.

1504. 'பலர்புகழ் கம்ப னுமையுட னீயுமொப் பாயென்றதும்' என்பது பாண்டிமண்டலசதகம்.

1505. நெண்மலி - செல்கற்பட்டை அடுத்துள்ள ஊர். 'கிச்ச முறவே நெற்பயிராய் நீளுந் தமிழ்க்கு நெண்மலிவாழ், தச்சன் பொலியா யிரக்கலெல் தந்தான்' என்பது சோழமண்டலசதகம். இப்பாட்டுக் 'கம்பர்வென்னாட்டி பாடியது' என்ற தலைப்பெயருடன் பிற்காலத்துப் பாடபேதம் பலகொண்டு வழங்குவது.

1506. கம்பர் தம் இராமாயணத்தைச் 'சடையன் வெண்ணெய்நல்லூர் வயிற்' றங்கிப் பாடியவராயினும் அதனெருபகுதியைத் திருவொற்றியூர்க் காளி கோயிலில் இரவிலும் பாடி மாணுக்கர்களைக்கொண்டு எழுதுவித்துவந்தவர் என்பது இப்பாட்டால் அறியப்படுகின்றது.

1507. மகன்பெயர் அம்பிகாபதி என்பர்.

1508. பரப்பு ஒதம் - விரிவுள்ள கடல். மதியம் தரப்போன் - சந்திரனேயும் ஒளியால் வென்ற இராஜபெருமாள். உரப்பு - திண்மை.

1511—2. இப்பாடல்களினின்று, கம்பரிடம் வைத்த பெருஞ் செற்றத்தால், அப்புலவர் தன்பால்வரும்போது கூட்டிலிருந்தபுலியை அவிழ்த்து விடச் செய்து, சோழன், அப்புலியை எய்வதுபோல அவரை எய்து கொன்றான் என்பது உய்த்தறியப்படும். கம்பரைக் கொன்றதுபற்றிப் பாண்டியன் பழிகூறியதுங் காண்க(1525). சோழற்குக் கம்பரிடம் இத்தகைய செற்றமிழ்ந்ததற்கு அவன் பகைவனான காகதீயவரசன் - பிரதாபருத்திரனே அனுப்பித்துவந்து கம்பர் அவனை அச்சுறுத்தியதும், சடையவள்ளலிடத்து இவர்வைத்த பேரன்பு மே காரணமாகவேண்டும் என்று கருதுவர்

1516. ஆதித்தன் - கம்பர்தந்தை. 'ஆதித்தன் புதல்வன்' என்ப (1517).

1517. தம்பம் - பற்று.

1519. கம்பர் தம் இராமாயணத்தைச் சகவரு 1100-(கி. பி. 1178)-ல் பாடிமுடித்தவர் என்பது இப்பாட்டால் தெளியப்படும். இதுவே மற்றக் காரணங்கள் பலவற்றோடு பொருந்தி வலியுறுதலைக் 'கம்பர்காலம்' என்ற தலைப்பின்கீழ் மகாவித்வான். ரா. இராகவையங்காரவர்கள் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையுட் கண்டுகொள்க. (செந்தமிழ். தொ-3)

1521. வாணியன்தாதன் என்பான் செக்கார்குலத்துதித்தவனும் கம்பர் காலத்தவனுமான பெரும்புலவன். இவனைச் சோழன் பெரிதும் அபிமானித்தவன் என்பது 1499-ம் பாட்டால் அறியலாம். இவனுக்கும் கம்பர்க்கும் பகைமையுண்டென்பது இப்பாட்டால் விளங்கும். கம்பர்பாடிய மும்மணிக் கோவை இப்போது கிடைத்திலாமையால் அதன் வரலாறு ஒன்றுந் தெரியவில்லை. கம்பர்க்கு இவன்பாலிருந்த செற்றத்தை 2142-ம் பாடற்குறிப்பிற காண்க.

1523. படவே அமையாதோ - சாகவோதோ; படவேறிச் செல்ல அமையாதோ எனினுமாம். குடைவேல் - உடைவேல். பாவியேன் - இரக்கங்குறிக்குஞ் சொல்.

1524. 'ஒடினூர்மேலோ' 'பாடினூர் மேலோ' என்று திருத்துக. 'உயர் கான வன்குடையாய்ப் பாடினூர் மேலோ' என்றது 'இந்தக் குடைவே லிடை நுழைந்த கோ' (1523) என்று பாடிய என்மேலோ எ-று. ['கானவன்குடை' என்ற பாடமே பொருந்தும்.]

1526. தலைக்குறிப்பில் 'சார்வபூமன்' என்பது புலவர் பெயராகத்தோற்று கின்றது. 'கவியரசர்' என்று அப்புலவர் தம்மைக் கூறியதாலும் இஃது அறியப் படும். 'வில்லிபுத்தூ ரிறைவனுஞ் சார்வபூமன்' எனப் பாரதநூலாசிரியர்க்கும் இப்பெயர்வழக்குண்மை காண்க. 'சார்வபூம பாண்டியன்' என்று பாடங்கொண் டாருமுளர். தமிழ்நாவலர்சரிதையிலே முற்றெடர்ச்சியைநோக்கின் இப்பாடல் முதலியன பாடியவர் புகழேந்திப்புலவராகக் கருதக்கூடுமேனும், இவற்றுட் குறிக்கப்பட்ட அரசர் பிற்காலத்தவராதலின் வேறுபுலவரென்றே தெரிகின் றனர். புத்தசமயத்திற் கடகம் யானை முதலிய வரிசைகளை இலங்கையரசனும் பெற்றவர் இப்புலவர் எனப்படுதலால் இவர் பௌத்தசமயத்தவர்போலும்.

1529. இக்கனூல் அடியார்க்குநல்லாராற் சிலப்பதிகாரவுரையுள் மேற் கோள்காட்டப்பட்டுள்ளது. உம்பர்குரு - வியாழன்.

1530. (2) நிலத்தியலாற் றிரியாத (கல்லை) நீர் போலுந் தூய்மையும். (3) நலம் படர்தல் - தீர்த்தமாகி இடையறு தொழுகுதல். (4) திங்கள்போல வழிமுறைவளர்ந்த கல்வியும். (4-5) எழுச்சியுந் தாழ்ச்சியும் என்றும் பொய் யாத திங்களும் ஞாயிறும் போலத் திரிவுபடாத வாய்மையும். (8) எண்வகை யுறுப்பினராகி என்றது 'எட்டுவகை நுதலிய அவையத்தானும்' என்று தொல் காப்பியனர் கூறியவகையை; அவற்றை 367-ம் பாடலிற் காண்க. (17) அறன் பொருள் அன்பென மூன்றின் என்பது அவ்வாசிரியராற் கற்பிக்கப்படுவார் இத்துணைப்பகுதியர் எ-று. (18) அறன்பற்றி ஆசான்மகன், தன்மகன், வழிபடு வோர்களும், பொருள்பற்றி அரசன்மகன் முதலாயினோரும், அன்புபற்றி உரைகோளாளன் முதலியோரும் கற்பிக்கப்படுவார் என்க. (21) சொல்லி யாங்குணர்தற்குப் பூவையும் கிளியும், (22) சூழ்ந்து நன்கறிதற்கு அண்ணம் பண்ணுடையும், (23) பயன்படுதற்கு இனங்காக்கும் யானையும், செய்ந்நன்றி யறிதற்குக் குரங்கெறிவிளங்காய்போலாகாமையும், நீச்சார்விண்மைக்கு எருமை தோணி போலாகாமையும் உவமையாகக் கொள்க. (33) பரவை - பரப்பு. இப்பொதுப்பாயிரத்துக்கு மூன்னூருரையொன்றுண்டு.

'ஆதிரையான் பெயராசிரியன்' என்றும் பாடம். ஆதிரையான் (சிவ பிரான்) பெயருடைய இவ் ஆசிரியரை, மயேச்சுரர் என்பர். 'காமனைக் காய்ந்தவர் நாமமிழ்ந்த நல்லாசிரியர்', 'பெண்ணொரு பாகன் பெயர் மிழ்ந்த பேராசிரியர்' என்பன முதலாக யாப்பருங்கலவிருத்தியுடையார் கூறும் ஆசிரியர் இம் மயேச்சுரரேபோலும்.

1531. களந்தை - தொண்டைநாட்டுக் களத்தூர். 1532. வச்சணந்தி - வச்சநந்தி என்பதன் மரூஉ.

1533. நன்கு அளந்து - நன்கு சீர்தூக்கி. ஐந்நூல் - பஞ்சலக்கணம். 'நன்களந்த நூல்' என்பது பாடமாயின், நன்குமதிக்கபெற்ற மூன்னூல் என்க.

1535. இடையளநாடு இடையளநாடு என்றும் பிரதிபேதம். இந்நாடு, ஜயங்கொண்டசோழமண்டலத்து (தொண்டைமண்டலத்து) உள்ளதாம். 'இடையளநாட்டு மணக்குடி மூவேந்தவேளார்' என்பது சாஸனம். (I. M P. Cg. 109.) பாண்டிநாட்டிலுள்ள மணக்குடியாகக் கருதுவாரும் உளர். வில்லவதரையன் இயற்றிய 'அகநானூற்றுக்கருத்தகவல்' இப்போது கிடைத்திலது.

1537. கங்கக்குருகில் - அமராபரணன் சேயகங்கன். ஆதிநாதர் - தீர்த்தங்காரருள் ஒருவர். குறும்பு - குறும்பிநாடு. சனகாபுரம் இக்காலத்துக் கொங்குநாட்டுச் சீனபுரம் என வழங்கும் என்பர். இவ்வூரைத் தொண்டைமண்டலத்தாக அம் மண்டலசதகங் கூறும்.

1540. நகரங்களிற் காணும் புதிய ஆடையணி முதலியவற்றைப் புதியன என்பதுபற்றி விலக்குவார் யாவர் எ-று.

1542. செழுவை - இராமநாதபுரஞ் சீமையைச்சார்ந்த ஊர்.

1547. பரிமேலழகருரைப்பிரதியிற்கண்ட இப்பாட்டினின்று, அவரூர் ஒக்கை (=ஒக்கூர்) என்று தெரிகின்றது. இப்பெயர்கொண்ட ஊர்கள் பலவற்றில் எஃது இவர்க்கு உரியதென்பது புலப்படவில்லை.

1548. மூன்றாற்புரி மேல் அழகிய கோ - பூணூலானது மார்பிடத்தை அழகுசெய்யுந் தலைவன். கூடல் என்பது அவர் தொண்டைநாட்டினர் என்பதனோடு முரணுகின்றது. பாண்டிநாட்டிலும் ஒக்கூரொன்று உண்டு.

1549. கந்தி என்பார் தமிழ்ப்புலமையாய்ந்த சமணத் தவப்பெண். சித்தாமணியிறுதியில் 'இது கந்தியார்பாட்டு' என்று, நச்சினார்க்கினியர் கூறுதல் காண்க. பிற்காலத்து வெள்ளி என்பாரைப்போல, மூன்னூல்களிலே தம் பாடல்களையும் திருத்தங்களையும் இடையிற் செருகிவைத்தவர் இவர் என்பதும், அவற்றை அறிஞர் வெறுத்துவந்தனர் என்பதும் 'பிசைபடு பொருளை நசைபடு புன்சொலிற், றந்திடை மடுத்த கந்திதன் பிழைப்பும்' என்பதனாற் புலனும். நீணிலங்கடந்தோன் - காஞ்சியிலுள்ள உலகளந்தபெருமாள் என்பர்.

1550. இன்சீர்ப்பயன் - இனிய சிறந்த பொருள்; பயனே விரும்பியநர் என்க இது பரிமேலழகர்கூற்று.

1551. குறுந்தொகையுள் பேராசிரியர் உரையெழுதாதுவிட்ட 20-செய்யுட்கே இவர் உரையெழுதியவர் என்பது, பின்வரும் பாயிரச்செய்யுளாலும் (1552) அறிக.

1552. நாற்பொருள் - பொழிப்பே யகல துட்ப மெச்சம் என்பன; உறுதிப்பொருள் நான்குமாம். நிலே உடை கலம் - நிலையழிந்த மாக்கலம். முழுதும் புரை(குற்றம்) பட(நீங்க), உரையை அறவுரைத்தும் என இயைக்க. சிவச்சுடர் தானே யாதல் - அத்துவிதநிலையுறுதல். நச்சினார்க்கினியன் என்பது சிவபிரான் திருநாமங்களுள் ஒன்று; 'நச்சுவார்க் கினியர் போலும் நாகவீச் சுரவனரே' என்பது தேவாரம் (439-1). சாஸனங்களிலும், இப்பெயர்வழக்கு அரசர்க்கும் பிறர்க்கும் அக்காலத்துப் பயில்வதாம்.

1553. எழுநா - அக்கினி. மேகங்கான்ற எச்சிலை நாற்றிசையும் உண்ணும்; எழுநா எச்சிலை விண்ணோர் மிசைகுவர்; அவைபோல நச்சினார்க்கினியன் நாவினல்லுரை அறிஞர் கொள்வர் என்க.

1557. நிரம்பை - கொங்குமண்டலத்ததோர் ஊர் (கோநூ. சத. 95. குறிப்பு).

1558. அல்காலம் எனும் கூற்று - நீக்காலம் என்ற யமன்.

1559. அடியார்க்குநல்லார் பாடியது.

1560-1. எண்பெருங்குன்றங்களை 156—ம் பாடலிற் காண்க. நாலடியார்க்கு அதிகாரம்வகுத்தவர் பதுமனார் என்பதும், அவற்றை மூப்பாற்கும் அடைவுபடுத்தி உரைகண்டவர் தருமர் என்பதும் இப்பாடல்களாற் புலனாகின்றன. தருமத்தலைவன் - தருமர்.

1562 பூமலிநாவல் மாமலை - பூக்கள்மிக்க நாவல்மரத்தையுடைய மேரு. புளிங்குடி - தென்பாண்டிநாட்டுத் திருப்புளிங்குடி.

1563. பன்னிருபுலவராவார்:—தொல்காப்பியர், அதங்கோட்டாசான், தாராலிங்கர், செம்பூட்சேயார், வையாபிகர், வாய்ப்பியர், பனம்பாரனார், கழாரம்பர், அவிநயனார், காக்கைபாடினியர், நற்றத்தர், வாமனர் என்பர். ஐபன் ஆரிதன் என்பதனால், ஹரிதகோத்திரத்தவர் இவர் என்பது புலனும். வேறுபடப் பிரித்துப் பொருள்காண்பாரும் உளர்.

1564. மூம்மைப் பாரத விலக்கணம் - இராக தாள பாவங்களைக்கூறும் பாரதநூல்.

1565–6. இவர் இரட்டையர்காலத்துக்கு முற்பட்டவர் (1571). இவை முறையே, இப்புலவர்பாடிய திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகத்தின் 2, 16-ஆம்

பாடல்களாம். பரம அம்பரம் ஆம் பகிரடல் - உயர்ந்த ஆடையாகும் ஆழ்கடல். 1565-ம் பாடலின்கீழ்—"இது கேட்டுக் கலம்பகம் பாடச்சொல்லிப் பாடினர்" என்ற குறிப்பும் உள்ளது. இதனால், திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகம் பாடப் பட்டவரலாறு குறிக்கப்பட்டதாம். இப்புலவரைப்பற்றிய மற்றைச்செய்திகளை நீ கலம்பகத்தின் நூலாசிரியர்வரலாற்றுட் காண்க (மகாமகோபாத்யாய - ஐயரவர்கள்பதிப்பு).

1566. பாடுவார் ஓரிருவர் - இசையில் வல்ல அசுவதரர் கம்பளர் என்ற நாகரிருவர். படைவீடு - தலைமையிடம்.

1567—8. திருச்சிராப்பள்ளி மலைக்குகையிற் பொறிக்கப்பட்டதும் 102-கட்டளைக்கலித்துறையில் அமைந்ததுமான அத்தாதியின் இறுதிப் பாயிரப் பாடல்கள் இவை. இந்நூலுட் சிதைந்தபகுதிகள் பல உள்ளன. 1567. மற் பந்தம் - வலிய உடற்கட்டு. நற்பந்தம் - நல்ல செய்புட்டொடை. கற்பந்தல் - கல்மண்டபம். பொலிவும் அழகும் வாய்ந்த பாதநிழல் என்க.

1569. பத்தெச்சம் - பெயர்வினைபுன்மை முதலிபண (நன். 359 உரை). நேமி - கடல்; பூமியுமாம். இப்பல்லவதரையர் அவிநயவுரையாசிரியர் என்பது இதனாற் புலனும்.

1570. இளஞ்சூரியர் மூதஞ்சூரியர் என்பன இரட்டையர் பெயர்கள். இவர் கலைச் சோணாட்டு ஆலிலத்துறையிற் பிறந்தவர் என்று சோழமண்டலசதகமும் கூறும். சங்கு - சங்கநிதி. கோ - காமதேனு.

1571. தமிழ்ப்பாடல் - திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகம் (1565—6). பொருள் - மகனை உபமன்னியு.

1572. இச்சம்பந்தன் சவளம்பண்ணிக்கொண்டிருந்தகாலையில் இரட் டையர் அவனை பார்ககவர அப்போது அவர்கள் பெருமையறியாது சோதிக்க விரும்பிய அவன் அவர்களை நோக்கி 'மன்னென்று தொடங்கி மலைக்கு என்று முடியப் பாடுதிர்' என, அவ்விரட்டையர்கள் பாடியதென்பர். இவ்வரலாற்றைக் காளமேகப்புலவர்க்குக் கூறுவர், பின்னோர்.

1574. ஓளவர் - குடிப்பெயர் (1124).

1575. திருநெல்வேலியிற் சிவதரிசனஞ்செய்தபோது பாடியது என்பர். வேயின்ற முத்தர் - மூங்கிலிற் றோற்றிய சிவபிரான். தாய் - மூங்கில். அரசற்கு வழக்கமாகப் பால்கொணரும் இடையனொருவன், பால்கொண்டுசெல்லும் இடைவழியிற் படர்ந்திருந்த மூங்கிலொன்றால் கால்தடுக்கிப் பால்சிதறும்படி பலமுறை நேர்ந்ததை அவன் அரசற்கு அறிவிக்க, அரசன் அதனை வெட்டும்படி

இட்ட ஆணைப்படி எவலாளர் வெட்டியகாலில், அம்மூங்கிலிலே சிவபிரான் தோற்றினர் என்பது தலபுராணம்.

1576. தப்புதல் - ஆடைபொலித்தல், தவறுதல்.

1577. கூவராயன் - கூவம் நியாகசமுத்திரம் என்ற ஊரின் தலைவன். இவ்வூர்ச்சிறப்பை 2142—3-ம் பாடல்களாலும் அவற்றின் குறிப்பாலும் அறிக. சம்புவன் - மல்லிநாதன் ராஜநாராயண சம்புவராயன் (கி. பி. 1377-I. M. P. 573). இவனைத் தம் ஏகாம்பரநாதருலாவில் இரட்டையர் புகழ்வர்.

1582—85. வில்லிபுத்தூரர்மகனர் வரந்தருவார்பாடிய பாரதச்சிறப்புப் பாயிரப் பாடல்கள்.

1582. தாரகாயண வண்டு - தாரமென்ற இசைபாடும் வண்டு. தீரகாகளம் - வெற்றிச்சின்னம். நால்வகைக் கவிக்கும் அதிபதியாய் மணிமுடி புனைந்து தமிழ் அரசர் மூவராலும் வரிசைபெற்றுயர்ந்து காவிபூமன் என்னும் பட்டம் பெற்றவராதலின் வில்லிபுத்தூரரைத் 'தீரகாகளம்' பெற்றவர் என்றார்.

1583. இவனை ஆட்கொண்டான் என்றும், கொங்குமண்டலத்து மகதநாட்டு வேந்தாதலின் 'மாகதக் கொங்கர் கோமான்' என்றும் வில்லி கூறுவர். இரட்டையரும் இவ் வாட்கொண்டானைப் பாடுதலால் அவ்விருவரும் ஒருகாலத்தவர் என்பது பெறப்படும். வக்கபாகை - திருவக்கரை; இது நடுநாடாகிய மகத நாட்டுள்ளது (இப்போது தென்னார்க்காடு ஜில்லா விழுப்புரந்தாலூகாவைச் சார்ந்துளது)

1586. இவர் சோழர்மரபினர் என்பது முதலிரண்டடிகளால் பெறப்படும். மத்திமதலத்தின் மறையவர் - மாத்யமப்பிராமணர். கொறுக்கை - சோணாட்டுர்; குறுக்கை என்பது சங்ககாலவழக்கு (அகநா.)

1588. அதிமதுரக்கவியின் ஊர் திருக்கோவலூர் என்பது 'கோவன் மதுரை' என்பதனாற் புலனும். கரைக் குதிரை - நீருடைப்பை அடைத்தற்கு வைக்கோல் முதலியவற்றோடு நிறுத்தும் மரச்சட்டம்; 'படுங்குதிரைக் கடும் புனலை யடைக்கப் பாய்ந்த பலகுதிரைத் தறிபோன்ற' (கலிங். 463) என்றார் சயங்கொண்டாரும். சொக்கன் குதிரை - நரி; பொய்க்குதிரை எ-று.

1589. அதிமதுரத்தைக் கூட்டுச்சரக்கு என்றது, தனித்திடுவதன்றிப் பிறசரக்குக்களுடன் கூட்டியிடுவதாதலின்.

1592. தேவரகண்டர்; வீதிவிடங்கர் என்பன, திருவாரூர்ச் சிவபிரான் திருநாமங்கள்.

1593. இது 'கோயிலிலே காளமேகத்தையடித்து அதிமதுரக்கவிராசன் பாடியது' என்று தமிழ்நாவலரிசரிதை கூறும். இங்ஙனம் பாடும்போது 'பாணந்தான்' என்ற சீர்க்குப்பின் பாடமுடியாது அதிமதுரக்கவி மயங்கிநின்ற போது 'மண்டின்ற பாணமே' என்று அச்சீர்களைக் காளமேகம் நிரப்பினர். காளமேகம் இறந்தபோது இம்மதுரகவிராசர் "வாசவயல் சுத்தி வரதா திசை யனேத்தும், வீசு கவிகாள மேகமே—பூசுரனே, விண்டின்ற வெவ்வழலில் வேவதே பாவியேன், மண்டின்ற பாணமென்ற வாய்" என அச்சீர்களின் அருமையை நினைந்து இரங்கிய கையறத்தாலும் அறிக (தமிழ்நா.). காள மேகத்தின் இயற்பெயர் வரதன் என்பதாம்.

1595. 'அம்மைச்சி, பிராமணர் தன் வீட்டைப் பிடுங்கியபோது பாடியது' என்று தலைப்பெழுதி அவ்வம்மைச்சியே இப்பாட்டைப் பாடியவளாகக் கொள் வாருமுளர். இவள் காஞ்சியில் வாழ்ந்த பெண்புலவர் என்றும் தாசியென்றும், கச்சி வரதராஜப்பெருமாள் தேர் செல்வதற்குத் தடையாயிருந்த இவள்வீட்டை இடிப்பதற்குத் திரண்டுவந்த பிராமணரைநோக்கி இவை பாடப்பெற்றன என் றும் கூறுவர். இரண்டாம் வெண்பாவை அந்தகக்கவியின்வாக்காகப் பின்னோர் வழங்கினர். பாப்பு - பிராமணர். தேப்பெருமாள் - கச்சிவரதராசர். கொம்மை - உயர்வு, மேடு (பீங்).

1597. போரங்கம் - போர்க்களம், பெரும்போர் எனினுமாம். சீரங்கத்து வைணவர்க்கும் திருவானைக்காச் சைவர்க்கும் பெருங்கலகமொன்று சக ஆண்டு 1297 (கி. பி. 1375-ல்) நிகழ்ந்த தென்பது கோயிலொழுகால் அறியப்படு கின்றது.

1598. அளிநாண் - வண்டாகிய வின்னாணி. இக்கு - கரும்பு. "தன் மாமன் வந்து பிறந்திறக்கும் வண்மையினன் - மூன்றொருநாள், வீணிக்கு வேளை யெரித்தான் மகன்" என்பது பிற்காலத்துப் பாடம்.

1599 ஞானவரோதயர் என்பார் திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே வய லூரில் வாழ்ந்த சைவத்துறவி. கந்தபுராணம் சிவரகசியகண்டத்தின் 7 - பிரிவுகளுள் 6 - காண்டங்களைக் கச்சியப்பமுனிவர் பாட, இறுதியான உபதேச காண்டத்தை 2600 - செய்யுட்களாகப் பாடியவர். "இதில் ஆறுகாண்டமும் காஞ்சிபுரம் ஆயிரக்கால்மண்டபத்திலே எழுந்தருளியிருக்கும் உலகமுட் கொண்டவெப்பச் 'செந்தமிழ்க்கொரு சீர்வரம்பாகிய' என்று பாடச்சொல்லிக் கச்சியப்பருக்கு அனுக்கிரகம்பண்ண அவர் ஆறுகாண்டமும் 10, 500 பாடினார். பின்பு உறையூருக்குமேற்கே வயலூரிலெழுந்தருளியிருக்கும் ஆறுமுகசுவாமி 'உலகமுட்கொண் வேப்ப முருகவேள்' என்று பாடச்சொல்ல ஞான வரோதயபண்டாரம் 7ஆம் காண்டமும் உபதேசகாண்ட மொன்றும் 2600

ஆகப் பாடினர். சங்காரசங்கிதையில் சிவரகசியகாண்டம் 13000 கிரந்தமும் 7 காண்டமாகத் தமிழ்பண்ணினபாட்டு 13, 221." என்று இவ்வுபதேசகாண்ட வட்டுப்பிரதியில் எழுதியிருப்பதும் 'வயலூர்தனி லெங்தைக், கெங்கணுலகும் புகழவுபதேசஞ்செய் தெளியேற்குமவ்வழியென்றிரங்கிச்சீர்த்தி, பொங்குதமிழ் மொழியினுப தேச காண்டம் புகறியெனச் சிறிதருளும் புனிதன் செவ்வேள்' என்று காப்புக் கூறியிருப்பதும் இவ்வுபதேசகாண்டம் பாடப்பட்ட வரலாற்றை ஒருவகையாகத் தெரிவிப்பன. கச்சியப்பசிவாசாரியர்க்கு இவர் வாழ்த்துக்கூறுத லால், அவர்க்குப் பின்பிருந்தவரென்பது துணியப்படும். "வயலூரில் எந்தைக் கெங்கணுலகும் புகழ வுபதேசஞ் செய்து" என்று இப்பண்டாரம் பாடுதலின் வய லூர்முருகக்கடவுளின்போருகப் பெற்றவராகத் திருப்புகழால் அறியப்படும் அருணகிரிநாதரை இவர் தம் ருருஞரியராகஉடையவரோ என்றும், கச்சியப்ப ரை வாழ்த்தலால் அவரிடம் கல்விபெற்ற மாணாக்கரோ என்றும் ஊகித்தற்கு இடனுண்டு. கோனேரியப்பமுதலியார்பாடிய உபதேசகாண்டம் இப்பண்டா ரம் பாடிய நூலுக்குப் பிற்பட்டதாம். இவ்வுபதேசகாண்டமுழுதும் இராசாங்கக் கையெழுத்துப்புத்தகசாலையில் உள்ளது. காளமேகப்புலவர், இப்பெரியாரையும் இவர் புலமையையும் பெரிதுஞ் சிறப்பித்துப்பாடுதலாலும் வயலூர்ப்பக்கத்துள்ள திருவானைக்காச்சிவபிரானிடம் ஈடுபாடுடைமையாலும், அப்புலவர்க்கு இப்பெரி யார் ஆசிரியர்போலும். எழுமூபேர் - சங்கத்தார். கோ - பாண்டியன்.

1600. திருமால் திருமகளைநோக்கிக் கூறியது. புலிக்குட்டி - வியாக் கிரபாதர்புத்திரரான உபமன்யு. நளினத்தி - இலக்குமி. பாய் - நாகணை. அம்பலம் - கில்லையம்பலம். சமுத்தியாகக்கொடுத்தது இப்பாட்டின் ஈற்றடி யென்க.

1602. தாரை கேள்வன் - நட்சத்திர நாயகனை சந்திரன், வாலி. அரா - காளிங்கன்; மராமரம் எனினும் ஆம். புனல் - சமுத்திரம். திருந்திய ஆரையும் வன்னியையும் மூடித்தோன் என்றும் பகைவரையும் மூலபலத்தலைவ னை வன்னியென்ற அரக்கனையும் மூடித்தோன் என்றும் கொள்க. ஆர், வன்னி: அம்மரங்களின் பூக்கள். வேள் - முருகவேள், காமன். சுந்தரன் - சுந்தரமூர்த்தி கள், இராமபிரான். புரம் - திரிபுரம், இலங்காபுரம்.

1603. 'சுடுங்காற்று மழைகாட்டும், குடைநட்புப் பகைகாட்டும்' என்பது சமுத்தி. விங்கலம் - கபடம், மனமாறுபாடு.

1605. இடபமாகிய திருமால் தங்குமிடமாதலின் திருவரங்கத்தைக் கொட்டில் என்றும், திரிபுராதகனகாலத்தில் சிவபிரானுக்குக் குதிரைகளாய் நின்ற வேதங்கள் தங்குமிடமாதலின் நான்முகன்வாயை இலாயமென்றும், இறைச்சியை மென்று பதமாக்கிக்கொடுத்தமையின் கண்ணப்பர்வாயை

மடைப்பள்ளியென்றும், தாமரைக்குப் பிரதியாகக் கண்மலரையிடந் தருச் சித்தமையின் வதனம் மலரோடை என்றும், கறிபாகச் சமைத்த மகனைப் படைத்த வயிறுடைமையின் சிறுத்தொண்டர்தேவியிற்றைத் தோட்டமென்றும், கூத்துநிகழ்த்தலின் நாடகசாலையென்றும் கூறினர்.

1608. கரசரணை - கைகளும் கால்களு முடையவனே; வெற்றருவினனே என்றபடி. கரும்புறத்தார் - கொன்றுண்ணுஞ்சாதியார் (சீவக. 2751, உரை). பாவிகட்கு அரசாக வுள்ளது உலகத்துக்கு அரணமா? எ-று.

1609. பொட்டி - வேசை, அறிவற்றவள்.

1615. எமிராவோரி - அடே, என்னடா. எந்து உண்டி வஸ்தி (வி) - எங்கிருந்து வந்தாய். இராவையும் சோலையையும் பொரும் கொண்டை.

1618. ஈற்றடியில் மா - கற்கி; 'மாகோபாலா' என்று திருத்திப் படிக்க.

1620. கெண்டைபுரட்டுதல் - பசி தாக முதலியவற்றால் கைகால்கள் இழுத்துக் குரக்குவலித்தல்; புங்கனூர்கிழவன் நடத்திய கலியாணத்தில் பசியால் சிலர் வருந்தியதைக் குறிப்பது. 'இப்பாடல்கேட்டுப் பிராணத்தியாகம்பண்ணினான்' என்ற தமிழ்நாவலர்சரிதைக்குறிப்பும், "கெண்டை புரட்டுமெனக் கலியாணத்திற் கவி கேட்டு...சோர்ந்தபுங்கனூர் கிழவன்" என்ற சோழமண்டலசதகத் தொடரும் இங்கு அறியத்தக்கன.

1621. இவர் சேறைக்கவிராசர், வண்ணக்களஞ்சியம் என்றும் வழங்கப் படுவர்.

1622. தக்கிணகயிலை - சிகாளத்தி. கட்சி - கூடு, களஞ்சியம். உத்தாரம் - கட்டளை. தென்காசிப்பாண்டியருள் சீவிலிமாறன் சக ஆண்டு 1486 (கி. பி. 1564)ல் பட்டமெய்தியவன். "சீவலமாறு...வராமா" (963) எனப் பிறர்கூறிய தொடருடன் 'ராமா சீவிலிமாறு' என்ற இவரது தொடர் ஒப்பிடற் பாலது. சீவிலிமாறன் - சீவல்லபமாறன். இக்கவிராசர் அந்தகக்கவிவீராகவரால் அவர்பின்னேத்தமிழிற் புகழப்படுதலின் அவ்வந்தகக்கவிக்கும் முற்பட்டவராவர்.

1623. ஆசுகவிராசர் திருவண்ணாமலையீசர்மீது வண்ணநூலொன்றுபாடிக் கொண்டு அதனை அரங்கேற்றற்கு அத்தலஞ்சென்றபோது, அவர் வருகையறிந்த அவ்வூர் உண்ணாமுலை எல்லப்பநாயினர் என்ற புலவர் ஒதுங்கிமறைந்தனர் என்றும், அச்செயல்பற்றி இப்பரமேசுரப்புலவர் இகழ அவ்விகழ்ச்சி பொறாது அவ்வெல்லப்பர் 1625—ம் பாட்டுப் பாடியவரென்றும் கொள்க. 'கண்ணர்' (பகைவர்) என்றும் பாடம்.

1636. 1246—ம் பாடற் குறிப்புக் காண்க.

1637. கிருஷ்ணதேவமகாராஜர் கி. பி. 1509–29–வரை விஜயநகர சாம்ராஜ்யத்தை ஆட்சிபுரிந்தவர். அவரிடமிருந்த தமிழ்மந்திரிகளுள் வடமலையார் என்பவர் ஒருவர். இம்மந்திரி இருசமயவிளக்கம்பாடியவரும் நாகலாபுரத்தில் திருமால்கோயிற் கைங்கரியம் பல புரிந்தவருமான அரிதாசர் என்ற பெரியாரின் தமையனாராவர். [இருசமயவிளக்க வசனத்திற்கு யான் எழுதிய முகவுரை பார்க்க.] பாகற்கொடியறுத்தல் - திருவாரூர்த் திருவீழாவிசேடம். இதன் வரலாற்றைத் திருவாரூலா, அரும்பதவுரை, பக் 51—ல் காண்க.

1638. ஆழித்தேர் - திருவாரூர்த் தேர்க்குப்பெயர். கிருஷ்ணதேவராயர் பட்டம்பெறுமுன் ஒட்டியருந் துலுக்கருஞ் சேர்ந்து தென்னாட்டைக் கொள்ளையிட்டழித்தசெய்தி கோயிலொழுகு சாஸனமுதலியவற்றால் அறியப்படுகின்றது. திருவீழிமிழலையிலிருந்துவந்த அருச்சகரது தீச்செயல் நோக்கி அவரை 'வீழித்துலுக்கு' என்றார். திருவாரூர்க்கோயில் உட்பிறைப்பகுதியாருள் 'வீழியார்' என்பவர் ஒருசாரார் என்பர்.

1640. இராயர்களுடைய பிரதிநிதியாய்த் தென்னாண்ட இம்மடி நரசிம்மர் (கி. பி. 1500) போலும். இவர்செய்த அக்கிரமச்செயல்கள்காரணமாக அச்சுததேவராயரால் இவர் கொல்லப்பட்டவர். சாளுவநாயக்கன்பட்டணம் என்ற ஊர் தஞ்சைஜில்லா, பட்டுக்கோட்டைத்தாலூகாவில் உண்டு.

1641. வில்லி - வில்லிபுத்தூரர். தெட்டுதல் - வஞ்சித்தல். தெல்லடித்தல் - இடம்ப ஆரவாரஞ்செய்தல்; வீளை பாடுதல் என்றும் கூறுவர்.

1645. தெற்றுதல் - இணைத்துத் தொடுத்தல்.

1646. இரண்டு நாயன்மார்விக்கிரகங்களைக் கன்னன் கவர்ந்தனன் எ-று.

1647. 1156-ம் பாடற்குறிப்புக் காண்க.

1651. கன்னிகாரம் - கோங்கு. வடபான்மொழி - உதிரி. சேதி - சமவசரணம்.

1652—3. ஆரியப்பப்புலவர் என்பார் செய்ததாகத் தவறிப் பதிப்பிக்கப்பட்டுள்ள பாகவதம், வேப்பத்தூர்ச் செவ்வைச்சூடுவார் என்ற பெரும்புலவர் இயற்றியது என்பது இப்பாடல்களால் அறியலாகும். மஹாவித்வான் ரா. இராகவையங்காரவர்கள் 'செவ்வைச்சூடுவாரும் அனதாரியும்' என்றெழுதிய கட்டுரையுள் இதன் விவரம் காண்க. (செந்தமிழ். தொகுதி. 4, பக். 369–75).

1654. வீரை - ஸேதுஸம்ஸ்தானத்தைச் சார்ந்த வீரசோழன். கவிராச பண்டிதர் அவ்வூரில் நெடுங்காலம் வாழ்ந்து துறவியாய் அங்கேயே சமாதி கொண்டவர். இவர் சமாதி இன்றும் அவ்வூரில் உள்ளதாம்.

1655—57. பெரும்பற்றப்புலியூர்நம்பி என்பார், வேப்பத்தூர்ச் சோழி யப்பிராமணவகுப்பினரான பெரும்புலவர்; இவர் மாறவர்மன் குலசேகரபாண் டியன் (1268-1308) காலத்தவர் என்பது இராமநாதபுரம்ஜில்லா திருப்புத்தூர்ச் சிவன்கோயிலில் உள்ள சாஸனமொன்றால் தெரியவருகின்றது (I.M.P.Rd, 271). இவர் ஊருள்ள கப்பிஞ்சிநாடு என்பது, திருச்சிராப்பள்ளிஜில்லா மருங்கா புரிஜமீனைச்சார்ந்ததென்பர். திருப்புத்தூர்க்கோயில்ஸ்தானத்தார் இந்நம்பிக் குச் சில பூதானம் அளித்திருப்பதும், இவர் நாடு அத்திருப்புத்தூர்ச்சேகரத்துக் குப் பக்கத்ததாதலும் அறியத்தக்கன. இவரினரான ஆனந்தத்தாண்டவநம்பி யின்மனைவி கி. பி. 1227-ல் மதுரை மீனாக்ஷிசந்நிதிக் கோபுரங் கட்டிவைத்த வள் என்பது மதுரைத் திருப்பணிமாலையால் (13) தெரிகின்றது. இவ்வானந் தத்தாண்டவநம்பி, பெரும்பற்றப்புலியூர்நம்பியின் முன்னோராதல்வேண்டும். சொல் - புகழ்.

1655. பல்லக்கு - சிவிகை, பல உருத்திராக்கமணிகள், பலவான எலும்பு, பல கண்ணூறு. மந்தித்தல் - நன்குமதித்தல்.

1656. பதுமத்தார் அந்தணர்க் குரித்து.

1659. அகிலத்தார் - விசுவேசர். முத்தீசர், கழைமுத்தர் - திருநெல் வேலிச் சிவபிரான். இபந்தொழுவோர் - கருவையீசர். கருவை - காவலம் வந்தநல்லூர்.

1661-2. நல்லூர் வீரை - சேதுநாட்டுக் குலோத்துங்கசோழநல்லூர் என்ற ஊரையடுத்த விரையாதகண்டன் என்ற ஊர். இது சேதுபதிகளின் பழைய தலைநகரங்களில் ஒன்று; "குலோத்துங்கசோழநல்லூர்க் கீழ்பால் விரை யாதகண்டனிலிருக்கும்" என்பது சேதுபதிகள் சாஸனம். இஃது அறியாது இவர்பெயரைப் பிறழக்கூறினர் பிற்காலத்தார். திருப்புல்லாணி - தருப்பசயனம்.

1663-4. தேவை - இராமேச்சுரம். உரிச்சொற்பனுவல் - நிகண்டுநூல்.

1665—6. கயாகரநிகண்டை மாறனலங்காரவுரைகாரர் மேற்கோள்புரித லின், இவர்காலம் இற்றைக்கு 400-ஆண்டுகட்கு முற்பட்டதாகும். சிவக சிந்தாமணிச் சுருக்கம் என்ற பெயர்கொண்டதும் உத்தேசம் 300 - ஆரிய விருத்தங்களால் அமைந்ததுமான நூற்பிரதியின் முகப்பில் - "செம்பிநாட்டுச் சண்ஞசிக்கிராமத்துத் திருப்புல்லாணி மாலடியான் தர்ப்பாதனன்மகன் பகழிக் கூத்தன்வாக்கு" என்று எழுதப்பட்டுளது. சண்ஞசி - சேதுநாட்டைச் சார்ந்த ஊர்; சதுர்வேதமங்கலம் என்றுங் கூறுவர். திருப்புல்லாணியிற் பள்ளிகொண் டருளும் சோமமூர்த்திக்குத் தர்ப்பாதனமழியார் என்பது திருநாமம். பகழிக் கூத்தர் - புகலூரில் (சேதுபதிகள் பழையதலைநகர்) உள்ள விநாயகமூர்த்தி.

மற்றைச்செய்திகளைப் 'பகழிக்கூத்தர்' என்ற தலைப்பின்கீழ் யான் எழுதிய கட்டுரையுட் காண்க (செந்தமிழ். தொகுதி. 6.பகுதி-6). 1666. "கொல்லை யிரும்புனத்துக் குற்றி யடைந்தபுல், ஒல்காவே யாகு முழவ ருழுபடைக்கு" என்பது நாலடி (178).

1668. சக ஹூ 1430 (கி. பி. 1508)ல் இச்சிதம்பரபுராணஞ்செய்தவர் புராணத்திருமலைநாதர் என்பவர்; மதுரையுலாவும் இவரால் இயற்றப்பட்டதாம். (இவ்வுலா, மஹாமஹோபாத்யாய - ஐயரவர்களால் பதிப்பிடப்பெற்றுள்ளது) இப்புலவர் வீரமாறன்காலத்தவர் என்பது அவ்வுலாவால் (33) அறியப்படுகின்றது.

1669-72. இப்பாஞ்சாதி மேற்கூறிய திருமலைநாதரின் மகனார் ஆவர். சிதம்பரப்பாட்டியல் உரையுடன் என்னால் மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப்பிரசுரமாகப் பதிப்பிடப்பெற்றதாகும்.

1673. கி. பி. 1493-ல் இஃது அரங்கேறப்பெற்றதாம். 'வாசுதேவ கதை' என்பது இதற்கு ஆசிரியர் வழங்கிய பெயர்போலும்.

1675—6. பராசசேகரன் செகராசசேகரன் என்பன, யாழ்ப்பாணம் ஆண்ட ஆரியசக்கரவர்த்திகள் மாறிமாறிக் கொண்ட பட்டப்பெயர்கள் என்பர் (யாழ்ப்பாணநாட்டுவளப்பம்). தக்ஷிணகைலாசம் - திரிகோணமலை. சேது காவலன் என்பது அவ்வரசர் சிறப்புப்பெயர்களுள் ஒன்று (1207-ம் பாடற் குறிப்புக் காண்க). இவ்வரசரிருவரையும் 16-ம் நூற்றாண்டினர் என்பர்.

1677. களத்தை - பொன்னிளந்தகளத்தூர்; தொண்டைநாட்டது. பூதூர் - அக் களத்தூர்க்கு அதிபதி ஊர். வடுகன் - வடுகநாதமுதலியார். எய்திடல் - அம்பால் எய்தல், அடைந்திடுதல். கந்தபுராணம் பாடிய கச்சியப்பரை அந்த கக்கவியின் ஆசிரியராகக் கருதுவர்.

1679. சீட்டுக்கவி என்பது பிற்கால வழக்கு. சிலர் பாடுந் தீட்டுக்கவி அரசர்வமிசத்துக்கு அழிவைப்பயக்கும் என்று.

1681. கற்கவி - கதவுநிலையின்மேலே இடப்படும் பாவுதல் (நேமிநாதம், 83, உரை)

1683. சிரகம்பிதம் உரகனும் (ஆதிசேடனும்), கரகம்பிதம் வாணனும் செய்யலாகும் என்க. ஆயிரம் தலை நாக்கள் வேண்டும் என்று.

1684. களபம்-(சந்தனக்கலவை), மாதங்கம் (பொன்), வேழம் (கரும்பு), பகடு (எருது), கம்பமா (கம்புத்தானிய மா)—இவை யானைப்பரியாயங்களாதல் காண்க.

1689. *நாவீறன் - ஸ்ரீசடகோபர். எழுநூற்றிருபான்மூன்று கொல்ல மாண்டு. இதனால் இற்றைக்கு 400-வருஷங்கட்குமுன் கவிராசர் வாழ்ந்தவர் என்பது விளங்கும். புனைந்தபெயர் சிறந்ததொன்றும் என்க.*

1691. *இதன் விரிவுரையை மாறனலங்காரத்துட் காண்க. நற்பொருள் மூன்று - சித் அசித் ஈசுவரன்.*

1693. *காரி ரத்னம் - காரியாரின் புத்திரமணியாகிய நம்மாழ்வார். கார் போன்ற இரத்தினகவி எனினுமாம். இவர்வழியினர்சிலர் இரத்தினகவிராயர் எனப்படுவர்.*

1694. *இவ்வடமலையாரைப்பற்றியசெய்திகளை 1320—27-ம் பாடற் குறிப்பிற் காண்க. ஏற்றத் தமிழ்படைத்தல் - நன்குகற்றுத் தமிழ்க்கவி இயற் றுதல்.*

1695. *புலவரால் தூப்பு அடையும் - புலவராற் பாடற்சிறப்புப்பெறும். கி. பி. 1706-ல் இந்நூல் அரங்கேற்றப்பட்டது.*

1701—2. *கஞ்சத் தார் - தாமரைமாலை. அகரம் - ஆசிரியர் ஊர்.*

1704. *அனதாரிப்புலவர் சுந்தரபாண்டியம் பாடிய செய்தியை 1765—7-ம் பாடற்குறிப்பிற் காண்க. காளி யொட்டக்கூத்தர், உம்மைத்தொகை. காளி - நம்பிகாளியார் என்ற புலவர் (1149); வாயல், தொண்டைநாட்டது. 'அன தாரியுந் தொண்டை மண்டலமே' என்றார் படிக்காசுப்புலவரும். இப்புலவர் வரலாற்றைச் செந்தமிழ், தொகுதி 4-ல் காண்க.*

1708-9. *இராமபத்திரதீக்ஷிதர், தஞ்சையாண்ட சகஜிசாபோஜி மகா ராஜாக்களால் (1636—1710) மிகவும் மதிக்கப்பெற்றவர். இவர் செய்த வடநூல்கள்; - ஜானகீபரிணயம், சிருங்கார திலகம், பரிபாஷாவிருத்தி வியாக்கியான முதலியன. இவர்மாமனாராய் வையாகரணசிரோமணியாய் விளங் கிய பதஞ்சலிதீக்ஷிதரையும் இப்பாடல்கள் குறிப்பினுணர்த்தும் என்பர். 1709. கட்செவியாதலின், 'கண்ணற் கேட்கும் பதஞ்சலி' என்றார்.*

1710. *மாதைத் திருவேங்கடநாதர்: 18-ம் நூற்றாண்டுத் தொடக்கத் தில் பாண்டிநாடாண்ட ரங்ககிருஷ்ணமுத்துவீரப்பநாயக்காதுபிரதிநிதியாய்த் திருநெல்வேலிச்சீமையை ஆட்சிபுரிந்தவர். இவர் வரலாறுகளைச் செந்தமிழ்ப் பத்திரிகையிலும் (தொகுதி-1. பக் 629—638.) Journal of Oriental Research, Vol. II, p. 339-43) என்ற ஆங்கிலப்பத்திரிகையினும் காண்க.*

1711-15. *இலக்கணவிளக்கப்பாயிரத்தால் வைத்தியநாததேசிகர் மூ திருவேங்கடநாதர்காலத்தவர் என்பது விளங்கும்.*

1711. இதனை அந்தகக் கவி வீராகவமுதலியார் பாடியது என்பர். (இலக். வி, பதிப்புரை, பக். 4). அவர்காலம் முற்பட்டதாகலின் அவர் மரபினரான புலவரொருவர் பாடியதுபோலும்.

1715. 'தவமணி' என்று திருத்துக.

1716. ஒட்பம் - அறிவுமுதிர்ச்சி. தட்பம் - குளிர்ந்த நலம். வரைத்தல் - வரம்புறக் கூறுதல். இளவல் - சதாசிவதேசிகர் தம்பி. இப்பதிகமியற்றியவர் இலக்கணவிளக்கவாசிரியரது பேரனாவர்.

1717. இவ்வாசிரியர் கல்லாடம் முதன் மூப்பத்தேழுபாடல்கட்கு உரை யிட்டவர்.

1719. உயர் வரை - விந்தமலை. பொதி - பொதியம். மூன்றதிகாரம் - வேற்றுமையியல், வினையியல், ஒழிபியல்கள். புலக் கணத்தென - அறிவின் திரட்சியது என்று. ஏ அடு - அம்பை வென்ற. 'திங்களன்ன கல்வியும்' என்ப வாகலின் 'உவாமுதிர் மதிக்கலை' எனப்பட்டது.

1722. பகல்செய்வான் - சூரியன்.

1724. 'வண்மீகநாதன்' என்பன இரண்டும் முறையே திருவாரூர்ச் சிவபிரானையும், ஆசிரியர் பாட்டனாரையும் குறிப்பன. வண்மீகர் - புற்றிடங் கொண்டார்; வான்மீகருமாம்.

1726. இத்தொகையென்று - இவ்வளவென்று. வந்தமாத்திரம் - மனத்திற் றோன்றியமட்டும்; வகை சொல்லிவைத்தோம் என்க.

1729. மாதை வேங்கடேசன் - இலக்கணவிளக்கம் இயற்றுவித்த பிரபு (1710).

1731. நரவாகனம் - பல்லக்கு. 1734. அரவாசலர் - மோரூர்ப் பாம் பலங்காரர்.

1735. அஞ்சாலிமக்கள் - இடையர்பிரிவினர்; அவர்மகளிர் ஐந்தருக்கள் கொண்ட தாலி அணிதலின் இப்பெயர்பெற்றனராவர்.

1736. திருமேனிக்கவிராயர், இராசை வடமலையப்பபிள்ளையன்மேல் புலவாற்றுப்படை பாடியவர். அப்பிள்ளையை இவர் குழைக்காதர்திருப்பணி மாலைபிறதியில் வாழ்த்துதல் காண்க.

1737. வீரை - தாம்பிரபர்ணிநதிக்கரையில் உள்ள வீரவனல்லூர்.

1738. குருபரன் - கூரத்தாழ்வான்.

1739. போச்சு, ஆச்சு என்பன போய்த்து, ஆய்த்து என்பவற்றின் சிதைவு.

1740. 'நின்மலனூர்...மன்மதன்காண்' என்ற தொடர் கூளப்பநாயக்கன் காதலடிகள்.

1741. கந்தசாமிப்புலவர்: உருத்திரகணிகையர்குலத்து உதித்தவர். பொன்னையாள் வரலாற்றைத் திருவிளையாடற்புராணத்துட் காண்க. திருவாப் புடையார்புராணம் இவரால் இயற்றப்பெற்றதாம். சிதக்காதிவள்ளலின் வாயிற் புலவராக இவர் வாழ்ந்தவர் என்பது, அப்பிரபுமேல் அமைந்த நொண்டிநாடகம் ஒன்றால் தெரிகின்றது.

1743. இலம்பூர் - தொண்டைமண்டலத்துப் புழற்கோட்டத்துள்ள தென்பர்.

1745—7. இப்புலவர், பொதியச் சாரலில் உள்ள விக்கிரமசிங்கபுரத்தில் வாழ்ந்தவரும், சிவஞானமுனிவரின் பெரியதந்தையுமாவர் என்பர். (சிங்கைப் பிரபந்தந்தொகுட்டு. முகவுரை.)

1745. இளந்தலை - இழிவு, இளப்பம். 1747. சிங்கை - விக்கிரமசிங்கபுரம்.

